ஆய்வுக் கோவை

முப்பதாம் ஆண்டுக் கருத்தரங்கம்

1999

பதிப்பாசிரியர்

தமிழண்ணல்

க.ப. அறவாணன்

சிலம்பு நா. செல்வராசு

இந்தியப் பல்கலைக்கழகத் தமிழாசிரியர் மன்றம்

மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம்

திருநெல்வேலி - 627 012

இந்தியப் பல்கலைக்கழகத்
தமிழாசிரியர் மன்றம்

30ஆம் கருத்தரங்கம்

***

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
சென்னை 600113

***

திருவள்ளுவர் ஆண்டு 2030 வைகாசி 7,8,9.
1999 மேத்திங்கள் 21, 22, 23

ஆய்வுக்கோவை

இரண்டாம் தொகுதி

1999

பதிப்பாசிரியர்

முனைவர் தமிழண்ணல்

முனைவர் க.ப. அறவாணன்

முனைவர் சிலம்பு நா. செல்வராசு

இந்தியப் பல்கலைக்கழகத் தமிழாசிரியர் மன்றம்

துணைவேந்தர் பணியகம்

மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம்

திருநெல்வேலி 627012

ஆய்வுக்கோவை
தொகுதி இரண்டு

இ.ப.த.மன்றம்
மே பா துணைவேந்தர் பணியகம்
மனோன்மணியம் சுந்தரனார்
பல்கலைக்கழகம்
திருநெல்வேலி 627012

முதற்பதிப்பு
திருவள்ளுவர் ஆண்டு 2030
வைகாசி
1999 மேத்திங்கள்

விலை : உரூபாய் 275/-

கணினி அச்சு
வைரம் லேசர் கிராபிக்சு
73- ஏ-கீழைத்தேர் வீதி
சிதம்பரம் - 608001

மெல்லச்சு
யுனைடட் பைண்ட் கிராபிக்சு
101 - டி இராயப் பேட்டைச்சாலை
சென்னை 600 004

உள்ளே... உள்ளே... உள்ளே...

பக்கம் எண்

அ. சங்கரி
பெண்கள் முன்னேற்றத்திற்குப் பாரதி வகுத்த வழி 545

பர. சங்கரேஸ்வரி
வடமொழி நாடகங்களின் அமைப்பு முறை 550

சிவ. சசிரேகர
தமிழ்ப் பத்திரிகைகளில் அறிவியல் செய்தி வெளியீடு 555

சு. சண்முகசுந்தரம்
கர்நாடகத்தில் முருகன் வழிபாடு 560

சு. சண்முகசுந்தரம்
வழிபாடு 565

பெ. சண்முகம்
நக்கீரனின் பக்தி நெறியில் குமரகுருபரர் 570

முல்லை. வீ. சண்முகம்
திருகுகள்ளியும் மாங்காய்ப்பாலும் - ஓர் அறிவியல் பார்வை 575

கொடுமுடி ச. சண்முகம்
பண்டைத் தமிழரின் அகலாங்கு நெட்டாங்கு முறை 580

மு. சதாசிவம்
எழுத்துச் சீர்திருத்தமும் சப்பான் எழுத்துக்களும் 588

இரா. சந்திரசேகரன்
கணிப்பொறி வழித் தமிழ் கற்பித்தல்
நிரல் வழிக் கற்றலுக்கான கணிம வரைவு 587

சு. சந்திரா
நாவலர், கலைஞர் திருக்குறள் உரைகளில்
திராவிடவியல் - ஒப்பீட்டாய்வு 592

சந்திரா கிருட்டினன்
விழுதுகளை வேரூறச் செய்வோம் 597

இரா. சபாபதி
தமிழ் இலக்கியங்களில் மலர்கள் உணர்த்துவன 600

இரா. சம்பத்
புதுக்கவிதைப் பெண்பாற் கவிஞர்களின்
பெண்ணியச் சிந்தனைகள் 605

தே. சம்பத்
தகவல் தொடர்பு வளர்ச்சியில் இதழியல் 610

அரங்க. சம்பத்குமார்
தமிழில் சட்டம் 615

மா. சரவணவேல்
பாரதிதாசன் கவிதைகளில்
மக்கள் தொகைக்கல்வி விழிப்புணர்வு 620

நல்லூர் சா. சரவணன்
கற்பனையும் சமூகமும் 625

சரளா இராசகோபாலன்
சிலப்பதிகாரமும் மாதவி காவியமும் - ஓர் ஒப்பீட்டாய்வு 629

ம. சரோஜா
முந்தானை ஆயுதம் - உணர்த்தும் வாழ்வியல் உண்மைகள் 634

சரோஜினி
ஆனந்தப் பையுளும் தாபத நிலையும் ஒரு பெண்ணின் நோக்கு 638

சா. சவரிமுத்து
கதைப் பாடல்கள் வழி அறியலாகும் சாதிப் போராட்டம் 643

எம். ஏ. சவேரியார்
பாரதியும் சமய நல்லிணக்கமும் 648

மா. சற்குணம்
மயிலாசல சதகம் - ஓர் அறிமுகம் 653

மு. சற்குணவதி
மாசாணியம்மன் வரலாறும் வழிபாடும் 658

சு. சாந்தகுமாரி
கோவிலன்கதையில் ஒற்றியூர்க்காளி
(வட்டப்பாறையம்மன்) 663

அ. சாந்தி
சிலம்பில் இரு நபர்களிடைத் தொடர்பு 668

சு. சாரதா
நிகண்டுகளில் யானை தொடர்பான
செய்திகள் - ஒரு கண்ணோட்டம் 673

செ. சாரதாம்பாள்
மடலேறுதலும் பிறழ்நிலை உளவியலும் 678

சாலினி இளந்திரையன்
புறநானூறு காட்டுகின்ற
கருத்து முரண்பாடுகளும் தீர்வுகளும் 683

இரா. சாவித்திரி
காட்டில் உரிமை - ஓர் அறிமுகம் 688

சி. சாவித்திரி
திருக்குறளும் தெலுங்கு சதக இலக்கியங்களும் -
ஓர் ஒப்பாய்வு 693

எச். சித்திரபுத்திரன்
பொருள் தொடர்புச் சொற்களும் பொருள்
உறவு நிலைகளும் 698

சி. சித்ரா
கண்ணதாசன் கவிதைகளில் கல்விச் சிந்தனைகள் 703

ச. சிவகாமி
சங்க இலக்கியத்தில் முதியோர் 708

அ. சிவசுப்பிரமணியன்
மருதக்கலி காட்டும் சமுதாயமும் பண்பாடும் 713

மு. சிவசுப்பிரமணியன்
நாடகத்தின் தோற்றமும் வளர்ச்சியும் 718

பா. சிவநேசன்
திருமுல்லைவாயிற் புராணத்திறன் 722

அ. சிவபெருமான்
உணவும் மனமும் 727

ஆ. சிவலிங்கனார்
எச்சவியல் எச்சம் பற்றித் தெய்வச்சிலையார் 732

ஆர். சிவசக்தி
வள்ளுவர், கடுவெளிச்சித்தர் - ஓர் ஒப்பீடு 737

சிற்பி பாலசுப்பிரமணியம்
நிலவியலும் இலக்கியமும் 742

சி. சீதளா
பெண்ணியமும் உளவியலும் 747

அ. சீநிவாசன்
இலக்கணக் கல்வி 752

இரா. சீனிவாசன்
இராமலிங்க வள்ளலாரின் சமுதாய நோக்கு 755

கே. சுகதா
பாரதியார் பாடல்களில் பறவைகள் 760

மு. சுதர்சன்
செல்லிசை ஆளுபெடை கலைச்செல்லாக்கமும்
வரையறைகளும் - ஒரு மீள்பார்வை 765

சுந்தரசோபிதராஜ்
'நீதி இலக்கியம்' 769

சி. வெ. சுந்தரம்
சித்தர் இலக்கியம் காட்டும் வாழ்வியல் சிந்தனைகள் 773

ச. வே. சுப்பிரமணியன்
தொல்காப்பியத்தில் ஓரறிவுயிர்கள் 778

பெ. சுபாசுசுந்திரபோசு
தொடர்பியல் சாதனங்களின் சுதந்திரம் - ஒரு மீள் நோக்கு 782

சுவாமிக்கண்ணு செல்லையா
மு.வ. நாவல்களில் அறம் 787

சி.கை. செந்தமிழ்ச்செல்வி
கண்ணீர்ப்பூக்கள் காட்டும் பெண்கள் 792

சே. செந்தமிழ்ப் பாவை
திருக்குறள் சுட்டும் மருத்துவ நெறி 797

மெ. செந்தாமரை
இராஜம் கிருஷ்ணன் நாவல்களில் மகளிர் சமுதாய
மாற்றம் 802

அர. செயச்சந்திரன்
நூலியல் 807

சு. செயலாபதி
பாவேந்தரும் பட்டுக்கோட்டையாரும் 812

சண்முக. செல்வகணபதி
பண் சுமந்த பாடல்கள் 817

சிலம்பு நா. செல்வராசு
சமூகப் பண்பாட்டியல் நோக்கில் சங்க இலக்கியங்கள் 822

ஜெ. செல்வி
காலந்தோறும் பெண் 827

க. சேகர்
ஆசாரக்கோவையும் அன்றாட நெறிகளும் 832

து. சேகர்
தமிழில் கல்வியியல் சிந்தனைகள் 837

ந. சேசாத்திரி
உளவியல் பகுப்பாய்வு நோக்கில் கலைஞரின் ஆளுமை - ஒரு கண்ணோட்டம் 842

தூ. சேதுபாண்டியன்
தெருக்கூத்துக் கலைஞர்களின் இரகசியமொழி 847

இ. சேனாவரையன் & இரா. சந்திரசேகரன்
குழந்தைகளும் தொலைக்காட்சி நுகர்வறிவுக் கல்வியும் 852

தே. சொக்கலிங்கம்
அறம் பாடிய பிள்ளைத்தமிழ் 857

நெல்லை. ந. சொக்கலிங்கம்
தண்டபாணி சுவாமிகளின் குருபரமாலை 861

ஏ.ஜே. சொர்ணராஜ்
நாவல்களில் வாழ்க்கைத் தத்துவம் 866

இரா. சோதிவரணன்
திருக்குறளில் 'தண்டனை இயல்' 871

ச. சோமசுந்தரம்
நாட்டுப்புறப் பாடல்களில் அகப்பொருள் மரபுகள் 876

எம். சோலையன்
பாரதியாரும் ஆப்பிரிக்கக் கவிஞர்களும் 881

பொன். சௌரிராசன்
ஆனந்த விகடன் தலையங்கங்கள் - ஒரு பார்வை 886

யோ. ஞான சந்திர ஜான்சன்
நாவல்களில் உதிரிமாந்தர் படைப்பு 890

தே. ஞான சேகரன்
உழத்திப் பாட்டு 894

வி. மி. ஞானப்பிரகாசம்
வீரமாமுனிவரின் தமிழ் - இலத்தீன் அகராதி 899

இரா. ஞானபுஷ்பம்
பயண இலக்கியப் பெண் படைப்பாளர்கள் 904

ஞானம் கணபதி
திருமூலர் பார்வையில் சிவலிங்க வழிபாடு 909

ஓய். டென்னிசன்
நந்தன் கதை - ஒரு பார்வை 913

ப. டேவிட் பிரபாகர்
இயற்கை மொழி மேம்படுத்தச் செயற்பாடு 918

சு. தங்கத்துரை
ஞானவாசிட்டத்தில் நான் 922

த. தங்கம்மாள்
ஆய்வுலகில் மகளிர் 927

ஆ. தசரதன்
புலத்தியர் மருத்துவ மரபு 931

பி. தட்சிணாமூர்த்தி
சிறுபஞ்ச மூலம் காட்டும் பெண்மை 935

இரா. தமிழ்ச்செல்வன்
திருப்பாவை திருவெம்பாவை - ஓர் ஒப்பீடு 939

சு. தமிழ்வேலு
புறநூனூறு உணர்த்தும் மக்களாட்சிப்பண்புகள் 944

தமிழண்ணல்
முருகத் தொன்மம் - ஒரு வரலாறு புராணமான வரலாறு 949

தமிழரசி அன்பழகன்
தமிழ்க் கவிதையும் பெண் விடுதலையும் 954

வே. தயாளன் & வ. ஜெயா
அறிஞர் அண்ணாவின் உரைநடை உத்திகள் 959

யோ. தர்மராஜ்
பாதுகாப்பு மந்திரங்கள் 964

சு. தர்மலிங்கம்
கலித்தொகையில் திணையமைதி 969

தாயம்மாள் அறவாணன்
ஔவையாரின் கல்வி ஒழுக்கம் 973

சு. திருநாவுக்கரசு
சிவப்பிரகாசர் நோக்கில் 'கலிக்காமர் செற்றம்' 977

சாமி. திருமாவளவன்
கண்ணதாசன் திரையிசைப் பாடல்களில் அணி நலம் 982

கு. திருமாறன்
சீனிவாசநல்லூர்க் குரங்கநாதர் கோயில் 986

வே. தில்லைநாயகம்
தேசீய கீதம் : தமிழ்? 991

க. துரையரசன்
ஆராய்ச்சிப் பேரறிஞர் மயிலை சீனி வேங்கடசாமி 995

பே. நடராசன்
மேலாண்மை பொன்னுச்சாமியின் காகிதம் சிறுகதைத் தொகுப்பில் தலித்தியச் சிந்தனைகள் 1000

மா. நடராசன்
பாரதிதாசன் கதர் இராட்டினப்பாட்டு 1004

சர. நடராஜவேலு
மங்கல வாழ்த்தின் மாட்சி 1009

ஹ. மு. நந்தர்சா
திராவிட இயக்க வரலாற்றில் பெரியகுளம் மேத்தாவின் பங்கும் பணியும் 1014

மா. நயினார்
தர்மமும் தந்திரமும் 1019

க. நரசிம்மன்
மங்கலமும் உலகமும் 1023

அ. நலங்கிள்ளி
புறநானூற்றில் அரசவாகை 1028

மு. நளினி
திருவரங்கத்து வைகாசித் திருவிழா 1032

சூ. நிர்மலா தேவி
சில சிறு தெய்வப் பெயர்கள் - ஓர் ஆய்வு 1036

நிர்மலா மோரகன்
எந்தன் தோழாவில் வெளிப்படும் பெண்ணியச் சிந்தனைகள் 1041

தர. நீலகண்டபிள்ளை
விளம்பர உத்திகள் 1046

வே. நெடுஞ்செழியன்
இஞ்சியும் கடுக்காயும் - இணை நோக்கு 1051

முரசு. நெடுமாறன்
மலேசியத் தோட்டப்புறப் பாடல்கள் பெண்ணியம் 1056

தி. நெல்லையப்பன்
வண்ணச்சரபத்தின் எழுத்திலக்கண நெறி - 1 1061

கா. பகவதி
இராஜம் கிருஷ்ணன் நாவல்களின் கதை கூறும் முறை 1065

கு. பகவதி
கச்சி 1070

பஞ்சாமிர்தம் & செர. முத்தையா
கநாவின் {வங்காளப்} பழமொழிகள் 1075

த. கோ. பரமசிவம்
அருச்சனை மொழி எது? 1079

தொ. பரமசிவன்
திருவிளக்குத் திருவிழா 1084

ப. பரமசிவம்
சிறுகதையில் பின்னோக்கு உத்தி 1089

மூ. பரிமணன்
திருக்குறள் கடவுள் வாழ்த்தும் திருக்கலம்பகமும்
ஓர் ஒப்பீடு 1098

ச. பரிமளா
வைரமுத்துவின், இது வித்தியாசமான தாலாட்டு -
ஒரு வித்தியாசமான பார்வை 1098

பெ. பழனியப்பன்
குலதெய்வ வழிபாடு 1103

மு. பழனியப்பன்
ஒன்றுள் மூன்று 1108

அ. சங்கரி
அரசினர் கலைக்கல்லூரி
பெங்களூர் – 560 001

பெண்கள் முன்னேற்றத்திற்குப் பாரதி வகுத்த வழி

பெண்கள் இன்று ஆணுக்கு நிகராக அனைத்துத் துறைகளிலும் முன்னேறி வரச் சில கவிஞர்களும் பல சீர்திருத்த வாதிகளுமே காரணமாக அமைகின்றனர். இளமை மணம், விதவை மணம் மறுத்தல், பெண்களுக்குக் கல்வி புகட்டத்தடை, உடன்கட்டை ஏறுதல் போன்ற பல சமுதாயச் சீர்கேடுகள் சமுதாயத்தை முன்னேற விடாது முடக்கிக் கொண்டிருந்தன. இவற்றை மாற்றுவதற்காகவே பல சட்ட திட்டங்கள் அமுல் படுத்தப்பட்டன. அதே போன்று கவிஞன் தன் பாடல்களின் வாயிலாக, சட்டங்களை விடச் சக்தி வாய்ந்த ஆயுதங்களான வார்த்தைகளைப் பயன்படுத்திக் கணைகளை ஏவுவது போன்று மக்களிடையே ஏவுகின்றான். தமிழகத்தில் தேசீயக்கவி பாரதி, நாட்டின் சுதந்திரத்திற்காகவும் பெண்களின் முன்னேற்றத்திற் காகவும் சக்தி வாய்ந்த கணைகளாலான பாடல்களைத் தந்துள்ளார். அவரது பாடல்கள் ஒவ்வொன்றும் சமுதாயத்தைச் சாடுவன வாகவும் தவறான பாதையிலிருந்து சரியான பாதைக்கு இட்டுச் செல்வனவாகவும் அமைந்துள்ளன. அவரது பாடல்கள் வெறும் வெற்றுக் கவிதைகளாக அமையவில்லை; சமுதாயத்தைத் தட்டி எழுப்பும் உணர்ச்சிப் பிழம்புகளாக அமைந்தன. பாரதி வெறும் கவிஞனல்லன்; ஒரு தீர்க்கதரிசி என்பதனை அவரது கவிதைகள் நிருபித்தன.

மனிதனின் அடிப்படை உரிமைகள் பறிக்கப்படும் பொழுதும் இயல்பான தகுதிகள் மறைக்கப்படும் பொழுதும் ஏற்படுகின்ற உள்ளக்கொந்தளிப்பு புரட்சியாக உருவெடுக் கின்றது. சமுதாயத்தில் பெண்களின் அடிப்படை உரிமைகள் முடக்கப்பட்டிருப்பதனைக் கண்டு பாரதி கொந்தளித்தார். ஆணுக் கொரு நீதி - பெண்ணுக்கொரு நீதியெனக் பெண்களை

வாயில்லாப் பிராணிகளாக நடத்துவதனைக் கண்டு உளம் துடித்தார். அதனால் அவரிடமிருந்து வெளிப்பட்ட புரட்சிக் கவிதைகள் எரிமலைகளாக வெடித்தன. தன் மனக்கண்ணால் உணர்ந்து எழுதிய கவிதைகள் பெண்கள் முன்னேற்றத்திற்கு வழி வகுத்ததுடன் விழிப்புணர்ச்சியையும் ஊட்டின. அவரது கவிதை களுக்கொப்ப, சமூகச் சீர்திருத்தவாதிகளின் முயற்சியால் ஏற்படுத் தப்பட்ட சட்ட திட்டங்களும் பெண்கள் சமூக முன்னேற்றத்திற்கு வழி கோலின.

சங்க காலத்திலிருந்து காப்பியக் காலம் வரையிலும் பெண்கள் ஆண்களுக்குச் சரிநிகர் சமமாகக் கருதப்பட்டதைச் சங்க இலக்கியங்கள் முதல் காப்பியங்கள் ஈறாக அமைந்துள்ள நூற்களில் உள்ள சான்றுகளின் வாயிலாக உணரலாம். வரலாற்று வல்லுநர்களால் இருண்டகாலம் என்று கூறுமளவில் 'இடைக் காலமானது' சமுதாயச் சீர்கேடுகள் மலிந்த நிலையில் அமைந்தது. இடைக் காலத்தில் பெண்கள் அடிமை நிலைக்கு ஆளாக்கப் பட்டனர். எனவே பெண்களை அடக்கி அடிமைகளாக்கிய காலம் இடைக் காலம் என்றால் மிகையாகாது.

வீட்டுக்குள்ளே பெண்களைப் பூட்டி வைக்கும் நிலை, கணவன் இறந்தவுடன் பாதுகாப்பின்மையால் மனைவி உடன் கட்டை ஏறும் நிலை, தீய சக்திகளால் இளம்பெண்கள் ஆனபிறகு கடத்தப்பட்டு விடுவர் என்று அஞ்சி சிறுவயதிலேயே குழந்தை மணம் மேற்கொண்ட நிலை, பெண்கள், அறிவில் சிறந்து விளங்கினால் ஆண்களுக்கு நிகராகிவிடுவர் என்று அஞ்சிக் கல்வி புகட்ட மறுத்தநிலை, சொத்துரிமை அற்றநிலை போன்ற, வழிகளில் முடக்கப்பட்டு முன்னேற வழியின்றித் துடித்துக் கொண்டிருந்த பெண்களின் வாழ்வு சீர்படுத்தப் படவேண்டு மெனக் கருதிப் பாரதி பாடிய பாடல்களில் ஒரு சில பாடல்கள் இங்கு எடுத்துக் கூறப்பட்டுள்ளன.

பெண்களின் கல்விநிலை

அடுப்பூதும் பெண்களுக்குப் படிப்பெதற்கு? எண்ணறக் கற்று எழுத்தறப் பயின்றாலும் பெண்புத்தி பின்புத்தி என்றெல் லாம் பழமொழிகளை உருவாக்கிப் பெண்களை இழிவுபடுத்துவ தனைக் கண்ட பாரதியின் உள்ளம் குமுறி, உள்ளக் குமறல் புரட்சிப்பாடல்களாக வெளி வந்தது.

'பெண்ணுக்கு ஞானத்தை வைத்தான்-புவி
பேணி வளர்த்திடும் ஈசன்

மண்ணுக்குள்ளே சிலமூடர் - நல்ல
மாதரறிவைக் கெடுத்தார்.'

இந்த நாடு முன்னேற வேண்டுமாயின் ஆணுக்கு நிகராகப் பெண் கல்வியில் சிறந்து விளங்க வேண்டும். இன்றேல் சமுதாயம் முன்னேற வழியில்லை. சில மூடர்கள் மாதர் அறிவைக் கெடுத்து, அவர்களுக்குக் கல்வி புகட்டாத நிலையைக் கண்டு மேற்குறிப்பிட்டவாறு பாடியுள்ளார்.

கவிஞர் தனது மனக்கண்ணால் உணர்ந்ததை, சீர்திருத்த வாதிகள் சட்டங்களாகவும் திட்டங்களாகவும் செயல்படுத்தத் தொடங்கினர். பெண்கள் ஏட்டைத் தொடுவது குற்றம் என்று கூறப்பட்ட அக்கால கட்டத்தில் சமுதாயச் சீர்திருத்தவாதிகளான ராஜாராம் மோகன்ராய், தயானந்த சரஸ்வதி, எம்.ஜி.ரானடே, மகாத்மாகாந்தி போன்றவர்கள் பெண்களின் முன்னேற்றத்திற் காகப் பல சீர்திருத்தச்சட்டங்களை அமுல்படுத்தினர்.

உடன்கட்டை ஏறும் வழக்கத்தை நிறுத்துவதற்காக 1829-இல் சட்டம் அமுலாக்கப்பட்டது. 1856-இல் விதவை மறுமணத்தைப் பற்றிய சட்டம் கொண்டு வரப்பட்டது. குழந்தைமணத் தடுப்புத் திட்டம் 1929-இல் ஏற்படுத்தப்பட்டது. சொத்துரிமை பற்றிய அமுலாக்கத்திட்டம் 1956-இல் கொண்டு வரப்பட்டது. இவ் வாறாகச் சட்டங்கள் மூலமும் திட்டங்கள் மூலமும் பறிக்கப்பட்ட சுதந்திரம் திரும்பப் பெறப்பட்டது. இவ்வாறு பல்வேறு கால கட்டங்களில் நிறைவேற்றப்பட்ட சட்டங்களையெல்லாம் பாரதி தன் பாடல்களில் முன்கூட்டியே வடித்துள்ளார்.

மக்கள் சுதந்திரமாக வாழவேண்டுமானால் ஆணும் பெண்ணும் சரிநிகர் சமானமாகக் கருதப்படவேண்டும் என்ற கருத்தைப் பாரதியார் தன் கவிதையில் வலியுறுத்தியுள்ளார்.

'ஆணும் பெண்ணும் நிகராகக் கொள்வதால்
அறிவிலோங்கி இவ்வையம் தழைக்குமாம்'

ஆணும் பெண்ணும் சரிநிகர் சமானமாகக் கருதப்பட்டு எல்லா நிலையிலும் செயல்படுவதே இந்நாட்டின் முன்னேற்றத்திற்கு அடிப்படைத்தேவை என்பது பாரதியார் கருத்து.

சமுதாயத்தில் வாழ்கின்றவர்களுக்கு எதைச் சாதிக்க வேண்டுமானாலும் மனத்துணிச்சல் முக்கியமானது. அதிலும் குறிப்பாகப் பெண்களுக்கு இது மிகவும் தேவை. எதைப் பார்த்தாலும் அஞ்சிச் சாகின்றவர்களால் முன்னேறவே முடியாது.

எனவே மனதில் திட்பமும் நேர்மைத் தன்மையும் இருந்தால் எதையும் சாதிக்க முடியும் என்பதை உணர்ந்த பாரதி, கவிதை வாயிலாக உணர்த்த விரும்பி,

'நெஞ்சு பொறுக்கு தில்லையே - இந்த நிலைகெட்ட
மனிதரை நினைந்து விட்டால் - அஞ்சி
அஞ்சிச்சாவார் இவர் அஞ்சாத பொருளில்லை
அவனியிலே'

என அஞ்சுபவரைக் கண்டு வருந்தினார். பின் அத்தகைய அஞ்சும் நிலையிலிருந்து விடுபடுவதற்கு,

'நெஞ்சில் உரம் வேண்டும்;
நேர்மைத் திறம் வேண்டும்' - என்றார்.

உள்ளத்தில் ஊக்கமும் நடத்தையில் நேர்மையும் இருந்தால் முன்னேற வழியுண்டு.

எதற்கும் அஞ்சுகின்ற இயல்பு இருக்குமானால் அடிமை யாகத் தான் வாழமுடியும். பிஞ்சு உள்ளங்களுக்குப் பேய்க் கதை களைக் கூறி அச்சுறுத்தும் வழக்கம் இன்றும் கல்வியறிவு அற்ற சமுதாயத்தில் காண முடிகிறது. பெண்களை அடக்கி ஆண்டால், ஆண் தன் விருப்பத்திற்கேற்ப வாழமுடியும் என்ற போக்கும் இன்று அமைந்துள்ளது. இதற்கெல்லாம் அடிப்படைக்காரணம் கல்வி அறிவேயாகும். கல்வியறிவு உயர உயர மூடப் பழக்க வழக்கங்கள் மாய்ந்து விடும் என்பதே பாரதியின் கருத்து. இரண்டு கண்களில் ஒன்றைக் குத்திக் கெடுத்து விட்டால் அழிவு நமக்கே என்று உணராத சமுதாயம், ஆண்களுக்கு மட்டும் கல்வி அறிவைப் புகட்டிப் பெண்களைக் கல்வி கற்க விடாது தடுத்தது. இதனைக்கண்ட பாரதி,

'ஏட்டையும் பெண்கள் தொடுவது தீமையென்று
எண்ணியிருந்தவர் மாய்ந்து விட்டார்
வீட்டுக்குள்ளே பெண்ணைப்பூட்டி வைப்போமென்ற
விந்தை மனிதர் தலை குனிந்தார்'

என்று பாடிச் சமுதாயத்தை மாற்றி அமைத்தார். பெண், கல்விக்குத் தடையாக இருந்தவர் மாய்ந்ததாகவும் பர்தா முறையைக் கடைபிடித்துப் பெண்ணை வீட்டுக்குள்ளே பூட்டி வைத்த மனிதர்கள் வெட்கப்பட்டு, தலை குனிந்ததாகக் கூறுவதன் வாயிலாகவும் பெண்களின் முன்னேற்றத்திற்குப் பாரதி வழி வகுத்ததை உணர முடிகின்றது.

இன்றைய கால கட்டத்தில் ஆணுக்குப் பெண் சற்றும் இளைத்தவள் இல்லை என்பதனைப் பறை சாற்றியவர் பாரதி. பாரதி கண்ட கனவு விரைவில் நனவாயிற்று என்பதைக் காட்டுவது போன்று,

'பட்டங்கள் ஆள்வதும் சட்டங்கள் செய்வதும்
பாரினில் பெண்கள் நடத்த வந்தோம்
எட்டும் அறிவினில் ஆணுக்கிங்கே-பெண்
இளைப்பில்லை காண்! என்று கும்மியடி!

எனப் பாடியதன் வாயிலாகப் பெண்கள் தங்களின் முன்னேற் றத்தைத் தாங்களே கும்மயடித்து வெளிப்படுத்துவது போல அமைத்து விட்டார்.

'புரட்சிப் பெண்களைப் படைத்துப் பெண்களின் அறிவைத் தடைசெய்யும் பித்தரைத் தீயிலிட்டுப் பொசுக்குவோம்'

'சாத்திரங்கள் கற்றுச் சவுகரியங்கள் செய்து ஆண்கள் போற்றிட வாழ்வோம்' என்று பெண் முன்னேற்றத்தினைச் சுட்டும் நிலையில் பாரதி முழங்கினார்.

குடும்பத்திற்குத் தலைவன் தலைவி இரு கண்கள் போன்ற வர்கள். அவற்றில் ஒரு கண்ணைக் குத்திக் கெடுத்தால் அக்குடும்பம் உயர வழியில்லை. இரண்டு இறக்கைகள் உடைய பறவையின் ஒரு இறக்கையை வெட்டினால் அதனால் கண்டிப்பாக மேலே பறக்க முடியாது. இதனைப் போன்று பெண்ணுக்குக் கல்வியறிவு அளிக்கா விட்டால் அக்குடும்பம், தலைசிறந்த குடும்பமாக உயர்ந்து விளங்க முடியாது. ஆண்-பெண் வேறுபாடின்றிக் கல்வி புகட்டினால்தான் நாடும் வீடும் முன்னேற்றப் பாதையில் செல்லும்.

பல சீர்திருத்தச் சட்டங்கள் நிறைவேற்றப்பட்டதன் வாயி லாக, முடக்கப்பட்ட, ஒடுக்கப்பட்ட பெண்கள் விழித்தெழுந் தனர். பாரதியார் பாடல்களும் சட்டங்களுக்கு மேலாக, கலங்கரை விளக்கமாக அமைந்து, பெண்களை முன்னேற வழிவகுத்தன. இன்றைய சமுதாயம் அறிவியல் யுகத்தில் சுற்றிச் சுழலும் நிலையில் அமைய, அவ்வறிவியல் சுழற்சியில் சளைக்காமல் பெண்கள் முன்னேற வழி வகுத்தவர் பாரதி என்பது மறுக்கவோ மறைக்கவோ முடியாத உண்மையாகும். பாரதி காட்டிய வழி சட்ட வழியன்று; ஞான வழியே! அடிமைப்பெண்ணை அறிவுத் திலகமாக மாற்றிச் சமுதாயக் கொடுமைகளிலிருந்து அவிழ்த்து விட, பாரதியின் கவிதைகள் பெரிதும் துணை புரிந்தன என்று கூறல் மிகையாகாது.

பா. சங்கரேஸ்வரி
தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர் – 613 005

வடமொழி நாடகங்களின் அமைப்பு முறை

முன்னுரை

''இழிவான மனித வாழ்க்கையிலிருந்து பிரித்தும் சாதாரண மனித வாழ்க்கையிலிருந்து உயர்த்தியும் காட்டுவது நாடக மாகும்.'' இது ''த்ருச்ய காவ்யமாகும்'' (கண்ணால் பார்த்து அனுப விப்பது ஆகும்). வேதத்தில் உள்ள செய்திகளைப் பாமரர்கள் அறிந்துகொள்ள முடியாததால், பாமரரும், அறிஞர்களும் கண்டு கேட்டு ஆனந்தம் தரும் நூலை இயற்றவேண்டும் எனத் தேவர்கள் பிரம்மாவை வேண்ட அவர் நாடகத்தை இயற்றினார் என நம்பப் படுகிறது. நாடகத்தில் கூறப்படும் செய்திகள் ஒவ்வொன்றும் ஒவ்வொரு வேதத்தில் இருந்து கையாளப்பட்டுள்ளன. குறிப்பாக, உரையாடல் ரிக் வேதத்திலிருந்தும் இசை சாம வேதத்திலிருந்தும் நடிப்பு யசூர் வேதத்திலிருந்தும், சுவை அதர்வன வேதத்திலி ருந்தும் எடுக்கப்பட்டு உள்ளன. புருஷார்த்தங்களைப் பாமர மக்களும் புரிந்துகொள்ள அமைந்த கருவியே நாடகம் ஆகும். இவற்றில் உள்ள அமைப்புக்களைப் பற்றிக் காண்பதே இக் கட்டுரையின் நோக்கமாகும்.

நாடக அமைப்பு

நாடக ஆரம்பித்தில் 'நாந்தி' எனும் கடவுள் வணக்கம் இருக்கும். நாடகம் காண்போரையும் நாடகத்தில் நடிப் போரையும் வாழ்த்துவதாகவும் 'நாந்தி' அமையும். பிரஸ்தாவனா என்பது தோற்றுவாயாகும். இதில் கதைக்கருவும் ஆசிரியரைப் பற்றிய குறிப்பும் நாடகம் நடிக்கப்படுவதற்கான சூழ்நிலைகளும் விளக்கப்படுகின்றன. நாடகங்கள் ஒன்று முதல் பதினான்கு அங்கங்களைக் கொண்டதாகக் காணப்படும். நாயகன், ரிஷி, தேவர் முதலியோர் வடமொழியிலும், பெண்கள், வேலை யாட்டகள் போன்றோர் பிராகிருதத்திலும் பேசுவர். முன்பின்

கதைப்போக்கை இணைத்துக் கூறுவது விஷ்கம்பகம் ஆகும். நடுத்தரப் பாத்திரங்களைக் கொண்டு அமைந்தால் 'சுத்த விஸ்கம்பகம்' என்றும், நடுத்தர மற்றும் கீழ்நிலைப் பாத்திரங்களைக் கொண்டு அமைந்தால் 'மிச்சர விஸ்கம்பகம்' என்றும் பெயர். நாடக இலக்கண நூல்களில் அமைந்தபடியே நடை, உடை பாவனைகள் அமைய வேண்டும்.

இரண்டு அங்கங்களுக்கு இடையே உணர்த்தவேண்டிய நிகழ்ச்சிகளைச் சுருக்கமாகக் கூறுவது பிரவேசகம் ஆகும். தாழ்ந்த பாத்திரங்கள் இதில் இடம் பெறுவர். சூத்திரதாரன் என்பவன் கடவுள் வாழ்த்தைத் தொடர்ந்து வருபவன். காண்போரிடம் தான் அமைத்துள்ள நாடகத்தைப் போற்றிப் பாராட்டவேண்டுமென்று வெளிப்படையாகக் கேட்டுக்கொள்வான். யுத்தம், கொலை, கொள்ளை முதலியவை அரங்கில் காட்டப்படமாட்டாது. நாடகத்தின் முடிவில் நாட்டிய சாஸ்த்திரம் இயற்றிய பரதரை நினைவு கூறும் வகையில் ''பரத வாக்கியம்'' நாயகனைப் புகழ்ந்து போற்றுதல் மரபு.

பாத்திர அமைப்பு

வடமொழி இலக்கண நூலார், நாடகத்தின் முக்கிய கதாபாத்திரங்களை ஐந்து வகையாகப் பிரிப்பர். அவை,

1. தலைவன் 2. தலைவி 3. விதூஷகன் 4. சூத்திரதாரன் 5. நடீ.

தலைவன்

நாடகத் தலைவனை நான்கு வகையாகப் பிரித்துத்துள்ளனர்.

1. தீரோதாத்தன் - மாவீரன்
2. தீரோதத்தன் - அகங்காரம்
3. தீரவலிதன் - போகி
4. தீரசாந்தன் - யோகி

இந்த நான்கு வகைத் தலைவர்களையும், அவர்கள் பெண்களுடன் வைத்த உறவுமுறையை வைத்து மேலும் நான்கு வகையாக வடமொழி ஆசிரியர்கள் பிரித்து உள்ளனர்.

1. அனுகூலர், 2. தக்ஷிணர், 3. த்ருஷ்டர், 4. சடர்

ஒருவனுக்கு ஒருத்தி என்ற பண்பு கொண்ட தலைவனை அனுகூலர் என்றும், (எ.கா.இராமர்) இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட பெண்களுடன் வேறுபாடின்றிப் பழகும் தலைவனைத் தக்ஷிணர் என்றும் (எ.கா. கண்ணன்) வேறொரு

தலைவியுடன் நயவஞ்சகமாகப் பழகி அதைக் குறித்துத் தன் தலைவி அறிந்தும் சிறிதும் கவலை இல்லாதவன் த்ருஷ்டர் என்றும், தலைவிக்குத் தெரியாமல் வேறொரு தலைவியுடன் பழகுபவனைச் சடர் என்றும் (எ.கா. உதயகுமாரன்) வரையறை செய்துள்ளனர். ''அடிப்படை நால்வகைத் தலைவரோடு இவர்களைப் பெருக்க பதினாறு வகையாகவும் பின் அவரவர் வாழ்க்கையின் தரத்திற் கேற்ப உத்தம, மத்யம, அதம என்னும் மூவகையில் பெருக்கத் தலைவர் மொத்தம் நாற்பத்தியெட்டு வகையில் அடங்குவர்.

தலைவி

நாடகத்தில் பெண்கள் உறுப்பினர்களாக வருவது தவிர்க்க முடியாத ஒன்று. நாடகத்தலைவி மூவகைப்படுவாள் 1.ஸ்வியா, 2. பரசீயா, 3. ஸாதாரண்.

தலைவனை மணந்துஉடன் வாழ்பவள் ஸ்வியா (எ.கா. சீதை); பரசியா என்பவள் பிறர் மனைவியாவாள் (எ.கா.மாதவி); பரத்தை என்பவள் ஸ்தாரண்யாவாள் இம்மூவருடன் திவ்யா என்ற ஒன்றையும் பரதர் சேர்த்து நான்கு வகையாக ஆக்கியுள்ளார். ஊர்வசி போன்ற தேவலோக மங்கை திவ்யா வகையைச் சார்ந்த வளாவாள். தலைவியர் அவர்களின் வயதை அடிப்படையாகக் கொண்டு மேலும் மூவகைப்படுவர்.

முத்தா	-	யௌவனத்தின் ஆரம்பம்
மத்யா	-	யௌவனம்
ப்ரௌடா	-	யௌவனத்தின் முதிர்ச்சி

தலைவி தலைவன்பால் கொண்ட தொடர்புபற்றி மேலும் எட்டு வகையாக வகைப்படுத்தப்பட்டுள்ளது.

1) வாஸக ஸஜ்ஜிகா	2) விரஹோத்கண்டிதா
3) ஸ்வாதீன பதிகா	4) கலஹாந்திரிதா
5) கண்டிதா	6) விப்ரலப்தா
7) ப்ரைஷிதபர்த்ருகா	8) அபிஸாரிகா

மேற்கூறப்பட்ட எட்டுத் தலைவியரும் உயர்ந்த, நடுத்தர, தாழ்ந்த பண்பை உடையவராகவும் இருப்பர். நாடக இலக்கணத்தில் தலைவிக்குச் சுதந்திரம் அளிக்கப்பட்டிருப்பதை இது காட்டுகிறது. இல்லையெனில் சீதையைப் போன்ற தலைவியைக் கூறியிருக்கலாம்.

விதூஷகன்

நாடகத்தில் தலைவன், தலைவியை அடுத்து முக்கிய இடம் பெறுபவன் விதூஷகன் (கோமாளி) ஆவான். முன்பின் தொடர்பின்றிப் பேசுபவன். நகைச்சுவைக்காகவே படைக்கப் பட்டவன். இவன் பிராமணனாவான். சாப்பாட்டில் அதிகம் நாட்டம் உடையவன். தலைவனுக்கும், தலைவிக்கும் இடையில் தூதுவனாகச் செயல்படுபவன். இவனுக்கு அனைத்துப் பாத்திரங்களுடனும் தொடர்புண்டு. அந்தப்புர மங்கையர்க்குப் பிடித்தவனாகவும் அரசியலார் குடும்பத்துக்கு நண்பனாகவும் விளங்குவது இவனுடைய தனிச் சிறப்பு.

சூத்திரதாரன்

பொம்மலாட்டமே நாடகத்தின் முன்னோடியாகும். இதை இயக்குபவன் சூத்திரதாரன் ஆவான். (சூத்திரம் - நூல், தாரம் - கைக்கொண்டவன்). எவன் நூலைப் பிடித்துக் கையினால் இழுக்கிறானோ அவன்தான் சூத்திரதாரன். சூத்திரதாரன் அனைத்துக் கலைகளிலும் தேர்ச்சிபெற்றவனாகத் திகழ்கிறான். கோள்கள், விண்மீன்கள், புவியியல், தீவு, மலை போன்ற வற்றைப் பற்றிய அறிவு, பொதுமக்களின் வாழ்க்கை முறை, புலமைத்திறம், நாடகம் மூலமாக நிகழ்ச்சியை அமைத்துக் காட்டுதல் ஆகிய வற்றில் தேர்ந்தவனாகத் திகழ்கிறான். நாடகத்தை அமைத்து, நடிகர்களுக்குப் பயிற்சியளித்து மேடையில் நடிக்க வைப்பது அவனுடைய கடமையாகும். நாடக அரங்கை அமைக்கும் நுண்ணறிவு பெற்றவனாகவும் திகழ்கிறான். நடிகனில் யாரேனும் இல்லையென்றாலோ எண்ணிக்கை குறைந் தாலோ அந்த வேடத்தை இவனே ஏற்று நடிப்பான். இப்படி யாகச் சூத்திரதாரன் நாடகத்தில் முக்கிய பங்கு வகிக்கிறான்.

நடீ

இவள் சூத்திரதாரனின் மனைவியாவாள். இவள் நாடக ஆரம்பத்தில் வருபவள். சூத்திரதாரன் அவளுடன் உரையாடும் வாயிலாகப் பிரஸ்தாவனை என்ற தோற்றுவாயைச் சுருக்கமாக நாடக ஆரம்பத்தில் கூறுவான்.

நாடகத்தின் வகைகள்

நாடகம் பத்து வகைப்படும்.

''நாடகம் ஸப்ரகரணம் பாண: பிரகசனம். டிம:
வ்யாயோகஸமவகாரௌ, வீத்யங்கேஹாம்ருக தச''

நாடகம்

முக்கியமான பிரிவுகளுள் ஒன்று நாடகமாகும். ஐந்து முதல் பத்து அங்கம் வரை இருக்கும். இதில் ஸ்ருங்காரம் அல்லது வீரம் தலையாய சுவையாக இருக்கும். தன்னேரில்லாத் தலைவர்களான இராமன், துஷ்யந்தன் போன்றோரின் வரலாற்றைக் கதைப் பகுதியாகக் கொண்டது. (எ.கா). காளிதாஸரின் சாகுந்தலம்.

ஸப்ரகரணம்

இதில் 5 முதல் 10 அங்கம் வரை இருக்கும். சமூக அமைப்பைப் பற்றியும் இதுவரை கண்டிராத கதைப்பகுதியையும் கொண்டதாகத் திகழும். இதில் ஸ்ருங்காரம் தலையாய சுவை யாக இருக்கும். உயர்ந்த அந்தணர். மந்திரி, வணிகர் இவர்களில் யாராவது ஒருவர் தலைவனாகத் திகழ்வது உண்டு. தலைவி உயர் குலத்தையோ, கணிகை குலத்தையோ சேர்ந்தவளாக இருப்பாள் (எ. கா.) சூத்ரனின் மிருச்ச கடிகம்.

பாணம்

இது ஓரங்க நாடகம். இது மரபு சார்ந்த கதையாக இல்லாமல் கவிஞர் தானாகவே முயன்று இயற்றுவதாகும். (எ.கா.) வரருசியின் உபயாபீசாரீகா.

பிரஹஸனம்

இது ஓரங்க நாடகம். இதில் நகைச்சுவை இடம் பெறும். சமூகத்தில் உள்ள குறைபாடுகளை எள்ளி நகையாடுவது இதன் நோக்கமாகும். எ. கா. மகேந்திவர்மனின் மத்த விலாஸ பிரகசனம்.

முடிவுரை

பரதக் கண்டத்தில் பரம்பரை பரம்பரையாக வரும் கருத்து யாதெனில் பிரும்ம தேவன் பரத முனிவரைத் தேர்ந்தெடுத்து நாடகவியலை நடைமுறைக்குக் கொண்டு வருமாறு கட்டளை யிட்டார் என்பதே. இதில் தாண்டவம் எனும் நாட்டிவகை சிவனிடமிருந்தும், 'லாஸ்யம்' எனும் நாட்டிய வகை பார்வதி யிடமிருந்தும் எடுத்துக்கொள்ளப்பட்டன. அபிநயம் பிரதான அம்சமாகத் திகழ்கிறது. வடமொழி நாடக உலகில் துன்பியல் முடிவே கிடையாது. பிறமொழி நாடகங்களில் அரசர்க்கு என்றும் சேவகர்களுக்கு என்றும் தனித்தனியே மொழி கிடையாது. ஆனால் வடமொழி நாடகத்தில் மட்டுமே அரசன் வடமொழி யிலும் ஏனையோர் பிராகிருதத்திலும் பேசவேண்டும் என்று வலியுறுத்தப்படுகிறது.

சிவ. சசிரேகா
மதுரை காமராசர் பல்கலைக்கழகம்
மதுரை – 625 021

தமிழ்ப் பத்திரிகைகளில் அறிவியல் செய்தி வெளியிடு

20-ம் நூற்றாண்டு 'அணுசக்தி யுகம்' என்றும், 'விண்வெளி யுகம்' என்றும் அழைக்கப்படுகின்றது. மனிதனுடைய அன்றாட வாழ்வு அறிவியலுடன் இரண்டறக் கலந்துவிட்டது. ஒரு நிமிடம் மின் விளக்கு இல்லாவிடினும் மனிதன் 'குருடன்' போலச் செயலிழந்துவிடுகின்றான். இந்தச் சூழலில் மக்களுக்கு அறிவியல் இதழ்கள்தான் அறிவியல் செய்திகளைத் தந்தன. ஆனால் இப் பொழுது, ஏறக்குறைய அனைத்துத் தொடர்புச் சாதனங்களும் அறிவியல் செய்திகளுக்குப் போதுமான இடமும், நேரமும் ஒதுக்குகின்றன. அறிவியல் செய்தி சமுதாயத்தின் பல்வேறு பிரிவினருக்கும் கிடைக்கும்படிச் செய்து, அறிவியலை மக்க ளிடையே பரவச்செய்து, அறிவியல் மனப்பான்மையினை உருவாக்க வேண்டியதன் இன்றியமையாமை இன்று நன்கு உணரப்பட்டுள்ளது. அறிவியல் செய்திகளை அளிக்க முனை வோர் யாருக்கு அளிக்கப் போகிறோம் என்பதை முன்கூட்டி வரையறுத்துக்கொள்ளவேண்டும். வாசகர்களுக்கு ஏற்ற வகையில் செய்திகளை வெளியிடும் முறை அமைதல் வேண்டும். அங் நனம், எரிகற்கள் மழை பொழிந்த விண்ணுலகச் செய்தியினைத் தமிழில் முன்னணிப் பத்திரிகைகளான தினமணி, தினத்தந்தி, தினமலர் (மதுரைப் பதிப்புகள்) ஆகியவை வெளியிட்டுள்ள தன்மையினை ஆய்ந்தறியும் முன், அச்செய்தி பற்றிய விபரங்களை அறிந்துகொள்ளுதல் வேண்டும்.

எரிகற்கள் மழை

33 ஆண்டுகளுக்குப் பிறகு விண்வெளியில் அதிசயம் நிகழ்ந்துள்ளது. எரிகற்கள் மழை பொழிந்தது. பூமியின் ஆகாயச் சுற்றுப்பாதையை ஊடுருவிச் செல்லும் டெம்பிள்-டட்டில் வால்

நட்சத்திரத்தின் வால் பகுதியில் உள்ள தூசி, துகள், சிறுகற்கள் ஆகியவை பூமியின் ஈர்ப்பு விசையால் இழுக்கப்பட்டு, காற்று மண்டலத்துக்குள் நுழைந்து எரிந்து விழுவதால்தான் இது ஒற்றை மத்தாப்பூவாய், வண்ணக் கோலமாய், வெள்ளிக் கீற்றாய் எனப் பலவாறு தோற்றமளித்தது. சில இடங்களில் பகல் நேரம், மின் ஒளி வெள்ளம் போன்ற காரணங்களால் இக்காட்சியைக் காணமுடியவில்லை. இந்த விண்கற்களின் பொழிவினால் இந்தியச் செயற்கைக்கோள்கள் எதுவும் பாதிக்கப்படவில்லை. 1998 நவம்பர் 17-18இல் நிகழ்ந்த 'விண்ணுலக வாண வேடிக்கை' என்று அதிசயிக்கப்பட்ட இந்த அறிவியல் செய்தியானது, ஆய்விற்குட்பட்ட தமிழிப் பத்திரிகைகளில் நவம்பர் 18, 19-ந் தேதிகளில் வெளியிடப்பட்ட முறையினை, அச் செய்திக்கான இட ஒதுக்கீடு, செய்திப் படங்கள், செய்தி அமைப்பு, மொழி நடை எனும் அடிப்படைகளில் பகுத்து, ஆய்வு செய்யலாம். ஆனால், கட்டுரைச் சுருக்கம் கருதி இட ஒதுக்கீடு, செய்திப் படங்கள் எனுமிவை மட்டும் ஒப்புநோக்கப்பட்டுள்ளன.

இட ஒதுக்கீடு

அன்றாடம் பல்வேறு செய்தி மூலங்களிலிருந்து கிடைக் கின்ற செய்திகளைப் பத்திரிகையில் வெளியிடும்போது, ஒவ் வொரு செய்தியின் தன்மைக்கேற்ப - செய்தி மதிப்பிற்கேற்ப - அந்தச் செய்திக்கு இன்ன பக்கம், இத்தனை பத்திகள் (Columns) என இட ஒதுக்கீடு செய்யப்படுகின்றது. அந்த வகையில் உலக அளவிலான எதிர்பார்ப்பினைப் பெற்றிருந்த, எரிகற்கள் விழுந்த செய்திக்கு ஆய்விற்குட்பட்ட தினமணியிலும், தினத்தந்தியிலும், 18.11.'98 அன்று முதல் பக்கம், முதன்மையிடம் ஒதுக்கப் பட்டுள்ளது. ஆனால் தினமலரில், இச்செய்திக்கான படத்திற்கு மட்டுமே இங்ஙனமான இடம் ஒதுக்கப்பட்டுள்ளது. செய்திக்கு 3,8 ஆகிய பக்கங்களில்தான் இடம் ஒதுக்கப்பட்டுள்ளது. எரி கற்கள் மழைப் பொழிவு பற்றிய அறிவியல் செய்திக்கு ஆய்விற் குட்பட்ட தமிழிப் பத்திரிகைகளின் 18.11.'98 அன்றைய வெளியீட் டில் இட ஒதுக்கீடு பற்றிய விபரம் பின்வருமாறு:

பத்திரிகை	படம்	செய்தி
தினமணி	4 col.x 13 cm. (முதல் பக்கம்)	3 col. x 13 cm. (முதல் பக்கம்)
தினதந்தி	4col. x 14.5 cm. (முதல் பக்கம்)	1 col. x 32. 7 cm.(முதல் 3 col. x 23.4 cm. பக்கம்)

தினமலர்	4 col.x 14.2 cm. (3-ம் பக்கம்)	1 col. x 7.7 cm. (முதல் பக்கம்) 3 col. x 15.5 cm. (8-ம் பக்கம்)

ஆய்விற்குட்பட்ட மூன்று பத்திரிகைகளும் படங்களுக்குத்தான் அதிக இடம் ஒதுக்கியுள்ளன. எரிகற்கள் மழைப் பொழிவான அறிவியல் அதிசயத்தினை மக்கள் கண்டுணரப் படங்கள் இன்றியமையாத் தேவை என்பதை அவை நன்குணர்ந்துள்ளன.

தொடர்ந்து இரண்டு நாட்களாக எரிகற்கள் விழுந்த காரணத்தால், இரண்டாவது நாளும் (19.11.'98) இச் செய்தி, தொடர்செய்தி (follow-up story)யாக வெளியிடப்பட்டுள்ளது. இந்தத் தொடர்செய்தியினை மூன்று படங்களும், செய்தியும் அடங்கிய தலைப்புச் செய்தியாக வெளியிட முதல் பக்கத்தில் தினமணி இடம் தந்துள்ளது. மேலும் செய்திக்காக 1, 3, 5 ஆகிய பக்கங்களில் இடம் ஒதுக்கியுள்ளது. தினமலரும் முதல் நாளைப் போலவே இரண்டாவது நாளும் படத்திற்கு மட்டும் முதல் பக்கத்தில் முதன்மையிடத்தினையும், இன்னும் இரு படங்களுக்கு இறுதிப் பக்கத்தின் மேல் 1/4 பகுதியிலும், செய்திக்கு 3, 7-ம் பக்கங்களிலும் இடங்கள் ஒதுக்கியுள்ளது. தினத்தந்தியில் படங்களுக்கு 5, 8 ஆகிய பக்கங்களிலும், செய்திக்கு முதல் பக்கத்தோடு, 5, 8, 11 ஆகிய பக்கங்களிலும் இடங்கள் ஒதுக்கப்பட்டுள்ளன. ஆய்விற்குட்பட்ட பத்திரிகைகளில் 19.11.'98 இல் வெளியிடப்பட்ட இச்செய்திக்கான இட ஒதுக்கீடு பின்வருமாறு அமைந்துள்ளது:

பத்திரிகை	படம்	செய்தி
தினமணி	8 col. x 11. 2 cm. (முதல் பக்கம்)	4 col. x 27.5 cm. (முதல் பக்கம்) 1 col. x 16 cm. 1 col. x 6 cm. (3-ம் பக்கம்) 3 col. x 15 cm. 1 col. x 8.5 cm. (5-ம் பக்கம்)
தினத்தந்தி	2 col. x 6.8 cm. (5-ம் பக்கம்) 3 col. x 11.1 cm. (8-ம் பக்கம்)	3 col. x 16 cm. (முதல் பக்கம்) 2 col. x 10.6 cm (5-ம் பக்கம்) 1 col. x 40.8 cm. 2 col. x 6.9 cm. (8-ம் பக்கம்)

		2 col. x 23 cm. *(11-ம் பக்கம்)*
தினமலர்	4 col x 15cm. *(முதல் பக்கம்)* 8 col. x. 14.3 cm. *(12-ம் பக்கம்)*	3 col. x 25.5 cm. *(3-ம் பக்கம்)* 3 col. x 16 cm. *(7-ம் பக்கம்)*

இந்த அறிவியல் செய்தி தொடர்செய்தியாக வெளியிடப்பட்டுள்ள போதிலும் படங்கள் மிகுந்த கவன ஈர்ப்புக் காரணியாக அமைந் துள்ளன. வண்ணப்படங்களாக அமைந்துள்ளமை இதற்குக் கூடுதல் ஆதரவாகும். அறிவியல் செய்தியினை வெளியிடும்போது. அச் செய்திக்கான படங்கள் மிகவும் அவசியமாகும். அப்போதுதான் அச் செய்தி எளிதில் புரியும்.

செய்திப் படங்கள்

செய்திப் படங்கள் எனும்போது அவை வரைபடங்க ளாகவும் இருக்கலாம்; புகைப்படங்களாகவும் இருக்கலாம். ஆய்விற்குப்பட்ட செய்தியைப் பொறுத்தவரை புகைப்படங்கள் மட்டுமே வெளியிடப்பட்டுள்ளன.

18.11.'98ல் வெளிவந்த ஆய்விற்குப்பட்ட மூன்று பத்திரிகை களிலுமே தாய்லாந்து நாட்டில் முன்தினம் அதிகாலையில் தெளி வாகத் தெரிந்த வால் நட்சத்திரம் எரிகற்களை வீசியெறிந்து சென்ற அறிவியல் அற்புதக் காட்சியைப் படம்பிடித்துக் காட்டியுள்ள புகைப்படமே இடம்பெற்றுள்ளது. மூன்றுமே செய்தி நிறுவனத் திடமிருந்து 'ஃபேக்ஸ்' மூலம் வந்த படத்தினை அப்படியே கறுப்பு வெள்ளைப் படமாக வெளியிட்டுள்ளன.

19.11.'98 வெளியீடுகளில்தான் தினமணியிலும், தின மலரிலும் மட்டுமே மூன்று வண்ணப் புகைப்படங்கள் வெளி யிடப்பட்டுள்ளன. இவை மூன்றையும் ஒப்பிட்டுக்காணும் நோக்கில் ஒரே பக்கத்தில் எட்டுப்பத்திக்குமாகச் சேர்த்துத் தினமணி வெளியிட்டுள்ளது. இவற்றுள். சீனப் பெருஞ்சுவருக்கு மேலேயும், தெற்குக் கலிபோர்னியாவிலும் தெரிந்த காட்சியைக் காட்டும் படங்கள் இவ்விரு பத்திரிகைகளிலும் இடம் பெற்றுள்ளன. தினமணி மட்டும் ஹாங்காங் விண்வெளியில் 17-ந்தேதி இரவு தெரிந்த ஒற்றை மத்தாப்புவாய் ஒளிர்ந்த விண்கல் படத்தினை வெளியிட்டுள்ளது. இப் படங்களின் அணி வகுப்பிற்குக் கீழேயே செய்தி, தலைப்புச் செய்தியாக இடம் பெற்றுள்ளது. ஆனால் செய்தி, படங்களுக்குரியது அல்ல.

எரிகற்கள் மழைப் பொழிவினால் இந்தியச் செயற்கைக் கோள்களுக்குப் பாதிப்பு ஏதும் இல்லை என்ற செய்தியே இடம் பெற்றுள்ளது. இச் செய்திக்கு மேலே உள்ள படங்கள் மூன்றுமே முன்னின (18.11.'98) வெளியீட்டில் இடம்பெற்ற எரிகற்கள் மழைப் பொழிவு பற்றிய செய்திக்கு உரியனவாகும்.

இம் மூன்று படங்களும் தினமலரில் முதல் பக்கத்தில் ஒன்றும், கடைசிப் பக்கத்தில் இரண்டுமாக வெளியிடப்பட்டுள்ளன. கலிபோர்னியா காட்சி முதல் பக்கத்திலும். சீனப் பெருஞ் சுவர்ப் பகுதிக் காட்சியும், மங்கோலியா நாட்டில் சுழற்சியாகப் பொழிந்த காட்சியும் இறுதிப் பக்கத்திலும் இடம் பெற்றுள்ளன, ஆனால், இப்படங்களுக்குக் கீழே அல்லது அருகில் செய்திகள் எதுவும் இடம்பெறவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. இப்பத்திரிகையானது, படங்களுக்கு மட்டுமே முக்கியத்துவம் தந்துள்ளது. 3, 7 ஆகிய பக்கங்களிலேயே செய்திகளை வெளியிட்டுள்ளது. படங்கள் ஒரு பக்கமும், செய்திகள் வேறொரு பக்கமுமாக வெளியிட்டு, வாசகர்களைக் குழப்பத்தில் ஆழ்த்தியுள்ளது எனலாம்.

முடிவுகள்

ஆய்விற்குட்பட்ட அறிவியல் செய்தி வெளியீட்டில் ஆய்விற்குட்பட்ட தமிழ்ப் பத்திரிகைகளுள் தினத்தந்திதான் அதிக ஆர்வம் காட்டியுள்ளது எனலாம். அதன் வாசகர்கள் பெரும்பாலும் பாமர மக்கள் என்பதால் அவர்களுக்கு அறிவியல் நிகழ்வினைத் தெளிவுப் படுத்தும் நோக்குடன் மிக அதிகமான அளவில் இட ஒதுக்கீடு செய்துள்ளதைக் காண முடிகின்றது. அடுத்த நிலையில் தினமணி ஒதுக்கீடு செய்துள்ளது. அரசியல் செய்தி வெளியீட்டில் அதிக நாட்டமுள்ள தினமலர், இந்த அறிவியல் செய்தி வெளியீட்டில் அதிக அக்கறை கொள்ளவில்லை என்றே தெரிகின்றது. எனவேதான், இச்செய்தியினை வெளியிட மிகக்குறைந்த அளவிலேயே இட ஒதுக்கீடு செய்துள்ளது.

படங்களைப் பொறுத்தவரை ஆய்விற்குட்பட்ட மூன்று பத்திரிகைகளும் எரிகற்கள் சிதறி விழுந்த அறிவியல் அற்புதக் காட்சியினைத் தமது வாசகர்களின் கண்களுக்கு விருந்தாக்கியுள்ளன. அம் மழைப் பொழிவினை நேரில் காண இயலாமற் போன - காண மறந்துபோன - வாசகர்கள் படங்கள் மூலம் காணும் பேற்றினை அவை அளித்துள்ளன. ஆனால், அப்படங்கள் அனைத்துமே செய்தி நிறுவனங்களிடமிருந்து பெறப்பட்ட படங்கள் ஆகும். தமிழகத்தில் தெரிந்த காட்சியினை மூன்று பத்திரிகைகளுமே வெளியிடாமற்போனது ஒரு குறைதான்.

சு. சண்முகசுந்தரம்
செமின்ட் ஜோசப் கல்லூரி
பெங்களூர்

கர்நாடகத்தில் முருகன் வழிபாடு

I

முருகன் குறிஞ்சி நிலத்தில் தோற்றுவிக்கப்பட்ட தமிழ்க் கடவுள் என்பது சங்க இலக்கியங்களின் வழி தெரிந்து கொள்ள லாம். குறிஞ்சி, கூடல், வள்ளி, யானை, மயில், பாம்பு, வேல், வேட்டை, வேலன் இவை அனைத்தும் தமிழ் அடையாளங்கள் செறிந்ததாக முருக வழிபாட்டை விரிவுபடுத்தியது. முருகன் வள்ளியை மணந்து கொண்டது ஒரு வேட்டைச் சமூகம் விவசாயப் (வள்ளிக் கிழங்கு) பண்பாட்டினை உள்வாங்கிய நிகழ்வின் குறியீடு என்று மானிடவியல் அறிஞர் கூறுவர். சங்க கால இறுதியில் அல்லது சங்கம் மருவிய காலத்துப் பரிபாடலில் முருகன், சமஸ்கிருதப் பண்பாட்டின் வைதிக வைணவ அணுகு முறையை அதாவது வர்ணதர்மத்தின் சாரத்தைக் கொண்டவனாக மாற்றப்பட்டுப் புராணங்களுள் புகுத்தப்பட்டான். குழந்தை களுக்குப் பாலசுப்ரமணியன் ஆனான்; இளைஞர்களுக்குக் குமரன் ஆனான்; ஞானிகளுக்கு ஞானப்பண்டிதன் ஆனான். அறிஞர் களுக்கு ஆறுமுகம் ஆனான்; வீரர்களுக்குச் சேனாதிபதி ஆனான். இவ்வாறு முருகன் வழிபாடு விரிவாக்கம் பெற்றது.

தமிழர்களைப் போன்றே தமிழ்க் கடவுளான முருகனின் வழிபாடும் நிலம் விட்டு நிலம், நாடு விட்டு நாடு பரவியது. கர்நாடகத்திலும் முருகன் வழிபாடு ஏறக்குறைய இரண்டாயிரம் ஆண்டுகாலம் கடைபிடிக்கப் பட்டு வருகின்றது. இங்குத் தமிழர் களாலும் கன்னடர்களாலும் இவ்விரண்டிலும் சாராத பிறராலும் மூவகை நிலையில் அதாவது தமிழ்க் கடவுளாக, சமஸ்கிருதத் தெய்வமாக, குலக்குறி அடையாளமாக வழிபடப்பட்டு வருகின்றது. இக்கட்டுரை இதைப் பற்றியே இங்குச் சற்று விரிவாகக் காண முயல்கிறது.

II

தமிழர்கள் திரைகடல் ஓடியும் திரவியம் தேடினர். செல்லும் இடமெல்லாம் செவ்வேளும் சென்றார். கர்நாடகம் இந்தப் பெயரைப் பெறுவதற்கு முன்னரே ஒரு மாநிலமாக மாறுவதற்கு முன்னரே தமிழர்கள் இப்பகுதியில் தொன்று தொட்டு வாழ்ந் திருக்கின்றனர். இன்றும் இங்குத் தமிழகத்திலிருந்து வருவதும் வாழ்வதுமாக இருக்கின்றனர்.

பெங்களூர் நகரத்தில் அல்சூர், கவுதம் நகர், பசவன்குடி, பேலஸ் குட்ட ஹள்ளி, சஜ்ஜன்ராவ் சர்க்கிள், நரஹரியண் குட்டா ஆகிய இடங்களிலும், கோலார் தங்க வயல், அரிகரா, குடகு, மைசூர் மாவட்டம், தும்கூர் மாவட்டம், ஆசன் பகுதி, கடற்கரைப்பகுதி ஆகிய கர்நாடகப் பகுதிகளிலும் முருகன் கோவில்கள் குறிப்பிடத் தகுந்த வகையில் உள்ளன.

அல்சூர் முருகன் கோவில் விஜய நகர காலத்து (16 ஆம் நூற்றாண்டு) வாசல் கோபுரம், குளம், எதிரில் பிள்ளையார் எனச் சிறப்பாக உள்ளது. 1821 ல் கட்டப்பட்ட கல்யாண மண்டபமும் உள்ளது. தமிழ்ப் பகுதி தமிழர்களால் இது அமைக்கப்பட்டது சுப்பிரமணிய முதலியார் தான் மண்டபம் கட்டினார். 1974-ல் இக்கோவில் திருப்பணி செய்யப்பட்டது. நரஹரிய குட்ட (குன்று) சுப்பிரமணிய கோவிலும் தமிழர்களால் நிர்மாணிக்கப் பட்டது. ஆடிமாதத்தில் இவர்கள் காவடி எடுத்து வழிபடு கின்றனர். திருவண்ணாமலைப் பகுதியிலிருந்து விழாக்களுக்குப் பம்பை, உடுக்கு, சலங்கை, சிலம்பு ஆகியவற்றுடன் கலைஞர்கள் வரவழைக்கப்படுகின்றனர். இக்கோவிலில் காவடி எடுப்பது சிறப்புக்குரியதாகக் கருதப்படுகின்றது. கந்த சஷ்டி, தைப்பூசம், ஆடிக் கார்த்திகை, வைகாசி விசாகம், தேரோட்டம், தெப்ப உற்சவம் என்பவையும் கொண்டாடப் படுகின்றன.

பசவங்குடி குமாரசாமி கோவில் தேரோட்டமும் அல்சூர் முருகன் தெப்ப விழாவும் பெரிதும் பேசப்படுபவை. ஆயிரக் கணக்கான மக்கள் கூடி மகிழ்வர். விழா நாட்களில் அலகு குத்திக் கொண்டு, தீ மிதித்தும், மொட்டையிட்டும் பக்தர்கள் தம் நேர்ச் சையை நிறைவேற்றிக் கொள்வர். 108 அல்லது 1008 என்ற எண்ணிக்கையில் சிறுவேல்களை நாக்கு முதற்கொண்டு உடம் பெல்லாம் குத்திக்கொள்வர். கௌதமபுரத்தில் முருக பக்தர்கள் காவடியுடன் தீமிதித்ததை 1 - 8 - 94 அன்று கண்டேன். அம்மன் வழிபாட்டுக்குரிய தீமித்தல் இங்கு முருகனுக்கு மாற்றப்பட்டு

உள்ளது. இங்குள்ள தமிழர்கள் ஆண்டுதோறும் திரௌபதை அம்மனுக்குத் திமித்துத் திருவிழா கொண்டாடுகின்றதன் பாதிப்பு என்றும் சொல்லலாம்.

தமிழகத்தில் காவடி ஆட்டமும் மயில் ஆட்டமும் முருக வழிபாட்டுடன் தொடர்புடையதாகத் தோன்றி இன்று பொது ஊர்வலங்களுக்கும் விழாக்களுக்கும் உரிய பொழுது போக்குக் கலை நிகழ்ச்சியாக மாற்றம் பெற்றுள்ளது. மயில் ஆட்டத்தில் மயில் வேஷமும் முருகன் வேஷமும் குறிப்பிடத் தகுந்தவை. அட்டை, வண்ணத்துணி, தோகை போன்றவற்றால் பெரிய மயில் செய்து அதனுள் புகுந்துகொண்டு தனி ஆட்டமும், முருகன் வேட மிட்டவர் கையில் வேலுடன் மயில் மேல் இருப்பது போன்று பாவித்து ஆடுவதும் உண்டு. காவடி ஆட்டமும் பூசைக் காவடி யிலிருந்து உருவானதுதான். காவடித் தண்டின் இரு பக்கங்களிலும் முருகனது உருவைச் சிறு பொம்மையாகவோ படமாகவோ பொருத்தித் தோகைகளாலும் வண்ணத் துணிகளாலும் அலங்கரித்து இருப்பர். இதனைத் தலை, தோள், முன்தோள், முன்தலை, நெற்றி, மூக்கு, மார்பு எனப் பல பகுதிகளில் விழாமல் வைத்துக்கொண்டு ஆடுவர். பெங்களூரில் திரு சுந்தர மூர்த்தி குழுவும் காளி கோவில் பூசாரி குழுவும் பிரசித்தம் பெற்றது. தமிழகக் குழுவும் அவ்வப்போது வரவழைக்கப்படும்.

கோலார் தங்கவயலில் தமிழர்கள் குடியேறிய பழம் பெரு நகரம். முருகனுக்கு இங்குத் தனிக் கோவில்கள் இல்லை. எனினும் அம்மன் கோவில்களில் முருகனுக்கென்று தனி வழிபாடுகள் நடக்கின்றன. சைவ இயக்கம் காரணமாக 1930-60 ஆண்டுகளில் இங்கு முருக வழிபாடு சிறப்புக்குரியதாக்கப் பட்டது. ஆசன் பகுதிகளில் உள்ள நாட்டுக்கோட்டை நகரத்தார் களும் தமிழகத்தைப் போலவே முருகவழிபாட்டைத் தொடர்ந்து செய்து வருகின்றனர். இவற்றில் தமிழ்முறை பெரிதும் பின்பற்றப் படுகின்றது.

III

கர்நாடகத்தில் வாழும் கன்னடர்களும் பிறமொழியாளர் களும் முருகனை வழிபட்டு வருகின்றனர். ஆனால் இதில் தமிழ் அடையாளங்கள் குறைந்து சமஸ்கிரு அடையாளங்கள் மிகுந்துள்ளன.

மாகலிதுர்க் ரயில்வே நிலையத்திலிருந்து இரண்டு மைல் தூரத்தில் உள்ளது கனிவே சுப்ரமணிய சுவாமி கோவில். இது புகழ் பெற்றது. பெல்லாரியிலிருந்து அரப்பனா செல்லும்

சாலையில் சந்தூர் கார்த்திகேய சுவாமி கோவில் உள்ளது. குமார சாமி இங்குப் பிரம்மச்சாரியாக இருப்பதால் வயதுக்கு வந்த பெண்கள் அனுமதிக்க மறுக்கப்படுகிறார்கள். ஹரிஹரா சுப்பிர மணிய கோவிலும், தொட்டபெலம்பூர் மாவட்ட தூப்கெரேயில் காட்டி சுப்ரமணியா கோயிலும், மைசூர் மாவட்ட சித்தலிங்கபுர சுப்ரமணியேஸ்வரா கோவிலும், ஆசன் மாவட்ட பிரசன்ன சுப்பிர மணிசாமி கோயிலும் தும்கூர் மாவட்ட பாவகட தாலுகா சுப்ர மணிய சுவாமி கோவிலும், குடகு பாக மண்டல சுப்பிரமணிய சாமி கோவிலும், அதே பகுதியில் உள்ள இராமநாதபுர சுப்பிர மணிய கோவிலும், நப கோவவின் சுப்பிரமணிய கோவிலும் கர்நாடக மாநிலத்திலுள்ள குறிப்பிடத்தக்க முருகன் கோவில்கள்.

இவற்றில் பாகமண்டல கோவிலில் 2 1/2 மீட்டர் உயர முருகன் சிலை உள்ளது. கோவில் பல்லவ சோழ பாணியில் கோவில் அமைந்து பார்க்க எழிலுடன் விளங்குகின்றது. திப்பு சுல்தானும் வீர ராஜேந்திரனும் இதில் திருப்பணி செய்திருக் கிறார்கள். அகத்திய முனிவர் இங்கு வரம்பெறத் தபசு செய்த தாகப் புராணம் உண்டு.

இக்கோவில்களில் ஆண்டு தோறும் விழா நடைபெறுகிறது. குறிப்பாக ஜனவரியில் ஆயிரக்கணக்கான மக்கள் கூடும்படி நிகழும், கால்நடை சந்தை இவ்விழாக்களில் தவறாது இடம் பெறும் அம்சங்களாகும். கன்னடர்கள் கோவில் விழாவை ஜாத்ரா என்று குறிப்பிடுவர். இவை சமஸ்கிருத சாயல் கொண்டவை.

IV

கர்நாடகத்தின் கடற்கரைப் பகுதிகளில் முருகன் வழிபாடு முற்றிலும் வேறுபட்டதாக வழக்கில் உள்ளது. இங்கு நாக வழி பாடு சுப்பிரமணிய வழிபாட்டுடன் இணைந்துள்ளது. நாக பஞ்சமியும் சுப்பிரமணிய சஷ்டியும் இக்கோவில்களில் நடை பெறுகின்றன.

குடுபு சுப்பிரமணிய கோவில் மங்களூரிலிருந்து 10 மைல் தொலைவில் உள்ளது. இங்குப் பாம்பு புற்று அனந்த பத்மனாப ராகக் கருதப்படுகிறது. இதனை வைணவத் தாக்கம் எனலாம். பல்ல மஞ்ச சுப்பிரமணிய கோவிலில் மனித உருவத்தின் இடுப்புக்குக் கீழ் உள்ள பகுதி பாம்பு வடிவில் உள்ளது. இதற்கு அனந்தேஸ்வரா என்று பெயர். இது நாகத்தையும் சிவனையும் குறிக்கும். போலாலி கந்தா கோவில் தென் கன்னட மாவட்டத்தில் உள்ளது. இங்கு நாகம் கருமாரியோடு

இணைக்கப்பட்டுள்ளது. நாகத்தை ஸ்கந்தா என்றே அழைக்கின்றனர். முச்சங்கோடு சுப்ரமணிய கோவிலில் பலி தேவதையாகச் சுருண்டுள்ள பாம்பு உள்ளது. உடுப்பியிலுள்ள அனந்தேஸ்வரா கோவிலில் நாகா கந்தா வழிபாடு உள்ளது. சுல்லியா தாலுகாவில் குக்கே சுப்ரமணியர் கோவிலுள்ளது. எட்டாம் நூற்றாண்டைச் சேர்ந்த இக்கோவிலுக்கு ஆதிசங்கராச்சாரியார் வந்து வழிபட்டதாகச் சொல்லப் படுகின்றது. குக்கே பட்டினம் இருந்ததாகக் கல்வெட்டு கூறுகின்றது. குக்கே என்பது குமரனைக் குறிக்கும். துளிவில் பட்டன குக்கே சுப்பிரமணிய தேவரு என்ற சொல்லாட்சி வழக்கில் உள்ளது. இது குமரனின் சிலை பாம்பு வடிவில் உள்ளது. கும்தா தாலுகாவின் மதா ஊரில் நாக சிங்க குகையில் சுப்பிரமணிய லிங்காவும் நாக தீர்த்தமும் உள்ளன. ஹோனவர் தாலுகாவின் நாக கோனாவிலும் சிரிசி தாலுகாவின் கோகர்ணத்திலும் சுப்பிரமணிய கோவிலில் நாக வழிபாடு உண்டு. குக்கே சுப்பிரமணிய கோவிலில் பிராமண பூசாரிகள் வழிபாடு நடத்துகின்றனர். பாம்புத் தீவிலிருந்து இவ்வழி பாட்டினைக் கொண்டு வந்ததாகப் புராணம் கூறும்.

V

கர்நாடக நாகரிகம் ஒரு கலப்பு நாகரிகம். திராவிடப் பண்பாட்டுக் கூறுகளும் சமஸ்கிருதப் பண்பாட்டுக் கூறுகளும் இணைய மக்கள் கலந்து வாழ்கின்றனர். தமிழர்களும் தமிழ்க் கடவுளும் இவ்வாறு கலந்திருக்கிறார்கள். அது மூவகை நிலையில் அமைந்துள்ளது.

தமிழர்கள் இடம் பெயர்ந்தாலும் இனம் பெயராமல் தமிழ் முருகனாக வழிபடுகின்றனர். முடிந்த பொழுதெல்லாம் தமிழகத் திற்கும் போய் முருகனை வழிபட்டு வருகின்றனர். இது முதல் வகை; தமிழ்நிலை.

தமிழர்களில் உயர்சாதியினரும் கன்னடரும் மேலும் சிலரும் முருகனைச் சுப்பிரமணியா, ஸ்கந்தா, குமாரஸ்வாமி, சண்முகா எனச் சமஸ்கிருத மயமாக்கி வழிபடுகின்றனர். அல்சூர் சோம்மசுவரன், இந்திராநகர் ஈஸ்வரன் கோயிலில் முருகனுக்கும் இடம் உண்டு. காவடி, மொட்டை இல்லை.

கடற்கரைப் பகுதிக் கன்னடர்கள் ஸ்கந்தனை நாக வழி பாட்டுடன் இணைத்துத் தனிப்பட்ட முறையில் அருளாட்டம், பாம்புப்புற்று என நாட்டுப்புற வழக்கில் வணங்குகின்றனர். இது குலக்குறி நிலை.

சு. சண்முகசுந்தரம்
தியாகராசர் கல்லூரி
மதுரை – 625 009

வழிபாடு

சூரியன், சந்திரன், செவ்வாய், புதன், வியாழன், வெள்ளி, சனி, இராகு, கேது, அக்கினி, வருணன், பிரம்மா, இந்திரன் சரஸ்வதி, இலக்குமி முதலியோர் ஆதிதெய்வங்களாவர். இவர் களுள் சிலரே பிரபலமாவர். சிலவற்றை மக்கள் இம்மைப்பயன் கருதி வழிபடுவர். ஆதிதெய்வ வழிபாடு ஆன்ம முன்னேற்றத் துக்குத் தடையாதலின் சைவசித்தாந்தம் அதனை ஏற்கவில்லை. ஞானசம்பந்தப் பெருந்தகையார் முதலிய சமயக் குரவர்கள் ஆதிதெய்வ வழிபாட்டினைக் கண்டித்துள்ளனர்.

''கல்லால் நிழல் அல்லர்த் தேவை
நல்லார் பேணார் அல்லோம் யாமே''

''சிவனோடுக்கும் தெய்வம் தேடினுமில்லை
அவனோடு ஒப்பார் இங்கு யாவருமில்லை
புவனம் கடந்தன்று பொன்னொள் மின்னும்
தவளச் சடைமுடித் தாமரையானே'' *(திருமூலர்)*

சிவபரம்பொருள் அல்லாத வேறு தெய்வங்களை நல்லார் பேண மாட்டார். நாமும் பேணக்கூடாது. ஆதிதெய்வங்கள் தம்மளவில் வேதனைப்படும் பிறக்கும் இறக்கும் மேல்வினையைச் செய்யும் ஆதலால் அவை அனைத்தும் ஆன்மாக்களே யாகும். அவை ஆன்மாக்களுக்கு முத்தியையோ, ஞானத்தையோ வழங்க மாட்டா. உலகியல் பயன்களையும் அவைகளால் வழங்கப் பெறும் பயனும் அற்பமாகும். ஊழ்வினையால் ஆன்மாக் களுக்குப் பல அல்லல் வரும். அவ்வல்லல்களைப் போக்கி அருள்பாலிக்கும் திறம் ஆற்றல் அவற்றிற்கு இல்லை. ஆதலால் ஆதிதெய்வம் வழங்கும் அற்பப்பயனும் ஊழ்வினை உறுத்து வந்து ஊட்டும்போது அடிபட்டுப்போகும். எனவே ஆதி தெய்வங்களால் பெறும் உலகியல் பயன்களில் ஆன்மாக்கள்

அழுந்தி ஆசைவயப்பட்டால் ஆன்ம முன்னேற்றம் தடைபடு மாதலால் ஞானசம்பந்தப் பெருந்தகையார் ''நல்லார் பேருளீர்'' என்றார். இத்தொடர் இவைபோன்ற பல கருத்துக்களை உள்ளடக் கியதாகும். சிவபரம்பொருளையன்றி வேறு தெய்வத்தை வழிபடக்கூடாது. வழிபட்டால் தியானத்தில் ஒருமைப்பாடு சிதையும். மணிவாசகப் பெருமாள் இவ்வுண்மையினை,

''உள்ளேன் பிறதெய்வம் உன்மையல்லால்
எங்கள் உத்தமனோ என்பர்''

திருவாரூர் திருக்கோயிலுக்குள் நின்றுகொண்டு அப்பர் சுவாமிகள் ''உன்னையல்லால் ஒரு தெய்வம் உன்கேன்'' என்பர். இதிலிருந்து ஆன்மாக்கள் திருக்கோயிலிலுள்ள சிவபரம்பொருளையே வழி பட வேண்டும்; பிற தெய்வங்கள் வழிபடுதற்கு உரியனவல்ல என்பது பெறப்படும்.

அவை அவ்வக்காலப் பூசையில் பிரார்த்தமாகச் சிவாச்சாரி யார்களின் தூபம் தீபங்களுக்கு மட்டில் உரியனவாகும். உலகியல் இன்பங்களை ஆதிதெய்வங்கள் தாமாக வழங்கும் ஆற்றலுடை யனவல்ல. சிவபரம்பொருள் அவையாக நின்று ஆன்மாக்களுக்கு வழங்கும். இதனைச் சிவஞானசித்தியாசிரியர் ''யாதொரு தெய்வங்கொண்டீர் அத்தெய்மாகி அங்கே மாதொரு பாகனார் தாம் வருவர்'' என விளக்குவார். எனவே அந்த அந்தத் தெய்வத்தின் ஆற்றலுக்கேற்ற பயனைத்தான் சிவபரம்பொருள் வழங்கும். அப்பெருமானை நேரடியாக வணங்குவதால் வரும் பயனைப் பெற முடியாது. இதனையும் சிவஞானசித்தியார். ''காண்பவன் சிவனேயானால் அவனடிக்கு அன்பு செய்கை மாண்பறம்'' என விளக்கும். சிவபரம்பொருள் தன்னை நேரடியாக வணங்குபவர்க்கு உலகியலின்பங்களை முத்தியை மிகுதியும் வழங்கும். ஆதிதெய்வங்கள்பால் உருகி வழிபட்டால் தான் உலகியல் இன்பங்களைப் பெறலாம். முத்தியைப்பெற முடியாது. சிவபரம் பொருள்பால் சிறிது அன்பு செலுத்தினால் போதும் உலகியல் இன்பங்களைத் தாராளமாகத் தரும். பாலுக்குப் பாலகன் வேண்டியழுதிடப் பாற்கடல் ஈந்தவன் அப்பரம்பொருள் ஆவான். திருமுறையாசிரியர்கள் உலகியல் இன்பங்களை வேண்டிப் பெறுவதற்கு அனுமதி வழங்கி யுள்ளனர். ''ஐயனே அரசே என்று அரற்றினால் வையம் ஆளவும் வைப்பர் மாற்பேறதே'' என்றும், ''பொன்னடைந்தார் போகங்கள் பலவடைந்தார் புண்ணிரே'' என்றும், ''இம்மையே தரும் சோறும் கூறையும்'' என்றும் ''காட்டில் நடமாடுவாய் ''கா''

வெனில் வாட்டம் தீர்க்கவும் வல்லார் மாற்போரறே'' என்றும் ''திருமுறைகள் பரக்கப்பேசும் போகங்கள் பலவடைந்தார்'' என்றும் சம்பந்தர் வாக்கில் பல என்று வருவதால் சிவபரம்பொருள் உலகியல் இன்பங்களைத் தாராளமாகத் தருவான் என்பதும் 'அடைந்தார்' என இறந்த காலத்தில் கூறுவதால் தருவது உறுதி என்பதும் பெறப்படும். சம்பந்தரே பிறிதொரு பதிகத்தில் ''ஆசைத்தீரத்தருவார்'' என்பர். இத்தொடர் இருபொருளுடையது. ஒன்று ஆன்மாக்கள், ஆசை நிறைவு எய்தும்படித்தருவான் என்பது. பிறிதொன்று ஆசைதீரத்தருவதால் ஆன்மாக்கள் ஆசைத்தீர்ந்து ஞானம் பெறுவர் என்பது. திருமுறை யாசிரியர்கள் சிவபரம்பொருள்பால் வேண்ட, வேண்ட வேண்டாமை தானே வரும் எனவும் புலப்படுத்துவர். பண்டு செய்த பழவினையால், இம்மைப்பிறப்பில் பல இன்னல்களை ஆன் மாக்கள் அனுபவிப் பார். அனுபவித்தாலன்றி அவ்வூழ்வினைகள் நீங்கமாட்டா. அப்பர், சுந்தரர் போன்றவர்கள் சூலை நோயாலும் கண் இழப்பாலும் அவதிப்பட்டனர். சிவப்பரம்பொருள் அவர்களது ஊழ்வினையைப் போக்கி அருள்பாலித்துள்ளது. இவ்வுண்மை யினைச் சம்பந்தர் ''வாதயாவினை மறுமைக்கும் இம்மைக்கும் வருத்தம் வந்தடையாவே'' என்றும், அப்பர் ''பத்தர்தம் ஊழ்வினை அறுப்பார்'' என்றும் சுந்தரர் ''ஒருவன் ஆர் அடியாரை ஊழ்வினையை நலிய வொட்டார்'' என்றும் அருளியுள்ளனர். ஆதி தெய்வங்கள் உலகில் பலவாதலால் அவை அனைத்தையும் ஒருவர் வழிபடுவது சாத்தியமில்லை. சிவபரம் பொருளுக்குள் எல்லாத் தெய்வங்களும் அடங்குவதால் அப்பொருளை வணங்கினால் அவை அனைத்தையும் வணங்குவதாகும்.

சிவபரம்பொருளுக்குரிய உருவத்திருமேனிகள் பல. திருக் கோயிலில் உள்ள அம்பாள் எப்பொருளது அருட்சக்தி ஆதலின் அம்மூர்த்தமும் சிவமூர்த்தமே யாகும். ''பெண்ணாகிய பெருமான்'' என்பர் சம்பந்தர். சிவஞானபோத சிற்றுரையில் மங்கலவாழ்த்துப் பாடலுக்கு உரை எழுதும்போது சிவஞான சுவாமிகள் விநாயகருக்கும் சிவபெருமானுக்கும் வேறன்மை பெற்றாம் என்று கூறுவதால் விநாயகரும் சிவமூர்த்தமேயாகும். கந்தபுராணத்தில் சிவபரம்பொருளின் கூற்றாகக் கச்சியப்பர் ''ஆதலின் நமது சக்தி ஆறுமுகன் அவனும் யாமும் பேதகமன்றால்'' எனப்பாடுவதால் சுப்பிரமணியரும் சிவமூர்த்த மும் யாகும். சிவபரம்பொருள் மிகவும் இரங்கிவந்து எடுத்த வடிவம் கணபதி கந்தன் வடிவம். அவர்களும் சிவபரம் பொருளேயாவார். ஞானநூல்கள் இக்கருத்தினை வலியுறுத்தி

யுள்ளன. ஐயம் தீர்வுக்கு இடமில்லை. இதனாலேயே திருமுறை வகுத்தவர்கள் முதல் பத்து திருமுறைகளுக்குரிய பாடுபொருள் சிவப்பரம்பொருளே எனவும் அமைத்துக் கணபதி கந்தன் ஆகிய சிவக்குமாரர்களைப் பதினோராம் திருமுறையில் இடம்பெறச் செய்துள்ளனர். வடமொழி வேதம் பிராம்மணம் முதலிய நான்கு பகுதிகளையுடையது. இறுதிப்பகுதி உபநிடதம். இதனை வேதாந்தம் எனவும் கூறுவர். 'அதர்வசிகோபநிடதம்' எனத் திட்ட வட்டமாகக் கூறும் ''சிவ ஏகோத்யேய: சிவசங்கர : அதஸ் சமாப்தா அதர்வசிகா'' என்பன அவ்வுபநிடதத்தொடர்கள்.

அப்பர் சுவாமிகள் ஆதிதெய்வங்களாகச் சூரியனை நெருப்பினை (அக்கினி) வழிபடக்கூடாது எனக் கடிந்துள்ளனர். அவ்வழிபாடு தமிழர்களது இறைக்கொள்கைக்கு உகந்தது அன்று. அது வேற்றுநாட்டவர் தமிழகத்தே புகுத்தியதாகும் என மறுத்துள்ளார்.

''அருக்கன் பாதம் வணங்குவார் அந்தியில்
அருக்களாவான் அரன் உருவல்லனோ
இருக்கு நான் மறை ஈசனையே தொழும்
கருத்தினை நினையார் மனவரே''

- 5 ஆம் திருமுறை பொது - 8

''எரிபெருக்குவர் அவ்வெரி ஈசனது
உருவருக்க மாவது உணர்கிலார்
அரிஅயற்கு அரியானை அயர்த்துப்போய
நரி விருத்தமாகுவர் நாடரே''

- 5 ஆம் திருமுறை பொது - 7

என்பது தமிழத் தெய்வச்செம்புலச் செல்வர்கள் குமரகுருபரர் முதலியோர் கதிரவனைக் கதிர்க்கடவுள் என்று கூறியுள்ளது உபசாரமாகும். உபசாரமாவது ஒன்றன் தன்மையைப் பிறி தொன்றுக்கு ஏற்றிக்கூறுவது. இஃது உள்ளுவதெல்லாம் உயர் வுள்ளல் என்ற கருத்தினையடியொற்றியமைந்ததாகும் என அறியலாம்.

திருமுறைகளை மந்திரம் என்று வழங்குவர். அதற்குரிய காரணம் அப்புகழ் நூல்கள் (துதிநூல்கள்) வேதமந்திரங்களைத் தம்பால் கொண்டு அனுசரிப்பதாகும்.

பிரணவம், பஞ்சாட்சரம், பஞ்சப்பிரமம், சட்ங்கம், காயத்திரி வேதமந்திரங்கள் இவை தெய்வத்திருமுறைகளில்

அங்கங்கே அமைந்துள்ளன. வேதமந்திரங்களைத் திருமுறைகள் போற்றுவதால் அவையும் மந்திரங்களாகும் என உமாபதிசிவம் போன்றவர்கள் அருளியுள்ளனர். ''கண்டபெருமந்திரமே மூவர் பாடல் மந்திரம் கண்ணுதலோன் கூறல்'' என்பன அவர் வாக்கு.

(கைகாண - மறைந்த பொருளுடையது வேதம்)

(திருமந்திரம் வெளிப்படையானது).

உலகில் எங்கும் தீயசக்திகள் ஆக்கிரமம் செய்துவருகின்றன. அதனால் குழப்பம் பெருகிவருகிறது. ஆன்மிக உணர்வு தலையெழுந்தாலல்லது இந்நிலையிலிருந்து உலகை மீட்க இயலாது. அமெரிக்கக் குடியரசுத் தலைவராகவும் விளங்கியவர் ஜசன்ஹவர். அவர் ஆன்மிக உணர்வைத் தட்டி எழுப்புவது ஒன்றுதான் உலகில் அமைதிநிலை பெறுதற்குரிய முயற்சியாகும் என்பர். மருத்துவர்களால் தீர்க்க முடியாத நோய்கள் பல இறைவழிபாட்டால் குணமாகி வருவதைக் காண முடிகிறது. எனவே இறைவழிபாடு மிகவும் இன்றியமையாததொன்றாகும். சைவசித்தாந்தம் இதனை வற்புறுத்துகிறது.

பெ. சண்முகம்
ஸ்ரீ அம்மன் கல்லூரி
ஈரோடு

நக்கீரனின் பக்தி நெறியில் குமரகுருபரர்

தோற்றம்

நக்கீரர் கடைச்சங்கப் புலவர், திருமுருகாற்றுப்படை ஆசிரியர், கல்விப் புலமையும் கடவுட் புலமையும் பெற்றவர். முருகக்கடவுளை உருவத்திருமேனியில் கண்டவர். மெய்யுணர்வு கொண்டவர். பேரின்பப் பெருவாழ்வு எய்தியவர். இவர் பக்தி நெறியில் பின்வந்த அன்பர்களுக்கு இலக்கிய முன்னோடியாகவும் வழிகாட்டியாகவும் அமைந்துள்ளார். திருமுரு காற்றுப்படை, தலங்களை ஒட்டிப் பத்திகம் பாடும் மரபு தலங்களை ஒட்டிப் பிரபந்தம்பாடும் பாங்கு என்பவற்றுக்கு வழி விட்டது. ''புறத் தலைவனைப் பாடும் ஆற்றுப்படை கடவுட் தலைவனுக்கு ஆதல் பக்தி இலக்கியத்தின் தோற்ற இயக்கம். உறுதிப் பொருள்கள் அறம், பொருள், இன்பம், கடவுள் வாழ்த்துப் பொருண்மை என்று நான்காக மலர்கின்றன. (இலக்கிய வகையும் வடிவும் பக். 152) நக்கீரர் பக்திநெறி வளர்ச்சியடைந்து குமரகுருபரரின் பக்தி நெறிக்கு வழி வகுத்தது என்பது தெளிவு. குமரகுருபரர் கலிவெண்பா என்னும் ஒலிபெறும் அலங்கலை முருகன் திருமுடிக்கு உகந்து சூட்டியவர். இவர் முருகன் திருவடித்துணைதன் முடிபதித்தவடு. ஆறாத மெய்ப் புகழாளி என்று முத்துக்குமாரசாமி பிள்ளைத்தமிழில் குறிப்பிடுகிறார். முருகன் பேரின்பநிலைகண்ட நக்கீரர் வீடுபேறு பெறத்தகும் மெய்யன்பருக்குக் கூறி வழிப்படுத்துவது திருமுருகாற்றுப் படை. குமரகுருபரர் முருகனிடம் நேரடியாக விளித்துப் பேசி மெய்யுணர்வில் பாடிப்புகழ்ந்து விண்ணப்பம் மொழிவது கந்தர் கலிவெண்பா.

நாம், ''ஒருகடவுள், ஒருமொழி, ஒருகலை, ஒருநாடு என்னும் வரையரையின்றிப் பல கடவுளரையும் பலமொழிக் கருத்துக்களையும் பல்கலைச் செய்திகளையும், பலநாட்டு

வருணனைகளையும் இவருடைய செய்யுட்களில் காண்கின் றோம். தென்நாட்டுச் செந்திலையும் வடநாட்டுக்காசியையும் இவர் கண்டறிந்து பாடுகின்றார். பாண்டிநாட்டையும், காவிரி பாயும் சோழநாட்டையும், கங்கைக்கரையையும் வருணிக்கிறார். இவர் யாதும் ஊரே யாவரும் கேளிர் என்ற உயர் நோக்கமும் விரிந்த உலகியலறிவும் உடையவர் (தமிழ் இலக்கியக் கொள்கை பக். 306) இவர் படைப்பு அழகு இழையும் உயிரோவியம்!

தோற்றச் சிறப்பு

திருமுருகாற்றுப்படை முருகனின் பெருமைகளைப் போற்றும் முழுமுதல் நூல். முருகன் முருகு எனப்பட்டான். இவன் அழகு, இளமை, மனம், தெய்வத்தன்மை கொண்டவன். நக்கீரர் உலகம் முழுவதும் தழுவி ஒரே இன உணர்வுடன், பண்புறு சிந்தையுடன் உலகம் உவப்ப என்று தொடங்குகின்றார். குறிஞ்சிக்கடவுள், வெல்லும் போர் வல்லவன். அணங்குடை முருகன். இவன் கோட்டம் பற்றிப் புறநானூறு கூறும். முருகன் வழிபாட்டில் ஆடல் பாடல்கள் உண்டு. மகளிர் வேலன் வெறி யாட்டயர்வர். 'வெவ்வாய் வேலன் வெறியாட்டயர்ந்த காந்தள்' என்னும் தொல்காப்பியம். ஆடல் பாடல்களுக்கேற்ப குழல் அகவும், யாழ் முரலும்; முழவு அதிரும், முரசு இயம்பும் என்று பட்டினப்பாலை (வரிகள் 154 - 158) கூறும்.

இவ்வாற்றுப்படை முருகனின் இறைமைத்தன்மையின் மாண்பினை ஓதுகிறது. முருகன் திருவுருவச் சிறப்பு, முருகனை வழிபடும் முறைமை முதலியன விளக்கப்படுகின்றன. சேய், அறுவர் பயந்த செல்வன், ஆல்கெழு கடவுட் புதல்வன், கொற்றவைச் சிறுவன், பழையோள் குழவி, வானோர் தானைத் தலைவன். மறுவில் கற்பின் வாணுதல் கணவன், குறிஞ்சிக் கிழவன் என்று குறிப்பிடும். 'இங்கே சில ஆரியப்பெயர்கள் உண்டு. சில திராவிடப் பெயர்கள் உண்டு என்பர். சங்ககாலத்தில் முருக வழிபாடு பெருவழக்கில் இருந்தது. நற்றிணையில் சிவனைப்பற்றிய குறிப்பு இல்லை. அந்நாளில் சிவவழிபாடு செல்வாக்குப் பெறவில்லை. கி.பி. ஏழாம் எட்டாம் நூற்றாண்டு களில் சைவ நாயன்மார்களும் வைணவ ஆழ்வார்களும் சமய மறுமலர்ச்சி கண்டனர். அதனால் சிவவழிபாடும் திருமால் வழிபாடும் சிறப்புற்றன. தெய்வக்குடும்பத்தில் சிவன், திருமால், முருகன், கொற்றவை இணைந்தனர். அறுசமய வழிபாடும் வளர்ந்தது.

முருகப்புராணமாம் கந்தபுராணம் 14-ஆம் நூற்றாண்டின் இறுதியில் எழுந்தது. இது ஒரு வகையில் சைவ சித்தாந்தத்தின் விளக்கமாகும். கதையின் இடையில் சைவ சித்தாந்தக் கருத்துக்கள் நிறையக்காணப்படுகின்றன. திருமலை நாயக்கர் ஆட்சிக்காலத்தில் (கி.பி. 17 ஆம் நூற்றாண்டு)'' குமரகுருபரரின் கந்தர் கலிவெண்பாவும் சைவ சித்தாந்தக்கருத்துக்களை எடுத்துக் கூறி முருகக்கடவுளைத் துதிசெய்வதாக அமைந்து விளங்குகிறது. (தமிழிலக்கியத்தில் காலமும் கருத்தும் பக். 175)'' முருகப் பெருமானும் சிவபெருமானும் வேறல்லர், இருவரும் ஒருவரே என்று தொடங்கும், சைவசித்தாந்த கருத்துக்கள்கொண்டது கந்தர் கலிவெண்பா.

விளக்கம்

''உலகம் உவப்ப'' எனத் தொடங்குகிறது ஆற்றுப்படை. முருகனின் இளமைத்தன்மை, அளியும், தெறலும், அணியும் தார் மாலை என்பன கூறப்படுகின்றன. சூரரமகளிர் மாண்பு, அவர் களின் செயல்கள், விளையாட்டு அலங்கார வருணனை கூறப்படு கின்றன. இவ்வருணனை குமரகுருபரர் காட்டும் முருகன் தலை யலங்கார வருணனைக்கு வித்திடுகின்றது. தொடர்ந்து நிணந்தின் பேய் மகளின் வெற்றிக்களத்தில் ஆடும் துணங்கைக்கூத்து வருகின்றது. நாகரிகமிக்க சூரரமகளிர்க்கும் நாகரிகமற்ற பேய் மகளிர்க்கும் ஒக்க மகிழ்வளித்து அருள்புரிபவன் முருகன் என்ற தெய்வப்பண்பு சுட்டப்பெறுகின்றது. முருகன் கடலில் நின்ற மாமரத்தை வெட்டின வரலாற்றை, சூரபன்மனைத் தடிந்த செய்தியை நக்கீரரும் பிற சங்கப்புலவர்களும் பயில வழங்கி வந்தனர். சேவடி படரும் செம்மல் உள்ளங்கொண்டு செல்லும் அன்பர்க்கு வீடுபேறு பெறும் வழி கூறப்படுகின்றது. திருப்பரங் குன்றம் கோயிலில் உறையும் முருகக்கடவுளை வழிபடுமாறு உணர்த்தப்பெறுகின்றது.

குமரகுருபரர் கலிவெண்பாவில் பரமசிவத்திற்குரிய இயல்பு கள் அனைத்தையும் சைவ சித்தாந்தக் கருத்துக்களையும் முருகக் கடவுளுக்கு ஏற்றி அமைக்கிறார். 'சிவனேகுகன்; குகனேசிவன்;' என்று பதிநூல்கள் கூறுகின்றன. தேவார திருவாசகம் தோத்திர வளர்ச்சி 14 சாத்திரநூல் வளர்ச்சி, கால வளர்ச்சி, சைவநெறி முருகநெறி பக்தி வளர்ச்சி, திருக்கோயில்கள் வளர்ச்சி, ஆட்சியாளர் திருமலை நாயக்கரின் ஆதரவு இவருக்குப் பின்னணி யாக அமைகின்றன. ''மறைமுடிவில் நின்ற நிறை செல்வன், தனிமுத்திக்கொருவித்து, எங்கும் நிறையும் பரமசிவமாய்,

ஐந்தொழிற்கும் அப்புறமாய், அழியாத வீடும் தரக்கடவன், அறிவுள் அறிவையறியும் அவருமறிய அரிய பிரமமே'' (கலிவெண்பா பக். 1-24, பிள்ளைத்தமிழ்) என்னும் தொடர்கள் பரமசிவத்திற்குரிய இயல்புகளின் உண்மையை வெளிப்படுத்து கின்றன.

''முத்தேவாம் இறைவரும் முறைமுறை பணியவிருக்கு முதற்தேவே, ஆதிப்பிரான் என்று மும்முதற் கடவுளும் அடித் தொழும் பாற்ற, மூலமெனக்குலநான்மறையோவிடு முழு முதலே'' என்னும் தொடர்கள் (கண்ணிகள்) முருகவேளின் முழுமுதற் தன்மையை உணர்த்துகின்றன. குமரகுருபரர் குருபரன் என்றோர் திருப்பெயர் கொண்டு (கண்ணி 24) என்று சிவன் குருபரன் என்று எழுந்தருளிய பெருமையை உளபடுத்துகின்றார்.

தெய்வம்

நக்கீரர், ''தெய்ஞ்சான்ற திறல் விளங்கு உரு (வரி 287) மணங் கமழ் தெய்வத்து இளநலங்காட்டி (வரி 290) என்று முருக தெய்வத் தின் இளநலத்தை விளக்குகிறார். ஓவறவிமைக்கும் சேண்விளங்கு அவிரொளி ''(வரி 3) கூறப்படுகிறது. பேரொளி வடிவினன், நீலமயில் மேல் கோலங்கொண்ட மேனியன், அப்பாலுக்கப்பால் தோன்றி ஒளிர்கின்றான் எனவும் கூறப்படுகிறது.

குமரகுருபரர், ''இளம்பருதி நூறாயிரங்கோடி போல வளந்தரு தெய்வீக வடிவு(கண்ணி 57)'' என்று முருகனின் தெய்வ ஒளி வடிவை விளக்குகிறார். ''விழியாக முன்னின்று தண்ணளி சுரந்த வர்கள் வேண்டிய வரங்கொடுப்பான். மெய்கண்ட தெய்வமித் தெய்வம் இத்தெய்வமல்லாற் புவியில் வேறு இல்லை என்று உணர்தி'' என்று தம் பிள்ளைத்தமிழில் (பாடல் 6) அம்புலிக்கு உணர்த்தும் முறையில் தலைமைக்கடவுள் தன்மையை விளக்குகிறார்.

முப்புரிநூல்

நக்கீரர் திருவேரகத்தில் முருகனை வழிபடும் இரு பிறப் பாளரைக் குறிப்பிடுகிறார். இவர்கள் ''ஒன்பது கொண்ட மூன்றுபுரி நுண்ஞாண், புலராக்காழகம் புலர உடீஇ (வரி 183, 184)'' விளக்குபவர். பூணூல் அணிந்தவர்கள். ஆனால், குமர குருபரர் முருகனின் திருவுருவ அலங்காரச் சிறப்பில் இதனை விளங்குகிறார். முருகனின் ''பைம்பொன் புரிநூலும் கண்டிகை யும் பூம்பட்டுடையும் அரைஞாணும் கச்சையழகும் (கண்ணி 54-55)'' பற்றி விளக்குகிறார். முருகன் பொன்புரிநூல் அலங்காரம்

பெறுகின்றார். நக்கீரர் போலின்றி, முருகக்கடவுள் பூணூல் அணிந்தவர் என்றும் குருபரர் விளக்குகிறார்.

முருக அவதாரமும், திருவிளையாடலும்

நக்கீரர் முருகன் புகழ்மாலையில் முருகனின் தோற்றத்தைத் தெரிவிக்கின்றார். முருகன் நீலப்பஞ்சுனையில், ஐவருள் ஒருவன் (நெருப்பு) அங்கை ஏந்த, கார்த்திகைப் பெண்டிர் அறுவர் பெற்றெடுத்த ஆறு வடிவுச்செல்வன், ஆல்கெழு காடுகிழாளின் குழந்தை என்பதே இவர் தெரிவிக்கும் செய்தி.

குருபரர் முருகனின் திருவவதாரத்தை 75-86 கண்ணிகளில் தெரிவிக்கின்றார். கந்தபுராணக்கதை தழுவி விளக்குகின்றார். அதனால், கந்தர் கலிவெண்பா குட்டிக்கந்தபுராணம் எனப்படும். முக்கட்பரஞ்சோதி விண்ணோர் முறையீட்டுக்கு இரங்கி முருகனைத் தோற்றுவித்தார். உமாதேவி ஆறு திருவுருவங் களையும் இணைத்துக் கந்தன் என்று திருப்பெயர் தந்தார். அம்மையப்பர் மகிழ்ச்சி கூர்ந்தனர். முருகனுக்கு ஆட்டுக்கிடாய், யானை, மயில் என்பன வாகனங்கள். பிரணவத்தின் பொருள் உணராத பிரம்மன் முருகனால் தண்டிக்கப்பட்டான்.

நிறைவுரை

நக்கீரர் ஆற்றுப்படையும் ஆறுபடை வீடும் முருகக் கடவுளின் கருணைப்பெருக்கை வழங்கித் திகழ்கின்றன. இப் பக்தி நெறியில் குமரகுருபரர் திருச்சீரலைவாய் செந்திற்பதியை மையமாகக் கொண்டு முத்துக்குமாரசாமி பிள்ளைத் தமிழைத் துணையாகக் கொண்டு, முருகன் கண்கண்ட கடவுள், வளம்தரு தெய்வீக வடிவம், மெய்கண்ட தெய்வம், அழகு கனிந்து முதிர்ந்த இளங்கனி, அருள்மொழி திருமுகன், இயலும் நடையும் வடிவும் அழகும் எழுத அரியன். குறப்பெண். .தொண்டைவாய்த் தேனூறு கிளவிக்கு வாயூறி நின்றவன்' என்று கூறிப் பக்திச் சுவையும், கவிச்சுவையும், காதற்சுவையும் கலந்து தருகின்றார். இவர் அன்பர்கள் மனத்திலும் விழிகளிலும் முருகனின் அழகு வடிவினை எழுதி எழுதி இன்புறும் நிலையினை எழில் நிறையப் பாடிப் பாடி மகிழ்கின்றார். நக்கீரரின் பக்திநெறியில் குமரகுருபரர் முன்னேறிச் சென்றுள்ளார்.

முல்லை. வீ. சண்முகம்
அறிஞர் அண்ணா அரசு கலைக் கல்லூரி
நாமக்கல்

திருகுகள்ளியும் மாங்காய்ப்பாலும் - ஓர் அறிவியல் பார்வை

முன்னுரை

மனிதச் செயல்பாடுகள் அனைத்திற்குமே 'வாசி' காரண மாகிறது என்பது சித்தர்களின் கருத்தாகும். ஜீவ ஒளியை உடலுக் குள் பார்க்கும் நெறி சித்தர்களின் நெறியாகும். புரிந்த மொழியில் புதிரான எளிதில் புரியாத கருத்துக்களை நாட்டுப்புறப்பாடல் வடிவங்களில் அவர்கள் பாடினர். குரு-சீடன் என்ற முறையில் மட்டுமே உணர்ந்தறியும்படியான குறியீடுகளோடும், மறை பொருள்களோடும் சித்தர் பாடல்கள் உள்ளன. 'திருகுகள்ளி', 'மாங்காப்பால்' இவைகள் சித்தர்கள் போற்றிய யோக நெறிச் செயல்பாட்டுக்கான குறியீட்டுச் சொற்களாகும். இவற்றின் உண்மைப் பொருளை வெளிப்படுத்தி விளக்குதே இக் கட்டுரையின் நோக்கமாகும்.

திருகுகள்ளி

பிராணாயாமப் பயிற்சியில் முக்கிய ஊடகமாய்ச் செயல் படுவது மனிதனின் தண்டுவடம் ஆகும். தண்டுவடத்தின் தோற்ற அமைப்பையும், செயல்பாட்டுத் திறத்தையும் நுட்பமாய் அறிந்த வர்கள் சித்தர்கள். 'திருகுகள்ளி' என்றும், 'தேளின் உரு' என்றும் சித்தர்கள் தண்டுவடத்தைக் குறிப்பிட்டனர்.

''திருகு கள்ளிக் குள்ளே வைத்து''
- என்று, காகபுசுண்டரும்,

''கொட்டுமொரு தேளுருவாய் நிற்கும் பாரு''
- என்று கருவூராரும் பாடியுள்ளனர்.

H என்ற ஆங்கில எழுத்து வடிவத்தில் தண்டுவடம் (Synaptic Processes) அமைந்து, பக்கவாட்டில் சாம்பல் நிறக்

கொம்புகளாகப் பிரிந்துள்ளன. கிராமப்புற - வேலியோரங்களில் காய்த்து நிற்கும் திருகுகள்ளியின் அமைப்பும்; தேவின் உடல் அமைப்பும் இத்தண்டுவடத் தோற்றத்தை அப்படியே கொண்டுள்ளன.

ஆறு ஆதாரங்கள்

மனித உடலின் ஆறு உறுப்புகள் - ஆறு ஆதாரங்களாகக் கொள்ளப்பெற்றன.

1. மூலாதாரம் (குதத்துக்கும் குய்யத்துக்கும் இடைப்பட்டது)
2. நாபி (தொப்புள்)
3. மணிபூரகம் (மேல் வயிறு)
4. அனாகதம் (இதயம்)
5. விசுத்தி (அடிநா)
6. ஆக்ஜை (நெற்றிமையம்)

மூச்சுப்பயிற்சி, தவம், யோகம், தியானம், உயிர்ப்பு, அடக்கம், வாசி, சரம் என்பன பிராணாயாமத்தைக் குறிக்கும் சொற்களாகும். மூன்று நிலைகளில் பிராணாயாமம் நடை பெறுகிறது.

அ) பூரகம் (காற்றை உள்வாங்குதல் - 16 மாத்திரை அளவு)

ஆ) கும்பகம் (உள்வாங்கிய காற்றை நிறுத்துதல் - 32 மாத்திரை அளவு)

இ) ரேசகம் (நிறுத்திய காற்றை வெளிவிடுதல் - 16 மாத்திரை அளவு)

மூச்சுப் பயிற்சியின்போது, கொஞ்சம் கொஞ்சமாகக் கும்பகத்தின் அளவை அதிகமாக்குதல் சாலச் சிறந்தது.

''ரேசக பூரக கும்பகத்தால் வாசி
நேரிட்டுச் செய்வதும் ஆசையடி''

என்பார் மதுரைவாலைச்சித்தர்.

மேற்கூறிய ஆறு ஆதாரங்களின் வழியே காற்றை ஏற்றி இறக்க வேண்டும். இவ் ஆறு ஆதாரங்களிலும்தான் மிக முக்கியமான நாளமில்லாச் சுரப்பிகள் அமைந்திருக்கின்றன.

மூலத்தில் - விந்தகம் (இனப்பெருக்கச் சுரப்பி) உள்ளது.

நாபியில்	-	அண்டகம் உள்ளது.
மேல்வயிற்றில்	-	அட்ரினல் சுரப்பியும், லங்கர் கான்சும் உள்ளன.
இதயத்தில்	-	தைமஸ் சுரப்பி உள்ளது.
அடிநாப்பகுதியில்	-	தைராய்டு சுரப்பியும், பாரா தைராய்டு சுரப்பியும் மூச்சுக் குழலுடன் இணைந்துள்ளன.
நெற்றிச் சுழியில்	-	நாளமில்லாச் சுரப்பிகளின் தலைமை நிலையமான பிட் யூட்டரி உள்ளது.

மூலத்தைத் 'திரிகோணக் குண்டலி' என்றும்; 'சிவ சொரூபம்' என்றும்; 'சிவன் விளையாடும் தெரு' என்றும்; 'கீழத் தெரு' என்றும் சித்தர்கள் குறிப்பிட்டனர்.

நெற்றிச்சுழியைக் கண், மூக்கு, இவற்றுக்கு மத்தியில் கூடுவ தால், 'சுழிமுனை' என்றும் மற்றவற்றை 'நடுநாடிகள்' என்றனர்.

உடலின் எல்லாப் பகுதிகளையும் மூளையுடன் இணைப்பது தண்டுவடம் ஆகும். தண்டுவடம் ஓர் உணர்வு வாங்கியாகவும், செயலாற்றும் பகுதியாகவும் உள்ளது.

''கேளப்பா மூலமடா லிங்கந் தன்னில்
கிருபையுடன் தண்டுக்கும் கீழ்மே லாக
நாளப்பா தமர்போலே பிடரி மார்க்கம்
நன்றாக ஓடுமடா நரம்பி னூடே''

என்பார் கருவூரார்.

மாங்காய்ப்பால்

பிராணாயாமம் பல படிநிலைகளில் நிகழ்வது. ஓர் அடுக்கு மாடி வீட்டின் பல தளங்கள் போல் அமைவது. ஐம்புலன்களை அடக்கி மனத்தை ஒரு நிலையில் நிறுத்தி, ஆறு ஆதாரங்களுக்கும் மேலே மூச்சுக்காற்றை ஏற்றவல்லவர்க்குக் கபாலத்தில் அமிர்தம் தாரையாய் ஒழுகும். பிராணாயாமப் பழக்கத்தின் செம்மையில் கைகூடுகின்ற சாரத்தைப் 'பால்' (Yoga Essence) என்று சித்தர்கள் பாடினர்.

''மாங்காய்ப் பாலுண்டு மலைமேல் இருப்போர்க்குத்
தேங்காய்ப்பால் ஏதுக்கடி? - குதம்பாய்
தேங்காய்ப்பால் ஏதுக்கடி?''

என்று குதம்பைச் சித்தர் குறிப்பிடும் மாங்காய்ப்பால் இதுவே யாகும். மாங்காய் என்பது கபாலம்; தலை. இந்த மாங்காய்ப் பாலுக்கு அளவற்ற சக்தி உண்டு. அறிவியலில் இது 'மூளைத் தண்டுவட திரவம்' என்று அழைக்கப்படுகிறது. முன் மூளையின் பின் பகுதியான டையன் செபஃலானில் உள்ள 'ஹைபோ தலாமஸின்' உச்சியில், 'கோராய்டு பிளக்சிஸ்' இரத்தக் குழாய் உள்ளது. இதில் சுரக்கும் - தெளிவான - நிறமற்ற - திரவமே - 'மூளைத்தண்டுவட திரவம்' ஆகும். இது, இரத்த பிளாஸ்மாவின் சிறப்பு வடிநீராகும். இயக்க அழுத்தத்தைச் சரி செய்து ஓர் இயக்க தாங்கியாகவே (Mechanical buffer) இது இயங்குகிறது. சுழற்சியின் மூலம், மூளைத்தண்டுவடத் திரவம் மூளை, தண்டுவடங்களின் உட்புறத்தையும், வெளிப்புறத்தையும் நனைத்துக் கடைசியாக டியூரா மேட்டரின் இரு சவ்வுகளுக்கும் இடையில் உள்ள சிரை இரத்த இடைவெளிகளைச் சென்றடைகிறது. இது ஒளி கசியும் இரத்த ஓட்டம் உடைய சவ்வு ஆகும். இந்த அறிவியல் உண்மை களைக் கருத்தில் கொண்டு, சித்தர்களின் பாடல்களை நோக்கின், 'அதிசயம் . . . அதிசயமே' . . . என்று வியக்கவேண்டியுள்ளது.

''உருத்தரித்த நாடியில் ஒடுங்குகின்ற வாயுவைக்
கருத்தினால் இருத்தியே கபாலமேற்ற வல்லீரேல்
விருத்தரரும் பாலராவீர் மேனியும் சிவந்திடும்
அருள்தரித்த நாதர்பாதம் அம்மைபாதம் உண்மையே''

- என்று சிவவாக்கியார் கூறுவதும்;

''சாவாது இருந்திடப் பால்கற - சிரம்
தன்னில் இருந்திடும் பால்கற''

''மாறாது ஒழுகிடும் பால்கற - தலை
மண்டையில் வளரும் பால்கற''

- என்று இடைக்காட்டுச் சித்தர் கூறுவதும்;

''அலையாமல் சோதியதன் பாலை உண்ணே''

- என்று காகபுசுண்டர் கூறுவதும்;

''மூலநெருப் பைவிட்டு மூட்டுநிலா மண்டபத்தில்
பாலை இறக்கியுண்டு பசியொழிவ தெக்காலம்?''

- என்று பத்திரகிரியார் கேட்பதும் - மாங்காய்ப் பாலான - மூளைத் தண்டுவடத் திரவமே ஆகும்.

முடிவுரை

சித்தர்கள் உடற்கூறு (Anatomy) சாத்திரத்தில் மிகுந்த அறிவு டையோராய் விளங்கியுள்ளனர். நரம்புகள், எலும்புகள், அவய வங்கள் பற்றிய உடல் உறுப்புச் செய்திகளை நுணுக்கமாய் அறிந்திருந்தனர். அதனால்தான், உடலுக்குப் பழுது வராத வண்ணம் மருத்துவ மூலிகைகளைக் கையாண்டனர்.

ஜீவகாந்தம் உடல் முழுதும் ஓடிக்கொண்டிருக்கிறது. அதற்குத் தடை ஏற்பட்டு 'வலி' எழுந்தால் 'நோய்' என்று அழைக் கப்படுகிறது. நோய் அதிகமாகும்போது மரணம் நேரிடுகிறது. விந்து ஆற்றல் இல்லாத போது முதுமை வருகிறது. இவற்றை மிக நன்றாக அறிந்தவர்கள் சித்தர்கள் என்பதால், 'மாங்காய்ப்பால்' கறக்க விழைந்தனர்.

கொடுமுடி ச. சண்முகன்
செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகர முதலித் திட்ட இயக்ககம்
சென்னை – 600 008

பண்டைத் தமிழரின் அகலாங்கு நெட்டாங்கு முறை

பூமியின் மீது ஓர் இடத்தைச் சுட்டுவதற்கு மூன்று அளவுகள் வேண்டும். அகலாங்கு, நெட்டாங்கு, கடல் மட்டத்திற்கு மேல் அதன் உயரம் ஆகிய மூன்றும் அடிப்படையானவை. உலகப் படங்களில் அகலாங்கு, நெட்டாங்கு குறிப்பிடப்பட்டிருக்கும். கடல் மட்டத்திற்கு மேல் உயரம் சமவுயரக் கோடுகளின் மூலம் சுட்டப்படும்.

ஆங்கிலேயர் வந்த பின்னர்தான் அகலாங்கு, நெட்டாங்கு முறை வந்ததென்பது இன்றைய மக்களின் எண்ணம். அவ்வா றில்லை. பண்டைய இந்தியாவிலும் இந்த முறை இருந்துள்ளது.

ஆரியபட்டரின் ஆரியபாட்டியம், பாஸ்கராச்சாரியாரின் கணித நூல் பற்றி அறிந்துள்ளோருக்கு இது புதியதல்ல. கி. பி. 476 ஆம் ஆண்டு பிறந்த ஆரியபட்டர் தனது 23-ஆம் வயதில் இந்த நூலை எழுதினார். அதற்கு முன்னரும் இம்முறை நெடுங்காலம் நாட்டில் வழக்கத்தில் இருந்திருக்க வேண்டும்.

அகலாங்கு என்பதை முன்பு அட்சரேகை என்று கூறினர். நெட்டாங்கு என்பது தீர்க்க ரேகை ஆகும். பூமிக் கோளத்தை 360 பாகையாக ஒரு பாகை வழியே ஒரு கோடு செல்வதாக வைத்துக் கொண்டனர். பிரிட்டனைச் சேர்ந்த கிரீன்விச் என்னும் ஊர் வழியாக செல்லும் நெட்டாங்கு பாழ் பாகை ஆகும். அங்கிருந்து கிழக்காக 180 பாகையும் மேற்காக 180 பாகையும் எண்ணப் படுகின்றன. இந்தியச் செந்தர நேரம் 82 பாகை 30 கலை நெட்டாங்கு மூலம் கணக் கிடப்படுகிறது. கிரீன்விச் நேரத்தை விட 5 மணி 30 மணித்துளிகள் பிந்தியிருக்கும்.

அகலாங்கு என்பது பூமிக் கோளத்தின் அச்சிற்குச் செங்குத்தாக இருக்கும். நிலநடுக்கோடு பூமியை வடபாகம், தென்பாகம் என இரண்டாகப் பிரிக்கிறது. பூமியின் நிலநடுக் கோட்டின் வடக்கே இருப்பவை அகலாங்கு வடக்கு எனவும், தெற்கே இருப்பவை அகலாங்கு தெற்கு எனவும், பூமியின் நடுப்புள்ளியிலிருந்து, வடதென் துருவங்களை இணைக்கும் கோட்டின் நடுப்புள்ளி வழியே அதற்குச் செங்குத்தாகவும் பாழ்பாகை கோணத்துடனும் அமைவது நிலநடுக்கோடு எனவும் அழைக்கப்படும். துருவம் 90° பாகையில் இருக்கும். 23 பாகை 30 கலை வழியே செல்லும் கோடு கடகரேகை ஆகும். சென்கே 23 பாகை 30 கலை வழியே செல்லும் கோடு மகரரேகை ஆகும்.

குமரி முனை 8பாகை 4 கலை வடக்கு அகலாங்கில் அமைந்துள்ளது. இந்தியாவின் வடமுனை 37 பாகை 6 கலை வடக்கு அகலாங்கில் அமைந்துள்ளது.

பண்டைய இந்தியாவிலும் பூமியை 360 பாகையாகவே பிரித்திருந்தனர். அகலாங்கு அமைப்பில் பெரிய மாற்றம் ஏதுமில்லை. நிலநடுக்கோடு இலங்கையில் கீழே செல்வதாகவே கொண்டுள்ளனர். இதில் பாழ் நெட்டாங்கு உச்சயினி வழியே செல்வதாக வைத்துக் கொண்டனர். ஒவ்வொரு ஊரைப் பற்றியும் சொல்லும்போது, அதன் அகலாங்கு, நெட்டாங்கு குறிப்பது பண்டைய வழக்கம். உச்சயினியின் தற்கால நெட்டாங்கு 77 பாகை 5 கலை ஆகும். இன்றைய முறைக்கும் பழைய முறைக்கும் உள்ள வேறுபாடும் இதுவேயாம்.

ஆரிய பாட்டியத்திற்கு உரை எழுதியவர்களில் இரண்டு பேர் முதன்மையானவர்கள்.கங்கை கொண்ட சோழபுரத்தைச் சேர்ந்த சூரியதேவர் ஒருவர். சூரியதேவ யஜ்வ, சூரியதேவ சோமசுத், சூரிய தேவ தீக்சிதர் என்றும் அழைக்கப்படுகிறார். அவர் கங்கை கொண்ட சோழபுரத்தில் கி.பி. 119 - இல் பிறந்தார். கணக்கு நூல்கள் பல எழுதியுள்ளார்; நிருத்துவ பிராமணக் கோத்திரத்தில் பிறந்தவர்.

அய்ந்து கணக்கு நூல்களுக்கு உரை எழுதியுள்ளார்.

1. பாஸ்கரரின் மகாபாஸ்கரியத்திற்குக் கோவிந்தசாமி எழுதிய உரைக்கு ஒரு விளக்க நூல்.
2. ஆரியபாட்டியத்திற்கு ஒரு திறனாய்வு.
3. வராமிகிரரின் மகாயாத்ராவிற்கு ஒரு திறனாய்வு.

4. மஞ்சுளரின் லகு மானசாவிற்கு ஒரு திறனாய்வு.

இடைக்காலத்தில் மிகப்பெரிய கணக்கு மேதையாகத் திகழ்ந்துள்ளார். இவருடைய உரைக்கு யல்லய்யா ஒரு திறனாய்வு எழுதியுள்ளார். சிரிசைல மலைக்கு அருகில் உள்ள ஸ்கந்த சோமேஸ்வரம் இவரது ஊர்.

இவ்விரு பெருமக்களும் தத்தம் ஊர்களின் நெட்டாங்கு என்னவென்று கூறியிருக்கிறார்கள்.

ஸ்கந்த சோமேஸ்வரம்	15 பாகை 30 கலை வடக்கு அகலாங்கு 4 பாகை 5 கலை கிழக்கு நெட்டாங்கு 36 யோசனை கிழக்கு
கங்கைகொண்ட சோழபுரம்	11 பாகை 3 கலை வடக்கு அகலாங்கு 11 யோசனை கிழக்கு

காஞ்சிபுரத்தில் அரசராயிருந்த ஒருவரும் ஆரிய பாட்டியத்திற்கு உரையெழுதியுள்ளார்.

இக்கட்டுரை தொடர்பாக மேலும் ஆராய்வதற்குப் பல அரிய செய்திகள் உள்ளன. புதுதில்லி, இந்தியத் தேசிய அறிவியல் அகடெமி ஆரியபாட்டியம் பற்றி மூன்று நூல்கள் வெளியிட்டுள்ளது. அவற்றைப் படித்துப் படித்துப் பல கட்டுரைகள் எழுதலாம். பாஸ்கரரின் மகாபாஸ்கரியத்தில், சூரியனின் நிழலிலிருந்து ஓர் ஊரின் அகலாங்கு, நெட்டாங்கு எளிமையாகக் கணிக்கும் வழி கூறப்பட்டுள்ளது. இளைஞர்களின் அறிவிற்குப் பெருந்தீனி வழங்கக் கூடியது. நீட்டல் அளவுகளில் வடநாட்டுக் குறிப்புகளுக்கும், தென்னாட்டுக் குறிப்புகளுக்கும் இடையே வேறுபாடு தெரிகின்றது. ஆராய்ச்சிக்குத் தரவுகள் நிறைய உள்ளன.

மு. சதாசிவம்
ஈரோடு

எழுத்துச் சீர்திருத்தமும் சப்பான் எழுத்துக்களும்

தமிழ் எழுத்துச் சீர்திருத்தவாதிகள் ஒரு மொழியின் எழுத்துக்களைச் சுருக்கினால் அம்மொழியின் வளம் பெருகும் என்று தவறாகக் கருதுகின்றனர். ஆனால் சப்பான், சீன மொழி யினர் எழுத்துக்களின் மிகுதியே மொழி வளத்துக்கு நலம் பயக்கும் என்று கருதுகின்றனர். சீன மொழியில் ஏறத்தாழ ஐம்பதாயிரம் எழுத்துக்கள் உள்ளன என்று கூறுகின்றனர். சப்பான் மொழி சீன மொழியின் எல்லா எழுத்துக்களையும் கடன் வாங்கிக் கொண்டதோடு தனக்கென மேலும் இருவகையான நெடுங் கணக்குகளை வகுத்துக் கொண்டது. அவற்றுள் ஒன்று 'ஹிரகானா' என்பது. இது சப்பான் மொழிச் சொற்களை எழுதப் பயன் படுத்தப்படுகிறது. இதில் 108 வரி வடிவங்கள் உள்ளன. ஆனால் அடிப்படை வரி வடிவங்கள் அல்லது எழுத்துக்கள் 46 தான்.

மற்றொரு எழுத்து முறை 'கதகானா' என்பது. இது சப்பானியர் பிறமொழிச் சொற்களை மட்டும் எழுதுவதற்குப் பயன்படுத்தப் பெறும் நெடுங்கணக்காகும். இதிலும் 108 வரி வடிவங்கள் உள்ளன. தமிழ் எழுத்துச் சீர்திருத்தக்காரர்கள் தமிழ் எழுத்துக்களின் எண்ணிக்கையைக் குறைப்பதற்காகப் படாதபாடுபட்டு வருகின்ற னர். சப்பானியரோ ஒரே சமயத்தில் மூன்று வகையான எழுத்து முறைகளைப் பின்பற்றுகின்றனர். மொழி வளத்துக்கு எழுத்து வளமும் வேண்டும் என்று சப்பானியர் கருதுகின்றனர்.

சீனமொழியிலுள்ள ஐம்பதாயிரம் எழுத்து வடிவங்களில் ஏறத்தாழ இரண்டாயிரம் முதன்மையான எழுத்து வடிவங்களைத் தேர்ந்தெடுத்து அவற்றை அனைவரும் கட்டாயமாக அறிந்திருக்க வேண்டும் என்று சப்பானிய அரசு ஆணையிட்டுள்ளது. இவ்வாறு சப்பானியக் குழந்தைகள் மூன்றுவகையான எழுத்து முறைகளில் குறைந்தது 2200 எழுத்துக்களைக் கற்க வேண்டியுள்ளது.

ஹிரகானா என்னும் சப்பானிய எழுத்து முறையில் அ, இ, உ, எ, ஓ என்றும் ஐந்து உயிரெழுத்து வடிவங்களே உள்ளன. இவற்றிற்கு இனமான நெட்டெழுத்துக்களைக் குறிப்பதற்கு ஒரே எழுத்தை இருமுறை எழுதிக்கொள்கின்றனர். (எ-டு) அஅ = ஆ.ஃ

சப்பானிய நெடுங்கணக்கில் உள்ள மெய்யெழுத்துக்கள் பின்வருமாறு: க, ஸ, த, ந, ஹ, ம, ய, ர, ல என்பவை. இது தமிழ் எழுத்து வரிசை முறையை ஒட்டியே உள்ளமை குறிப்பிடத்தக்கது. சப்பானில் ங், ஞ், ந், ம் ஆகிய மூக்கொலிகள் யாவும் ஒரே ஒரு குறியீட்டினால் குறிக்கப் படுகின்றன. சப்பான் நெடுங்கணக்கில் ட, ண, ப, ல, ழ, ள, ற, ன ஆகிய மெய்யொலிகள் இல்லை. தமிழில் உள்ள ஆய்த எழுத்தைப் போலவே வொ, ந் என்ற இரு தனி ஒலிகள் சப்பானில் உள்ளன.

தமிழ் நெடுங்கணக்கில் 12 மெய்யும் 18 உயிரும் உறழ்ந்தால் 216 உயிர்மெய் வடிவங்கள் ஒழுங்காகப் பிறக்கின்றன. ஆனால் சப்பானில் 5 உயிரும் 9 மெய்யும் கூடினால் 45 உயிர்மெய்கள் பிறப்பதில்லை. ஏனெனில் சப்பானியர் யி, யெ, வி, வெ, வொ ஆகிய ஐந்து உயிர்மெய்யெழுத்துக்களை விலக்கிவிட்டனர். அதனால் எழுத்துச் சீர்வரிசையில் இவை வருமிடங்கள் சப்பானில் காலியிடங்களாகவே உள்ளன. தமிழில் உ,ஊ உயிர்கள் ஒழுங்காக மெய்யெழுத்துக்களுடன் சேர்ந்து உயிர்மெய்யெழுத்துக்களைத் தோற்றுவித்தாலும், அவற்றின் வரி வடிவங்களில் சீர்மை இல்லை என்று தமிழ் எழுத்துச் சீர்திருத்தக்காரர்கள் கூறுகின்றனர். சப்பானில் யகர, வகர வரிசையில் 5 உயிர் மெய்யெழுத்துக்களே காணப்படவில்லை என்று அறிந்தால் இன்னும் எப்படிக் குறை கூறுவார்களோ தெரியவில்லை.

தமிழில் இல்லாத பின்வரும் வரிவடிவங்கள் சப்பானில் உள்ளன. g, z, d, b, p. மேலும், ய, யு, யொ என்ற எழுத்துக்களுடன் க, ஸ, த, ந,ஹ, ம, ர, g, z, d, b, p - ஆகிய மெய் யொலிகள் சேர்ந்த கூட்டொலிகள் 36 உள்ளன. இவற்றைக் குறிக்கத் தனி வரி வடிவங்கள் இல்லை. க் + ய = க்ய என்பது போல 'க்' வரிவடிவ மும், ய, வரி வடிவமும் சேர்த்தே சப்பானில் எழுதப்படுகின்றன. தமிழில் ஐ, ஔ என்ற இரண்டே கூட்டொலிகள் உள்ளன. இவ்விரண்டையும் ஒழித்துவிடத் துடிக்கும் தமிழ் எழுத்துச் சீர்திருத்தக்காரர்கள் சப்பான் மொழியிலுள்ள 36 கூட்டு வடிவங் களையும் ஒழித்துவிட்டு எழுத்துச் சுருக்கம் செய்யும்படி சப்பானி யருக்கு அறிவுரை கூறுவார்களா? அல்லது தமிழில் ல, ழ, ள என்ற மூன்று வரிவடிவங்கள் இருக்கச் சப்பானில் ஒன்றுகூட இல்லாதது நாணுதற்குரியது என்று அவர்களிடம் கூறி ஏதாவ

தொன்றையாவது தமிழிலிருந்து எடுத்துக்கொள்ளும்படி அவர் களிடம் அறிவுரை கூறுவார்களா? சப்பானில் வி, வு, வெ ஆகிய ஒலிகள் இன்மையின் பிறமொழிச் சொற்களைக் கடன் வாங்கும் போது வகரத்திற்குப் பகரமாகப் பி, பு, பெ என்ற எழுத்துக் களையே சப்பானியர் பயன்படுத்த வேண்டியிருக்கிறது. தமிழைத் தவிரப் பிற எல்லா இந்திய மொழிகளிலும் கூட்டெழுத்துக்கள் இருக்கின்றன. சப்பான் மொழியில் தமிழைப் போலக் கூட் டெழுத்துக்கள் தனித்தனி எழுத்துக்களாகவே எழுதப்படுகின்றன.

தமிழ்க் குழந்தைகள் கு, சு, டு, து, பு, று ஆகிய 6 எழுத்துக் களில் உள்ள 4 வடிவ வேறுபாடுகளைக் கற்றுக்கொள்ளத் துன்பப் படுவதால் அவற்றை ஒரே மாதிரியாக எழுதவேண்டும் என்று தமிழ்ச் சீர்திருத்தக்காரர்கள் படாதபாடு படுகின்றனர். சப்பானியக் குழந்தைகளோ போராட்டம் எதுவுஞ் செய்யாமல் அமைதியாகக் 'காஞ்சி' எனப்படும் இரண்டாயிரம் சீன எழுத்துக்களைக் கற்றுக் கொள்கின்றன. இவற்றைக் கற்றுக்கொள்ளச் சப்பானியக் குழந்தை களுக்குப் பொதுவாக ஒன்பது ஆண்டுகள் தேவைப்படுகின்றன என்று ஹபேயின் என்ற சப்பானிய அறிஞர் கூறியுள்ளார். சீனமொழியிலும், சப்பான் மொழியிலும் 'காஞ்சி' எழுத்துக்கள் மொத்தம் ஐம்பதாயிரம் உள்ளன என்று கூறுகின்றனர். எல்லா எழுத்துக்களையும் கற்றுத்தேர்ந்தவர் ஒரு சிலரே இருக்க முடியும். எனினும் பத்தாம் வகுப்பு வரை படிக்கும் குழந்தைகளும் நூல்கள், இதழ்கள் முதலியன படிக்க விரும்பும் பொதுமக்களும் ஏறத்தாழ 2000 காஞ்சி எழுத்துக்களைக் கற்றுக் கொண்டால் போதும் என்று சப்பானிய அரசு அவற்றைத் தேர்ந் தெடுத்துத் தந்துள்ளது.

காஞ்சி எழுத்துக்களைக் கற்பதிலும் சப்பானியக் குழந்தை களுக்கு ஒரு சிக்கல் உள்ளது. பல காஞ்சி எழுத்துக்கள் சீன மொழி யில் ஒருவகை ஒலிப்பையும் பொருளையும் பெற்றுள்ளன. சப்பான் மொழியில் வேறுவகை ஒலிப்பையும் பொருளையும் பெற்றுள் ளன. அதனால் சீன எழுத்துக்களைக் கற்றுக் கொண்டாலே சப்பானியர் சீனமொழியையும் கற்றுக்கொள்ள முடியும் என்று கருதுவது தவறு.

எல்லாச் சீன (காஞ்சி) எழுத்துக்களையும் சப்பான் கடன் வாங்கிக் கொண்டது. காஞ்சி (சீன) எழுத்துக்கள் எல்லாம் ஓவிய எழுத்துக்களே என்று கூறுவதும் தவறு.

காஞ்சி எழுத்துக்களில் ஒரே எழுத்தில் ஒரு கோடு முதல் 24 வரை கோடுகள் உள்ளன. எடுத்துக்காட்டாகப் பருந்து என்ற பறவையைக் குறிக்கும் ஓர் எழுத்தில் 24 சிறுகோடுகள் உள்ளன.

தமிழில் கு, சு, டு, து, பு, று இவற்றில் சு, து என்ற இரு எழுத்துக்களில் மட்டும் 5 சிறுகோடுகள் உள்ளன. இந்த ஐந்து சிறுகோடுகளைக் கற்றுக் கொள்ளுவதாலேயே தமிழர்கள் அறிவியல் முன்னேற்றம் அடைய முடியாது என்று எழுத்துச் சீர்திருத்தக்காரர்கள் கதைக்கின்றனர். உலகிலேயே அறிவியலில் முன்னோடியாக இருக்கும் சப்பான் மொழியோ எழுத்துக்களிலும் அதிக எண்ணிக்கை பெற்றுள்ளது. எழுத்துக்களை உருவாக்கும் சிறு கோடுகளிலும் அதிக எண்ணிக்கை பெற்றுள்ளது. வேதனை யின்றிச் சாதனை பெற முடியாது என்பது சப்பானியர்களின் பழமொழி. ஆனால் குண்டுச் சட்டியிலேயே குதிரை ஓட்ட வேண்டும் என்று எழுத்துச் சீர்திருத்தக்காரர்கள் முயல்கின்றனர்.

ஒரு மொழியில் குறைந்த எழுத்துக்களிருந்தால்தான் அந்த மொழி உலகை ஆள முடியும், அறிவியல் முன்னேற்றம் பெற முடியும் என்ற எழுத்துச் சீர்திருத்தக்காரர்களின் கொள்கையைச் சப்பானிய மொழி பொய்யாக்கியுள்ளது.

ஒரு நாட்டின் வளர்ச்சிக்கு அதன் பொருளாதார முன்னேற்றமே தேவை, எழுத்துக் குறைப்பன்று. ஒரு நாட்டின் முன்னேற்றத்திற்கும், அந்நாட்டு மொழியில் எழுத்துக் குறைப்புக் கும் எவ்விதத் தொடர்புமில்லை. சப்பான் மொழியில் அ, இ, உ, எ, ஏ என்ற ஐந்து உயிரெழுத்துகள் தகர மெய்யுடன் சேரும்போது த, தி, து, தெ, தொ என்றுதானே வரவேண்டும். ஆனால் 'தி' வடிவத்திற்குப் பதிலாகச் 'சி' என்ற எழுத்து வருகிறது. 'து' என்பதற்குப் பதிலாக த்ஸு என்ற எழுத்து வருகிறது. அது போலவே வரிசையொழுங்கில் ஸ-விற்குப் பிறகு 'ஸி' வர வேண்டும். ஆனால் சப்பானியர் 'ஷி' என்று எழுதுகின்றனர். ஹு என்பதற்குப் பதில் ஃபு என்று எழுதுகின்றனர். zi என்பதற்குப் பதில் ஜி என்று எழுதுகின்றனர்.

தமிழில் கி, சி, தி, பி, ரி, லி, ளி . . . என்று இகரத்தைக் குறிக்கும் குறியீடு ஓர் ஒழுங்குக்குட்பட்டுள்ளது. சப்பானில் கி, ஷி, நி, ஹி, மி, ரி ஆகிய எழுத்துக்கள் யாவும் ஓர் ஒழுங்கு முறையின்றி வெவ்வேறு வரிவடிவங்களையே பெற்றுள்ளது. அதுபோலவே கு, ஸு, த் ஸு, நு, பு, மு, ரு ஆகியவை பொதுப் பண்பு ஒன்று கூட இல்லாமல் (தமிழைப்போலவே) வெவ்வேறு வடிவங்களா யுள்ளன. தமிழில் கு, ங, சு . . முதலிய 18 உயிர் மெய்யெழுத்துக்கள் ஒன்றுக்கொன்று தொடர்பின்றி உள்ளன. தமிழில் கொ, சொ, வரிசையில் ஓர் ஒழுங்கு முறையுள்ளது. சப்பானில் எந்தச் சீர்மையும் இல்லை. தமிழ் எழுத்துச் சீர்திருத்தக்காரர்கள் சப்பான் மொழி யிலிருந்து ஒரு பாடம் கற்றுக் கொள்வார்களாக.

இரா. சந்திரசேகரன்
பாரதியார் பல்கலைக்கழகம்
கோயம்புத்தூர் – 641 046

கணிப்பொறி வழித் தமிழ் கற்பித்தல் நிரல் வழிக் கற்றலுக்கான கணிம வரைவு

இருபதாம் நூற்றாண்டின் வியக்கத்தக்க புதுமைகளுள் ஒன்றான கணிப்பொறி, மானுட வாழ்க்கையின் அறிவுச் சூழலை முற்றிலுமாக மாற்றியமைத்துக் கொண்டுள்ளது. அறிவியல், வணிகம், மருத்துவம், பொறியியல் போன்ற அனைத்துத் துறை களிலும் அது உள் நுழைந்து ஆளுமை செய்வது போலவே கல்வித் துறையிலும் அது ஆற்றல் மிகுந்த செயலமைப்புடன் இயங்கு கிறது. பல்வேறு அறிவுத்துறை சார்ந்த அறிஞர்கள் தத்தம் துறை களில் கல்வி கற்பிப்பதற்கான கணிம வரைவுகளை உருவாக்கி வருகின்றனர். கணிப்பொறியுடன் கூட, ஒளிக் காட்சி வரைவு களும் மேலோங்கி வருகின்றன. இந்த வேகமான, புதுமையான ஆற்றல் மிக்க அலையிலிருந்து 'தமிழ்க் கல்வி' ஒதுங்கி நிற்க முடியாது; அப்படி நின்றால் தமிழ்மொழி, இன்றைய நவீன யுகத்திற்கேற்ற மொழியாக உலக மொழிகளுக்கிணையாக நிலை பேறடைய முடியாது. கணிப்பொறி வழியாகக் கற்பித்தல் என்பது, விரைவு, நுட்பம், தெளிவு, மாணவர் ஈர்ப்பு, அறிவுத் திறனை நிலை நிறுத்துதல், தன்னார்வம் போன்ற பல விளை திறன்களை வளப்படுத்துகிறது. கணிப்பொறி வழியாகத் தமிழைக் கற்றுத் தருவதற்கான கணிம வரைவுகளை உருவாக்கு வது இன்றைய சூழலில் மிக இன்றியமையாத தேவையாகும்.

கல்வியியலில் ஏற்பட்டுள்ள புதிய சிந்தனைப் போக்குகளின் காரணமாக மொழி கற்பித்தலில் விளையாட்டுமுறை, செயல் திட்ட முறை, மேற்பார்வை முறை, ஒப்பந்த முறை, மொழி ஆய்வுக் கூடப் பயிற்று முறை, கற்பிக்கும் பொறிகள் வழிமுறை போன்ற பல்வகை முறைகள் உருவாகியுள்ளன. மாணவர்களை மொத்தமாக வைத்துத் தொகுப்பு நிலை அலகாகக் கற்பிக்காமல்,

தனியாள் வேற்றுமைகள், தனியாள் திறன்களைக் கருத்தில் கொண்டு தனித்த கல்விச் செயலாக்கத்தை ஊக்குவிக்கும் நிலையில் தனிவேகக் கற்றல் முறைகள் அண்மைக்காலத்தில் பரவலாகச் செழுமைபெற்று வருகின்றன. நிரல் வழிக் கற்றல் அத்தகைய தனிவேகக் கற்றல் முறைகளுள் மிகக் குறிப்பிடத் தக்கது ஆகும். இந்த நிரல் வழிக் கற்றல், கணிப்பொறியின் துணையோடு மிகுந்த ஆற்றலுடையதாகச் செம்மைப் படுத்தப் படுகிறது. செயற்பாடுகளின் தன்மைகளையொட்டி, கணிப்பொறி வழிக் கற்பித்தல் பல வகைகளாக அமைகின்றன.

1) கணிப்பொறியின் துணைகொண்டு கற்பித்தல் (CAI) (Computer Assisted Instruction)

2) கணிப்பொறியின் அடிப்படையில் கல்வி (CBE) (Computer Based Education)

3) கணிப்பொறியின் வழியாகவே கற்றல் (CBI) (Computer based instruction)

4) கற்பித்தலில் கணிப்பொறி செயற்பாடு (IAC) (Instructional application of computer)

கணிப்பொறி என்ற ஊடகம் கற்பித்தல் - கற்றல் சூழலுக்கு வரும் போது, கற்றல் வினைத் திட்டமாவது (Strategy) முழுவதும் கற்போர் கட்டுப்பாட்டிலேயே அமையும் (Learner control languages)

ஆசிரியர் - மாணவர் - வகுப்பறை என்ற சூழலில் ஒரு மாணவன் மொழியைப் பயிலும் போது உளவியல் அடிப் படையில் பல வகையான குறுக்கீடுகள் நிகழ்கின்றன. உயர்வு தாழ்வு மனப்பான்மை, தன் முனைப்பு, பயில் மொழிப் பயன் பாட்டைக் குறித்த எதிரேற்பு, ஆசிரிய - மாணவர் உறவுநிலை, தனியாள் கொள்திறன், உடற் கூற்றியக்க வேறுபாடு, பின்புலச் சார்புகளின் எதிருறுத்தல் ஆகிய குறுக்கீடுகள் அவற்றுள் முக்கியமானவை. கணிப்பொறி வழியாகக் கற்றல் நிகழும்போது இத்தகைய குறுக்கீடுகள் நீக்கப்படுகின்றன. கணிப்பொறி வழி கற்பித்தல் என்பது மொழி வல்லுநர்களும் கணிப்பொறி அறிஞர்களும் இணைந்து வழியமைப்புகளை உருவாக்குவதன் அடிப்படையில் நிகழ்வதாகும். இத்தகைய வழியமைப்புகளுக்கு அடிப்படைத் தகுதிறன்களாக, 1) நிரல் வழியான பாடக் கட்டமைப்பு, 2) தொடர்ச்சியான இணைநிரல் செயலியக்கம், 3) இடையீடில்லாச் சோதனைகள் 4) தகுதித் தரநிலை அமைப்பு ஆகியவற்றை எச். எப். ஓ நீல் வலியுறுத்துகிறார்.

கணிப்பொறி வழியாகக் கற்பித்தல் தொடர்பான சிந்தனை 1958-க்குப் பிறகு தான் தோன்றியது. அமெரிக்காவின் டார்ட் மாலத் கல்லூரியில் முதன் முதலாகக் கற்பித்தலுக்கான சில கணிம வரைவுகள் உருவாக்கப்பட்டன. இதுவே முதன் முயற்சி எனலாம். தொடர்ந்து இல்லினாய்ஸ் பல்கலைக் கழகத்தில் டொனால்ட் பிட்சர், என்ற கல்வியியல் அறிஞர் பிளேட்டோ - I என்னும் கணிப்பொறி துணை மொழித்திட்டத்தை உருவாக்கினார். அக்காலத்தில் இருந்த மிகச்சிறிய கணிப்பொறிக்கு ஏற்றதான தானியங்கிக் கற்றல் முறையை இது அறிமுகப் படுத்தியது. அவ்வப்போது மாற்றங்கள் செய்யப்பட்டு பிளேட்டோ - V என்பதாக ஆயிரக்கணக்கான வெளிவரைவு முனைகளோடு இத்தொடரமைப்பு இயங்கத் தொடங்கியது. இதே பல்கலைக் கழகத்தில் லாரன்ஸ் ஸ்டால்ரோ என்பவர் சாக்ரடீஸ் கணிப்பொறி மொழித் திட்டத்தை உருவாக்கினார்.

ஐந்தாம் தலைமுறைக் கணிப்பொறிப் பயன்பாட்டில், மிக முக்கியமான செயலாக்கக் கூறு இயற்கை மொழியை ஆய்தலும், பயன்படுத்தலும் ஆகும். இயற்கை மொழி வழியான தொடர் பாக்கம் மற்றும் இயற்கை மொழிப் பயிற்சிக்கு இந்தக் கணிப் பொறி ஊடகத்தைப் பயன்படுத்திக் கொள்வது இன்றைய கால கட்டத்தின் சிறப்பான செயற்பாடாகும். இன்றைய மொழிப் பயன்பாட்டுச் சூழலில், மொழிபெயர்த்தல், தகவல் தொடர்பு, இயற்கை மொழியை நவீனப்படுத்துதல், தகவலைக் கோரிப் பெறுதல், அறிவை ஆழ்ந்தறிதல், கணிப்பொறி வழி கற்பித்தல் ஆகியன நடைமுறைச் செயலியக்கங்களாகும். மாணவனுக்கு மொழி பற்றிய அறிவாக்கம் தரும் தளத்தில் மூன்று நிலைகளில் கணிப்பொறியின் பயன்பாடு கருதத்தக்கதாகும். அவை: 1) மொழி கற்பித்தல் 2) மொழி பயில்தல் 3) மொழி சார்தல் ஆகியனவாகும். மொழி கற்பித்தல் என்பது ஆசிரியர் நோக்கில் மாணவனுக்கு மொழி கற்பித்தலுக்கான பயன்பாட்டு நெறிகளை உருவாக்குவது ஆகும். மொழி பயில்தல் என்பது மாணவரின் நோக்கில் ஆசிரியரிடமிருந்து மொழியைக் கற்றுக்கொள்வதற் கான செயற்பாட்டமைவைக் குறிப்பதாகும். மொழி சார்தல் என்பது குழந்தை, தாய்மொழியைச் சூழல் வழியாக இயல்பாகக் கற்றுக்கொள்வதைக் குறிப்பதாகும். இந்த மூன்று அமைவு களிலும் கணிப்பொறியின் பயன்பாடு குறிப்பிடத்தக்க விளைவு களை ஏற்படுத்துகிறது. மிச்சிகன் பல்கலைக்கழகத்தில் நடை பெற்ற ஆய்வு ஒன்று ஆசிரியர் - மாணவன் என்ற சூழலில் ஒரு மாணவன் மூன்று நாட்களில் பயிலும் ஒரு பாடத்தை,

கணிப்பொறிப் பயன்பாட்டுச் சூழலில் இரண்டே நாட்களில் கற்றுக் கொள்ள முடியும் என்று நிறுவியுள்ளது. இல்லினாய்ஸ் மற்றும் ஸ்டான் போர்டு பல்கலைக்கழகங்களிலும் இத்தகைய பல ஆய்வுகள் நடைபெற்றுள்ளன.

கணிப்பொறி வழியாகக் கற்பித்தல் தொடர்பான கணிம வரைவில் அடுத்த படி நிலை வளர்ச்சியாக ஸ்டான்போர்ட் பல்கலைக்கழகத்தின் பேட்ரிக் சாப்பாஸ், ரிச்சாட் அட்கின்சன் ஆகியோருடைய முயற்சிகளைக் குறிப்பிடலாம். கணிதப் பாடத்திற்காக அவர்கள் உருவாக்கிய கணிம வரைவுகள் பரவலாகப் பயன்பாட்டிற்கு வந்தது. இந்தப் பயன்பாட்டின் ஆளுமையை உணர்ந்த ஐ. பி. எம். நிறுனம், கணிப்பொறி வழி கற்பித்தல் வரைவுகளுக்கான உலகம் தழுவிய விற்பனை வாய்ப்பு களைக் கருதி, பென்சில் வேனியா, பிளாரிடா டெக்சாஸ் மற்றும் ஸ்டான் போர்டு பல்கலைக்கழகங்களுடன் இணைந்து பல கணிம வரைவுகளை உருவாக்கின. இன்று உலக அளவில் பல முனைகளில் இத்தகைய செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

கணிப்பொறி வழி கற்பித்தல் மாதிரிகளில் புகழ் பெற்று விளங்கும் மாதிரிகளுள், குறிப்பிடத்தக்கவை இரண்டு. அவை 1. கற்பித்தல் அமைப்பியல் வளர்ச்சி மாதிரி (ஐ. எஸ். டி.). 2. டி. ஐ. சி. சி. ஐ. டி. (டிஸ்ஸிட் மாதிரி) ஆகியனவாகும். காக்னி, லோகர், ரோஜாஸ் போன்றோருடைய கல்வியியல் தத்துவ நெறிகளுக்கேற்ப ஐ. எஸ். டி. மாதிரி உருவாக்கப்பட்டது. பண்டர்சன் போன்ற அறிஞர்கள், இது மிக சிக்கலான வடிவம் என்று கருதினர். 1969 - ஆம் ஆண்டு மிட்ரே நிறுவனத்தாரால் டிஸ்ஸிட் மாதிரி வரைவு உருவாக்கப்பட்டது. பரிகாம்யங் பல்கலைக் கழகத்தில் இவ்வரைவு செயற்படுத்தப்பட்டது. இவ்வமைப்பு ஏற்படுத்திய முக்கியமான சாதனையாக, 'கற்போர் கட்டுப்பாட்டு மொழியமைப்பை' உருவாக்கியது என்று கருதுவர். ஐ.எஸ்.டி. மாதிரியின் செயல்பாடுகளில் உள்ள சிக்கல்களை அவ்வப்போது நேர் செய்வதற்கான முயற்சிகள் தொடர்ந்து நடைபெற்றன. அவற்றுள் அலெக்சி ஸ்டீபனின் சீரமைப்பு, ஓரளவு பரவலான பயன்பாட்டிற்கு வந்தது எனலாம்.

நிரல் வழிக் கற்றலுக்கான கணிம வரைவை உருவாக்கும் போது கீழ்க்காணும் செயலலகுகள் முக்கியமாகக் கவனிக்கத் தக்கவையாகும்.

1. முன்னுரை (introduction) (நோக்கக்கூறு, செல்நெறி வரைவு, முன்னறிவுத் தூண்டல், மாணவர் செயலாள்கைக் கணிப்பு, முன்சோதனை)

2. தகவலளிப்பு (presentation of information) பாடவரைவின் சட்டகம், நீளம், பாடவரைகோலம் உயிர்ப்புப்பட அசைவமைப்பு, ஈர்ப்பழுத்தம், தரப்பாடு. . முதலானவை)

3. வினவுதலும் விடை அளிப்பும் (சிறுசிறு அலகுகள், மீண்டும் மீண்டும் வினாக்கள் (அலைவு) ஏற்றம் இடத்தில் அமைத்தல் முதலாயின..)

4. விடை ஆய்வு (Judging)

5. பின்னூட்டம் (Feedback)

6. நேர் செய்விப்பு (Remediation)

7. நிரலமைப்பு (Sequencing)

8. நிறைவமைப்பு (Closing).

மேற்காணும் செயலலகுகளைச் செப்பமாக வரைவதற்கான விரிவான உட்கூறுகள், கல்வியியல் அறிஞர்களால் முன் மொழியப்பட்டுள்ளன. எந்தப் பாடத் திட்டத்திற்காகக் கணிம வரைவு மேற்கொள்ளப்பட வேண்டுமென்று முடிவு செய்த பிறகு, யாருக்காக (Target) என்பதையும் அவர்களுடைய கொள் திறன் (input resource) என்ன என்பதையும் முடிவு செய்த பிறகு இந்த நிரல்வழித்திட்டம் வரையப்படவேண்டும்.

பாரதியார் பல்கலைக்கழகத் தமிழ்த்துறையில் அண்மையில் மேற்கொள்ளப்பட்ட ஓர் ஆய்வில் உயர்நிலைப்பள்ளிகளில் தமிழ் இலக்கணம் கற்பிப்பதற்கான ஒரு கணிப்பொறி வரைவு உருவாக்கப்பட்டது. பெயர்ச்சொல், வினைச்சொல் ஆகிய வற்றைக் கற்பிப்பதற்காக, ஐ. எஸ். டி. மாதிரியின் வழியில் அலிசி ஸ்டீபன் உருவாக்கிய எட்டு படி நிலை மாதிரி இதற்காக அடிப்படையாகக் கொள்ளப்பட்டது. இந்தப் பாட வரைவு எட்டு கூறுகளை முக்கியமாகக் கருத்தில் கொண்டது.

முடிவுரை

எதிர் காலத்தில் கல்வி என்பது கணிப்பொறி வழியாகவே நடைபெறும். தமிழ் கற்பிப்பதற்கான கணிம வரைவுகளை அதிக அளவில் உருவாக்க வேண்டியது இன்றைய மிக அவசரத் தேவையாகும்.

சு. சந்திரா
அரசு மகளிர் கலைக்கல்லூரி
புதுக்கோட்டை

நாவலர், கலைஞர் திருக்குறள் உரைகளில் திராவிடவியல் - ஒப்பீட்டாய்வு

முன்னுரை

திருக்குறளுக்குக் காலந்தோறும் உரைகள் எழுந்த வண்ணம் உள்ளன. அவ்வகையில் திராவிட இயக்கம் சார்ந்த நாவலர் நெடுஞ்செழியன், கலைஞர் கருணாநிதி ஆகிய இருவரும் திருக்குறளுக்கு உரையெழுதியுள்ளனர். அவ்விருவர்தம் உரைகளில் உள்ள திராவிடவியல் கருத்துக்கள் ஒப்பிடப்படுகின்றன.

நாவலர், கலைஞர் உரைகள்

திருக்குறள் தெளிவுரை என்ற பெயரில் 1991 - ஆம் ஆண்டு நாவலர் நெடுஞ்செழியன் அவர்களது திருக்குறள் உரை வெளி வந்துள்ளது. அந்நூலில் ஒவ்வோர் அதிகாரத் தலைப்பிற்கும் முதலில் விளக்கம் தருகிறார். அடுத்தப்படியாகப் பொருள் சொல்லும் முறையில் குறள் தொடர்கள் முன்பின்னாக அமைகின்றன. பின்னர்ப் பொழிப்புரை, அடைப்புக் குறிக்குள் விளக்கம், கருத்துரை என்ற மூன்று பகுதிகள் அமைகின்றன. இவ்வுரையின் நோக்கத்தை, 'இற்றைக்காலத் தமிழ்ப் பெருங்குடி மக்கள் எல்லோரும் திருக்குறளின் உண்மையான பொருள் விளக்கங் களைப் பகுத்து அறிந்து பார்க்கும் நெறியில் நின்று, படித்துப் புரிந்து கொண்டு அறிந்து கொண்டவைகளைத் தத்தம் வாழ்க்கை யில் பயன்படுத்த வேண்டும்' என முன்னுரையில் (நெடுஞ் செழியன். இரா. 1991, ப. x x x vi) உரைக்கின்றார்.

1997 ஆம் ஆண்டு கலைஞர் கருணாநிதியின் திருக்குறள் உரை வெளிவந்துள்ளது. முந்நூற்று ஐம்பத்து நான்கு குறட் பாக்களைக் குறளோவியமாக வடித்தவர் கலைஞர் - அனைத்துக் குறட்பாக்களுக்கும் உரை எழுத வேண்டும் என்ற துடிப்பில்

முரசொலி நாளேட்டில் நாள்தோறும் எழுதிய குறள் உரைகளின் தொகுப்பு இது' (கருணாநிதி மு. 1997, முகவுரை.) என உரைக்கின்றார்.

இவ்வுரையில் முதலில் அதிகாரத் தலைப்புக் கொடுக்கப் படுகிறது. தலைப்பிற்கான விளக்கம் ஏதுமில்லை; ஆயின் அதிகார அருஞ்சொற்பொருள் அகரவரிசை என்ற ஓர் அட்ட வணை காணப்படுகிறது. அதில் அறுபத்திரண்டு அதிகாரத் தலைப்பிற்கான பொருள் தரப்படுகின்றது. குறட்பாக்கள் தொட ரெண்களோடு குறிப்பிடப்படுகின்றன. அதன் கீழ்ச் சுருக்கமாக ஓரிரு வரிகளில் உரை அமைகிறது. இதனை விளக்கவுரை என்பதை விடச் செறிவுரையாகக் கொள்ளலாம்.

திராவிடவியல்

தன்மானத் தமிழர் இயக்கம், நீதிக்கட்சி முதலிய இரண்டு இயக்கங்களின் கொள்கைகளே திராவிடவியலாக உருவெடுத்தது எனலாம். நாடு, மொழி, இனம் முதலியன பண்பாட்டுணர்வில் முகிழ்த்தது திராவிடவியல் கொள்கை. அக்கொள்கையின் இன்றியமையாக் கூறுகளாகத் தன்மானமும், பகுத்தறிவும் விளங்குகின்றன எனலாம்.

சாதி வேறுபாடின்மை, தீண்டாமை எதிர்ப்பு, வருணாசிரம எதிர்ப்பு, கடவுள் மறுப்புக் கொள்கை, மூடநம்பிக்கையொழிப்பு, பெண்ணுரிமை, தொழிலாளர் நலம், தனித்தமிழ், தனித்தமிழ் நாடு, பகுத்தறிவுவாதம் முதலியவற்றைத் திராவிடவியலின் கூறுகளாகக் கொள்ளலாம். இதனைச் 'சாதியொழிப்பு, பகுத்தறிவு அணுகுமுறை, மூட நம்பிக்கை ஒழிப்பு இவைகளே திராவிட இயக்கக் கொள்கைகள் (இராசேந்திரன். தி. 1985 ப. 11) என்ற கருத்து வலியுறுத்துகின்றது.

கடவுள் வாழ்த்து - இறைவன்

கடவுள் வாழ்த்தின் பத்துக் குறட்பாக்களிலும் இறைவன் என்பதனைக் குறிக்கும் 'ஆதிபகவன்' , 'வாலறிவன்', 'மலர்மிசை ஏகினான்', 'வேண்டுதல் வேண்டாமையிலான்', 'இறைவன்', 'ஐந்தவித்தான்', 'தனக்குவமை இல்லான்', 'அறவழி அந்தணன்', 'எண்குணத்தான்' என்ற சொற்கள் வள்ளுவரால் ஆளப்படு கின்றன. மரபு வழிபட்ட உரையாசிரியர்கள் கடவுள், சிவன் என இச்சொற்களுக்கு உரையெழுதியுள்ளனர். (பட்டுச்சாமி ஓதுவார். தி பதி. 1957 பக் 3 - 14) இவ்வாறான பொருளுரையினின்று இவ்விரு உரையாசிரியர்களும் வேறுபடுகின்றனர்.

நாவலர் உரையில் அறிவன்

கடவுள் வாழ்த்தினை அறிவன் சிறப்பு எனவுரைக்கும் நாவலர், கடவுளைக் குறிக்கும் சொற்களுக்குப் பொருள்தருவதில் வேறுபடுகிறார். அவை, 'அறிவன்', தூய்மையான அறிவாற்றலில் சிறந்தோர், 'உள்ளத்தில் பொருந்தியிருந்து வாழும் அறிவாற்றலில் சிறந்த சான்றோர்', 'அறிவாற்றலில் சிறந்து வாழும் சான்றோர்', 'தலைவன்', 'புலனடக்கிய சான்றோன்', 'ஒப்புமையற்ற சான்றோன்', 'எண்ணிலடங்காப் பண்புநிறை சான்றோர்' (நெடுஞ்செழியன். இரா, 1991, பக் 1 - 16) என்பனவாகும். ஒவ்வொரு குறளை அடுத்தும் சுருக்கமான பொழிப்புரையும், அதனையடுத்து மிக நீண்ட விரிவான விளக்கமும் அடைப்புக் குறிக்குள் தரப்படுகின்றன. இவ்விளக்கத்துள், திராவிடவியல் அடிப்படையில் கருத்துக்களை ஒன்றின் மேல் ஒன்றாக அடுக்குவதோடு அகச் சான்றுகளையும் தருகிறார்.

சான்றாக, 'பகவு + அன் = பகவன், பகவு - பகுத்தறிதல், பகவன் - பகுத்தறிபவன், அதாவது அறிவன். அறிவன் என்பது, அறிவிற் சிறந்தோனைக் குறிக்கும்' (மேலது ப.3) எனவும் '..... ஒவ்வொரு ஆக்க நிகழ்வின் முன்னேற்றத்திற்கும் காரணமாக விளங்கும் அறிவர்களின் சிறப்புக்குரிய பொதுப் பண்புகளைத் தான், வள்ளுவர் முதல் அதிகாரத்தின் குறட்பாக்களில், பொதுப் படையாகக் கூறுகிறார்' (மேலது ப.3) எனவும், 'பிற்காலத்தில் தொகுத்தவர்தான் கடவுள் வாழ்த்து எனத் தலைப்பினை இட்டிருக்க வேண்டும்' (மேலது ப.5) எனவும் குறிப்பிடுகிறார்.

இவ்வாறு ஒவ்வொரு குறட்பாவுக்கும் திராவிடவியலின் கடவுள் மறுப்புக் கொள்கை அடிப்படையில் மிக நீண்ட விளக்கம் தருகிறார். தமது நீண்ட முன்னுரையிலும், மேற்கூறிய சொற்களுக்குப் பொருள் உரைப்பதோடு தெய்வம் (குறள் 43, 53, 55, 619, 702, 1023) என்ற சொல்லும் மேலோர், உயர்ந்தோர், வான்புகழ் கொண்ட மேலானவர், புகழ் உலகம் எய்திய மேலானவர், இயற்கையாற்றல், இயற்கைச் சூழல் எனவும் பொருள் தருகிறார்.

கலைஞர் உரையில் கடவுள்

கடவுள் வாழ்த்தினை 'வழிபாடு' என உரைக்கும் கலைஞர் 'ஆதிபகவன்' 'அறிவில் மூத்த பெருந்தகையாளர்', மலர் போன்று மனத்தில் நிறைந்தவன்', விருப்பு வெறுப்பற்றுத் தன்னலமின்றித் திகழ்பவர்', 'இறைவன்', ஐம்பொறிகளைக் கட்டுப்படுத்திய

தூயவன்', 'ஒப்பாரும் மிக்காரும் இல்லாதவன்', 'சான்றோர்', 'ஈடற்ற ஆற்றலும் பண்பும் கொண்டவன்', தலையானவன்' (கருணாநிதி. மு. 1997, பக். 1-2) எனக் கடவுள் என்ற பொருண்மைக்குப் பல்வேறு சொற்களைத் தருகின்றார்.

இவற்றுள் ஆதிபகவன் (கு. எ. 1) இறைவன் (கு.எ. 5) என்ற சொற்களுக்கு எவ்வித மாற்றமுமின்றி அதே சொற்களைக் கையாளுகின்றார். அதற்கான காரணத்தை 'வள்ளுவரைக் கடவுள் மறுப்பாளர் அல்லது கடவுள் நம்பிக்கையாளர் எனும் வாதத் திற்குள் சிக்க வைக்க நான் விரும்பவில்லை' (மேலது. முகவுரை) என்று உரைக்கின்றார். ஆயின், பத்தாவது குறட்பாவிற்கு உரை கூறும் போது இறைவன் என்பதற்குத் தலையானவன் என்று உரைக்கின்றார். மேலும் 'கடவுள் வாழ்த்து என்னும் பெயரால் திருக்குறளில் ஓர் அதிகாரம் இடம் பெற்றுள்ளதாயினும் அதில் கடவுள் என்னும் பெயரே இடம் பெறாததோடு இன்று கடவுள் பற்றிக் கூறப்படும் பல கருத்துக்களுக்கு இடமளிப்பதாகவும் அந்த அதிகாரம் அமையவில்லை' (கருணாநிதி. மு. 1997) என நன்னன் தமது பதிப்புரையில் குறிப்பிடுவதனைக் கலைஞர் தமது முகவுரையில், 'நான் தரவேண்டிய விளக்கங்கள் பலவற்றைத் திரு. நன்னன் சுட்டிக் காட்டியுள்ளார்' (மேலது) என ஏற்பதும் கருதத்தக்கதாகும்.

'தெய்வம்' என்ற சொல் பயின்று வரும் இடங்களில் மாற்றுப் பொருள் ஏதுமின்றிக் கலைஞர் உரை சொல்கிறது. ஆயின், 'குடிசெய்வல் என்னும் ஒருவற்குத் தெய்வம் மடி கற்றுத் தான்முந் துறும்' என்ற குறட்பாவின் உரையில் 'தெய்வச் செயல் எனக் கூறப்படும் இயற்கை ஆற்றல்' எனக் கலைஞர் உரைப்பது கருதத்தக்கதாகும்.

ஒப்பீடு

'மக்களுக்குக் கடவுள் என்பது அவரவர் நடத்தையில் காணப் படுகின்ற சத்தியம், நாணயம், பிறர்க்கு உதவி, பிறரை வஞ்சி யாமை போன்ற சீரிய ஒழுக்கப் பண்புகளே' எனப் பெரியார் விளக்கம் தருகின்றார் (இராசேந்திரன் தி. 1985, ப. 103). அவ்வழி வந்த இரு உரையாசிரியர்களும் பெரியார் கருத்துக்கு விளக்கம் அளிப்பது போலப் பண்புகளின் அடிப்படையில் கடவுள், இறை என்பதற்குப் பொருள் தருகின்றனர்.

நாவலர் உரையில் அக்கொள்கை விளக்கம் விரிவாகவும் நீண்டதாகவும் பல்வேறு அகச் சான்றுகள் பொதிந்ததாகவும்

அமைகின்றது. கலைஞர் உரையில் இக்கொள்கை, இடம் பெற்றாலும் விரிவாகவும், விளக்கமாகவும் இடம் பெறவில்லை. இதற்கொரு காரணமாக உரையின் செறிவினையும், நாள்தோறும் நாளேட்டில் வெளிவந்தமையையும் சுட்டலாம். எவ்வாறு யிருப்பினும், தலைப்பு மாற்றமும், தலையானவன், அறிவிற் சிறந்தோன் என்ற கருத்துகளும் திராவிடவியல் கொள்கை வழியான உரைக்குச் சான்று பகர்கின்றன.

தொகுப்புரை

திராவிட இயக்கம் சார்ந்த நாவலர் நெடுஞ்செழியன், கலைஞர் கருணாநிதி முதலிய இருவரும் தமது கொள்கை வழி விளக்கங்களைக் குறள் உரையில் பின்பற்றுகின்றனர். இதனை ஒப்பீட்டின் வழி அறியலாம். அப்படிப் பெறப்பட்ட கருத்துக்கள் வருமாறு:

* இருவரும் தத்தமது உரைகளில் 'கடவுள் வாழ்த்து' என்ற அதிகாரத் தலைப்பினை மாற்றுகின்றனர். நாவலர் அம்மாற்றத் திற்கான விளக்கத்தை விரிவாக விளக்குகிறார். கலைஞரது நூலில் அம்மாற்றத்திற்கான விளக்கம் பல்வேறு செய்திகளின் வழித் திரட்டப்பட்டுப் பெறப்படுகிறது.

* அவ்வதிகாரத்திற்குப் பொருளுரைக்கும் போது இருவரும் 'அறிவிற் சிறந்த சான்றோர்' என்ற பொருளினைத் தருகின்றனர். நாவலர் அதனைக் கடவுள், தெய்வம் என்ற சொற்கள் வருமிடங்களில் எல்லாம் தவறாது மறுத்துரைக்கின்றார். கலைஞர் உரையில் இம்மாற்றம் ஆங்காங்குச் சுட்டப்படுகிறது.

இருவர்தம் உரையும் திராவிடவியல் கொள்கைகளின் வழிப் பட்டதாயினும் கலைஞர் உரை சுருக்கமும் செறிவும் உடையதாக உள்ளது. அதற்கொரு காரணமாக நாளேட்டில் வெளிவந்தமையைச் சுட்டலாம். இவ்வாறான ஒப்பீடு நூல் முழுமையும் கொள்ளத் தக்கது. எனினும், இம்முயற்சி முன் மாதிரி ஆய்வாகக் கொள்ளத் தக்கதாகும்.

துணை நூற்கள்

1. இராசேந்திரன் சே. தமிழ்க் கவிதையில் திராவிட இயக்கத்தின் தாக்கம், 1985.
2. கருணாநிதி . மு. திருக்குறள் கலைஞர் உரை, 1997.
3. நெடுஞ்செழியன் இரா. திருக்குறள் தெளிவுரை, 1991.
4. பட்டுச்சாமி ஓதுவார் தி., திருக்குறள் உரைக் கொத்து - அறத்துப்பால், 1957.

சந்திரா கிருட்டிணன்
வி. எஸ். பி. ஜா. கலை அறிவியல் கல்லூரி
கோயம்புத்தூர் – 641 042

வீழுதுகளை வேருறச் செய்வோம்

ஏடு தூக்கிப் பள்ளி செல்லும் இன்றைய குழந்தையே நாளை நல்ல தலைவனாய் வரப் போகிறவன். இன்றைய குழந்தைகளே வருங்கால சமுதாயத்தைத் தாங்கும் தூண்களாக - வித்துக்களாகத் திகழப் போகிறவர்கள். குழந்தையும் தெய்வமும் குணத்தால் ஒன்று என்பர். இன்றைய நாளில் மழலைச் செல்வங்கள் போற்று தற்குரிய தெய்வங்களாக நடத்தப்படுகிறார்களா? மதிக்கப்படு கின்ற போற்றப்படுகின்ற ஒருவன் மட்டுமே மற்றவரை மதிக்க வும் போற்றவும் கற்றுக் கொள்வான்.

இன்றைய நாளில் தன் குழந்தை நன்றாகப் படிக்க வேண்டும் என்ற எண்ணத்தில் ஒவ்வொரு பெற்றோரும் தன் குழந்தையை மழலையர் பள்ளியில் சேர்க்கிறோம். இரண்டரை வயதிலேயே மூட்டை முடிச்சைத் தூக்கிக் கொண்டு அலைய விடுகிறோம். அங்கு இருக்கும் ஆசிரியர்கள் முறையாக மழலையர் பயிற்சிப் பள்ளியில் படித்தவர்களாக இருக்கிறார்களா என்றால் பெரும் பாலும் இல்லை என்றே கூற முடிகிறது.

ஆசிரியர்களுக்கு உரிய இயல்புகளைக் கூறும்போது நன்னூல் எனும் பைந்தமிழ் இலக்கண நூல் பல்வேறு விதமான இலக்கணங்களை வகுத்துக் கூறுகின்றது. பாடம் நடத்தும் ஆசிரியர் பாடம் நடத்துங்கால் பாடம் நடத்துவதில் மிக்க விருப்பம் உடையவராக இருத்தல் வேண்டும் என்பதும், முக மலர்ச்சியுடன் பாடம் நடத்துதல் வேண்டும் என்பதும் நன்னூலார் கூறும் இலக்கண விதியாகும். ஏனெனில் முகமலர்ச்சியுடன் கல்வி கற்றுத்தரும் ஆசிரியரையே குழந்தைகள் பெரிதும் விரும்பு வார்கள். ஆனால் . . . இந்தப் பள்ளியில் கற்றுத் தரும் ஆசிரியர்கள் கையில் செங்கோலுடன் ஆட்சி செய்யும் போது எந்தக் குழந்தை தான் தைரியமாக நெருங்கிப் பேச பழக முடியும்? குறைந்த சம்பளத்தில் பொருளாதார நிலையில் மிகவும் பின்தங்கிப் பாடம்

கற்றுத்தரும் ஆசிரியர் எவ்வாறு இனிய முக மலர்ச்சியுடன் பாடம் நடத்த முடியும்? அவசர அவசரமாகக் குழந்தைகளுக்கு உணவூட்டும் பெற்றோர்கள், உணவூட்டும் போது மிஸ்லிட்டச் சொல்லித் தருவேன். அவங்க வந்தா அடிச்சிருவாங்க... என்ற கட்டளையுடன் உணவூட்டும் போது குழந்தைகளுக்கு ஆசிரியர் கள் விருப்பத்திற்குரியவராக இருத்தல் எப்படி முடியும்..?

திட்டமிட்டுச் செயல்படும் ஒன்றே செம்மை உடையதாகத் திகழ முடியும். ஆனால்... மழலையர் பள்ளிகளுக்கென்று வகைப் படுத்தப்பட்ட பாடத்திட்டம் தனியாக வகுக்கப்படவில்லை. அந்தந்தப் பள்ளி நிர்வாகம் பாடத்திட்டத்தை வரையறை செய் கின்றது. 'இளமையில் கல்வி சிலையில் எழுத்து என்பர். எனவே இளமையில் கல்வி கற்றுத்தரும் போது அப்பாடத்திட்டம் நமது நாட்டைக் குறித்ததாகவும். நாட்டுத் தலைவர்களைக் குறித்த தாகவும். நாட்டு வளங்களைக் குறித்ததாகவும். இன்றைய வாழ்விற்குரிய அடிப்படைத் தேவையான சுற்றுப்புறச் சூழ்நிலை, உண்ணும் உணவு சுகாதாரம் முதலானவற்றைக் குறித்து விளக்கு வதாகவும் இருப்பது நலம் பயக்கும். நோபல் பரிசு பெற்றவர்கள்- குழந்தைகளுக்கான விருது பெற்றவர்கள். நாட்டைக் காத்த நல்லோர் முதலானவர்களின் வாழ்க்கையைக் கூறலாம். இவை எளிய முறையில் படக் கதையாகவோ - கதையாகவோ - பாட்டா கவோ இருந்தால் குழந்தைகளிடத்தில் நல்ல எண்ண விதைகள் வளரும்.

அப்போது இவற்றைக் கற்கும் குழந்தைகள் வளரும் போது எதிர்கால சமுதாயம் கண்டிப்பாக வேருடன் தழைக்கும். ஆனால்... நாம் பிஞ்சு உள்ளங்களுக்கு இன்று கற்றுத் தருவது என்ன..? சின்னத் திரையில் கொலை - கொள்ளை - வன்முறை - ஆபாசம் முதலானவை. வகுப்பறையிலோ . . லண்டன் பாலம் கீழே விழுந்து விட்டது. (London Bridge is falling down), மழையே மழையே போவாயே, ''(Rain Rain Go away) முதலானவை. . இவை நம் நாட்டுக் குழந்தைகளுக்குத் தேவையான ஒன்றா? இவற்றைத் தெரிந்து கொள்வதால் நம் நாட்டுக் குழந்தைகளின் எதிர்காலம் என்ன வளத்தைப் பெறப் போகின்றது?

'பிறைநிலவே கவலைப் படாதே!
உனக்குள்ளேதான் பூரணச் சந்திரன்
புதைந்து கிடக்கிறான்''

என்பார் கவிஞர் இக்பால். பிறை நிலவெனத் திகழும் குழந்தைகளைப் பூரணச் சந்திரன் ஆக்கும் பொறுப்பு நம்

ஒவ்வொருவருக்கும் உண்டு. இந்தப் பொறுப்பைச் செயல் படுத்தும் விதத்தில் நாம் சரியான கோணத்தில் அணுகுகிறோமா என்பது நம்மை நாமே கேட்க வேண்டிய கேள்வி ஆகும்.

'குழந்தையே மனிதனின் தந்தை' என்பார் வில்லியம் வோட்ஸ் வொர்த். 'கல்விதான் பொருளாதார வளர்ச்சிக்கு ஆதாரம். எல்லோருக்கும் ஆரம்பகால கல்வி அளிப்பது வெறும் சமூக இலட்சியமாக இருக்கக் கூடாது. அது பொருளாதார இலட்சியமாக இருக்க வேண்டும். என வலியுறுத்திக் கூறுவார் நோபல் பரிசு பெற்ற அமார்த்திய குமார் சென்.

கோவை மாவட்டத்தில் உள்ள சில மழலையர் பள்ளிகளை ஆய்வு செய்ததில் மழலையர் பள்ளிக் குழந்தைகளுக்கு முறை யான பாடத்திட்டம் வரையறுக்கப்படவில்லை. அடையாளம் கண்ட குழந்தைக் கவிஞர்களின் கவிதைகள் குழந்தைகளுக்குச் சொல்லித் தரப்படவில்லை. தமிழ்க் கவிதைகள் - கதைகள் குழந்தைகளுக்கு விருப்பத்திற்குரியதாகக் கற்றுத்தரப்பட வில்லை.

கல்வியின் பயன் பண்பட்ட உள்ளத்தை அமைத்துத் தருவதாக இருந்தால் அக்கல்வி சிறந்த கல்வியாக அமையும். கல்வி குழந்தைகளின் தனிப்பட்ட ஆளுமைத் திறனை வளர்ப்ப தாக வையகத்தில் வாழ்வாங்கு வாழச் செய்வதாக இருத்தல் வேண்டும். அடுத்த தலைமுறை குறித்த சிந்தனையே இன்றைய தலைமுறையின் குறிக்கோளாக - கடமையாக இருத்தல் வேண்டும். அதற்காகச் சிந்திக்கும் நாடே பின்னர் வளம் உடையதாக - நலம் உடையதாகத் திகழும்.

இன்றைய இளம் குழந்தைகளுக்குக் கல்வி என்பது சுமையாக இல்லாமல் இருத்தல் வேண்டும். கல்வியில் ஆர்வம் ஏற்படும் வகையில் கற்பிக்கும் பணி அமைதல் வேண்டும். மழலையர்க்கான கல்வி நாட்டை, நாட்டு வளத்தை மையமாகக் கொண்டு இருந்தால் அக்கல்வி எதிர்கால சமுதாயத்திற்கு வளம் சேர்ப்பதாக அமையும். இதை அரசு கவனத்தில் கொண்டு முறையான கல்வித்திட்டத்தை மழலையர் பள்ளிக்குக் கொண்டு வருமா? தாய் நாட்டை. நாட்டுப் பற்றை ஊட்டும் எண்ண விதைகளை இளைய நெஞ்சில் பதிய வைக்கும் பாடத்திட்டத்தை உருவாக்குமா? மழலையர் பள்ளிக்கென முறையான பயிற்சி பெற்ற ஆசிரியர்களை மட்டும் பணியில் அமர்த்துமா...? விழுது களை வேருறச் செய்வதில் தன் சிந்தனையைச் செலுத்துமா?

இரா. சபாபதி
தேசியக் கல்லூரி
திருச்சிராப்பள்ளி – 620 001

தமிழ் இலக்கியங்களில் மலர்கள் உணர்த்துவன

முன்னுரை

இலக்கியங்கள் என்பன காலத்தைக் காட்டும் கண்ணாடி யாதலின் இலக்கியங்களில் குறிக்கப்படுவன மக்களின் வாழ்க்கை யில் பயன்படுத்திய அல்லது பயன்பட்ட பொருள்களாகவே இருத்தல் கூடும். அந்நிலையில் மலர்கள் இலக்கியங்களிலும், வாழ்க்கையிலும் எவ்வாறு பயன்பட்டன என்பதனையும், இன்று எவ்வாறு பயன்பட்டுவருகின்றன என்பதனையும் காண்பதே இக்கட்டுரையாகும்.

தமிழர்கள் நிலங்களின் பெயர்களாகவும், பெண்களின் பெயர்களாகவும் மலர்களின் பெயர்களைப் பயன்படுத்தி யுள்ளனர். முகை, மொட்டு, போது, மலர், வீ, செம்மல் என்னும் பல்வேறு பெயர்கள் மலரின் பல்வேறு நிலைகளை உணர்த்துவன வாகும். தமிழகத்தின் பருவநிலைக்கேற்ப ஒவ்வொரு காலத் திலும் ஒவ்வொரு வகையான மலர் செல்வாக்கு பெற்று வழக்கில் இருந்த தனையும், அவ்வக் காலத்தில் அம்மலர்களைப் பல நிலைகளில் பயன்படுத்தியதனையும் அறிய முடிகிறது. தொன்று தொட்டு மலர்களின் பெயர்களை இலக்கியங்களுக்குச் சூட்டிய தனை நோக்குங்கால் தமிழர்தம் வாழ்வில் சிறப்பான இடத்தைப் பெற்றிருந்தவைகளில் மலர்களும் உண்டு எனத் தெளிவாக அறிய முடிகிறது. தலைவாரிப் பூச்சூடி உன்னைப் பாடசாலைக்குப் போவென்று சொன்னாள் உன் அன்னை' எனும் பாடல் வரிகளால் சிறு குழந்தைப் பருவம் முதலே மலர் பயன்படுவது என்பதனையும் அழகுப் பொருளாக, மங்கலப் பொருளாகப் பயன்படுவது என்பதனையும் அன்னை முதல் குழந்தை வரை அனைவரும் விரும்புவது மலர் என்பதனையும் அறிய முடிகிறது.

தமிழில் சுட்டப்படும் நிலங்கள்

பண்டைத் தமிழ் மக்கள் நிலத்தை ஐந்திணையாகப் பிரித்து அதன் இயற்கையே பண்பாட்டின் அடிப்படை என உணர்த்தி யிருந்தனர். ஒவ்வொரு நிலத்திலும் அவ்வச் சூழ்நிலைக்கு ஏற்ற பண்பாடே இயற்கையாய் அமையும் என்று கண்டு, அதன் அடிப் படையிலேயே நிலத்தினை ஐந்திணைகளாகப் பிரித்தனர். அத் திணைகட்கு அவ்வந் நிலத்தில் சிறப்பாகக் காணக்கிடக்கும் மலரின் பெயர்களைக் கொண்டே பெயரிட்டுள்ளனர்.

தொல்காப்பியத்தின் உரையில் இளம்பூரணர் ஒவ்வொரு நிலத் திற்கும் பெயர் அமைந்த காரணத்தை 'முல்லை, குறிஞ்சி என்பன இடுகுறியோ, காரணக் குறியோ எனின், ஏகதேச காரணம் பற்றி முதலாசிரியர் இட்டதோர் குறி என்று கொள்ளப்படும் என்பர். காடுறை உலகிற்கு முல்லைப்பூ சிறந்தது ஆகலானும், மைவரை உலகிற்குக் குறிஞ்சிப்பூ சிறந்தது ஆகலானும், தீம்புனல் உலகிற்கு மருது சிறந்தமையானும், பெருமணல் உலகிற்கு நெய்தல் சிறந்த மையானும், இந்நிலங்களை இவ்வாறு குறிப்பிட்டார் என்று கொள்ளப்படும். பாலை என்பதற்கு நிலம் இன்றேனும் வேனிற் காலம் பற்றி வருதலின் அக்காலத்துத் தளிரும், சினையும் வாடுத லின்றி நிற்பது பாலை என்பதோர் மரம் உண்டாகலின் அச்சிறப்பு நோக்கிப் பாலை என்று குறிப்பிட்டார் எனத் தொல்காப்பியப் பொருளதிகார உரையில் குறிப்பிட்டுள்ளார்.

மலர்கள் பெற்ற மதிப்பு

உலக நாகரிகத்தில் மிகப் பழங்காலந்தொட்டே பெயர் பெற்று விளங்கிய கிரேக்கர், உரோமர் முதலான பெருமக்கள் தம் வழிபாட்டு முறையிலும், தம்மை ஒப்பனை செய்து கொள்ளும் வகையிலும் மலர்களைப் பெரிதும் பயன்படுத்தியுள்ளனர். வேள்விக்குரிய காளைகளும், விலங்குகளும் மாலை சூட்டப் பெற்ற பின்னரே வேள்வியில் பயன்படுத்தப்பட்டன. விருந்தினர் கண்ணி சூடியே விருந்துண்டனர். பலவிதமான போட்டிகளில் பங்கேற்று வெற்றி பெற்றவர்கள் இலை, தழை, மலர்களால் ஆகிய முடி சூட்டிப் பாராட்டப் பட்டனர். இவ்வாறே பண்டைத் தமிழரும் தம் வாழ்வின் எல்லாத் துறைகளிலும் மலர்களுக்கெனத் தனி மதிப்பளித்துள்ளனர் என்பது சங்க இலக்கியங்களால் அறிய முடிவதாகும்.

வழிபாட்டில் மலர்கள்

திருப்பரங்குன்றத்து முருகனை வழிபடச் செல்லும் மக்கள் பூக்களைத் தம்முடன் கொண்டு சென்றனர் என்பதைப் பரிபாடல்

மூலம் அறிய முடிகிறது. தமிழ் மக்களது வழிபாட்டு முறையில் மலர்கள் மிகச் சிறப்பான இடத்தைப் பெற்றுள்ளதோடு இன்றும் அந்நிலை தொடர்வதனைக் காணமுடிகிறது. மலர்களால் இறை வனை வணங்கும் முறை திராவிடர்களது சிறப்பு முறை எனப் பல ஆய்வாளர்களும் சுட்டியுள்ளனர். 'ஆரியர்கள் திராவிடரிட மிருந்தே மலர் வழிபாட்டு முறையைக் கற்றனர். பூஜை என்னும் வடசொல் பூ செய் என்னும் தமிழ்ச் சொல்லின் திரிபு. திராவிடரே தொன்னெடுங்காலந் தொடங்கி மலர் வழிபாட்டு முறையினை மேற்கொண்டொழுகினர்' என எஸ். கே. சேட்டர்ஜி என்ற வரலாற்றாய்வாளர் குறிப்பிட்டுள்ளார்.

வழிபாட்டு முறையில் மலர்களுக்குத் தமிழர் சிறப்பிடம் கொடுத்துள்ளனர் என்பதனைப் பண்பாட்டு நிலையிலேயே அறியலாம். கிராமம், நகரம் என்ற வேறுபாடோ ஏழை, பணக் காரர் என்ற வேறுபாடோ இன்றித் தத்தம் வீடுகளிலும், ஆலயங்கள் போன்ற பொதுவிடங்களிலும் மலர்களை இறை வனுக்குக் காணிக்கையாக்குவர். மேலும் இறைவனுக்கு மலர் களைக் கொய்து. மாலையாகத் தொடுத்து வழிபாடு செய்ததோடு அடியவர்கள் அதனைத் தமது தலையாய பணியாகக் கொண்டனர் என்பதனைப் பெரிய புராணம் முதலிய பக்தி இலக்கியங்கள் மூலம் அறிய முடிகிறது. இறைவனது திருமுடி முதலாக திருவடி ஈறாக மலர்களைப் பெய்து வழிபாடு இயற்றுவதனை இன்றும் காணலாம்.

மலர்கள் அன்றும் - இன்றும்

ஆரியவரசன் பிரகதத்தனுக்குத் தமிழ் அறிவுறுத்தற் பொருட்டுக் கபிலர் இயற்றிய சங்க இலக்கியங்களுள் ஒன்றான குறிஞ்சிப் பாட்டில் தொண்ணூற்றொன்பது மலர்களைச் சுட்டியுள் ளார். எனினும் கபிலர் சுட்டியுள்ள மலர்களில் இன்று நம்மால் அறிந்துகொள்ள முடியாத நிலையிலுள்ளவை பலவாகும். இதற்குக் காரணம் காலப்போக்கில் தமிழர் இயற்கையைவிட்டு நெடுந்தொலைவு விலகிவிட்டமையேயாகும்.

'பூவெனப்படுவது பொறிவாழ் பூவே' என்பதும் 'கொங்கு தேர் வாழ்க்கை' எனும் சங்கப் பாடலில் குறிக்கப்படுவதும் மலரின் உயர்வை உணர்த்துவனவாகும். மணமுள்ள மலர்களை மட்டுமே தலையில் சூடும் வழக்கம் இருந்த நிலை மாறி இன்று செயற்கைப் பூக்களைச் சூடும் வழக்கமும் காண முடிகிறது. இதற்குப் பண்பாட்டுக் கலப்பு மட்டுமே காரணம் எனக் கூற முடியாது. தேவையான அளவு பூக்கள் கிடைக்காமையும்,

மக்களின் பொருளாதார நிலை மற்றும் வாங்கும் சக்தி குறைந்தமையுமே காரணம் எனலாம். மங்கல நிகழ்ச்சிகளிலும், திருவிழாக்கள், பண்டிகைகள் போன்ற நாட்களிலும் மகளிர் மலர்களை அவசியத் தேவைகளில் ஒன்றாகக் கருதுகின்றனர்.

சங்க காலத்தில் வேங்கை மலரும் பருவமே திருமணத் திற்குரிய காலம் என்றும் வேங்கை மலர்கள் விழுந்து கிடக்கும் முன்றிலே திருமண நிகழிடம் என்றும் கருதியதாகக் கலித் தொகை சுட்டுகிறது. பண்டைத் தமிழ்க் கன்னி மலர் சூடாள் என்றும் மலர் சூடின் கன்னியாகாள், ஒருவனை வரித்தாள் என்பதும் நம் பழஞ் சமுதாய வழக்கு என நிறுவியுள்ளார் பண்டாரகர் வ. சுப. மாணிக்கம் அவர்கள். ஒருவரைப் பாராட்டும் பொழுதும், சிறப்பிக்கும் பொழுதும் மலர் மாலை அணிவித்தல் மரபாகும். மேலும் மணமக்கள் தலையில் மலர் தூவி வாழ்த்தும் மரபு சிலப்பதிகாரக் காலத்திலேயே இருந்ததனைச் சின்மலர் கொடுதூவி' எனும் தொடர் குறிக்கிறது.

மக்களது குடும்ப வாழ்க்கை நிலையில் போற்றப்படும் பொருள்கள் என மலர்களைக் குறிக்கும் அதே சமயம் புற வாழ்க்கையிலும் மலர்கள் போற்றப்பட்டதனை இலக்கியங்கள் பகர்கின்றன. முடியுடை மூவேந்தர்க்கு அடையாளப் பூமாலை யாக விளங்கிய பூக்கள் பனம்பூ, அத்திப்பூ, வேப்பம்பூ ஆகியன வாகும். போர்க்காலங்களில் மகளிர் பூ அணிந்து அழகுறச் திகழாமல் வருந்தினர். கணவனைப் பிரிந்து தனியே வாழும் வருத்தம் மிகுந்த காலத்திலும் பூச்சூடிக்கொள்ளாமல் நின்றனர். அகத்திணைக்கு ஈடான புறத்திணைகளும் மலர்ப்பெயர்களைக் கொண்டே அமைந்துள்ளன. அவ்வத்திணையைக் குறிக்கும் பூவினை வீரர்கள் சூடிச் சென்றனர் எனப் புறத்திணை இலக்கியங்கள் பகர்கின்றன.

பூக்களை மங்கலப் பொருள்களில் ஒன்றாகக் கருதிய தமிழ் மக்கள் அமங்கலமான நிகழ்வுகளில் பூக்களைத் தவிர்த்ததும், அந்நிழ்வுகளில் பூக்களைப் பயன்படுத்தினால் அதன் உருவினைச் சிதைத்ததும் நடைமுறையிலும் காணப்படுவதாகும். பண்டைக் காலத்திலேயே இம்முறை இருந்ததனை 'இளையோர் சூடார், வளையோர் கொய்யார்' எனத் தொடங்கும் புறப்பாடல் வழி அறியமுடிகிறது.

இலக்கியங்களில் பூக்களை இயற்கையின் கூறாகப் பயன் படுத்திய புலவர்கள் தம் கவிதையில் மென்மைத் தன்மைக்கும்,

மணத்திற்கும், நிறத்திற்கும் உரிய சிறப்புடைய பொருளாகச் சுட்டியுள்ளனர். 'மலரினும் மெல்லிது காமம்', 'மோப்பக் குழையும் அனிச்சம்' என்னும் குறட்பாத் தொடர்கள் இதனை உறுதி செய்வனவாகும்.

இராமன் கைகேயியின் கட்டளையை ஏற்றவுடன் அன்ற லர்ந்த செந்தாமரையை ஒத்த முகத்துடன் நடந்தான் என்பதனை யும் இவ்விடத்து நினைவு கொள்ளத் தக்கதாகும். தாமரை போன்ற முகம், குவளை மலர் போன்ற கண்கள், முருக்க மலர் போன்ற இதழ்கள், குமுத மலர் போன்ற வாய், காந்தள் போன்ற கை எனப் பல நிலைகளில் பெண்களின் அழகை மலர்களுடன் ஒப்பிட்டுப் பாராட்டியுள்ளனர்.

இன்றைய நிலையில் புதினங்கள், திரைப்படங்கள் போன்ற வற்றின் பெயர்களிலும் மலர்களின் பெயர்கள் பயன்படுத்தப் படுவதனைக் காண முடிகிறது. பெண்கள் தங்களின் பெயர் களாகப் பூக்களின் பெயர்களைத் தாங்கி நிற்பதனையும் இன்றள வும் காண முடிகிறது. இன்று பிறந்த நாள் வாழ்த்து முதலாகப் பல நிலைகளில் மலர்க்கொத்துக்களைப் பரிமாறிக் கொள்வதனைக் காண முடிகிறது. இயற்கையான பூக்களை இப்பறிமாற்றத்திற்குப் பயன்படுத்திய தமிழர்கள் இன்று அவற்றை உறைகளில் இட்ட செயற்கைப் பூக்களாகவும் பயன்படுத்த முனைந்துள்ளனர்.

முடிவுரை

சங்க இலக்கிய காலத்திலிருந்து இன்று வரை தமிழ் இலக்கியங்களில் மலர்கள் பல நிலைகளில் பயன்படுத்தப் பட்டமையையும், அதன் மாண்பையும் ஓரளவு இவற்றான் அறியமுடிகிறது. மக்களது வாழ்க்கையோடு ஒன்றியதாக மலர்களைக் கருத முடிகிறது. மேலும் இன்று கிடைக்கும் மலர்களைப் பண்டைய காலத்தில் பயன்படுத்தியதனைப் போன்றே பயன்படுத்துகின்றனர் என்பதனையும், அக்காலத்தில் பயன்படுத்திய பல மலர்கள் இன்று கிடைப்பதில்லை என்ப தனையும் அதனை ஈடுசெய்யப் பிற மாநிலங்கள் மற்றும் பிற நாடுகளிலிருந்து பெற்று அவற்றை இங்கு ஓட்டு மற்றும் குறுக்கு முறைகளில் இனப்பெருக்கம் செய்து பயன்படுத்துகின்றனர் என்பதனையும் தெளிவாக அறிய முடிகிறது.

இரா. சம்பத்
புதுவை மொழிமியல் பண்பாட்டு ஆராய்ச்சி நிறுவனம்
புதுச்சேரி – 605 001

புதுக்கவிதைப் பெண்பாற் கவிஞர்களின் பெண்ணியச் சிந்தனைகள்

புதுக்கவிதைப் பெண் கவிஞர்களின் படைப்புக்களில் இரண்டு வகையான பாடுபொருள்கள் இடம் பெறுகின்றன. அவை:

1. ஆணாதிக்கச் சார்பான பாடுபொருள்
2. பெண்ணியப் பார்வையின் பாடுபொருள்

தமிழ்ப் புதுக்கவிதைப் பெண் கவிஞர் படைப்புகளில் இடம் பெறும் பெண்ணியச் சிந்தனைகள் இரண்டு பிரிவுகளாக அமைந் துள்ளன. ஒன்று பெண்களின் பொதுப் பிரச்சனைகள். மற்றொன்று சொந்த அனுபவங்கள்.

பெண் அன்பு செய்பவள், பலகீனமானவள், மென்மை யானவள், ஆணின் பாதுகாப்பில் முழுமை அடைபவள் என்பதற் கெல்லாம் அறிவியல் அடிப்படையில்லை. பெண்மை, ஆண்மை என்பதெல்லாம் பண்பாட்டுவழி ஏற்படுத்தப்பட்ட வெறும் புனைவுகளே. இந்தப் புனைவுகளை உடைக்க வேண்டும். பாலியல் ஒடுக்கு முறைகளை எதிர்க்க வேண்டும். பெண்மை எனக் குறிக்கப்பட்டிருக்கும் வரையறைகள் பெண்ணை ஒடுக்கு வதற்காக ஆணாதிக்கச் சமூகம் உருவாக்கியவை. இவற்றை மீற வேண்டும் என்று பெண்ணியல்வாதிகள் குறிப்பிடுகின்றனர். இக்கருத்துக்களை வெளிப்படுத்தக்கூடிய கவிதைகள் தமிழில் குறைவாக உள்ளன. அதிலும் குறிப்பாகப் பெண்களே சொல்வது என்பது மிகமிகக் குறைவே ஆகும்.

எனக்கு -/முகம் இல்லை/இதயம் இல்லை/ஆத்மாவும்
இல்லை/அவர்களின் பார்வையில்/இரண்டு மார்புகள்/
நீண்ட கூந்தல்/சிறிய இடை/பருத்த தொடை/
இவைகளே உள்ளன/சமையல் செய்தல்/படுக்கையை

விரித்தல்/குழந்தை பெறுதல்/பணிந்து நடத்தல்/
இவையே எனது கடமைகள் ஆகும்.
கற்பு பற்றியும்/மழை பெய்யெனப் பெய்வது பற்றியும்/
கதைக்கு/அவர்கள்/எப்போதும் எனது உடலையே/
நோக்குவர்/கணவன் தொடக்கம்/கடைக்காரன் வழக்கம்/
இதுவே வழக்கம் (அ. சங்கரி 1987 : 9 -10)

அவர்கள் பார்வையில் என்னும் தலைப்பில் அமையும் இக் கவிதை, ஆணாதிக்கச் சமூகம் பெண்ணை ஒரு நுகர்வுப் பொருளாகப் பயன்படுத்திய நிலையினைச் சுட்டிக் காட்டுகிறது. ஆண்களின் வாழ்க்கை இன்பமாக அமைவதற்குப் பெண் துணையாக இருக்க வேண்டும் என்ற கருத்தை அடிப்படையாக வைத்துப் பெண்களின் பண்பாடு பேசப்பட்டது. ஆண், பெண் ஆகிய இருபாலரும் சமம் எனக் கருதாமல் ஆணுக்குப் பெண் உறுதுணையாக இருக்கக் கருதி இரண்டாந்தரக் குடிமகள் நிலை தந்தே பெண்களின் பண்பாடு உருவாக்கப்பட்டுள்ளது என்ற கருத்தினை மேற்கூறிய கவிதை வெளிப்படுத்துகிறது.

நாங்கள் ...../வேலைக்குப் போகும் பெண்கள்/
எங்களது மனசாட்சி/அடிக்கடி அடகுக் கடைக்குப்
போகிறது/எங்களது தாய்மை/பால்பவுடர் டப்பாக்களில்
சிறைப்பட்டுக் கிடக்கிறது/எங்களது கற்பின் எல்லை/
கணவன்மார்களின் சுயநலத்தால்/விரிவாக்கப் பட்டுள்ளது/
நோயால் வாடும் பிள்ளைகளை/ஆயாவிடம் ஒப்படைக்கும்
போது-/எங்கள் மனசாட்சி/அடகு வைக்கப்படுகிறது/
...../ஸ்கூட்டருக்காகவும், ஃபிரிஜ்ஜுக்காகவும்/
அலுவலகம் செல்ல/அனுமதிக்கப்படும் போது/எங்கள்
கற்பின் எல்லை/விரிவாக்கப்படுகிறது/நாங்கள்...../
வேலைக்குப் போகும் பெண்கள் (ரோகிணி 1980 : 22)

கணவன் எவ்வளவு பெரிய தவறு செய்தாலும் அவனை ஏற்றுக் கொள்வதே கற்புடைமை என்று ஆணாதிக்கச் சமுதாயம் பெண்களுக்கு வரையறை செய்துள்ளது. கணவனைக் கடவுளாகக் கொண்டு வழிபடுவதே கற்புடைய பெண்ணுக்குச் சிறப்பைத் தரும் என்பது இலக்கியங்களின் அறிவுரை. கணவனை வழிபட வேண்டும் என்பதை அறிவுரையாக மட்டும் கூறி. விட்டு விட்டால், பெண்கள் கடவுளை வணங்குவதைப் பின்பற்றாமலும் இருந்து விடலாம் என்று கருதிக் கணவனை வழிபடுவதே கற்புடைமை என்று அச்சுறுத்தியுள்ளனர் எனலாம். ஆணாதிக்கச் சமுதாயம் உருவாக்கிய இக்கருத்தினை இலக்கிய ஆசிரியர்கள்

என்றும் நிலைத்து நிற்கும் பண்பாட்டுச் சட்டமாக்கியுள்ளனர். அதனால்தான் மழை பெய்விக்கும் ஆற்றல் உடைய பெண்களே சிறந்த கற்புடையவர்கள் என்று தமிழ் இலக்கியங்கள் குறிப் பிட்டுள்ளன. அந்தக் கற்பும் கணவனை மட்டுமே கடவுளாக வழி படும் பெண்களுக்கே உண்டு என்று வள்ளுவர் குறிப்பிட்டார். இக்கருத்தைப் பின்வந்த இலக்கிய ஆசிரியர்கள் வழிமொழிந் தனர். இன்றைய புதுக்கவிதைப் பெண்கவிஞர்கள் கற்பு வழி பாட்டைக் கேள்விக்கு உள்ளாக்கியுள்ளனர். ஆண்கள் தங்களின் தேவை கருதியே பெண்களை வேலைக்கு அனுப்புகின்றனர். இதன் காரணமாகப் பெண்களின் கற்பு எல்லையை ஆண்கள் விரிவு செய்துள்ளனர் என்று ரோகிணி என்ற பெண் கவிஞர் குறிப்பிடுகிறார்.

கற்புக்காய் கண்ணீர் வடிக்க/நான் ஒன்றும் கண்ணகியல்ல,/
மானத்தை நினைத்து நிற்க,/நான் ஒன்றும்/இழக்கவில்லை/
...../எனது பாதங்கள் தொடரும் பயணத்தில்/
முடிந்தால் ..... துணிவிருந்தால்/உண்மையிலும்
உண்மையாக/எவராது வாழ வரலாம். (ரங்கா 1987 : 33)

உண்மையிலும் உண்மையாக என்னும் தலைப்பில் அமைந்த இக்கவிதை ஆணாதிக்கச் சமுதாயம் உருவாக்கிய கற்புக் கோட் பாட்டை உடைத்தெறிகிறது.

வடநாட்டின் குளிருக்கு/கால் சராயும் பூட்சோடும் பூசாரி/
மோட்டார் போட்டாகி விட்டது/பெருமாக் கோயில் தேருக்கு
திருப்பதிக்கு போக முடியாவிட்டால்/தி.நகர் கிளையில்
காணிக்கை
செலுத்தலாம்/மூணுநாள் விரதம்/ஐயப்பனுக்குப் போதும்,/
அரே ராமாவில்/ஆங்கிலேய அர்ச்சகர்
இந்தோனிசிய கோயிலில்/செருப்புப் போட்டுக்
கொள்ளலாமாம்/
கணேசனுக்கும்/கோழிக்கறி படையல்/சட்டம் எழுதியாயிற்று/
எல்லா சாதியும்/கோயிலுக்குள் வர,/என்னாடு போனாலும்/
தென்னாடுடைய சிவனுக்கு/மாதவிலக்குள்ள பெண்கள்
மட்டும்/
ஆவதே இல்லை. (கனிமொழி 1998 : 72)

பெண்களின் உடல் நீதியான ஒரு நிகழ்வே மாதவிலக்கு. இந்த நிகழ்வினால் பெண்களுக்கு ஏற்படும் அனுபவத்தை மேற் குறிப்பிட்ட கவிதை வெளிப்படுத்துகிறது. இயற்கை நிகழ்வு பெண்களுக்கு எதிராக எவ்வாறு ஆண்களால் புனையப்

பட்டுள்ளது என்கிற உண்மையை இந்தக் கவிதை வெளிப் படுத்துகிறது.

பெண் அழகு படுத்துவற்கும் அலங்கரிப்பதற்கும் உட்பட்ட வள் என்று பெண்ணியவாதிகள் குறிப்பிடுகின்றனர். ஆனால், ஆணாதிக்கச் சமூகம் பெண்ணை அலங்காரப் பொருளாகவே பார்க்கிறது. அழகும், அலங்காரமும் பெண்ணுக்காக அல்ல. கணவனின் மகிழ்ச்சிக்காகவும், இன்பத்துக்காகவும் மட்டுமே. மேலும் பெண்ணின் இயற்கையான அழகைப் புறந்தள்ளிவிட்ட, ஆதிக்கச் சமூகம் உருவாக்கியுள்ள கருத்தியல்களான கற்பு, பேதமை ஆகிய இரண்டும் பெண்ணுக்கு அழகு எனப் போதிக்கப் பட்டுள்ளது. நாணம் அழகிய ஆபரணம் எனப் பேசப்பட்டுள்ளது. இவற்றையெல்லாம் பெண்கள் புரியாமலேயே ஏற்றுக் கொண்டிருக்கின்றனர். இன்றும் ஏற்றுக்கொண்ட எண்ணத்தை மாற்றிக் கொள்ள முடியாமல் அடிமைத் தளத்திற்குள் அடங்கி வாழ்கின்றனர். இன்றைய பெண் கவிஞர் சிலர் பெண்ணுக்கு அழகு முதன்மைப்படுத்தப் படுவதை எதிர்த்துப் பேசியுள்ளனர். வையகத்தை வெற்றி கொள்ள என்னும் தலைப்பில் அமைந்த கவிதை, ஆணாதிக்கச் சமூகம் உருவாக்கி வைத்துள்ள அழகு தொடர்பான கருத்தியல்களைச் சிதைக்கிறது.

> என் இனிய தோழிகளே/இன்னுமா தலைவார/கண்ணாடி
> தேடுகிறீர்?/சேலைகளைச் சரிப்படுத்தியே/வேளைகள்
> வீணாகின்றன/வேண்டாம் தோழிகளே/வேண்டாம்/
> ஆடையின் மடிப்புகள்/அழகாக இல்லை/கண்ணீர் விட்ட
> நாட்களை/மறப்போம்/வெட்கம் கெட்ட/அந்த நாட்களை/
> மறந்தே விடுவோம்/சரிகைச் சேலைக்/கண்ணிறைந்த
> காதலர்க்கும்/காத்திருந்த காலங்கள்/அந்த வெட்கம் கெட்ட/
> காலத்தின் சுவடுகளை/
> அழித்து விடுவோம்/புதிய வாழ்வின்/சுதந்திர கீதத்தை/
> இசைத்துக் களிப்போம்/வாருங்கள் தோழியரே
>
> *(சன்மார்க்கா 1987 : 24)*

இக்கவிதை ஆணாதிக்கச் சமுதாயம் பெண்கள் மேல் திணித்த அழகு தொடர்பான கருத்தியல்களை அழித்து, புதிய சமுதாயம் அமைக்கப் பெண்களுக்கு அழைப்பு விடுக்கிறது.

ஓர் ஆணும் பெண்ணும் பழகுவது காதல் வயப் பட்ட தாகவே இருக்க முடியும் அல்லது கணவன், மனைவியாக இருக்க முடியும். அதற்கப்பால் எந்த உறவும் இல்லை என்று ஆணாதிக்கச் சமூகம் கருதுகிறது. இக்கருத்தையே படைப்பாளர்கள் தங்கள்

படைப்புக்களில் வெளியிடுகின்றனர். ஆண்-பெண் உறவுகளில் நட்பு என்பதே இல்லை. அது காதல் உறவு மட்டுமே. பிறப்பு முதல் இறப்பு வரை பல கட்டுப்பாடுகளைப் பெண்ணுக்கு ஆணாதிக்கச் சமூகம் ஏற்படுத்தி இருக்கிறது. ஒரு பெண் வயதுக்கு வராதற்கு முன்பு ஓரளவு சுதந்திரமாக இருக்கிறாள். வயதுக்கு வந்தபின் அவளுக்குப் பல்வேறு கட்டுப்பாடுகள் விதிக்கப் படுகின்றன. இக்கருத்தினை வெளிப்படுத்துவதாகப் பின்வரும் கவிதை அமைகிறது.

இன்று நான் பெரிய பெண்

இன்று/நான் பெரிய பெண்/உரத்துச்சிரித்தல் கூடாது/
விரித்த புகையிலை/அடக்கம்; பொறுமை;/நாணம்/
பெண்மையின் அணிகலம்/கதைத்தல்; சிரித்தல்;/
பார்த்தல்; நடத்தல்;/ உடுத்தல்/எல்லாம் இன்னபடி
என்றெழுதி ...../நான்/கல்லாய்/பாறையாய்/பனியாய்/
பெண்ணாய்..... (அ. சங்கரி 1987 : 11)

இவ்வாறு தமிழ்ப் புதுக்கவிதைப் பெண் கவிஞர் படைப்புக்களில் பெண்ணியச் சிந்தனைகள் இடம் பெற்றுள்ளன.

துணை நூல்கள்

சங்கரி. அ. முதலானோர், 1987, சொல்லாத சேதிகள், சென்னை: சிலிக்குயில்

சரோஜினி, 1989, இலக்கியத்தில் பெண் நீதி, திண்டுக்கல்: அரசி பதிப்பகம்

ரோகிணி, 1980. தேன்முள்ளுகள், சிவகங்கை: அன்னம்

கனிமொழி, 1998.கருவறை வாசலிலே, சென்னை.

தே. சம்பத்
தேசியக்கல்லூரி
திருச்சிராப்பள்ளி

தகவல் தொடர்பு வளர்ச்சியில் இதழியல்

முன்னுரை

மனிதன் தனியாகவும் குழுவாகவும், வாழத் தொடங்கிய நிலையில் ஒருவரோடு ஒருவர் தொடர்பு தேவைப்பட்டது. ஆங்காங்கே சமூகமாகவும் குழுவாகவும் மிகுந்த நிலையிலும் தகவல் தொடர்பு தேவையாகிவிட்டது. மனிதனின் அறிவு வளர்ச்சிக்கும் ஆளுமை வளர்ச்சிக்கும் தகவல் தொடர்பு வேண்டும் என்ற நிலை ஏற்படுகிறது. இன்றைய அறிவியல் உலகில் தனி மனிதனால் தகவல் தொடர்பின்றி வாழ இயலாது. மனித வாழ்க்கையில் தகவல் பல வகைகளில் பயன்படுகிறது. இத்தகைய தகவல் தொடர்பு வளர்ச்சியில் இதழியல் பங்கு பற்றி இக்கட்டுரையில் ஆராயப்படுகிறது.

மொழி தோன்றாக் காலத்தே தகவல் தொடர்பு

மனிதன், மொழி தோன்றாக் காலத்தே நாடகம், ஓரங்க நாடகம், பொம்மலாட்டம் ஆகியவற்றின் மூலமும், செய்கைகளின் வாயிலாகவும் செய்திகளைப் பிறர்க்குத் தெரிவித்து வந்தான்.

சிழ்க்கை, ஒலி, பறை அறிவித்தல், மணி அடித்தல், புகை எழுப்புதல், தீ அம்புகளை வானத்தில் எரிதல் ஆகியவற்றின் மூலம் தத்தம் கருத்துக்களைப் பிறர்க்குத் தெரிவித்து வந்தான். மனிதன் மொழியை அறிந்த பின்பும் எழுத கற்றுக்கொண்ட பின்பும் எழுத்தின் மூலமாக ஓவியத்தின் மூலமாகப் புறாக்களின் மூலமாக, அடிமைகள் மூலமாக, குதிரை ஓட்டுநர் மூலமாகச் செய்திகளைப் பிறர்க்கு அனுப்பி வைத்தான்.

கி. மு. 106 : 'சிசரோ' என்பவர் பிறப்பு இறப்பு சம்மந்தப் பட்ட புள்ளி விவரங்களை எழுதி வைத்தார். மற்றொரு சாரார் இவரைத்தான் 'இதழியலின் தந்தை' என்றழைத்தனர்.

கி.மு. 60 : சூலியச் சீசர், 'ஆக்டோ டையானா' என்ற பெயரில் அரண்மனை தொடர்பான தகவல்களை எழுதி வைத்தார்.

கி.மு. 49 : 'பாம்பின் கற்பாறைக் குறிப்புகள் வளர்ந்தன. இந்தியாவில் அசோகர் தான் முதன்முதலில் செய்திகளைக் கல்வெட்டு மூலம் அறிவித்தார். எனவே இந்தியாவின் 'இதழியல் தந்தை' என அசோகரைக் கூறலாம்.

கி.பி. 105 : 'சாய்லன்' என்ற சீனர் மல்பரி மரத்திலிருந்து காகிதம் தயாரிக்கும் முறையைக் கண்டுபிடித்தார். இதன் மூலம் பத்திரிக்கைக்குத் தேவையான காகிதங்கள் கிடைத்தன.

கி.பி.795 : முதன் முதலில் 'பாக்தாத்தில்' தான் அரேபியர்கள் ஒரு காகித தொழிற்சாலையை உருவாக்கிக் காகிதங்களை வழங்கினார்கள்.

கி.பி. 1450 : முதன் முதலில் செர்மனியில் 'சான் கூட்டன் பர்க்' அச்சுப் பொறியைக் கண்டுபிடித்தார். முதன் முதலில் செய்தித்துண்டு வெளியீடுகள், செர்மனியில்தான் தொடங்கப் பட்டது. காலைச் செய்திப் பத்திரிக்கை, முதன் முதலில் ஐரோப்பாவில் தான் தொடங்கப்பட்டது. 'உறவு' (Relation) என்கிற பத்திரிக்கைதான் நெடுநாள் வந்து கொண்டிருந்தது.

கி.பி. 1660 : சுவிட்சர்லாந்து, இங்கிலாந்து, பிரான்சு, ஹாலந்து நாடுகளில் தான் வாரச் செய்தித்தாள்கள் வெளிவந்தன.

கி.பி. 1665 : 'ஆக்ஸ்போர்டு', 'கெஜட்' ஆகியவை வாரம் இருமுறை பத்திரிக்கையாக ஆரம்பிக்கப்பட்டன.

கி.பி. 1690 : 'பெஞ்சமின்' என்பவர் உள்நாட்டிலும், வெளிநாட்டிலும் Public Accurencies both foreign and Domestic' எனும் இதழை அளித்தார்.

கி.பி.1691 : பாஸ்டன் செய்திக் கடிதம் 'ஜாங் கேம்பல்' என்பவரால் தொடங்கப்பட்டது.

கி.பி. 1702 : 'தி டெய்லி' கூரண்ட் பத்திரிக்கை தொடங்கப் பட்டது.

கி.பி. 1713 : தரங்கம்பாடியில் செய்தி அச்சிடும் அலுவலகம் தொடங்கப்பட்டது. இதன் நோக்கம் வேதாகமத்தை அச்சிட்டு வெளியிடுவதாகும்.

கி.பி. 1715 : பொறையாறில் முதலாவது காகிதத் தொழிற் சாலை ஏற்படுத்தப்பட்டது. பத்திரிக்கை அச்சிடத் தேவையான 'தாள்' பெருமளவில் வழங்கப்பட்டது.

கி.பி. 1720 : 'வில்லியம் போல்ட்' என்பவர் கிழக்கிந்தியக் கம்பெனியாரின் அதிகாரிகளைப் பற்றியும் அவர்களின் ஊழல்கள் பற்றியும் தெரிவிக்க யாருக்கும் தெரியாமல் ஆரம்பித்தார்.

கி.பி. 1780 : சனவரி '29-ல் முதலாவது செய்தித் தாள் வெளிவந்தது. 'ஜேம்ஸ் அகஸ்டஸ் ஹிக்கி' என்பவர் இதைத் தொடங்கினார். 'பெல்கால்கெஜட்' எனும் பெயரில் 'எள்ளல்' முறையில் வெளிவந்தது. ஆங்கில கவர்னர் ஜெனரலாக 'வாரன் ஹேஸ்டிங்கைப் பற்றி விமர்சனம் செய்வதாக இது அமைந்திருந்தது.

இந்தியா கெஜட் எனும் இதழைப் பீட்டர் ரீட், 'பொன்னார்டு மௌசிங்' ஆகிய இருவரும் சேர்ந்து ஆரம்பித்தார்கள்.

கி. பி. 1784 : 'கல்கத்தா கெஜட்', 'பெங்கால் ஜெர்னல்', 'ஓரியண்டல் மேகசின்' ஆகிய பத்திரிக்கைகள் வெளிவந்தன.

கி.பி. 1786 : 'கல்கத்தா கிரானிக்கள்' என்னும் பத்திரிக்கை வெளி வந்தது. அதே கால கட்டத்தில் 'வில்லியம் டூனே' என்பவர் 'World' எனும் பத்திரிக்கையை அரசுக்கு எதிர்ப்பாகத் தொடங்கினார்.

கி.பி. 1789 : பம்மாய், 'பாம்பே ஹெரால்ட், எனும் இதழ் வெளிவந்தது.

கி.பி. 1790 : 'பாம்பே கூரியர்' எனும் செய்தி பத்திரிக்கை கல்கத்தாவிலிருந்து வெளிவந்தது.

கி.பி. 1794 : 'ஆசியாடிக் மிராஷ்' - 'கல்கத்தா கூரியர்', 'இந்தியன் அப்பல்லோ' ஆகிய இதழ்கள் வெளிவந்தன.

கி.பி. 1795 : 'வில்லியம்ஸ்' என்பவரால் 'மெட்ராஸ் கெஜட்' எனும் இதழும், 'பெங்கால் ஹார்கரு' எனும் இதழும் வெளிவந்தது.

கி.பி. 1798 : 'ஓரியண்டல் ஸ்டார்' என்னும் இதழ் வெளிவந்தது.

கி.பி. 1799 : 'ரிலேட்டர்' எனும் இதழ் வெளிவந்தது.

கி.பி. 1818 : 'கார்டியன்' சமாச்சர் டர்பன்' ஆகிய வங்காள வார இதழ்களும் ஃப்ரண்ட் ஆப் இந்தியா' எனும் வங்க மாத இதழும் வெளிவந்தன.

'சஞ்சி எனும் பத்திரிக்கை இராசாராம் மோகன்ராய் என்பவராலும், 'ஓரியண்டல் ஹெரால்ட்' எனும் இதழ் 'ஜேம்ஸ் சில்க் பக்கிங்காம்' என்பவராலும் தொடங்கப்பட்டது.

கி.பி. 1831 : தமிழ் மேகஸின் சென்னையில் தொடங்கப் பட்டது.

கி.பி. 1832 : 'இராஜ விருத்தி போதினி' எனும் வார இதழ் வெளிவந்தது.

கி.பி. 1841 : 'ஜன சினேகம்' எனும் இதழ் மாதமிருமுறை வெளி வந்தது.

கி.பி. 1849 : 'தற்போதகம் அல்லது பிரண்டலி கன்ஸ்ட்ரக்டர்' என்னும் மாத இதழ் வெளிவந்தது. 'பால்நேசன்' என்னும் இதழும் வெளிவந்தது.

கி.பி. 1850 : 'தேசோபகாரி' எனும் இதழ் தமிழில் வெளிவந்தது.

கி.பி. 1855 : 'தின வர்த்தமானி' எனும் இதழ் ஒரு முழுமையான இதழாக இலக்கியம், அறிவியல், செய்திகள் ஆகியவற்றுடன் வெளிவந்தது.

கி.பி. 1865 : 'தத்துவ போதினி' எனும் இதழ் வெளிவந்தது. 'விவேக விலாசம்' வடக்கே சிந்து சமயத்தைப் பரப்பத் தொடங்கப்பட்டது.

கி.பி. 1865 : கடேசி எக்காலம்' எனும் சமய இதழ் வெளிவந்தது.

கி.பி. 1868 : 'அமிர்த பஜார்' எனும் இதழ் வெளிவந்தது.

கி.பி. 1870 : 'சுபா சமாச்சார்' எனும் இதழ் வெளிவந்தது.

கி.பி. 1878 : தாய் மொழியில் பத்திரிக்கை வெளிவந்தது.

கி.பி. 1885 : The Hindu, The Mail ஆகிய நாளிதழ்கள் வெளிவந்தன.

கி.பி. 1902 : 'அறிவுக் கடல்' எனும் இதழை மறைமலையடிகள் தொடங்கினார்.

கி.பி. 1908 : 'வந்தே மாதரம்' எனும் இதழ் 'ஜிகந்தர் பூபேந்தர் நாத்' என்பவரால் தொடங்கப்பட்டது.

கி.பி. 1909 : 'இஸ்லாம் நேசன்' எனும் இதழ் இஸ்லாம் சமயத்தைப் பரப்பத் தோன்றியது.

கி.பி. 1923 : 'செந்தமிழ் செல்வி' எனும் இதழ் வெளிவந்தது.

கி.பி. 1933 : 'மணிக்கொடி' எனும் இதழ் வெளிவந்தது.

கி.பி. 1934 : 'சூறாவளி' இதழ் வெளிவந்தது.

கி.பி. 1939 : 'சக்தி' எனும் இதழ் வெளிவந்தது.

கி.பி. 1943 : 'இராம ஊழியன்' எனும் இதழ் வெளிவந்தது.

கி.பி. 1945 : 'கலாமோகினி' எனும் இதழ் வெளிவந்தது.

கி.பி. 1947 : 'சிந்தனை' எனும் இதழ் வெளிவந்தது.

கி.பி. 1948 : 'காதாம்பரி' எனும் இதழ் வெளிவந்தது.

கி.பி. 1952 : பத்திரிக்கை குழு தொடங்கப்பட்டது.

முற்போக்கு இதழ்கள்

1965 : தீபம், கணையாழி, கலைமகள், மஞ்சரி, தாமரை போன்ற இதழ்கள் வெளிவந்தன.

சமுதாய இதழ்கள்

'சமூக இதழ்கள்' தமிழ் மொழியில் நிறைந்தன. மகாஜனம், வணிகமித்திரன்' எனும் இதழ்கள் வெளிவந்தன.

தேசிய இதழ்கள்

பாரதியாரின் 'இந்தியா' சங்கு, சுதேசிமித்திரன், சக்கர வர்த்தினி, கர்மயோகி விஜயா போன்ற இதழ்கள் வெளிவந்தன.

முடிவுரை

இத்தகைய இதழியல் வளர்ச்சி மேலும் பெருகித் தகவல் தொடர்பிற்குப் பேருதவி செய்ய இருக்கின்றன. இத்தகைய தகவல் தொடர்பு சாதனங்கள் தொடர்ந்து தம் கடமைகளைச் செய்வதற்கு அரசும், பொது மக்களும் நல்ல ஆதரவு நல்கினால் சரியான தகவல் தொடர்பிற்கு இதழியல் தொண்டு பெரிதும் நலம் பயப்பதாக அமையும் என்பது திண்ணம்.

அரங்க. சம்பத்குமார்
செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித்திட்ட இயக்ககம்
சென்னை – 600 008

தமிழ்ச் சட்டம்

தமிழ்ச் சமுதாயத்தின் இலக்கிய இலக்கணங்கள் கொண்டுள்ள அகம், புறம் என்ற வாழ்வியல் பகுப்பு வியந்து மகிழத்தக்கது. அப்பகுப்பால் பண்டைய தமிழர் பண்பாட்டுப் பழக்க வழக்கங்களையும் நடைமுறைகளையும் உணரமுடிகிறது. சங்ககால மக்களின் பண்பாட்டுப் பழக்கவழக்கங்களை நம்முடைய வாழ்வியல் சட்டங்களோடு ஒப்பிட்டுப் பார்த்தால் அன்றைய பண்பாடே இன்றைய வாழ்வியற் சட்டமாக (family law) வடிவெடுத்துள்ளது என்பது தெளிவு. இதனைத் தொல்காப்பியம், குறுந்தொகை, அகநானூறு போன்ற நூல்களிலிருந்து காணலாம்.

''சமுதாயப் பண்பாட்டின் வளர்ச்சிக்கு எதைச் செய்ய வேண்டும் எதைச் செய்யக்கூடாது என்ற வரையறைகள் மக்களால் ஏற்றுக் கொள்ளப் பட்டனவோ அதுவே சட்டம்'' *(சாப்வாலா. 1992.36)* எனச் சட்ட வரலாற்று நூல் ''சட்டம்'' என்ற சொல்லுக்கான பொருளாகக் கூறுகிறது.

இக்கருத்தைப் பண்டைய தமிழ்ச்சமுதாயம் கடைப்பிடித்த, ஏற்றுக்கொண்ட, மணச்சடங்குகள், அந்த மண நிகழ்விற்குக் கொண்டிருந்த வயதுவரம்பு, ஒருமண ஒழுகலாறு, பலமண ஒழுகலாறு ஆகியவைகளோடு பொருத்திப்பார்த்தால் அந்த ஒழுகலாறுகளே வாழ்வியற் சட்டங்களாக வடிவெடுத்துள்ளன என்பதைக் காண முடிகிறது.

காதல் மணம்

தலைவனும் தலைவியும் சந்தித்தபோது ''எந்தையும் நுந்தையும் எம்முறைக்கேளிர்'' என்று பொதுமையில் தொடங்கிச் ''செம்புலப்பெயல் நீர்போல அன்புடை நெஞ்சம் தாம்கலந்து, உள்ளப்புணர்ச்சி, மெய்யுறுபுணர்ச்சி, களவுப் புணர்ச்சியுட் காதலர்களானவர்கள் மெய்யுறு புணர்ச்சியினால் ஊரலர்

வருவதற்குள் மணம் செய்துகொள்ள வேண்டும் என்பதே தமிழர் மரபு. இதையே ''மெய்யுறு புணர்ச்சி உலகத்தாருக்கு நன்கு வெளிப்படும் முன் மணவினை நடந்தே ஆகவேண்டும் என்ற திட்டவட்டமான விதியினை அமைத்துதான் தொல்காப்பியர் ''திங்கள் இரண்டின் அகமென மொழிப என வரையறுத்துள்ளார்'' (அ.மு.பரமசிவானந்தம் 1966.43) என்று அ.மு. பரமசிவானந்தம் குறிப்பிடுகிறார். ஆகக் காதல் மணம் என்பது பண்டைய தமிழர் வாழ்வில் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளதை அறியலாம்.

தமிழ் இலக்கணங்களில் கூறப்பட்டுள்ள பிரமம், தெய்வம், ஆரிடம், பிரசாபத்தியம், ஆசுரம், காந்தருவம், இராட்சசம், பைசாசம் என்னும் எட்டுவகை மணங்களை ''மறை ஓர் தேவத்து மன்றல் எட்டனுள்'' (தொல்.பொருள் 91) என்ற தொல்காப்பிய வரிகளால் அறியலாம். அந்த எண்வகை மணங்களுள் காந்தருவம் மட்டுமே களவு மணம் என்கிறார் நச்சினார்க்கினியர். அதுவே தமிழ்ச்சமுதாயம் ஏற்ற ஒன்றாம்.

இலக்கணங்களில் விளக்கப்படும் எண்வகை மணங்களும் இன்றைய மணச்சட்டத்தில் இலக்கணநூல் வகைப்படுத்தியவாறே குறிப்பிட்டிருப்பது ஒப்புநோக்கத்தக்கது. ஆனால் எண் வகையையும் சட்டம் ஏற்றுக்கொள்ளவில்லை ''மணந்துகொள்ள விரும்பும் இருவரும் ஒருவருக்கொருவர் மனமொத்துக் குடும்பக் கட்டுக் கோப்பிற்காக ஒன்றுசேர விரும்புவதை இக்காலத்தில் காதல் மணம் (Love Marriage) என்று கூறுகிறோம். அதுவே பழங்கால மண வகைகளுள் ஒன்று'' (சாப்வாலா. 1992a.148) எனக் காந்தருவ மணத்தை மணச் சட்டம் விளக்குகிறது. என்றாலும் எண்வகை மணங்களின் தொகுப்பாகவே மணச்சட்டம் வடிவமைக்கப்பட்டிருக்கிறது.

இவ்வகை காதல் மணங்களில் சாதிய முறையோ இனப்பாகுபாட்டு முறையோ வழங்கியதாகத் தெரியவில்லை. கொடுப்பார் கொள்வார் என்ற இருவகையைத் தவிர வேறொன்றும் விளக்கப் படவில்லை. ''மணமக்கள் இருவரும் வெவ்வேறு சாதியையும் மதத்தையும் சார்ந்தவர்கள் என்பதால் திருமணம் செல்லாது என்பதல்ல (சாப்வாலா.1999a. 149) என 1948ஆம் ஆண்டு வடிவமைக்கப்பட்ட குடும்பச் சட்டத்தில் வரையறுக்கப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

மணவயது

அறுவகைப் பருவங்களுளொன்றான பேதைப் பருவத்தில் காதலும் அதனால் ஏற்படும் ஏமாற்றங்களும் கைக்கிளை எனவும்

பெருந்திணை எனவும் பேசப்படுகின்றன. ''காமஞ்சாலா இளமை யோள்'' (தொல்பொருள் 50) என்பது பேதைப் பருவத்துச் சிறுமி யைக் குறித்துப் பேசப்பட்டு வந்துள்ளது. ஆனால் பருவம் வந்த பெண்களின் உணர்வுகளே காதலாக வெளிப்பட்டன என்றும் அதைத்தான் தமிழ் இலக்கண இலக்கிய ஆசிரியர்கள் கூறுகின்றனர் என்பதும் ஒருசாரார் கருத்தாகும்.

ஆனால் ''பேதைக் காதல் வழக்காறாயின் இலக்கணமும், இலக்கியமும், அறநூலும் அதனைத் தக்கதென்றோ, தகாத தென்றோ சுட்டுவதில் பிழைபாடில்லை''.. ''பிறன்மனை நயக்கும் தூய்மை தமிழ்ச் சமுதாயத்தில் காணப்படினும் அதனைப் பொரு ளாக வைத்து இலக்கியம் பாடினாரிலர் எனினும் ஒழுக்க முரணான அவ்விழுக்கத்தை அறநூல்கள் சுட்டிக்காட்டுகின்றன.''... ''பேதைக் காதல் எத்திறத்தும் இடம்பெறாமையின் தமிழ்ச் சமுதாயத்தில் இல்லை என்பதே முடிவு. அகத்திணைக் கைக்கிளையில் இடம் பெறுபவள் பேதைப்பெண் அல்லள். காமப் பருவத்தை நெருங்கும் பெரும்பைப் பருவத்தவளே'' (மாணிக்கம் 1962.239) என்கிறார் வ.சுப. மாணிக்கனார்.

வயதுவராத பெண்கள் காதல் வயப்படுவதில்லை என்பதும் திருமணத்திற்கு வயதுவந்தவர்கள் மட்டுமே உரியவர்கள் என்பதும் தமிழரின் பண்பாட்டு ஒழுகலாறாகும். அதுவே இன்றைய மணச் சட்டமாக உருவெடுத்துள்ளது. 1948-ஆம் ஆண்டிற்கு முன் சட்ட வரையறைக்குள் ''திருமண வயது வரம்பு'' கொண்டுவரப்பட வில்லை. என்றாலும் 1955-இல் திருத்தியமைக்கப்பட்ட திருமணச் சட்டத்தில் ஆண்களுக்கு 21 வயதும் பெண்களுக்கு 18 வயதும் மண வயதாகக் (சாப்வாலா. 1992.150) குறிப்பிட்டுள்ளதை மேற்சொன்ன செய்திகளோடு எண்ணத்தக்கது.

''ஒத்த கிழவனும் கிழத்தியும் காண்ப, மிக்கோனாயினும்கடி வரையின்றே'' (தொல். பொருள்.93) என்ற தொல்காப்பிய வரிகளை நோக்கினால் ''தொல்காப்பியர் உருவும் திருவும் பிறவும் ஒத்தவர்க ளாக இருக்கவேண்டுமெனவும் அவருள் தலைவன் சில நிலைகளில் உயர்ந்திருந்தாலும் தவறில்லை எனவும் காட்டுவர்''(பரமசிவானந்தம். 1966.40) என அ.மு. பரமசிவானந்தம் கூறுவதையும் முன்சொன்ன சட்ட வடிவொடு ஒப்புநோக்கி, வயது வராதப் பெண்களை மணப்பது சட்ட முரண் என்ற விதியினையும் இணைத்துப் பார்க்கலாம்.

எத்தகைய ஒழுகலாறு சமுதாயத்திற்கு ஒவ்வாதது என்ற தமிழ்ச்சமுதாயம் ஒதுக்கியதோ அத்தகைய ஒழுகலாறு மணச் சட்டத்திலும் ஒதுக்கப்பட்டுள்ளதைக் காணலாம்.

மணச்சடங்கு

தமிழ் மக்களிடை ''கரணம்'' என்ற மணச்சடங்கு நிகழ்ந்த தாகக் 'கற்பெனப்படுவது கரணமொடு புணர' என்றும் ''கொடுப் பார் இன்றியும் கரணம் உண்டே'' (தொல்.பொருள்.142) என்றும் கூறுகிற தொல்காப்பிய வரிகளினால் தெரிகிறது.

கொடுப்போரான தந்தை, தாய், பெரியோர் சேர்ந்து மணம் முடித்துக் கொடுக்கும்போதும், உடன்போக்கின்போதும் திருமணச் சடங்கு நடந்தாகவேண்டும்.

''கொடுப்போர் இல்லா இடம் எது? அது உடன்போகிய இடம் எனவும், உடன் போக்கிடத்துத் திருமணம் கொள்ளின் கொடுப்போர் இலர் என்பதற்காகக் கரணத்தை விடற்க, யாரைக் கொண்டேனும் கரணம் பெறவேண்டும் எனவும் இந்நூற்பா குறிப்பிடுகிறது. திருமணம் கற்பின் இன்றியமையாத ஓர் முறை கரணமாம் என்பது தெளிவு (மாணிக்கம் 1962.156) என்ற வ.சுப. மாணிக்கனார் வரிகள் எண்ணத்தக்கன.

மணச்சடங்கான கரணம் எவ்வாறு நடத்தப்பெற்றன என்பதற்கு

உச்சிக்குடத்தர் புத்தகன் மண்டையர்
பொதுசெய் கம்பலை முதுசெய் பெண்டிர்
முன்னவும் பின்னவும் முறைமுறை தரத்தரப்
புதல்வர் பயந்ததிதிலை அவ்வயிற்று
வால் இழை மகளிர் நால்வர்கூடிக்
கற்பினின் வழாஅ, நற்பல உதவிப்
பெற்றோர் பெட்கும் பிணையை ஆக,

எனவரும் அகநானூற்றுப்பாடல் நமக்கு விடையளிக்கிறது. பெரியோர் பலர்கூடி சடங்குகள் செய்வதும், வாழ்த்துவதும், மணமக்களைச் சமுதாயத்தின் ஓர் அங்கமாக ஏற்றுக்கொள்வதே (Social recogani sation) நோக்கமாகக் கொண்டிருந்ததை உறுதி செய்ய முடிகிறது.

''மணமக்களில் இருவரில் ஒருவரது பண்டைய பழக்க வழக்கப்படி சடங்குகள் செய்து மணம் நடத்தப்பட வேண்டும். அதுவே சட்டப்படி செல்லுபடியாகும் திருமணமாகும்'' (சாப் வாலா. 1992a 150) என்ற சட்டத்தையும், பதிவுத் திருமணத்தின் போது ''மணமக்களோடு வேறு இருவர் பதிவாளரின் முன்பாக

ஒப்பளித்தல் அவசியம்'' (சாப்வாலா 1992a 160) என்ற சட்டத்தையும் ஒப்புநோக்கின், மணமக்களைச் சமுதாய உறுப்பினர்களாக ஏற்றால் தான் திருமணச்சட்டப்படி செல்லுபடியான மணம் எனக் கொள்ள முடியும். எனவே பலர்கூடி மணமக்களைச் சமுதாய உறுப்பினர் களாக ஏற்றுக்கொள்வதே சட்டமாக வடிவெடுத்திருக்கிறது.

ஒரு மணமுறை

கணிகையர் தொடர்பையும், பரத்தையர் தொடர்பையும் விளக்குகிற இலக்கிய இலக்கணங்களில் ஒருதாரமுறை (monogamy) பலதாரமுறை (bigamy) என்பதை யொட்டிய செய்திகள் எவ்விடத் திலும் காணப்படவில்லை.

களவொழுக்கத்தில் ஈடுபடுவோர், சொல்லையும் செயலையும் மாற்ற முற்படும்போது சமுதாயத்தின் பொதுவொழுக்கம் (common morality) கெட்டுவிடும் நிலை இருந்திருக்கலாம். பொய்யான வாக்கும் வழுநிறைந்த நடைமுறையும் கொண்டு வாழ்ந்தமையால் சமுதாயத் தில் பண்பாட்டுச் சீரழிவு நடைபெற்றிருக்கலாம். அந்தக் கேட்டி னையும் சீரழிவினையும் ஒழுங்குபடுத்தும் நோக்கில் ''கரணம்'' என்ற மணச்சடங்கு உருவாக்கப்பட்டதாகத் தெரிகிறது. இந்தச் சடங்கு கொடுப்பார் இருந்தாலும், கொடுப்பாரின்றி உடன்போக்கின்போதும் எவ்வகையிலேனும் நிகழ்ந்தாக வேண்டும் என்பதிலிருந்து அதன் இன்றியமையாமையைச் சிந்திக்க முடிகிறது.

மக்களால் ஏற்றுக்கொள்ளப்பட்ட அச்சடங்கு, பண்பாட்டின் சீரழிவினைத் தடுத்து நிறுத்தவே நடத்தப்பட்டது என்று சிந்தித் தால், ஒருவனுக்கு ஒருமுறைதான் கரணம் நடந்திருக்கக்கூடும்; பல முறை நடந்திருக்கும் என்று சிந்திக்க இயலவில்லை; பல முறை நடந்ததாகச் சான்றுகளும் இல்லை. ஒருமுறை தான் கரணம் நடந்த தாகவும் அதுதான் ஒருதாரமணமாக இருந்தது எனவும் கொள்ள வாய்ப்பிருக்கிறது அல்லவா? 1955இல் கொண்டுவரப்பட்ட சட்டத் திருத்தத்தில்தான் ஒருமண முறை வலியுறுத்திச் சட்டமாக்கப்பட்ட தையும் இங்கு எண்ணத்தக்கது. வழக்கத்தில் இருந்த ஒருமுறைக் கரணம் சிதைகிறது என்று உணர்ந்த பிறகே சட்டத்தால் வலியுறுத் தினர் என்று எண்ணலாம்.

ஆக பண்டைய தமிழர்களால் படைக்கப்பட்ட இலக்கிய இலக்கணங்கள் வெளிப்படுத்தும் அகவாழ்க்கை நடைமுறை களான காதல் மணம், அதற்கொரு வயது வரம்பு, திருமணச் சடங்கு, ஒருமணமுறை ஆகியவைகள் இன்றைய குடும்பச் சட்டங்களாக வடிவெடுத்துள்ளன என்பது தெளிவாகிறது.

மா. சரவணவேல்
தந்தை ஹெர்ன்ஸ் ரோவர் கல்லூரி
பெரம்பலூர் – 621 212

பாரதிதாசன் கவிதைகளில் மக்கள் தொகைக்கல்வி விழிப்புணர்வு

ஒரு நாட்டின் முன்னேற்றத்தை நிர்ணயிக்கும் காரணியாக மக்கள் தொகைப் பெருக்கம் அமைகிறது. மக்கள் தொகைக்கல்வி என்பது மக்கள் தொகைப் பெருக்கத்தால் ஏற்படும் இடர்ப் பாடுகள் பற்றிய செய்திகளை எடுத்துரைப்பது. தமிழ் இலக்கியங் களில் மக்கள் தொகைக்கல்வி விழிப்புணர்வு பற்றிய சிந்தனை களைக் காணமுடிகிறது. இக்கட்டுரை பாரதிதாசன் கவிதைகளில் இடம் பெறும் மக்கள் தொகைக்கல்வி விழிப்புணர்வு பற்றிய செய்தி களை எடுத்துரைக்கிறது.

மக்கள் தொகைப்பெருக்கம்

மக்கள் தொகைப் பெருக்கம் நாட்டு வளர்ச்சிக்கு உகந்தது அல்ல. மக்கள் தொகைப் பெருக்கத்திற்கு அடிப்படைக் காரணங் களாக அறியாமை (Ignorance), வறுமை (Poverty) எழுத்தறி வின்மை (Illiteracy) ஆகியவைத் திகழ்கின்றன.

அறியாமை - (Ignorance)

திட்டமிட்ட குடும்பமின்மைக்கு அறியாமை அடிப்படை யாக அமைகின்றது. ஆண்குழந்தையும், பெண் குழந்தையும் இருந்து சடங்குகள் செய்யும்போதுதான் மேலுலக வாழ்க்கையும் கிட்டும் என்ற நம்பிக்கை நாட்டுப்புற மக்களிடம் காணப்படுகிறது. இதனைக் கீழ்வரும் ஒப்பாரிப்பாடல் வரிகள் சுட்டுகின்றன.

''கர்ணன் இருந்து கொள்ளி வச்சா
கட்டை கலந்தெறியும் நீங்கபோன
கைலங்கிரி தீ முழங்கும்''
கொள்ளி வைக்க ஆண் வேண்டும்
குந்தி அழ பெண் வேண்டும்''.

வறுமை - (Poverty)

ஏழ்மை மக்கள்தொகைப் பெருக்கத்துக்கு வழிவகுக்கிறது. ஏழைக் குடும்பங்களில் வறுமையைப்போக்க அதிக குழந்தை களைப் பெறுகின்றனர். ஏழைக் குடும்பங்களில் குழந்தைகளின் எண்ணிக்கை குடும்பப் பொருளாதாரத்துக்குக் காரணமாக அமைகிறது.

எழுத்தறிவின்மை - (Illiteracy)

எழுத்தறிவின்மை அறியாமைக்கான காரணமாக அமை கிறது. குடும்பக் கட்டுப்பாடு உடலுக்குத் தீங்கை விளைவிக்கும் என்று கல்வி அறிவு குறைவான மக்கள் கருதுகின்றனர். ஆண் குழந்தை மோகம் எல்லோரிடத்தும் நிலவுகின்ற ஒன்று. இது மக்கள் பெருக்கத்திற்கு வழிவகுக்கிறது.

மக்கள் தொகைப் பெருக்கம் அதிகமாகப் பொருளாதாரப் பின்னடைவு ஏற்படுகிறது. சுற்றுச் சூழல் சீர் கெடுகிறது. அரசின் வளர்ச்சித்திட்டங்கள் தோல்வியைத் தழுவுகின்றன. மக்கள் தொகைக் கல்வி விழிப்புணர்வு அளவான குடும்பம் வளமான வாழ்வு, குடும்பக் கட்டுப்பாடு போன்ற சிந்தனைகளை வெளிப்படுத்துகிறது.

பாரதிதாசன் கவிதைகளில் மக்கள் தொகைக்கல்வி

20-ஆம் நூற்றாண்டுத் தொடக்கத்தில் பாவேந்தர் பாரதி தாசன், இலக்கியம் வெறும் பொழுதுபோக்கு அல்ல; அது பகுத் தறிவுக்கு அடிப்படை என்று சிந்தித்தார். அவர் கவிதை, கதை, கட்டுரை, நாடகங்கள் வழித் தமிழ் மொழி உணர்வு, சாதி, பொருளாதாரம் மக்கள் தொகைக்கல்விச் சிந்தனைகளை எடுத்து ரைத்தார். மக்கள் பெருக்கத்திற்கு அடிப்படை திட்டமிட்ட குடும்பமின்மை, வறுமை, எழுத்தறிவின்மை என்று முழங்கி னார். அளவான குடும்பத்திற்குக் குடும்பக்கட்டுப்பாடு சேவை என்று வலியுறுத்தினார். மக்கள் தொகைக்கல்வி விழிப்புணர்வு வேண்டி இந்தியாவில் முதன்முதல் இலக்கியம் புனைத்தவர். இதனை

> ''1929 - குடியரசு 'பகுத்தறிவு' ஏடுகளில் பாடல் கட்டுரை, கதை எழுதுதல், குடும்பக்கட்டுப்பாடு பற்றி இந்தியா விலேயே பாட்டெழுதிய முதற் பாவலர்''.

என்று பாரதிதாசன் வாழ்க்கைக் குறிப்புச் சுட்டுகின்றது. மக்கள் தொகைக்கல்விச் சிந்தனைகளைக் குடும்ப விளக்கு, தேனருவி, பிறகவிதைகள் பகர்கின்றன.

அளவான குடும்பத்துக்கு உதாரணமாகக் குடும்ப விளக்கு நூல் அமைந்துள்ளது. இந்நூலில் மணவழகன், தங்கம் தம்பதி யருக்கு வேடப்பன், வெற்றிவேல் என்ற இரு குழந்தைகள் உள்ளன. வேடப்பன் அவன் மனைவி நகைமுத்துக்கு அமிழ் தம்மை இளஞ்சேரல் என்ற குழந்தைகள் இருக்கின்றன. வில்லிய னூரில் வாழும் மாவரசன் மலர்க்குழலி குடும்பத்துக்கு நகைமுத்து, நாவரசு என்ற இரண்டு குழந்தைகள் உள்ளன. இஃது ''இரண்டே பெறுக இனிதே வாழ்க'' என்ற குடும்ப நலத் திட்டக் கோட்பாட்டுக்குச் சான்றாக அமைந்துள்ளன.

மக்கள் தொகைக் கல்வியில் முக்கியமான ஒன்று குடும்பக் கட்டுப்பாடு, ஆடவரும் பெண்டிரும் துய்க்கும் கல்வி இன்பத்திற்கு அச்சுறுத்தலாய் இருப்பது குழந்தைப்பேறு. இதனைத் தடுக்கக் கருத்தடை அவசியம் செய்து கொள்ள வேண்டும் என்று பாரதி தாசன் வலியுறுத்துகிறார். இதனை,

''நன் மக்கட் பேறு பற்றி
நானுரைப்ப - தொன்றுண்டாம்
ஈண்டு குழந்தைகள் தாம்
எண் மிகுத்துப் போகாமல்
வேண்டும் அளவே
விளைத்து, மேல் - வேண்டாக்கால்
சேர்க்கை ஒழித்துக்
கருத்தடை யேனும் செய்க
போக் கரு நோய் கொண்டால்
இருவரும் யாக்கை
ஒருமித்தால் ஐயகோ
உண்டாகும் பிள்ளை'' (குடும்ப விளக்கு ப.45)

என்று நன்மக்கட் பேற்றின் அவசியத்தைத் தெளிவுபடுத்துகிறார்.

குழந்தை எண்ணிக்கையைப் பெருக்காது, தற்காத்துக் கொள்ளக் கருத்தடை தேவை. குழந்தைகள் அதிகம் பெறுவது பெற்றோர்க்கும், நாட்டுக்கும் தீமை விளைவிக்கும். அளவோடு குழந்தைகள் பெற்றுக் குடும்பத்தைக் கட்டுப்படுத்தினால் பெற்றோர்கள் நீண்ட ஆயுளைப் பெறலாம். நிம்மதியான வாழ்க்கை வாழ முடியும்.

குழந்தைப் பேற்றிற்கு நல்ல உடல் வலுத் தேவைப்படு கிறது. வறுமை நோயோடு துன்பத்தை ஏற்படுத்தும். இந்நிலை யில் குழந்தைப்பேறு அவசியமில்லை. இதனைப் பாவேந்தர்,

''இருக்கும் பிள்ளைகள் எனக்குப்போதும் அம்மா - என்
கருக்கதவை மூடிவிடுங்கள் அம்மா, அம்மா!
இருக்கும் பிள்ளைகள்...

பெருத்தவரு மானம்-எனக்கில்லை - இனிப்
பிள்ளை பெறும் வலியும் உடம்பில் இல்லை.
வருத்தில் ஏதும் மீதம் ஆவதும் இல்லை - அடகு
வைத்து வாங்க மூக்குத் திருகும் இல்லை.
இருக்கும் பிள்ளைகள்...''

மக்கள் தொகைப் பெருக்கத்தால் வரும் பஞ்சம் - இங்கு
வரும் பஞ்சத்தால் ஒழுக்கக் கேடே மிஞ்சும்
தக்கோர் இவ்வாறு சொன்னார் (என்) நெஞ்சம்
தாங்குவதோ அருள்புரிவர் கொஞ்சம்
இருக்கும் பிள்ளைகள்.... (தேனருவி - ப.49)

கருத்தடை மருத்துவமனையில் பெண்ணொருத்தியின் உணர்வைப் பிரதிபலிக்கிறார். விருப்பப்பட்டுக் குடும்பக் கட்டுப்பாடு செய்து கொள்வது அனுபவ முதிர்வின் வெளிப்பாடு அதிக குழந்தைகள் பெறுவதால் தாயின் உடல் நலம் குன்றும். ''அடிக்கடி பிள்ளைப்பேறு அன்னையின் உடல் நலம் குன்றும். நலவாழ்வுத் துறையினரின் கருத்து. மக்கள் வளம் சிறக்கப் பொருளாதாரப் பலம் தேவை. மால்தூஸ் என்ற பொருளியல் வல்லுநர் ''மக்கள் தொகைப் பெருக்கல் விகிதத்திலும் உணவு உற்பத்தி கூட்டல் விகிதத்திலும் வளர்கின்றது'' என்று உலகப் பொருளாதாரத்தைக் கணிக்கிறார். மக்கட் பெருக்கத்தால் நாட்டில் உணவுப்பஞ்சம் வந்து, ஒழுக்கக்கேடு பெருகிவிடும். இதுபோன்ற மனிதயியல் சிந்தனைகளைப் பாமரப் பெண் வாயிலாகப் பாரதிதாசன் வலியுறுத்துகின்றார்.

மனிதருக்குக் கிடைக்கின்ற பேறுகளில் சிறந்தது மக்கட் பேறு. ஆண் குழந்தை பெறுவது குழந்தைப்பேற்றின் நிறைவாக எண்ணப்படுகிறது. இது மக்கள் தொகைப் பெருக்கத்திற்கு ஊன்று கோலாகிறது. இந்தச் சமூக அல்லலைக் கண்ணுற்ற பாவேந்தர்,

''பெண் குழந்தை பிறந்ததினி ஆண் குழந்தை ஒன்று
பிறக்குமா என்றிருந்தேன் மற்றொன்றும் பின் ஒன்றும்
பெற்றாள்'' (பாரதிதாசன் கவிதைகள்)

என்று நடுத்தரக்குடும்ப ஆணின் அறியாமையைப் புலப் படுத்துகிறார். நான்கு பெண் குழந்தைகளைப் பெற்றவள் ''தான்

உண்ணாது பிள்ளைகளைக் காக்கின்றாள். குடும்பக் கட்டுப்பாட்டுச் சிந்தனை இல்லாது மனக் கட்டுப்பாட்டோடு வாழலாம் என்று வாழ்கின்றனர். காதல் வீழ்ந்து ஐந்தாவது குழந்தையைப் பெறுகின்றனர். குழந்தைகள் நோய், வறுமை போன்றவற்றில் துன்புறும் நிலையை எண்ணிக் குடும்பத் தலைவன் வருந்துகின்றான் அவன்,

''காதலுக்கு வழிவைத்துக் கருப்பாதை சாத்தக்
கதவொன்று கண்டறிவோம். இதிலென்ன குற்றம்?
சாதலுக்கோ பிள்ளை? தவிப்பதற்கோ பிள்ளை?....''
(பாரதிதாசன் கவிதைகள்)

என்று வருந்துகின்றான். ஒன்று பெற்றால் ஒளிமயம் அதிகம் பெற்றால் அல்லல் மயம். அறியாமை அதிக குழந்தைப்பேற்றை ஏற்படுத்துகின்றது. குழந்தைகள் எண்ணிக்கை அதிகத்தால் அவதியுறும் ஆண்களின் மனநிலையை 'மாண்டவன் மீண்டான்', என்ற கவிதை வலியுறுத்துகின்றது.

மேற்கண்டவகையில் பாரதிதாசன் கவிதைகளில் மக்கள் தொகைக்கல்வி விழிப்புணர்வு பற்றிய செய்திகளை அறிய முடிகின்றது.

துணைநூல்கள்

1. பாரதிதாசன் - குடும்ப விளக்கு - மணிவாசகர் பதிப்பகம் 55, லிங்கி செட்டித்தெரு சென்னை. 1993
2. பாரதிதாசன் - தேனருவி - பூம்புகார் பதிப்பகம் சென்னை-108 1989
3. பாரதிதாசன் கவிதைகள் - மணிவாசகர் பதிப்பகம் 55, லிங்கி செட்டித்தெரு சென்னை. 1992.

நல்லூர் சா. சரவணன்
சென்னைப் பல்கலைக்கழகம்
சென்னை – 600 005

கற்பனையும் சமூகமும்

உணர்வு என்ற உயிராற்றலானது உடம்பில் பொருந்தி 'உணர்ச்சித் தன்மை உடையதாகிறது. தொழில் தன்மைகளால் நினைந்தும் சிந்தித்தும் நெஞ்சாயும் சிந்தையாயும் ஓரளவு விளங்கிக் கொள்ளப்படுகின்ற உயிர் அறிவின் பயன்பாட்டெல்லைகளால் விளக்கப்படும். பரிணாம அடிப்படையிலேனும் பரிமான அடிப் படையிலேனும் விளைந்து வந்த மனித அறிவானது ஒழுங்கு படுத்தப்பட வேண்டிய கட்டாயத்தை உடையது.

ஓரறிவு முதல் ஐந்தறிவு வரை ஐம்புலன்கள் வழிப் பெறப் படும் அறிவை வகை தொகை செய்து பார்க்கும் ஆறாவது அறிவு நிலையின் தன்மை மனித உயிர்க்கே வாய்த்திருக்கிறது. ஐந்தறிவு வரை புலன்களைப் பழக்கப்படுத்திய அறிவுக்களங்களுள் தாவரங்களும் விலங்குகளும் அடங்கும். ஐந்தாவதறிவின் பழக்கம் முற்றாக விலங்குப் பிறவியால் வாய்த்ததென்பது ஒப்பமுடிந்த கருத்து.

பரிணாமத்தால் ஐந்தை நிறைவு செய்தபின் வாய்க்கும் ஆறாவதான மனிதப் பிறவி, ஐந்தறிவை வகை தொகை செய்து மேலேற வேண்டியது. ஆனால், ஐந்தறிவின் மயக்கத்தில் ஆட்பட்டு விலங்குத் தன்மையுடனேயே மோதித் தன் வாழ் நாளைக் கழித்து விடுகிறது. அவ்வாறு பலப்பல பிறவிகள் கடந்த பரிமானம் மனிதப் பிறவிக்கு வாய்க்கும் போது ஒழுங்கு முறைகள் மெல்லமெல்ல வளர்கிறது. அவ்வாறு வளர்ந்த மனித நாகரீக வளர்ச்சி ஒழுக்கம்-பண்பாடு என விரிந்து மனித அறிவை நடத்தைத் தன்மையில் ஐந்தறிவுக்கும் மேலாக, பயன்பாட்டடிப் படையில் உயர்த்தியது. அதுவே தத்துவ அறிவாகக் குறிக்கோள் அடிப்படையில் மலர்கிறது.

ஐந்தறிவைக் கடந்தபின் மனித நிலையானது விலங்குத் தன்மை சாராமல் ஐந்தை ஒழுங்குபடுத்தல், குறிக்கோள்

அடிப்படையில் மேலும் அறிவால் உயர்தல் என இரு நிலைகள் பரிணாமங்கடந்தபின் மனிதப்பிறவிக்குரிய பரிமானமாவன.

மனித அறிவு தன்னுடன் இயற்கையை அதாவது ஓரறிவு உயிர்முதல் ஐந்தறிவு உயிர்களையும் பிற சடப்பொருள்களையும், இணைத்துக் காணும்போதுதான் வேறாக நின்று காணுகிறது. அவ்வாறு காணும்போது அவைகளில் குணங்களோடு இணைந்து விட்டால் மனித இனம் விலங்கினமாகும். ஆனால், காரண காரிய அடிப்படையில் அவற்றோடு இணையும் போது மேம்பட்ட பிறவியாகக் குறிக்கோள் அடிப்படையில் மலரும்.

கற்பித எண்ணம்

மனிதன் பிற ஒன்றோடு தொடர்பு கொள்ளும்போதுதானே கொள்ளும் எண்ணம் கற்பித எண்ணமாகிறது. இணைகிற அல்லது தொடர்புபடுகிறபோது புனையும் எண்ணங்கள் கற்பிதங்களாகின்றன. அந்த எண்ணம் 'உவமை' என்ற சொல்லால் வாழ்வியலுக்கான அடிப்படை இலக்கணமாக மொழியிலக்கணப் பயன்பாட்டில் வரையறைப்படுத்தப் பெறுகிறது.

''ஒரு பொருளுக்கு உவமையாக வேறொரு பொருளை எண்ணும்போது நாம் எந்த ஒரு பொருளுக்கு உவமை சொல்லப் போகிறோமோ அந்தப் பொருளை உவமை சொல்லும்பொருள் உயர்ந்ததாக அமைய வேண்டும்'' (பேராசிரியர் வை. இரத்தின சபாபதி, வீரசைவம், செ.ப.க., 1990, பக்.259-260) என்ற உரை ''உயர்ந்ததன் மேற்றே உள்ளுங்காலை'' என்ற தொல்காப்பிய உவமைஇயல் (நூற்பா-3) இலக்கணத்தை அடிப்படையாகக் கொண்டது. அதன்நுட்பத்தை பின்வருமாறும் உணரலாம்.

உவமையான பொருள் உயர்ந்தது. அதன் உயர்ந்த தன்மை உவமிக்கப்பட்ட பொருளில் காணப்பட்டது என்பது உண்மை. அந்த முறையே கற்பித எண்ணத்திற்கு அடிப்படை எனத் தமிழகத்துச் சிந்தனை தெளிவுபடுத்துகிறது. அஃதாவது எந்தப் பொருளைக் கண்டாலும் அதில் உள்ள உயர்ந்த தன்மை காணுவதே அடிப்படை என்பது. மேலும், அந்த அடிப்படையைக் கொண்டே உயர்ந்ததை முழுமையாகப் பெற வேண்டும் என்பதும் முறைமுறை வேண்டுவது. உயர்ந்ததைக் காணும் காட்சி காரண-காரிய உறவைக் காணும் காட்சியாகப் பொருளடிப் படைக்கு உதவுகிறது. அதுவே கற்பனை எனும் கற்பித எண்ணத்திற்கு அடிப்படை.

கற்பனைச் சமூகம்

நெப்போலியன், 'கற்பனையே உலகை ஆள்கின்றது' (உலக அறிஞர் சிந்தனைக் களஞ்சியம், வள்ளுவர் பண்ணை 1935, ப.166) என்றான். அக் கூற்றானது கற்பனையின் ஆற்றலை வெகுவாக எடுத்துக்காட்டுவது.

கற்பனை அடிப்படையில் ஒழுக்கங்களைக் கட்டிக்காக்கும் அமைப்பு வாய்க்குமா? என்பது வினா.

''வாழ்க்கைச் சுகங்கள் அதிகமாக ஆக, கலைகள் பூரணத்துவ மடைய அடைய, ஆடம்பரம் பெருகப்பெருக, உண்மையான வீரம் தேய்ந்து போகிறது; ஒழுக்கங்கள் மறைந்து போகின்றன'' என்று ரூஸ்ஸோ (சமுதாய ஒப்பந்தம், ப-12) கூறுவான். மனித வாழ்க்கையின் சுகங்களை முதலில் எடுத்துக்கொண்டு பேசு கிறான். வாழ்க்கைச் சுகங்கள் ஒழுக்க அடிப்படையில் இல்லாமற் போவதையும் சுட்டுகிறான். ஒழுக்க அடிப்படை இல்லாத வாழ்க்கை, 'கற்பனை' எண்ணமானது விலங்குத் தன்மையில் இணைந்து நின்ற தன்மையினது. அதன்வழிதான் கலைகளின் பூரணத்துவம் கருதப்படுகிறது என்ற உண்மையையும் அவன் முன் வைக்கிறான். கலைகள் பகுத்தறிவு வாழ்வியலையோ குறிக் கோளையோ காட்ட வேண்டும். ஆனால் அவை தம்மையே பூரணத்துவப்படுத்திக் கொண்டன என்பதால் கற்பனை கற்பனை யாகவே, காரண-காரிய; ஒழுங்கு இல்லாமல் பயன்படுத்தப்பட்ட அபாயத்தை அதன் மூலம் அறிவிக்கிறான். அவற்றை ஆடம்பர வாழ்க்கையின் எண்ணத்தில் விளைந்தவை என்றும் கூறுவான்.

''ஆடம்பர வாழ்க்கை இல்லாவிட்டால் கலை ஏது'' (மேல் நூல், ப.170) என்று கூறும் ரூஸ்ஸோ வாழ்வியல் கற்பனையில் மூழ்கிவிட்டதை உணர்த்துகிறான். ஆடம்பரவாழ்வு என்பது பரிணாமத்தில் வந்த ஐந்தறிவைப் போலியாக அழகுபடுத்துவ தாக அதன் வயப்படுவதாகவே அமைந்தது. அது வகை தொகை செய்த ஆறாவதாகிய ஒழுங்குபட்ட அறிவைக் காணாதது.

கற்பனை உலகு

எங்கும் இல்லா ஊர் என்ற பொருள் உடைய 'யுடோபியா' என்ற பெயரை நாவலுக்கு வைத்து 'யுடோபியா' என்ற தீவைப் படைத்துக் கற்பனையால் குறிக்கோள் உலகைக்கண்டவர் ஓர் ஆங்கில அறிஞர். ''நமது மண்ணிலே நம் போன்றவரே மாசு நீங்கிக் குன்றாத அழியாத நல்வாழ்க்கை நடத்த நன்கமைத்துக் கொண்ட களம்'' என அந்நூலையும் அதில் படைக்கப்பட்ட

ஊரையும் பாஸ்கரன் (கற்பனை உலகம், 1963) தம் அணிந்துரை யில் குறிப்பிடுவார். அவரே கற்பனை செயல்பற்றி, ''ஒருவன் கற்பனைத் திறன் அவன் கண்ட நலன்களை விரித்து அழகுற நீடிக்கச் செய்வதெப்படியென எண்ணத்தூண்டும்; அல்லது எதிர்மறையாக அவன் கண்டு வெறுக்கும் தீமைகள் அறவே அகன்ற ஒரு நிலையை எண்ணத் தூண்டும்'' என்று நன்மை ஆக்கமும் தீமை நீக்கமும் ஆகிய இருவகைச் செயல் நிலைகளை நோக்கிக் கற்பனை விரிய வேண்டுதலை விளக்குவார்.

கற்பனை உலகமாக மலர்ந்தனவே பிளேட்டோ கண்ட குடி அரசும், வில்லியம்ஹாரல் மார்க்ஸ் கண்ட புதிய குடிஅரசும் பிறர் கண்டனவும், அவர்கள் கண்ட உலகெல்லாம் குறிக்கோள் மக்களை-நாட்டைக் கண்ட கற்பனையிலானவை. அவ்வகைக் கற்பனைகள் காரண-காரிய; ஒழுங்கு அடிப்படையில் மலர்ந்து மனிதனைக் குறிக்கோளடிப்படையில் வாழ்விக்க மலர்ந்தவை.

கற்பனைப் போக்கு

இன்றைச் சமூகத்தில் பொருட்பார்வையில் கீழான பார்வையும், உலக நோக்கில் குறுகிய எண்ணமும் வெளிப்படுத்தப் படுகின்றன. மனிதனும் பிற உயிர்களும் சடப்பொருள்களும், காணப்படுகிறவனால் விலங்கியல் கற்பித அடிப்படையிலேயே காணப்பட்டு எண்ணங்கள் வெளிப்படுத்தப்படுமாறு கலைக் கூறுகள் அமைகின்றன. உலகந்தழுவிய கற்பனையோ குறிக் கோளைக் கொண்டிணைக்காமல் குறுகிய மனப்பான்மையைக் கொண்டதாக அமைகிறது.

''அருங்கற்பனை கற்பித்து ஆண்டாய்'' (திருவாசகம், கோயில் மூத்த திருப்பதிகம், பாடல்-7) என்று கூறும் மாணிக்கவாசகர்,

''நாம் போலறிவோம் என்று உள்ள பொக்கங்களே பேசும்'' (திருவாசகம், திருவெம்பாவை, பாடல்-5) நிலையில் மனித இன அறிவு அமைந்தமையைச் சுட்டுகின்றார். கற்பனை பொருளில் உயர்வையும் அருமையையும் காட்டிடல் வேண்டும். அதுவே குறிக்கோள் அடிப்படையில் இணைத்து ஆளுகை செய்வதாதல் வேண்டும். வாழ்வியல் குறிக்கோளும், குறிக்கோள் வாழ்க்கையும் இணைதற்கே கற்பனை வளப்படுதல் வேண்டும். உலகமோ, போல அறிகிறோம் என்று பொய்களை நோக்கிப் போகிறது...

சரளா இராசகோபாலன்
இராணிமேரி கல்லூரி
சென்னை

சிலப்பதிகாரமும் மாதவி காவியமும் - ஓர் ஒப்பீட்டாய்வு

''கற்ற தமிழ்த்தாய்க் கவின்மிகு மடியில்
உற்ற தமிழொளி! உயர்ந்த புகழொளி!
பாவேந்தர் பள்ளியில் பயின்ற பாட்டொளி!
நமக்கெலாம் இன்றும் நந்தா விளக்கொளி!

என்று கவிஞர் வல்லம் வேங்கடபதி பாவலர் ஒளியைப் புகழ்ந்துள்ளார்.

தமிழ் ஒளி பல்வேறு காவியங்கள் படைத்திருப்பினும் அவருக்குப் புகழ் தேடித் தந்த காவியம் 'மாதவி' காவியம் எனலாம். இக்காவியத்தின் சிறப்பு நோக்கி,

''நிலவை எடுத்துச் சலவை செய்து
உலவும் தென்றலில் உலர வைத்துப்
பாலில் தோய்த்துப் பளபளப் பாக்கிப்
பகலும் பின்னிடப் பகட்டுரு வாக்கி
வானெல்லாம் தகந்தக வண்ண மாகிட
வளர்ந்தது, புதுமை வளர்ந்தது, காணெனத்
தமிழக மெங்கும் தமிழொளி பரவத் தமிழொளிக்
கவிஞர் தான்படைத் தளித்தான்
மாதவி காவியம்; போதவிழ் ஓவியம்!

என்று புகழ்ந்துள்ளார் அக் கவிஞர் வேங்கடபதி.

ஆயிரத்து எண்ணூறு ஆண்டுகளுக்கு முன்னால் இளங் கோவடிகளால் இயற்றப்பட்ட சிலப்பதிகாரக் காப்பியத்தைப் பின் பற்றிப் பல வழிநூல்கள் தமிழகத்தில் தோன்றின. அவற்றுள் ஒன்று இருபதாம் நூற்றாண்டில் கவிஞர், தமிழொளியால் எழுதப்பட்ட மாதவி காவியம், இவ்விரு காவியங்களையும் ஒப்பாய்வு செய்யும் நிலையில் இக்கட்டுரை அமைந்துள்ளது.

அமைப்பு முறை

சிலப்பதிகாரம் புகார், மதுரை, வஞ்சி என்னும் மூன்று பெருங் காண்டங்களையும், 30 காதைகளையும் கொண்டு, அகவற்பாவால் இளங்கோவடிகளால் எழுதப்பட்டது.

மாதவி காவியம் புகார்க்காண்டம், பண்டிகைக்காண்டம், துறவுக் காண்டம் என்ற மூன்று காண்டங்களையும், பூர்வகாதை முதலாக துறவுக் காதை ஈறாக 27 காதைகளையும் கொண்டு 1155 பாடல்களில் பல்வேறு சந்தப்பாக்களில் கவிஞர் தமிழ் ஒளியால் அமைக்கப்பட்டது.

நோக்கம்

இரண்டாம் நூற்றாண்டின் சமுதாய நிலையைப் படம் பிடித்துக் காட்டுவது சிலப்பதிகாரம். அக்காலத்தில் நிலவிய பரத்தமைச் சமுதாயத்தின் படப்பிடிப்பாக அது அமைந்துள்ளது. ஆயினும் இளங்கோவடிகள் சேற்றில் பிறந்த செந்தாமரையாக மாதவி என்னும் கலைமகளைப் படைத்தார். சித்திராபதி என்னும் சிப்பிக்குப் பிறந்த ஒளி முத்தாகத் திகழ்ந்தாள் மாதவி. கலை மகளாம் மாதவியிலும் குலமகளாம் கண்ணகியையே தெய்வ மாக்கி அனைவரையும் தொழும்படிச் செய்தார். அதனால் தான் நூல் எழுதியதற்கான முப்பெருங் கொள்கைகளில் உரைசால் பத்தினியை உயர்ந்தோர் ஏத்தலைத் தலைசிறந்த கொள்கையாக்கினார்.

கவிஞர் தமிழொளி இருபதாம் நூற்றாண்டில் தோன்றியவர். தேவதாசிகள் ஒழிப்புச் சட்டம் கொண்டு வரப்பட்ட காலத்தில் வாழ்ந்தவர். குலமகளாம் கண்ணகியின் கற்பிற்குச் சோதனை ஒன்றும் தோன்றவில்லை. விலை மகளாம் மாதவி குலமகளாக வாழவேண்டும் என்று நினைத்தபோது அலர் தூற்றியது அக்காலச் சமுதாயம். இதை மணிமேகலை என்னும் காப்பியம் கூறுகிறது. அவளும், மகளும் கணிகையராக வாழாமல், தவமகளிராக வாழ நினைத்தபோது மக்கள் பழித்தனர்.

மாதவியின் கற்புள்ளமும், தவ வாழ்வும் கவிஞர் தமிழொளியை ஈர்த்தன. அவள் கோவலனிடம் கொண்ட காதலும், அவனைப் பிரிந்து துடித்த அவல வாழ்வும் அவரைத் தாக்கின. இதனால் மாதவி காவியம் தோன்றியது.

இளங்கோ கண்ணகியையும் தமிழ் ஒளி மாதவியையும் காப்பியத் தலைவியராக்கினர். இருவருமே தலை மகளிருக்கே சிறப்பளித்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

வேற்றுமைகள்

கவிஞர் தமிழொளி இளங்கோவடிகள் எழுதிய அடிப்படைக் கதையமைப்பை அவ்வாறே ஏற்றுக்கொண்டார். ஆனால் நிகழ்ச்சிகளிலும், பாத்திரப் படைப்புகளிலும் மாற்றம் பல செய்தார்.

1. இளங்கோவடிகள் சுருக்கிய நிகழ்ச்சியை விரிவாகக் கூறுதல்.
2. இளங்கோவடிகள் விரிவாக்கிய நிகழ்ச்சிகளைச் சுருக்கிக் கூறுதல்.
3. மாற்றம் செய்தல்
4. தெளிவாக்குதல்
5. புதிய நிகழ்ச்சிகளையும், பாத்திரங்களையும் உருவாக்கல் எனப் பல நிலைகளில் கவிஞர் தமிழொளி மாதவி காவியத்தில் மாற்றம் செய்துள்ளார்.

சுருக்கிய நிகழ்ச்சிகளை விரிவாகக் கூறல்

இளங்கோவடிகள் அறங்கேற்றுக் காதையில் மாதவியின் சிறப்பைக் குறிக்கும்போது,

''ஆடலும் பாடலும் அழகும் என்றிக்
கூறிய மூன்றின் ஒன்று குறை படாமல்'' (சிலம்பு 3:1-9)

என்று சுருக்கமாகக் குறித்தார்.

கவிஞர் தமிழ் ஒளி மாதவியின் அழகைப் பலபட விரித்தார். மாதவி காவியத் தலைவியாதலாலும், அழகுக்கு அழகு செய்வ தாலும், கோவலன் உள்ளம் கவரக் காரணமாதலாலும் அவளுடைய அழகு விரித்துரைக்கப்படுகிறது. பாணன் அவள் அழகைக் காணல், அவ்வழகைப் பற்றிப் பாணன் கோவலனுக்குக் கூறல், அழகைக் கேட்ட அளவிலே கோவலன் காதல் கொள்ளல் ஆகிய கதை வளர்ச்சிக்குக் காரணம் ஆவதால் விளக்கமாகக் கூறப்படுகிறது.

விரிவான நிகழ்ச்சிகளைச் சுருக்குதல்

இளங்கோவடிகள் காவியத் தலைவி கண்ணகியின் திருமணத் தில் காப்பியத்தைத் தொடங்குகிறார். மங்கல வாழ்த்துக் காதை முழுதும் கண்ணகி கோவலன் திருமணச் சடங்குகளை விவரிக்கிறது.

தமிழொளி பகுத்தறிவுச் சிந்தையர் இளங்கோவடிகள், பார்ப்பான் மறைவழிக் காட்டத் மணமக்கள் தீவலம் செய்யும் சடங்கு முறைகளைக் கூறியதை நீக்கிவிட்டார். அதனால்

''கோத்து முடித்தார் காண்
கோவலனை அக்கொடியில்'' (ப.24)

என மிகச் சுருக்கமாக முடித்துவிட்டார்.

மாற்றம் செய்தல்

அடிகளாரின் கருத்தினை ஏற்றுக்கொண்ட கவிஞர், சில மாற்றங்களைச் செய்கிறார்.

மாதவியின் நடனம் முடியாட்சியில் நடந்த வேத்தியல் நடனமாக உள்ளது. இதனால் பொதுமக்கள் பார்த்துத் தங்கள் கருத்தைக் கூறுவதாக அமைக்கவில்லை.

தமிழொளி குடியாட்சியில் வாழ்ந்தவர் மாதவியின் நடனத்தைக் குடிமக்கள் நன்கு புகழ்வதாக அமைத்தார்:

''இல் வளர்ந்த முல்லை
இசை வளர்ந்த சிற்பங்காண்!
கற்பனைகாண் என்றார்த்தார்'' (ப.49) என்று பாடுகிறார்.

தெளிவாக்குதல்

சிலப்பதிகாரத்தில் கண்ணகியை விட்டுக் கோவலன் சென்றமைக்கான காரணம் தெளிவாக்கப்படவில்லை. மாதவியின் நடன அரங்கேற்றத்திற்கும் அவன் சென்றதாகக் காட்டப்பட வில்லை. மாதவியின் பச்சை மாலை வாங்கி மாதவி மனை புகுந்தது மட்டுமே கூறப்படுகிறது.

தமிழொளி, கோவலன் மாதவியிடம் சென்றதற்கான பல காரணங்களை அமைத்துள்ளார். குழந்தைப்பேறு இன்மை காரணமாக அவன் கவலையுற்று அறம் திறம்பியதாகக் குறிக்கிறார்.

''இல்லிற் பிறந்த
இடரைக் கலைவாணர்
சொல்லிற் பிறந்த
சுவையால் தவிர்க்கின்றான்'' (ப)

என்றும்

கள்ளும் கனியும்
கலையும் கலந்தருந்திப்
புள்ளும் பொழிலும்
புதுவசந்தமும் ஆனான்'',

என்றும் குறிப்பிடுகிறார்.

புதிய நிகழ்ச்சிகளை உருவாக்குதல்

கவிஞர் தமிழொளி சிலப்பதிகாரக் கதையைப் பின்பற்றி எழுதியிருப்பினும் பல புதிய நிகழ்ச்சிகளைத் தன் கற்பனைத் திறனுக்கேற்ப அமைத்துள்ளார்.

கோவலனின் கல்வித் திறனை இளங்கோவடிகள் தீட்ட வில்லை. கவிஞர் தமிழ் ஒளி அவனைச் சிறந்த கல்வியாளனாகக் காட்டுகிறார். மாசாத்துவான், கோவலனின் கல்வியில் ஆர்வ முடையவனாகக் காட்டப்படுகிறான். மேலும் 'கோவலன் கல்வி பெறுதல், ''கல்வி நலன்' 'கற்கக் கற்க; கோவலன் பயிற்சி ஆகிய பகுதிகளையும் அமைக்கிறார். கவிஞரின் கல்வி வேட்கையை இதன் மூலம் அறிய முடிகிறது.

இலக்கியம் ஓர் ஆறு போன்றது. இது காலந்தோறும் வளர்ச்சியடையும். இந்த வளர்ச்சி சமுதாயத்தின் எண்ணங்களை எதிரொளிக்கும் வழிநூலாக அமையும். அதில், வாழும் காலத்தின் சிந்தனைகள் இடம்பெற்றே தீரும். இம்முறையில் உருவான தமிழொளியின் மாதவி காவியம் சிறப்புக்குரியது. இலக்கிய வாணர்களின் வரவேற்புக்கும் உரிமை உடையது.

ம. சரோஜா

தூத்துக்குடி

முந்தானை ஆயுதம் - உணர்த்தும் வாழ்வியல் உண்மைகள்

முன்னுரை

'கலை வாழ்க்கைக்காகவே' என்னும் கூற்றைத் தங்கள் படைப்புக்களின் வழி உண்மையாக்கி வருகின்றவர்களில் குறிப்பிடத்தக்கவர் ஆசிரியர் பாலகுமாரன் எனலாம். சமுதாயத் தேவைகளை உணர்ந்து அதற்கேற்பத் தன் படைப்புக்களின் கருப்பொருளை உருவாக்குபவனே சிறந்த படைப்பாளி எனக் கொள்ளலாம்.

வாழ்வியல் உண்மைகள்

வாழ்வியல் உண்மைகள் என்பவை மனித குலத்திற்குப் பொதுவானவை. எனினும் அவை நாட்டுக்குநாடு, காலத்துக்குக் காலம் சில பரிணாம வளர்ச்சியை, மாற்றங்களைப் பெறுவதில் தவறில்லை.

இருபத்தியோராம் நூற்றாண்டை நோக்கி வெற்றிநடை போடும் நாம், பல அறிவியல் விந்தைகளைச் சந்தித்து இருக்கி றோம். காலம் காலமாக ஒவ்வொரு நாட்டாரும் சிலமரபுகளைப் பேணி வருகின்றனர். நம்முடைய அறிவியல் சார்ந்த உலகம், இன்று சில வாழ்வியல் உண்மைகளை மறந்த நிலையில் பல சிக்கல்களைச் சந்தித்து, செய்வதறியாமல் திகைத்து நிற்கின்றது. இச்சிக்கல்களுக்குத் தீர்வு சொல்ல வேண்டிய கடமை படைப் பாளிகளுக்கு உண்டு.

'முந்தானை ஆயுதம்' என்ற நாவலில் ஆசிரியர் பாலகுமாரன் தற்காலசமுதாயம் மறந்துவிட்ட மனிதநேயம், கூட்டுக் குடித்தன முறை, இறை நம்பிக்கை போன்ற ஒருசில நல்ல வாழ்வியல் உண்மைகளைச் சுட்டிக் காட்டுகிறார்.

இறைநம்பிக்கை

பழங்காலத்தில் எந்தச் சமயம் சார்ந்தவர்களாக இருந்தாலும் இறைவன் மீது நம்பிக்கை வைத்து, தவறுகள் செய்யத் தயங்கினர். தவறு செய்தால் இறைவனால் தண்டிக்கப்படுவோம் என அஞ்சினர். இதனால் சில மூடப்பழக்க வழக்கங்களுக்கு ஆளானாலும் கூட, சமுதாயத்தில் அமைதி நிலவியது. ஆனால் இன்றோ மூடப்பழக்க வழக்கங்களை ஒழிப்பது என்ற நிலையில் இறை நம்பிக்கையும் மறந்தோடிவிட்டது.

இறைநம்பிக்கை வாழ்க்கைக்கு இன்றியமையாதது என்பதை, ஆசிரியர் நாவலில் சுட்டிக்காட்டுகிறார். திருமணமாகி, கணவனோடு புகுந்தவீடு செல்லும் மனோன்மணி அம்மன் கோயிலுக்குச் சென்று, பூச்சொரியலிட்ட பூவை, முந்தானையில் கட்டிக் கொண்டு செல்கிறாள். புகுந்த வீட்டில் பூமூட்டை அவளுக்குப் பாதுகாப்பாக அமையும் என நம்புகிறாள். அதைப் போலவே இறைநம்பிக்கை இல்லாத அவள் கணவனும், அம்மன் கோவிலில் தன்னையறியாமல் அம்மனை வணங்குவதாகக் காட்டுகிறார். மனோன்மணியின் அக்கா கலையரசி, வெங்கடேசன் இவர்கள் காதலும் கோவிலில் தான் தொடங்குகிறது. பேசுதல், இறைவன் சிலையைத் திருட முயலுதல் என்ற நிகழ்ச்சிகளை நகைச்சுவையோடு கூறினாலும், அங்கும் இறை நம்பிக்கையே எதிரொலிக்கிறது.

கூட்டுக்குடும்பமுறை

பெண்ணுரிமை என்ற நிலையில் இன்று பெண்கள் கூட்டுக் குடும்பமுறையை ஏற்றுக் கொள்ள விரும்பவில்லை. ஆனால், அன்பு, ஆதரவு இவைகளை இழந்து, பெற்றோர்களுடன் குழந்தைகளும் தனிக்குடித்தன வாழ்க்கையில் தவிக்கின்றனர்.

இந்நாவலில், கூட்டுக் குடும்ப முறையில் மகிழ்ச்சியாக வாழும் ஒரு குடும்பத்தைப் படம் பிடித்துக் காட்டுகின்றார் ஆசிரியர். புகுந்த வீட்டிற்குள் நுழைந்த ஒருசில நாட்களில் மனோன்மணி எல்லோரிடமும் நல்லபெயரைப் பெற்றுக் கொள்கிறாள். 'எங்கம்மாவ நல்லா தாங்கறேன்னு தெரியுது. எங்க வீட்ட, நிமித்தி வைக்கிறேன்னு தெரியுது' என்று கணவன் அவளைப் பாராட்டுகிறான். தன் கணவனின் இருதம்பிகளுக்கும் முன்நின்று திருமணம் முடித்து வைக்கிறாள். குடும்பத்தின் நன்மைகளுக்காகப் பாடுபடுகிறாள் மனோன்மணி. மாமியார் தனியாக வீட்டுவேலைகளைச் செய்யவேண்டும் என அவள்,

குழந்தை பெறுவதைக் கூடத் தள்ளி வைக்கிறாள். தனக்கு அடுத்தாற்போல வீட்டுப்பொறுப்பை ஏற்க மருமகள்கள் வந்த பின்னரே தாயாக நினைக்கிறாள். அந்தக் குடும்பத்தின் மகிழ்ச்சி யான சூழல், கூட்டுக்குடும்ப முறையின் நன்மைகளைச் சொல்வ தாக அமைகிறது.

மனிதநேயம்

மனிதர்கள் வாழும் இவ்வுலகில் இன்று மனிதநேயத்தைத் தேடவேண்டிய நிலை உள்ளது. சாலையில் விபத்தில் காயமுற்ற வரைக் காப்பாற்ற யாருமில்லை. இரயில் விபத்து நடந்த இடத்திலோ மனிதர்களை விட்டு, உடைமைகள் கைப்பற்றப் படுகின்றன. முதியோர் இல்லங்களும், கருணை இல்லங்களும் மலிந்து வருகின்றன. இவையெல்லாம் மனிதநேயம் மறைந்து வருவதன் அறிகுறிகளாம்.

ஆசிரியர் இந்நாவலில் மனித நேயம் மலர, மனோன்மணி பின்பற்றும் வழிமுறைகளாகக் காட்டுவன மிகவும் பயனுள் ளவை. 'என்ன வேணா பேசட்டும். நாம தர்மம் பண்ணுவோம். ஒண்ணுமே எதிர்பார்க்காத தர்மம் பண்ணுவோம்' என்று மனோன் மணி மற்றவர்களை ஊக்கப்படுத்துகிறாள். கிணற்றிலிருந்து மோட்டார் போட்டு, நீர் இறைத்து, ஏழைகளுக்கு இலவசமாகத் தண்ணீர் கொடுத்தனர். சேரி ஜனங்கள் அதனால் மிகவும் மகிழ்ந்தனர். பல்வலி, தலைவலி, வெட்டுக்காயம் போன்ற சிறு வியாதிகளுக்கு இலவசமாக மருந்துகளைக் கொடுத்தனர். இப்படிப்பட்ட உதவிகளுக்கு எதிர்ப்புகள் வந்தபோதும் அதைக் கண்டு தளர்ந்து விடவில்லை. மேலும் தாயின் பிறந்தநாளில் எல்லோருக்கும் உணவு பரிமாற நினைக்கின்றனர். 'இப்படித் தர்மம் பண்றதுனால எங்க வீட்டுக்குள்ளேயே ஒரு சந்தோஷம், ஒரு ஒற்றுமை, ஒருத்தர்மேல ஒருத்தர் மரியாதை அதிகமாயிடுச்சு. குத்தம் சொல்றது குறைஞ்சு போச்சு' எனறு மகிழ்கின்றனர்.

அடுத்து வர இருக்கும் மருமகள்களும் மனோன்மணியின் மனிதநேயச் செயல்களைக் கேள்விப்படுகின்றனர். அவர்களது சேவைகளும் தொடர்கின்றன. குழந்தைகளுக்கும் வயதானவர் களுக்கும் கேழ்வரகுக் கஞ்சி ஊற்றுகின்றனர். நிலத்தில் விளையும் கேழ்வரகையும், வீட்டு எருமை, பசுக்களின் பாலையும் பயன் படுத்தி உதவுகின்றனர். இந்த மனநிலை யாருக்கு வரும். தங்கள் தானத்தை புகுந்த வீட்டிலும் தொடர்கின்றனர். அதற்கு, பிறந்த வீட்டிலிருந்து வருஷத்துக்கு மூன்று மூட்டை கேழ்வரகு

வருகிறது. இங்குத் திருமணத்தால் மனிதர்களோடு மனிதர்கள் இணைகின்றனர். மனிதநேயமும் கிளைவிடுகின்றது. 'மனிதர் உணவை மனிதர் பறிக்கும் வழக்கம் இனியுண்டோ' என்ற கவிஞனின் வாக்கு நிறைவேறுகிறது. இந்த மனிதநேய மலர்ச்சி, நூற்றுக்கு ஐந்து குடும்பங்களில் இருந்தால் கூட நாடு அமைதி பெறும் என்பதில் ஐயமில்லை.

வாழ்க்கைக்குத் தேவையான இத்தகைய உண்மைகளைத் தன் நாவலின் கதைப்பொருளோடு கலந்து படைப்பதில் சிறந்தவர் ஆசிரியர் பாலகுமாரன், இவரின் அகல்யை, ஆசை எனும் வேதம், பயணிகள் கவனிக்கவும் போன்ற நாவல்கள், விதவைகள் மறுமணத்தை வலியுறுத்திப் பேசியவை. கை வீசம்மா கைவீசு, பந்தயக்குதிரை போன்ற நாவல்கள் பாரதிகண்ட புதுமைப் பெண்களைப் படைத்துக் காட்டியவை. அந்த வரிசையில் முந்தானை ஆயுதம் நாவலும் இணைகிறது.

சரோஜினி
எம். வி. எம். கல்லூரி
திண்டுக்கல்

ஆனந்தப் பையுளும் தாபத நீலையும் ஒரு பெண்ணின் நோக்கு

முன்னுரை

தமிழ்ச் சமுதாயம் கணவனை இழந்த பெண்களுக்குத் தனியான விதிகளைக் கற்பித்தது. கணவன் இறந்த செய்தியைக் கேட்டவுடனேயே உயிர்விடுகிற பெண் தலைக் கற்பினள் என்று போற்றப்பட்டாள். தானே போகாத உயிரை உடன்கட்டை என்ற பெயரில் போக்கிக் கொண்டவள் இடைக்கற்பினள் என்று சுட்டப்பட்டாள். கணவன் இறந்த பிறகும் ஏதோ சில கடமைகளுக்காக உயிர் வாழ்கிற பெண்கள் கடைக் கற்பினர் என்று கூறப்பட்டனர். கணவன் இறந்தபின் வாழும் பெண்ணின் வாழ்க்கை 'கைம்மை வாழ்க்கை' என்று பெயரிடப்பட்டது. இந்த வாழ்க்கைக்கு எனச் சமுதாயம் வகுத்துக் கொடுத்த விதிகள் கடுமையாக இருந்தன.

ஆனந்தப் பையுள், தாபத நிலை

பழைய இலக்கியங்களும் இலக்கணங்களும் கணவன் இறந்த பின் உயிரோடு இருக்கும் பெண்களின் துயரத்தையும் நிலையையும் படம்பிடித்துக் காட்டியுள்ளன. புறப்பொருள் வெண்பா மாலை புறத்திணைக்குரிய திணை, துறைகளைக் குறிப்பிடும்போது ஆனந்தப் பையுள், தாபத நிலை என இரண்டு துறைகளைக் கைம்பெண்கள் பற்றிய இலக்கணமாக அமைத்துள்ளன.

'கணவன் இறந்துவிட மூங்கிலையொத்த தோளினை உடைய இளம்பெண் மயங்கித் துயறுற்று வாழ்வது' ஆனந்தப் பையுள் என்னும் துறையாகக் குறிப்பிடப்படுகிறது. 'குருந்தம் மலரால் ஆகிய தலைமாலையை அணிந்த கணவன் இறந்தபின் கரிய பெரிய கண்களை உடைய பெண் பூண்ட கைம்மைக்

கோலத்தைக் கூறியது' தாபதநிலை என்னும் துறை என விளக்கம் கூறப்பட்டுள்ளது.

கணவன் இறப்பால் 'துயருற்று அழிந்தது' ஆனந்தப் பையுள் என்றும் 'கைம்மைக் கோலத்தைத் தாங்கி வாழ்ந்தது' தாபத நிலை என்றும் சான்றுகள் மூலம் அறிகிறோம். இந்த இரண்டு துறையிலும் அமைந்தனவாகப் புறநானூறு எட்டுப் பாடல்களைக் காட்டுகிறது. இவற்றுள் கணவனது இறப்பால் மனைவி வருந்தியனவாக அமைந்த பாடல்கள் மூன்று (புறம். 246, 247, 280). கணவன் இறந்ததால் மனைவி வாழ்ந்த துயர வாழ்க்கையைக் காட்டும் பாடல்கள் மூன்று (புறம். 248, 249, 250).

வாழ்வை மறுத்தல்

ஆனந்தப் பையுள் என்ற துறையினவாக அமைந்த பெருங்கோப்பெண்டு, மதுரைப் பேராலவாயனார், மாறோக்கத்து நப்பசலையார் ஆகியோரது பாடல்கள் கணவனை இழந்த பெண்களின் வாழ்க்கை மிகவும் துன்பம் தருவது என்ற செய்தியைத் தருகின்றன. பூதப்பாண்டியன் இறந்தபோது தீப்பாய முடிவெடுத்த பெருங்கோப்பெண்டு, அவளைத் தடுத்த பெரியவர்களிடம் 'நள்ளிரும் பொய்கையும் தீயும் ஓரற்றே' (புறம். 246) என்று அறிவிக்கிறாள். அவள் ஏன் இந்த முழவுக்கு வந்தாள் என்ற வினாவுக்கு விடையாக அடுத்த பாடல் தரும் செய்தி அமைந்துள்ளது.

'.....கடியுடை வியனகர்ச்
சிறுநனி தமிய ளாயினும்
இன்னுயிர் நடுங்கும்' (புறம். 247)

என்று மதுரைப் பேராலவாயனார் பெருங்கோப்பெண்டு தீப்பாய்வதற்கான காரணத்தைக் கூறுகிறார். கணவனுக்குப் பின் மனைவி தனித்து வாழுவது மிக்க துயரத்தைத் தருவது என்பதை மாறோக்கத்து நப்பசையாரும்

'கழிகல மகளிர் போல
வழிநினைந் திருத்த லதனினு மரிதே' (புறம். 280)

என்று கூறி ஆமோதிக்கிறார். இந்தத் துயர வாழ்க்கையை வாழ விரும்பாத பெண்கள் தீப்பாய்ந்து தற்கொலை செய்து கொள்ள முடிவெடுத்துள்ளனர்.

கணவனுடன் இறப்பவர்களுக்கு வீடுபேறு கிடைக்கும் என்ற கற்பித்தல், தானே போகாத உயிரை உடன்கட்டை ஏறி

போக்கிக் கொள்கிறவர்கள் இடைக்கற்பினை உடையவர்கள் என்ற நற்சான்று அளித்தல், மறுபிறவியில் தன் கணவனோடு சேர்ந்து வாழலாம் என்ற நம்பிக்கையூட்டல் இவற்றால் கண வனை இழந்தவுடன் தாங்களும் உடன்கட்டையேறி உயிர்விடத் துணிந்துள்ளனர் என்று கூறப்படுகிறது. பெண்கள் விரும்பியே உடன்கட்டை ஏறினர் என்ற செய்தியும் கூறப்படுகிறது.

சாவை ஏற்றல்

கணவனுடன் உயிர்விடுகிற பெண்கள் கற்பை நிரூபிக்க அல்லது கடவுளை அடைய என்ற காரணங்களில் எதைச் சொன்னா லும் அது கற்பனையே. ஆனால் தாங்களாக முடிவெடுத்துத் தங்கள் வாழ்வை முடித்துள்ளனர் என்பதற்குப் பூதப்பாண்டியன் மனைவி பெருங்கோப்பெண்டு தீப்பாய்ந்தது ஒரு அழுத்தமான சான்று. அவள் தீப்பாய்ந்த போது சான்றோர் பலர் அங்கு இருந்திருக் கின்றனர். அவளைத் தடுக்கவும் செய்துள்ளனர். பிறர் வற்புறுத் தலின் பேரிலோ அல்லது மற்றவர்கள் விருப்பத்திற்காகவோ அவள் தீப்பாயவில்லை. மாறாகத் தன்னைத் தடுத்தவர்களை

'பல்சான்றீரே பல்சான்றீரே
செல்கெனச் சொல்லாது ஒழிகென விலக்கும்
பொல்லாச் சூழ்ச்சிப் பல்சான்றீரே!

என்று அழைத்து, தான் வாழ விரும்பாத காரணத்தையும் சாவும் தீயும் தனக்குத் துன்பமாகத் தெரியவில்லை என்றும் மரணவாக்கு மூலம் கொடுத்துள்ளாள். 'நானே விரும்பி சாகிறேன்' என்பது அவள் கொடுத்த கடைசி வாக்குமூலம்.

உடன்கட்டை என்ற சமூக நிகழ்வு பெண்களது விருப்பத்தா லேயே நடந்துள்ளது. இந்தத் தற்கொலையை வேண்டாமென்று மென்மையாகச் சொல்லிவிட்டு ஒதுங்கி நின்று வேடிக்கை பார்த் துள்ளனர் சான்றோர். முற்றிலுமாகத் தடுக்கும் சக்தி அவர்களிடம் இல்லை. இதற்குக் காரணம் என்னவாக இருக்கும்?

தற்கொலைக்குக் காரணம்

ஒரு சமூக நிகழ்வுக்கான காரணிகள் அந்தச் சமூகத்தினுள் ளேயே இருக்கும் என்பர் சமுதாயவியலார். ஒரு நிகழ்வு எந்தக் காரணமும் இல்லாமல் அப்படியே நிகழ்ந்து விடாது. விளைவு என்பது நடைமுறை உண்மை விளைவுக்குரிய காரணம் கட்டாயம் இருக்கும் என்கிறார் மாக்ஸ் வெப்பர்.

இந்தக் கருத்தின் அடிப்படையில் மிகப் பழங்காலத்திலிருந்தே தமிழ்ச் சமுதாயத்தில் நிகழ்ந்துவரும் 'உடன்கட்டை' என்ற வழக்கத்திற்குச் சமகால காரணங்கள் உண்டு என்று கூறமுடியும். பெருங்கோப்பெண்டு தான் விரும்பிச் செய்த தற்கொலைக்கான காரணத்தையும் சேர்த்தே கூறுகிறாள்.

'நெய் கலவாத இலையோடு கலந்து கிடக்கும் சோற்றைக் கையால் பிழிந்து வைத்து எள்ளின் சாந்தும் புளியும் சேர்த்துச் சமைத்த வேளைக் கீரையையும் கூட்டி உண்ணும் உணவையும் பருக்கைக் கற்கள் மீது பாய்கூட இல்லாமல் தூங்கும் தூக்கத்தையும் துயரத்தோடு அனுபவிக்கும் கைம்பெண்டிர் அல்ல நாங்கள்' என்று தனக்கு மட்டுமல்லாமல் தன்னைப் போன்று தற் கொலைக்கு முடிவெடுக்கும் பெண்கள் அனைவருக்கும் சேர்த்து 'வாழவிரும்பாத' காரணத்தைச் சொல்கிறாள்.

'துயர வாழ்க்கை வாழ விரும்பவில்லை' என்று பெருங் கோப்பெண்டு சொன்னதையே 'ஆம்' என்று பிறகும் அங்கீகரிப் பது போன்று பாடியுள்ளனர். 'சிறுநனி தமியளாயினும்' என்ற மதுரைப் பேராலவாயனார் 'கணவன் இறந்தபின் கணநேரம் வாழ்ந்தால் கூட உயிர் நடுங்குகிற துயரம்' பெண்ணுக்கு உண்டு என்பதை ஆமோதிக்கிறார். 'வழிநினைந்திருத்தல்' துன்பமானது என்று கூறும் மாறோக்கத்து நப்பசலையாரும் நினைத்தாலே துன்பம் மிகும் வாழ்வு என்கிறார். 'பிற்கால விளைவை நினைத்து வாழுவது' என்று 'வழிநினைந்திருத்தல்' என்பதற்கு உ.வே. சா. (புறம். 280 உரை) குறிப்பு எழுதியுள்ளார்.

ஆக, கணவன் இறந்தபின் ஒரு சிறிது நேரம் வாழ்ந்தால் கூட உயிரே நடுங்குகிற அளவுக்குத் துன்பம் தருகிற வாழ்க்கையை நினைத்துப் பார்த்து, அஞ்சியே தீப்பாய்தல் என்னும் தற் கொலைக்குத் தயாராகியுள்ளனர்.

கைம்மை வாழ்க்கை என்ற பெயரில் பெண்களுக்கு இந்தச் சமுதாயம் வலியுறுத்திய வாழ்க்கை முறையைத் 'தாபதநிலை' என்று பெயரிட்டு அழைத்துள்ளனர். இதனை ஆனந்தப் பையுள், தாபநிலைத் துறைப் பாடல்கள் படம்பிடித்துக் காட்டுகின்றன.

தாபதநிலை என்று பெயரிட்டு, பெண்களே ஏற்றுக் கொண்டது போன்று காட்டப்பட்டுள்ள விதவை வாழ்வு எல்லா வகையிலும் அவளைப் பாதித்துள்ளது. உணவு, உடை, உறையுள் என்று கூறப்படும் சாதாரண குடிமக்களின் அடிப்படைத் தேவை களுக்குக் கூட அனுபவிக்கும் உரிமை மறுக்கப்பட்டுள்ளது.

ஆம்பல் மலரின் அல்லியிலிருந்து கிடைக்கும் புல்லரிசி சோறும் வேக வைத்த வேளைக் கீரையும் உணவாக அனுமதிக்கப் பட்டிருந்தன. பெருங்கோப்பெண்டு மன்னன் உயிரோடிருந்த காலத்தில் நெய்யுடை அடிசில் சாப்பிட்டிருக்க வேண்டும். அதனால்தான் 'நறுநெய் தீண்டா தடையிடைக் கிடந்த கைபிழி பண்டம்' உணவாக அமைவதை வெறுக்கிறாள். 'வாய்க்கு ருசியாக' என்பது மறுக்கப் பட்டு 'வயிற்றுக்கு ஏதோ' என்ற அளவில் உணவை அனுமதித் துள்ளனர்.

அடிப்படைத் தேவைக்கு மறுப்பு

மனித உடலின் சீரான வளர்ச்சிக்கும் உயிர் வாழ்விற்கும் சரி விகித உணவு தேவை என்கிறது அறிவியல். உடலுக்குச் சக்தியைத் தருகின்ற மாவுச் சத்து (Carbohydrate), கொழுப்புச் சத்து (Fat) ஆகியவையும் உடலின் வளர்ச்சிக்குத் தேவையான புரதச் சத்து (Protein), தாது உப்புக்கள் (Minerals) ஆகியவையும் உறுப்புக்களின் செயல்பாடுகளைச் சமமாக வைத்திருக்கும் ஊட்டச்சத்தும் (Vitamins) ஒவ்வொரு மனிதருக்கும் தேவை. அறிவியல் துறைகள் அனைத்திலுமே மிகப் பழங்காலத்திலேயே துறைபோனவர்கள் என்று போற்றப்படுகிற தமிழ்ச் சான்றோர்களுக்கு இந்தச் செய்தி தெரியாமலிருக்காது. உணவுப் பொருளின் ஒவ்வொரு அம்சத்தையும் ஆய்ந்து ஆய்ந்து பரிந்துரைத்துள்ள அவர்கள் கணவனை இழந்தவளது உணவை மட்டும் கட்டுப்படுத்தியுள்ளனர். புல்லரிசி சோறும் உப்பின்றி வேகவைத்த வேளைக் கீரையும் எந்த அளவு சக்தியையும் வளர்ச்சியையும் பெண்ணுக்குத் தந்திருக்கும்.

முடிவுரை

பெண்கள் கணவனை இழந்தவுடன் விரும்பியே தீப்பாய்ந் துள்ளனர். மேலுலகம், மறுபிறப்பு, கற்பு ஆகிய கற்பித்தல்கள் இருந்தாலும் அவற்றையெல்லாம் விடக் கைம்மைக் கொடுமைக்கு அஞ்சியதால் நிகழ்ந்த 'தற்கொலைகளே அவை. விதவைக் கொடுமைக்குக் காரணமான சமுதாயம் அதைத் தளர்த்த விரும் பாததால் உடன்கட்டை ஏறுவதை உடனிருந்தே நிகழ்த்தியுள்ளது. பெண்ணின் உணவு, உடை, உறையுள் ஆகிய அடிப்படைத் தேவைகளையே அங்கீகரிக்காத நிலையில் வாழ்வா? சாவா? என்ற மனப்போராட்டத்தில் மரணம் மகிழ்ச்சி தந்துள்ளது. தற்கொலை முயற்சியே தவறு என்று கூறும் சமுதாயம் பெண் என்பதால் 'தற்கொலையை' அங்கீகரித்ததால் நிகழ்ந்த நிகழ்வு உடன்கட்டை ஏறுதல் அல்லது இதைக் கூறும் ஆனந்தப் பையுள் துறை நிகழ்வு அல்லது விளைவு. தாபத நிலை அந்த விளைவுக்கான காரணம்.

சா. சவரிமுத்து
சென்னைக் கிறித்துவக் கல்லூரி
சென்னை

கதைப் பாடல்கள் வழி அறியலாகும் சாதீப் போராட்டம்

'யாதும் ஊரே யாவரும் கேளிர்', 'ஒன்றே குலம் ஒருவனே தேவன்', 'சாதிகள் இல்லையடி பாப்பா', இவை புலவர்களால் எழுதப்பட்ட படிப்பினைகள். இலக்கியம் படைத்தவர்கள் தங்களுடைய எண்ணத்தை இவ்வாறு கூறினர்; இதுபோன்று மனிதன் வாழ வேண்டும் என்று விரும்பினர்; ஆனால் மனிதன் ஒன்று பட்டு வாழத் தவறிவிட்டான். தமிழர்களின் நிலையை - வரலாற்றை இலக்கியங்களின் வழியாக அறிய விரும்புவதால், முற்காலத்தில் தமிழர்கள் எந்தப் பாகுபாடுமின்றி இருந்தனரா? இல்லையா என்ற வினாக்களை எழுப்புவதாய் அமைகின்றது. தமிழ் இலக்கிய வரலாறு தமிழர் வரலாறாகுமா? இது சிந்திக்கத் தக்கது. தமிழர் வரலாற்றைக் கூறுவதாக இலக்கியங்களை அணுகுவது தமிழர்களுக்கென்று இதுவரை தெளிவான வரலாறு எழுதப்படாததே - கிடைக்காததே காரணமாகும். இலக்கியத்தின் வழியாகத் தமிழர் வரலாற்றை முற்றிலும் வரையறுக்க முடியாது. இன்றைய சூழலில் எண்ணற்ற கவிதைகள், காப்பியங்கள், கதைகள், நாவல்கள் தோன்றியுள்ளன. இவற்றை மட்டுமே தரவுகளாகக் கொண்டு இன்னும் ஐந்நூறு ஆண்டுகளுக்குப்பின் தமிழர் வரலாறு இப்படித்தான் இருந்தது என்று வாதிடுவது தவறல்லவா? அதுபோன்றுதான் தமிழ் இலக்கியங்களை மட்டுமே முக்கியத்தரவுகளாகக் கொண்டு தமிழர் வரலாற்றை வரையறுக்க நாட்டுப்புற வழக்காறுகளும், உதவக் கூடியது. ஏனெனில் இவை வழிவழியாகத் தொடர்ந்து வாழ்ந்து வருபவை; இன்றும் மக்களிடையே வாழ்ந்து கொண்டிருப்பவை.

சாதிப்பாகுபாடுகள் சங்க காலத்தில் இல்லை என்றோ இருந்ததாகவோ கூறுவதற்கான சான்றுகள் இலக்கியங்களில் முறையாகக் கிடைக்கவில்லை. அங்கொன்றும் இங்கொன்றுமாக

வரும் வேறுபாடுகளைப் பற்றிக் கூறுவதாகத் தெரியவருகிறது. அச்சான்றுகளும் புலவர்கள் போட்டிபோட்டு அரசர்களைப் புகழ்ந்துபாடிய இலக்கியங்களிலும் சமயக் காப்பியங்களிலுமே கிடைக்கின்றன. தான் சிறந்த புலவனாக மதிக்கப்படப் - போற்றப் பட வேண்டும் என்ற நோக்கத்தையே அடிப்படை யாகக் கொண்டு இலக்கியங்களைப் புலவர்கள் எழுதியுள்ளனர். இத்த கைய இலக்கியங்களில் கூறப்பட்டுள்ள கருத்துகள் அனைத்தும் தமிழர் தத்துவங்களாகவோ, தமிழர் வரலாற்றுச் சான்றுக ளாகவோ இருக்க முடியாது. ஏனெனில் புலவர் தம் கற்பனையின் மிகுதிச் செல்வாக்கைப் பயன்படுத்திப் படைக்கும் ஒரு இலக்கியம், அவரது படைப்புத் திறனை வெளிப்படுத்துவ தாகவே அமையும். அதற்காக அவர் கூறியதெல்லாம் உண்மை யின் அடிப்படையில் மட்டுமே எழுதப்பட்டவை; அவையே தமிழர் வரலாற்றுக் கருவூலங்கள் என்று கருதுவது சிறப்பன்று. ஆனால் மனித இனத்தில் ஏதோ ஒரு வகையில் ஏற்றத் தாழ்வுகள் இருந்திருக்கின்றன என்பதை மட்டும் யாரும் மறுக்கவோ மறைக்கவோ முடியாது.

கதைப் பாடல்கள் வழி - சாதிப்போராட்டம்

உண்மை நிகழ்ச்சிகளை அடிப்படையாகக் கொண்டு மரபாக எடுத்துரைக்கப் பட்டு நிகழ்த்தப்பட்டு வருபவைக் கதைப்பாடல் களாகும். இக்கதைப் பாடல்களில் மையக்கருவாக அமைவது பெரிதும் சாதிப் போராட்டங்களேயாகும். திருமண முறையில் தமிழகத்தில் ஏற்பட்ட சாதிப் போராட்டங்களைக் கதைப் பாடல்கள் வழியாக அறிய முடிகிறது. இவ்வகையில் நிகழ்த்து தலை அடிப்படையாகக் கொண்டு பாடப்பட்டுவரும் காத்தவ ராயன், முத்துப்பட்டன், மதுரைவீரன், மிக்கேலம்மாள், முத்து ராமலிங்கத் தேவர், இம்மானுவேல் சேகர் ஆகிய கதைப் பாடல்கள் வழியாகத் தமிழகத்தில் நிகழ்ந்த சாதிப் போராட்டங் களை ஓரளவிற்கு இக்கட்டுரை விளக்க முயல்கிறது.

சாதிப் போராட்டத்தால் உயிரிழந்த கதைப்பாடல் தலைவர் கள் தெய்வங்களாக மாற்றப்பட்டுள்ளனர். தெய்வங்களின் தோற்றம் பற்றிக் கூறும்போது மக்களின் முன்னோர்களே தெய்வங்களாக மாற்றப்பட்டுள்ளனர். இறந்தவர்களின் ஆவியை யும் மக்கள் வணங்கி வந்தனர்; நடுகல்லையும் தெய்வமாக்கி யுள்ளனர் என்பர் (துளசி. இராமசாமி, 1985; 108) இந்த அடிப் படையிலேயே பிராமணர்களின் கொடுமையால் கழுமரம் ஏற்றப் பட்டு உயிரிழந்த காத்தவராயனும், உயர்சாதி இந்துக்களாகிய

கள்ளர், நாயக்கர்களால் வெட்டப்பட்டு உயிரிழந்த மதுரை வீரனும், கீழ்சாதிப்பெண்ணை மணந்த முத்துப்பட்டனும் தெய்வங்களாக மாற்றப்பட்டுள்ளனர். தெய்வ நிலை பெறாதவர் களின் கதைப் பாடல்களும் தமிழகத்தில் நிகழ்த்தப்பெற்று வருகின்றன; இப்பாடல் தலைவர்கள் சாதிப்போராட்டத்தால் மடிந்தவர்கள் அல்லர் என்பது குறிப்பிடத்தக்கது.

பார்ப்பனர் - தாழ்த்தப்பட்டோர் போராட்டம்

காத்தவராயன் கீழ்சாதியாகக் கருதப்பட்ட பறையர்' சாதியைச் சேர்ந்தவன். அவன் உயர்சாதி பார்ப்பனப்பெண் ஆரிய மாலையைத் திருமணம் செய்து கொண்டான். பிராமணர்களின் ஆதிக்கத்தால் கழுமரத்தில் ஏற்றப்பட்டுக் காத்தவராயன் கொலை செய்யப்பட்டான். இதுவே காத்தவராயன் கதைப் பாடலின் கதைக் கருவாகும். கீழ்சாதியைச் சேர்ந்தவன் உயர்சாதிப் பெண்ணைத் திருமணம் செய்து கொள்ளக் கூடாது என்று வேதங்களில் கூறியுள்ளதால் காத்தவராயன் கொல்லப்பட்டான் என்று கதைப்பாடல் கூறுகிறது. காத்தவராயன் முற்பிறவியில் ஆரிய மாலையின் சித்திமுறை மகனாக இருந்தான்; அவன் இப் பிறவியில் ஆரியமாலையைத் திருமணம் செய்துகொண்டது தவறாகும் என்று மற்றோர் காரணமும் கூறப்படுகிறது. காத்தவ ராயன் முற்பிறவியில் பிராமணனாகப் பிறந்தான் என்றும் பாடப் படுகிறது. காத்தவராயன் செய்தது குற்றமாகும் என்று பிராமணர் கள் அரசனிடம் முறையிடவே காத்தவராயன் கழுவேற்றப் பட்டான் என்றும் பாடப்படுகிறது. காத்தவராயன் கொலை செய்யப்பட்டதற்கு மேற்கண்ட காரணங்கள் இருப்பதாகக் கதைப் பாடலில் கூறப்படுகிறது. இவையெல்லாம் சாதியை மறைப்ப தற்காக நிகழ்ந்த போராட்டமாகும். காத்தவராயன் காலத்தில் 'பறையர் சாதியினர் குறைவாக இருந்திருக்க வேண்டும். பிராமணர்கள் அவர்கள் மீது ஆதிக்கம் செலுத்தியிருந்திருக்க வேண்டும். அதனால் பறையர்கள் கீழ்சாதியினராக மதிக்கப் பட்டனர். உயர்சாதி இந்துக்கள் பிராமணர்களுடன் சேர்ந்து கொண்டனர். தம்முடைய சாதிக்குள்ளும் இதுபோன்றதொரு நிகழ்ச்சி நடந்துவிடக்கூடாது என்ற நோக்கத்தில் உயர்சாதி இந்துக் கள் பிராமணர்களுடன் இணைந்து காத்தவராயனைக் கழுமரத்தில் ஏற்றுவதற்கு உதவியிருக்கின்றனர். பறையர் சாதியினர் குறைவாக இருந்ததால் அவர்களால் காத்தவராயனைக் காப்பாற்ற முடிய வில்லை. மேல் முறையீட்டு வாதங்களை மேல்சாதியினர் மீது செலுத்த முடியவில்லை; அதனால் காத்தவராயன் கொல்லப்பட்டான். காத்தவராயனைப் பிராமணனாக மாற்ற

முற்பட்டதற்குக் காரணம், பிராமணர்கள் தங்கள் சாதிப்பெண் செய்த தவற்றை மறைப்பதற்காகச் செய்த முயற்சியேயாகும். ஏனெனில் உண்மையில் காத்தவராயன் பிராமணனாக இருந்திருந் தால் அவன் ஆரியமாலையைத் திருமணம் செய்து கொள்ள எவ்விதத் தடைகளும் இருந்திருக்க வாய்ப்பில்லை; கதைப் பாடலும் தோன்றியிருக்க முடியாது. முற்பிறவிக் கொள்கையைக் கொண்டு காத்தவராயனைக் குற்றவாளியாக்க முற்பட்டதும் பிராமணர்களின் சமயக் கோட்பாடேயாகும். காத்தவராயன் வாழ்ந்த இனக்குழு மிகுதியாக இருந்திருந்தால் அவன் கொலை செய்யப்பட வாய்ப்பின்றிப் போயிருக்கும். சாதிப் பாகுபாட்டால் திருமணம் செய்வதற்குத் தடைவிதித்தவர்கள் உயர்சாதியினர்; சட்டமியற்றியவர்களும் இவர்களே, சாதிக் கொடுமையினால் காத்தவராயன் கொலையுண்டான்; மக்களை இந்த அவலம் தாக்கியது; செய்தியைப் பரப்ப விரும்பினர்; பாடலாகப் பாடினர்; கதைப்பாடலாக மாறியது. அன்றைய கால கட்டத்தில் கலைஞர் களாக வாழ்ந்தவர்கள் தங்கள் கலையுடன் இப்பாடலைப் பாடிவந்தனர். அப்போதுதான் பல மாற்றங்களைப் பிராமணர்கள் புகுத்தினர். ஆனால் உண்மைச் செய்தியை - நடந்த நிகழ்ச்சியை அவர்களால் மறைக்க முடியவில்லை. வழிவழியாக இன்றளவும் காத்தவராயன் கதையை உடுக்கடிப் பாட்டாகப் பாடி வருகின்றனர்.

முத்துப்பட்டன் கதை சற்று வேறுபட்டது. முத்துப்பட்டன் பிராமணச் சாதியைச் சேர்ந்தவன். அவன் சக்கிலியச் சாதியைச் சேர்ந்த வாலப்பகடையின் மகளிர் பொம்மக்கா, திம்மக்கா ஆகிய இரு வரையும் திருமணம் செய்துகொண்டான். சக்கிலியர் கீழ்சாதியாகக் கருதப்பட்டனர். கீழ்சாதிப் பெண்களைத் திருமணம் செய்து கொண்ட தால் உயர்சாதிப் பிராமணர்களால் முத்துப்பட்டன் ஒதுக்கப்பட்டான்: சக்கிலியனாக வாழ்ந்தான்; சக்கிலியத் தொழிலைச் செய்தான். வாலப் பகடையின் மாடுகளைச் களவு செய்ய வந்தவர்களைப் போரிட்டு வீழ்த்தினான். அப்போரில் மறைந்துநின்ற ஒருவனால் முத்துப்பட்டன் குத்திக்கொலை செய்யப்பட்டான் என்பதே முத்துப்பட்டன் கதைப் பாடல் செய்தியாகும். முத்துப் பட்டன் கீழ்சாதிப் பெண்களைத் திருமணம் செய்து கொண்டதாலே குத்திக் கொலைசெய்யப்பட்டான்; அந்த அவலமே கதைப்பாடலாக மாறியது.

தொகுப்புரை

சாதிப்போராட்டம் இரு குழுக்களுக்கிடையே நடந்து வருகிறது. சாதி வேறுபாட்டால் தாழ்த்தப்பட்ட இனத்தினர் கொடுமைப்

படுத்தப்பட்டுள்ளனர். சாதிமுறையைத் தோற்று வித்தது ஒரு சாதியினரே என்பது பொருத்தமற்றது. சாதியை விட்டு மனிதன் பிரிந்து - தனித்து வாழ முடிவதில்லை. சாதிப் போராட்டம் உயர்ந்தோர் - தாழ்த்தப்பட்டோரிடையே அன்று முதல் இன்றுவரை நடந்து வருகிறது. கதைப் பாடல்கள் தோற்றம் பெறுவதற்கும் பரவுவதற்கும் சாதிப்போர் காரணமாய் அமைந்திருக்கிறது. தமிழகத்தில் நிகழ்த்தப் பெற்றுவரும் கதைப்பாடல்கள் அனைத்திலும் சாதிப் போராட்டம் தாழ்த்தப்பட்டோ ரிடையே குறிப்பாகப் பள்ளர், பறையர், சக்கிலியர் சாதியிடையே நடந்துள்ளது; அவர்களே ஒடுக்கப்பட்டவர்களாக வாழ்ந்திருக்கின்றனர். உயர்ந்தோர் மேலும் உயர்ந்தனர். தாழ்ந்தோர் மேலும் தாழ்ந்த நிலைக்கே தள்ளப்பட்டுள்ளனர். திருமண முறையினை அடிப்படையாகக் கொண்டே கதைபாடல்களில் சாதிப் போராட்டம் நடத்தப்பட்டுள்ளது. அதனால் கதைப்பாடல் நிகழ்ச்சிகளில் பல்வேறு மாற்றங்கள் புனையப் பெற்றுவிட்டன. இன்று கீழ்ச்சாதிக்காரனை உயர்சாதிப் பெண்கள் திருமணம் செய்து கொள்கின்றனர்; இருந்தும் தங்கள் சாதிப்பாகுபாட்டை - உயர்வைக் குறைத்துக் கொள்ள விரும்புவதில்லை. இங்குப் பெண் ஒரு மேல் சாதி உடமைப் பொருளாகவே இருக்கிறாள். ஒவ்வொரு சாதிக்காரனும் தன்னுடைய சாதியை உயர்ந்ததாகவே நினைத்து வாழ்ந்து வருகிறான். உயர் சாதியினர் தங்கள் சாதிப்பாகுபாட்டை என்றும் குறைத்து மதிப்பிடுவதில்லை. கீழ்ச்சாதிக்காரன் உயர் சாதிப் பெண்ணைத் திருமணம் செய்துகொள்வதை வீரம் என்று கருதியதாகக் கதைப் பாடல்கள் வழி அறிய முடிகிறது. அதே வேளை இதனை உயர்ந்த சாதிக்காரன் ஊழ்வினை, பூர்வஜென்ம பாவமாக்கிக் கொள்கிறான். இது அவனுடைய சாதியை உயர்ந்த சாதியாக்கவே - நிலைத்த சாதியாக்கவே செய்யப்படும் சாதி வெறியாக உள்ளது. பார்ப்பனர்கள் உயர்ந்த சாதியாக மதிக்கப்பட்டுள்ளனர். இவர்களுக்கு உயர் சாதி இந்துக்கள் துணையாக இருந்திருக்கின்றனர். ஆகவே தாழ்த்தப்பட்ட சாதிக்காரன் துன்பப்படுத்தப்பட்டுள்ளான். கொலை செய்யப்பட்டுள்ளான். தமிழகத்தில் சாதிப்போரைக் களைவது கடினம். காலங்களின் மாற்றம் சாதியைச் சாதிப்பாகுபாட்டை மாற்றினால் மனித சமூகம் தழைத்தோங்கும். கதைப் பாடல்களில் ஏற்படுத்தப்பட்ட மாற்றங்கள் அனைத்தும் சாதிக் கொள்கையால் ஏற்பட்டது; தன்னுடைய சாதியை உயர் வாக்கவே இவ்வகை மாற்றம் நிகழ்ந்துள்ளது. கதைப்பாடல் தலைவர்களுக்கு ஏற்பட்ட தண்டனை களை நியாயப்படுத்துவதற்காகக் கதைப்பாடல்களில் சாதிப் போராட்டம் - சாதி உயர்வு பயன்படுத்தப் பெற்றுள்ளன.

எம். ஏ. சவேரியார்
தூய வளனார் தன்னாட்சிக்கல்லூரி
திருச்சிராப்பள்ளி – 2

பாரதீயும் சமய நல்லிணக்கமும்

ஜாதி மதங்களைப் பாரோம் - உயர்
ஜன்மம் இத்தேசத்தில் எய்தினராயின்
வேதிய ராயினும் ஒன்றே அன்றி
வேறு குலத்தின ராயினும் ஒன்றே.
வந்தே மாதரம் - சரணம் 11

பாரில் பிரெஞ்சுப் புரட்சியால் ஈர்க்கப்பட்ட அறிஞர்களில் ஒருவர் சுப்பிரமணிய பாரதி. நாம் ஒவ்வொருநாளும், நாளிதழ் களிலும், வானொலியிலும், தொலைக்காட்சியிலும், வார, மாத, இதழ்களிலும் படிப்பது, கேட்பது, பார்ப்பது சமயப் பூசல்களும், சாதிப்பூசல்களும்தான். பாரதி 20 ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தி லேயே இப்பிரச்சனைகளைக் கண்டு மனம் கொதித்தனர். இந்திய மக்களிடையே பரவியிருந்த சமய சாதிப் பூசல்களை வேரொடு களைந்து மத நல்லிணக்கத்தை ஏற்படுத்து வதற்கான கொள்கை என்ன? பாரதியார் பாரத மக்களிடையே சகோதரத்துவம் நல்லிணக்கம் போன்ற உணர்வுகளை உண்டாக்கக் கையாண்ட வழி (யுக்தி) முறைகள் யாவை என்பதைப்பற்றி ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கம். பாரதியாரின் படைப்புகளான கவிதைகள் கட்டுரைகள் இங்கு ஆதாரமாகக் கையாளப் பட்டுள்ளன.

நமது பாரதத்தில் முக்கியமாகக் காணப்படுவது இந்து மதம், கிறித்தவ மதம், இஸ்லாமிய மதம் ஆகிய மூன்றாகும். பாரதியார் 'சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம்' என்ற பிரெஞ்சுப் புரட்சியின் மூலமுழக்கத்தை அரசியல் விடுதலைக்கு மட்டு மல்லாது மக்களிடையே மத நல்லிணக்கத்தை ஏற்படுத்தி நல்ல தோர் இந்தியச் சமுதாயத்தை உருவாக்க எண்ணினார். ஏனெனில் அந்நிய ஆட்சியிலிருந்து விடுபட்டுச் சுதந்திரம் பெற முதன்மை யாகத் தேவைப்பட்டது சமத்துவமும் சகோதரத்துவமும் தான்.

அதாவது மக்களிடையே காணப்பட்ட சாதி, சமய வேற்றுமைகளும் பிரிவுகளும் மறைந்து மக்கள் ஒன்றுபட்டு ஒரே சமூகமாக (சகோதர்களாக) ஒருதாய் மக்களாக மாறி வாழ வேண்டும் என்பதே பாரதியாரின் விருப்பமாயிருந்தது.

பாரதியார் பாரதமக்கள் யார் என்று வரையறுத்துக் கூறுமிடத்து: கங்கையிலே வந்து சேரும் வாய்க்கால்களெல்லாம் கங்கையாகவே மாறிவிடும். பாரததேசத்தில் வந்து குடியேறித் தலைமுறை தலைமுறையாக இங்கு வாழ்பவர்களெல்லாம் நமது ஜனக்கூட்டத்தைச் சேர்ந்தவராகின்றனர்.

கிறிஸ்தவர்களாயினும், பார்சிகளாயினும், மகமதியராயினும் எங்கிருந்து வந்து எந்த இஷ்டத் தெய்வத்தைக் கொண்டாடிய போதிலும், பாரத பூமியிலே பிறந்து வளர்ந்து இதையே சரணாகக் கொண்ட மனிதர்களையெல்லாம் பாரத ஜாதியிலே சேர்த்துக் கணக்கிட வேண்டும். இது ஒரே ஜாதி. பிரிக்க முடியாது. அழிவில்லாதது.

வேதாந்தியாகிய பாரதியார் சமத்துவத்தையும் சகோதரத்துவத்தையும் தெய்வீகச் சட்டங்கள் என்று கருதினார். இதன் காரணமாக 'ஆத்மக் குடியரசில் வாழ்பவர்கள் மனிதர்கள் மட்டுமல்ல. பிராணிகள், புல், பூண்டுகள், பூச்சிகள், உயிரில்லாத பொருட்கள்கூடச் சமம். ஏனென்றால் உயிருள்ள பொருள்கள் உயிரில்லாத பொருள்கள் எல்லாவற்றிலும் கடவுள் அல்லது அருவும் உருவும் இல்லாத பிரமன் குடிகொண்டிருக்கின்றார்.

தனிமனிதச் சுதந்திரத்தைப் பற்றிப் பாரதியார் கூறுமிடத்துச் சுதந்திரப் பறவைகளாகப் பிறப்பதாலும், எல்லோரும் கடவுளுடைய குழந்தைகளாகியதாலும் ஒரு மனிதன் இன்னொரு மனிதனுக்கு அடிமையில்லை. அனைவரும் சகோதரர்கள் என்று கூறுகின்றார்.

ஏழையென்றும் அடிமை யென்றும்
ஏவனும் இல்லை ஜாதியில்,
இழிவு கொண்ட மனித ரென்பது
இந்தியாவில் இல்லையே.
.....
மனிதர் யாவரும் ஒருநிகர்
மான மாக வாழ்வமே (விடுதலைப் பாடல் 2)

இந்தச் சமத்துவக் கொள்கைப்படி இந்திய சமூகத்திற்குக் கடவுள் ஒருவரே. அதாவது மக்கள் அனைவருக்கும் ஒரே கடவுள்.

இந்தக் கொள்கையை எல்லா மதங்களிலும் கண்டார் பாரதியார். குருகோவிந்தரைப் பற்றிப் பாடிய வரிகளில்

நுமக்கினித் தருமம் துவன்றிக் கேண்மின்
ஒன்றாம் கடவுள்; உலகிடைத் தோன்றிய
மானிடர் எல்லாம் சோதரர்; மானிடர்
சமத்துவம் உடையார்; சுதந்திரம் சார்ந்தவர் (177-180)

என்று பாடியுள்ளார்.

இந்தியமக்கள் ஒரே கடவுளைப் பல வழிகளில் வழிபடு கின்றார்கள். கடவுள் எங்கும் இருக்கின்றாரே; ஊருக்கு நடுவில் ஒரு கோயில், ஆலயம், தர்க்கா போன்றவைகளைக் கட்டி அதில் ஒரு கல்லையோ, சிலையையோ அல்லது சிலுவையையோ வைத்து அங்குதான் எல்லோரும் வந்து கும்பிடவேண்டும் என்ற நியமம் எதற்காக? ஏனென்றால் மக்களிடையே ஒற்றுமை ஏற்படுத்துவதற்காக.

கோவிலுக்கோ, ஆலயத்திற்கோ அல்லது தர்க்காவிற்கோ போனாலும் சரி போகாவிட்டாலும் சரி, இறைவனை வணங்கி னாலும் சரி, வணங்காவிட்டாலும் சரி பிறருக்கு அன்பு செய்து அவரை ஏமாற்றுவதை நிறுத்தினால், இறைவன் அருள் புரிவார் என்று பிறருக்கு நன்மை செய்வதைப் பற்றிப் பாரதியார் கூறுகின்றார்.

எனவே பாரதியாரின் ஒரே கடவுள், அக்கடவுளைப் பிறரிடத்திலும் ஏனைய படைப்புகளிலும் காண்பது, அவர் களிடம் அன்பு காட்டுவது, துன்பம் செய்வதை விலக்கி நன்மை செய்வது போன்ற கொள்கைகள் மூன்று மதங்களுக்கும் பொருந்தும், எம்மதமும் சம்மதம்.

மதநல்லிணக்கம் கொண்ட பாரதியார், இந்துமத நூல்களான 'பகவத் கீதை, இராமாயணம், மகாபாரதம் போன்ற இதிகாசங் களையும், கிறித்துவமத நூலாகிய 'திருவிவிலியத்தையும் (Bible). இஸ்லாமியர் வேத நூலாகிய 'குரானையும்' நன்கு கற்றறிந்து தெளிந்த பின்தான் சமய நல்லிணக்கக் கொள்கையைப் பற்றிய கட்டுரைகள் பல எழுதி மக்களிடையே பரப்பினர்.

பாரதியார் எழுதிய கட்டுரைகளில் மூன்று மதங்களிலிருந்து பல மேற்கோள்களைக் காட்டியுள்ளார். பகவத்கீதை, புராணங் கள், இதிகாசங்கள் போன்றவற்றிலிருந்து பல மேற்கோள்களை எடுத்துத் தத்துவத்தைப்பற்றிய கட்டுரைகளில் கையாண்டுள்ளார்.

நற்செய்தியிலிருந்து 'இயேசுகிறிஸ்துவின் வார்த்தை'. 'சிலுவை' 'மரியாள்' போன்ற தலைப்புக் கட்டுரைகளில் நாம் காணலாம். காமதேனு என்ற தலைப்பில் நம்பிக்கையைப்பற்றிப் பேசும் போது: ''யூதர்களை ரோம தேசத்தார் வென்று யூதநாட்டில் பிலாத்து ரோமன் ராஜாதிகாரியாய் விட்டான். இயேசு கிறிஸ்து தெய்வத்தை நம்பி விடுதலை முழங்கினார். யூதகுருக்களே அவருக்கு விரோதமாய் அன்னியனான அதிகாரியிடம் சேர்ந்து கிருஸ்துவைச் சிலுவையில் அடித்துக் கொன்றார்கள். 'கிருஸ்து மதத்தையே கொன்று விட்டோம்' என்று அந்த மூடர்கள் நிச்சயித்தார்கள். இன்று கிறிஸ்து மதம் உலக முழுவதையும் சூழ்ந்து நிற்கிறது. வருந்தினால் வராதது ஒன்றுமில்லை.

அடுத்து இஸ்லாமிய சமயத்தைப் பற்றி நோக்கும்போது 1920 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 20 ஆம் நாள் ஞாயிற்றுக்கிழமை மாலையில், பொட்டல்புதூரிலே ஒரு முஸ்லீம் சபையின் முன்பே 'இஸ்லாம் மார்க்கத்தின் மஹிமை' என்ற விஷயத்தைக் குறித்துப் பாரதியார் சொற்பொழிவாற்றியுள்ளார். அவர் அல்லாவின் மீது பாடிக் கொணர்ந்த தமிழ்ப் பாட்டையும் பாடினார்.

ஹிந்து முகம்மதிய சமரஸம் பற்றித் ''தேசியக் கல்வியில் முகம்மதியர் எத்தனைக்கெத்தனை சேர்ந்துழைக்கின்றார்களோ, அத்தனைக்கத்தனை அம்முயற்சி அதிகப் பயன் அடையும் மத பேதங்களை வ்யாஜமாகக் காட்டி ஹிந்து முஹம்மதியர் ராஜீக முதலிய பொது விஷயங்களிலும் கூடியுழைக்காமல் தடுக்க வேண்டும் என்று ஆங்கிலோ - இந்தியப் பத்திராதியர் முதலிய பொதுச்சத்துருக்கள் செய்த தீய முயற்சிகளெல்லாம் விழலாய் விட்டன. மஹான் முஹம்மது அலி, அவர் அண்ணன் ஷௌகத் அலி, ஸேட்யாகுப் ஹுஸேன், பெரிய ஜின்னா, மஹமதாபாத் ராஜா முதலிய மேலோர்களின் ப்ரத்யதனத்தால் ஹிந்து முகமதியர் அண்ணன் தம்பிகளென்பது தென் அமெரிக்கக் கண்டத்தாருக்குக் கூட சம்சயம் ஏற்பட இடமில்லாமல் பசுமரத்தில் அடிக்கப்பட்ட ஆணிபோல் நிலை நிறுத்தப்பட்டுவிட்டது.

கிறிஸ்தவர்

தேசியக் கல்வி முயற்சிகளில் சேரக்கூடாதென்று ஒரு சில மூடப் பாதிரிகள் சொல்லக்கூடும். அதை ஹிந்துக் கிறிஸ்தவர் கவனிக்கக்கூடாது. தேசியக் கல்வியில், ரிக்வேதம், குரானும், பைபிலும், ஸமானம், கிறிஸ்து, கிருஷ்ணன் என்பன பர்யாய நாமங்கள், வங்காளத்தில் ஹிந்துக்கள், கிருஷ்ண தாஸ பாலன் என்று சொல்வதற்குக் கிறிஸ்தோதாஸ் பால் என்று சொல்கிறார்கள்.

மனுஷத் தன்மை

ஆங்கிலேயர், பிராமணர், ஆஸ்திரேலியாவில் முந்தி வேட்டைகளில் அழிக்கப்பட்ட புதர்ச்சாரியார் (Bushmen) எல்லோரும் பொதுவில் 'மனிதர் ஆதாம் ஏவா வழியில் பிறந்த வர்கள் என்று கூறி, முஹம்மதியக் கிறிஸ்தவ வேதங்கள் 'மனிதர் எல்லோரும் ஒன்று'என்பதை உணர்த்துகின்றன. மஹாபாரதத்தில் மனிதர், தேவர், புட்கள், பாம்புகள் எல்லோருமே காச்யப் ப்ரஜாதி பதியின் மக்களாதலால் ஒரே குலத்தவர் என்று சொல்லப்பட்டிருக் கிறது.... ஆதலால், தேசீயக்கல்வி முயற்சியில் ஜாதிமத வர்ண பேதங்களைக் கவனிக்கக் கூடாதென்று அரவிந்த கோஷ், திலக், அனிபெஸண்ட் முதலியவர்கள் சொல்லுவதை இந்த நாட்டில் எந்த ஜாதியாரும் எந்த மதத்தவரும், எந்த நிறத்தையுடையவரும் மறுக்க மாட்டார்களென்று நம்புகிறேன். முஹம்மதிய சாஸ்திரங்களைக் கற்றுக்கொண்டால் ஹிந்துக்களுக்கு அறிவு விசாலப்படும். முஹம்மது நபிகளைப் பற்றிப் போற்றிப் புகழ்ந்தும் உள்ளார் பாரதியார்.

முடிவுரை

உண்மையிலேயே பாரதியாரின் கட்டுரைகள், கவிதைகள் ஆகியவற்றை ஆழ்ந்து நோக்குமிடத்து, வேதங்கள், பகவத்கீதை, புராணங்கள், இதிகாசங்கள், வடமொழி இலக்கியங்கள் இந்து சமண பௌத்த மதங்களின் தத்துவங்கள், கிறித்துவ, இஸ்லாமிய மதக் கருத்துக்கள் முதலியவற்றையெல்லாம் எவ்வளவு தூரம் ஆழ்ந்து நன்கு கற்றறிந்தார் என்பதும், அவரது வாசக ஞானம் எத்த கையது என்பதும் நமக்குப் புலப்படுகிறது. பாரதியார் மிக்க இளம் வயதிலேயே 'சுதேசமித்திரன்', 'இந்தியா', முதலிய பத்திரிக்கை களில் அரசியல் சமூகம், சமயம், தத்துவம், பண்பாடு, கல்வி, அறிவியல் வளர்ச்சி, உலக விவகாரங்கள் முதலியன பற்றி எல்லாம் ஆங்கிலத்திலும், தமிழுலுமாக அரிய கட்டுரைகள் பலற்றை எழுதியுள்ளார்.

பாரதியார் மதநல்லிணக்கக் கொள்கையை நாம் எல்லோரும் கடைப்பிடித்தால் அவர் கண்ட கனவான சிறந்த பாரத சமுதா யத்தை நனவாக்க முடியும். பல்சமய வழிபாடுகள், பல்சமய சமூக மன்றங்கள், பல்சமய உரையாடல் (கருத்துப் பரிமாற்றல்) மையங் கள், பல்சமய சமபந்திகள், பல்சமயக் கலப்புத்திருமணங்கள் போன்றவற்றின் மூலம் பாரத மக்களிடையே காணப்படும் சாதிமத பூசல்களை வேரோடு அழித்து மதநல்லிணக்கத்தை ஏற்படுத்த நாம் பாடுபடுவோமாக!

மா. சற்குணம்
சி. பா. சு. தமிழ்க்கல்லூரி
மயிலம்

மயிலாசல சதகம் - ஓர் அறிமுகம்

'சதகம்' என்பது தமிழில் ஏறத்தாழ ஆயிரம் ஆண்டு வரலாற் றையுடைய ஒரு தனி இலக்கிய வகை. இவ்விலக்கிய வகையில் தமிழில் நூறு சதகங்கள் தோன்றியிருக்கக் கூடும். அவற்றுள் இலக்கிய ஆராய்ச்சியாளர்கள் பலராலும் அறியப்பெறாதுள்ள மயிலாசல சதகத்தைப் பற்றி வெளிப்படுத்துவது இக்கட்டுரையின் நோக்கமாகும்.

நூற்பெயரும் பாடுபொருளும்

'மயிலாசலம்' எனும் சொல் மயிலம் + அசலம் என அமைந் துள்ளது. மயிலம் என்பது ஈண்டு, விழுப்புரம் மாவட்டத்தில் உள்ள மயிலம் எனும் ஊர்ப்பெயரைக் குறிக்கும். மயிலத்தில் மலைமீது முருகன் கோயில் உள்ளது. அம்முருகப் பெருமான் மீது இயற்றப் பெற்றதே இந்நூல். மயிலமலை எனும் பொருள்படும் 'மயிலாசலம்' என்னும் சொல்லுடன் சதகம் எனும் சொல்சேர்ந்து மயிலாசல சதகம் எனப் பெயரமைந்தது. சதகம் என்பது நூறு செய்யுட்களால் இயற்றப்பெற்ற ஓர் இலக்கிய வகையாகும்.

சதகம் - விளக்கம்

சதகம் என்னும் இந்நூல் வகையைத் தமிழில் முதலில் புகுத்தியவர் மாணிக்கவாசகர். திருவாசகத்தில் உள்ள திருச்சதகம் என்பதை அவர் இயற்றினார். எனினும் சதகத்திற்கான இலக் கணத்தைக் கி. பி. 17-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த வைத்தியநாத தேசிகர்தான் முதலில் கூறியுள்ளார்.

''விளையும் ஒரு பொருள் மேலொரு நூறு
தழைய வுரைத்தல் சதகம் என்ப''

- இலக்கண விளக்கப் பாட்டியல்

ஒரு பொருள்மேல் நூறு பாடல்கள் இயற்றுவதைச் 'சதகம்' எனக் குறித்துள்ளார். எண்ணிக்கை அடிப்படையில் வந்தது இப் பெயர். தமிழில் இதுவரை தொண்ணூறுக்கு மேற்பட்ட சதக நூல்கள் தோன்றியதாகக் குறிப்பிடும் ஆய்வாளர்கள் 'மயிலாசல சதகம்' எனும் பெயரில் அமைந்த இந்நூல் பற்றி ஏதும் அறிந்த தாகத் தெரியவில்லை. எனவே, இந்நூல் பற்றி அறிவிப்பது அவசியமாகிறது.

மயிலாசல சதகங்கள் இரண்டு

'மயிலாசல சதகம்' எனும் பெயரில் இரண்டு நூல்கள் இயற்றப் பெற்றுள்ளன. இவை இரண்டும் இந்நூற்றாண்டில் பதிப்பிக்கப் பெற்றிருந்தும். இவற்றுள் ஒருநூல் மயிலாசலச் சதகம் எனும் பெயரிலேயே கி. பி. 1911 இல் பதிப்பிக்கப் பெற்றுள்ளது. பிறிதொரு நூல் மயிலம் சந்நிதி முறை எனும் பெயரில் கி.பி. 1906 ஆம் ஆண்டில் அச்சிடப் பெற்ற நூலின்கண் அடங்கியுள்ளது. 'மயிலாசல சதகம்' எனும் பெயரிலேயே அதுவும் அமைந்து உள்ளது. இவற்றுள் முதலில் குறிப்பிட்டதை இயற்றியவர் பண்ருட்டி நமசிவாய நாவலர் என்பவர். பிந்தியதன் ஆசிரியர் சாமிநாதப்பிள்ளை என்பவர் ஆவார். இவற்றுள் நமசிவாய நாவலர் இயற்றிய மயிலாசல சதகம் குறித்து வெளிப்படுத்துவதே முதன்மை நோக்கம்.

நூலாசிரியர் வரலாறு

நமசிவாய நாவலர் என்பார் பற்றிய வரலாற்றுச் செய்திகள் முழுமையாகக் கிடைக்கவில்லை. மயிலாசல சதகநூலில் 'நூலா சிரியர் வரலாறு' எனும் தலைப்பில் சில செய்திகள் தரப்பெற்றுள் ளன. அதன்வழிக் கீழ்வரும் செய்திகள் புலனாகின்றன. பண்ருட்டி நகரில் வீரசைவ சமயம் சார்ந்த குடும்பத்தில் சுப்பிர மணிய அய்யர் என்பவருக்கு மகனாகப் பிறந்தவரே நமசிவாய அய்யர். பார்ப்பனர்களுக்கு மட்டுமின்றி வீரசைவத்தைச் சார்ந்த வர்களின் பெயருக்குப் பின்னரும் அய்யர் எனும் பெயரைச் சேர்த்து வழங்கும் மரபு உண்டு என்பது ஈண்டு நினையத்தக்கது. சுப்பிரமணிய அய்யர் திருத்தணிகை விசாகப்பெருமாள் அய்யரி டம் பாடங்கேட்டுக் கல்வியில் வல்லவராய் விளங்கினார். மகனையும் நன்கு படிக்கச் செய்தார். சொர்க்கப்புரம் இராம லிங்கத் தம்பிரானிடம் நமசிவாய நாவலர் கல்வி கற்றார். புலமைத்திறம் மிக்க இவர் திரிசிபுரம் மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம் பிள்ளையுடன் நட்பு கொண்டு விளங்கினார். இவர் காலத்தை அறிய ஒரு குறிப்பு கிடைக்கிறது. 'இவர், ஏவிளம்பி

ஆண்டு கன்னிமதியில் தம் 52-ஆம் வயதில் இட்டலிங்க பரசிவத்திற்கலந்தார்' (இயற்கை எய்தினார்) என்னும் குறிப்பு கொண்டு இவருடைய காலம் கி. பி. 1845 முதல் 1897 வரை என்று வரையறை செய்யலாம். இவர் மறைந்து, பதினான்கு ஆண்டு களுக்குப் பின் இவரது மயிலாசல சதகம் அச்சியற்றப் பெற்றுள்ளது.

நூற்பதிப்பு

இந்நூல் முதல்முறையாக விரோதிகிருது வருடம் (1911) பதிப்பிக்கப் பெற்றுள்ளது. பண்ருட்டி மணி அப்பாவையர் அவர்கள் கட்டளையின்படி, இந்நூலாசிரியரின் குமாரர் சுப்பிர மணிய அய்யரால் சென்னை மகாலட்சுமி விலாச அச்சுக்கூடத்தில் பதிப்பிக்கப்பெற்றுள்ளது. இந்நூலுக்கு முன், மணி - அப்பாவை யர் எழுதிய ஸ்ரீசிவஞானபாலய தேசிகர் பஞ்சரத்தினம் அச்சாகி யுள்ளது. மேலும், 'மயிலாசல சதகம் முதலியன அரங்கேற்றிய கால விவரண விளம்பரம்' எனும் தலைப்பில் ஒரு செய்தியை மணி. அப்பாவையர் அறிவித்துள்ளார். அதன்படி இந்நூல், விரோதிகிருது (கி.பி. 1911) ஆண்டில் அப்போது இருந்த 15 ஆம் பட்டத்துச் சிவஞான பாலய சுவாமிகள் மயிலத்தில் எழுந்தருளி யிருந்த போது அரங்கேற்றப் பெற்றது என்று தெரியவருகிறது.

இந்நூலுக்குப் பண்ருட்டி போஸ்டுமாஸ்டர் இராமசுவாமி ஐயர் எழுதிய ஆங்கிலத்தில் அமைந்த முன்னுரையும், இந்நூலாசிரியர் மாணாக்கர் மணி. அப்பாவையர் இயற்றிய சிறப்புப் பாயிரமும் அச்சாகியுள்ளன.

நூலமைப்பு

பெரும்பாலான சதக நூல்களைப் போல இந்நூலும் கழி நெடிலடி ஆசிரிய விருத்தம் எனும் யாப்பில் அமைந்த நூறு செய்யுட்களைக் கொண்டுள்ளது. ஒவ்வொரு பாடலும்,

''மயிலைகண் படுகமல வயலைகண்
டுறைநாரை மயிலைசண் முகதேவனே''

எனும் மகுடத்தை ஈற்றடியாகக் கொண்டு அமைந்துள்ளது. நூல், வெண்பா யாப்பில் அமைந்த காப்புச் செய்யுள் ஒன்றைப் பெற்றுள்ளது. இது விநாயகர் வணக்கமாக அமைந்துள்ளது.

''பூவெண் கயத்தூரும் புரந்தரனே முதலாய
காவெண் புலத்தாரைக் காத்தளித்தக் - கோவண்

மயிலா சலவேண்மேல் மாசதகம் செப்புதற்குப்
பயிலார்கோ டைங்கரகண் பார்''

இதனைத் தொடர்ந்து நூல் தொடங்குகிறது. முதலில் இரு செய்யுட்கள் முருகக் கடவுள் வணக்கமாக அமைந்துள்ளன. நூலின் பாடுபொருள்கள் பலவாக அமைந்துள்ளன. முன்னுரை வழங்கியவர்,

''This book, though small in size, is full of wisdom etracted from the philosophical portion of the four vedas''

எனக் குறிப்பிடுவதால், நான்கு வேதங்களின் தத்துவப் பகுதி களைப் பிழிந்து தரும் போக்கில் நூற்செய்யுள்கள் அமைந்துள்ளன எனக் கருதலாம்.

மயிலம் மலைமீதுள்ள முருகன் கோயில் பற்றிய புராண வரலாற்றை இந்நூற் செய்யுள்கள் சுருக்கமாக அழகாக வெளிப் படுத்துகின்றன.

''மயிலாசலத்திற்குத் தலபுராணம் செய்யவேண்டுமென்பது இவருடைய கருத்து. அது, முன்னமே பாடப்பெற்றி ருத்தலால் அத்தலபுராண சரிதத்தையே பெரிதும் அடக்கிச் சதகமாகச் செய்தனர்''.

என்னும் 'நூலாசிரியர் வரலாற்றுப் பகுதியில் தரப்பெற்றுள்ள மணி - அப்பாவையரின் குறிப்பு ஈண்டுக் கருதத் தக்கது. இதன்வழி இவர் பாடியது மயிலம் தலபுராண அடிப்படையில் அமைந்த மயிலமலை முருகன் பற்றிய வரலாறாகும். இவ்வரலாற்றை நூலின் பத்து செய்யுள்களில் (செய்யுள் 9-18) அடக்கிப் பாடி யுள்ளார். அப்பாடல்கள் வழிக் கீழ்வரும் புராண வரலாற்றுச் செய்திகளை அறிகிறோம்.

மயிலாசல புராணச் சுருக்கம்

சங்குகர்ணன் என்னும் சிவகணநாதன் பூமியின்கண் நரனாய் அவதரிக்க நேரிட்டது. சங்குகர்ணன் பாலசித்தனாய்க் கடலில் அவ தரித்துக் கடற்கரையில் ஆச்சிரமங்கொண்டு பின் பெருமுக்கல் முதலாய தலங்களில் சென்று ஆங்காங்குள்ள சித்தராதிகளுக்கு அருள்ஞானம் பாலித்து வந்தார். மயிலாசலத்தைப் பற்றி நாரத முனிவர் சொல்லத் தெரிந்துகொண்டு பாலசித்தர் மயிலமலைக்கு வந்தார். அங்குவந்து தவஞ்செய்கையில் பாலசித்தருக்கு வள்ளி தெய்வானையார் வந்து தரிசனம் தந்து அருள்செய்தனர். மனைவி யரைக் காணாமல் கந்தவேள் கயிலை மலையைவிட்டு மயில

மலைக்கு வந்து, பாலசித்தரை வினவி, அவரோடு போர் செய்ய, பாலசித்தர் இறையருள் பெற்றார். முருகன் வள்ளி தெய்வயானை யாரைத் திருமணம் செய்துகொண்டு, பாலசித்தரின் சீடருக்குக் குரு பட்டம் அளித்து மயிலத்தில் வீற்றிருப்பதாக அமைகிறது அவ் வரலாறு.

நூற்செய்திகள்

இதன்பின், சிவஞான பாலய சுவாமிகள் மான்மியம், மயிலா சலத்தின் தீர்த்தத் தொகை, துறைமங்கலம் சிவப்பிரகாச சுவாமிகள் துதி எனச் சில பாடல்கள் இடம்பெற்றுள்ளன. சிவஞான பாலய சுவாமிகள் பற்றிய பாடலில் சிவப்பிரகாசர் பற்றிய குறிப்பு ஒன்று வருகிறது.

முடிவுரை

நூலினுள் உள்ள எஞ்சிய பாடல்கள், திருநீறு (22-24), உருத்திராக்கம் (25-27), பஞ்சகௌவியம் (28, 29), அபிடேகப் பொருள்கள் (30, 31), அர்ச்சனைக்குரிய மலர்கள் (35-40) முதலிய சமய வழிபாடு தொடர்பான பற்பல செய்திகள் பற்றி அமைந் துள்ளன. மேலும் விரதங்கள் பற்றியும் (51-54) சிவனடியார்க்குச் செய்ய வேண்டிய செயல்கள் குறித்தும் (60-63), இல்லறத்தார்க்கு உரிய சில கடமைகள் குறித்தும் (70-78), பண்டைய மரபை யொத்துக் கற்புடைய மடவார் ஒழுக்கங்கள் பற்றியும் (79-83), மற்றும் போதகரிடம் பிறர் நடந்து கொள்ள வேண்டிய முறை குறித்தும் (85-87), கடன் படலாகாது (84), மக்களுட்பதடி (89), பரமசண்டாளர் இவர் (93), பொய்மையால் வரும் இழிவு (95), கொலையால் வரும் கொடுமை (97) என்றினைய செய்திகள் பற்றியும் பல பாடல்கள் இயற்றப் பெற்றுள்ளன.

பொதுவாகச் சதக நூல்களை ஆய்வாளர், வரலாறு பற்றியன, நீதி பற்றியன. இறைவழிபாடு பற்றியன என மூவகையாகப் பகுத்துக் காண்பர். அவ்வகையில் இந்நூலை எந்த ஒரு பகுப்பிலும் அடக்க வியலாது. நூலின் பெயர், இது ஒரு துதிப்பாடல் வகைசார்ந்த சதகம் என்பதுபோல் தோன்றும். நூலின் பெரும் பகுதி அவ்வகையில் இருப் பினும் பாலசித்தர், சிவஞான பாலய சுவாமிகள் போன்றோர் பற்றிய வரலாறுகளும் இடம் பெற்றுள்ளன. இறுதியில் மக்களுக்குரிய நீதி புகல்வனாகவும் பல பாடல்கள் அமைந்துள்ளன. எனவே 19-ஆம் நூற்றாண்டின் இறுதியில் இயற்றப்பட்டு, இந்நூற்றாண்டின் தொடக் கத்தில் அச்சிடப்பெற்ற இச்சதகம் இதுவரை வந்த சதக நூல்களின் உள்ளமைப்புகளை ஏற்று, ஒரு பொது அமைப்பினதாக விளங்குகிறது.

மு. சரீகுணவதி
சென்னைப் பல்கலைக்கழகம்
சென்னை – 600 005

மாசாணியம்மன் வரலாறும் வழிபாடும்

முன்னுரை

வைதீக தெய்வங்களான பெருந்தெய்வங்களுக்கு முன்னர்த் தோன்றி இன்றளவும் கிராம மக்களால் வணங்கப்பட்டு வரும் பழந்தெய்வங்களுள் ஒன்றான மாசாணியம்மன் கோயில் தோன்றிய வரலாறும் மாறி வரும் மாசாணி அம்மன் வழிபாடும் பற்றிய ஆய்வாக இக்கட்டுரை அமைகிறது. இக்கட்டுரையில் இடம் பெறும் தகவல்கள் யாவும் கள ஆய்வால் சேகரிக்கப்பட்டவை.

மாசாணியம்மனின் பெயர் உருவாதல்

மயான தெய்வமாகத் தோன்றிய மாசாணியம்மன் ஆரம்பத்தில் மயானியம்மனாக இருந்திருக்க வாய்ப்பு இருக்கிறது. மயானி - மசானியாகி - இறுதியில் மாசாணியாகி இருக்கலாம். இக் கோவில் திருவிழாவின் போது மயானத்து எலும்பை வைத்தும் மயானத்து மண்ணை எடுத்துமே உருவம் செய்கின்றனர். எனவே மயானி மாசாணி ஆகி இருக்கலாம்.

இன்னொரு விதமாக நோக்கினால் மாசாணியை மா - சயனி என்று பிரிக்கலாம். அவ்வாறு பிரித்தால் மா என்பது மகா என்றும் சயனி என்பது சயனம் - தூக்கம் என்றும் பொருள் கொள்ளலாம். அப்படி பார்க்கிற போது மகா சயனி-மாசாணியாகி இருக்கலாம். இப்படி மாறி இருக்கவும் வாய்ப்பு இருக்கிறது. காரணம் மாசாணி அம்மன் நீளவாக்கில் கிழக்கு மேற்காகப் படுத்த கோலத்தில் காணப்படுவதே. எனவே அரிதுயில் கொள்ளும் அம்மன் என்று கொண்டாலும் மாசாணி என்பது பொருத்தமாகவே உள்ளது.

வரலாறும் கதையும்

மாசாணி அம்மன் கோயில் கோவை மாவட்டத்தில் பொள்ளாச்சி வட்டத்தில் ஆணைமலை என்னும் கிராமத்தில்

அமைந்துள்ளது. இக்கோயில் ஏறக்குறைய 100 வருடங்களுக்கு முன் தோற்றியதாகக் கூறப்படுகின்றது. நிறைமாத கர்ப்பிணியான ஒரு பெண் பிரசவ வேதனையோடு மயானத்தில் படுத்துக் கொள்ளக் குழந்தை பிறந்ததும் அவளும் குழந்தையும் கல்லாக மாறிவிட்டார்கள். கல்லாக மாறிய அவளே மாசாணி அம்மனாக வழிபடப்படுகிறாள் என்று கதை கூறப்படுகிறது.

இக்கதைக்குப் பொருந்துவது போன்றே அம்மனின் உருவம் அமைந்துள்ளது. பழந்தெய்வங்களுக்கு இல்லாத தன்மையாக இவ்வம்மன் படுத்த கோலத்தில் காணப்படுகிறாள். மேற்கே தலைவைத்துக் கிழக்கே கால்களை நீட்டியபடி படுத்திருக்கும் இவ்வம்மன் காலடியில் ஒரு குழந்தை உருவம் அமைந்துள்ளது. கோவிலின் வாசல் பக்கம் கால்கள் அமைந்துள்ளன.

இக்கோவிலின் ஒரு பகுதியாகச் சரவண நாயக்கன் பட்டியில் ஒரு கோயில் அமைந்துள்ளது. இது மயானத்தில் அமைந்துள்ள புதறும் புற்றுமாகக் காட்சி அளிக்கிறது. இங்கே குமாரசாமி என்னும் ஒருவர் செவ்வாய், வெள்ளி ஆகிய இரு தினங்களில் தன் மேல் அம்மன் வர அருள்வாக்கு கூறுகிறார்.

மாசாணி அம்மன் கோவிலின் அமைப்பானது நீள் சதுர வடிவில் அமைந்துள்ளது. நான்கு கைகளை உடைய அம்மன் பார்ப்பதற்குப் பயத்தை ஏற்படுத்துவது போன்று காட்சி அளிக் கிறாள். காலடியில் அமைந்திருக்கும் குழந்தை மீசையோடு காட்சி யளிக்கிறது. அம்மனின் கால்களுக்கே பூமாலை சூட்டுகிறார்கள். இவ்வம்மனின் காலடிக்கு ஓரத்தில் ஒரு கல் உள்ளது. இக்கோவில் உள்ள இடம் ஆரம்பத்தில் மயானக் காடாக இருந்ததாகவும் தற்போது கிராமமாக மாறியுள்ளதாகவும் கூறுகின்றனர். இக்கோயில் உப்பாற்றங்கரையில் அமைந்துள்ளது.

இக்கோயில் தொடர்பாக இன்னொரு கதையும் கூறு கின்றனர். அதாவது ராமர் வனவாசம் சென்ற போது இடுகாட்டில் இரவு தங்க நேர்ந்த போது அவருக்கு அரக்கர்கள் தொல்லை தந்தனர். உடனே இராமர் மயானத்தில் மண் எடுத்து அதில் மாசாணி அம்மனை உருவாக்கிச் சக்தி வேல் செய்து அவர்களை அழித்தார். அதனால்தான் மாசாணி அம்மன் சக்தி இடுகாட்டில் உள்ளதாக நினைத்து இடுகாட்டில் மண் எடுத்து உருவம் செய்வதாகக் கதை கூறுகின்றனர். இக்கதை பொருத்த முடை யதாக இல்லை.

வழிபாடும் பூசையும்

மாசாணி அம்மன் கோயிலில் ஆரம்ப காலத்தில் நாட்பூசை நடைபெறுவது இல்லை. தற்போது செவ்வாய், வெள்ளி ஆகிய நாட்களில் நாட்பூசை நடைபெறுகிறது. இதனைப் பண்டாரம் என்பவரே செய்து வருகின்றார். அம்மனுக்கு அபிஷேகம் செய்து அலங்கரித்துப் பூசை செய்து பக்தர்களுக்குக் குங்குமம் கொடுக்கி றார்கள். சரவண நாயக்கன் பட்டியில் உள்ள சுயம்பிற்கும் (புற்று) செவ்வாய் வெள்ளி ஆகிய நாட்களில் முட்டையும் பாலும் ஊற்றிப் பூசை செய்கின்றனர். அந்த இடத்தில் அம்மன், மாடு மேய்க்கும் பெண்ணாகக் காட்சி அளித்ததாகக் கூறுகின்றனர். இவை தவிரத் தினப்பூசை · இக்கோவிலில் நடைபெறுவது இல்லை. அம்மன் அருகிலுள்ள கல்லில், மிளகாயை அரைத்துப் பூசுபவர்களின் வேண்டுதல் உடனே நிறைவேறும் என்று நம்புகின்றனர். பொருட்களோ, ஆடுமாடுகளோ எது காணாமல் போய் விட்டா லும் உடனே கல்லில் மிளகாயை அரைத்துத் தடவி விட்டால் தடவிய நாளிலிருந்து அடுத்த வாரம் அதே நாளைக்குள் களவு போன பொருள் கிடைத்து விடும் என்று கூறுகின்றனர். வழிபாடு இவ்வாறாக நடைபெறும் இக்கோவில் திருவிழா வருடம் தோறும் மாசிமாதம் கடைசியிலோ அல்லது சித்திரை மாதம் முதலிலோ நடைபெறுகிறது.

திருவிழா இரண்டு நாள் நடைபெறுகிறது. அதற்கான அறிவிப்பு 15 நாட்களுக்கு முன்பாகவே அறிவிக்கப்படுகிறது. 15 நாட்கள் நோன்பு நோற்கப்படுகிறது. தினமும் கோவிலில் பூசை செய்யப்படுகிறது. பக்தர்கள் தினமும் பொங்கல் வைத்து நோன்பு இருக்கிறார்கள். திருவிழா அன்று தீமிதிக்க வேண்டுபவர்கள் 15 நாட்களும் ஒரு வேளை உணவு உண்டு நோன்பு இருக்கின்றனர்.

திருவிழாவிற்கு முதல் நாள் விழா பற்றிய அறிவிப்பைக் கொடியேற்றி அறிவிக்கின்றனர். திருவிழா அன்று மயானத்திற்கு உடுக்கை சிலம்போடு கரகம் எடுத்துச் செல்கின்றனர். அங்கே மயானத்தில் புதைத்து வைக்கப்பட்டுள்ள எலும்பினையும், மயான மண்ணையும் குடத்தில் போட்டுக் கொண்டு வருகின்ற னர். இதனைச் சக்தி அழைத்து வருவது என்று கூறுகின்றனர். அதனை வைத்துக் குயவர், அம்மன் சிலை செய்கிறார். திருவிழா அன்று அம்மன் சிலை, அலங்காரம் செய்யப்பட்டுப் பூசை செய்யப்பட்டு ஊர்வலமாகக் கொண்டுவரப்படுகிறது. அன்று மாலை உப்பாற்றிற்குக் கரகம் கொண்டு செல்லப்படுகிறது. அதனுடன் தீமிதிக்க விரதம் இருப்பவர்களும் செல்கின்றனர்.

கரகம் எடுப்பவர் மீது அம்மன் வந்திறங்கி விபூதியைத் தெளிப்பாள். அந்த விபூதி உடம்பில் படுபவர் மட்டுமே குண்டத்தில் இறங்க வேண்டும். பெண்கள் இறங்கும் பழக்கம் இல்லை. குண்டத்தை மூன்று முறை மட்டும் அள்ளி போடுவார்கள். அம்மன் ஊர்வலம் முடிந்ததும் அம்மன் சிலை கோவிலினுள் வைக்கப்படுகிறது. மறு நாள் காலை அம்மன் சிலையை மீண்டும் ஊர்வலமாகக் கொண்டுச் சென்று மயானத்தில் உடைத்து எறிந்துவிட்டு வந்து விடுகின்றனர். சிலை செய்யப்பட்ட எலும்பைப் புதைத்து விட்டு வந்து விடுகின்றனர். இதனைச் சக்தியை விட்டு வருதல் என்று கூறுகின்றனர். இந்த நிகழ்ச்சியோடு திருவிழா நிறைவடைகிறது.

திருவிழாவும் கலையும்

திருவிழா அன்று கலை நிகழ்ச்சிகள் பல இடம் பெறுகின்றன. ஒயிலாட்டம், காவடியாட்டம், கரகாட்டம், தெருக்கூத்து ஆகியன நடத்தப் பெறுகின்றன. அம்மன் புகழ்பாடி வில்லுப் பாட்டும் அம்மன் மகிமையைக் கூறும் பாடல்களும் பாடப்படுகின்றன. திருவிழா அன்று சந்தையும் நடைபெறுகின்றது. திருவிழாவின் போது வேண்டுதல் உள்ளவர்கள் திருமணமும் செய்து கொள்கின்றனர். ஆனைமலையில் வாழும் எல்லாச் சாதி மக்களுக்கும் பொதுவான மாசாணி அம்மன் வெள்ளாள கவுண்டர் சாதி மக்களுக்குக் குலதெய்வமாகவும் விளங்குகிறது. திருவிழா நிகழ்ச்சிகளை முன் நின்று நடத்துபவர்கள் இவர்களாகவே விளக்குகின்றனர்.

மாறிவரும் மாசாணி அம்மன் வழிபாடு

கிராமியத் தெய்வமாக விளங்கும் மாசாணி அம்மன் வழிபாடு இன்று பெருந்தெய்வ வழிபாட்டுடன் கலந்து வருகிறது. அதாவது மாசாணி அம்மன் கோவிலுக்கு ஒரு புறத்தில் பிள்ளையார் கோவிலும் மறு புறத்தில் முருகன் கோவிலும் மற்றுமுள்ள இரு புறங்களில் மகாமுனி கோவிலும், பேச்சியம்மன் கோவிலும் அமைந்துள்ளன. இவ்வம்மன் வழிபாடு கருவறைக்குள் இன்றளவும் பண்டாரத்தால் நடத்தப் பட்டாலும் வெளியில் அர்ச்சனை ஐயர்களால் செய்யப்படுகிறது. காலப்போக்கில் பண்டாரம் வெளியேறக்கருவறைக்குள் ஐயர் வழிபாடு செய்யும் வழக்கம் ஏற்படவும் வாய்ப்பு உள்ளது. திருவிழாவின் போது கொடியேற்றி அறிவிக்க முருகன் கோவில் ஏற்படுத்தப்பட்டதாகவும் சக்தியின் அவதாரமாக மாசாணி அம்மன் கருதப்படுவதால் பிள்ளையார் கோவிலும்

அமைக்கப்பட்டுள்ளதாகவும் கூறப்படுகிறது. ஆனால் கொடிக் கம்பம், பலிபீடம், வாகனம் என்கிற பெருஞ்தெய்வக் கோவில் அமைப்பைப் போன்று அமைக்கப்படாத மாசாணி அம்மன் கோவிலில் காலப் போக்கில் அவ்வாறு மாற்றி அமைக்கவும் வாய்ப்பு உள்ளது. தற்போது கோவில் பிரசித்திப் பெற்று விட்டதால் அம்மன் பற்றிய பக்திப் பாடல்கள் புத்தகமாக வெளியிடப்பட்டுள்ளன. இதன் நிர்வாகம் அரசாங்கத்திடம் உள்ளது. பண்டாரத்திற்கும் அர்ச்சனை செய்யும் ஐயர்களுக்கும் அரசாங்கம் ஊதியம் வழங்குகிறது.

முடிவுரை

முழுக்க முழுக்கக் கிராமியத் தெய்வமாகத் தோன்றிய மாசாணி அம்மன் தற்போது பெருந்தெய்வமாக மாறிவரும் சூழல் ஏற்பட்டுள்ளது. எனவே கிராமியத் தெய்வங்கள் பெருந் தெய்வங் களாக மாறிவரும் இக்காலத்தில் மாசாணி அம்மன் பற்றிய தரவுகள் இக்கட்டுரையில் மரபு வழிச் செய்திகளின் ஒரு பகுதியாகவே கொடுக்கப்பட்டுள்ளன.

சு. சாந்தகுமாரி
அரசு கலைக்கல்லூரி
கோயம்புத்தூர் – 18

கோவிலன்கதையில் ஒற்றியூர்க்காளி [வட்டப்பாறையம்மன்]

திருவொற்றியூர் தொன்மைக் காலந்தொட்டுப் பெரும்புகழ் பெற்றுவிளங்கும் திருத்தலமாகும். அழகிய கடற்கரையின் ஓரத்தில் அமைந்திருக்கும் இத்தலத்தை நாடிவந்து அருளாளப் பெருமக்கள் காலந்தோறும் உய்திபெற்று, இதற்குத் தனிச் சிறப்பைத் தந்துள்ளனர். முற்காலத்திலிருந்தே பண்பாட்டிலும், கலையழகிலும் சிறந்து விளங்கிய திருவொற்றியூர் இன்றும் தமிழகத்தின் சிறப்பிற்குச் சான்று பகர்வதாக அமைகிறது. திருவொற்றியூர், சென்னைப் பூங்கா நகரில் உள்ள புகைவண்டி நிலையத்திலிருந்து எட்டுக்கிலோ மீட்டர் தொலைவில் உள்ளது.

திருவொற்றியூரில் கோயில் கொண்டுள்ள இறைவர் வாசுகி என்னும் மாநாகத்தை தன்னுடைய பலகை போன்ற திரு மேனியில் ஒன்றுபடச் செய்து ஒற்றியதால் இத்தலம் ஒற்றியூர் என வழங்கப்படுகிறது.[1] இதன் காரணத்தால் ஒற்றியூர் இறைவருக்குப் படம் பக்கநாதர் என்னும் திருப்பெயர் உண்டு. பிரம்ம தேவரது தலத்தில் அவரது யோகத் தீயின் நடுவுள் இறைவர் தோன்றி அத் தீயையே கோயிலாகக் கொண்டு எழுந்தருளி ஊழி வெள்ளத்தை மேல்வராது தடுத்தமையால் இவ்வூருக்கு ஒற்றியூர் என்னும் பெயர் வழங்கப் பெறுகின்றது என்று தலபுராணம் கூறுகின்றது.[2]

ஒற்றி, ஊர் என்ற இருசொற்கள் சேர்ந்து ஒற்றியூர் என்று ஆகியுள்ளது.

''ஊரும் பெயரும் உடைத்தொழிற் கருவியும்
யாரும் சார்த்தி அவையவை பெறுமே''. (தொல்.மரபு.75)

என்ற தொல்காப்பிய நூற்பாவிலிருந்து இச்சொல்லின் பழைமையை உணரமுடிகின்றது.

திருவொற்றியூரில் கருவறையில் பிரம்மாவின் கோஷ்டத்துக்கு அருகே வடக்கே பார்த்த தனிக்கோயில் வட்டப்பாறை நாச்சியார் கோயில் எனப்படுகிறது. இக்கோயில் பூமியின் கீழ் மட்டத்திலிருக்கிறது. மூலத்தானக் கருவறையை விடப் பள்ளத்தில் அமைந்திருப்பதால் இது மிகவும் பூர்வீக சந்நிதியாய் இருக்க வேண்டும் என்று கூற இடமுண்டு. பின்பு கோயில் கர்ப்பக்கிருகம் கட்டிய பொழுது இதையும் சேர்த்துக் கட்டியிருக்கக்கூடும். இவ்வம்மை சிங்கப்பல்லுடன் காட்சியளிப்பதால் இவ்வுருவின் ஆற்றல் மிகு அசுரத்துவம் தெரிகிறது. மேல் வலது கையில் சூலமும், இடதுகையில் கபாலமும் இருப்பது காபாலிகர் வழி பட்ட வரலாற்றை உணர்த்துகின்றது. அடியவர்க்கு அருளுவதை அபயகரத்தால் தெளியமுடிகிறது. இடதுகீழ்க்கை உக்கம் சேர்ந்து இடுப்பு அருகில் உள்ளது. இவ்வமைப்பு அன்னையின் தனித் தன்மையை உணர்த்தி நிற்கின்றது.

இவ்வம்மை ஒருகாலத்தில் மனிதனைப் பலிகொள்ளும் கடுமையுடன் இருந்திருக்கிறாள். ஆதிசங்கரர் கி.பி. ஒன்பதாம் நூற்றாண்டில் இங்கு வந்தவர். இவர் மந்திர யந்திர ஸ்தாபனங்களால் இவள் கொடுமையை மட்டும் தனியே பிரித்துக் கிணற்றுக்குள் தள்ளி ஒருவட்டவடிவப் பாறையால் கிணற்றையும் மூடி விட்டார். அந்த யந்திரத்தை மூடியே வட்டப்பாறை இருக்கின்றது. மனிதப் பலிக்குப்பின் எருமையைப் பலிதரும் வழக்கம்[4] இருந்தது. பின்னர் பலிதரும் வழக்கம் முழுமையாகச் சட்டத்தால் நிறுத்தப்பட்டது.[5]

காஞ்சிபுரத்தில் காமாட்சியம்மனுக்கு முன்னால் யந்திரம் இருக்கிறது. அங்கே யந்திரத்துக்குத்தான் வழிபாடு; அம்மனுக் கல்ல. ஆனால் திருவொற்றியூரில் வட்டப்பாறைக் காளிக்குத்தான் வழிபாடு. இங்கே யந்திரம் மூடப்பட்டிருப்பதால் உக்கிரம் அதிகம் என்று நம்பப்படுகிறது. இங்குத் தரப்படும் குங்குமப் பிரசாதம் மங்களம் தருவதாகும். சித்திரைமாதம் இவ்வம்மைக்குப் பதினெட்டுநாட்கள் விழா எடுத்து வழிபாடியற்றப்படும். இவ் வட்டப்பறையம்மன்தான் சிலப்பதிகாரக் கண்ணகி என்கிறது புகழேந்தியின் 'கோவிலன்கதை' என்ற நூல்.

கோவிலன் கதை: தாசி மாதவிக்குப் பொருள் கொடுக்கச் சிலம்பை விற்கப் போன தன் கணவன் கோவலனை ஆராயாது கொன்றானெனப் பாண்டியன் மீது சினம் கொண்டு, கண்ணகி மதுரையைத் தன் கற்பின் வலிமையால் நெருப்புக்கிரையாக்கிய கதையை நாட்டுப்புறப் பாடலமைப்பில் கூறும் நூலாகும். இஃது நாட்டுப்புறப்பாடல் வடிவில் அமைந்துள்ளது.[6]

இந்நூலில் கண்ணகி மதுரையைத் தீக்கிரையாக்கிய பின்பு கடலோரமாகத் திருவொற்றியூர் வந்து வட்டபுரியம்மனாக மாறிய தாகக் கூறுகிறார் இதன் ஆசிரியர்.

''திருவொற்றி யூர்தனிலே தியாகரும் அம்மனுமாய்
சொக்கட்டா னாடிருந்தார் சுந்தரர்க்குத் தூதுவந்தோர்
பகடைகளா டிருந்தார் பரவையார்க்குத் தூது வந்தோர்
சதுரங்க மாடிருந்தார் சங்கிலிக்குத் தூது வந்தோர்''

என்று இந்நூல் உரைக்கின்றது.[7]

''அச்சமயம் கண்ணகியாள் அங்குவந்தாள். கண்ணகியைக் கண்டவுடன் தியாகர்தேவி அந்தப் புரந்தனிலே மறைந்து கொண்டாள். தியாகர் கையில் உள்ள பகடைகளை விட்டெறிந்து எங்கே வந்தீர் என்று கண்ணகியைக் கேட்டார். தயவுடனே கண்ணகியும் தாகம், நீர் உண்ணத் தருமாறு கேட்டாள். ஆழச் சுனையிறங்கிப் பாசியைத் தள்ளியே நீர் உண்ணுமாறு கூறினார். நீர் உண்ணச் சுனைக்குள் இறங்கியவுடன் தியாகரவர் வட்டமான பாறையைக்கொண்டு விரைவாக மூடி விட்டார்.[8]

கண்ணகி கனமோசம் வந்ததென்று நம்பூரிமார் வீதியிலே நலமாக எழுந்திருந்தாள், (ஆலயமமர் அம்மன்) அதையறிந்த தியாகர் அங்கொருகல் மூடிவிட்டார். பூந்தோட்டம் முன்பாகப் பூவை மறுபடியும் எழுந்தாள் (எல்லையம்மனாக) தியாகரும் அங்கொருகல் மூடிவிட்டார். காசிகுளம் மேட்டருகே கண்ணகி யாள் எழுந்தாள் (பொன்னியம்மனாக) தியாகரும் அங்கும் ஒருகல் மூடிவிட்டார்.[9]

கண்ணகியாள் கலக்கமுற்றதைக் கண்ட தியாகர், இன்று முதல் ஒற்றியூர்க் கோயிலிலேயே இருந்துவிடு என்றும்,

''சித்தரை மாதத்திலே சிறப்பான நாளையிலே
முதற்பூசை யுன்தனக்கு மேலாகத் தாரோ மென்றார்''[10]

வேண்டியதைக் கேள் என்று தியாகர் கூற,

''கண் மூன்றுடையவர்க்குக் கண்ணகியாளேது சொல்வாள்
எட்டுகுட்டி எட்டுபொட்டை எட்டுமுட்டை எட்டுசட்டி
கம்மாளர் பலியெனக்குக் கடவுளே தரவேண்டும்''[11]

என்று வினவ ''அப்படியே ஆகட்டும்'' என்று தியாகர் அருள் செய்ய வட்டபுரியம்மனென்று வகையாகப் பேர் பெற்று ஆண்டுக் கொருதரம் அழகுள்ள கம்மாளனைப் பலிவாங்கிக் கொண்டிருந்தாள் பூவையாகிய கண்ணகி.

''அப்போ தொருவருடம் ஆனதொரு கம்மாளன்
பத்துப் பதிகமது பாவையர்க்கு முன் படித்தான்
கங்கையாய்ப் பாலதுதான் கண்ணகிக்குத் தான் சுரக்க
வட்டபுரியம்மனவள் மனமகிழ்ந் தேது சொல்வாள்
இன்றுமுத லெந்தனக்கு இந்தப்பலி வேண்டா மென்று
எருமைக்கடா காவு தந்தால் இன்பமாய் நான்கொள்வேன்''[12]

என்றாள். அன்றோடு மானிடப்பலி நிறுத்தப்பட்டது. மேற் கூறப்பட்ட வரலாறு கண்ணகி வட்டப்பாறையம்மனாக மாறி நரபலி ஏற்றுக் கொண்டிருந்த கதையை இந்நூல் உரைப்பது புதுமையானது. சிந்தனைக்குரியது.

ஒற்றியூர்க் காளியின் அருள் பெற்றவர்

கவிச்சக்கரவர்த்தி கம்பர் வரலாற்றைத் திருவொற்றியூர்க் கோயிலோடு தொடர்புபடுத்தும் கம்பரின் தனிப்பாடல் ஒன்று உள்ளது. கம்பர் வடமொழி பயிலத் திருவொற்றியூரில் இருந்த சதுரானன் பண்டிதர் மடத்துக்கு வந்தார் என்பதை[13] பாடல் எடுத்துக் காட்டுகின்றது.

''வடமொழி இராமாயணம் செய்தவர் மூவர். அவருள் வான்மீகியைத் தழுவி நான் இராமாயணம் இயற்றுகின்றேன்''! என்று கம்பரே இராமாயண, பாலகாண்ட அவையடக்கத்தில் கூறியிருப்பதால், கம்பர் வடமொழி இராமாயணத்தை தழுவியே இராமாயணம் பாடிய செய்தி உறுதிப்படுத்தப் படுகின்றது. எனவே திருவொற்றியூரில் உள்ள வியாகரணப் பள்ளியில் வட மொழியில் உள்ள வான்மீகியைக் கற்றுக் கம்பர் தமிழில் இராமாயணத்தை எழுதினார் என்ற கருத்து ஏற்புடைத்தாகின்றது.

கம்பர், பகலெல்லாம் வடமொழியைக்கற்று, இரவெல்லாம் தமிழில் இராமாயணம் எழுதும் போது, கம்பனின் பாட்டுக்காக வட்டப்பாறை அன்னை (காளி) தீப்பந்தம் பிடித்து நின்றாள். இரவெல்லாம் பந்தம் பிடித்திருந்த காரணத்தால் கைசோர்ந்தாள், பந்தத்தைச் சரியாகப் பிடிக்குமாறு இடித்துரைக்கின்றார் கம்பர். இந்நிகழ்சியைத் தமிழ்நாவலர் சரிதை

''ஒற்றியூர் காக்க உறைகின்ற காளியே
வெற்றியூர் காகுத்தன் மெய்ச்சரிதை - பற்றியே
நந்தா(து) எழுதுதற்கு நல்லிரவில் மாணாக்கர்
பிந்தாமல் பந்தம் பிடி''[14]

என்று கம்பர் ஒற்றியூர் அன்னையை ஆணையிடுவதாகப் பாடுகின்றது

கம்பர் பாடிய மற்றொரு தனிப்பாடலில் திருவொற்றியூர் இருந்த புழற்கோட்டம் பற்றிய குறிப்பு காணப்படுகின்றது. ஒற்றியூர் இறைவர் பெயர் படம் பக்கநாதர் என்றும், தேவி மட்பக்க நாச்சியாரென்றும் வழங்கியதாகச் சான்று பகர்கின்றது.[15] இன்று மட்பக நாச்சியார் என்ற கல்வெட்டுப் பெயர் வட்பக நாச்சியாராகி ஒற்றியூர்க் காளியின் பெயர் வட்டப்பாறை நாச்சியாரென மருவி வழங்கி வருகிறது என்பர்.[16]

தேவாரக் காலம் தொடங்கித் தற்காலம் வரை திருவொற்றியூர் பாடப்பெற்று வருவதும் இத்தலத்தின் தொன்மை வரலாற்றுச் சிறப்பிற்குக் காரணமாக அமைகின்றது. கம்பர் வாழ்வோடு தொடர்புடைய நிகழ்ச்சிகள் மட்டுமே கம்பர் ஒற்றியூர் பற்றிப் பாடிய தனிப்பாடல்களில் கூறப்பட்டுள்ளன. கோவிலன் கதையில் புகழேந்திப்புலவர் சிலப்பதிகாரக் கண்ணகியே ஒற்றியூர் காளி எனச் சான்று பகர்கிறார். அடியார்கள் அனைவருக்கும் மங்களப் பிரசாதமாகிய குங்குமத்தால் உலகியல் வாழ்வில் தோன்றும் மயக்கமாகிய இருளை நீக்கி ஒளிமயமான வாழ்வளிப்பாள். பல ஆண்டுகளுக்குப்பின் இவ்வாண்டு ஜுலைத்திங்கள் இக்கோயிலில் குடமுழக்கு நடத்தப்பட்டுப் புத்தம் புதுப் பொலிவோடு காட்சியளிக்கிறது. அனைவரும் சென்று வணங்கி வட்டப்பாறையம்மனின் அருளைப்பெறலாம்.

குறிப்புகள்

1. ஒற்றியூர் புராணம்; வாசுகிச் சருக்கம்:பா.35.
2. திருவொற்றியூர் புராணம்; இலிங்க உற்பத்திச் சருக்கம். பா.34.பதிப்பு 1864.
3. கோவிலன் கதை; புகழேந்திப்புலவர். மாதர் மஞ்சரி;மலர் 6; சுத்தப்பதிப்பு 1914; பக்.111
4. சைவக் குருக்களுடன் உரையாடிய போது கிடைத்த கருத்து.
5. அறங்காவலருடன் உரையாடிய போது கிடைத்த கருத்து.
6. கோவிலன் கதை; புகழேந்திப் புலவர்; பக்.112; வரி.2-5.
7. மேற்படி.வரி. 20-25.
8. மேற்படி.வரி. 29-30
9. மேற்படி.வரி. 32-34.
10. மேற்படி.வரி. 40-42.
11. மேற்படி.வரி. 43-45.
12. மேற்படி.வரி. 46-51.
13. -14. தமிழ்நாவலர் சரிதை. கம்பர் பாடல் 99, பாடல் 94.
15. -16. தமிழ் நாவலர் சரிதை. கம்பர்பாடல்.97, பாடல் 94.

அ. சாந்தி
மதுரை காமராசர் பல்கலைக்கழகம்
மதுரை – 21

சீலம்பில் இரு நபர்களிடைத் தொடர்பு

தகவல் தொடர்பு என்பது காலங்காலமாய் மக்களோடு ஒன்றிப்போன செயலாகும். சொல் அல்லா முறைகளில் தொடங்கி, வாய்மொழியாகவும், அச்சுவழி முதல் நவீனம் வரை பல்வேறு தொடர்புச் சாதனங்களின் வழியாகவும் தொடர்பு முறைகள் பெருகிக் கொண்டே செல்கின்றன. இடைக்காலத்தில் எழுந்த சிலம்பிலும் தகவல்கள் பல தொடர்பு முறைகளில் பரிமாறிக் கொள்ளப்பட்டதை அறிந்துகொள்ள முடிகின்றது. இங்கு ஆய்விற்கு வாய்மொழியிலான இருநபர்களிடைத் தொடர்பு மட்டுமே எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளது.

இருநபர்களிடைத் தொடர்பு

தகவல் தருபவரும் பெறுவரும் நேருக்கு நேராக இருந்து தகவல் பரிமாற்றம் நிகழும் நேரடித்தொடர்பாக இருநபர் களிடைத் தொடர்பு, நிகழ்கிறது. ''ஒருவர் இன்னொரு நபரிடம், அதாவது பிரிதொரு நபருடன் அவரது ஐம்புலன்களுள் ஒன்று அல்லது பலவற்றுக்கு ஒரு தகவலை அளிப்பதன் மூலம் தொடர்பு கொள்வதை இரு நபர்களிடைத் தொடர்பு'' என்கிறோம். எந்தவொரு சாதனமுமின்றி ஒருவர் பிறிதொருவருடன் நேரிடை யாக, வாய்மொழியாகத் தகவலைப் பரிமாறிக் கொள்ளுதலே இருநபர்களிடைத் தொடர்பாகும். இந்த நேரிடைத் தொடர்பில் எதிர்ஊட்டு உடனடியாகக் கிடைக்கும். விளைவினையும் விரை வாக அறிந்துகொள்ளலாம் இவ்வாறு ஒருவர்க்கொருவர் தகவலைப் பறிமாறிக்கொள்ளும் தொடர்பு காப்பியம் முழுவதும் விரவிக் கிடக்கின்றது. இருந்தபோதிலும் மிக இன்றியமையாத் தகவல்களான பொருள் ஈட்டுவதற்காகப் புகார் நீங்கி மதுரை சென்றமை, கவுந்தியடிகளின் தவச்சிறப்பு, அடைக்கலச்சிறப்பு, கோவலன் கள்வனாக்கப் பட்டமை ஆகியவை இருநபர்களிடைத்

தொடர்பு மூலம் பரிமாறிக்கொள்ளப்படுவது மட்டுமே இங்கு ஆய்ந்தறியப்பட்டுள்ளது.

புகார் நீங்கி மதுரைக்குப் புறப்படல்

புகார் நகரத்தில் பெரும்வாணிகர் குடியில் பிறந்தவன் கோவலன், அதேபோன்ற சிறப்பினையுடைய குலமகளான கண்ணகியைத் திருமணம் முடித்து வாழ்ந்து வரும் வேளையில் ஆடல்கலையில் வல்லவளும், அழகியுமான மாதவியுடன் தொடர்பு கொண்டு வாழ்ந்தான். தவறான உறவால் தன் செல்வம் அனைத்தையும் இழந்து மீண்டும் தன் இல்லத்திற்கு வந்து சேருகின்றான்.

தன் கணவன் அருகில் இல்லாமையாலும் நீண்ட நாட்கள் பிரிந்திருந்தமையாலம் உள்ளம் வருத்தமுற்று. உடல் மெலிந் திருந்தாள் கண்ணகி. தன் மனைவி வருத்தமுற்று வாடியிருப் பதைக் கண்ட கோவலன், தான் செய்த தவற்றினை எண்ணி வருத்தமுறுபவனாக, வஞ்சனையும் பொய்யும் உடையவளோடு கூடியிருந்தமையால், தம் குலத்தவர் தமக்கு மலைபோலும் தந்த செல்வங்களையெல்லாம் அதனின் பெருமை அறியாது தொலைத்துவிட்டேன். உன்னையும் பிரிந்து செல்வங்களையும் இழந்து மீண்டும் இங்கே வருவதற்கு வெட்கத்தைத் தருகின்றது என்றான் கோவலன். அதற்குக் கண்ணகி

''நலம்கேழ் முறுவல் நகைமுகம் காட்டிச்
சிலம்பு உள; கொண்ம்''

என்ற சொன்னாள், இவ்வாறு கோவலன் கண்ணகி இருவருக்கு மிடையிலான தொடர்பில், பெருங்செல்வம் அழிந்துபட்டது, பொருள் ஈட்ட சிலம்பு உள்ளது எனும் தகவல்கள் பரிமாறப் பட்டுள்ளன. இந்த நேரிடைத் தொடர்பின் விளைவாக மதுரை புறப்பாடு அமைந்துள்ளது.

''சிலம்பினை வாணிக முதலாகக் கொண்டு, இழந்த பொருள்களையும் இனித் தேடத் துணிந்துள்ளேன். அவ்வாறு பொருள் தேடுவதற்கு மதுரை நகரமே ஏற்றது. ஆகையால் புகாரை விட்டு இப்பொழுதே புறப்படுவாயாக'' என்று கோவலன் கூறி, கண்ணகியையும் உடன் அழைத்துக்கொண்டு மதுரை நோக்கிப் புறப்படலாயினான்.

கோவன், மாதவியை விட்டுப் பிரிந்து வந்தமையையும், புகாரை விட்டு நீங்கி மதுரை செல்ல விருப்பத்தையும்

கோவலனுக்கும் கண்ணகிக்கும் இடையே நடந்த இருநபர் களிடைத் தொடர்பு மூலம் அறியமுடிகின்றது. இத்தொடர்பின் விளைவு தான் காப்பியத்தின் திருப்பு முனையாய் அமைகின்றது எனலாம்.

கவுந்தியடிகளின் தவச்சிறப்பு

கவுந்தியடிகளுக்கும் பரந்தையருக்கும் இடையே நடந்த தொடர்பின் மூலம் கவுந்தியடிகளின் தெய்வத்தன்மையை அறிந்துக்கொள்ள முடிகின்றது.

கவுந்தியடிகள், கோவலனையும் கண்ணகியையும் மதுரைக்கு அழைத்து வரும் வேளையில் களைப்பற்று, சோலையில் அமர்ந்திருந்தனர். அப்போது அவ்வழியே வந்த வம்பப் பரத்தை யும், கீழ்மகனும் இவர்களை யார் என அறிந்து கொள்ள வேண்டு மென்று பின்பு கவுந்தியடிகளிடம் கேட்கலாயினர்.

''அருந்தவமுடையவரே, நும்முடன் வந்துள்ள இவர் யார்?'' என்று கேட்டனர். அதனைக் கேட்ட கவுந்தியடிகள் ''இவர் என் மக்கள்; மானிட யாக்கையர்; வழி நடந்து வருந்தி இருக்கின்றனர். அவர் பக்கம் நெருங்காது அகலுங்கள்'' என்றார், கவுந்தியடிகள்.

இவ்வாறு நிகழும் இருநபர்களிடைத் தொடர்பில் எதிர் ஊட்டு உடனடியாகக் கிடைக்கின்றது. கவுந்தியடிகள் கூறியதைக் கேட்ட பரத்தையும் கீழ்மகனும் ''கற்றறிந்தவரே! ஒரே வயிற்றில் தோன்றியவர்கள் கணவனும் மனைவியுமாகக் கூடி வாழ்தல் உண்டோ?'' எனத் தீயவற்றை கூறி இகழ்கின்றனர். சீற்றம் கொண்ட கவுந்தியடிகள், அவ்விருவரும் நரிகளாக மாறச் சாபம் இடுகிறார். அவர்களும் நரிகளாக மாறி ஊளையிட்டுக் கொண்டு ஓடுகின்றனர். அங்கு நிகழ்ந்த தகவல் தொடர்பின் விளைவாய் அமைந்த இச்செயலின் மூலம் கவுந்தியடிகளின் தவச் சிறப்பினை அறிந்துகொள்ள முடிகின்றது.

அடைக்கலச் சிறப்பு

அடைக்கலச் சிறப்பு பற்றிய செய்தி மதுரைக் காண்டத்தில் அடைக்கலக் காதையில் தெரியப்படுத்தப்படுகின்றது. ஆயர் குடியைச் சேர்ந்த மூதாட்டியான மாதரிக்கும், கவுந்தியடிகளுக்கும் இடையே நடந்த தொடர்பு மூலம் இதனை அறிய முடிகின்றது.

வாழ்விலே மீண்டும் புதுமலர்ச்சியை எதிர்பார்த்து மதுரை நகரை நோக்கி வரும் கோவலன், கவுந்தியடிகளை வழியில்

சந்திக்கலாயினான். கவுந்தியடிகள் கோவலனையும் கண்ணகியையும் அழைத்துக் கொண்டு மதுரைக்கு வரலாயினார்கள். வரும் வழியில் ஆயர்குடியினரும் மூதாட்டியுமான மாதரி என்பவர் கவுந்தியடிகளைக் கண்டதும், அவர் திருவடிகளைப் பணிந்தாள்.

அப்போது கவுந்தியடிகள் கோவலன், கண்ணகி இருவரையும் மாதரியிடம் அடைக்கலமாகத் தருவது தவறில்லை என்று எண்ணி, மாதரியிடம் இவர்களின் குடிச்சிறப்பினை உணர்த்தலாயினார். பெருஞ்செல்வம் உடைய பெருவாணிகர்களின் புதல்வர்கள். இவர்களை இடைக்குல மடந்தையான நின்னிடம் அடைக்கல மாகத் தந்துள்ளேன் என்று கூறி,

''ஆயமும் காவலும் ஆய்இழை தனக்குத்
தாயும் நீயே ஆகித் தாங்கு''

என்றார். அதாவது கண்ணகிக்குத் தாயாக இருந்து தாங்க வேண்டும் என்று கவுந்தியடிகள் மாதரியிடம் கூறினார். மேலும், ''தவமுடையோர் தரும் அடைக்கலம்தான் சிறிது என்றாலும், அதனை ஏற்பதனால், அவர்க்கு 'மிக்க பேரின்பம் தரும்' என்ற நியதியும் நீ கேளாய்'' என சாயலன் கதையையும் கூறலானார்.

எட்டிப் பட்டத்தையுடைய சாயலனும் அவனது மனைவி யும் தான தருமங்கள் செய்து வந்தனர். 'பெற்ற செல்வத்தின் பெரும் பயன் எல்லாம். தன்னைக் காத்து அளித்து உதவியவளின் தானச் சிறப்பேயாகும்'' என்ற கூற்றையும், சாயலனும் அவன் மனைவியும் தானத்தால் பேரின்ப உலகம் சென்றனர் என்பதையும், கவுந்தி யடிகள் மாதரியிடம் எடுத்துக்கூறிக், ''கண்ணகியோடும் காலம் தாழ்த்தாது உன்னுடைய வீட்டிற்கு அழைத்துச் செல்லவாயாக'' என்றனர். மாதரியும் மறுமொழி கூறாது இசைவுடையவளாக கண்ணகியை அடைக்கலமாக ஏற்று இல்லத்திற்குக் கூட்டிச் சென்றாள்.

கவுந்தியடிகள் கண்ணகியை மாதரியிடம் அடைக்கலமாகக் கொடுப்பதற்கு முன்பு உள்மனத் தொடர்பு மூலம் ஆய்ந்து, பின் வாய்மொழியாக மாதிரியிடம் தொடர்பு கொள்கிறார். கண்ணகிக்கு அடைக்கலம் கொடுப்பாயாக என்று கேட்டவுடன் மாதிரி ஏற்றுக் கொண்டாலும், அடைக்கலச்சிறப்பின் மகத்துவத்தை விளக்குவதற் காக எட்டிச் சாயலனின் கதையையும் கூறினார். இத்தொடர்பின் விளைவு, உடனே அடைக்கலம் தருவதாக கண்ணகியை ஏற்றுக் கொண்டு அழைத்துச் செல்கின்றாள், மாதரி, இவ்வாறு இருநபர் களிடைத் தொடர்பின் மூலம் அடைக்கலத்தின் சிறப்பு காப்பியத்தில் கூறப்பட்டுள்ளது.

காப்பியத்தில் அடைக்கலச் சிறப்பினை வலியுறுத்துகின்ற இந்த அடைக்கலக் காதைக்கு அடுத்தாற்போலவே கொலைக்களக் காதை அமைக்கப்பட்டு கோவலன் கள்வனாக்கப்பட்டு கொலை செய்யப்படும் செய்தி கூறப்பட்டுள்ளது.

கோவலன் கள்வனாக்கப்படல்

மதுரைக் காண்டத்தில் கொலைக்களக் காதையில் கோவலன், பொற்கொல்லன் இருவருக்குமிடையே நிகழும் இருநபர்களிடைத் தொடர்பின் விளைவு - கோவலன் கள்வனாக்கப்பட்டான்.

கண்ணகியிடமிருந்து வாங்கிய காற்சிலம்பினை விற்க வரும் போது எதிரில் வந்த பொற்கொல்லனைப் பார்த்த கோவலன், அனைத்தும் அறிந்தவன் போலத் தெரிகின்ற அவனிடம் தன்னு டைய சிலம்பு பற்றிக் கேட்டால் பதில் கிடைக்குமென்ற எண்ணத் துடன் பொற்கொல்லனின் அருகில் சென்று,

''காவலன் தேவிக்கு ஆவதோர் காற்கு அணி
நீ விலை யிடுவதற்கு அறிதியோ'' என

கோவலன் கேட்டான்.

அதற்கு பொற்கொல்லன் ''அதனைச் செய்வதற்கு அறியேன். ஆயினும், வேந்தரின் முடி முதலிய அணிகலன்களை யான் நன்கு சமைப்பவன்'' என்று கூறிச் சிலம்பினை வாங்கி அதனின் சிறப்பினை அறிந்துகொள்கிறான்.

ஒரு தகவலானது, தருநரிடமிருந்து பெறுநரைச் சென்றடையும் போது விளைவினை ஏற்படுத்த வேண்டும் என்ற அடிப்படையில் மேனாட்டார் தகவல் தொடர்பு மாதிரிகளைப் படைத்துள்ளனர். அவற்றுள் அடிப்படை மாதிரியான லாஸ்வெல் மாதிரி இவ் ஆய்வுகளில் பொருத்தமுடையதாக அமைந்துள்ளது. தருநரிடமிருந்து தகவலானது தொடர்புச் சாதனம் வழியாகப் பெறுநரைச் சென்றடைந்து விளைவினை ஏற்படுத்துவதை இம்மாதிரி விளக்குகின்றது. சிலம்பில் முற்சொன்னவாறு இடம் பெற்றுள்ள தகவல்களைத் தந்துள்ள தகவல் தொடர்பு தருநர், பெறுநர் ஆகிய இருநபர்களிடையே நிகழ்கிறது. அத்துடன் ஏதாவது விளைவினை ஏற்படுத்துகின்றது. இவ்வாறு இரு நபர்களிடையே நிகழும் தொடர்பில் காற்றே தொடர்புச் சாதனமாக இருந்து, தகவல் பரிமாற்றம் நிகழ்ந்து, விளைவினை ஏற்படுத்துவதால், தகவல் தொடர்பு மாதிரியான லாஸ்வெல் மாதிரி பொருத்தமுடையதாக அமைந்துள்ளது.

சு. சாரதா
வேலுத்தம்பி நினைவுக் கல்லூரி
தனுவச்சபுரம்

நீகண்டுகளில் யாளை தொடர்பான செய்திகள் - ஒரு கண்ணோட்டம்

'நிகண்டு' என்பது ஒரு பொருட் பல சொற்றொகுதியையும் பலபொருளொரு சொற்றொகுதியையும் பாவிலமைத்துக்கூறும் நூல் என்றும், வைதிகச் சொற்களின் ஒரு பொருட்பல சொற்றொகுதியையும் பல பொருளொரு சொற்றொகுதியையும் உணர்த்தும் நூல் என்றும் தமிழ் லெக்சிகன் கூறுகின்றது.

நிகண்டுகள் பழங்காலத் தமிழ்க்கல்வியில் இன்றியமையாத தொரு இடத்தைப் பிடித்திருந்தன. அவை சொற்களஞ்சியங்களாகவும் சொற்பொருள் உரைக்கும் நூல்களாகவும் விளங்கின. இந்நிகண்டுகள் மனப்பாடம் செய்யும் முறையினவாக விளங்கின.

தொடக்ககால நிகண்டுகளாகிய சேந்தன் திவாகரம் (9 ஆம் நூற்றாண்டு) பிங்கலந்தை (10ஆம் நூற்றாண்டு) ஆகியன நூற்பா யாப்பில் இயற்றப் பெற்றன. பின்னர்த் தோன்றிய நிகண்டுகளில் மண்டல புருடரால் இயற்றப்பெற்ற சூடாமணி நிகண்டு (16-ஆம் நூற்றாண்டு) குறிப்பிடத்தக்க சிறப்புக்குரியதாகும். தமிழ் நிகண்டுகளில் இதுவே மிகுதியாகப் போற்றப்பெற்று வந்துள்ளது. இது மனப்பாடம் செய்வதற்கேற்ப விருத்த யாப்பால் அமைந்தது. மண்டல புருடர் தன்னுடைய நூலின் பாயிரத்தில் 'வருமுறை திவாகரம் போல் வைத்துப் பிங்கலந்தை தன்னில் ஒருங்குள பொருளு மோர்ந்திட்டு ரைத்தனன்விருத்தந் தன்னில்' என்று கூறுவதிலிருந்து இம்மூன்று நிகண்டுகளும் தம்முள் ஒன்றொடொன்று தொடர்புச் சங்கிலியைக் கொண்டுள்ள தன்மையை அறிந்து கொள்ளலாம். மண்டல புருடர் யாத்த சூடாமணி நிகண்டை அடியொற்றி விரிவு செய்யப்பெற்ற நூல் வேதாசிரியர் சூடாமணி நிகண்டு - ஒரு சொல் பல்பொருள் தொகுதி

(19-ஆம் நூற்றாண்டு) ஆகும். ஒன்றோடொன்று தொடர்புடைய இந்நான்கு நிகண்டுகளிலும் இடம்பெறுவனவாகிய யானை தொடர்பான செய்திகளைப் ஆராய்ச்சிக் கண்ணோட்டத்தோடு பார்ப்பதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

திவாகரத்தில் தெய்வப் பெயர்த்தொகுதி, மக்கட் பெயர்த் தொகுதி, விலங்கின் பெயர்த்தொகுதி, இடப்பெயர்த்தொகுதி, செயற்கை வடிவின் பெயர்த்தொகுதி, ஒலி பற்றிய பெயர்த் தொகுதி, ஒருசொல் பல் பொருட் பெயர்த்தொகுதி, பல்பொருட் கூட்டத்தொரு பெயர்த்தொகுதி ஆகிய தொகுதிகளில் யானை தொடர்பான செய்திகள் இடம் பெறுகின்றன.

பிங்கலந்தையில் பாயிரம், வான்வகை, வானவர் வகை, ஐயர்வகை, அவனி வகை, ஆடவர் வகை, அநுபோக வகை (உலோக வகை இயல் வகை, படைவகை, செயற்கை வகை, அக்குரோணி வகை), மாப்பெயர் வகை, ஒரு சொற்பல்பொருள் வகை என்ற பிரிவுகளில் யானை தொடர்பான செய்திகள் இடம் பெறுகின்றன.

நிகண்டு சூடாமணியில் தேவப்பெயர்த்தொகுதி, மக்கட் பெயர்த் தொகுதி, விலங்கின் பெயர்த்தொகுதி, இடப் பெயர்த் தொகுதி, செயற்கை வடிவப் பெயர்த்தொகுதி, பண்பு பற்றிய பெயர்த்தொகுதி, ஒலி பற்றிய பெயர்த்தொகுதி ஒரு சொற்பல் பொருட் பெயர்த்தொகுதி, பல்பெயர்க் கூட்டத்தொரு பெயர்த் தொகுதி ஆகிய தொகுதிகளில் யானை தொடர்பான செய்திகள் இடம் பெறுகின்றன.

இங்கு இக்கட்டுரை யானை தொடர்பான செய்திகளை யானையின் பெயர்கள், உறுப்புக்கள், அணிகலன்கள், தெய்வ-தேவ-யானை தொடர்புகள், பிற செய்திகள் என்ற பாகுபாட்டின் கீழ்ப் பகுக்கப்பட்டுள்ளன.

யானை என்ற சொல் பெரிய, வீரமிக்க, நன்மை தருகின்ற, விலை மதிப்புள்ள, மங்கலமிக்க என்றெல்லாம் பொருள்படும்படி பொது வழக்கில் பாமர மக்களால்கூடப் பயன்படுத்துமாற்றைக் காணலாம். 'யானை இருந்தாலும் சரி ஆயிரம் பொன் செத்தாலும் சரி ஆயிரம் பொன்' என்ற ஆன்றோர் வாக்கு யானையின் விலை மதிப்பான தன்மையைக் காட்டி நிற்கிறது. இத் தன்மைத்தான புனிதமான யானையின் பெயர்களைப் பார்ப்போமாக:

தும்பி, கடிவை, புகர்முகம், தோல், கரி, உம்பல், வயமா, பகடு, நால்வாய், கரிணி, குஞ்சரம், கயம், களபம், மருண்மா,

தந்தி, மாதங்கம், வழுவை, வாரணம், வேழம், வனவிலங்கு நாகம், மதகயம், அத்தி, இபம், கும்பி, போதகம், உவா, தூங்கல், மாதிரம், கைம்மா, ஆம்பல், கோட்டுமா, புழைக்கை,தோள், சுண்டாலி, பூட்கை, மொய், பொங்கடி, நிருமதம், மதாவளம், தந்தாவளம், பெருமா, மந்தமா, கரேணு, சாசகம், சூசை, தகர், ஓங்கல், கசம், அஞ்சனை, இடை, உவாப்படி, கோட்டம், இருள், ஒருவை, கயமுனி, அறுகு, முலி என்ற ஐம்பத்தெட்டுப் பெயர்கள் யானையைக் காட்டி நிற்கின்றன.

யானை உறுப்புக்கள்

யானை உறுப்புக்கள் என்ற நிலையில் யானை மத்தகம், யானை மதம் பாய் சுவடு, யானை நுதல், யானைக்கடைக்கண்ணி, யானைக்கொம்பு யானைக்கொம்பின் நடு, யானைப் பல்லடி, யானைத் துதிக்கை, யானைத் துதிக்கையுமிழ் நீர், யானைச் செவி, யானை நடுச்செவி, யானைச் செவியடி, யானைக்கவுள், யானை முகம், யானை வாய், யானை முதுகு, யானை முன்கால், யானை பின்கால், யானை வால், யானை வால் நுனி, யானை வால் கீழிடம், யானைப்பிடர் என்பன நுணுக்கத்தன்மையோடு எடுத்தாளப் படுகின்றன.

யானை அணிகலன்கள்

யானை முகபடாம், யானை நுதல்வி சிந்தூரம், யானைக் கொம்பின் பூண், யானை மேற்றவிசு, யானைக் கச்சை, யானைப் புரசைக் கயிறு, யானை மணி, யானைக் கட்டும் தறி என்பன அணிவகைகளாகத் தெரிய வருகின்றன.

யானைக் காலில் பூட்டும் சங்கிலியைப் பற்றி ஒரு நிகண்டுமே பேசவில்லை என்பது குறிப்பிடத் தக்க செய்தியாகும்.

தெய்வ-தேவ-யானை தொடர்பு

விநாயகன் என்னும்போதே நம்முன் யானை முன்வந்து நின்று விடுவது இயல்பே. விநாயகன் ஒற்றைக்கொம்பன் (ஏகதந்தன்), யானை முகவன் (அத்திமுகத்தோன், தந்திக்கடவுள்) என்றிவ்வாறு அறியப்படுவதிலிருந்து விநாயகன் யானை தொடர்பு தெரிய வருகின்றது.

சிவனைக் கூறுங்கால் யானையுரித்தோன் என்று கூறுமாற்றையும் காணலாம்.

ஆறுமுகக் கடவுளை கூறுமிடத்து யானை முகவற்கிளை யோன் என்றும் அவன் ஊர்திகளுள் ஒன்று யானை என்பதுவும் தெரியவருகிறது.

ஐயனார் (சாத்தன்) வெள்ளை யானை வாகனன் (வெள்ளை யானையூர்தி) என்றவாறு அறியும்படியாக உள்ளான்.

வீரபத்திரனைக் கூறுங்கால் யானை முகவனுக்கிளையோன் என்ற நிலையில் தெரிய வருகிறான். சப்தமாதர்களுள் இந்திராணிக்குக் களிறு ஊர்தியாக விளங்குகிறது.

இந்திரன் யானை என்ற நிலையில் அயிராவதம் தெரிய வருகிறது. எண்திசைக்குறிப்பு கூறும்போது குபேரனுக்கு யானை எடுத்தாளப்படுகிறது.

பிற செய்திகள்

மா, ஒருத்தல், பகடு, உம்பல், தகர், போதகம், கன்று, வாரணம், போத்து, குழவி, பிடி, விலங்கு என்றிவ்வாறு வரும் கூட்டப் பெயர்களுள்ளும் யானை இடம்பெறுமாற்றைக் காணலாம்.

யானை யாளியின் பெயர்களாக யாளி, அறுகு, பூட்கை என்பன இடம்பெறுமாற்றைக் காணலாம். ஆண்யானை, பெண் யானை, கன்று என்று வேறுபடுத்தியும் யானைகளைத் தரம் பிரித்துக் காட்டப்படுகின்றன.

பிறந்த நிலப் பெயரைப்பெற்ற யானைகளாகக் கிரிசரம், வனசரம், நதிசரம் என்பனவற்றை அறிந்து கொள்ள முடிகிறது.

யானைத்திரளின் பெயர் என்ற நிலையில் கடகம் இடம் பெறுகிறது. யானைக் கட்டத்தில் தலையானை என்ற நிலையிலும் அறியப் பெறும் யானை யூதநாதன் ஆவான். எண்திசை யானைகளாக அயிராவதம், புண்டரீகம், வாமனம், குமுதம், அஞ்சனம், புட்பதந்தம், சார்வபௌமம், சுப்பிரதீகம் என்பன அலங்காரம் செய்கின்றன.

யானை நோய், யானை வீழும் படும்குழி, யானை படுக்கும் இடம், யானை செல்லும் வழி, யானைக்கூடம், யானைத்தூண், யானைத்தோட்டி, யானைத் திரியும் காடு, யானைப்பந்தி, யானைப்பாகர், யானை மதம் பற்றிய குறிப்புகளும் இடம் பெறுகின்றன.

கீழ்வரும் இடங்களில் யானை தவிர்க்க முடியாத இடத்தைப் பெறுமாற்றைக் காணலாம்

நால்வகைப் படைகளுள் யானைப்படையும் ஒன்று. அரசன் அறுவகைத் தானையுள் களிறும் ஒன்று. நகர்படு திரவியம்

ஐந்தனுள் யானைக்கும் பங்கு. ஏழிசையோசைகளுள் யானை ஓசையும் எடுத்தாளப்படுகிறது. அரசர்களுக்குரிய எண்பேர் ஆயத்தில் யானை வீரர்களுக்கும் பங்கு உண்டு. படையெண் என்ற நிலையில் ஒரு களிறு. ஒரு தேர்ப் புரவி நான்கு படைஞர் ஐம்பதின்மர் கொண்ட தொகுப்பு என்று தெரியவரும்போதும் யானைக்கு அங்கும் முதலாவது இடம் கொடுக்கப்படுகின்ற மையைக் காணலாம். மலை, யாறு, நாடு, ஊர், மாலை, குதிரை, யானை, கொடி, முரசு, தானை என்பவை தசாங்கம் என்ற முறையிலும் யானை தவிர்க்க முடியாததே. திருப்பொறி வகை பதினாறு கூறுமிடத்தும் வேழம், தோட்டி ஆகியவை இடம் பெறுகின்றன. மங்கலச் சொல்லாகவும் யானை இடம் பெறுகிறது. அரசர்க்குரிய இருபத்தொரு வகைச் சின்னங்களுள்ளும் யானை, தோட்டி என்பன இடம் பெறுகின்றன. எட்டுத்திக்குக் குறி குறித்துக் கூறுங்காலும் யானைக்கு இடமுண்டு. புலவருடைய கொடியில் பொறிக்கப்பட்டிருக்கும் சின்னங்களுள் யானைச் சின்னமும் ஒன்றாக இடம்பெறுகிறது.

நான்கு கால்களும் கோசமும் துதிக்கையும் வாலுமாகிய ஏழுறுப்பும் நிலத்திலே தோய்ந்து காலில் வெண்மையான நகமுடையதாய், வால் நாலுகால் உடம்பு துதிக்கை இரண்டு கொம்பு என்னுமவற்றாற் கொல்ல வல்லதாய் ஏழு முழமுயர்ந்து ஒன்பது முழ நீண்டு பத்து முழச் சுற்றுடைய தாம் முற்பாக முயர்ந்து பிற்பாகந் தாழ்ந்து அழகியதாய், தறுகண்ணினையும் சூழி சார்ந்த மத்தகத்தினையுமுடையதாய், சுளகு போன்ற செவியினையும் மும்மதத்தையுமுடையதாயுள்ள தாய் யானை அரசர்க்குரிய அரசுவாகத் திகழ வேண்டும் என்பதாகும்.

முடிவுரை

யானை தொடர்புடைய பலவற்றை இக்கட்டுரை காட்டி நின்றது. திவாகரம், பிங்கலந்தை, சூடாமணி, வேதகிரியார் சூடாமணி ஆகிய நிகண்டுகளை வைத்து ஆராயும்போது பிங்கலந்தையார் யானை பற்றிய குறிப்புக்களை நிறைய தந்தருளியுள்ளார் என்பதுவும் புலனாகிறது. மொத்தமாகப் பார்ப்போமானால் யானை தொடர்பான ஏராளமான குறிப்புக்கள் இந்நான்கு நிகண்டுகளிலுமாகக் கிடைக்கின்றன என்பதுவே தெரிய வருகிறது. நிகண்டாசிரியர்களின் ஆழ்ந்த புலமையும், பரந்தபட்ட அறிவும், நுணுக்கப்பார்வையும் நமக்குத் தெரிய வருகின்றன. கறுப்பு என்னும்போதே நம்முன் யானை தான் நிழலாடும் என்பதுவும் கூறித் தெரிய வேண்டுவதில்லை.

செ. சாரதாம்பாள்
மதுரை காமராசர் பல்கலைக்கழகம்
மதுரை – 625 021

மடலேறுதலும் பிறழ்நிலை உளவியலும்

சங்க அக இலக்கியங்கள், தலைவனுக்கே உரியதாக, ''மடலேறுதல்'' என்ற நிகழ்ச்சியைக் குறிப்பிடுகின்றன. இந்நிகழ்ச்சியின் பின்னணியில் வெளிப்படும் தலைவனின் மனநிலைகள் இயல்பிற்கு மாறானவைகளாகத் தோன்றுகின்றன. எனவே இந்நிலையில் புலப்படும் தலைவனின் நடத்தைக் கூறுகளை, பிறழ் நிலை உளவியல் கூறுகளுடன் ஒப்பிட்டு விளக்குவது இக்கட்டுரையின் நோக்கமாகும். நற்றிணையில் (ஆலம்பேரி சாத்தனார், மடல்பாடிய மாதங்கீரனார் கலித்தொகையில் நல்லந்துவனார்) வரும் மடலேறுதல் குறித்த ஆறு பாடல்கள் மட்டும் இக்கட்டுரைக்கு அடிப்படை ஆதாரங்களாக அமைகின்றன.

பெருந்திணையும் மடலேறுதலும்

தொல்காப்பியம், ''ஏறிய மடல்திறம்'' என்று மடலேறுதலைப் பெருந்திணைக்குரியதாகக் குறிப்பிடுகிறது. மெய் தொட்டுப் பயிறல், என்ற நூற்பாவில், ''மடல்மாக் கூறும் இடனும் மாறுண்டே'' என்று மடலூர்தலை, தலைவனுக்குக் களவில் நிகழும் கூற்றாகச் சுட்டுகின்றது.

புறப்பொருள் வெண்பாமாலை பெருந்திணைப் படலத்தில் பெண்பாற் கிளவிக்குரியதாகப் பெருந்திணையைக் குறிப்பிடுகிறது. உரையாசிரியர் ஐயனாரிதனார். பெருந்திணையாவது மடல்மாக் கூறுதலுடன் அமையாது. மடலேறுதலும், தலைவி, தலைவனுக்கு இளையலாகாது ஒத்த பருவத்தினாதலும் அறவழிகுணன் உடையனாதலும் காமம் மிகுதியானே, எதிர்ப்பட்டு வலிதிற் புணர்தலும் ஆகிய அன்பு நெறியின் வழி இயங்காக்காமம் என்று விளக்குகிறார். எனவே மடலேறுதல் என்பது, களவில் தலைவியைப் பெறத் தடை ஏற்படும்போது, காம மிகுதியால், தலைவன் அறவழிகுணம் உடையனாய்த் திகழும்போது நிகழ்வது என்பது புலனாகின்றது.

மடலேறுதலின் நோக்கமும், விளக்கமும்

மடலேறுதலில் தலைவனைத் தோழி குறை கூறி மறுக்க, தலைவன் தன் காதலைப் புறத்தார்க்குப் புலப்படுத்தி, தலைவியை எவ்வாறாகினும் அடையவேண்டும் என்பதை நோக்கமாகக் கொண்டிருக்கின்றான்; தன் நோக்கம் நிறைவேற ஒரே வழி மடலேறுதல் என்று துணிகிறான்; முற்றிய பெண்ணை மடலால் குதிரை போன்று வடிவமைத்து, அதற்கு ஆவாரம் பூ பூளைப்பூ முதலியன சூடி, தானும் என்பூமாலை, எருக்கம்பூ மாலை முதலியவற்றை அணிந்து, தலைவி படத்தை வரைந்து அதைக் கையில் தாங்கி, மடல்கள் ஓலிக்க, மடல்மாவில் ஊர்ந்து, ஊர்தோறும் வருதல் மடலேறுதலாகும்.

மடலேறுதல் பாடல்களின் கருத்தமைவுகள்

நற்றிணை, (152, 377), கலித்தொகையில் (138-141) உள்ள மடலேறுதல் பாடல்கள் தன் கட்டுக்கடங்கா மனநிலைகளைக் கூறுதல், தடைகளைச் சொல்லி வருந்துதல், காமத்து நோயின் மிகுதியைப் புலப்படுத்துதல், தனது நோக்கினைக் கூறுதல், மடலேறும் தன்மையினைக் கூறுதல், தலைவியை மகட்கொடையாகப் பெறுதல் போன்ற கருத்தமைவுகளை அடிப்படைக் கூறுகளாகக் கொண்டுள்ளன. இக்கருத்துக்கள் அனைத்தும் தலைவியைப் பெறத் தலைவனுக்கு மறுப்பு ஏற்படும்போது காமத்து மிகுதியால் எழுந்த மாறுபட்ட மனநிலைகளையே சுட்டுகின்றன.

தலைவனின் மனப்பான்மையும் மாறுபட்ட மனநிலையும்

மனிதனிடம் காணப்படும் இயல்பான நடத்தையிலிருந்து மாறுபட்டிருக்கும் நடத்தையினைப் பிறழ்வு உளவியல் (Abnormal Psychology) என்பர்.

''ஒரு மனிதனுடைய தேவைகளுக்கும் அவன் வாழ்ந்து வருகின்ற சூழ்நிலையின் தேவைகளுக்குமிடையில் அவன் தன்னைப் போதுமான அளவுக்குப் பொருத்தப்பாடு செய்து கொள்ள இயலாமலிருக்கின்ற ஒரு நிலையைத் தான் இயல் பிறழ்ந்த நடத்தை'' என்று உளவியல் கருதுகின்றது. (மு. இராச மாணிக்கம், உளவியல் துறைகள், ப.312).

தங்களின் இயல்பான மனநிலையிலிருந்து இயல்பு கடந்த நிலைக்குச் சென்று விட்டவர்கள், இயல் பிறழ்ந்தவர்கள் ஆகிறார்கள். தலைவனும், இத்தகைய மனநிலையில் தான் இருக்கின்றான்.

மதம்பிடித்த யானை தன் தோட்டிக்கு அடங்காது செல்கின்ற நிலை போன்று ''அறிவும் நம் அறிவு ஆய்ந்த அடக்கமும் நாணொடு வறிதாய்'' (கலித்.138) தன் நிலைக்குள் கட்டுக் கடங்காது சென்று விட்டது என்கின்றான். ''தன் நிலை கண்டு பிறர் நகைப்பதைக் கூடப் பொருட்படுத்தாத மனநிலை இங்குத் தலைவனிடம் காணப் படுகிறது. ''பாடு எனில் பாடவும் அல்லேன் ஆடுக எனில் ஆடவும் ஆற்றுகேன்'' என்று எதிலும் ஒருமைப்படாத தன் மனநிலையைக் கூறி அல்லலுறுகின்றான். மடலேறுவதற்குக் காரணமான இம்மன நிலை முன்பிருந்த இயல்பான தன்மைகளிலிருந்து மாறுபட்ட நடத்தைக்கு ஆளான தற்கட்டுப்பாடில்லாத தலைவனின் பிறழ் நிலை உள்ளத்தினையே சுட்டுகிறது.

சூழ்நிலைக்குத் தகுந்தவாறு நடக்காத, பொருத்தப்பாடின் மையே பிறழ்நிலை உளவியலைத் தோற்றுவிக்கும் என்பர். இப் பொருத்தப்பாட்டினைச் சிதைக்கும் சிக்கல்களாக, உளவியலில் மனமுறிவு, போராட்டம், மன இறுக்கம் என்ற மூன்றினைக் குறிப் பிடுவர். இம்மூன்று நிலைகளுக்கும் மடலேறும் தலைவன், உட்படுத்தப்படுகிறான்.

தலைவியை அடைய இயலாத் தடைகளும் மனமுறிவும்

ஒரு மனிதனின் அடிப்படைத் தேவைகளோ, இன்றியமை யாத விருப்பமோ நிறைவேறாது தொடர்ந்து தடைகள் ஏற்படு மானால், அம்மனிதனுக்கு அச்செயலில் ''மனமுறிவு'' ஏற்படும். ஓர் அழுத்தமான தேவையும் அதனை எய்தி நிறைவுற இயலாத உணர்வும் உடனியையும்போது நேரும் அனுபவமே உள்ள முறிவு என்பர் (து. சிவராஜ், சங்க இலக்கியத்தில் உளவியல், ப.1).

தலைவனுக்கும் தான் விரும்பும், தன் வாழ்க்கைக்குத் தேவை யான, தலைவியை அடையத் தடை ஏற்படுகிறது. தலைவியைத் தன்னுடன் சேர்த்துவைக்குமாறு தோழியை வேண்ட அவள் மறுத்து விடுகிறாள். (குறுந்.32)

கண்டவிர் எல்லாம் கதுமென வந்து ஆங்கே
பண்டறியாதீர் போல நோக்குவீர்'' (கலித்.140)

என்று தன் நிலையைக் கண்டும் அறியாதது போல் இருக்கும் கண் டோரைக் கண்டு வருந்துகின்றாள். பிறிதோரிடத்தில் இவ்வூரானது ஒண்டொடி நோய் நோக்கில் பட்ட என் நெஞ்சநோய் கண்டும் கண்ணோடாது உள்ளது என்று புலம்புகின்றான். இங்கு ஊரார்ின் சமூகப் புறக்கணிப்புக்களும், தோழியின் மறுப்பும் தலைவனுக்குத் தடைகளாக அமைகின்றன. இத்தடைகள் அவனுக்கு மனமுறிவைத் தருகின்றன.

மனமுறிவுக்குட்பட்ட ஒருவன். தன் தேவை நிறைவேறும் வரை, கடுமையாக முயற்சி செய்வான். முடியவே முடியாது என்ற நிலையில்தான் கைவிடுவதாக இல்லை. தலைவியை மடலேறி யாவது அடைவேன் அல்லது தன் உயிரையும் விடுவேன் என்று முயற்சியைத் தொடர்கின்றான். இத்தீவிரத் தன்மை வாய்ந்த மனமுறிவும் தொடர்ச்சியும் உளப் போராட்டத்தை உண்டு பண்ணுகிறது. தான் மடலூர்ந்து ஊரார்க்குப் புலப்படுத்தினால் தலைவிக்குப் பழிவரும், பழியைப் பார்த்தால் தலைவியுடன் சேராது என் உயிர் நில்லாதே (குறுந்.32) என்று உழலுகின்றான். மனமுறிவும் உளப்போராட்டத்தின் உச்ச நிலையும் தலைவனை மன இறுக்கத்திற்கு உட்படுத்துகிறது.

உளப்போராட்டம் தொடர்ச்சியும் மன இறுக்கமும்

உள்ளப்போராட்டம் தொடரும்போது உள்ளத்தில் உணர்வு வயப்பட்ட ஒரு விறைப்புத்தன்மை ஏற்படும் இதையே ''மன இறுக்கம்'' என்று உளவியலில் குறிப்பிடுவர்.

மனமுறிவு பெற்ற மனிதனும் சரி. மனப்போராட்டத்தில் உள்ள மனிதனும் சரி. ஒரு கலக்கம் அடைந்த நிலையில் இருக்கின் றான். மன இறுக்கப் போராட்டத்திலிருந்து எழுந்த மன எழுச்சித் துலங்கலினால், வலிமையூட்டப்படுகிறது. இந்த நிலை கவலை அல்லது தவிப்பு (anxiety) என்பர். (மு. இராசமாணிக்கம் ப.326) இக்கவலையும் தவிப்பும் ஓர் ஆதரவற்ற உணர்வை உண்டு பண்ணும் தன்மையுடையனவாகும்.

இங்கும் தலைவன், தன் தேவையை நிறைவேற்ற யாரும் ஒத்துழைக்காதபொழுது தனக்கு யாரும் ஆதரவில்லை என்ற மன உணர்வைத் தான் பெறுகின்றான்.

''என் எவ்வந்நோய்
தூங்குதல் தேற்றா இடும்பைக்கு உயிர்ப்பாக''. (கலித் 141).

மடல் மா ஏறுவேன் என்று புலம்புகின்றான். தலைவியை அடைய முடியாத என் உயிர் உப்பு இயல்பாவை உற்றதுபோல உக்குவிடும் என்கின்றான்.

காமநோயின் மிகுதியும் நனவின் சிதைவும்

தலைவனின் உள்ளப் போராட்டத்திற்கும் உள்ள இறுக்கத் திற்கும் அடிப்படைக் காரணமே காமநோய் ஆகும். இக்காம நோய் தலைவனுக்கு அழிவுக்குட்படுத்தும் ஊக்கியாக அமையத் தனக்கு இருக்கும் நற்குணங்களையெல்லாம் கைவிட்டு, அறவழிகுணன்

உடையவனாகின்றான். காமத்தின் மிகுதி, தலைவனின் இயல்பான சிந்தனையை, தன் ஊக்கத்தைத் திறனிழக்கச் செய்கிறது. இத் திறனிழப்பு மாறுபட்ட நடத்தைக்கு வழிவகுக்கிறது.

முடிவுகள்

1) தலைவன் தன் காமத்து மிகுதியால் தன் நோக்கம் நிறைவேற அவன் எடுக்கும் முயற்சிகள், அனைத்தும், அவன் இயல்பிலி ருந்து மாறுபட்ட நடத்தைகளையே சுட்டுகின்றன.

2) தலைவியை அடையத்தடை ஏற்படும்போது தலைவனுக்கே மனமுறிவு ஏற்படுகிறது.

3) தனது நோக்கினை நிறைவேற்ற, மடலேறுதல் என்ற மன ஊக்கத்தினைப் பெறுகின்றான்.

4) மன ஊக்கமும் நோக்கமும் ஒன்று சேர, அவன் உளப்போராட்டத் திற்கும் மன இறுக்கத்திற்கும் உட்படுத்தப்படுகின்றான்.

5) மனமுறிவும் போராட்டமும் இறுக்கமும் தீவிரமடையப் பிறழ்பட்ட நடத்தைக்கு ஆளாகின்றான். அந்நடத்தையின் விளைவு மடலேறத்துணிகின்றான். எனவே மடலேறுதல் என்ற நிகழ்ச்சியில் வெளிப்படும் தலைவனின் மனநிலை பிறழ்நிலை உளவியலின் எதிரொலியே எனலாம்.

6) மேலும் தலைவன் தன் காமநோய்க்கு ஊராரை, தலைவியை, இயற்கைப் பொருட்களைக் காரணம் காட்டுதல், உளவியல் கூறும் தற்காப்பு உளவியல் நுட்பங்களுடன் (Defense Mechanism) ஒப்பிட வாய்ப்புள்ளது.

7) மடலேறுதலின் முடிவாக, ஊரார்ின் இரக்கம் தலைவனுக்குக் கிடைக்க, தலைவியைத் தமர் தலைவனுக்கே கொடுக்கின்றனர். எனவே, மடலேறுதலும் ஒரு வகையில் மகட் கொடையாக அமைகிறது. சங்க இலக்கியத்தில், கலித்தொகையில் மட்டும் தலைவன் கூற்று தவிர, கண்டோர் கூற்றும் மடலேறுதல் பாடல் களில் அமைந்துள்ளது.

8) தொல்காப்பியம் சுட்டும் ஏறிய மடல்திறம் என்ற பண்பு தவிர, மற்றைய தேறுதல் ஒழிந்த காமத்து மிகுதிறம், மிக்க காமத்து மிகுதியும் ஆகிய பெருந்திணைப்பண்புகளும் மடலேறுதல் நிகழ்ச்சிக்கு அடிப்படைப் பண்புகளாக அமைகின்றன.

9) சங்க அகப்பாடல்களில் மடலேறுதல் குறித்த பாடல்கள் மிகவும் குறைந்த எண்ணிக்கையில் உள்ளன. இத்தன்மை அச்சமுதாயம் இதைச் சமுதாய வழுக்களாக எண்ணியிருக்கலாம் என்று கருத இடம் அளிக்கிறது.

சாவினி இளந்திரயன்
சென்னை – 600 086

புறநானூறு காட்டுகின்ற கருத்து முரண்பாடுகளும் தீர்வுகளும்

மனித வாழ்க்கை முரண்பாடுகள் நிறைந்தது. இன்பம்- துன்பம், இனியது-இன்னாதது, அடிப்பது-அரவணைப்பது, பிரிதல்-கூடுதல், கோபம்-அமைதி என்று நிகழ்வு வகையாலும், பண்பு வகையாலும், கருத்து வகையாலும் பல முரண்பாடுகளை மனித இனம் எப்போதும் சந்தித்தே வருகிறது.

என்றாலும் ஒவ்வொரு இனமும் இந்த முரண்பாடுகளை எப்படித் தீர்த்து வைக்க முனைகிறது என்று பார்க்கும் போதுதான் அந்த இனத்தின் பண்பாட்டு அடிப்படை அல்லது அதன் உயிர்த் தத்துவம் தெற்றெனப் புலப்படுகிறது.

இலக்கியமாவது சமூக அமைப்பு, குடும்ப உறவுகள், வர்க்க மோதல்கள் ஆகியவற்றின் நேரடிப் பிரதி என்று கூறுவர். எனவே பழந்தமிழ் இலக்கியமாகிய புறநானூறு நூல் காட்டுகின்ற பல்வேறு முரண்பாடுகளை ஆய்வு செய்யும்போது, அது எழுந்த காலத்தில் தோன்றிய தனிமனித முரண்பாடு, சமுதாயப் பழக்க வழக்க முரண்பாடு, வர்க்க முரண்பாடு, இன முரண்பாடு என்று பல முரண்பாடுகளை நாம் இனம் காண்பதோடு, அவற்றைத் தீர்க்கச் சமுதாய நல்லோர்களாகிய கவிஞர்கள் படைத்துக் காட்டும் தீர்வுகள் அக்காலத் தமிழ்மக்களின் கோட்பாடுகளை வெளிப்படுத்துதலையும் உணர முடிகிறது.

தனிமனித முரண்பாடு என்று சொல்லும்போது இரண்டு வகையாகக் காணலாம். ஒரு தனிமனிதன் தனக்குள்ளேயே எது சரி, எது தவறு என்று மயங்கி, தன்னுள்ளேயே முரண்பட்டுப் பின் ஒரு தீர்வுக்கு வருகிறான். 'உயிரா, மானமா?' என்ற பிரச்சினைக்கு ஆட்பட்டு, சேரமான் கணைக்காலிரும்பொறை எழுதி வைத்த பாட்டு (புறம்.74) மானத்தை முன்நிறுத்துகிறது. அந்த முடிவிற்கு அவன் வரக் காரணமாக இருந்தது எது என்றால், 'வீரமரணம்

ஒன்றுதான் சிறந்தது' என்று அதற்கான பழக்கவழக்க நெறி முறைகளை வகுத்திருந்த தமிழ்ச் சமுதாயக் கோட்பாடுதான் என்பது அவன் பாட்டடிகளால் புலப்படுகிறது. 'குழவி இறப்பி னும், ஊன்தடி பிறப்பினும் 'ஆள் அன்று' என்று வாளின் தப்பார்' என்பது எவ்வளவு ஆழமான சிந்தனையின் வெளிப்பாடு.

தனிமனிதனைப் பற்றி மற்றவர்கள் முரண்பட்ட கருத்துகள் கொள்வது உண்டு. அவை சிலபோது அவரைப் போற்றுவதாகவும் சிலபோது தூற்றுவதாகவும் அமையும். ஓரிடத்தில் தூற்றிய ஒருவரே அவரைப் பிறிதோரிடத்தில் போற்றுவதும் உண்டு.

'இனியை பெரும எமக்கே...இன்னாய் பெரும நின் ஒன்னா தார்க்கே' என்று அதியமானை அவ்வையார் பாடும் புறம்.94 ஆம் பாடலும் ஞாயிறு அனையை நின் பகைவர்க்கு, திங்கள் அனையை எம்மனோர்க்கே' என்று பாண்டியன் சித்திரமாடத்துத் துஞ்சிய நன்மாறனை, மதுரைக் கூலவாணிகன் சீத்தலைச் சாத்தனார் பாடிய புறம் 59-ஆம் பாடலும் தனிமனிதனிடம் முரண் பட்டு நிற்கின்ற இரண்டு குணங்களைப் போற்றிப் பாடுபவை. 'யாரிடத்தில் எப்படி நடந்து கொள்ள வேண்டும்' என்ற கோட்பாட்டைத் தெளிவுபடுத்துபவை என்று சொல்லலாம்.

'அருகிற் கண்டும் அறியார் போல, அகம்நக வாரா முகன் அழி பரிசில்' என்று தான் அறிந்த ஒருவன் தன்னைப் பற்றி ஏதும் அறியான் போலக் கொடுத்த வறட்டுப் பரிசிலையும் (புறம்.207), 'காணாது ஈத்த இப்பொருட்கு யானோர் வாணிகப் பரிசிலன் அல்லேன்' என்று தன்னைக் காணாமலே பிச்சை இடுவது போலக் கொடுக்கப்பட்ட பரிசிலையும் (புறம் 208) அப்படிக் கொடுத்த மன்னர்களோடு முரண்பட்டு அப்பரிசில்களை ஏற்றுக் கொள்ளாமலே திரும்புகிறார் பெருஞ்சித்திரனார் என்னும் புலவர். இதனால் புலவரின் தனிப்பெரும் பண்பு வெளிப் படுகிறது என்பது மாத்திரமல்ல; அக்காலப் புலவர்களின் செம் மாந்த நடைமுறையும் தெரிகிறது. பிறிதொரு புலவரிடத்தில் வேறொரு மன்னன் முரண்பட்டதைக் கண்டு சினத்தோடு இடித்துரைக்கிறார் மற்றொரு புலவரான கோவூர்கிழார் (புறம் 47), 'வரிசைக்கு வருந்தும் இப்பரிசில் வாழ்க்கை' என்று புலவரின் வாழ்க்கை முறையை எடுத்து விளக்குவதோடு, 'மண்ணாள் செல்வம் எய்திய நும்மோர் அன்ன செம்மலும் உடைத்தே' என்று மன்னன் மனத்தில் இருக்கும் ஏற்றத்தாழ்வு என்னும் தவறான முரண்பாட்டைக்களையத் த்வறவும் இல்லை.

'ஒரு நாட் செல்லலம், இருநாட் செல்லலம், பன்னாள் பயின்று பலரோடு செல்லினும் தலைநாள் போன்ற விருப்பினன் மாதோ?' (புறம் 101) என்று போற்றுகின்ற அதியனையே, 'தன் அறியலன் கொல், என் அறியலன் கொல்?...எத்திசைச் செலினும் அத்திசைச் சோறே' (புறம் 206) என்று அவ்வையார் கடிந்து நிற்கிறார் என்றால் அதியமான் நெடுமான் அஞ்சியினிடத்து இருந்த முரண்பட்ட இரு இயல்புகளின் வெளிப்பாடு என்று எண்ணத் தோன்றுகிறதல்லவா?

அதியமானை வெகுதூரத்திலிருந்து வந்தும் ஒரே ஒரு முறை கூடக் காண முடியாத பெருஞ்சித்திரனார் அவனின் ஒரு பக்கத்தையே கண்டவராக, புலவர்-அரசர் தொடர்புரிமையை மட்டும் நினைத்துச் சினம் கொண்டார். அதியனைப் பலகாலும் நெருங்கிப் பழகிய அவ்வையோ குறிப்பிட்ட சமயத்தில் கோபம் கொண்டாராயினும் அது அவனுள் இருக்கும் இந்த முரண்பாட்டை இடித்துரைத்துத் திருத்தும் நோக்காகவே கொள்ளக் கிடக்கிறது.

சமுதாயப் பழக்க வழக்கங்களிலும் நம்பிக்கைகளிலும் மக்கள் அவ்வப்போது எதிர்கொள்ளும் நடைமுறைச் சிக்கல்களில் தோன்றும் முரண்பாடுகளும் அவற்றைத் தீர்க்கச் சமுதாய நல்லறிஞர்களான புலவர்கள் மேற்கொண்ட முயற்சிகளும் புறநானூற்றில் ஆங்காங்கே இடம் பெற்றிருக்கின்றன.

குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை என்று தனித்தனி நிலப்பகுதிகளில் தனித்தனியான பழக்க வழக்கங்க ளோடு வாழ்ந்து வந்த மக்கள், நாடு என்ற பொது அமைப்பின் கீழ் ஒன்றிணைந்து கொள்வினை, கொடுப்பினைகளால் ஒன்று கலந்து வாழத் தொடங்கிய காலக்கட்டத்தில் அவரவருடைய பழக்க வழக்கங்கள் மோதிக் கொள்ளுகின்ற இடங்கள் கட்டாயமாக இருந்திருக்கும். அதில் ஒன்றைப் புறம் 239 விவரிக்கிறது. நம்பி நெடுஞ்செழியன் என்ற குறுநிலமன்னன் மறைந்ததும், அவன் உடலைப் புதைப்பதா, எரிப்பதா?' என்ற கேள்வி எழுந்து உறவினர்கள் முரண்பட்டு நிற்கிறார்கள். பேரெயின் முறுவலார் என்ற புலவர், நம்பி நெடுஞ்செழியனின் பல சிறப்புக்களையும் படம் பிடித்துக் காட்டி, ''செய்ப எல்லாம் செய்தனன் ஆகலின் இடுக ஒன்றோ சுடுக ஒன்றோ'' என்று அவர் கூறி வருந்துவது பொங்கி நின்ற இரு சாராரையும் அமைதியாகச் சிந்திக்கச் செய்திருக்கும் என்பதில் அய்யமில்லை.

மறுஉலகச் சிந்தனை ஒன்று தோன்றி இயல்பான மனித நேயத்துக்கே தவறான விளக்கம் எழுந்தபோது மனம் கொதித்துக்

குமுறியிருக்கிறார்கள் மக்கள், ''இம்மைச் செய்தது மறுமைக்கு ஆம் என்னும் அறவிலை வாணிகன் ஆய் அல்லன்'' (புறம்.134) என்று உறையூர் ஏணிச்சேரி முடமோசியாரும், ''மறுமை நோக்கின்றோ அன்றே, பிறர் வறுமை நோக்கின்று அவன் கைவண்மையே'' (புறம்.141) என்று பேகனைப் பாடிய பரணரும் சமுதாயத்தில் வந்து பரவிய தவறான கொள்கையை எதிர்த்து நின்று குரல் கொடுக்கிறார்கள். ஆனால், இவர்களுடைய இந்தத் தீர்ப்புக்குரல் கால ஓட்டத்தில் மங்கிவிட்டது என்பதும் அதை மீட்டெடுக்கும் முயற்சி பெரியார் காலத்திலிருந்து மீண்டும் தலைதூக்கியுள்ளது என்பதும் தமிழக வரலாறு.

உழவர் குடிமக்களுக்கு ஏற்பட்ட நடைமுறைச் சிக்கலைப் புறம் 35-லும் புறம்.184-லும் பார்க்க முடிகிறது. முன்னையது அரசனின் போர் வெறி அல்லது வெற்றியின் காரணமாக உழவர் களின் பணியைத் தாழ்வாகக் கருதி, போருக்காக அவர்களை வருத்தி வசூலிக்க முற்பட்ட மன்னவனின் மனநிலை. மற்றையது வரி வசூலிக்கப் புறப்பட்ட அதிகாரிகளின் அட்டகாச நடவடிக்கை. இவ்விரண்டு நிலைகளும் உழவர்களின் வாழ்வைப் பாதித்ததால் முரண்பாடு தவிர்க்க முடியாதது. இந்த முரண் பாட்டைச் சரிசெய்ய அக்கால அறிஞர் பெருமக்கள் உடன் எழுந்து செயல்பட்டிருக்கிறார்கள்.

''வருபடை தாங்கிப் பெயர்புறத் தார்த்து
பொருபடை தரூஉம் கொற்றமும் உழுபடை
ஊன்றுசால் மருங்கின் ஈன்றதன் பயனே'' (புறம்.35)

என்று வெள்ளைக்குடி நாகனாரும்

''அறிவுடை வேந்தன் நெறியறிந்து கொளினே
கோடி யாத்து நாடு பெரிதும் நந்தும்'' (புறம்.184)

என்று பிசிராந்தையாரும் தக்க செய்திகளைத் தக்க தருணத்தில் மன்னர்களுக்கு எடுத்துக்காட்டித் தீர்வு கண்டிருக்கிறார்கள்.

நாட்டைக் காக்கும் காவலர்களான அரசர்களுக்குள் முரண் பாடு ஏற்படும்போது மக்கள் நலனில் அக்கறைகொண்ட புலவர் பெருமக்கள் உடனுக்குடன் அவைகளைத் தீர்த்துவைக்க முனைந் திருக்கிறார்கள்.

ஒரே குடியில் பிறந்த நலங்கிள்ளிக்கும், நெடுங்கிள்ளிக்கும் இடையில் பகைமை மூண்டது. அது, மன்னன்மகன் மன்னன் என்ற சம்பிரதாயத்துக்கு முரண்பட்டுத் தகுதி வாய்ந்த ஒருவனே

பட்டத்துக்குத் தகுதியுடையவன் என்ற எண்ணத்தின் விளைவு. (அப்போதும் தகுதி வாய்ந்த யாரொருவரும் என்று கொள்ளப் படவில்லை. அந்த அரசக்குடியில் யார் ஆட்சியைப் பெறுவது என்பதே முரண்பாடு.) இதை நலங்கிள்ளியே, ''குடிப்புரவு இரக்கும் கூரில் ஆண்மைச் சிறியோன் பெறின் அது சிறந்தன்று மன்னே (புறம்.75) என்று குறிப்பிடுகிறான்.

இதே போல் கோப்பெருஞ்சோழனின் மக்கள் தந்தையோடு முரணி நிற்கிறார்கள் (புறம் 213). இவ்விரண்டு இடங்களிலும் குடிப்பெருமைகேடும் பகைவர்களுக்கு மகிழ்வூட்டும் வாய்ப்பாக அமைந்துவிடும் என்பதையும் சுட்டிக்காட்டித் தீர்வு காண்கிறார்கள் அறிஞர் பெருமக்கள். கோவூர்கிழார், 'ஒருவீர் தோற்பினும் தோற்ப நும்குடியே; இருவீர் வேறல் இயற்கையும் அன்றே, அதனால் குடிப் பொருள் அன்று நும் செய்தி'' (புறம்.45) என்று நலங்கிள்ளியையும் நெடுங்கிள்ளியையும் சந்துசெய்ய முற்படுகிறார்.

''இளையோர் தோற்பின்
நின்பெருஞ் செல்வம் யார்க்கும் எஞ்சுவையே
அமர்வெஞ் செல்வ! நீ அவர்க்கு உலையின்
இகழுநர் உவப்பப் பழியெஞ்சுவையே''

என்று கோப்பெருஞ் சோழனைப் பொத்தியார் அறிவுறுத்தி மாற்றுவழி காணச் செய்கிறார்.

முடிவுரை

ஒட்டுமொத்தமாகப் பார்க்கும் போது தனிமனித னிடத்திலும், சமுதாயத்திலும், ஏன் அரசியலிலும் கூடத் தவறுகள் நேர்ந்த போதெல்லாம் புலவர்கள் தங்கள் உயிரையும் பொருட் படுத்தாமல் நேர்நின்று தீர்ப்புரைத்து அதன் மூலம் மன்னர் களையும் இடித்துரைத்துத் திருத்தியிருக்கிறார்கள். அவர்கள் உள்ளத்தில் தெளிவும் தெம்பும் இருந்தும் அவர்களின் சொல் எடுபடாமல் போன இடங்கள் இரண்டு. ஒன்று காம வெறியும் குடும்பவெறியும் மோதிக் கொண்ட போது, மற்றொன்று, 'நல்ல போலவும் நயவ போலவும், தொல்லோர் சென்ற நெறிய போலவும்' பேசிக் குழைந்த போது அதற்கு மயங்கி விட்டவர் களை ஒன்றும் செய்ய இயலாமை. எனவே, சங்க இலக்கியத்துள் ஒன்றாகிய புறநானூற்றில் காணப்படும் கருத்து முரண்பாடுகள் செம்மாந்த தமிழ்வாழ்வைப் பீடுறக் காட்டுவதோடு அதன் சீரழி விற்குக் காரணமான வெறிநிலையையும், பண்பாட்டுப் படை யெடுப்பு வந்து பரவத் தொடங்கியதையும் தொட்டுக் காட்டத் தவறவில்லை.

இரா. சாவித்திரி
கு. நா. அ. மகளிர் கல்லூரி
தஞ்சாவூர்

காட்டில் உரிமை - ஓர் அறிமுகம்

1995 ஆம் ஆண்டு சாகித்திய அகாதமி பரிசு பெற்ற வங்க நாவல் 'காட்டில் உரிமை'. பெருமை பெற்ற இந்நாவலை வங்க மொழியில் படைத்தவர் மகாசுவேதாதேவி. தமிழாக்கம் செய்தவர் சு. கிருஷ்ணமூர்த்தி. வங்க மொழியில் படைக்கப்பட்ட இப்புதினம் அடிமைத் தளையின் ஆக்கிரமிப்புகள், கொடுமைகள் அது தந்த அவலங்களை நினைப்பதன் மூலம் சுதந்திரம் தந்த சூழ்நிலை களைச் சிந்திக்கத் தூண்டுகிறது. சுதந்திரத்தின் அருமையைப் படிப்பவர்க்கு உணர்த்துவது இப்புதினத்தின் சிறப்பு.

இந்திய விடுதலைப் போராட்ட வரலாற்றில் பீர்சா முண்டாவின் பெயரும் கலகமும் எல்லா வகையிலும் நினைவு கூரத்தக்கது. செக்கிழுத்தும், சிறையில் வாடியும் குடும்பத்தையே மறந்தும், துறந்தும் தீரமான முறையில் உயிரைக் கொடுத்து அடிமைத்தளை யகற்றிய பல்லாயிரக் கணக்கான இந்திய வீரர் களுக்கு இக்கட்டுரையைக் காணிக்கையாக்குகிறேன்.

இந்திய நாட்டின் பல்வேறு பகுதிகளில், பல்வேறு காலங்களில் நில உடைமையாளர், மதகுருமார், ஆட்சியாளர் ஆகியோரின் கொடுமைகளுக்கும், சுரண்டலுக்கும் ஆளான ஏழை மக்கள் அவர்களுக்கெதிராகக் கிளர்ந்து எழுந்திருக்கின்றனர். இக்கிளர்ச்சிகள் ஆட்சியாளர்களால் அடக்கப்பட்டுவிட்டாலும் மக்களிடையே விழிப்புணர்வைத் தோற்றுவித்த வகையில் இந்திய விடுதலைப் போராட்டத்திற்கு உந்துசக்தியாகின. இத்தகைய எழுச்சிகளுள் ஒன்று *19* ஆம் நூற்றாண்டின் இறுதிக்காலத்தில் சோட்டா நாக்பூர்ப் பகுதியில் பீர்சா முண்டாவின் தலைமையில் நடைபெற்ற முண்டாக் கலகமாகும். இந்நிகழ்ச்சியைக் கருவாகக் கொண்டு புனையப்பட்டதுதான் இப்புதினம்.

இப்புதினத்தில் முண்டா இனத்தாரின் வரலாறு அவர்களது சமூக அமைப்பு, நம்பிக்கைகள், பழக்க வழக்கங்கள் அவர்கள் கிளர்ச்சிக்கான காரணங்கள் ஆகியன முழுமையாகச் சித்திரிக்கப் பட்டுள்ளன.

முண்டா இனத்தவரில் சுகானா முண்டாவின் மகனாகப் பிறந்தவன் பீர்சா. வியாழக்கிழமையில் பிறந்ததால் (பிருகஸ்பதி வாரம்) பீர்சா என்று பெயர் வைக்கப்பட்டது. இவன் முன்னோர் காலத்தில் காடும், மலையும், நிலமும் காலியாகவே இருந்தன. அந்நிலத்தில் எவனொருவன் கடப்பாரையால் முளையடித்து விடுகிறானோ அவனே அந்தக் குடியிருப்பின் அமைப்பாளன். முண்டாரி மொழியில் 'கூட்' என்றால் முளை என்று பொருள். ஆகவே இத்தகைய குடியிருப்பு கூட்காட்டி என்று அழைக்கப் பெற்றது.

முண்டர மக்கள் காடுகளில் வேட்டையாடுவர், மாடு மேய்ப்பர், காடுகளை அழித்து நிலத்தைப் பண்படுத்தி விவசாயம் செய்வர், குடும்பத்துக்கு வேண்டிய பொருட்கள் கூடை மண்வெட்டி, கடப்பாரை, வில், அம்பு செய்வர். இவ்வாறு தோன்றிய முண்டாக்களின் கிராமங்கள் தில்மா, தாடார், உலிஹாத்து சால காடு. நாற்புறமிருந்தும் வேற்று மனிதர்கள் வந்தார்கள். அவர்களைத்தான் முண்டாக்கள் 'திக்கு' என்று அழைத்தனர். முண்டாக்களின் நிலபுலன்களை அபகரித்துக் கொண்டவர்கள் தாம் திக்குகள். அவர்கள் முண்டாக்களை அடிமைப்படுத்தி அவர்களிடம் கூலியில்லாமல் வேலைவாங்கும் பேட்பேகாரி முறையை அமுலுக்குக் கொண்டுவந்தனர். தங்கள் பிறப்புரிமை யாகக் கொண்டிருந்த உலகத்திலிருந்து அவர்கள் விரட்டப் பட்டார்கள். தம்மைக் காப்பாற்ற ஒருவன் வருவான் என்ற அவர்கள் நம்பிக்கை நனவாயிற்று. பீர்சா பகவான் ஆனான். முண்டாக்களின் தலைவனாய், வழிகாட்டியாய், சுமைதாங்கியாய் அறியாமை இருளை அகற்றிய ஆதவனாய் ஆனான். இருபத் தைந்து வயதில் வாழ்க்கை முடிக்கப்பட்டுவிட்ட பீர்சாவின் வாழ்க்கை வரலாறு ஆயிற்று. அந்த வரலாறுதான் காட்டில் உரிமை.

முண்டாக்களின் வாழ்க்கை மிகமிக எளியது. காட்டில் பண்படுத்தப்பட்ட நிலத்தில் பயிர் விளைவித்து அந்த விளைச்சலைச் சொந்தக் களஞ்சியத்தில் கொண்டு வந்து சேர்ப்பது. கூலியில்லாமல் அடிமை வேலை செய்வதிலிருந்து விடுதலை. அடிப்படை மனித உரிமையாக முண்டாக்கள்

அடைய நினைத்தது இதுவே. ஒரு சிறிய மூட்டை, மண்ணாலான சமையல் சட்டி, பாய், சினாப்புல்லின் விதை ஒரு படி, ஒரு கட்டி உப்பு. இதுதான் ஒவ்வொரு முண்டாவுக்கும் உரிய சொத்து.

மூடநம்பிக்கைகளும், பழக்க வழக்கங்களும் முண்டாக்களைச் சுமையாக அழுத்திக் கொண்டிருக்கும் வரையில் அவர்களால் தலைநிமிர்ந்து நிற்க முடியாது. ஆகையால் அவர்களுக்குத் தேவையான எளிய சுமைகளற்ற கொள்கைகளுக்கு பீர்சா தலைவனாகிப் புரட்சிக்கனலை மெல்ல எழுப்புகிறான். சுதந்திரமாக வாழும் சுகம் கொடுக்க விரும்புகிறான். தொடக்க காலத்தில் முண்டாக்கள் அனுபவித்து வந்த காட்டின் உரிமை அவர்களுக்கு வேண்டும். கூட்காட்டி கிராம அமைப்பு வேண்டும். ஆனால் இப்போது சோறில்லாத முண்டாவுக்கும், அவனது இலட்சியத்துக்குமிடையே வரிசை வரிசையாகப் பெரிய சுவர்கள் ஜமீன்தார், லேவாதேவிக்காரன், வியாபாரி, கங்காணி, துரை மார்கள் அரசாங்கத்தின் உதவியால் நாளுக்கு நாள் உயர்ந்து கொண்டே வரும் இச்சுவர்களை உடைக்கப் பீர்சா முண்டாக்களைப் புரட்சி செய்யத் தூண்டுகிறான்.

வில் அம்பு ஈட்டிகளை வைத்துக் கொண்டு துப்பாக்கிகளுடன் போரிடுவது கடினம். இருந்தாலும் முண்டாக்களின் ஒற்றுமை அவர்களின் ஆயுதப்பற்றாக்குறையைச் சரிகட்டி விடும் என்ற நம்பிக்கை பீர்சாவுக்கு உண்டு.

1878 - ஆம் ஆண்டில் முண்டாக்கள் அரசாங்கத்துக்குக் கோரிக்கை விடுத்தார்கள். சோட்டா நாக்பூர் எங்களது உரிமை நாடு அங்கே எங்கள் உரிமை ஏற்றுக்கொள்ளப்படவேண்டும் என்று கேட்டதற்கு எந்தப்பலனும் இல்லை. காட்டோக்கஞ்சி, உடுக்கக்கோவணம், வில்லும் அம்புமே ஆயுதம், முதுகின்மேல் கூட்டு வட்டிச் சுமை இவையே முண்டா இனத்தின் விதியாயிற்று.

திக்குவையும், சர்க்காரையும் அழித்து விடுங்கள், உங்கள் உரிமைகளை நீங்களே பிடுங்கிக் கொள்ளுங்கள் என்று போதிக்கும் தேவதை அவர்களுக்குத் தேவைப்பட்டது. அவசியம் நேர்ந்தால் இறக்கத் தயாராய் இரு. இறந்துபோ என்று உபதேசிக்கும் கடவுளுக்காக ஏங்கியிருந்தபோது அந்த ஏக்கத்தைத் தீர்த்தவன் பீர்சா. காலரா, வைசூரி, பாம்புக்கடி, புலியின் தாக்குதல் இவற்றையெல்லாம் சாவதற்கான தலையெழுத்து என்று நம்பிய முண்டாக்களை அவற்றுடனும் போராட முடியும் என்று கற்றுக்கொடுத்தவன் பீர்சா. முண்டாக்கள் தங்கள் உரிமையை அடைவதற்கு இரத்தத்தை எடுக்கவும் வேண்டும், கொடுக்கவும்

வேண்டும் என்ற விஷயத்தை ஒவ்வொரு கூட்டத்திலும் சொன்னவன். அவன் ஆணையிட்டால் எல்லா முண்டாக்களும் உயிரைத் துச்சமாக மதித்துச் சண்டையில் குதித்து விடுவார்கள்.

முண்டாக்களும் சூரியனைப் பிடிப்பதற்காக வானத்தை நோக்கித் தாவலாம் என்ற நம்பிக்கையை ஊட்டியவன் பீர்சா. அவன் அதற்குச் செய்த முயற்சிகளும், செயல்களும் அவனைக் 'கலகக்காரன்' என்று காட்ட 1895 இல் கைது செய்யப்பட்டான். முண்டாக்கலகம் வலுத்தது. முண்டாக்களைக் கொல்ல உத்தர விட்டது அரசு. கிராமங்கள் சூறையாடப்பட்டன. பிரிட்டிஷ் அரசின் அடக்கு முறைகள் கடுமையாகச் செயல்பட்டன. நம்முடைய விரோதிகளாகிய திக்குகள் முண்டாக்களின் நகத்துக்குச் சமானம் என்ற விஷயத்தை முண்டாக்களுக்குப் புரிய வைத்து விட்ட திருப்தியை அடைகிற அளவுக்கு முண்டாக்களின் புரட்சி நடைபெறுகிறது.

முண்டாக்களின் புரட்சி

முண்டாக்கள் விவசாயம் செய்யவில்லை. கடன் வாங்க வில்லை. அவர்கள் வாய்திறந்து ஒன்றும் பேசவில்லை. ஆனால் அதே சமயம் அவர்கள் ஜமீன்தார்கள், லேவாதேவிக்காரர்கள் பேச்சையும் கேட்பதில்லை. விளைவு - வயலில் வேலை செய்ய ஆள் கிடைக்கவில்லை. யாரும் நிலத்தை அடகு வைத்துவிட்டு வட்டிக்குப் பதிலாகக் குற்றேவல் செய்யத் தயாராக இல்லை.

நீங்க பட்டினி கிடந்து சாகத்தான் போறீங்க என்று யார்ராவது அவர்களிடம் சொன்னால் அவர்கள் 'பட்டினி கிடக்கப் பயப்படு வதற்கு நாங்கள் என்ன திக்குவா' என்று பதிலளிக்கிறார்கள். முண்டா இனத்தைப் பிரிட்டிஷ் சிங்கத்தின் பயங்கரப் பிடிக்கு, எதிராகத் துணிவுடன் நிறுத்திவிட்டான் பீர்சா. 'உசல்குலான்' என்ற ஐந்தெழுத்து மந்திரம் அதற்குரிய பலனைக் கொடுத்துத் தங்கள் உரிமைக்காக முண்டாக்களைப் போராட வைத்தது. முண்டாக்களின் போராட்டத்தின் விளைவாக 217 பேர் காவலில் வைக்கப்பட்டனர். வழக்கில் விசாரிக்கப்பட்டவர்கள் 482 பேர். மூவருக்குத் தூக்குத்தண்டனை. 40 பேருக்கு ஆயுள் தண்டனை. சாட்சிகள் சேகரிக்கும் சாக்கில் கால வரையறையின்றி முண்டாக்க ளைச் சிறையில் அடைத்து அவர்கள் முதுகெலும்பை முறிப்பது அரசின் நோக்கம். முண்டாக்களுக்குச் சற்றும் புரியாத சட்ட முறைகளாகிய பொறியிலும், வலையிலும் அவர்களை மாட்டி விட்டு அவர்கள் மன உறுதியை முறிப்பது அவர்கள் மேற்கொண்ட வழியாக இருந்தது.

பீர்சா உயிரோடிருக்கும் வரை முண்டாக்கள் உற்சாகமாய் இருப்பார்கள். ஆகையால் பீர்சா விசாரணைக் கைதியாகவே சாவது விரும்பப்பட்டது. பீர்சா நடமாடிக் கொண்டிருக்கும் போதே அவன் சாவு தீர்மானிக்கப்பட்டுவிட்டது. ஜூன் 9 ஆம் தேதி காலையில் அவன் உயிரோடிருக்கும் போதே அவன் சாவு பற்றிய அறிக்கை எப்படி எழுதப்பட வேண்டும் என்பதும் தீர்மானிக்கப்பட்டு விட்டது. அன்று காலை 9.00 மணிக்கு பீர்சா முண்டா ஆசியக் காலராவால் இறந்தான் என்ற அறிக்கை எழுதப் பட்டது. 1900 ஆம் ஆண்டு ஜூன் 9 ஆம் நாள் காலை ஒன்பது மணி பத்துநிமிடம் என்று இப்புதினம் நிறைவு பெறுகிறது.

மறக்க முடியாத கதைமாந்தர்கள் - பீர்சா

முண்டாக்களை மனமார நேசித்தவன். சிறையில் சங்கிலியை இழுத்துக் கொண்டு நடமாடி ஒலியெழுப்பிய அவன் இறுதியில் அதற்கும் சக்தியில்லாமல் தளர்ந்தபோதும் சங்கிலி எழுப்பும் ஒலியைக் கேட்க ஆவலாய்ப் பக்கத்தறையில் கிலிபிடித்த முண்டாக்கைதிகள் காத்திருப்பதை அறிந்து அதற்காக அதைச் செய்தவன். தான் இறந்தாலும் தன் சாம்பலைக் காட்டிலே இறைக்க வேண்டும் என்று சொன்னவன்.

சுகானா முண்டா

பீர்சாவின் தந்தை. தன் மகன் 'பகவான்' ஆனதால் அவன் ஏவலுக்கு ஏங்கி நின்றவன்.

கர்மி

பீர்சாவின் தாய் பல்லாயிரக் கணக்கான முண்டாக்களின் வறுமை, ஏமாற்றம், பட்டினியின் இடர்களைத் தன்தோளில் சுமந் திருக்கும் பீர்சாவை நினைத்துப் பெருமிதப்படும் தாய். அவன் மறைவுக்குப்பின் தினமும் ஆற்றங்கரைக்கு வந்து என்றாவது ஒரு நாள் திரும்பி வருவான் என்று நம்பிக் காத்துக் கொண்டிருப்பவள். ஆறு, மரம், மண் இதையெல்லாம் பார்த்துக் கொண்டிருந்தால் தன் மகனே கிடைத்து விட்டதைப்போல் நினைப்பவள்.

'மனிதன் மிருகமல்ல. ஆகையால் அவன் திடீரென்று கடுமையான தலைகளிலிருந்தும் விடுதலை பெறமுடியும்' *(ப. 57)* என்பதைப் பீர்சா கண்ணியத்துடனும், தீரத்துடனும், கர்வத்துடனும் செய்து காட்டியவன். எதிரிகளையும் வியக்க வைத்தவன். அடிமைத்தளையின் கொடுமையையும் சுதந்திரத்தின் பெருமை யையும் ஒருசேர உணர்த்தும் புதினம் 'காட்டில் உரிமை'.

சி. சாவித்திரி
தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர்

திருக்குறளும் தெலுங்கு சதக இலக்கியங்களும் - ஓர் ஒப்பாய்வு

சமுதாய அறக்கோட்பாடுகள் குன்றும்போது அவ்வச் சமுதாய மேன்மைக்கான கருத்துக்களைத் தாங்கி அறநூல்கள் தோன்றுகின்றன. தமிழ் கூறு நல்லுலகில் களப்பிரர் ஆட்சிக் காலத்தில் ஏற்பட்ட கலகங்களும் சமுதாயச் சீர்கேடுகளும் அறநெறி இலக்கியங்களைத் தோற்றுவித்தன. பதினென் கீழ்க்கணக்கு நூல் களில் பதினொரு நூல்கள் அறநிலைகளை வலியுறுத்துவனவாக அமைகின்றன. இவ்வகையில் தோன்றிய அறநூல்களில் திருக் குறளுடன் தெலுங்கு சதக இலக்கியங்களான ''சுமதி சதகம், வேமன்ன சதகம், குமார சதகம்'' என்ற மூன்று நீதி சதகங்கள் மட்டும் ஒப்பாய்வுக்குரியனவாகக் கொள்ளப் பெற்றுள்ளன.

மேற்காணும் நூல்களின் ஒப்புமைகளைக் கீழ்க்கண்டவாறு

1. காலப்பகுப்பு, 2. நூல்களின் அமைப்பு, 3. பரம்பொருள் சிந்தனை, 4. சினத்தின் கேடு, 5. இடனறிதல், 6. இன்னா செய்யாமை என வரிசைப்படுத்தலாம்.

காலப்பகுப்பு

சுமதி சதகம் பதின்மூன்றாம் நூற்றாண்டில் பத்தென எனப்படும் பத்தெ பூபாலுடு என்பவராலும், வேமன்ன சதகம் பதினெட்டாம் நூற்றாண்டில் வேமன்ன என்பவராலும், குமார சதகம் 1830 ஆம் ஆண்டில் பத்தி அப்பல நரசய்ய என்பவராலும் இயற்றப்பட்டுள்ளன. திருக்குறள் கி.மு. முதல் நூற்றாண்டில் திருவள்ளுவரால் இயற்றப்பட்டுள்ளது என்பது பெரும்பான்மை அறிஞர்தம் கருத்து ஆகும்.

நூல்களின் அமைப்பு

திருக்குறள் அறம், பொருள், இன்பமென மூவகைப் பகுப்புடன் திகழ்கிறது. அறத்துப்பால் மொத்தம் 38 அதிகாரங்களை உடையது. இவை பாயிரம்-4, இல்லறம்-20, துறவு-13, ஊழ்வியல்-1 என அமைகின்றன. பொருட்பால்-70 அதிகாரங்கள், அரசியல்-25, அங்கவியல்-32, ஒழிபியல்-13 என்று அதிகாரங்களைப் பகுத்துக் கொள்ளும். இன்பத்துப்பால் களவு-7, கற்பியல்-18 என மொத்தம் 25 அதிகாரங்களை உடையது. மொத்தம் 133 அதிகாரங்கள். அதிகாரத்துக்கு பத்து என்ற எண் வரையறையுடன் 1330 குறட்பாக்கள் அமைந்துள்ளன.

சதகம் என்பது 100 பாடல்களைக் கொண்டது. ஆனால் சில சதகங்கள் 100 பாடல்களைக் கொண்டும், சில சதகங்கள் 100க்கு அதிகமான பாடல்களைக் கொண்டும் இருக்கின்றன. திருக்குறளில் கடவுள் வாழ்த்து முதலாக அதிகார எண்ணிக்கை தொடங்குவதுபோல தெலுங்கு சதக இலக்கியங்களில் கடவுள் வாழ்த்துப் பாடலையும் சேர்த்துதான் எண்ணிக்கை கணக்கிடப் பட்டுள்ளது. இந்த எண்ணிக்கையில் சுமதி சதகம் 100 பாடல்களையும், வேமன்ன சதகம் 108 பாடல்களையும் குமார சதகம் 104 பாடல்களையும் கொண்டுள்ளன. இவற்றில் உட்பகுப்புகள் ஏதுமில்லை. குறள் யாப்பு அமைவது போன்று சுமதி சதகம் 'கந்தம்' என்பதிலும், வேமன்ன சதகம் 'ஆடவெலதி' என்பதிலும், குமார சதகம் 'கந்தம்' என்ற யாப்பு அமையில் நான்கு அடிகளைக் கொண்டுள்ளது. இப்பாடல்களில் இறுதி அடி அல்லது இறுதி சீர் மகுட நியமத்துடன் காண்பது சிறப்புற்றதாகும். வேமன்ன சதகம் 'விஸ்வதாபிராம வினுர வேமா' என்ற அடி மகுடத்துடனும், குமார சதகம் இறுதிச் சீர் 'குமார' என்ற மகுடத்துடனும், சுமதி சதகம் இறுதிச் சீர் 'சுமதி' என்ற மகுடத்துடனும் இயற்றப் பட்டுள்ளன. (தமிழில் பராபரக்கண்ணியைப் போன்றது) இந்த மகுட நியமம் ஒரு குறிப்பு பொருள் தோன்ற வாசிப்பவனை அல்லது கேட்பவனை முன்னிலைப்படுத்தி அமையும்.

பரம்பொருள் சிந்தனை

''அகர முதல எழுத்தெல்லாம் ஆதி
பகவன் முதற்றே உலகு'' (குறள் : 1)

என்ற குறளின் வழி இறைவனின் உலகப் பொதுமை வெளிப்பெறுகிறது.

'அ' கரம் எழுத்துக்களுக் கெல்லாம் முதன்மையாகத் திகழ்வது போல் பல்வேறு பிரிவுகளை உள்ளடக்கிய இவ்வுல கிற்கு முதன்மையானவனாக இறைவன் திகழ்கின்றான். இதன் வழி உலகத் தோற்றத்திற்குக் காரணமாகிய இறைவன் ஒருவனே என்ற வள்ளுவரின் பரம்பொருள் சிந்தனை வெளிப்பெறுகிறது. இதேபோல் வேமன்னாவின் பரம்பொருள் சிந்தனையை வெளிப் படுத்தும் வகையில்,

''பசுல வன்னெ வேறு பாலேக வர்ணமென
புஷ்பசாதி வேறு பூஜையொகடே
தர்ஸனமுலு வேறு தைவம்பொகடே
விஸ்வதாபிராம வினுர வேம!'' (பாடல் : 46)

என்ற பாடலில் குறிப்பிடுகின்றார். இதில் பசுக்களின் நிறங்கள் பலவாயினும் பாலின் நிறம் ஒன்றே. பூக்களின் வகைகள் வேறானாலும் பூஜை ஒன்றுதான். அது போலத் தரிசனங்கள் வேறானாலும் கடவுள் ஒன்றுதான், என்று தன்னுடைய பரம் பொருள் சிந்தனையைக் கூறியுள்ளார். இப்பாடலில் திரு வள்ளுவர் கருத்துக்கிணங்க வேமன்னா பாடலிலும் கருத்து ஒற்றுமையைக் காண முடிகின்றது.

இச் சிந்தனை மற்ற இரு தெலுங்கு கவிஞர்களின் நூல்களில் அமையவில்லை. மாறாகக் குறிப்பிடத்தக்க தெய்வத்தைத் தொழும் வகையில் விளங்குகின்றன. சுமதி சதகம் இராமனைப் பற்றிப் போற்றிப் பாடிய வகையில் அமைந்திருக்கிறது. குமார சதகம் விட்டுணுவைப் போற்றிப் பாடிய வகையில் அமைந்திருக்கிறது.

சினத்தின் கேடு

சினமே அனைத்துப் பாவங்களுக்கும் மூல காரணமாக அமை கிறது. மனிதனின் மகிழ்ச்சிக்குத் தடையாக அமையக்கூடிய சினத் தைவிட மற்றொரு பகைவன் அவருக்கு இல்லை. ஆதலால் பகை வரிடமும் கோபம் கொள்ளாமல் பொறுமையைக் கடைப்பிடிக்க வேண்டியது அவசியம். சினத்தினால் விளையும் கேட்டினைக் கூறுகின்ற வள்ளுவர்,

''தன்னைத்தான் காக்கின் சினங்காக்க காவாக்கால்
தன்னையே கொல்லும் சினம்'' (குறள் : 305)

என்று சினம் கொண்டவனை அச் சினமே அழித்துவிடும் என்ப தனைக் குறிப்பிடுகிறார். அத்தோடு மட்டுமல்லாமல் சினமானது தன்னை மட்டுமல்லாது தன்னைச் சேர்ந்தவர்களையும் அழித்து விடக் கூடியது என்பதனை,

''சினமென்னும் சேர்ந்தாரைக் கொல்லி இனமென்னும்
ஏமப் புனையைச் சுடும்'' (குறள் : 306)

என்று கூறியுள்ளார். ஆதலால் மனிதன் தன்னைத்தான் பாதுகாத்துக் கொள்ளவேண்டும் என்றால் அவன் கட்டாயம் தன் கோபத்தைக் கட்டுப்படுத்தவேண்டும் என்பது தெளிவாகத் தெரிகிறது. இதே போல் மூன்று நூல்களும் சினத்தைக் கடிந்துள்ளன.

இடனறிதல்

மனிதன் தான் வெற்றிபெறக்கூடிய களத்தை உணர்தல் வேண்டும். இடவலிமையுடன் இருக்கும்போது அதன் பெருமை யுணராமல் நடந்தால் பாதிப்படைவான் என்பது உண்மை. இதையே வள்ளுவர்,

''நெரும்புனலுள் வெல்லும் முதலை அடும்புனலில்
நீங்கின் அதனைப் பிற'' (குறள். 495)

என்கிறார். தண்ணீரில் இருக்கும் வரைக்கும்தான் முதலைக்குப் பலம். வெளியே வந்துவிட்டால் அது தன்னுடைய பலத்தை இழந்துவிடுகிறது. எனவே அங்கே அதனுடைய இருப்பிடம் பலமாக உள்ளது. நீரிலிருந்து வெளிவந்தால் பலம் எதுவும் இல்லை. இதனையே வேமன்ன சதகம்,

''நீள்ளலோன மொளலி நிகிடி யேனுகுதியு
பயட குக்க சேத பங்கபடுனு
ஸ்தான பலிம கானி தனபலிமிகாதயா
விஸ்வதாபிராம வினுர வேம'' (பாடல் : 341)

என்கிறார். அதாவது 'தண்ணீரில் இருக்கும்போது யானையைக் கூட வெல்லும் முதலை தண்ணீரை விட்டு வெளியே வரும்போது நாயால் துன்பப்படுகிறது. இப்படி நடப்பது அவரவர் இடத்துக் கேற்ற வலிமையே தவிர மனிதனின் பலம் அல்ல! எனத் தெளிவாகக் குறிப்பிடுகிறார். இடனறிதலைச் சுமதி சதகம் குறிப்பிடும் போது,

''கமலமுலு நீட பாஸின
கமலாப் துனி ஏஸ்மி ஸோதி கமனின பங்கின்
தமதம நெலவுலு தப்பின
தம மித்ருவ சத்ரு லெளடதத்யமு சுமதீ'' (பாடல் : 28)

தாமரை தண்ணீரில் இருக்கும்போது மலரசெய்த கதிரவனே அது நீரிலிருந்து வெளியேறும் போது வதங்கிப்போகும்படி செய்கிறது. அதுபோலவே தங்களின் இருப்பிடங்களை விட்டு விட்டால் நண்பர்களும் பகைவராவார்' என்று கூறுகிறது.

இப்பாடலில் நண்பர்கள் என்று குறிப்பிட்டது மற்ற மனித வர்க்கத்துக்கும் பொருந்தும். குமார சதகம் இதைப் பற்றி எந்த இடத்திலும் கூறியதாக தெரியவில்லை.

இடமறிதலைப் பற்றித் திருவள்ளுவர் கூறிய கருத்தோடு மட்டுமின்றி இப்பாடலில் பயன்படுத்திய உவமைகளிலும் வேமன்ன சதகத்தில் ஒற்றுமை காண முடிகிறது. பத்தென தன் பாடலில் இவர் கள் இருவரின் கருத்தோடு ஒன்றுபட்டு இருந்தாலும் நண்பர்களின் தன்மையும் சுட்டிக்காட்டியுள்ளார்.

இன்னா செய்யாமை

நல்லவர்கள் அடிப்படைப் பண்பாக இன்னா செய்தார்க்கும் இனியவை செய்தலே குறிப்பிடத்தக்கது. இத்தகைய பண்புடை யவர்களைப் பற்றித் திருக்குறள் கூறியதாவது,

''இன்னா செய்தாரை ஒறுத்தல் அவர்நாண
நன்னயம் செய்துவிடல்'' (குறள் : 314)

என்று யார் நமக்குக் கெடுதல் செய்தாலும் தீயவருக்கும் நன்மை களையே செய்வார்கள். அப்படிச் செய்வதே சிறப்பானவர்களுக்கு அறிகுறி என்று திருவள்ளுவர் கூறியுள்ளார். இக்கருத்தை வலியுறுத்தும் வகையில் வேமன்ன சதகம் கூறியதாவது,

''உபகாரிகி உபகாரமு
விபரீதமு காதுசேய விவரிம்பங்கா
அபகாரதி உபகாரமு
நெபமென்னக சேயுலாடே நேர்பரி சுமதீ'' (பாடல் : 16)

மேற்கூறிய கருத்துக்களைக் கூர்ந்து நோக்குகையில் சமுதாயச் சீர்திருத்தச் சிந்தனை இந்நால்வரிடமும் காணப்படல் உணரலாம். பரம்பொருள் சிந்தனையில் திருவள்ளுவர்க்கும், வேமன்னாவுக் கும் கருத்தொற்றுமை பொதிந்துள்ளமையை உணரலாம். பிற நிலைகளில் அவை பெரிதும் ஒன்றுபடக் காணலாம். ஆயினும் சமுதாய நீதிகளை வற்புறுத்தும் மொழியாட்சியில் அவரவர்க்கு உள்ள புலமை வெளிப்படுகிறது.

கருத்து ஒற்றுமைகளைக் கருதும்போது இவ் அறிஞர்தம் காலத் தில் அறக்கோட்பாடுகளை வலியுறுத்த வேண்டும் என்ற சூழல் அமைந்திருக்கக் கூடும் என்றுணர முடிகிறது. மேலும் கருத்து ஒற்றுமையுடன் உவமைத் தன்மையும் திட்டமான பொருட் செறிவு களும் கொண்ட தெலுங்கு கவிஞர்களான வேமன்ன, பத்தென, பக்கி அப்பல நரசய்ய ஆகிய மூவரிடத்திலும் திருவள்ளுவத்தின் தாக்கமும், அறிவும் நிறைந்திருக்கக் கூடும் என உணர முடிகிறது.

எச். சித்திரபுத்திரன்
தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர் – 613 005

பொருள் தொடர்புச் சொற்களும் பொருள் உறவு நிலைகளும்

பொருள் எனும் சொல் மிக நெகிழ்வான பல்வேறு பொருள்களை உள்ளடக்கிய ஒரு சொல். இச்சொல் தத்துவவியல், மொழியியல், மானிடவியல், அளவையியல் போன்ற பல துறைகளில் பல்வேறு கருத்துக்களைக் குறிக்க வழங்கப்பட்டு வந்துள்ளது. எடுத்துக்காட்டாகத் தத்துவத் துறையில் சொல், தொடர், வாக்கியம் என்பனவற்றின் உறவின் அடிப்படையிலும், மானிடவியல் துறையில் சொல் வழங்கும் சமுதாயம், சொல்லின் பயன்பாடு என்பனவற்றின் அடிப்படையிலும் பொருள் பற்றிய விளக்கங்கள் அளிக்கப் பெற்றுள்ளன. உளவியலார் மனம், உள்வாங்குந்திறன், பொருள் வெளிப்பாடு என்பனவற்றை அடிப்படையாகக் கொண்டு சொற்பொருளை விளக்க முற்பட்டனர். மொழியியலார் மத்தியிலும் பொருள் பற்றிப் பல கொள்கைகளும் கருத்துக்களும் நிலவுகின்றன. மொழியியல் துறையில் சொல்லுக்கும் அது குறிக்கும் பொருளுக்கும் இடைப்பட்ட தொடர்பு பல கொள்கைகள் மூலம் பல்வேறு காலக்கட்டங்களில் விளக்கிக் காட்டப் பெற்றுள்ளது. இப்பொருள் கொள்கைகள் நிறைகளையும், குறைபாடுகளையும் கொண்டுள்ளன. ஆக்டன் ரிக்கர்ட்ஸ் (1923) எனும் பொருண்மையியல் வல்லுநர்கள் பொருள் பற்றிய பல கருத்துக்களைத் தொகுத்து அவற்றைப் பதினாறு வகைகளாகப் பிரித்துக் காட்டுவார்கள். சொற் பொருண்மையியல் துறையில் இவர்களின் பங்கு அளவிடற் கரியது.

சொற்பொருண்மை

பொருள் பின்வரும் ஒருங்குகளில் இடம்பெறுகின்றது: 1) சொற்பொருள், 2) வாக்கிய / தொடர் பொருள், 3) இலக்கணப் பொருள்.

மொழியியல் மூன்று வகையான பொருள்களிலும் கவனம் செலுத்தும். இம்மூன்று பொருள்களும் ஒன்றை ஒன்று சார்ந்தே செயல்படுகின்றன. வாக்கியப்பொருள் சொற்களின் வரிசை முறையில் அடங்கியுள்ளது. இலக்கணப் பொருள் வாக்கியப் பொருளையும் சொற்பொருள் வாக்கிய அமைப்பையும் சார்ந்து இயங்குகின்றன. வாக்கியப்பொருள், சொற்பொருள் மற்றும் இலக்கணப் பொருளில் அடங்கியுள்ளது எனலாம். பொருளின் மூன்று வகையான செயல்பாடுகளும் பின்வருமாறு அமைகின்றது.

சொல்பொருள்

சொல்$_1$ = பொருள்$_1$ ← பொருள் → வாக்கியப் பொருள்

சொல்$_2$ = பொருள்$_2$ சொல்$_1$ + சொல்$_2$ + சொல்$_3$ → வாக்கியம்$_1$

இலக்கணப் பொருள் சொல்$_2$ + சொல்$_1$ பொருள்$_3$ → வாக்கியம்$_2$

பெயர்,

வினை . . . சொ$_3$ + சொ + சொ$_3$ → வாக்கியம் $_3$


சொல் - பொருள் வளர்ச்சி, பொருள் உறவு, பொருள் வகைப் பாடு, பொருள் மாற்றம், மாற்றத்திற்கான காரணம் போன்ற பல்வேறு பொருள் பண்புகளை விளக்குவது சொற்பொருண்மை யாகும். அகராதிப் பொருள் விளக்கத்திற்கு அடிப்படையாக அமைவது சொற்பொருளாகும். அகராதி உருவாக்கத்தின் பல் வேறு நிலைகளில் பயன்படும் இச்சொற்பொருள் பார்ப்பதற்கு எளிதாகத் தோன்றினாலும் மிகச் சிக்கல் வாய்ந்த ஒன்றாகும். சொற்பொருண்மை வழக்கு நிலத்தில் நடப்பதற்கு ஒப்பாகும் என்பார் அகராதியியல் வல்லநர் சுகுஸ்தா.

சொல் பொருள் உறவுக் கொள்கைகள்

சொல்லுக்கும் பொருளுக்கும் இடைப்பட்ட உறவு பற்றிய ஆய்வு மிகப் பழங்காலம் முதல் தொடர்ந்து மேற்கொள்ளப் பெற்று வருகின்றது.

''எல்லாச் சொல்லும் பொருள் குறித்தனவே'' என்ற மரபிலக் கணக் கூற்றும் அதனை அடுத்துச் சொற்பொருள் தனிமொழியில் இடுகுறியானது; தொடர் மொழியில் காரணப் பெயரினது என்ற தெய்வச்சிலையார் கூற்றும் இவண் சிறப்பாக நோக்கத்தக்கது. சொல்லுக்குப் பொருள் உண்டு என்பதில் மரபிலக்கணத்

தாருக்கோ இலக்கண உரையாசிரியர்களுக்கோ, மொழியியல் அறிஞர்களுக்கோ மாற்றுக் கருத்தில்லை. எனினும் சொல் தாங்கி நிற்கும் பொருள் எவ்வாறு பெறப்படுகின்றது என்பதை விளக்குவதிலே போட்டி நிலவியது. சொற்பொருள் தொடர்பாய்ப் பின் வரும் கொள்கைகள் மொழியியல் அறிஞர்களால் பரிந்துரைக்கப் பெற்றன. அவை: 1. புறப்பொருள் கொள்கை, 2. அகப்பொருள் கொள்கை, 3. தொடர்புக் கொள்கை, 4. தூண்டல்-துலங்கல் கொள்கை, 5. பயன்கொள்கை, 6. பயன் நிருபனக் கொள்கை, 7.பேச்சு-செயல் கொள்கை, 8. மொழிக் கூற்றுத் தொடர்புக் கொள்கை, 9. சூழல் கொள்கை என்பனவாகும். இக்கொள்கைகள் பெரும்பாலும் உலகப் பொருள், பேசுபவர், கேட்பவர், மனம், சொல் பயன்பாடு, மொழிச் சூழல் என்பனவற்றை அடிப்படையாகக் கொண்டு அமைந்திருந்தன. பொதுநிலையில் இவ்வொன்பது கொள்கைகளும் 'உலகப் பொருள்' ''பேசுபவர் - கேட்பர் நிலை'' ''மொழிச் சூழல்'' என்ற மூன்று நிலைகளை அடிப்படையாகக் கொண்டுள்ளன. இவ்வொன்பது கொள்கைகளில் சொல் மற்றும் உலகப் பொருளைக் கருத்துடன் நினைத்துப் பார்க்கும் தொடர்புக் கொள்கையே மொழியியலார் மத்தியில் பெரும் வரவேற்பைப் பெற்றது எனலாம். இக்கொள்கையே பொருள் முக்கோணக் கொள்கையாகும்.



இப்பொருள் விளக்கத்தில் சொல்லும் உலகப் பொருளும் கருத்தினால் மட்டும் இணைக்கப்பெறுகின்றன. சொல்லுக்கும் உலகப் பொருளுக்கும் தொடர்பு இல்லை.

பொருள் தொடர்புச் சொற்கள்


ஒரு சொல் பல பொருள்களைப் பெற்று நிற்கும் நிலையில் வேறு வேறு வடிவுடைய சொற்கள் தொடர்புடைய பல பொருள்களைப் பெற்று நிற்கும் சூழலும் மொழியில் காணப்படுகின்றது. இவ்வகையான வேறுபட்ட சொற்களின் பொருள்களுக்கிடையே காணப்படும் உறவு ஒரு சொல்லின் பல பொருள்களுக்கு இடையே காணப்படும் தொடர்பை விட மிக நெருக்கமானது ஆகும்; நிலை பெற்றதாகும்.

பொருள் தொடர்புச் சொற்களின் பொருள் உறவுநிலை

பொருள் தொடர்புச் சொற்களின் பொருள் உறவு பல்வேறு வகைகளில் காணப்படுகின்றது. இதனைப் பின்வரும் உறவுநிலைகளின் வழி விளக்கலாம்: 1) உள்ளடங்குப் பொருள், 2) உறழ் நிலைப் பொருள், 3) எதிர்பொருள், 4) பொருட்புல உறவு.

உள்ளடங்குப் பொருள்

இவ்வகையில் ஒரு சொல்லின் பொருள் மற்றொரு சொல்லின் பொருளில் அடங்குகின்றது. எடுத்துக்காட்டாக, 'நாய்' என்ற சொல்லின் பொருளில் நாயின் பல்வேறு வகைகள் அடங்கும். 'நிறம்' என்ற சொல்லின் பல்வேறு வகையான நிறங்களும் 'பூ' என்ற சொல்லின் பூவின் வகைகளும் அடங்கும். உள்ளடங்குப் பொருள் ஒன்றினுள் ஒன்று அடங்கும் உள்வட்டங்கள் மூலம் விளக்கப்படலாம். இரண்டு வட்டங்களை எடுத்துக் கொண்டால் முதல் வட்டம் பொதுப் பொருளையும், இரண்டாம் வட்டம் சிறப்புப் பொருள் கூறுகளையும் கொண்டதாக அமையும். இவ்வகையான உள்ளடங்குப் பொருளில் வெளி வட்டச் சொல் உள்வட்டச் சொல்லின் சில பொருட் கூறுகளையும், உள்வட்டச் சொல் வெளிவட்டச் சொல்லின் பொதுக் கூறுகளையும் பெற்றிருக்கும். எடுத்துக்காட்டாக, 'சாப்பிடு', 'மொக்கு' எனும் சொற்களையும் 'குடித்தல், பருகுதல்' எனும் சொற்களையும் கூறலாம். 'சாப்பிடுதல்' எனும் சொல் பொதுவாகவும் 'மொக்குதல்' எனும் சொல் வேகமாக உண்ணுதலையும் குறிக்கும். இதைப்போலக் 'குடித்தல்' என்பது பொதுப் பொருளையும் 'பருகுதல்' என்பது முறையாக / அளவாகக் குடித்தலையும் குறிக்கும். உள்ளடங்குப் பொருள்களின் அமைப்பைப் பின்வரும் வரைபடம் மூலம் காட்டலாம்.




சொற்பொருண்மையியலில் ஒன்றன் பொருள் மற்றொன்றில் அடங்கும் தன்மை மீச்சொல் உட்பொருட்சொல் எனும் வகைப் பாட்டில் தற்பொழுது அடக்கப் பெறுகிறது. அகராதிப் பொருள்

விளக்கத்திற்கு இவ் உள்ளடங்குப் பொருள் பெரிதும் பயன் படுகின்றது.

உறழ்நிலைப் பொருள்


சொற்களின் பொருள் முழுநிலையில் தொடர்பு பெற்றுக் காணப்படாவிட்டாலும் சில மொழிச் சூழல்களில் சில சொற் களின் பொருள் உறழ்நிலையில் தோன்றும். உறழ் நிலையென்பது ஒன்றன்பொருள் மற்றொன்றில் தாக்கம் பெறுவதைக் குறிக் கின்றது. இந்நிலையில் ஒரு சொல்லிற்குப் பதில் மற்றொன்றைப் பதிலீடு செய்யலாம். எடுத்துக்காட்டாக, அருள்-நல்கு, சாத்து-மூடு, வெட்டு-நறுக்கு என்பன உறழ்நிலையில் தோன்றும்.



அருள்-நல்கு எனும் சொற்களின் உறழ்நிலை தனியாகக் கோடிட்டுக் காட்டப்பெற்றுள்ளது. கோடிட்ட பகுதி அதிகமாகக் காணப்படின் இரண்டு சொற்களுக்கும் இடையே உறழ்நிலை அதிகம் என்று பொருள்படும். இவ்வகை பொருள் உறவு மொழிகளில் ஒரு பொருட் பன்மொழிகளை அறிந்துகொள்ளப் பெரிதும் உதவுகின்றது. இப்பிரிவில் வரும் சொற்கள் முழு நிலையில் பொருள் உறவு பெற்று நிற்பதைவிடச் சில சூழல்களில் மட்டும் பொருள் தொடர்பு பெற்று நிற்கின்றன.

எதிர்ப்பொருள்

சொற்கள் தொடர்புடைய பொருள்களைப் பெற்று நிற்கும் சூழலில் எதிர்ப்பொருளைப் பெறும் வாய்ப்பையும் பெறுகின்றன. சொற்களின் எதிர்ப்பொருள் பலவகைப்படும். அவை: 1) எதிர் மறை, 2) படித்தர எதிர்மறை, 3) பொருள் முரண், 4) எதிர் விளைவு என்பனவாகும். எதிர்ப்பொருளின் செயல்பாட்டைப் பின் வருமாறு காட்டலாம்.



எதிர்மறை என்பது உடன்பாட்டுப் பொருளுக்கு நேர் இன்மையைக் குறிக்கும். இவ்வகையில் இரண்டு சொற்களுக்கும் இடையே இரண்டு நிலைகள்தான் உண்டு. இரண்டிற்கும் இடையே இடைப்பட்டக் கூறுகள் எதுவும் இல்லை.

சி. சித்ரா
தேசியக் கல்லூரி
திருச்சிராப்பள்ளி – 1

கண்ணதாசன் கவிதைகளில் கல்விச் சிந்தனைகள்

தமிழகத்துக் கவிஞர்களுள் தம் எழுத்தாற்றலால் நிலைத்த புகழ்பெற்றவரான கண்ணதாசன் இச்சமுதாய நலத்திற்கென வீரிய சிந்தனைகள் பலவற்றைத் தம் கவிதை வழி விதைத்தவர். இவர் கவிதைகளின் பாடுபொருள் பன்முகப்பார்வையுடன் விரிந்து பரந்திருப்பினும் அவையனைத்தும் சமுதாய நலனென்ற மையத்தையே கருவாகக் கொண்டுள்ளன. மனித அறிவின் திறவுகோலாகத் திகழும் கல்வி பற்றித் தம் கவிதைகளில் வழிப் புலப்படுத்தும் சிந்தனைகளை அறிதல் நம் கடப்பாடாகும்.

நாம் செய்யும் செயல்களைத் திறம்படவும் எளிதாவும் செய்தற்குரிய பயிற்சியை அளிப்பதே 'கல்வி' எனலாம்.

''உற்றுழி உதவியும் உறுபொருள் கொடுத்தும்
பிற்றைநிலை முனியாது கற்றல் நன்றே''

என்று பாடிச் சங்க காலந்தொட்டு இலக்கியவியலார் கல்வியின் இன்றியமையாமையை வலியுறுத்தியுள்ளனர்.

கல்வியறிவற்றோர் வேறு எந்த பெருமையுற்றாலும் உண்மையான இன்பத்தைத் துய்க்க இயலாது என்று கருதிய கண்ணதாசன்,

''ஆயிரம் கண்கள் பெற்றும்
அறிவிலார்க் கென்ன இன்பம்?
வாயிலே சுவையைக் காணும்
மானிடர்க் கென்ன இன்பம்?''

என்று கூறுவதன் வழி அறிவு மேம்பட அடிப்படையாகத் திகழும் கல்வியைப் பற்றித் தம் கவிதைவழி உணர்த்துகின்றார்.

பட்டப்படிப்புப் படிக்கத்தான் நினைத்திருந்தேன்
கொட்டும் மொழிமழையிற் குளிக்கத்தான் நினைத்திருந்தேன்
ஆனால்,
எட்டாம் வகுப்பை எட்டத்தான் என்பெற்றோர்
இட்டார்; பின் ஏழ்மையிலே என்னை உலகில்விட்டார்''

என்று தம் இளமைப்பருவத்தில் முறையான கல்வியறிவைப் பெற இயலாமற் போனமைக்காக வருந்தும் கவிஞர்,

''கல்வியிலான் வாழ்வு கரைகாணாத் தோணி''

என்று பாடி, கல்வியின் தேவையை, இன்றியமையாமையைக் குறிப்பிட்டுளார்.

கல்வி என்பது,

1. பள்ளி, கல்லூரி போன்ற நிறுவனங்கள் வாயிலாகப் பயிலுதல்
2. ஏடுகளைப் புரட்டிப் படித்துத் தேர்வெழுதிய பின் படித்தவற்றை மறந்துவிடுதல்
3. பொருளறியாவிடினும் மனப்பாடம் செய்து எழுதி மதிப்பெண் பெறுதல்
4. ஆண்டு முழுதும் படித்தவற்றைப் பற்றிச் சில மணி நேரத்தில் தேர்வெழுதச்செய்து மதிப்பீடு செய்தல்.
5. மதிப்பீடு செய்தலில் சில நெறியற்ற போக்குகள்.

என்ற நிலையில்தான் பெரும்பாலும் கல்வி நடைமுறை யிலுள்ளது. குறிப்பாக இந்தியாவில் நிலவும் கல்விக்கொள்கை யின் சீரற்ற போக்கை எண்ணி வருந்தும் கவிஞர் அந்த உணர்வு வேகத்தில்,

''மக்கள் தொகையும் பெருகி வாழ வழிகாட்டாத கல்வி முறையும் இப்படிப் பெருகிக்கொண்டே போனால் இந்தியாவைக் கடவுள் கூடக் காப்பாற்ற முடியாது'' என்று எழுது கிறார். இந்நிலையை மாற்ற அனைவர்க்கும் பயனுள்ள கல்வி புகட்டல் வேண்டும் என்கிறார்.

''கல்வியில் லாதவர்
கடமை இல் லாதவர்
இல்லையென் றாக்குவோம்
இனியதோர் உலகிலே''

என்று கூறி உலகுதழுவிய நிலையில் ஒரு மனிதன் கல்வி யறிவைப் பெறுவதன் மூலமே பிற தேவைகள் அனைத்தையும்

நிறைவேற்றிக் கொள்ள முடியும் என்கிறார். பயிற்சியின் வழி தானே எந்த ஒன்றும் பழக்கத்திற்கு வந்து பயன்தரும்? அவ்வாறாயின் 'கல்வி கற்றல்' என்னும் பயிற்சி அறிவை ஆக்க வழியில் பயன்படுத்திச் சிறக்கச் செயலாற்றத் துணைபுரியும் என்பதுதான் உண்மை' என்று குறிப்பிட்டுள்ளார்.

முறையான கல்வி கற்கும் வாய்ப்புக் கிட்டும் குழந்தைகள் எதையும் சாதிக்கும் ஆற்றல் பெறுவார்களென்பதை,

''கல்விக் கடலில் மூழ்கிட வைத்தால்
காலத்தை வென்று விடும்''

என்று குறிப்பிடும் கண்ணதாசன், கற்கின்ற கல்விக்கும் கற்றபின் மேற்கொள்கின்ற பணிக்குமிடையே எத்தகைய தொடர்பும் இல்லாமல் இருப்பதால் இளையோருக்குக் கல்வி பற்றிய ஆர்வம் குறைய வாய்ப்புள்ளது என்றும் அறிவுறுத்துகின்றார். எனவே பல்வகைத் தொழில்களில் ஈடுபட்டுப் பணிசெய்ய விரும்பு வோரை அவரவர் திறமைக்கேற்பத் தரம் பிரித்துத் தக்க கல்வியை நல்க வேண்டுதற்கான கல்வித்திட்டத்தை நடைமுறைப்படுத்த வேண்டும் என்கிறார். மேலும், தொழிற்கல்வியைப் பரவலாக்கு வதன் மூலம்,

1. தாம் மேற்கொள்ள வேண்டிய பணி தொடர்பான செய்திகளை, கருத்துக்களை, வழிமுறைகளைத் தெளிவாக அறிந்துகொள்ளல்.
2. தொழிலறிவு படைத்தோர் எண்ணிக்கை பெருகுவதால் வேலையில்லாத் திண்டாட்டத்தைக் குறைத்தல்.
3. மொழி - இலக்கியக் கல்வி கற்றோர்க்கும் தொழிற்கல்வி நல்குவதால் பரந்துபட்ட அறிவு பெருகுதல்

என்ற பயன்பாடுகளைப் பெறலாம் என்கிறார். ஒருவன் கற்கும் கல்வி அவனது அக, புற வாழ்வு செம்மையுறப் பயன்படுவதாக இருத்தல் வேண்டும். என்பதால்தான் கல்வியறிவற்றோர், கல்வி அறிவுக்குத்தகக் கடமையாற்றும் பணிப்பொறுப்பற்றோர் இவ் வுலகில் எங்குமே இருத்தல் கூடாது என வலியுறுத்தியுள்ளார். அங்ஙனமாயின் ஒவ்வொரு மனிதனும் பரந்துபட்ட, தான் செய்யும் பணியோடு தொடர்புடைய கல்வியறிவைப் பெற்ற வனாக இருத்தல் வேண்டும் என்பதே கவிஞர் கருத்தாகிறது.

''வேலையில்லாத் திண்டாட்டம்
விரைவில் ஒழிவதற்குச்

சால வழி வகுத்தால்
ஜனப்புரட்சி நின்றுவிடும்''

என்று கூறுவதில் 'தொழிற்கல்வி'யை ஒரு வழியாக வகுத்துக் காட்டியுள்ளார்.

எந்தத் துறையைத் தேர்ந்தெடுத்துக் கற்றாலும் அத்தகு கல்வியினால் பெற்ற அறிவை முறையாகப் பயன்படுத்தித் தானும் உயர்ந்து சமுதாயத்தையும் உயர்த்த வேண்டுமென்ற எண்ணம் ஒவ்வொருவர் மனத்திலும் வலுப்பெற வேண்டும். இந்தியாவைப் பொறுத்தவரை ஒவ்வோர் இந்தியர் உள்ளத்திலும் இவ்வெண்ணம் வலுப்பெற வேண்டுமாயின் அவர்களுக்குக் கட்டாயம் இந்திய விடுதலைப் போராட்ட வரலாறு தெள்ளத் தெளிவாக உணர்த்தப் பெறல் வேண்டும். அறவழி, ஆக்கச் செயல், நாட்டுப்பற்று முதலான உணர்வுகளும் கல்வியறிவோடு ஊட்டப்படும் போது ஒவ்வொரு நாடும் வளமும் நலமும் பெற்று வல்லாங்கு வாழும். எனவே, பள்ளிப்பருவத்திலேயே நம் குழந்தைகளுக்குப் பகவத்சிங் வரலாறும் பாபாஜி வரலாறும் சுகதேவின் வரலாறும் சூரிய தேவ் வரலாறும் அகமத்ஷா வரலாறும் எனத் தாயகத்தைக் காக்கத் தம்முயிரைத் தந்தோரின் வரலாற்றைத் தவறாமல் கற்பிக்க வேண்டும் என்கிறார்.

பெண்கள் கல்வி கற்றலோடு கல்வியின் அருமை தெரிந்து அதை வாழ்வில் பயன்படுத்த வேண்டுமென்பதை,

''கற்றால் மட்டும் போதாதம்மா
கல்வியின் பெருமை அறியோணும்''

என்று புலப்படுத்துகின்றார். கல்வியறிவோடு செயலாற்றும் போது தொழில்கள் சிறந்து கலை மேம்பட்டுப் பகையொழிந்து அன்பு நிறைந்தோர் உலகைப் படைக்க முடியும். அத்தகு புதிய உலகைப் பற்றிக் கவிஞர்,

''எங்கணும் தொழில்மயம்
எங்கணும் கலைமயம்
பொங்குமோர் சுகம் வரும்
புதியதோர் உலகிலே!
இனப்பகை மொழிப்பகை
எப்பகை யாயினும்
நினைப்பவர் தம்மையே
நெருப்பிலே வீழ்த்துவோம்''

என்று படம்பிடித்துக் காட்டியுள்ளார்.

அறிவியல் துறையில் ஆழ்ந்த கல்வியறிவு பெறுதலின் வழிப் பல ஆக்கப்பூர்வமான பணிகளையாற்ற முடியும் என்பதையும் தெளிவுபடுத்துகின்றார்.

''வானத்தில் பறந்து வையத்தையே அளந்து
ஞானத்தில் முன்னேறுவோம் - விஞ்
ஞானத்தில் முன்னேறுவோம்''

என்று கூறும் கண்ணதாசன், இத்தகு அறிவியற் கல்வியால், மண்ணுக்குள்ளிருந்து எண்ணெய் எடுத்து, பல்வகைச் சோதனையில் நெல்லைக் குவித்து, விண்ணைப் பிளந்து நோட்டமிட்டு, நீரைத் தேக்கிப் பரவலாக்கிப் பாயச்செய்து, கோடிக்கணக்கான தொழில் வளர்த்து, எல்லோர்க்கும் வேலை கொடுத்து அகிலத்து நாடுகட்கு முன்னிலை வகுத்து நெறிப்படுத்த வேண்டும் என்கிறார். ஆனால் சமுதாய விழிப்புணர்வு அற்ற நிலையில் அறிவியலைக் கற்பதால் ஏற்படும் இன்னல்களை,

''ஆசையின் வளர்ச்சி யாலே
ஆயுத வளர்ச்சி அந்த
ஆயுதம் வளரும் போதே
அணுக்களின் கிளர்ச்சி அந்த
அணுக்களின் கிளர்ச்சி இன்று
அழித்திடும் முயற்சி யாகித்
தளைக் கொலும் நிலைக்கு வந்த''

தலைமுறையை எண்ணி வருந்துகின்றார்.

முடிவுரை

தாம் பெறத் தவறியதாகக் கருதிய இன்பத்தை இம்மானுடச் சமுதாயம் பெற்று மகிழ்தல் வேண்டுமென்ற சிந்தனைப் போக்குடையவரான கண்ணதாசனின் கல்விச்சிந்தனைகளை,

1. பள்ளி, கல்லூரி போன்ற நிறுவனங்கள் வாயிலாகக் கல்வி கற்பித்தல்
2. பணியார்வம், உழைக்குந் திறனுக்கேற்பக் கல்வியைப் புகட்டுதல்
3. தொழிற் கல்வியைப் பரவலாக்கல்
4. கல்வித்திட்டத்தின் வழி வேலையின்மையை ஒழித்தல்
5. கல்வியை முறையுறப் பயன்படுத்துதற்குத் தேவையான விழிப்புணர்வைக் கற்பித்தல் - என்ற கூறுகளில் வரையறுக்கலாம்.

சு. சிவகாமி
உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
சென்னை

சங்க இலக்கியத்தில் முதியோர்

சமூகச் சிந்தனையாளரிடையே இன்று, சமூக மதிப்பீட்டில் பின்தங்கியுள்ள முதியோரின் நலவாழ்வு, மிகுந்த கவனத்திற்குள் ளாகியிருப்பதைக் காண்கிறோம். அறிவியல் வளம் பெற்றுள்ள இன்றைய சூழலில் இந்நிலை எனின் இயற்கையோடியைந்த வாழ்வினரான சங்க காலத் தமிழரிடையே முதியோர் வாழ்வு எப்படி இருந்தது என அறிய முயன்றதன் விளைவே இக்கட்டுரை.

முதிர் (கலி 65.9), முது (முல்லை 11), முதுமை (அகம்:15), முதிர்வு (புறம் 159:5), முதிர்பு (புறம் 161:34), முதாரி (புறம் 138 : 5), மூப்பு (கலி 12:18) எனும் சொற்கள் அன்று முதுமையைக் குறிக்கப் பயன்பட்டுள்ளன. அன்று முதுமை போற்றப்பட்டதை, முது என்பது பேரறிவைச் சுட்டியதும், அறம், பொருள், இன்பம் எனும் முப்பொருளின் உறுதிப்பாட்டை விளக்கும் துறை 'முதுமொழிக் காஞ்சி' யாகக் குறிக்கப்பட்டதும், ஒன்றன் பெருமையை நவிலப் பயன்பட்டதும் (மூதூர்-சிறு 201, முதிர் காய் - முல்லை 101, முதுமொழி - கலி 68:4, முது கள் புறம் 258:9 முதுநீர் - பெரும் 294, முதுமரம் அகம் 260:12, முதுகாடு - புறம் 356:4, முதுபுள் - அகம் 260:12, முதுவேலி - புறம் 326) கொண்டறியலாம்.

மூப்படைந்தோரைக் குறிக்க இன்று பெருவழக்காக அமையும் கிழவன், கிழத்தி என்பன அன்று மிக அருகிய நிலையில் (பரி 11:120) காணப்பட, முதியர் (புறம் 254 : 11), முதியோர் (பொரு. 187) முதிர்ந்தவன் (கலி 130 : 7) முதிர்வினள் (புறம் 159 : 1-5), மூத்தோர் (புறம் 75 : 1), முதுவோர் (சிறு 231) மூதாளர் (புறம் 243 : 14) என முதுமையுடன் தொடர்புடைய சொற்களே பெருவழக்காக உள்ளன. முதுமுதல்வன் எனச் சிவன் (புறம் 166:2) குறிக்கப்பட, பார்ப்பன மகளிரில் முதியோரை முதல்வியர் (பரி 11 : 82) எனக் கூறியுள்ளதும் நோக்கத்தக்கது.

செம்முது பெண்டு (புறம் 280 : 7), பெருமுது பெண்டு (முல்லை-11) எனும் முதுமை மகளிரைக் குறிக்கும் சொற்கள் எண்ணத் தக்கன. சங்க இலக்கியத்துள் கணவனை இழந்த மகளிரை நோக்க, இச் சொற்கள் சுட்டும் மகளிர் கணவனுடன் வாழும் முதிர்ந்த தோராக இருக்கலாம் எனத் தோன்றுகிறது. சான்றோர் என்ற சொல்லும் வயதில் பெரியோரைச் சுட்டவும் பயன்பட்டிருக் கலாம் என்ற எண்ணம், 'பயனில் மூப்பில் பல் சான்றீரே' (புறம் 195 : 3), 'இகல் மீக்கடவும் இருபெரு வேந்தர் வினையிடை நின்ற சான்றோர் போல' (குறி 37 - 38) என்பன நோக்க இங்கு எழுகிறது.

முதுமை நிலை

'பரு ஏர் எறுழ்த் திணிதோள் முடலை யாக்கை முழுவலி மாக்கள்' (நெடு 32) என்று இளையோரின் உடல்வலிமை குறிக்கப்பட்டிருப்பது கொண்டு முதியோர் உடல் நலிவுடையோர் என்பது பெறப்படுகிறது. இதன் காரணமாகத்தான் பெருங்கோப் பெண்டு 'பயனில் மூப்பு' என்றுரைத்தார் போலும், மூப்பே ஒரு நோயாகக் கருதப்பட்டிருக்கலாம் என்ற உணர்வு, போர்க்களத்தி லிருந்து அகலவேண்டியோர் பட்டியலில் புறம் (9 : 2) குறிக்கும் பிணியுடையோர், சிலம்பில் மூத்தோர் (21 : 54) என மாற்றம் பெற்றுள்ளதால் எழுகிறது.

பொதுவாக அறுபது வயது ஆனோர் முதியோராகக் கருதப் படுகின்றனர். (வாழ்வியல் களஞ்சியம் - தொகுதி 13, ப. 979). வாழ்வின் நீடித்த, இறுதியான, மாற்று அற்ற ஒருவகை நோயாகக் கருதப்படும் முதுமை (Ageing in Developing Countries, p.5) 'இயல்பான நிலையிலிருந்து குறிப்பிடத்தக்க அளவு செயற் பாட்டிலும் திறனிலும் குறைவு ஏற்படுதல்' (மேற்படி ப. 6) என விளக்கப்படுகிறது. சங்க இலக்கியத்தில் முதுமை உருவ மாறு பாட்டால் பெரிதும் உணர்த்தப்பட்டுள்ளது. நரை அதில் முதன்மை பெறுகிறது. (அகம் 377 : 7, புறம் 277 : 2). மூப்படைந்த நிலையில் தலை நிமிர்ந்திருக்கும் நிலைமாறி இறங்கியும் (அகம் 377 : 7 - 8), தோல் உலர்ந்து உடல் நரம்புகள் வெளிப்பட்டும் (புறம் 278 : 1) உடல் நடுக்கமும், தொடர்ந்து பேச இயலாது இருமல் தடைப்படுத்தலும் (புறம் 243 : 12 - 13) நடப்பதற்குக் கோலின் துணை தேடலும், கூந்தல் குறைதலும் கண்பார்வை மறைதலும் (புறம் 159 : 1-5) காணப்படுகின்றன.

பெண்டிர் தம் முதுமையின் அடையாளமாக, கூந்தலை இளமையிற் செய்த அலங்காரங்களின்றி முடித்துக் கொண்டதை நற்றிணை (10 : 3) நவில்கிறது. குழந்தைப் பேறு மிக விரைவில்

மகளிரிடையே முதுமை உணர்வினைத் தூண்டியது என்பதும், 'புதல்வன் ஈன்றெனப் பெயர் பெயர்த்து அவ்வரித் திதலை அல்குல் முதுபெண்டாகி' (நற். 370 : 5-6) என்பது போன்ற (அகம் 6:12-22) கூற்றில் புலனாகிறது. அன்று பரத்தமை ஆடவரிடையே மிக்கிருந்தமைக்கு இதுவும் ஓர் காரணமாகலாம்.

முதுமையின் இயலாமை, இளமையின் ஆற்றலை எண்ணி இரங்கி நிற்றலைத் தொடித்தலை விழுத்தண்டினாரின் பாடலில் (புறம். 243) காட்டப்படுகிறது. முதுமையுடன் வறுமையும் இணையும் பொழுது வாழ்வில் சலிப்பும் கழிவிரக்கமும் மேலோங்கி நிற்பது,

வாழும் நாளோடு யாண்டு பல உண்மையில்
தீர்தல் செல்லாது என் உயிரெனப் பல புலந்து
கோல் காலாகக் குறும்பல ஒதுங்கி
நூல் விரித்தன்ன கதுப்பினள் கண்துயின்று
முன்றில் போகா முதிர்வினள் (புறம். 159: 1-5)

என்பதில் உணர்த்தப்பட்டுள்ளது. சூழல் சிறப்புற அமைந்து விருப்பிற்கேற்ப அனைத்துச் செயற்பாடுகளும் நிகழ்ந்து மன நிறைவு காணும் இன்ப வாழ்க்கை பெறின் முதுமை ஒரு சுமையாகாது; மன அமைதி முதுமையைப் புறம் தள்ளும் எனும் உளவியல் கருத்து, 'யாண்டு பலவாக நரையிலவாகுதல் யாங்கனம்' எனும் வினாவிற்கான பிசிராந்தையாரின் விடையில் (புறம். 191) எதிரொலிக்கின்றது.

முதியோர் வினைகள்

முதுமையுற்றோர், எழுந்து நடமாடவியலாதவாறு ஓரிடத்தே முடங்கும் வரை தம் பணிகளில் ஈடுபட்டிருந்ததைச் சங்கப்பாக்கள் பரவலாகத் தருகின்றன. 'திருமனைப் பலகடம் பூண்ட பெருமுது பெண்டிர்' (குறுந். 181 : 6-7) என்பதால் இல்லப்பொறுப்பு இவர் பாலதாக அறிகிறோம். பழமை வாய்ந்த பழக்க வழக்கங்களையும், சடங்குகளையும் முன்னின்று நடத்தும் கடப்பாடுடையோராகவும் திகழ்கின்றனர். விரிச்சி கேட்டல் (புறம் 280 : 6-7, முல்லை 6-11); கட்டுக்கேட்டல் (நற். 288 : 5-7); திருமணச் சடங்கு நிகழ்த்தல் (அகம் 86 : 9 -17); தைந்நீராடல் (பரி 11 : 80 - 82) என்பனவாக அவை அமைகின்றன. இல்லத்தே உள்ள இளஞ்சிறார்களை வழிபாடு முதலியவற்றிற்காகப் புறத்தே அழைத்துச் சென்று வருதலை (மது 460 - 467) நோக்கும் பொழுது குழந்தைப் பராமரிப்பு இவரது பணியாக உணர முடிகிறது.

செம்முது செவிலியர் (நற். 110:6, அகம் 254 : 2) எனும் கூற்றும் எண்ணத்தக்கது. வருவாய் தேடும் நிலையில் சிறியளவில் வணிகமும் மேற்கொண்டிருந்ததை,

பெரும் பின்னிட்ட வால்நரைக் கூந்தலர்
நன்னர் நலத்தர் தொல்முது பெண்டிர் .....
புடையமை பொலிந்த வகையமை செப்பில்
காமர் உருவில் தாம் வேண்டு பண்ணியம்
கமழ் நறும் பூவொடு மனைமனை மறுக (மது 408 - 423)

என்பதில் பெறலாம்.

ஆடவர் புறப்பணிகளில் ஈடுபாடு காட்டியதைச் சங்கப் பாக்கள் காட்டுகின்றன. பனித்துறைப் பரதவர்க்கும், கழனி உழவர்க்கும் இடையே நடந்த சிறுசெருவில் நரை மூதாளர் சந்து செய்வித்தலை அகநானூறு (366 : 672) காட்டுகிறது. களவில் மனம் ஒன்றிய தலைவன் தலைவியின் திருமண நிகழ்விற்குத் தண்டுடைக் கையர் வெண்டலைச் சிதவலர் முன்னின்று ஒப்புதல் அளிப்பதைக் குறுந்தொகை (146) பேசுகிறது. மகளிரிடையே எழும் பூசலைச் சந்து செய்வித்தலில் முதுமகளிர் ஈடுபட்டதையும் (பரி 20 : 84 - 94) இவண் இணைத்து நோக்கலாம். அன்று முதியோர் மொழிக்குப் பெரும் மதிப்பிருந்ததை இவை காட்டுகின்றன. மற்றும் தம் இல்ல இளையோர் தொழிலில் அவருக்குத் துணையாக நின்றதையும் (நற். 207 : 7-10, பெரும் 267 - 268) அறிய முடிகிறது.

ஊர்ப் பொது மன்றத்தில் முதிர்ந்த ஆடவர் ஒன்று கூடி வல்லு ஆடிப் (புறம் 52 : 12-17, அகம் 377 : 6-13) பொழுது போக்கியுள்ளனர். வையை வெள்ளப் பெருக்கில் நீராட இருபால் முதியோரும் செல்லுதல் (பரி 10 : 14-31); குறவர் மனைமுது மகளிரொடு குரவையாடுதல் (அகம் 232 : 6-16) போல்வன, சங்கத் தமிழர் வாழ்வில் முதுமை சுமையாகக் கருதப்படவில்லை; இயன்றவரை இன்பம் துய்த்துள்ளனர் என்பதைப் புலப் படுத்துகின்றன. இறுதிநிலையில் ஒரு சாரார் தவ வாழ்வும் மேற்கொண்டுள்ளனர் (புறம் 251, 252).

சமூக மதிப்பு

தமது வாழ்க்கைச் சீர்மைக்கு இளையோர் முதியோரின் வழிகாட்டுதலை ஏற்றுள்ளனர். 71 பழங்குடி மக்களிடையே நிகழ்ந்த ஆய்வில் 56 குழுவினரிடையே முதியோரே தலைமைப் பொறுப்பேற்றுள்ளனர்; இமயமலைவாழ் பழங்குடியினரிடையே

ஒருவரை 'முதியோர்' என்றழைத்தாலே மிக்க பெருமைக் குரியதாகக் கருதப்படுகிறது. (Ken Tont, P. 11) என்பர். சங்கத் தமிழருக்கும் இக்கூற்று பொருந்துவதாகத் தோன்றுகிறது. கரிகாலன் நரை முடித்த தலையனாக வந்து நீதி வழங்கியது (பொருந 187 - 188); 'முதுவோர்க்கு முகிழ்த்த கையினன்' (சிறு 231) என நல்லியக் கோடனை நத்தத்தனார் புகழ்வது; 'இளந்துணைப் புதல்வரின் முதியர்ப் பேணி' (பதி 70 : 21 - 22) எனச் செல்வக் கடுங்கோ வாழியாதனைக் கபிலர் பாராட்டுவது ஆகியன நோக்கச் சங்க கால முதியோர் அன்றைய சமூகத்தினரால் உயர்வாக மதிக்கப்பட்டதையே காட்டுகின்றன. பெற்றோர் தம் முதுமைக் காலத்தை மகன் இல்லில் கழித்தமையையும் (புறம் 159) அறியலாம். ''முன்பு கூட்டுக் குடும்பமுறை, தந்தையாதிக்கம் ஆகியன மேலோங்கியிருந்த காலத்தில் குடும்பமே முதியவர் களைப் பேணுகிற நிலையமாக, ஆதரவற்ற முதிய உறவினர் களுக்குப் புகலிடம் தந்து ஆதரிக்கிற உய்விடமாகச் செயற் பட்டது. வயதான பெற்றோர்களையும் உறவினர்களையும் ஆதரித்துப் பேண வேண்டியது கடமையாகக் கருதப்பட்டது'' (வாழ்வியற் களஞ்சியம், மேற்படி) என்பது சங்கத் தமிழரையும் உட்கொண்டதாகக் கொள்ளலாம். பொருள் தேடிச் செல்லும் தலைவனின் கூற்றும் (குறுந் 255) இதனை மெய்ப்பிக்கின்றது.

இளமை நிலையாமை உணர்ந்த நிலையில் பொருள் தேடலுக்கு ஓர் உந்துதலாகவும் அன்று மூப்பு (கலி 12 : 12-19) பயன்பட்டுள்ளது. பட்டறிவும் படிப்பறிவும் இல்லையாயின் முதுமையால் எப்பயனும் இல்லை (கலி 130 : 7-8) என்பதும் அவர்தம் எண்ணம். 'நம் சேரியின் போகா முடமுதிர் பார்ப்பானை தோழி! நீ போற்றுதி' (கலி 65 : 9-10) என்பது' பிறரினும் பார்ப்பனர் உயர்ந்தோராகக் கருதப்பட்டமைக்கு மேலும் ஓர் சான்றாகும்.

முடிப்புரை

சங்க கால முதியோர், முதுமையைப் பெரிய இடையூறாகக் கருதாது, இடை ஒதுங்காது வாழ்வியல் இன்பங்களை இயன்ற வரை நுகர்ந்து, சமூகத்தாலும் சுற்றத்தாலும் புறக்கணிக்கப்படாது மதிப்புடனே வாழ்ந்ததைச் சங்கப்பாக்கள் தருகின்றன.

துணை நூல்கள்

அன்னிதாமசு : முதுமை; 23.3.90; வெளிவராத உருளச்சுக் கட்டுரை, உதநி, சென்னை.

தினமணி கதிர் 27.9.98; The Hindu Folio - Ageing Oct. 1998.

அ. சிவசுப்பிரமணியன்
அரசு கல்லூரி
சித்தூர் – 678 104

மருதக்கலி காட்டும் சமுதாயமும் பண்பாடும்

''வாழ்க்கையைக் கண்டு காட்டுவதே இலக்கியம்''. ''இலக்கியமென்பது (அறநூலுக்கு இலக்கியமன்று;) சமுதாயத்துக்கு இலக்கியமாம். அது சமுதாயத்தின் பளிங்கு. மக்கள் வாழ்வின் மொழியோவியம். இலக்கியமாயினும், அறநூலாயினும் எவற்றிற்கும் சமுதாய நெஞ்சமே உரை கள்''. ''உலக வாழ்வைத் திருத்தமாக எடுத்துக்காட்டி மக்களின் அறிவுக்கு விருந்தாய் அமைத்து முற்போக்குக்குக் கருவியாய் விளங்குவது தண்டமிழிலக்கியம்.'' ''தனி மனிதனுடைய உட்புறங்களில் உருவெடுத்தாலும், இலக்கியம், உருவெடுக்கக் காரணமாக அமைவது சமுதாயக் காட்சிகளும் மனிதக் கட்டங்களுமேயாகும்''. இலக்கியம் என்பது வாழ்க்கையின் ஆராய்ச்சியே. செய்யுளிற் காணும் உலகம் உண்மையான உலகத்தினின்றும் வேறுபட்ட தன்று: அஃது உலக வாழ்வின் கூறுகளையே ஒழுங்குபடுத்திக் காட்டுகிறது. அரும்பெரும் அறிஞர்களின் இக்கருத்துக்கள் இலக்கியம் என்பது அது தோன்றிய காலத்து வாழ்ந்திருந்த மக்கள், அவர்தம் நாகரிகம், பண்பாடு, பழக்க வழக்கங்கள் முதலியவற்றைப் பிரதிபலித்துக் காட்டும் கண்ணாடி என்பதை உணர்த்துகின்றது.

உலக இலக்கியங்கள் எல்லாம் அவை தோன்றிய கால மக்கள் வாழ்வினைப் படம் பிடித்துக் காட்டும்போது சங்க இலக்கியங்களுள் ஒன்றான கலித்தொகை மட்டும் அதற்கு விலக்காகுமா? ''கலித்தொகை, தான் எழுந்த காலத்தில் விளங்கிய தமிழ்ச் சமுதாயத்தின் அகவுணர்விற்கு எழுப்பப்பட்ட அன்புக் கோயிலாகும். இந்தச் செய்யுட் கோயிலுக்கு வரைபடம் அமைத்துத் தந்தவர் தொல்காப்பியரே''. மருதக்கலி பண்டைத் தமிழர்தம் வாழ்வைச் சிறந்த முறையில் வடித்துக் காட்டுகிறது. அகத்திணைப் பாடல்களின் மற்றொரு தனிச்சிறப்பு, அது

அக்காலச் சமுதாய நிலையினை எவ்வாறு எதிரொலிக்கிறது என்பதைப் பற்றியதாகும்.

சங்க காலச் சமுதாயம் செல்வச் செழிப்பில் திளைத்தது. உரோம வாணிகம் ஈடற்ற நிலையில் இருந்தது. வடநாட்டு வாணிகமும் சிறப்புற நடைபெற்றதைக் கௌடில்யரின் 'அருத்த சாஸ்திரம்' உணர்த்துகிறது. இத்தகைய சமுதாயத்தில் செல்வச் செழிப்புக் காரணமாக உயர்குல மக்களிடையே பற்பலவான ஒழுக்கக்குறைபாடுகள் காணப்பட்டன. பரத்தையரொழுக்கம், பிறர்மனை நயத்தல், காதலுக்கும் நம்பிக்கைக்கும் எதிராக நடத்தல், கள்ளுண்டு அலைதல், சூதாடல் என எத்தனையோ குறைபாடுகள் காணப்பட்டன. சங்ககால மக்கட் பாகுபாடும் வாழ்க்கையும் நில இயற்கைக்கு ஏற்பவே அமைந்திருந்தன. மருதனிளநாகனார் பாடல்களில் அவர் காலத்து நாடு, பழக்க வழக்கங்கள், நம்பிக்கைகள் முதலிய சமுதாயச் செய்திகளைக் காணலாம்.

மருதக்கலி காட்டும் குடும்பம் குழந்தைக்குடும்பம். உயர்ந்த பண்புகளோடு பரத்தமையை மட்டும் குறையாகக் கொண்ட தலைவன், சிறந்த முறையில் அறநெறிப்படி வாழ்க்கை நடத்தும் தலைவி, அவர்களுக்கேற்ற அருமைச் செல்வன், இவர்களோடு ஒன்றி வாழும் தோழி என்பவர்களே அக்குடும்பத்தின் அங்கத்தினர்கள். தலைவன் பல பண்புகளில் சிறந்து விளங்கினும் அவனது பரத்தையொழுக்கம் அவனுடைய குடும்பத்தின் அமைதியைக் கெடுத்தது. மருதத்தின் உரிப்பொருள் ஊடலாகையால் அதற்கு காரணமாகிய பரத்தமையை விரித்துக் கூறினார் புலவர். தலைவனுடைய புறத்தொழுக்கம் இன்பமாக வாழ்ந்த குடும்பத்தில் சிறிது துன்பத்தைப் புகுத்தி விட்டது. பரத்தையிற்பிரிந்து வருகின்ற தலைவனைத் தலைவி இடித்துரைக்கிறாளே தவிரச் சமுதாயம் இடித்துரைக்க வில்லை. தலைவனுடைய புறத் தொழுக்கத்தைத் தலைவி வெறுத்தாள், ஊடினாள், வருந்தினாள், ஆயினும், தன்னை நாடி வந்த தலைவனை ஒதுக்கித் தள்ளினாளல்லள். அவனோடு சேர்ந்து இல்லற வாழ்வை இனிது நடத்திச் செல்ல விரும்பினாளே யன்றி அதற்கு மாறாக ஒன்றும் நினைத்திலள். தலைவன் எத்தன்மையனாயிருப்பினும் அவனை நன்னிலைத் தலைவனாகக் கொண்டு ஒழுகுவதே தலைவியின் சிறப்பு. ஒத்துப்போகின்ற தலைவியின் தன்மையாலும், சமுதாயத்தில் பரத்தையிற் பிரிவிற்குப் பேரெதிர்ப்பு இல்லாததாலும், பலருடைய இல்லற வாழ்க்கைப் பிளவின்றி நடந்தது எனலாம்.

ஆடவர்தம் பரத்தையொழுக்கத்தை அக்காலச் சமுதாயம் ஏற்றுக்கொண்டதேயன்றி தவறாகக் கொள்ளவில்லை. உலகம் முழுவதும் ஏற்றுக்கொண்ட பரத்தமையை நம் தமிழ்ச் சமுதாயம் ஏற்றுக் கொண்டது இழுக்காகாது. எனவே மருதக்கலி விரித்துக் கூறும் தலைவனது பரத்தையொழுக்கத்தை மட்டும் மனதிற் கொண்டு தமிழர் தம் பண்பாடு இழிந்தது எனக் கூறவியலாது.

மருதக்கலியில் பெரும்பாலான பாடல்களைப் படிக்கும் போது தலைவனுடைய தொழில் பரத்தையை நாடுவதுதானோ என்று தோன்றினாலும் சில பாடல்களில் தலைவனுடைய உண்மையான தொழிலைக் காணலாம். போர்க்களத்திற்குச் செல்வது, சிறந்தமுறையில் நீதிவழங்குவது, தான் தேடிவந்த பொருளைத் தன்னை நாடி வந்தோருக்கு வழங்குவது என்பவைகள் அவனுடைய தொழில்களாகக் கூறப்பட்டுள்ளன. தலைவி இல்லறக் கடனிலே சிறந்து விளங்கித் தன் மகனை நாளொரு மேனியும், பொழுதொரு வண்ணமுமாக வளர்த்து வருபவளாகத் தோன்றுகிறாள். தலைவியினுடைய புதல்வனைக் கோயில் போன்ற இடங்களுக்கு எடுத்துச் செல்வதும், வீதியில் விளையாட வைப்பதும் தலைவன் தலைவியரை இணைத்து வைப்பதும் தோழியின் கடமையாகவும் வேலையாகவும் இருந்தது. பாணன், பாகன், பார்ப்பனன், புலைத்தி ஆகியோர் தலைவனுடைய பரத்தமைக்கு உறுதுணையாக இருந்து அவனுடைய ஏவலாளராகத் தோன்றினர். பாணன் யாழிசைப்பதில் சிறந்து விளங்கினான். பாகன் தேரோட்டியாக இருந்து தலைவனுடைய பரத்தமைக்குப் பெரிதும் உதவுகிறான். பார்ப்பனன் காமக் கிழத்தியிடஞ் சென்று தலைவனுடைய பரத்தமையை மறைத்து அவனைப்புகழ்ந்து கூறுகிறான். புலைத்தி பரத்தையரிடம் தூது செல்கிறாள். கடவுள் வழிபாடு நேரடியாகக் குறிப்பிடப்படவில்லை. கோயிலுக்குச் சென்று கடவுளை வழிபட்டு வருகின்ற வழக்கம் அக்கால மக்களிடையே இருந்தது. ஆலமர் செல்வன் என்று சிவபெருமானும், ஆலமர் செல்வன் அணிசால் மகன் என்று விநாயகப் பெருமானும் ஆலமர் செல்வன் அணிசால் பெருவிறல் என்று முருகப் பெருமானும் சுட்டப்பட்டுள்ளனர்.

காதலர்களிடையே வஞ்சித்தொழுகும் தன்மையும் பொய்யும் தலைகாட்டிய போதுதான் பண்டைத்தமிழர் திருமணம் என்ற ஒரு சடங்கை உருவாக்கினர் என்பதை,

''பொய்யும் வழுவுந் தோன்றிய பின்னர்
ஐயர் யாத்தனர் கரணம் என்ப''

என்ற தொல்காப்பிய நூற்பா சுட்டுகிறது. நம் பண்டையோர் திருமணத்தைச் சிறந்த முறையில் நடத்தினர் என்பதை மருதக் கலியால் அறியலாம். விருந்தோம்பல் தலைவியின் இல்லறக் கடன்களில் ஒன்றாக இருந்தது. தலைவி தன் தலைவனோடு ஊட வேண்டுமென்று நினைத்திருப்பினும் விருந்தினரைக் கண்ட வுடன் அவ்வெண்ணத்தைக் கைவிடுகிறாள்; விருந்தினரைச் சிறந்த முறையில் உபசரிக்கிறாள். அவளுடைய இச்செயல் விருந் தோம்புவதில் தமிழர் சிறந்து விளங்கினர் என்பதைத் தெள்ளிதின் உணர்த்துகிறது. முருகப் பெருமானுக்கு விழா நடத்துகின்ற வழக்கமிருந்திருக்கிறது. அதனால்தான் தோழியும் தலைவனு டைய மகனும் தேரிலே வந்த காட்சியைக் கண்ட தலைவனுடைய புறமகளிர் ''மிக்க புகழையுடைய ஆலமர்செல்வனின் மகனான முருகப் பெருமானின் விழாத் தொடங்கிற்று'' என்று எண்ணித் தெருவை நோக்கி நிற்கின்றனர்.

பொழுது போக்கால் உள்ளத்திற்கு இன்பமும் உடலிற்குப் பயிற்சியும் கிடைக்கிறது. அவை மக்களுக்குப் புத்துணர்ச்சியை யும், புதுமலர்ச்சியையும் தந்து அவர்களைக் கடமையிலீடுபடச் செய்கிறது. குதிரை ஏறிவரல், யானை ஏறிவரல், குரும்பூழ் போர் காணுதல், புனலாடுதல், சூதாடுதல் முதலியன அக்கால மக்களின் பொழுதுபோக்குகளா யிருந்தன. தலைவன் குதிரை சவாரி செய்வான், யானை ஏறிவருவான், குரும்பூழ்போர் காணுவான் என்பவற்றை மூன்று பாடல்கள் சுட்டுகின்றன. புனலாடுவது மக்களால் பெரிதும் விரும்பப்பட்ட ஒரு பொழுதுபோக்காக இருந்தது எனலாம். சூதாட்டத்திற்காக அதற்கேயுரிய பலகை பயன்படுத்தப்பட்டது என்று அறிகிறோம்.

பண்டைக்கால மக்கள் அணிதற்குப் பயன்படுத்திய அணி கலன்கள் குறித்து மருதக்கலி விளக்கம் தருகின்றது. காலணியாகச் சிலம்பும், பொன்னால் செய்யப்பட்ட பாதசரமும் காதணியாகக் குழையும் காணப்படுகின்றன. அழகிய வேலைப்பாடுடன் விளங்குகின்ற வளையும், மோதிரமும் கையிலே அணிந்திருந் தார்கள். இடுப்பிலே அணிகின்ற அணியாகிய அரை நாண் வேலைப்பாடு மிகுந்த பொற்காசுகளாலும், பவளங்களாலும் வடம் போலப் பதித்துக் கோர்க்கப்பட்டு அழகுடன் விளங்கிற்று. பலவகை இலச்சினைகளைப் பொறித்த அணிகலன்களைக் கழுத்திலே அணிந்திருந்தனர். கூந்தலிலே முத்துமாலையும், கருமணியைப் போன்ற கண்ணியையும் சுற்றியிருந்தனர். இத்தகைய ஆபரணங்க ளோடு அழகு மிகுந்த ஆடைகளை

அணிந்து உயர்ந்த அழகுடன் விளங்கினர். கடல், திருப்பரங் குன்றம், வைகை என்பவைகளைப் பற்றிய குறிப்புகள் காணப் படுகின்றன.

மேற்குறித்தவற்றால் மருதக்கலி காட்டும் மக்களின் சமுதாய அமைப்பும், நாகரிகமும், பண்பாடும், தற்கால மக்களின் சமுதாய அமைப்பு, நாகரிகம், பண்பாடு என்பவற்றை விட எந்த வகையிலும் குறைந்ததல்ல என்பதை உணரலாம்.

மு. சிவசுப்பிரமணியன்
ஸ்ரீ நேரு மகா வித்யாலயா கலை & அறிவியல் கல்லூரி
கோயம்புத்தூர் – 641 021

நாடகத்தின் தோற்றமும் வளர்ச்சியும்

முன்னுரை

'மனிதன் ஒரு பகுத்தறிவுள்ள மிருகம்'

என்று கூறுவர். மனிதன் மிருக இனத்தைச் சேர்ந்தவன். மனிதனை மிருகத்திடமிருந்து பிரித்துக் காட்டுவது சிந்தனையும் சிரிப்பும் தான். மன உணர்ச்சிகள் எதிரொலிக்கின்ற வகையில் சிரிப்பவன் மனிதன். கோபச் சிரிப்பு, வஞ்சகச் சிரிப்பு, கேலிச் சிரிப்பு, நமட்டுச் சிரிப்பு என்ற பலவகைச் சிரிப்புகளை மனதில் எழும் உணர்வுகளையும் வெளிப்படுத்தும் கலையாக நாடகக்கலை இருந்து வருகிறது. அதன் தோற்றம், வளர்ச்சி பற்றி ஆய்வதே இக் கட்டுரையின் நோக்கமாக அமைகிறது.

பொருளுரை

நாடகக் கலையின் ஆற்றல்

ஆறு மாதம் படித்துத் தெரிந்து கொள்ள வேண்டியதைக் கற்றோரிடம் ஒரு நாள் தெரிந்து கொள்ளலாம். அப்படி ஆறு மாதம் கேட்டுத் தெரிந்து கொள்ள வேண்டியதை ஒரு நாள் நாடகம் மூலம் பார்த்துத் தெரிந்து கொள்ளலாம் எனக் குறிப்பிடு கிறார், கிருபானந்த வாரியார். நாடகக் கலையின் ஆற்றலை இந்தக் கூற்று மெய்ப்பிக்கின்றது.

நாடகம் - விளக்கம்

நாடகம் என்பது பாமர மக்களின் பல்கலைக்கழகம் என்று கவிக்குயில் சரோஜினி கூறுகிறார்.

நற்சரிதை, நற்கவிதை, நல்நடிப்பு நாட்டினிலே நாடகத்தில் அமைய வேண்டும் - பாரதிதாசன்.

'நாடகம்' கலைக்கு அரசு. நாட்டின் நாகரிகத்திற்குக் கண்ணாடி, உணர்ச்சியைத் தூண்டி விட்டு உள்ளத்தில் புதைந்து

கிடக்கும், அன்பையும், தூய்மையையும் வெளிப்படுத்தும் மக்களைப் பண்படுத்தும் மகத்தான கலை-அவ்வை டி.கே. ஷண்முகம் ஓர் கலைஞன் எவ்வாறு இருக்க வேண்டும் என்பதை "Artists make us Love. The Lovable and detest the detestable what is needed in the modern world. - Dr. Radhakrishnan. என்ற வரிகள் மூலம் விளக்கம் தருகிறார்.

நாடகக் கலைக்கு ஏனைய கலைகளைக் காட்டிலும் அபூர்வ சக்தி ஒன்று உண்டு. மக்களை உடனடியாகச் செயலில் இறங்கச் செய்வது நாடகக் கலை தான் - (கலைவாணர்).

நாடகம் பற்றிய இலக்கிய நூல்கள்

''நாடக வழக்கினும் உலகியல் வழக்கினும் பாடல் சான்ற புலநெறி வழக்கம்''. என்று தொல்காப்பியமும்,

நாடகம் ஏற்றும் நாடகக் கணிகையோடு'' என்று 'சிலப்பதிகாரமும்',

''நாடக மடந்தையர் நலங்கெழு வீதி'' என்று மணிமேகலையும்,

நாடகத்தால் உன் அடியார் போல் நடித்து'' என்று திருவாசகமும்.

''நயங்குதிறம் பொருந்த நாடகம் கண்டும்'' என்று பெருங்கதையும்,

நாடகம் பற்றிய செய்திகளை சுட்டிக் காட்டுகின்றன.

முற்கால நாடகங்கள்

கூத்தர், பொருநர் என்ற பெயருடன் கலைஞர்கள் நாடகக் கலையையும், நடனக் கலையையும் வளர்த்து வந்தனர். இக் கருத்தை நிலை நாட்டும் புகழ்க்கூத்து, வசைக் கூத்து, வரிக்கூத்து, இயல்பு கூத்து போன்ற நாடக நூல்கள் பழைய இலக்கிய உரைகளில் தெரிவிக்கப்பட்டுள்ளன.

இடைக்கால நாடகங்கள்

இராச இராச சோழன் காலத்தில் நடிக்கப்பட்ட இராசராசேசுவர நாடகம் சிறப்பாக ''11ஆம் நூற்றாண்டில் அரங்கேற்றப்பட்டது. பூப்புலியூர் நாடகம், சோழர் எழுந்தருளிய நாடகம் 12 ஆம் நூற்றாண்டில் வளமான இலக்கியங்களாக மலர்ந்த, கம்பராமாயணம், சீவக சிந்தாமணி, கலிங்கத்துப்பரணி, திருத்தொண்டர் புராணம் போன்றவற்றில் நாடகக் கூறுகள் உள்ளன.

குறவஞ்சி

17ஆம் நூற்றாண்டில் தோன்றிய குறத்தி குறி கூறுவது போல அமைந்த நாடகப் பாங்கான இலக்கிய நாடகம் திரிகூட ராசப்ப கவிராயரால் எழுதப்பட்டது. அழகர், குறவஞ்சி, ஞான குறவஞ்சி, மீனாட்சியம்மை குறவஞ்சி, சரபேந்திர குறவஞ்சி முதலியவை குறவஞ்சி நூல்களாம்.

இந்நாடகத்தில் தலைவர் உலா வருவதாகவும் தலைவி அவளைக் கண்டு காதல் கொள்வதாகவும், தென்றல், நிலவு, முதலியவற்றைப் பழிப்பதாகவும், தலைவி தோழியைத் தூது அழைப்பதாகவும், குறத்தி வந்து குறி சொல்லி மாலை பெறுவ தாகவும், குறத்தி குறவனோடு ஊடல் காரணமாக வினாவிடை தொடுப்பதாகவும், பின் நாட்டை வாழ்த்துவதாகவும் அமைந்து நாடகமாக காட்சியளிக்கிறது.

பள்ளு

உழவர்களின் வாழ்க்கையைச் சுவைபட எடுத்துரைப்பது உழுவித்து உண்ணும் பண்ணை முதலாளியின் உழுதுண்ணும் பள்ளனும் அவன் மனைவியர் இருவரும் இந்நாடகத்தின் கதை மாந்தர்கள். மூத்த பள்ளி, இளைய பள்ளி போராட்டம், மழை வருதல், வெள்ளம் பெருக்கெடுத்தல், நாற்று நடுதல், களை எடுத்தல், வையாபுரி பள்ளு முதலிய நாடகங்கள் இவ்வகையில் தோன்றி வளர்ந்தன.

பிற்கால நாடகங்கள்

பாரத விலாசம், கிருஷ்ண விலாசம், கருணரசன் விலாசம், சாகுந்தல விலாசம், அரிச்சந்திர நாடகம், தாரா நாடகம், சுபத்திரை கல்யாணம் போன்றவை பிற்காலத்தில் தோன்றியவை. பின்னர்த் தெருக்கூத்து நாடகம் தோன்றியது.

நாடகம்

17ம் நூற்றாண்டில் நொண்டி நாடகம் சிறப்புடன் விளங்கியது. இந்நாடகத்தின் தலைவன் நெறி தவறி நடந்து பரந்தையருடன் தொடர்பு கொண்டு உடல் நோய் பெற்று, வலிமை இழந்து நொண்டி ஆகி, இறைவனை வேண்டி மனம் மாற்றம் அடைந்து நலம் பெறுவதாக இது அமையும்.

சீதக்காதி நொண்டி நாடகம், திருகச்சூர் நொண்டி நாடகம், ஐயனார் நொண்டி நாடகம் போன்றவை குறிப்பிடத்தக்கவை.

கவிதை நாடகம்

தமிழ் இலக்கியத்துள் முதன் முதலில் நாடக வடிவில் அமைந்த கவிதை நாடகமான மனோன்மணியம், 19-ஆம் நூற்றாண்டில் பேராசிரியர் சுந்தரம் பிள்ளையால் இயற்றப் பட்டது.

தமிழ் நாடக தலைமையாசிரியர் எனப் போற்றப்படும் சங்கரதாசு சுவாமிகளின் பிரகலாதா, சகுந்தலை நாடகங்கள் குறிப்பிடத்தக்கவை. இவர்களைத் தவிர உடுமலை முத்துசாமி, கவிராயர், சுப்பிரமணிய சிவா, தொ.பெ. கிருஷ்ணசாமி பாவலர், நமச்சிவாயர், அண்ணா, கருணாநிதி போன்றோரும் நாடகக் கலைக்கு அரும்பணி ஆற்றியவர்களில் குறிப்பிடத் தக்கவர்கள்.

இன்றைய நாடகங்கள்

நல்ல நாடகங்கள் எல்லாம் திரைப்படமாக மாற்றப்பட்டு மக்களிடம் பெரும் செல்வாக்குப் பெற்றுத் திகழ்கின்றன. நாடகம் தனது செல்வாக்கை இழப்பதற்கு முக்கிய காரணம் பொருளா தாரமே. ஒருமுறை எடுக்கப்பட்ட திரைப்படத்தைப் பலமுறை பார்க்க இயலும். ஆனால் ஒரு முறை நடத்திய நாடகத்தை மீண்டும் நடத்துவதென்றால் பெரும் பொருட் செலவு ஏற்படும், மேலும் வானொலி, தொலைக்காட்சி நாடகங்கள் இன்றைய மக்கள் மனதில் பெரும் மாற்றத்தை ஏற்படுத்தி வருகின்றன.

முடிவுரை

நாடகம் சமுதாய நிகழ்வுகளை வெளிப்படுத்தும் ஓர் அரியகலை. அக்கலையின் ஆற்றல் பல்வேறு காலகட்டத்தில் அதன் வளர்ச்சி பற்றிய நிலை ஆகியவற்றை இக்கட்டுரையின் வாயிலாக அறிந்தோம். இக்கட்டுரையிலிருந்து நாடகம் என்பது மக்களை ஒருங்கிணைக்கும் உன்னத கலை என்றும், மக்களை சிந்திக்கவும், சிரிக்கவும் வைப்பதில் பெரும் பங்கு அதற்குண்டு எனவும் தெரிந்து கொள்கிறோம்.

பா. சிவநேசன்
அரசு கல்லூரி (தன்னாட்சி)
கும்பகோணம்

திருமுல்லைவாயிற் புராணத்தீறன்

தமிழிலக்கியங்களுள் புராணங்கட்குத் தனி இடம் உண்டு. தமிழ்ப் புராணங்களைப் பெரியோர் வரலாற்றைக் கூறுவது, கடவுளின் திருவிளையாடல்களை உரைப்பது, தலவரலாற்றைப் பேசுவது எனும் மூவகையில் அடக்கலாம். தமிழில் கி.பி. 15 முதல் 18 வரையில் எண்ணற்ற தலபுராணங்கள் தோன்றியுள்ளன. எனவே அக்காலத்தைத் தலபுராண இலக்கியக்காலம் எனக் கூறலாம். தலபுராண ஆசிரியர்கள் காப்பிய காலத்தில் தோன்றியிருந்தால் சிறந்த காப்பியங்களைத் தந்திருப்பர். தலபுராணங்களில் சில ஒரே அமைப்புடையனவாயும், சுவை குன்றியனவாயும் இருந்தமையால் மதிப்பிழந்தன. சில புராணங்கள் தத்துவ நலத்தாலும், இலக்கியச்செறிவாலும் இன்றும் செல்வாக்குடன் திகழ்கின்றன. அவ்வாறு போற்றப்பெறும் தலபுராணங்கள் வரிசையில் திருமுல்லைவாயிற் புராணமும் இடம் பெறுகிறது.

நூல்-புறவடிவம்

தமிழ்நாட்டில் திருமுல்லைவாயில் எனும் பெயருடைய தலங்கள் இரண்டு உள்ளன. ஒன்று சென்னைக்கு அருகிலுள்ள வடதிருமுல்லைவாயில். மற்றொன்று சீர்காழியை அடுத்துள்ள தென்திருமுல்லைவாயில் திருமுல்லைவாயிற்புராணம் எனும் நூல் தென்திருமுல்லைவாயிலின் சிறப்பை எடுத்தியம்புவது. இந்நூல் நகர்வளச்சருக்கம், நைமிசச்சருக்கம், அங்கம் இரத்தின மான சருக்கம், பார்ப்பதியார் பஞ்சாக்கர சித்தி பெற்ற சருக்கம், பரத்தை கதிபெற்ற சருக்கம், தீர்த்த விசேட சருக்கம், கருடன் கதிபெற்ற சருக்கம், கிள்ளிச் சோழன் முத்தி பெற்ற சருக்கம் எனும் எட்டுச் சருக்கங்களைக் கொண்டது. கடவுள் வாழ்த்துப்பகுதி 15 பாடல்களுடன் தனியாக அமைந்துள்ளது. அப்பகுதியிலேயே அவையடக்கமும் அடங்கியுள்ளது. இந்நூலில் பாடல் தொகை 413 ஆகும். புலவர் அவையடக்கத்தில், 'இரும்பினால் பொன்னும்,

துரும்பினால் தூணும், வேம்பினால் கரும்பும், சிறப்பும் சுவையும் பெறுதல் போல என்சிறுகவிதையால், மேன்மக்களின் நற்கவிகள் சிறப்புடன் விளங்கும் (14) என்று பாடியுள்ளார். இது அவரது பண்பட்ட உள்ளத்தைப் புலப்படுத்துகிறது.

அகவடிவம்

தலபுராணங்கள் மூர்த்தி, தலம், தீர்த்தம் எனும் மூன்றின் சிறப்பினை விவரிக்க எழுந்தவை. இவற்றின் பெருமைகள் சில வரலாறுகளின் மூலம் நியாயப்படுத்தப்பெறும். புலவர் இந்நூலில், புராண வரலாறுகளைச் சூதமுனிவன் சவுனை முனிவனுக்கு உரைப்பதாக அருளியுள்ளார். நகர்வளச் சருக்கத்தில் காவிரி வளமும், கடலின் சிறப்பும் விரிவாகப் பேசப் பெற்றுள்ளன. தீர்த்தங்களின் சிறப்பினை நைமிசச் சருக்கத்திலும், தீர்த்த விசேட சருக்கத்திலும் காணமுடிகிறது. பார்வதியார் இங்கு வந்து இறைவனிடம் திருவைந்தெழுத்து உபதேசம் கேட்டதான வரலாறு ஒன்று வருகிறது. வாமதேவனின் தந்தை சுவாவி, காஞ்சன நகர்ப்பரத்தை, காமவயப்பட்ட கருடன் என்பான் ஆகியோர் இத்தலத்து இறைவனை வணங்கி முத்திபெற்றிருக் கிறார்கள். முல்லைக் கொடியின் கீழிருந்த இறைவன் கிள்ளிச் சோழனின் வாளால் புண்பட்ட வரலாறும் இதில் உள்ளது. அச்சோழனும் முத்தியடைந்திருக்கிறான்.

ஆசிரியர் அறிமுகம்

திருமுல்லைவாயிற் புராணத்தை இயற்றியவர் வடுகநாத தேசிகராவார். இவர் இலக்கண விளக்கம் செய்த வைத்தியநாத தேசிகரின் மகனார். இவர் திருவாரூரில் பிறந்து சீர்காழியில் வாழ்ந்தவர். சென்னை வரை சென்று தம் கவிநலத்தால் புகழ் பெற்றவர். தென்மாந்தை வேளாளன் என்பவர் இவரை ஆதரித்துப் போற்றியதாக 15-ஆம் பாடல் தெரிவிக்கிறது. இவர் காலம் கி.பி. 17 ஆம் நூற்றாண்டாகும்.

பதிப்பு வரலாறு

தருமபுர ஆதீனத்தின் வழி இரண்டு முறை பதிப்பிக்கப் பெற்றுள்ளது. 1927-இல் முதல் பதிப்பு வெளியானது. அதன் பதிப் பாசிரியர் சீகாழி ப.அ. முத்துத்தாண்டவராய பிள்ளை ஆவார். இரண்டாம் பதிப்பு முனைவர் கு. சுந்தரமூர்த்தி எழுதிய குறிப்புரையுடன் 1989 இல் வெளிவந்துள்ளது. இந்நூலில் மூன்றாம் பதிப்பு தெளிவுரையுடன் கூடியதாய், தமிழ்நாடு இந்து அறநிலையத்துறை வெளியீடாக வர இருக்கின்றது.

சமயக்கூறுகள்

இறையியல்பு

திருமுல்லைவாயிலில் எழுந்தருளியுள்ள இறைவன், முல்லைவனநாதன், மாசிலாமணிநாதர் எனும் பெயரினை உடையவர். இறைவன் இயல்பினைப் புராண ஆசிரியர் தத்துவ நலம் தோன்ற அருளியுள்ளார். இவன் வினைப்பயன் நீங்கிய வன். என்றும் நிலைத்தவன். பிறவி நோய் அற்றவன் யாவர்க்கும் அரியவன். உயிர்கட்குத் தோன்றாத துணையானவன். ஐந்தொழிலை இயற்றுபவன். அருளையே தன்வடிவாகக் கொண்டவன் (3) என்கிறார். இறைவன் ஊழிமுடிவிலும், அழியா திருப்பவன் எனச் சாத்திரங்கள் கூறும். இவரும் அக்கூற்றை வலியுறுத்தும் வகையில், 'இறந்த கற்பங்கடந்து இறவாது இருந்தவர்' - (132) என்று பாடியுள்ளார். இறைவன் தனக்குவமை இல்லாதவன் என்பதனை, 'தன்னோடும் தனக்கு நேராம் தம்பிரான்' (378) என்று குறிப்பிடுகிறார். இறைவன் உயிரோடு ஒன்றாயும், வேறுபட்டும், வேறுபாடின்றியும் இருப்பவன் (174) என்றும், காரண காரியங்கட்கு அப்பாற்பட்டவன். கற்பனைக்கு எட்டாதவன் (338) என்றும், சாதி வேறுபாடு பார்ப்போருக்கும் அருளுபவன் (204) என்றும் பரவியுள்ளமை இந்நூலில் காணமுடிகிறது.

ஐந்தெழுத்து

ஐந்தெழுத்து ஐந்து பூதம், ஐந்து புலன், ஐந்து மூர்த்தம், ஐந்து பிரமம், ஐந்து தொழில் என எல்லாமாய் விளங்குவது பார்ப்பதியார் பஞ்சாக்கரசித்தி பெற்ற சருக்கத்தில் உணர்த்தப் பெற்றுள்ளது.

ஐந்து பூதமும் ஐந்து புலன்களும்
ஐந்து மூர்த்தமும் ஐந்து பிரமும்
ஐந்து நற்றொழி லாகி நிறைந்ததும்
ஐந்து எழுத்தினை அல்லதுஒன்று இல்லைகாண் - 152

என்பது அப்பாடல்.

வரலாற்றுப்பதிவு

சைவசமயத்திற்குப் பெருமை சேர்க்கும் வகையில், சில தொன்மையான வரலாறுகளையும் நினைவு கூர்ந்துள்ளார் புலவர். திருமால் சக்கரம் பெறத் தன் கண்ணையே மலராகக் கொண்டு அருச்சித்த வரலாறு 253-ஆம் பாடலில் காணப்படுகிறது. சரியை நெறியைக் குறிப்பிட வந்தவர், அதனை 'நாவுக்கரையனார் பணி'

(342) என்று சுட்டியுள்ளார். சுந்தரருக்காகத் தூது சென்றதால் இறைவனைப் புலவர் 'சந்து இரவில் நடந்த பிரான்' (80) என்கிறார். பூம்பாவையர் வரலாற்றுக் குறிப்பை ஓரிடத்தில் உவமையாக வைத்துப் பேசியுள்ளார் (118). 'சமர்க் களிற்றின் உரியார்' (8) என்பதில் யானை உரி போர்த்திய வரலாற்றை அறிய லாம். கண்ணன் நந்தகோபனை முத்தியடையச் செய்யச் சிவனை வழிபட்டது (120), மார்க்கண்டர் தவம் இயற்றியது முதலான வரலாறுகளும் இந்நூலில் உள்ளன. இதில் காவிரிக்கு வடகரை யிலுள்ள தேவாரத்தலங்கள் பட்டியலிடப்பட்டுள்ளன (2:63 - 68)

தலங்களின் வகை

தில்லை வனம், சாயா வனம், வில்வ வனம், வேத வனம், முல்லை வனம் என்பன இறைவன் எழுந்தருளியுள்ள ஐவனங்க ளாம். (335) இவை பற்றிய குறிப்பும் தரப்பெற்றுள்ளது. திருவாரூர் (பிருதிவி), திருவானைக்கா (அப்பு), திருவண்ணாமலை (தேயு), திருக்காளத்தி (வாயு), சிதம்பரம் (ஆகாயம்) எனும் தலங்களைப் பஞ்சபூதத் தலங்களாகக் குறிப்பிடல் மரபு. ஆனால் இப்புராண ஆசிரியர், கேதாரம், முதுகுன்றம், சீகாழி, திருவாரூர், கோகனம், (339) எனும் தலங்களைப் பஞ்சபூதத்தலங்களாகக் கூறியுள்ளார்.

பிருதிவி யப்பு தேயு வாயுவா காசம் பீடார்
திருவுருப் பெறும் இலிங்கத் தெய்வநல் தானம் ஐந்தில்
அருளுரு மலைகே தாரம் அணிமுது குன்றம் காழிக்
குருமலை கமலை நீங்காக் கோகன வெற்போடு ஐந்து (339)

என்பது அப்பாடல்.

இலக்கிய அணிகள்

உவமை

திருமுல்லைவாயிற் புராணத்தில் இலக்கியச் செம்மையும் உண்டு. உவமை, உருவகம், எண்ணலலங்காரம் முதலிய வற்றிற்குச் சான்று காட்டலாம். உவமைகள் பக்திநலம் சான்றன வாய் இருப்பது குறிப்பிடத் தக்கது. வாமதேவன் சுசாவி எலும்பை முல்லைநாதர் முன்பு வைத்து வணங்குகின்றான். அவன் செயல் பூம்பாவையின் தந்தையார், ஞானசம்பந்தர் முன் பூம்பாவையின் எலும்புக்குடத்தை வைத்து வணங்கியது போன்றது என்பர்.

''கயிலைமலைப் பொருள்அருள்சேர் கவுணி யர்கோன்
புகழ்க் காழிக் கடவுள் முன்னர்
மயிலையிலோர் வணிகன்மகள் அங்கம்இடு கடத்தை வைத்து
வணங்கல் போல'' (118) என்பது செய்யுள்.

வாமதேவனுக்குச் சுசாவியின் எலும்பு நவமணிகளாய்க் காட்சியளித்தமை இறைவன் பார்வதியை மணந்த போது, அவன் மார்பில் அணிந்துள்ள எலும்புகள் இமவானுக்கு மணிகளாய்த் தோன்றியது போன்றிருந்தது என ஒப்பிட்டிருப்பது அற்புத மானது. ''சுமைக்குடத்துள் என்பனைத்தும் தோன்றலுக்கு நவ மணியாய்த் தோன்றும் தோற்றம், இமையமலைப் பெண்ண ணங்கை மணஞ்செயுநாள் அவள் அணங்கின் எழிலுக்கு ஒக்க, அமையும் ஒரு மணவாளக் கோலமும்சேர் எம்பிரான் அணி என் பெல்லாம் சிமையமன்னன் முதலியர்க்கு நவமணிப்பூண் என விளிக்குந் திறமை போலாம்'' *(130)* என்பது அப்பாடல்.

உருவகம்

நகர்வளச்சுருக்கம் 4-ஆவது பாடலில் காவிரி ஒரு பெண்ணாக உருவகிக்கப் பெறுகிறது. காவிரியாகிய கன்னிக்குக் கயல்மீன்களே கண்கள். புல்மேடுகள் கொங்கைகள். பாசி-குழல். நீர்ப்பெருக்கு-முகம். நீரினில் வரும்மணிகளின் ஒலி - சிலம் பொலி. அலைகளின் கூட்டங்கள் - கைகளும் கால்களும்.

கரிய அங்கயல் கண்ணினைக் காட்டிக் காமர் புல்பதம்
கனத னங்காட்டிச்
சரிமலர்க் குழல் சைவலம் காட்டி தனிமு கத்து
எழில் தாமரை காட்டி
பரிபு ரத்துஒலித் துழனிகள் காட்டிப் பண்மணித்திரன்
பலமணி காட்டி
விரிதி ரைத்திரள் தாமரை காட்டிமேவு காவிரி மெல்லியல்
செல்லும் *(14)*

இவ்வகையில் காவிரிப்பெண் நடந்து செல்கிறாளாம்.

எண்ணலலங்காரம்

பாடலில் எண்கள் தொடர்ச்சியாக அமைந்து வருவது எண்ணலலங்காரம் எனப்படும். எண்ணலலங்காரத்திலும் இதில் பாடல்கள் அமைந்துள்ளன.

தொகுப்புரை

இந்நூலில் தத்துவக்குறிப்புகளும், வழிபாட்டு நெறிகளும் தெளிவாக்கப்பட்டுள்ளன. இதிலமைந்துள்ள இலக்கிய அணிகள் படித்து இன்புறத் தக்கன. அணிவகைகள், சங்குகளின் வகைகள் முதலான செய்திகளும் பதிவாகியுள்ளன. சைவ சமயத்திற்கு இந்நூல் ஒரு நல்வரவாகும். இதுபோன்ற நூல்களை ஆராய்ந்து வெளிப்படுத்துதல் சைவ உலகிற்கு நலம் சேர்க்கும்.

அ. சிவபெருமான்
அண்ணாமலைப் பல்கலைக்கழகம்
அண்ணாமலை நகர் – 608 002

உணவும் மனமும்

மனிதனும் மனமும்

மனிதன் என்ற சொல்லைக் காரணப் பெயராகவும் குறிப்பிட லாம். எவ்வாறெனில் 'மனம்' உள்ளவனே மனிதன் என்க. உயிரினங்களுள் மனிதனுக்கு மட்டுமே மனம் உண்டு. மெய், வாய், கண், மூக்கு, செவி ஆகிய ஐம்புலன்களோடு மனம் என்னும் மற்றோர் உட்புலனும் சேர்வதால்தான் அவன் ஆறறிவு உயிராகக் கொள்ளப்பட்டு மனிதனாக ஆகின்றான். இதனைத் தொல்காப்பிய மரபியல் உணர்த்தும்.[1]

மெய், வாய், கண், மூக்கு, செவி ஆகிய ஐந்து உறுப்புக்களும் மனித உடம்பின் வெளியில் அனைவரும் பார்க்கும்படியாக அமைந்துள்ளன. ஆனால், மனம் மட்டும் நாம் யாரும் பார்க்க முடியாதபடி ஆனால் அவரவர் உணரும்படி உள்ளே அமைந் துள்ளது. உடம்பின் உள்ளே மனம் இருப்பதால் இதனை 'உள்ளம்' என்றும் கூறுவர். புத்தி, மனம், அகங்காரம் ஆகிய மூன்றின் மொத்த வடிவமே உள்ளம் ஆகும். உள்ளம், மனம் ஆகிய இரண்டு சொற்களும் ஒரே பொருளை உணர்த்தும் ஒருபொருட் சொற்களாகும்.

மனிதன் சிந்திக்கவும், நினைக்கவும், ஆராயவும், பகுத் தறியவும் மனம் அடிப்படையாகின்றது. நாம் நினைக்கின்றவாறு நமது வேலைகளைச் செய்ய மனம் உதவுகின்றது. மனம் இல்லாவிட்டால் மனிதனே இல்லை என்க.

உணவும் மனமும்

இனி, நம் மனதிற்கும் நாம் உண்ணும் உணவிற்கும் தொடர் புண்டா? என அறிவோம், ஆங்கிலம் முதலான மேல்நாட்டுக் கல்வியைக் கற்ற இக்கால அறிஞர்கள் உணவிற்கும் மனதிற்கும்

தொடர்பே இல்லை என்றும், நாம் உண்ணும் உணவு உடல் வலிமை என்ற ஒன்றையே நமக்குத் தருகின்றது என்றும் கூறி வருகின்றனர். மேலும், மக்களுள் பெரும்பான்மையினர் தாம் உண்ணும் உணவு உடம்பிற்கு வலிமையைத் தந்துவிட்டு, கழிவுப் பொருளாகிய மலமாகி நம் உடம்பை விட்டு நீங்குகின்றது என்றுதான் கருதுகின்றனர். எனவே, உணவிற்கும் மனதிற்கும் தொடர்பே இல்லை என்பது பெரும்பான்மையினர் கருத்தாகும். ஆனால், நம் நாட்டில் தோன்றிய திருமந்திரம், சிவவின்ன போதம், பகவத்கீதை முதலான ஞான நூல்களெல்லாம் உணவிற்கும் மனதிற்கும் தொடர்பு இருப்பதாகக் கூறுகின்றன.

உண்ணும் உணவும் மூன்று கூறும்

ஒருவர் உண்ணும் உணவு உடல் (வலிமை), மனம், மலம் (கழிவுப் பொருள்) ஆகிய மூன்று கூறாக ஆகும் என்பதைத் திருமூலர் அருளிய திருமந்திரம் பின்வரும் பாடலால் கூறுகின்றது.

அருந்திய அன்னம் அவைமூன்று கூறாம்
பொருந்தும் உடல்மனம் போம்மலம் என்ன
இருந்தும் உடல்மன மாம்கூறும் சேர்ந்திட்டு
இருந்தன முன்னாள் இரதம தாகுமே[2]

இத்திருமந்திரப் பாடலின் கருத்தை உட்கொண்ட சிவவின்ன போதம் என்ற ஞானநூல்,

''ஒருகூறு மலமாகும்; ஒருகூறு
உடம்பாகும்;
ஒருகூறு மனமாகும்
உண்டற்ற அன்னம்''[3]

என்று குறிப்பிட்டுள்ளது.

மேற்குறிப்பிட்ட அவ்விரண்டு பாடல்களைக் கருதினால் ஒருவர் உண்ணும் உணவானது வயிற்றினுள் சென்று செரித்துப் பின் வரும் மூன்று கூறாகப் பிரியும் எனத் தெரிகின்றது. அவையாவன:

1. ஒரு கூறு உடம்பு,
2. ஒரு கூறு மனம்,
3. ஒரு கூறு கழிவுப் பொருளாகிய மலம்.

ஒருவர் உண்ணும் உணவு உடம்பிற்கு வலிமையைத் தருமென்பதையும், கழிவுப் பொருளாகிய மலமாகும்

என்பதையும் எல்லோரும் நன்கறிவர். ஆனால், உண்ணும் உணவின் ஒரு கூறு மனமாகுமா? இக்கருத்தினை எவ்வாறு ஏற்பது எனப்பலரும் வினவுவர். இதனை மிக எளிதில் விளக்க இயலும். ஊமத்தை என்னும் தாவரத்தையும் கஞ்சாவையும் ஒருவர் அருந்தியவுடன் அவருக்கு மயக்கம் வருகின்றது. கள், சாராயம், அபின் முதலான பொருட்களை ஒருவர் பருகியவுடன் அவருக்கு மயக்கம் வருகின்றது. இவ்வாறு ஒருவர் அருந்திய ஏதோவொன்று அதன் குணத்திற்குத் தக்கவாறு அவரது உடம்பில் மாற்றத்தை உண்டு பண்ணுவதால் உணவிற்கும் மனதிற்கும் தொடர்பு உண்டென நம் அருளாளர்கள் கூறியுள்ளனர். எனவே, உணவு மனமாகும் என்பதன் கருத்து என்னவெனில், உண்ட உணவால் அவ்வுணவின் பண்பாக மனவுணர்வு தோன்றும் என்பதே கருத்தாகும்.

உணவும் மூன்று மனமாகிய குணமும்

ஒவ்வொருவரின் மனம் மூன்று குணத்திற்கு இடமாக அமைகின்றது. அவை,

1. சாத்துவீகம் அல்து சத்துவம்,
2. இராசதம் (இராசஜம்),
3. தாமதம் (தாமஸம்)

என்பனவாம்.

பகவத்கீதை என்னும் ஞானநூல் மக்கள் உண்ணும் உணவினைச் சத்துவ குணத்தார் உணவு என்றும், இராசத குணத்தார் உணவு என்றும், தாமத குணத்தார் உணவு என்றும் மூன்றாகப் பிரித்துக் கூறும். அம்மூவகை உணவுகள் வருமாறு:

சத்துவ குணத்தார் உணவு

ஆயுள், அறிவு, வலிமை, உடல்நலம், இன்பம், விழுப்பம், ஆகிய இவைகளை உண்டாக்குபவையும், இனிப்புச் சுவையை விளைப்பவையும், பசை உள்ளவையும் ஆகிய இவையெல்லாம் சத்துவகுண உணவாகும். பசும்பால், தூய்மையான உணவு, அப்போது சமைத்த உணவு முதலியவற்றையும் இதில் அடக்கலாம்.

இராசத குணத்தார் உணவு

கசப்பு, புளிப்பு, உவர்ப்பு, மிகச்சுடுவது, காரம், வறட்சி, எரிச்சல் இவற்றை உண்டாக்குபவை, காமம், சினம் முதலான வற்றை உண்டாக்குவன ஆகிய இவையெல்லாம் இராசத குண உணவாகும்.

தாமத குணத்தார் உணவு

காலம் கழிந்தது, சுவை அற்றது, கெட்ட நாற்றத்தை உடையது, மிகப் பழமையானது, எச்சிலானது, தூய்மையற்றது, முழுதும் வேகாதது முதலானவை தாமதகுண உணவாகும். புலால், கள், சாராயம், முதலானவற்றையும் இதில் அடக்கலாம்.

பகவத்கீதை மனிதர்களுக்கு உண்டாகும் மூன்று வகை குணத்தையும், அக்குணங்கள் அவரவர் உண்ணும் உணவுகளின் மூலம் உண்டாகின்றது என்பதையும் உணரவைத்துள்ளது.[4] எனவே, உணவிற்கும் மனதிற்கும் தொடர்பு இருப்பதைப் பகவத் கீதையாலும் உணரமுடிகின்றது.

இக்குறிக்கப்பட்ட மூவகைக் குணங்களுள் சத்துவகுணம் மேலிட்டால் சன்மார்க்கமான தெய்வகுணம் உண்டாகுமென்றும், இராசத குணம் மேலிட்டால் உலக வாசனை, தேக வாசனை முதலான உலக எண்ணங்கள் உண்டாகுமென்றும், தாமத குணம் மேலிட்டால் துன்மார்க்கமான (தீய) எண்ணங்கள் உண்டாகு மென்றும் தாண்டவராய சுவாமிகள் இயற்றிய கைவல்ய நவநீதம் என்னும் வேதாந்த நூல் குறிப்பிட்டுள்ளது.[5]

இனி, இக்கட்டுரையின் மையப்பொருளான உண்ணும் உணவின் ஒரு கூறாகிய மனம் பற்றிய கருத்திற்கு வருவோம். நாம் உண்ணும் உணவிலிருந்து அவ்வுணவின் பண்பாக மன உணர்வு தோன்றுவதாக முன்பே குறிப்பிட்டுள்ளேன். அம்மன உணர்வு நல்ல உணர்வு என்றும், தீய உணர்வு என்றும் இருவகைப்படும். ஆகையால் தீய உணர்வுகளைத் தரும் உணவுப் பொருள்களை விலக்கிவிட்டு, நல்ல உணர்வுகளைத்தரும் உணவை ஆராய்ந்து அறிந்து உண்டு மனதில் நல்ல உணர்வை வளர்த்துக்கொள்ள வேண்டும்.

உணவு முறையில் நாம் பின்பற்ற வேண்டிய நெறிகள்

உணவின் ஒரு கூறு மனமாகப் பிரிவதால் உணவு முறையில் நாம் பின்பற்ற வேண்டிய நெறிகள் பல உள. அவற்றுள் சில வருமாறு:

1. சத்து நிறைந்த எளிதில் செரிக்கக் கூடிய சாத்துவீக உணவினையே உண்ண வேண்டும்.
2. மீதூண் விரும்பாமல் அளவில் சற்றுக் குறைத்தே உண்ண வேண்டும்.
3. உரிய காலத்தில் உணவினை உண்ண வேண்டும்.

4. இராசத குணத்தையும், தாமத குணத்தையும் தரும் உணவினை உண்ணக்கூடாது.

5. சுவை ஒன்றே உடைய உணவினை உண்ணக்கூடாது.

6. அடிக்கடி உணவு உண்ணக்கூடாது.

7. உண்ணும்போது உரையாடக் கூடாது.

நாமும் நம்மைச் சேர்ந்தவர்களும் அமைதியுடன் நல்ல நெறியில் வாழ வேண்டுமென்றால் உணவில் நல்ல நெறியைப் பின்பற்றி, உணவு முறையாலும் இந்நாட்டை உயர்த்த முடியுமெனப் பிறர் எண்ணும் அளவிற்கு வாழவேண்டும். பல நல்ல செயல்களுக்கு நம் பாரத நாடு சான்றாக விளங்குவதுபோல், உணவு முறையிலும் மற்ற நாட்டிற்குச் சான்றாக நம் நாடு திகழ வேண்டும்.

குறிப்புகள்

1. ஒன்று அறிவதுவே உற்று அறிவதுவே
இரண்டு அறிவதுவே அதனோடு நாவே
மூன்று அறிவதுவே அவற்றோடு மூக்கே
நான்கு அறிவதுவே அவற்றோடு கண்ணே
ஐந்து அறிவதுவே அவற்றோடு செவியே
ஆறு அறிவதுவே அவற்றோடு மனனே.
(தொல்காப்பியம், பொருளதிகாரம், மரபியல், நூற்பா.27)

2. திருமந்திரம், செய்யுள், 1933.

3. சிவஞான போதம், செய்யுள் 43.

4. ஸ்ரீபட்டனார், பரமார்த்த தரிசன மென்னும் பகவத்கீதை மூலமும் 'சிதம்பர பொன்னம்பல சுவாமிகள் இயற்றிய கூடார்த்த தீபிகை என்னும் உரையும், 27. குணவிகார அத்தியாயம், செய்யுள் 7,8,9.

5. கைவல்ய நவநீதம், சந்தேகம் தெளிதற் படலம், செய்யுள், 16.

ஆ. சிவலிங்கனார்

மயிலம் – 604 304

எச்சவியல் எச்சம் பற்றித் தெய்வச்சிலையார்

எச்சம்

எச்சம் என்பது பல பொருள் ஒரு சொல். எஞ்சி நிற்பது எச்சம் என்ற காரணப் பெயர் அடிப்படையில், இலக்கண நூலார் சொல்லும் எச்சம் பற்றித் தெய்வச்சிலையார் கொள்கை யாது என்பது இக்கட்டுரையில் காணப்படும்.

எச்சம் என்பதற்குக் 'குறை' என்பதும் பொருளாகும். குறை என்பதற்கு விளக்கம், நிறைவு செய்யப்பட வேண்டுவது என்பதாகும்.

நயக்குறு மக்களை யில்லோர்க்குப்
பயக்குறை இல்லைதாம் வாழு நாளே (புறநானூறு)

என்றவிடத்தில் 'பயக்குறை' என்பதற்குப் 'பயனாகிய முடிக்கப் படுவது' எனப் பொருள் காண்பர். அதனால், எச்சம் என்பதற்கு முடிக்கப்படுவது அதாவது நிறைவு செய்யப்படுவது எனப் பொருள் கொள்ளலாம். தொல்காப்பியர் எச்சவியலில் பத்து எச்சங்கள் கூறுவர்.

பிரிநிலை, வினையே, பெயரே, ஒழியிசை,
எதிர்மறை, உம்மை, எனவே, சொல்லே,
குறிப்பே, இசையே ஆயீ ரைந்தும்
நெறிப்படத் தோன்றும் எஞ்சுபொருட் கிளவி. (எச்சவியல் - 24)

என்பது அவர் சூத்திரம். வினையெச்சம், பெயரெச்சம் பற்றிய விளக்கம் வினையியலிலும், பிரிநிலை எச்சம் முதலிய ஏழும் பற்றிய அவ்வப்பொருளில் இன்னின்ன இடைநிலைகள் வரும் என்னும் விளக்கம் இடையியலிலும் கூறியவர், மீண்டும் அவற் றையே எச்சவியலிலும் கூறிவிளக்கம் கூறுவானேன்? என்பது வினா. இதற்கு விடை உரையாசிரியர் யாவரும் ஆங்காங்கே கூறியுள்ளனர். அவருள் தெய்வச்சிலையார் மட்டும் மற்றவரினும் வேறுபடுவர்.

எச்சம் இருவகை

எச்சம் யாவும் இருவகையில் அடங்கும். ஒன்று, ஒருசொல் தான் வடிவில் குறையுடையதாய் அடுத்து வரும் சொல்லால் நிறைவு செய்யப்படுவதாம். 'உழுது' என்பது தன் வடிவில் குறையுடையதாய் (அதாவது முற்றுதற்குரிய விகுதியின்றி), வந்தான் என்னும் சொல்லால் முடிக்கப்பட்டது. இது வினையெச்சம்.

'உழுத உழவன்' என்பதில் உழுத என்பது அவ்வாறு குறையுடையதாய், உழவன் என்னும் வரும் சொல்லால் முடிக்கப் பட்டது. இது பெயரெச்சம். மற்றொன்று, சொல்லில் குறையின்றி, வரும் சொல்லால் அல்லது சொற்றொடரால் முடிக்கப் படுவதில்லாமல் வேறு சொல்லோ சொற்றொடரோ கொண்டு வந்து முடிக்கப்படுவதாம். பிரிநிலை எச்சம் முதலிய ஏழும் அப்படிப்பட்டன. 'அவனே கொண்டான்' என்பதில் ஏ என்னும் இடைச் சொல் மற்றவர் கொண்டிலர் எனப்பிரிக்கப்பட்டவரை உணர்த்துதல் கொள்க. பிறவும் அன்ன.

இதுவரை கூறியதிலிருந்து ஒருசொல்தான் குறையுடையதாய் இருந்து, வரும் சொல்லால் முடிக்கப்படுவதும், ஒரு சொல்லோ ஒரு தொடரோ இருந்து, வரும் சொல்லுடனோ தொடருடனோ அமையாமல், இல்லாத சொல்லையோ இல்லாத தொடரையோ (கருத்தையோ) கொண்டு முடிக்கப்படுவதும் ஆகிய இரண்டு வகையில் எச்சங்கள் அமையும் என்பது பெறப்படும்.

வினையெச்சம்

'உழுது வந்தான்' என்பதில், உழுது என்பது குறைச் சொல்லாய் இருந்து வந்தான் எனும் வினைச் சொல்லால் முடிக்கப் பட்டது. ஆதலின் அது வினையெச்சம், இவ்வாறு உரையாசிரியர் யாவரும் கூறுவர். அதுதெரிநிலை வினையெச்சம் 'உழுதுநல்லன்' என்பது குறிப்பு வினையெச்சம் - தெய்வச்சிலையார்,

'அழுக்கா றுடையாற்கு அதுசாலும் ஒன்னார்
வழுக்கியும் வாயாற் சொலல். (குறள்.165)

என்பதனுள் ''கேடு பயத்தற்கு அழுக்காறு தானே அமையும், பகைவர் கேடு தருதல், தப்பியும் வரும் எனப்பொருள் உரைக்க வேண்டுதலின்; 'வரும்' என்பது எஞ்சி நின்றது'' எனக்கூறி, வரும் என்பது தெரிநிலை வினையெச்சம் என்பர்.

''அற்றார் அழிபழி தீர்த்தல் அஃதொருவன்
பெற்றான் பொருள்வைப் புழி.'' (குறள்.226)

என்பதனுள் ''பொருளற்றாரது குணங்களை அழிக்கும் பசியைப் போக்குவது செய்ய, ஒருவன் தான்தேடின பொருள் வைத்தற்கு இடம் பெற்றான் ஆம் என உரைக்க வேண்டுதலின் 'ஆம்' என்னும் வினைக்குறிப்பு எஞ்சி நின்றது'' எனக்கூறி ஆம் என்பது குறிப்புவினை எச்சம் என்பர்.

இவற்றால் வினைஎச்சம் என்பது முடித்தற்கு வேண்டிய வினைச்சொல் வெளிப்படாது மறைந்திருப்பதேயாம் என்னும் கொள்கையினர் தெய்வச்சிலையார் என்பது புலப்படும்.

பெயரெச்சம்

தொகுநிலைப் பெயரெச்சத்துக்கு 'உண்ணும் சாத்தன்' என்றும், குறிப்புப் பெயரெச்சத்துக்குக் 'கரிய சாத்தன்' என்றும் உதாரணம் காட்டலாம். உரையாளர் யாவர்க்கும் ஒப்ப முடிந்தது இது. ஆனால் தெய்வச்சிலையார்,

'உயர்திணை என்மனார் மக்கட்சுட்டே' என்பதில் 'ஆசிரியர்' என்னும்பெயரும்,

> துறக்குவன் அல்லன் குறக்குவன் அல்லன்
> தொடர்வரை வெற்பன் குறக்குவன் அல்லன்
> தொடர்பினுள் அனையவை தோன்றின்'' (கலித்-44)

இதில், 'அவன் தொடர்பு' என வேண்டுதலின், அவன் எனும் பெயரும் எஞ்சின என்பர். தோன்றா எழுவாய் என்பதை அவர் ஏற்காமல் அதைப் பெயரெச்சம் என்று கொண்டார். வேற்றுமை யுருபேற்றதாயினும் மறைந்திருக்குமானால் அதுவும் பெயரெச்சம் என்பது அவர் கொள்கை.

பிரிநிலையெச்சம்

'அவனோ கொண்டான்' என்பதில் ஓகாரம் பிரிநிலை எச்சம்; பிறர் கொண்டிலர் என்பது முடிக்கும் தொடர் - இது பிறர் உதாரணம்.

தெய்வச்சிலையார், ''இவன் கல்வியுடையான் என்றவழிச் சொல்லுவான் 'இவ்வையத்தாருள்' எனக் கருதின், இவ்வையத் தாருள் என்பது எஞ்சி நின்று பிரிநிலை எச்சமாயிற்று'' என்பர்.

ஒழியிசையெச்சம்

பிறர் உதாரணம் 'கரியதோர் வாள்மன்' என்பது. இதில் மன் என்னும் இடைச்சொல் 'கரியது இல்லை' என்ற ஒழிந்த பொருளைக் கொண்டது.

தெய்வச்சிலையார், 'கல்வியிற் குறைவிலர் என்றவழி ஒழுக்கத்திற் குறையுடையார் என்றாதல், ஒருபொருளாற் குறித்த வழி பொருள்பட்டவாறும், அதனானே அச்சொல் முற்றுப் பெற்றவாறும் கண்டு கொள்க'' என்பர்.

எதிர்மறை எச்சம்

பிறர், 'யானோ கொண்டேன்' என்பதில், ஓகாரம் யான் கொண்டிலேன் என வருதலின் அது எதிர்மறை எச்சம் என்பர்.

''இம்மைப் பிறப்பில் பிரியலம் என்றேனா
கண்ணிறை நீர் கொண்டனள் (குறள் 1313) - என்பதனுள்,

'மறுபிறப்பில் பிரிவேம்' என நினைந்து கண்ணிறைநீர் கொண்டனள் எனப் பொருள் உரைக்க வேண்டுதலின், எதிர்மறை; எஞ்சி நின்ற பொருளோடு முடிந்தவாறு கண்டு கொள்க'' என்பர் தெய்வச்சிலையார்.

உம்மை எச்சம்

பிறர்; 'சாத்தனும் வந்தான்' என்பதன் உம்மை கொற்றனும் வந்தான் அல்லது வருவான் என முடிதலின் உம்மை எச்சம் என்பர்.

தெய்வச் சிலையார், 'சாத்தனும் வந்தான் கொற்றனும் வந்தான் எனற்பாலன, 'சாத்தன் வந்தான் கொற்றன் வந்தான்' எனவரின், ஆண்டு உம்மை எஞ்சி நின்றது எனக்கொள்க'' என்பர். 'இருதோள் தோழர் பற்ற' என்றால் இருதோளும் என உம்மை எஞ்சியது என்பர்.

எனஎச்சம்

பிறர், 'கொள்ளெனக் கொண்டான்' என்பதில் என என்பது கொண்டான் என்னும் வினைகொண்டது என்பர். 'என என் எச்சம் வினையொடு முடியும்' என்பது சூத்திரம்.

தெய்வச்சிலையார், வினையொடும் என்றதால் பெயரொடும் முடியும் எனக்கொண்டு உதாரணங்களைக் காட்டுவர்.

'வீடுணர்ந் தோர்க்கும் வியப்பாமால் இந்நின்ற
வாடல் முதியாள் வயிற்றிடம் - கூடார்
பெரும்படை வெள்ளம் செறிதரவும் பேரா
இரும்புலி சேர்ந்த இடம். (பு.வெ. மாலை. வஞ்சி-19)

என்பதனுள், 'இரும்புலி சேர்ந்த இடம் என' வியப்பாமால்' எனப் பொருள் உரைக்க வேண்டுதலின், என என்பது எஞ்சி நின்று

வியப்பு என்பதனோடு தொடர்கிறது இது.

'பிரிநிலை வினையே' (எச்ச.31) என்னும் சூத்திரத்துள் குறிப்பே இசையே ஆயீரைந்தும் என்றவழிக் குறிப்பே இசையே என அவ்வீரைந்தும் எனப் பொருள் கொள்ள வேண்டுதலின், என என்பது எஞ்சி நின்றது. ஈரைந்தும் என்னும் பெயரொடு முடிந்தது'' என்பர்.

குறிப்பெச்சம் இசையெச்சம் சொல்லெச்சம்

இம்மூன்றும் பற்றித் தொல்காப்பியர்,

''எஞ்சிய மூன்றும் மேல்வந்து முடிக்கும்
எஞ்சுபொருட் கிளவி இலஎன மொழிப'' (எச்சவியல்-43)

என்றும், அவைதாம் தத்தம் குறிப்பின் எச்சம் செப்பும் (எச்சவியல்-44) என்றும் கூறித் தனித்தனியாகச் சொல்லெச்சத்துக்கு மட்டும் சிறப்புச் சூத்திரம் கூறிச் சென்றார். குறிப்பெச்சத்துக்கும் இசையெச்சத்துக்கும் சிறப்புச் சூத்திரங்கள் இல்லை; மறைந்திருக்க வேண்டும். ஏன் எனின், சொல்லெச்சத்துக்கு மட்டும் தெய்வச் சிலையார், அது பற்றிய சூத்திரத்தில், ''சொல்லெச்சமாவது அச்சொல்லினானே உய்த்துணர்ந்து கொள்ளப் பிறிதொரு பொருள் வரும் என்றவாறாம்'' என எழுதி, உதாரணங்களாக,

'நெடும்புனலுள் வெல்லும் முதலை அடும்புனலின்
நீங்கின் அதனைப் பிற' (குறள்.405)

'காலாழ் களரின் நரியடும் கண்ணஞ்சா
வேலான் முகத்த களிறு' (குறள்.500)

என்ற வழித் ''தமது நிலத்தில் எளியவரும் வலியராவர்; பிறர் நிலத்தில் வலியவரும் எளியராவர் என்னும் பொருண்மை இச்சொல் தானே உணர்த்தலின் சொல் எச்சமாயிற்று'' என்றும் எழுதினார்.

முடிப்புரை

உரையாளர் பலரும் எச்சவியலில் கூறப்பட்ட எச்சம் என்பதற்கு மேல்வந்து முடிக்கும் சொல், தொடர், கருத்துகள் எஞ்சநிற்கும் சொல் எனப்பொருள் கொள்ளத் தெய்வச்சிலையார் மட்டில், எந்தச் சொல்லால் எச்சம் எனக்கூறப்படுகிறதோ அந்தச் சொல் மறைந்திருப்பதே எச்சம் எனக்கொண்டார். அதனால் வினையியலில் கூறப்பட்ட வினையெச்சம் பெயர் எச்சங்களும், இடையியலில் கூறப்பட்ட பிரிநிலை முதலிய ஏழ் எச்சங்களும் வெவ்வேறானவை என்பது தெய்வச்சிலையார் கொள்கை எனக் கொள்ளல் வேண்டும்.

ஆர். சிவசக்தி
வள்ளியம்மாள் பெண்கள் கல்லூரி
சென்னை – 600 102

வள்ளுவர், கருவெளிச்சித்தர் - ஓர் ஒப்பீடு

அறம் பல உரைப்பவர் வள்ளுவர். இறைநெறியை எடுத்துரைப்பவர்கள் சித்தர்கள். இவர்கள் கூறுகின்ற கருத்துக் களில் பல ஒப்புமையுடையனவாக இருக்கின்றன. அறம், பொருள், இன்பம் என வாழ்வறம் உணர்த்துதலை நோக்கமாகக் கொண்டது வள்ளுவம். சித்தர் நெறி இறைமை நெறியைக் கூறும் நிலையில் மனித வாழ்விற்கு - மனிதனின் உயர் வாழ்விற்கு - தக்க நெறிகளை எடுத்துரைக்கிறது.

சித்தர்களுள் ஒருவராகிய கடுவெளிச் சித்தர் கூறும் வாழ்விய லுக்குத் தேவையான கருத்துக்கள் வள்ளுவர் கருத்துக்களோடு இங்கு ஒப்பிடப்படுகின்றன.

புலன்கள்

மெய், வாய், கண், மூக்கு, செவி என்னும் ஐம்புலன்களையும் அவை செல்லும் வழியெல்லாம் செல்லவிடாது தடுத்துக் கட்டுப் படுத்திடின் இவ்வுலகில் இயலாதது எதுவுமில்லை.

''உரனென்னுந் தோட்டியான் ஓரைந்தும் காப்பான்
வரனென்னும் வைப்பிற்கோர் வித்து''[1]

இவ்வைம்புலன்களையும் வள்ளுவர் 'யானை' எனக்கூறி அவற்றை அறிவு என்னும் கருவியினால் அடக்குபவன் வீடு பேற்றை அடைவான் எனக்கூறுகிறார்.

கடுவெளிச் சித்தர் ஐம்புலன்களையும் காடு எனக்கூறி அக்காட்டினைத் தீயிட்டு எரித்தால் வீடுபேற்றை அடையலாம் என்று உணர்த்துகிறார்.

''ஐந்து பேர் சூழ்ந்திடும் காடு - இந்த
ஐவர்க்கும் ஐவர் அடைந்திடும் நாடு.[2]

கள்ளப் புலனெனும் காட்டை - வெட்டிக்
கனலிட் டெரிதிட்டாற் காணலாம் வீட்டை''[3]

யானையைக் கட்டுப்படுத்தலோடு ஐம்புலன்களைக் கட்டுப் படுத்தலை ஒப்பிடுகிறார் வள்ளுவர். சித்தர் காடு என்றும் கள்ளப் புலன் என்றும் ஐம்புலன்களை உருவகித்து அவற்றைத் தீயிட்டு எரித்தால் உயர்நிலையடையலாம் என்று கூறுகிறார். வீடு என்பது எங்கோ இருக்கும் ஒன்றன்று நமக்குள்ளேயே உறைந்திருக்கிறது. நம் சீவனே சிவம். அதை உயர்வடையச் செய்வதே வாழ்வின் நோக்கமாக அமைய வேண்டும் என்பது சித்தர் கொள்கை.

சினம் தவிர்த்தல்

மனிதனின் உள்ளிருந்து அவனை அழிப்பனவற்றுள் முதன்மையானது சினம். படபடப்பு, இரத்த அழுத்தம் முதலான உடல் பாதிப்புக்களோடு மனமும், நெருக்கடி நிலைக்குத் தள்ளப் படுகின்றது. தன்னிலையிழந்த மனிதன் பிறரையும் அழித்து, சில வேளைகளில் தன்னுயிரையும் மாய்த்துக் கொள்கிறான். அதனால் தான் வள்ளுவர்,

''சினமென்னும் சேர்ந்தாரைக் கொல்லி இனமென்னும்
ஏமப்புணையைச் சுடும்''[4]

எனக் குறிக்கிறார்.

கடுவெளிச் சித்தர் கோபத்தைப் பொல்லாச் சண்டாளக் கோபம் என்று அடையிட்டுக் கூறுவதன் மூலம் அதனிழிவை உணர முடிகிறது.

''.....பொல்லாச்
சண்டாளக் கோபத்தைச் சாதித்துக் கொல்லு''[5]

வள்ளுவர் சினத்தைக் 'கொல்லி' எனக்குறிக்கக் கடுவெளிச் சித்தர் அதனை நாம் கொல்ல வேண்டும் என்று எடுத்துரைக் கின்றார்.

களவு, சூது

வள்ளுவர், களவு, சூது இவை பற்றி வெஃகாமை, சூது என்ற அதிகாரங்களில் அவற்றின் இழிவு, இவற்றை மேற் கொள்ளும் மனிதனுக்கு உண்டாகும் இழிவு இவை பற்றி விரிவாகப் பேசுகின்றார்.[6]

கடுவெளிச்சித்தர் இவற்றை ஒன்றாக ஒப்பவைத்து,

''சொல்லரும் சூது பொய் மோசம் செய்தால்
சுற்றத்தை முற்றாய்த் துடைத்திடும் நாசம்''[7]
பொய்க்கலையில் நடவாதே நல்ல
புத்தியைப் பொய்வழிதனில் நடத்தாதே[8]
வையமுழுதும் வாய்த்தாலும் பொய்யாதே!''[9]

இம்மூன்று இழிசெயல்களும் மேற்கொள்பவனை மட்டு மல்லாது அவனது சுற்றத்தையும் அழிக்கும் என்று கூறுகின்றார். இருவருமே இவை மனிதனை இழிவுபடுத்தும் என்று கூறுவ தோடு வாழ்வியல் நெறியாகவும் இதனை வகுக்கின்றனர் என்று கொள்ள வேண்டியுள்ளது.

அன்பு

தொடர்பற்ற பிற உயிரிடத்தும் காட்டும் அன்பே உயரன்பு. இது மனிதனுக்குப் பக்குவநிலையை அளித்து ஈடேற்றும் உயரறம் இறையை அடைதற்குரிய வழி அன்பே. அதனால்தான் வள்ளுவர் 'அன்பின் வழியது உயிர்நிலை'[10] என்று கூறுகின்றார். 'அன்பு செய்' என வள்ளுவம் உரைக்கக் கடுவெளிச்சித்தர்,

''அன்பெனும் நன்மலர் தூவிப்
பரமா னந்தத் தேவியின் அடியிணை மேவி''[11]

என, அன்பை மலராக உருவகம் செய்கிறார். மலர்களை இறைவனுக்கு அணிவித்து வழிபடுதல் மக்கள் இயல்பு மலர் தூவுதலென்பது புறச்சடங்காக அமையக் கூடாது. மனதில் அன்பு நிலைக்க வேண்டும் என்பதை வலியுறுத்துகிறார்.

வேடம்

சடாமுடிகள் வளர்த்து, காவி தரித்து, கையில் மந்திரமாலை கோர்த்துப் பல கோலங்கள் புனைந்து உலாவரும் போலிகள் பலரைக் காண்கின்றோம். இத்தகைய வேடதாரிகளை நோக்கி வள்ளுவர்

''மழித்தலும் நீட்டலும் வேண்டா உலகம்
பழித்தது ஒதுக்கி விடின்''[12]

மனத்தின்கண் தங்கியிருக்கும் பற்றுக்களை நீக்கி வாழ் வதுவே உண்மைத் தவக்கோலம். அதனை விடுத்துப் புறக் கோலங்கள் எதற்கு என மென்மையாக எதிர்க்கிறார்.

கடுவெளிச்சித்தர் இத்தகைய வேடதாரிகளை அடையாளம் காட்டும் முறையில்,

''காசிக்கு ஓடில் வினை போமோ - அந்தக்
கங்கை யாடில்கதி தானுமுண்டாமோ?''[13]

என்றும்,

''கள்ள வேடம் புனையாதே''[14]

என்றும், வினவியும் ஆணையிட்டும் பேசுகின்றார். கொடுஞ் செயல்கள் செய்யாது, பிற உயிருக்குத் தீங்கு செய்யாது வாழும் உயரறத்தைக் கைவிட்டுச் சடங்குகள் செய்வதாலோ, காசிக்கு ஓடுவதாலோ என்ன பயன் விளைந்து விடும் என நம்முள்ளும் பகுத்தறிவுச் சிந்தனையை ஊட்டுகின்றார்.

நிலையாமை

நில்லாவுலகில் நிலைத்திருப்பன எவை? நம்மிலிருக்கும் உயிரா? அவ்வுயிர் தங்கியிருக்கும் உடலா? உடலில் சிறிது காலம் மணம் பரப்பும் இளமையா? நாம் தேடும் பொருட்களா? சுகங்களா? எவைதான் நிலைத்திருக்கும் என எண்ணும் பொழுது ஒன்றுமேயில்லை என்ற விடையே கிடைக்கிறது. நிலையற்ற வைக்காக நாம் எவ்வளவு போராடுகிறோம்? பாடுபட்டுத் தேடிப் பணத்தைப் புதைத்து வைக்கிறோமே நடுவன் வந்து அழைத்தால் கூட வருவது எது?

நிலையாமைக்கென வள்ளுவர் ஓரதிகாரம் வகுத்து, இளமை, உயிர், செல்வம் இவற்றின் நிலையாமையைக் கூறிப் பின், இதனையறியாதவர் புல்லறிவாளர் எனக்கூறுகிறார்.

''நில்லாத வற்றை நிலையின என்றுணரும்
புல்லறி வாண்மை கடை''[15]

கடுவெளிச் சித்தரும்,

''..... தேடுஞ்
சொத்துக் களிலொரு தூசும் நில்லாதே!
கூட வருவதொன் றில்லை!
நீர்மேல் குமிழி யிக்காயம் - இது
நில்லாது போய்விடும் நீயறி மாயம்''[16]

என யாக்கை செல்வ நிலையாமையைக் கூறுகின்றார். இந்த ஞானத்தை அடைந்து விட்டால் சாதியேது? சண்டையேது? இழிவேது? உயிர்களிடத்து அன்பு தழைக்குமே. அதனால்தான் இருவருமே இதனை உணர்த்துகின்றனர். மனிதன் மேன்மை யடைய வேண்டுமெனின் இந்த ஒரு தத்துவத்தை உணர்ந்து கொள்ளலே தேவையானது.

இவ்வாறாக வாழ்வறங்களை எடுத்துரைப்பதில் இருவருமே ஒத்துச் செல்கின்றனர். வள்ளுவர் இவ்வுலகில் வாழும் முறைகளைக் கூறுகிறார். இவற்றையெல்லாம் மேற்கொண்டால் இறையை அடையலாம் என்பதனைக் குறிப்பாக உணர்த்துகிறார். வள்ளுவருக்குப் பின் கடவுள் பற்றிய கதைகள் மிகுதியாகப் பரவி, மக்களிடையே மூட நம்பிக்கைகள் மலிந்துவிட்ட நிலையில், கடுவெளிச்சித்தர் இந்நிலை கண்டு அதிர்ந்து உடலையும் உள்ளத்தையும் தூய்மைப்படுத்தும் வழிகளைக் கூறியிருக்கின்றார்.

இறைக்காகவா - இறையை அடைவதற்காகவா இந்நெறி எனின் மக்களின் வாழ்வைச் செம்மைப்படுத்தவே இவற்றை உணர்த்தினர் எனலாம்.

குறிப்புகள்

1. திருக்குறள் 'நீத்தார் பெருமை'
2. சித்தர் பாடல்கள் - 'கடுவெளிச்சித்தர்'
3. சித்தர் பாடல்கள் - 'கடுவெளிச்சித்தர்'
4. திருக்குறள் - 'வெகுளாமை'
5. சித்தர் பாடல்கள் - 'கடுவெளிச்சித்தர்'
6. திருக்குறள் 'வெஃகாமை' 'சூது'
7, 8, 9. சித்தர் பாடல்கள் - 'கடுவெளிச்சித்தர்'
10. திருக்குறள் 'அன்புடைமை'
11. சித்தர் பாடல்கள் 'கடுவெளிச்சித்தர்'
12. திருக்குறள் 'கூடா ஒழுக்கம்'
13, 14. சித்தர் பாடல்கள் - 'கடுவெளிச்சித்தர்'
15. திருக்குறள் 'நிலையாமை'
16. சித்தர் பாடல்கள் 'கடுவெளிச்சித்தர்'

சிற்பி பாலசுப்பிரமணியம்

பொள்ளாச்சி

நீலவியலும் இலக்கியமும்

ஓர் இலக்கியக் கோட்பாட்டை உருவாக்க மூன்று வழிகள் உண்டு. அவை முறையே மீட்டுருவாக்கம் (Recovery), கண்டறிதல் (Discovery), புத்தாக்கம் (Invention) என அறிஞர் கூறுவர். இந்நெறி நின்று காணும் போது மீட்டுருவாக்கம் செய்தல் தொல்காப்பியர் கோட்பாட்டைக் காலத்துக்கேற்றவாறு செழுமைப்படுத்திக் கொள்ளும் வழியாக அமைகிறது. அதாவது நவீனப்படுத்திப் பொருள் காண முற்படுகிறோம்.

இந்தப் புதிய பார்வையில் தொல்காப்பியர் கூறும் முப்பொருள்களில் (முதல், கரு, உரி) முதற்பொருளைக் குறித்துச் சிந்தித்துப் பார்க்கலாம்.

'முதல் எனுப்படுவது நிலம் பொழுதிரண்டின்
இயல்பென மொழிப இயல்புணர்ந் தோரே'

என்பது தொல்காப்பியம் (அக:4). இது தமிழ் மரபில் உருவான கருத்தா அல்லது தொல்காப்பியரின் ஆய்வில் எழுந்த சிந்தனையா என்பது நமக்குத் தெரியாது. ஏனெனில் நமக்குக் கிடைக்கும் மிகப் பழஞ்சுவடியே இது தான். மனிதனின் வாழ்வியலுக்கு ஆதாரமான ஒரு பேருண்மை இச்சூத்திரத்தால் முன்வைக்கப் டுகின்றது.

நிலம், காலம் ஆகிய இரண்டினையும் முதற்பொருள் என்ற கலைச் சொல்லால் இப்பெரும் பேராசிரியர் குறிக்கின்றார். வியப்புக் குரிய கலைச்சொல் இது. எல்லா உயிரினங்களுக்கும் நிலைத்த தாய்மடி நிலம் அல்லவா? அனைத்துயிர்க்கும் முன் தோன்றி மூத்த பொருளும் நிலம் அல்லவா? உயிரைத் தருவது, காப்பது, தன்னுள் கரைத்துக் கொள்வது நிலம் அல்லவா? எனவே அதனை முதற்பொருள் என்று அழைத்தார். உயிர்கள் நிலத்தில் வாழ்கின்றன. அதே சமயம் காலத்திற்கு உள்ளடங்கி வாழ்கின்றன. தோற்றமும் முடிவும் கூறமுடியாதபடி கடவுளைப் போல் நிற்பது காலம். எனவே அதனையும் முதற்பொருள் என்று அழைத்தார் தொல்காப்பியர்.

இன்றைய அறிவியல் உலகம் Time & Space என்று ஆர்ப்பரிக்கும் அடிப்படை உண்மையை வாழ்வியல் ஆய்வுக்கு வடித்துக் கொடுத்தவர் தொல்காப்பியர் என்பது வியப்பின் வியப்பு அல்லவா?

நிலத்தின் அடிப்படையினை ஆராய்ந்தார் தொல்காப்பியர். அவருடைய பார்வையில் தமிழ் நிலமே காட்சி தந்தது. மலைகள் செறிந்த குறிஞ்சி, காடுகள் நெருங்கிய முல்லை, வயல்கள் உருவான மருதம், அலைகடற் புறமான நெய்தல் என்ற நானிலங் கள் தென்பட்டன. சகாராக்கள் இல்லாத தென்னிந்தியாவில் பாலைவனங்கள் இல்லை. ஆயினும் 'முல்லையும் குறிஞ்சியும்' மழைவளம் குன்றும் போது சோர்ந்து போன தற்காலிக நிலையையே பாலை என்று வகுத்தார்.

இந்த ஐந்து நிலங்களுக்கும் இயற்கை வளம் மணக்க மலர்களின் பெயரையே சூட்டி மகிழ்ந்தார். புறத்தே காட்சி தந்த நிலங்களுக்கு ஏற்பக் கற்பித நிலங்களை (Imaginary Landscape) இலக்கியப் படைப்புக்கு அளித்துக் குறிப்பிட்ட உணர்ச்சி நிலைகளுக்கு உரியவை ஆக்கினார். குன்றுகளின் மகத்தான தனிமையில் காதலர் கூடி மகிழும் இனிமையையும், அடர்ந்த காடுகளில் கொழுகொம்பைப் பற்றவும், சுற்றவும் தவிக்கும் கொடி போல், 'வருவார் தலைவர்' என்று காத்திருக்கும் தலைவியின் தவிப்பையும், நண்டுகள் கொழுத்தால் வளையில் தங்காது என்ற உண்மையை நாளும் பார்த்திருக்கும் வயல்வெளி களில் மனையை மறந்த கணவர்களிடம் தலைவியர் கொள்ளும் ஊடலையும், வெட்டவெளி வெம்பரப்பான பாலையில் பிரிவின் கொடுமையையும், அலையோசை மட்டுமே கேட்கும் விரிந்த வானும் மணற் பரப்புமான கடலோரத்தில் இரங்கலையும் உணர்ச்சி மையங்களாக்கி இலக்கியம் படைக்குமாறு விதிகளை வகுத்தார் தொல்காப்பியர்.

ஒவ்வொரு உணர்ச்சியையும் சித்திரிக்க ஏற்ற காலங் களையும் பெரும் பொழுதாகவும் (பருவங்கள்), சிறு பொழுதாகவும் அமைத்து வைத்தார். இந்த உணர்ச்சிக் களங்களுக்குத் திணைகள் என்று பெயர் கொடுத்து (குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை, கைக்கிளை, பெருந்திணை) அவற்றுக் கேற்பக் கருப்பொருள்களையும் அமைத்தார். ஒவ்வொரு நிலத்துக்கும் உரிய தெய்வம், உணவு, பறவை, மரம், இசைக் கருவி, தொழில், மக்கள் ஆகியவர்களையே கருப்பொருள்கள் என வகுத்துரைத்தார்.

தொல்காப்பியர் காலத்திலிருந்து நெடும்பயணம், செய்து விட்டது சமுதாயம். தொல்காப்பியரின் திணைக் கோட்பாட்டை இலக்கிய வளர்ச்சி நிலைக்கு ஏற்பவும் மக்களின் மாறிவரும் பண்பாட்டு நிலைக்கு ஏற்பவும் பொருத்திப் பார்க்க அவசியம் நேர்ந்திருக்கிறது.

உரிப் பொருள் அளவில் இன்று பெருந்திணை உறவுகளும், கைக்கிளை உறவுகளும் இலக்கியங்களில் முதன்மை பெற்றுள்ளன. ஆண் - பெண் உறவில் புதிய பரிமாணங்கள் ஏற்பட்டுள்ளன.

தொழில் பெருக்கம், மதமாற்றகள், ஆட்சி அவலங்கள், இயற்கைச் சூழலின் அழிவு காரணமாகவும், அறிவியல் வளர்ச்சியால் புதுப்பயிர்கள் கண்டுபிடிப்புக் காரணமாகவும், பெரும் போர்களின் விளைவாகக் காடுகள், விளைநிலங்கள் அழிவு காரணமாகவும் கருப்பொருள்களாகிய மரம், செடி, கொடி, பறவைகளின் இருப்பிடங்கள் மாறியுள்ளன. அல்லது அழிவெய்தி உள்ளன. தொல்காப்பியர் காலத்தில் இருந்த தெய்வங்கள் சில இப்போது இல்லை. புதிதாகக் கிருத்தவ, இசுலாமியச் சமயங்கள் பிறந்திருக்கின்றன.

ஓரளவு முதற்பொருள் காப்பாற்றப்பட்டிருக்கிறது என்று கூறலாம். நிலம் பெரிதும் மாறுதலடையவில்லை.கடல், மலை, ஆறு, காடு சார்ந்த நில அமைப்பு - பல்வேறு சிதைவுகளுக்கு இடையேயும் தொடர்ந்து வாழ்ந்து கொண்டிருக்கிறது. எனவே இந்த அடிப்படைகளைக் கணக்கிலெடுத்துக் கொண்டு தொல் காப்பியர் கோட்பாட்டை விரிவு படுத்தலாம்.

நாவலும், சிறுகதையும் இலக்கியத்தின் பெரும் பகுதியாக இன்று வடிவெடுத்திருக்கின்றன. இந்த இலக்கிய வகைமைக்குள் தொல்காப்பியரை எடுத்துச் சென்று 'நாவல்/சிறுகதை இலக்கியத் துக்கான தொல்காப்பியரின் மாதிரித் திணைக் கோட்பாடு ஒன்றினைப் பொருத்திக் காணும் முயற்சி பயனளிப்பதாக இருக்கும்.

இந்த முயற்சியில் கேரளம் முன்னணியில் இருக்கிறது. கே. அய்யப்பப் பணிக்கர் தொல் காப்பியரின் திணைக் கோட்பாட்டை நவீனப் பார்வையில் அணுகுவது குறித்துக் கட்டுரைகள் எழுதி இருக்கின்றார். மற்றொரு மலையாளக் கவிஞர் டி. விநயச்சந்திரன் (கோட்டயம் மகாத்மா காந்தி பல்கலைக் கழகம்) மேற்பார்வையில் இரண்டு ஆய்வேடுகள் இந்த அடிப்படையில் வெளிவந்துள்ளன. (1. Tinai Concept and

Thomas Hardy's Woodlanders, M.Phil., Thesis - E. John Mathew. 1993) 2. ஆதுனிக கவிதையும் திண சங்கல்ப்பவும் - எம்ஃபில் ஆய்வேடு - வி. ஜெ. செபாஸ்டியன், 1993) கோவை பாரதியார் பல்கலைக்கழகத்தில் செல்வி. சா. சிவமணி, 'சங்க அகத்திணைக் கோட்பாட்டு நோக்கில் தமிழ் - மலையாள நெய்தல் நில நாவல்கள்' என்னும் முனைவர் பட்ட ஆய்வை என் மேற்பார்வையில் செய்து சமர்ப்பித்துள்ளார்.

செல்வி சிவமணியின் ஆய்வில் கண்டறிந்த உண்மைகளைச் சுருக்கமாக இங்குக் கூறலாம். கடலும் கடல் சார்ந்த நிலமுமாகிய நெய்தல் நிலத்தின் பெரும் பகுதி இன்னும் பண்டைய கூறுகளைக் காத்து வருகின்றது. தெய்வம், உணவு போன்ற கருப்பொருள்களில் மாறுதல் எற்பட்டுள்ளது. இரங்கல் என்ற உரிப்பொருளுக்கு மாறாகப் பழமைக்கும் புதுமைக்கும் இடையிலான போராட்டங்கள் இடம் பெற்றுள்ளன. மேலும் சமூகத்தின் பொதுச் சிக்கல்கள் முன்னுக்கு வந்துவிட்டன. தோப்பில் மீரானின் 'ஒரு கடலோர கிராமத்தின் கதை', 'துறைமுகம்' நாவல்களில் இசுலாமிய நம்பிக்கைகளும், முதலாளித்துவச் சுரண்டலும் புதிய உரிப் பொருளாகி உள்ளன. ராஜம் கிருஷ்ணனின் 'அலைவாய்க் கரையில்', வண்ண நிலவனின் 'கடல் புரத்தில்' நாவல்களில் பாரம்பரியத்துக்கும் நவீனத்துக்கும் இடையே நடைபெறும் மௌனப் போரும், சுரண்டலின் கொடுமையும் வெளிப்படுத்தப் படுகின்றன. தகழியின் 'செம்மீனில்' கறுத்தம்மாவின் காதல் குடும்ப எல்லையைத் தாண்டும் போது கடற்கரை மக்களின் பூர்வீக நம்பிக்கையான 'கடல் அம்மா தண்டிப்பாள்' என்ற கோட்பாடு மையப்படுத்தப் படுகிறது. இவ்வாறு உரிப்பொருள் மாறிவருகின்றது.

இன்று நிலவியல் சார்ந்த இலக்கிய படைப்புகள் குறித்துப் பெரிதும் சிந்திக்கத் தொடங்கி இருக்கிறோம். தாமஸ் ஹார்டியின் 'வெஸ்ஸெக்ஸ்' (Wessex) நாவல்களில் ஒரு கற்பித நிலவடிவம் முன்வைக்கப்படுகிறது. சதுப்பு நிலமும், அது சார்ந்த வேளாண் வாழ்வும் எடுத்துரைக்கப்பட்டு ஒரு தவிர்க்க முடியாத விதி அவர்தம் வாழ்வைச் சிதைப்பதை ஹார்டி நாவலின் பொருண்மையாகச் சித்திரிக்கின்றார். அந்நிலத்தின் வீழ்ச்சி, மனித உறவுகளின் வீழ்ச்சியாக அமைகிறது.

இவ்வாறே தகழியை 'குட்ட நாட்டின் வரலாற்று நாயகன்' என்று சிறப்பிக்கின்றனர். நிலவியலோடு இலக்கியம் கொள்ளும் நெருக்கமும் நேசமும் இதனால் புலனாகின்றன.

முதன் முதலாகத் தமிழ் இலக்கியத்தை நிலவியல் கண்ணோட்டத்தில் ஆராய முற்பட்டவர் சேவியர் தனிநாயக அடிகள். (landscape and Poetry - IITS. Chennai, 1997). தமிழரின் நிலம் சார் மனப்பாங்கை எடுத்துக்காட்ட வந்த அடிகள் கிரேக்கக் காவியமான 'ஒடிசி' யில் ஒரு வேளாண்மையாளனின் பார்வை பொலிந்த இயற்கை காட்சி தருவதைச் சுட்டிக் காட்டுகின்றார். பல்லாஸ் என்பவன் உலிசிஸிடம் சொல்கிறான்.

''எங்கள் இதாகா கொஞ்சம் கரடு முரடான பூமிதான் பயணத்துக்குச் சிரமமானதும் கூட ..... ஆனால் இங்கு நிறைய தானியமும் நல்ல மதுவும் இருக்கிறது. மழையும், மென்மை மிக்க வளமான பணியும் இருக்கிறது. ஆடு மாடுகளுக்கு ஏற்ற தீனி இருக்கிறது. நிறையக் காடுகள் இருக்கிறது. வருடம் முழுவதும் குடித்து மகிழ ஊற்று நீர் இருக்கிறது...'' (ஒடிசி - XIII)

இந்தப் பயன்மிக்க இயற்கைப் பரிமாணம் சங்கஇலக்கியத்திலும் இருக்கிறது என்கிறார் அடிகள்.

சிந்தனையாளர் ஞானி, பழைய நோக்கை விரிவுபடுத்தி அமைக்கலாம் என்ற கருத்தை ஏற்றுக் கொள்கிறார். இன்றைய நகர வாழ்க்கை, ஆட்சிமுறை, தொழில், மதம், சாதி, கல்வி, மருத்துவம், வாணிகம் தமிழகத்தில் பிற குடியேறிகளின் வரவு, தாக்கம், அரசியல் கட்சிகள், பிற இயக்கங்கள் என கருப்பொருள், உரிப்பொருள்களை வகை செய்யலாம் எனக் கருதுகின்றார்.

பண்டைய நிலவியல் சார் இலக்கியக் கோட்பாட்டைச் செழுமை செய்ய வேண்டிய அவசியம் உருவாகி இருப்பதற்கு வேறுபல காரணங்களும் ஏற்பட்டுள்ளன. அவற்றுள் முக்கிய மானது புலம் பெயர்ந்து வாழ்கிற மக்களின் நிலை.

1. தொழில், பொருளாதாரக் காரணங்களுக்காக வெளிநாடுகளில் வசித்தல்.

2. சொந்த நாட்டில் வாழ முடியாத அரசியல் காரணங்களால் வெளிநாடுகளில் வசித்தல்.

நிலவியல் சார் இலக்கியத்திற்குக் கிடைத்திருக்கும் புதிய பரிமாணம் இவர்கள்.

நிலத்தையும் காலத்தையும் முதற் பொருளாகச் சொன்ன தொல்காப்பியரின் மேதைமை பேருருக் கொள்கிறது. இழந்த நிலம், இழந்த வாழ்க்கை, இழந்த நிகழ்காலம், நிச்சயமற்ற எதிர் காலம் என்கிற புதிய பரிமாணங்களின் ஊடாகவும் சஞ்சரிக்கிறது தொல்காப்பியம்.

சி. சீதளா
அரசு கல்லூரி
சிதம்பரம்

பெண்ணியமும் உளவியலும்

பெண்ணுரிமையும், பெண்களின் முன்னேற்றமும் பெண்ணியத்தின் நோக்கங்கள் - பெண்ணுரிமை இழப்பதற்கு முதன்மைக் காரணங்கள் பாலின வேறுபாடும் (Gender discrimination), பாலிய வேறுபாடும் (Sexual discrimination) ஆகும். இந்த வேறுபாடுகள் பெண்களுக்கு விதிக்கப்பட்ட கட்டுப்பாடுகளுக்குக் காரணங்களாகின்றன.

பெண்களுக்கு மட்டுமே உரியதாகக் கருதப்பட்டு வரும் கற்புக் கோட்பாட்டினாலும், அதைச் சார்ந்து விதிக்கப்படும் கட்டுப்பாடுகளாலும் விளைந்த மனச் சிதறல்களும், மன ஒடுக்கங்களும் பெண்கள் பின் தங்கிவிட அடிப்படையாகின்றன.

சொல்லாக்கங்கள் சிலவற்றாலும் பெண்களைச் சமுதாயம் மனத்தளவில் ஒடுக்கிவிடுகின்றது. மகராசி என்று வழிபடவும் வேண்டா, மலடி என்று இழிவுபடுத்தவும் வேண்டாம் என்பதே பெண்ணியவாதிகளின் கோரிக்கை. வாழ்வரசி என்று வந்தணை செய்யவும் வேண்டா; விதவை என்று நிந்தனை செய்யவும் வேண்டா எனக் கூறுகின்றனர். குலமகளிர் எனப் போற்றவும் வேண்டா விலை மகளிர் என்று தூற்றவும் வேண்டா. பெண்ணிய நோக்கில் இவ்வகைச் சொல்லாக்கங்கள் மறுக்கப்படுகின்றன. இவை மறைமுகமாகப் பெண்கள் தாழ்வு மனப்பான்மை கொள்வதற்கு வழிவகுக்கின்றன.

பங்குநிலைப் போராட்டம்

தனித்துவமும் சமத்துவமும் ஒன்றையொன்று சார்ந்தே இயங்கும் தன்மைய, சமத்துவம் இல்லாத இடத்தில் பெண்ணுரிமை மலரவியலாது. தமக்குரிய தனித்துவத்தை இழந்து, அதனால் சமத்துவத்தை இழந்து தம்முடைய திறமை, ஆளுமைப் பண்பு போன்றவற்றைத் தியாகம் செய்து குடும்பத்தில்

பெண்கள் பலர் வாழ்கின்றனர். குடும்பத்தைக் காக்கும் பொறுப்பினை ஏற்றுப் பொறுப்புணர்வுடன் செயல்படுவதை Biophillic மனப்பான்மை என்று மேரிடாலி என்னும் பெண்ணியவாதி கூறுகின்றார்.

ஆண்கள் தம் மனைவியரை இழக்கும்போது வேறொரு பெண்ணைத் திருமணம் செய்து கொள்வது எங்கும் உள்ள நிகழ்ச்சி. ஆனால் பெண்கள் தம் கணவரை இழந்த பின்னர், அந்தப் பொறுப்புகளையும் தாமே ஏற்றுக் குழந்தைகளை வளர்க்கின்றனர். குடும்பத்தின் தேவைக்காகவும், பொருளாதார மேம்பாட்டிற்காகவும் பணிபுரியச் செல்லும் பெண்கள் இரட்டைச் சுமைக்கு ஆளாகின்றனர்.

இரட்டைச் சுமையை ஏற்கும்போது, இரண்டு பணிகளுக்கு மிடையே போராட நேரும்போது அதனைப் பங்குநிலைப் போராட்டம் (Role conflict) என்பர். உளவியல் அடிப்படையில் இப்போராட்டம் எழுகின்றது. குழந்தைக்கு உடல் நலமில்லாத போது, பணிக்குச் செல்ல வேண்டிய தேவை ஏற்படும்போது பங்கு நிலைப் போராட்டத்திற்கு ஆளாகின்றாள். இந்தப் பங்கு நிலைப் போராட்டம் இருவகைப்படும். தானே அமையும் பங்கு (Ascribed Role) எனவும் ஏற்றுக்கொண்ட பங்கு (Achieved Role) எனவும் இருவகைப்படும்.

தானே அமையும் பங்கு என்பது பிறந்த வீட்டை விட்டுப் புகுந்த வீட்டில் ஏற்றுக் கொள்ளும் பொறுப்புகளால், இன்னல்களால் விளையும் மனச்சுமை. இல்லறமென்னும் கட்டமைப்பில் இருவருக்கும் பங்கு உண்டு. எனினும் நம் பண்பாட்டில் ஓர் ஆண், தன் குடும்பத்தாரை விட்டு வரவேண்டிய நிலை இல்லை. ஆயின் ஒரு பெண், தான் பிறந்து வளர்ந்த சூழலை, உற்றாரை, பெற்றோரை விட்டுப் பிரிந்து வந்து வாழ்வைத் தொடர வேண்டிய நிலை. புதிய சூழல், புதிய மனிதர்! இந்நிலை ஒரு பெண்ணுக்கே அமைகிறது. இல்லறம் நல்லறமாக அமைந்தால் முரண்பாடுகள் இல்லை. மாறாக அமைந்தால் மனப்பாதிப்பும், மனச்சிதறலும் ஆரம்பமாகின்றன. மன முதிர்ச்சியும், அறிவுச் செறிவும் அடைந்துவிட்ட வயதில் புதிய சூழலில் அடிமைப் படுத்தப்படும் போது மனவேதனை ஆரம்பமாகின்றது.

பணிபுரியும் பெண்கள் இவற்றையும் அலுவலகப் பணியையும் ஒருங்கே ஏற்கும்போது தானே ஏற்றுக் கொண்டே (Achieved Role) பங்கு நிலைப் போராட்டம் ஏற்படுகின்றது.

மும்முனைப் போராட்டம் உருவாகின்றது. பிறந்த சூழலை விட்டு வந்த நிலை; இல்லறச்சுமை; பணிபுரியும் அலுவலகச் சுமை; இந்த மும்முனைப் போராட்டத்தைக் கல்வியிற் சிறந்த பெண்கள் எதிர் கொள்வதற்குக் கூடப் பொறுமையும் சகிப்புத் தன்மையும் மன உறுதியும் தேவைப்படுகின்றன. மனஉறுதி இழக்கின்ற பெண்கள் மனச் சிதறல் நோய்க்கு ஆளாவதையும், குணமாறுபாடு அடைவதையும் (Splited Personality) காணவியலும்.

கிராமப்புறப் பெண்களும் உளவியலும்

கிராமப்புறப் பெண்கள் பணிபுரியச் செல்லாவிடினும் சூழ் நிலை மாறுபாட்டை ஏற்கும் மனநிலை இல்லாததால் மண வாழ்வில் ஈடுபட்ட, பத்து ஆண்டுகளிலேயே விரக்தி அடைந்து குணமாறுபாடு அடைகின்றனர். இவர்கள் தம் பெற்றோர் இல்லத்தில் சிறகடித்துப் பறந்த பருவம்முடிந்து கணவன் இல்லத்தில் ஒடுக்கப்படும்போது வாழ்வின் சுமையை ஏற்கும் துணிவின்றித் தன்னிரக்கத்தின் வயப்பட்டு, நிரந்தரமான சோகச் சுமைதாங்கிகளாய் மாறுகின்றனர். அதனால்தான் நாட்டுப்புறப் பாடல்களைத் திறனாய்வு செய்வதற்காகக் களஆய்வு மேற் கொள்வோர் பெண்களிடமிருந்து மிக எளிதாக ஒப்பாரிப் பாடல் களைச் சேகரித்து விட முடியும்.

தாலாட்டுப் பாடத் தயங்கும் பெண்கள், தென்பாங்குப் பாடலிசைக்க நாணமுறும் பெண்கள், ஒப்பாரிப் பாடல்களை உடனே பாடுவர். முன்பின் அறிமுகமற்றோர் இறந்த மனையில் கூட, கண்ணீர் விட்டுப் பாடுவர்; கதறி அழுவர்; பதறித் துடிப்பர். இவையாவும் தன்னிரக்கத்தின் வெளிப்பாடே. ஒப்பாரிப் பாடல் களில் பிறந்த வீட்டுப் பெருமை அதிகம் இடம்பெறும். ஏனெனில் பிறந்த வீட்டில்தான் கிராமப்புறப் பெண்கள் உரிமை யுடன் உலவும் வாழ்க்கையை வாழ்கின்றனர். பொறுப்பின் சுமையும் தெரிவதில்லை.

கிராமப்புறப் பெண்களின் அழுத்தப்படும் உணர்வுகளும் ஒடுக்கப்படும் உரிமைகளும் 'பேயாடுதலாக'வும் வெளிப்படுவது உண்டு. ஆற்றாமையின் சீற்ற வெளிப்பாடு 'பேயாடுதலாகும்'. கிராமப்புறங்களில் பெண்கள் மட்டுமே பேயாடுவதை நாம் காணவியலும். இதனை 'இஸ்டீரியா' என உளவியலார் கூறுவர்.

உளவியலார் மனத்தின் தன்மையை ஆழ்மனம், நினைவு மனம், நனவிலி மனம் என மூவகையாகப் பகுப்பர். நனவிலி மனத்தில் உள்ள எண்ணங்கள், கனவிலும் நோய்மிகு நிலையிலும்

வெளிப்படுமென்பர். உணர்வின் பிடியில் சிக்கும் போதும் வெளிப்படுவதுண்டு. மகளிர் நோய்மிகு நிலையில் தம் மனத்தில் புதைக்கப்பட்ட எண்ணங்களையும், ஏக்கங்களையும், வெளிப் படுத்துவதைக் காணவியலும். உணர்வின் பிடியில் சிக்கும்போது 'இஸ்டீரியா' என்னும் மனநோயாக வெளிப்படுகிறது. இஸ்டீரியா மனநோயைப் பெண்களுக்கே உரிய நோய் என மருத்துவ உலகம் கூறுகின்றது.

இலக்கான், கிறிஸ்தவா ஆகியோரின் உளவியல் பகுப்பாய்வுக் கொள்கைகள் நனவிலி மனத்தை விவரிக்கின்ற மங்கையரின் மனமென்பது ஆழ்கடல் எனக் கூறுவதுண்டு. ஆனால் காலங் காலமாகப் பெண்களுக்கு மனமென்ற ஒன்று இருப்பதாகவே ஆண்கள் நினைப்பதில்லை என்பதுதான் உண்மை. கூறுவதைச் செய்யப் பழக்கப் படுத்தப்பட்ட அடிமைகளாகவே பெண்கள் உலவினர். ஆண்களும், பெண்கள் இவ்வாறு இருப்பதையே விரும்பினர்.

குடும்ப அமைப்பும் பெண்களின் மனநிலையும்

குடும்பத்தின் அதிகார அமைப்பு முறையிலும் ஆணுக்கே முதன்மையிடம் அளிப்பதால், பெண்கள் மனத்தில் தாழ்வு மனப்பான்மை உருவாகின்றதேயன்றித் தலைமை மனப்பான்மை தோன்றுவதில்லை.

கறுப்பர், தொழிலாளி, உழவர் பெருமக்களின் மன நிலைக்கும் அலுவலகத்தில் பணிபுரியும் அதிகாரிகளின் மன நிலைக்கும் அதிக வேறுபாடு உண்டு. ஆனால் இவர்களின் மனைவியரின் மனநிலைகளில் அதிக வேறுபாடுகள் காணப் படுவதில்லை.

பொதுவாகவே வர்க்க வேறுபாடின்றி ஆண்கள் அனைவரும் பெண்களை அடிப்பதும், சுடுசொற்கள் கூறுவதும் உண்டு என்று கோரா கப்லான் என்பவர் கூறுகிறார். குடும்ப அமைப்பு முறை உருவாகும்போதே பெண்களுக்குச் சில சமூகத் தடைகள் (Social Taboo) உருவாகத் தொடங்கின எனலாம். ஆண், பெண் என்னும் உயிரியல் வேறுபாடு இயற்கை அளிப்பது. ஆனால் இதன் அடிப் படையில் எழும் சமூக வேறுபாடு உளவியல் ஆய்விற்கு உள்ளாகக் கூடியது.

பண்பாட்டுப் பின்னணி காரணமாகக் கீழ்ப்படிதல் அடிமைத்தனம் போன்ற குணங்கள் பெண்களுக்குப் படிந்து விட்டன. இவற்றை அவர்களின் இயல்பு என உளவியலார்

கருதுவதில்லை. அவர்கள் மீது 'சுமத்தப்பட்ட' பண்பு எனக் கூறுகின்றனர்.

இதனால் தலைமைப் பண்பு தேவைப்படும் துறைகளில் அரசியல், ஆட்சித்துறை நிர்வாம் போன்றவற்றில் பெண்கள் பங்கேற்க முன் வருவதில்லை; முன்வர இயலுவதில்லை.

சிறுபான்மையினருக்குப் பின்னடைவு ஏற்படுவது இயல்பு. ஆனால் பெண்கள் சிறுபான்மையினர் அல்லர். பிறவியின் அடிப்படையில் ஒடுக்கப் பட்டவர்கள். கறுப்பர் இனத்தவரைப் போல, தாழ்த்தப்பட்ட இனத்தவரைப் போல இனத்தின் அடிப்படையில் ஒடுக்கப்பட்டவர் களும் அல்லர். எனினும் தனித்தனியே குடும்பத்தில் அடக்கப்பட்டுக் கட்டுப்பாடுகளால் ஒட்டு மொத்தமாக ஒடுக்கப் பட்டவர்கள்.

பண்பாட்டுக் கருத்தாக்கங்கள், ஆதிக்க வர்க்கத்தினருக்குச் சாதகமாக அமைவது உலகெங்கும் நிலவுகின்ற உண்மை. அதே நடைமுறைதான் பெண்களுக்கும் பயன்படுத்தப் பட்டுள்ளது.

கறுப்பரை ஒடுக்கும் அரசியல்வாதிகள் தொழிலாளரை அடக்கும் முதலாளிகள், தாழ்த்தப்பட்டோரைத் தாழ்த்தும் மேல் சாதியினர். பெண்களை ஒடுக்கும் ஆண்கள் ஆகியோர் தமக்குச் சாதகமாகச் கருத்தாக்கங்களை உருவாக்கி அதைத் தக்க வைத்துக் கொள்கின்றனர். ஒடுக்கப்பட்டோர் சீறி எழும் போது அமைதி யான வாழ்க்கைமுறை குலைந்து விட்டதெனக் கூறுகின்றனர். வரையறை செய்துவிட்ட நடைமுறைக்கு எதிராகப் புரட்சி செய்தல் தகாதெனக் கூறிகின்றனர். எதிர்ப்போரை ஏளனம் செய்வதும் அவர்களுக்கு இன்னல் விளைவிப்பதும் அவர்களின் மன அமைதியைக் குலைக்க முற்படுவதும் ஆதிக்க வர்க்கத்தினர் இயல்பு.

இலக்கியமும் உளவியலும்

அக்கால இலக்கியங்கள், வீரக்கதைகள் ஆண்களுக்கென வும், துன்பமும் சோகமும் பெண்களுக்கெனவும் அமைந்தன. இதழ்கள் கூட ஆண்வாசகர்களை முன்னிலைப்படுத்தியே உருவாக்கப்படுகின்றன.

பெண்ணியத் திறனாய்வு எத்துறையை அடிப்படையாகக் கொண்டு எழுதப்பட்டாலும் உளவியல் அணுகுமுறை இன்றி யமையாத ஒன்றாக இடம் பெறுகிறது.

அ. சீனிவாசன்
மதுரை காமராசர் பல்கலைக்கழகம்
மதுரை

இலக்கணக் கல்வி

தமிழ் நாட்டுப் பாடநூல் கழகத்தாரால் மேனிலை முதலாமாண்டு மாணவர்களுக்காக வெளியிடப்பட்டுள்ள பொதுத் தமிழ்ப் புத்தகத்தில், பயிற்சிப் பகுதியில் இலக்கணக் குறிப்பெழுதுக, பிரித்துப் புணர்ச்சிவிதி தருக, பகுபத உறுப்பிலக்கணம் தருக என்ற மூன்று பிரிவுகள் உள்ளன. இவற்றுள் இலக்கணக் குறிப்பு எழுதுக என்ற பகுதி சொல்லிலக்கணம் சார்ந்தது. பிரித்துப் புணர்ச்சி விதி தருக பகுபத உறுப்பிலக்கணம் தருக என்ற பிரிவுகளும் எழுத்திலக்கணம் சார்ந்தவை.

மேனிலைப்பள்ளி முதலாமாண்டுப் பாடத்தில் பிரித்துப் புணர்ச்சி விதி தருக' என்ற பிரிவில் 252 சொற்கள் தரப் பட்டுள்ளன. அவற்றுள் பெரும்பாலும் எல்லா விதிகளும் இடம் பெறக் கூடிய அளவில் 75 சொற்கள் அடங்கிய பட்டியல் தேர்ந்து எடுக்கப்பட்டு 40 மாணவர்களிடமும் 60 ஆசிரியர்களிடம் தரப் பட்டது. இம் மாணவர்கள் / ஆசிரியர்களின் தரவுகள் இங்கு ஆய்வுப் பொருளாகிறது.

தமிழ் முதுகலை, எம்ஃபில் பயிலும் 40 மாணவர்களில் 14 மாணவர்கள் 50% விழுக்காடு மதிப்பெண்கள் பெறவில்லை. 16 பேர் 50% விழுக்காடு மதிப்பெண்கள் முதல் 60% விழுக்காடு மதிப்பெண்கள் பெற்றுள்ளனர். இரண்டு மாணவர்கள் 62% விழுக்காடு மதிப்பெண்களும் 65% விழுக்காடு மதிப்பெண்களும் பெற்றுள்ளனர். 8 மாணவர்கள் 66% விழுக்காடு மதிப்பெண்கள் முதல் 78.07% விழுக்காடு மதிப்பெண்கள் பெற்றுள்ளனர்.

மதுரை காமராசர் பல்கலைக் கழகத் தொலைதூரக் கல்வி இயக்கத் தமிழ்த்துறை 23-27-3-98 இல் நடத்திய ஆய்வு நெறியியல் பயிலரங்கில் கலந்து கொண்ட 60 ஆசிரியர்களிடம் மேற்கண்ட பட்டியல் தரப்பட்டது. இவ்வாசிரியர்களில் பெரும்பாலோர்

மேனிலை முதலாமாண்டு, இரண்டாமாண்டுக்குரிய பாடம் நடத்தியவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. இவர்களில் 15 பேர் 80% விழுக்காடு மதிப்பெண்கள் முதல் 89.03% விழுக்காடு மதிப் பெண்கள் பெற்றவர்கள். 24 பேர் 66.07% விழுக்காடு மதிப் பெண்கள் முதல் 78.07% விழுக்காடு மதிப்பெண்கள் பெற்றவர் கள். 16 பேர் 53.03% விழுக்காடு முதல் 65.03% விழுக்காடு மதிப்பெண்கள் பெற்றுள்ளனர். 5 பேர் 40% விழுக்காடு முதல் 50.07% விழுக்காடு மதிப்பெண்கள் பெற்றவர்கள்.

மேனிலைப்பள்ளி முதலாமாண்டு மாணவர்கள் அறிந்து கொள்ள வேண்டிய புணர்ச்சி விதிகளாக 22 தரப்பட்டுள்ளன. இவ்விதிகள் நன்னூலை அடிப்படையாகக் கொண்டவை.

மேற்கண்ட 22 புணர்ச்சி விதிகளும் விதி தரு முறையில் (Prescribtive method) விளக்கப்பட்டுள்ளன. இப்புணர்ச்சி விதிகள் ஆசிரியர்கள் பயிலத் துணை செய்யுமே தவிர மாணவர்கள் எளிமையாகப் புரிந்து கொள்ளக் கூடிய அளவில் நடைமுறைத் தமிழில் விளக்கப்படவில்லை. 'புணர்ச்சி விதிகள்' விளக்கத் திற்குக் காட்டப்பட்டிருக்கும் சொற்கள் மூலபாடத்தில் இருந்து எடுக்கப்பட்ட சொற்களாகும். செய்யுள் பாடத்தைப் படிக்காமல் 'துணைவனை' நாடும் இக்காலக் கட்டத்தில் எடுத்துக் காட்டுகளாகக் காட்டப்பட்டிருக்கும் இச்சொற்கள் மாணவர் களைப் பொறுத்த அளவில் அவர்கள் அறியாத சொற்களே யாகும். தெரிந்ததைக் கொண்டு தான் தெரியாததை விளக்க முடியும். தெரியாததைக் கொண்டு எதை விளக்குவது? எதைக் கற்பிப்பது?

மேனிலைப்பள்ளி அளவில் இலக்கணம் கற்கவும், இலக்கணம் கற்பிக்கவும் சரியான கல்விமுறை பின்பற்றப்பட வில்லை. பள்ளியளவிலே இலக்கணக்கல்வி மொழிக்கல்வியை விட்டு விலகிய, தொடர்பற்ற கல்வியாக மாறிவிட்டது. இளங்கலை, முதுகலையில் நன்னூல், தொல்காப்பிய எழுத்திலக் கணத்தைத் தேர்வு நோக்கில் படித்த மாணவர்கள் இலக்கணத்தை முழுமையாகக் கற்றுள்ளார்கள் என்று கூறுவதற்கில்லை. 'இலக்கணம்' என்பது நன்னூல், தொல்காப்பியம் என்ற அளவில் நின்றுவிட்டது. இலக்கணம் மொழியைச் செம்மையாகப் பேசவும், எழுதவும் உதவும் என்ற கருத்து மாணவர்கள் மனதில் ஆழப்பதிய வேண்டும். இம்மனப் பதிவு மாணவர்கள் மத்தியில் எற்படுவதற்கு நடைமுறைத் தமிழில் / பயன்பாட்டுத் தமிழிலிருந்து இலக்கணம் விளக்கப்பட வேண்டும். இம்முறை

பின்பற்றப்படாததால் இன்று எம். ஏ., எம் ஃபில் பயிலும் தமிழ் மாணவர்கள், ஏன் ஆசிரியர்கள் உட்பட இலக்கணத்தில் பயிற்சி யில்லாதவர்களாகக் காணப்படுகிறார்கள். இக்கருத்தினைத் தொகுக்கப்பட்ட தரவுகள் உறுதிப்படுத்துகின்றன.

மதிப்பீடு

100 மாணவர்களுக்கு கொடுக்கப்பட்ட புணர்ச்சி தொடர் பான தேர்விலிருந்து கிடைக்கும் மதிப்பீடு:

1. மாணவர்களுக்கு நிலைமொழி, வருமொழி பற்றிய தெளிவு இல்லை.
2. மாணவர்களுக்கு நிலைமொழி வருமொழிகளுக்குரிய பொருள் பற்றிய தெளிவும் இல்லை.
3. புணர்ச்சியில் நிலைமொழி ஈற்றிலும் வருமொழி முதலிலும் ஏற்படும் மாற்றம் பற்றிய இலக்கண விதிகளைப் பயிலாமை.
4. இலக்கணம் கற்பித்தலின் விதிதருமுறை (Prescribtive Method) பின்பற்றப் படுதல் மாணவர்களுக்கு இலக்கணத்தை வேப்பங்காயாக மாற்றுகிறது.

இலக்கணம் எவ்வாறு கற்பிக்கப்படுதல் வேண்டும் என்ற வினா இப்பொழுது எழுதுகிறது. மாணவர்கள் அறிந்த நடை முறைத் தமிழில் காணப்படும். சொற்களை எடுத்துக் காட்டுகளாகக் காட்டி இலக்கணவிதிகளைத் தெரிந்து கொள்ளும் விதிவருமுறை (Deductive Method) தொடக்கப் பள்ளிமுதல் கல்லூரிப் படிப்பு முடியப் பின்பற்றப்படுதல் வேண்டும். முதுகலையில் நன்னூல் (எழுத்து), தொல்காப்பியம் (எழுத்து) முழுமையாகக் கற்கக்கூடிய வாய்ப்பினை உருவாக்கித் தரலாம். இதற்கேற்றபடி இலக்கணப் பாடத் திட்டம் தொடக்கப்பள்ளி, நடுநிலைப்பள்ளி, உயர்நிலைப் பள்ளி, மேனிலைப்பள்ளி, கல்லூரிகளில் உடனடியாக மாற்றி அமைக்கப்படுதல் வேண்டும். இம்மாற்றத்திற்கு ஆசிரியர்களும் பாடத்திட்டக்குழுத் தலைவர் களும் அதிகக் கவனம் செலுத்த வேண்டும்.

இரா. சீனிவாசன்
அரசினர் இராம் நாராயண் செல்லாராம் வணிகவியல் கல்லூரி
பெங்களூர் – 1

இராமலிங்க வள்ளலாரின் சமுதாய நோக்கு

சங்க காலம் முதலாக நம் நாட்டில் நிலவிவரும் சமயப் பொதுநிலைக் கொள்கைக்கு மாறான மதப் பூசல்கள், மதச் சடங்குகள், சாதி வேறுபாடுகள் தமிழ்நாட்டில் பரவி நாட்டு மக்களின் ஒற்றுமை உணர்வினைச் சிதைத்துப் புற நாட்டாருக்கு அடிமைப்படுத்திய இருண்ட காலத்தில் அருட் பெருஞ் சோதியாகத் தென்னார்க்காடு மாவட்டத்தில் சிதம்பரத்திற்கு அருகில் உள்ள மருதூரில் இராமலிங்க வள்ளலார் தோன்றினார்.

வெவ்வேறு குலங்களுக்கு வெவ்வேறு நீதிகள் எனக்கூறாது எல்லோருக்கும் பொதுவான கொள்கைகளை நீதிகளாகக் கொள்வதே உயர்ந்த சமுதாயம் என முனைவர் ச. வே. சுப்பிர மணியம் கருதுகின்றார். (நல்வாழ்க்கை - பக்கம் 67). இத்தகைய சமுதாய நோக்கினை இராமலிங்க வள்ளலார் கொண்டுள்ளார். அவரது சமுதாய நோக்கு நிலை பின்வருமாறு அமைகின்றது.

1. ஒன்றே குலம் - ஒருவனே தேவன்
2. ஆன்ம நேய ஒருமைப்பாடு
3. சீவ காருணியம்
4. புலால் உண்ணாமை
5. மூட நம்பிக்கைகளை அகற்றல்
6. பசிப்பிணி தீர்த்தல்
7. சமுதாயச் சீர்திருத்தம்

ஒன்றே குலம் - ஒருவனே தேவன்

மக்கள அனைவரையும் ஒரு குலத்தவராகக் கருதி, சாதி சமயம் என்று பிளவுபட்டுச் சிதறிக் கிடந்த மக்களைத் தன் பாடல் களால் ஒன்றுபடுத்தி மன்னுயிர்க்கெல்லாம் அன்பு செய்யும் அருள் நலம் வாய்ந்த வள்ளலார், எல்லாச் சமய வழிபாடுகளும்

முழுமுதற் பொருளாகிய ஒன்றையே சென்று சார்வன என முந்தையோர் கொண்டொழுகிய சமயப் பொது நிலையை எல்லோரும் உணரும் நிலையில் அறிவுறுத்துவதே தன் வாழ்வின் குறிக்கோளாகக் கொண்டு 'ஒன்றே குலம் - ஒருவனே தேவன்' என்ற தாரக மந்திரத்தை மக்களின் மனத்தில் பதியச் செய்தார். தாம் பாடிய தெய்வ மணி மாலையில் 'திருச் சிற்றம்பலந்தனிலே தெய்வம் ஒன்றே கண்டீர்' எனத் தெளிவுபட அறிவுறுத்தியுள்ளார்.

ஆன்ம நேய ஒருமைப்பாடு

மன்னுயிர்த் தொகுதி எல்லாவற்றையும் ஓர் இனமெனக் கருதி, எல்லா உயிர்களிடத்திலும் அன்புடையார் ஒழுகும் ஒருமை யுணர்வின் இன்றியமையாமையைக் குறிக்கும். ஆன்மா என்பது உயிர் என்றும் நேயம் என்பது அன்பு என்றும் ஒருமை என்பது அன்பு என்னும் பாசத்தால் எவ்வுயிரையும் தம்முயிர் போல் எண்ணும் மனத்தின் ஒருமைப்பாடு என்றும் ஆன்றவிந்த அறிஞர் பெருமக்கள் கூறுகின்றனர். தன் உடம்பையும் உடம்பில் உள்ள உயிரையும் பாதுகாப்பது போல, ஏனைய உடம்புகளையும் அவ் வுடம்புகளில் தங்கியுள்ள உயிர்களையும் பாதுகாப்பதில் அவ் வுயிர்களுக்குத் தாம் துணை நிற்க வேண்டும் என்ற வேண்டு கோளை வள்ளலார் விடுக்கின்றார். இதனையே 'ஆன்ம நேய ஒருமைப்பாடு' என்ற பேருண்மையாக உலகிற்கு வழங்கி யுள்ளார். ஓரறிவு உயிர் முதல் ஆறறிவு உயிரான மனித உயிர் ஈறாக அனைத்து உயிர்களும் சமம் என்ற தெளிவான கருத்தை இவ் வுலகிற்கு வழங்கும் வள்ளலார், மனிதர்களிடையே இருக்கும் வேறுபாடுகளைப் போக்கி, ஏற்ற தாழ்வுகளை அகற்றி அனைவரையும் சரிநிகர் சமானமாக மதிக்க வேண்டும் என்று கூறியுள்ளார். மக்களைப் பிரிக்கும் மதிற் சுவர்களாகச் சாதிகளை யும் மதங்களையும் எண்ணி, அவற்றின் மேல் தனக்குண்டான வெறுப்பினைப் பல இடங்களில் குறிப்பிட்டு, அவற்றை மிகக் கடுமையாகச் சாடி வசை பாடுகின்றார்.

'சாதியும் மதமும் சமயமும் தவிர்த்தேன்
சாத்திரக் குப்பையும் தவிர்த்தேன் - என்றும்
சாதியும் மதமும் சமயமும் பொய்'

என அவர் பாடியுள்ளதே இதற்குச் சான்றாகும். இதனைச் செயல்படுத்தி, மக்களை ஒருமைப்பாட்டுணர்வுடன் வாழச் செய்யச் சமரச சன்மார்க்க சங்கத்தினையும் வள்ளலார் தோற்று வித்தார்.

சீவ காருணியம்

ஆன்ம நேயத்தின் வெளிப்பாடாக விளங்குவதே 'சீவகாருணிய ஒழுக்கம் எனக் கூறலாம். சீவ காருணிய ஒழுக்கம் என்பது பிற உயிர்களைக் கொல்லாமல் விடுதல் மட்டுமல்ல; அவ்வுயிர்களை இன்னலிற்கு ஆளாக்குகின்ற பசி, நீர் வேட்கை முதலிய கொடுமைகளை நீக்குதலாகும் என வள்ளலார் குறிப்பிடு கின்றார். சீவன் என்பது உயிர் என்றும் காருணியம் என்பது பிற உயிர்கள்படும் துன்பத்தினைக் கண்டால் இயல்பாகத் தோன்றும் இரக்க உணர்வு காரணமாகப் பிற உயிர்களின் துயரத்தினைப் போக்க முயலும் கருணைத்திறம் என்றும் பொருள் கொள்ளலாம்.

மக்கள் இறைவனின் திருவருளைப் பெற வேண்டுமானால் எல்லா உயிர்களிடத்திலும் நீங்காத அன்பு கொண்டு, உலகில் வாழும் உயிர்கள் படும் துன்பத்தினைக் கண்டு உள்ளம் இரங்கி, அவற்றின் துயரினைத் துடைத்து நன்மை புரியும் சீவகாருணிய ஒழுக்கத்தினை மேற்கொள்ளுதல் இன்றியமையாதது என வள்ளலார் அறிவுறுத்தியுள்ளார்.

புலால் உண்ணாமை

சமுதாயத்தை நோக்கி அறை கூவும் நிலையில் புலால் உண்ணாமையாகிய அறத்தின் சிறப்பினைப் பாமர மக்களும் உணரும் நிலையில் நெஞ்சுருக எடுத்துரைத்துள்ளார். புலால் உணவு உண்பதில் பெரு விருப்பம் கொண்ட சிலர், கிராமங்களில் சிறு தெய்வங்களுக்குப் பெயர் இட்டு, அவற்றிற்குப் பலி இடுவதற்கென ஆடு, கோழி முதலியவற்றை ஆரவாரத்துடன் எடுத்துச் சென்று சிறு தெய்வக் கோவில்களின் முன் பலி இட்டு இரத்தத்தை அங்கேயே குடிப்பதுடன் மாமிசச் சோற்றை உண்பதையும் கண்டு மனம் நொந்து, உள்ளம் நடுக்கம் உற்றார். அதனால் புலால் உண்ணும் தன்மை உடையோர் சிறந்த கல்வி, உலகமே வியந்து போற்றும் ஆற்றல் பேரறிவு, அற்புதச் செயல் ஆகியவை பெற்று உலகத்தாரால் பாராட்டப் பெற்றாலும் அவர்கள் மெய்யுணர் வுடைய ஞானிகளாக மதிக்கத் தக்கவர்கள் அல்லர் என வள்ளலார் கடிந்துரைக்கின்றார்.

மூட நம்பிக்கைகளை அகற்றல்

மூட நம்பிக்கைகளை வள்ளலார் வெறுத்து ஒதுக்கு கின்றார்.பல தெய்வங்கள் உண்டு என்று சொல்கின்ற மூடத் தனத்தை அவர் ஏற்றுக்கொள்ளவில்லை. தெய்வங்களுக்கு உருவங்கள் உண்டு என்று சொல்லப்பட்ட மூட நம்பிக்கையினை

ஏற்றுக்கொள்ள மறுத்தார். ஏனெனில் அவர் இறைவனை உருவம் இன்றி ஒளி வடிவமாகக் கண்டவர் அவர். தெய்வங்களின் பெயரால் மூட நம்பிக்கையுடன் நடைபெறும் உயிர்ப் பலி களையும் வெறுத்தார் கண் மூடி வழக்கமெல்லாம் மண் மூடிப் போக வேண்டும் என்றார் வள்ளலார்.

பசிப்பிணி தீர்த்தல்

சமுதாயத்தில் வாழ்கின்ற மக்கள் கடைபிடிக்க வேண்டிய தலை சிறந்த அறம் பசித்தோர்க்கு உணவளித்தல் ஆகும்.

''பசியினால் ஏற்படும் துன்பத்தினைத் தீர்ப்பதில் ஏற்படு கின்ற இன்பமே பர இன்பம் எனப் பசித்தோர்க்கு உணவு அளித்தலின் இன்றியமையாமையினை வள்ளலார் கூறியுள்ளார்.

பசித்து வருவோரின் பசியைத் தீர்ப்பதில் கணவனை மனைவி தடுத்தாலும் மனைவியைக் கணவன் தடுத்தாலும் தந்தையைப் பிள்ளைகள் தடுத்தாலும் பிள்ளைகளைத் தந்தை தடுத்தாலும் அதற்குச் செவி மடுக்கலாகாது என வள்ளுவர் வழி வாழ்ந்த வள்ளலார் கண்டிப்புடன் கூறியுள்ளார். பசியினால் வாடி இல்லங்கள் தோறும் யாசித்துப் பிச்சைப் பெற்றுப் பசிப்பிணி நீங்காமல் சோர்வுற்றவர்களைக் கண்டு மனம் வருந்தினார். பசியினால் ஏழை மக்கள் வாடுகின்றார்கள் எனச் சொல்லப்படு வதனைக் கேட்ட பொழுது மனம் நொந்து துடித்தார். மானம் உடையவராய்ப் பிறரிடத்துச் சென்று இரங்கி உண்ண மனம் இல்லாமல் ஏழைகளாய் நெஞ்சு இளைத்தவரைக்கண்டு, அவர் பாடிய பாடல்கள், சமுதாயத்திலே பசிப்பிணியால் விளையும் துயரங்களையும் நினைத்து அவர் அடைந்த வேதனையினை அறிவுறுத்தும் வகையில் அமைந்துள்ளன. பசிப்பிணியின் கொடுமையினை நன்கு உணர்ந்த வள்ளலார், மக்கள் சமுதாயத் திலே பசிப்பிணியை அறவே நீக்குவதற்காக, வடலூரில் சத்திய தருமச் சாலையை நிறுவினார். ஏழை, எளியவர்கட்குப் பசி தீர உணவு அளிப்பது தான் கடவுட் பணியாகும் என்ற எண்ணத்தினை மக்களின் மனத்தில் பதியச்செய்தார். வாடிய பயிரைக் கண்ட போதெல்லாம் வாடிய வள்ளலார், ஏழைகளாக நெஞ்சு இளைத்தவரைக் கண்டு தானும் இளைத்தார்.

சமுதாயச் சீர்திருத்தம்

பார்ப்பனர், க்ஷத்திரியர், வைசியர், சூத்திரர் என வட நூலில் கூறப்பட்ட நால்வகை வருணங்களும், பிரம்மச்சரியம், கிருகஸ்தம், வானப் பிரஸ்தம், சந்நியாசம் எனக் கூறப்படுகின்ற

நான்கு வகை ஆசிரமப் பகுப்புகளும் சிறு பிள்ளைகள், தம் விளையாட்டுக்களில் வரையறை செய்து கொள்ளும் விளையாட்டு விதிகளைப் போல அன்றி, மெய்ந்நெறிக்கு நடை முறையாகாது. மக்கள் உடம்பின் மேல் போர்த்தப் பெற்றுள்ள தோலின் நிறங்களைக் கொண்டு அவர்களுடைய கல்வி நலம், பண்பு நலம் முதலியவற்றைக் கண்டறிவார் ஒருவரும் இல்லை என வள்ளலார் கூறியுள்ளார். (திருவருட்பா சிந்தனை - பழ. சண்முகனார்)

யாதும் ஊரே! யாவரும் கேளிர்! என அன்பினால் ஒரு குடும்பத்தவராக ஒன்றி வாழ்தற்குரிய மக்கள் குலத்தாரை இவர் இன்ன மதத்தினர்; இன்ன சாதியினர் எனப் பல்வேறு வகையினராய்ப் பிரித்து வேறுபடுத்துவதற்குக் காரணமாய் உள்ள சாதி மதங்களை யாவும் பின்வந்தோரால் கற்பனை செய்து உரைக்கப்பட்டனவே அன்றி, மெய்மை ஆவன அல்ல என்ற உண்மையை இவ்வுலகிற்கு உணர்த்திச் சமுதாயச் சீர்திருத்தச் செம்மலாக உயர்ந்தவர் வள்ளலார் எனலாம். இந்தியர்கள் சமூக வழிப்பட்ட கலாச்சார ஒருமைப்பாடு ஒன்றை எதிர்பார்த்துக் கொண்டிருந்த நேரத்தில், நீண்ட காலமாக நிலவி வந்த சாதி, மத, குல வேறுபாடுகளை அகற்றி, சாதி, மத, குல பேதமற்ற மனித சமுதாயத்தை உருவாக்கும் நிலையில், மக்கள் மத்தியில் புரட்சிக் கொள்கைகளை உருவாக்கும் நிலையில் அவர் எழுதிய பாடல்கள் தேசிய ஒருமைப்பாட்டினை வற்புறுத்துவனவாகவும் இருந்தன என மனோன்மணி சண்முகதாசு அவர்கள் (பத்தொன்பதாம் நூற்றாண்டுத் தமிழ் இலக்கியத்தின் முக்கிய போக்குகள் - பக். 9) கூறியுள்ளமை இவண் நினைவு கூரத்தக்கது.

கே. சுகதா
பல்கலைக்கழகக் கல்லூரி
திருவனந்தபுரம்

பாரதியார் பாடல்களில் பறவைகள்

கவிக்குயில் பாரதியார் இருபதாம் நூற்றாண்டின் இணை யற்ற கவிஞர்களுள் ஒருவர். தமிழ் இலக்கிய வானில் சுடர்விட்டு ஒளிரும் ஒரு விண்மீன். இவர் பாடல்கள் தமிழன்னைக்கு ஓர் அன்புப் படையல். இப்பாடல்களில் (தேசிய கீதங்கள், பக்திப் பாடல்கள், ஞானப்பாடல்கள், பல்வகைப்பாடல்கள், தனிப் பாடல்கள், சுயசரிதை, புதிய பாடல்கள்) சிறகடிக்கும் பறவை களைத் தேடும் சிறு முயற்சியே இக்கட்டுரை.

தமிழ் இலக்கியத்தில் இயற்கையைப் பாடும் முறை அன்று முதல் இன்று வரை நின்று நிலை பெறுகின்றது. இயற்கையின் கண்கொள்ளாக் காட்சி அனைத்துப் புலவர்களையும் பாட வைக்கும் தன்மையது. இத்தகைய இயற்கையைப் புலவர்கள் பல்வகையாகப் பகுத்துப் பாடுகின்றனர். அவற்றுள் பறவை களைப் பாடும் முறையும் ஒன்று. தொல்காப்பியத்தில்,

''எந்நிலமருங்கின் பூவும் புள்ளும்'' (அகத்திணையியல் - 20)

''தெய்வம் உணாவே மாமரம் புட்பறை''(அகத்திணையியல்-21)

என்பவற்றில் புள் என்ற சொல் கையாளப்பட்டுள்ளது.

புறநானூற்றில் புள்ளையும் பொழுதையும் சகுனமாக வைத்துப் புலவன் பரிசில் பெறச் செல்லும் தன்மை கூறப்படு கிறது. குறுந்தொகையில்

''மீனார்குருகின் கானலம் பெருந்துறை''
நாரை நிரை பெயர்த்தயிரையாரும்'' (குறுந் - 163, 466)

போன்ற பல குறிப்புக்களைக் காணலாம்.

பக்திப் பாடல்களில் பறவைகளை இறைவனிடம் தூது விடுக்கும் முறையும், பறவைகளை அழைத்துப் பேசும் தன்மையும் அமைந்துள்ளன.

குற்றாலக் குறவஞ்சியில் 'பறவைகள் படுக்கும் குறவன் நானே' என்று குறவன் தன்னைப் பற்றிக் கூறிக்கொள்கிறான். பிற்காலத் தூது இலக்கியங்களில் நாரை, அன்னம், கிளி போன்ற பறவைகளைத் தூதுப் பொருளாகப் பயன்படுத்தியுள்ளனர். தற்கால நவீன இலக்கியங்களிலும் பறவைகளைப் பல நிலை களில் அமைத்துப் பாடுகின்றனர். மகாகவி பாரதியாரும் தமது பாடல்களில் அன்னம், கருடன், காகம், கிளி, குயில், குருவி, கோழி - சேவல், பருந்து, மயில் ஆகிய பறவைகளைப் பாடுகின்றார்.

பறவைகள்

பறவைகள் தானாக உயர்ந்து பறக்கும் ஆற்றல் பெற்றவை. இவற்றில் பலவகையுண்டு. பாரதியார் பறவை, புள் என்ற இரு பெயர்களைப் பறவை என்ற பொதுச் சொல்லுக்கு அமைக்கிறார். பறவைகள் பால் கொண்ட பேரன்பால் அவை அனைத்தும் மகிழ்ச்சியுடன் வாழ வேண்டும் என்கிறார். மேலும் இதற்கு ஒரு படி மேற்சென்று 'ஊர்வனவும் பறப்பனவும் தெய்வம்' என மொழிகிறார். 'வண்ணப்பறவைகளைக் கண்டு நீ மனதில் மகிழ்ச்சி கொள்ளு பாப்பா' என்று குழந்தைக்குப் பாடுகிறார் பாரதி.

பறவையழகில் தன்னை இழந்த பாரதியார் 'சின்னப் பறவையின் மெல்லொலி கொண்டு சேர்த்திடு காற்றே' எனப்பாடி அதன் ஓசையிலும் இன்பம் காண்கின்றார். ஆக பறவை என்ற சொல் ஆறு இடங்களிலும் 'புள்' என்கிற சொல் நான்கு இடங்களிலும் சுட்டப்படுகிறது. மனதை 'மனச்சிறுபுள்' என்று உருவகிக்கும் தன்மையும் இவர் பாடலில் ஓர் இடத்தில் காணலாம்.

அன்னம்

அன்னப்பறவைகள் அருகிக் காணப்படுபவை. இவை வாத்து வகையினின்றும் வேறானவை. கழுத்து நீண்டிருக்கும். பாலில் கலந்துள்ள நீரைப் பிரித்தறிய வல்லது என ஆன்றோர் உரைப்பர். இவ் அன்னம் என்கிற பெயரைப் பாரதியார் பாடல் களில் நான்கு இடங்களில் குறிப்பிடப்பட்டுள்ளது. காட்டாக: 'அன்னமிது கேட்டு மகிழ்ந்துரைக்கும்'.

கருடன்

பருந்தை விடப் பெரியது கருடன். பாரதியார் ஒரே ஓர் இடத்தில் 'ஈயைக் கருடநிலையேற்றுவீர்' என்கிறார். சின்னஞ் சிறிய ஈ அதனைக் கருடன் நிலைக்கு உயர்த்த வேண்டுமெனில்

அதற்கு விடாமுயற்சியும், ஓயாத உழைப்பும் தேவை என்பது இவண் தெளிவாகிறது.

காகம்

காகம் கருமை நிறமுடையது. கா...கா எனும் ஓசையுடையது. பாரதியார் 19 இடங்களில் காகத்தைச் சுட்டிப் பாடுகின்றார். காகம் கூட்டம் கூடிப் பேசும் தன்மையுடையது எனும் கருத்தும் உணர்த்தப்படுகிறது. காகத்தின் நிறத்தைக் கருங்காக்கை, கருங்காகம், கருநிறக் காக்கை என எடுத்துரைக்கப்படுகிறது. 'காக்கைச் சிறகினிலே நந்தலாலா நின்றன் கரியமுகம் தோன்றுதைதே' என்று கண்ணன் நிறத்தை வர்ணிக்கிறார். அதன் ஓசையைக் குறிப்பிடும்போது 'காவென்று கரந்திடுங்காக்கை' என மொழிகிறார் பாரதி மேலும் கற்றறிந்த காக்காய், போதமுள்ள காக்காய் என்று அதன் அறிவுத்தன்மையை எடுத்தியம்பும் திறமும் படித்து இன்புறற்குரியது.

கிளி

கிளியை அழைத்துப் பாடுவதிலும், கிளியின் அழகுத் தன்மையை வர்ணிப்பதிலும் பாரதியார் வல்லவர். மானிடன் நிலைமையை எடுத்துரைக்குமிடத்து, ''நாட்டத்தில் கொள்ளாரடீ கிளியே! நாவில் மறப்பாரடீ அன்னில் அழியுமடீ கிளியே! அன்பிற்கழிவில்லை காண்'' என இயம்புகின்றார். 'செல்ல வல்லாயோ கிளியே' என அழைத்து முருகப் பெருமானிடம் கிளி தூதாக அனுப்பப்படுகிறது. கிளியின் ஒலி பிள்ளைக்கிளி மென் குதலை மொழி' எனப்படுகிறது.

கிளிகளில் பல வகையுண்டு. பாரதியார் பச்சைக்கிளி, வண்ணக்கிளி, மணிக்களி, பவள வாய்க்கிளி, பிள்ளைக்கிளி, கிள்ளாய், சுகம் முதலிய பெயர்களால் அழைக்கின்றார். கிளிப் பாட்டை அமைத்து மாந்தர்தம் வாழ்க்கை வரலாறு உரைக்கும் தன்மையும் இவண் சிறப்புற அமைந்துள்ளது. 37 இடங்களில் கிளி என்றும், ஓர் இடத்தில் கிள்ளாய் என்றும் இன்னோர் இடத்தில் சுகம் என்றும் இயம்பப்படுகிறது.

குயில்

காகத்தைவிட வடிவில் சிறியது. இனிமையாகக் கூவும் தன்மையது. பாரதிதாசன் குயில்கூவிக் கொண்டிருக்கும் மலை' என்று சஞ்சீவி பர்வதத்தில் சாரலை வர்ணிக்கின்றார். பாரதியாரும் கத்துங்குயிலோசை, கீதம்பாடும் குயில், குயில்களின் இன்குரல்

எனப்பாடுகிறார். கீதம் பாடும் குயிலின் குரல் என உரைப்பது, குயிலுக்கே உரித்தானது இனிய ஓசை என்பதைத் தெளிவாக்கு கிறது.

குருவி

குருவிகள் வடிவில் சிறியவை. இவை பலவகையுண்டு. பாரதியார் குருவி, சிட்டுக்குருவி, பாட்டுக்குருவி, சின்னக்குருவி, நட்புக்குருவி, சிறுகுருவி, வண்ணக்குருவி என வகைப்படுத்தி அமைக்கின்றார். இவண் குருவிப்பாட்டைப் பாடிக் குருவியின் சுதந்திரமான இன்ப வாழ்க்கையை மானுடர்க்குக் கற்றுத் தரும்முறை படித்துப் பயன்பெறத்தக்கது.

கோழி - சேவல்

இவை உயரத்தில் பறப்பதில்லை. ஆண் கோழியைச் சேவல் என்றும், பெண் கோழியைக் கோழி அல்லது பெடை என்றும் கூறுவதுண்டு. இவற்றை வீடுகளில் சாதாரணமாக ஆதரித்து வளர்ப்பர். பாரதியார் சேவலைக் கூவும் தன்மையுடையது என்றும், பெண் கோழியைக் கொத்தித் திரியுமந்த கோழி எனவும் வேறுபடுத்துகின்றார்.

பருந்து

காகத்தைவிடப் பெரியது பருந்து. இஃது இரைதேடும் பொருட்டு வானில் வட்டமிட்டுக் கொண்டிருக்கும். இதனை பாரதியார் 'மன்னப்பருந்து' என இரு இடங்களில் குறிப்பிடு கின்றார்.

மயில்

மயில் வடிவில் பெரியது. பலவகை வண்ணங்களுடன் கண்ணிற்கு விருந்தாக அமையும். கார்மேகம் கண்டால் களிப்புடன் தன் தோகை விரித்தாடும். இம்மயிலைப் பாரதியார் இரு இடங்களில் சுட்டுகின்றார். 'தோகைமேல் உலவுங்கந்தன், அருமை மிக்க மயிலைப் பிரிந்தும்' என்று அதன் அருமைத் தன்மை பாராட்டப்படுகிறது.

பாரதியார் தம் பாடல்களில் 10 வகையான பறவைகளைப் பாடுகின்றார். இவற்றில் புறாவைக் குறிப்பிடவில்லை. பாரதத் தில் சாதாரணமாகக் காணப்படும் பறவைகளையே கையாண் டுள்ளார். அவற்றுள்ளும் மிகுதியான இடங்களில் கிளி என்ற பெயரைப் பயன்படுத்தியிருக்கிறார். குருவியின் வாழ்க்கையை எடுத்துக்காட்டி மாந்தர்க்கு உணர்த்துகிறார். இப்பாடல்களில்

கருடன், பருந்து, கோழி - சேவல் ஆகியவை அருகியே காணப் படுகின்றன. இங்ஙனம் பாரதியார் தம் உள்ளக் கருத்துக்களுக்கு மேலும் மெருகூட்டும் வகையில் பறவைகளையும் துணை கொண்டு கவிதைக்கு இன்பம் சேர்க்கின்றார்.

பாரதியார் பாடல்கள் சுட்டும் பறவைகள்

1. பறவைகள் - புள்ளினம்

1. ''புள்ளினம் ஆர்த்தன; ஆர்த்தன முரசம்'' *(தே,கீ.பா.மா.தி.பா.வ.9)*

2. அன்னம்

''என்றுரைத்துக் காக்கை இருக்கையிலே அன்னமொன்று'' *(த.பா-கா, பா.வ. 41,43,49,53)*

3. கருடன்

''ஈயைக் கருடநிலையேற்றுவீர்'' *(த.பா-சொல்-பா.வ.15)*

4. காகம்

1. காக்கைச் சிறகினிலே நந்தலாலா நின்றன் *(ப.பா-ந, பா.வ.1)*

5. கிளி

1. ''பச்சை மணிக்கிளியே'' *(தே.சீ-பா.தே.தி, பா.வ. 1,5,9,13,17,33,37)*

6. குயில்

1. ''கத்துங் குயிலோசை சற்றே வந்து'' *(ப.பா-கா.நி, பா.வ.13)*
2. ''கீதம் பாடும் குயிலின் குரலை'' *(ப.பா-வெ, பா.வ.11)*

7. குருவி

1. ''காக்கை குருவி எங்கள் ஜாதி'' *(ஞா.பா-ஜ, பா.வ.9)*

8. சேவல்-கோழி

1. கொக்கரித்தண்டங் குலுங்க நகைத்திடுஞ்சேவலாய் *(ப.பா-வ.பா, பா.வ. 43-44)*

9. பருந்து

1. ''மன்னப் பருந்தினுக்கு மாலையிட்டு'' *(த.பா-கா, பா.வ.6)*

10. மயில்

1. ''தோகைமேல் உலவுங்கந்தன்'' *(ப.பா-எ.வே.பா.வ.1)*

மு. சுதர்சனி
புதுவை மொழியியல் பண்பாட்டு ஆராய்ச்சிநிறுவனம்
புதுச்சேரி – 605 001

சொல்லிசை அளபெடை கலைச்சொல்லாக்கமும் வரையறைகளும் - ஒரு மீள்பார்வை

தமிழ்இலக்கண உலகில் அளபெடை பற்றிய வகைப் பாடுகள் ஐந்துமுறை செய்யப்பட்டுள்ளன. நன்னூலார் காலம் வரை சொல்லிசை அளபெடை என்ற கலைச்சொல் உருவாக வில்லை. கி.பி. பதினேழாம் நூற்றாண்டின் பிற்பகுதியிலேயே இச்சொல் உருவாக்கப்பட்டுள்ளது. அதனை உருவாக்கியோர் நூற் பாவில் அமைத்தோர் ஆகியோரைச் சுட்டிக் காட்டுவதோடு அதன் பொருண்மை பற்றிச் சுருக்கமாகக் கூறுவதுமே இக்கட்டுரையின் நோக்கம்.

அளபெடைபற்றிப் பதின்மூன்று நூற்பாக்களில் பேசும் தொல்காப்பியர் யாண்டும் சொல்லிசையளபெடை என்னும் கலைச் சொல்லைக் கையாளவில்லை. அவருடைய முதல் வகைப்பாட்டில் இடம்பெறுவன உயிரளபெடை, ஒற்றளபெடை எனும் இரண்டுமட்டுமே. தொல்காப்பிய உரையாசிரியர்களான பேராசிரியர், நச்சினார்க்கினியர் ஆகியோர் இயற்கை அள பெடை, செயற்கை அளபெடை என்ற வகைகளைக் குறிப்பிடு கின்றனர். இது இரண்டாவது வகைப்பாடாகும்.

கி.பி.13 ஆம் நூற்றாண்டினதாகக் கூறப்படும் நன்னூல் மூலநூற்பாவில் சொல்லிசையளபெடை பற்றி ஒன்றும் குறிப்பிட வில்லை. நன்னூலின் முதல் உரையாசிரியரான மயிலைநாதர் (கி.பி.17) சொல்லிசையளபெடை என்ற சொல்லை ஆளவில்லை.

கி.பி.17 ஆம் நூற்றாண்டினரான சாமிநாததேசிகர் இலக் கணக் கொத்து நூலில் மூன்றாவதான அளபெடை வகையைத் தருகின்றார்.

இயற்கை யளபெடை செயற்கை யளபெடை
யெழுத்துப்பே றளபெடை யிசைநூ லளபெடை
யொற்றுப்பே றளபெடை யொரோவழிக் கூடி
லைந்தென மொழிப வளபெடை யவைதாங்
குற்றெழுத் தளபெடை நெட்டெழுத் தளபெடை
யொற்றெழுத் தளபெடை யெனவொரு மூன்றாய்
மொழிமுத லிடைகடை மூன்றினும் வருமே.

இதில் அவர் 'எழுத்துப்பேறளபெடை, இசைநூலள பெடை' எனும் பெயர்களைப் புதிதாகச் சேர்த்துள்ளார். இவற்றைச் சேர்த்து அளபெடை ஐந்து என்கிறார். செய்யுளில் தலைதட்டுங்கால் சேர்க்கும் ஒற்றையும் அளபெடை என்கிறார். தொல்காப்பியர் குறிப்பிட்ட உயிரளபெடையை உடைத்துக் குற்றெழுத்தளபெடை, நெட்டெழுத்தளபெடை என்கிறார். இயற்கை அளபெடை, செயற்கை அளபெடை என்பன தொல்காப்பிய உரையாசிரியர் மொழிந்தவை.

உயிரளபெடையை உடைத்துக் குறில், நெடில் ஆக்கியதன் அடிப்படையைக் காரணத்துடன் இவர் விளக்கவில்லை. இவருடைய மாணவராகிய சங்கரநமச்சிவாயரே இவருடைய பகுப்பை நன்னூல் உரையில் குறிப்பிடவில்லை என்பது சுட்டத்தக்கது. கி.பி.17 ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியினரான சங்கர நமச்சிவாயர் நன்னூல் உயிரளபெடை நூற்பாவில்

(91) உரனசைஇ யுள்ளந் துணையாகச் சென்றார்
வரனசைஇ யின்னு முளேன் (குறள்.1263)

குறளை எடுத்துக்காட்டி ''என அளபெடுத்து அலகுபெற்றும் பெறாத்தும் சொல்லிசை நிறைப்ப வருவனவும்'' என்றும் அவ்வாறே 'வீழப்படுவார்' குறளை (1194) எடுத்துக்காட்டி, ''என்பதனுட் 'கெழீஇயிலரென' அளபெழுந்து அலகு பெறாது சொல்லிசை நிறைப்ப வருவனவுங் கொள்க.'' என்றும் எழுதியுள்ளார். சங்கர நமச்சிவாயர் வேறு விளக்கம் தரவோ சொல்லிசையளபெடை என்ற குறியீட்டைப் பயன்படுத்தவோ இல்லை.

சங்கர நமச்சிவாயருக்குப் பின் விருத்தியுரை எழுதிய சிவஞானமுனிவர் (காலம் கி.பி.1785 வரை) 'இடவகையான் உயிரளபெடை எழுமூன்றாய் வருமாறுகாண்க' (சங்கர.பக்.44) எனும் உரையை ''அளபெடை பத்தொன்பதோடு இன்னிசை நிறைப்பவும் சொல்லிசை நிறைப்பவும் அளபெடுக்கும் அளபெடை இரண்டும்கூடி உயிரளபெடை எழுமூன்றாய்

வருமாறு காண்க'' (சிவஞான.98-99). என்று எழுதினார். ஆறுமுக நாவலரின் (கி.பி.1822-1879) காண்டிகையுரை சிவஞான முனிவரின் விருத்தியுரையைத் தழுவியது. முனிவரின் முடிப்பு ரையை அவ்வாறே எடுத்தாளும் ஆறுமுக நாவலர் விளக்கப் பகுதியில் இன்றைய தமிழ்ப்பாட நூல்களில் காணப்படும் வறையரைகளைத் தருகின்றார்.

''செய்யுளோசை குன்றாவிடத்தும் இன்னிசை நிறைக்கவுஞ் சொல்லிசை நிறைக்கவும் வரும் அளபெடைகளும் உண்டு... சொல்லிசை நிறைக்கவரும் அளபெடையாவது பெயர்ச்சொல் வினையெச்சச் சொல்லின் இசையை நிறைத்தற் பொருட்டு அளபெடுப்பது.

உ.ம்

... உரனசைஇ யுள்ளம் ..... (குறள் 1263)

இதனுள் உரனசை வரனசை என நிற்பினுஞ் செய்யுளோசை குன்றாதாயினும், விருப்பமெனப் பொருள்படும் நசையென்னும் பெயர்ச்சொல், விரும்பியென வினையெச்சப் பொருள்படும் பொருட்டு வினையெச்சச் சொல்லாதற்கு நசைஇ என அளபெடுத்தமை காண்க.''

19 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த முத்துவீர உபாத்தியாயர் முத்துவீரியத்தில் அளபெடைக்கான ஐந்தாவது வகைப்பாட்டைக் கூறியுள்ளார். சொல்லிசை அளபெடை என்பதை நூற்பாவில் குறிப்பிடும் முதல் நூல் முத்துவீரியமே.

அதுதான்
இயற்கை செயற்கை இன்னிசை சொல்லிசை
நெடில் குறில் ஒற்றளபு எழுத்துப்பேறு அளபு
எண்வகைப்படும் என்மனார் புலவர் (எழுத்.32)

''ஒருவகைச் சொல்லைப் பிறிதொரு சொல்லாக அதாவது நசை எனும் பெயரை நசைஇ என வினையெச்சச் சொல்லாக மாற்றவேண்டின் அளபெடுக்கச் செய்வதும் உண்டு. இது சொல்லிசையளபெடை எனப்படும்'' என்ற இன்றைய இலக்கணப் பாட வரையறையைத் தெளிவாக்குகிறார் அ. சிவலிங்கனார். (தொல்காப்பியக்கால அளபெடை, 1972. நான்காவது கருத்தரங்கு மலர்.) நசை பெயர்ச்சொல் அன்று; வினைச் சொல். அதுவே இறந்தகால விகுதி இகரம் ஏற்று வினையெச்சமாயிற்று என்பர் அ. தட்சிணாமூர்த்தி (ஆய்வுக்கோவை-3.) சுப. திண்ணப்பன்

(Dravidian Linguistics-1976) ஆகியோர். செ.வை. சண்முகம் இவை 'உயிர்க்கூட்டொலி' (எழுத்திலக்கணக் கோட்பாடு-1980.ப.99) என்பர். பொற்கோ இதனைச் சொல்லிலக்கண நோக்கிலேயே காணவேண்டும் என்பர் (இலக்கணக் கலைக்களஞ்சியம்).

உண்மையில் தமிழ் இலக்கணக் கலைச்சொல் துறையில் ஏற்பட்ட மிகைவளர்ச்சியே சொல்லிசையளபெடை. தொல் காப்பியரும் தொல்காப்பிய உரையாசிரியரும் கூறிய வகைப் பாடே அளபெடையை விளக்கப் போதுமானவை; எளிமை யானவை. பிற்கால வளர்ச்சி தேவையற்ற ஒரு சுமையே என்று முடிவுரைக்கலாம்.

சுந்தரசோபிதராஜ்
சென்னைக் கிறித்தவக் கல்லூரி
சென்னை

'நீதி இலக்கியம்'

தமிழ் இலக்கியத்துள் நீதி நூல்களுக்கு ஒரு தனியிடம் உண்டு. தமிழருடைய சிந்தனை வளத்தையும் எண்ணப் போக்கையும் உலகிற்குத் தமிழ்நீதி நூல்கள் எடுத்தியம்புகின்றன. தமிழ் இலக்கியத்தின் தொன்மையைச் சமயச் சார்பற்ற தன்மையை - மனிதநலக் கோட்பாட்டு நெறியை - நெடுங்கால மாகத் தமிழ் நீதி நூல்கள் உலகிற்கு உணர்த்தி வருகின்றன. மேலை நாட்டு அறிஞர்களின் கருத்தை முதலில் கவர்ந்த தமிழ் இலக்கியம், நீதி இலக்கியமான திருக்குறளேயாகும்.

தமிழ் இலக்கிய வரலாற்றை ஆராயும் போது திணைப் பாடல்கள் எனும் சங்க இலக்கியங்கள் தோன்றிய காலத்திற்குப் பிறகு நீதிப்பாடல்கள் பல தோன்றியுள்ளன. தமிழகத்தின் வீரயுகப் பாடல்களாக (புறநானூற்றுப்பாடல்கள்) சுட்டப்படு கின்றன. இந்த வீரயுகத்தை அடுத்து, அறநெறி இலக்கியம் அரும் பிய கால கட்டத்தையும் திருக்குறள் என்ற நூல் தோன்றியதையும் காணலாம்.

"நீதி" - சொல் விளக்கம்

தமிழில் 'நீதி' என்னும் சொல் கி.பி. ஐந்தாம் நூற்றாண்டை ஒட்டியே வழக்கிற்கு வந்துள்ளது. இதற்கு முன்பு அறம் என்ற சொல்லாலேயே 'நீதி' உணர்த்தும் பொருளைப் பண்டைத்தமிழர் வழங்கி வந்தனர். அறம் என்ற இச்சொல்லிற்கு அகராதி பின்வரும் பொருளைச் சுட்டுகிறது.

1. தருமம் - (Moral and religious duty. virtu the performance of good works prescribed by the shastras, including Justice, hospitality liverty and also what is prescribed as the duty practice by each particular caste. The thirty two acts of charity and the following)

2.	ஆதுலர்க்குச்சாலை	-	Building Houses for the poor.
3.	ஓதுவார்ச்கு உணவு	-	giving maintainance and education.
4.	அறுசமயத்தார்க்கு உண்டி	-	Feeding the persons of eiter of the six religious sects.
5.	பசுவுக்கு வாயுறை	-	feeding cows.
6.	சிறைச்சோறு	-	Feeding Prisioners.
7.	ஐயம்	-	giving alms.
8.	அறவைச்சோறு	-	Feeding the destitute
9.	தின்பண்டம் நல்கல்	-	Providing food for travellers.
10.	மகப் பெறுவித்தல்	-	rendering assistance in child birth.
11.	மகப்பால் வார்த்தல்	-	giving milk to infacnts burroying.
12.	அறவைப் பிணஞ்சுடுதல்	-	burning the dead poor.
13.	அறவைத் துரியம்	-	furnishing cloths to the dead poor.
14.	சுண்ணம்	-	giving chunam to use with betal.
15.	நோய்மருந்து	-	giving medicine to the sick
16.	வண்ணார்	-	Paying for washing the clothes of the poor.
17.	நாவிதர்	-	Paying for the shaving.
18.	கண்ணாடி	-	giving looking glass.
19.	காதோலை	-	giving crdajan or palmyrah leaves to woman for their ears.
20.	கண்மருந்து	-	giving black paints towoman for their eyes.
21.	தலைக்கெண்ணெய்	-	giving oil for the head.
22.	பெண் போகம்	-	aid to enjoy a women.
23.	பிறர் துயர்காத்தல்	-	redressing the injuries.

24. தண்ணீர்ப்பந்தல்	-	Keeping water pandals to give drinks to the thirsty.
25. மடம்	-	eracting sinns or building for the brahmin the pilgrims etc.
26. தடம்	-	making tanks.
27. சோலை	-	Planting tapes, groves etx.
28. ஆவுரிஞ்சுதறி	-	erecting states of which cows may rub themselves.
29. விலங்கிற்கு உணவு	-	Feeding all kinds of animals
30. ஏறுவிடுதல்	-	giving a bull for covering a cow
31. விலை கொடுத்து உயிர் காத்தல்	-	giving money to save like
32. கண்ணிகாதானம்	-	giving assistance towards marriage.

(Tamil Engilsh Dictionary p.62) Viswanatha Pillai

அறம் - தருமம், நீதி, யமன், புண்ணியம் (பக்.30. தற்காலக் தமிழ்ச்சொல்லகராதி -பவானந்தம் பிள்ளை).

வைதிக சமயத்தினர் 'நீதி' என்னும் சமஸ்கிருதச் சொல்லைப் பெரிதும் 'இராசநீதி' எனும் பொருளிலேயே வழங்கி வந்தனர். 'தம்மம்' எனும் சொல்லையே வைதிக சமயத்தினரும் அதன் திரிபாக 'தருமம்' என்ற சொல்லைப் பௌத்த சமயத்தினரும் வடநாட்டில் பயன்படுத்தியுள்ளனர்.

ஆனால் சமண சமயத்தினர் 'தருமம்' என்ற சொல்லைப் புறக்கணித்துவிட்டு 'அறம், ஒழுக்கம்' எனும் பொருளில் கி.பி. ஆறாம் நூற்றாண்டு அளவில், பயன்படுத்தியுள்ளனர்.

கி.பி. மூன்றாம் நூற்றாண்டிற்குப் பிறகு களப்பிரர் இடையீட்டுக்காலகட்டத்தில் சமணர் செல்வாக்குத் தமிழகத்தில் பெருகிற்று. எனவே 'அறம், ஒழுக்கம்' என்ற சொல்லாட்சிகளும் தமிழில் நுழைந்து தமிழகச் சான்றோர் சொல்வழக்குகளிலெல்லாம் முன்பு பெற்ற பொருளில் இருந்து மாற்றம் உடையனவாயின.

மக்களுடைய வாழ்வை அகம், புறம் என்று பாகுபாடு செய்து அதன் வெவ்வேறு இயல்புகளை நுட்பமாக ஆராய்ந்த தமிழர்கள் அறநூல்களில் அறத்தின் சிறப்பினை எடுத்துரைத்தனர்.

அமைப்பு முறையாலும், அறிவுறுத்தும் கருத்துக்களாலும், பல இலக்கியங்கள் நீதி இலக்கியங்களாகக் கொள்ளப்பட்டன. சிறுவர் முதல் பெரியவர் வரை, கடைபிடிக்க வேண்டிய ஒழுகலாறு களைக் கூறும் தமிழ் நூல்களுள் நீதிநெறி விளக்கம், உலகநீதி, நீதிசாரம், நீதிவெண்பா, நீதிநூல் என்பன நீதி என்னும் அடையோடு கூடிய பெயர்களை உடைய தமிழ் நூல்களாகும்.

சி.வெ. சுந்தரம்
சென்னைப் பல்கலைக்கழகம்
சென்னை – 600 005

சித்தர் இலக்கியம் காட்டும் வாழ்வியல் சிந்தனைகள்

சித்தர்கள் என்போர் யாவர்

அளப்பரும் கரணங்களான மனம், புத்தி, சித்தம், அகங்காரம் என்னும் நான்கனுள் சித்தமிசை அறிவைக் குடியேற்றி வாழும் நிலை அறிந்தவர்கள் சித்தர்கள். பரஞானமாகிய கடவுளை வழிபட்டுச் சுடருடன் கூடிய பேரின்பத்தில் தோய்ந்த வர்கள் சித்தர்கள். மறுபடியும் கருவடையும் குழியில் தம்மை அகப்படுத்திக் கொள்ளாது பிறப்பிறப்பை மாற்றிக் கொண்ட வர்கள் சித்தர்கள். ஆசனங்கள் பலவற்றை மேற்கொண்டும் பிராணாயாமம், வாசியோகம் போன்ற சுவாசப் பயிற்சிகளை மேற்கொண்டும் உடலை ஓம்பி உயிருக்கு ஆக்கம் தேடிக் கொண்டவர்கள் சித்தர்கள். மூலாதாரத்தில் மூண்டெழு கனலைக் காலால் (காற்று) எழுப்பும் கலையறிந்த கலைஞர்கள் சித்தர்கள். இவர்கள் அணிமாதி சித்திகள் பதினெட்டும் கைவரப் பெற்றவர்கள். வேதைக் கலையில் (இரசவாதம்) வல்லவர்களான சித்தர்கள் தம்முடலையும் வேதியியல் மாற்றங்களுக்கு உட் படுத்திக் கொண்டவர்கள். சித்தாந்தமாம் சிவத்தின் இதயப்பூவில் பத்து வயதாக நிறைந்துள்ள பாலையாத்தாளை வழிபடாத சித்தர்களே இல்லை எனலாம். தங்கள் உடலுக்குள் அமைந்துள்ள குண்டலியாம் அருட்சக்தியின் உதவியால் ஏழாவது யோக சக்ரமாகிய சஹஸ்ராரத்திலிருக்கும் சந்திர மண்டலத்துக்குரிய அமிர்ததாரை இடையீடின்றிப் பொழிய அதை ஆர மாந்தி நரை, திரை, பிணி, மூப்பு, சாக்காடு ஆகிய அனைத்தையும் வென்று மரணமிலாப் பெருவாழ்வு என்னும் மாபெருங்கலையை அறிந்தவர்கள் சித்தர்கள். தாமறிந்த கலையை ''யாம் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்'' என்னும் அருள் நோக்கில் உலக மக்களுக்கு அறிவித்தவர்களும் சித்தர்களே.

சித்தர்கள் பார்வையில் இகவாழ்வியல் - சித்தர் மருந்தியல்

தொன்மைத் தமிழகத்தின் உண்மை அறிவியலாளர்கள் சித்தர்கள்தாம் என்பதில் அனைத்து அறிஞர்களிடமும் கருத் தொற்றுமை உண்டு. மக்கள் மீது அவர்கள் கொண்ட பேரன்பின் காரணமாகத் தோன்றியதுதான் சித்தர் மருந்தியல். இன்றைய மருத்துவ அறிஞர்கள் உடல் தத்துவத்தை அறிந்து வைத்திருப் பதைவிடச் சித்தர்கள் அதிகமாகவே அறிந்து வைத்திருந்தார்கள். இந்நாட்டின் தட்ப, வெப்பநிலைகளுக்கேற்ப உடல் கொண்ட மானுட உயிர்களுக்கு இந்நாட்டில் தோன்றிய செடி கொடி களையே மருந்தாகத் தந்தனர். முதன் முதலில் தாவரங்களை வகைப்படுத்திய தாவரவியல் அறிஞர்கள் சித்தர்களே. ஆயிரக் கணக்கான தாவரங்களின் வகைப்பாடு கண்ட அப்பெருமக்கள் சில தாவரங்களை உணவாகவே மக்களுக்கு அறிமுகப்படுத்தி யுள்ளனர். நாம் அன்றாட வாழ்வில் உணவுக்குப் பயன்படுத்தும் கீரைவகைகள், மிளகு, மஞ்சள், இஞ்சி, சுக்கு, பூண்டு ஆகிய அனைத்தும் மிக உயர்ந்த மருத்துவப் பயன் கொண்ட மருந்துகளே. அவர்களின் மருத்துவ முறையைத் தெய்வப் புலவர் திருவள்ளுவர் வழி நாம் ஒருவாறு அறிந்து கொள்ள இயலும்.

நோய்நாடி நோய்முதல் நாடி அதுதணிக்கும்
வாய்நாடி வாய்ப்பச் செயல். (திருக்குறள் - மருந்து - 8.)

என்னும் பொய்யாமொழி மருத்துவத்தின் ஐந்து வகை உட் கூறுகளை நமக்குத் தெற்றெனக் காட்டுகிறது. அவ்வைந்தும் முறையே 1. நோய் நாடுதல் 2. நோய் முதல் நாடுதல் 3. அந் நோய்க்கான வாய் நாடுதல் 4. வாய்ப்ப, 5. செயல் என வகைப் படுத்தலாம்.

நோய் நாடுதல்

சித்தர் மருத்துவம் நோயை நாடி அறிதலில் ''நாடி'' முறையைக் கையாண்டது. மனித உடலின் தலையாய நாடிகள் மூன்று. அவை முறையே வாதம், பித்தம், சிலேத்துமம் ஆகியவற்றைக் காட்டும். நரம்புகள் அனைத்தும் பிடரியில் இணைத்து வைக்கப்பட்டுள்ளன. அவற்றின் மொத்த எண்ணிக்கை எழுபத்தீராயிரம் என்ற சித்தர் நூல்கள் கூறும். தலையாய நாடிகளான மூன்று நாடிகளை நன்கு அறிந்தவர் நோயுற்றவனின் நாடியைத் தொட்டுப் பார்த்த அளவிலே நோயை அறிந்து கொள்வார்.

நோய் முதல் நாடுதல்

நாடியினது ஓட்டத்தைக் கண்ட சித்த மருத்துவர் நாடியினது ஓட்டக் கதிகளை நன்கு அறிந்தவர் ஆனதால் நோய்க்கான காரணத்தையும் (முதல்) நன்கு அறிவார். இந்த நோய் இந்தக் காரணத்தால் வந்தது என்று நோய் வந்ததற்கான காரணத்தையும் விளக்கிச் சொல்லுவார்.

அது தணிக்கும் வாய் நாடி

நோய் எப்போதுமே அழித்து ஒழிக்கப்பட இயலாதது என்பதைச் சித்த மருத்துவர் நன்கு அறிவார். அண்டம் பஞ்சபூத பௌதிகக் கலவை. அது போன்றே பிண்டமும் பஞ்ச பூத பௌதிகக் கலவை. எனவே அண்டத்தில் நிகழும் மாற்றங்கள் பிண்டத்திலும் மாற்றத்தை நிகழ்த்தும் என்பதை நன்கு அறிந்த சித்த மருத்துவர் நோயின் வேகத்தைத் தணிக்கும் வழிகளை ஆய்வு செய்வார்.

வாய்ப்ப

சிலவகை மருந்துகள் சிலருக்கு ஒவ்வாமையை ஏற்படுத்தி நோயாளியின் உயிருக்கே உலை வைக்கக் கூடும். ''பெனிசிலின்'' எனும் காளான் வழி மருந்து பொதுவாக உயிர்காக்கும் மருந்தாக இருந்துங்கூடச் சிலருக்கு அது உயிர் போக்கும் மருந்தாக அமைவது கண்கூடு. சித்த மருத்துவர் இம்மருந்து இந்நோயாளிக்குத் தக அமையுமா என்பதையும் எண்ணிப் பார்க்கிறார்.

செயல்

மேலே கூறப்பெற்ற நான்கு படிநிலைகளைக் கடந்த பின்னரே சித்த மருத்துவர் செயலில் ஈடுபடுகிறார். இதுவே சித்தர் மருந்தியலின் சிறப்பம்சமாகும். நாடுவதால் நாடி எனப் பெயர்ச்சொல்லாகிய அச்சொல்லைத் தம் திருக்குறளில் வினை எச்சமாக்கி மூன்று முறை கூறியதனால் நாடிகள் மூன்றனையும் குறிப்பாக உணர்த்திய திருவள்ளுவரின் திறம் உய்த்துணர்ந்து போற்றுவதற்குரியது. இதன்வழிச் சித்தர் மருந்தியலின் சிறப்பு திருவள்ளுவரால் நன்கு தெளிவுறுத்தப்படுகிறது.

சித்தர்களின் சமூகப் பார்வை

சித்தர்களின் மானுட நேயம் மகத்தானது. சாதி, மத, இன பேதங்களைக் கடுமையாகச் சாடியவர்கள் சித்தர்கள். சாதி பேதத்தைச் சாட வந்த சிவவாக்கியர்

பறைச்சியாவ தேதடா பணத்தியாவ தேதடா
இறைச்சி தோல் எலும்பினும் இலக்கமிட்டிருக்குதோ
பறைச்சி போகம் வேறதோ பணத்திபோகம் வேறதோ
பறைச்சியும் பணத்தியும் பகுத்துப்பாரும் உம்முளே.
(சி.வா.40)

எனக் கூறுவது ஆழ்ந்து சிந்திக்கத் தக்கது

மதபேதத்தை மாற்றும் எண்ணத்தில்

எங்கள் தெய்வம் உங்கள் தெய்வம் என்றிரண்டு பேதமோ

என்றும்

ஊரிலுள்ள மனிதர்காள் ஒருமனதாய்க் கூடியே
தேரிலே வடத்தையிட்டு செம்பை வைத்து இழுக்கிறீர்
ஆரினாலும் அறியொணாத ஆதிசித்த நாதரை
பேதையான மனிதர் பண்ணும் புரளி பாருள் பாருமே.
(சி.வா.244)

என்றும் சிவவாக்கியர் மக்களுக்கு அறிவுரை கூறிச் சமுதாயச் சீர்கேடுகளைக் களைய முற்படுகிறார். சமுதாயத்தில் மலிந்துள்ள சீர்கேடுகளைக் களைய முனையும் பட்டினத்தார்.

வாதுக்குச் சண்டைக்குப் போவார் வருவார் வழக்குரைப்பார்
நீதுக்கு உதவியும் செய்திடுவார் தினந்தேதியொன்று
மாதுக்கு அளித்து மயங்கிடுவார் விதி மாறுமட்டும்
ஏதுக்கு இவர்பிறந்தார் இறைவா கச்சி ஏகம்பனே (ப.பா-18)

என்றும்.

ஓயாமற் பொய் சொல்வர் நல்லோரை நிந்திப்பர்
உற்றுப்பெற்ற
தாயாரை வைவர் சதியாயிரம் செய்வர் சாத்திரங்கள்
ஆயார் பிறர்க்குபகாரம் செய்யார் தயை அண்டினர்க்கொன்று
ஈயார் இருந்தென்ன போயென்ன காண் கச்சி ஏகம்பனே
(ப.பா-19)

என்றும் பாடுவது ஆழ்ந்து சிந்திக்கத் தக்கது.

மக்கள் பெருக்கம் சமுதாயத்திற்கு நேரும் மாபெருந்தீங்கு என்பதை அன்றே உணர்ந்து பாடியவர் பட்டினத்தார். அவர் ஒரு மாபெருந் தொலைநோக்குப் பார்வை உடையவர் என்பதை நாம் நன்கு உணரலாம். அதனை,

பூப்பிளக்க வருகின்ற புற்றீசல் போலப்
புலபுலெனக் கலகலெனப் புதல்வர்களைப் பெறுவீர்
காப்பதற்கும் வகையறியீர் கைவிடவும் மாட்டீர்... (ப.பா-65)

என்று அவர் கூறுவது இன்றைய சமுதாயவியலார்க்கு நல்ல பாடமாக அமைகிறது. அவர் கையாளும் உவமை இன்றைய மக்கள் தொகைப் பெருக்கத்துக்குக் கொடுக்கப்பட்டுள்ள சரியான உவமை என்றே கூறலாம். இன்றைய சமூகவியலார் கூறும் ''மக்கள் தொகை வெடிப்பு'' (POPULATION EXPLOSION) என்னும் சொற்றொடரையும் விஞ்சியது நம் சித்தரின் உவமை.

இன்றைய சமூகம் சூது, பொய், மோசம், மோகம் ஆகிய தீக்குணங்களால் அல்லற்படுகிறது. இதைக் கண்டு மனம் துடித்த கடுவெளிச்சித்தர் அதனைப் போக்கும் வகையில்

சொல்லருஞ் சூது பொய்மோசம் செய்தாற்
சுற்றத்தை முற்றாய்த் துடைத்திடும் நாசம்
நல்லபத்தி விசுவாசம்-எந்த
நாளும் மனிதர்க்கு நன்மையாம் நேசம் (கடுவெளிச் சித்தர்)

எனப்பாடுவது சமுதாயத்தின்மீது அவர் கொண்டிருந்த அன்பைப் புலப்படுத்துகிறது. சித்தர்களின் சமூகப்பார்வை அன்பு, நேசம் ஆகியவற்றின் அடிப்படையில் அமைந்தது. ''யாதும் ஊரே யாவரும் கேளிர்'' என்னும் சங்கப் புலவர் கணியன் பூங்குன்ற னாரின் புதிய வார்ப்பே சித்தர்களின் சமூகப்பார்வை எனலாம்.

சித்தர்களின் பரவாழ்வியல்

சித்தர்கள் சர்வ சமய நோக்கு உடையவர்கள். அவர்தம் பரவாழ்வியல் ''ஒன்றே குலமும் ஒருவனே தேவனும்'' என்னும் அடித்தளத்தின்மீது அமைக்கப்பட்டது. ''கொல்லா நெறியே குருவருள்நெறி'' என மக்களுக்குப் பல்காலும் எடுத்துரைத்தவர்கள்.

முடிப்பு

சித்தர்கள் கண்ட (இகவாழ்வு, பரவாழ்வு) வாழ்வியல் சிந்தனைகள் பல்வேறு உட்தலைப்புகளில் ஆய்வு செய்யப் பெற வேண்டியவை. எடுத்துக் காட்டுகளாக ஓரிரண்டைப் பார்த்தோம். சித்தர்கள் இம்மை, மறுமைக்கான நல்வழிகளை நமக்குக் காட்டி யுள்ளனர். அவற்றுள் ஆழ்ந்து, படிந்து, பயன்கொள்ளத் தெரியா தது நம்மனோர் செய்த தவக்குறைவே எனலாம். சித்தர் இலக்கி யங்கள் முழுமையும் ஆய்வு செய்வதெற்கென்றே பல்கலைக் கழகம் தனித்ததோர் ஆய்வு மையத்தையே உருவாக்கி வாழும் மனிதர்க்கு வாழ்வளிக்கலாம்.

ச.வே. சுப்பிரமணியன்
உலகத் தமிழ்க் கல்வி இயக்ககம்
தமிழ்ர் – 627 808

தொல்காப்பியத்தில் ஓரறிவுயிர்கள்

தொல்காப்பியம் உயிர்களை அறுவகைப் படுத்துகின்றது. இப்பகுப்பு அறிதல் அடிப்படையில் அமைந்துள்ளது. மெய், வாய், மூக்கு, கண், செவி இவ்வைம்புலன்களும் இவற்றை ஆளுகின்ற மனமும் சேர்ந்து அறுவகை ஆகின்றன. இவ்வைம் புலன்கள் ஐம்பூதங்களால் ஆயவை. ஐம்பூதங்களால் ஆயது உலகம். ஐம்பூதங்களால் ஆயது உடம்பு. ஐம்பூதங்கள், ஐம் புலன்களாகி, ஐம்பொறிகளாகின்றன. இவ்வைம்பொறிகள் ஒவ் வொன்றும் ஒவ்வொரு தொழிலைச் செய்கின்றன. மெய்-உற்றதை உணர்கிறது. வாய்-சுவையைத் தெரிந்து கொள்கிறது. மூக்கு-மணத்தை உணர்வதோடு, காற்றின் வழி ஆகிறது. கண்-காண்பதற்குத் துணையாகிறது. செவி-கேட்கும் தொழிலைச் செய்கிறது. மனம் அனைத்தையும் ஆள்கிறது. நிலம் - மெய்யா கவும், நீர்-வாயாகவும்; வளி-மூக்காகவும், தீ-கண்ணாகவும், வான்-செவியாகவும் அமைகின்றன.

'ஒன்று அறிவதுவே உற்று அறிவதுவே' (தொல்-1526) என்று கூறும் தொல்காப்பியம். உற்றதை அறிகின்றது. வள்ளுவர் 'சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம் என்ற ஐந்தின் வகை தெரிவான் கட்டே உலகு' (குறள்-2) என்பர். இங்கு ஊறு ஒன்றறிவதாகின்றது. 'தொட்டால் சினுங்கி' என்றொரு செடி உண்டு. நாம் தொட்டால் தன்னைச் சுருக்கிக் கொள்ளும். சிறிதுநேரம் கழித்து விரித்துக் கொள்ளும். தாவர இனங்கள் அனைத்தும் ஓர் அறிவுயிர்களா கின்றன.

இன்று தாவரஇனங்களைச் செடி, கொடிகள், மரங்கள், புல், பூண்டு என்ற நிலையில் அழைக்கிறோம். தொல்காப்பியம்

புல்லும் மரனும் ஓர் அறிவினவே
பிறவும் உளவே அக்கிளைப் பிறப்பே -(தொல்-1527)

என்று கூறும். இதற்கு உரையெழுதுகின்றன உரையாசிரியர் இளம்பூரணர் 'பிற ஆவன கொட்டியும், தாமரையும், கழுநீரும் என்பன - புல்லென்பது புறவயிர்ப்பு உடையன. மரமென்பது அகவயிர்ப் புடையன. அவையாமாறு முன்னர்க் கூறப்படும்' என்று எழுதுகிறார்.

பேராசிரியர் 'கிளைப்பிறப்பென்பது கிளையும் பிறப்பும் என்றவாறு, கிளை என்பன, புறக்காழும் அகக்காழும் இன்றிப் புதலும், கொடியும் போல்வன; பிறப்பென்பன மக்களானும், விலங்கானும், ஈன்ற குழவி ஓரறிவுயிரின் ஆகிய பருவமும் எஞ்ஞான்றும் ஓரறிவினவேயாகிய என்பில் புழுவுமென இவை. இவை வேறுபிறப்பெனக் கொள்க' என எழுதுகிறார்.

பின்பு தொல்காப்பியர் இதனைத் தெளிவுபடுத்தும் போது

புறக்காழனவே புல் என மொழிப
அகக்காழனவே மரம் என மொழிப (தொல்-1585)

எனக் கூறுகிறார். தென்னை, பனை போன்றன புற வயிரம் உடையன. வேம்பு, தேக்கு, பூவரசு போன்றன உள் வயிரம் உடையன.

நிலங்களின் பெயர்கள் தாவரங்களின் அடிப்படையில் அமைந்தவை. குறிஞ்சிச்செடி, முல்லைக்கொடி, நெய்தல் செடி, மருதம் மரம் - பாலை மரம் - இவற்றின் புறமாக அமையும் வெட்சி, கரந்தை, வஞ்சி, தும்பை, உழிஞை, காஞ்சி, வகை அனைத்தும் தாவரங்களின் அடிப்படையில் அமைந்த பெயர்கள்.

மூவேந்தர்கள் மலைவன பனைம்பூமாலை, வேப்பமாலை, ஆத்திமாலை போன்றவை.

கருப்பொருள் எட்டில் மரம் முக்கியமானது. சுற்றுப்புறச் சூழலைப் பாதுகாப்பன மரங்கள். மரம் வளர்த்தால் மழை செழிக்கும் என்பது அனுபவ உண்மை.

தொல்காப்பியம் சுட்டும் மரங்கள், செடி கொடிகளாக, யா, பிடா, தளா, மா, உதி, புளி, ஒடு, சே, விசை, ஞெமை, நமை, பனை, அரை, ஆவிரை, ஆண், எண்(ள்), இல்லம், அகின், ஆர், வெதிர், சார், பீர், நெல், புல், பூல், வேல், ஆல், குமிழ், இவ் இருபத்தெட்டும் சுட்டப் பெறுகின்றன.

இவற்றுள் யா, பிடா (பிடவம் என்பது பிற்காலத்து ஒரு செடியைக் குறிக்கும்) மா, உதி, புளி, ஒடு, சே, விசை, ஞெமை,

நமை, பனை, அரை, ஆவிரை (செடியையும் குறிக்கும்) ஆண், இல்லம் (தேற்றமரம்) எகின், ஆர் (ஆத்திமலர், கொன்றை மரம், வெதிர் (மூங்கில்) சார், பீர் (பீர்க்கம் செடி) பூல் (பூல்செடியையும் குறிக்கும்) வேல், குமிழ், மரங்களைக் குறிக்கும் சொற்கள்.

தளா - தளவு என்ற முல்லையின் ஒருவகைக் கொடியைக் குறிக்கும்.

நெல், புல் - புல் வகையைச் சார்ந்தன.

எண் (எள்) செடி

பேரெண்ணுப் பெயர்களாகத் தாமரை, வெள்ளம், ஆம்பல் என்ற சொற்கள் உள்ளன. இவை தாவரங்களின் பெயர் அடிப் படையில் அமைந்துள்ளன.

தொல்காப்பியர் புல், மரம் என்ற இரண்டு வகைகளுக்குள் தாவரங்களை அடக்குகிறார். புல்லின் வகைகளாகத் தான் செடி, கொடிகளை அடக்கவேண்டியுள்ளது.

இன்றும் வழக்கில், மரத்தின் இலைகளை மாவிலை, அரச இலை, ஆலிலை, வேப்பிலை என்று அழைக்கிறோம். பனை, தென்னை இலைகளை ஓலை என்று வழங்குகிறோம். புல்லின் உறுப்புக்களையும் மரத்தின் உறுப்புக்களையும் வேறுபடுத்திக் காட்டுகிறார்.

தோடே, மடலே, ஓலை என்றா
ஏடே, இதழே, பாளை என்றா
ஈர்க்கே, குலையே என நேர்ந்தன பிறவும்
புல்லொடு வரும் எனச் சொல்லினர் புலவர் (தொல்-1586)

வாழைக் குலை, தென்னங்குலை, பனங்குலை என்று சொல்கிறோம். பனையோலை, தென்னையோலை எனவழங்குகிறோம். வாழை இலை என்கிறோம். செடி, கொடிகள் புல்லினத்தைச் சார்ந்தவைகளாக இருந்தாலும், அவற்றின் இலைகளை, இலை என்றே அழைக்கிறோம். வயிரத்தின் அடிப்படையில், அகக்காழ், புறக்காழ் எனப்பிரித்ததால், பனை தென்னைக்கு புறத்தில் வயிரம் உண்டு, செடி, கொடிகள், வாழை போன்றவற்றில் வயிரம் பற்றிய பேச்சுக்கு இடமில்லை.

மரங்களின் உறுப்புக்களாக

இலையே, முறியே, தளிரே, கோடே,

சினையே, குழையே, பூவே, அரும்பே,
தளை, உள்உறுத்த அனையவை எல்லாம்
மரனொடு வரூஉம் கிளவி என்ப (தொல் - 1587)

மாந்தளிர், வேப்பந்தளிர், என்று கூறுகிறோம், தென்னந் தளிர், பனந்தளிர் என்ற வழக்கு இன்றும் இல்லை. தென்னம்பூ, பனம்பூ, வேப்பம்பூ, மாம்பூ, போன்ற 'பூ' என்ற சொல் வழக்குப் புல்லுக்கும் மரத்திற்கும் பொதுவாக அமைந்துள்ளது.

ஏறத்தாழ மூவாயிரம் ஆண்டுகளுக்கு முன் சில அடிப் படைகளை வகுத்துக் கொண்டு, புல், மரம் எனப் புறக்காழ், அகக்காழ் என்று வகுத்துக்கொண்ட பாங்கு அறிவியல் அடிப் படையில் அமைந்துள்ளதையும் அம்மரபைப் பின்பற்றி இன்றும் பனஓலை, தென்னஓலை எனவும் வழங்கப்படுவது தொல் காப்பியத்தின் அறிவியல் பார்வையை நமக்கு உணர்த்துகிறது.

பெ. சுபாசசந்திரபோசு
பாரதிதாசன் பல்கலைக்கழகம்
திருச்சிராப்பள்ளி – 620 024

தொடர்பியல் சாதனங்களின் சுதந்தீரம் - ஒரு மீள் நோக்கு

நாட்டில் தொடர்பியல் சாதனங்களும், அவற்றின் பணியும் பொதுப் பயன்பாட்டிற்குரியதாக (Public Utility) இருக்க வேண்டும். இவை அரசுக்கோ, தனிமனிதருக்கோ உரிய உடைமைகள் அல்ல. இவை மக்களின் வாழ்வுக்கும், நாட்டின் வளர்ச்சிக்குமுரிய மக்கள் சாதனங்கள் (Mass Media) என்பது குடியாட்சித் தத்துவத்தின் நோக்கமாக இருக்க வேண்டும். குடியாட்சி அமைப்பில் விளங்கும் சமுதாயம் ஒரு திறந்த சமுதாய (Open Society) அமைப்புக் கொண்டதாகும். இதழ்களின் பணி ஒரு காலத்தில் 'Press' என்று குறிக்கப்பட்டது. இப்போது அறிவியல் வளர்ச்சியாலும், பரப்பியல் பணி முறையாலும் தொடர்பியல் சாதனங்களாகிய அச்சாதனத்தையும், மின்னணுச் சாதனத்தையும் 'Press' எனும் பொதுச் சொல் சொல்லால் குறிப்பிடுகின்றார் இராமச்சந்திர அய்யர்.

தொடர்பியல் சாதனங்கள் - சமூக நிறுவனங்கள்

தொடர்பியல் சாதனங்கள் சமூகத்தின் சக்தியாகவும், சமூக இயக்கமாகவும் அமைகின்றன. சமூக, பொருளாதார, அரசியல், பண்பாடு போன்ற களங்களில் புதிய வீச்சை ஏற்படுத்துவதோடு, அவற்றை நியாயப்படுத்தி நிலைப்படுத்தும் தன்மையில் சாதனங்களின் பணிகள் அமைய வேண்டும். இதற்கு இயல்பான சுதந்திரப் போக்கில் இயங்கக்கூடிய சாதனங்கள் தேவை.

தொடர்பியல் சாதனங்கள் தொழில் ரீதியில் பொது நலச்சேவையை ஒரு குறிக்கோளாக ஏற்றுக்கொண்டு செயல்பட வேண்டியுள்ளது. எனவே சாதனங்களுக்குப் பொதுநல நோக்கம் என்ற ஒன்றைத் தவிரப் பிற எல்லாக் கட்டுப்பாடுகளில் இருந்தும் விடுதலை அளித்தல் அவசியமாகும். சமுதாயத்தைப் பரிணாம

வளர்ச்சிக்கு அழைத்துச் செல்லக்கூடிய வல்லமை இத் தொடர்பியல் சாதனங்களுக்கு உள்ளன.

இந்திய அரசியல் அமைப்புச் சட்டத்தில் சாதனங்களின் சுதந்திரம் என்பது சுட்டிக்காட்டப்படவில்லை. ஆனால் இந்திய மக்களுக்கு வழங்கியுள்ள அடிப்படை உரிமைகள் பற்றிக் கூறும் 19(1) அ பிரிவில் ''எல்லாக் குடிமக்களுக்கும் சுதந்திரமாகப் பேசவும், கருத்து வெளியிடவும் உரிமையுண்டு'' என்று சொல்லப்பட்டுள்ளது. இவ்வுரிமையை இந்தியாவில் தொடர்பியல் சாதனங்களுக்குப் பொருத்திக்காட்டிச் செயல்பட்டு வருகிறது.

1951 சட்டத்திருத்தம் - 19(2) இல் சில மாற்றங்கள் செய்யப்பட்டன. நாட்டின் பாதுகாப்பு, அந்நிய நாடுகளுடன் நட்புறவு, பொது அமைதி, பண்பாடு, ஒழுக்கம் ஆகியவை முன்னிட்டோ, நீதிமன்ற அவமதிப்பு, மானநட்ட அவதூறு குற்றம் புரியத் தூண்டுதல் ஆகியவை தொடர்பாக 19(1) அ-வில் கூறப்பட்டுள்ள உரிமைகளுக்குத் தேவையான தடைகளை விதிக்கும் சட்டத்தினை அமுல் படுத்துவதையோ அல்லது அத்தகையானதொரு புதிய சட்டத்தை அரசு இயற்றுவதையோ 19(1) பிரிவில் கூறப்பட்டவை கட்டுப்படுத்த முடியாது.

அரசியல் அமைப்பில் உள்ள கருத்துச் சுதந்திரத்திற்கும் தடைவிதிக்க 19(2) இல் சட்டத்திருத்தம் வழிவகை செய்யப் பட்டுள்ளது. இதன் உரிமை மீறலும், சுட்டியுள்ள தடைகளும் நீதிமன்ற வழக்கிற்குட்பட்டவையாகும்.

அமெரிக்காவில் சாதனங்களுக்கு என்று தனி உரிமை, தனிச் சட்டங்கள் இல்லை. ஆனால் அங்குச் சாதனங்கள் இயல் பான சுதந்திரத்தோடும், சுயக்கட்டுப்பாட்டிலும் செயல்பட்டு வருகின்றன. நமது நாட்டின்

1. இந்திய அரசியல் அமைப்புச் சட்டம் 19(2)
2. இந்திய அரசியல் அமைப்புச் சட்டம் 105 (1), 194
3. அலுவலக இரகசியச் சட்டம் 1923
4. இதழ்கள், புத்தகப் பதிவுச் சட்டம் 1867
5. நீதிமன்ற அவமதிப்புச் சட்டம்
6. வெளியிடக்கூடாதவைகளின் சட்டம் (95)
7. அவமதிப்புச் சட்டம் முதலிய சட்டங்களும் திருத்தங்களும்- சாதனங்களின் சுதந்திரத்தையும்,

செயல்பாட்டையும் ஒடுக்கி வருகின்றன. ஆனால் அமெரிக்க அரசியல் சட்டத்தின் முதல் திருத்தம், பாராளுமன்றம், மக்களுக்கும், சாதனங்களுக்கும் உள்ள எழுத்து, பேச்சுரிமையில் தலையிடும் எந்தச் சட்டத்தையும் இயற்றக்கூடாது என்று கூறுகிறது.

சுயாட்சி அமைப்புக் கொண்ட சாதனங்களின் மன்ற (Media Council) மேற்பார்வையில் சாதனங்கள் செயல்பட 'Press Council' போல் இல்லாமல் ஒரு சாதனங்களின் அமைப்பு உருவாக்கப்பட வேண்டும். இவ்வமைப்பு சாதன வல்லுநர்கள் சமூகவியலாளர்கள், வழக்கறிஞர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள், எழுத்தாளர்கள், பெண்கள் ஆகியோர் அடங்கிய முழு அதிகாரம் பெற்ற ஒரு வலுவான அமைப்பாக விளங்க வேண்டும்.

இவ்வமைப்பு சாதனங்களைத் தண்டிக்கவும், கண்டிக்கவும், உரிமத்தை நீக்கவும், சாதனங்களுக்கு மேல் முறையீடு செய்யும் அதிகாரம் பெற்றிருப்பதோடு, வாய்ப்பையும் நல்க வேண்டும். அரசு, மக்கள், சாதனப் பணியாளர்கள் இவ்வமைப்பிடம் முறையிடும் வாய்ப்பும் வழங்கப்படவேண்டும். இவ்வமைப்பின் தலைவர்களாக உச்சநீதிமன்ற, உயர்நீதிமன்ற நீதிபதிகள் இருத்தல் வேண்டும். இந்த அமைப்பு மாநில அளவிலும், மைய அளவிலும் செயல்பட வேண்டும். மைய அமைப்பில் மேல் முறையீடு செய்ய வாய்ப்பு நல்க வேண்டும். மைய அமைப்பில் மாநிலங்களின் அமைப்புத் தலைவர்கள் மட்டும் இடம் பெற்றிருக்க வேண்டும்.

சுதந்திரத்திற்குரிய தடைகள்

1. பொருளாதாரச் சமநிலை இன்மையும், பற்றாக்குறையும்
2. கொள்கையும், குறிக்கோளும் இல்லாத வணிகச்சூழல்
3. விழிப்புணர்வும், சமூகத்தேடலும் இல்லாத பொறுப்பற்ற மக்கள்
4. சாதனங்களின் பணியாளர்களுக்குச் சுதந்திரமின்மை
5. சாதனங்களின் ஆதிக்க உடைமைப் போக்கு
6. சாதனப் பணியாளர்களின் வலுவில்லாத சங்க அமைப்பு
7. விளம்பரதாரர்களின் செல்வாக்கு
8. அரசியல் கட்சியினர்/பிற பிரிவினரின் வன்முறை
9. முற்போக்குச் சிந்தனையற்ற அரசு.

சுதந்திரமான சாதனங்கள் தவிர்க்க வேண்டியவை

1. வணிக நோக்கு
2. பாலுணர்வை மிகைப்படுத்தல்
3. வன்முறை, சாதி, மதக் கலவரங்களைத் தூண்டல்
4. மிகைப்படுத்தி உணர்ச்சி வயப்படுத்தும் போக்கு
5. மூன்றாம் தர அரசியல் விமர்சனப் போக்கு

சுதந்திரமான சாதனங்கள் பின்பற்ற வேண்டியவை

1. மக்களின் குடிமைப் பண்பினைக் காத்தல்
2. மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தி மனிதப் படுத்தல்
3. கடமையுணர்வோடும், சமூகப் பொறுப்புணர்ச்சியோடும் சுயக்கட்டுப்பாட்டில் செயல்படுதல்.

முடிவுரை

சாதனங்களின் செயல்களில் சரியான இலக்கும் நோக்கும் இருக்கும் போதுதான் சமூகப் பொறுப்பும் இயல்பாய் இருக்க முடியும். ஒரு நாட்டில் வல்லமைமிக்க நியாயமான அரசும், அறிவு பெற்ற மக்களும் நிலைபெறப் பயன்படுவது சாதனங் களின் குருதி ஓட்டமாகிய தகவல் ஓட்டமேயாகும். சாதனங்களின் அமைப்பு மேலாண்மை முறையில் இயங்க வேண்டிய ஒரு சமூக நிறுவனமே (Social Institution) தவிர ஒரு தொழிற்கூடமல்ல. இச்சமூக நிறுவனம் மயக்கத்திலும், அறியாமையிலும் இருக்கும் மக்களை விழிப்படையச் செய்து புதிய வாழ்வு மீட்பைத் தரவேண்டும். மக்கள் கருத்தை உருவாக்கி, அரசு இயந்திரத்தை நன்கு இயக்கவும், அரசின் நல்ல திட்டங்களைப் பல வடிவங்களில் வெளிப்படுத்தி மக்களை அதில் ஈடுபடவும் செய்ய வேண்டும்.

மக்களாட்சியில் சாதனங்கள் இருவழிப் போக்கில் தொடர்பியல் பணியை நிறைவேற்ற வேண்டும். இப்பணிகளை நியாயமாக நிலைநாட்டத் தொடர்பியல் சாதனங்களுக்குச் சுதந்திரம் வழங்கப்பட வேண்டும். இச்சுதந்திரத்தைப் பயன் படுத்தித் தொடர்பியல் சாதனங்கள் சுயக்கட்டுப்பாட்டுடன் சமூகப் பொறுப்புடனும் நாட்டுக்காகப் பாடுபட்டால் சுதந்திரத்தின் அர்த்தம் உறுதிப்படும் இல்லையென்றால் சிதைந்து போகும்.

துணை நூல்கள்

1. V. Communication Media - P. N. Malhan Yesterday - Today Tomorrow - P. N. Malhan Publication Division - March 1992, M.I.B. Govt. of India
2. Press and the Law - Justice A.N. Grover Vikas Publishing House Pvt. Ltd., - 1990. New Delhi - 110 014.
3. Quest for News - Ramachandra Iyar, Macmillan Publication -1979. Madras.
4. இதழியல் கலை - மா. பா. குருசாமி, வண்ணன் வெளியீடு, ஏப்ரல் - 1988, திருச்செந்தூர்.
5. செய்தித் தொடர்பியல் கொள்கைகள் - க. பூரணச்சந்திரன் பிஷப் ஹீபர் கல்லூரி, திருச்சி - 17, முதற்பதிப்பு - மே. 1991.

சுவாமிக்கண்ணு செல்லையா
அரசினர் மகளிர் கலைக்கல்லூரி
புதுக்கோட்டை

மு. வ. நாவல்களில் அறம்

ஒரு நாவல் கருத்து விளக்க நாவலாக மட்டும் இருந்தால் அது படிப்பவர்களிடையே சலிப்பைத் தோற்றுவிக்கும். வெறும் பொழுதுபோக்கு நாவலாக மட்டும் இருந்தால் சமுதாயத்தில் பயனற்ற காகிதக் குப்பையாகவே கருதப்படும். மு.வ. நாவல்களில் இவ்விரு பண்புகளும் விரவியுள்ளமையால் பயன்தரும் படைப்பாக அவை அமைந்து சலிப்பைத் தோற்றுவிக்காமலும் பொருளற்ற, பயனில்லாத படைப்பாக அமையாமலும் நிலை பேறுமிக்க புகழைப் பெற்றுள்ளன. ''ஒரு நாவலைப் படித்தபின் அதிலிருந்து விழுமிய உணர்ச்சி நம் உள்ளத்தில் பதிந்திருக்க வேண்டும்'' என்று மு. வ. கூறுவதற்கேற்ப அவர் நாவல்கள் அமைந்துள்ளன என்று கூறலாம்.

''பேதி மருந்தினை வெல்ல உருண்டைக்குள் வைத்துக் கொடுத்து, அதை உண்ண வைத்து, உடல் மாசு நீக்குவது போன்று, அறக்கருத்துக்களை உள்ளீடாக்கி இந்த நாவல்களாகிய வெல்ல உருண்டைக்குள் அமைத்துத் தந்தால் சமுதாய மாசு நீங்காதா? என்று அறக்கருத்துக்களைத் தன் நாவல்களில் வைத்த மையை மு.வ. வே. கூறுவார்'' என்று அ.மு. பரமசிவானந்தம் தன் கட்டுரையில் குறிப்பிடுகின்றார்.

''மு.வ. நாவல் இலக்கியத்தையும் கலைப்படைப்பு என்று கருதுவதைவிட, சமுதாயத்திற்குச் செய்தி சொல்லும் கருவி என்றே மிகுதியாகக் கருதி இருக்கின்றார்'' என்று சிவக்கண்ணன் குறிப்பிடுவது முழுவதும் சரியானது என்பது மு.வ. வின் வார்த்தைகளிலிருந்தே விளங்கும்.

பாத்திரங்கள் மூலமும், அறநூற் கருத்துக்களை மேற்கோள் காட்டுவதின் வழியும், சிறந்த அறவோர் பலரின் பெயர்களைச் சுட்டிக் காட்டுவதன் மூலமும் மு.வ. தன் நாவல்களில்

அறத்தினைக் கூறியுள்ளார். இங்ஙனம் எடுத்துக்காட்டும் அறத்தினைத் தனிமனித அறம், குடும்ப அறம், சமுதாய அறம், உலகியல் அறம் என நான்கு பகுப்புகளில் இக்கட்டுரையில் காணலாம்.

தனிமனித அறம்

''தனிமனிதன் ஒருவன் தன் கடமைகளைத் தவறாமல் செய்வதே அறமெனக் கருதப்படுகிறது'' என தனிமனித அறத்தை விளக்குவார் க. த. திருநாவுக்கரசு. மு.வ. நாவல்களில் 'அகல் விளக்கு' 'சந்திரன்', 'கயமை', 'ஆணவர்' 'வாடாமலர்' தானப்பன் தவிர மற்ற நாவல்களின் தலைமைப் பாத்திரங்கள் அனைவருமே தனிமனித அறங்களில் தலையாயது எனச் சொல்லத்தகும் ஒழுக்கத்திலிருந்து சற்றும் பிறழாத நிலையில் படைக்கப்பட்டிருக் கின்றார்கள். 'மலர்விழி' நாவலின் கலெக்டர் செல்வநாயகம், 'கரித்துண்டு' நாவலின் கமலக்கண்ணர் 'மண்குடிசை' நாவலின் மெய்யப்பன் ஆகியோரை எடுத்துக்காட்டாகக் கூறலாம்.

''மு.வ. கதைமாந்தர்களில் பலர் ஒழுக்கத்தில் உயர்ந்த பெரு மக்களாக விளக்குகின்றனர். அறக்கொள்கைகளைப் பெரிதும் விரும்பி அந்நெறியிலேயே நடக்க முயல்கின்றனர்'' என்று தா.வே. வீராசாமி தமிழ்நாவல் இயலில் குறிப்பிடுகின்றார்.

அறத்தின் சிலராக விளங்கும் மு.வ. தனிமனித நல்வாழ்வுக்கு வழிவகுக்கும் அன்பு, கடமை, எளிமை ஆகிய கோட்பாடுகளைத் தனிமனித அறமாகத் தன் நாவல்களில் காட்டுகின்றார்.

''அன்புக்காகவே அன்பு செலுத்தி அறநெறியைக் குறிக் கோளாகக் கொண்டு வாழவல்ல நல்லவர்கள் எந்த நாட்டிலும் ஒரு சிலர் இருப்பார்கள். அவர்களுடைய உறவு கிடைத்தால் விடக் கூடாது. அவர்கள் நாலைந்து பேர் கிடைத்தாலும் போதும். அந்தச் சிலருடைய சூழலில் நாமும் வாழ்ந்து செத்துப் போவதுதான் மகிழ்ச்சி'' என்று அல்லி நாவலில் அறவாழி கூறுவதும். ஒவ்வொரு தனிமனிதனும் அன்பை அறமாகக் கொள்ள வேண்டும் என்பதை வலியுறுத்துகின்றது. 'அகல்விளக்கு' நாவலில் பாக்கியம் அம்மையார் கூறுவதும் அறமுடையவர்களே அன்புடையவர்கள் என்று மு. வ. கூறுவதுபோல் உள்ளது.

கடமையைச் செய்வது ஓர் அறம். ஆனால் அந்த அறம் இன்று பரவலாகப் புறக்கணிக்கப்படுகிறது. 'மலர்விழி' நாவலில் வரும் மலர்விழி தன் கணவனால் கைவிடப்பட்டபொழுது அவளுக்கு ஆறுதல் கூறி எழுதும் கடிதத்தில் கலெக்டர் செல்வநாயகம்

''கவலையைத் துரத்து, அஞ்சாமல் கடமையைச் செய், எப்போதும் உயர்ந்த எண்ணங்களோடு இரு'' என்று கூறும்பொழுது தனி மனிதனுக்கு வேண்டிய கடமையை வலியுறுத்துகின்றார்.

''நாம் வரைக்கும் கடமையை ஒழுங்காய்ச் செய்துவிட்டால் யாரைப் பற்றியும் கவலைப்படாமல் வாழலாம்'' என்று வசிகரமும் ''உலகம் திருந்தும்போதுதான் திருந்தும். அதுவரையில் நம் கடமையைச் செய்ய வேண்டும் என்று என் கடமையில் நம்பிக்கை கொள்கிறேன்'' என்று வெங்கடேசனும் 'கயமை' நாவலில் கூறுவது கடமையுணர்வில் கருத்தாக இருக்கும் ஆசிரியரின் உள்ளத்தையே பிரதிபலிக்கின்றது. ''கடமையைச் செய்வதற்கே உரிமையுண்டு, பயனைப் பற்றிக் கவலைப்படுவது அறியாமை என்று நெஞ்சில் ஒரு முள்' நாவிலும் குறிப்பிடுகின்றார்.

ஆடம்பரத்தை வெறுத்து எளிமையைப் போற்றுபவர் மு. வ. வசதிமிக்கவர்கள் எளிமையாக வாழ வேண்டும் என்பதை ''நம்மைப் போல் இந்த நாட்டில் பிறந்தவர்கள் கோடிக்கணக்கான வர்கள் அடிப்படைத் தேவைகளே இல்லாமல் வாடுகிறார்கள். அவர்களுக்குக் கிடைக்காத வசதிகள் எல்லாம் நாம் தேடிக் கொள்வது பாவம் என்று உணரவேண்டும்'' என்று எளிமை ஓர் அறம் என்னும் கட்டுரையில் குறிப்பிடுகின்றார். எளிமை விரும்பி களாக, எளிமையைப் பற்றிப் பேசும் பாத்திரங்கள் இவர் நாவலில் வருகின்றனர். எடுத்துக்காட்டாக 'நெஞ்சில் ஒரு முள்' பார்வதி, 'வாடாமலர்' முருகய்யா ஆகியோரைக் குறிப்பிடலாம்.

குடும்ப அறம்

மு. வ. தன் நாவல்களில் நடுத்தரக் குடும்பங்கள், பணக்காரக் குடும்பங்கள், படித்த குடும்பங்கள், வறுமைக் கோட்டிற்குக் கீழே வாழும் குடும்பங்கள் என்று பலதரப்பட்ட குடும்பங்களைக் காட்டுகின்றார். இவ்வாறு குடும்பங்கள் வேறுபட்டாலும் அடிப் படை அறங்கள் மாறுவதில்லை. அரசியல், சமயப் பெருக்கு, கல்வியறிவு இயந்திரப்புரட்சி, நகரப் பெருக்கம், பணப்புழக்கம், வாணிபம், தொழில்வளர்ச்சி போன்றவற்றால் மனிதனும் குடும்பமும் சமுதாயமும் பாதிக்கப்பட்டிருக்கின்றன என்று எண்ணுகின்ற இக்காலத்திலும் குடும்பம்தான் மனித வாழ்க்கை யின் அடிப்படை என்ற எண்ணங்கொண்டவர் மு.வ. எனவே தான் அவருடைய நாவல்கள் குடும்ப நாவல்களாகவே அமைந்துள்ளன. பாவை தன் சின்னம்மாவின் கணவரைப் பற்றிச் சொல்கின்ற பொழுது ''யாராவது ஒருவர் விட்டுக்

கொடுத்தால்தான் குடும்பத்தில் ஒத்துப்போக முடியும் என்பது அவர் தம்முடைய வாழ்க்கையில் கற்ற ஒரே பாடம்'' என்று குறிப்பிடுவதைப் பார்க்கலாம்.

பொதுவாகச் சிந்தித்துப் பார்த்தால் மு.வ. வின் நாவல்களில் குடும்பம் தலையாய இடத்தைப் பெறுகின்றது. செந்தாமரை, பாவை, பெற்றமனம், மலர்விழி போன்ற நாவல்களில் பல குடும்பங்கள் வருகின்றன. அவற்றில் போராட்டம் மிகுந்த குடும்பங்களும் உண்டு. ஆடம்பரத்தில் அழியும் குடும்பங்களைப் பற்றிய விவாதம் 'அகல்விளக்கு' நாவலில் நடைபெறுகின்றது. மு.வ. காட்டியுள்ள குடும்பங்களையும் குடும்ப வாழ்க்கைக்கு அவர் கூறியுள்ள அறிவுரைகளையும் பல கோணங்களில் நின்று சிந்தித்துப் பார்த்தால் தெளிவான சில அறக்கோட்பாடுகளை உருவாக்கு கின்றார். அதாவது (1) எதையும் எதிர்பார்க்காத அன்பு, (2) தியாக மனப்பான்மை, (3) ஒருவருக்கொருவர் விட்டுக்கொடுப்பது, (4) கணவனோ மனைவியோ குறைகளுக்கிடையே குணத்தைக் காண்பது. இவற்றிற்கு மாறாக மனப்பொருத்தம் இல்லாத கணவனும் மனைவியும் போராடி வாழ வேண்டியதில்லை. குடும்பத்தைக் கலைத்துவிட்டு அவரவர்கள் விருப்பமான வழியில் வாழலாம் என்ற புரட்சிக் கருத்தையும் கூறுகின்றார்.

சமுதாய அறம்

மு.வ. தன் நாவல்களில் சமுதாயத்திற்குக் கூறும் அறங்களே சமுதாய அறங்களாகும். டாக்டர் மு.வ. வின் நாவல்களையும் சமுதாயத்தையும் தனித்தனியே பிரித்துப் பார்க்கவே இயலாது. மிக மேலான அறிவு நிலையில் நிற்கும் சான்றோராயினும் சமுதாயத்தை எவ்வளவு கூர்த்த விழிகளோடு இவர் நோக்குகிறார் என்பதை இவருடைய நாவல்களே நமக்குத் தெளிவாகக் காட்டும் என்று இரா. தண்டாயுதம் குறிப்பிடுகின்றார். உழைப்பு, தொழில், சாதி, கற்பு ஆகியனவற்றைச் சமுதாய அறங்களாகக் கூறலாம்.

உழைக்கும் கைகளின் உயர்வைக் 'கள்ளோ? காவியமோ?' படம் பிடித்துக் காட்டுகின்றது. 'பெற்றமனம்' நாவலில் வரும் முத்தன் வேலைக்காரர்கள் உழைப்பதையும் உழைக்காத மற்றவர் கள் பயன் பெறுவதையும் நினைத்துப் பார்த்து ''உழைக்க வேண்டும், உழைக்க வேண்டும் என்று வாயால் சொல்லிவிட்டு, உழைப்பு இல்லாமல் வாழ்கின்றவர்களையே உலகம் உயர்த்திக் கொண்டிருக்கிற விந்தையை எண்ணிப் பெருமூச்சு விடுகின்றான்.'' தனிமனித வாழ்க்கைக்கும், சமுதாய முன்னேற்றத்திற்கும் நலம் பயக்கும் உழைப்பை ஓர் அறமாகக் கருதுகின்றார் மு.வ.

ஒருவன் நல்வாழ்வுக்குச் சமுதாயமே காரணமாகிறது. தனிமனிதனுடைய தேவைகளைப் பூர்த்தி செய்யாத சமுதாயத்திற்கு அவனைப் பற்றிய கருத்துக்களை வெளியிட உரிமையில்லை என்பது மு.வ. வின் எண்ணம். 'தொழிலும் வாழ்வு கொடுக்க வழி இல்லாத சமுதாயமும் மானக்கேடு பற்றிக் கவலைப் படக்கூடாது'' என்று தானப்பன் கூறுகின்றான்.

ஏழைகளிடம் இரக்கம் கொண்டவர் மு. வ. ஏழு வீடு கட்டி விட்டு, ஏழாயிரம் பேரைக் குடியிருக்கச் செய்தால் வீடற்றவர்கள் என்ன செய்வார்கள். வாய்ப்பு அற்றவர்களைக் கீழ்மக்கள் என்றும், பாவிகள் என்றும், மூடர்கள் என்றும், முரடர்கள் என்றும், குடிகாரர்கள் என்றும் வாய்ப்புப் பெற்றவர்கள் இகழ்கின்றார்கள். இது கொடுமைதான் என்கின்றார். அறநெறியைப் பின்பற்றுபவர்களை ஏழைகளாகக் கருதுவதற்கு இந்தச் சமுதாயமே காரணம் என்பதை மறைமுகமாகச் சுட்டுகின்றார்.

பொருள் வாழ்க்கைக்குத் தேவை. ஆனால் பொருளே வாழ்க்கை இல்லை என்பதை நன்கு தெளிந்த சான்றோர் மு.வ. ஆனால் இன்றைய சமுதாயத்தில் பணம் ஆற்றலுடையதாய் விளங்குகிறது. பணம் என்றால் கெட்டவர் நல்லராகிறார். பகையான குடும்பம் ஒன்றாகச் சேர்கிறது.

உலகின் அறம்

உலகியல் அறம் என்பது உலகில் உள்ள மக்கள் அச்சமின்றி, துன்பமின்றி இன்பமாக ஒற்றுமையுடன் வாழ வகுக்கப்பட்ட அடிப்படை அறங்களாகும். பொய் சொல்லாமை, திருடாமை, கொலை செய்யாமை, கள்ளுண்ணாமை போன்றன. பொய் சொல்வது தீயது என்பதைப் 'பெற்றமனம்' நாவலில் மான்விழி என்ற வேலைக்காரி மூலமாகக் குறிப்பிடுகின்றார். பிச்சை எடுப்பதை இழிவு என்றுதான் உலகியல் சொல்கின்றது. ஆனால் மு.வ.வோ. பிச்சை எடுப்பதைக் குற்றம் என்று சொல்கின்றார். அது மட்டுமல்ல. திருடுவதைவிட மோசமான குற்றமாகக் கருதுகின்றார்.

மு.வ. நாவல்களில் அறம் பற்றிய கருத்துக்களை இக்கட்டுரையில் முழுமையாகச் சொல்ல முடியவில்லை. ஆங்காங்கே சில எடுத்துக்காட்டுகள் தரப்பட்டுள்ளன.

சி.கை. செந்தமிழ்ச்செல்வி
சென்னைப் பல்கலைக்கழகம்
சென்னை – 600 005

கண்ணீர்ப் பூக்கள் - காட்டும் பெண்கள்

முன்னுரை

மு. மேத்தாவின் 'கண்ணீர்ப் பூக்கள்' என்னும் புதுக் கவிதைத் தொகுதி, புதுக்கவிதைகளுக்கு உன்னதமான ஓர் இடத்தையும் மதிப்பையும் தமிழர்களிடையே உருவாக்கிய பெருமை கொண்டது. பொதுவாகவே இன்பத்தை விடத் துன்பமும் துயரமுமே மனித மனதினை அதிகமாப் பாதிக்கும் என்பதற்கு, இந்தப் புதுக்கவிதை நூல் ஓர் உதாரணமாகத் திகழ்கிறது. ''கண்ணீர்ப் பூக்கள்'' என்னும் நூற்பெயரே ஒரு மென்மையான சோக உணர்வினைத் தூண்டக் கூடியதாக இருக்கிறது. அதனால் தான் இது பரவலான வரவேற்பைப் பெற்றுள்ளது. பல்லாயிரம் படிகள் விற்பனையாகியுள்ளன. இந்நூல் வழி அறியலாகும். பெண்கள் குறித்த மேத்தாவின் பார்வையை விளக்க இக்கட்டுரை முனைகிறது.

மு. மேத்தாவின் கண்ணீர்ப் பூக்களில் காதலி

பொதுவாகவே கவிஞர்கள் இரசித்து, யதார்த்தமாக வெளிப் படுத்தும் உணர்வு காதல் எனலாம். பலரைக் கவிஞர்களாக்கியதே காதல் உணர்வுதான் என்றும் சொல்லலாம். அதுவும் குறிப்பாக ஒருதலைக்காதலுக்குத்தான் கவித்துவமான வெளிப்பாடு மிக அதிகமாக இருக்கும். மனமொத்த காதல் என்றால் காதலர் இருவர் அவர்கள் வழியில் கருத்தொருமித்து இனிமையான மனநிலையில் இருப்பார்கள். அந்நிலையில் புலம்பல்கள் இருக்காது. தமக்குத் தாமே, தனிமையில் இனிமை என்று அது ஒரு மாதிரி கவித்துவ மாக வெளிப்படும். ஆனால் சோகம் இருக்கின்றதே அதுவும் ஒருதலைக்காதலால் வரும் சோகம் பார்ப்பவர்களிடமெல்லாம் புலம்பச் சொல்லும். இத்தகைய உணர்வுக்குக் கவிஞர் மு. மேத்தாவும் ஆட்பட்டுப் புலம்பியிருக்கிறார். காதற் கவிதைகளில்

உணர்ச்சி வேகமும் கலை நயமும் மிளிர்கின்றன. பூவாக, புத்தக மாக, பாடலாகக் காதலியை வருணிக்கின்றார். ஆழமான காதல் உணர்வை அருமையாக வெளிப்படுத்துகின்றார்.

''என் இதயத் தோட்டத்தில்
ரோஜாக்களைப் பயிரிட்டேன்
அறுவடை செய்ய
உன்னை அழைத்தேன்
அரிவாளோடு
நீ வந்த பிறகுதான்
என் தவறு எனக்குப் புரிந்தது''

என்று காதலைப் பூவாக வடிக்கிறார். இந்த அடிகள் கவிஞர் மீது அனுதாபப்பட வைத்தாலும் 'அறுவடை செய்ய' ஏன் அழைக்க வேண்டும். அறுவடை என்றதால் அரிவாளோடு வந்திருக்கலாம். பூப்பறிக்க வா என்று அழைத்திருந்தால் இதயமெனும் பூக்கூடை யோடு வந்திருப்பாளோ என்னவோ?

''உன் கண்ணீரை மொழி பெயர்த்தேன்
அது கவிதையாயிற்று
உன் புன்னகையை மொழி பெயர்த்தேன்
அது சங்கீதமாயிற்று''

''நீ கைவளையல்களைக் கழற்றினாய்
என் தோழர்கள்
கண்ணீர் பூக்களை வாசிக்கிறார்கள்''

என்று காதலியை நினைத்துப் பாடுகின்றார்.

''எல்லாப் பூக்களையும் விட
மிக அழகாக வளர்த்த பூ
நீதான் பெண்ணே''

''ஒரு புதுமையான புத்தகம்
நீதான் பெண்ணே''

''இதயத்தை வருடியபடி
இனித்திருக்கும் பாடல்
நீதான் பெண்ணே''

என்னும் அடிகளில் காதலியைப் பூவாக, புத்தகமாகப் பாடலாக நயமாகக் கூறுகிறார்.

''உன்
கல்லறையைப் பார்த்து

நட்சத்திரங்கள்
கண்சிமிட்டுகின்றன''

என்று, ஏனோ தெரியவில்லை, காதலிக்குச் சமாதி கட்டிவிட்டார்.

மு. மேத்தாவின் கண்ணீர்ப் பூக்களில் மனைவி

'தேசத்தைப் போவவே நம் வாழ்க்கையும் தெருவில் நிற்கிறது' என்ற தலைப்பின் கீழ் ஒரு குடும்பத் தலைவன் தன் மனையாளைப் பார்த்துப் புலம்புவது போன்றும், குடும்பத்தில் உள்ள மூத்தவர் களால் இளம் தம்பதியரின் வாழ்வு துன்பமயமாவது போன்றும் வருந்தி வருந்திக் கவிபாடுகிறார்.

''மண வாழ்க்கை ஒப்பந்தம்
மதிப்பிடும் போது
கண்ணீர் வருகிறது''

என்று பெண்ணில்லாமல் ஆணில்லை என்ற யதார்த்தமான உலக வாழ்க்கையைப் படம்பிடித்துக் காட்டுகிறார்.

'மனச் சுமைகள் அதிகமாகும் போது
தாங்க முடியாத தாலிப் பாலங்கள்
தகர்ந்து போகின்றன''

இந்த அடிகள் மண வாழ்க்கையில் ஆணும் பெண்ணும் சமம் என்ற உணர்வினையே பிரதிபலிக்கின்றன.

''நம்முடைய
இளமையின் பிருந்தாவனத்தில்
இரவும் பகலும்
சருகுகளாகவே உதிர்கின்றன''

இந்த அடிகள் ஆண் - பெண் இணைந்த வாழ்வே இன்பமானது என்பதை உணர்த்துகின்றது.

மண வாழ்க்கையில் ஆணும் பெண்ணும் சமம் என்பதையே கவிஞர் வெளிப்படுத்துகிறார். இன்பமும் துன்பமும் சமமாகவே இருவரையும் பாதிக்கும் என்கிறார். பெண்ணுக்குரிய வேலியாகத் தாலியைக் கருதாமல், கணவனுக்கும் மனைவிக்கும் இடையி லுள்ள பாலமாகக் கருதியிருப்பது உயர்ந்த சிந்தனையாக வெளிப் பட்டிருக்கிறது.

மு. மேத்தாவின் கண்ணீர்ப் பூக்களில் தாய்

இந்தப் புதுக்கவிதை நூலில் மனைவியின் தாய் சித்தரிக்கப்பட்டிருக்கிறாள். மணமாகாமல் தாயானவள் பாடப்

பட்டிருக்கிறாள். முதலில் மனைவியின் தாய் எவ்வாறு இருக்கிறாள் என்று பார்ப்போம்.

''உன் தாய்
உன்னை அலங்கரிப்பது
ஆபரணங்களால் அல்ல
என் அவஸ்தைகளாலே தான்''

என்ற அடிகள் ஆண்மகனுக்கும் மாமியார் கொடுமையா என்று சிந்திக்கத் தோன்றுகிறது. மனைவியின் தாயைக் கொடுமை யானவளாக சித்திரித்திருக்கிறார்.

''தன்னந் தனிப்பறவை
தாய்ப் பறவை யாகி விட''

என்று மணமாகாமல் தாயாகிய ஒரு பெண்ணைக் குறிப்பிட்டு அடுத்ததாக,

''ஆல மரத்தடியில்
ஆளுயரக் குப்பைத் தொட்டி
ஆளுயரக் குப்பைத் தொட்டி
அழுகின்ற குரல் கேட்கும்''

என்று கூறுகிறார். இந்தச் சிந்தனையால் தாய்மைக்குக் களங்கம் கற்பிக்கிறார்.

மு. மேத்தாவின் கண்ணீர்ப் பூக்களில் ஆணாதிக்கக் கருத்துக்கள்

காதலர் பாதை என்ற தலைப்பின் கீழ்

''கல்யாண மேடையை
அலங்கரிப்பதற்காகக்
கனவுகள் கண்ட
கன்னிப் பூக்கள்
சவப் பெட்டியின் மேனியில்
சரிந்து விழுந்தன''

என்கிறார். தான் காதலித்த பெண் தன்னைக் காதலிக்காததால், ஒரு முதிர் கன்னி, அதாவது கல்யாணக் கனவுகள் கண்ட கன்னிப் பெண் சவப்பெட்டியில் விழுந்தாள் என்று எழுதிப் பழி தீர்த்துக் கொள்கிறாரோ என்று எண்ணத் தோன்றுகின்றது. இந்தக் காலத்துக் கன்னிப் பெண்கள் கல்யாண மேடையை மட்டுமே கனவு காண்பார்கள் அல்லர்.

தாலாட்டுக் கேட்காத தொட்டில்கள் என்ற தலைப்பில்,

''வாலிபத்தின் பூங்கொத்தில்
வருடங்கள்
தாலி கட்டும் முன்பு சில
தரிசனங்கள்
வேலியிலா இள நிலத்தில்
விதைகள்''

என்று மணமாகாமல் ஒரு பெண் தன்னை இழப்பது போல் பெண்ணை மட்டுமே குற்றவாளியாக்குகிறார். , ஏன் இங்கு ஆணின் பங்கு இல்லையா அல்லது இச்செயல் ஆணுக்கு மட்டும் பெருமை தரக் கூடியதா?

''அழிந்தாள்
அதிர்வடைந்தாள்''

என்கிறார். அழிவு என்பது ஆண் என்ற கர்வத்தையே வெளிப்படுத்துகிறது. நிழல்கள் என்ற தலைப்பின் கீழ்,

''பங்களா தேசத்துப்
படுகொலை வீதியில்
மானம் இழந்து
மங்கலப் பெண்களின்
கருப்பு முக்காடுகள்
கண்ணீர்ப் பர்தாக்கள்''

என்ற கவிதையும் பெண்ணைக் கற்பென்னும் சட்டத்திற்குள் மாட்டப்படும் பொருளாகத்தான் காட்டுகிறது.

முடிவுரை

ஆண் தனக்குச் சற்றும் குறைவில்லாத பெண்ணை, தன்னுடைய ஆதிக்கத்துக்குள் அடக்கும் பாரபட்சமான போக்கு கவிஞர் மு. மேத்தாவையும் விட்டு வைக்கவில்லை. ஆனால் ஒரு பாரதி காட்டிய வழி பெண்களுக்கும் போதும், உலகத்திற்கே ஒரு சூரியனைப் போலப் பாரதியின் போற்றுதலில் பெண்கள் அடக்கு முறைக்கு ஆளாகாது இயல்பாய் வாழும் காலம் கனிந்து வந்து கொண்டிருக்கிறது.

சே. செந்தமிழ்ப் பாவை
அழகப்பா பல்கலைக்கழகம்
காரைக்குடி

தீருக்குறள் கூட்டும் மருத்துவ நெறி

கலைகளுள் பயன்பாட்டு நிலையில் முதன்மை பெறுவது மருத்துவக் கலை. ஏனெனில் மருந்தும், மருத்துவமும், மருத்துவ மனைகளும் இன்றைய நிலையில் இன்றியமையாதனவாகி விட்டன.

> ''மனித சமுதாயத்தில் நோய்கள் வந்துகொண்டே இருக் கின்றன; போரில்லாத காலம் இருக்கலாம்; பஞ்சமில்லாத காலம் இருக்கலாம்; ஆனால் நோயில்லாத காலமே இல்லை; நோய் இல்லாத சமுதாயமே இல்லை. ஆதலால் நோயைப் போக்கும் மருத்துவர்கள் எல்லா இடத்திலும் எல்லாக் காலத்திலும் இன்றியமையாதவர்களாக இருக் கிறார்கள்'' என்ற கி.வா.ஜ. அவர்களின் கூற்று இன்றியமை யாத் தன்மையைப் புலப்படுத்தும்.

இத்தகைய சமுதாயத் தேவையை முதன் முதலில் ஒரு தொகுப்பாகப் பாடிய பெருமை திருவள்ளுவரையே சாரும். திருக்குறள் பொருட்பாலில் மருந்து என்னும் அதிகாரத்தில் பத்துக் குறட்பாக்களிலும் மருத்துவ நெறி இடம் பெற்றுள்ளது.

மருந்து என்னும் இவ்வதிகாரத்தைப் பற்றிப் பரிமேலழகர் ''பழ வினையால் வந்த நோய்க்கு மருந்தில்லை. இறைவனால் வந்த நோய் இறை வழிபாட்டால் நீங்கும். இவ்விரு வகையல்லாத பிற வகை நோய் நீக்கும் நிலையே இவ்வதிகாரத்தில் ஆசிரியரால் கூறப்பட்டுள்ளது'' என்பர்.

''அறம் பொரு ளின்பத்திற்குத் தடையாய்ப் பகைபோல் நின்று வருத்தும் பல்வகை நோய்களையுந் தடுப்பனவும் தீர்ப்பனவுமான பல்வேறு நலப் பொருள் தொகுதி'' என்பது தேவநேயன் கருத்தாகும். பெருமளவில் நோய் தோன்றுவதற்குக் காரணம் நமது

உணவுப் பழக்கங்களே. அதனால் எங்ஙனம் உணவு உண்ண வேண்டும் என்பது பற்றி உரைக்கிறார்.

உணவு உண்ணும் முறை

உண்ணுதல், உறங்குதல் போன்றவற்றிற்கு அளவு உண்டு. அவ்வளவை அறிந்து அச்செயல்களைச் செய்தல் வேண்டும். அவ்வாறன்றி உண்ணல், உறங்கல் முதலியவற்றை மிகுதியாகவும் குறைவாகவும் செய்யின் வாதம் முதலிய கூறுகள் மிகுந்தும் குறைந்தும் உடலுக்கு நோய் செய்யும். இதனை,

''மிகினும் குறையினும் நோய்செய்யும் நூலோர்
வளிமுதலா எண்ணிய மூன்று'' *(941)*

என்றுரைப்பர் வள்ளுவர். போதிய உணவு உட்கொள்ளாத தினாலும் அல்லது உணவில் போதிய ஊட்டம் இன்மையாலும், மிகுதியான உணவினால் ஏற்படும் உடற் குறைகளையும் நோய் களையும் இக் காலத்தில் மருத்துவ அறிஞர்கள் நன்கு ஆய்ந்து சீரான சத்துணவுகளை உண்ண வேண்டும் என்று கூறுவது வள்ளுவர் கருத்தோடு ஒப்பிட்டு எண்ணத் தக்கது.

சீரித்தபின் உண்ணுதல்

முன் உண்ட உணவு சீரணமாகிவிட்டது என்பதை நன்கு அறிந்து உண்டால் உடலுக்கு நோயே வராது. மருந்தும் தேவையிராது என்பதை,

''மருந்தென வேண்டாவாம் யாக்கைக்கு அருந்தியது
அற்றது போற்றி உணின்'' *(948)*

என்னும் குறளில் விளக்குவர். உணவு சீரணமானதை அறிவது எப்படி என்பதற்கு உடல் லேசாய் இருத்தல், கண் பார்வை நன்றாகத் தெரிதல், அவயவங்கள் தொழில் செய்வதற்கு உரியன வாய் இருத்தல், பசி மிகுதல் முதலியன அறிகுறிகள்'' என்பர் பரிமேலழகர். வாழ்க்கைக்கு உடம்பு எவ்வளவு முக்கியமானது என்பதை,

''உடம்பார் அழியி னுயிரா ரழிவர்
திடம்பட மெய்ஞ்ஞானஞ் சேரவு மாட்டார்
உடம்பை வளர்க்கு முபாய மறிந்தே
உடம்பை வளர்த்தே னுயிர்வளர்த் தேனே''
(திருமந்திரம் - 724)

என்ற திருமூலர் வாக்கும் மெய்ப்பிக்கும். பெரும்பாலும் நோய்களெல்லாம் செரியாவுணவாலும், பொருந்தாவுணவாலும்,

மிகையுணவாலும் உண்டாவதால் ஐந்து குறள்களில் வள்ளுவர் உணவு நெறிபற்றிக் கூறுகிறார்.

அளவாக உண்ணுதல்

நமக்குத்தான் சரிமானம் ஆகிவிட்டதே! இனி எவ்வளவு வேண்டுமானாலும் உண்ணலாம் என்று உண்ணுதல் கூடாது. சரிமான ஆற்றல் பசி, பருவம், உழைப்பு, உணவு, வலிமை முதலியவற்றின் அளவறிந்து உடல்நிலைக்கும், காலத்திற்கும், இடத்திற்கும் ஏற்ப அளவாக உண்ண வேண்டும் என்பதை மூன்று குறள்களில் வலியுறுத்துகின்றார். இதுவே மானிட உடம்பைப் பெற்றவன் அதை நெடுங்காலம் கொண்டு செலுத்தும் வழி என்பது ஆசிரியரின் எண்ணம்.

அதிகம் உண்ணும் விருப்பத்தை விடுத்துத் தாம் உண்ணும் அளவை வரையறுத்துக் கொண்டு அவ்வளவே உண்பார்க்கு - அதாவது சிறிது பசி இருக்கும்போதே உணவை முடித்துக் கொண்டு எழுபவர்க்குத் துன்பம் வராது என்பது வள்ளுவர்தம் கருத்து.

''ஒருவேளை உண்பான் யோகி
இருவேளை உண்பான் போகி
மூன்றுவேளை உண்பான் ரோகி
நான்குவேளை உண்பான் உடல்விட்டுப் போகி''

என்னும் வாக்கு ஈண்டு நினைக்கத் தக்கது. இனிக் குறைவாக உண்பதன் நன்மையை நன்கு அறிந்து குறைவாக உண்பவனிடம் இன்பமும், பெருந் தீனி தின்பவனிடம் நோயும் நிலைபெறும் என்பதை வள்ளுவர்,

''இழிவறிந் துண்பான்கண் இன்பம்போல் நிற்கும்
கழிபே ரிரையான்கண் நோய்'' *(946)*

என்ற குறளில் வற்புறுத்துகின்றார். விவேகானந்தர் கூறிய ''தனித்திரு; பசித்திரு; விழித்திரு'' என்னும் தொடரில் நடுவி லுள்ள 'பசித்திரு' என்பது வள்ளுவர் சுட்டிய குறைத்துண்ண வேண்டும் என்பதையே வற்புறுத்துகின்றது.

ஒரு நல்ல ஆசிரியர் தம் மாணவர்களுக்குக் கூறவேண்டு வதை ஒருமுறை கூறுவதோடு மட்டுமன்றிப் பலமுறை பல உதாரணங்களைக் கூறி விளக்குவது போல வள்ளுவரும் மூன்று குறள்களில் பசிக்கு ஏற்ற அளவு உண்ணாமல், காலம், இடம், உடல் முதலியவற்றுக்கு ஒத்த உணவை ஆராய்ந்து தெரிந்து

உண்ணாமல், உருசி பார்ப்பதும், வயிறு நிரப்புவதுமே குறிக் கோளாகக் கொண்டு அதிகமாக உண்டால் அளவில்லாத நோய்கள் வரும் என்பதை மூன்று முறை உரைக்கிறார்.

நன்கு பசித்தபின் உண்ணுதல்

முன்புண்டது செரித்த நிலைமையை அறிந்து நன்றாகப் பசித்தபின் மாறுபடாத - விரோதப்படாத பொருத்தமான உணவு களை உண்ணுதல் வேண்டும் என்பதை,

''அற்ற தறிந்து கடைப்பிடித்து மாறல்ல
துய்க்க துவரப் பசித்து'' (944)

என்னும் குறள் குறிப்பிடும். இதில் மாறல்ல என்பதற்குப் பரிமேலழகர் தம் உரையில், ''வாதப் பகுதி, பித்தப் பகுதி, சிலேத்துமப் பகுதி ஆகியவற்றிற்குப் பொருந்தாத உணவுகள், ஒரு பருவத்திற்குரிய உணவு, இன்னொரு பருவத்திற்கு ஆகாமை, தேனும், நெய்யும் தம்முள் அளவொத்து நஞ்சாகும் நிலை'' எனக் குறிப்பிடுதல் ஈண்டு குறிப்பிடத் தக்கது.

மருத்துவருக்குரிய குணம்

ஒரு மருத்துவர் தன்னிடம் நோயாளியாக வருபவருக்கு இன்ன மருந்து கொடுக்க வேண்டும் என்று மருந்தைத் தீர்மானிக் கும் முன் ஆராய வேண்டியவை எவை என்பதை எட்டாவது குறள் குறிப்பிடுகிறது. ''நோய் இன்னதென்று குறிகளால் அறிந்து நோய் தோன்றிய காரணத்தையும், அது தீர்க்கும் வழிமுறை களையும் அறிந்து, பழைய மருத்துவர் செய்து வருகின்ற முறைமையினின்றும் தப்பாது மருந்து தரவேண்டும்'' இதுவே சிறந்த மருத்துவருக்குரிய குணமாகும்.

மருத்துவர் மருந்து கொடுக்கும் விதம்

மருத்துவன் மருந்து கொடுக்கத் தீர்மானித்த பின் மருந்தின் அளவைத் தீர்மானிப்பதற்குக் கவனிக்க வேண்டிய மூன்று முக்கிய கூறுகள் உள. அவை எவை என்பதை,

''உற்றான் அளவும் பிணிஅளவும் காலமும்
கற்றான் கருதிச் செயல்'' (949)

என்பதில் வள்ளுவர் குறிப்பிடுவர். நோயாளியின் உடலின் தன்மை, வயது, காலம் ஆகிய மூன்றையும் நன்கு ஆராய்ந்து மருந்து கொடுக்கவேண்டும் என்பது இதன் கருத்து.

நோயாளிக்குரிய நோய் தீர வேண்டுமெனில் மருத்துவன் மட்டும் சரியாக அமைந்தால் போதாது. நோய் தீர நான்கு அங்கங்கள் சரியாக இருக்க வேண்டும். அவை, 1) நோயாளி, 2) வைத்தியர், 3) மருந்து, 4) நோயாளியின் அருகிலிருந்து மருந்து, உணவு முதலியன கொடுப்பவர் என்பன. இதனை,

''உற்றவன் தீர்ப்பான் மருந்துஉழைச் செல்வான்என்
அப்பால்நாற் கூற்றே மருந்து'' (950)

என்னும் குறள் கூறுகின்றது. இக் குறளுக்குப் பரிமேலழகர் எழுதிய உரை மிக விரிவாக அவர்தம் மருத்துவப் புலமையை வெளிப்படுத்தும் விதத்தில் அமைந்துள்ளது. உற்றவன் வகை நான்கு, தீர்ப்பான் வகை நான்கு, மருந்தின் வகை நான்கு, இயற்றுவான் வகை நான்கு என இந் நான்கு கூறுகளை மிக விரிவாக ஆய்ந்துரைப்பர்.

முடிவுரை

மருந்து என்னும் அதிகாரத்தின் முதற் குறளில் மூவகை உடற் கூறு பற்றிய நோய்கள் உண்டாகும் வகையைப் பொதுப்படச் சொல்லி, அதன் பின் உணவு வகையில் நோய் வராமல் தடுக்கும் முற்காப்பை ஆறு குறள்களில் கூறி, பின்பு எஞ்சிய மூன்று குறள்களில் உணவுத் தவற்றாலும் பிற வகையாலும் நோய் வந்து விடத்து மருத்துவன் செய்யும் முறையைப் பற்றிக் கூறுகிறார். மருந்தைப் பற்றிக் குறைவாகவே கூறினாலும் மருத்துவம் கற்போர் தெரிந்துகொள்ள வேண்டிய அளவு அதில் கருத்துக் களைப் புகுத்தி யுள்ளார். 'நோய் முதல் நாடி' நோய் தீர்ப்பதே அவரது மருத்துவ முறை. எனவே, மருந்தின்றி நோயைத் தீர்ப்பதும், உணவைத் திருத்தி நோயைத் தடுப்பதும் திருக்குறள் சுட்டும் மருத்துவ நெறியாகும்.

இன்றைய மருத்துவர்கள் நோயாளி வந்தவுடன் விரைவில் ஏதாவது ஒரு மருந்தை எழுதிக் கொடுத்து அனுப்புகிறார்களே தவிர நோய் வந்ததற்கான காரணங்களையோ, தடுக்கும் முறை களையோ எடுத்துக் கூறுவதில்லை. மருத்துவச் சாலைகளைப் பெருக்கும் அரசாங்கம் அதனை விடுத்துத் திருக்குறளிலுள்ள மருந்து அதிகாரத்தை அச்சிட்டு மக்களுக்குக் கொடுத்தால் நோயும் குறையும் வள்ளுவருக்குப் பெருமையும் கிட்டும்.

மெ. செந்தாமரை
மதுரை காமராசர் பல்கலைக்கழகம்
மதுரை – 625 021

இராஜம் கிருஷ்ணன் நாவல்களில் மகளிர் சமுதாய மாற்றம்

முன்னுரை

மனிதனின் ஒழுக்கத்தினை ஆராய்வதையே குறிக்கோளாகக் கொண்ட சமூகவியலும் இலக்கியமும் நெருங்கிய தொடர்பு கொண்டதாகும். மாந்தர்களையும் அவர்தம் செயல்களையும் வாழ்க்கையுடன் தொடர்புபடுத்திக் காட்டும் வண்ணம் படம் பிடித்துக்காட்டும் கதை புதினம் ஆகும். இலக்கியவகைகளுள் ஒன்றான புதினம் சமூகவியலுடன் நெருங்கிய தொடர்புடையது ஆகும். சமூகத்தின் ஓர் அங்கத்தினனான மனிதன் கல்வி, பொருளாதாரம், அரசியல் முதலிய சூழலுக்கேற்ப மாறுகின்றான். சமூகமும் மாறுகின்றது. மரபுகளும் பழக்க வழக்கங்களும் மாற்றம் பெறுகின்றன. அம்மாற்றங்களையும் அதனால் ஏற்படு கின்ற விளைவுகளையும் வெளிப்படுத்துவனவாக நாவல்கள் அமைகின்றன. எனவே, ''தமிழ்ச் சமூகப் புதினங்களைத் தமிழ்ச் சமூகத்தையும், தமிழ் மக்களிடையே காணும் மாற்றங்களையும் அறிவிக்கும் காலைச்சங்குகள் என்கிறார்.'' தா. வே. வீராச்சாமி. இவ்வாறு சமூகத்தில் நிகழும் மாற்றங்களை இராஜம்கிருஷ்ணன் தம் நாவல்களில் சுட்டிச் செல்கிறார். அவற்றை விளக்குவதே இக்கட்டுரையின் நோக்கம் ஆகும்.

இராஜம் கிருஷ்ணன் சுட்டும் மகளிர் சமுதாய மாற்றங்கள்

இராஜம் கிருஷ்ணன் தன் நாவல்களில் மகளிர் மாற்றங்களங் களாக

i) பெண் கல்வி
ii) வரதட்சினை ஒழிப்பு
iii) பெண் திருமணமின்றித் தனித்து வாழ்தல்

iv) விதவை மறுமணம்

போன்றவற்றைக் குறிப்பிடுகிறார். இந்த அடிப்படைகளில் ஆசிரியர் தம் நாவல்களில் மாற்றங்கள் செய்துள்ளார்.

பெண்கல்வி

ராஜம்கிருஷ்ணன் நாவல்களில் வரும் பெண் மாந்தர்கள் பலர் கல்வியறிவு பெற்றவர்கள். இவர்கள் தாங்கள் கற்ற கல்வியின் பயனாகத் தன்னைத் தானே உணர்ந்து கொண்டவராகவும்; தற்சிந்தனை உடையவராகவும்; எந்தச் சூழ்நிலையிலும் தன்னை இழந்துவிடாத மனஉறுதி கொண்டவராகவும்; எக்காரியங்களையும் அறிவடிப்படையில் சிந்தித்து அதன் வழி செயல்படுபவர்களாவும் காணப்படுகின்றனர். குடும்ப அளவிலும் சரி, சமுதாய அளவிலும் சரி இம்மாற்றத்தின் பயன் எதிரொலிக்கும் திறன் பெற்றவராய் காணப்படுகின்றனர். கல்வி கற்று வேலை வாய்ப்பினைப் பெற்ற பெண்கள் பொருளாதாரம் காரணமாய்ப் பிறரைச் சார்ந்து நிற்காது தற்சார்புடையவராய் விளங்குகின்றனர். ''பெண்ணாய்ப் பிறந்தவர் புருஷனுடைய எத்தகைய கொடுமைக்கும் என்றென்றும் அடி பணிந்து தலை கொடுக்க வேண்டியது தான்'' (பெண்குரல். ப. 392) என்று காலங்காலமாக ஊறி வந்த மரபினை மாற்றுகிறாள் பெண் குரல் சுசிலா, மற்றும் இது போன்று சூழலில் மிதக்கும் தீபங்கள் கிரிஜா, ரத்னா போன்றோரையும் சுட்டலாம். கல்வி வளர்ச்சி பெண்கள் வீட்டுக்குள் முடங்கிக் கிடப்பதையும், வேற்று ஆண்களுடன் பேச்சுத் தொடர்புகூட இன்றி இருப்பதையும், பெண்ணுக்குப் பெண்ணே அஞ்சி நடப்பதையும், அடக்கி ஆள்வதையும் மாற்றி அமைக்கின்றது.

திருமணமின்றித் தனித்து வாழ்தல்

திருமணம் தான் ஒரு பெண்ணின் வாழ்க்கையை முழுமை யாக்குகிறது. ஆண் துணையின்றிப் பெண் தனித்து வாழ முடியாது என்ற சமுதாய விதியை ஆசிரியரின் நாவல் பாத்திரங்கள் பல மாற்றியமைக்கின்றன. ஆண்களோடு பெண்களும் நாவலில் வரும் சசி சூழலில் மிதக்கும் தீபங்கள் ரத்னா, வீடு நாவலில் வரும் ரஞ்சனி போன்ற பெண்கள் திருமணம் இல்லாமலேயே ஒரு பெண் தனித்து வாழமுடியும் என்பதற்குச் சான்றுகளாகும். இவர்கள் குடும்பம் என்ற அமைப்பில் நிற்காமல் தனித்து நின்று சமுதாயத்தில் பெண்களுக்கு ஏற்படும் பிரச்சினைகளைத் தீர்ப்ப வர்களாகவும், சமூகப்பயங்களுக்குட்பட்டுத் தன்னம்பிக்கையே இல்லாமல் சுமை சுமக்கும் பெண்களாகப் படைக்காமல்,

பெண்களின் பிரதிநிதியாக நின்று, தன் வாழ்க்கையையே அழித்துக் கொள்ளாது, நியாயம் கேட்டு உரிமையினைப் பெறப் போராடும் இலட்சியப் பெண்களாகப் படைத்துள்ளார். 'பொட்டைக் கழுதை தானேன்று பசிச்சு அழுறவரையிலும் பால் கொடுக்க மாட்டாங்க. இதே தான் பின்னால் எந்த மடையன் வந்து கழுத்தை நீட்டுன்னாலும் அவன் வந்ததே பெருந்தயவுன்னு அடிமையாகப் போயிடறோம்''. (ப.83 ஆ. பெ) என்ற சசியின் பேச்சு அடிமைப்பட்டுக் கிடக்கும் பெண் சமுதாயத்திற்கு விழிப்புணர்வை வலியுறுத்தும் குரலாக அமைகின்றது.

கணவன் மாமியார் போன்ற புகுந்த வீட்டாரின் கொடுமைகளைத் தாங்கிக் கொண்டு பொறுமை காப்பதே பெண்ணுக்கு அழகு என்று வலியுறுத்தப்பட்ட மரபினை மீறிப் புரட்சி செய்கிறாள் சுழலில் மிதக்கும் தீபங்கள் கிரிஜா. தன் உணர்வுகள் மதிக்கப்படாது நசுக்கப்பட்டதால் தன் கணவனை விட்டுப் பிரிந்து செல்லும் கிரிஜா ''ஒரு மனிதப் பிறவியான பெண்ணை, இயந்திரத்தையும் விட மோசமாக நடத்த ஓர் ஆணுக்கும் அவனைச் சார்ந்தவர்களுக்கும் உரிமை வழங்கும் ஓர் அமைப்புத் தான் குடும்பம். இந்த மையமான அதிகார உரிமைக் குவியலை மாற்றமாட்டோம் என்றால் அவள் வெளியேறித்தான் அதைச் சீராக்க முனைய வேண்டும்''. (ப. 103, சு. மி. தீ) என்று கிரிஜா இறுதியில் வீட்டை விட்டுப் புறப்படுகின்றாள்.

வரதட்சிணை ஒழிப்பு

''ஆணும் பெண்ணும் இணையும் திருமண வாழ்க்கை பொருள் அடிப்படையானது. இப்பொருள் தேடிச்செல்லும் ஆண் மகன் பெண்ணுக்கு முலைவிலை என்ற பெயரில் பொருள் கொடுத்து மணந்து கொள்ளும் மரபு பழந்தமிழகத்தில் இருந்துள்ளது என்பர். பெண்ணைத் திருமணம் செய்துகொடுக்கும் பெற்றோர் எதிர்காலத்தில் பெண்ணுக்குப் பொருளாதாரப் பாதுகாப்பு இல்லாமற்போகும் நிலையில் துணைசெய்ய வேண்டுமென்ற நோக்கில் பொன்னையோ, பொருளையோ, அவரவர் நிலைக்கு ஏற்பப் பெற்றோர்கள் தம் பெண்களுக்குத் தாமே மனமுவந்து கொடுத்தனர். காலப்போக்கில் இது கட்டாய மாக்கப்பட்டு இன்று வரதட்சனை என்ற பெயரில் பெரும் சமுதாயச் சிக்கலாக உருவெடுத்துள்ளது. இக்கொடுமையினால் நாள்தோறும் இளம்பெண்கள் தற்கொலைக்கும், கொலைக்கும் ஆளாகின்றனர்''. பல குடும்பங்கள் சீரழிகின்றன. ஒரு பெண்ணின் திருமணத்தால் ஒரு குடும்பமே நாசமாவதை வீடு நாவல் சித்தரிக்கின்றது.

இவ்வாறு வரதட்சிணை வாங்குவதும் கொடுப்பதும் மனிதப் பண்பாட்டிற்குப் பொருந்தாத ஒன்று ஆகும். இச் சிக்கல்கள் பற்றிச் சிந்திக்கவும் அது தொடர்பாகச் செயலாற்றவும் பெண்கள் தலைப் பட்டனர். வரதட்சிணை ஒழிப்புச் சட்டம் பயன் தர வேண்டுமாயின் பெண்களே இக்கொடுமையை எதிர்த்துப் போராடவேண்டும் என்பது இந்நாளைய கருத்து'' ''வரதட்சணை என்பது எப்படியும் கஷ்டப்பட்டுக் கொண்டும் கடன்பட்டுக் கொண்டும் செய்தே தீர வேண்டும் என்ற சமூக நிர்பந்தமாகவும் சம்பிரதாயமாகவும் ஆகி விட்டதே! இந்தப் பாசி படிந்த கொடிய சம்பிராதாயத்தை ஒழிக்க வேண்டும் என்றும் இதைப் பற்றிக் கணவரிடம் பேசி வரதட்சிணை யாகக் கொடுத்த பணத்தை திரும்பப் பெற்றுக் கஷ்டப்படும் தன் பெற்றோருக்குக் கொடுக்க வேண்டும்'' (ப.83 பெ. கு) என்று எண்ணுகிறாள் பெண்குரல் சுலோ. இவ்வாறு வரதட்சிணை என்ற கொடிய நோயினைப் போக்க வேண்டும் என்ற மாற்றம் பெண்களி டையே பரவியுள்ளதை ஆசிரியர் தம் படைப்பின் மூலம் வெளிப் படுத்துகிறார்.

விதவையர் நிலை

''வேத காலங்களில் கைம்பெண்களுக்குக் கட்டுப்பாடுகள் அதிகம் விதிக்கப்படவில்லை. சமூகத்தில் அவர்கள் இழிவுப் படுத்தப்படவும் இல்லை. பெண்கள் மறுமணம் செய்து கொள்ளவும், மணவிலக்குப் பெறவும் உரிமை பெற்றிருந்தனர்'' என்ற கூற்றின் மூலம் வேத காலங்களில் விதவை மறுமணம் வழக்கில் இருந்துள்ளது என்று அறியமுடிகின்றது. ஆனால் இடைக் காலத்தில் விதவை மறுமணம் மறுக்கப்பட்டது. கைம்பெண்கள் நற்சடங்குகளில் கலந்து கொள்ளவும், பட்டு, பகட்டான ஆடைகள் உடுத்தவும் கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டன. பின்னர்ச் சட்டத்தின் மூலம் அது அனுமதிக்கப்பட்டது. ஆண் துணையின்றிச் செயல் படும் தகுதியும், திறமையும் பெண்களுக்கு உண்டு. துணை என்ற பெயரில் கட்டாயத்திருமணம் என்பது பெண்களுக்குத் தேவை யில்லை என்பது ஆசிரியரின் கருத்தாகும். எனவே அவருடைய நாவல்களில் மறுமணம் செய்துகொண்ட பெண்கள் மிகக்குறைவே. மற்றைய நாவல்களில் கணவனை இழந்த பெண்களோ, கணவனால் கைவிடப்பட்ட பெண்களோ, அதற்காக மனம் சோர்ந்து போய் மூலையில் முடங்கிவிடாமல் சமுதாயப் பணிகளில் ஈடுபடுபவர்களாகப் படைக்கப்பட்டுள்ளனர். இதற்குச் சிறந்த சான்றாக வீடு நாவலில் வரும் ரமணம்மாவையும், சுழலில் மிதக்கும் தீபங்கள் நாவலில் வரும் ஆசிரமப் பாட்டியையும் கூறலாம். வீடு நாவலில் வரும் ரமணம்மா குழந்தை மணம்

என்கின்ற பெயரில் மனைவியாகிப் பின் அதன் பொருள் புரிவதற்கு முன்னமேயே கைம்மை நிலையினை அடைந்தவர். அதற்குப் பின்னர்த் தன்னை வீட்டின் நான்கு சுவர்களுக்குள்ளே அடக்கிக் கொள்ளாமல் கல்வி கற்றுச் சமுதாயப் பணி செய்ய வந்தவர். ''பெண்ணுக்குச் சமுதாயம் கற்பிக்கும் நிலைகளைக் கடந்து ஒரு புதிய எல்லைக்குள் வந்து நிற்கும் மூதாட்டி விதவை என்பதாலேயே தமக்கு ரோஜா, மல்லிகையைத் தவிர்த்த நூல் மாலையையும், மலர்ச்செண்டையும் அளிக்கின்றனர் என்ற வேறு பாட்டைக் கூட அறிய முனையாத இயல்பான நிலையில் உள்ளார்'' என்று ஆசிரியர் கூறுகிறார். சுழலில் மிதக்கும் தீப்பங்களில் வரும் ஆசிரமப்பாட்டி, தனக்கு விவரம் புரியாத வயதில் மூன்றாம் தாரமாகத் திருமணம் செய்து கணவனை இழந்தவள். கைம் பெண்களுக்குச் செய்யும் தலையை மொட்டையடித்து, மூலையில் வைக்க வேண்டும் என்று எண்ணும் மூத்ததாரத்தின் மகனின் கட்டுப்பாடுகளுக்கு உட்படாமல் சமூகத் தொண்டினைச் செய்தவர். ''ஆசிரமத்தில் நிறையப் பெண்கள் வந்து இந்த மாதிரி சேவை பண்ணத் துறவறம் வாங்கிட்டிருக்கா. ஆனால் நாந்தான் முதல், இங்க சுத்தி இருக்கும் கிராமமெல்லாம் கால்நடையாவே போவோம், அனுபவத்தில் பலதும் கத்துண்டேன்.. காய்ச்சல், சொறி, சிரங்கு, பிரசவம், கண்வலி, காதுவலின்னு பார்க்கவும் மருந்து போடவும் பழகினப்ப ஜன்மாவில இதுக்கு மேல என்ன வேணும்னு தோணும்'' என்று ஆசிரமப்பாட்டி கூறுவது விதவைப் பெண்கள் புதுமை ஆக்கத்தின் வழி மீட்சி பெற்றதற்கான சான்றுகளாகும்.

முடிவுரை

மகளிர் சமுதாய மாற்றம் என்பது சமுதாயத்தில் ஆண் பெண் சமமான நிலையையே குறிக்க வேண்டும். இதுவரை மகளிர் சமுதாயம் அடைந்துள்ள மாற்றம் என்பது மேம்பாடு என்ற அளவிலே தான் உள்ளது. சமுதாயத்தில் ஒட்டு மொத்தமாகக் கருத்து மாற்றம் ஏற்படும் பொழுது தான் சமுதாயத்திலும் மாற்றம் ஏற்படும். அப்பொழுது தான் தேவையற்ற சம்பிராதயங்களும் கோட்பாடுகளும் மாறும். கல்வி கற்று வேலை வாய்ப்புப் பெற்றிருந்த நிலையிலும் கூடப் பெண்களின் அடிமைத்தனம் தொடர்வதோடு, சுமையும் மிகுதியாகக் காணப்படுகிறது. ஆசிரியர் கூறுவது போல், ''மானுடத்தின் மகரந்தங்கள் போற்றிப் பாதுகாக்கப்படும் பொழுது தான் அமைதியும் இனிமையுமான, சமமான வஞ்சனையற்ற சமுதாயம் மலரமுடியும். பெண்ணிற்குச் சமத்துவச் சமுதாயம் மலர வேண்டுமென்றால் பெண்ணிற்கு விடுதலை வேண்டும் என்று ஆசிரியர் சுட்டிச் செல்கிறார்.

அர. செயச்சந்திரன்
திரு கொளஞ்சியப்பர் அரசு கலைக்கல்லூரி
விருத்தாசலம் – 606 001

நூலியல்

முன்னுரை

மனிதன் மொழியை உருவாக்கக் கற்றபின் நாட்டுப்புறப் பாடல்களைப் பாடினான். பின்னர் வரையறுக்கப்பட்ட கருத்துகளைக் கொண்டு பாடல்களையும் கதைகளையும் இயற்றினான். இவ்வாறு படிப்படியாகச் சிறிய அளவிலிருந்து பெரிய அளவில் நூல்கள் உருவாகத் தொடங்கின. இன்றைய நூலாக்க முயற்சிகளுக்குத் தேவையான நெறிமுறையில் சிலவற்றை நூலியல் என்னும் தலைப்பில் சிந்திக்கலாம்.

நூலியல் வரலாறு

தமிழ் மொழி மிகப்பழைய வரலாற்றினைக் கொண்டது. அந்த அளவுக்குத் தமிழ் மொழியின் நூலியல் வரலாறும் பழைய தாகும். இப்போது கிடைத்துள்ள நூல்களில் மிகப் பழையது தொல்காப்பியம் ஆகும். அந்நூலின் முதல் இயலே நூன் மரபு எனத் தொடங்குகிறது. முதல்நூல், வழிநூல், சார்பு நூல், மொழிபெயர்ப்பு நூல் முதலியவற்றைப் பற்றி இவர் குறிப் பிட்டுள்ளார். இதன் மூலமாக, தொல்காப்பியத்திற்கு முன்பே தமிழில் தரமான நூல்கள் இருந்தமை விளங்குகிறது.

திருவள்ளுவர் ''நூலோர் தொகுத்தவற்றுள் எல்லாம் தலை'' என்றும் ''நுண்ணிய நூல் எனும் சொல்லை நூல் பல கற்பினும்'' என்றும் ஆள்கிறார். சங்கம் வைத்து நூல்களைத்தனிநூல் என்றும், தொகை நூல் என்றும் பகுத்தவர்கள் நம் முன்னோர்கள்.

பவணந்தி முனிவர் தாம் இயற்றிய இலக்கண நூலுக்கு 'நன்னூல்' எனப் பெயரிட்டார். அவரும் நூல் எனும் சொல்லை முன்னோர் வழி நின்று எடுத்தாண்டார். நூல் அமைப்பு, நூலின் தரம், நூல் வகை முதலியவை குறித்துச் சிந்தித்து முப்பத்திரண்டு

உத்திகள், பத்து அழகுகள் பெறவும், பத்துக் குற்றங்கள் நீங்கவும்' நூலை அமைக்க வேண்டும் என்கிறார். இனி இக்காலத் தேவைக் கேற்ப நூலியல் செய்திகளை வரிசைப் படுத்திச் சிந்திக்கலாம்.

நூலாக்கம்

நல்ல நூலை எழுதுவது ஒரு தொண்டு. நல்ல நூல்கள் உருவாக வழிகாட்டு நெறிகளைக் கூறுவது மற்றொரு தொண்டு. முதலில் நோக்கம் தெளிவாக இருக்கவேண்டும். வணிக நோக்க மெனில் அதற்குக் கடைப்பிடிக்க வேண்டிய முறைகள் தனி. ஆய்வு நோக்கத்திற்கு எழுதுவோர் தகவல்களைத் திரட்டி ஆராய்ந்து நூலினை உருவாக்குவார். பிறர் தூண்டுதலுக்காகக் கால வரையறைக்குள் ஊதியத்திற்காக எழுதப்படும் நூல்களில் தரத்தை எதிர்பார்க்க முடியாது. இயல்பாகவே ஒரு நூலுக்குரிய செய்திகளைத் திட்டமிட்டுச் சேகரித்து அதனை நூல் வடிவமாக்கி வெளியிடுவது சிறப்பாகும். ஒரே பொருள் பற்றி, ஒன்று அல்லது பல இதழ்களில் வந்த கட்டுரைகள், சொற்பொழிவுகள், குறிப்புகள் முதலியவற்றைத் தொகுத்து நூலாக்குவது எளிதில் பணி சிறப்புற முடிக்க உதவும்.

நூலின் மையப் பொருளைத் தலைப்பாகப் பெயரிட வேண்டும். இயற்பெயர்கள். உள் தலைப்புகள், நூலின் தொடக்கம், முடிவு ஆகியவை மையப் பொருளாகிய தலைப்பு டன் பொருந்தி வருகிறதா எனக் கவனித்துப் பொருள் குற்றம் இல்லாத தரமான நூலை உருவாக்க வேண்டும்.

நூல்வகை

தொகுப்பு, உரை, பதிப்பு, ஆய்வு, படைப்பு, நோக்கு நூல், ஒப்பாய்வு, தகவல் திரட்டுகள் எனப் பலவகைகளில் நூல்கள் அமையலாம். இதனை நூல்வகை என்று கூறலாம். சுருக்கமாக மூலநூல், விளக்கநூல், நோக்கு நூல், கட்டுரை நூல் எனவும் வகைப்படுத்தலாம்.

எப்பொழுதுமே முதன்மை வகைப்பாடுகளை நிறைவாக வும், துணை அல்லது உள் வகைப்பாடுகளை மிகுதியாகவும் வைப்பது கோட்பாட்டை வடிவமைக்கப் பெரிதும் உதவும். அவ்வாறே அதனைப் பின்பற்றுவோருக்கும் அது நலம் தரும்.

நூல் வகைக்கு ஏற்றவாறு அமைப்பும், தரமும், ஆக்கமும் மாறும், நூல் வகையும், வாசகரும் கொண்டு நூல் அமைப்பு உருவாகும். மலிவுப் பதிப்பு, இலவச விநியோகம், நூலகப்

பயன்பாடு, படைப்பிலக்கியம் என்பவற்றிக்கு ஏற்பவும் நீண்ட கால, குறுகிய கால நோக்கிலும் நூல் அமைப்புகள் மாறுபடும். நூலாசிரியர் இவற்றை மனதில் கொண்டு சுருக்கம், விரிவு, எளிமை, தெளிவு, செய்திச்செறிவு முதலியவற்றுக்கு இடம் தர வேண்டும்.

அழகு என்பது எல்லா இடத்திலும் உண்டு. நூலும் அழகாதல் வேண்டும். அச்சு வடிவம், ஓரமிடல், ஒளி மங்காத தாள், வெவ் வேறு கோண எழுத்துகள், அட்டைப்படம், விளக்கப்படம், அட்ட வணை, குறிகள், பத்திகள் அமைத்தல் என்னும் பதிப்பியல் நுட்பங்களின் மூலம் ஒரு நூலை அழகு படுத்தலாம். அட்டையில் மாத்திரம் உட்பகுதிகளிலும் தேவை நோக்கி அமைக்கலாம்.

நூலின் ஊடகம்

தொலைக்காட்சி முதலியவை வந்தாலும் 'இன்ட்டர் நெட் உண்டே துணை' எனக் காலத்திற்கேற்ப நூலின் ஊடகத்தை மாற்றப் பழக வேண்டும். ஊடகம் என்பது இரண்டு வகைப் படும். அவை, 1. அகவழி, 2. புறவழி. அகவழி என்பது மொழி நடையைக் குறிக்கும். அதன் சிறப்புத் தன்மைகள் நூற்றாண்டு இடைவெளிகளில் மாறுபடுகின்றன. புறவழி என்பது ஓலை, தாள் முதலியவற்றைக் குறிக்கும். முன்னோரது ஊடகம் ''ஓலைச் சுவடி''. இன்றைய ஊடகம் தாள்கள் ஆகும். வெளி நாட்டார் காடு அழிவைத் தவிர்க்க, சுழல் நலனைக் காக்க 'பிளாஸ்டிக்' தாளைப் பயன்படுத்துகிறார்கள்.

கிழிதலும், எழுத்து அழிதலும் பிளாஸ்டிக் தாளில் அதிகமாக நிகழாது. அடுத்த நிலையில் ஒளி, ஒலி ஊடகமுறை உருவானது. அது ஒலிநாடா ஒளி, ஒலி நாடா என இருவகைப்படும். இப்போது ஒளி, ஒலி ஊடகமாகத் தொலைக்காட்சி மாறியுள்ளது. கணிப்பொறித் தட்டுகளும், புது வகை ஊடகமாகும். நாம் எந்த ஊடகத்திலும் கருத்துகளைக் கொண்டு செலுத்தும் திறன் பெற்றி ருக்க வேண்டும். தகவல் திரட்டுகளைத் தாள் மூலம் பார்ப்பது இன்னும் பல ஆண்டுகளுக்கு நடை முறையில் இருக்கும். எனவே காலத்துக்குத் தக்க நூல்களை ஆக்கித் தருவது நமது கடமை ஆகும். ஆராய்ச்சி நூல்கள், அகராதிகள் ஆகியவற்றைத் தொலைக்காட்சி யில் பார்ப்பது கடினம். ஆனால் கணிணியில் சாத்தியமாகலாம்.

நூலின் தரம்

நீண்டகாலம் வைக்க வேண்டிய நூல்கள் உறுதியான அட்டை, வழுக்குத்தாள், பகுப்புக்கட்டுமானம் முதலியவற்றைக் கவனத்தில் கொண்டு நூலின் வடிவை அளிக்க வேண்டும்.

பாட நூல்கள், பையடக்க, கையடக்கப்பதிப்புகளாக இருப்பது நல்லது.

பிழையின்மை தரத்தில் முதல் படி. எழுத்து, சொல் தொடர், பொருள், இலக்கணம், சந்தி முதலிய பிழைகளும் பத்துக் குற்றங்களும் நீக்கப்பட வேண்டும்.

நூல் அமைப்பு

நூல் முகப்பு, பக்கம், பொருளடக்கம், முன்னுரை, நூற் பகுதிகள், முடிவுரை என அட்டவணை, அடைவு முதலிய பின்னிணைப்புகள் கொண்டும் நூல்கள் பொதுவாக அமையும். அகராதிகள், கலைக்களஞ்சியங்கள் முதலியன அகர நிரல் அமைப்பினைப் பெற்று விளங்கும். நோக்கு நூல்களில் இவை முதன்மையானவை.

நூல் பரவல்

மக்களுக்குக் கட்டுப் படியாகக் கூடிய நிலையில் நூல்கள் வெளிவர வேண்டும். தாள் முதலிய ஊடகங்களின் விலைகளைக் குறைக்க வேண்டும். மலிவுப் பதிப்பு முறைகள் மிகுதியான அளவில் வெளிவர வேண்டும். குறைந்த விலையில் நூல்கள் கிடைப்பதற்குக் கீழ்க் காண்பவற்றைச் செய்யலாம்.

தொடக்க நிலை நூல் வெளியீட்டாளர்களுக்கு நூலுக்கான தாள்களைப் பெற விற்பனை, வரி விலக்கு அளிக்கலாம். மேலும் அவர்களுக்கு வங்கிக் கடன் அளித்தல், நிதி உதவி அளித்தல், நூலகங்களில் நூல்களை ஆயிரம் படிக்கும் குறையாமல் பெறுதல், மக்களிடம் கூடுதலாக நூலக வரியை வசூலித்தல் முதலியன.

கல்வி நிறுவனங்கள் அதிகமாக நூல்களை எழுத அரசாங்கம் ஊக்குவிக்க வேண்டும். நூல் வெளியிடுவதை ஒரு வேலை வாய்ப்புத் துறையாகக் கருதிச் சுய வேலைவாய்ப்பு முறையில் இதனை ஊக்குவிக்கலாம்.

பொதுமக்கள் திரைப்படங்கள் முதலிய பொழுது போக்கிற்கு அளிக்கும் முக்கியத்துவத்தைச் சிறிதேனும் குறைத்து நூல்களைப் படிக்கும் வழக்கத்தை மிகுதியாக்கிக் கொள்ளலாம். மக்கள் ஆதரவு இல்லாமல் மொழி வளர்ச்சிப் பணிகளும் எண்ணிய அளவு நிறைவேறாது. எனவே, மக்களின் நூல் படிக்கும் பழக்கம் வளர்வதன் மூலமே நூல் வெளியீட்டு முயற்சிகள் வலுவடையும், ஒலிநாடா, ஒளி ஒலி நாடா, கணிணித்தட்டு ஆகிய ஊடகங்களின் மூலம் நூல்களை வெளியிட விரும்பு வோரை அரசு ஆதரிக்க வேண்டும். இவ்வூடகங்களில் வெளிப்

படும் நூல்களை நூலகங்கள் ஏற்றுக் கொள்ள விதிமுறைகளை உருவாக்கலாம்.

அமெரிக்க நூலகம், பிரிட்டிஷ் கவுன்சில் நூலகம் முதலிய வற்றில் நவீன ஊடகங்களில் நூல்கள் வைக்கப்பட்டுள்ளமை நோக்கத் தக்கது. நூல் வெளியிடுவதை ஒரு வேலை வாய்ப்புத் துறையாகக் கருதிச் சுயவேலை வாய்ப்பு முறையில் அதனை ஊக்குவிக்கலாம். பல்கலைக்கழகங்கள் பழையதாகும் நூல்களை வாசகர்களுக்கு ஏலத்தில் கொடுக்கலாம்.

நூல் வெளியீட்டிற்கான நிதி உதவிகள்

தமிழ் வளர்ச்சித்துறை தேர்ந்தெடுக்கப்பட்ட நூல்களை வெளியிட நிதி உதவிகளை வழங்கி வருகிறது. ஒரு நூலை வெளியிடுவதற்குரிய பாதி செலவை ஏற்கிறது. நூலை வெளியிடக்கூடியவர்கள் இருபதில் ஒரு பங்கு நூல்படிகளை வெளியிட்ட பின் தமிழ் வளர்ச்சித்துறைக்கு அளிக்க வேண்டும்.

திருப்பதி தேவஸ்தானம் ஆண்டுதோறும் பக்தி நூல்களை வெளியிட நிதிஉதவி வழங்குகிறது. பல்கலைக்கழக மானியக் குழு என்னும் யு.ஜி.சி. பாடப்புத்தங்கள் வெளியிட நிதியுதவி வழங்குகிறது. மேலும் பேராய்வுத் திட்டம் (Mager Project) சிறிய ஆய்வுத்திட்டம் (Miner Project) எனும் இரண்டு திட்டங்களின் கீழ் ஆராய்ச்சி செய்பவர்கள் திட்டச் செலவிலேயே நூலினை வெளியிட்டுக் கொள்ளலாம். கர்நாடக மாநிலத்தில் அமைந்துள்ள இந்திய மொழிகளுக்கான மைய நூலகம், தேசிய புத்தக அறக் கட்டளை, National Bode Trust ஆகியவற்றிலும் தமிழ் நூல்களை வெளியிட நிதி உதவிகளைப் பெறலாம். பல்வேறு பதிகங்களை அணுகி நமது நூல்களை வெளியிடுமாறு வேண்டிக்கொள்ளலாம்.

முடிவுரை

இதுவரை நூலியல் வரலாறு, நூலாக்கம், நூல்வகை, நூலின் ஊடகம், நூலின்தரம், நூல்அமைப்பு, நூல்பரவல், நூல் வெளியீட்டிற்கான நிதி உதவிகள் எனும் தலைப்புகளில் நூலியல் பற்றிய செய்திகள் அறிமுகப்படுத்தப் பட்டுள்ளன. இவை குறித்த செய்திகளை விரிவான அளவில் தொகுத்து நூலியல் எனும் பெயரில் ஓர் ஆய்வு நூலை வெளியிட்டால் அது நூல் வெளியிட விரும்பும் அனைவருக்கும் பயன்படும் எனலாம்.

சு. செயராபதி
அ. அ. அரசு கலைக்கல்லூரி
முசிறி – 621 201

பாவேந்தரும் பட்டுக் கோட்டையாரும்

இருபதாம் நூற்றாண்டுத் தமிழ்க் கவிஞர்களில் சீர்திருத்தச் கருத்துக்களையும், பகுத்தறிவுக் கொள்கைகளையும் மிகுதியாகத் தம் கவிதைகளில் பாடியவர் என்ற பெருமை பாரதிதாசனுக்கு உண்டு. அவரைத் தொடர்ந்து அவரைப் போன்றே சீர்த்திருத்தச் சிந்தனைகளை அதிகம் பாடியவர் பட்டுக் கோட்டை கல்யாணசுந்தரம் ஆவார்.

பாவேந்தர் பாரதிதாசன் தலைமையில் திருமணம் செய்து கொண்டவர் பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம், பாரதிதாசன் மீது அவர் அளப்பரிய மதிப்பு கொண்டிருந்தார். பாரதிதாசனோடு சில காலம் தங்கி நெருங்கிப் பழகும் வாய்ப்பைப் பெற்றிருந்தார். 'பாரதிதாசன் வாழ்க' என்று எழுதிவிட்டுத்தான் எதையும் எழுது வாராம். தம் பாடல் ஒன்றில் பாரதிதாசனைத் 'தெள்ளு தமிழ்க் கவிஞன்' என்று போற்றும் இவர் பாரதிதாசனின் கவிதைகளில் பெற்றிருந்த தாக்கத்தை ஆய்வதே இக்கட்டுரையாகும்.

கேலி பேசும் காக்கைகள்

சாதி, மத இனத்தின் பொருட்டும், ஏழை - பணக்காரன் என்ற பொருளாதார ஏற்றத் தாழ்வினாலும் தமிழர்கள் ஒருவரோடு ஒருவர் பிணங்கியும் வேறுபட்டும் ஒற்றுமை உணர்வு சிறிது மின்றி இருந்த நிலையில்,

''வரிசையில் குந்தியந்தக் காக்கைகள் எலாம்-நல்ல
வரிசை கெட்ட மக்களின் வாழ்க்கை நிலையைப்
பெருங்கேலி யாய்மிகவும் பேசியிருக்கும் - அதன்
பின்பவைகள் தத்தமிடம் நோக்கிப் பறக்கும்''

என்று பாவேந்தர் காக்கையின் வாழ்வியலைக் காட்டித் தமிழர்க்கு ஒற்றுமையுணர்வு ஊட்டுகிறார்.

நன்றிக்கு நாயையும், தந்திரத்துக்கு நரியையும், உழைப்புக்கு எறும்பையும், ஒற்றுமைக்குக் காக்கையையும் குறிப்பிடுவது மரபாகும். பாவேந்தரும் ஒற்றுமைக்குக் காக்கையைக் காட்டு கிறார். அத்துடன் நின்று விடாமல் ஒற்றுமையில்லா மனிதர்களின் நிலை கண்டு அக் காக்கைகள் கேலி பேசுவதாகவும் காட்டுகிறார். அஃறிணைப் பறவைகளுக்கிருக்கும் அறிவு கூட ஆறறிவு படைத்த மக்களுக்கு இல்லையே என்னும் ஆதங்கத்தைப் பறவைகளின் கேலி மூலம் உணர்த்துகிறார்.

பாவேந்தர் குறிப்பிட்ட இதே காட்சியைக் கருத்தைப் பட்டுக்கோட்டையார் பாடலிலும் காண முடிகிறது. அவர் காக்கையைப் பற்றிப் பாடும் போது,

''வரிசை தவறாமே குந்திக்கிட்டுதாம்!
வந்ததுக் கெல்லாம் இடம் தந்துக்கிட்டுதாம்!
மனிதனைக் கேலி பண்ணிக்கிட்டுதாம் - அவன்
வாழ்க்கையின் கோணலை எண்ணிக்கிட்டுதாம்!''

என்று மனிதனின் கோணல் வாழ்க்கையைக் காக்கைகள் கேலி பேசுவதாகக் காட்டுகிறார். இப்பாடல் குறித்துக் கருத்து கூறும் குன்றக்குடி அடிகளார், 'சிந்தித்து ஒரு சொட்டுக் கண்ணீர் வடித்தற் குரிய நகைச்சுவையாகவே இது இருக்கிறது' என்கிறார்.

உயர்வு தாழ்வு கருதா வாழ்க்கை

மக்களிடம் ஒற்றுமையின்மை நிலவும் போது, உயர்வு-தாழ்வு பேசப்படும் போது அடிதடி, வெட்டுக்குத்து, கொலை என்ற தீய விளைவுகள் ஏற்படுகின்றன. இவைகளைத் தவிர்த்து மக்கள் நல்வாழ்வு காணச் செய்யப் புறாக்களின் வாழ்க்கையைப் பாவேந்தர் காட்டுகிறார்.

''இட்டதோர் தாமரைப் பூ
இதழ் விரிந்த திருத்தல் போலே
வட்டமாய்ப் புறாக்கள் கூடி
இரையுண்ணும், அவற்றின் வாழ்வில்
வெட்டில்லை; குத்துமில்லை;
வேறுவே றிருந்தருந்தும்
கட்டில்லை; கீழ்மேல் என்னும்
கண்மூடி வழக்கமில்லை''

என்று புறாக்களின் வாழ்வில் மனிதர்களின் வாழ்வைப் போல் சண்டைகள் இல்லையென்றும், கீழ்மேல் என்னும் பேதம்

பாராட்டும் கண்மூடி வழக்கமில்லையென்றும், இருப்பதை பகிர்ந்து, சேர்ந்து உண்ணும் வழக்கம் உண்டே தவிர தனித்தனியாக இருந்தருந்தும் கீழ்நிலை இல்லையென்றும் குறிப்பிடுகின்றார்.

இதே கருத்தை பட்டுக்கோட்டையாரும் தம் பாடலில் குறிப்பிடுகின்றார். ஆனால் பாவேந்தர் கவிதையில் புறாக்களின் வாழ்க்கையில் சொல்லப்படும் செய்தி பட்டுக்கோட்டையார் பாடலில் காக்கையின் வாழ்வில் வைத்துப் பேசப்படுகிறது. இங்குப் புறா; அங்குக் காக்கை இதுதான் வேறுபாடு, பட்டுக் கோட்டையார் பாடல் வரிகள் பின்வருமாறு இடம்பெறுகின்றது.

''ஒற்றுமையில்லாத மனிதரைப் போல் - அது
ஒண்ணை ஒண்ணு
கொத்திக் கிட்டு ஓடலையாம்!
உயர்வுதாழ்வு என்று பேதம் பேசிக்கிட்டு
ஒதுங்கி வாழ இடம் தேடலையாம்!
... .
நல்ல இதயத்தை மாத்திக்கிட்டு
ஈயாதவன் போலக்
கதவைத்தான் சாத்திக்கிட்டுச்
சாப்பிடலையாம்''

பாவேந்தர் கவிதையில் உள்ளவாறே ஒன்றையொன்று சண்டை யிடாமை, உயர்வு-தாழ்வு பேசாமை, தனித்து உண்ணாமை என்னும் மூன்று கருத்துக்களும் இடம் பெற்றிருப்பதைப் பட்டுக் கோட்டையார் பாடலிலும் காண முடிகிறது.

எங்கோ மறைந்தார் பகைவர்

தமிழர்களின் ஒருமைப்பாட்டைக் காண விழைந்த பாவேந்தர் உடை, உணவு, நடை, பேச்சு, எண்ணம் யாவற்றிலும் தமிழர் ஒன்றுபட்டிருக்க வேண்டும் என்பதாக,

''உடையினிலே ஒன்றாதல் வேண்டும்; உண்ணும்
உணவினிலே ஒன்றாதல் வேண்டும்; நல்ல
நடையினிலே ஒன்றாதல் வேண்டும்; பேசும்
நாவிலும் எண்ணத்திலும் ஒன்றாதல் வேண்டும்
மடைதிறந்த வெள்ளம்போல் நம் தேவைக்கும்
மற்றாரை ஒழிப்பதற்கும் ஏறிப் பாயும்
படையினிலே ஒன்றாதல் வேண்டும்; வாழ்வின்
பயன்காண வேண்டுமென்றோ தமிழினத்தார்!''

என்று எழுச்சியூட்டினார். தமிழர்களும் அவரது வேண்டுகோட்குச்

செவிமடுத்து ஓரணியில் நின்றனர். அதுவரைச் சுற்றித் திரிந்த பகைவர், தமிழர்கள் ஒன்றாகிவிட்ட நிலை கண்டதும் ஓடி மறைந்தனர். இதனைக் கண்ட பாவேந்தர்,

''எங்கள் பகைவர் எங்கோ மறைந்தார்
இங்குள்ள தமிழர்கள் ஒன்றாதல் கண்டே!'' - என்கிறார்.

பட்டுக்கோட்டை கல்யாண சுந்தரம், நாளெல்லாம் உழைத்துழைத்துத் தினையளவும் பயனின்றிப் பசியால் வாடும் தொழிலாளர்களை ஒன்றுபடும்படி அழைப்பு விடுக்கையில்,

''துன்புற்ற தோழர்களே - துள்ளி
மின்வெட்டு போலே பளிச்சென்று வாருங்கள்
மேதினிக் குண்மை விளக்கிடுவோம்
பொங்கும் தொழிலாளர்க் கின்னல் புரிந்திடும்
வன்மனப் போக்கிரிகள் - மங்கி
எங்கோ மறைந்தனர் என்றோ ஒழிந்தனர்
என்னும் குரல்கள் எழுப்பிடுவோம்'' - என்கிறார்.

பாவேந்தர், பட்டுக் கோட்டையார் இருவரின் குரலும் 'எங்கோ மறைந்தனர்' என்று ஒலிப்பது குறிப்பிடத்தக்கது. மறைந்தனர் என்று குறிப்பிடாமல் எங்கோ மறைந்தனர் என்று இருவரும் குறிப்பிடுவதில், பகைவர்கள் ஓடி மறைந்த வேகம் உணர்த்தப்பட்டுள்ளது.

சிலரால் பலர் வாடுவதா?

செல்வர்களின் சுரண்டலால் ஏழைகள் பொத்தல் இலைக் கலமாக ஆனார்கள். ஏழையின் உழைப்பையும் அவர்களுக்கு நியாயமான முறையில் சேர வேண்டிய ஊதியத்தையும் கொள்ளை அடித்ததன் மூலம் 'புனல் நிறைந்த தொட்டியாக' செல்வர் இருக்கிறார்கள் என்று பாரதிதாசன் கொதித்தெழுந்து,

''கூழுக்குப் பற்பலர் வாடவும் சிற்சிலர்
கொள்ளை யடிப்பதும் நீதியோ''

என்று குரல் எழுப்புகின்றார்.

தொழிலாளர் சமூகத்தின் மேம்பாட்டிற்காகவே பாடல்கள் இயற்றி வந்த பட்டுக் கோட்டையாரும் பாவேந்தரைப் பின்பற்றி,

''கூழுக்குப் பலபேர் வாடவும் சிற்சிலர்
கொள்ளை யடித்தலைச் சகியோம்''

என்கின்றார்.

பாவேந்தரின் குரல் இது முறையோ? நீதியோ? என்ற முனையில் ஒலிக்க, பட்டுக் கோட்டையின் குரலோ 'நாங்கள் இதுவரை பொறுத்துப் பொறுத்துப் பார்த்துவிட்டோம், இனியும் சகித்துக் கொண்டிருக்கமாட்டோம்' என்று விடுக்கும் எச்சரிக்கையாக அமைந்திருக்கின்றது.

வியர்வையின் விளைச்சல்

இன்று நாம் வசதியான வாழ்வை அனுபவிக்கக் காரணமாக இருந்தவர்கள் உழைப்பாளிகளே, சித்திரச் சோலைகளும், நெல் விளை நன்னிலமும், தாமரைக் குளங்களும், நெடுஞ்சாலைகளும், தொழிற்சாலைகளும் உழைப்பாளிகளின் வியர்வையால் விளைந்தவையாகும். இக்கருத்தை 'நீங்களே சொல்லுங்கள்!' என்னும் கவிதையில்,

''நித்தம் திருத்திய நேர்மையினால் மிகு
நெல்விளை நன்னிலமே! உனக்
கெத்தனை மாந்தர்கள் நெற்றி வியர்வை
இறைத்தனர் காண்கிலமே'

என்று குறிப்பிடுகின்றார்.

பட்டுக் கோட்டையாரும் செல்வரின் உல்லாச வாழ்க்கைக் கெல்லாம் அடிப்படையாகத் திகழ்வது ஏழையின் வியர்வையே என்னும் கருத்தை,

''ஊரைச் சுரண்டி உயர்ந்த மனிதரின்
உல்லாச வாழ்க்கையெல்லாம் - தின்னச்
சோறுமின்றித் தினம் கோயிலில் துஞ்சிடும்
தோழர் உதிர்த்த வியர்வையன்றோ?''

என்கின்றார்.

முடிவுரை

பாரதியார், பாரதிதாசன், பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம் ஆகிய மூவரும் விடுதலை, சமூகச் சீர்திருத்தம், பாட்டாளியின் உரிமை இந்த மூன்றையும் பிரதிநிதித்துவப்படுத்தியவர்கள். பாரதிக்கு ஒரு தாசன் கிடைத்ததைப் போன்று பாரதிதாசனுக்குக் கொள்கை வாரிசாகக் கிடைத்தவர் பட்டுக் கோட்டையார் ஆவார். பாரதியின் தாக்கம் பாரதிதாசனிடம் அமைந்திருப்பதைப் போலவே பாரதிதாசனின் தாக்கம் பட்டுக் கோட்டையாரிடம் அமைந்திருப்பதை உணர முடிகின்றது.

சண்முக. செல்வகணபதி
அரசர் கல்லூரி
திருவையாறு

பண் சுமந்த பாடல்கள்

''பண் சுமந்த பாடற் பரிசு படைத்தருளும்
பெண் சுமந்த பாகத்தன் பெம்மான் பெருந்துறையான்''

தமிழைத் தெய்வத் தமிழ் என்றும் இசைத்தமிழ் என்றும், தமிழிசை என்றும் பேசவைத்த பெருமை பண் சுமந்த பாடல் களைச் சாரும். முத்தமிழுள் ஒன்றாகிய இசைத்தமிழ் விளங்கு கிறது. இசைத்தமிழ் உரைக்கும் நூல்கள் பல மறைந்தாலும் தொல் காப்பியம், சங்க இலக்கியம் முதலான நூல்கள் வாயிலாக இசைத் தமிழின் நுட்பங்களையும், வளத்தையும் கண்டறியலாம். பரிபாடலும், சிலம்பும் இசைத்தமிழின் கருவூலமாகத் திகழ் கின்றன. காரைக்காலம்மையாரின் பதிகங்களும் பின்பு தோன்றிய திருமுறைகள், நாலாயிரதிவ்விய பிரபந்தங்கள், அருணகிரியாரின் திருப்புகழ், தமிழிசை ஆதிமும்மூர்த்திகளான சீகாழிமுத்துத் தாண்டவர், தில்லைவிடங்கன் மாரிமுத்தாப்பிள்ளை, சீகாழி அருணாசலக்கவிராயரின் படைப்புக்கள், கோபால கிருஷ்ண பாரதியார், அருட்பிரகாச வள்ளலார், பாபநாசம் சிவன், சுத்தானந்தபாரதி, சுப்ரமணிய பாரதியார், பாரதிதாசன், கவியரசு கண்ணதாசன் படைப்புக்கள் காலந்தோறும் பண் சுமந்த பாடல்கள் தமிழில் தோற்றம் பெற்று வருகின்றன. சுமார் 20,000க்கும் மேற்பட்ட பண் சுமந்த பாடல்கள் தமிழில் உள. பண்ணார்ந்த இன் தமிழ்ப்பாக்கள் தமிழைத் தெய்வத் தமிழாக்கியது. தமிழில் அருச்சனை செய்ய இயலுமா? என்ற வினா எழும்பிய இந்நாளில் இப்பாடல்கள் தோத்திரப் பாடல்களாக உள்ளமையை உணர வேண்டும்.

பண்

பண் என்ற சொல் காரணப் பெயராகும். பெருந்தானம் எட்டிலும் கிரியைகள் எட்டாலம் பண்ணிப்படுத்தமையால் பண்

என்னும் பெயர்த்தாயிற்று. தலை, மிடறு, நெஞ்சு பல், இதழ், நா, மூக்கு, அண்ணம் என்ற பேச்சுறுப்புக்கள் பெருந்தானம் ஆகும். எடுத்தல், படுத்தல், நலிதல், கம்பிதம், குடிலம், ஒலி, உருட்டு, தாக்கு என்பன கிரியைகளான செயற்பாடுகளாகும். ஆரோசை அமரோசைகளில் குரல் (ச), துத்தம் (ரி), கைக்கிளை (க), உழை(ம), இளி(ப), விளரி (த) தாரம் (நி) என்ற ஏழு சுரங்கள் வருவதனைப் பண் என்றும், ஆறு சுரங்கள் வருவதனைப் பண்ணியம் என்றும், ஐந்து சுரங்கள் வருவதனைத் திறம் என்றும், நான்கு சுரங்கள் வருவதனைத் திறத்திறம் என்றும் அழைத்தனர். இதனை முறையே சம்பூரணம், சாடவம், ஔடவம், சுராந்தம் என்று உரைப்பர். இவை 103 என்று பட்டியலிட்டனர்.

103 பண்கள்

அறிவனார் இயற்றிய பஞ்சமரபு என்ற நூல் மேற்கூறிய நால்வகையிலும் அமையும் பண்கள் 103 என்று கூறுகிறது.

இந்த 103 பண்களில் பண் 17, பண்ணியல் 70, திறம் 12, திறத்திறம் 4 ஆக 103 பண்கள். இப்பண்களை ஏழு பெரும் பாலைப் பண்களாக வகைப்படுத்துவர்[9]

1.	குரல் குரலாகப் பிறப்பது செம்பாலைப்பண் இதன் மூலம் பிறப்பது	8 பண்கள்
2.	துத்தம் குரலாகப் பிறப்பது படுமலைப் பண் இதன் மூலம் பிறப்பது	22 பண்கள்
3.	கைக்கிளை குரலாகப் பிறப்பது செவ்வழிப் பாலைப்பண் - இதன் மூலம் பிறப்பது	12 பண்கள்
4.	உழை குரலாகப் பிறப்பது அரும்பாலைப்பண் இதன்மூலம் பிறப்பது	26 பண்கள்
5.	இளி குரலாகப் பிறப்பது கேடிப்பாலைப்பண் இதன் மூலம் பிறப்பது	12 பண்கள்
6.	விளரி குரலாகப் பிறப்பது விளரிப்பாலைப் பண் - இதன் மூலம் பிறப்பது	5 பண்கள்
7.	தாரம் குரலாகப் பிறப்பது மேற்செம்பாலைப் பண் இதன் மூலம் பிறப்பது	18 பண்கள்
		103 பண்கள்

மாதவி செவ்வழி பண்ணையும் விளரிப் பண்ணையும் மாலை நேரத்தில் யாழில் வாசித்தமையைச் சிலம்பு கானல் வரி 47, 48வது

பாடல்கள் வாயிலாக அறியலாம். இந்த 103 பண்கள் பற்றிய விளக்கங்களைத் தஞ்சை ஆபிரகாம் பண்டிதரின் கருணாமிர்த சாகரம் முதலாம் நூலிலும், விபுலானந்த அடிகளாரின் யாழ் நூலிலும், பேராசிரியர். வெள்ளை வராணாரின் இசைத்தமிழ் நூலிலும் காணலாம்.

பண் சுமந்த பாடல்கள்

தமிழில் பண் சுமந்த முதல் பாடலாகப் பரிபாடல் பாடல்கள் விளங்குகின்றன. பரிபாடலென்பது இசைப்பா என்று பேராசிரியர் உரைப்பர். பரிந்த இசையுடன் அமையும் பாடலாக உள்ளது முதல் 12 பாடல் பாலையாழ்த் திறனையும் 13 முதல் 17வது பாடல் வரை நேர் திறம் சார்ந்ததாகவும் ஏனையவை காந்தாரப் பண்ணையும் சார்ந்து அமைந்துள்ளன. நன்னாகனார், பெட்டனாகனார், கண்ணனர்கனார், நல்லச்சுதனார், பித்தாமத்தர், நாகனார் போன்றோர் இசையமைத்துள்ளனர்.

காரைக்காலம்மையார் பாடிய திருவாலங்காட்டு மூத்த திருப்பதிகங்கள் பண் சுமந்த பாடல்களாக உள்ளன. 'கொங்கைத் திரங்கி' என்று தொடங்கும் நட்டபாடைப் பண் பதிகமும் 'எட்டியிலவம்' என்று தொடங்கும் இந்தனப் பண் பதிகமும் இவ் வகையில் அமையும் பாடல்களாக உள்ளன. பாடலும் இசையும் இவரே அமைத்தமையால் முதல் சாகித்திய கர்த்தவாகத் திகழ் கிறார். இவரைத் தென்னிந்திய இசையின் தாய் என்று குறிப்பிடுவர்.

'கவுணியர் நாவுக்கரசர் பேயார் இம்மூவர் கற்கும் இயலிசை வல்லோர்' எனறு சேக்கிழார் புராணம் கூறும். கவுணியர் என்பது திருஞானசம்பந்தரைக் குறிக்கும். நாளும் இன்னிசையால் தேவாரம் பாடி இசைத்தமிழ்ப் பரப்பிய ஞானசம்பந்தர், நாவுக் கரசர், சுந்தரர் போன்றோர் பத்துப்பாடல்கள் கொண்ட பதிக அமைப்பில் பண் சுமந்த பாடல்கள் தொடரலாயிற்று. ஆழ்வார் களும் இம்முறையைப் பின்பற்றினர்.

பதிகத்தில் உள்ள முதற்பாடல்கள் எந்நிலையில் பாடப் படுமோ அதே நிலையில் அப்பதிகத்தில் உள்ள ஏனையப் பாடல் களும் பாடப்படும். மேலும் பாடலின் முதல் அடி எந்நிலையில் பாடப் படுகிறதோ அதே நிலையில் ஏனைய மூன்றடிகளும் பாடப்படும்.

'காலத்தின் எழுபிறப்பு' என்று தெய்வச் சேக்கிழாரால் பாடப்பட்ட திருஞானசம்பந்தர் பாடியவைகளில் கிடைத்தவை

கள் 4169 பாடல்கள், 384 பதிகங்கள் ஆகும். ஆரா அருந்தமிழ் 89-11, இசைமலி தமிழ் 22-11, இன்தமிழ் 56-11, கலைமலி தமிழ் 120-11, பண்ணார்ந்தமிழ் 323-11, பண்ணியல் தமிழ் 309-5, பண்ணுலாம் அருந்தமிழ் 348-11, பண்பொதி செந்தமிழ் 184-11 என்றெல்லாம் குறிப்பிடுகிறார். இவர் பாடிய பதிகங்கள் வாயிலாக 22 பண்கள் கிடைத்துள. யாழ்மூரியையும் கணக்கிடுவர். ஆனால் யாழ்மூரி பதிகப்பெயர், இது 103 பண் வரிசையில் இடம் பெறா. பண் அடிப்படையில் ஞான சம்பந்தரின் முதல் மூன்று திருமுறைகளும் அமைந்துள. நட்டபாடை, தக்கராகம், பழந்தக்கராகம், தக்கேசி, குறிஞ்சி, வியாழக்குறிஞ்சி, மேகராகக் குறிஞ்சி என்ற ஏழு பண்கள் கொண்ட பண் சுமந்த பாடல்கள் முதல் திருமுறையிலும், இந்தளம், சீகாமரம், பியந்தைக்காந்தாரம், காந்தாரம், நட்டராகம், செவ்வழி என்ற பண்களில் அமைந்த பண்சுமந்த பாடல்கள் இரண்டாம் திருமுறையிலும் காந்தார பஞ்சமம், கொல்லி, சாதாரி, பழம்வஞ்சரம், புறநீர்மை, கௌசிகம், பஞ்சமம், அந்தாளிக்குறிஞ்சிப் பண்களில் அமைந்த பண்சுமந்தப் பாடல்கள் மூன்றாம் திருமுறையில் இடம் பெற்றுள்ளன.

ஞானசம்பந்தர், நாவுக்கரசர், சுந்தரர் பாடிய 797 பதிகங்களில் உள்ள 8272 பாடல்களில் ஞான சம்பந்தர் பாடியவைகளும், நாவுக்கரசர் பாடியவைகளில் 22 பதிகங்களும், சுந்தரர் பாடிய 101 பதிகங்களும் பண்ணாங்க முறையில் அமைந்த பண்சுமந்த பாடல்களாகும். நாவுக்கரசர் பாடிய 58 திருநேரிசைப் பதிகங்களும் 34 திருவிருத்தப் பதிகங்களும், 100 திருக்குறுந்தொகைப் பதிகங்களும், 99 திருத்தாண்டகப் பதிகங்கள் சுத்தாங்க முறையில் பாடப்படும் பண் சுமந்த பாடல்களாக உள்ளன.

நாலயிரத்திவ்விய பிரபந்தப் பாடல்களில் மூன்றாவது ஆயிரம் தவிர ஏனைய மூன்று ஆயிரங்களும் பண்சுமந்த பாடல்களாகும். முதலாயிரத்துப்பண்கள் தெரியவில்லை. இரண்டாவது ஆயிரத்திலும் நான்காம் ஆயிரத்திலும் 28 பண்கள் குறிப்பிடப்பட்டுள்ளன. திவ்வியபிரபந்தத்தில் திருவாய்மொழியிலும் பெரிய திருமொழியிலும் பண்கள் இடம் பெற்றுள்ளன. தேவாரத்தில் இடம்பெறாத முதிர்ந்த குறிஞ்சி, வியந்தம், பாலையாழ், செந்துருத்தி, நாட்டம், அந்தாளி, கோடி, கௌவாணம் குறண்டி, முதிர்ந்த இந்தளம் என்ற பத்துப்பண்கள் திவ்விய பிரபந்தம் வாயிலாக அறிய முடிகிறது. திவ்விய பிரபந்தம் பாடும் முறை அருகி ஓதும் முறையில் இன்று வழங்குகிறது.

தேவாரத்தைப் போன்று திருவிசைப்பாவும் பண் சுமந்த பாடல்களாக உள்ளன. 'பண்பல தெளிதேன் பாடிநின்றாட' (1:5-3) என்று உரைக்கும் திருவிசைப் பாவில் அமைந்துள்ள பண்களைப் பற்றி ஒரு தனிப்பாடலும் கூறுகிறது. திருவிசைப்பாவில் இந்தளம், காந்தாரம், சாளரபாணி, நட்டராகம், பஞ்சமம், புறநீர்மை என்ற பண்கள் காணப்படுகின்றன. இதில் சாளரபாணி என்ற பண் திருவிசைப்பாவில் மட்டுமே காணப்படுகிறது.

மாணிக்கவாசகர் தந்த திருவாசகத்தில் 'பண்சுமந்த பாடற்பரிசு படைத்தருளும்' (திருவம்மானை 8:11) 'பண்களிகூர்தரு பாடலொ பாடல்' (திருப்பீடையாட்சி 1:5), விளரிப் பண் குறித்து 'அளிதேர் விளரி ஓலி நின்ற பூம்பொழில் (நீத்தல் 10; 2-3) திருத்தெள்ளேனத்தில் (13) இசைப்பாடலை அனைவரும் விரும்பி ஏற்பர் என்றும் இது போன்ற குறிப்புகள் உள. திருவாசகத்தை மல்லைப் பண்ணாகிய மோகன ராகத்தில் பாடுவது மரபு.

சந்தப்பாடல்களின் சொந்தமாக விளங்கும் அருணகிரியாரின் திருப்புகழ் இலய இலக்கியமாகத் திகழ்கிறது. இன்று கிடைத்துள்ள 1327 திருப்புகழ் பாடல்கள் முருகப் பக்தியைத் தந்ததோடு பண்ணுக்கு வலிவும் பொலிவும் வழங்கும் தாள இலக்கியமாகும். அக்கால இசையமைதியை, தாள அமைதியைத் திருப்புகழ் வழி அறியலாம். தமிழ்நாட்டில் இசைவாணர்கள் தமிழிசையை மறந்து பிறமொழி இசைப்பாக்களைத் தந்த காலத்திலும் திருப்புகழைப் பாட மறந்திலர். இது தன்னைத்தானே காப்பாற்றிக்கொண்ட பண்சுமந்த பாடலாகும்.

இப்பண் சுமந்த பாடல்களைப் பொலிவுபடுத்தும் நிலையில் இசைக்கருவிகள் விளங்குகின்றன. யாழ், குழல் என்பன தமிழரின் கருவிகளாக உள்ளன என்பதனை இச்சொற்களில் உள்ள முகரமே சான்றாகும்.

இவ்விசைப் பாடல்கள் இறைவனின் அர்ச்சனைப் பாடல்களாகத் திகழ்கின்றன. இப்பண் சுமந்த பாடல்கள் இருபதனாயிரத்திற்கும் மேல் தமிழில் உள. இவைகள் அன்னத்தையும் மறந்து, தமிழில் இசை பாட முடியாது என்று கூறினர். இதன் விளைவால் தமிழிசை மறுமலர்ச்சி இயக்கம் தோன்றியது. தமிழ்நாட்டில் தமிழிசை இன்று பெரியதாக வரவேற்கப்படுகிறது. உலக இசை வரலாற்றின் தமிழிசையின் தொன்மையையும், வளமையையும், நுட்பத்தையும் பண் சுமந்த பாடல் பறை சாற்றுகின்றன. இறைவன் திருமுன் புகழ்பாடும் அருச்சனைப் பாடல்களாக இப்பாடல்கள் உள்ளன.

சிலம்பு நா. செல்வராசு
புதுவைமொழியியல் பண்பாட்டு ஆராய்ச்சி நிறுவனம்
புதுச்சேரி – 605 001

சமூகப் பண்பாட்டியல் நோக்கீட்டு சங்க இலக்கியங்கள்

பகுதி ஒன்று

சங்க அகப் பாடல்களைச் சமூகப் பண்பாட்டியல் நோக்கில் ஆராய்வதாக இக்கட்டுரை அமையும். சமூகப் பண்பாட்டில் என்பது ஈண்டுச் சமுதாயப் படிமலர்ச்சியைக் குறிப்பது. சங்க அகப் பாடல்கள் அனைத்தும் முல்லை, குறிஞ்சி, மருதம், நெய்தல், பாலை எனும் ஐந்து திணைகளுக்குள் அடங்கும் என்பது தொல் காப்பியர் வகுத்தளித்த திணைமுறையாகும். இந்த ஐந்து திணைகளையும் தொல்காப்பியர்

முல்லை குறிஞ்சி மருத நெய்தலெனச்
சொல்லிய முறையாற் சொல்லவும் படுமே. (தொல்.அக.5)

என வரிசைப்படுத்தியுள்ளார். இவ்வைப்பு முறை பற்றி நச்சினார்க்கினியர் தரும் விளக்கம் ஈண்டுச் சுட்டற்பாலது.

> முல்லை குறிஞ்சி மருதம் நெய்தல் என்ற முறை யென்னை எனின் இவ்வொழுக்கமெல்லாம் இல்லறம் பற்றிய ஒழுக்க மாதலின் கற்பொடு பொருந்திக் கணவன் சொற்பிழையாது இல்லிலிருந்து நல்லறஞ் செய்தல் மகளிரது இயற்கை முல்லையாதலின் அது முற்கூறப்பட்டது. புணர்தலின்றி இல்லறம் நிகழாமையிற் புணர்த்தற் பொருட்டாகிய குறிஞ்சியை அதன்பின் வைத்தார். புணர்ச்சிக்குப் பின் ஊடல் நிகழ்தலின் அதன்பின் மருதத்தை வைத்தார். பரத்தையிற் பிரிவு போலப் பிரிவு ஒப்புமை நோக்கி நெய்தலை ஈற்றின்கண் வைத்தார்.

நச்சினார்க்கினியர் இதே வைப்புமுறைக்குப் புணர்தல் பிரிதல் இருத்தல் இரங்கல் ஊடல் எனத் தொல்காப்பியர் உரிப்பொருளை

வரிசைப்படுத்தும்போது வேறு வகையான விளக்கத்தைத் தந்துள்ளார். (தொல்.அக.நச்.14). மேலும் தொல்காப்பியர் புறத் திணையியலில் அகத்திற்குப் புறமான புறத்திணைகளை வரிசைப் படுத்தும் போது 'வெட்சி தானே குறிஞ்சியது புறனே' - எனக் குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல் பாலை என்று வரிசைப் படுத்தியுள்ளார்.

''சொல்லிற் முறையாற் சொல்லவும் படுமே'' என்ற நூற்பாவடியால் முல்லை குறிஞ்சி மருதம் நெய்தல் என்று தொல் காப்பியர் சொன்ன வரிசையிற் கூற வேண்டும் என்பதில்லை; மாற்றியும் கூறலாம்; இம்முறை மாற்றத்தைச் சான்றோர் செய்யுட் கோவையிலும் பிற நூலகத்தும் கண்டு கொள்க என்று இளம் பூரணரும் 'தொகைகளிலும் கீழ்க்கணக்கு நூல்களிலும் இம்முறை மயங்கிவரக் கோத்தவாறு காண்க' என்று நச்சினார்க்கினியரும் மேல் விளக்கம் அளித்துள்ளமையை மனத்துள் கொள்ளுதல் வேண்டும்.

தொல்காப்பியர் கூறிய வரிசைமுறையையும் உரையாசிரி யர்கள் தந்த விளக்கங்களையும் அடியொற்றி வ.அப. மாணிக்கம் (1987:118). இரு கருத்துகளை முன் மொழிவர் அவையாவன:

1. திணைகள் முல்லை குறிஞ்சி மருதம் நெய்தல் என்று குறியீடு பெறுதல்.
2. திணைகள் முல்லை குறிஞ்சி மருதம் நெய்தல் என்று வரிசை பெறுதல்.

இவற்றுள் திணைகள் குறியீடு பெறுதலை வ.சுப. மாணிக்கம் (1987:188) உடன்படுவர்.

> சொல்லிய முறை என்பதற்குச் சொல்லிய வரிசைப்படி என்பது பொருள். எந்த வரிசை? மேல்மறுத்தபடி திணை வரிசையன்று; குறியீட்டு வரிசை எனக் கொள்ளல் வேண்டும். நூற்பாவில் காடுறை யுலகம் முதலாக ஒரு நான்கு முன்னர்க் கூறப்படுகின்றன; முல்லை முதலாக ஒரு நான்கு பின்னர்க் கூறப்படுகின்றன. இவற்றைக் காடுறை யுலகம் முல்லையென, மைவரையுலகம் குறிஞ்சியென இவ்வாறு நிரல்நிறை முறையால் பொருள் கூட்டிக் கொள்ள வேண்டும். இதனையே தொல்காப்பியர் முறையென்றார்.

என்று கூறும் வ.சுப. மாணிக்கம் தொல்காப்பியர் திணைகளை வரிசைப்படுத்தியுள்ளார் எனும் உரையாசிரியர்தம் கூற்றுகளை மறுத்துள்ளார்.

உரையாசிரியர்களும் பிற்காலத் திறனாய்வாளர்களும் தொல் காப்பியர் சொன்ன கருத்துகளையும் முறைமைகளையும் நோக்கிய அளவிற்குத் தொல்காப்பியர்க்குச் சொல்லப்பட்ட கருத்துகளையும் முறைமைகளையும் நோக்கிற்றிலர் என்றே எண்ணத்தோன்றுகிறது. தொல்காப்பியர் முதனூல் ஆசிரியர் அல்லர்; அனைத்தையும் புதுவதாகப் படைத்தாரும் அல்லர்; அவர்க்கு முன்னர் இருந்த இலக்கணச் சிந்தனையாளர்களும் அறிஞர்களும் தொல்காப்பியருக்கு எந்த முறையில் பொருளதி காரத்தை அறிமுகப்படுத்தி இருந்தனர் என்பதை அறிவதின் வழி அகத்திணைகளையும் சங்க அகப்பாடல்களையும் புரிந்து கொள்ள முடியும். இவ்வாறான ஒரு கருத்தை முன் வைப்பதும் ஒரு கருத்துப்போக்கை வளர்த்தெடுப்பதும் சங்க அகப்பாடல் ஆராய்ச்சிக்குப் பிறிதொரு அடித்தளத்தை அமைக்க இயலும்.

பகுதி இரண்டு

தொல்காப்பியத்தில் கூறப்பெற்றுள்ள கருத்துகள் அல்லது சங்க அக இலக்கியப் பாடுபொருள்களாகிய உரிப்பொருள்கள் பற்றி இரண்டு கருத்துகளை இங்குச் சுட்டுதல் வேண்டும்.

1. முல்லை, குறிஞ்சி, மருதம், நெய்தல், பாலை பற்றிய பாடல்கள் சங்க காலத்தில் வழக்கில் இருந்தன என்பதில் கருத்து வேற்றுமைகள் இருக்க முடியாது. சங்ககால கால எல்லையில் அவை பாடப்பெற்றதும் அவை இலக்கியக் கொள்கையாக உருப்பெற்றிருந்ததும் உண்மையே

2. ஆனால் இத்திணைப்பாடல்கள் யாவும் ஒரே சமூக அமைப்பில் தோற்றங்கொண்டனவா என்ற வினா விரிவான ஆராய்ச்சிக்குரியது. ஒரு சமூக அமைப்பில் பாடப்பெற்றமை வேறு; வேறு வேறு சமூக அமைப்பில் அப்பாடல்களின் கரு (உரி) தோற்றம் பெற்றன என்பது வேறு.

தொல்காப்பியர் தம் காலத்திற்கு முந்தைய இலக்கண இலக்கிய வழக்காறுகளை அடிப்படையாகக் கொண்டே தம் இலக்கண நூலை யாத்துள்ளார் என்பதில் கருத்து வேற்றுமை இருக்க முடியாது. தொல்காப்பியர் காலத்திற்கு முந்தைய வழக்காறுகள் எவை என்பதைத் திட்டவட்டமாக வரையறுக்கப் போதுமான சான்றுகள் இல்லை. என்றாலும் தொல்காப்பியர்க்கு முன்பு பன்னெடுங் கால நீட்சிமையில் இலக்கண இலக்கியச் சிந்தனை மரபு உருபெற்றுப் பரிணமித்திருக்க வேண்டும் எனும் கருத்துச் சமூகவியல் பார்வையில் சரியானதாகும்.

இச்சிந்தனை மரபிலிருந்து தொல்காப்பியர் எவற்றைப் பெற்றார் எவற்றைச் சேர்த்தார் என்பன விடையறியா வினாக்க ளாகும் என்றாலும் ஒருசில சான்றுகள் இச்சிந்தனைப் பரிணாம வளர்ச்சியை வெளிப்படுத்தி உள்ளன. தொல்காப்பியரின்

முல்லை குறிஞ்சி மருதம் நெய்தல் எனச்
சொல்லிய முறையாற் சொல்லவும் படுமே

எனும் வரிசை அமைப்பை எளிதில் புறக்கணித்து விட முடியாது. 'சொல்லவும் படுமே' என்ற சொல்லாட்சி ஒரு தடுமாற்ற நிலையை வெளிப்படுத்தியுள்ளது. இவ்வாறும் சொல்லலாம் வேறுவகை யிலும் சொல்லி இருக்கிறார்கள் என்ற மறையுறைப் பொருளே இச்சொல்லாட்சியுள் புதைந்துள்ளது எனலாம். முல்லைகுறிஞ்சி எனும் வரிசைமுறையை 6,7,8,9,10,11,23 ஆகிய அகத்திணையியல் நூற்பாக்களிலும் தொல்காப்பியர் பின்பற்றியுள்ளதையும் அறிதல் வேண்டும். இந்நூற்பாக்களில் ஒன்றாகிய

ஆயர் வேட்டுவர் ஆடூஉத் திணைப்பெயர்
ஆவயின் வரூஉம் கிழவரும் உளரே (23)

எனும் நூற்பா தொல்காப்பியரின் வரிசைத் தேர்வு முறையை வெளிப்படுத்துவதாக, அமைந்துள்ளது. 'ஆயர் வேட்டுவர் கிழவர் ஆடூஉத் திணைப்பெயர் என்ற நூற்பா ஆக்கமே பொருள் செறிந்த தாக இருக்க ஆவயின் வரூஉம் கிழவரும் உளரே என்று பிரித்துக் கூறியதற்குக் காரணம் உண்டு.

ஆயர் வேட்டுவர் ஆடூஉத் திணைப்பெயர் என்பது தொல் காப்பியர் காலத்திற்கு முன்பு வழக்கிலிருந்து திணை நிலைப் பெயர் களாகும். 'ஆவயின் வரூஉம் கிழவரும் உளரே' என்பது தொல் காப்பியர் காலத்தில்; சமகாலத்தில் வழக்கிலிருந்த பெயராகும்.

இந்நூற்பா ஆக்கம் மூலம் இரண்டு செய்திகள் புலனாகின்றன. ஒன்று; ஆயர் வேட்டுவர் ஆகிய திணை நிலைப்பெயர்கள் முறையே முல்லை குறிஞ்சிச் சமூக அமைப்பையும் கிழவர் மருதச் சமூக அமைப்பையும் குறியீடுகளாக வெளிப்படுத்தியுள்ளன. இரண்டு: முல்லை, குறிஞ்சித் திணைக் கோட்பாடுகள் தொல் காப்பியர் கர்லத்திற்கு முன்பே வழக்கில் இருந்த சிந்தனை மரபு களாகும். தொல்காப்பியர் மருத நிலச் சமூக அமைப்பில் வாழ்ந்த தால் அவர்காலத்தில் வழக்கில் இருந்த 'கிழவர்' எனும் திணைப் பெயரையும் இணைந்து நூற்பா யாத்திருக்க வேண்டும். இந்த இரண்டு கருத்துகளின் அடிப்படையில் பெறப்படும் முதன்மை வாய்ந்த செய்தி ஒன்று உண்டு அது வருமாறு:

முல்லை, குறிஞ்சி முதலியன வெறும் பாவியல் கோட் பாடுகள் மட்டும் அல்ல. அவை தமிழர் சமூகப் பரிணாம வளர்ச்சியில் உருவான காதல் பாடு பொருள்கள். சங்க காலச் சமூகத்தில் பாடப்பெற்றதால் அவை அந்தக் காலத்தி லேயே உருப்பெற்ற பாடுபொருள்களை உடையவை என்று உறுதல் சரியானதன்று. சங்க காலத்திற்கும் முன்பு தமிழகத் தில் நிலவிய சமூக அமைப்பிலிருந்து காலந்தோறும் ஒவ்வொன்றாகப் பரிணமித்திருக்க வேண்டும்.

இக்கருத்தை மேலும் விரிவாகப் புரிந்து கொள்ள டார்வின் பரிணாமக் கொள்கையை அடியொற்றிய மார்க்சியச் சமூகவியல் இடந்தருகின்றது.

பகுதி மூன்று

குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல் என்ற வரிசை முறை மனிதச் சமூகப் பரிணாமத்தின் வரிசை முறையாகக் கொண்டு அதன் அடிப்படையில் சங்க அகப் பாடல்களைப் புரிந்து கொள்வதும் ஆராய்வதும் சிறப்பு மிக்கதாகும். இந்த வரிசை முறையில் அகவயப்பட்ட இலக்கண வரிசை முறையாகத் தொல்காப்பியருக்கு முன் உள்ள சிந்தனை மரபை அவர் பின்பற்றி இருக்க வேண்டும். எனவேதான் தொல்காப்பியர்.

ஆயர் வேட்டுவர் ஆடூஉத் திணைப்பெயர்

எனத் தனியே கூறி அதன் பின்னர் முல்லை, குறிஞ்சிச் சமூகத்திற்கு அடுத்த பரிணாமச் சமூகமாகிய மருதத்திணைப் பெயரை ஆவயின் வரூஉம் கிழவரும் உளரே என்று தனியே கூறி இருக்க வேண்டும். நெய்தல், பாலைத்திணைப் பெயர்கள் இலக்கண வரையறையைப் பெற்றிருக்க வில்லை என்பதைத் தொல்காப்பியர் அடுத்து வரும்

ஏனோர் மருங்கினும் எண்ணுங்காலை
ஆனா வகைய திணைநிலைப் பெயரே

என்ற நூற்பா வழித் தெரியப்படுத்தியுள்ளார். எனவே தொல்காப்பியர் இலக்கணச் சிந்தனைகள் குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல் என்ற வரிசையில் வேட்டை, ஆநிரை, வேளாண்மைச் சமூகத்தை அடியொற்றி வரிசைப்படுத்தப் பட்டிருக்கலாம் என்ற கருதுகோளைச் சமைக்க வாய்ப்புள்ளது.

ஜெ. செலீவி
தியாகராசர் கல்லூரி
மதுரை – 9

காலந்தோறும் பெண்

முன்னுரை

சமூகத்தின் கண்களாக விளங்கும் பெண், ஆண் இருபாலரும் இணையாக உரிமைகள் பெற்றுச் சிறந்தால் மட்டுமே ஒரு சமூகத்தின் பண்பாடும், நாகரிகமும் மதிப்பீட்டில் உயர்ந்து நிற்க முடியும். ஆனும் பெண்ணும் கலந்த மனித சமுதாயத்தில் இன்றைய பெண்ணின் நிலை என்ன? இதுவரை பெண் இனம் கடந்து வந்த பாதை எத்தகையது? ஆண் இனம் முதன்மைப் படுகின்ற சமுதாயம் இது. பெண் இனம் இச்சமுதாயத்தில் இரண்டாம் இடத்தையே வகிக்கின்றது.

ஆண் என்பவன் ஆளப்பிறந்தவன் பெண் என்பவள் அவனையும் அவனுடைய வழித்தோன்றல்களையும் பேணப் பிறந்தவள். இன்றைய சமுதாயத்தில் அவளுடைய இடம் இது தான் ''பெண்மையே தெய்வீகக் காட்சியடா'' என்ற பாரதியின் போற்றுதல் ஒருபுறம் பெண்ணாகப் பிறந்தாலே எந்நாளும் துயர் தானே என்ற ஆற்றாமைக் குரல் ஒரு புறம் அலைமகள், கலை மகள், என உலகத்தில் உள்ள நற்பெயர்கள் அனைத்தையும் பெண் தெய்வவடிவமாகக் கரணும் காட்சி ஒருபுறம். பெண்ணை ஒரு மனிதப் பிறவியாகக் கூட மதிக்கப்படாத நிலை மற்றொருபுறம் இந்நிலையில் காலம் தோறும் பெண்களின்நிலை குறித்து இக்கட்டுரையில் காண்போம்.

தொல்காப்பியம் கூறும் பெண்மை

தொல்காப்பியம் தமிழில் தோன்றிய பழமையான இலக்கண நூலாகும் இதன் ஆசிரியர் தொல்காப்பியர் ஆண், பெண் ஆகிய இருவருக்கும் உரிய இலக்கணத்தைப் பண்பு நலன்களை வரையறுத்துக் கூறுகின்றார்.

''அச்சமும் நாணும் மடனும் முந்துறுதல்
நிச்சம் பெண்பாற்குரிய என்ப''

''உயிரினும் சிறந்தன்று நாணே நாணினும்
செய்தீர் காட்சி கற்புச் சிறந்தன்று'',

போன்ற பல அடிகளில் அச்சம், மடம், நாணம், கற்பு, ஒழுக்கம் ஆகியன பெண்களிடம் எப்போதும் இருக்க வேண்டியன என்றே தொல்காப்பியர் வரையறுத்துச் சொல்கிறார் ஆனால் ஆணுக்குரிய இலக்கணமாகத் தொல்காப்பியர் கூறும் போது இத்தகைய வரையறைகளைச் சொல்லவில்லை.

''பெருமையும் உரனும் ஆடூஉமேன என்கிறார்'' வீரம் ஆணுக்குரிய உயர்ந்த பண்பு வீரத்தையும் பெருமையையும் பற்றிக் கூறிய தொல்காப்பியர் அவர்களுக்குரிய கற்பைப் பற்றி மட்டும் கூறவில்லை காலங்காலமாக ஆணுக்குக் கற்பு என்பது முக்கியமில்லாத ஒன்றாகவே கருதப்பட்டு வந்தது. ஓர் ஆடவன் தன் மனைவியைத் தவிரக் காமக்கிழத்தி பரத்தை போன்ற பல பெண்களுடன் தொடர்பு கொண்டு வாழ்ந்திருக்கின்றான்.

காமக்கிழத்தி மனையோள் என்றிவர் என்ற நூற்பாக்கள் அக்கால ஆடவனின் உரிமையைப் பறை சாற்றுகின்றன. பரத்தையரிடமும், காமக்கிழத்தியாரிடமும், ஓர் ஆண் மகன் செல்லுதல் என்பது சமுதாயத்தால் அங்கீகரிக்கப்பட்ட ஒன்றாகவே, ஒரு ஒழுக்கமாகவே பெருமைக்குரியதாகவே கருதப்பட்டு வந்திருக்கிறது. கற்பு நெறி ஆண் வர்க்கத்தைப் பொறுத்தவரை தளர்த்தப் பட்டிருக்கிறது. ஆனால் இதே கற்புநெறி பெண்களுக்குக் கடுமையான ஒன்றாக, ஒரு வேலியாகவே உருவாக்கப்பட்டு வந்திருக்கிறது. தொல்காப்பியம் உணர்த்தும் பெண்களின் நிலை இதுவேயாகும்.

சங்க இலக்கிங்களில் மகளிர் நிலை

சங்ககாலத்தமிழர்கள் இயற்கையோடு இயைந்த வாழ்க்கை வாழ்ந்தனர். பெண்களின் வரலாற்றில் பொற்காலம் என்று கூறப் படும் சங்ககாலத்தில் பெண்கள் பெற்றிருந்த இடத்தையும் வாழ்க்கைக்குப் பெண்ணே ஒளிவிட்டுப் பிரகாசிக்கும் மணிவிளக்காகக் கருதப்பட்டாள் என்பதையும் ''மனைக்கு விளக்காகிய வாணுதல் தலைவன்' என்ற புறநானூற்றுப் பாடல் அடி உணர்த்தும்

''ஈன்ற புறந்தருதல் என்தலைக் கடனே
சான்றோனாக்குதல் தந்தைக்குக் கடனே''

எனக் கூறும் பொன்முடியார் எனும் பெண்பாற்புலவர் இப்பாடல் மூலம், அக்கால மகளிர், தங்களின் கடமை வரையறுக்கப்பட்டது எனவும், ஏனைய கடமைகள் ஆடவர்க்கும் அவர்சார்ந்த சமுதாயத் திற்குமே உரியன எனக் கருதிவந்ததாகத் தெரிகிறது. ஆடவரைச் சார்ந்தே வாழவேண்டிய நிலையில் இருந்த பெண், தன்னுடைய கணவன் இறந்துவிட்டால், மறுமணம் செய்து கொள்ளும் உரிமையும் அற்றவளாகவே இருந்திருக்கிறாள்.

கணவன் இறந்த பின் பெண் கடைப்பிடிக்கும் நிலையை அடிப்படையாகக் கொண்டே பெண்ணின் கற்பை மூன்று கூறு களாகப் பகுத்தனர். கணவன் இறந்தான் என்று அறிந்தவுடனேயே மனைவி இறப்பது தலையாயக்கற்பாகும் கணவன் இறந்தபின் அவனுடன் தானும் தீயில்விழுந்து மடிதல், அதாவது உடன் கட்டை ஏறதல் இடையாயக்கற்பாகும் கணவன் இறந்த பின் கைம்மை நோன்பு பூண்டு வாழ்வது கடையாயக்கற்பாகும் எனக் கருதிவந்தனர்.

கற்பு என்பது எல்லா நிலையிலும் பெண்ணுக்கு மட்டுமே வலியுறுத்தப்பட்டிக்கின்றது. ஆணும், பெண்ணும், சமுதாயத்தில் சமமாக நடத்தப்படவில்லை. பெண்களின் நிலை இங்ஙனம் உரிமையற்றுக் காணப்பட்டது. இதுவே சங்ககாலப் பெண்களின் நிலையாகும்.

காப்பியங்களில் மகளிர்நிலை

காப்பியக்கால மாந்தர்களிலும், பெண்ணுக்குச் சில உரிமைகள் மட்டுமே வரையறை செய்யப்பட்டிருந்தன. நாடகக்காப்பியம், முத்தமிழ்க் காப்பியம் என்றெல்லாம் சிறப்பிக்கப்படும் சிலப்பதிகாரம் பெண்ணின் உரிமை பேசும் காப்பியம் என்றும் பெண்ணின் பெருமை பேசும் காப்பியம் என்றும் புகழப்படுகிறது. ஒரு பெண்ணைப் பத்தினித் தெய்வமாக்கிய காப்பியமே சிலப்பதி காரம் எனலாம். இக்காப்பியத்தில் ஆண்களின் இன்ப நாட்டத்திற் காகவே பரத்தையாகப் பெண்களில் ஒரு பகுதியினர் நியமிக்கப் பட்டிருந்தனர்.

சமுதாயத்தின் பெருங்குறையாகக் காணப்பட்ட பரத்தமை ஒழுக்கத்தால் கண்ணகியின் வாழ்க்கையில் ஏற்பட்ட துன்பங்கள் பின்னுக்குத் தள்ளப்பட்ட அக்கொடிய ஒழுக்கம் சமுதாயத்தில் காணப்பட்டாலும் பெண்மட்டும் கற்புடையவளாகத் துன்பங் களைப் பொறுத்துக் கொள்பவளாக இருத்தல் வேண்டும். அவ்வாறு இருந்தால் தான் அவளுடைய பெருமைகளை நாடு

போற்றும்; பத்தினித் தெய்வமாக்கி வழிபடும் என்பதை இக்காப்பியம் வலியுறுத்துகிறது.

பாண்டியனின் மனைவி தன் கணவன் இறந்தவுடன் அவன் உடல்மீது விழுந்து உயிர் துறந்தாள் இளங்கோவடிகள் ''கணவனை இழுந்தோர்க்குக் காட்டுவது இல்'' என்பதை உணர்த்திக் கணவன் இறந்தவுடன் மனைவி உடனே உயிர் விடுவது என்பதுதான் பெருமைக்குரியது என்கிறார் சிலம்பும், மணிமேகலையும் அக்காலச் சமுதாயப் பெண் இனத்தைப் பரத்தையர் குலமென்றும், குலமகள் குலமென்றும் இருகூறாகப் பிரித்தது என்பதைக் காப்பியங்கள் நமக்கு எடுத்துக் கூறுகின்றன. அக்காலத்தில் பரத்தமை ஒழுக்கம் கேவலமானது என்றோ, மற்றவரிடமிருந்து மறைக்கத் தக்கது என்றோ கருதப்படவில்லை. கணவன் மட்டும் எத்தனைப் பெண்களை வேண்டுமானாலும் மணம் செய்து கொள்ளலாம். பலதாரத்தைப் போற்றிய மணநூல் என்று பாராட்டப்பட்ட சீவகசிந்தாமணியும் ஆடவன் எத்தனைப் பெண்களை வேண்டுமானாலும் மணந்து கொள்ளலாம் என்ற கருத்தையே நிலை நாட்டிச் செல்கிறது. ஒருவனுக்கு ஒருத்தி என்ற நிலையை மீறி இயற்றப்பட்ட காப்பியமே சீவகசிந்தாமணி இதுவே காப்பியகாலப் பெண்களின் நிலையாகும்.

நீதி இலக்கியங்களில் மகளிர் நிலை

தமிழில் தோன்றிய நீதி நூல்களில் எல்லாம் அடிப்படையாக விளங்குவது குறள் திருவள்ளுவர் தன்னுடைய குறட்பாக்களில் அறக்கருத்துக்கள் பலவற்றைக் கூறிச் சென்றுள்ளார். அக்காலச் சமுதாயத்தில் பெண்ணுக்கு இருந்த நிலையையே எடுத்துக் கூறிச் செல்கின்றார். பெண்களை வாழ்க்கைத் துணைநலம் என்று பேசிப் பெண்ணுக்கு உயர்வைக் கொடுக்கின்றார் வள்ளுவர் ஆணைக் கடவுளாக மதித்துக் கைகட்டிப்பணிவிடை செய்து பக்தி செலுத்தும் துணையே வள்ளுவரின் வாழ்க்கைத்துணை.

''தெய்வம் தொழாஅள் கொழுநன் தொழுதெழுவாள்
பெய்யெனப் பெய்யும் மழை''

என்று கூறுகிறார். மேலும் கணவனைப் போற்றிக் கடமைகளைச் செய்தாலே போதும் பெண்கள் மிகுந்த சிறப்பினை உடைய மேலுலக வாழ்வைப் பெறலாம் என்றும் கூறுகிறார்.

''ஆண் தூய்க்கும் அஃறிணைப் பொருட்கள் பல. அவற்றுள் அவன் அனுபவிக்கும் ஒரு பொருளாக இருப்பவள் பெண்ணாகிய அவன் மனைவி, கணவனுக்கு உடமையாக இருப்பவள்

கணவனுக்குக் கட்டுப்பட்டவள். அவன் வரையறுக்கும் எல்லையை மீறாதவள் கணவன், மனைவி உறவினை இப்படித் தான் வள்ளுவர் படம் பிடிக்கிறார்'' என்பதை நாம் அறியமுடி கிறது. அக்காலக் கட்டத்தில் நிலவி வந்த பெண்ணடிமைத்தனக் கருத்துக்கள் வள்ளுவரின் எழுத்துக்களிலும் பிரதிபலிக்கின்றன.

(பத்தினிப் பெண்டிரும் பரத்தையர் வீதிகளும் - பிரேமா அருணாசலம்)

சிற்றிலக்கியங்களில் மகளிர் நிலை

சிற்றிலக்கியக்காலம், பெயருக்கேற்றாற்போல் பெண்ணைப் போகப் பொருளாகக் காட்டியது. இலக்கியங்கள் என்ற பெயரில் பெண்களின் அங்கங்கள் வருணிக்கப்பட்டது. பெண்ணுக்கு அழகும் ஆணுக்கு வீரமும் சொத்தாகக் கருதப்பட்ட நிலையைச் சிற்றிலக்கியங்கள் தெள்ளத்தெளிவாக உணர்த்துகின்றன. பெண் மதிப்பிழந்து, ஆணின் உடைமையாகவும் அவனுடைய அடிமை யாகவும் இருந்திருக்கிறாள் என்பதைச் சிற்றிலக்கியங்கள் உணர்த்துகின்றன.

இன்றைய காலக்கட்டத்தில் பெண்

ஆயிரம் ஆயிரம் ஆண்டுகளாக முடக்கப்பட்டிருந்த பெண்ணினம் ஓரளவிற்குத் தன்னுடைய அடிமைத்தளைகளை நீக்கி முன்னேறிக் கொண்டிருக்கின்றது. பெண்ணினத்தின் முன்னேற்றப் பாதைகளில் காணப்பட்ட தடைக்கற்கள் பலவற்றையும் கடந்து வந்து இன்று ஒரு புதிய உலகத்தையே உருவாக்கிக் கொண்டிருந் தாலும் வரதட்சணைக் கொடுமை கற்பு ஆகிய தடைக்கற்களி லிருந்து மீண்டு முழுமையான சுதந்திரம் பெற முடியவில்லை. வரதட்சணைக் கொடுமையால் கன்னிகளாகவே காலந்தள்ளும் பெண்களின் நிலை என்று எத்தனையோ பிரச்சினைகள் காணப் படுகின்றன.

முடிவுரை

ஆணுக்குப் பெண் அடிமை என்ற எண்ணம் சமுதாயத்தில் வேரோடிக் கால்கொண்டது. விடியலின் அறிகுறியாய்ப் பெண்டிர் கல்வி பெற்றுப் பல பணிகளிலும் பங்குபெற்று வருகின்றனர். அடுப்பூதலே அவள் பணி என்ற அர்த்தமற்ற சட்டம் மெல்ல அகலும். ஆசிரியப்பணி முதல் ஆட்சிப்பணிவரை பெண்ணின் அறிவாற்றலால் மாட்சிப் பெறும். பெண்மை முழு வெற்றி பெற்று உலகினை முன்னேற்றும் சூழல் தொடர்ந்து கொண்டே இருக்கும்.

க. சேகர்
தருமபுரம் ஆதீனக் கலைக்கல்லூரி
தருமபுரம்

ஆசாரக் கோவையும் அன்றாட நெறிகளும்

தமிழர்கள் நாகரிகத்திலும் பண்பாட்டிலும் தலைசிறந்தவர்கள் மட்டுமல்ல தனித்தன்மை மிக்கவர்களும் ஆவர். தமிழரது வாழ்வியல் முறைப்படுத்தப்பட்ட நெறிகளையும் கோட்பாடு களையும் தன்னகத்தே கொண்டது. தமிழர்களது அறவியல் கொள்கைகள் சிறந்தன; உயர்ந்தன; பயனளிப்பன; போற்றுதற் குரியன; என்றும் பின்பற்றத் தகுந்தன.

மனிதன் தன் அன்றாட செயல்களில் ஒழுக்கமும் முறைமை யும் ஏற்று நடந்தால் மட்டுமே அவனிடம் சமூக ஆளுமையும், சான்றாண்மையும் ஒளிவிடும். மாறாக, முறையற்ற வாழ்க்கை தகுதியற்ற மனிதனையே உருவாக்கும் என்பதில் ஐயமில்லை. ஒரு சமூகம் தொன்றுதொட்டுப் பின்பற்றி வந்த அன்றாட நடை முறைகள் இன, மொழி, நாகரிகக் கலப்பால் மாற்றம் பெறுவது இயல்பே. ஆனால், அடிப்படையான அன்றாட நெறிகள் மாற்றம் பெறக் கூடாது. இத்தகு அடிப்படை நெறிகளைக் கூறுகின்ற நூல்களுள் ஒன்றுதான் ஆசாரக் கோவை. இந்நூல் உரைக்கிற அன்றாட நெறிகளின் மீள் பார்வையே இக்கட்டுரை.

ஆசாராக்கோவையும் நூலாசிரியரும்

ஆசாரம் என்றால் நன்முறையில் (ஒழுக்கத்துடன்) நடத்தல் என்பது பொருள். அதாவது உள்ளும் புறமும் சான்றோர் நெறிப்படி தூய்மையாக இருத்தல் ஆகும்.

'ஆசாரம் என்பது கல்வி'

எனும் நான்மணிக்கடிகையின் தொடர் 'வாழ்வின் முறைகளை, நெறிகளை, பழக்க வழக்கங்களைக் கற்று அதன்படி ஒழுகுதல் என்பதைக் குறிக்கிறது. ஒரு சமூகத்தில் ஆன்றோர்களால் சான்றோர்களால் எவை போற்றப்படுகின்றனவோ அவை ஆசாரம் எனக் கூறுவதும் பொருத்தமுடையதே.

''செயற்கை அறிந்த கடைத்து உலகத்து
இயற்கை அறிந்து செயல்''

'நல்ல நூல்களின் வழி வினை செய்யும் திறங்களை முழுதுற அறிந்திருந்தாலும் உலக இயற்கையோடு பொருந்த ஒழுகுதல் வேண்டும்' எனக் குறள் உரைக்கும் நெறியும் இணைத்து எண்ணத் தக்கது.

''அறியாத் தேசத்தாசாரம் பழியார்''

என்பது முதுமொழிக் காஞ்சி. இதனையே ஆசாரக்கோவை பாடலொன்று 'அறியாத தேயத்தானுக்கு நெறிகள் இல்லை' என்கிறது. எனவே, ஒரு சமூகத்தில் தொன்றுதொட்டு மேற் கொள்ளப்பட்டு வரும் முறைமைகள் 'ஆசாரம்' எனப்படும்.

ஆசாரக்கோவையின் ஆசிரியர் பெருவாயின் முள்ளியார். இவர் சங்க காலத்திற்குப் பிற்பட்ட காலத்தில் வாழ்ந்தவர் என்பர். இவர் செய்த இந்நூல் பாயிரம் நீங்கலாக நூறு வெண்பாக்களைக் கொண்டது. இந்நூலில் அன்றாட நெறிகள் பலவும் விளக்கப் பட்டுள்ளன.

வைகறை நெறிகள்

வைகறையாம் துயிலெழுந்து, தான் செய்யும்
நல்லறமும் ஒண்பொருளும் சிந்தித்து வாய்வதில்
தந்தையும் தாயும் தொழு தெழுக என்பதே
முந்தையோர் கண்ட நெறி.

விடிவதற்கு முன் உறக்கத்தினின்று விழித்தெழுந்து தான் செய்ய வேண்டிய நல்லறச் செயல்களையும் சிறந்த பொருள் வருவாய்க் குரிய செயல்களையும் எண்ணி ஆராய்ந்து, விடிந்த பின் தவறாது தாயையும் தந்தையையும் தொழுதெழுந்து, ஒரு செயலைச் செய்தல் வேண்டும் என்பது அறிவுடையோர் சொல்லிய நெறி யாகும். இவற்றுள் தந்தையையும் தாயையும் தொழும் நெறி தொன்மை நெறி மட்டுமல்ல; தமிழர்களின் தலையாய நெறியும் ஆகும். இச்செய்தியை ஆசாரக்கோவை மட்டுமல்ல. பல்வேறு அறநூல்களும் அழுத்தமாகவே கூறிவந்துள்ளன.

மேலும், 'விடியற்காலையில் எழுந்தவன் புறத்தூய்மை செய்து, தான் அறியும் நெறியால் இறைவனைத் தொழுத பின்னரே தன் செயல்களைத் தொடங்குதல் வேண்டும்' என்பது ஆசாரக் கோவை காட்டுகிற நன்னெறிகள்.

உணவு உண்ணும் முறைகள்

இந்நூலில் உணவு கொள்ளுதல் எவ்வாறு என்பதுபற்றி மட்டும் பல பாடல்கள் இடம் பெற்றுள்ளன. 'கூழானாலும் குளித்துக்குடி' என்பது பழமொழி. ஒருவன் கிடைப்பதை உண்டாலும் கூட முறைப்படி உண்ணுதலே சிறந்ததாகும். தமிழர்களின் உணவு உட்கொள்ளும் முறை காரண - காரிய அடிப்படையில் அமைந்ததாகும்.

உண்ணுவதற்கு முன் நன்கு நீராடிய பின் வாயை நன்றாகத் துடைத்து, உண்ணும் கலத்தைச் சுற்றி நீர் தெளித்து உணவை உண்ணுதல் நலம் பயக்கும். இவ்வாறு உண்ணத் தொடங்குதலே உண்டாரெனப்படுவர். உண்ணும் காலத்தில் செய்ய வேண்டிய முறைமைகளைப் பின்வரும் பாடல் தெரிவிக்கிறது.

'உண்ணுங்கால் நோக்கும் திசை கிழக்குக் கண்ணமர்ந்து
தூங்கான் தூங்காமை நன்குஇரீஇ யாண்டும்
பிறிதியாதும் நோக்கான் உரையான் தொழுதுகொண்டு
உண்க உகாமை நன்கு' (20)

உண்ணும்பொழுது ஒருமனதுடன் உண்ணவேண்டும். அவ்வாறில் லாமல் வேறு செயல்களில் உள்ளத்தைச் செலுத்திய வண்ணம் உணவு கொள்ளல் உடல் நலத்தைக் கெடுக்கும். சினம், வெறுப்பு முதலியன விஞ்சியிருக்கும் நேரத்திலும் உணவருந்துதல் கூடாது. முறையற்ற நேரத்தில் உண்ணுவதால் செரிநீர் சுரக்காது. உண்ணும் உணவும் அளவாக இருத்தல் வேண்டும். இதனை வள்ளுவரும்,

அற்றால் அளவறிந்து உண்க அஃதுடம்பு
பெற்றான் நெடிதுய்க்கும் ஆறு.

இன்றைய அறிவியலும் இதனையே வலியுறுத்துகிறது.

உணவு உண்ணுவதில் மற்றொரு சிறந்த நிலை 'பகுத்துண்டு பல்லுயிர் ஓம்புதலாகும். இதனையே திருமூலர் 'யாவருக்குமாம் உண்ணுபோது ஒரு கைப்பிடி' என்பார். மணிமேகலையும் 'உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோர்' எனப் பேசும். இதனை அடியொற்றியதாக இவ்வாசிரியரும் சான்றோர், விருந்தினர், முதியவர், பசுக்கள், பறவைகள், பிள்ளைகள் இவர்களுக்குக் கொடுத்த பின்னரே உண்ணுதல் சிறப்பு என்கிறார். மேலும் உண்ணும் போது பெரியவர்கள் அருகில் இருந்தால் அவர்கள் உண்பதற்குமுன் உண்ணக் கூடாது. அவர்கள் எழுவதற்கு முன் எழக்கூடாது. அவர்களுடன் நெருங்கி அமரக் கூடாது. மற்றும் உண்கின்ற போது கசக்கும் கறிவகைகளை எல்லாம் இறுதியாக

வும், இனிப்பவைகளை முதலிலும், பிறவற்றை இடையாகவும் உண்ணுதலே துய்க்கும் முறையாம்.

செய்யத் தகாதவை - செய்யத் தகுவவை

ஆசாரக் கோவை பல்வேறு சூழலில் செய்யக் கூடிய செயல்களையும் தவிர்க்க வேண்டிய செயல்களையும் முறைப் படுத்தியுள்ளது. அவற்றை மனம், மொழி, மெய் என மூன்றாகப் பிரித்துக் காண்பது பொருத்தமுடையதாகும்.

மனம்

மனம்தான் எல்லா செயல்களுக்கும் காரணம். எனவேதான்,

'புறந்தூய்மை நீரான் அமையும் அகந்தூய்மை
வாய்மையால் காணப்படும்'

'மனத்துக்கண் மாசிலன் ஆதல் அனைத்தறன்
ஆகுல நீர பிற.'

என்பன வள்ளுவர் காட்டும் அறநெறி. ஆசாரக்கோவையில் மனத்தால் எண்ணி ஒழுக வேண்டிய நெறிகள் பல்வேறு பாடல் களில் தொகுத்துரைக்கப்பட்டுள்ளன. ஐயம் இல்லாத அறிவுடைய வர், பொய் கூறல், புறுங் கூறுதல், பிறன் பொருளைக் கவர்தல் பொறாமை என்ற நான்கையும் எண்ணுதல் செய்யார். அவ்வாறு எண்ணவராயினும் மறுமையில் நரகத்தை அடைவர் (38) என்றும், பிறிதொரு பாடலில்,

'கைவாரா இவந்த இடுக்கண் மனம் அழுங்கார்
மெய்யாய காட்சியவர்' (89)

எனும் வரிகள் 'இடும்பைக்கு இடும்பைப் படுப்பர்' எனும் குறளை ஒத்திருக்கிறது. எனவே, தீய எண்ணங்கள் இல்லாத மனம் செம்மனமாகும்.

மொழி

பேசுவது ஒரு கலை. ஒரே செய்தியை ஒவ்வொருவர் சொல்லும் போதும் ஒவ்வோர் உணர்ச்சியைத் தரும். பலரும் பாராட்டத் தக்க முறையில் சொல்வது எளிதன்று. சில சமயம் சொல்லும் முறையினால் இன்னல்கள் ஏற்படுவதும் உண்டு. எவவேதான், 'நாநலனும் எனும் நலனுடமை', 'வேட்ப மொழிவதாம் சொல்', பலசொல் காமுறுவர் மன்ற மாசற்ற சில சொல் தேற்றாதவர்' என்னும் குறட்பாக்கள் சொல்லின் சிறப்பை எடுத்துரைக்கின்றன. ஆசாரக் கோவையின் ஆசிரியர் சொல்லும் முறைமையையும் சிறப்பையும் பல பாடல்களில் பேசுகிறார்.

நல்ல குடியில் பிறந்தவர் மன்னர் முன் செல்வம், கல்வி இவற்றினது சிறப்பையும் மேன்மையும் பகைவரைப் போல விரிவாகச் சொல்லார். ஒருவரிடத்து ஒன்றைப் பேசும் போது விரிவாகப் பேசாமை, அடிக்கடி பலமுறை பேசாமை, பொய்யானவற்றை விரித்துப் பேசாமை, விரிவாக்கிப் பேசாமை, சிறிய தொடர்களால் காலத்துக்கேற்றவாறு சமயமறிந்து பேசுதல் வேண்டும் இவை மொழிபவர் யாரும் அறிய வேண்டிய அரிய நெறிகள் ஆகும்.

மெய்

ஆசாரக் கோவையில் காலையில் எழுவது முதல் இரவு துயில்வது வரை நெறிகள் கூறப்பட்டுள்ளன. உறங்கும் முறை பற்றி இவ்வாசிரியர், படுக்கும் போது இறைவனைக் கைகுவித்து வணங்கி, வடக்குத் திக்கிலும் கோணத் திசையிலும் தலையை வைக்காமல் படுத்துறங்க வேண்டும். இச்செய்தி இன்றைய அறிவியலார் கருத்தோடு ஒத்துள்ளது. ஆனால், இன்றைய மனிதனின் வாழ்க்கை முறை இவற்றைக் கணக்கில் எடுத்துக் கொள்வதில்லை.

மனிதன் தன் உடல் அழகு கெடாது ஒளியுடன் இருக்க வேண்டுமானால் மின்னலின் ஒளியையும் எரி நட்சத்திரத்தையும் வேசியரின் அலங்காரத்தையும் நோக்காத நிலையைக் கொள்ளுதல் வேண்டும். மேலும் சான்றோரின் கால்களில் வீழ்ந்து வணங்குதல். அவன் நன்றென்ற சமயத்தில் நிற்றல், அவரைக் கண்ட அளவில் எழுந்து நிற்றல். இவை மெய்யால் சான்றோர்க்குச் செய்யும் ஆசாரங் கள் ஆகும். இவ்வாசாரங்கள் பலவற்றுள்ளும் சிறந்தவை என்பது எண்ணத்தக்கது. சான்றோர் சூழ்ந்திருக்கும் அவையில் ஒருவன் உடையை அவிழ்த்து அணிதல், செவியைச் சொறிதல், கைகளை உயரத் தூக்கிப் பேசுதல், பெண்களைப் பார்த்தல், பிறர்செவியில் விழுமாறு பேசுதல் கூடாது.

இவ்வண்ணம் அன்றாட நெறிகள் பலவற்றிற்கு இடமாகவும், இனிய சொல் நலமும், பொருள் நலமும் பெற்று, நல்ல ஒழுக்க நெறிகளுக்கு நிலைக்களமாகவும், இளைஞர்கள் இனிது கற்று இன்புறுவதற்கும், பின்பற்றுதற்கும் வாய்ப்பாக ஆசாரக் கோவை அமைந்துள்ளது. இந்நூல் திருக்குறள், நாலடியார் போல இன்று கல்வி கற்கும் இளைஞர்களின் கல்விச் சூழலில் விளங்கித் தோன்றாமல் ஒளி குன்றி நிற்கின்றன. இன்றைய வாழ்க்கை முறைக்கு இந்நூல் இன்றியமையாதது என்பது எல்லோராலும் எண்ணப்பட வேண்டியதாகும்.

து. சேகர்
அறிஞர் அண்ணா அரசினர் கல்லூரி
முசிறி – 621 201

தமிழில் கல்வியியல் சிந்தனைகள்

விரும்பத்தக்க நடைமாற்றத்தை ஏற்படுத்தி மனிதனை மனிதனாக்குவது கல்வி. ஒரு நாட்டின் முன்னேற்றத்திற்கு அடிப்படை கல்வி. அறிவியல் தொழில்நுட்பக் கண்டுபிடிப்புக்களால் கற்பித்தல் முறையில் பல்வேறு புதுமைகள் தோன்றியுள்ளன. இதனால் கற்பித்தல் சிறப்படைந்து கற்போர் முழுப் பயனையும் அடைய முடிகிறது.

கல்வியியல் என்பது (Educational Philosophy), கல்வி உளவியல் (Educational Psychology), கல்விச் சமூகவியல் (Educational Sociology), கல்வி நுட்பவியல் (Educational Technology) கல்வி ஆராய்ச்சி (Educational Research) போன்ற கல்வியோடு தொடர்புடைய பல்வேறு துறைகளையும் உள்ளடக்கியது. தற்போது ஒவ்வொரு துறையும் சிறப்பாக வளர்ந்து வருகிறது. இதனால், கல்வியில் நல்ல அடைவைப் (Achievement) பெற முடிகிறது. தமிழில், இலக்கியப் படைப்பாளிகள், இலக்கணிகள், உரையாசிரியர்கள் ஆகியோரது சிந்தனைகளில் கல்வியியல் கருத்துக்கள் காணப்படுகின்றன. இவை தற்காலக் கல்வியியல் அறிஞர்களின் கருத்துக்களோடு ஒப்பு நோக்கத்தக்கனவாக அமைகின்றன. இக்கட்டுரை திருவள்ளுவர், நன்னூலார், சேனாவரையர் முதலிய மூவரின் கல்வியியல் சிந்தனைகளை ஆராய முற்படுகிறது.

திருவள்ளுவரின் கல்வியியல் சிந்தனைகள்

திருவள்ளுவர் கல்வியின் முக்கியத்துவம் கருதி, கல்வி, கல்லாமை என இரு அதிகாரங்களைக் படைத்துள்ளார். தற்கால கல்வியியல் அறிஞரான பெஞ்சமின் புளூம் (Benjamin Bloom) தன் கல்வியின் வகைத் தொகைப்பாட்டில் (Taxonomy of Education) அறிதல் திறனை அடிப்படையாகக் கொண்டு மூளையின்

பகுதிகளை மூன்றாகப் பிரிகின்றார். இதை அடிப்படையாகக் கொண்டுதான் தற்காலத்தில் கற்பித்தலின் நோக்கங்களை (பொது நோக்கங்கள், சிறப்பு நோக்கங்கள்) உருவாக்கியுள்ளனர். இவரது சிந்தனைகள் திருவள்ளுவரது சிந்தனைகளோடு ஒப்பு நோக்கத்தக்கன.

திருவள்ளுவர்	பெஞ்சமின் புளூம்
கற்க	அறிதல் பகுதி (Cognitive Domain)
கசடற	ஏழுச்சிப் பகுதி (Affective Domain)
நிற்க	செயல்பகுதி (Psychomotor Domain)

1956 - ல் பெஞ்சமின் புளூம் சொன்ன வகைப்பாட்டைப் பல நூற்றாண்டுகட்கு முன்பே திருவள்ளுவர் கூறியிருப்பது நோக்கத் தக்கது. மேலும், திருவள்ளுவர் ஊழ் என்னும் அதிகாரத்தில் கூறும் செய்திகள் தற்காலக் கல்வி உளவியல் அறிஞர்கள் மனத்தைப் பாதுகாக்கக் குறிப்பிடும் தற்காப்பு நடத்தைகளை (Diffence Mechanism) ஒத்துள்ளன.

நன்னூலாரின் கல்வியியல் சிந்தனைகள்

தமிழிலக்கணிகளும் கற்பித்தல் நுட்பம் பற்றிய சிந்தனை களை வழங்குகின்றனர். நன்னூலாரின் கல்வியியல் சிந்தனைகள் தற்காலக் கல்வி உளவியல் அறிஞர்களின் சிந்தனைகளோடு ஒத்துக் காணப்படுகின்றன. நன்னூலார் நூலிலக்கணம், எழுவகை மதம், பத்து குற்றம், பத்து அழகு, முப்பத்திரண்டு உத்தி, ஆசிரியர் வரலாறு, நூல் கற்பித்தலின் வரலாறு, கற்றலின் வரலாறு முதலியனவற்றில் கூறும் செய்திகள் நோக்குதற்குரியன. ஆசிரியர் எப்படிக் கற்பிக்க வேண்டும் என்பதைக் கீழ்வருமாறு கூறுகிறார்.

ஈதல் இயல்பே இயம்புங்காலை
காலமும் கடனும் வாலிதின் நோக்கி
சிறந்துழ் இருந்து தன் தெய்வம் வாழ்த்தி
உரைக்கப்படு பொருள் உள்ளத்து அமைத்து
விரையான் வெகுளான் விரும்பி முகமலர்ந்து
கொள்வோன் கொள்வகையறிந்து அவன் உளங்கொளக்
கோட்டமில் மனதில் நூல் கொடுத்தலென்ப (நன். 36)

இதில் அவர் குறிப்பிடும் ''காலமும் கடனும்'' என்பது கல்வி உளவியல் அறிஞர்கள் குறிப்பிடும் சரியான கற்பித்தல் சூழ்நிலையைக் (Proper Environment) குறிக்கிறது. ''உரைக்கப்படு பொருள் உள்ளத்து அமைத்து'' என்பது பாடத்திட்டத்தைக்

(Lession Plan) குறிக்கிறது. ''விரையான், வெகுளான் விரும்பி, முகமலர்ந்து'' என்பவை அன்போடு முகமலர்ச்சியோடு கற்பிக்க வேண்டும் என்னும் உளவியல் கருத்தோடும் ''கொள்வோன் கொள்வகையறிந்து'' என்பது தனியாள் வேற்றுமைக்கு ஏற்பப் (Individual difference) பாடம் கற்பிக்க வேண்டும் என்னும் கருத்தோடும், ''கோட்டமில் மனதில் நூல் கொடுத்தலென்ப'' என்பது வகுப்பறையில் மாணவர்களை ஆர்வமூட்டி வகுப்பறைச் சூழலுக்குக் கொண்டு வந்து கற்பிக்க வேண்டும் என்னும் உளவியல் உண்மையோடும் ஒப்பு நோக்கத்தக்கதாக அமைகிறது.

கல்வி உளவியல் அறிஞர் இ. எல். தார்ண்டைக் (E. L. Thorn dike) கற்றல் விதிகள் மூன்றைக் குறிப்பிடுகிறார். அவை 1. ஆயத்த விதி (Law of Readiness) 2. பயிற்சி விதி (Law of Exercise) 3. விளைவு விதி (Law of effect). ஒரு கருத்து மனத்தில் நிலைத்திருத்தற்குப் பயிற்சி அவசியம் என்கிறது பயிற்சி விதி. இவ்விதியைக் கீழ்வரும் நூற்பாக்களோடு ஒப்பு நோக்கலாம்.

''ஒரு குறி கேட்போனிருகாற் கேட்பின்
பெருகநூலிற் பிழைப்பாடிலனே'' (நன்னூல் - 42)

''முக்காற் கேட்பின் முறையறிந்துரைக்கும்'' (நன்னூல் - 43)

கல்வி உளவியல் அறிஞர்கள் கற்போரை மூன்று வகைகளாகப் பாகுபாடு செய்கின்றனர்.

1. மெல்லக்கற்போர் (Slow Learners)

2. சராசரியாகக் கற்கும் திறனுடையோர் (Average Learners)

3. துரிதமாகக் கற்போர் (Fast Learners)

இப்பாகுபாடு நன்னூலாரின் தலைமாணாக்கர், இடை மாணாக்கர், கடை மாணாக்கர் பாகுபாட்டோடு ஒப்பு நோக்கத்தக்கது. கல்வி உளவியல் அறிஞர் டாலன்பாக் என்பவரது சோதனை முடிவுகளின் படி கற்றதில் பாதி கற்ற முதல் அரைமணி நேரத்திற்குள்ளாகவே மறந்துபோகிறது. கற்று எட்டு மணி நேரம் கழித்து மூன்றில் இரண்டு பங்கு மறந்துபோகிறது. ஒரு மாதத்தில் கற்றதில் ஐந்தில் நான்கு பங்கு மறக்கப்படுகிறது. இம்முடிவுகளோடு நன்னூலார் கூறும் நூற்பாவின் கருத்தோடு ஒப்பு நோக்கலாம்.

''ஆசான் உரைத்தமைவரக் கொளினும்
காற்கூறல்லது பற்றலனாகும்'' (நன்னூ. - 44)

சேனாவரையரின் கல்வி நுட்பவியல் சிந்தனைகள்

இலக்கிய இலக்கண நூல்களுக்கு உரையாசிரியர்கள் தரும் உரைகள் பல்வேறு கற்பித்தல் நுட்பங்களை வழங்குகின்றன. உவமை கூறல், சொற்பொருள் விளக்கம் தருதல், வினாவிடை முறையில் உரை தருதல், மேற்கோள் தருதல், பிறர் கருத்தை ஏற்றல், தக்க காரணம் காட்டிப் பிறர் கருத்தை மறுத்தல் முதலியவற்றைக் கற்பித்தலிலும் எடுத்தாளலாம். உரையாசிரியர்களின் உரைகள் மாணாக்கர்களுக்குப் பாடம் நடத்தும் பாங்கில் அமைந்துள்ளன. சேனாவரையரின் உரைகள் சிறந்த நுட்பங்களை வழங்குகின்றன.

சேனாவரையர் ஆசிரியப் பண்பு பூண்டு வாழ்ந்தவர். அவரது சொல்லதிகார உரையும் ஓர் ஆசிரியர் பல மாணவர்களுக்குப் பாடம் கற்பிக்கும் பாங்கில் அமைந்துள்ளது. இவரது உரைகூறும் பாங்கு தற்காலக் கல்வி நுட்பவியல் அறிஞர்கள் குறிப்பிடும் நுண்ணிலைக் கற்பித்தல் திறன்களோடு (Micro Teaching Skills) ஒத்துள்ளது.

இவர் நூற்பாக்களுக்கு விளக்கம் தரும்போது மேற்கோள்களை எடுத்தாள்கிறார். பிறர் கருத்துக்களோடு ஒப்பிட்டு முடிவுக்கு வருகிறார். நுண்ணிலைக் கற்பித்தலில் குறிப்பிடப்படும் விளக்குதல் திறனை (Skill of Explaining) போன்றுள்ளது.

வினாக்களை எழுப்பி விடைதரும் பாங்கு *(நூ - 9, 13, 16, 31 ...)* கிளர்வினாத்திறனையும் (Skill of Probing Question) வினாவிற்கு விடை கூறும்போது நன்று சொன்னாய் *(நூ - 92, 204)* என்பது வலுவூட்டிகளைப் (Skill of Reinforcement) பயன்படுத்துதல் என்ற நுண்ணிலைக் கற்பித்தல் திறனையும் ஒத்துள்ளது.

மேற்கண்ட வகையில் தமிழ் இலக்கியப் படைப்பாளிகள், இலக்கணிகள் உரையாசியர்கள் ஆகியோரது சிந்தனைகள் தற்காலக் கல்வியியல் அறிஞர்களின் சிந்தனைகளோடு ஒத்துள்ளன என்பதை அறிய முடிகிறது.

துணை நூல்கள்

1. முனைவர் ந. சுப்பு ரெட்டியார் - தமிழ் பயிற்றும் முறை எஸ்.ஆர். சுப்பிரமணிய பிள்ளை பப்ளிஷர்ஸ், திருநெல்வேலி- 1980.
2. எஸ். சந்தானம் - கல்வியின் உளவியல் அடிப்படைகள், பழனியப்பா பிரதர்ஸ், சென்னை - 1987.
3. மு. வை. அரவிந்தன் - உரையாசிரியர்கள், மணிவாசகர் பதிப்பகம், சென்னை - 1995

4. *செ. செந்தூர் பாண்டியன் - நுண்ணிலைப் பயிற்சி - ஓர் அறிமுகம் மீனாட்சி பதிப்பகம், புதுக்கோட்டை, 1979.*

5. E. G. Vedanayagam - Teaching Technology for College Teachers sterling Publishers Private Ltd., New Delhi - 1998.

6. S. K. Mangal - Fundamentals of Educational Technology - Prakash Brothers Educational Publishers, Ludhiana - 1990.

ந. சேசாத்திரி
தேசியக் கல்லூரி
திருச்சிராப்பள்ளி – 620 001

உளவியல் பகுப்பாய்வு நோக்கில் கலைஞரின் ஆளுமை - ஒரு கண்ணோட்டம்

டாக்டர் கலைஞர் முதல்வர் என்று அன்போடு அழைக்கப் படும் திருக்குவளை முத்துவேலர் கருணாநிதி, நினைவு தெரிந்த நாள்முதல் பெற்ற அன்னையின் மீதுள்ள பாசம் குறையாதவராகக் காணப்படுகிறார். எனவே மேலை நாட்டவர்கள் நோக்கில் அன்னை நாட்டம் உள்ளவராகக் (Mother Fixation) கருதலாம். மனோகரா திரைப்பட உரையாடல்கள் இதற்கு அரண் செய்கின்றன.

''நாம் சிரிக்கும் போது இந்த உலகம் சேர்ந்து சிரிக்கிறது. ஆனால் அழும்போது தனியாகத்தான் புலம்ப வேண்டியுள்ளது என்றார் கலீல் கிப்ரான். முகாரியை மோகனமாக்கும் கலையைக் கற்றவர் கலைஞர். பாளையங்கோட்டைச் சிறையிலிருக்கும் போது, 'காஞ்சித் தலைவன்' படம் கர்நாடக மக்களுக்கும் வரலாற்றிற்கும் இழுக்கினை ஏற்படுத்தாது என ஆய்வுக் கட்டுரை எழுதித் தணிக்கைக் குழுவிற்கு அனுப்பி அந்த மாநிலத்திற்காகத் திரை உரிமை வாங்கிய தீரன்லாப் வெங்கட்ராமய்யர் அச்சத்தைப் போக்கினார். சிக்கல் ஆளுகையில் வல்லவர் என்ற பாராட்டினைப் பெற்றார். (An expert in Crisis Management)

மனிதன் உடலால் வளர்ந்த அளவிற்கு இன்னும் உள்ளத்தால் வளரவில்லை என்பது ஃபிராய்டின் வாதம். எடிப்பஸ் சிக்கல், எலக்ட்ரா சிக்கல் ஆகியனவற்றைக் கடந்து அவன் வர இன்னும் பலநூறு ஆண்டுகள் ஆகும் என்றார். இந்தக்கருத்து, கலைஞருக்கும் உடன்பாடு. இவருடைய பலபடைப்புக்களில் இது வெளிப்படு வதைக் காணலாம். தன்னைப் பற்றிச் சமுதாயம் கொண்டிருக்கும் மதிப்பு மறைந்து விடுமோ என்று கவலைப்படவில்லை. சமுதாயத்தில் நிகழ்வனவற்றை அப்படியே நிழற் படமாக்கினாரே யன்றி ஓவியமாகத் தீட்டவில்லை. ''மறக்க முடியுமா?'' என்ற

திரைப்படம் எடிப்பஸ் சிக்கலுக்கு சிறந்த எடுத்துக்காட்டு. 'திரும்பிப்பாரை'யும் இந்தப் பட்டியலில் சேர்த்துக் கொள்ளலாம். ஸ்டாலின் சீனிவாசன், ஜி. டி. சாஸ்திரி போன்ற தணிக்கை அதிகாரிகளால் பாராட்டப்பட்டிருக்கிறார். வருவிசைப் புனலைக் கற்சிறை போல எதிர்த்து நிற்கும் ஆற்றல் இவர் ஆளுமையின் தனித் தன்மை. அண்ணாவின் மறைவுக்குப்பிறகு இவரைத் தனி மரமாக்கிச் சென்றவர்கள் எத்தனையோ பேர். அந்தச் சூழலிலும் குடியாட்சி மரபுக்கு மதிப்பளிக்கும் கட்சி என்று உலக நாடுகள் போற்றும் வகையில் தன் அமைப்புக்குப் பெருமை தேடித் தந்தார்.

ஔவையாரைப் போல் ''நான் நான்கு தருகிறேன் நீ மூன்று தா'' என்று பிள்ளையாரிடம் வரம் கேட்டோ அல்லது கலை மகளால் நாவில் எழுதப்பட்டோ புலமை பெறவில்லை. கன்னிமாரா நூலகத்தில் பல ஆண்டுகள் கூட்டுப்புழுப் பருவத்தில் இருந்து பன்னூற் புலமை பெற்றார். அண்ணா, எம். ஜி. ஆர், நாவலர் ஈ. வெ. கி. சம்பத் ஆகியோருக்கு ஈடு கொடுப்பதென்றால் அவ்வளவு எளிய செயல் இல்லை. விட்டுக் கொடுக்கும் மனப் பான்மை இவரிடம் உள்ள மற்றுமொரு கூறு ஆத்திகராகிய கே. பி. சுந்தராம்பாளுக்காகத் தன் போக்கைச் சிறிது மாற்றிக் கொண்டு 'பூம்புகார்' படத்தை வெற்றியடையச் செய்தார். 'குறத்திமகன்' என்ற திரைப்படத்தைத் தடை செய்ய வேண்டும் என்று பலரும் வற்புறுத்தியபோது முற்றிலுமாக மறுத்ததோடு திரையரங்குகளில் சட்டம் ஒழுங்குச் சிக்கல் வராமல் பார்த்துக் கொண்டார். இலட்சிய நடிகர் 'எஸ். எஸ். இராசேந்திரன்' எதோ காரணத்திற்காகக் காலம் தாழ்த்தியபோது அவரைத் தொல்லைப்படுத்த விரும்பாமல் விபூதி பூசத் தொடங்கிய சிவாஜி கணேசனை நடிக்கச் சொல்லிக் குறவஞ்சியை எடுத்து முடித்தார்.

அமெரிக்கச் சிந்தனையாளர் ஜான்தியூவியின் நோக்கில் இவர் ஒரு நடைமுறைவாதி (Pragmatist). வெற்றியை அடைவதற்குரிய வழிகளைக் கண்டுபிடித்துக் கனியைப் பறிக்க வேண்டும் என்பது தான் இவருடைய குறிக்கோள். பெட்டைப் புலம்பல் பிடிக்காத ஒன்று இவருக்கு. குளித்தலை, தஞ்சாவூர் ஆகிய ஊர்களில் நின்று வெற்றி பெறுவது எளிய செயலன்று. கட்சி வெற்றி பெற வேண்டும் என்பதற்காகக் கபாலீச்வரர் மீது சத்தியமும் செய்தவர். தனக்கு எதிராகப் போட்டி போடுகிறவர் கலைஞர் என்று தெரிந்த வுடன் இந்திராகாந்தி தஞ்சை நாடாளுமன்றத் தொகுதியில் போட்டியிடும் எண்ணத்தையே விட்டுவிட்டார் என்பார்கள். ''சிங்கமாக இருக்க வேண்டிய நேரத்தில் சிங்கமாகவும், நரியாக

இருக்கவேண்டிய சூழலில் நரியாகவும் இரு'' என்று மேக்கிய வல்லி சொன்ன இலக்கணத்திற்கு இலக்கியம் இவர். (Be Lion and a Fox)

''நான் தான் ஆண்டவன் என்னைக் கேளுங்கள் பதில் சொல்கிறேன் என்று சட்டசபையில் உரைத்தமை, ''நான் பிக் பாக்கெட் இல்லை! எம்ப்டி பாக்கெட்'' என்று பராசக்திக்காக உரையாடல் எழுதியமை, ''நாதசுரத்தை உருக வாசிக்க எடுத்துச் சென்றானோ உருக்கி வாழக்கொண்டு சென்றானோ'' என்று கூறியமை, ''ஒருவர் இதழை அன்போடு கொடுக்கும் போது அதனைப் பெற்றுக் கொள்வதுதானே நம் கடமை'' என்று திருச்சியில் தினகரன் பதிப்புத் தொடங்கும்போது கூறியமை, இந்த ஆட்சியைப் பற்றிப்புரிந்து கொள்ளவே முடியவில்லை! ஒருபக்கம் திருவிடை மருதூரில் திருவாசகத்தின் பெருமை. 'மற்றொரு பக்கம் திருச்சியில் தேவாரத்தின் கொடுமை' என்று பேசியமை, ''கண்ணே பரிமளா உன் கூந்தல் ஓரணா நாணயத்தின் விளிம்புகளைப் போல் வளைந்து வளைந்து காணப்படுகின்ற அழகே அழகு'' என்று புதையல் படத்திற்காகச் சிவாஜி கணேசனின் உதட்டிற்கு ஏற்ற வண்ணம் உவமையில் புரட்சி செய்தமை இவருடைய நகைச் சுவைத் திறத்திற்குச் சில சான்றுகள். வின்ஸ்டன் சர்ச்சில், பெர்னாட்ஷா, வால்ட் விட்மேன் ஆகியோருடைய நகைச்சுவை போலக் காலம் கடந்தாலும் நினைத்து நினைத்துச் சிரிக்கவும் சிந்திக்கவும் வைப்பது இவருடைய நகைச்சுவை. ''பாராசக்தி இல்லையேல் திரிசூலம் இல்லையேல்'' என்ற வெளிப்பாட்டில் ஆயிரம் விளக்கங்கள் பொதிந்து கிடக்கின்றன. ''என் பெயரில் உள்ள நீதியை மதி எடுத்துக் கொண்டார்'' ''நீதி கேட்டு நெடும் பயணம்'' ஆகியன எல்லாம் சொற்பொருளியல் நோக்கில் நினைக்கத்தக்கன. ஒரு படைப்பாளியின் உவமை, உருவகம் ஆகியன அவருடைய உள்ளத்தைப் பளிச்சென்று காட்டக்கூடியவை என்று கேம்பிரிட்ஜ் பல்கலைக் கழகத்தின் ஆய்வறிஞர் ஜி. ஏ. மில்லர் கூறியிருக்கிறார். மற்றவர்களுடைய உவமிக்கும் திறனைக் காட்டாற்று வெள்ளத்திற்கு ஒப்பிட்டால் இவருடைய தனித் தன்மைக்குக் காவிரியாற்றைக் கூறலாம்.

தமிழக மக்களின் நலத்திற்காகச் சில நேரங்களில் நாணல் போல் வளைந்தும் இருக்கிறார். உலக வங்கிக் குழு ஒன்று மாநிலத்திற்கு நிதியுதவி செய்வதற்காகத் தன் வருகையை அறிவித்தது. அதற்குரிய கருத்துக்கள், ஆவணங்கள், கோப்புக்கள் துல்லியமாகக் கிடைக்கவில்லை. பலகோடி ரூபாயை இழக்கவும்

விரும்பவில்லை. எனவே தன் இருக்கையை விட்டு இறங்கி அவர்களின் வருகைக்காக வாசலில் காத்திருந்தாராம். காரிலிருந்து இறங்கியவுடன் எங்கே கையெழுத்திட வேண்டும் என வினவினாராம் அந்த அலுவலர். ''மக்களால் மதிக்கப்பட்டுத் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு மாநிலத்தின் முதலமைச்சர், நியமனம் செய்யப்பட்ட ஓர் அலுவலருக்காகக் காத்திருக்கிறார் என்றால் இதைவிட வேறு என்னவேண்டும்? மக்களுக்கு உதவத்தானே உலகவங்கி?'' என்று உளமாரக் கூறினாராம். இந்த வரலாற்று நிகழ்ச்சியை நெகிழ்வோடு சொன்னவர் இந்தியன் எக்ஸ்பிரஸ் மற்றும் தினமணியின் முன்னாளைய சிறப்பு நிருபர் ஏ. கோபாலன் ஆவார். இவர் சிறுநீரகக் கோளாறினால் அவதிப்பட்டு மரணப் படுக்கையில் இருந்த வேளையில் முதலமைச்சராகப் பதவியில் உள்ளபோது நேராகச் சென்று பார்த்துப் பண உதவியும் செய்திருக்கிறார் கலைஞர். ''போர் வாளைத் தொலைத்து விட்டீர்களே'' என்று குறிப்பாக முன்பொரு கோபாலன் கேட்ட தற்கு, ''அதனை அருங்காட்சியகப் பொருளாக ஆக்கி விட்டேன்'' என்று விடையிறுத்தார் இவர். ''விலைமதிக்க முடியாத பொருள் எனும் நோக்கில்தான் அவர் அப்படிச் சொல்லி இருப்பார் என்று வை. கோவும் சினவாமல் சிரித்துக் கொண்டே கூறினாராம். திசை மாறிய பறவைகளைக் கூடப் பாசப் பறவைகளாகக் கருதும் பாங்கு கலைஞரிடம் காணலாம்.

பாட்டுக்கொரு புலவன் பாரதியிடம் இவருக்கு இனம் புரியாத மோகம் உண்டு (Obsession). ''நெஞ்சுக்கு நீதி என்ற தலைப்பே பாரதியிடமிருந்து எடுத்ததுதானே! பாலைவன ரோஜாக்களில் ''சின்னஞ்சிறு கிளியே'' என்ற பாடலை இணைத்திருக்கிறார். விரும்பியிருந்தால் இக்காலக் கவிஞர்களை விட்டு எழுதச் சொல்லியிருக்கலாம். இது அவருடைய தனித்த நாட்டம் ''புதையல்'' படத்தில் ''நல்ல காலம் பொறக்குது'' என்பதற்கு உரிய சூழலைத் தந்திருக்கிறார். இரண்டாவது உலகத்தமிழ் மாநாட்டில் திறக்கப் பட்ட இருபத்திரண்டு சிலைகளில் பாரதியின் சிலையும் ஒன்று அதுவும் திருவல்லிக்கேணிக்கு அருகிலேயே அமைக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது. பாரதி விழாக்களில் கலந்து கொண்டு கவிதை பாடியிருக்கிறார். அதைப்போலப் பூம்புகாரின் மீதுள்ள பற்று எல்லைகளைக் கடந்தது. தன்னை மையமாக வைத்துச் சோ . ராமசாமி எழுதிய ''வாஷிங்டனில் நல்லதம்பியை''ப் படித்து விட்டுச் சிற்றம் கொள்ளாமல் சிரித்து மகிழ்வாராம். சிறப்பு ''ழ'' கரத்தைச் சரியாக உச்சரிக்கும் ஒரே படைப்பாக நல்லத்தம்பியைச் சித்தரிக்கிறார் சோ. அதையெல்லாம் மீண்டும் மீண்டும் படித்து

மோகம் கொண்டு, அவர் மீது பகையை வளர்க்காமல் நட்பை அரும்பச் செய்திருக்கிறார் கலைஞர்.

தமிழகத்தைத் தாண்டிப் பெரிய பதவிகளில் இருக்க வேண்டும் என்ற எண்ணம் இவருக்குக் கிடையாது. பொது வாகவே 'மொழிபெயர் தேஎம்' என்றாலே இவருக்கு ஒவ்வாமை வந்து விடும். அவர் விரும்பியிருந்தால் அத்தகைய சூழலை எளிதில் உருவாக்கிக் கொண்டிருக்க முடியும். தமிழகத்திற்குள்ளே வளைய வரும் இயல்புதான் இவரிடம் மிகுதியாகக் காணப்படுகிறது (Nostalgia) தமிழ் மொழி, தமிழ்நாடு, தமிழ்மக்கள் இவர்கள்தான் இவருக்கு எல்லாம். தன் பிறந்த மண்ணிற்கு அருகில் இருக்கும் திருவாரூர் திருத்தலத்தில் உள்ள அசையாத் தேரை ஓடச் செய்து நாத்திகப் பக்தர் என்ற சிறப்புப் பெயரைப் பெற்றார். குடமுருட்டியும், படித்த பள்ளியும், 'பேபி டாக்கீஸீம்' அவருக்குப் பழைய நினைவுகளைக் கொடுத்து விடுகின்றன.

தன்னைக் கடவுளாகக் கலைஞர் ஒருபோதும் கற்பனை செய்து கொண்டதில்லை. மாக்சிம் கார்க்கி கூறியதைப் போல மனிதனாகப் பிறந்ததையே மாண்பாக நினைக்கிறார். ஒரு பல்லைக்கழகத்தின் படிக்கட்டை மிதிக்காமல், வெள்ளிக் கரண்டியுடன் பிறக்காமல், செக்குமாட்டுச் சிந்தனையில் உழலாமல், வாழ்க்கையையே போராட்டமாக ஆக்கிக் கொண்ட கலைஞரின் ஆளுமை வருங்கால இளைஞர்களால் பயிலப்பட வேண்டிய ஒன்று. ஐம்பதாண்டுக் காலம் அரசியலில் வேரூன்றி விழுதுகள் விடுத்த இந்த ஆல மரத்தின் நிழலில் குளிர்காய்பவர்கள்தான் எத்தனைப் பேர்?

புராண காலத் தசரதனை அவனுடைய வாய்மைக்காகப் போற்றுகிறார்கள். இக்காலத்தில் வாழ்ந்த நேருவை, நவபாரதத்தின் சிற்பியாகத் துதிக்கிறார்கள். பெரியரைப் பகுத்தறிவுப் பகலவன் என்று புகழ்கிறார்கள். அறிஞர் அண்ணாவை மனித நேயத்தின் படிமம் என்பர். டாக்டர் ராதா கிருஷ்ணனை இந்தியத் தத்துவத்தின் உரைகல் என்றனர். மக்கள் திலகம் எம். ஜி. யாரைப் பொன்மனச் செம்மல் என்று செப்புகிறது உலகம். காமராஜரைக் கல்விக் கண் திறந்த காருண்யவான் என்பர். கலைஞரை என்ன சொல்லி அழைப்பது?

தூ. சேதுபாண்டியன்
மதுரை காமராசர் பல்கலைக்கழகம்
மதுரை – 625 021

தெருக்கூத்துக் கலைஞர்களின் இரகசியமொழி

மதுரை காமராசர் பல்கலைக்கழகத் தமிழியல் துறை 1987 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் முதல் வாரம் தொடங்கிப் பத்துநாள் தெருக் கூத்துப் பயிற்சி முகாம் ஒன்றினை நடத்தியது. அப்பயிற்சி முகாமில் பங்கேற்ற போது பயிற்றுநர்களாக வந்திருந்த தென்னாற்காடு மாவட்டத்தைச் சேர்ந்த புதுப்பாக்கத்துத் தெருக் கூத்துக் கலைஞர்கள் தங்களுக்குள் உரையாடும்போது மற்றவர் களுக்குப் புரியாதவாறு ஏதோ பேசிக்கொள்வதாக இக் கட்டுரையாளர் உணர்ந்தார். அதன் பின்னர் அக்குழுவினர் தனியே பேசிக்கொண்டிருக்கும் போதெல்லாம் அவர்கள் கவனிக்காத வகையில் அவர்களருகில் நின்றபடியே கவனம் செலுத்திப் பார்த்தபோதும் ஏதும் புரியாத நிலையே எஞ்சியது. இறுதியில் அந்தக் குழுவில் ஆர்மோனியம் வாசிக்கும் கலைஞரிடம் சற்று நெருங்கிப் பழகித் தான் கட்டியிருந்த விலைகுறைந்த எலக்ட் ரானிக் கைக்கடிகாரத்தை அன்பளிப்பாகக் கொடுத்துச் சினேக பாவத்துடன் அவரிடமிருந்து சிறிது சிறிதாகச் சேர்த்த தரவுகளே இந்த ஆய்வுக் கட்டுரைக்குரிய முதனிலைச் சான்றாகின்றன. இத்தரவுகள் முழுமை பெற்றன என்று கூறவியலாது. இருப்பினும் இத்தகைய துறையில் இந்த ஆய்வு ஒரு தொடக்கமாக- ஒரு முன்னோட்ட ஆய்வாக - அமைவதால் தரவுகளின் அளவு ஒரு பொருட்டாகாது.

தெருக்கூத்துக் கலைஞர்கள் பயன்படுத்தும் இரகசிய மொழியைச் சமுதாயமொழியியல் கண்ணோட்டத்தில் விளக்க முனைகிறது இக்கட்டுரை.

தமிழ் மரபிலக்கணங்களில் குழூஉக்குறி என்ற கலைச்சொல் இடம் பெறுகிறது. இக்கலைச் சொல்லுக்கு உரையாசிரியர்கள்

'ஒவ்வொரு கூட்டத்தார் யாதாயினும் ஒரு காரணம் பற்றி ஒரு பொருளினது சொற்குறியை ஒழித்து வேறொரு சொற்குறியாற் சொல்வது' என்று விளக்கம் தருகிறார்கள். இதற்கு உரையாசிரியர்கள் கூறும் எடுத்துக்காட்டு பொன்னைப் பொற்கொல்லர் 'பறி' 'என்பதுதான். மரபிலக்கணங்கள் குழூஉக்குறியெனக் குறித்தவை தான் இன்று பலதரப்பட்ட மக்களிடம் காணப்படும் சங்கேதக் குறியீடுகளாகத் திகழ்கின்றன எனலாம். அதன் வளர்ந்த நிலையே தெருக்கூத்துக் கலைஞர்கள் பயன்படுத்தும் இரகசிய மொழியாம்.

தமிழகத்தில் தமிழே பெரும்பான்மையோரின் தாய் மொழியாக விளங்குகிறது. தமிழைத்தவிரத் தெலுங்கு, கன்னடம், உருது, மலையாளம், மராத்தி போன்ற சில சிறுபான்மையினரால் பேசப்படும் மொழிகளும் தமிழ்நாட்டில் உள்ளன. இவையாவும் மொழி என்று அனைவராலும் ஒப்புக்கொள்ளப்பட்டவை. இவை தவிர மாணவர்கள் வியாபாரிகள் தரகர்கள் என ஒவ்வொரு குழுவினரும் தமக்குள் இரகசியமாகக் கருத்துப்பரிமாற்றம் செய்து கொள்வதற்காக ஓர் இரகசியமொழியைப் பயன்படுத்து கின்றனர். இரகசியமொழி (Argot) வேறு; தொழில் வழக்கு (Occupational dialect) வேறு; மக்கள் தொழில் வழக்கினைப் பயன்படுத்தும் போது தம் தாய்மொழியைப் பயன்படுத்துவது போல் எவ்விதக் கவனமுமின்றிப் பயன்படுத்துவர். ஆனால் இரகசிய மொழியைப் பயன்படுத்தும்போது தம் தாய் மொழியிலிருந்து வேறுபட்டது என்ற கவன உணர்வோடு பயன்படுத்துவர் என இவை இரண்டையும் வேறுபடுத்திக்காட்டுவர் இன்றைய மொழியியல் அறிஞர்கள்.

இரகசிய மொழியை மூன்று வகையாகப் பாகுபாடு செய்யலாம் - முதல் வகை இரகசிய மொழியில் தொடர் முழுவதும் மற்றவர்களுக்குப் புரியாத வகையில் அமைந்திருக்கும். இரண்டாவது வகையில் செயலிகள் (Functors) பெரும்பாலோர் மொழியான தமிழிலிருந்து எடுத்துக் கொள்ளப்பட்டுப் பதிலிகள் மட்டும் மற்றவர்களுக்குப் புரியாத வகையில் சொற்கள் அமைந் திருக்கும். மூன்றாவது வகை இரகசிய மொழியில் தமிழ்ச் சொற்களே பயன்படுத்தப்படும். ஆனால் அவை குறிக்கும் பொருண்மை மட்டும் மாறுபட்டிருக்கும். இரு பொருள் தருவனவாக - தமிழ்மட்டும் அறிந்தோர்க்கு ஒரு பொருளும் இரகசிய மொழி அறிந்தோர்க்கு வேறொரு பொருளும் தரும் வகையில் -- அமைந்திருக்கும். தெருக்கூத்துக் கலைஞர்கள் பயன்படுத்தும் இரகசிய மொழி இவற்றுள் இரண்டாவது

வகையைச் சார்ந்ததாக உள்ளது. இன்றைய மொழியியலார் நோக்கில் ஒரு மொழியின் செயலிகள் மாறுபடாமல் இருக்கப் பதிலிகள் மட்டும் மாறிவரும் தன்மைகொண்டதே இரகசிய் மொழியாம். தெருக்கூத்துக் கலைஞர்களின் இரகசிய மொழியில் தமிழ்மொழியின்கண் காணலாகும் செயலிகள் அப்படியே இருக்கப் பதிலிகள் மட்டும் மாற்றப்பட்டுள்ளன. இதனைப் பின்வரும் எடுத்துக்காட்டு விளக்கும்.

வெக்குள் கசமாயிருக்கு -- வயிறு பசியாயிருக்கு

இத்தொடரில் வெக்குள் என்பதும் கசம் என்பதும் முறையே வயிறு பசி ஆகிய பதிலிகளின் செயலைச் செய்ய; ஆக என்ற வினையடை விகுதியும் இருக்கு என்ற இருப்புப் பொருண்மை உணர்த்தும் இணைப்பு வினையும் தமிழ்ச் செயலிகளாகவே உள்ளதையும் காணலாம்.

இவ்வாறு செயலிகள் மட்டும் அடிப்படை மொழியின தாகவே இருக்கப் பதிலிகள் மட்டும் கொண்ட ஒன்றனை ஒரு மொழியெனக் கூறமுடியுமா? என்ற ஐயம் தோன்றுவது இயல்பே. கிரியோல் (Creole) என்பதை ஒரு மொழியெனக் கருதலாம் எனில் இதனையும் ஒரு மொழியாகக் கருதலாம். மேலும் ஒரு மொழிக்குரிய ஆக்கப்பண்பு (Creative nature) இந்த இரகசிய மொழியில் காணப்படுவது காரணமாகவும் இதனை ஒரு மொழி எனலாம். இதண்கண் காணப்படும் ஆக்கப்பண்பினைப் பின்வரும் சான்று விளங்கும்.

பீர் என்ற சொல் நல்ல என்ற பொருளுடையது. இது பீரா முருசு என நன்றாகப் பேசு என்ற பொருளிலும்; பீர் மேனி என வெளிநாட்டு மதுவகை என்ற பொருளிலும் பயன்படுத்தப்படு வதைக் காணலாம். காஞ்சாலு என்ற சொல் கருவாடு என்ற பொருள் தரும். இச்சொல்லை அடிப்படையாகக் கொண்டு மீனைக் குறிக்கப் பச்சைக் காஞ்சாலு என்ற தொடரை உருவாக்குகின்றனர்.

இரகசிய மொழிபற்றிக் காணும்போது இன்றைய வியா பாரிகள், தரகர்கள், குற்றவாளிகள், மாணவர்கள் போன்றோர் பயன் படுத்தும் இரகசிய மொழியில் ஏதேனும் ஒரு துறைசார்ந்த சொற்களுக்கு மட்டும் பதிலிகளைப் பயன்படுத்தும் நிலையே காணப்படுகிறது. ஆனால் தெருக்கூத்துக் கலைஞர்கள் பயன் படுத்தும் மொழியில் ஏறத்தாழ அடிப்படைச் சொற்கள் (Basic Vocabulary) எல்லாவற்றிற்குமே மாற்றுச் சொற்குறிகள்

காணப்படுகின்றன. உடலுறுப்புக்கள் உணவுவகைகள் மாற்றுப் பெயர்கள் எண்ணுப்பெயர்கள் என அனைத்து வகைச் சொற் களுக்கும் பதிலிகளைக் காண முடிகிறது. பின்வரும் சான்றுகள் இதனை விளக்கும்.

சொற்கள்	பொருள்
மாற்றுப் பெயர்கள்	
எமேரி	நான் என்
ஒமேரி	நீ உன்
அமேரி	அவன்
உடலுறுப்புக்களின் பெயர்கள்	
வெக்குள்	வயிறு
நமுரி	முடி
கங்கர	கண்
கோஷம்	ஆண்குறி
கீஞ்சாலு	பெண்குறி
சாயம்	மார்பகம்
வாகரு	வாய்
உணவுப்பொருள்கள்	
மாயி	சோறு
சருவ	எண்ணெய்
வண்டி	பலகாரம்
சீராலு	தேநீர்
காரபாணி	குழம்பு சாம்பார்
எண்ணுப்பெயர்கள்	
ஏகம்	ஒன்று
இணையம்	இரண்டு
முகாரம்	மூன்று
சவுக்கம்	நான்கு
கரம்	ஐந்து
ஆறுமுகம்	ஆறு
கன்னி	ஏழு
திக்கு	எட்டு
நவகிரஹம்	ஒன்பது
இராவணம்	பத்து

பீர்	நூறு
வையிரி	ஆயிரம்

தொடர்பியல் நோக்கில் ஒரு மொழியின் தன்மையை இரு வகையாகப் பாகுபாடு செய்வர். ஒரு குழு மற்றொரு குழுவுடன் தொடர்புகொள்ளப் பயன்படும் மொழி, ஒரு குழு தமக்குள் தொடர்புகொள்ளப் பயன்படும் மொழி எனப்பாகுபாடு செய்வர். தெருக்கூத்துக் கலைஞர்களின் இரகசிய மொழி இரண்டாவது வகைத் தொடர்பாகிய தமக்குள் தொடர்புகொள்ளவே (Intra group communication) பயன்படுகிறது. தெருக்கூத்துக் கலைஞர்கள் அனைவருக்கும் தாய்மொழி தமிழேயாகும். அனைவரும் பொதுவாக வீட்டிலும் வெளியிலும் தமிழிலேயே பேசுகின்றனர். ஆனால் தேவைப்படும்பொழுது இரகசிய மொழிக்கு மாறிவிடு கின்றனர். இம் மொழி மாற்றம் (Code Switching) பின்வரும் சூழல்களில் நிகழ்கின்றது:

1. நிகழ்ச்சிகளை ஏற்பாடு செய்ய வருபவர்கள் முன்னிலையில் தமக்குள் வந்திருப்பவரின் பொருளாதார சமூக நிலை குறித்தும் நிகழ்ச்சிக்குரிய ஊதியம் குறித்தும் பேசும் போது இரகசிய மொழியைப் பயன்படுத்துகின்றனர்.
2. நிகழ்ச்சி ஏற்பாடுசெய்தவர்கள் இவர்களுக்கு அளிக்கும் உணவின் தரம் பற்றிப்பேசும் போது இரகசிய மொழியைப் பயன்படுத்துகின்றனர்.
3. நிகழ்ச்சி நடைபெறும் போது நிகழ்ச்சியை முடிக்கும் நேரம் குறித்துப் பேசும் போதும்; சக கலைஞர்களின் நடிப்பு பாட்டு அடவு போன்றவற்றை விமர்சனம் செய்யும் போதும் இரகசிய மொழியைப் பயன்படுத்துகின்றனர்.
4. தம் குழுவில் ஒரு கலைஞர் வரவியலாத நிலையில் அவருடைய வேஷத்தை வேறொருவர் ஏற்கும் சூழலில் அதனைக் குறித்து உரையாடும் பொழுதும் இரகசிய மொழியைப் பயன்படுத்துகின்றனர்.

தெருக்கூத்துக் கலைஞர்கள் பயன்படுத்தும் இந்த இரகசிய மொழிப் பயன்பாட்டின் நோக்கம் தம் குழுவினர் தவிர ஏனையோர் அறியாதவகையில் தொடர்பு கொள்வதேயாகும். இதன் அடிப் படையில் பார்த்தால் இன்று நுகர்வோருக்குப் புரியாத வகையில் வியாபாரிகள் பேசிக் கொள்ளும் சங்கேதக் குறிகள் போலவே தெருக்கூத்துக் கலைஞர்களின் இரகசிய மொழியும் உள்ளது. இதனால் தெருக்கூத்து என்னும் கலைவடிவமும் இன்று வியாபாரப் பொருளாகி வருகிறது என்பது புலப்படுகிறது.

இ. சேனாவரையன் & இரா. சந்திரசேகரன்
வி. எஸ். பி. ஜானகியம்மாள் கலை & அறிவியல் கல்லூரி
கோயம்புத்தூர் – 42

குழந்தைகளும் தொலைக்காட்சி நுகர்வோர்வுக் கல்வியும்

தொலைக்காட்சி ஊடகக் கருவியையும், கணிப்பொறி அமைப்பையும் தனிமனித, சமூக வளர்ச்சிக்குப் பயன்படுத்திக் கொள்ளுதல் என்பது இன்றியமையாத தேவையாகும். இன்றைய வாழ்க்கை முறையையும், எதிர்கால வாழ்க்கை, முறையையும் நிர்ணயம் செய்யும் கருவியாக, தொலைக்காட்சி செயல்பட்டு வருகிறது. இது குறித்து உலகளவில் மக்கள் தகவலியல் அறிஞர்கள் பல்வேறு ஆய்வுகளை மேற்கொண்டு வருகின்றனர். இத்தகைய ஆய்வுகளில் ஒன்று குழந்தைகளின் எதிர்காலமும், தொலைக்காட்சி செயல்பாடும் குறித்தது ஆகும்.

அமெரிக்க ஐக்கிய நாடுகளில், தொலைக்காட்சி நடைமுறைக்கு வந்த 30 ஆண்டுகளில் அரசியல், கல்வி, பங்கு சந்தை, செய்திகள், கலாச்சாரம், சமூக வாழ்க்கை, குடும்ப வாழ்க்கை ஆகியவற்றில் தனிச் சிறப்புடன் பெருமளவு திருத் தங்களை ஏற்படுத்தியுள்ளது. குறிப்பாக, ஒரு குடும்பத்தின் அங்கத்தினர்கள் ஒரு நாளைக்கு 2 ½ மணி முதல் 5 மணி வரைத் தொலைக்காட்சியைப் பார்ப்பதற்கென .நேரத்தைச் செலவிடுவ தாகக் கணக்கிடப் பட்டுள்ளது. மேலும், அமெரிக்கக் குழந்தைகள் உயர்நிலைப் பள்ளிகளில் வகுப்பறையில் இருப்பதைவிட தொலைக்காட்சி முன்பாகவே தமது நேரத்தை அதிகமாகச் செலவிடுகின்றனர் என்பதையும், தொலைக்காட்சி அவர்களின் தினசரி நடவடிக்கைகளில் ஒன்றாக அமைந்துள்ளது என்பதையும் ஆய்வாளர்கள் கண்டறிந்துள்ளனர்.

மேலும், அமெரிக்கக் குழந்தைகளை எடுத்துக்கொண்டால் வருடத்திற்கு 10,000 கொலைகள், 17,000 கொள்ளைகள், 10,000 பாலியல் பலாத்காரங்கள், 17,000 விவாகரத்துக்கள் போன்ற

வற்றைத் தொலைக்காட்சி நிகழ்ச்சிகள் மூலம் பார்ப்பதாகக் கணக்கெடுத்துள்ளனர் ஆய்வாளர்கள். இதுபோன்ற நிகழ்ச்சி களினால் குழந்தைகள் வன்முறை, ஆபாசம் ஆகியவற்றைப் பார்த்து முகம் சுளிக்கும் நிலைமாறி, வேடிக்கைப் பார்க்கும் மனோநிலையைப் பெற்றுள்ளனர். இதனால் தொலைக்காட்சி என்பது அமெரிக்கக் குழந்தைகளின் தினசரி நடவடிக்கைகளில் மிக முக்கியப் பங்கை வகிக்கிறது. தொலைக்காட்சியில் ஒளிபரப் பப்படும் விளம்பரங்கள் குழந்தைகளை எளிதில் கவருகின்றன என்பதும், நுகர்வோர் மனநிலையை ஏற்படுத்துகின்றன என்பதும் அமெரிக்கத் தகவலியல் ஆய்வாளர்கள் கண்டறிந்துள்ளனர். இத்தகைய விளைவை எற்படுத்தும் தொலைக்காட்சியை எவ் வாறு திட்டமிட்டுப் பயன்படுத்துவது என்னும் அறிவைப் புகட்ட வேண்டும் என ஆய்வாளர் ஆண்டர்சன், ''குழந்தையும் தொலைக் காட்சியும்'' என்னும் ஆங்கிலநூலில் குறிப்பிட்டுள்ளார். இத்தகைய முன்னுதாரணத்துடன் தமிழ்த் தொலைக்காட்சியின் செயல்பாடும் - இச்செயல்பாடு குழந்தைகளிடத்தில் ஏற்படுத்தும் விளைவுகள் - தீய விளைவுகளாயிருப்பின் களைவதற்கான வழி முறைகள் - தொலைக்காட்சியைத் திட்டமிட்டுக் காண்பதற்கான வழிகாட்டுநெறி அதாவது தொலைக்காட்சி நுகர்வறிதல் (Television Literacy) பயிற்சி தருதல் மற்றும் தொலைக்காட்சி நுகர் வறிவுப் பயிற்சிக்கான பாடத்திட்டம் உருவாக்குதல் ஆகியவை சமூகச் செயல்பாடுகளில் இன்றியமையாதனவாகத் திகழ்கின்றன. இவற்றைச் சுருக்கமாகக் காண்போம்.

தமிழ்த் தொலைக்காட்சியும் குழந்தைகளும்

தமிழ்த் தொலைக்காட்சிகளின் செயல்பாடானது, திரைப் படத்தின் வாலாகவும், திரைப்படத்தின் நீட்சியாகவும், திரைப் படத்துக்கான விளம்பரப் படமாகவுந்தான் உள்ளது. தமிழ்த் திரைப் படத்தைக் குறித்து எண்ணென்ன விமர்சனங்கள் பேசப்படுகிறதோ அவை அனைத்தும் தமிழ்த் தொலைக்காட்சி தன் செயல்பாடாகக் கொண்டுள்ளது. செயற்கையான சூழலமைந்த திரையரங்கில் திரைப்படம் காண்பதால் ஏற்படும் விளைவை விடத் தொலைக் காட்சி ஏற்படுத்தும் விளைவு வலிமையானதாகத் திகழ்கிறது. ஏனெனில், தொலைக்காட்சி பெட்டி நமது இல்லத்திலேயே - மனத்திலேயே வலிமையாக இடம் பெற்றுள்ளது. அதில் இடம் பெறும் செய்திகளுடன் குழந்தைகளுக்கு நட்பு கலந்த பரிச்சயம் உண்டு. தொலைக்காட்சி நிகழ்ச்சிகளை ஒரு நிகழ்வாக ஏற்றுக் கொள்வதில்லை. மாறாக, வாழ்க்கை யதார்த்தத்தின் ஒரு பகுதியாக

ஏற்றுள்ளார்கள். இதனால் குழந்தைகளிடத்தில் விளைவுகள் பலதரப்பட்டவையாகக் காணப்படுகின்றன. பெற்றோர் - குழந்தை களிடையே நடைபெறும் உரையாடல் மிகவும் குறைந்துவிட்டது. சண்டை, பழி தீர்த்தல், கவர்ச்சி நடனங்கள், காதல் காட்சிகள், நகைச்சுவை வக்கிரங்கள் போன்றவை குழந்தைகளின் மனோ பாவத்தில் வேடிக்கையான மாற்றங்களை ஏற்படுத்துகின்றன. இந்நிலை மாற வேண்டுமானால் தொலைக்காட்சி காண்பதற்கான வழிகாட்டுநெறி அதாவது தொலைக்காட்சி நுகர்வறிவு (Television Liveracy) பயிற்சி மற்றும் அதற்கான பாடத்திட்டம் உருவாக்குதல் அவசியம் என்பதை உணர்ந்து பயிற்சி தருதல் வேண்டும். பயிற்சிக்குப் பின்னர்க் குழந்தைகளிடத்தில் காணப்படும் விளை வாட்சியைச் சோதனைத் தேர்வுகள் மூலம் ஆராய்ந்து, எதிர்கால வாழ்க்கைக்குப் பயன்படத்தக்கவாறு தொலைக்காட்சியைக் காண வழிகாட்டுதல் வேண்டும்.

தொலைக்காட்சி நுகர்வறிவும், பாடத்திட்ட உருவாக்கமும்

தொலைக்காட்சி நுகர்வறிவு என்பது கல்வியோடு இணைந்தது ஆகும். கல்வி என்பது மனிதனிடம் ஏற்கனவே உள்ள நற்பண்புகளை வெளிக்கொணர்தல் என்னும் சுவாமி விவேகானந் தரின் கருத்தும், கல்வி என்பது குழந்தைகளிடமிருந்து எல்லா நற் பண்புகளையும் வெளிக் கொணர்தல் என்னும் மகாத்மாகாந்தியின் கருத்தும் தொலைக்காட்சி நுகர்வறிவுக் கல்வியோடு ஒப்பு நோக்கத்தக்கவை ஆகும். ''கல்வி என்பது வளர்ச்சியும் பெருக்கமும் (Education is growth and development) ஆகும் மனிதன் ''உடல்'' (body) உள்ளம் (Mind) ஆகிய இரண்டால் ஆனவனாய்த் திகழ்கிறான். இதில் வளர்ச்சி உடல் சம்பந்தப்பட்டு முதல் 30 வயது வரை நடக்கிறது. உள்ளம் பெருக்கம் சம்பந்தப்பட்டது. வளர்ச்சியும் பெருக்கமும் ஏற்படும்போது நடத்தையில், நுழைவு நடத்தை, இறுதி நடத்தை என இருவகை மாற்றங்கள் ஏற்படும். இதில் நுழைவு நடத்தை என்பது ஆரம்ப குழந்தையின் செயல்பாடும், இறுதி நடத்தை என்பது கிழப் பருவத்திற்குப் பிறகு இறப்பு வரை நிகழ்வது என்றும் அமெரிக்க தத்துவ அறிஞர் ஜான்டூயி குறிப்பிட்டுள்ளார். மேற்காணும் கல்விச் சிந்தனை தொலைக் காட்சி நுகர்வறிவுக் கற்றலுக்கும் பொருந்தும். இத்தொலைக்காட்சி நுகர்வறிவை Television Liveracy என்று ஆங்கிலத்தில் அழைக் கின்றார். இத்தகைய தொலைக்காட்சி நுகர்வறிவுக் கற்றலுக்கான பாடத்திட்டத்தைக் கீழ்வருமாறு அமைத்து, செயல்படுத்தினால்

மேற்காணும் கல்விச் சிந்தனைகளுக்கேற்றவாறும், குழந்தைகளின் திறன் வளர்ச்சிக்கும் உறுதுணையாய் அமையும்.

தொலைக்காட்சி நுகர்வறிவு - பாடத்திட்ட உருவாக்கம்

1. தொலைக்காட்சி எத்தகைய பொருட்களைக் கொண்டு தயாரிக்கப் படுகிறது என்னும் அறிவைத் தருதல்.

2. தொலைக்காட்சி நிகழ்ச்சிகள் எவ்வாறு தயாரிக்கப்படு கின்றன. அதன் படிநிலைகள் ஆகியவற்றின் செய்திகளைத் துல்லியமாகக் கற்பித்தல்.

3. ஒலி - ஒளி பரப்பு அமைப்பு எவ்வாறு அமைந்துள்ளது என்பதைப் புரியவைத்தல்.

4. தொலைக்காட்சியில் ஒளிபரப்பப்படும் விளம்பரங்கள் எவ்வாறு தயாரிக்கப்படுகின்றன? அதில் அமைந்துள்ள தொழில் நுட்பங்கள் எவை? என்பது பற்றிய அடிப்படை அறிவைத் தருதல்.

5. தொலைக்காட்சியைக் காண்பதற்கான நோக்கங்களைக் குழந்தைகளுக்கு உணர்த்துதல்.

6. தொலைக்காட்சியைக் காண்பதற்கான நோக்கங்களையும் பயன்பாட்டையும் ஒன்றோடு ஒன்று இணைந்த நிலையில் பயன்படுத்த அறிவுறுத்தல்.

7. தொலைக்காட்சி நிகழ்ச்சிகளின் குறைநிறைகளை ஆராய்ந்து, அதன் நுண்மைத் தன்மையை உணர்த்துதல்.

8. நுண்மைத் தன்மையை உணர்வதால் பெரிய தாக்கத்திற்கு உள்ளாகாமல் எச்சரிக்கையுடன் தொலைக்காட்சியை நுகரச் செய்தல்.

9. தொலைக்காட்சி ஒளிபரப்புத் திட்டத்தில் அடங்கியுள்ள வெளிப்படையானதும், மறைந்திருப்பதுமான அவற்றின் மதிப்புகளைக் குறிப்பாக ஒரே மாதிரியாக வருவனவற்றின் சமூக விரோத ஒளிபரப்பு செய்திகளை அறியச் செய்தல்.

10. தொலைக்காட்சி நிகழ்ச்சிகளின் குறை, நிறைகள் ஆகியவற்றில் ஏற்பன ஏற்று, மறுப்பன மறுத்தல் நிலைப்பாட்டிற்கான பயிற்சி அளித்தல்.

11. தொலைக்காட்சியை நோக்கத்திற்கேற்றவாறு நேரத்தை செலவிட்டுக் காண்பதற்குக் கற்றுக் கொடுத்தல்.

12. தொலைக்காட்சி நிகழ்ச்சிகளை நுகர்ந்து, அவற்றை அன்றாட வாழ்வில் பயன்படுத்துவதற்கு ஆயத்தமாய் இருக்கச் செய்தல்.

மேற்காணும் தொலைக்காட்சி நுகர்வறிவுக் கல்வி பாடத்திட்டம் குழந்தைகளுக்குக் கற்பிக்கப் படுமாயின், தொலைக்காட்சியின் செயல்பாடு குழந்தைகளுக்கு ஆரோக்கிய மான மனநிலையையும், எதிர்காலத்தில் வளமான வாழ்விற்கு பயனளிப்பதாயும் அமையும். மேலும், நல்ல சமுதாயத்தையும் அமைக்க வழி வகுக்கும். தொலைக்காட்சி நுகர்வறிவுப் பாடத் திட்டத்தின் அடிப்படையில், தொலைக்காட்சி நிகழ்ச்சிகளைத் தயாரிப்பாளர் மேற்கொள்ள வேண்டும். அந்நிகழ்ச்சிகள் குழந்தைகளுடைய அன்றாட வாழ்க்கையின் இன்றியமையாத் தேவைகளைப் பூர்த்தி செய்வதாகவும் அமைய வேண்டும். வகுப்பறைக் கல்வி வீட்டினுள் கிடைக்குமாறு தொலைக்காட்சி நிகழ்ச்சிகள் அமைவதும், அதைத் தன் திறன் வளர்ச்சி நோக்கோடு காண வைத்தலும் ஆகிய பயிற்சி குழந்தைகளுக்கு அளிக்கப்படுமாயின், சமூகச் சீரழிவை நோக்கிச் செல்லும் குழந்தைகளையும், சமுதாயத்தையும் ஓரளவு காப்பாற்றலாம் என்பது தெளிவாகிறது.

தே. சொக்கலிங்கம்
அழகப்பா பல்கலைக்கழகம்
காரைக்குடி – 3

அறம் பாடிய பிள்ளைத்தமிழ்

ஒன்பதாம் நூற்றாண்டுக்குப்பின் எழுந்த நிகண்டுகளும் பாட்டியல்களும் நூலுக்குரிய பாட்டுடைத் தலைவன் பலநலமும் பெற நூல் எவ்வாறு அமைய வேண்டும் என்ற அமைப்பை எடுத்துரைத்தன. இக்கோட்பாடு நந்திக்கலம்பகத்தால் தமிழ்ப் புலவரிடையே வளர்ந்தது. இன்னவாறு பாடின் பாட்டுடைத் தலைவனுக்குத் தீமைதரும் என்று வகுத்த கொள்கைள், புலவர் வெறுப்புக்கு ஆளான புரவலர் மீது நூல் எழுத வழி வகுத்துக் கொடுத்த விதிகளாயின. மிதிலைப் பட்டிப் புலவர் மரபில் கழுதைவிடுதூது என்ற நூலும் இப்பிள்ளைத்தமிழும் அறம் வைத்துப் பாடியவை.

மங்கைபாகக்கவிராயர் பாடிய சித்திநாயகம்பிள்ளைத்தமிழ் சித்தி நாயகத்துக்குச் சாவை அளித்தது எனப் புலவர் மரபினர் பாடிய பாடல்களால் புலனாகிறது. சித்தநாயகம் சாகப் புலவர் எத்தகைய அமைப்பை நூலில் அமைத்திருக்கிறார் என்று ஆராய்தல் பயனுடையது.

பாட்டுடைத் தலைவன்மீது தோன்றும் புதுநூலால் தலைவனுக்குக் கேடு .விளையக்கூடாது. அதற்கு எனப் பத்துப் பொருத்தங்களை வகுத்தவர். இப்பொருத்தங்கள் வடமொழி மரபைத் தழுவியன. அவை எழுத்துப் பொருத்தம், தானப் பொருத்தம், பாற்பொருத்தம், உணாப்பொருத்தம், வருணப் பொருத்தம், நாட்பொருத்தம், கதிப்பொருத்தம், கணப் பொருத்தம் எனப்பத்து வகை. இவை பெரும்பாலும் நூலின் முதற்சொல்லோடு தொடர்புடையன.

சித்திநாயகம் பிள்ளைத்தமிழின் முதற்சொல் 'பார்ப்பார்கள்' இது மங்கலச் சொல் அன்று. மங்கலச்சொல் வியனிலையாக - ஒற்றைப்படை எண்களால் ஒற்றும் உட்பட ஏழு எழுத்துக்களால்

அமைந்திருக்கவேண்டும். தாலப்பொருத்தம் ஐந்துவகை. உயிர் எழுத்துகளும் உயிர்மெய்யெழுத்துகளும் இவற்றில் அடங்கும்.

தானப் பெயர்	பால தானம்	குமர தானம்	இராச தானம்	மூப்பு தானம்	மரண தானம்
எழுத்துகள்	அ,ஆ	இ,ஈ,ஐ	உ,ஊ,ஒள	எ,ஏ	ஒ,ஓ

தலைவன் பெயரிலுள்ள முதலெழுத்தைப் பாலதானமாகக் கொள்ளவேண்டும். மங்கலச்சொல்லின் முதல் எழுத்தோடு எண்ணுங்கால் மூப்பு, மரணமாகிய தானங்கள் வந்தால் தலைவனுக்குத் தீமை வரும். இங்கே சித்திநாயகம் தலைவன் பெயர்; 'பார்ப்பார்கள்' முதற்சீர்.

பாலதானம்	குமரதானம்	இராசதானம்	மூப்புதானம்	மரணதானம்
இ,ஈ,ஐ (சி)	உ,ஊ,ஒள	எ,ஏ	ஒ,ஓ	அ,ஆ (பா)

இ-பாலதானம். பாலதானத்திலிருந்து முதற்சீரின் 'ஆ' மரணதானத்தில் திகழ்கிறது. இதனால் இச்சொல்லை முதற்சீரில் அமைப்பது பாட்டுடைத் தலைவனுக்கு மரணம் விளைவிக்கும்.

குறில் எழுத்துகள் ஆண்பால்; நெடில் எழுத்துகள் பெண்பால். அவ்வப்பால் தலைவரைப் புகழும்போது அவ்வவ் வெழுத்துகளால் துவங்கவேண்டும். இப்பிள்ளைத்தமிழில் சித்தி நாயகம் என்ற ஆண்மகனைப் பெண்பால் எழுத்துகளால் பாடியிருப்பது குற்றம்; தீமை பயக்கும்.

எழுத்துகளை அமுதவெழுத்து, நஞ்செழுத்து என இரண்டாக்கி அமுத எழுத்து, பா முதலில் பயில வேண்டும் என்பது உணாபொருத்தம்.

> ''அமுதவெழுத்துக்களைப் பொறுத்தவரை பாட்டியலார் அனைவரும் ஒருமித்துப் பதினொரு எழுத்துக்களையே உரைத்தனர். எவற்றை நச்செழுத்தாகக்கொள்வது என்பதிலேயே பாட்டியலாரிடை வேறுபாடு அமைந்துள்ளது. (ந.வீ.செ-பாட்டியல் திறனாய்வு.ப39)

அமுதவெழுத்துகளாவன க,ச,த,ந,ப,ம,வ,அ,இ,உ,எ. சித்தி நாயகம் பிள்ளைத்தமிழில் 'பார்ப்பார்' என 'ஆ' முதற்சீரில் இருக்கின்றது. பன்னிரு பாட்டியலும் பரணர் பாட்டியலும் நவநீதப் பாட்டியலும் ஆகாரத்தை நச்செழுத்தாக வகுத்தன. வெண்பாப்பாட்டியல், சிதம்பரப்பாட்டியல், இலக்கண விளக்கப் பாட்டியல், முத்துவீரியப் பாட்டியல் ஆகியன இவ்வெழுத்தை

நச்செழுத்து என நவிலவில்லை. நஞ்செழுத்து வைத்துப் பாடல்கள் பாடுவதையே அறம் பாடுதல் என்று புலவர் வழங்குவர். இதனையே 'ஆனந்தக்குற்றம்' என்பர். குணசாகரர் யாப்பருங்கலக்காரிகை உரையிலும் ஆறு குற்றங்களுள் ஒன்றாக ஆனந்தக்குற்றத்தைச் சுட்டிக்காட்டுவர். பன்னிருபாட்டியல் முதலியவற்றுக்கு இணங்க இது தீமையை உண்டாக்கும்.

பாட்டுடைத் தலைவன் சாதிக்குத் தக்க எழுத்துக்களைப் பொருத்திப் பார்த்துப் பாடுதல் வருணப்பொருத்தம். சிந்திநாயகம் வேளாளர் என்றால் அப்பொருத்தமும் நலமாக இல்லை. எழுத்துகள் அனைத்திற்கும் நாள் வகுத்து இருக்கின்றார். பாட்டுடைத் தலைவன் பெயர் முதலெழுத்தின் நாளுக்கும் மங்கல மொழியின் முதல் எழுத்துக்கும் பொருத்தம் பார்ப்பது நாள் பொருத்தம். சிந்திநாயகம் - சி: இரேவதி நட்சத்திரம். பார்ப்பார்கள் - பா: உத்திர நட்சத்திரம். இரேவதி நட்சத்திரத்தில் இருந்து உத்திர நட்சத்திரம் இரண்டாம் தொகுதியில் நான்காவதாக உள்ளது. இவ்வாறு வருவது நன்மை பயக்கும். எனவே ஆசிரியர் பாட்டியல் விதிகளைப் பின்பற்றிடவில்லை எனத் தெரிகிறது.

எழுத்துக்களை நான்குவகைக் கதிகளாகப் பிரித்து முதற் சொல்லுக்கு நன்மை பயப்பவை எவை என்று உரைப்பது கதிப் பொருத்தம். ங்,ஞ,ண்,ந்,ம் என்னும் ஐந்து மெய்யெழுத்தும் ஆ,ஏ,ஊ,ஓ என்ற நான்கு நெடிலும் மக்கள் கதிக்கு உரியவை. மங்கைபாகக் கவிராயர் முதற் சீரில் மக்கட்கதிக்கு உரிய எழுத்தைக் கையாண்டிருப்பதால் நன்மை பயக்கும்.

பாட்டின் முதன்மொழி மூவகைச் சீரால் தொடங்க வேண்டும். எட்டு மூவகைச் சீருக்கும் தனித்தனியே கணப்பெயர் உண்டு. 'பார்ப்பார்கள்' என்ற முதல்மொழிக்கு 'நேர்நேர்நேர்'-தேமாங்காய் என்பது வாய்பாடு. இது துறக்ககணம் என்பர் வெண்பாப்பாட்டியலார். பன்னிருபாட்டியல் இயமான கணம் எனவும் இது வாழ்நாள் பயக்கும் எனவும் விளக்கும். சூடாமணி நிகண்டும் இங்ஙனமே உரைக்கும். *(பன்னிரண்டாவது தொகுதி.96)*

பாட்டியலும் நிகண்டுகளும் கூறும் பத்துப்பொருத்தங்கள் இப்பிள்ளைத் தமிழ்ப்பாட்டுடைத் தலைவனுக்கு நன்மையான வையாகவும் தீமையாகவும் உள்ளன. *(காண்க: அட்டவணை)*

இங்ஙனம் அமைந்த பொருத்தங்களில் சொல், தானம், நாள், கதி, கணம் என்பவை தீமை நல்குவன. இவற்றில் மங்கலப்

பொருத்தம் அடிப்படையானது. அப்பொருத்தம் அமையா மையே பாட்டுடைத்தலைவன் இறப்புக்குக் காரணமாகும். பத்துப்பொருத்தங்களிலும் ஆற்றல் மிக்க ஐந்து பொருத்தங்கள், தலைவனுக்குத் தீமை தருவன.

முழுமையும் பாட்டுடைத் தலைவனுக்குத் தீமை தருவனவாக ஆசிரியர் பாடவில்லையெனினும் அவர் அடிப்படையான பொருத் தங்களில் சித்திநாயகத்துக்குத் தீமை விளையப் பாடியிருக்கிறார். இதனாலயே சித்திநாயகத்துக்குச் சாவு நேர்ந்திருக்கிறது.

மங்கைபாகக் கவிராயர் இப்பிள்ளைத்தமிழ், பாடியபோது பத்துப்பொருத்தங்களும் சித்திநாயகத்துக்குத் தீமை பயப்பதாய்க் கருதித் திட்டமிட்டுப் பாடவில்லை. அவர் சீற்றத்தால் மங்கல மொழி அமைக்காது-தெய்வக் காப்புக் கூறாது பலவாறு இகழ்ந்து இப்பிள்ளைத்தமிழை ஆக்கிச் சித்திநாயகத்தை மரணமுறச் செய்திருக்கிறார். ஆசிரியர், சித்திநாயகம் சாவை விழைந்த மைக்குப் பல்வேறு குறிப்புகள் பாக்களில் உள்ளன. தலைவன் சாவை ஏற்படுத்திய நந்திக்கலம்பகம் போலப் பிள்ளைத்தமிழில் இந்நூல் தனிமனிதன் இறப்புக்குக் காரணமாகிறது.

பொருத்தங்கள்	நன்மை தருவது	தீமை பயப்பது
மங்கலம்		✓
சொல்	✓	
எழுத்து		✓
தானம்	✓	
பால்		✓
உனா		✓
வருணம்		✓
நாள்	✓	
கதி	✓	
கணம்	✓	

நெல்லை. ந. சொக்கலிங்கம்
தொலைநிலைக் கல்வி இயக்ககம்
மதுரை – 625 021

தண்டபாணிசுவாமிகளின் குருபரமாலை

முன்னுரை

முருக வழிபாட்டை வலியுறுத்திக் கௌமார சமயத்தைத் தமிழகத்தில் பெரிதும் பரப்பிய வண்ணச்சரபம் தண்டபாணி சுவாமிகள் (1839 - 1898) பழனித் திருவாயிரம் பாடியுள்ளார். இத்தொகுப்புள் நான்காவதாக அமைவது குருபரமாலை. இந்நூல் பழனிமலைக் குமரகுருபரனைப் போற்றும் பாங்கில் அமைவது. இது ஐம்பத்தொரு எழுசீர் ஆசிரிய விருத்தங்களால் ஆகிறது. இக் குருபரமலை என்ற நூல் இங்கே ஆய்வுப் பொருளாகின்றது.

பழனி மலையின் எழில்

பழனிமலையில் குடி கொண்டிருக்கும் முருகன் அன்பர்களுக்கு அருள் பாலிக்கும் திறத்தைச் சுவாமிகள் எடுத்து மொழிகின்றார். அப்படி அன்பர்களின் வேண்டுகோளை நிறைவேற்றிவைக்கும் பழனிமலை முருகனிடம் இவருடைய வேண்டுகோளைக் கூறும் போது பழனிமலையின் எழிலையும் சிறப்பையும் இயற்கைக் காட்சிகளையும் இனிதாகச் சுவாமிகள் எடுத்துரைக்கின்றார்.

பழனி மலை செருந்தி, செங்கடம்பு, மல்லிகை போன்ற பல் வகை நந்தவனங்களால் நிறைந்து மணம் செறிந்து விளங்குகின்ற தாம் (31). வேட்டுவ மகளிரின் வாய் ஓசையைக் கேட்ட குயில்கள், மயங்கும் பசுந்தினைப் புனங்கள் சூழ்ந்தது பழனி மலை.

''வம்பிய ராய மறச்சிறு மியர்தம்
வாய்த்தொனி, குயிலிசை மயங்கும்
பம்பிய சாரற் பசுந்தினைப் புனம்சூழ்
பழனிமா மலைக்குரு பரனே'' (24)

என்பதே அப்பாடல். குரங்குகள் மாங்கனியையும் பலாக் கனியையும் வீசி எறியும்; அதனால் பறவைகள் அஞ்சி ஓலி

எழுப்பும் காட்சிகள் நிறைந்தது பழனிமலை (26) என்பார். கடைசியர்தம் கண்வலை உழவர்தம் மனங்களைச் சுண்டி இழுக்கும் காட்சியைச் சுவாமிகள்,

''கள்ளவிழ் மலர்மென் கூந்தலங் குயில்நேர்
கடைசியர் கண்வலை விசிறிப்
பள்ளர்தம் மனங்கொண் டுவப்புறும் வயல் சூழ்
பழனிமா மலைக்குரு பரனே'' (17)

என்று காட்சிப்படுத்துவார். சித்தர்களும் சிறந்த சான்றோரும் நாடோறும் பழனிக்கு வந்து செல்வதோடு பற்பல நோயையும் போக்கும் சஞ்சீவிப் பழனிமாமலை என்று கூறிச் சுவாமிகள் இயற்கைக் காட்சிகளையும் மலையின் மேன்மைகளையும் தெளிவுறுத்தியுள்ளார்.

முருகனைப் போற்றுதல்

முருகப் பெருமானைப் போற்றிப் பாடும் இக் குருபர மாலையில் சிவபெருமானையும் திருமாலையும் பிரமனையும் சுவாமிகள் தொடர்புபடுத்திக் கூறிப்போவார். முருகன் பிரமனைக் குட்டிச் சிறையில் அடைத்தவன். இதனைச் சுவாமிகள்,

''அங்கயற் கருங்கண் தவளமங் கலையோடு
அழும்படி அருமறைக் கிழமைப்
பங்கயப் பிரமன் றனைப்புடைத் தடித்தாய்'' (5)

என்று கூறுவதிலிருந்து அறியலாம். பிரமன் ஆக்கிய உலகம் அவனையே பார்த்து நகைக்கும் வண்ணம் முருகன் பிரமனைப் புடைத்தானாம் (12). கொக்கு வடிவில் வந்த அசுரனை மூக்கு இரண்டாகுமாறு கிழித்துக் கொன்றவன் திருமால் (17) என்பார் இவர்.

சிவபெருமானின் குழந்தை முருகன். எனவே, இங்கே சிவபெருமானைப் போற்ற முற்படுகின்றார் சுவாமிகள். இதோ சுவாமிகளின் கூற்று:

''மாந்தளிர் வில்வம் அறுகு நீர் கரந்தை
மதி விளா விதிதரு சடையிற்
பாந்தளும் புனையும் பரமர்கண் மதலாய்.'' (18)

மேலும் சுவாமிகள் இந்நூலுள் அகத்தியர், நக்கீரர், கச்சியப்பர், ஆண்டாள் போன்ற புலவர் பெருமக்களைக் குறித்துப் பேசுகின்றார்.

''கொந்தலர் பொழிற்றென் மதுரையூர்க் கழகக்
கொடுஞ்சமர்க் கவிஞன்ஆ தியராம்

பைந்தமிழ்ப் புலவர் அளவிலார் பரவும்
பழனமா மலைக்குரு பரனே'' (1)

என்ற பாடலில் சுவாமிகள் நக்கீரர் குறித்துக் குறிப்பிடுவார். முருகனுடைய அமிசமாகத் தோன்றியவர் திருஞானசம்பந்தர். இதனை அறிந்த சுவாமிகள், ''கொச்சைமா நகரிக் கவுணியன்'' (8) எனவும், ''மைச்சிலம் பினன்நேர் சாரணர் பலரும் மடிவுறத் தமிழ் மழை பொழிவான்'' (10) எனவும் குறிப்பிடுவார். இவ்வாறு தண்டபாணிசுவாமிகள் முருகனைப் போற்றிப் பரவும் குருபர மாலை நூலில் ஏனைய கடவுளரையும் முருகனைப் போற்றிய புலவர்களையும் சுட்டிப் போகத் தவறவில்லை.

சுவாமிகளின் வேண்டுகோள்

தகப்பன் சாமியாக விளங்கிய பெருமைக்கு உரியவன் முருகன். இவன் சிவபெருமானுக்கும் அகத்தியருக்கும் தாரகப் பொருள் உரைத்தவன் (1). அவர்களுக்குக் கூறிய மெய்ப் பொருளைச் சுவாமிகள், தமக்கும் உரைக்குமாறு பணிந்து வேண்டுவார்.

''என்னிரு விழிமுன் சேவைதந் தருளில்
எவருனைத் தடுப்பவர் இயம்பாய்'' (3)

''ஆடலோர் சிறிதும் வழங்குகின் றிலை, நின்
அருட்டிரு வுருவுடன் ஒன்றாய்க்
கூடலே யாய பரகதிப் பெருஞ்சீர்
கொடுப்பதெந் நனம்மெய்யாம் கூறாய்'' (9)

எனக் கூறுவன கொண்டு சுவாமிகள் இறையுணர்வை நன்கு அறியவொண்ணும்.

உலக நன்மை கருதி நால்வேதமும் ஆகமங்களும் கற்றுத் தேர்ந்த சித்தரில் ஒருவராவது ஏன் இன்று தோன்றவில்லை (6) என்று முருகனைச் சுவாமிகள் வினவுவார். போகரும் புலிப் பாணியும் முருகனைப் பரவி உய்ந்தனர். அது போன்று என்னையும் அடிமை கொண்டு காத்தருள் (19) என்று சுவாமிகள் நயந்து வேண்டுவார். 'சரவணபவ' என்னும் ஆறெழுத்து மந்திரத்தை உச்சரித்தவர்க்கு முருகன் அருள் புரிவான். 'உன் திருவடி தமிழின் இனிமை போன்றது; ஆகவே என்னை உன் திருவடிக்கீழ் அழைத்து அருள் புரிக' என இவர் வேண்டுவது இறையுணர்வின் உயர்நிலைக்குக் கொண்டு செல்கின்றது எனலாம்.

''செழிப்புறு மதுரத் தமிழ்இனித் ததுபோல்
திருவருட் சித்தியும் வழங்கி
ஒழிப்பரி தாம்மெய் வீட்டில்நின் சொரூபத்து
உடனெனைக் கலப்பதுன் கடன்காண்!'' (51)

என்பது அப்பாடல் அடிகள். ஈயாக் கஞ்சர்கள்பால் தாம் நிற்கக் கூடாது என்று சுவாமிகள் விரும்பினார் (29). இதனையும் அவர் ஒரு பாடல் வழி வேண்டுகின்றார். இவ்வாறு உலக நன்மை கருதிச் சுவாமிகள், வேண்டும் பண்புடையவர் என்பதனை நாம் அறியமுடிகின்றது.

கொல்லாமையும் உண்ணாமையும்

சுவாமிகள் உயிர்களைக் கொல்லுதலையும் புலால் உண்ணுதலையும் தம் எல்லா நூல்களிலும் கடிந்து பேசுவார். அவ்வகையில் அவர்தம் உள்ளக் கொள்கையாகிய கொல்லாமைக் கோட்பாட்டைக் குருபரமாலை நூலிலும் கூறாமல் இல்லை.

உலகில் உண்பதற்கு உரிய பொருள்கள் பல உள்ளன; இருந்தும் நல் நெறிப்பட்ட இறையன்பர்கள் ஊன் (பாற்றுணவு) உண்ணுகின்றனரே என இவர் வருந்துவார்.

''போற்றும்நன் நெறியோர் இகழ்கலா தனவாம்
புசிப்பன ஆயிரம் இருந்தும்
பாற்றுணவு அருந்தும் பதிதர்கண் டிறைஞ்சாப்
பழனிமா மலைக்குரு பரனே'' (16)

என்பார். மதுவையும் இறைச்சியையும் கொண்டு வழிபாடு செய்தலையும் சுவாமிகள் வெறுப்பதோடு அவர்களைத் திருத்துவதற்கு உரிய மாண்பை அருளும் வண்ணம் முருகனிடம் வேண்டுவார். அது வருமாறு:

''திகைதொறும் மதுவும் இறைச்சியும் கொடுசெய்
தீமகம் திருத்தும்மாண் பருள்வாய்.'' (48)

இதே போன்று ஆடு, எருமை போன்றவற்றைக் கொன்று வழிபாடு செய்தலையும் சுவாமிகள் கடிந்து பேசுவார் (49). கொன்று ஊன் உண்ணுவாரை வெல்ல முருகன் அருள் பெற்ற ஒருவன் இன்று இல்லையே என இவர் வருந்துவார். இவர் வருத்தவுணர்வின் பாடல் வடிவம்:

''கொன்றிரை அருந்தும் குணுங்கராம் அவரைக்
குலத்தொடு கெடுக்கமா தவம்செய்து

உன்றிரு வருளால் வென்றிபெற் றுள்ளார்
ஒருவரும் இன்றுகொல் உரையாய்.'' (36)

இப்படி முருகப் பெருமானிடம் உயிர்க்கொலை புரிவாரையும் ஊன் உண்பாரையும் திருத்த வேண்டும் என்று சுவாமிகள் வேண்டுவதால் இவர்தம் கொல்லாமைக் கோட்பாடு புலனாகும்.

முடிவுரை

வண்ணச்சரபம் தண்டபாணிசுவாமிகள் குருபரமாலையில் பழனி மலையின் எழிலை, இயற்கைக் காட்சிகளைக் கூறி அத்தலத்தின் மேன்மையைச் சுட்டிக் காட்டுவார். முருகப் பெருமானுடைய புகழைப் பேசும்போது சுவாமிகள் முருகன் அடியவர்களையும் பிற அருந்தமிழ்ப் புலவர்களையும் போற்று கின்ற பண்புடையவர் என்பது உறுதியாகின்றது.

முருகப்பெருமானிடம் இவர் தமக்கு அருள் வழங்குமாறு வேண்டும்போது மிகுந்த உரிமையும் உறவும் கொண்டாடு கின்றவர் என்பது புலனாகின்றது. இவர்தம் இறையுணர்வின் உயர் நிலையை இவர் பாடல்கள் நமக்குத் தெளிவாக்குகின்றன. உலக நன்மையையும் கருதியவர் சுவாமிகள் என்பது இவர்தம் பாடல்களிலிருந்து பெறப்படுகின்றது.

உயிர்க்கொலை புரிதலையும், ஊன் உண்ணுதலையும், இறைவழிபாட்டில் ஊன் படைத்தலையும் இல்லாமற் செய்யச் சுவாமிகள் பெரிதும் விரும்பினார். இவ்விருப்பத்தின் வெளிப் பாட்டைக் குருபரமாலையிலும் நாம் காணமுடிகின்றது. இஃது இவருடைய உயிர்க்கொள்கையாகவே கருதப்பெறுகின்றது.

துணை நூல்

பழனித்திருவாயிரம், வண்ணச்சரபம், அருள்மிகு தண்டபாணி சுவாமிகள், அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயில் வெளியீடு, 1973, முதற்பதிப்பு.

ஏ.ஜே. சொர்ணராஜ்
பல்கலைக்கழகக் கல்லூரி
திருவனந்தபுரம்

நாவல்களில் வாழ்க்கைத் தத்துவம்

முகவுரை

மனிதன் சமூகத்தோடு தொடர்பு கொண்டு வாழ்க்கை நடத்தும் உறவு முறையினை ஆய்வது வாழ்வியல் ஆகும். வாழ்வியலே தத்துவத்தின் பிறப்பிடம். வாழ்வியல் உணர்த்தும் ஒவ்வொர் உண்மையும் ஒரு தத்துவமே. எனவே வாழ்வியலும் தத்துவமும் ஒன்றையொன்று பிரிக்க இயலாதவாறு இணைந்துள்ளன. உண்மைகளை அறியத் துடிப்பவன் தத்துவ ஞானி ஆகிறான். ஆங்கில மொழிச் சொல்லான 'பிலோசபி' கிரேக்க மொழியில் உள்ள 'பீலின்', 'ஸோபியா' என்ற சொற்களிலிருந்து வகுத்தெடுக்கப்பட்ட ஒன்றாகும். 'பீலின்' என்றால் 'நேசி' என்றும் 'ஸோபியா' என்றால் 'அறிவு' என்றும் பொருள் படுகின்றன. எனவே பிலோசபி என்ற பதம் அறிவினோடு உள்ள ஆர்வ நிலையைக் குறிப்பிடுவதாகக் கொள்ளலாம். மனித வாழ்க்கையை உற்று நோக்கியதன் மூலம் தனக்குக் கிடைக்கப் பெற்ற அனுபவங்களைப் படைப்பாளி தன் படைப்பு மூலம் பிறருக்கு உணர்த்த முயற்சிக்கின்றான். அவன் உணர்த்தும் வாழ்க்கை அனுபவங்களே வாழ்க்கைத் தத்துவங்களாகும்.

நாவலும் வாழ்க்கைத் தத்துவமும்

மனிதனுடைய அல்லது மனிதர்களுடைய இணக்கமும் பிணக்கமும் கொண்ட வாழ்க்கைத் தொடர்பை விவரிக்கின்றது நாவல். எந்த ஒரு மனிதனுடைய வாழ்க்கையும் ஏதோ ஒரு உண்மையை வெளியிடாமல் இருந்து விடுவதில்லை. மானிட வாழ்க்கையே ஒரு வகையில் சில தத்துவங்களின் அடிப்படையில் இயங்குகிறது எனலாம். எனவே வாழ்க்கையின் அடிப்படையான தத்துவங்கள் நாவலின் அடிப்படையாகவும் அமைகின்றன. இதனால் நாவலுக்கு உயிர் அது பிரதிபலிக்கின்ற வாழ்விலே

நிலைத்திருக்கின்ற தத்துவம் என்று கூறலாம். நாவல் பிரதிபலிக்கின்ற வாழ்க்கை, அந்நாவலின் உடல் என்றால் அந்த வாழ்க்கையின் உள்ளே உள்ள தத்துவம் நாவலின் உயிர் ஆகும். ''கதையில்லாமல் எப்படி ஒரு நாவல் இருக்க முடியாதோ அதுபோல தத்துவம் இல்லாமலும் அது இருக்க முடியாது''. தத்துவத்திற்கும் நாவலுக்கும் உள்ள தொடர்பை விளக்க வந்த ஆல்பர்ட்காமு, ''நீ தத்துவவாதியாக விரும்புகின்றாயா? நாவல்கள் எழுது'' என்கிறார். இக்கருத்துக்கள் நாவலுக்கும் தத்துவத்திற்கும் உள்ள தொடர்பினை வலியுறுத்துகின்றன.

இலக்கிய நயமுள்ள நாவல்கள் வாசகர்களின் மன உணர்வுகளைத் தூண்டி அவர்களைச் சிந்திக்க வைக்கும் ஆற்றல் பெற்ற வாழ்க்கை அனுபவங்களை உள்ளடக்கியதாக அமைய வேண்டும். வாழ்க்கைத் தத்துவங்களைத் தத்துவங்கள் எனப் பறைசாற்றாது கதையின் ஊடே வாசகர்கட்கு ஊட்டி விடுவதில் தான் நாவலின் வெற்றி அமைகின்றது. வாசகனின் மனதில் மாற்றங்களை ஏற்படுத்தி அவனிடம் உள்ள மனிதத்துவத்தை வளர்க்கும் வண்ணம் வாழ்க்கைத் தத்துவங்கள் நிறையப் பெற்ற நாவல்களே காலத்தை வெல்லும் தன்மை படைத்தனவாக விளங்க இயலும். 'நாவல் உருவத்தால் மட்டும் நிரந்தரமாவதில்லை; அது கூறும் கருத்தால்தான் நிரந்தரமாகின்றது'' என்பது நினைவு கூரத்தக்கது.

நாவலாசிரியனும் வாழ்க்கைத் தத்துவமும்

சமூகத்தில் ஓர் உறுப்பினன் என்ற நிலையில் எழுத்தாளனுக்கும் அவனுக்கென்றதான சில எண்ணங்கள் இருக்கின்றன. வாழ்க்கையைப் பற்றி அவனுக்கென்று ஒரு தத்துவம் இல்லாமல் இருக்க முடியாது. வாழ்க்கை அனுபவத்தின் மூலம் தான் கண்டதும் கேட்டதுமான பல உண்மைகளை எவ்வாறாவது அவன் தனது படைப்பில் இடம்பெறச் செய்து விடுகிறான். 'நாவலாசிரியன் வாழ்க்கையைப் பற்றி என்ன நினைக்கின்றானோ, அந்தக் கருத்து அவனை அவனே அறியா வண்ணம் தன் போக்கில் இயக்கிச் செல்கின்றது. இவ்வுண்மை அவன் கதைப்பின்னலை ஒழுங்குபடுத்தும் முறையிலும், பாத்திரங்களை உருவாக்கும் முறையிலும் புலப்படும்'.

நிறைந்த வாழ்க்கை அனுபவமும், சிறந்த சிந்தனைத் திறனும், மனித மனங்களின் உள்ளுணர்வுகளை ஊடுருவிப் பார்க்கும் ஆளுமைத் திறனும் வாய்க்கப் பெற்ற படைப்பாளிகள் தங்களது தத்துவங்களை இயல்பாகவே நாவலில் பதித்து விடுவார்கள். இவ்வாறு நாவலாசிரியன் தன்னுடைய படைப்

பிலே வெளியிடுகின்ற தத்துவங்கள் அவனது சுய வாழ்க்கை அனுபவத்திலிருந்து அவன் கற்றதாக இருக்கலாம்; அல்லது அவன் பிற மனிதர்களிடம் கொண்டுள்ள ஆர்வத்தின் காரணமாக அவர்களுடைய வாழ்க்கை, செயல்முறைகள், குறிக்கோள், நம்பிக்கைகள் ஆகியவற்றோடு தொடர்பு கொண்டு அவைகளிலி ருந்து உணர்ந்து கொண்டனவாகவும் இருக்கலாம்.

சமூகத்தோடு தனக்குள்ள கடமையைப் பற்றி நாவலாசிரி யன் நன்கு அறிந்திருக்க வேண்டும். தனது எண்ணங்களாலும் செயல்களாலும் தான் வாழும் சமூகத்திற்கு நன்மையைச் செய்யவேண்டும் என்பதை அவன் உணர்ந்திருக்க வேண்டும். எனவே அவனது தத்துவம் சமூக நன்மையைக் கருதியதாக அமைய வேண்டும். 'மிகவும் உண்மையாகக் கதை எழுதுவது அவனது நோக்கமாக அமைந்து விடக் கூடாது. கதையின் மூலம் சிறந்த வாழ்க்கைப் பார்வையையைச் சமூகத்திற்கு ஊட்டுவதே அவனது கடமையாக இருக்க வேண்டும்' என்பர் கேசவதேவ்.

நாவலாசிரியன் ஒரு குறிப்பிட்ட கொள்கையின் பால் ஈடுபாடுள்ளவனாகவோ அதில் ஆழ்ந்த பற்றுள்ளவனாகவோ இருப்பின் அக்கொள்கைகள் அவனது படைப்பில் இடம் பெறுவது தவிர்க்க இயலாததாகி விடுகின்றது. எண்ணத்தின் விருப்பத்தால் தான் தோன்றிய உலகிற்குச் சமூகப்பணி ஆற்று வதே தனது கடமை எனக் கொள்ளும் நாவலாசிரியன் தனது தத்துவங்களைத் திணிக்க முயலாது, அவை காலத்தோடு நன்கு பொருந்துமா என நன்கு ஆராய்ந்த பின்னரே படைப்பில் உட் புகுத்த வேண்டும். அவனது தனிப்பட்ட கொள்கைகள், தத்துவங்கள், எதிர்கொள்ளும் பிரச்சனைகள் ஆகியவற்றைப் பிரச்சாரம் செய்வதற்கான ஊடகமாக அவனது படைப்பு அமைந்து விடக்கூடாது.

நாவலும் பிரச்சாரமும்

நாவலாசிரியனின் தனிப்பட்ட கொள்கைகள், அவனது எதிர் பார்ப்புக்கள், எதிர்ப்பார்ப்புக்கள் நிறைவேறா நிலை ஏற்படும் போது இவ்வாறு அமைந்திருக்க வேண்டும் என்ற அவனது சிந்தனைகள் ஆகியன அவனது படைப்பில் இடம் பெறாமல் இருக்க இயலாது. கலைஞர்கள் எழுதுவதன் மூலமும், பாடுவதன் மூலம் தங்களது கருத்துக்களைப் பலருக்கு அறிவிக்கவே செய்கின்றனர். பிறரிடம் அறிவிப்பதற்குத் தங்களிடம் செய்திகள் இருப்பதாலேயே படைப்பாளிகள் இலக்கியங்களைப் படைக் கின்றனர். அப்படைப்பு பலரைச் சென்றடையும் என்ற திண்ணிய

நம்பிக்கை அவனுள் ஏற்படுகின்றபோது அவனுடைய படைப்பு பிரச்சாரமே அல்லாமல் வேறொன்றுமில்லை. இலக்கியத்தின் இப்போக்கை எண்ணியே கா.நா. சுப்பிரமணியம்,'' எல்லா எழுத்தும் ஒரு விதத்தில் பார்க்கப் போனால் பிரச்சாரமேயாகும்'' என்கிறார். 'எல்லா இலக்கியங்களும் உண்மையில் ஒரு வகையில் பிரச்சார வேலையைத்தான் செய்கின்றன. கலைஞன் தன் உணர்ச்சிகளையும் சிந்தனைகளையும் கதையின் மூலம் பிறருக்கு அறிவிப்பது பிரச்சார வேலை அல்லாமல் வேறு என்ன? என வினவுகிறார் கேசவதேவ்.

சில நாவல் ஆசிரியர்கள் தங்கள் கருத்துக்களை நாவல்கள் மூலம் வெளிப்படையாகப் பிரச்சாரம் செய்வதும் உண்டு. பங்கிம்சந்திரர் 'ஆனந்தமடம்' நாவல் மூலம் தேசியப் பிரச்சாரமே செய்தார். தகழி சிவசங்கரன் தமது நாவல்கள் மூலம் மார்க்ஸீயக் கொள்கைகளையே பிரச்சாரப்படுத்தியுள்ளார். தாமஸ்ஹார்டி விதிக்கோட்பாட்டுடன் தொடர்புடைய 'நிராசவாதம்' என்ற சித்தாந்தத்தையே பிரச்சாரம் செய்துள்ளார் என்கிறார் டாக்டர் கரீம். அறிஞர் வெல்ஸ் உலக சமாதானம், சகோரதரத்துவம், சர்வதேசப் பாராளுமன்றம், சர்வதேச சமஸ்டியரசாங்கம் ஆகிய வற்றை அடிப்படையாகக் கொண்ட ஒரு புதிய உலக அமைப்பைக் கனவு கண்டார். அவர் அவற்றைத் தம் எழுத்துக் களில் பிரச்சாரம் செய்தார்'.

நாவல் ஒழுக்கத்தையும் தத்துவத்தையும் நேரடியாகப் பிரச்சாரப் படுத்தும் இலக்கியமாக அமைந்து விடக்கூடாது. நாவலாசிரியன் பிரதிபலித்துக் காட்டும் வாழ்க்கை நிகழ்ச்சிகள் மூலம் தத்துவங்களை வாசகன் உணர்ந்து கொள்ளும் விதத்தில் அவை உட்புகுத்தப் பட்டிருக்க வேண்டும். உண்மைக் கலைஞர்கள் தங்களது படைப்பின் மூலம் கருத்துப் பிரச்சாரம் செய்தால் கூட் அதன் தொனி வெளிப்படையாகத் தெரியா வண்ணம் மிகவும் நுட்பமாக அமைத்து விடுகின்றனர்.

கலை வாழ்க்கைக்காகவே

எழுத்தாளர்கள் சமுதாயத்தின் உயர்வுக்காகத் தங்களது எழுது கோலைப் பயன்படுத்த வேண்டும். அதன் மூலம் சமூக மாற்றத் திற்கு வித்திடவேண்டும். இக்கொள்கைகளில் நம்பிக்கை உடைய முற்போக்கு எழுத்தாளர்கள் ''கலை கலைக்காக'' என்ற கொள்கையை எதிர்க்கின்றனர். எழுத்துக்களின் அடிநிலைக் கொள்கையே மனிதாபிமானம் என எண்ணும் இவர்கள்,

மனிதாபிமானத்தின் உயர்வுக்காகப் பாடுபடாத கலையினால் நன்மை இல்லை என்கின்றனர்.

மலையாள நாவலாசிரியர்களான பொன்குன்னம் வர்க்கி, கேசவதேவ், ஜோசப்முண்டசேரி, தகழி ஆகியோர் மனிதத்துவத்தினுடைய உயர்வு தான் இலக்கியத்தின் இலட்சியம் என்றனர். இவர்களால் உருவாக்கப்பட்ட 'முற்போக்கு எழுத்தாளர் சங்கம்', கடந்த கால வாழ்வியலை நன்கு அறிந்து நிகழ்கால வாழ்க்கையை உற்றுநோக்கி நிறைந்த சமூக உணர்வோடு இலக்கியத்தைப் படைக்க வேண்டும் என அறை கூவியது.

சமூகப் பிரச்சனைகளை விவரிக்கும் நாவலாசிரியன் அதன் மூலம் தனது வாழ்க்கை அனுபவங்களை உணர்த்தி, எதிர்காலச் சமூக வாழ்க்கையைச் சிறப்புடையதாக்கும் வண்ணம் வாசகர்களை அழைத்து செல்லவேண்டும். சுரண்டல்கள் நடக்கும் விதங்களைத் தன் படைப்பில் வெளிப்படுத்தி, அதற்கு எதிராக மக்களை அணிதிரள வகை செய்யும் தூண்டுதல் உணர்வை மனித மனங்களில் ஊட்டும் வண்ணம் அவனது படைப்பு அமையப் பெறவேண்டும். சமூக உயர்வே நாவலின் அடிப்படைக் கொள்கையாக விளங்கவேண்டும்.

பின்புலமும் வாழ்க்கைத் தத்துவமும்

தத்துவம் தனி மனிதனுடைய அறிவிலிருந்து உருவாகிவிடக் கூடிய ஒன்றன்று. நாவலாசிரியனின் தனித்தன்மைகளுடன் அவன் வாழ்ந்த காலம், இடம், சமூகம், சமூகம் சார்ந்த பண்பாடு ஆகிய வற்றுடன் அது தொடர்புடையது. அதைப்போன்று நாவலில் கூறப்படும் தத்துவமும் நாவலின் பின்புலத்துடன் தொடர்புடைய தாகவே அமையும்.

சமூகச் சூழல்களிலிருந்து கிடைக்கப்பெறும் வாழ்க்கைத் தத்துவம் காலத்தோடும் தொடர்புடையது. காலம் மாறக்கூடிய ஒன்றாகும். காலத்திற்கு ஏற்ப மக்களது சிந்தனைப் போக்குகள், நாகரீகம், பண்பாடு, கலை ஆகியவனவும் மாறுகின்றன. எனவே நாவலாசிரியன் காலத்திற்கு ஏற்ற தத்துவப் பார்வை உடையவனாக விளங்கவேண்டும்.

முடிவுரை

வாழ்க்கைத் தத்துவமே நாவலுக்கு நிலைபேற்றை அளிக்கிறது என்றால் அஃது மிகையாகாது. சமூக மேம்பாட்டை மனதில் எண்ணிப் படைக்கப்படும் நாவல்கள் காலங்கடந்தும் கடல் கடந்தும் வாழ்க்கை நடத்தும் என்பது உறுதி.

இரா. சோதிவாணன்
சி. அப்துல் அக்கீம் கல்லூரி
மேல்விசாரம் – 632 509

திருக்குறளில் 'தண்டனை இயல்'

முன்னுரை

திருக்குறள் தமிழர்களின் தலையாய அறநூல்; 'எல்லாப் பொருளும் இதன் பாலுள' என்னும் சிறப்புடைய நூல்; படிப்பவரின் நோக்குக்கு ஏற்பப் பொருள்தரும் நுண்ணிய நூல். அவ்வகையில் சட்டத்தின் பார்வையில் இந்நூலில் இடம் பெற்றுள்ள 'தண்டனை இயலை' எண்ணித்தேர்வதே இக்கட்டுரையின் நோக்கம்.

மனத்துக்கு மருந்து

மனம் சாத்தானின் ஒரு தொழிற்சாலை என்று மேலை நாட்டினர் கூறுகின்றனர். ''மனசாட்சி உறங்கும்போது மனக்குரங்கு ஊர்சுற்றக் கிளம்பி விடுகிறது'' என்று கலைஞர் மு. கருணாநிதி கூறுகின்றார். எனவே மனத்தில் தீமையாகிய இடும்பு உடும்பாகப் பற்றிக் கொண்டால் சமுதாயத்தில் சீரான, அமைதியான, ஒழுங்கான முன்னேற்றம் ஏற்படாது. மரத்தின் வேருக்கு உரமிடுவது போல் மனிதமனத்துக்கு மருந்திட வேண்டும். அப்போதுதான் மனிதம் மலரும்; மன்பதையும் களியும். இவ்வுண்மையைப் பன்னெடுங்காலத்திற்கு முன்பே கண்டுணர்ந்த சான்றோர் மனித மனத்துக்கு அறமாகிய மருந்தைப் புகட்டும் உயர்ந்த கொள்கையைக் கொண்டனர். அதன்விளைவாகத்தான் பல அறநூல்கள்-நீதிநூல்கள் தமிழில் மலர்ந்தன. அவற்றுள் தலைமையும் தனித் தன்மையும் கொண்ட அறநூல், உலகம் போற்றும் திருக்குறள்.

பரிமேலழகரின் உரைப்பாயிரம்

திருக்குறளை 'அறம்' என்றே புறநானூற்றுப் புலவன் குறிப்பிட்டுப் பாடுகிறான். அத்தகு பெருமைக்குரிய திருக்குறள் அறம், பொருள், காமம், என்னும் முப்பால் கொண்டு ஒப்பற்ற நூலாக விளங்குகிறது. இந்நூலின் சிறந்த உரையாசிரியராம்

பரிமேலழகர் தமது உரைப்பாயிரத்தில் 'அறம்' என்பதற்குத் தந்துள்ள விளக்கம் இங்கே கருதத் தக்கது.

அறநூல்களில் விதித்தன செய்தலும் விலக்கியன ஒழிதலும் அறமாகும். ஒழுக்கம், வழக்கு, தண்டம் என அவ்வறம் மூவகைப்படும் என்கிறார் பரிமேலழகர். அவற்றுள் தண்டம் (தண்டனை) பற்றிய அவரின் விளக்கம் இங்குக் குறிக்கத்தக்கது.

'தண்டமாவது அவ்வொழுக்க நெறியினும் வழக்கு நெறியினும் வழீஇயினாரை அந்நெறி நிறுத்துதற்பொருட்டு ஒப்பநாடி அதற்குத் தக ஒறுத்தல்' என்பது அவரின் விளக்கம். அவ்விளக்கத்தின் கண்ணோடு திருக்குறளில் தண்டனை பற்றிய கருத்துக்களைத் திரட்டிக் காண்போம்.

குற்றங்கள்

அறநெறி ஒழுக்கத்திலிருந்து வழுவி அல்லவையாகிய தீவினைகள் செய்யும்போது அவை குற்றங்கள் ஆகின்றன. தனிமனிதன் ஒழுக்கம் தவறி இழைக்கும் தீவினை சமூகத்தின் சீர்மையைக் குலைக்கும் குற்றமாகிறது. அதனால் குற்றமிழைப்பவனுக்குத் தண்டனை வழங்குவது அரசனின் தலையாய கடமை ஆகிறது. முறைசெய்து காப்பாற்றும் மன்னவன் மக்கட்கு இறை என்று வைக்கப்படும் என்று வள்ளுவம் பேசுகிறது. 'முறை எனப் படுவது கண்ணோடாது உயிர் வெளவல்' என்னும் கலித்தொகை. அரச தண்டணையை 'முறை' என விளக்குகிறது.

குற்றம் புரியத் தூண்டுபவை

ஒரு மனிதன் குற்றம் புரிய அவனைத் தூண்டுபவை எவை என்று கண்டு அவற்றைத் தம்குறளில் பதிவு செய்திருக்கிறார். அவை நேற்று இன்று நாளை என என்றும் எண்ணிப்பார்க்கக் கூடியவையே. அழுக்காறு (பிறர் ஆக்கம் பொறாமை), அவா (புலன்கள் மேல் செல்கின்ற ஆசை), வெகுளி (அவை காரணமாக பிறர்பால் வரும் சினம்), இன்னாச் சொல் (அதுபற்றி வரும் கடுஞ் சொல்) என்ற நான்கும் குற்றங்களுக்குக் காரணமாகின்றன என்று வள்ளுவர் கூறுவது எக்காலத்துக்கும் பொருந்துவதுதானே. அக் கருத்துடைய குறள் இது:

அழுக்காறு அவாவெகுளி இன்னாச்சொல் நான்கும்
இழுக்கா இயன்றது அறம்.

இனித் திருக்குறளில் குற்றங்களுக்குரிய தண்டனையை நிரலாகக் காண்போம்.

அறத்துப்பாலில் - கற்பழிப்பு

இல்லாளுக்கு மனத்திண்மை என்னும் கற்பு வேண்டும். அக் கற்பு என்னும் புகழ்புரிந்த இல்லாள் இல்லாதவர்க்கு இகழ்வார் முன் ஏறுபோல் நடை இல்லை என்று வள்ளுவர் கூறுகிறார். எனவே ஒரு பெண்ணின் கற்பிழப்பு வீட்டுக்கும் நாட்டுக்கும் பழியேற்படுத்தும் குற்றமாகிறது. அவ்வாறே ஆண், பெண்ணைக் கற்பழிப்பதும் குற்றமாகிறது. அவற்றுக்குச் சிறைத்தண்டனை அரசனால் வழங்கப்பட்டிருக்கிறது. குறிப்பாகக் கற்பழித்த-குற்றம் புரிந்த ஆணுக்குச் சிறைத்தண்டனை வழங்கப்பட்டுள்ளது. கற்பழித்த பின்பு ஒருவனுக்குச் சிறைத்தண்டனை வழங்குவதால் என்ன பயன்? அப்பெண்ணின் கற்புக்கு ஊறு நிகழாவண்ணம் காக்கும் காவலே அரசனுக்குத் தலைமையான புகழைத் தரும் என்று வள்ளுவர் கூறுவது சிறப்புக்குரியது. இக்கருத்தை விளக்கும் அவரின் குறள் இது:

சிறைகாக்கும் காப்பெவன் செய்யும் மகளிர்
நிறைகாக்கும் காப்பே தலை.

பொற்கைப்பாண்டியன் வரலாற்றை நோக்கின் இக்குறளின் சீர்மை நன்கு விளங்கும்.

பிறனில் விழைதல்

திருக்குறளில் 'வாழ்க்கைத்துணைநலம்' என்னும் அதிகாரத்தில் பெண்ணுக்குக் கற்பை வலியுறுத்தி மூன்று குறள்களில் திருவள்ளுவர் கூறுகிறார். பிறனில் விழையாமை என்னும் அதிகாரத்தில் பத்துக்குறள்களிலும் பிறன் மனைவியை விழைதல் கூடாது என்று வலியுறுத்திப் பாடி இருக்கிறார் என்பதை நன்கு எண்ணிப்பார்க்க வேண்டும். பிறன்மனைவியை விழையும் குற்றத்திற்கு வள்ளுவர் காட்டும் தண்டனை அஞ்சத்தக்கதாகவே உள்ளது.

'பகை பாவம் அச்சம் பழியென நான்கும்
இகவாவாம் இல்லிறப்பான் கண்'

என்னும் குறளை ஆய்ந்தால் அவ்வுண்மை விளங்கும்.

பிறன் மனைவியைக்காமுறுகின்றவன் அவள் கணவனின் பகையைப் பெறுகிறான்; அரசனின் பகையைப் பெறுகிறான். பிறனுக்குரிய மனைவியைக் காமுற்று ஒழுகுவதால் அறமிழந்து பாவம் (குற்றம்) புரிகின்றான். தன் தீச்செயல் வெளியே தெரிந்தால் அவள்கணவன் என்ன செய்வானோ, அரசத்

தண்டனை என்ன கிடைக்குமோ என்ற அச்சம் அவனுக்குள்ளே எப்போதும் இருக்கும். அவள் கணவனால் கொல்லப்பட்டாலும் அல்லது அரசனால் தண்டிக்கப்பட்டாலும் பிறன் மனைவியை நயந்து கெட்டவன் என்னும் பழி அவன் இறந்த பின்னும் நீங்காமல் நிலைத்து நிற்கும்.

காயசண்டிகை வடிவத்தில் மணிமேகலை அமுதசுரபியின் உணவை மன்னுயிர்க்கு வழங்கும்போது உதயகுமாரன் அவளை நெருங்க, உண்மையான காயசண்டிகையின் கணவன் வாளெறிந்து உதயகுமாரனைக் கொல்வதை இங்கே நாம் நினைத்துப் பார்க்கலாம்.

இன்று இந்தியத் தண்டனைச் சட்டம், 497-ஆம் பிரிவு, பிறருடைய மனைவியைப் புணர்தல் என்னும் குற்றத்திற்கு ஐந்து ஆண்டுகள் வரை சிறைக்காவல் அல்லது அபராதம் அல்லது இரண்டும் தண்டனையாக விதிக்கப்படும் என்று கூறுகிறது; மேலும் மனைவியைக் குற்ற உடந்தையாகக் கருதித் தண்டனைக்கு உள்ளாக்க இயலாது என்கிறது.

கூடா ஒழுக்கம்

தவ வேடம் பூண்டவன், தான் விட்ட காம இன்பத்தை மீண்டும் விரும்பித் தன் மனமோடிய வழியே ஓடி மறைந்து பிறர்க்குரிய மகளிரை விழையும் தீய ஒழுக்கம் கூடா ஒழுக்கமாகும். தவவேடம் பூண்டவன் இவ்வாறு விழையும் கூடா ஒழுக்கம் பசுத்தோல் போர்த்து புலி மேய்வது போன்றது; வேட்டுவன் புதரில் மறைந்து நின்று பறவைகளை வலை வீசிப்பிடிப்பது போன்றது என்கிறார் திருவள்ளுவர். இக்குற்றத்திற்குரிய விளைவையும் கூறுகிறார் அவர்.

''பற்றற்றேம் என்பார் படிற்றொழுக்கம் எற்றெற்றென்று
ஏதம் பலவும் தரும்''

என்ற குறளில் வரும் 'ஏதம் பலவும் என்ற சொற்கள் எண்ணிப் பார்க்கத்தக்கவை.

என்ன செய்தோம் என்ன செய்தோம் என்று வருந்தும்படியான மனத்துன்பம் ஒன்று; அக்குற்றத்திற்கு அரசன் தரும் தண்டனைத் துன்பம் என மற்றொன்று; மக்களால் இழித்துப்பழித்து நகைத்துப் பேசும் அவமானத்துன்பம் என இன்னொன்று.

கூடா ஒழுக்கக் குற்றத்திற்கு இவ்வாறு ஏதம் பலவும் உண்டாகும் என்று வள்ளுவர் எச்சரிக்கிறார்.

களவாடுதல்

பிறர் பொருளை வஞ்சித்துக் களவாடுதல் குற்றமாகும்.

''கள்வார்க்குத் தள்ளும் உயிர்நிலை கள்ளார்க்குத்
தள்ளாது புத்தேள் உலகு''

என்ற குறள்வழிக் கள்வர்க்கு இவ்வுலகில் அரசனின் ஒறுப்பால் உயிர்நீங்கும் என்பதைத் தெளிவாகக் கூறுகிறார் திருவள்ளுவர்.

பொருட்பாலில்

திருவள்ளுவர் செங்கோன்மை என்னும் அதிகாரத்தில் தண்டனை பற்றித் தெளிவாகவே கூறுகிறார்.

''குடிபுறம் காத்தோம்பிக் குற்றம் கடிதல்
வடுவன்று வேந்தன் தொழில்''

என்னும் குறள்வழி நாம் அறியும் செய்தி இது: குடிகளைப் பிறர் வருத்தாமல் காத்துத் தானும் வருத்தாமல் காப்பாற்றி, அவர் களிடத்தில் குற்றம் நிகழின் தக்க தண்டனையால் ஒழித்தல் அரசனுடைய தொழில்.

எனவே குற்றம் புரிந்தவர்க்குக் கொற்றவன் தண்டனை வழங்கினான் என்று அறியலாம். மேலும் கொடியவர் சிலரைக் கொலைத்தண்டனையால் அரசன் ஒறுத்தல், பயிரைக் காப்பாற்றக் களையைக் களைவதற்கு நிகரான செயலாகும் என்று வள்ளுவர் பகர்கின்றார்.

முடிவுரை

தெய்வப்புலவர் திருவள்ளுவர் தம் நூலுள் 'தண்டனை' பற்றிய அடிப்படைக்குறிப்புக்களை அறத்துப்பாலிலும், பொருட் பாலிலும், காமத்துப்பாலிலும் வழங்கியுள்ளார். கற்பழிப்பு, பிறன்மனை விழைதல் என்னும் குற்றத்திற்குச் சிறைத்தண்டனை வழங்கப்பட்டுள்ளது. களவுக் குற்றத்திற்குக் கொலைத்தண்டனை வழங்கப்பட்டுள்ளது. பரிமேலழகர் விளக்கத்தின்படி தீயிடுவார், நஞ்சிடுவார், கருவியால் கொலைசெய்வார், கள்வர் சூறையாடு பவர், பிறனில் விழைவார் முதலிய குற்றவாளிகளுக்குக் கொலைத்தண்டனை வழங்கப்பட்டது என்று அறியலாம். கொலைத்தண்டனையை நிறைவேற்றும் இடம் கொலைக்களரி (கொலைக்களம்) தனியாக அமைந்திருந்தது என்று அறியலாம். இவ்வாறு திருக்குறளில் 'தண்டனை இயல்' இடம் பெற்றுள்ளது என்பதை உய்த்துணர்ந்து மகிழ்வோம்.

ச. சோமசுந்தரம்
பிசப் ஹூபர் கல்லூரி
திருச்சிராப்பள்ளி – 620 017

நாட்டுப் புறப் பாடல்களில் அகப்பொருள் மரபுகள்

'கைக்கிளை முதலாப் பெருந்திணை இறுவாய்' என்று பேசப்படும் அகப்பொருட்பான்மை தமிழருக்குரிய தனிச்சிறப் பாகும். தமிழர்தம் செம்மாந்த வாழ்வின் தன்மைகளையும், வரையறைகளையும் பண்பாட்டினையும் அகப்புறப் பாடல்களின் மூலம் அறிகிறோம். தமிழர்தம் அகவாழ்க்கை மரபுகள் நாட்டார் வழக்காற்றிலும் பின்பற்றப்பட்டமையைப் பாமரர் பாடல்கள் பறை சாற்றுகின்றன. அன்பின் ஐந்திணையோடு கைக்கிளை, பெருந்திணைக்குரிய ஒழுகலாறுகளும் நாட்டுப்புறப்பாடல் களின் மூலம் வெளிப்பட்டுள்ளமையைக் காணமுடிகிறது.

களவு

பருவம் எய்திய தலைவனும் தலைவியும் தினைப்புனத்தே ஒருவரையொருவர் கண்டு காதல் கொண்டதை, 'நாட்டம் இரண்டும் அறிவுடம் படுத்தற்குக் கூட்டியுரைக்கும் குறிப்புரை யாகும்' என்றது தொல்காப்பியம். 'கண் தரவந்த காம ஒள்ளெரி' என்பது குறுந்தொகை. நாட்டுப்புற நங்கையோ தனக்கு நேர்ந்ததை,

'சமர்த்தனென்றும் நானறியேன்
அமர்த்தனென்றும் நானறியேன்
யாரு பெற்ற பாலகனோ
இரண்டு அம்பு விட்டுப் போறானே'

என்று கண்கலப்பைக் கூறுகிறாள். அவளோடு உள்ளப் புணர்ச்சி கொண்ட தலைமகன் முதல் நாள் கண்ட இடத்தே மீண்டும் காண வேண்டி இடந்தலைப் பட்டுச் செல்கிறான். 'தண்ணிக் குட மெடுத்துத் தனிவழியே போற பெண்ணே, தண்ணிக்குடத்தி னுள்ளே தளும்புதடி எம்மனசு' என்று தனது தவிப்பை வெளிப் படுத்துகின்றான்.

'ஒன்றே வேறே என்றிரு பால்வயின் ஒன்றி உயர்ந்த பாலதாணையின் ஒத்த கிழவனும் கிழத்தியும் கொண்ட காதல் அவளுக்கும் தவிப்பை ஏற்படுத்துகின்றது. காதல் கொண் டோர்க்குக் கசப்பது இனிக்கும்; இனிப்பது கசக்கும்.

''காய்ச்சிய பாலும் கசக்குதும்பா
கையுட்ட தேனும் புளிக்குதும்பா
வேப்பங் கொழுந்தும் இனிக்குதும்பா..புள்ளே
வெள்ளரிப் பிஞ்சும் கசக்குதும்பா''

என்று பாடுகின்றனர். 'ஓடுற தண்ணியிலே ஓரசிவிட்டேன் சந்தனத்தை, சேந்துச்சோ சேரலியோ செவத்த மச்சான் நெத்தி யிலே' என்று தூது விடும் பாடல்களும் உண்டு.

அலர்

'பழிபரந்தலர் தூற்ற என்தோழி, அழிபடர் அலைப்ப அகறலோ கொடிதே' என்று கலித்தொகையும், 'அம்பல் மூதூர் அலர்வாய்ப்பெண்டிர்' என்று நற்றிணையும் நவிலும் அலர் கேட்டு நாட்டுப்புறத் தலைவியும் நொந்து போகிறாள்.

'ஆல மரமுறங்க அடிமரத்துக் கிளியுறங்க
உன் மடிமேல் நானுறங்க உலகம் பொறுக்கலியே'

என்று பாடுவதோடு தலைவன் தலைவியர் சந்திப்பில் ஏற்படும் தடைகளையும் பாடல்கள் புலப்படுத்துகின்றன. பகற்குறி, இரவுக் குறி இடையீடுகளையும் தலைவன் தலைவியரின் எண்ண வோட்டங்களையும் பாடல்களில் காண்கிறோம்.

'விளக்கேத்தி இருசாமம்
வெள்ளி நிலா வேளையிலே
குளத்தோரம் வந்திடுவ
கூடிக் கதைத்திடலாம்' என்று தலைவன் பாட

'சாமம் அறிஞ்சி
தலைவாசலில் வந்து நின்று
கோழி போலக் கூவுராசா-உன்
குரல் கேட்டு வந்திடுவேன்'

என்று தலைவி பாடக் கேட்கிறோம். இரவுக்குறியில் ஏற்படும் இடையீடுகளாகத் தாயும், நாயும், ஊர்துஞ்சாமையும், காவலர் கடுகுதலும், நிலவு வெளிப்படுதலும், கூகைகுழறுதலும், கோழி குரல் காட்டலும் நிகழ்கிறது. 'கள்ள நிலாவே நீ கருக்கல் இட்டால் ஆகாதோ' என்று நிலவு மறைய வேண்டுமென்கின்றனர்.

இருட்டை இருட்டடிக்க, இந்திரனைப் பேயடிக்க, சாமவழி நடந்து வந்த தலைவனால் தலைவியைச் சந்திக்க முடியவில்லை. இற்செறிப்பு நிகழ்ந்து விட்டது. ஏமாற்றமடைந்த தலைவன்,

''நாதங்கி கதவுலடி...ஒண்ணன்மார்
நாலுபேர் காவலடி
வேட்டை நாயும் வீதியிலே
உன் வீட்டுக் காவலடி'' என்கிறான்.

சேவல்கூவியதால் சிக்கல் நேர்ந்ததென்று 'ஒரு குடுவைப் பொங்க லிட்டுச் சேவலைத்தான் அறுத்திடலாம்' என்கிறாள் தலைவி.

'அறத்தொடு நின்றேனைக் கண்டு திறப்பட
என்னையர்க் குய்த்துரைத்தாள் யாய்'
என்று இற்செறிக்கப்பட்ட தலைவி அறத்தொடு நிற்பாள்.
பச்சைப் பரங்கிக் காயாம் - யம்மா
பாதையோரம் காய்ச்சிருக்க
பாதுகாக்க வேணுமின்னு
பயிர நல்லா கெடுத்திங்களே'

என்று வருந்துகிறாள். காத்திருந்து வருத்தப்பட்ட தலைவனோ விடியும் வரை காத்திருத்தமைக்குக் கதவு நிலை சாட்சி சொல்லும் என்று பாடுகிறான். தலைவனைச் சந்திக்க இயலவில்லையே என்று தலைவி தோழியிடம் புலம்பும் அகப்பாடல்களைச் சங்க இலக்கியம் போலவே நாட்டுப்புறத்திலும் அதிக அளவில் கேட்க முடிகிறது.

அறத்தொடு நின்ற தலைவி வேறு வழியற்ற நிலையில் உடன் போக்குக்கு ஒருப்படுகின்றாள். 'தன்னமர் ஆயமொடு நன் மண நுகர்ச்சியின் இனிதாங்கொல்லோ. வயக்குறு வெள்வேலவற் புணர்ந்து செலவே' என்கிறது குறுந்தொகை. 'சாலை கடந்து வாடி, சந்தைப் பேட்டை தாண்டி வாடி, ஓடிப் போவோம் திருநெல்வேலி' என்றும், அலர்பேசும் ஊரார்மீன் 'ஓமலிப்பு தீரு முன்னே ஓடிடுவோம் ரெண்டு பேரும்' என்றும் உடன் போக்கு செல்லவும் துணிகின்றனர்.

பிரிவு

களவு முடிந்து கற்பு வாழ்வில் நுழைகையில் தலைவிக்குத் தலைவன் சூளுறை மொழிகிறான்.

''நன்மொழிச் சர்க்கரைக் கஞ்சி வார்த்துச் சில
நாள் போன பின்பு விட்டோடாமலே

அன்புடன் அல்லும் பகலும் வைத்துன்னை
ஆதரிப்பேன் முத்து வீராயி''

என்று பேசுகிறான்.

பிரியேன் என்றுரைத்த தலைவன் பொருள் வயிற் பிரிய நேருகிறது. 'பிழையவள் மாதோ பிரிது நாம் எனினே', 'செல்லாமை உண்டேல் எனக்குரை' என்றுள்ள தலைவியிடம் எப்படிப் பிரிவைச் சொல்வது

''போயிடட்டா என்று சொல்லி
என்னை வந்து கேளாதே
போவேன்னு சொல்லப்
பொருந்தாதே என் மனசு''

என்று பாடுகிறான். பிரிவால் உடல் இளைக்கிறது. பசலை படர்கிறது. 'எலும்பிருக்கச் சதை குறைய என்ன குத்தம் செய்தே னையா' என்று கேட்கிறாள்.

பரத்தையிடம் பிரிந்து சென்ற கணவனை வாயில் நேர்தலும், வாயில் மறுத்தலும் ஆகிய அகத்துறைகளை நாட்டுப்புறப் பாடல் களும் மொழிகின்றன. 'தங்கத்துக்குத் தங்கம் தனித்தங்கம் நானிருக்க, பித்தள தங்கத்துக்குப் பித்தாசை கொள்ளலாமா' என்று கேட்கிறாள்.

'உச்சியிலே பூத்தபூ உத்தமியா நானிருக்க
ஊசடிச்ச பூவுக்காகச் சாந்து பொட்டழகா
நீங்க ஊரு மேல சுத்தலாமா.... மனசுக்கேத்தவரே''

என்று பாடுகிறாள். கவுச்சடிச்சபூ, ஊசடிச்சபூ என்று பரத்தை குறிக்கப்படுகிறாள்.

'பரத்தமை தாங்கலோ இலரென வறிது நீ புலத்தல் ஒல்லுமோ' என்று அகநானூற்றில் பொறுத்துத் தாங்கும் திறமை தலைவிக்கு வேண்டும் என்று தோழி கூறுவாள். ''மன்னன் வருவாரென்று மல்லிகைப்பூ வாங்கி வச்சேன். மன்னன் வரலையே, மல்லிகைப்பூ வாடிப்போச்சே,'' என்று தலைவனின் பரத்தமைப் பிரிவைத் தாங்க இயலாது நாட்டுப்புறத் தலைவி தவிக்கிறாள்.

பிரிவுத்துயரால் தலைவனிடம் தலைவி ஊடல் கொள்ளுகிறாள். தலைவன் தலைவியிடம் சமாதான மொழிகள் பேசுகிறான்.

ஒரு ரூபாதாரேன் ஒத்தபதக்கமும் தாரேன்
வஞ்சிக்கொடி மானே கொஞ்சிக்கிடவாடி...

என்று பல பொருட்களைத் தருவதாகக் கூறி ஊடல தீரக் கோருதலும் நிகழ்கிறது. ஊடல் தீர்ந்து தலைவன் தலைவி இன்பமாக வாழ்வதை வெளிப்படுத்தி ஏராளமான பாடல்கள் வழங்கி வருகின்றன.

ஒருதலைக் காதலாகிய கைக்கிளை, 'வெத்தலையில் மை எழுதி, வெயில் கொஞ்சம் காயப்போட்டே மை கொஞ்சம் உருகுனாலும் மனசு கொஞ்சம் உருகாதடி' என்று தலைவி பாடுகையில் விருப்பமற்ற நிலை வெளிப்படுத்தப்படுகிறது. பொருந்தாத காதல் பற்றிய செய்திகளும் பாடல்களில் புலப் படுத்தப்பட்டுள்ளன.

தமிழர்தம் சங்க அகப்பாடல்களில் காணப்படும் உள்ளுறை இறைச்சி போன்ற உத்திகளும் நாட்டுப்புற வழக்காறுகளில் புலப்படுகின்றன.

எம். சோலையன்
அழகப்பா பல்கலைக்கழகக் கல்வியியல் கல்லூரி
காரைக்குடி

பாரதியாரும் ஆப்பிரிக்கக் கவிஞர்களும்

மகாகவி பாரதியாரின் கவிதைகள் உலகப் பெருங் கவிஞர்களின் கவிதைகளோடு ஒப்புநோக்கி இன்புறத்தக்கவை. மேலை நாட்டுக் கவிஞர் பலருடனும் பாரதியாரை ஒப்பிட்டுத் திறனாய்வாளர் பலர் கட்டுரைகள் பல தீட்டியுள்ளனர். ஆப்பிரிக்க நாட்டுக் கவிஞர்களின் கவிதைகளுடன் பாரதியாரின் கவிதைகளை ஒப்பிட்டு உணர்ச்சி ஒருமைப்பாட்டை எடுத்துக்காட்டுவதே இக் கட்டுரையின் நோக்கம் ஆகும்.

தாய்நாட்டின் பெருமையும், சிறுமையும்

பாரதியார் ஆங்கில ஆட்சிக்கு முற்பட்ட இந்தியாவின் சிறப்பை எண்ணிப் பார்க்கிறார், அயலவர் ஆட்சியின்கீழ் இந்திய நாடு படும் அவலங்களையும் எண்ணிப் பார்க்கிறார் அவர். அதன் விளைவுதான் ''எனது தாய்நாட்டின் முன்னாட் பெருமையும் இந் நாட் சிறுமையும்'' என்னும் பாடல். ''புன்னகையும் இன்னிசையும் எங்கோ ஒடி ஒளிந்து கொண்டுவிட்டன. துன்பமும் கண்ணீரும் இரும்பாகி விட்டன. வீராதி வீரர்கள் எல்லாம் மறைந்து போய் ஏமாறி நிற்கும் இழிஞர்களே இங்கு உள்ளனர். ஆரியர்கள் வாழும் அற்புத நாடென்பது போய்ப் பூரியர் வாழும் புலைத் தேசமாயிற்று, வேத உபநிடத நூல்களெல்லாம் போய்ப் பேதைக் கதைகள் பிரபலம் ஆகிவிட்டன. வேதம் ஓதிய பெண்கள் வீதி பெருக்கும் அடிமைகளாக மாறினர். செந்தேனும் பாலும் தெவிட்டி நின்ற நாட்டில் பஞ்சம் பரவலாயிற்று. மாமுனிவர் தோன்றிய நாட்டில் காமுகரும் கள்வரும் சூழ்ந்து கொண்டனர். பொன்னும் மணியும் பொங்கி நின்ற நாட்டில் இன்று அன்னமின்றி அழிவார்கள் பலர்'' என்று வருந்திக் கூறுகிறார் பாரதியார்.

தனது முப்பத்து மூன்றாம் வயதிலேயே விமான விபத் தொன்றில் உயிரிழந்த டேவிட் டியோப் என்னும் ஆப்பிரிக்கக் கவிஞர் வெள்ளையர் ஆட்சியை எதிர்த்துக் குரல் கொடுத்தவர்.

'ஆப்பிரிக்கா' என்னும் கவிதையில் தனது தாயகத்தின் முன்னாட் பெருமையையும் பின்னர் நேர்ந்த அடிமைத்தனத்தின் இழிவையும் விவரிக்கிறார் அவர்:

''ஆப்பிரிக்கா, என்னுடைய ஆப்பிரிக்கா!
சவான்னாப் புல்வெளியின் பெருமைமிகு போர் வீரரைக்
கொண்ட ஆப்பிரிக்கா!
என்னுடைய முன்னோரால் புகழ்ந்து பாடப்பெற்ற
ஆப்பிரிக்கா!
உன்னுடைய குருதி என்னுடைய நரம்புகளில் ஓடிக்
கொண்டிருக்கிறது.
வயல்களை வளமாக்கும் உன்னுடைய அழகான கறுப்புக்
குருதி அது!
உன்னுடைய வியர்வையால் விளைந்த குருதி அது!
உன்னுடைய உழைப்பால் வந்த வியர்வை அது!
உன்னுடைய அடிமைத் தனத்தால் திணிக்கப்பட்ட உழைப்பு
அது!
ஆப்பிரிக்கா! என்னிடம் சொல்லிவிடு ஆப்பிரிக்கா!
வளைந்து கிடக்கும் இந்த முதுகு உன்னுடையதுதானா?
அவமானத்தின் பாரத்தால் உடைந்து போகிற முதுகு -
சிவப்புத் தழும்புகளுடன் நடுங்குகிற முதுகு -
உச்சி வேளையிலே சவுக்கிற்குப் பதிலளிக்கும் முதுகு -
உன்னுடையது தானா?''

நடிகர்கள்

நெஞ்சில் உரமுமின்றி, நேர்மைத் திறமுமின்றி வஞ்சனை செய்யும் வாய்ச்சொல் வீரனைப் பற்றி 'நடிப்புச் சுதேசிகள்' என்னும் பாடலில் விவரிக்கிறார் பாரதியார்.

''கூட்டத்தில் கூடி நின்று கூவிப் பிதற்றுவார்களே தவிர உள்ளத்தில் உறுதி கொள்ளமாட்டார்கள் அவர்கள். கண்கள் இரண்டிருந்தும் காணும் திறமையற்ற பெண்களின் கூட்டமது! உப்பென்றும் சீனி என்றும் உள்நாட்டு சேலை என்றும் நாவினாற் சொல்வார்கள். ஆனால் செயலில் ஏதும் காட்டமாட்டார்கள். மாதரைக் கற்பழித்து வன்கண்மை பிறர் செய்ய, உயிரே பெரிதென்று அஞ்சிக் கிடப்பார்கள். அச்சமும், பேடிமையும், அடிமைச் சிறுமதியும் உச்சத்திற் கொண்டவர்கள் அவர்கள். மானம் சிறிதென்றும் வாழ்வு பெரிதென்றும் எண்ணுபவர்கள் அவர்கள். சொந்தச் சகோதரர்கள் துன்பத்தில் சாதல் கண்டும் சிந்தை இரங்கமாட்டார்கள். பஞ்சத்திலும் நோய்களிலும் மக்கள்

வாடக்கண்டு ஏதும் செய்யாமல் சோம்பிக் கிடப்பார்கள்'' என்று சினந்து பேசுவார் பாரதியார்.

ஆஸ்வால்ட் எம்புயிசேனி மிட்ஷாலி என்னும் ஆப்பிரிக்கக் கவிஞர் 1940ஆம் ஆண்டு பிறந்தவர். 'கடந்து செல்கிறவன் மட்டுமே' என்னும் பாடலில் சொந்தச் சகோதரன் துன்பத்தில் சாதல் கண்டும் சிந்தை இரங்காது தன் உயிரே பெரிதென்று கடந்து சென்ற ஒருவனைப் பற்றி எழுதுகிறார் கவிஞர். ''அவனை அவர்கள் உருட்டுக் கட்டையால் அடிப்பதைப் பார்த்தேன். வலியினால் அவன் வீறிட்டு அலருவதை நான் கேட்டேன். அவனுடைய மூக்குத் துளைகளிலிருந்து வெளிப்பட்ட புது இரத்தம் தெருவில் வழிந்தோடுவதை உணர்ந்தேன். நான் தேவாலயத்திற்குள் நடந்து சென்று மண்டியிட்டேன். பிரபுவே! நான் உன்னை நேசிக்கிறேன். என்னுடைய அண்டை வீட்டானையும் கூட நான் நேசிக்கிறேன். ஆமென்! ''என்று கூறிவிட்டு வெளியே வந்தேன். தூய ஆவியின் கன்னத்தில் தேவதை முத்தமிட்டாற் போன்று என்னுடைய இதயம் மிகவும் இலேசாகிப் போயிருந்தது. வீடு திரும்பிய வேளையில் வேடிக்கை பார்க்கத் திரண்டிருந்த கும்பலைக் கடந்து சென்றேன். என் பக்கத்து வீட்டுக்காரி அப்போது வந்து, கேட்டாயா? உன் சகோதரனை அவர்கள் கொன்று விட்டார்கள்!' என்றாள். 'இல்லை! நான் எதையும் கேட்கவில்லை. நான் தேவாலயத்திற்குச் சென்றிருந்தேன்!' என்று நான் விடையளித்தேன்.

தென் ஆப்பிரிக்காவில் வாழ்ந்த மக்களின் கையாலாகாத் தனத்தைத் தாக்கிப் பாடியுள்ளார் கவிஞர். தன் கருத்தை நேரடியாகயின்றி மறைத்து (Using irony) வெளியிடுகிறார் அவர். கொலைகாரர்களிடம் அன்புவற்றிப் போனதையும், கொலையுண்டவனின் சகோதரன் உடன் உதவிக்கு வராமல் தேவாலயத்திற்குச் சென்ற வகையில் சங்கடத்திலிருந்து தப்பிக்கும் தந்திரம் கொண்டதையும், சிக்கலில் இருந்து விலகிச் செல்ல வழிவகுக்கும் மதத்தையும், கையாலாகாத சமுதாய அமைப்பையும் நன்கு படம்பிடித்துக் காட்டுகிறார் கவிஞர்.

பண்பாட்டுச் சிக்கல்

அயலவர் ஆட்சிக்குட்பட்ட பகுதிகளில் ஆட்சியாளர் கொண்ட பண்பாட்டின் தாக்கம் ஆளப்படுவோர் மீது விளைவுகளை ஏற்படுத்தியிருக்கிறது. வெள்ளையர் ஆண்ட காலத்தில் தமிழகத்தில் மக்களிடையே இருவிதக் கருத்துக்கள் உலவின. 'மேற்றிசை வாழும் வெண்ணிற மக்களின் நடையும், உணவும்,

உடையும், கொள்கையும் மதமும், குறிக்கோள்களும் நம்முடைய வற்றினும் சிறந்தன. எனவே, அவற்றை முழுவதும் தழுவி மூழ்கிட வேண்டும்' என்று ஒரு சாரார் கருதினர். மற்றொரு சாராரோ 'நமது மூதாதையர் நயமுறக் காட்டிய ஒழுக்கமும் நடையும் கிரியையும் கொள்கையும் ஆங்கவர் காட்டிய அவ்வப்படியே தழுவிடின் தமிழர்க்கு வாழ்வு உண்டு' என்று கூறினர். 'தமிழ்ச் சாதி' என்னும் பாடலில் பாரதியார் கீழ்வரும் வினாவை எழுப்புகிறார்.

''இங்கிவ் விருதலைக் கொள்ளியின்
இடையே நம்மவர் எப்படி உய்வர்?
விதியே! விதியே! தமிழச் சாதியை
என் செயக் கருதி இருக்கின்றாயடா?''

பிராகோ டியோப் என்னும் ஆப்பிரிக்கக் கவிஞர் ஆப்பிரிக்கர்கள் தங்கள் முன்னோர் காட்டிய நெறிமுறைகளைக் கைவிட்டு ஐரோப்பிய நடைமுறைகளைக் கையாண்டமைக்குக் கண்டனம் தெரிவிக்கிறார். 'நம்முடைய முன்னோரின் குரல்களுக்கு மதிப்புத் தராமல் நாம் செவிடரானோம். அவர்களுடைய குரல்கள் நம் நிலத்தில் நீரிலும் காற்றிலும் மிதந்து கிடக்கின்றன. குருட்டுச் செவிடராகிய நாம் அவர்களுடைய குறிப்புகளை உணரமாட்டாமல் பிறகு வருந்தியழுதால் எந்த உள்ளம் அதனைக் கேட்கும்?' என்று சாடுகிறார் டியோப். கோஃபி அவூனார் என்னும் கவிஞர் ஆப்பிரிக்கர்கள் தம்மை ஆண்ட ஐரோப்பியரின் நடையுடை மற்றும் பேச்சினைக் கையால்வதைக் கண்டிக்கிறார். அப்படிச் செய்வதால் நம் நாடு வறண்ட நாடாகிறது. நம்முடைய பாடல்கள் இறந்த பாடல்களாகின்றன. பேரிலக்கைக் குறிவைத்தவர்கள் பயணம் இடையில் தடைப்பட்டுப் போகிறது' என்று கூறுகிறார் அவூனார்.

காதலியும் இயற்கையும்

பாரதியார் கண்ணம்மாவைக் காதலியாகக் காணும் போது அவளுடைய விழிகள் சூரிய சந்திரராகத் தெரிகின்றன. கரிய விழி வானத்தின் கருமையாகத் தெரிகிறது. அவளுடைய புன்னகை சோலை மலரொளியாகிறது. அவளுடைய குரலினிமை சோலைக் குயிலோசையாகிறது. மேலும் காதலியைப் பாயுமொளியாகவும் தூய சுடர் வானொளியாகவும், வான் மழையாகவும். வெண்ணிலவாகவும் பாரதியார் காண்கிறார். லிபால்டு செடார் செங்கார் என்னும் ஆப்பிரிக்கக் கவிஞரும் காதலியின் உருவில் இயற்கையைக் காண்கிறார். 'உன்னுடைய பெயர் சின்னமன் என்னும் வாசனைத் திரவியம் போல் மென்மையானது! உன்னுடைய

பெயர் இனிமையூட்டப் பெற்ற காப்பிச் செடியின் தெளிவுடையது. மேலும் அது பூத்திருக்கும் சவான்னா புல்வெளியியை ஒத்திருக்கிறது. உன் பெயர் புலியமர நிழலைவிடப் புத்துணர்ச்சி தரவல்லது. வெம்மை தணிந்த அந்தி வேளைப் பொழுதைக் காட்டிலும் புத்துணர்ச்சி தரவல்லது உன் பெயர். மேலும் உலர்ந்த சுழல் புயற்காற்றாகவும், மின்னல் ஒளியாகவும், தங்க நாணயமாகவும், மின்னுகிற கரியாகவும், இரவாகவும் சூரியனாகவும் தன் காதலியைக் காணுகிறார் கவிஞர் செங்கார். பாடலின் இறுதியில் செங்கார் 'நான் உன் பெயர்களை உச்சரிக்கும் மந்திரவாதியாகிறேன்!' என்று கூறி முடிக்கிறார். கவிஞர் தாய் நாட்டையே காதலியாக உருவகித்ததாகவும் சிலர் கூறுவர்.

இயற்கையின் சீற்றம்

'ஆப்பிரிக்கப் புயற்காற்று' என்னும் பாடலில் ஒலிக்குறிப்புச் சொற்களையும் (Onomatopoea) மோனைச் சொற்களையும் பயன்படுத்திப் புயற்காற்றின் வலிமையினைப் படிப்பவர்க்குக் கவிஞர் ருபாதிரி விளக்குவதாக வின்சென்ட் மற்றும் செனானு குறிப்பிடுகின்றனர். சூல் கொண்ட முகிற் கூட்டங்களின் விரைவையும், காற்றில் வளையும் மரங்களையும், குழந்தைகளை முதுகில் சுமந்து அங்குமிங்கும் ஓடும் பெண்டிரையும் பற்றிப் பாடியுள்ளார் கவிஞர் ருபாதிரி. தமிழ்க் கவிஞர் பாரதியாரும் 'மழை' என்னும் பாடலில் இயற்கையின் சீற்றத்தை ஒலிநயத்துடன் எடுத்துரைக்கிறார். 'தீம் தரிகிட' 'சட்டச் சட டட்டா' என்னும் ஒலிக்குறிப்புச் சொற்களும் 'கொட்டி யிடிக்குது மேகம், கூகூவென்று விண்ணைக் குடையுது காற்று' என்ற பாடல்வரியும் பாடலுக்கு அழகு சேர்ப்பனவாகும்.

நெஞ்சத் துணிவு

அடக்கி ஆள்வோர்க்கு எதிரான தனி மனிதனின் நெஞ்சத் துணிவினை எடுத்துக்காட்டும் பாடல் முக்தார் முஸ்தபாவின் பாடலாகும். 'என் கண்களில் முள்ளம் பன்றியின் முள்ளைச் செருகு. என்னுடைய மூக்கிலே ஊசியை நுழை. என் உதடுகளைக் கிழி.' என்று துவங்கும் பாடல் பல கொடுமைகளைப் பட்டியலிட்டு இறுதியில் 'இது தான் சாவா?' என்ற அலட்சியமான கேள்வியுடன் முடிகிறது.

ஆப்பிரிக்காவும், இந்தியாவும் பல ஆண்டுகள் வெள்ளைய ராட்சிக்கு உட்பட்டுக்கிடந்தவை. எனவே அங்கு வாழ்ந்த கவிஞர்களின் உணர்வுகளிலே அந்நியர் ஆட்சி எதிர்ப்புணர்வு, பண்பாட்டுக் காப்புணர்வு, ஓங்கி நிற்றல் வெள்ளிடை மலை.

பொன். சௌரிராசன்

திருப்பதி

ஆனந்த விகடன் தலையங்கங்கள் - ஒரு பார்வை

மாடக்குச் சித்திரமாய் மாநகர்க்குக் கோபுரமாய் இதழுக்குத் தலையங்கம் அமைந்துள்ளது. கெடுப்பதுவாய், கெட்டாரை மற்றாங்கே எடுப்பதுவாய் விளங்குகின்ற பத்திரிகையில் சிறந்த பகுதி தலையங்கம். சமுதாய, அரசியல், சமயச் சிக்கல்களாக, நாட்டில் எழும் சிக்கல்களைக் குறிப்பிட்டு, அவற்றுக்குத் தக்க தீர்வுகளைத் தெளிவு செய்வது தலையங்கத்தின் பணி. நல்லது இது தீயது இது என்ற தெளிவை, விழிப்புணர்வை மக்களிடையே தோற்றுவித்து அவர்கள் நல்லதைப் போற்ற அல்லதைப் போக்கத் தூண்டுவது அதன் கடமை.

1998 சனவரி தொடங்கிச் சூன் முடிய வந்துள்ள ஆனந்த விகடன் இதழ்களில் அதன் அரசியல் சிந்தனை பற்றிய தலையங்கங்களே இங்கு எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளன. அவற்றின் வழி விகடன் மக்களிடையே எழுப்பிய விழிப்புணர்வும், அந்த உணர்வை எந்த அளவு மக்கள் ஏற்றுக்கொண்டனர் என்ற கணிப்பும், அதற்கான காரணங்களும் ஓரளவு சுட்டப்பெறுகின்றன.

நாடாளும் மன்றத் தேர்தல் கூட்டணி ஆட்சியில் செல்வி ஜெயலலிதாவின் பங்கும் பாங்கும், நிர்வாக ஊழல், அணுகுண்டு சோதனை - இவை அத் தலையங்கங்களில் அரசியல் பற்றிய செய்திகளாக வந்துள்ளன.

மக்கள் ஆட்சியில் தேர்தல் இன்றியமையாத இடம் பெற்றுள்ளது. மார்ச்சு 1998-இல் அமைந்த மைய அரசுக்கான தேர்தல் பற்றிச் சனவரியிலிருந்தே விழிப்புணர்வை மக்களிடையே விகடன் தோற்றுவித்துள்ளது. விடுதலை பெற்ற தொடக்கக் காலத்தில் ஒவ்வொரு கட்சியும் தத்தம் கொள்கைகளை முன் வைத்துத் தேர்தலில் பங்கு பெற்று வந்துள்ளன. கட்சித் தலைவர்களே கட்சி வெற்றி பெறின் முதல் அமைச்சர், பிரதமர்

பதவியை ஏற்று அமைச்சரவை அமைத்து வந்துள்ளனர். இப்போது அந்நிலை மாறிவிட்டது. சில பல கட்சிகள் வெவ் வேறு கொள்கைகள் கொண்டிருப்பினும் கூட்டு வைத்துக் கொண்டு தேர்தலில் நிற்கின்றன. இது பற்றி விகடன் மக்களுக்கு விடுக்கும் செய்தி.

வருகின்ற தேர்தலில் பி.ஜே.பி. அணியினர் தாம் ஜெயித்தால் வாஜ்பாய்தான் பிரதமர் என்று அறிவித்துள்ளது. இப்படிப் போட்டியிடும் பிற அணிகளும் அறிவிக்க வேண்டும். மக்கள் வாக்குச் சாவடிக்குப் போகும் முன் அது தெரிய வேண்டும். *(18 - 1 - 98 விகடன் தலையங்கம்)*

திணிக்கப்பட்ட இந்த நாடாளும் மன்றத் தேர்தலில் சலித்துக் கொள்ளாமல் மக்கள் வாக்களிக்க வேண்டும். ஊழல் புரிந்த ஜெயலலிதா தேர்தலில் பங்குகொள்ளக் கூடாது. பங்குபெற்றால் அவர் கூட்டணியை மக்கள் புறக்கணிக்க வேண்டும்' எனத் தெளிவாகத் திண்ணமாக மக்களுக்கு அறிவுறுத்துகிறது *(15. 2. 98)*

மக்கள் பலர் மத்தியில் சிறப்புப் பெறத் தனிமனிதக் கருத்துக் கள் எப்படி எப்படி எல்லாம் அரசியல் ஆதாயத்துக்குப் பயன் படுத்திக்கொள்ளப் பெறுகிறது என்பது கோவை குண்டுவெடிப்பு பற்றிய நடிகர் ரஜினியின் அறிக்கை பற்றி ஒரு தலையங்கம் எடுத்துரைக்கிறது *(1.3.98)*.

பன்னிரண்டாவது நாடாளும் மன்றத் தேர்தலில் எக் கட்சிக்கும் அறுதிப் பெரும்பான்மை கிட்டவில்லை. தி. மு. க. அணி படுதோல்வி அடைந்தது. அதற்கான காரணங்களை விகடன் எண்ணிப்பார்த்து மக்கள் மனநிலையைப் பின்வருமாறு எடுத் துரைக்கிறது. 'எதிர்காலப் பலன்களை எண்ணிப் பார்ப்பதைவிட அன்றாட நெருக்கடிகளுக்கு மக்கள் பெரிதும் ஆட்பட்டு விடுகின்றனர். விலைவாசி உயர்வு, கோவை குண்டு வெடிப்பு இவற்றின் பாதிப்பே 'ஊழல் புரிந்த' ஜெயலலிதா அணிக்குக் கிடைத்த வெற்றிக்குக் காரணம்' என்பதான விகடன் தன் முந்தைய கருத்தை மறுபரிசீலனை செய்கிறது. *(15.3.98)*

நாடாளுமன்ற கூட்டணிக் கட்சியில் பங்குகொண்டு அரசமைத்த அணிகளுள் பங்கு பெற்ற செல்வி ஜெயலலிதாவின் தன்னிச்சைச் செயல்கள் பற்றிச் சில தலையங்கங்களில் விகடன் தொடர்ந்து எடுத்துரைத்து வந்துள்ளது. 'ஆதரவு தர ஒப்புக் கொண்டு, அதே நேரத்தில் பி.ஜே.பி.யின் மீது குற்றம் சாட்டிக் கொண்டு ஆதரவு கடிதம் தர நாட்கடத்தி வாஜ்பாய்க்கு மன

உளைச்சலை உண்டாக்கியது, மைய அமைச்சர்களிடையே ஊழல் குற்றச் சாட்டுகளைக் கூறி அமைச்சர்க்குள் சிக்கல் உண்டாக்கியது, தி.மு.க. ஆட்சியை டிஸ்மிஸ் செய்யவேண்டும் என்று வற்புறுத்தியது. இவற்றைச் சமாளிப்பதே பி.ஜே.பி. ஆட்சிக்குப் பெரிய வேலையாகிவிட்டது' எனத் தலையங்கம் பலவற்றில் செல்வி ஜெயலலிதாவும் மையக் கூட்டணி ஆட்சியின் அவல நிலை குறித்தும் விகடன் தலையங்கங்கள் பல எழுதியுள்ளது.

நிர்வாக ஊழல்கள் ஆட்சிக்கு வரும் எலும்புருக்கி நோய்; அதன் கட்டுக் கோப்பை ஆளுமையைக் குலைத்து விடவல்லது. ''ஒரு வெளிப்படையான, துளிகூட லஞ்ச ஊழல் அற்ற ஆட்சியை அமைப்பதுதான் அரசாங்கத்தின் முதல் லட்சியம்' என முதல்வர் கலெக்டர்கள், போலீஸ் அதிகாரிகள் மாநாட்டுத் துவக்க விழாவில் பேசியதைக் குறிப்பிட்டு, ' மிகவும், விழிப்பாக, நுட்பமாகத் திட்டமிட்டுக் கடுமையாக அதனைச் செயல்படுத்தினால்தான்' இப்பேச்சுக்குப் பொருள் உண்டு என்பதாக விகடன் உடனே தன் தலையங்கத்தில் குறிப்பிட்டுச் சொல்கிறது (14.6.98). அகில இந்திய அளவில் நூற்றுக்கணக்கான வருமான வரி அதிகாரிகள் குண்டு கட்டாக மாற்றப்பட்டுள்ளனர். அந்த வகையில் சென்னையில் ஜெயலலிதா, சசிகலா, அ.தி.மு.க. அமைச்சர்கள் மீது வழக்கு விசாரித்த அதிகாரிகளும் உள்ளனர். இது சர்வாதிகாரப் போக்கு என விகடன் கண்டிக்கிறது. மைய அரசின் இச்செயலைத் 'தவறான விசுவாசம்' என்று குறிப்பிட்டு மக்களை விழிப்புணரச் செய்கிறது.(17.5.98) உத்தரப் பிரதேசத்தில் சுப்ரீம் கோர்ட்டு தலையிட்டு நீதியை நிலைநாட்டி உள்ளது. நீதிக்குப் புறம்பாக நடந்துகொண்ட, ஜனாதிபதி கண்டனத்துக்கும் ஆளான ரமேஷ் பண்டாரி பதவி விலக்காமல் இருப்பது ஜனநாயக உணர்வுகளுக்குச் சவால் (8.3.98) என்று நிர்வாகத்தில் உள்ள பெரியவர்கள் குறையை உணர்த்துகிறது (8.3.98). தமிழக அரசு நிர்வாகத்தில் சோர்வு தோன்றும் நோக்கில், மைய அமைச்சர்கள் தமிழகம் வரும் போதெல்லாம் 'தி.மு.க. ஆட்சி டிஸ்மிஸ் செய்யப்படும்' எனப் பேசுவது பொறுப்பின்மையை எடுத்துரைக்கிறது (12.4.98). 'பூனா, டில்லி வானிலை ஆராய்ச்சியாளர்கள் முன்கூட்டியே புயல்பற்றி எச்சரித்திருந்தும், தக்க நடவடிக்கை எடுக்காத அதிகாரிகளின் மெத்தனத்தைப் பொறுப்பின்மையை, அலட்சிய உணர்வை ஒரு தலையங்கத்தில் எடுத்துரைத்துக் கண்டிக்கிறது.

தற்காப்பு, காவல், படை, ஆட்சியாளரின் கவனத்தில் எப்போதும் இருக்க வேண்டியன வாகும். பொருட்பாலில்

இறைமாட்சியாக அமைந்த முதற்குறளின் முதல் சொல்லே, 'படை' என்பதாகும். பாரத தேச வாழ்வு, வளர்ச்சி பற்றி எண்ணிய அமரகவி பாரதியார் ''வெள்ளிப்பனி மலையின் மீதுலாவுவோம் அடி! மேலைக் கடல் முழுதும் கப்பல் விடுவோம்! எனப் பாரதநாட்டின் படை பலத்தைக் குறிப்பிட்டுள்ளதும் எண்ணிப் பார்க்கத் தக்கது. அப்படி இந்தியநாட்டு அறிவியல் சாதனையை, படை பலத்தைக் காட்டச் செய்யப்பெற்ற அணுகுண்டு சோதனை பற்றி இரண்டு தலையங்கங்களை விகடன் எழுதி உள்ளது. ஒன்று 'அணுகுண்டும் அஹிம்சை யும்' என்ற தலைப்பில் அமைந்தது. இதில் விஷ்ணுவின் கையில் உள்ள் சக்கராயுதம் போன்றதே இச்செயல். அசுரர்கள்தான் இதற்கு அஞ்ச வேண்டும் என்று குறிப்பிட்டுள்ளது. உடனே பாகிஸ்தான் அணுகுண்டு வெடித்தது பற்றி ஒரு தலையங்கத்தில் ''பொறுமையும் துவேஷமும் துரியோதனனைப் பாடாய்ப் படுத்தியது போன்ற நிலைதான் உங்கள் நிலையும்'' என்று அறிவுறுத்தியுள்ளது.

இப்படித் தேர்தல், கூட்டணி, கூட்டணி ஆட்சியும் பங்கு கொள்ளும் கட்சிகளின் பொறுப்பும், ஊழல்களும் நிர்வாகப் பொறுப்பும், பாதுகாப்பு, காவல் - என இன்றியமையாத அரசியல் நிகழ்ச்சிகளை அவ்வப்போது எடுத்துரைத்து, மக்களுக்கு விழிப்புணர்வு தந்து வழிகாட்டுவதில் ஆனந்த விகடன் முன்னணியில் இருந்துள்ளது என்பது இத்தலையங்கங்கள் வழி புலப்படும் உண்மையாகும்.

யோ. ஞான சந்திர ஜாண்சன்
சென்னைக் கிறித்தவக் கல்லூரி
சென்னை

நாவல்களில் உதிரிமாந்தர் படைப்பு

இன்றைய சமுதாயத்தின் வாழ்வியலைப் படம்பிடித்துக் காட்டுவதில் நாவல்கள் முதலிடம் பெறுகின்றன. அன்றாட வாழ்வில் நாம் காணும் அத்தனை மனிதர்களும் நாவலில் மாந்தர் களாக இடம்பெறத் தகுதி பெற்றவர்கள். சமுதாயத்தில் சிலர் உயர்ந்தவர்களாவும், பலர் தாழ்ந்தவர்களாவும் காணப்படுவதைப் போன்று நாவலிலும் மாந்தர்கள் கதைக்கேற்றவாறு காணப்படு கின்றனர். கதையுடன் தொடர்புடைய மாந்தர்களைத் தலை மாந்தர், இன்றியமையா மாந்தர், துணை மாந்தர் எனவும் கதையுடன் தொடர்பில்லா மாந்தர்களை உதிரிமாந்தர்கள் (Sundry Characters) எனவும் வகைப்படுத்தலாம். இக்கட்டுரைக்கு நீல பத்மநாபனின் நாவல்கள் வகைமாதிரியாகத் தெரிவு செய்யப் பட்டு உதிரிமாந்தர் படைப்பு நோக்கப் படுகிறது.

உதிரிமாந்தர்கள் விளக்கம்

கதையின் நடப்பியல் தன்மையை அதிகரிப்பதற்காகக் கதைக் கருவிற்கு எவ்வித முக்கியத்துவமின்றிப் படைக்கப் பட்டிருக்கும் மாந்தர்களை உதிரிமாந்தர்கள் எனலாம். நாவல் பல்வேறு சுவைகளைக் கொண்டு விளங்கவும், சமூகத்தில் மக்களின் வாழ்வியலை முழுமையாகப் படம்பிடித்துக் காட்டவும் இவ்வுதிரி மாந்தர்கள் ஓரளவு துணைபுரிகின்றனர். இன்றியமையா மாந்தர்கள், துணை மாந்தர்கள் போன்று கதையில் முக்கியத்துவம் உள்ளவர்களாகவும், கதையுடன் தொடர்புடைய வர்களாகவும் இவர்கள் விளங்கவில்லை. எவ்வாறாயினும் ஒரு நாவலின் சிறப்புத் தன்மைக்கு உதிரிமாந்தர்களும் ஒரு காரணமாக விளங்குகின்றனர். இவர்களைச் சிறு மாந்தர்கள் எனவும், பிறமாந்தர்கள் எனவும் கதையுடன் தொடர்பில்லா மாந்தர்கள் எனவும் கூறலாம்.

நடப்பியலும் உதிரிமாந்தர்களும்

நடப்பியல் நாவல்களுக்கே தற்காலத்தில் அதிக முக்கியத்துவம் கொடுக்கப்பட்டு வருகின்றது. இத்தகைய நடப்பியல் நாவலில் மனித சமூகத்திலுள்ள பல்வேறு வகைப்பட்ட மக்களையும் பலவேறு இனப்பட்ட மக்களையும் ஆசிரியர் படைப்பது வழக்கம். ஆசிரியர் நாவலின் கதையை வாழ்க்கையில் நடப்பது போன்று படைத்துத் தருவதற்கு உதிரிமாந்தர்கள் உதவுகின்றனர். நடப்பியல் தன்மையுடைய நாவல்களில் கதைக்குத் தக்கவாறு உதிரிமாந்தர்களின் எண்ணிக்கை விழுக்காடு அமைந்திருக்க வேண்டும். மிக அதிகமாகவோ அல்லது மிகக் குறைவாகவோ எண்ணிக்கை இருப்பின் நடப்பியல் தன்மை நன்முறையில் அமையாது.

அதிகமான நிகழ்ச்சிகளைக் கொண்ட நாவல்களிலும், கிராமப்புறத்தைப் பின்னணியாகக் கொண்ட நாவல்களிலும் உதிரிமாந்தர்கள் அதிக அளவு எண்ணிக்கையுடன் இடம் பெறுகின்றனர்.

நீல. பத்மநாபனின் நாவல்களைப் படிக்கும் போது கற்பனைக்கதை என்ற உணர்வினை ஏற்படுத்தாமல் நண்பர்கள், உறவினர்கள், அருகிலுள்ளவர்கள், தூரத்திலுள்ளவர்கள் நன்றாகக் கேள்விபட்டு அறிந்திருப்பவர்கள் ஆகியோர் பங்கேற்ற உண்மைக் கதை என்னும் உணர்வை வாசகர்களுக்குத் தருவதற்குக் காரணமாக உதிரிமாந்தர்கள் திகழ்கின்றனர். இம்மாந்தர்களின் எண்ணிக்கையின் பெருக்கம் உதிரிமாந்தர்களைப் பொறுத்தே அமைகின்றது. தலைமை மாந்தர், இன்றியமையா மாந்தர், துணை மாந்தர் ஆகியோரை விட உதிரிமாந்தர்களின் எண்ணிக்கையே அதிக அளவில் காணப்படுகின்றது. இதனால் நீல. பத்மநாபன் நாவல்களில் பாத்திரப்படைப்பு உண்மைத் தன்மையுடையதாக விளங்குகிறது.

நீல. பத்மநாபனின் நாவல்களில் படைக்கப்பட்டிருக்கும் உதிரிமாந்தர்கள் வாழ்க்கையில் நிகழும் நிகழ்ச்சிகளையும், அனுபவங்களையும் உண்மைத் தன்மையுடன் விளக்க மிகவும் துணை புரிபவர்களாகத் திகழ்கின்றனர். இவர்கள் சமுதாயத்தில் காணப்படும் நடுத்தர, ஏழை மக்களின் பிரதிபலிப்பாகவே விளங்குகின்றனர். செட்டியார் மக்களின் வாழ்வியலைச் சித்தரிப்பதற்காகக் கிராமத்தைப் பின்னணியாகக் கொண்டு படைக்கப் பட்டுள்ள தலைமுறைகள் நாவலிலும், அதிக பக்கங்களுடன் விளங்கும் உறவுகள் நாவலிலும் உதிரிமாந்தர்களின் எண்ணிக்கை

அதிகம் உள்ளது. பிற நாவல்களில் மிதமான அளவிலேயே உள்ளனர்.

நீல. பத்மநாபனின் யாத்திரை, நேற்று வந்தவன் ஆகிய இரு நாவல்களைத் தவிரப் பிற நாவல்களில் உதிரிமாந்தர்கள் காணப்படுகின்றனர்.

உதிரிமாந்தர்களின் பகுப்புகள்

நீல. பத்மநாபன் நாவல்களில் உதிரமாந்தர்கள் படைக்கப்பட்டிருக்கும் விதத்தை அடிப்படையாகக் கொண்டு அவர்களை மூவகைகளாகப் பகுக்கலாம்.

1. நேரடியாகப் பங்கேற்றுப் பேசும் உதிரிமாந்தர்கள்

கதையோட்டத்தில் இத்தகைய மாந்தர்கள் நேரடியாகப் பங்குபெற்றுப் பிறமாந்தர்களுடன் பேசும் தன்மையுடையவர் களாக உள்ளனர். இவர்களில் சிலர் தலைமை மாந்தருடன் பேசுபவர்களாகவும் சிலர் இன்றியமையா மாந்தர்களிடம் பேசுபவர்களாகவும் உள்ளனர். இவ்வாறு பேசும் மாந்தர்களின் எண்ணிக்கை விழுக்காடு நாவலுக்கு நாவல் வேறுபடுகின்றது. ஃபைல்கள், சமர், முறிவுகள் ஆகிய நாவல்களில் இவ்வகை மாந்தர்கள் இல்லை.

2. நேரடியாகப் பங்கேற்றுப் பேசாத உதிரிமாந்தர்கள்

நேரடியாகப் பங்கேற்றுப் பேசாத உதிரிமாந்தர்கள் நாவலின் கதையோட்டத்தில் தொடர்பில்லாதவர்களாக இருந்தாலும் நேரடியாகப் பங்கு பெறுவர். ஆனால் இவ்வாறு பேச்சு நாவலில் இடம் பெறுவது இல்லை. நாவலின் ஒரு சிறு பகுதியில் வந்து செல்வர். தலைமை மாந்தர் மூலமாகவோ, பிறமாந்தர்கள் மூலமாகவோ, ஆசிரியர் மூலமாகவோ இவர்கள் நாவலில் பங்குபெறுவர். முறிவுகள் நாவலில் இவ்வகை மாந்தர்கள் காணப்படவில்லை.

3. மறைமுகமாகப் பங்கேற்கும் உதிரிமாந்தர்கள்

இறந்தகால நிகழ்வுகளை ஆசிரியர் நனவோடை உத்தியின் மூலம் கூறும்போது, மறைமுகமாகப் பங்கேற்கும் உதிரிமாந்தர் களை நாவலில் படைப்பதுண்டு. இவ்வகை மாந்தர்கள் தலைமை மாந்தர், இன்றியமையா மாந்தர் ஆகியோர்களின் நனவோட்டத் தின் மூலமும், மாந்தர்கள் ஒருவருக்கொருவர் பேசும் பேச்சின் மூலமும், ஆசிரியர் மூலமும் நாவலில் மறைமுகமாகப் பங்கேற்பர்.

உதிரிமாந்தர்கள் இல்லாத நாவல்கள்

யாத்திரை, நேற்றுவந்தவன் ஆகிய இருநாவல்களில் உதிரி மாந்தர்கள் ஆசிரியரால் படைக்கப்படவில்லை. படைக்கப் பட்டிருப்பின் நடப்பியல் தன்மை இவ்விரு நாவல்களிலும் நன்முறையில் அமைந்திருக்கலாம்.

நாவல்களில் நடப்பியல் தன்மையை அதிக அளவில் கொடுப்பதற்காகவே உதிரிமாந்தர்களும் படைக்கப்படுகின்றனர்.

தே. ஞான சேகரன்
பாரதியார் பல்கலைக்கழகம்
கோவை – 641 046

உழத்தீப் பாட்டு

மருத நில மக்களான மள்ளர்கள் நெல்லின் மக்கள் என்றும், செந்நெல் முதுகுடியினர் என்றும் ஏருடன் பிறந்தவர்கள் (இந்திரனின் மக்கள்) நீராணிக்கர் என்றும் காலம் தொட்டு இன்று வரை புகழப்படுவர் ஆவர். இம்மக்களின் முன்னோரே நெல்லினை முதன்முதலில் இப்பூவுலகில் பயிர் செய்தவர் ஆவார். இதனால் நெல் பயிரிட்ட மருத நிலத்தின் தலைவன் வேந்தனானான். ''நல்வினை செய்தவர்களின் உயிர்கள் இறந்த பின் மேலுலகத்திற்குச் செல்லுமென்றும், உலகில் (மருத நிலத்தில்) அரசனாயிருந்தவன் மறுமையில் மேலுலகத்திலும் அரசனாவான் என்றும் மருத நில மாந்தர் கருதி, முதன் முதலில் இறந்த அரசனையே வேந்தன் என்று பெயரிட்டு வணங்கினார்கள். மழை மேலிலிருந்து பெய்வதால், மேலுலக வேந்தனாகிய தங்கள் தெய்வத்தினிடமிருந்தே வருவதாகக் கருதி, மழை வளத்திற்காகவும் அவனை வழிபட்டார்கள்.'' (ஞா. தேவநேயப் பாவாணர், ஒப்பியல் மொழி நூல், ப. 201) எனும் கூற்றிற் கேற்ப மருத நில மள்ளர்கள் மழை வளம் வேண்டி இன்றும் தங்களின் குல முதல்வனான இந்திரனை வழிபடும் மழை வழிபாடு மழைப்பாட்டு எனும் இலக்கியமாக இம்மக்களிடத்தில் இன்றும் வழக்கிலிருப்பதைக் காண முடிகின்றது. இம்மக்கள் மேல் பள்ளுப் பாடலிலும் மழை வேண்டி மள்ளர்கள் வழிபடும் முறை சிறப்பித்துப் பேசப்படும். இவ்வாறு மழை வேண்டி வழிபடும் மள்ளர்களும், மள்ளத்தியர்களும் சேர்ந்து பாடும், மழைப்பாட்டு, ஏர்மங்கலப் பாடல்கள், ஏர்வலப்பாடல்கள், நாளேர் பாடல்கள், நெல் விதைப்புப் பாடல்கள், உழத்திப் பாடல்கள், உழவர் பாடல்கள், நெல் அளவைப் பாடல்கள் முதலியன இம்மக்களின் வேளாண் வாழ்வினை விளக்கிக் காட்டும். இப்பாடல்கள் உழத்திப் பாட்டு எனும் பெயரில் பன்னிரு பாட்டியல் இலக்கண

நூலில் குறிக்கப்படுகின்றது. இவ்விலக்கியம் நமக்குக் கிடைக்க வில்லை. ஆனால் இவ்விலக்கியம் குறிப்பிடும் இலக்கணமான

''புரவலர் கூறு அவன் வாழிய என்று
அகல்வய தொழிலை ஒருமை உணர்ந்தனள்
எனவரும் ஈரைந்து உழத்திப்பாட்டே''

அதாவது உழத்திப் பாட்டு மன்னர்களைப் போற்றியும் உழவர் களைப் பற்றியும் பாடப்படும் பத்துப்பாட்டுக்களைக் கொண்டது என்று இலக்கணம் கூறுகின்றது. இதன் படியான பாடல்கள் மள்ளர்களிடம் வழங்கும் உழத்தி பாடல்களில் காணப்படுவதை இக்கட்டுரை வீளக்க முயல்கின்றது.

மழைப்பாட்டு

மதுரை மாவட்டம், சோழவந்தானில் மழை இல்லாக் காலங்களில் கிராமப் பெரியோர்கள் கூடி அனைத்துச் சமூகத் தாரும் நெல் மணிகளை வசூல் செய்து உரிய முறைப்படி தேவேந் திரர் தலைவர்களிடம் கொடுத்து ஊர் மக்கள் அனைவரும் மேளம், தாளம் முழங்கச் சென்று, ஊரின் வடக்கு எல்லையில் வீற்றிருக்கும் செல்லாயி அம்மனுக்குப் பொங்கலிட்டு மழை வேண்டுதல் இன்றும் நடைபெறுகிறது. இதுபோன்ற வழிபாட்டு முறை பாலமேடு, தேவாரம் போன்ற ஊர்களிலும் இருக்கின்றது. (இரா. முத்துமணி தேவேந்திரர், தமிழகக் கிராமங்களில் தேவேந்திர குல வேளாளர் தலைமக்களுக்குக் கிடைத்து வரும் கோயில் மரியாதைகள் தமிழர் பண்பாட்டு வரலாறு, ப. 173)

இதே போன்று திருப்பரங்குன்றம் பகுதியில் விளாச் சேரியிலுள்ள அழகு நாச்சியம்மனுக்குப் புரட்டாசி மாதத்தில் மழை வேண்டி மள்ளர்குல உழத்தியர்கள் யாருடைய நிலத்திற்கு வேலைக்குச் சென்றாலும் எங்கும் உண்பதில்லை. இந்த எட்டு நாட்களிலும் கோயில் வாசல், ஊர் எல்லை, அய்யனார் கோயில் பகுதிகளில் அழகு நாச்சியரை வேண்டி மழைப்பாட்டு பாடு கின்றனர். இவர்களுள் ஒரு முதிய பெண் பாட ஒவ்வொரு பாடல் முடிந்த உடன் பிற பெண்கள் குலவையிடுகின்றனர். இறுதி நாளில் எல்லாச் சாதியினரும் அழகு நாச்சிக்கு மாவிளக்கு எடுத்து வழிபாடு செய்கின்றனர். இசுலாமியர் கூடத் தங்களுக்கான காணிக்கைப் பொருட்களை இக்கோயிலுக்குக் கொடுத்தனுப்பு கின்றனர். இவ்வாறு மழை வேண்டிப் பாடும் பெண்கள் எல்லா கிராமங்களிலும் மள்ளர் குல உழத்தியராகவே இருப்பதை நாம் இங்கே நினைய வேண்டும். மழை வேண்டி வழிபடும்

வளவழிபாடு சிலப்பதிகாரம் காட்டும் இந்திர விழாவிலிருந்து நாம் ஓர் வழியாகப் பெறமுடியும். இது இன்றும் இம்மக்களிடம் இந்திரா விழா எனும் பெயரில் வழிபடப்படுவதைக் கோவை பேரூர் பட்டீஸ்வரர் மள்ளர் திருக்கோயிலில் இன்றும் காணலாம். இதே வழிபாட்டு முறை பல பள்ளு நூல்களில் மானுடவியல் எச்சமாகப் பதிவாகியிருப்பதையும் பள்ளு நூல்களை மனம் கொண்டு படிப்போர் உணர்வர்.

''மாரிப் பொருட்டால் வரங்குறித்து மள்ளரெல்லாம்
சேரிக் குரவையெழத் தெய்வநிலை போற்றினரே''
(முக்கூடற் பள்ளு, பா. எண். 30)

எனும் பாடல் வரிகளின் மழை வேண்டி மள்ளர்கள் குலவை ஒலி எழுப்பி மழை வரம் வேண்டுதல் பாடப்படுவதைக் காண்கின்றோம்.

காவுக் கிறைவனாகும் இந்திரன்
ஏவற்பணி கொண்டெழுந்த கார்''
(முக்கூடற்பள்ளு, பா. எண். 37)

இதில் காவுக்கு இறைவன் அதாவது கற்பக பூங்காவின் தலைவனாகிய இந்திரனின் ஏவற் கட்டளை ஏற்று மழை பொழிந்தது என்று அறிகின்றோம். இங்கே மழைக் கடவுளாக இந்திரனே வர்ணிக்கப்படுகின்றார். இதனையே இன்றைய உழத்திப்பாடல் எனும் மழைப்பாட்டு.

''சந்திரரே சூரியரே சாமிபகவானே
இந்திரனே இப்ப மழை பெய்ய வேண்டும்''

என்றும்

''மான மிருண்டு வரும் அல்லிலே லே லே
மழையிருட்டும் கூட வரும் தில்லாலே லே
மழையே பொழிய வேண்டும் அல்லிலே லே லே - அங்கே
மக்கள் பஞ்சம் ஆறவேண்டும் தில்லாலே லே லே
ஆத்திலேயும் தண்ணிவர அல்லிலே லே லே - தன்னா
அலை புரண்டு போக வேண்டும் தில்லாலே லே - அங்கே
மண்வெட்டி கையிலெடுத்துத் தேவேந்திரன் மகனே - அங்கே
மடை மாறித் தண்ணி காட்டுவான் தேவேந்திரன் மகனே''
(ஐ. முத்தம்மாள் (60) தேவேந்திர குலவேளாளார்,
வீராச்சிமங்கலம், தாராபுரம்)

என்றும்

''பழனியில் குடியிருக்கும் முருக பெருமானே
பார்வதி பெத்தெடுத்த செந்தில் வடிவழகா
ஈசன் மகனல்லவா இருவாச்சி பூவல்லவா
பாலக்கா திண்ணமக்கா பாரோட்டி வாங்க மக்கா
ஏலக்கா திண்ணமக்கா ஏரோட்டி வாங்கமக்கா
பத்துத்துளி துளிக்கும்பத்து ஏரும் பூட்டி நிற்கும்
அந்தப் பத்தேரு மின்னால பார்வதி சாலுமிட்டா
எட்டுத் துளி துளிக்கும் எட்டு ஏர் பூட்டி நிற்கும் அந்த
எட்டு ஏர்மின்னால எஏர் சாலுமிட்டா
நெல்லு விளைய வேணும் நித்தமழை பெய்யனும்
கொள்ளு விளையவேணும் கொள்ள மழை பெய்யனும்
சோளம் விளைய வேணும் சொருசு மழை பெய்யனும்.

இப்படியாக மழை வேண்டிப்பாடும் மள்ளத்தியர்களின் மழைப் பாடல்களில் உலகைப் புரக்கும் மழை வேண்டுதலை வரமாக வேண்டுவதைக் காண்கின்றோம்.

மழை வேண்டும் வளமைச்சடங்கு

மழைவேண்டிப் பாடும் உழத்திபாடலில் மழை வந்தவுடன் தேவேந்திரர்கள் கொழுவினைத் தயார் செய்து ஏரில் இணைத்து மாடுகளை உழுவுக்குத் தயார் செய்து உழவு செய்தல் வரை படிப்படியாக வர்ணிக்கப்படுகின்றது. கொங்கு நாட்டில் வயலில் வேலை தொடங்கும் முன் மல்லாண்டை எனும் வளமை தரும் தெய்வத்திற்கு வழிபாடு செய்த பின்னரே உழவினைத் தொடங்குவர். இதே போன்று அறுவடையின் போது மல்லாண்டை வழிபாடு நடைபெறும். இந்த மல்லாண்டைச் சாமிக்கு வழிபாடு பள்ளு இலக்கியங்களிலும் குறிக்கப்படுகின்றது. இதே வள வழிபாடு, ''பரிபாடலில் மருத நில மக்களால் மழைவேண்டிச் செய்யும் சடங்காகக் காணப்படுகின்றது. சங்கு, நண்டு, இறவு, வாளை போன்றவற்றை வையையில் இட்டனர். விளைக! பொலிக! எனக் கட்டளை இட்டனர். இவ்வாறு கங்கை நதியிலிருந்து தொத்து மந்திரமாக (Contagious Magic) மழை வேண்டிச் செய்யப்பட்டது. தொடர்பு கொண்டிருந்த இருபொருள்களிடையே நிரந்தரத் தொடர்பு இருக்கும் என்பது தொத்து மந்திரமாகும், நீரோடு நெடுநாள் தொடர்பு கொண்டிருந்த சங்கு, சிப்பி போன்ற பொருள்களுக்கு நீரை வரவழைக்கும் இயல்பு உண்டு என்ற நம்பிக்கையை இங்குக் காணலாம். இவற்றை ஆற்றில் இட்டால் ஆற்றல் நீர் பெருகும். ஆற்றில் நீரை பெருக்க மழை பெய்யும் என நம்பினார் . . . மீனினம் பெருக வேண்டும்

என்பதற்காக ஒத்த மந்திரமாக (Imitative Magic) நண்டு, இறவு, வாளை போன்றவற்றை நதியிலிட்டுச் சடங்கு செய்தனர். ஏற்பட வேண்டிய விளைவும், செய்யப்படுகின்ற செயலும் ஒத்திருக்கு மானால் ஒத்த மந்திரம் என்பர். *(கா. சுப்பிரமணியன். சங்ககாலச் சமுதாயம், பக். 18 - 19)*

இதே மந்திரப் பாடலும், மந்திரச் செய்கையும் உழத்தியர் பாடும் இன்றைய பாடல்களிலும் காணப்படுகின்றன. பொன்னால் ஆன நண்டுகள், நத்தைகள், தவளைகள்,மீன்கள் எல்லாம் கொண்டுவந்து நதியிலிட்டு வழிபாடு செய்வதைப் பாடல்கள் குறிப்பிடுகின்றன. இப்பாடல் வரிகள் வருமாறு

''இடி இடிக்க மழை பொழிய
இரு கரையும் தண்ணிவர
.....
பொன்னால் நண்டுகளை
கொண்டு வந்தாரு தேவேந்திர
பொன்னால நத்தைகளை
பொன்னால தவக்களையை
பொன்னால மாடுகளை
கொண்டு வந்தார் தேவேந்திரரு
பொன்னால பச்சத்தாளை
பொன்னால பெரிய கிச்சடி
கொண்டு வந்தாரு தேவேந்திரரு
பொன்னால நெல்லுகளை
பொன்னால பெரிய கிச்சடி
கொண்டு வந்தாரு தேவேந்திரரு
(கருப்பாயம்மாள் (50) தேவேந்திர குலவேளாளர்
இராமநாதபுரம், கோவை)

முடிவுரை

நாட்டுப்புறப் பாடல்களில் காணப்படும் மிகையுணர்வுகள் அப்பாடல்கள் வழக்கிலிருக்கும் இனத்தின் பண்பாட்டைப் பிரதிபலிக்கின்றன என்றும் ஒவ்வொரு பண்பாட்டிற்கும் ஓர் உள்ளொருமையும் (Inner harmonies) வெளியீட்டு முறையும் (Expression Style) உண்டு என்றும் கூறும் மானுடவியல் கோட்பாட்டின் படி, மள்ளர்களிடம் வழக்கிலுள்ள உழத்தியர் பாடல்கள் இம்மக்களின் வேளாண் பண்பாட்டினைப் பிரதிபலிக்கின்றன என்பதை இக்கட்டுரை உறுதி செய்கின்றது.

வி. மி. ஞானப்பிரகாசம்
மதுரை காமராசர் பல்கலைக்கழகம்
மதுரை – 625 021

வீரமாமுனிவரின் தமிழ் - இலத்தீன் அகராதி

சதுரகராதி, போர்த்துக்கீசிய - இலத்தீன் - தமிழ் அகராதி, தமிழ் - இலத்தீன் அகராதி ஆகியவை வீரமாமுனிவரின் படைப்புகள். தமிழ்ச்சொல்லுக்கு இலத்தீன் மொழியில் பொருள் தரும் தமிழ்-இலத்தீன் அகராதி, முனிவரின் பல்வேறு அனுபவங்களையும், 18 ஆம் நூற்றாண்டுச் சமுதாயத்தையும் ஓரளவு காட்டும் கண்ணாடி எனலாம்.

நோக்கம்

சதுரகராதி செந்தமிழுக்கும், மரபுச் செய்யுள் யாப்புக்கும் உதவும் நோக்கம் கொண்டது. வெளிநாட்டிலிருந்து வந்த மறைத் தொண்டர்கள் மக்களின் அன்றாட மொழியை அறிந்து அவர்களோடு பேசி உறவாட வேண்டும் என்ற நோக்கம் கொண்டது தமிழ் - இலத்தீன் அகராதி. இதை நன்கு நிறைவேற்றும் இந்த அகராதி முனிவரின் வாழ்க்கைப் பண்புகளையும் அன்றைய சமுதாய நிலையையும் ஓரளவு சுட்டிக்காட்டுகிறது.

மொழி

ஒரு சொல்லுக்கு நூல் வழக்கில் ஒரு பொருள் இருக்க, பேச்சு வழக்கில் வேறுபொருள் இருப்பது இயல்பு. காமநாயக்கன்பட்டி, கோனார்குப்பம், ஏலாக்குறிச்சி, வடுகர்பேட்டை போன்ற சிற்றூர்களில் மக்கள் நடுவில் வாழ்ந்து பணிசெய்ய முனிவருக்குப் பொது மக்களின் நடைமுறைத் தமிழ் நன்கு தெரிந்திருந்தது.

'' 'அடீ' என்ற சொல் விளிச்சொல். இது கணவன் மனைவியோடு பேசும் போதும், பெண்கள் தங்களுக்குள் பேசும் போதும், ஒருவரை ஒருவர் அழைக்கும் போதும் பயன்படும். தந்தை மகளை, மகன் தாயை குரு எந்தப் பெண்ணையும் இவ்வாறு அழைப்பது சரியன்று''.

''சிறிக்கி'' ஒரு பெண் வெறுப்பால் (புறக்கணிப்பால்) சிறிக்கி என அழைக்கப்படுகிறாள். கணவன் மனைவியைத் திட்டும் பொழுதும் வீட்டுத் தலைவி பணிப்பொண்ணை திட்டும் பொழுதும் பெரும்பாலும் இச்சொல்லைப் பயன்படுத்துவர். நாம் (குருக்கள்) இதைப் பயன்படுத்துவது தகாது''.

இலக்கியம்

பொதுமக்களிடம் பழகிய முனிவர், கற்றவர் நடுவிலும், இலக்கிய உலகிலும் பழகி வந்தார். அதன் விளைவாக இங்கு இலக்கிய மணம் கமழ்கிறது.

'சிறப்பு' என்ற சொல்லை விளக்கும் இடத்தில், முனிவர்

'ஊன் உடை எச்சம் உயிர்க்கெல்லாம் வேறல்ல
நாணுடைமை மாந்தர் சிறப்பு'

என்ற குறளைக் கொடுத்து அதற்குப் பதவுரையும் தருகின்றார்.

சிலப்பதிகாரத்தின் செய்தி இடம் பெறுகிறது. ''இது கோவலனுடைய சிறப்பை விவரிக்கும் நூல். இவன் இறப்புக்குக் காரணம் ஒரு சிலம்பிலிருந்து தோன்றியது. இந்நூல் ஆழமான மொழி உடையது, ஒரு சிலராலேயே விளக்கப்படும். ஆனால் எல்லாராலும் அதன் தகுதிக்கு ஏற்பப் போற்றப்படும்''.

''திருவள்ளுவர்' - பறையர் குலத்தைச் சேர்ந்த புகழ்பெற்ற கவிஞர். குறள் யாப்பில் எழுதியுள்ளார்''

குறள் வெண்பா என்ற சொல்லுக்குக் கீழ் இவ்வாறு வருகிறது. ''இந்தப் பாவகையில் எழுதிய புகழ் பெற்ற எழுத்தாளர் திருவள்ளுவர்''.

''அவ்வையார்' - பொதுவான பொருளில் வயதில் மூத்த பெண்மணியைக் குறிக்கும். சிறப்புப் பொருளில், திருவள்ளுவரின் சகோதரி இப்பெயரால் அழைக்கப்படுகிறார். இவர் வேறு பெயரால் அழைக்கப்படுவதில்லை. இவர் சிறந்த பல பாடல்கள் எழுதியுள்ளார். அவற்றைச் சிறுவர் தொடக்க நிலையிலிருந்தே படிக்கின்றனர்.

பண்பாட்டு மயமாதல்

வீரமாமுனிவர் தமிழ்நாட்டுத் துறவியாக வாழ்ந்தார். அவருடைய உடை, உணவு, மொழி, பழக்க வழக்கங்கள் தமிழ்ப் பண்பாட்டுக்கு ஏற்றவை. ஆனால் அன்றைய போர்த்துக்கீசியக் குடியேற்றப் பகுதிகளில் வெளிநாட்டுப் பழக்க வழக்கங்களே

மேலோங்கி நின்றன. தமிழ்ப் பண்பாடு இடம் பெறவில்லை. எனவே கிறித்தவர்கள் வேறு, தமிழர் வேறு என்ற எண்ணம் எழுந்தது. 'தமிழன்' என்ற சொல்லுக்குக் கிறித்தவர்கள் கொடுத்த பொருள் 'பிறமதத்தார்' என்பதாகும்.

இதுபற்றி அகராதியில் முனிவர் கூறுவது: 'தமிழன்' - இந்த மொழிக்குரிய (தமிழ் மொழிக்குரிய) மனிதன். ஆனால் தெற்குப் பகுதிகளில் எல்லாப் பிறமதத்தாரையும், (சிலைவணக்கத் தாரையும்) இவ்வாறு தவறாக அழைக்கிறார்கள்.''

அன்று பண்பாட்டு மயமாக்குதல் தமிழகத்தின் உட் பகுதியில் இருந்தது. கடற்கரைப் பகுதியில் இல்லை.

மற்ற இடங்களின் மொழி

முனிவர் தம் இறுதி நாள்களில் தூத்துக்குடி மணப்பாடு போன்ற தமிழ்நாட்டுக் கடற்கரைப் பகுதிகளிலும், அம்பலக்காடு என்ற கேரள நாட்டுப் பகுதியிலும் வாழ்ந்தார். அப்பகுதிகளின் மொழிப் பழக்கம் அகராதியில் இடம் பெறுகின்றது.

'சுண்ணாம்பு' என்ற சொல்லுக்கடியில், 'சாந்து அடிக்கிறது' என்ற தொடரைத் தந்து முனிவர் எழுதுகிறார். ''இது கடற்கரைப் பகுதிகளில் சொல்லத் தகாத சொல்லாக ஒலிக்கிறது. எனவே அவர்கள் 'வெள்ளை அடிக்கிறது' என்று சொல்லுகிறார்கள்''.

கேரளப் பழக்க வழக்கமும் இடம் பெறுகிறது. ''அகப் பத்தியம்' திருவனந்தபுரத்தில் இது அனுமதிக்கப்பட்ட பாலியல் பயன்பாட்டிலிருந்து, உடல் நலம் காரணமாக, விலகிக் கொள்ளுதலைக் குறிக்கும்''.

உரையாடல்

முனிவர் வாழ்வின் மற்றொரு பண்பு, பிறமதங்களோடும், பிறமொழிகளோடும் அவர் கொண்டிருந்த உரையாடல் பண்பு.

குறுந்தமிழ்ச்சாத்தன் என்ற தமிழறிஞருடன் முனிவருக்குத் தொடர்பு இருந்தது. (லத்தேரினத்தியல்பு), முஸ்லிம் ஆட்சியாளர் சந்தாசாகிபுடன் அவர் கொண்டிருந்த நெருங்கிய நட்பால் அவரைச் சந்தாசாகிபின் திவான் என்று அழைத்தனர்.

அகராதியில் 'சோனகர்' என்ற சொல்லுக்கடியில் இவ்வாறு முனிவர் எழுதுகிறார். ''முகமதியர்களுக்குள்ளே தாழ்ந்த குலம், இவர்கள் பெரும்பாலும் கடற்கரைப் பகுதிகளில் வாழ்கின்றனர். மீன் பிடித்து அல்லது விற்றுப் பிழைக்கின்றனர்''.

'' 'பறங்கி' - இது ஐரோப்பியரை இழிவாகக் குறிப்பிடும் சொல். இது பிரஞ்சுக்காரரிடமிருந்து வருவதாகத் தோன்றுகிறது. இவர்கள் சிரியாவில் ப்ராங்கி (Franghi) என்று சொல்லப்படுகின்றனர். 'ப்' (F) தமிழில் இல்லாததினால், அதற்குப் பதிலாக 'ப' வந்து 'பறங்கி' என்றாயிற்று''.

'' 'ஞ்' என்ற எழுத்து, போர்த்துக்கீசிய மொழியில் உள்ள nh போல, இஸ்லாமிய மொழியில் உள்ள n போல, பிரஞ்ச், இத்தாலிய மொழியில் உள்ள ஞ்ண போல உச்சரிக்கப்படும்''.

முனிவரின் இந்துமத உரையாடலுக்குப் ‹ பல எடுத்துக் காட்டுகள் உள: '' 'சிவம்' பொருள் நன்மை. இதிலிருந்து 'சதாசிவம்' வருகிறது. பொருள் 'நிலைத்த நன்மை. இது பரலோகம் எனப்படும். ஏனெனில் இது தூய்மையான, நிலைத்த நன்மை.''

'' 'சிவலோகம்' சிவனுக்குரிய பரலோகம்.

''சிவராத்திரி' பெப்ரவரி மாதத்தின் அமாவாசைக்கு முன் வரும் இரவு. சிவன் புகழுக்காக, அன்று சைவர் நோன்பிருப்பர், இரவெல்லாம் கண் விழித்திருப்பர்.''

''சிவவாக்கியம்' சிவனைப் பற்றியும் சைவ மதத்தைப் பற்றியும் பல செய்திகள் சொல்லும் ஒரு கவிதை''.

'' 'சிவன்' தன்னிலேயே நன்மை என்று பொருள்படும். பொது மக்களிடம், ருத்திரனுடைய பெயர் பெற்ற விக்கிரகத்தைச் சுட்டும். இந்த ருத்திரன், பிரம்மா, விஷ்ணு ருத்திரன் என்ற முக்கடவுளின் மூன்றாவது கடவுள்.''

மருத்துவம்

முனிவர் மக்களோடு நெருங்கிப் பழகினதால், மக்களின் நோய்கள், மருத்துவப் பழக்கவழக்கங்கள் அவருக்குத் தெரிந்திருந்தன. அவர் தமது இறுதிக் காலத்தில் அம்பலக்காட்டுப் பகுதியில் தமிழ் மருத்துவப் பணி செய்தார் என்பது அப்பகுதியில் வழங்கும் பரம்பரைச் செய்தி.

'காய்ச்சல்' பற்றி எழுதும் இடத்தில் விஷக்காய்ச்சல், விடாக்காய்ச்சல், நாலாமுறைக்காய்ச்சல், மூன்றா முறைக் காய்ச்சல், குளிர்காய்ச்சல், சுரக்காய்ச்சல், வறைக்காய்ச்சல், உட் காய்ச்சல் (அல்லது அஸ்திக்காய்ச்சல்) பித்தக் காய்ச்சல், சிலேஷ்மக் காய்ச்சல், வாதக்காய்ச்சல், மந்தக்காய்ச்சல் (அல்லது மந்தாரக்காய்ச்சல்) கடுங்காய்ச்சல் (அல்லது அகோரக்காய்ச்சல்)

தோஷக்காய்ச்சல், பெருவாரிக்காய்ச்சல் என்று 15 வகைக் காய்ச்சலைப் பட்டியலிடுகின்றார்.

'அகணி' என்ற சொல் வருமிடத்தில் மருத்துவப் பழமொழி ஒன்று கொடுக்கப்படுகிறது. 'கடுக்காயில் அகணி நஞ்சு, சுக்கிலே புறணி நஞ்சு'. ''மருந்து தயாரிப்போர், கடுக்காய்ப் பழத்தின் விதைகளை விலக்கி விடுவர். சுக்கு எனும் வேரின் தோலைச் சீவி விடுவர்.''

'அடிப்படுகிறது' என்ற சொல்லுக்குக் கீழ், ''என்ன தின்றாலும் அதுக்கு மேல் நாலு பேரீத்தம் (அல்லது பேரீச்சம்) பழத்தைத் தின்னவே எல்லாம் அடிபடும்'' என்ற மருத்துவப் பழமொழி வருகிறது.

பழமொழிகள்

எழுதிய இலக்கியக் கருத்துகளை அறிந்த முனிவர் எழுதாத இலக்கியமான பழமொழிக் கருத்துகளையும் அறிவார். இவை கிறித்தவ மறைத்தாண்டர்களுக்குக் கைகாட்டியாகும் என்று நம்பி இவ்வகராதியில் பல பழமொழிகளைப் பொழிகின்றார்.

இறுதியாக

அகராதி பொதுவாக மக்களைக் கவராது. ஆனால் முனிவரின் தமிழ்-இலத்தீன் அகராதி, சொற்களின் பொருள் தந்து, இலக்கணக் கூறுகள் கொடுப்பதோடு, அவற்றோடு தொடர் புடைய மக்கள் பழக்கங்கள், பழமொழிகள், இலக்கியக் குறிப்பு கள், மருத்துவச் செய்திகள் கொண்டிருப்பதால், இது ஒரு சுவையான நூலாகும்.

இது முனிவரின் மனித முகத்தைக் காட்டுகிறது. முகத்தில் கண், காது, வாய் உண்டு. முனிவர் தம் கண்ணால் பல மக்களை, அன்றைய சமுதாய நிலைமையைக் கண்டார். தம் காதால் பழமொழி களை, பல இலக்கியக் கருத்துகளை, பல மதக்கருத்துகளைக் கேட்டார். தம் வாயால் பிற மதத்தாரிடம் உரையாடல் நிகழ்த்தி னார். அறிவுரை வழங்கினார். இறுதிக் காலத்தில் இவ்வக ராதியைப் பிறமறைத் தொண்டருக்கென எழுதி, அவர்கள் வழியாக மக்களுக்கு அறிவுரை அளித்தார்.

வீரமாமுனிவர் இறையடி அடைந்தது 1747-இல்; தமிழ்-இலத்தீன் அகராதி எழுதி முடிக்கப்பெற்றது 1744 இல். இது அவரது இறுதிப் படைப்பு, ஆழ்ந்த அநுபவத்தில் பழுத்த இனிய கனி எனலாம்.

இரா. ஞானபுஷ்பம்
இராணி மேரி கல்லூரி
சென்னை – 600 004

பயண இலக்கியப் பெண் படைப்பாளர்கள்

பயண இலக்கியம் இன்று போதிய வலுவோடும் ஊட்டத் தோடும் விரைந்து வளர்ந்து வருகிறது. புதினம், சிறுகதை, திறனாய்வு போன்ற துறைகளைப் போலவே இத்துறையிலும் பெண்களின் படைப்புகள் புறப்படத் தொடங்கிவிட்டன.

''உலக வாழ்க்கையின் நுட்பங்கள் தேரவும்
ஓது பற்பல நூல்வகை கற்கவும்
இலகு சீருடை நாற்றிசை நாடுகள்
யாவும் சென்று புதுமை கொணர்ந்திங்கே
திலக வாணுத லார்தங்கள் பாரத
தேச மோங்க உழைத்திடல் வேண்டுமாம்''

என்று பெண்கள் பயணம் செய்ய வேண்டுவதன் தேவையை, பாரதியார் வலியுறுத்துகிறார்.

''முந்நீர் வழக்கம் மகடூ வோடு இல்லை''

என்ற நிலை மாறிவிட்டது. பெண்கள் பலவேறு நோக்கங்களோடு பலப்பல நாடுகளுக்குச் சென்று வருகிறார்கள். அவர்கள் தாங்கள் கண்டும் கேட்டும் பெற்ற உணர்வுகளை, அவற்றின் வெம்மை தன்மை மாறாமல் இலக்கியமாக்கித் தந்துள்ளனர்.

பயண இலக்கியப் பெண்படைப்பாளர்களில், மேரி மாசிலா மணி, சரோஜினி ஸ்ரீராம், வி. எஸ். கமலா, குர்ஷித் பேகம்கான், சாரதா நம்பி ஆரூரன், சாயிமாதா சிவபிருந்தா தேவி, சிவசங்கரி, ராஜம் கிருஷ்ணன், வாஸந்தி ஆகியோர் குறிப்பிடத்தக்கவர்கள்.

மேரி மாசிலாமணி கல்வி கற்பதற்காக அமெரிக்காவிற்கும் கற்பிப்பதற்காக ஜெர்மனிக்கும் சென்றவர். வி.எஸ். கமலா கல்வி கற்பதற்காகச் சோவியத் நாட்டிற்குச் சென்றவர். கல்வி கற்கச் சென்ற கணவரோடு உடன் சென்றவர் சாராதா நம்பி ஆரூரன்.

சரோஜினி ஸ்ரீராம் மேற்கொண்டது காட்சி நோக்குப் (சுற்றுலா) பயணம். இஸ்லாமியருக்குரிய ''ஹஜ்'' பயணம் சென்றவர் குர்ஷித் பேகம்கான். சாயிமாதா சிவபிருந்தாதேவி வழிபாட்டு நோக்கில் வடநாட்டில் பயணம் செய்தவர். உலக சமாதான மாநாட்டில் கலந்து கொள்ளக் கனடாவிற்கும், சுற்றுலாவாக அமெரிக்காவிற்கும், பத்திரிகை அழைப்பை ஏற்று மலேசியா விற்கும் இந்தியப் பிரதமருடன் உலக நாடுகள் பலவற்றிற்கும் சென்றவர் சிவசங்கரி. நேரு விருதைப் பெற்றும், இந்தியச் சோவியத் நட்புறவின் அழைப்பை ஏற்றும் சோவியத் நாட்டில் இருமுறை பயணம் மேற்கொண்டவர் ராஜம் கிருஷ்ணன். வாஸந்தி உலக எழுத்தாளர் மாநாட்டில் கலந்து கொள்வதற்காக பிரெஞ்ச் நாட்டிற்கும், கல்வி கற்பதற்காக நார்வே நாட்டிற்கும் சென்று திரும்பியவர்.

இவர்கள் வேறு வேறான நோக்கங்களோடு வேறுவேறு இடங்களில் பயணங்கள் மேற்கொண்டவர்கள். எனவே, பயண நூல்களுக்குரிய பொதுத் தன்மைகளும், அவரவர் நோக்கங்களுக் கும் ஈடுபாட்டுக்கும் உரிய தனித்தன்மைகளும் இவர்கள் நூல்களில் ஊடாடி கிடப்பது இயல்பே.

பயண நூல்களை, பயணம் மேற்கொள்ளப்படும் நோக்கத்தின் அடிப்படையில் ''கல்வியாளர் பயணங்கள், தொழில் - வணிக இயலாளர் பயணங்கள், அரசியலாளர் பயணங்கள், காட்சி நோக்கர் பயணங்கள், இதழாளர் பயணங்கள், சமயவாணர் பயணங்கள், கலை பண்பாட்டுத் துறையார் பயணங்கள் எனப் பாகுபடுத்த லாம்''. பெண்படைப்பாளர்களின் படைப்புகள் கல்வி, காட்சி நோக்கு, இதழியல், சமயம், கலை, பண்பாடு என்னும் பல்வேறு நோக்கங்களோடு அமைந்துள்ளன.

கல்விப் பயணங்கள்.

கல்வி கற்பதற்காகவும், கற்பிப்பதற்காகவும் மாநாடுகளில் கலந்து கொள்ளவும் செல்லும் பயணங்கள் கல்விப் பயணங்கள். மேரி மாசிலாமணி அம்மையார் அமெரிக்காவின் பிளாரிடா மாகாணத்திலுள்ள லிண்டன்பர்க்கில் ஏழெட்டு மாதங்கள் தங்கி யிருந்து அங்குள்ள கல்லூரியில் பயின்றார். பிளாரிடாவின் பல் வேறு இடங்களையும் சுற்றிப் பார்த்து 'அமெரிக்கப் பயண நினைவு அலைகள்' என்னும் நூலாகத் தம் அனுபவங்களை வடித்தார்.

நூலில், கோயில்கள், பூங்காக்கள், கட்டிடங்கள், கலைப் பொருள் காட்சிகள் எனத் தாம் கண்ட இடப் புதுமைகளைக்

கூறுகிறார். இடப் புதுமைகளைப் போலவே, பிறர் காரியங்களில் தலையிடாமை, வெளிப்படையாக எவரையும் பாராட்டுதல் போன்ற வாழ்வியல் புதுமைகளை விளக்குகிறார். பிளாரிடாவின் மாணவர்களைப் பற்றிச் சொல்லும் போதுகூட, மணம் செய்து கொண்டு பலர் படிப்பது, சம்பாதித்துக் கொண்டே படிப்பது என்னும் புதுமைகளையே அடுக்கிறார்.

ஜெர்மனியிலுள்ள கோலோன் பல்கலைக்கழகத்தின் இந்திய இயல் பகுதியில் இரண்டு ஆண்டுகள் கல்வி கற்பிக்கச் சென்ற மேரிமாசிலாமணி அம்மையாரின் 'நான் கண்ட ஜெர்மனி' நூலில், அவர் இந்திய இயல் கற்பித்தது பற்றி எதுவுக் குறிப்பும் இல்லை. அங்குள்ள இலவசக் கல்வி, பள்ளி விடுமுறை, பயிற்று மொழி, படித்துக் கொண்டே சம்பாதிப்பது போன்ற பொதுச் செய்திகளே இடம் பெறுகின்றன.

சோவியத் நாட்டில் கல்வி கற்ற வி. எஸ். கமலாவின் அனுபவங்கள் 'சோவியத் நாட்டில் ஒரு தமிழ் மாணவி' என்ற நூலாக விரிகிறது. அந்நாட்டில் ஐந்தாண்டுக் காலம் தங்கி அந்த மக்களோடு நெருங்கிப் பழகிய நெருக்க உணர்வும், அதன் விளைவாக அம் மக்கள்பால் கொண்ட அக்கறையும் நூலிலேயே இழையோடுகின்றன.

மாணவர் சேர்க்கை, மாணவர் பிரச்சினை, மாணவர் திறன் சோதிக்கப்படுதல் என்பவற்றில் உள்ள புதுமுறை எனக் கல்விச் செய்திகளையும் விரிவாகக் கூறியுள்ளார்.

நார்வே ஆஸ்லோ பல்கலைக்கழகத்தின் கோடைப் பள்ளியில் கல்வி கற்கச் சென்ற வாஸந்தியின் அனுபவங்கள் 'நள்ளிரவுச் சூரியர்கள்' என்ற 150 பக்க அளவுள்ள நூலில் 104 பக்கங்களில் இடம் பெறுகின்றன. நடத்தப்பட்ட பாடங்கள், கலந்து கொண்ட மாணவர்கள், கற்ற பாடங்கள், மாணவர் பங்கேற்பு, தம்முடைய படிப்புக் குரிய ஆய்வுத் தலைப்பு (இந்தியப் பெண்களின் நிலை - கதாசிரியையாக என் அனுபவங்கள்) என்பன போன்ற கல்விச் செய்திகளை விரிவாகக் கூறியுள்ளார்.

மேற்படிப்புக்காக இங்கிலாந்து சென்ற கணவரோடு உடன் சென்று வந்த அனுபவத்தை 'அலைகடலுக்கு அப்பால்' என்னும் நூலாகப் படைத்துள்ளார் சாரதா நம்பிஆரூரன். ஆராய்ச்சிப் படிப்பிற்குப் பெருமளவில் பயன்படும் 'ஸிராக்ஸிங்' புகைப்படப் பெட்டி எடுத்தல், நூலகப் படிப்பறை வசதிகள் போன்றவை அங்கே சிறப்பாக அமைந்துள்ள பாங்கை விளக்குகிறார். கல்வி

தொடர்பான இந்தச் செய்திகளுக்கு அப்பால், வெளிநாடுகளுக்குச் செல்லும் நமது பெண்கள் இடர்ப்பாடு இல்லாமல் அங்கு வாழ்க்கை நடத்துவதற்குத் தேவையான செய்திகளே நூலில் அதிக இடத்தைப் பிடித்துக் கொண்டுள்ளன.

கனடாவில் நடைபெற்ற உலக அமைதி மாநாட்டில் கலந்து கொள்ளச் சென்ற சிவசங்கரியின் அனுபவங்கள், பற்றியது 'புதுமையான அனுபவங்கள்' என்ற நூல். மாநாட்டுக் கூடம், உரைகள், விருந்துகள் என்ற அளவோடு மாநாட்டுச் செய்திகள் முடிந்து விடுகின்றன. என்னை மிகவும் கவர்ந்த அமெரிக்காவில் இன்று தலைதூக்கி ஆடும் பிரச்சினைகளான ஹிப்பி, போதை மருந்து, காதல் திருமணங்கள் போன்றவைகளையும் மேலை நாட்டாரின் சுறுசுறுப்பு, நேர்மை, நாணயம், சிரத்தை போன்ற வற்றைகளையும் எப்படி நான் ஒரு புதுக் கண்ணோட்டத்தில் பார்க்க நேர்ந்தது என்பதை உங்களுடன் பகிர்ந்து கொள்ள ஆசைப்படு கிறேன் என்று நூலின் உள்ளடக்கத்தை அவரே சொல்லியுள்ளார்.

வானம்பாடி இதழின் ஆண்டுவிழாவில் கலந்து கொள்ள மலேசியா சென்றதை 'மனம் கவர்ந்த மலேசியா' என்ற நூலாய்ப் படைத்துள்ளார் சிவசங்கரி. விழா நிகழ்ச்சிகள், வானொலி, பத்திரிகை, தொலைக்காட்சி பேட்டிகள். கலந்துரையாடல்கள் என நிகழ்ச்சிகளின் கோவையாக அமைகிறது. நூலின் ஒரு பகுதி தமிழரின் நிலை, வாழ்க்கைத் தரம், சீனரின் பழக்க வழக்கம் என்பனவற்றின் விவரிப்பாக அமைகிறது மறுபகுதி.

பிரெஞ்சு நாட்டில் நடைபெற்ற உலக எழுத்தாளர் மாநாட்டில் கலந்து கொள்ளச் சென்ற வாஸந்தியின் அனுபவங்கள் 'உலாவர ஓர் உலகம்' மாநாட்டு நிகழ்ச்சிகளாக எழுத்தாளர் அறிமுகம், பேச்சு, விருந்து என்பனவற்றைக் கூறுகிறார். ''பிரெஞ்ச் எழுத்தாளர்கள் எல்லாம் தங்களது எதிர்காலத்துக்கு உபயோகமாகக் கூடிய தொடர் புகளைப் பிடித்துக் கொள்வதிலேயே அதிகக் கருத்துடன் இருப்ப தில் வருத்தம் காட்டுகிறார். சிற்பங்களையும், சித்திரங்களையும், கலை நிகழ்ச்சிகளையும் காணும்போது கரைந்து போகிறார். ஒரு கலை ஈடுபாட்டாளராய் மாநாட்டு நோக்க இழையிலிருந்து விலகா மல் நூலைப் படைத்துள்ளார்.

காட்சி நோக்குப் பயணங்கள்

வேறு வேறு இடங்களுக்குச் சென்று அங்கங்கே உள்ள புதுமைகளைக் கண்டு மகிழவேண்டும் என்பதையே நோக்கமாகக் கொண்டது காட்சி நோக்குப் பயணங்கள். சரோஜினி ஸ்ரீராம்

எழுதிய 'சிங்கப்பூரிலிருந்து சங்க நதி வரை', சிவசங்கரி எழுதிய 'அனுபவங்கள் தொடருகின்றன...' இந்த முறையில் எழுந்தவை.

சிங்கப்பூரின் டைகர்பாம் கார்டன், பொடானிகல் கார்டன், பாம்புக் கோயில்... என இடப்புதுமைகளை அடுக்கிறார் சரோஜினி ஸ்ரீராம். நகரின் எல்லைக்குள் மாடுகள் எதுவும் இருக்கக் கூடாது, இரவு பன்னிரண்டு மணி வரை பஸ், டாக்ஸிகள் ஓடும் என நிகழ்ச்சிப் புதுமைகளைக் கூறுகிறார். சீனப் பெண்கள் தமிழ் இளைஞர்களை மணக்க விரும்புதல் - தமிழ்ப் பெண்கள் சீனரை மணக்க விரும்பாமை போன்ற பழக்க வழக்கப் புதுமைகளைத் தருகிறார்.

சிவசங்கரி அமெரிக்காவின் கிரேட் அட்வென்ச்சர், டிஸ்னி லாண்ட், விளையாட்டுக் கூடங்கள், பட்டனை அமுக்கினால் பானங்களை வழங்கும் மெஷின்கள் என இடப் புதுமைகளையும் கடல்வளம் உயிரினங்களைக் கொண்டு நடத்தப்படும் கண்காட்சி, 'ஸேல்' எனப்படும் விலை சரிவு போன்ற நிகழ்ச்சிப் புதுமைகளை விளக்குகிறார்.

இதழியல் பயணங்கள்

ஓர் இதழாளராக மேற்கொள்ளும் பயணங்கள் இந்த வகையின் கீழ் வரும். காலஞ்சென்ற இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தி 1985 - இல் காமன்வெல்த் நாடுகளின் மாநாட்டில் கலந்து கொள்வதற்காக 'பஹாமாஸ்' தீவுகளுக்குச் சென்றபோதும், கனடாவில் வான்கூவர் நகரில் நடைபெற்ற 'சோகம்' மாநாட்டில் கலந்து கொள்ளச் சென்ற போதும் ஒரு பத்திரிக்கையாளராய் உடன்சென்று பெற்ற அனுபவங் களைப் 'பிரதமருடன் ஒரு பயணம்' என ஒரே தலைப்பில் இரு நூல்களாக எழுதியுள்ளார் சிவசங்கரி.

பாரதியார் குறிப்பிடுவது போலப் பெண்கள் இன்று நாற்றிசை நாடுகளுக்கும் சென்று வருகின்றனர். கல்வி, காட்சி நோக்கு (சுற்றுலா) இதழியல், சமயம், கலை - பண்பாடு என்னும் நோக்கங் களோடு பயணம் செய்து அவ்வத்துறை தொடர்பான புதுமைச் செய்திகளை வழங்கியுள்ளனர். வேறுவேறு நாடுகளின் வளர்நிலை களையும் (கல்வி, கலை, தொழில்...) உயர் பண்புகளையும் (துரய்மை, நேர்மை, சுறுசுறுப்பு...) கண்டு உவந்துள்ளனர். நாமும் இந்த வளர்நிலையையும். உயர்பண்பையும் அடைய வேண்டும் என்னும் ஆர்வ எழுச்சியைப் படிப்பவர் நெஞ்சிலே எழுப்பும் விதமாகக் கூறியுள்ளனர். என்றாலும் பலநூறாகப் பல்கிக் கிடக்கும் பயண இலக்கியத் துறையிலே மகளிர் படைப்புகள் மிகக் குறைந்த எண்ணிக்கை அளவிலே உள்ளன என்பதை வாட்டத்தோடு குறிப்பிட்டே ஆகவேண்டும்.

ஞானம் கணபதி
அண்ணாமலைப் பல்கலைக்கழகம்
அண்ணாமலை நகர் – 608 002

திருமூலர் பார்வையில் சிவலிங்க வழிபாடு

முன்னுரை

சிவலிங்க வழிபாடு உலகம் தழுவிய நிலையில் மிகவும் தொன்மையான வழிபாடாகக் கருதப்படுகிறது. ஞாயிறு, திங்கள், விண்மீன்கள் போன்ற ஒளியுடைய இயற்கை ஆற்றல் களை வழிபட்டநிலை தோற்றுவாய் என்றால் அதன் முதிர்ந்த நிலை சிவலிங்க வழிபாடு எனலாம். தமிழகத்தில் தோன்றிய சமய அருட்செல்வர்கள் எல்லாம் சோதிவழிபாடு என்ற நிலை யில் இதனைப் போற்றி வந்துள்ளனர்.

''சிவலிங்கம் சிவசோதி; அதைச் சூழ்ந்துள்ள ஆவுடையார் அருட்சோதி; அதனைத் தாங்கும் பீடம் ஆன்மசோதி; எனவே, உடம்பில் உள்ள உயிர் சிவலிங்கம் என்று உணர்க. சிவலிங்கம் வழி பாட்டின் சூட்சமம் சோதி வழிபாடு ஆகும்'' என்று திருமுருக கிருபானந்த வாரியார் கூறும் கருத்தும் மனங்கொள்ளத் தக்கதாகும். (திருக்கோயில், மார்ச்சு, 1977)

இத்தகைய சோதி வழிபாட்டினை ஆன்மாக்களின் பக்குவ நிலைகளுக்கு ஏற்பவே அண்டலிங்கம், பிண்டலிங்கம், சதாசிவ லிங்கம், ஆத்மலிங்கம், ஞானலிங்கம், சிவலிங்கம் என ஆறு இலிங்க வழிபாடாகப் பகுத்துக் காட்டியுள்ளார் திருமூலர்.

அண்ட லிங்கம்

உலகமும் அதைச் சூழ்ந்து அண்டசராசரங்கள் அனைத்தை யும் சிவ வடிவமாகக் கொண்டு வழிபடுவது ஒரு முறையாகும். இறைவனது திருவடிகளைக் கீழுலகமாகவும் திருமுடியை ஆகாயத்துக்கும் அப்பாற்பட்டதாகவும் திருமேனியை ஆகாயமாக வும் கொள்ளுதல் சைவமரபு. இத்தொன்று தொட்ட நம்பிக்கை களின் அடிப்படையிலேயே சிவபெருமானின் திருக்கோலம் உலகமே உருவமாகக் கொண்டதாகும் என்பார் திருமூலர்.

''உலகி லெடுத்தது சத்தி முதலா
வுலகி லெடுத்தது சத்தி வடிவா
யுலகி லெடுத்தது சத்தி குணமா
யுலக மெடுத்த சதாசிவன் னானெ'' (திருமந்திரம் 1713)

சத்தியே பிரபஞ்சமாக விரிதலால் அது சிவத்திற்கு வடிவமாயிற்று என்பார். நிலம் - ஆவுடையார்; மேகம் - கங்கை நீர் ஆகாயம் - இலிங்கம்; நட்சத்திரங்கள் - ஆகாய இலிங்கத்தில் விளங்கும் மாலை; கடல் - திருமஞ்சனச்சாலை; எட்டுதிக்குகள் - திரு ஆடை. ஆகிய இவைகளே அண்ட லிங்கத்தின் அடையாளமாகும் என்ற கருத்தும் எண்ணத் தக்கதாகும். (திருமந்திரம் - 1725) '

பிண்ட லிங்கம்

''உடம்பினை முன்னம் இழுக்(கு) என்(று) இருந்தேன்;
உடம்பினுக்(கு) உள்ளே உறுபொருள் கண்டேன்;
உடம்பு (உள்)ளே உத்தமன் கோயில் கொண்டா(ன்) என்று
உடம்பினை யான் இருந்(து) ஓம்புகின்றேனே''

(திருமந்திரம் - 725)

என்று திருமூலரும் உடலை இறைவன் கோயில் கொண்டுறையும் ஆலயமாகவே எண்ணுதல் நோக்கத்தக்கதாகும். திருமந்திரத்துள் பல இடங்களிலும் இக் கருத்தையே முன் வைக்கிறார் திருமூலர்.

''மக்களின் சரீர அமைப்பானது சிவலிங்கமாகவே அமைந் துள்ளது. உடல் இயக்கம் இறைவனின் திருக்கூத்தாகவே உள்ளது. மானிடயாக்கை ஐம்பூதச் சேர்க்கையால் ஆனதாகும். இறந்த வர்கள் வினைப்பயனுக்கு ஏற்பவே மீண்டும் மீண்டும் பிறக் கின்றனர். உடலை வழியாகக் கொண்டே இறைவன் உள்ளிருந்து அருள் புரிகின்றான். கன்றினை ஊட்டக் கருதித் தாய் வீடு தேடி வந்தது போல, அன்பினை வாயிலாகக் கொண்டே சிவமாக்கி ஆண்டருளுகின்றான்.

நாடிகள் பத்தினையும் தூய்மை செய்து கொண்டு புலன்வழி சேராமல் இறைவனை வழிபட்டால் அந்நாடிகளை இடமாகக் கொண்டே அருள்புரிவான் என்பார் திருமூலர். (திருமந்திரம் - 1726 - 1729).

''தத்துவ மெல்லாஞ் சகலமு மாய்நிற்குந்
தத்துவ மாகுஞ் சதாசிவன் றானே''

என்பார் திருமூலர் (திருமந்திரம் 1733)

இலிங்கத்தின் அடிப்பீடம் பிரணவ உருவமாகும். இலிங்கத் தின் கண்டப் பகுதி அதோமுகம் பிரணவ எழுத்துக்களில் மகாரத் தைக் குறிக்கும். இலிங்கத்தின் நடுவட்டம் உகாரத்தைக் குறிக்கும்; மேல் இலிங்க பாகம் அகாரத்தைக் குறிக்கும். இவையே சதாசிவ லிங்கம் என்று கூறுகிறது திருமந்திரம். *(திருமந்திரம் - 1730 - 1752)*

எல்லாத் தத்துவங்களும் சதாசிவத்தின் கலப்பால் இயங்கு கின்றன. ஆதலால் தத்துவங்கள் அனைத்துமே சதாசிவம் என்று அறிந்து கொண்டு வணங்கித் துதித்தல் வேண்டும். இவ்வாறு வழிபடும் போது மனதின் மயக்கம் அகன்று திருவடி ஞானத் தெளிவு பிறக்கும் என்று மனித சமுதாயத்திற்கு வழிகாட்டுகிறார் திருமூலர்.

ஆத்மலிங்கம்

உயிர்களின் நெஞ்சத்தில் இறைவன் குடிகொண்டு வாழும் போது அவ்வின்பப் பெருவாழ்வில் உயிரானது சிவனையே நாடி நிற்கும். உயிர்களின் நலனுக்காகவே இறைவன் தன் திருவருளால் கட்புலனாகும் படி தோன்றியருள்கின்றான் *(திருமந்திரம் - 1760)*. இறைவனின் கருணை உள்ளத்தின் வெளிப்பாடே ஆத்மலிங்கம் எனலாம்.

''பராபர னெந்தை பனிமதி குடி
தராபரன் றன்னடி யார்மனக் கோயிற்
சிராபரன் றேவர்கள் சென்னியின் மன்னு
மராமரன் மன்னி மனத்துறைந்த தானே'' என்பார் திருமூலர்.

ஞானலிங்கம்

சிவத்தின் உண்மை நிலையை மாதொருபாகனாகக் கண்ட அடியார்களது இருதயத்தே சிவன் எழுந்தருளியிருப்பான். சிவமும் சத்தியும் ஒன்றாய்க் கலந்து கூடிய சேர்க்கையே ஞானமுண்டாகும் இடமாகும். `அவ்விருவரும் கூடியிருக்கும் சிறப்பான இடம் கொப்பூழாகிய சுவாதிட்டானமாகும். பரமன் பராசக்தியை உடன் வைத்து மகிழ்ந்திருக்கும் இடமே நெஞ்சமாகிய அநாகதத் தானமாகும். சக்தியும் சிவமும் இன்றி எப்பொருளும் தோன்றாது. சக்தியே எல்லாப் பொருள்களுக்கும் ஆதாரமாகும். இதுவே ஞான லிங்கம் என்பார். சிவம், சக்தி இவற்றில் எதனை ஆராதித்தாலும் அது சிவ வணக்கமே ஆகும் என்பார்.

''சத்தி சிவன்றன் விளையாட்டுத் தாரணி
சத்தி சிவமாஞ் சிவஞ்சத்தி யுமாகுஞ்

சத்தி சிவமன்றித் தாபரம் வேறில்லை
சத்தி தானென்றுஞ் சமைந்துரு வாகுமே''
(திருமந்திரம் - 1772)

சிவலிங்கம்

''வரைத்து வலஞ்செய மாறிங்கொன் றுண்டு
நிரைத்து வருகங்கை நீர்மல ரேந்தி
யுரைத்தவ னாம முணரவல் லார்க்குப்
புரைத்தெங்கும் போகான் புரிசடை யோனே''
(திருமந்திரம் - 1774)

இறைவனுக்குத் திருமஞ்சன நீராட்டி, மலர்களால் அருட்சித்து, அவனது நாமங்களைப் போற்றி வழிபட்டு, திருவடிகளை உள்ளன்போடு உணர்ந்து வழிபட வேண்டும். இத்தகைய ஒரு குறியின் கண்வைத்து வழிபடும் சிவலிங்க வழிபாட்டிற்கு இறைவன் மகிழ்ந்து அருள் புரிவான் என்பார் திருமூலர்.

முடிவுரை

திருமந்திரத்தில் கூறப்பட்ட அண்டலிங்கம், பிண்டலிங்கம், சதாசிவ லிங்கம், ஆத்மலிங்கம், ஞானலிங்கம், சிவலிங்கம் ஆகிய இலிங்க வழிபாடுகள் ஆன்மாக்களின் பரிபக்குவ நிலைகளுக்கு ஏற்பவே கொள்ளப்படும் வழிபாட்டு முறைகளாகும் எனக் கருத லாம். சரியை கிரியை பற்றியவர்க்கு அண்டலிங்கம், சதாசிவ லிங்கம் விளக்கப்பட்டுள்ளன. பிண்டலிங்கம் யோகிகளுக்குக் கூறப் பட்டுள்ளது. ஆத்மலிங்கம், ஞானலிங்கம், சிவலிங்கம் ஞான யோகத்தினருக்குக் கூறப்பட்டுள்ளதாகவும் கூறுவதுண்டு. (சிவயோகி மா. இரத்தினசபாபதி, திருக்கோயில், நவம்பர், 1972, பக். 675)

இக்கருத்துக்களால் சிவமே ஆன்மாக்களின் பரிபக்குவ நிகைளுக்குக் கேற்பத் தியானத்திற்கும் பூசனைக்கும் காரணமாக விளங்குவதை அறிய முடிகிறது. ஆன்மாக்கள் உய்விக்க வந்த இறைக் குறியீடு சிவபரம் பொருள் எனத் தெளியலாம்.

துணை நூல்கள்

1. திருமூலர், திருமந்திரம், இரண்டாம் பகுதி, கழகப் பதிப்பு (1989) சென்னை.
2. திருமுருக கிருபானந்தவாரியார் சுவாமிகள், திருக்கோயில், (மாத இதழ்), மார்ச், 1977.
3. சிவயோகி மா. இரத்தினசபாபதி, திருக்கோயில் (மாத இதழ்) நவம்பர், 1972.

ஓய். டென்னிசன்
பிசப் ஈபர் கல்லூரி
திருச்சிராப்பள்ளி

நந்தன் கதை - ஒரு பார்வை

நாடகம் என்பது பாமரமக்களின் பல்கலைக்கழகம் என்பர். இன்று அப்பல்கலைக் கழகம் பாழடைந்து கிடக்கிறது. ஒரு இருபது ஆண்டுகளுக்கு முன்வரை சென்னை மாநகரில் ஆண்டின் 365 நாட்களும் நாடகங்கள் நடந்த வண்ணமிருந்தன. ஆனால் இன்று சென்னையில் நாடகங்களே இல்லை என்ற நிலை ஏற்பட்டுள்ளது. காரணம் திரைப்படமும் தொலைக்காட்சியும் நாடகத்தின் இடத்தை ஆக்கிரமித்துக் கொண்டன. நாடகத்தின் இந்த நிலைக்குக் காரணம் என்ன என்பது பற்றி ஆர்.எஸ். மனோகர் குறிப்பிடும்போது ''இன்று நாடகங்களுக்குக் கதை வசனம் எழுதிக் கொடுப்பதற்கு ஆள் இல்லை. நல்ல கதைகள் நாடகத்திற்கு எழுதித் தருவதற்கு ஆசிரியர்கள் முன்வந்தால் நாடகங்கள் வளர வாய்ப்பு உள்ளது'' என்கிறார்.

கூத்துப்பட்டறை, நிஜநாடக இயக்கம், பரீட்சா போன்ற பல நாடக இயக்கங்கள் சோதனை ரீதியாகப் புதிய முயற்சிகளை நாடகத்தில் மேற்கொள்கிறார்கள். ஆனால் இவை பரவலாக்கப் பெறவில்லை. ஒரு குறுகிய வட்டத்திற்குள்ளேயே நிகழ்கின்றன. திராவிட இயக்கங்களின் வளர்ச்சி தமிழ் நாடகங்களில் 20 ஆம் நூற்றாண்டின் இடைப் பகுதியில் பெரிய பாதிப்பை ஏற்படுத்தியது. இதனால் புராணத்தின் பிடியிலிருந்து விடுபட்டு வந்த நாடகங்களில் பல புதுமைகள் தோன்றத் தொடங்கின. புராண நாடகங்களும் புதிய பார்வையில் புரட்சிகரமாக மேடை ஏற்றப் பட்டன. சமுதாய நாடகங்களில் புதுமைகளைப் புகுத்திய அண்ணா அவர்களே, தமிழ் நாடக மேடையில் புதிய சோதனை முயற்சிகளுக்குக் கால்கோள் நடத்தியவர் ஆவார். அவருடைய ''நீதி தேவன் மயக்கம்'' என்ற நாடகமே புராண நாடகங்களில் மேற்கொள்ளப்பட்ட முதல் சோதனை ஆகும்.

இந்நூற்றாண்டின் பிற்பகுதியில் அதாவது 1970 களில் சில நாடக ஆசிரியர்கள் சோதனை ரீதியாகச் சில நாடகங்களை மேடை

ஏற்றியுள்ளனர். அவர்களில் குறிப்பிடத்தக்க ஒருவர் இந்திரா பார்த்தசாரதி. தமிழ் நாடக மேடைக்குப் புதிய கதைகளையும், செய்திகளையும், உத்திகளையும் அறிமுகம் செய்தவர். பசி, மழை, கால இயந்திரங்கள், போர்வை போர்த்திய உடல்கள், ஔரங்கசீப், நந்தன் கதை ஆகியவை குறிப்பிடத்தக்க சில நாடகங்கள். சோதனை ரீதியில் பரீட்ச்சார்த்தம் செய்யப்பட்ட ''நந்தன் நாடகம்'' என்பதையே இக்கட்டுரையில் அறிமுகம் செய்கிறோன்.

கதைச் சுருக்கம்

சமுதாய ஏற்றத்தாழ்வு கண்டு சிறிய பக்தன் நந்தன். புத்தியுடைய பார்ப்பனரின் சூழ்ச்சியினால் அவர்களுடைய கைத்தட்டல் பெறப் பேதமையோடு எரிந்து போன கதையே நந்தன் கதை. நாம் அழுக்குச் சாமியை விட்டு அழகுச் சாமியைக் கும்பிட வேண்டும். கோயிலுக்குள்ளே மாடு போகலாம்; ஊருக்குள்ளே நாய் போகலாம்; பறையன் மட்டும் போகக் கூடாதா? நாமும் கோயிலுக்குள்ளே போகணும். நாம் சாமிக்குத்தான் அடிமை; ஆசாமிக்கு அல்ல; மனுஷனா மாறவேண்டும் எனப் பிரச்சாரம் செய்தான்.

நந்தன் சேரியை அக்கிரகாரமாக மாற்றப் பார்க்கிறான். பறையன் ஆளுற நாட்டிலே நாம் புல்லு புடுங்குவதா? என ஆத்திரம் கொண்டு சூழ்ச்சி செய்தனர். தங்களுடைய புத்தியைக் கொண்டு, நந்தனிடமுள்ள பக்தியையே அவனை அழிக்கும் ஆயுதமாகப் பயன்படுத்தத் திட்டம் வகுத்தனர். வேதியர் சேரிக்கு வருகிறார். ''நந்தன் இருக்குமிடமே கோயில்; நந்தனே சாமிக்கு உகந்த பக்தன்'' என்று கோயிலில் உள்ள சாமி, கனவிலே தோன்றிக் கூறியதாகக் கூறுகிறார். திருப்புன்கூர் கோயிலிலே நந்தனைப் புகவிட்டு, அசரீரியாக ஒலி கேட்கச் செய்து, தாசிப் பெண் அபிராமியை ஏற்கச் செய்கின்றனர். அழகுக் குட்டியை நந்தன் தட்டி வந்து விட்டானென எதிர் அணியைச் சேரியில் உருவாக்குகின்றனர். ''நந்தா நீ உடனே தில்லைக்குச் செல்ல வேண்டும். நீ உன்னுடைய ஆட்களுடன் இரவிலே வீட்டில் பூஜை பண்ணு. இறைவன் பூதக்கணங்களைக் கொண்டு உன் ஆண்டையுடைய அறுவடையை முடித்து விடுவார்'' என்று சொல்ல நந்தனும் பூஜை பண்ணுகிறான். அப்போது ''உன் ஆண்டை மகிழ நீ நடும் கழனிகளை நான் நடச்சொன்னேன். மானிடப் பிறப்பில் உனக்கு இணையான பக்தன் இல்லை'' என்ற ஒலியையும் அசரீரியாகக் கேட்கிறான். அடுத்தநாள் வயல்கள் எல்லாம் அறுவடை முடிந்திருந்த காட்சியைக் கண்டு மெய் மறக்கிறான்.

அவர்கள் ஆள் வைத்து அறுத்த சூழ்ச்சியை அறியாது தன் பக்தியில் மேலும் நம்பிக்கைக் கொள்கிறான்.

''நந்தா! தில்லையிலிருந்து வந்த செய்தியொன்றுள்ளது. தில்லைவாழ் அந்தணர் மூவாயிரம் பேர் கனவிலும் இறைவன் தோன்றி நீ அங்கு வருவதாகக் கூறியுள்ளார். நீ நாளையே அங்குச் செல்ல வேண்டும். அந்தணர்கள் காத்திருப்பர். கோயிலுக்கெதிரே பெரிய தீ இருக்கும். உன் பிறவிப்பாவம் நீங்க நீ தீயில் குளிக்க வேண்டும் என்று சொல்ல நந்தன் திடுக்கிடுகிறான். அப்போது, ''அது பாவிகளைப் பொசுக்கும் அனல்; பக்தனைப் ஏற்கும் புனல். நீயும் உன் தேவியும், உன்னவர்களும் குளித்து அந்தணர்களாக எழுங்கள்'' என்று சொல்ல நந்தனும் நம்பி தன்னுடைய அபிராமியுடன் பக்தியோடு பாடிக்கொண்டு பெருந்தீயிலே இறங்குகிறான். அவர்கள் அலறித் துடித்து எரிந்து மாள்கின்றனர். பார்ப்பனர் கைதட்டிச் சிரிக்கின்றனர். ஏனைய பறையர்கள் தலை தெறிக்க ஓடுகின்றனர். இதுவே கதை.

மாற்றம்

ஆசிரியர் ஆதிக்கம் செலுத்துவோர் அனைவரையும் பார்ப்பான் என்கிறார். அதற்கேற்ப இங்கு நந்தனை அழிக்கச் சூழ்ச்சி செய்யும் வேதியருள் ஒரு முதலியாரையும் ஒரு உடையாரையும் பாத்திரமாகச் சேர்த்துள்ளார். இது ஆசிரியர் மேற்கொண்ட மாற்றங்கள்.

சமுதாயம்

சமுதாயத்தில் பிற்பட்டவர்கள் முன்னுக்கு வராமைக்குக் காரணம் அவர்களுடைய தாழ்வு மனப்பான்மையும், தங்களிடம் காணப்படும் ஒழுக்கக் கேடுகளையும், மூட நம்பிக்கைகளையும், அநாகரீகப் போக்குகளையும் பெருமையாகக் கொள்ளுதலுமே என்பது நாடகத்தின் மூலம் அறியக் கிடக்கிறது.

அழுக்கிலே (சேறு) வேலை செய்கிறார்கள். அழுக்கிலிருந்து வெளிவருவதை அநாகரிகமாக எண்ணுகிறார்கள். தங்கள் சாமியையும் அழுக்குச் சாமியாகவும், காட்டுமிராண்டிச் சாமியாகவும் படைக்கிறார்கள். சாமிக்கும் கள்ளை ஊற்றிக் கொடுக்கிறார்கள். திருநீற்றுக்குப் பதில் இருக்கிற கருப்பின் மீது கறுப்பு நிறத்தையே பூசுகிறார்கள். பறையன் 'சங்கரா' என்று சொன்னால் பாவம் என்ற எண்ணம். கள் குடிப்பதும், பள்ளு பாடுவதும் நாகரிகம். கூரை வீட்டில் சுரைகள் படர்ந்திருப்பதும், குரைத்து நாய்கள் ஓடுவதும், இறைச்சி நிணவாடை வீசுவதும் கழுகுகளும் பருந்துகளும்

ஆலவட்டம் இடுவதும், சேறு நிறைந்த குட்டைகளும், குழந்தைகள் நண்டும் நத்தையும் பிடிப்பதும் தங்கள் உலகின் தனிப் பெருமைகளாகக் கொள்ளப் படுகின்றன. அதிலிருந்து விடுபட அவர்களுக்கு மனமில்லாத வருந்தத்தக்க சமுதாய அமைப்பைச் சுட்டுகிறார்.

நாடகக் குறிக்கோள்

ஓடப்பராயிருக்கும் பிற்பட்டோரும் உயிரப்பராய் வருதல் வேண்டும். உயர்சாதிக்காரன் வைத்த சாதி தர்மம்பாதி; மீதி நாம் நினைத்துக் கொண்ட நினைப்பு. எனவே தாழ்வு மனப்பான்மையை நீக்க வேண்டும். நந்தனைப் போல் புரட்சி எண்ணமும், பக்தியும் மட்டும் போதாது. தீயோரின் சூழ்ச்சிக்கு இரையாகாத புத்தியும் வேண்டும் என்பதே இந்நாடகத்தின் குறிக்கோள்.

உத்திகள்

Stylized Prose என்பது ஒரு நாடக உரை நடை உத்தி. இதன் அறிமுகம் புதிதல்ல. இந்நடையைப் பாரதிதாசன் 'பிசிராந்தையார்' நாடகத்தில் ஆங்காங்கே மேற்கொண்டுள்ளார். இவ்வகை நடைக்கான மூலம் (Source for the Experimental play) 18-ஆம் நூற்றாண்டில் தோன்றிய அருணாசலக் கவிராயருடைய இராம நாடகக் கீர்த்தனையில் காணப்படுகிறது.

''பரதன் பட்டம் கட்டாவிட்டால் நட்டியோ?
அவன் சர்க்கரைக் கட்டியோ?
என் பிள்ளை ராமன் எட்டியோ?
நான் தான் என்ன மட்டியோ?
வெட்டிப் போடுவேன் உன்னை''

என்று கூனியைப் பார்த்துக் கைகேயி கூறுவாள். ஆனால் இந்த உத்திக்காக அமைந்த முதல் நாடகம் இது தான். இவ்வுத்தி நடையில் உரையாடல் சுவைபட அமைகிறது.

ஆண் : 1. ''அவன் கூட அந்த சிறுக்கி'

ஆண் : 2. ''இவள் என் தேவிங்கிறான் அந்த பொறுக்கி'

ஆண் : 3. ''நந்தன் தான் நம்ம 'பாப்பான்' ங்றா அந்த மினுக்கி'

ஆண் : 4. ''சேரியிலே பரதம் ஆடுறா அந்த தருக்கி'

கையிலே இருப்பது கள்ளு
வாயிலே இருப்பது பள்ளு
காலிலே இருப்பது துள்ளு

முதலியார் : 'ஐயரை ஏண்டா காயறீங்க மட்டி

உடையார் : ''நந்தனைப் போய் கேளுங்கடா தட்டி
''நீங்க பேசுவதெல்லாம் வெட்டி

வேதியர் : அண்ணாகிட்ட எனக்கு எப்பவுமே உண்டு மதிப்பு

முத : அண்ணா அந்த சாணக்கியரோட பதிப்பு

உடை : அண்ணா என்ன செய்வாரோண்ணு வேணாம் களிப்பு

இந்நாடகத்தில் கதைமாந்தர்கள் மாறி மாறிப் பேசுவதாலும், ஒருசில சொற்களிலே உரையாடல் நீளாமல் அமைவதாலும் நாடகம் செறிவுடன் அமைகிறது.

மேடை

ஒரே காட்சியில் நாடகம் முடிவடைகிறது. முதலில் தூக்கப் படுகின்ற திரை நாடக முடிவிலே தான் விழுகிறது. மேடை அலங் காரங்களோ, ஒப்பனைகளோ, பிற பிரம்மாண்டங்களோ எதுவும் தேவையில்லை. இது எளிதில் மேடை ஏற்றக் கூடிய உத்தியோடு எழுதப்பட்ட நாடகம்.

கதை உத்தி

சேக்கிழாரின் திருநாளைப் போவார் (நந்தன்) புராணத்திற்கும், கோபால கிருஷ்ண பாரதியாரின் நந்தனார் சரித்திரத்திற்கும் இது வேறுபட்டது. இந்திரா பார்த்தசாரதி புராண வரலாற்று நோக்கிற்கு மாறுபட்ட, சமுதாயச் சீர்திருத்தப் புரட்சி நோக்கோடு நந்தன் வாழ்க்கையையும், அவன் சமுதாயத்தையும் நோக்கியதால் இது புரட்சி நாடகமாக உருவெடுத்தது. நந்தன் வேதியர்களால் ஏமாற்றப் பட்டு அழிக்கப்பட்டான் எனப் பார்ப்பனர்களுடைய சூழ்ச்சியை இந்நாடகம் அதிகமாகச் சித்தரிப்பதால் இது ஒரு புராண மறுப்பு நாடகமாகவும் அமைகிறது.

கருத்து நாடகம்

(Thematic play) ஒரு குறிப்பிட்ட கருத்தை வலியுறுத்த எழுதப்படும் நாடகத்தைக் கருத்து நாடகம் என்பர். 'நந்தன் நாடகம்' புராணக் கருத்துக்கெதிராக ஆசிரியர் தன் கருத்தை வலியுறுத்தி எழுதிய நாடகமாகையால் இது ஒரு கருத்து நாடகம் எனப்படும்.

ப. டேவிட் பிரபாகர்
சென்னைக் கிறித்தவக் கல்லூரி
சென்னை

இயற்கை மொழி மேம்படுத்தச் செயற்பாடு
(Natural Language Development Process)

மொழித்திட்டமிடல் என்பது தேசியத் திட்டத்தின் ஒரு பகுதியாகும். ஒரு நாட்டின் ஆதாரப் பொருள்களை (Resources) நாட்டின் நலனுக்காக எவ்வகையிலெல்லாம் பயன்படுத்தலாம் என்பதனைத் திட்டமிடுவது போலவே, சமுதாய ஆதாரப் பொருளாக (Social Resource) விளங்கும் மொழி பற்றியும் திட்டமிட வேண்டியுள்ளது. மொழியைத் திட்டமிடல் (Language Planning) என்பது அம்மொழியின் அதனுடைய வளர்ச்சிக்கான செயல் இயக்கத்தின் ஒரு நிலையிலிருந்து அடுத்த உயர்நிலைக்கு எடுத்துச் செல்வதாகும்.

ஒரு மொழி, தனது தோற்றத்திலிருந்து தனது வளர்ச்சிக்கான செயல் இயக்கத்தில் (Process) இருந்து வருகிறது. மொழி வளர்ச்சிக்கான இச்செயல் பல்வேறு நிலைகளைக் கொண்டது. மொழியை ஒரு நிலையிலிருந்து அடுத்த நிலைக்கு மேம்பாடு அடையச் செய்வதற்கு அம்மொழியின் வளர்ச்சிக்கான செயல் இயக்கத்தின் விதிகளைப் புறவய நிலையில் (Objectively) ஆராய்ந்தறிவது இன்றியமையாதது.

சொற்களஞ்சியமும் (Lexicon) இலக்கண அமைப்பும் (Grammatical Structure) ஒரு மொழியின் அடிப்படைக் கூறுகளாக விளங்குவன. எனவே ஒரு மொழியில் சொல் உருவாக்கம் (Word Formation) மற்றும் இலக்கணக் கூறுகளின் செயற்பாடு பற்றிய விதிகளை ஆராய்வது இன்றியமையாதது. இவ்விரு நிலைகளிலும் காலந்தோறும் பல மாற்றங்கள் ஏற்பட்டு வந்துள்ளன. அவற்றுள் இரண்டு மட்டும் இவ்வாய்விற்கு எடுத்துக் கொள்ளப்படுகின்றன. அவை,

1. இலக்கணப்படுத்தம் (Grammaticalization)
2. அகராதிப்படுத்தம் (Lexicalization)

இலக்கணப்படுத்தம்

ஒரு மொழியில் தனிப்பொருளுடைய ஓர் அடிச்சொல் தம் பொருளை இழந்து பிறிதொன்றின் பொருளை வேறுபடுத்தும் முறையில் ஓர் இலக்கணக் கூறாக ஆவதை 'இலக்கணப்படுத்தம்' என்கிறோம். ("an element from being a full root word with an independent meaning is shifted to being a mere grammatical marker of some kind, usually modifying or marking the meeting of some other word on Phrase in the Sentence") இலக்கணக் கூறுகள் ஒரு மொழியில் புதிதாக உருவாகும் நிலையிலும் இலக்கணப்படுத்தம் அமைகிறது. இம்மாற்றங்கள் பிற மொழிச் செல்வாக்காலும், மொழிக்குள் நிகழும் அக வளர்ச்சியாலும் அமையலாம்.

மொழியின் உருபனியல் அமைப்பில் வந்து சேரும் இத்தகைய புதிய இலக்கணக் கூறுகளை மில்லட், ஆன்டனி ஆர்லோடோ போன்ற மொழியியல் அறிஞர்கள் கண்டறிந்து விளக்கியுள்ளனர். ரைமோ அந்திலா எனும் மொழியியல் அறிஞர் (தமிழ் போன்ற) ஒட்டுநிலை மொழிகளில் (Agglutinative Languages) காணப்படும் ஆக்க உருபன்கள் பெரும்பான்மையும் தனிச்சொல்லாக இருந்து இலக்கணப்படுத்தம் பெற்ற நிலையைக் குறிப்பிட்டுள்ளார். இவ்வகையில் தமிழ் போன்ற ஒட்டுநிலை மொழிகளில் இம்மாற்றத்தை எளிதாகக் காணவியலும்.

எ.கா. 1. 'இடம்'

1. நூல் அந்த இடத்தில் இல்லை
2. என்னிடம் நூல் இல்லை.

மேற்காணும் முதல் வாக்கியத்தில் 'இடம்' என்பது பெயர்ச் சொல்லாகவும் இரண்டாவது வாக்கியத்தில் இடப்பொருள் வேற்றுமை உருபாகவும் (Locative Case) அமையக் காண்கிறோம். எனவே 'இடம்' என்கிற சொல் இங்குத் தனது அகராதிப் பொருளை இழந்து இலக்கணப்படுத்தப்பட்டுள்ளது. இது போன்றே 'உடைய', 'இல்' போன்ற வேற்றுமை உருபுகளையும் விளக்கலாம்.

எ.கா. 2. 'வேண்டும்'

3. நூல் வேண்டும்
4. நூலைக் காண வேண்டும்

எ. கா. 3. 'இரு'

5. அவன் வீட்டில் இருந்தான்
6. அவன் காத்திருந்தான்.

'வேண்டும் எனும் உருபு 3 ஆம் வாக்கியத்தில் முதன்மை வினையாக (Main Verb) அமைய 4 ஆம் வாக்கியத்தில் துணை வினையாக (Aux. Verb) இலக்கணப்படுத்தப்பட்டுள்ளதைக் காணலாம். இது போன்றே 'இரு' எனும் உருபு 5-ஆம் வாக்கியத்தில் முதன்மை வினையாக அமைவதையும், 6 ஆம் வாக்கியத்தில் துணை வினையாக அமைவதையும் காண்கிறோம்.

சொல் நிலையிலும், தொடர்நிலையிலும் வேறுபாடு உணர்த்தும் குறைநிலை எய்திய இத்தகைய துணை வினை வடிவங்களை மரபிலக்கணங்கள் இடைச்சொற்கள் எனக் குறிப்பிடுகின்றன. துணை வினைகளின் பண்புகளைக் குறிப்பிடும் மோ. இசரயேல், குறைநிலையெய்திய வினைச்சொற்கள் எனவும், வேற்றின் அடிகள் ஏவலாக வழங்குவதில்லை எனவும், அவை வேறு வினைகளின் பின் இணைந்து பொருளில் வேறுபாடு உணர்த்துகின்றன எனவும் கூறுவர்.

அகராதிப்படுத்தம்

அகராதிப்படுத்தம் என்பது ஒரு மொழியில் ஏற்படும் அகராதிப் பொருள்மாற்ற வகைகளில் ஒன்று. ஒரு மொழி வடிவம் அம்மொழியின் ஆக்க விதிகளுக்குப் புறம்பாக உருவாவதை அகராதிப்படுத்தம் என்கிறோம். ("Whenever a linguistic form falls Outside the Productive rule of Grammar, it becomes lexicalized").

அவ்வாறு உருவாக்கப்பட்ட சொல் புதிய சொல்லாக அகராதியில் இடம்பெறுகிறது. இது தனிச் சொல்லாகவோ கூட்டுச் சொல்லாகவோ அமையலாம். ஒரே வேர்ச்சொல்லை அடிப்படையாகக் கொண்ட சொற்தொகுதி ஒன்றில், ஒரு சொல் வடிவம் பிறவற்றிலிருந்து ஒலி நிலையிலோ உருபன் நிலையிலோ வேறுபட்டுத் தனிமைப்படுத்தப்படும் நிலையே அகராதிப் படுத்தத்திற்கு வழிகாட்டுகின்றன.

எ. கா. 4 'தலையிடு'

'தலையிடு' என்ற சொல் தலை, இடு எனும் தனித்தனிப் பொருளுடைய இருவேறு அடிச்சொற்களின் தொகையாகும். இன்று இச்சொல் புதிய பொருளில் (interfere) தனிச்சொல்லாக அகராதியில் இடம்பெறுகிறது. ' இடையூறு', 'வேலைப்பாடு' போன்ற சொற்கள் இவ்வகையில் எடுத்துக்காட்டுக்களாக அமைகின்றன.

எ.கா. 5 'பச்சிலை'

பச்சிலை என்ற சொல் பசுமை, இலை ஆகிய இரு அடிச் சொற்களின் தொகையாகும். ஆயினும், இச்சொல் பச்சை நிறத்தி லுள்ள இலை என்ற பொருளைச் சுட்டாமல் மருத்துவத்திற்காகப் பயன்படும் மூலிகையைக் குறிக்கின்ற தனிச்சொல்லாக அகராதியில் இடம் பெறுகிறது.

இதுபோன்றே, செங்கல், கரும்பலகை ஊர்வலம், முதல் உதவி, பொருட்காட்சி, கண்ணோட்டம் போன்ற புதிய சொல்லாக்கங்கள் அகராதிப்படுத்தம் முறையில் தமிழில் உருவாகி யுள்ளதைக் காணலாம்.

இலக்கணப்படுத்தம், அகராதிப்படுத்தம் ஆகிய முறைகளில் தமிழ்மொழியில் ஏற்பட்டு வந்துள்ள மாற்றங்களைக் கண்டறிந்து, அவற்றை வகைப்படுத்தி, அவற்றுக்கு அடிப்படையான விதி களைக் கண்டறிந்து எதிர்கால மொழி வளர்ச்சிக்கான அடிப் படைகளை உருவாக்கத் துணைபுரியும்.

துணை நூல்கள்

1. Deiva Sundaram N., "Lexicalization in Tamil', அனைத்திந்தியப் பல்கலைக்கழகத் தமிழாசிரியர் மன்ற ஆய்வுக் கோவை, 1976, தொகுதி 2
2. ....., "Grammaticalization in Tamil', அனைத்திந்தியப் பல்கலைக் கழகத் தமிழாசிரியர் மன்ற ஆய்வுக் கோவை, 1977, தொகுதி 2
3. இசரயேல். மோ., 'தமிழ் இலக்கண மரபில் துணை வினைகள்', மொழியியல் தொகுதி 13 - 14.
4. Sethupillai R. P., Words and Their Significance of Tamil literary and Colloquial, University of Madras, 1974.

சு. தங்கத்துரை
திரு கொளஞ்சியப்பர் அரசு கலைக் கல்லூரி
விருத்தாசலம் – 606 001

ஞானவாசிட்டத்தில் நான்

ஞானவாசிட்டம் என்ற நூல் தத்துவங்கள் நிறைந்த உப புராணமாகும். வீரை ஆளவந்தாரால் தமிழ் உலகுக்கு அறிமுகப் படுத்த இந்த நூலின் மூலம் வடமொழியில் உள்ள யோக வாசிட்டமாகும். இந்த நூல் இராமனுக்கு ஏற்பட்ட வைராக்கிய நிலையை மாற்ற வசிட்ட விசுவாமித்திரர்களால் கூறப்பட்ட தத்துவச் சிந்தனைகளோடு கூடிய கதைகள் நிறைந்ததாகும். இராமன் தன்னுடைய வைராக்கிய நிலைக்குப் பல காரணங் களைக் கூறியுள்ளான். அதை ஆசிரியர் கேள்விகேட்டுப் பதில் கூறுவது போன்ற அமைப்பில் அமைத்துள்ளார். அப்படிக் கேட்ட கேள்விகளில் ஒன்றுதான் ''நான் யார்'' என்பதாகும். இந்தக் கூறு நூலில் எவ்வாறு விளக்கப்பட்டுள்ளது என்பதை வெளிப்படுத்து வதே இந்தக் கட்டுரையின் நோக்கமாகும்.

ஞானவாசிட்ட வைராக்கியப் பிரகரணத்தில் இராமன் தன்னுடைய நிலையைக் கூறிக் கேள்வி கேட்பது போல ஆசிரியர் களன் அமைத்துள்ளார்.

''தந்தை இவன்இல்பிறந்து வளர்ந்து பலகலைதரித்துச்
சதாசாரத்தால்
வந்து உயர்நன் நதியாடி வாரிசூழ் புவியுழன்று
வருதலோடும்
இந்த நெடும் சகமோகத்து இச்சையெலாம் தீர்த்தது இதில்
இன்பமில்லை
அந்தமுறல் பிறப்பதற்கே பிறப்பது மீட்டிறப்பதற்கே
அநித்தம் யாவும்''
(வைராக்கியப் பிரகரணம், 61)

இவ்வாறு கூறிய இராமன் வசிட்ட விசுவாமித்திரர்களைப் பார்த்து,

''காணப்படுவதாலும், உலகத்தாலும் என்ன பயன்?
யாமார்? வருவது எது?''

இவைபோன்ற பல கேள்விகளைக் கேட்டான். இந்த நூல் தடை விடை அமைப்பில் அமைத்திருப்பதால் முதலில் தடையை இராமன் வாயிலாகவே ஆசிரியர் கேட்கவைக்கிறார். இது சிந்தனைக்குரியதாகும்.

''..... தலைகீழ்த்தலிரில் நான்ற
ஒதுதுளியொத்த உயிர்மத்தர் என அகலாத்தில் உடல்
விட்டோம்'' (வைராக்கியப் பிரகரணம், 66, 3, 4)

உடல், உயிர் நிலையானது அல்ல. இவ்வாறு பல பாடல்களில் இராமன் கேள்வி கேட்பதுபோல உள்ளது. இராமன் கேட்ட ''யாமார்? '' என்ற கேள்விக்குப் பதில் கூறும் வண்ணம், அவனைப் பக்குவப்படுத்தவேண்டி, அவனை ஒத்த அரசர்களும் இப்படிக் கேட்டுப் பக்குவம் அடைந்தார்கள் என்று கூறுவதுபோல் நூலில் பல கதைகள் உள்ளன.

நான் என்பதற்கு ஆணவம், செருக்கு, அகம்பாவம் எனப் பலபொருள்கள் கூறுவர். இவை எல்லாம் தத்துவார்த்தச் சிந்தனை களை விளக்கிக் கூறும்போது கூறுவதாகும். நேரடியாகப் பொருள் கூறுகின்றபோது உயிரோடு கூடிய மனிதனைக் கூறுவது ஆகும். இந்த நோக்குமட்டுமே இந்தக்கட்டுரையில் சிந்திக்கப்பட்டுள்ளது.

கசன் கதையில் கசன் மன்னன் ஒருநாள் சமாதியில் இருந்து எழுந்தவுடன், ''யானார்''? (5.4) எனக் கேட்கிறான்.

சுரகு கதையில், சுரகு ஆனவன் தன் குருவான் மாண்டவிய முனிவரைப் பார்த்து, ''யானார்?'' (21.1) எனக் கேட்கிறான்.

பகீரதன் கதையில், பகீரதன் தன் குருவான திரிதுலனிடம், ''நிலைபெற நான் என்றெண்ணம் நீக்குவது எங்ஙன்?'' (17. 1,2) எனக் கேட்டான்.

இட்சுவாகு கதையில், இட்சுவாகு மன்னன் ஒரு சமயம் தனித்திருக்கும் போது, 'ஊனார் பிறவிக்கடல் கடப்போர்க்குரிய விளைப்பாறுதல் எய்த நான் யார்'' (7.1) எனச் சிந்தித்தான்.

இவ்வாறு நூலில் இந்தக் கேள்வி கேட்கப்பட்டதாகப் பல இடங்களில் அமைக்கப்பட்டுள்ளது.

''நான் அணுவென்னும் சமமாம்'' என இட்சுவாகுகதையில் (20.4) கூறப்பட்டதிலிருந்து வடிவமற்றது என்ற உணர்வு எழுகிறது.

பகீரதன் கதையில், '.....நான் என்னும் தோற்றம் தெரிகிலாதது. அதுவே நீயாம் தெளிந்த தற்பரமும் அஃதே'' (19.3,4) இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

உயிருக்கு வடிவம் கூறமுடியாததுபோல, நான் என்பதற்கு வடிவம் கூறமுடியாது என்பர். நான் என்பது பொய் என இராமன் கூறியதுபோலப் பல பாத்திரங்கள் வாயிலாகவும் காட்டியுள்ளார் ஆசிரியர்.

வீமபாசதிடர் கதையில்,

''நுண்ணறிவாலேயாம் ஆரென்றுற நோக்கலோடும்
புண்ணியமிலாதோர் வாழ்வுபோலது பொய்யாப்போகும்''
(21.3.4) என்று குறிப்பிட்டுள்ளார்.

சுரகு கதையில்,

''அனிசம் நான் என்பதாரென நாடினன் அடிமுதன்முடி ஈறாம்
தனியுடம்மை நான்என்பது புதுமையாம் சடவுடல்
காண்கேன்'' (26.2,3) இவ்வாறு காணமுடிகிறது.

தாமவியாளர் கடர் கதையில், ''மதியின் நான் எனலும் பொய்யே மதியின் நீயெனலும் பொய்யே'' (41.3,4) என்றும் காண முடிகிறது.

இந்தக் கருத்துகளை நோக்கும்போது நான் என்று ஒன்றும் இல்லை என்பது தெளிவு. இதனைச் சடம் என்றும் கூறியுள்ளனர்.

இந்தச் சிந்தனையை, சுவாமி சித்பவானந்தர் தினசரி தியானம் என்ற புத்தகத்தில் (ப. 357), 'நான் என்பதற்கு இலக்காயிருப்பது எது? உடலா, தசையா, ரத்தமா, எலும்பா? மனம், புத்தி, சித்தம் முதலிய அந்தக்கரணமா? நான் என்பது வெங்காயம் போன்றது. சருகுகளை ஒவ்வொன்றாக நீக்கிய பிறகு வெங்காயத்தில் எஞ்சியிருப்பது ஒன்று மில்லை. கருவிக்கரணங்களை நீக்கிய பிறகு நான் என்பதற்கு இலக்காக ஒன்றுமில்லை, எனக் குறிப்பிட்டுள்ளார்.

நான் என்று கூறினால் ஏற்படுபவை

நான் என்று கூறினால் பல தீமைகள் ஏற்படும் எனக் கதைகள் மூலம் ஆசிரியர் விளக்கியுள்ளார்.

1. ''மொய்யுடல் நானே என்னில் மூவேழு நரகும் அஃதே
வெய்யவன் துயராமேனும் மெய்யை யான்என்ன வேண்டா''
(சுகன் கதை, 6, 1, 2)

2. ''நாம் உடல் என்னும் மாசால் ஞானக்கண் குருடாய்ப்

போகும்'' உடலை நாம் என்று கூறினால் அறிவே விளங்காது. *(கசன்கதை, 7.1)*

3. துன்பத்தைக் கொடுக்கக்கூடியது *(கசன் கதை, 5, 4)*

4. எதுவரை நவத்துவாரமுள்ள உடலை நான் என்று காண்கின்ற இந்த உலகில் பொருள் என்கின்ற பாவனை இருக்கின்றதோ அதுவரையிலும் சித்தம் முதலானவை மயக்கம் உடையதாகும் *(புசுண்டன் கதை, 3)*

5. நான் என்று கூறினால் குற்றம் ஏற்படும். ''குற்றம் ஈல்லாம் குவிந்திருக்கூடாம் நான் என்பதுதானே'' *(சிகித்துவசன் கதை, 137.3)*

6. நான் என்ற உணர்வு இருந்ததால் தாமவியாளகடர் ஆகிய மூவரும் இறந்தனர்.

   ''தானவர் என முன்னாஞ்செய் தாமனை முதலாமூவர்
   ஞானமில்லாமையாலே நான்எனது என்று பொய்யாய்
   வானவர் போரின் மாண்டார்'' *(வீமபாசதிடர் கதை, 17.1-3)*

7. ''நாம் ஆரென்ன உற்று நின்று உணருமட்டும் கலகமார் பிறவி மோகங் கங்குல்போல் மூடிநிற்கும்'' *(தாமவியாளகடர் கதை, 6, 1, 2)*

நீக்கவழி

1. தன்மன வருத்தத்தாலே நீக்க முடியும்.

   ''நான் என்ற எண்ணம் நீக்குவது எங்ஙன் என்னத்
   தலைமைசேர் குரவன் சொல்வான் தன் மனவருத்தத்தாலே''
   (பகீரதன் கதை, 18.1, 2)

2. நான் என்பதை அறிவால் மாற்றலாம் *(வீமபாசதிடர் கதை, 9)*

3. யான் எனது என்கின்றபோது நீண்ட கிளைகளாக விரித்து நரக மென்னும் காய்களைக் காக்கும். அந்தத் தருக்களானவை, குறைவற்ற ஞானாக்கினியினால் மூலத்துடன் எரிந்துபோகும். *(வீமபாசதிடர் கதை, 10).*

பலன்

1. நான் என்பதை விட்டவனே சீவன் முத்தன் *(புசுண்டன், 1.4)*

2. நான் என்று எண்ணுதல் நீங்கிவிட்டால் பிறவிநோய் தீரும் *(பகீரதன் கதை, 17.1)*

3. தன்னை உணர்ந்துவிட்டால் மோகம் போய்விடும் *(தாமவியாளகடர் கதை, 6)*

4. 'நான், எனும் வாதனை நின்றால்
வலைபுகுந்த புள்ளாமென மூவரும் மடிவர்'' - என நான் என்ற உணர்வு இல்லாமல் இருந்தால் ஆணவம் கன்மம் மாயை என்ற மூன்று மலங்களும் அழிவது உறுதி என்பர் (வீரபாசதிடர் கதை, 31.1,2)

5. ''தோற்றுடல் நான் எனாமை சுதிகள் சொல்லுமுத்தி'' (வீரபாச திடர் கதை, 15.4) தோன்றுகின்ற உடலை நான் என்று சொல்லா மல் இருப்பதே வேதங்கள் முறையிடுகின்ற முத்தியாகும்.

6. நான் என்பதை நீக்கித் தானாக விளங்குபவர்களே மகான்கள் ஆவார்.

7. ''நான் எனும் பொருள் காணாதோர் ஞான ஆகாயங்காணார் நான் எனும் பொருளைக் கண்டோர் ஞான ஆகாயமாவார் நான் எனும் அகங்காரக்கார் ஞானவிண்மதியை மூடில் நான் எனாப் பரம வாம்பன் நன்மலர் விரியாதன்றே'' (வீமபாசதிடர், கதை, 8)

இதனை வள்ளுவர் கூறும்,

''யான்எனது என்னும் செருக்கறுப்பான் வானோர்க்கு
உயர்ந்த உலகம் புகும்''(346) குறள் கருத்தை ஒத்துள்ளது எனலாம்.

நான் என்ற கருத்தை வெளிப்படுத்த முற்பட்ட ஆசிரியர் கசன்கதை மூலம் அத்வைத சிந்தனையையும் வெளிப்படுத்தி யிருப்பதைக் காணமுடிகிறது.

''அனைத்தினும் கத்தனல்லேன் அவன் இவன் அல்லேன் என்ன
நினைத்து உளத்துறதியாகி நிற்றியால் அஃதின்றென்னில்
அனைத்தினும் கத்தனானே அளவறுமது நானென்ன
நினைத்தசை வொன்றுமின்றி நிச்சயமாகி நிற்பாய்''
(கசன்கதை, 8)

முடிவு

நான் என்று ஒன்றும் இல்லை. அது சடமே. மேலும் நான் என்பது பொய்த்தோற்றமாகும். நான் என்று கூறினால் பிறவிக்கு வழிவகுக்கும். எனவே நான் என்ற சிந்தனையே இருக்கக்கூடாது. தத்துவஞானிகள் கூறுவதுபோல், 'யான் என்ற அகங்காரத்தையும், எனது என்ற மமகாரத்தையும் நீக்கிவிட்டால்' முத்தி கிடைக்கும் என்ற சிந்தனை இந்த நூலில் வலியுறுத்தப்பட்டிருப்பதைக் காண முடிகிறது. மேலும் நானே எல்லாம் (கர்த்தா) என்ற அத்வைத (எல்லாம் ஒன்று என்ற) சிந்தனையும் இங்கு இந்த உத்தியால் நிலைநிறுத்தப்பட்டிருப்பதை அறியமுடிகிறது.

தி. தங்கம்மாள்
இராணிமேரி கல்லூரி
சென்னை

ஆய்வுலகில் மகளிர்

தமிழ்இலக்கியம் பல்துறை வளர்ச்சி பெற்றுப் பெருகிவரும் இவ்விருபதாம் நூற்றாண்டில், அவ்வளர்ச்சியின் போக்குகள் பற்றிய ஆய்வுகள், அறிஞர் பலரால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இத்தகைய ஆய்வுப் பணியினை மகளிர் பலரும் ஆற்றி வருகின்றனர்.

மதுரைக் காமராசர் பல்கலைக்கழகப் பதிப்புத் துறையின் வெளியீடாகிய 'தமிழியல் ஆய்வு' என்னும் நூலை அடிப் படையாகக் கொண்டு, தமிழ் இலக்கிய ஆய்வில் மகளிர் பங்கை மட்டும் சுட்டிக் காட்டுவது இக்கட்டுரையின் நோக்கமாகும்.

மகளிரால் எழுதப்பட்ட ஆய்வுக்கட்டுரைகள் பல வெளி வந்துள்ளன. ஆனால், பல்கலைக்கழக ஆய்வுப் பட்டத்திற்காகச் செய்யப்பட்டுள்ள எம்.பில்; பிஎச்.டி ஆகிய உயர்நிலை ஆய்வுகளில் மகளிர் பங்கைச் சுட்டுவதாக மட்டுமே இக்கட்டுரை அமைகிறது.

இக்கட்டுரைக்கு ஆதாரமாக, 'தமிழியல் ஆய்வு' (இரண்டாம் பதிப்பு), இராணிமேரிகல்லூரி எம்.பில் ஆய்வேடுகள், அன்னை தெரசா மகளிர் பல்கலைக்கழக எம்.பில் ஆய்வுகள் ஆகியவை எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளன. மேலும், இக்கட்டுரை 1970 முதல் 1989 வரையிலான இருபதாண்டுக் கால இலக்கிய ஆராய்ச் சியை மட்டும் மையமாகக் கொண்டுள்ளது. பல்கலைக்கழகப் பட்டம் பெறுவதற்கான ஆய்வுகள் எழுபதுகளின் பிற்காலத்தில் வளர்ச்சி பெறத் தொடங்கியதால், அக்காலம் மட்டுமே இக் கட்டுரைக்குப் பயன்படுத்தப்பட்டுள்ளது.

எழுபதுகளின் முன்னர்ச் சென்னை, அண்ணாமலைப் பல்கலைகளில் உயர்நிலைபட்ட ஆய்வுகள் சிலரால் மேற் கொள்ளப்பட்டன. அத்தகைய பெருமைக்குரியவர்களை ஆய்வு முன்னோடிகள்' என்று குறிப்பிடலாம்.

ஆய்வுத்துறையில் மகளிர் செயல்படும் விதத்தினை, ஆய்வு மையங்கள் (மகளிர் கல்லூரி/பல்கலை), நெறியாளர்கள் (மகளிர்), ஆய்வாளர்கள் (மகளிர்) என்ற அடிப்படையில் பாகுபடுத்தலாம். ஆய்வு அடிப்படையான ஆய்வுமையங்கள் முதற்கண் விளக்கம் பெறுகின்றன.

ஆய்வுமையங்கள்

கட்டுரையின் கால அளவைக் கொண்டு காணும்பொழுது, தொடக்கத்தில் பல்கலைக்கழகங்கள் மட்டுமே ஆய்வு மையங்களாக விளங்கின. சென்னை, அண்ணாமலை, மதுரைப் பல்கலைக் கழகங்களில் செயல்பட்ட ஆய்வுமையங்கள் பின்னர் அறுபது மையங்களாகப் பரந்து விரிந்தன. கல்லூரிகளில் எழுபதுகளின் பிற்காலத்தில் தான் ஆய்வுமையங்கள் ஏற்படுத்தப்பட்டன.

அறுபது ஆய்வுமையங்களில் ஆறுமையங்கள், இராணி மேரி கல்லூரி, பாத்திமா கல்லூரி, டோக் பெருமாட்டி கல்லூரி, பராசக்தி மகளிர் கல்லூரி, மகாலட்சுமி மகளிர் கல்லூரி, அன்னை தெரசா மகளிர் பல்கலைக்கழகம் ஆகிய இடங்களில் அமைந்திருந்தன. பத்து விழுக்காடு அளவே ஆய்வுமையங்கள். அங்கு மகளிர் பலர் நெறியாளராகப் பங்கு கொண்டனர்.

மகளிர்-நெறியாளர்

மகளிர் நெறியாளர் வரிசையில் முப்பத்திநான்கு பேர் இடம் பெற்றுள்ளனர். இது 16.3 விழுக்காடு அளவு ஆகும். இராணி மேரி கல்லூரியில் எட்டுக்கும் மேற்பட்ட நெறியாளர் இருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

மகளிர் ஆய்வாளர்கள்

எழுபதுகளுக்கு முன்னர் எம்.லிட் ஆய்வாளர் எண்ணிக்கை குறைவாக இருந்த பொழுது, பிஎச்.டி ஆய்வாளர்களாக லீலாவதி, சௌந்தரா, காமேஸ்வரி, குளோரியா சுந்தரமதி, இந்திரா சுப்புலட்சுமி, ரங்கநாயகி, தாட்சாயணி ஆகியோர் மட்டுமே விரல் விட்டு எண்ணக்கூடிய அளவில் இருந்தனர். எழுபதுகளில் முழு நேர, பகுதிநேர எம்.பில் ஆய்வு பல்லைக்கழகங்களில் இருந்து, கல்லூரிகளில் பட்ட வகுப்பாக மாறிய பின்பு, குறிப்பிடத்தக்க வளர்ச்சி நிலையைக் காணமுடிகிறது.

எம்.பில் ஆய்வுத் தலைப்புகள் மொத்தம் 962 ஆகும். அதில் மகளிர் ஆய்வாளர் எண்ணிக்கை 438 ஆகும். மொத்தத்தில் 45.5 விழுக்காடு எம்.பில் மகளிர் ஆய்வாளர் இடம்பெற்றுள்ளனர்.

இக்குறிப்பிடத்தகுந்த வளர்ச்சியில் இராணி மேரி கல்லூரிக்குத் தனி இடம் உண்டு. 1981 இல் ஆய்வுமையமாகத் தோன்றி, எண்பதிற்கும் மேற்பட்ட எம்.பில் ஆய்வாளர்களை ஆய்வுலகிற்கு அறிமுகப்படுத்தியுள்ளது.

பல்கலைக்கழக அளவில் சென்னை, மதுரைப் பல்கலைக் கழகங்கள் இணையான அளவில் எம்.பில் ஆய்வாளர்களை உருவாக்கி உள்ளன. மகளிர் பல்கலைக் கழகம் குறுகிய கால அளவில் எம்.பில் ஆய்வில் வளர்ச்சியடைந்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

நாட்டுப்புற இயலும், இக்காலஇலக்கியமும் அதிக அளவில் ஆய்வுப்பொருளாக அமைந்துள்ளன. எம்.பில்பட்ட ஆய்வில் புதினம் பெரும்பான்மையாகவும், அதுவும் பொதுநிலை ஆய்வாகவும் அமைந்துள்ளது.

நாட்டுப்புற ஆய்வில், சமுதாயச்சடங்குகளே பெரும் பான்மையான இடத்தைத் தன் வசப்படுத்தியுள்ளன. காட்டாக,

1. இராஜபாளையம் இல்லத்துப் பிள்ளைமார் குலச்சடங்குகள்
2. விருதுநகர் வாழ் தங்க ஆசாரியார்குலச் சடங்குகள்
3. கொண்டையன் கோட்டை மறவர் குலச்சடங்குகள்
4. கிருஷ்ணவகைத் திருமணச் சடங்குகள்

என்பவற்றைக் கூறலாம். மதுரைக் காமராசர் பல்கலைக்கழகத்தில் சடங்குகள், தெய்வவாழிபாட்டு முறைகள், சொலவடைகள், விடுகதைகள், வாய்மொழிக்கதைகள், ஊர்ப்பெயர் ஆய்வுகள் ஆகியன ஆய்வுப்பொருளாக இடம் பெற்றுள்ளன.

சுவடியியலும் மொழிபெயர்ப்பியலும் மகளிர் தேர்ந் தெடுக்காத துறைகளாக உள்ளன. அன்னை தெரசா பல்கலையில் எம்.பில் ஆய்வேடுகள் நாவல் சார்ந்தவை மிகுதியாக இருப் பினும் திரைப்படம், தொலைக்காட்சி போன்று துறைகளை ஆய்விற்கு உள்ளடக்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

1. பாரதிராஜாவின் படைப்புகளில் பெண்மைச்சித்தரிப்பு
2. இயக்குநர் கே. பாலசந்தரின் திரைப்படங்களில் பெண்மைச் சிக்கல்கள் - ஒருபார்வை.
3. தொலைக்காட்சி நிகழ்ச்சிகளில் பெண்கள் சித்தரிப்பு.

பிஎச்.டி-பட்ட ஆய்வு

இதன் தலைப்புகள் இலக்கியவகைமைப் பொருண்மை களை அடிப்படையாகக் கொண்டுள்ளன. மொத்த பிஎச்.டி

ஆய்வுகள் 1199 ஆகும். அதில் மகளிர் ஆய்வு 289 ஆகும். 24 விழுக்காடு மகளிர் பிஎச்.டி ஆய்வாக உள்ளது.

புள்ளி விவரங்கள் காட்டும் உண்மைகள் சில

1. மகளிர் - ஆய்வுத்துறை வளர்ச்சி எண்பதுகளில் தொடங்குகிறது.
2. எம்.பில் பட்ட ஆய்வு மிகுதி.
3. எம்.பில் பட்ட ஆய்வில் நாவல் உள்ளிட்ட இக்கால இலக்கிய ஆய்வுகள் சென்னைப் பல்கலைக்கழக ஆய்வாளர்களால் மிகுதியாக மேற்கொள்ளப்பட்டுள்ளன.
4. கள ஆய்வுமுறை, மதுரைக்காமராசர் பல்கலைக்கழக எம்.பில் மகளிர் ஆய்வாளர்களைப் பெரிதும் ஈர்த்துள்ளது.
5. அண்ணாமலைப் பல்கலைக்கழகப் பிஎச்.டி. பட்ட மகளிர் ஆய்வாளர் இலக்கணம், மொழியியல் ஆய்வில் முன்னிற் கின்றனர்.
6. பெயராய்வு - எம்.பில் பட்ட அளவிற்குப் பிஎச்.டி பட்டத் திற்கு மேற்கொள்ளப்படவில்லை.
7. சுவடியியல், மொழிபெயர்ப்பியல், கல்வெட்டியியல் போன்ற ஆய்வுகளில் மகளிர் பங்கு சுட்டும் நிலையில் இல்லை.
8. கோயில் ஆய்வு, இதழியல் ஆய்வு போன்றவை பெருகி வருகின்றன.
9. சிறைச் சாலையில் பெண்கைதிகள் போன்ற நடப்பியல் துறை பற்றிய களஆய்வு முறையும், திரைப்படம், தொலைக்காட்சி போன்ற துறைகளில் கள ஆய்வுமுறையும் அன்னைதெரசா மகளிர் பல்கலைக்கழகத்தால் மேற்கொள்ளப்பட்டுள்ளமை புலனாகிறது.

பிறமொழி இலக்கியம் பற்றி ஒப்பாய்வு முறையிலும், பிற நாட்டுக் கலாசாரத்தையும் அறிவியல் வளர்ச்சியையும் வெளிப் படுத்தும் பயண இலக்கியம் சார்ந்த ஆய்விலும், அறிவியல் சார்ந்த ஆய்விலும் மகளிர்தம் சிந்தனைகளைச் செலுத்த வேண்டும் அப் பொழுதுதான் பல்துறை அறிவும், சமுதாயப் பயன்பாடும் நிறைந்த ஆய்வுகள் பலவெளிவரும்.

மகளிர் ஆய்வுத்துறையில் பீடுநடை போட்டு வளர்ந்து வரும் காலமாக இது உள்ளது. வளர்ந்து வரும் சமுதாயச் சூழ்நிலைக் கேற்ப, மகளிர்தம் ஆய்வுப்புலம் அமையின், தமிழ் இலக்கிய ஆய்வுத்துறையில் மகளிர் சிறப்டம் பெறுவர் என்பது உறுதி.

ஆ. தசரதன்
உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
சென்னை – 600 113

புலத்தீயர் மருத்துவ மரபு

முன்னுரை

சித்த மருத்துவம் தொடர்பான பல்லாயிரம் ஓலைச் சுவடி களில் அகத்தியர் பெயரில் பாடப்பெற்றனவே மிகுதி. தமிழ் இலக்கணம் செய்ததாகக் கூறப்பெறும் அகத்தியரும் அவரின் பன்னிரு மாணவர்களும் அதன்பிறகு தமக்கென ஒரு மாணாக்கர் மரபினைக் கொண்டிருக்க வில்லை என்றே தோன்றுகிறது. அகத்தியர் உள்ளிட்ட பதினெண் சித்தர்களினின்றும் இம்மாணாக்கர் வேறுபட்டவர். இவ்விரு சாராரும் அகத்தியர் என்னுமொரு சித்த மருத்துவர் உருவாக்கிய பல சித்தமருத்துவர்களினின்றும் வேறானவர். இவ்வகையான அகத்தியர் மரபுகள் வேறொரு கட்டுரையில் சுட்டிக்காட்டப் பெற்றுள்ளன.[1]

அகத்தியர் புலத்தியர் என்பாருக்குத்தம் மருத்துவ நுட்பங் களைக் கூறினார் எனப் பல மருத்துவ நூல்களின் பாடல் களிலிருந்து தெரிந்து கொள்ள முடிகின்றது. ஆனால் புலத்தியர் அந்நுட்பங்களைப் பிறர்க்குக் கூறினாரா என அறிந்து கொள்ள முடியவில்லை. புராணச் செய்திகள் இப்புலத்தியரை முனிவரா கவே காட்டுகின்றன. புலத்தியரின் மகனார் ஒருவரின் பெயர்கூட அகத்தியர் என்றே அறிய முடிகின்றது. இவர் தவத்தால் பெயர் பெற்றதால் புலத்தியர் என வழங்கப்பட்டார் என அபிதான சிந்தாமணியிலிருந்து தெரிந்துகொள்ள முடிகிறது.[2]

அகத்தியர் மருத்துவ மரபு போன்று புலத்தியர் மருத்துவ மரபு என ஒன்று உள்ளதா? அல்லது புலத்தியர் புராணச் செய்திகளோடு மட்டுமே தொடர்பு கொண்டிருப்பவரா? எனும் வினாக்களுக்கு விடைகாணுவதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

அகத்தியர் புலத்தியர்க்குக் கூறியது

அகத்தியர் பெயரில் பாடப்பெற்ற பலநூல்களில், அவர் புலத்தியன் என்பாருக்குச் சொல்லியதாக இடம்பெற்றுள்ளது. சான்றாக, அகத்தியர் சௌமிய சாகரம் 1200 என்ற நூலிலும், அதன் சுருக்கங்களான 300,120,50, பாடல்கள் கொண்ட நூல்களிலும் மருத்துவ நுட்பங்களை அகத்தியர் தம்மைந்தன் புலத்தியருக்குக் கூறுவதாக உள்ளது. அவை சில வருமாறு:

''பாரப்பா புலத்தியனே பஞ்சு நூலும்
பாடினதோர் காவியந்தான் அஞ்சும் பார்த்து''[3]

''சேரப்பா புலத்தியனே மகாராசயோகி''[4]

என்றும், அவரை 'மைந்தன்' என்றும் அகத்தியர் கூறுவதாக வருகிறது.[5]

இவற்றைப் போன்றே அகத்தியர் சௌமிய சாகரச் சுருக்கம் 50 என்ற நூலிலும் வருவதைக் காணலாம்.[6]

மேலும், அகத்தியர் பெயரில் அமைந்துள்ள வைத்திய சூத்திரம் 50 என்ற நூலிலும் அகத்தியீர் புலத்தியரை விளித்துப் பாடியுள்ளதாகக் காணமுடிகிறது.

''பாடியதோர் வைத்தியம் அம்பதுதான் சொல்வேன்
பண்பான புலத்தியனே முன்னூலோடே''[7]

இவைபோன்ற பல சித்த மருத்துவ நூல்களில் அகத்தியர் புலத்தியரை விளித்துப்பாடுவதாக உள்ளது. வேறு எவரையும் விளித்துப்பாடுவதாக அறிய முடியவில்லை. அதனால் அகத்தியருடைய மருத்துவச்சீடர் புலத்தியரே எனத் தெரிகிறது. ஆயினும் 'மகாராசயோகி' எனப்புலத்தியர் கூறப்படுவதாலும், புலத்தியர் பற்றி மருத்துவநூல்களில் வேறு குறிப்புகள் இல்லாததாலும் புலத்தியர் மருத்துவ மரபு கேள்விக்குறியாகிறது.


புலத்தியர் மரபு

அகத்தியர் தன்மைந்தன் புலத்தியனுக்குப் போதித்த மருத்துவச் செய்திகளைப் புலத்தியன் வேறெவர்க்கும் கூறியதாகச் சான்றுகள் கிடைக்கவில்லை. புலத்தியன் பெயரில் பாடிவைத்த மருத்துவ ஏடுகள் கிடைத்தில. சட்டை முனியின் பிள்ளைகளான சீடர்கள் 205 பேரும், பிண்ணாக்கீசரின் மருத்துவச்சீடர்கள் 36 பேரும், கொங்கணர், திருமூலர், போகர் இவர்களின் மருத்துவச் சீடர்கள் 1300 பேரும், பாம்பாட்டியார், அகப்பைச்சித்தர்

ஆகியோரின் மருத்துவச்சீடப் பிள்ளைகள் தலா 57 பேரும், கருவூரார்க்குப்பத்துப்பேரும் இவைபோன்று பலர்க்கும் இருக்க, புலத்தியர்க்கு என மருத்துவச்சீடர் மரபினர் யாருமிருந்ததாகக் குறிப்புகள் இல்லை. இதனால் புலத்தியர்க்கு மருத்துவமரபு ஒன்று ஏற்படவில்லை எனத் தெரிகிறது.

முடிவுரை

புலத்தியர்க்கு மருத்துவ மரபு இல்லை ஆயினும், அவர்க்குப் பின், அரக்கமரபும், முனிவர் மரபும் ஒன்றும் இருப்பது தெரிய வருகின்றது. பொதிகைமலையானது யோகநிட்டைக்குரிய தலமு மாதலால், புலத்தியர் மருத்துவ மரபைக் கைவிட்டு, யோக மார்க்கத்தைத் தழுவியிருக்கலாமெனத் தெரிகிறது. சித்தர் களுக்குரிய சரியை, கிரியை, யோகம், ஞானம் இந்நான்கு மார்க்கங்களில், புலத்தியர் யோக மார்க்கத்தைத் தழுவினார் எனக் கொள்ளலாம். அதற்கேற்ப அவர்க்கு முனிவர் அகத்தியர் எனும் ஒரு மகனார் இருந்தாகவும் தெரிகிறது. விசுரவசு என்ற பெயரில் வேறொரு மகனும் இருந்துள்ளார். முனிவர் அகத்தியனுக்குத் திரிதசி என்ற மகனும் அவனுக்குச் சந்நுதன் என்ற மகனும் இருந்துள்ளதாகப் புராணச் செய்திகள் குறிக்கின்றன. விசுர வசுவுக்குப்பின் அரக்கமரபே தலைதூக்கியுள்ளது. புலத்தியர் மரபைப் பின்வருமாறு கோட்டுருவப்படத்தால் விளக்கிக் காட்டலாம். மருத்துவ அகத்தியர் மைந்தன் புலத்தியர் என்றும், புலத்தியர் மைந்தனே இலக்கணஞ்செய்தும் உலோப முத்திரையை மணந்தும் தொல்காப்பியர் ஆகிய பன்னிரு சீடர்களைப் பெற்றவர் என்றும் தெரியவருகின்றது.



குறிப்புகள்

1. ''அகத்தியர் மருத்துவமரபு'', ஆ. தசரதன், 1999. Ethno Studies and Development Network நடத்திய 'பழமை மருந்தியலும் பல்லுயிர் பாதுகாப்பும்' என்ற கருத்தரங்கில் 21-23-1-1999 அன்று படித்த கட்டுரை.
2. அபிதான சிந்தாமணி, பக். 1173, மறுபதிப்பு (1981) 1986.
3. அகத்தியர் சௌமிய சாகரம் 1200, G.O.M.L., சென்னை, தொகுதி III பகுதி II, பக்.2180.
4. அகத்தியர் சௌமியசாகரச் சுருக்கம் 150, G.O.M.L, சென்னை, தொகுதி VI, பக்.2111.
5. மேற்படி நூல், பக்.211
6. அகத்தியர் சௌமிய சாகரச் சுருக்கம் 50, G.O.M.L, சென்னை, தொகுதி VI, பக், 2110.
7. அகத்தியர் வைத்தியச் சூத்திரம் 50, G.O.M.L., சென்னை, தொகுதி VI, பக்.1633.

பி. தட்சிணாமூர்த்தி
திருநெல்வேலி

சிறுபஞ்ச மூலம் காட்டும் பெண்மை

கீழ்க்கணக்கு நூல்களில் மருத்துவப் பெயர் கொண்ட அறநூல் உயிர்க்கு உறுதி தரும் ஐயைந்து பொருள்கள் வெண்பா தோறும் கூறப்பட்டுள்ளன. பெண்மை குறித்தும் சிற்சில வெண்பாக்களில் கருத்துகள் காணப்படுகின்றன. நூல் எழுந்த காலச் சமுதாயத்தில் மகளிர்க்குரிய பங்கு இருந்த உண்மையைக் காரியாசான் வழிநின்று காண்பது இவண் நோக்கமாகிறது.

ஐவகைப் பெண்டிருடன் சேராது இல்லற வாழ்வை அமைப்பது நலம். திரளாத சிறுபெண், பூப்பு நின்று விட்டவள், தவமேற்ற பெண், எப்பொழுதும் ஒப்பனை செய்து கொண்டு ஆடவரை மயக்குபவளும் கற்பைக் காவாதவளுமான வேசையர், பிறர் மனைவி ஆகிய ஐவருடன் சேராது அறிவுடையோர் வாழ்வர் என்பதை,

> ''பூவாதாள் பூப்புப் புறங்கொடுத் தாள் இலிங்கி
> ஓவாதாள் கோலம் ஒருபொழுதுங் - காவாதாள்
> யார் யார் பிறர் மனையாள் உள்ளீட்டின் வைவரையுஞ்
> சாரார் பகைபோற் சலித்து.'' (42)

எனச் சிறுபஞ்ச மூலம் கூறுகிறது. பேதையையும் பேரிளம் பெண்ணையும் பகைவர்காக் கருத வேண்டும் என்ற அறிவுரை சிறுமியர் கற்பழிப்புகளையும், விருத்தஸ்திரி ஆலிங்கணங்களை யும் வெறுக்கச் செய்துள்ளது. பழந்தொழில் நடத்தும் பரத்தையரைச் சேரக்கூடாது என்பதால் பழங்காலத் தமிழ் அகநூல் கருத்திலிருந்து வேறுபடுகிறது. சங்கத்தமிழில் பலவகைப் பரத்தையர் இருந்தனர். பரத்தையர் இல்லம் ஏகினான் என்பதற்காகத் தலைவனை வெறுத்து ஒதுக்கி விடுவதில்லை. அகநூல்கள் ஏற்றன. அறநூல் கூடாது எனக் கூறுவதால் அத்தொழில் ஒழிய வேண்டும் என்பதில் ஆர்வம் காட்டியுள்ளன எனலாம். பிறனில் விழையாமையையும் இவ்வற நூல் குறிப்பிடுவதால் ஒருத்திக்கு ஒருவன் எனக் கற்புநிலையைப் பொது மையாக்கும் நிலையைக் காண முடிகிறது.

பூப்பு நின்று விட்டால் மகப்பேறு எய்துதல் அரிது. மங்கலம் ஆகிய மனைமாட்சிக்கு நன்கலம் மகபேறாதலின் மகளிர்க்கு ஐந்து கடமைகளை உணர்த்தும்போது மக்கட்பேறு முதலில் கூறுகிறார் காரியாசான்.

''மக்கட் பெறுதல் மடனுடைமை மாதுடைமை
ஒக்க உடனுறைதல் ஊணமைவு - தொக்க
அவ்வலை அல்லாமை பெண் மகளிர்க் கைந்து
தலைமகனைத் தாழ்க்கு மருந்து''(53)

என்பது சிறுபஞ்ச மூலம் மக்கள் என்பது ஆண், பெண் இரு பாலாரையும் குறித்து நின்றது. கணவனை மயக்கும் வசிய மருந்து பெண்களிடம் உண்டு உறவால் விளையும் அதனைப் பெற்றால் கணவன் அவள் சொல் கேட்பான். இருவருக்கும் இணைப்புப் பாலமாக விளங்குவதால் உடனுறையும் தன்மை இயல்பாக அமைந்து விடுகிறது. கணவனின் குறிப்பறிந்து ஒப்பனை செய்து மகிழ வேண்டும். சுவையுறு உணவு ஆக்கி அளிப்பதும் அவன் உண்ட பின் தான் உண்ணுவதும் மனைவியின் கடமையாகும். உணவு, உடை, உறைதல், உறவு கொள்ளுதல் மக்களைத் தரல் போன்ற மருந்துகள் இருந்தாலே கணவன் அடங்கிப் போவான். அடக்கம் பெண்ணிற்கு இயல்பானால் ஆடவனுக்கு அது செயற்கையால் விளைகிறது. மனைவியின் செயல்பாடுகள் கணவனைக் கைக்குள் போட்டு விடும்.

தீன பெண்டிரின் செயல்பாடுகள் குடும்பத்தைச் சீரழித்து விடும்.

''கள்ளுண்டல் காணில் கணவற் பிரிந்துறைதல்
வெள்கில ளாய்ப்பிறரிற்சேறல் - உள்ளிப்
பிறர்களும் மாராய்தல் தீப்பெண் கிளையைத்
திறமது தீப்பெண்ணின் தொழில்'' (85)

என்பது சிறுபஞ்சமூலம். சங்க காலத்தில் அவ்வையார் பாடலில் கள் குடிப்பது பெருமையாகக் கூறப்பட்டுள்ளது. நற்பெண்டிர் கள் அருந்தார் என்கிறது பஞ்சமூலம். தீய பெண்ணின் • செயல் பாடுகளில் கள்ளுண்டல் முதலில் இடம் பெறுகிறது. எவரும் கள் குடிக்கக் கூடாது எனக் குறள் கூறும். இங்குப் பெண்கள் கள் உண்ணக்கூடாது என்று அறிவுரை கூறப்படுகிறது. கள் உண்டால் நாணம் போய் விடும். கள் உண்பவர்கள் நஞ்சு உண்பவர் ஆவார். இன்று நஞ்சு கலந்த மது உண்பார் கதியும் அதுவே. புறநானூற்றுக் காலப் பெண்புலவர் அருந்தியது அரண்மனைக் கள்ளாகும். ஆண்

மகன் தன் தாய் முன் கள் குடித்து நிற்பது இன்னாதாகும் என்பது குறட் காலமாகும். காரியாசன் காலப் பெண்டிர் நெறி பிறழும் போது கள் உண்பதைப் பழக்கமாகக் கொண்டிருந்தனர். இக் காலத்திலும் அறியாமை காரணமாக மது அருந்தி வருகின்றனர். எனினும் அது தீய செயல் என்றே கூறப்படுகிறது.

மணமானபின் கணவனைப் பிரிந்து வாழாவெட்டியாக இருப்பது தீண பெண்டிரின் தொழிலாகும். இவ்வகைப் பரிந் துறை மகளிர் பிறன் இல் விழைந்து நெறிதவறவும் கூடும். கணவனை விடுத்துப் பிற ஆடவனைச் சேர்ந்து வாழும் உரிமை உடையவர்கள் தீண பெண்டிராகக் கருதப்பட்டனர். பாலியல் உறவு காரணமாகக் கணவனைப் பிரிந்து, பின்னர் பிற ஆடவனைக் கூடுதல் கரத்தமை எனினும் இல்லற ஒழுக்கம் தவறியதால் தீய பெண்டிர் என்றழைக்கப்படுகின்றனர். சமுதாயத்தில் ஒரு குழுவினராக இவர்கள் இருந்தமையால் கணவனைவிட்டுப் பிரிந்தவர் இக்குழுவில் சேரக்கூடாது என்று சிறுபஞ்ச மூலம் கூறுகிறது. இக்குழுக்களின் பெருக்கமே பரத்தமை தோன்ற ஒரு காரணமாகலாம் பிறரைப் பற்றி வம்பு பேசுவதும் தீண தொழிலாகும். தீப் பெண்டிரிடம் கள் உண்டல், கணவனைப் பிரிதல், பிற ஆடவரைச் சேர்தல், தீ மகளிருடன் இணங்கல் பிறர் செயல்களை ஆராய்தல் தீப் பெண்டிரின் தொழில்கள் ஆகும்.

கொண்டான் வழி ஒழுகும் நற்பெண்டிர் இருப்பதையும் சிறுபஞ்ச மூலம் சுட்டுகிறது. *(15)*. மக்கட் பிறப்பின் பயன் மாதரைச் சேர்ந்து வாழ்வதாகும் *(18)*. பெண்கள் ஆடவரைக் காதலிக்கும் உரிமை பெற்றிருந்தனர் *(19)*. கணவனைத் தெய்வமாகப் போற்றுவதைக் குறள் வற்புறுத்துகிறது. பிற தெய்வங்களை வழிபாடு செய்வதே பெண்டிர் சிறப்பு எனச் சிறுபஞ்சமூலம்,

> ''வருவாய்க்குத் தக்க வழக்கறிந்து சுற்றம்
> பெருவாமை வீழ்ந்து விருந்தோம்பித் - திருவாக்குத்
> தெய்வதையும் எஞ்ஞான்னும் தேர்வு வழிபாடு
> செய்வதே பெண்டிர் சிறப்பு'' *(43)*

என்று கூறும். கணவனின் வரவுக்குத் தக்கபடி செலவு செய்ய வேண்டும் வாழ்க்கைத் துணையாள் மனைவி என்று குறள் கூறுவதையே இவ்வாசிரியரும் கூறினார். சுற்றம் தழுவல், விருந்தோம்பல் தெய்வ வழிபாடு அனைத்தும் மகளிர்க்குரிய செயல்களாகச் சிறுபஞ்சமூலம் கூறுகிறது.

மகளிர் உளவியல் அறிவும் மருத்துவ அறிவும் பெற்றிருந்தால் தான் குடும்பம் வளமாகும். பெண் அறிவிலியாக இருந்தால் கணவன் இடர்பாடு அடைவான். (91). தாய்மை அடையும் போது ஏற்படும் சகல நோய்களையும் அறிந்து அதற்குரிய மருந்துகளைத் தருவது பெண்ணே. கருச்சிதைவு ஏற்படாது பாதுகாப்பதும், சிதைவு ஏற்பட்டால் பிறர் அறியாத படி காப்பதும் அவள் கடமை.(74) நெறி தவறும் கன்னியரையும் கைம்பெண்களைக் காப்பாற்றும் பொறுப்பும் இல்லறப் பெண்டிற் குரியதாகும். பிற பொறுப்புகளை ஏற்கும் பெண்ணின் கற்பிற்குக் கணவன் கணவனின் உடன் பிறந்தான், மாமன் போன்றோர் காவலாக அமைய வேண்டும் என்று சிறுபஞ்சமூலம் கூறுவது குறள் கருத்தோடு முரண்படுகிறது. நற்குணப் பெண்டிர், தீய பெண்டிர், விலைமாதர் என முப்பிரிவினர் குறித்த செய்திகள் பெண்மை பற்றிய குறிப்புகளாகச் சிறுபஞ்சமூலத்தில் வந்துள்ளன.

இரா. தமிழ்ச்செல்வன்
திருவள்ளுவர் கலை அறிவியல் கல்லூரி
குறிஞ்சிப்பாடி – 607 302

தீருப்பாவை தீருவெம்பாவை - ஓர் ஒப்பீடு

முன்னுரை

பாவைப் பாடல்கள் மார்கழி நோன்பை அடிப்படையாகக் கொண்டவை. இந்த நோன்பு முறை பண்டைக் காலம் தொட்டே தமிழ் மக்களிடம் இருந்து வருகிறது. முதல் இலக்கண நூலாகிய தொல்காப்பியத்தில் ''பாவைப் பாடல்கள்'' பற்றிய குறிப்புகள் இல்லை. ஆனால் சங்க இலக்கிய நூல்களாகிய பரிபாடல், நற்றிணை, கலித்தொகை, ஐங்குறுநூறு போன்றவைகளில் இதற் கான குறிப்புகள் அதிகம் உள்ளன. தமிழிலக்கியச் சோலையில் பக்தி மணம் பரப்பி இனிது இலங்கும் இந்தப் பாடல்கள் மிகச் சிறந்த கருத்துக் கருவூலங்களாகும். பாவை என்ற சொல்லிற்குப் பதுமை, பெண், அழகிய உருவம், நோன்பு, கூத்து போன்ற பல்வேறு பொருள்களுண்டு. இருப்பினும், இங்கு நோன்பினை அடிப்படையாகக் கொண்டு பாடப்பட்ட பாடல்கள் எனப் பொருள் கொள்வது சிறப்புடையதாகும்.

பாவை என்னும் சொல் விளியேற்றுப் ''பாவாய்'' என ஆகி ஈற்றில் அமைந்த பாடல்களே பாவைப் பாடல்களாகும். பாவாய் என்னும் விளியை, வழிபடும் உருவத்தை அழைப்பதாகவும், பாவை நோன்பு நோற்கும் பெண்களை அழைப்பதாகவும் கொள்ளலாம்.

சங்க காலத்தில் மழை வளம் சிறக்கச் சிறுமியர் மார்கழி நோன்பை மேற்கொண்டனர். பின்னர் ஆண்டாள், மாணிக்க வாசகர் காலங்களில் மணப் பருவம் எய்திய மகளிர் மழை வேண்டி நோன்பு மேற்கொண்டதோடு இல்லாமல் தங்களுக்கு ஏற்ற நல்ல கணவரைப் பெறுவதற்காக இறைவனை வழிபட்டு நின்றனர். இவ் உண்மையைப் பாவைப்பாடல் வரிகள் பலவற்றில் காணலாம்.

ஒற்றுமைத் தன்மை

திருப்பாவையும், திருவெம்பாவையும் அடிப்படை உணர் வால், கருத்தால் சொல்லால், செயலால், ஒன்றுபட்டவைகளாகும். சமயங்கள்தான் வேறுபடுகின்றன. மார்கழி நீராடல் திருவாதி ரைக்குப் பத்து நாட்களுக்கு முன் தொடங்கித் திருவாதிரையில் முடிவுறும்; தைந்நீராடல் மார்கழித் திருவாதிரையில் தொடங்கும் என்று திருவாதவூரடிகள் புராணத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஆண்டாள் அருளிய திருப்பாவை எட்டாம் நூற்றாண்டைச் சேர்ந்தது என்றும், மாணிக்க வாசகர் அருளிய திருவெம்பாவை ஒன்பதாம் நூற்றாண்டைச் சேர்ந்தது என்றும் கூறுவர். வைணவ சமயக் கருத்துக்கள் திருப்பாவையிலும், சைவ சமயக் கருத்துக்கள் திருவெம்பாவையிலும் இடம் பெறுகின்றன. திருப்பாவையின் பாட்டுடைத் தலைவன் கண்ணன். திருவெம்பாவையின் பாட்டு டைத் தலைவன் திருவண்ணாமலையில் எழுந்தருளியிருக்கக் கூடிய சிவபெருமான் ஆவார்.

திருப்பாவையும் திருவெம்பாவையும் பாவை நோன்பைப் பாடுவன என்றாலும், திருப்பாவையில் நோன்பு வெளிப்படை யாகவும், திருவெம்பாவையில் குறிப்பாகவும் சுட்டப்படுகின்றது.

திருப்பாவையைப் பாடியவர் ஒரு பெண் என்பதால் அப் பாடல்களில் நேரடிப் பெண்மையனுபவத்தைக் காணலாம். ஓர் இளம்பெண்ணின் உள்ளத் துடிப்பையும், காதல் நெஞ்சத்தையும் இதில் காணலாம். ஆனால் திருவெம்பாவையில் மாணிக்கவாசகர் தம்மைப் பெண்ணாகப் பாவனை செய்கிறார். அதனால் இதில் பக்திக்கே முதலிடம் அளிக்கப்படுகிறது.

பாவை நோன்பு

''மார்கழித் திங்கள் மதிநிறைந்த நன்னாளால்'' என்னும் திருப்பாவை அடியாலும், ''போற்றியாம் மார்கழி நீராடலோ ரெம்பாவாய்'' என்னும் திருவெம்பாவை அடியாலும் பாவை நோன்பு மார்கழி மாதத்தில் நடைபெறும் என்பதும், அந்நோன்பை ஒட்டியே இவ்விரண்டு பிரபந்தங்களும் எழுந்தன என்பதும் புலப்படும்.

நீராடல்

மார்கழி நோன்பு நோற்கும் போது பெண்கள் நீராடுதலை ஆண்டாள் தெளிவாகக் குறிப்பிடுகிறாரேயன்றி நீராடும் காட்சியைக் காட்டவில்லை. ஆனால் மாணிக்கவாசகர்

அக்காட்சியினை அழகாகக் கூறுகிறார். அவர் கூறும் காட்சிகளில் சில.

''மொய்யார் தடம்பொய்கை புக்கு முகேரென்னக்
கையாற் குடைந்து குடைந்துன் கழல்பாடி'
ஐயா வழியடியோம் வாழ்ந்தோம் காண்''.
(திருவெம்பாவை-11)

''எங்கள் பிராட்டியும் எங்கோனும் போன்றிசைந்த
பொங்கு மடுவிற்...
கொங்கைகள் பொங்கக் குடையும் புனல் பொங்கப்
பங்கயப் பூம்புனல் பாய்ந் தாடேலோ ரெம்பாவாய்''
(திருவெம்பாவை-13)

''காதார் குழையாடப் பைம்பூண் கலனாடக்
கோதை குழலாட வண்டின் குழாமாடச் சீதப் புனலாடிச்.
(திருவெம்பாவை-14)

இறைநாமம் கூறுதல்

பாவை நோன்பின்போது இறைநாமம் கூறுவர் என்பது ''மாமாயன் மாதவன் வைகுந்தன் என்றென்று நாமம் பலவும் நவின்றேலோர் எம்பாவாய்'' (திருப்பாவை-9) என்னும் திருப்பாவை அடிகளாலும்,

''சிவனே சிவனே என்றோலமிடினும் உணராய்
உணராய் காண்''.

''இருஞ்சீரான் சின்னங்கள் கேட்பச் சிவனென்ற வாய்
திறப்பாய்''.

என்னும் திருவெம்பாவை அடிகளாலும் தெரியவருகிறது.

துயிலெழுப்புதல்

துயிலெழுப்பும் பாடல்களாகத் திருப்பாவையில் பதினான்கு பாடல்களும் (6 முதல் 15 வரை, 17,19,20,21) திருவெம்பாவையில் எட்டுப் பாடல்களும் (1 முதல் 8 வரை) அமைந்துள்ளன. திருப்பாவையில் துயிலும் தோழியரோடு கண்ணன், யசோதை, நப்பின்னை, பலராமன், நந்தகோபன், வாயிற்காப்போன் கோயிற் காப்போன் ஆகியோரையும் துயிலெழுப்புவதாக அமைந்துள்ளது. ஆனால் திருவெம்பாவையில் தோழியரை மட்டுமே துயிலெழுப்பு வதாக அமைந்துள்ளது.

மழை வேண்டுதல்

மழை வேண்டும் தன்மை திருப்பாவையிலும் திருவெம் பாவையிலும் வருகிறது. திருப்பாவையில் மழையைத் திரு மாலோடும் திருவெம்பாவையில் உமையோடும் உவமித்த தன்மையைக் காணலாம் திருப்பாவையில் முகிலின் நிறத்திற்குத் திருமாலின் மேனியும், மின்னலுக்கு அவனது சக்கரமும், இடி முழக்கத்திற்கு அவனது சங்கும் உவமிக்கப்படுவது போன்ற திருவெம்பாவையில் முகிலின் நிறத்திற்கு உமையின் மேனியும், மின்னலுக்கு அவளது இடையும், இடி முழக்கத்துக்கு அவளது காற்சிலம்பு ஓசையும், வானவில்லுக்கு அவளது புருவமும் உவமையாகக் கூறப்படுகின்றன. திருமாலின் வில்லிலிருந்து அம்புகள் கிளம்புவது போன்று மழை பொழிய வேண்டுமெனத் திருப்பாவைக் கன்னியர் வேண்டுவது போலத் திருவெம்பாவைக் கன்னியர் உலக அன்னையான உமையின் இன்னருள் போல மழை பொழியவேண்டுமென வேண்டுகின்றனர்.

புராணக் கதைகள்

திருப்பாவையில் புராணக் கதைகள் மிகுதியாக உள்ளன. திருமாலின் பல அவதாரச் செயல்கள், குறிப்பாகக் கண்ணன் அவதாரச் செயலைக் குறிக்கும் பல கதைகள், கூறப்பட்டுள்ளன. ஆனால், திருவெம்பாவையில் திருமாலும் நான்முகனும் சிவனுடைய அடியும் முடியும் காணாமை போன்ற சில புராணக் கதைகள் மட்டுமே இடம் பெறுகின்றன.

உரையாடல் தன்மை

உறங்கும் நங்கைக்கும் உணர்த்தும் நங்கைக்கும் நடை பெறும், உரையாடல்கள் நகைச்சுவையோடு பொருந்தி ஒற்றுமை யுடையனவாக இரு பாவையிலும் உள்ளன. இரு நூல்களிலும் கருத்துக்கள் மட்டுமல்லாமல் சொற்றொடர் அமைப்புகளிலும் ஒற்றுமை மிகுதியாகக் காணப்படுகிறது.

'வன்செவியோ நின் செவிதான்' என்று திருவெம்பாவைக் கன்னி கூறுவது போன்று திருப்பாவைக் கன்னியும் 'ஊமையோ அன்றிச் செவிடோ' என்று வினவுகிறாள், 'நேரிழையீர்' என்னும் விளி இரண்டு பாவைப் பாடல்களிலும் அமைந்துள்ளது. நீப்பின்னை 'கந்தங்கமழும் குழலி' என்று அழைக்கப்படுவது போன்று 'கொங்குண் கருங்குழலி' என்று திருவெம்பாவைத் தோழி அழைக்கப்படுகிறாள் 'வண்ணக்கிளி மொழியார்' என்று திருவெம்பாவையிலும் 'இளங்கிளியே' என்று திருப்பாவை யிலும் கன்னிப் பெண்கள் விளிக்கப்படுகின்றனர்.

விடியற்காலை வருணனை

விடியற்கால வருணனை இரு பாவைப் பாடல்களிலும் சிறந்து விளங்குகிறது. கோழி கூவுவதும், பறவையினங்கள் ஒலிப் பதும் வெண்சங்குகள் முழங்குவதும் இரு நூல்களிலும் காணப் படுகின்றன. ஆண்டாள், மேலும் சில காலைக் காட்சிகளைக் காட்டுகிறாள். அவற்றுள் சில;

''கீசுகீசென்று எங்கும் ஆனைச்சாத்தான் கலந்து
பேசின பேச்சரவம்'' (திருப்பாவை)

''காசும் பிறப்பும் கலகலப்பக் கைபேர்த்து
வாச நறுங்குழல் ஆய்ச்சியர் மத்தினால்
ஓசை படுத்த தயிர் அரவம்''. (திருப்பாவை)

''செங்கழுநீர் வாய்நெகிழ்ந்து ஆம்பல்வாய் கூம்பினகாண்''.
(திருப்பாவை)

திருவெம்பாவையில்

''கண்ணார் இரவி கதிர்வந்து கார்கரப்பத்
தண்ணார் ஒளிமழுங்கித் தாரகைகள் தாம் அகல''
(திருவெம்பாவை-18)

என்று காலை வருணனை சிறப்பித்துக் காட்டப்படுகிறது.

வேண்டுகோள்

சிவத்தொண்டும் சிவனடியார் மீது அன்பும் வேண்டும் என்பது திருவெம்பாவையின் வேண்டுகோள். கண்ணன் காதலும் இறைப்பணியும் திருப்பாவையின் வேண்டுகோள். 'எம்கை உனக்கல்லாது எப்பணியும் செய்யற்க' என்பது திருவெம்பாவை. 'உனக்கே நாம் ஆட்செய்வோம்' என்பதும் 'குற்றவேல் எங்களைக் கொள்ளாமல் போகாது' என்பதும் திருப்பாவை.

முடிவுரை

இவ்வகையில் இவ்விரு பாவைப் பாடல்களும் பல்லாற் றாலும் இணைந்து ஒன்றுக்கொன்று தொடர்புடையதாய் இருக்கின்றன. இவற்றில் சமயத்தால் வேறுபாடு காணலாமே தவிர அடிப்படைக் கருத்துக்களில் வேறுபாடு காண இயலாது. தொடக்கத்தில் மகளிர் விளை யாட்டாக இருந்த பாவை, பின் பாவைப் பாடலாக மாறி, சமய உணர்வு ஊட்டப் பெற்றுப் பாவை நோன்பினைப் பாடும் பாடலாக விளங்கி, இன்று சமயச்சார்பு இல்லாமல் பொது வகையாக வருகின்ற தன்மையை இக் கட்டுரையில் காணலாம். இப்பாவைப் பாடல்களை மேற் போக்காகப் படிக்காமல் உள்ளார்ந்த தத்துவக் கருத்துக்களை உணர்ந்து படித்து இன்புற வேண்டும்.

சு. தமிழ்வேலு
அ.வ.அ. கல்லூரி
மன்னன்பந்தல் – 609 305

புறநானூறு உணர்த்தும் மக்களாட்சிப்பண்புகள்

தமிழ் நிலம் முழுமையும் இன்று மக்களாட்சி நின்று நிலவுகின்றது. இன்றைக்குச் சற்றேறக்குறைய இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் இந்நிலப்பகுதி முழுமையும் முடிகெழு மூவேந்தர்கள் உள்ளிட்ட நூற்று இருபதுக்கும் மேற்பட்ட மன்னர்கள் அரசாண்டனர். அவர்கள் பின்பற்றிய கொள்கை மன்னராட்சிக் கொள்கை. இம்மன்னராட்சிக் காலத்தில் அவர்களின் வாழ்வினையும் வளத்தினையும் இயம்பிய இலக்கியங்களுள் புறநானூறு சுட்டத்தக்கது. இப்புறநானூற்றில் பயின்று வருகின்ற சிந்தனைகள் சில மக்களாட்சிக் கருத்துக்களுடன் இணைத்துக் காண முயல்கின்றது இக்கட்டுரை.

அரசர்கள் அரசாண்ட நிலையில் மக்களுக்கு எந்தவகையில் உரிமைகள் கொடுத்து உதவி புரிந்தனர், மக்களை எங்ஙனம் மதித்தனர், அரசர்களின் கடமைகள், அரசர்கள் அரசோச்சிய காலத்தில் அவர்கள் கொடுங்கோன்மையைப் பற்றியும் எண்ணியுள்ளனர், அறிஞர்களுக்கு முக்கியத்துவம் கொடுத்தமை. சமநீதி, எல்லோருக்கான கல்வி, வரிவிதிப்பு என்பன போன்ற சில செய்திகளை உள்ளடக்கிய மக்களாட்சிப்பண்புகள் சங்க இலக்கியத்தில் குறிப்பாகப் புறநானூற்றில் ஆவணப்படுத்தப்பட்டுள்ளமையை இனம் காணும் வகையில் இவ்வெழுத்துரை அமைகின்றது.

புறநானூற்றில் வாகைத் திணையில் பொருண்மொழிக் காஞ்சி, அரசவாகை, இயன்மொழிவாழ்த்து, முதுமொழிக்காஞ்சி என்னும் துறைகளையுடைய பாடல்களில் அரசனின் கடமைகளாகப் பல செயல்கள் சுட்டப்பெறுகின்றன. அவை மக்களைச் சார்ந்து மக்களுக்காகச் செய்யும் செயல்களைக் காணுகின்ற பொழுது மன்னன் உயிர்த்தே மலர்தலை உலகம் என்றாலும்

மக்களுக்களாகவும் வாழ்ந்திருக்கின்றனர் என்பதை அறிய முடிகின்றது.

இவ்வுலகம் நிலைபெறுகின்ற வரையில் தன்னுடைய புகழினை நிலைநிறுத்தும் பணியில் ஈடுபட வேண்டும். அவ்வாறு ஈடுபடும் பொழுது மக்களைக் காக்கும் பணியில் அதிக கவனம் செலுத்துதல் வேண்டும். அதாவது மக்களின் அடிப்படைத் தேவையான உணவினையும் நீரினையும் கொடுத்தல் வேண்டும். (புறம்18).

மன்னனைத் தந்தையாகவும் தாயாகவும் கருதிப்பார்க்கும் சூழல் நிலவியுள்ளது. புலவரும் மறக்குடிப் பெண்டிரும் மன்னனை 'எந்தை' (புறம் 19:13;171:10) என்றே குறிக்கின்றனர். மன்னனை இழந்த நாட்டைப் பற்றிக் குறிக்கும் பொழுது தாயை இழந்த குழந்தை அல்லலுறுவதை உவமையாகக் காட்டுகின்றனர். (புறம் 4:18). குழந்தையைப் பேணி வளர்ப்பது போன்று நாட்டைக் காக்க வேண்டும் (புறம்.5:7).

மலையுச்சியை நோக்கிச் செல்லும் வண்டியை எருது எவ்வாறு சிரமப்பட்டு அயராது இழுத்துச் செல்லுமோ அதைப் போன்று மன்னன் மக்கள் நலனில் குறியாக இருக்க வேண்டும். (புறம்64) அது மட்டுமின்றி வண்டியைச் செலுத்தக் கூடியவன் எவ்வளவு திறமைச்சாலியாக இருக்க வேண்டுமோ அதைப் போன்று மன்னன் இருந்து நாட்டை வழிநடத்த வேண்டும் (புறம் 60,185)

மன்னன் என்பவன் அறிவு, அன்பு, கருணை உடையவனாய் இருக்க வேண்டும். அதுமட்டுமின்றி மன்னனின் நிலைபெறும் தன்மையே (நிலையான/நிரந்தரமான அரசு) நாட்டின் அமைதியை நிர்ணயிக்கும் (புறம்.20).

மன்னன் தன்னுடைய நிலப்பகுதியில் நடைபெறும் தீமைகளைக் காத்துத் தண்டிப்பதோடு நல்லதைப் போற்றவும் செய்ய வேண்டும் (புறம்;29).

மன்னனின் அறநெறிகளுக்கு உட்பட்டு நடக்கும் குடிகளிடம் அன்பு செலுத்துவதும் அறநெறியை மீறுவோரிடமும் வருத்துவோரிடமும் கடுமையாக நடந்து கொள்வதோடு தண்டனை கொடுப்பதும் அரசனின் கடமை எனச் சொல்லப் படுகின்றது. (புறம்:55)

மன்னன் தீமையைக் களைய வேண்டும். நல்லாட்சி நடத்த வேண்டும். தனக்குரிய வரிகளைப் பெற எல்லோருக்கும் ஒப்ப சமநீதி வழங்க வேண்டும்.

கொடிதுகடிந்து கோறிருத்தி
படுவதுண்டு பகலாற்றி
இனிதுருண்ட சுடர்நேமி
முழுதாண்டோர்'' (புறம் 17)

பகைவரை எவ்வகையிலெல்லாம் ஓர் அரசன் பொறுத்துக் கொள்கிறான் என்பதையும் பொறுக்க முடியாத நிலையில் அவர்களை எவ்வகையில் ஒறுக்கிறான் என்பதையும் பொறுத்து அவனது பெருமை உணரப்பெறும். (புறம்:2)

மன்னன் எந்தச் சூழலிலும் அருளையும் அன்பையும் நீக்கிப் பாவம் செய்தவர்களை மட்டுமே இடமாகக் கொள்ளும் நரகத்தை இடனாகக் கொள்பவர்களைச் சாராது, தம்முடைய குழந்தையைப் பேணிக்காப்போரைப் போன்று தன் நாட்டைக் காப்பாற்ற வேண்டும். அதுதான் பெறுதற்கரிய செயலாகும். (புறம்:5)

இப்பகுதியிலிருந்து ஆட்சி என்பது நாட்டு மக்களின் அடிப்படைத் தேவைகளை நிறைவு செய்தல் வேண்டும்.

ஆட்சியாளர்கள் மக்களிடம் நல்லதொரு பெயரினைப் பெறுவதோடு அன்பும் செலுத்த வேண்டும்.

ஆட்சியாளர்கள் மக்களைத் தம்முடைய சேயாகக் கருதிப் பாதுகாக்க வேண்டும்.

ஆட்சியாளன் தன்னுடைய ஆட்சியை நிலையான ஆட்சியாக வடிவமைத்துக் கொள்ளவேண்டும்.

ஆட்சியாளன் தன்னுடைய நாட்டில் நடைபெறும் நல்லனவற்றைப் போற்றுவதோடு அல்லனவற்றைத் தவிர்க்க முயலவேண்டும்.

தன்னுடைய அவையின் சுற்றத்தினரை மிகவும் பொறுப்போடு தேர்வு செய்தல் வேண்டும்.

பகை நாடுகளோடு எங்ஙனம் தொடர்பு கொள்ள வேண்டும்.

என்பன போன்ற மன்னனின் கடமைகளாக உணர்த்தப்பட்ட செய்திகளிலிருந்து மக்களுக்காக ஆட்சி நடத்தப்பெற வேண்டும் என்ற செய்தியைப் பெற முடிகின்றது.

குடிமக்களின் ஒவ்வொரு அசைவிற்கும் மன்னனே காரணகர்த்தாவாக இருக்கிறான். ஆகையால் குடிமக்களின் நன்மைக்கும் அவனே காரணம். குடிமக்களை உள்ளடக்கிய சமூகத்துக்கு நிகழும் கேட்டிற்கும் தானே பொறுப்பாளி என

உணர்ந்திருக்கின்றனர். இச்செய்தியினை அடியொற்றிய குறியீட்டுச் சொல்லாகச் 'செங்கோலாட்சி' குறிக்கின்றது.

குடிமக்களுக்கு நல்வழி காட்டுதல் அரசனின் கடன். மன்னன் வழியே மக்கள் வழி எனச் சுட்டப்பெறும் நன்னடை நல்கல் வேந்தர்க்குக் கடனே (312) என்ற தொடர் இதனையே சுட்டுகின்றது.

அரசர்கள் கொடுங்கோலனாய் இருந்திருக்க வேண்டும். ஆனால் அதைப்பற்றிய செய்திகள் இலக்கியத்தில் பயின்று வரவில்லை. அது மட்டுமின்றி அதற்கான சான்றுகளும் இல்லை. ஆனால் கொடுங்கோன்மை பற்றிய எண்ணங்கள் இருந்தன. ஆனால் அதற்கு எதிர்ப்புணர்வு என்பது இல்லை. மௌனம் சாதித்தலே முடிவு எனக் கருதியுள்ளனர்.

என்னிழல் வாழ்நர் சென்னிழற் காணாது
கொடியனெம் இறையெனக் கண்ணீர் பரப்பிக்
குடிபழி தூற்றும் கோலே னாகுக (புறம் 72)

என்ற இப்பாடலிலும் கொடியனாகக் கருதும் மன்னனுக்கு எதிராக அழத்தான் முடியும் என்பது சுட்டப்பெறுகின்றது.

அரசன் கொடியன் எனக் கருதும் நிலையில் அவனைச் சபிக்கவும், அதிலிருந்து தப்பிக்க நாட்டை விட்டு ஓடுதலும் செய்ய முடியும். அதுமட்டுமின்றி அறக்கடவுள் தண்டிப்பான், பூதம் தண்டிக்கும், அடும் எனக்கூறி நிலையாமையை உணர்த்தியுள்ளனரே தவிர எதிர்ப்புக்குரல் என்பது எழவில்லை.

மக்களால் உருவாக்கப்பட்ட அரசினை எதிர்த்துக் குரல் கொடுத்துக்கொண்டு இருக்கலாமே ஒழிய மீண்டும் அழைத்துக் கொள்வதற்கான உரிமை மக்களுக்கு இல்லை என்கிற செய்தியினை இதனுடன் இணைத்துப் பார்க்க வேண்டிய தேவையாகிறது.

அரசினை எதிர்த்துக் குரல் கொடுக்கும் உரிமை அல்லது கருத்துத் தெரிவிக்கும் உரிமை என்பது என்றென்றும் இருந்துள்ளது. ஆனால் பொதுக்கருத்து உருவாக்கும் திறன் என்பது அன்று இல்லை என்பது சுட்டத்தக்கது.

புறநானூற்றில் மன்னனுக்குப் பலநிலைகளிலும் உரிய செய்திகளை எடுத்துக்காட்டி இடிக்கும் நட்புடையவர்களாக இருந்துள்ளமையை அறிய முடிகின்றது.

பாண்டியன் அறிவுடைநம்பி அளவுக்கு அதிகமாக மக்களை வருத்தி வரிவாங்கத் தலைப்பட்ட பொழுது வரி வாங்கும்

முறையை வலியுறுத்தி அதன்படி நடக்கும்படி செய்த செயல் பிசிராந்தையார் என்னும் புலவருடையதாகும் (புறம் 184).

வெள்ளைக்குடி நாகனார் என்னும் புலவர் கிள்ளி வளவனுக்குச் செங்கோலின் சிறப்பினை எடுத்துக்காட்டி உழவர்களைப் பேணிக்காக்குமாறு அறிவுறுத்தினார். (புறம்.35)

இதே புலவர் கிள்ளிவளவன் இளந்தத்தன் எனும் புலவனைத் தவறாகக் கருதிக் கொல்ல முயன்ற பொழுது அறிவுரைக் கூறித் தெளிவடையச் செய்துள்ளார். (புறம்47)

மலையமானின் குழந்தையை யானைக்காலில் இட்டுக் கொல்ல முயன்ற பொழுது கோவூர்கிழார் கிள்ளிவளவனின் அறியாமையைச் சுட்டி அறிவுறுத்தினார். (புறம்46).

நலங்கிள்ளியும் நெடுங்கிள்ளியும் பகைத்துப் போர்க்களம் பூண்டு நின்றபொழுது அச்செயல் ஏனைய வேந்தருக்கு எள்ளி நகையாடும் செயலாக அமைந்துவிடும் எனக்கூறிக் கோவூர்கிழார் போரினைத் தவிர்த்துள்ளார். (புறம் 45)

ஆவூர்கோட்டையை நெடுங்கிள்ளி அடைத்துப் போருக்கு அஞ்சி இருந்த சூழலில் அவனுடைய திறப்பாட்டினை வெளிப் படுத்தும் போக்கில் பேசிய கோவூர்கிழாரின் திறன் சுட்டத்தகுவது. (புறம்44)

இங்குச் சுட்டப்பெறும் புலவர்களின் வெளிப்பாடு மக்களின் வெளிப்பாடுதான் என்று கருத இடமுண்டு. மன்னன் மக்களின் கருத் துக்கும் இடம் கொடுத்திருக்கிறான் என்பதை அறிய இவை சான்றாக அமைகின்றன. அதே நேரத்தில் புலவர்களின் வெளிப்பாட்டினை மன்னன் ஏற்று நடந்தானா என்பது ஐயத்துக்குரியதே ஆகும்.

நீதி என்பதை அரசு அனைவருக்கும் பொதுவானதாகக் கருத வேண்டும். அதனை அன்றைய மன்னராட்சியும் பின்பற்றி வந்துள்ளமையும் அறிய முடிகின்றது.

முடிவுரை

சங்ககாலம் மன்னராட்சியைப் பின்பற்றிய பொழுதும் மக்கள் நலனைக் காக்கும் கருத்தில் இருவேறு சிந்தனை இல்லாமல் இருந்தது என்பதைக் காணமுடிகின்றது. நெறி தவறியவர்கள் பெரும்பாலும் இல்லை. அது மட்டுமின்றி நெறி தவறினால் மக்கள் மத்தியில் நிலைபெற முடியாது என்பதையும் உணர்ந்திருக்கின்றார்கள். ஆகையால் மக்களாட்சிக் கருத்துக்கு முரண்பாடான செயல்களில் ஈடுபடத் துணியவில்லை என்பதை உணரமுடிகின்றது.

தமிழண்ணல்

மதுரை

முருகத் தொன்மம் - ஒரு வரலாறு

புராணமான வரலாறு

முருக வழிபாடு சங்க காலத்திலேயே தமிழர் வாழ்வோடும் பண்பாட்டோடும் பின்னிப் பிணைந்து வளர்ந்தது. தமிழர்தம் அக வாழ்வு, புறவாழ்வுகட்கு எடுத்துக்காட்டாகவும் தமிழர் பண் பாட்டின் குறியீடாகவும் ஆனது அது. நாட்டுப்புறக்கதைப் பாடல் கள், ஆடல் பாடல்கள், சடங்குகள், வழிபாடுகள் எனத் தமிழர் வாழ்வின், உட்புகுந்து ஊடுருவி நின்றது அது. 'பெரும் பெயர் முருகன்' என்ற சங்கத் தொடர், அன்றிருந்த பெருவழக்கைக் காட்டும். வட மொழி ஸ்கந்த மரபு, வேத காலந்தொட்டு, சில பெயர்க்குறியீடுகளுடன் அமைந்ததேயாம். பின்னாளில் அது தமிழ் மரபிலிருந்து, தாக்கம் பெற்று வளர்ந்தது. தமிழ் மரபு தனித்தன்மையுடையது. இங்கு முருகன் என்ற தமிழகப் பேரரசன் ஒருவனின் உண்மை வரலாறே, பின்பு வழிபடு கடவுளாகி, நாட்டுப்புறக்கதை - வரலாற்றுக் கதை - புராணம் என வளர்ச்சி கண்டது என்பதும், வரலாற்றில் எவையெவை எவ்வாறு புராணமாயின என்பதும் மட்டுமே ஆராயப்படுகின்றன.

[1] சூர்-சூரபன்மா

சூர்-அச்சம். அச்சம் தரும் பகை. கடல்நடுவே வாழ்ந்த பகையை முருகன் வென்றமை சங்கப் பாடல்களில், பல இடங்களில் வருகிறது. 'சூர்மருங்கு அறுத்த (அகம்.59) சூருடை முழுமுதல்' (பதிற்று.11), சூர்மா தடிந்த (சிலம்பு.25-1) என்று 'சூர்' என்றே சங்க இலக்கியம் குறிப்பிடும். இதுவே 'சூரபன்மா' என்று புராணத்தில் இடம் பெறுகிறது.

[2] சூர்-மா தடிதல்

பழங்கற்காலத்தை ஒட்டிய காலப்பகுதியில் வாழ்ந்த மன்னர்கள் 'காவல்மரம்' என ஒன்றைத் தம் பெருமையின்

சின்னமாகக் கொண்டிருந்தனர். சூர்-சூரன் எனப்படும். குமரிக் கண்டத்தருகே நடுக்கடல் தீவுகளில் வாழ்ந்த பகைவனும் 'மா' மரத்தைத் தன் காவல்மரமாகக் கொண்டிருந்தான். அதனை வெட்டி வீழ்த்தி, சூரனை அவன் கூட்டத்தோடும் முருகன் அழித்தனன். அதனால் அக் கடற்கொள்ளைக்காரர்கள் தன் நாட்டைத் தொந்தரவு செய்யாது காப்பாற்றினான். தமிழர்கள் அச்சமின்றிக் கடல்வாணிகம் செய்ய உதவினான்.

வரைமருள் புணரி வான்பிசிர் உடைய
வளிபாய்ந்து அட்ட துளங்கிரும் கமம்சூர்
நளிஇரும் பரப்பின் மாக்கடல் முன்னி
அணங்குடை அவுணர் ஏமம் புணர்க்கும்
சூருடை முழுமுதல் தடிந்த பேரிசைக்
கடுஞ்சின விறல்வேள் களிறுஊர்ந்தாங்கு.... (11)

என்று பதிற்றுப்பத்துக் குறிப்பிடுகிறது. அவுணர் - கடற் கொள்ளையர்களே, வடமொழியில் தாரகாசூரனையும், மகிடா சூரனையும் வென்ற குறிப்பே வருகிறது. சூர் பற்றிய குறிப்பு அங்கு இல்லை உரவுநீர் மா கொன்ற (கலி.27), மா முதல் தடிந்து (பரி.21) கவிழிணர் மாமுதல் தடிந்த (முருகு 60) என்று வருவன, மா மரத்தின் அடியை வெட்டியதையே குறிப்பிடுகின்றன. காவல் மரம் பற்றியும் பகைவனின் காவல்மரத்தை வெட்டி அதனால் முரசு செய்வது பற்றியும் சங்க இலக்கியத்தில் பல குறிப்புக்கள் உள. கடம்புமுதல் தடிந்த (பதி.12), வேம்பு முதல் தடிந்த (பதி.44), வாகைக் கடிமுதல் தடிந்த (பதி.40), கடம்பு அறுத்து (அகம்11), கடம்பு எறிந்து (சிலம்பு.25) என வருவன ஒப்பு நோக்கக் தக்கன. பரிபாடல் 21ஆம் பாடலில் 'தெவ்வர்கொள் மாமுதல் தடிந்து' என்பதற்கு 'சூருடை முழுமுதல் என்றது சூரவன்மாத் தனக்கு அரணாகவுடைய மாவின் முதல் என்றவாறு' என்பது பழைய உரை. பதிற்றுப்பத்துக் குறிப்புரையில், உ.வே.சா. அவர்கள் ''சேரனுக்கு முருகக் கடவுளை உவமை கூறவந்த புலவர் கடலிற்சென்று கடிமரந்தடிதலும் களிறூர்தல் ஆகிய பொதுத் தொழில்களை இருவர்க்கும் சார்த்தி உரைத்தனர்'' என எழுதியுள்ளார் (பதி.11).

சேரமன்னர்கள் இவ்வாறு கடலிற்சென்று, அங்குத் தீவுகளில் வசித்துக்கொண்டு, தமிழர்களின் கடற்பயணத்திற்கு ஊறுவிளை வித்துக் கொண்டிருந்த கடற்கொள்ளையர்களை வென்ற செய்தி யும், கடலில் தாமே மேலாண்மை செலுத்திய செய்தியும் பதிற்றுப்பத்தாலும் பிறநூல்களாலும் அறியப்படுகின்றன.

இருமுந்நீர்த் துருத்தியுள்
முரணியோர்த் தலைச்சென்று
கடம்புமுதல் தடிந்த
கடுஞ்சின முன்பின் நெடுஞ்சேரலாதன் (பதி.20)
வலம்படு முரசின் சேரலாதன்
முந்நீர் ஓட்டிக் கடம்பு அறுத்து (பதி.27)

(மேலும் பதி.11, சிலம்பு 2-25, அகம் 347) இமயவரம்பன் நெடுஞ்சேரலாதன் கடலினுட் சென்று கடம்பு எனும் காவல் மரத்தைத் தடிந்த செய்தி, முன்னதாக முருகன் 'மா தடிந்த' செய்தி யும் வரலாறே ளீன்பதை மெய்ப்பிக்கின்றது. கடல்பிறக்கோட்டிய செங்குட்டுவனும் இவ்வாறு வென்றமையை, அவனது பெயரின் அடைமொழியே காட்டுகிறது. மேலும் அவன் தென்பாற் கடல்களில், மேலாண்மை செலுத்தியமையை,

சினம்மிகு தானை வானவன் குடகடல்
பொலந்தரு நாவாய் ஓட்டிய அவ்வழிப்
பிறகலம் செல்கலா தனையேம் (புறம்.126)

சூரபன்மா மாமரமாகி நின்றான் எனவும் அவனை முருகன் வெட்டினான் எனவும் வளர்ந்த தொன்மக் கதைக்கு, முன்னர் நிகழ்ந்த இவ் வரலாறே அடிப்படையாகும்.

'தென்னிந்திய வரலாற்றின் தொடக்க கால நிலைகள்' எனும் தமது ஆங்கில நூலில், முனைவர் எஸ். கிருஷ்ணசாமி அய்யங்கார் இதுபற்றி, கிரேக்கப்பயணியாம் வரலாற்றறிஞன் பிளினி கூறியிருப் பதை எடுத்துக்காட்டியுள்ளார்:- ''இந்தியாவைச் சுற்றி, குறிப்பாக முசிறித் துறைமுகப் பக்கம் கடற்கொள்ளையர் தொந்தரவு மிகுதி யாகவுளது. அதனால் பாய்மரக்கப்பலில், வில் வீரர்களைக் கூட்டி போக வேண்டியுளது'' கி.மு.77-இல் இந்நிலைமை இருந்ததை அக்கிரேக்க அறிஞன் சுட்டிக் காட்டி யுள்ளான். நெடுஞ்சேரலாதன், செங்குட்டுவன் பற்றிய சங்க இலக் கியச் சான்றுகளுடன் இதனை ஒப்பிட்டுக்காட்டி, அவர்கள் கடற் கொள்ளைக்காரர்களுடன் நடத்திய போர் பற்றி அய்யங்கார் சுட்டி யுள்ளார். இவற்றால், இவர்களுக்கெல்லாம் மிகமுற்பட்ட முருகன் பற்றிய சங்கச் சான்றுகளும், முருகனை ஒரு பேரரசனாகவும், கடற் கொள்ளையரோடு போரிட்டுத் தமிழரைக் காப்பாற்றியவனாக வுமே காட்டுகின்றன என்பதை நம்மால் உய்த்துணர முடிகிறது.

மாமரமாகி நின்ற சூரனை வென்ற கதையின் அடிப் படையை வைத்து, இவை அனைத்தையும் தெளிவுற அறியலாம்.

3. சங்கப்பாடல்களில் யானையே முருகனின் ஊர்தியாகக் குறிக்கப்படுவதும், அவன் ஒரு பேரரசனாக விளங்கியமையை உறுதிப்படுத்துகிறது.

4. குமரிக்கண்டத்தில், குமரி மலைத்தொடர் இருந்தது. 'பஃறுளியாற்றுடன் பன்மலை அடுக்கத்துக் குமரிக்கோடு' (சிலம்பு11) இருந்தது. அங்கு அரசோச்சிய முருகன் குறிஞ்சிநிலத் தலைவனாவன். தமிழர்கள் ''சேயோன் மேய மைவரை உலகம்'' என்று போற்றிய சேயோனுடன், பிற்காலத்தில் அதாவது சங்க காலத்தில் வழிபடப்பட்டான். இறந்த மாவீரர்களுக்கு, நடுகல் அமைத்து வழிபடுவது, தென்புலத்தாரைப் போற்றுவது தமிழர் மரபு. அவ்வகையில் வழிபாட்டிற்குரியவனாக முருகன் திகழ்ந்த போது, சேயோனாகிய குறிஞ்சி நிலத்தெய்வத்துடன் இணைத்து எண்ணப்பட்டான். சேயோன்-செந்நிறமுடையவன். சேஎய், சேய் எனவும் இதுவழங்கும். சேய் என்பதற்குக் குழந்தை என்றும் பொருளுண்டு. இளமையிலேயே அரியணை ஏறிப் பகையை வென்று பெரும்புகழ் கொண்டவன் பெரும்பெயர் முருகன். பிற்காலத்தே, சிவனின் மைந்தனாகக் கொண்ட வடமொழிக் கதையுடன் கலந்தபோது, முருகன் 'குழந்தை வடிவேலனாக'க் கற்பிக்கப் பெற்றனன்.

5. அக்கால மன்னர்கள் வேட்டையாடச் செல்வது பொழுது போக்கு. தினைப்புனம் காத்த வள்ளியைப் பேரரசனாகிய முருகன் கண்டு காதல்கொண்டு மணக்க நினைத்தனன். யானை வேட்டையின் போது, யானை கண்டு அஞ்சிய வள்ளியைக் கண்டு மணந்த இது 'களிறுதரு புணர்ச்சி' எனப்படும். வள்ளியின் பெற்றோர் மறுத்தது, சண்டையிட்டது, அவர்களைக் கொல்லா மல் முருகன் வேங்கை மரத்தின்பின்னே ஒளிந்து நின்றது, பிறகு வள்ளியுடன் உடன்போக்கில் சென்றது எல்லாம் தமிழர்தம் அகத் திணைக்கு ஓர் எடுத்துக்காட்டாயின. கபிலரின் குறிஞ்சிப்பாட்டு, வள்ளிதிருமணத்தையே பெயர் சொல்லாமல் கூறுகிறது. நற்றிணையில் ஒரு தலைவன், ''முருகுபுணர்ந்து இயன்ற வள்ளி போல' (82) என்னுடன் உடன்போக்கில் வருகிறாயா'' என்று தலைவியிடம் கேட்கின்றான்.

சங்க காலத்தில் களவுக் காதலுக்கே, இது ஒரு காட்டாயிற்று. காதலால் வாடி மெலியும் தலைவியை 'முருகு' அணங்கியதாக நம்பி, வேலனை அழைத்து வெறியாட்டு எடுத்துத் தலைவி நோய் தீர்க்க முயலும் ஒரு சடங்கு நாடெங்கும் பரவிக்கிடந்தது. வேலன் என்னும் முருகப் படிமத்தானோ, கட்டுவிச்சியோ 'சாமியாடி',

முருகனை அழைத்து வந்து, குறைதீர்க்க வேண்டுவது 'முரு காற்றுப்படுத்தல்' எனும் ஒரு நிகழ்ச்சியும் ஆனது. களிறுதரு புணர்ச்சியில் காதல் கொண்டது, முருகனின் தமையன் கணேசன் வந்து, முருகன் வள்ளி காதலுக்கு உதவியதாகத் தொன்மக் கதையானது.

6. யானைப்போரிலும், கடற்போரிலும் நீண்ட தண்டை யுடைய வேலாயுதம்/தண்டாயுதம் பயன்பட்டதற்கான குறிப்புக் கள் நிரப்பவுள. அவ்வகையில் முருகன் கடற்பகைவரை வெல்லப் பயன்பட்ட நீண்டவேல், முருகனுடன் சேர்த்தே வழிபடப்பட்டது.

7. பழங்காலத்தே, குமரிக் கண்டம் கடல்சூழ் நாடாதலின் சுற்றிலும் ஆறு படைவீடு அமைத்து, கடற்பகைவர் நாட்டினுட் புகாமல் காத்ததால், முருகன் ஆறுபடைவீட்டிற்கு உரியவன் எனப்பட்டான். முருகன் கோயில்கள் மட்டுமே 'படை வீடு' எனப்படுவது இதை உறுதிப்படுத்தும். குறிஞ்சிக் கடவுளாக வழிப்பட்டதால், குன்றுதோறும் உறைபவன் எனக் கொண்டனர். அவற்றுள் திருச்செந்தூர் மட்டும் கடலாக இருப்பது, முன்னைய நிலையை வலியுறுத்தும், இன்றுள்ளவை பழைமை கருதி இடப் பட்ட நினைவுத் தலங்களேயாம். முருகன் ஆறுமுகன் எனப் புராணம் கிளைத்ததற்கும் இதுவே அடிப்படை.

8. ஆறுபுள்ளிகளும் சேர்ந்து, ஒரே நாள் மீனாக விளங்கும் கார்த்திகை நாள்மீனில் பிறந்தவன் முருகன். சேரமன்னர்களை 'சுவாதித்திருநாள், என்பதுபோல், பிறந்த நாள்மீனால் பெயரிட் டழைப்பதுண்டு. முருகன் சரவணப் பொய்கையில், ஆறு தாமரைப் பூக்களில் பிறந்து, கார்த்திகை மகளிரால் வளர்க்கப் பட்டதாக வரும் பலகதைகள் இதன்வழிப்பட்டன.

9. தொல்பழங்காலத்தே, நாணயம் மாற்றுதல் இன்றி, பண்டமாற்றுமுறையே இருந்தது. அன்றைய அரசனாகிய முருகனுக்கு மக்கள் தாம்தாம் வளர்த்த - உண்டாக்கிய ஆடு, மாடு, கோழி, சேவல், நெல், தானியங்களையே இறையாகச் செலுத்தினர். இவற்றைக் காவடியாகக் கட்டிச்சென்று வரிக் காணிக்கை செலுத்திய 'காவடி'யே, பிறகு பத்திமைக் காலக் காவடி செலுத்துதலானது.

சங்கப்பாடல்களில் உள்ள அனைத்துச் சான்றுகளும் முருகன் ஒரு வரலாற்று நாயகன் என்பதையே மெய்ப்பிப்பதை யாரும் எளிதில் மறுத்துவிட முடியாது.

தமிழரசி அன்பழகன்
செங்கமலத்தாயார் கல்வி அறக்கட்டளை மகளிர் கல்லூரி
மன்னார்குடி.

தமிழ்க் கவிதையும் பெண் விடுதலையும்

முன்னுரை

உலகம் இருபங்கு அங்கத்தினரால் இயக்கப்படும் இணை யற்ற கருவி. அதன் இயக்கம் ஒழுங்குபெற, இயக்குவோர் தகுதி யானவர்களாக இருத்தல்வேண்டும்.

தரமான சமுதாய அங்கத்தினர்களே இன்றைய சமூக உயர்வின் அடிக்கற்கள் எனில் மிகையாகாது.

சமுதாயத்தைத் தன் அங்கமாகக் கொண்டிலங்கும் இவ்வுலகம் தன்னை இயக்குவோரில் ஒரு பங்கினரின் தகுதிப் பாட்டை இழக்குமெனில் அதன் இயக்கமும் ஒரு பக்கம் சரிவர நடை பெறாது. அச்சரிவராத பக்கம் பாதிப்படையும்போது மற்றொரு பக்கம் தன்னையுமறியாமலே பாதிக்கப்படும் என்பதுண்மை.

தமிழ்க் கவிஞர்கள்

பெண்ணினத்தின் தரம் குறைக்கப்படுவதன் காரணமாக ஏற்படும் சமூக இழப்புகளைச் சரிகட்ட விழைவோரில் கவிஞர்கள் முதலிடம் பெறுகின்றனர். கவிஞர்களில் சிலரால் மட்டுமே பெண்விடுதலைச் சிந்தனைகள் எடுத்துரைக்கப்பட்டிருக்கின்றன, என்று பகுக்க இயலாத அளவுக்கு அனைத்துக் கவிஞர்களின் பார்வையிலும் பட்டுப் பெண்ணியச் சிந்தனைகள் விவரிக்கப்பட்டு வருகின்றன.

பெண்ணும் விடுதலையும்

பெண்கள் மென்மையானவர்கள் விட்டுக்கொடுக்கும் மனப் பான்மை கொண்டவர்கள். பிறரின் உணர்வுகளுக்கு மதிப்பு கொடுப்பவர்கள். தன்னின் உணர்வுகளை அடுத்தவர் மதியாத போதும் தமக்குள் வெகுளாத தன்மையுடையவர்கள்.

இவ்வாறான பெண்ணின் இயல்புகள் ஆதிக்க நோக்கம் கொண்ட ஆண்கள் அவர்களை அடிமைகளாய்ப் பாவிக்கத் துணை செய்தது எனலாம்.

உரிமைகள் இழந்த நிலையில் பெண்டிரால் சுயதிறன் கொண்டு செயல்பட இயலவில்லை. அவர்தம் திறனால் நாடு பெற இருந்த நன்மைகள் சில இல்லாதுபோயின இதனை உணர்ந்தவர்களில் பெண்டிரைவிட ஆடவரே அதிகம் எனலாம்.

அவர்தம் உணர்வு . வெளிப்பாடே பெண்விடுதலைச் சிந்தனைகளாக வெளிவந்தன. பெண்ணின் சமுதாயக்கட்டுக்கள் தகர்க்கப்படவேண்டும். முழுஉரிமையும், வாழ்வியல் தெளிவும் கொண்டவர்களாக அவர்கள் திகழவேண்டும் என்று ஆடவர்களில் குறிப்பாகக் கவிஞர்கள் விழைந்தனர்.

கவிதையும், கவிஞரும்

கவிதை என்பது கவிஞர்களின் கருவி. அக்கருவியால் சமுதாய மேடு பள்ளங்களைச் சரிசெய்ய முனைந்தனர். சில வெற்றிகளும் அவர்கட்குக் கிடைக்கப்பெற்றன. தாங்கள் சரிசெய்ய முனைந்த சமுதாயச் சீர்கேடுகளில் ஒன்றாகப் பெண்விடுதலையையும் அவர்கள் ஏற்றுக்கொண்டதே பெருஞ்சிறப்பாகும்.

பெண்விடுதலை என்பது வாழ்ந்த காலத்தின் வரலாறல்ல. வருங்காலத்தின் வரவேற்புரை.

தாங்கள் காண விழையும் சமூக மறுமலர்ச்சியைத் தத்தம் கவிக்காற்றாகக் கொண்டு பாடமுனைந்த கவிஞர்கள் அவரவர் திறனுக்கு ஏற்பப் பாடி வந்துள்ளனர். அவற்றுள் பெண் ஆணாலோ, பிற பெண்களாலேயோ அடிமைப்படுத்தப்படக் கூடாது எனும் தலையாய உண்மை உணரக் கிடைக்கிறது. இன்றைய சமுதாய நிலைகளால் தம்மைத் தாமே தாழ்த்திக் கொண்டிருக்கும் பெண்கள் அந்நிலைபோக்கி மறுவாழ்வு வாழப் பழகவேண்டும் என்கின்றனர்.

ஆண் படைத்துவரும் அனைத்துச் சாதனைகளும் பெண்களாலும் படைக்க இயன்றவை என்று நம்பிக்கை ஊட்டுகின்றனர்.

மூடப்பழக்கங்களாலும், பண்பாட்டுக் கட்டுக்களாலும் பெண்களின் முன்னேற்றத்திற்குத் தடைவிதிக்கப்படும் எனில் அதனை ஏற்கத் தேவையில்லை என்று தைரியமூட்டுகின்றனர்.

பெண் தனக்குத்தானே சிந்தனையில் வேறுபாடு கொள்வாளெனில் அதனை மாற்றி உலகியலே உணர்த்துகின்றனர்.

பாரதி கண்ட பெண்

பாரதி புதுமை நாட்டங்கொண்டவர். தேசம் வாழப் பாடியவர். அத்தேச உறுப்பினராம் பெண்ணின் வாழ்வில் பல புதுமைகள் படைக்கத் தூண்டியவர். 'புதுமைப்பெண்' எனும் உயரிய தொடரின் தந்தை. அவர்தம் பார்வையில் பெண்ணடிமைத் தனம் பெரிதும் மறுக்கப்பட்டு வந்துள்ளது.

''கொடியர் தம்மை அடிமைகள் என்றே
கொண்டுதாம் முதல் என்றன நன்றே
அடியோடந்த வழக்கத்தைக் கொன்றே
அறிவு யாவும் பயிற்சியில் வென்றே
கடமை செய்வீர்நம் தேசத்து வீரக்
காரி கைக்கனத் தீர் துணிவுற்றே'' (பா.க.ப.125)

என்ற அவர் கவிதை பெண்ணை அடிமைத் தனத்திலிருந்து விடு பட்டு வெளியில் வரத் தூண்டுவதாய் மட்டுமல்லாமல் தேசத் தொண்டில் ஈடுபட அழைப்பதாகவும் அமைந்துள்ளது. பாரதி போன்றோரின் பெருநோக்கம் நாட்டு விடுதலை எனினும், அதனில் பங்கேற்கும் திறன் படைத்தவர்களாகப் பெண்ணைச் சமுதாயத்திற்கு அறிமுகப்படுத்தியமை பெருஞ்சிறப்பாகும்.

பாரதிதாசனின் படைப்பு

வாழ்க்கை வெற்றிக்குத் தேவைப்படும் பல்வேறு செயல் களில் பெண்களும் ஈடுபடவேண்டும் என்ற பேராவல் கொண்டவர் பாரதிதாசன். சமுதாய இழிவுகளைப் பாடுவதில் தயக்கம் காட்டாதவர். இழிவுகள் சுட்டப்பெற வேண்டும். மாற்றங்கள் வரவேற்கப்படவேண்டும். சமூகம் மறுமலர்ச்சி காணவேண்டும் என்பன போன்ற கூறுகள் அவரின் தலையாயச் சிந்தனைகளாக உள்ளன. அவற்றில் ஒன்றாகப் பெண் விடு தலையைப் பாடுகின்றார். அவர் படைத்த நாடக மாந்தர்களும், காப்பிய மாந்தர்களும் பெரும்பாலும் பெண்களே. அவர்களின் வீறுகொண்ட முழக்கங்களும், வெகுவான சிந்தனைகளும் ஏனை யோரின் கூற்றுக்கு அப்பாற்பட்டவைகளாகும். அவ்வகையில் அவர் படைத்த நாடகத் தலைவியின் தன்மையும் உள்ளது.

''வன்மை உயர்வு மனிதர் நலமெல்லாம்
பெண்மையினால் உண்டென்று பேசவந்த பெண்ணழகே
நாய் என்று பெண்ணை நவில்வார்க்கும் இப்புவிக்குத்
தாய் என்று காட்டத் தமிழர்க்கு வாய்த்தவளே''
(பா.தா.க.ப.203)

என்று அப்பெண்ணை அன்போடு அழைக்கிறார். இக்கவிதை வழி அப்பெண்ணுக்கு நம்பிக்கை ஊட்டுவது மட்டுமல்ல பெண் இவ்வாறான திறன் படைத்தவள் என்று ஆணினத்துக்கு அறிவு புகட்டியுள்ளார். இனியேனும் பெண்ணைச் சமுதாயத்தின் இழிவானதோர் அங்கம் என எண்ணாதிருக்கச் செய்துள்ளார்.

சுத்தானந்தரின் செயல்திறன்

உலகியல் பொருள்கள் அதனில் வாழும் மனிதர்க்கு எனப் படைக்கப்பட்டவை. அவற்றை நுகர்வதில் வேறுபாடு தேவை யில்லை. அதேபோல் சமுதாய நடைமுறைகள் ஒரே மாதிரி யானவை. இவற்றில் சிலவற்றைச் சிலர் குறிப்பிட்ட வகையிலும், சிலர் மாறுபட்ட வகையிலும் நடைமுறைப்படுத்துதல் சமுதாய மேன்மைக்குக் கேடு விளைவிக்கும். எனவே பெண்கள் ஆண்களைப்போல் செயலாற்றவேண்டும் என்பதில் கவிஞர்கள் பலரும் ஒத்த கருத்து கொண்டுள்ளனர்.

''செல்வம் இருவர்க்கும் பங்கென்போம்
ஷேமம் இருவர்க்கும் பங்கென்போம்
கல்வி இருவர்க்கும் கண்ணென்போம் - தூய
கற்பும் இருவரின் காப்பென்போம்'' (பா.ப.74)

என்ற சுத்தானந்தரின் பாடல் இருபதாம் நூற்றாண்டின் ஆரம்ப காலகட்டத்திலேயே பெண்ணுரிமைகளை மீட்டுத்தரக் குரல் எழுப்பப்பட்டுவிட்டது என்பதற்குச் சான்றாகும்.

ஒரே குடும்பத்தைச் சேர்ந்த ஆண் சொத்துக்கு வாரிசு என்றும், பெண் மாற்றானை மணந்து வேற்றூர் செல்வதால் அவருக்கு அவ்வுரிமை இல்லை என்றும் சமுதாயம் மறுத்து வந்துள்ளது. இதனைக் குறை கூறுகிறார் சுத்தானந்தர்.

செல்வமும் அதனால் வரும் நல்வாழ்வும் வாழ ஆண், பெண் இருபாலர்க்கும் உரிமையுண்டு என்கிறார். கற்றல், தெளிதல், அறிதல், ஆய்தல் எனும் உயரிய வாழ்வியல் கூறுகள் பெண்கட்கு மறுக்கப்படக்கூடாது என்பதாலும், கற்பு எனும் கோட்பாட்டை இருபாலரும் கடைபிடிக்கவேண்டும் என்பதாலும் இவ்விரு கூறுகளைப் பொது என்கிறார்.

பட்டுக்கோட்டையாரின் பாட்டுத்திறன்

பெண்ணின் வாழ்வில் பெரும்பாலான உரிமை மறுப்புகள் ஆண்களால் செய்யப்படுவதாகவும், அதைச் சார்ந்து பெண்களும் அதற்கு ஆயத்தப்பட்டு விட்டதாகவும் உணரமுடிகிறது.

பெண்ணுக்குத் தரும் உரிமைகளை மறுத்து ஆணினம் தம்மை அதிதமானதொரு வளர்ச்சிக்கு உட்படுத்தப் போகிறதா எனில்? இல்லை என்பதே பதிலாகும். இவ்வாறான உரிமை மறுப்புகளை உண்ணுவதிலும், உடுப்பதிலும், மட்டுமல்லாமல் மணவாழ்விலும் சமுதாயத்தினர் திணித்துவந்தனர்.

பெண்ணுக்கு இழைக்கப்படும் கொடுமைகட்கு அளவோ, குறைபாடோ இல்லை என்பதற்குப் பட்டுக்கோட்டை கல்யாண சுந்தரத்தின் பாடல் சான்றாகிறது.

மனைவி இறந்தபின் வயதான தாத்தாவும்
மறுமணம் பண்ணிக்கிட உரிமையுண்டு - இளம்
மங்கையை முடிப்பதுண்டு மண்டைவரண்டு - தன்
கணவனை இழந்தவள் கட்டழகி யானாலும்
கடைசியில் சாகமட்டும் உரிமையுண்டு - இதில்
கதைகளும் கட்டிவிடும் ஊர்திரண்டு
(பட்டு.பா.ப.229)

பெண்ணோ, ஆணோ தனது வாழ்க்கைத் துணையை இழந்த நிலையில் பெரும் துன்பம் அடைவது இயற்கை. அதிலும் இளம் வயதிலேயே அவ்விழப்பு நேர்தல் எவரெனினும் ஏற்க வொள்ளாததாகும். ஆண் மனைவியை இழந்ததற்கு ஈடாக இன்னொரு பெண்ணைத் திருமணம் செய்துகொள்ளச் சொல்லும் சமுதாயம், பெண் கணவனை இழந்தால் இன்னொரு ஆடவனைத் திருமணம் செய்து கொள்ள உரிமையளிப்பதில்லை. மறுக்கிறது எனக் குற்றஞ்சாட்டுகிறார். வயதான கிழவனுக்குச் சிறுவயது பெண்ணை இரண்டாவதாகவோ, மூன்றாவதாகவோ கட்டி வைக்க முன்வரும் இச்சமுதாயம் என்று கூறுகிறார்.

முடிவுரை

இங்ஙனம் பெண்ணின் இயல்புகள் மாற்றப்படாது, அவளின் உணர்வுகள் வரவேற்கப்படும்படியான சமுதாயம் உருவாகு மெனில் நாடும் வீடும் நலமாகும் நன்மைகள் பலவும் நனி சேரும். பெண்ணின் விடுதலை என்பதே பெருங்கவிஞர் அனைவரின் நோக்கமாகவும், உணர்வூட்டமாகவும் முகிழ்ந்து வருகின்றன.

தமிழ்க்கவிதைகள் தம் பணியால் நாட்டுக்கு விடுதலை தேடித்தந்தன. நலித்தோரை நல்லோராக்கின. வாழ்விழந்தோரை வாழச்செய்தன. உண்மைகளை மதிக்கச் செய்கின்றன. உரிமை களைக் கொடுக்கச் செய்கின்றன. வளங்களை வரவேற்றுக் கொண்டிருக்கின்றன.

வே. தயாளன் - வ.ஜெயா
பாரதியார் பல்கலைக்கழகம்
கோயம்புத்தூர்

அறிஞர் அண்ணாவின் உரைநடை உத்திகள்

முன்னுரை

மொழியைக் கையாளுகின்ற முறையில் படைப்பாளிகள் வேறுபடுகின்றனர். ஒவ்வொருவரும் ஒவ்வொரு விதமாக மொழியைப் பயன்படுத்துவர். சொல்லவருகின்ற கருத்துக்குத் தக்கவாறும், சொல்லப்படுகின்ற நபருக்குத் தக்கவாறும் மொழி வேறுபடும். பயன்படுத்தும் விதமும் வேறுபடும். அதாவது சொல்லவருகின்ற கருத்து அல்லது செய்தி அதில் இடம் பெறும் மொழிக் கூறு, நபர்கள், செயல் உத்தி போன்றவையெல்லாம் ஒன்றோடொன்று தொடர்புடையவை. இவை அனைத்தும் கருத்துப் பரிமாற்றத்தில் இடம் பெறும் முக்கியக் கூறுகளாகும். எனவே, ஒரு கருத்தை வெளிப்படுத்தும் போது அதில் இடம் பெறும் மொழிக் கூறுகளும், அவை கருத்தோடு இணைந்து எவ்வாறு வெளிப்படுகிறது என்பதைப் பொறுத்தே கருத்துப் பரிமாற்றம் சீராகவும் செம்மையாகவும் நடைபெறும் எனலாம். இது பேச்சிற்கும் பொருந்தும்; எழுத்திற்கும் பொருந்தும். மொழிக் கூறுக்கும் கருத்திற்கும் இடையே தொடர்பு ஏற்படாத போது அதன் வாயிலாக வெளிப்படுத்தப்படும் கருத்து பிறரைச் சீராகச் சென்று சேராது: அறிஞர் அண்ணா தனது கருத்துக்களை வெளிப்படுத்துவதற்கு பல்வேறு வகையான உத்திகளைப் பயன்படுத்தியுள்ளார். இந்த உத்திகள் வாயிலாகக் கருத்தைச் சிறப்பாக வெளிப்படுத்திட முடியும் என்று அவர் எண்ணிய தாலேதான் இவற்றைப் பயன்படுத்தியுள்ளார். இத்தகைய உத்திகளின் வாயிலாகக் கருத்து வெளிப்படும் போது அவை கேட்போரின்/படிப்போரின் மனதில் என்றும் நிலைத்திருக்கும். அண்ணாவின் உரைநடையிலே காணப்பெறும் உத்திகளைக் கருத்துப்புலப்பாட்டுத்திறன் அடிப்படையில் விளக்குகிறது இச்சிறு கட்டுரை.

சொல் விளக்கம்

மக்களின் மனநிலை, சமுதாயச் சூழல் இவற்றிற்குத் தக்க வாறு சொல்லுக்குப் பொருள் கொடுக்க முடியும். தமிழகத்தின் நிலை, மக்களின் மனநிலை இவற்றை மனதில் கொண்டு 'புரட்சி' என்ற சொல்லுக்கு அண்ணா கொடுத்திருக்கும் பொருள் மனங்கொள்ளத்தக்கது.

எ.கா.

''புரட்சி என்பது இயங்கும் சக்தி! அதைப் பொசுக்கிட யாராலும் ஆகாது. புரட்சி என்பது மக்களின் போராடும் சக்தியின் வழி வருவது. புரட்சி வாலிபத்தின் கூறு; பகுத்தறிவாளரின் ஆயுதம். பழமைவிரும்பிகள், புரட்டர்கள் ஏதேச்சாதிகாரிகள் சர் வாதிகாரிகள் ஆகியோருக்கு நஞ்சு'' (1985:52) என்று விவரிக்கிறார்.

பேச்சு வழக்கு

பேசுவது போல் எழுதுவது தான் உத்தமம் என்ற பாரதியின் கூற்றிற்கேற்ப அண்ணா தனது படைப்புகளில் ஆங்காங்கே பேச்சு வழக்கினைக் கையாண்டு கருத்தினைத் தெளிவுபடுத்துகிறார்.

எ.கா.

''பாம்பு கடிச்சா பட்டுண்ணு உயிர் போயிடும். அதனால் ஒரு பயனும் இல்லை. தினமும் படுக்கையிலே போய் படுக்கனும். பாம்பு வரணும், கடிக்கணும்; உயிர் துடிக்கணும், ஆனால் பிராணன் மட்டும் போயிடக் கூடாது. அதைப் போலே உன் தகப்பனைக் கொன்ற சண்டாளர்களை வாட்டி வாட்டி வதச்சி வதச்சி சித்திர வதை செய்யணும்'' என்ற உரைக் கோவையில் பேச்சு வழக்கினைக் கையாண்டுள்ளார் (1986:106).

கவிதை நடை

உரைநடையில் ஆங்காங்கே கவிதை நடையில் கருத்துக் களை வெளிப்படுத்தியுள்ளார் அண்ணா. இந்தக் கவிதை நடை படிப்போரின் மனதில் ஓர் அசைவினை உண்டு பண்ணக் கூடியவை. ஒரு முறை படித்தால் கூடப் போதும், அவை அப்படியே மனதில் பதிந்துவிடக் கூடியவை. மேலும் மனனம் செய்து கொள்வதற்கு எளிமையாகவும் உள்ளவை.

எ.கா.

யானை அளவு பெரியது
சிங்கத்துக்குள்ள பிடரி

புலிபோல் பாயும் சக்தி
நரிக்கு உள்ள தந்திரபுத்தி
குயிலுக்குள்ள குரலினிமை
மயிலுக்குள்ள தோகை, ஆடல்
மாடப்புறாவுக்குள்ள குலுக்கு
முயல் போன்ற வேகம்
மீன் போன்ற நீந்தும் சக்தி
சிட்டுப் போலப் பறக்கும் ஆற்றல்
கிளி நிறம் (1986:161)

என்று மனிதனை வருணிக்கும் போது கவிதை நடையினைக் கையாளுகிறார் அண்ணா.

வினா அமைப்பு

ஒரு கருத்தினைத் தெளிவுபடப் புரிய வைப்பதற்குப் பல வினாக்கள் தொடுத்து விடைகளை விளக்குவது ஓர் உத்தியாகும். அந்த வகையில் அண்ணாவும் பல இடங்களில் வினா வாக்கியங் களை அமைத்து மக்களிடம் சிந்தனையறிவினைத் தூண்டுகிறார்.

எ. கா.

''வானத்து கருமேகம் மழை முத்தாய் மாறுவதேன்? எவர் பொருட்டு? யார் அழைப்பது? யாது பயன் கருதி? கொடியாடக் கனியாட, செடியாட, மலராட, ஆடை விலகியோட வீசும் காற்றதும் என்ன பயன் கண்டு இவ்வேலை செய்கிறது? கதிர் தந்து கொண்டி ருக்கும் பயிர் வளர்ந்து பயன் கண்டு மகிழ்கிறது'' (1986 : 166).

கருத்து முரண்

ஒரு கருத்திற்கு இருவகையான விளக்கங்கள் கொடுக்கப் பட்டு அவற்றிடையே ஏதேனும் ஒன்று முரண்பட்டு இருப்பின் அது கருத்து முரண் எனப்படும்.

எ. கா.

''காமராசர் நல்லவர், வல்லவர், நம்மவர்
காங்கிரசை அல்ல!

இங்குக் காமராசர் என்ற தனிநபரை வாயாரப் புகழ்ந்து விட்டு, அவர் சார்ந்திருக்கும் காங்கிரசை வசைபாடுகிறார். தலைவர் நல்லவர் என்றால் அவரால் நடத்தப்பெறும் கட்சியும் சிறந்ததாகத்தானே இருக்க வேண்டும்! என்ற போக்கை மாற்றுகிற வகையில் இங்கு முரண்சுவை பயன்படுத்தப்பட்டுள்ளது.

காமராசர் x காங்கிரஸ்

தனிநபர் x இயக்கம்

காமராசர், தனிநபர் இவ்விரண்டைப் பற்றி கூறும் போது ஒரு வகையான கருத்தும், காங்கிரஸ், இயக்கம் என்று கூறும் போது வேறுவகையான நிலைப்பாடும் அண்ணாவால் முரண் பட்ட நிலையில் கொடுக்கப்பட்டுள்ளதைக் காண்கிறோம்.

ஒரு பொருள் பல சொற்கள் பயன்பாடு

ஒரு படைப்பாளியின் ஆளுமைத் திறனை அளவிட அப்படைப்பாளி எத்தகைய சொற் சேமிப்பை (lèxical stock) தம் மிடையே கொண்டுள்ளார் என்பதையும், அவற்றை எவ்வாறு தமது படைப்புக்களில் பயன்படுத்துகிறார் என்பதையும் அடிப் படைக் கூறுகளாகக் கொள்ளமுடியும்.

அண்ணா தமது உரைநடையில் ஒரு பொருளைக் குறிக்கும் பல சொற்களைப் பல இடங்களில் பயன்படுத்துகிறார். அண்ணா வின் மொழி ஆளுமைத் திறனை அறிந்து கொள்வதற்கும், அவரது உள்ளத்தில் உள்ள சொற்களின் சேமிப்பையும் இதன் வாயிலாக அறிய முடிகிறது.

எ. கா.

''ஏசல்கள், இழிமொழிகள், பழச் சொற்கள்
எல்லாவற்றையும் பழகிப் போய்விட்டது'' *(1986 : 145)*

உவமை

படிப்பவரின் மனதில் கருத்துக்களை எளிதில் பதியும்படி செய்வதற்கு உவமை ஓர் இலக்கிய உத்தியாகக் கையாளப்படு கிறது. அண்ணா புதுமையான முறையில் அனைவரும் அறிந்த ஒரு செயலினை உவமையாக்கி நீண்ட உரைக்கோவையில் தருகிறார்.

எ. கா.

''தோடி பாடினால் கோடி கோடியாகக் கொட்டிக்

கொடுக்கலாமா என்று தோன்றும். அவ்வளவு இனிமை அத்துனை தரம் இருக்கம் என்று பல்லோரும் புகழ வாழ்ந்து வந்த இசைவாணன், குரல் கெட்டு, நோய்வாய்ப்பட்டு ஈளைகட்டி இருமிக்கிடக்கும் போது என்ன தோன்றும்? தோடி பாடிக் கேட்போரைக் களிப்புக் கடலில் ஆழ்த்தியவரின் நிலை இன்று இப்படி ஆகிவிட்டதே என்றெண்ணி இரக்கம் காட்டச் செய்யும்.

வேளைக்கு இரண்டுபடி தந்து கொண்டிருந்த பசு வத்தலாகி, தொத்தலாகி அடிமாட்டு மந்தையிலே இடம் பெற்றிடக் கண்டால் என்ன தோன்றும்? இடிந்த மாளிகை, இரசம் போன கண்ணாடி, ஊசல் பண்டம், உடைந்த வாள், பிரிந்து போன கூடை, திரிந்த பால் இவைகள் ஏளனம் அல்ல தம்பி! இரக்கத்தை எழுப்பத்தக்க பொருட்கள்! காலத்தாலும் கருத்தற்றப் போக்காலும் கயவர் கரம் பட்ட தாலும் வகையும் வடிவமும் கெட்டதற்குச் சான்றுகள் தம்பி! இதைக் கவனித்தனையோ! இல்லையோ! *(1986 - 147 -48)* என்ற உரைநடையில் இசைவாணரின் துன்பத்தைச் சிறந்த உவமை நயத்தோடு விளக்கியிருப்பதைக் காணமுடிகிறது.

நீண்ட வாக்கியம்

அண்ணாவின் உரைநடைகளிலும் சொற்பொழிவுகளும் நீண்ட வாக்கியத்தினை நாம் காணலாம். இது அவரது மொழித் திறனையும் மொழியைக் கையாளும் திறனையும் வெளிப்படுத்துவதாக அமைந் துள்ளது. பெரும்பாலும் அவரது சொற்பொழிவுகளில் இத்தகைய உத்தி முறை அதிகம் கையாளப்பட்டுள்ளது.

எ. கா.

''போரினால் ஏற்பட்ட புண் ஆறாமுன்பே, இரத்த வெள்ளம் பாய்ந்தோடிய இடங்களிலே கறைபோகா முன்பே, பிணவாடை அடியோடு அழியா முன்பே, நசித்த தொழில்கள் மீண்டும் தலை யெடுத்துப் பழைய நிலையைப் பெறுவதற்கு முன்பே, இடிந்த கட்டிடங்கள் புதுப்பிக்கப்படுவதற்குள்ளாகவே பாழான வயல் களிலே மீண்டும் பயிர் ஏறா முன்பே, மற்றோர் போர் மூண்டுவிடக் கூடிய சூழ்நிலை ஏற்பட்டிருப்பதாகப் பல நாடுகளிலேயும் உள்ள தலைவர்கள் எச்சரிக்கை விடுக்கத் தொடங்கி விட்டார்கள் *(1984 : 9)*.

முடிவுரை

ஒரு படைப்பாளி தான் சொல்லுகிற / எழுதுகிற கருத்துக்கள் வாசகர்களிடையே எளிதாகவும் அவர்கள் மனங்கொள்கிற விதத்திலும் போய்ச் சேர வேண்டும் என்று எண்ணுவது இயல்பு. அதனால் பல்வேறு உத்திகளைக் கையாண்டு செறிவாகவும் விளக்கமாகவும், தெளிவாகவும் எளிமையாகவும் பொருட் குழப்பில்லாமலும் புலப்படுத்துவர். அவ்வகையில் அண்ணா தனது படைப்புகளில் பல்வேறு கருத்துப் பரிமாற்ற உத்திகளைக் கையாண்டு தனது எண்ணங்களை வெளிப்படுத்தியுள்ளார். இதன் வாயிலாக அவரின் மொழித்திறன், சொல்லாட்சித் திறன், ஆளுமைத் திறன் போன்றவற்றை உணர்ந்து கொள்ள முடிகிறது.

யோ. தர்மராஜ்
ஸ்காட் கிறிஸ்தவக் கல்லூரி
நாகர்கோவில்

பாதுகாப்பு மந்திரங்கள்

தோற்றுவாய்

மானிடவியலாரின் நோக்கின்படி இயற்கையின் இயக்க விதிகளைப் புரிந்து கொள்ள இயலாத ஆதிமனிதன் இயற்கையைக் கட்டுப்படுத்தவும் அதனிடமிருந்து வாழ்க்கைக்குத் தேவையான நன்மைகளைப் பெற்றுக் கொள்ளவும் உருவாக்கிய ஒன்றே மந்திர மாகும் என்கிறார் சிவசுப்பிரமணியன்.[1] நாளடைவில் இயற்கைச் சக்திகளில் ஒன்றாகக் கருதப்படும் தீய ஆவிகளைச் சாந்தப் படுத்தியும், தூய ஆவிகளையும் மந்திரங்களையும் அடக்கி ஆள்வதன் வாயிலாகவும் தங்கள் எண்ணங்களை நிறைவேற்ற இயலும் என்ற நம்பிக்கை பழங்குடியினரிடையே தோன்றியது. இவ்வாறு மாந்திரீகம், பேய், முனி போன்ற கெட்ட ஆவிகள் சார்ந்தாகவே காணப்படுகிறது.[2] பழங்குடியினர் தீய ஆவிகளிட மிருந்தும் கொடிய விலங்குகளிடமிருந்தும் தங்களைப் பாதுகாத்துக் கொள்ளப் பாதுகாப்பு மந்திரங்களைத் தொடர்ந்து பயன்படுத்தி வருகின்றனர்.

பாதுகாப்பு மந்திரங்கள்

இயற்கை மற்றும் எதிரிகளிடமிருந்து தங்களைப் பாது காத்துக் கொள்ளவும் தீமை விலக்கி நன்மை பெறவும் பாதுகாப்பு மந்திரம் பயன்படுகிறது.[3] காணிக்காரப் பழங்குடி இனத்தவர்கள் பறவைகள், விலங்குகள், மனிதர்கள் போன்றவற்றின் ஆவிகளா லும் தங்களுக்குத் துன்பம் ஏற்படுவதாக நம்புகின்றனர். இவை களிலிருந்து தங்களைப் பாதுகாத்துக்கொள்ளப் பாதுகாப்பு மந்திரங்களைக் கூறுகின்றனர். அவைகளில் பூஞாழியன் கட்டும் மந்திரம், விலங்குகளைக் கட்டும் மந்திரம், விலங்குகளைக் கட்டவிழ்க்கும் மந்திரம், காட்டில் தூங்கும் போது கூறும் மந்திரம் ஆகியவை குறிப்பிடத்தக்கவை.

மந்திரத்தைத் தொழிலாக கொண்டவர்கள் மந்திர மொழிகளை மற்றவர்களுக்குத் தெரிவித்தால் அவற்றின் செயற் பாடு குறைந்துவிடும் என்று கூறமறுத்துவிட்டனர். வேட்டைக்குச் செல்கின்றவர்கள் விலங்குகளால் தங்களுக்குத் தீமை ஏற்படாமல் இருக்கவும், வேட்டைக் கருவிகளில் படிந்துள்ள வாலாமை நீங்கவும் வேட்டைப் பொருள் அதிகம் கிடைக்கவும் முதலில் மந்திரம் செய்கின்றனர். அதன் பின் ஏனைய மந்திரங்களைக் கூறு கின்றனர். பின்னர் ஆவிகளுக்குப் படைத்து வைத்த தேங்காய், முட்டை ஆகியவற்றைக் 'காட்டுக்கு முறிக்கிறேன்' என்று கூறி மந்திரவாதி உடைக்கிறான். உடைந்து சிதறும் துண்டுகள் கவிழ்ந்து விழுந்தால் கட்டறுந்து விட்டது (மந்திரம் பலித்து விட்டது) என்றும் மல்லாந்து விழுந்தால் கட்டறவில்லை (மந்திரம் பலிக்கவில்லை) என்றும் நம்புகின்றனர். கட்டறுந்து விட்டால் அவ்வருடம் அதிகமான வேட்டைப் பொருள் கிடைக்கும் என்று உறுதி செய்கின்றனர். வேட்டைக்குச் செல்லும் போது ஆவிகளுக்குப் பலி செலுத்தி மந்திர மொழிகளை உச்சரிக்கின்றனர்.

''அடுமம் தோக்கால
நடுமம் தோக்கால
நூற்றாறு தோக்கால
மாற்றாம்மார் மறுவிலக்கு வச்சி
கட்டிய கட்டுப் பூட்டுகளும்
முக்கண்ணன் தேங்காய்க்கு இருகண்ணன் முட்டக்கு
உறுவேறு உருவேறு நிக்க நிக்க சிவா''

என்பது இவர்கள் கூறும் வேட்டை மந்திரமாகும்.

பறவை பிடிக்கும் மந்திரம்

பழங்குடி மக்கள் காட்டு விலங்குகளையும் பறவைகளையும் வேட்டையாடி உண்ணுகின்றனர். அவைகளை வேட்டையாடு வதற்கு தறிவீய, தூக்குவீய, கல்வீய, ஊற்றுவீய, அடிவீய, வண்டுடால், அரைடால், வலைவள்ளி, பெருப்பு, கம்பிப்படக்கு, பன்றிவெடி, குண்டாம்வில், அம்புவில் என்று பல்வேறு பொறி வகைகளைப் பயன்படுத்துகின்றனர். இப்பொறிகளைக் காடுகள், விளைநிலங்கள் போன்றவற்றிலும் அடர்த்தியான மரக் கிளை களிலும் வைத்து வேட்டை கிடைப்பதற்குரிய மந்திரங்களைக் கூறுகின்றனர். பொறிகளைச் செய்து வைத்தபின் மந்திரம் கூறினால் வாலாமை நீங்கி வேட்டை அதிகமாகக் கிடைப்பதாக நம்புகின்றனர்.

பூஞாழியன் கட்டும் மந்திரம்

பறவைகள் எழுப்பும் ஒலியினால் நன்மை தீமை ஏற்படும் என்ற நம்பிக்கை உலகம் முழுவதும் காணப்படுகிறது. ஆந்தை, கோட்டான் போன்ற பறவைகளின் ஒலிகள் தீயநிமித்தங்களாகச் சங்க இலக்கியங்களில் குறிப்பிடப்பட்டுள்ளன. தமிழர் ஆந்தையின் ஒலி தீமையை விளைவிக்கும் என்று கூறுவதைப் போன்ற நம்பிக்கை மேனாட்டாரிடமும் உள்ளது.[4] தமிழகப் பழங்குடியின மக்கள் பறவைகளால் தீய நிமித்தங்கள் ஏற்படுவதாக நம்புவதை, சக்தி வேலும்,[5] பிலோ இருதயநாத்தும்[6] குறிப்பிடுகின்றனர். பூஞாழியன் பறவை ஒலி எழுப்பினால் நோய், உயிர்ச்சேதம் போன்றவை உடனடியாக அல்லது ஏழு நாட்களுக்குள் நிகழும் என்று காணிக்காரர்கள் நம்புகின்றனர். இப்பறவையின் ஒலி கேட்கும் போது தங்களைக் காப்பாற்றிக்கொள்ள கவிழ்ந்துப் படுத்தல், தெய்வத்தை மனதில் நினைத்தல், மந்திரம் கூறுதல் ஆகியவற்றைச் செய்கின்றனர்.

விலங்குகளைக் கட்டும் மந்திரம்

விலங்குகளில் யானை, குதிரை, எருது, மறி ஆகியவற்றின் இயல்பல்லாத நிலைகளே தீ நிமித்தக் குறிகளாகக் குறிப்பிடப் படுகின்றன என்கிறார் காந்தி.[7] தங்களை எதிர்த்து வரும் விலங்குகளிடமிருந்து பாதுகாத்துக்கொள்ள விலங்குகளைக் கட்டுவதும், கட்டவிழ்த்து விடுவதும் முதுவப் பழங்குடி யினரிடமும் காணப்படுகிறது.[8] காணிக்காரர்கள் வனப்பொருட் களைச் சேகரித்தல், வேட்டை, விவசாயம், விளைச்சலைப் பாதுகாத்தல் போன்ற தொழில்களில் ஈடுபடும்போது கொடிய விலங்கு எதிர்ப்பட்டால் அவைகளிடமிருந்து பாதுகாத்துக் கொள்வதற்கு மந்திரத்தால் வேலி கட்டி நிறுத்துகின்றனர்.

மந்திரத்தின் ஆற்றல் விலங்குகளைச் சுற்றி இருப்பதால் அவை உணவு உண்ணாமல் அப்படியே நிற்கின்றன. பாதிக்கப் பட்டவர்கள் அவ்விடத்திலிருந்து விலகிச் சென்றதும் கட்ட விழ்க்கும் மந்திரத்தைக் கூறிக் கட்டவிழ்த்து விடுகின்றனர்.

கொம்பில்லா விலங்குகளைக் கட்டும் மந்திரம்

''வாய்ச்சிப் பல்லா வயலவ நாடா
முன்பே வைக்கும் கால் பின்பே வச்சி நிக்க சிவா''

கட்டவிழ்க்கும் மந்திரம்

''பில்லற கல்லற
தேனற தெருமலரற
நாவற நாவற்று நிக்க சிவா''

தூங்கும் போது கூறும் மந்திரம்

விளைநிலங்களிலும் காடுகளிலும் இப்பழங்குடியினர் இரவு நேரத்தில் தூங்கும்போது விலங்குகள், பறவைகள் முதலிய உயிரினங்களாலும் தீய ஆவிகளாலும் தங்களுக்குத் தீமை ஏற்படாமலிருக்க மந்திரம் கூறித் தூங்குகின்றனர். இத்தகைய நம்பிக்கை கம்பளத்து நாயக்கன்மாரைச் சார்ந்த குடுகுடுப்பைக் காரரிடமும் உள்ளது. அவர்கள் வெளியூர் சென்றால் தாங்கள் படுத்திருக்கும் இடம், வைத்திருக்கும் பொருள் ஆகியவற்றைச் சுற்றி மணலால் கோடு போடுகின்றனர். இது சக்கம்மாள் கோடு எனப்படும். இக்கோட்டைச் சுற்றிப் பாம்பு முதலிய நச்சுயிர்கள் வருவதில்லை என்று நம்புகின்றனர்.[9] இப்பழங்குடியினர் தனியாகத் தூங்கும் போது கூறும் மந்திரம் பலரும் சேர்ந்து தூங்கும்போது கூறும் மந்திரத்திலிருந்த வேறுபட்டது.

தனியாகத் தூங்கும் போது கூறும் மந்திரம்

''வானமே மணிப்பந்தலு பூமியே சிறுதடுக்கு
கல்லே தலவணி கருவிலயே பஞ்சுமெத்தை
நான் இதோ கிடக்கிந்து இடுகாட்டில் படுகாட்டில்
இருக்க இருக்க முத்தங் கட்டயும்
காவலா பதிச்சி நிக்க சிவா''

இம்மந்திரத்தைக் கூறும்முன் படுக்கையை விரித்து அதனைச் சுற்றிக் குச்சியினால் ஏழுகோடுகள் இடுகின்றனர். படுக்கையில் இருந்தவாறே இம்மந்திரத்தைக் கூறித் தூங்கு கின்றனர்.

தொகுப்புரை

காணிக்காரர்களிடம் காணப்படும் மந்திரம் பற்றிய நம்பிக்கைகள் இவர்களின் தொன்மை மனநிலையைக் காட்டு கின்றன. ஆவிகளை வழிபட்டும் இப்பழங்குடியினர் அவை களைப் பயன்படுத்தி வாழ்வின் சிக்கல்களுக்குத் தீர்வு கண்டு வருகின்றனர். இவர்களிடம் வாய்மொழி வழக்காறுகளாகக் காணப்படும் அனைத்து மந்திரங்களையும் சேகரித்து உளவியல் மானிடவியல் நோக்கில் ஆய்வு செய்வது சிறப்பாகும்.

குறிப்புகள்

1. ஆ. சிவசுப்பிரமணியன், மந்திரம் சடங்குகள் ப. 1
2. கலைக்களஞ்சியம், தொகு-8, ப. 12
3. ஆ. சிவசுப்பிரமணியன் மு. நூ. பக். 32-33
4. Standary Dictionary of Folklore Mythology and Legend P. 12
5. சு. சக்திவேல், பழங்குடிகள் ப. 14
6. பிலோ இருதயநாத், தமிழ் மலையாளிகள் ப. 39
7. க. காந்தி, தமிழர் பழக்கவழக்கங்களும் நம்பிக்கைகளும் ப.138
8. மஞ்சுளா, முதுவர் பழங்குடிகள் ப. 92
9. முருகேசபாண்டியன் குடுகுடுப்பைக்காரர் வாழ்க்கை நிலை ப. 65.

சு. தர்மலிங்கம்
பயோனியர் குமாரசாமி கல்லூரி
நாகர்கோயில்

கலித்தொகையில் தினையமைதி

முகவுரை

கலித்தொகையில் ஐந்திணைப்பாடல்கள் எவ்வெவ் அகப் பாட்டுக் களன்களில் யார் யார் கூற்றாக அமைந்துள்ளன என்பது பற்றி இங்கு விளக்கப்படுகின்றது.

பாலை

பாலையில் பிரிவுக்களனில் கூற்றிற்குரியர் தலைவியும் தோழியுமே. தோழி கூற்றே மிகுதி. அவள் தலைவனைச் செலவழுங்குவிக்கும் கூற்றே மிகுதியாகப் பாடப்பெறுகிறது. (13 பாடல்கள்) பிரிவுணர்ந்து தலைவி உற்ற துயரைத் தலைவன் மனம் கொள்ளுமாறு உணர்த்தி தலைவனைச் செலவழுங்குவிக்கும் தோழிக்கூற்றை நயமுடன் கலிப்பாடல்கள் காட்டுகின்றன.

பாலைத்திணையில் பருவவரவில் நிகழும் கூற்றுக்களும் கலித்தொகையில் குறிப்பிடத்தக்க அளவு இடம் பெறுகின்றன. இக்களவிலும் தோழிக் கூற்றே மிகுதியாக அமைகின்றது. தலைவனது வரவுணர்ந்து தலைவிக்கு உரைக்கும் கூற்றில் ஆறு பாடல்கள் அமைந்துள்ளன. பிரிதொரு பாடல் பருவவரல் ஆற்றாமை மிக்க தலைவியை ஆற்றுவித்தது. தலைவிக் கூற்றாக அமையும் ஒரு பாடல், பருவவரவில் ஆற்றாமை மிக்குரைக்கும் கூற்றை வழங்குகின்றது. கலி 30 - ஆம் பாடல் பாசறைக்கண் சென்று தலைவனிடத்து தலைவியின் நிலையை உரைக்கும் பாணன் கூற்றாக அமைகின்றது.

குறிஞ்சி

குறிஞ்சித் திணையில் 29 பாடல்கள் கலித்தொகையில் இடம்பெற்றுள்ளன. இவற்றில் பெருந்திணைப் பாற்பட்ட கலி 62-ஆம் பாடல் கைக்கிளைத் தலைவன் கூற்றாக அமையும் மூன்று

பாடல்கள் ஒழிந்த ஏனைய பாடல்கள் (29 - 4 25) குறிஞ்சித் திணைக்குரிய களன்களை விளக்குகின்றன.

இவற்றில் 19 பாடல்கள் தோழிக் கூற்றாக அமைகின்றன. தோழிக் கூற்றில் மிகுதியான பாடல்பெறும் கிளவிகள் குறை நயப்பு (4) வரைவு கடாதல் (6) வரைவு மலிதல் (5) எஞ்சிய நான்கு பாடல்கள் கூட்டமுண்மை அறிந்து தலைவிக்கு உரைத்தது (63) புணர்ந்தபின் அவன்வயின் வணங்கி உரைத்தது. (50) இரவு வரும் தலைவனைப் பகல் வரக்கூறியது (49) வரைவு நீட்டிப்பில் தன் நெஞ்சிற்கு உரைத்தது (43) என்ற களன்களில் அமைகின்றன.

தலைவி கூற்றாக இத்திணையில் அமையும் பாடல்கள் (4) நச்சினார்க்கினியர் தொல்காப்பியர் வகுத்துள்ள களவில் அமையும் தலைவிக் கூற்றுப் பகுதியில் அமைத்துக் காட்டியுள்ளார். அவை, புகாஅக் காலை புக்கு எதிர்பட்டுழி பகர விருந்தின் பகுதி (51) தோழிக்குக் கூட்டம் நிகழ்ந்தமை உரைத்தல் (54) பெருமை சான்ற இயல்பின் கண் உரைத்தல் (55) பெற்றவழி மகிழ்ந்ததனைப் பிரிந்தவழிக் கலங்கியது (42) என்ற களன்களில் அமைகின்றன. இவற்றில் இறுதிக் களனில் அமையும் கலி 42-ஆம் பாடல் ஒழிந்த ஏனைய பாடல்களின் பொருள் தலைவனோடு தனக்குரிய தொடர்பை தோழிக்கு அறிவிக்கும் நிலையில் அமைந்துள்ளது.

இத்திணைப் பாடல்களில் தலைவன் கூற்றாக அமையும் ஐந்து பாடல்களில் மூன்று பாடல்கள் கைக்கிளைப் பொருண்மையில் அமைந்தவை. 'காமாஞ்சாலா இளமையோள் வயின் ஏமஞ்சாலா இடும்பை எய்தி' உரைத்த தலைவன் கூற்று. ஏனைய இரண்டு பாடல்களில் கலி 59 இரந்து குறையுற்றுப் பின்னின்ற தலைவன் ஆற்றானாக உரைத்தது. 64 - ஆம் கலிப்பாடல் தலைவியைக் கூட்டத்திற்கு உடம்படுவித்தது என்ற கிளவி பெற்றுள்ளது.

மருதம்

ஊடலும் ஊடல் நிமித்தமும் பொருளாக அமைந்த மருதப்பாடல்கள் கலித் தொகையில் வயலும் பழனும் சார்ந்த பின்புல வருணனையுடன் இயைபுறப்படைக்கப் பெற்றுள்ளன. மருதக்கலியில் அமையும் மொத்தப் பாடல்கள் 35. இவற்றில் பெருந்திணைப்பாற் பட்ட மூன்று பாடல்கள் 94, 99, 100. ஒழிந்த ஏனைய பாடல்கள் மருதத்திணைப் பாடல்கள். இவை தலைவி, தலைவன், தோழி, காமக்கிழத்தி என்ற நால்வர் கூற்றுக்களாக அமைந்துள்ளன. இவற்றில் தலைவி கூற்றே மிகுதி (21) அடுத்து

காமக்கிழத்தி கூற்று அமைகிறது. (8) நான்கு பாடல்கள் பெற்று அமைகிறது தலைவன் கூற்று. இத்திணையில் தோழி கூற்றாக ஒரு பாடலே அமைந்துள்ளது குறிப்பிடத்தக்கது.

மருதத் திணையில் அமையும் தலைவி கூற்று தலைவனோடு ஊடி அகற்றும் கூற்றையும் ஊடல் தீர்வாள் கூற்றையும் வழங்கி யுள்ளன. தலைவியின் வாயில் நேர்தல் கூற்று 7 தலைவன் சிறைப் புறத்தானாகக் கூறும் காரணங்களை மறுத்து அவற்றை அவன் பரத்தமையாக உருவகம் செய்து புலக்கும் கூற்று 5 வாயில் மறுத்தல் கூற்று 3 இவை அனைத்திலும் தலைவியின் புலவியின் பல்வேறு கோலங்களைப் படைத்துக் காட்டியுள்ளது. இத் திணையுள் அமையும் காமக்கிழத்தி ஊடல் உணர்ந்து உரைக்கும் கூற்று தலைவியின் கூற்றோடு ஒத்தே அமைந்துள்ளது.

தலைவன் கூற்றாக இருபாடல்கள் அமைகின்றன. அவற்றில் 81-ஆம் பாடல் மகன் வாயிலாக ஊடல் உணர்த்திய நிலையைத் தருகிறது. 92 - ஆம் பாடலில் தான் கண்ட கனவை உரைத்து பருவ வரவு சுட்டித் தலைவியின் ஊடல் தணிக்கும் தலைவன் கூற்று அமைகிறது.

முல்லை

முல்லைக்கலி பிறதொகை நூல்களில் அமையும் முல்லை பாடல்களில் நின்று வேறுபட்டு அமைகின்றது. முல்லை நில மக்களாகிய ஆயர் ஆய்ச்சியரையே தலைமக்களாகக் கொண்டவை இப்பாடல்கள். இத்திணையில் 17 பாடல்கள் அமைகின்றன. இவற்றுள்ளும் முதற்கண் அமையும் சில பாடல்கள் (101 - 106) ஆய்மகன் தன் ஆற்றல் காட்டும் ஏறுதழுவலையே தான் விரும்பும் தலைவியை மணந்து கொள்ளும் ஆறாக பயன்கொள்ளும் நிலையை காட்டுகின்றன. இப்பாடல்களில் புராண இதிகாசச் செய்திகள் உவமை வாயிலாக இடம் பெறுகின்றன.

முல்லைகலியில் ஒருசில பாடல்கள் அடியோர் வினைவலர் ஆகியோரைக் கிளவித் தலைவராகக் கொண்டு பாடப்பெற்றவை (108, 109, 110, 112, 113, 116) இவற்றைக் கைக்கிளைப் பாற்பட்டனவாக கொள்வார் உரையாசிரியர். தலைவி தோழிக்கு அறத்தொடு நிற்பத்தமர் வரைவுடன் பட்டமையைத் தோழி கூறியது (107) தலைவி தோழியிடம் தலைவனை வரைவு கடாவயும் அன்னைக்கு அறத்தொடு நிற்கவும் கூறியது (111) வரைவு கடாய வேண்டியது (114) களவு வெளிப்பட்டதென்ற தலைவிக்கு தோழி தமர் வரைவுடன்பட்டமை கூறியது (115)

என்ற கிளவிகள் அமையும் பாடல்கள் குறிப்பாகக் குறிஞ்சிக்குரியக் கிளவியாக அமைந்துள்ளன.

நெய்தல்

நெய்தற் காலிப்பாடல்கள் தேறுதல் ஒழிந்த காமத்து மிகுதிறமும், ஏறிய மடல்திறமும் அமைந்த பாடல்களை வழங்கி யுள்ளன. நெய்தற்கலிப் பாடலில் அமைந்த கூற்றுக்களை வகுத்துக் காணும்போது இவை தலைவி தலைவன் தோழி கண்டோர் வாயில்கள் என்ற ஐவர் கூற்றாக அமையக் காண்கின்றோம்.

இவற்றில் தலைவன் கூற்று மடலூர்ந்து வரும் தலைவன் கூற்றாகவோ, மடலூர நினைக்கும் தலைவன் கூற்றாகவோ அமைந்து ஏறிய மடல்திறம் என்ற பெருந்திணைப் பகுதியில் அடங்குகின்றது. இத்திணையில் அமையும் கண்டோர் கூற்றுகள் தலைவியின் தேறுதலொழிந்த காமத்து மிகுதியும் பேசுகின்றன, எனவே பெருந்திணைப் பாற்படுகின்றன. நெய்தற்கலியில் அமையும் 33 பாடல்களில் 14 பாடல்கள் பெருந்திணைப் பாற்பட்டவை.

காப்பு மிகுதிக் கண் மாலைக் காலத்துத் தலைவி அழிந்து கூறியதைக் கலி 133 வழங்குகிறது. இப்பாடல்கள் நெய்தற்குரிய முதற்பொருளும் உரிப்பொருளும் பொருந்த அமைந்த பாடல்களாக அமைந்துள்ளன. சில பாடல்களில் இவ்வாறு வருந்திய தலைவன் வந்து சேர மகிழ்ந்தமையைக் கண்டோர் வாயில் கூறிய நிலையில் அமைகின்றன. தலைவியின் துயர் தேறுதலொழிந்த காமத்து மிகுதிறமாக அமையும் போது இத்தகைய கூற்று பெருந்திணைப் பாற்படுவதையும் துயர் வெளியீடாக அமையும்போது நெய்தலுக்குரிய உணர்வாக அமைவதையும் பாடலின் கிளவி உணர்த்துகிறது.

முடிவுரை

தொகுத்து நோக்கும் போது முல்லைக் கலி நெய்தற்கலிப் பாடல்கள் முறையே கைக்கிளை, பெருந்திணைப் பாடல்களுக்கு இடனளித்துள்ளன. குறிஞ்சிக் கலிப் பாடல்கள் காமஞ்சாலா இளமையோள் வயின் ஏமஞ்சாலா இடும்பை எய்தி உரைக்கும் ஆண்பாற் கைக்கிளைப் பாடல்களை வழங்குகின்றன. மருதக் கலிப் பாடல்களில் தலைவியின் ஊடல் கூற்றைத் தருவதை ஒத்தே காமக்கிழத்தியின் ஊடல் கூற்றை வழங்குகின்றன.

தாயம்மாள் அறவாணன்
அன்னை தெரசா மகளிர் பல்கலைக்கழகம்
கொடைக்கானல்

ஔவையாரின் கல்வி ஒழுக்கம்

அவ்வையார் எழுதியதாகக் கருதப்பெறும் 'கல்வி ஒழுக்கம்' எனும் நூல் கல்வியின் சிறப்பை மிகவும் அழகுற ஆழமாக எளிமையுடன் எடுத்துரைக்கிறது. நூல் மிகச் சிறிது. தொண்ணூறு பாடல் வரிகள்; நான்கு சீர்கள் நான்கு கொண்டது ஒருவரி. இலங்கையில் இந்நூல் இருமுறை அச்சிடப் பெற்றதாகவும், சிலம்புச் செல்வர் ம.பொ.சி. பதிப்பித்ததாகவும் கூறப்படுகிறது. தமிழ்ப்பல்கலைக்கழக ஓலைச்சுவடித் துறையில் கிடைத்த பதினொரு ஏடுகளின் அடிப்படையில் புலவர். திரு இராசு அவர்களால் பதிப்பித்த கல்வி ஒழுக்கம் நூலை அடிப்படையாகக் கொண்டு இவ்வாய்வுக் கட்டுரை உருவாக்கப் பெறுகிறது.

கல்வியின் பெருமை

கல்வியின் சிறப்புகளைக் காட்டும் அடைமொழிகளால் பெய்து இந்நூல் எடுத்துக் கூறும் முறை அருமையாக உளது. குன்றாக் கல்வி, துகளறு கல்வி, பேசரு கல்வி, மாறாக்கல்வி, மறவாக்கல்வி கசடறு கல்வி, என்பன கல்விக்கு இந்நூல் வழங்கும் அடைமொழிகள். கல்வி கூர்த்த அறிவைத் தரும்; கைப்பொருள் கல்வியே, கல்வி உலகைத் தரும். சிறுமையில் கல்வி சிலை எழுத்தாகும். சுற்றமே கல்வி; தோழனாவது கல்வி. வேறு பொருள்கள் நிலைக்கா; ஆயின் கல்வி நிலைத்த தன்மையது பல ஆண்டுகள் ஆனாலும் தாழ்வில்லை; கல்வியைத் தேட வேண்டும் கல்வியே வழிபாடாகும். வாட்டத்தைத் தராததும் ஊக்கத்தைத் தருவதும் கல்வியே ஆகும்.

கல்வி இல்லாதவன் நிலை

பணம் இல்லாதவன் ஏழை அல்லன்; படிப்பறிவு இல்லாதவனே ஏழை. எழுத்தையும் சொல்லையும் அறியாதவர் தூர்த்தர்; பெருநூல்களைக் கற்று அறியாதவர் பேதை; முதல்

எழுத்து அறியாதவர் மோடர்; கல்லாதவரே ஊமையர்; கல்லாதவர் கண் இல்லாதவர்; சொல்லெழுத்து அறியாதவர் சோம்பர்.

கற்றல் வேண்டும்

பிச்சை எடுத்தேனும் கல்வியைப் பெற்றாதல் வேண்டும் எப்பொருள் கொடுத்தேனும் கற்றல் வேண்டும். இனியது கொடுத்து எழுத்தை அறிதல் வேண்டும். நுண் பொருள் கொடுத்து நூல் பல கற்றல் வேண்டும் என்று கல்வி கற்க வற்புறுத்துவார் ஔவையார்.

அரசனுக்குக் கல்வி

அரசன் ஆவான் 'ஔ'வரை எழுத்து அறிந்தவன் ஆவன். தகும் எழுத்து அறிந்தவன் தலைவன் ஆக முடியும். மாசறக் கற்றவர் மாநிலம் ஆள்வர். தொன்னிலம் முழுவதும் சிறக்க வாழ்வதற்குக் கற்று அறிய வேண்டும். மன்னவன் ஆகினும் மறை களை ஓத வேண்டும். அரசனை விடக் கற்றவனே பெரியவன்.

தமிழ் பற்றிய செய்தி

தமிழைப் பற்றிய செய்தியும் கல்வி ஒழுக்கம் நூலில் காண முடிகிறது.

சீரிய தமிழைத் தெளிய ஓது
முத்தமிழ் தகைகொரு மூப்பும் இல்லை

எண்ணும் எழுத்தும் பற்றிய செய்திகள்

எண் என்பது கணிதக் கல்வி; எழுத்து என்பது இலக்கிய மொழிக் கல்வி. ஆயுள் காலத்தில் கணக்கை அறிந்து கொள்ள வேண்டும். சொல்லும் பொருளும் கல்வியால் தோன்றும் எழுத்து உலகை எல்லாம் வழுங்கும் ஆற்றல் உடையது ஆகும்.

கற்றவனின் சிறப்புகள்

கோடியில் ஒருவன் தான் குறைவறக் கற்றவன். சாத்திரம் கற்றவனே சூத்திரதாரி. கற்றவன் சாத்திரதாரி, தகும் எழுத்து அறிந்தவனே தலைவன்; தகும் பல்கலைகளைக் கற்றவனின் பகையை விட்டு விட வேண்டும். பாவலர் என்பவர் பழுதறக் கற்றவர். துறவோரும் நன்றாகக் கற்றவரே. கற்றோர் புண்ணியர் ஆவர். நூலறிவுடையோர் மேலோர்; மேன்மையுடையோரும் ஆவர்.

கல்வியின் பயன்

கல்வி கற்றவனுக்குச் சென்ற இடமெல்லாம் சிறப்பு; வீசுவது எல்லாம் வித்தையின் பயன். கல்விகற்ற உத்தமர்க்கு எல்லாம் வரும். மெத்தென உரைப்பது வித்தையின் பயன். கல்வி ஒழுக்கத்தால் செல்வச் சிறப்பு உண்டாகும்.

நூல் பற்றிய எண்ணம்

இந்நூலின் தொடக்கத்தில் வருவன:

1. அஞ்சு வயதில் ஆரியம் ஓது
   ஆரியம் ஓத அறிவுண் டாமே

என்ற இரண்டு வரிகள் சில ஏடுகளில்

அஞ்சு வயதில் ஆதியை ஓது
ஆதியை ஓத அறிவுண் டாமே

என்று எழுதப் பட்டுள்ளது. கடவுள் வாழ்த்தில் 'ஆதி'யைச் சுட்டிய வள்ளுவனைப் போல அவ்வையாரும் ஆதியை ஓது என்று குறிப்பிட்டிருக்க வேண்டும். அதனைப் பிற்காலத்தார் அஞ்சு வயதில் ஆரியம் ஓது என்று மாற்றியிருத்தல் வேண்டும்.

2. மீண்டும் மீண்டும் மனனம் செய்தலைக் கூறுதல் ஓதுதல் என்பர். ஔவையார் தம் நூலான கல்வி ஒழுக்கத்தில் ஓதுதல் என்ற சொல்லை ஒன்பது முறை மீண்டும் மீண்டும் கூறியுள்ளார். 'ஆரியம் ஓது' 'ஆரியம் ஓதி' 'ஓதி அறி' 'ஓதல் உடைமை', 'திருந்த ஓத', 'தெளிய ஓத', 'திருந்த ஓது', 'மறைகளை ஓது' 'ஓதி உணர்ந்தோர்' என்பன ஓதும் செயலை வற்புறுத்துவன.

தொல்காப்பியர் கற்றலை ஓதல் என்றும், கற்றுணர்ந்தோர் பிரிதலை ஓதற்பிரிவு என்றும் குறித்தனர். இவ் 'ஓத்து' என்னுத லிற்றோ எனின் என்பது உரையாசிரியர்தம் உரை முகப்பு ஆகும். ஓதுதல் என்பது ஆரிய வேதம் ஓதல் என்பதுடன் தொடர்பு படுத்தப் பெற்றது மிகப் பிற்காலத்துத்தான்.

வட சொற்கள்

ஆரியம், வேத வித்தை, சாத்திரம், சூத்திரம், சாத்திரதாரி, சூத்திரதாரி, சைவாச்சாரியன், முதலான வடசொற்கள் பயின்றுள்ளன.

கல்வி ஒழுக்கம் ஔவையார் எழுதினாரா?

இந்நூலில் வரும் இருபதுக்கும் மேற்பட்ட பாடல் வரிகள் வேதம் ஓதுதலை வற்புறுத்தும். ஆத்திசூடியில் எங்குமே வேத

கல்வியை ஔவையார் சுட்டவில்லை. ஔவையாரால் இந்நூல் எழுதப் பெற்றுளதா? அன்றி ஔவையார் பெயரில் யாரோ ஒருவர் எழுதி வெளியிட்டாரா? என்பன சிந்தனைக் குரியவை.

முடிவு

1. ஔவையார் எனும் மிகப் பிற்காலப் புலவர் கல்வி ஒழுக்கத்தை எழுதியிருத்தல் வேண்டும்.
2. அந்நூலுள் வேதக் கல்வியை வற்புறுத்தப் பல மாற்றங்கள் செய்யப்பட்டிருத்தல் வேண்டும்.
3. பிற்காலத்தார் மூல பாடத்தில் நிறையவே மாற்றி நிறையவே மாற்றம் செய்துள்ளனர் என்று உய்த்துணரலாம்.

சு. திருநாவுக்கரசு
ஸ்ரீமத் சி.பா.சு. தமிழ்க்கல்லூரி
மயிலம் – 604 304

சீவப்பிரகாசர் நோக்கில் 'கலிக்காமர் செற்றம்'

சிவபரம்பொருளைப் போற்றித் துதிக்கும் புகழ் நூல்க ளாகிய தோத்திர நூல்கள் பன்னிரு திருமுறைகளாகும். இவற்றை யருளிய திருமுறையாசிரியர்கள் இருபத்தெழுவருள் குறிப்பிடத் தக்க முதன்மை பெற்றவர்கள் சமய குரவர்களாகிய நால்வர்கள் ஆவர். இவர்களுடைய வாழ்வினாலும் வாக்கினாலும் திருநீற்றின் பெருமை, ஐந்தெழுத்தின் ஆற்றல், திருமுறைச் சிறப்புகள் ஆகியன விளக்கமுற்றன. அப்பர், சம்பந்தர், சுந்தரர், மாணிக்க வாசகர் ஆகிய நால்வரும் முறையே சரியை, கிரியை, யோகம், ஞானம் என்னும் நால்வகை நெறிகளுக்கு விளக்கமாகத் திகழ்கின்றனர்.

இச்சமயகுரவர் நால்வரையும் இறைவனாகவே எண்ணி முதன்முதல் துதிநூல் பாடியவர், மயிலம் பொம்மபுர ஆதீன அருட்சீடர் கற்பனைக் களஞ்சியம் சிவப்பிரகாச சுவாமிகளே யாவர். சமயநெறி நின்று சமுதாயத்துக்குத் தொண்டுசெய்த சிவாநுபூதிச் செல்வராகிய அவர் அருளிய தோத்திரம், சாத்திரம், காவியம், சிற்றிலக்கியம் முதலிய முப்பத்துநான்கு நூல்களுள் நால்வர் நான்மணிமாலை என்னும் இத்துதிநூலும் ஒன்றாகும். இதன்கண், சுந்தரரைக் குறித்துப் பாடிய கிழ்க்காணும் பாடலே பொருள் விளக்கக் கட்டுரையாக இங்கு அமைகின்றது. பாடல் வருமாறு;

'நோக்குறு நுதலோன் நின்னிடை விருப்பால்
நூற்பகவு அன்னநுண் மருங்குல்
வார்க்குவி முலைமென் மகளிர்தம் புலவி
மாற்றுவான் சென்றனன் என்றால்
கோக்கலிக் காமன் வயிற்றிடைக் குத்திக்
கொண்டதே துக்குநீ புகலாய்

காக்கரு மதலை விழுங்கிய முதலை
கான்றிடத் தோன்றும்நா வலனே,
(நால்வர் நான்மணிமாலை-15)

நம்பியாரூரரிடம் பரவையார் கொண்ட ஊடலைத் தீர்க்க, சிவபெருமான் தூது சென்றார். அவர்தம்மைத் தூதனுப்பியது தவறு என்று எண்ணி, சுந்தரர்பால் மாறாவெறுப்பு கொண்டார் கலிக் காமர். இருவரையும் ஒற்றுமைப்படுத்தும்நோக்கில் கலிக்காமர்க்கு வயிற்று வலியையும் அவ்வலி சுந்தரர் வழங்கும் திருநீற்றால் தீரும் என்பதான சூழலையும் இறைவன் உண்டாக்கியருளுகின்றான்.

ஆனால் கலிக்காமரோ, இறைவனைத் தூதனுப்பியதாகிய தவற்றினைச் செய்த சுந்தரர்தம் திருக்கரத்தால் திருநீறு பெற்று வயிற்றுவலி நீங்கி உயிர்வாழ்வதைவிட உயிர்துறப்பதே மேல் என எண்ணித் தம் வயிற்றில் கத்தியால் குத்திக் கொண்டு உயிர் துறக்கிறார். இவ்வாறு செய்தது எதற்காக என்று சுந்தரரை வினவும் முறையில் இப்பாடலைப் பாடியுள்ளார் சிவப்பிரகாசர். இப்பாடல் வழங்கும் சிந்தனைகள் ஒவ்வொன்றாக எண்ணுதற்குரியன.

சுந்தரர், கொங்குநாட்டுத் திருப்புக்கொளியூர்த் தலத்தில் 'கரைக்கால் முதலையை ஈன்றுதரச்சொல்லு காலனையே' என்று பாடித் திருக்கோயில் குளத்தில் நீரினையும், நீரில் முதலையையும் வரவழைத்துத் தக்க உருவமும் பருவமும் அமைய, முன்னமே முதலையால் விழுங்கப்பெற்ற அந்தணச் சிறுவன் மீட்டளித்த அருஞ்செயலை இப்பாடலின் ஈற்றடி விளக்கி நிற்கின்றது.

ஞானசம்பந்தர் எலும்பைப் பெண்ணாக்கினார். அப்பர் கல்லைத் தெப்பமாகக் கொண்டு கரையேறினார். ஆனால் சுந்தரரோ, எத்தகைய மூலப்பொருளுமின்றி இவ்வற்புதத்தை நிகழ்த்தினார். இதனைப் 'போதமுண்ட' எனத்தொடங்கும் பிறிதொரு பாடலாலும் விளக்கி யுள்ளார். இவர்தம் திருப்பாடல் பெருமையையும், வடமொழியையும் முறையே பொன்மலையும் அணுநிலையும் போன்றவை என ஒப்பிட்டு வள்ளலார் ஏத்தும் கீழ்க்காணும் பாடல், அற்புதச் செயலை அழகாக வெளிப் படுத்துகின்றது.

'இலைக்குளநீ ரழைத்ததனில் இடங்கர்உற அழைத்ததன்வாய்த்
தலைக்குதலை மதலைஉயிர் தழைப்ப அழைத் தருளியநின்
கலைக்கும்வட கலையின்முதற் கலைக்கும்உறு கணக்குயர்
பொன்

மலைக்கும்அணு நிலைக்கும்உறா; வன்தொண்டப்
பெருந்தகையே'
(திருவருட்பா-ஆளுடைய நம்பிகள்அருண்மாலை-3)

இத்தகைய பாட்டுத் திறத்தாலே வையத்தைப் பாவிக்கின்ற சுந்தரர் செந்தமிழில், மிக்க ஈடுபாடு கொண்டவன் சிவபிரான், அவ் விருப்பத்தின் காரணமாகத்தான், சுந்தரரைத் தடுத்தாட் கொண்டான்; பரவையார், சங்கிலியார்பால் சுந்தரர் பொருட்டு முறையே நனவிலும் கனவிலும் தூது சென்றான்; திருக்கச்சூர்த் தலத்தில் மிடியில்லா மனைகளில் உணவேற்றுக் கொணர்ந்து சுந்தரரின் பசியை ஆற்றுவித்தான். இச்சிந்தனைகளை நேரிய, சீரிய வகையில் 'படியிலா நின்பாட்டில் ஆரூர நனிவிருப்பன் பரமன்' (நா.நா.மாலை-3) எனத் தொடங்கும் பாடலால் புலப்படுத்துகின்றார்.

இவ்வாறு, சுந்தரர் அருளிய செந்தமிழ்ப் பாடல்களில் கொண்ட ஈடுபாடு காரணமாகவே, தன்னைச் சுந்தரர்க்குத் தோழனாக ஆக்கிக் கொண்டு, அடியார் பெருமையை அனைத்துலகும் அறியுமாறு அருள்செய்தான், அவர்தம் உள்ளக் குறைகளைக் குறிப்பறிந்து போக்கியருளும் உத்தமனாக ஆனான். 'அவரவர் ஏவலாளனாகவும் விளங்கி, வேண்டுவன வேண்டியாங்கு உதவும் உரவோன் ஆனான்.

சிவபிரான், சுந்தரர்பொருட்டுப் பரவையார்பால் தூது சென்றதைச் சிவஞான பாலய சுவாமிகள் பிள்ளைத் தமிழ்ப் பாட்டாலும் சிவப்பிரகாசர் விளக்கப்படுத்தியுள்ளார்.

'பைந்தா துகுக்கும் நறுங்கொன்றைப்
பனிமா மலரும் குழவியிளம்
பயில்வெண் மதியும் துறையெயிற்றுப்
பாம்பும் சும்க்கும் அன்று நீ

செந்தா மரைச்சே வடிநோவத்
திரும்பித் திரும்பி ஓரிரவில்
சேல்வென் றகன்ற அரிமதர்க்கண்
சிலைக்கூன் புருவத் தரளநகை

நந்தா விளக்கின் திருமனைக்கு
நாவல் நகரின் வன்தொண்டர்
நடத்த ஒருதூ தாளாகி
நடந்த உனக்கின் றடியோம்பால்

வந்தால் வருமோர் பழியுண்டோ
மதுரக் கனியே வருகவே
மயிலை வரையில் சிவஞான
மணியே வருக வருகவே.'
(சிவஞான-பிள்ளை-வருகை-3)

நாம் எடுத்துக் கொண்ட இக்கட்டுரைக்குரிய பாடலின் முன்னிரண்டடிகளில் சுந்தரர்பால் சிவபிரான் கொண்ட விருப்பமும் மகளிர் புலவி மாற்றுவதற்காக இறைவன் தூது சென்றதும் சொல்லப்பட்டுள்ளன.

'உடுக்கை இழந்தவன் கைபோல ஆங்கே
இடுக்கண் களைவதாம் நட்பு' - (788)

என்று உலகியலில் நட்பின் இலக்கணத்தை குறிப்பறிந்து நண்பர்க்கு உதவும் மாண்பினை வள்ளுவம் விளக்குகின்றது. அருளியல் நிலையில் சிவபிரான், சுந்தர்க்குக் குறிப்பறிந்து உதவினார் என்பதைச் சொல்லவும் வேண்டுமோ? சுந்தரரின் முதல்மணத்தைத் தடைசெய்து அவர்தம்மைத் தடுத்தாட்கொண்ட வரலாறு இவ்வுண்மையை உணர்த்தும், இந்நிலைக்கும் மேலாகத் தம் உள்ளத்து உணர்வுகளை இறைவன்பால் முறையிட்டுச் சுந்தரர் உருகிய போது கருணைக்கடலாகிய இறைவன் வாளா இருப்பனோ? இதனாலன்றோ, சங்கிலியாரைச் சுந்தரர் மணங்கொள்ளக் கனவில் தூது சென்றதும், பரவையார் ஊடல்போக்க, ஆரூர் வீதியில் நள்ளிரவில் ஒரு முறைக்கு இருமுறை தூதுசென்றதும் நிகழ்ந்தன. இவற்றைப் பெரியபுராணம் விளக்கமாக மொழிகின்றது.

சிவபிரான் தூது சென்றதைப்
'பரவைமனை மீதில் அன்று
ஒருபொழுது தூது சென்ற
பரமனரு ளால்வ ளர்ந்த குமரேசா' (திருப்-கருவினுரு-பழநி)

என அருணகிரிநாதரும்,

'எழில்பரவை இசைய ஆரூர்மறுகில் அருள்கொண்(டு)
இராமுழுதும் உலவும் பதம்'
(திருவருட்பா-திருவடிப்புகழ்ச்சி)

என வள்ளற்பெருமானும் பாடியுள்ளனர்.

அடியார்கள் தம் உள்ளக் குறையை இறைவன்பால் விண்ணப்பிப்பதும், இறைவன் அருள்செய்வதும், 'பூனைக்குட்டி

நியாயத்தை 'ஒப்பனவாகும், அவ்வகையில் அடியார்கள் எதனை வேண்டுவதாயினும், ஆண்டவனிடத்தேதான் வேண்டுவர் என்பதனை, மணிவாசகர் பாடிய 'வேண்டித்தக்கது அறிவோய் நீ' 'உடையான் உன்றன் நடுவிருக்கும்' முதலான பாடல்களும், 'அப்பாநான் வேண்டுதல் கேட்டருள்புரிதல் வேண்டும் என்னும் வள்ளலார் பாடலும் தெரிவிக்கின்றன.

சுந்தரர் சிவபெருமானைத் தூது போக்கியமை தவறு என்று எண்ணிக் கலிக்காமர் தம் வயிற்றில் கத்தியால் குத்திக் கொண்டதைச் சொல்லி, அவ்வாறு செய்து கொண்டது எதற்காக என்று சுந்தரரை வினவும் பாங்கில் பாடலின் மூன்றாவது அடி விளங்குகின்றது.

சிவப்பிரகாசர் சுந்தரரை முன்னிலைப்படுத்தித் துதிக்கும் இப்பாடலில் 'நின்பால் கொண்ட விருப்பினால், இறைவன் தூது சென்றான்; அதற்கு யார் பொறுப்பாளியாக முடியும்? இதற்காகக் கலிக்காமர் வயிற்றிற் குத்திக் கொள்வானேன்? என்பதாக அமைத்துத் தூது சென்றமைக்கான காரணத்தையும், குத்திக் கொண்டது. 'இறையருளைத் தெளியாமையால்' என்பதையும் குறிப்பாக விளக்கியுள்ளார். இவ்வுண்மைகளைச் சிவபிரானின் கருணை நோக்கிலும், சுந்தரர்தம் உணர்வு நோக்கிலும் சரியெனச் சொன்னாலும் கலிக்காமர் நோக்கில் குத்திக் கொண்டதற்கான காரணமும் சரியென்பதாகவே தோன்றுகின்றது.

எனவே, இத்திருப்பாடல் வாயிலாக நாம் பெறும் சிந்தனைச் செல்வங்களாவன:

1. இறந்த மகனை உயிர்ப்பித்து எழவைக்கும் சுந்தரரின் செந்தமிழ்த் திறம்.
2. அவர்தம் பாடலில் இறைவன் கொண்டுள்ள ஈடுபாடு.
3. ஈடுபாட்டினாலும், சுந்தரர் வேண்டுதலாலும் சிவபிரான் தூதுசென்றமை.
4. 'ஆண்டவனின் அருள்நுட்பத்தை முற்றும் நம்மால் உணர முடியாது' என்பதற்குக் கலிக்காமர் செயல் எடுத்துக்காட்டாக அமைவது.
5. எஃது எப்படியாயினும், ஆண்டவன் தொண்டுக்கு ஆளாகுவோர், வாழவேண்டிய முறையை/நெறியைக் கலிக்காமர் வாழ்வினால் அறிந்து கொள்வது.

சாமி. திருமாவளவன்
தேசியக் கல்லூரி
திருச்சிராப்பள்ளி – 1

கண்ணதாசன் திரையிசைப் பாடல்களில் அணி நலம்

திரையிசைப் பாடல் வரலாற்றில் கண்ணதாசனுக்கென்று நிலைத்த இடமுண்டு. தலைவன் தலைவியின் மன உணர்வுகளை நயத்தக்க பண்புடன் வெளிப்படுத்தியவர் கண்ணதாசன். வாழ்வியலின் பல்வேறு கூறுகளையும் சுவைபடக் கூறியவர் கண்ணதாசன், அவர் கையாண்டுள்ள அணிநலம் பற்றி இக்கட்டுரை ஆய்கிறது.

தொல்காப்பியம், வீரசோழியம், தண்டியலங்காரம், மாறனலங்காரம், இலக்கணவிளக்கம், தொன்னூல் விளக்கம், முத்துவீரியம், சந்திராலோகம், குவலயானந்தம் ஆகியன அணியிலக்கணம் பற்றிக் கூறும் நூல்களாகும்.

அணி என்றால் அழகு அல்லது ஒப்பனை என்பது பொருளாகும். ஒருவரை ஆடை ஆபரணங்களால் அணி செய்தால் மேலும் அழகு கூடும். அதுபோலப் பாடலாசிரியர் தான் 'கூற நினைக்கின்ற கருத்திற்கு மேலும் வலுசேர்க்கவும், அழகு கூட்டவும் பல்வேறு உத்திகளைப் பயன்படுத்துவர். அவற்றுள் அணி நலமும் ஒன்றாகும்.

திரையிசைப் பாடலென்பது கதைச்சூழலுக்கும், இசையமைப்புக்கும் ஏற்றாற்போலவே பெரிதும் படைக்கப்படுவதால் கண்ணதாசன் தன் ஆற்றலை, வெளிப்படுத்த அணி நலத்தையும் பயன்படுத்திக் கொண்டுள்ளார்.

ஒன்று மற்றொன்றைப் போல ஒத்திருப்பது உவமையணி ஆகும்.

'பண்பும் தொழிலும் பயனுமென்ற இவற்றின்
ஒன்று பலவும் பொருளொடு பொருள் புணர்த்து
ஒப்புமை தோன்றச் செப்புவது உவமை

எனத் தண்டியலங்காரம் கூறுகிறது.

கூந்தல் மஞ்சம் போடவா
குளிர் வராமல் பாடவா
பூவைப் போலே சூடவா

என்ற பாடலில் கூந்தலையே மஞ்சம் என்று பாடியுள்ளமையால் இப்பாடல் உவமையணிக்குச் சான்றாகிறது.

உவமானம் எது உவமேயம் எது என்று தோன்றாதபடி உவமான உவமேயங்களைத் தனித்தனி வாக்கியங்களாய் அமைத்துக் கூறுவது எடுத்துக்காட்டுவமை எனப்படும்.

அடிமை வாழ்க்கையில் துன்புற்றோர் படகில் கடலில் செல்லும்போது பாடும் பாடலாகக் கண்ணதாசன் படைத்துள்ள,

அதோ அந்தப் பறவைபோல
வாழவேண்டும்
இதோ இந்த அலைகள் போல
ஆட வேண்டும்

என்ற பாடலை எடுத்துக்காட்டு உவமையணிக்குச் சான்றாகக் கூறலாம். விண்ணில் பறக்கும் பறவைகளுக்கும், கடலில் வீசும் அலைகளுக்கும் கட்டுப்பாடில்லை, என்றாலுங்கூட அவை பிரதி பலன் கருதாது செயலாற்றுகின்றன. அது போல மனித உள்ளங்களும் இருக்க வேண்டும் என்று கண்ணதாசன் கூறுகிறார்.

உவமை வேறு உவமானம் வேறு என்று தோன்றாதபடி இரண்டும் ஒன்று போல் கூறுவது உருவகம் ஆகும்.

செந்தமிழ்த் தேன்மொழியாள் - நிலாவெனச்
சிரிக்கும் மலர்க் கொடியாள்
பைங்கனி இதழில் பழரசம் தருவாள்
பருகிடத் தலை குனிவாள்

என்பது உருவகப் பாடலாகும்.

இயல்பாக நடைபெறுகின்ற ஒரு நிகழ்ச்சி மீது புலவன் தன் கருத்தை ஏற்றிக் கூறுவது தற்குறிப்பேற்றமாகும்.

தாமரைப் பூ மலர்ந்திருப்பதும், அது காற்றிலாடுவதும் இயல்பு. தலைவனை அழைப்பதற்காகத் தாமரைப்பூ தூதுவிட்டு ஆடுகின்றது என்று கண்ணதாசன் காட்டும் தலைவன் தன் கருத்தை ஏற்றிக் கூறுகிறான்.

இல்லாத பொருளினை இருக்கும் பொருளுக்கு உவமைப் படுத்திக் கூறுவது இல்பொருளுவமையணியாகும்.

தென்றலெனும் குதிரையிலே ஊர்வலமாம் மான்கள்
சீர்வரிசை தாங்கிவரும் வாகனமாம்
மங்களமாய் மூங்கிலிலே நாயனமாம்

என்ற இப்பாடலில் தென்றலைக் குதிரையாகவும், சீர்வரிசைச் சுமந்து வரும் வாகனங்களாய் மான்களையும், உவமைப்படுத்திப் பாடியுள்ளார்.

இருபொருளை ஒன்றுபடக்கூறி அவற்றுள் ஒன்றை வேறுபடுத்திக் கூறுவது வேற்றுமையணியாகும்.

கல்லால் அடித்த அடி வலிக்கவில்லை
கண்ணால் அடுத்த அடி வலிக்குதடி

என்ற பாடலடிகளில் ஒன்று கல்லடி, மற்றொன்று கண்ணடி, ஆனால் கல்லால் அடித்த அடி வலிக்கிறது.

பின்னது கண்ணால் அடித்த அடி, அது வலிக்கவில்லை என வேறுபடுத்திக் காட்டியதால் இப்பாடல் வேற்றுமையணி ஆயிற்று.

ஒரு பாடலில் முன்னர் வந்த சொல்லோ, பொருளோ பின்னர்ப் பலஇடத்தும் வருமாயின் அது சொற்பொருள் பின்வரு நிலையணியாகும்.

கண்கள் மயங்கும் கண்ணானாள்
பெண்கள் மயங்கும் பெண்ணானாள்
நினைவில் மயங்கும் பொருளானாள்
நிலவில் மயங்கும் இருளானாள்

என்ற இப்பாடலில் 'மயங்கும்' என்ற சொல் தொடர்ந்து வந்துள்ளமையால், இப்பாடலைச் சொற்பொருள் பின் வருநிலையணிக்குச் சான்றாகக் கூறலாம்.

ஓரிடத்திலுள்ள விளக்கின் ஒளி எல்லா இடத்தும் ஒளி தருவதுபோல ஒரு சொல் செய்யுளின் முதல், இடை, கடை என மூன்று இடத்தும் வந்து பொருள் தருவது தீவக அணியாகும்.

அமைதியான நதியினிலே ஓடும், ஓடம்
அளவில்லாத வெள்ளம் வந்தால் ஆடும்

என வரும் இப்பாடலில் 'ஓடம்' என்ற சொல் முன்னும் பின்னும் இணைந்து பொருள் கொள்ள வைத்தமையால் தீவக அணிப் பாடலாயிற்று.

கண்ணதாசன் தான் கூற வந்த கருத்துக்களைப் பல்வேறு அணிகளின் வாயிலாகக் கூறியுள்ளதன் மூலம் அவருக்கு அணிப்புலமையும் இருந்துள்ளதை உணரலாம்.

கைதேர்ந்த புலவனுக்கு உவமையும், உருவகங்களும், அணிகளும் அணிவகுத்து நின்று அவர்தம் படைப்புக்கு மேலும் மெருகூட்டுகின்றன.

கு. திருமாறன்
பெரியார் கல்லூரி
திருச்சிராப்பள்ளி – 620 023

சீனிவாசநல்லூர்க் குரங்கநாதர் கோயில்

முன்னுரை

திருச்சி-சேலம் சாலையில் முசிறியிலிருந்து 6கல் தொலைவில் காவிரியின் வடகரையில் சீனிவாச நல்லூர் என்பது ஒரு சிற்றூர். இவ்வூருக்குச் சிறிது தொலைவு மேற்கில் மகேந்திர மங்கலம் என்ற மற்றொரு சிற்றூர் உள்ளது. முற்காலத்தில் சீனிவாச நல்லூர் 'பிரம்ம தேயமான மகேந்திர மங்கல' த்தின் ஒரு பகுதியாக அமைந்து, பின்னர்த் தனித்தனி ஊர்களாகப் பிரிந்திருக்கலாம். ஊர்ப் பெயரில் உள்ள 'மகேந்திரன்' என்பது பல்லவ மன்னன் மகேந்திர வர்மனையே குறிப்பது[1]. சீனிவாச நல்லூரில் ஐந்து பழைய கோயில்கள் உள்ளன. அவற்றுள் முதன்மையானது குரங்க நாதர் கோயில்.

கோயில் வரலாறு

இக்கோயில் முதல் பராந்தகன் (கி.பி.907-955) காலத்தில் கட்டப்பட்டது என்று பெர்சி பிரௌன் குறிப்பிடுகிறார்.[2] கே.ஏ. நீலகண்ட சாத்திரியார், டி.பார்ட் (D.Barret) முதலியோரும் இவ்வாறே கருதுகிறார்கள்.[3] ஆனால், எசு.ஆர். பால சுப்பிரமணியம் இது முதல் ஆதித்தன் (கி.பி.871-907) காலக் கோயில் எனக் கூறுகின்றார்.[4] எவ்வாறாயினும், இக்கோயில் பிற்காலச் சோழர்களின் தொடக்கக் காலக் கோயில்களில் ஒன்று என்பதில் கருத்து வேறுபாடு இல்லை.

குரங்கநாதர் கோயில் என்று இப்போது அழைக்கப்படும் இது கல்வெட்டுகளில் 'மகேந்திர மங்கலத்துத் திருக்குரக்குத் துறைப் பெருமானடிகள்' எனக் குறிக்கப்பட்டுள்ளது.[5] துறவி ஒருவர் இக்கோயிலைக் கட்டினார் எனவும், குரங்கு ஒன்று இக்கோயில் தூய்மையைக் கெடுத்ததால் வழிபாட்டிற்கு உரியது ஆகாமல் நின்றுவிட்டது எனவும் பழங்கதை ஒன்று வழங்குகிறது; அதனாலேயே இது குரங்க நாதர் கோயில் எனப் பெயர்

பெற்றதாகப் பெர்சி பிரௌன் குறிப்பிடுகிறார்.[6] 'இது கட்டுக் கதை; ஆதாரமற்றது' எனக் கருதும் எஸ்.ஆர். பாலசுப்பிரமணியம் 'இராமாயணத்தில் பிரசித்தி பெற்றுள்ள வானரத் தலைவர்களான வாலி அல்லது சுக்கிரீவன் இக்கோயிலைக் கட்டியதாகவோ அல்லது இக்கோயிலில் வழிபட்டதாகவோ ஐதிகம் நிலவியிருக்கலாம்' எனக் குறிப்பிடுகிறார்.[7] இக்கருத்திற்கும் வரலாற்றுச் சான்று ஏதுமில்லை. ஆடுதுறை, மயிலாடுதுறை, குரங்காடு துறை என்பது போலக் கோயில் அமைந்துள்ள இடம் 'குரக்குத்துறை' என இயல் பாகவே வழங்கப்பட்டிருக்கலாம். அல்லது, 'வளைந்த துறை' என்னும் பொருளில் குரங்குதுறை என அழைக்கப்பட்டிருக்கலாம்.[8]

முதல் ஆதித்தன் காலத்திலிருந்து முதல் குலோத்துங்கன் காலம் வரை ஏறத்தாழ 200 ஆண்டுகள் நன்னிலையில் இருந்த இக்கோயில் பிற்காலத்தில் புறக்கணிப்பிற்கும் சிதைவுகட்கும் உள்ளாகிவிட்டது.[9]

கல்வெட்டுகள்

முதல் ஆதித்தன், முதல் பராந்தகன், முதல் இராசராசன், முதல் குலோத்துங்கன் முதலிய அரசர் காலக் கல்வெட்டுகள் இக்கோயிற் சுவர்களில் காணப்படுகின்றன.[10] இக்கல்வெட்டுகள் திருக்குரக்குத்துறைப் பெருமானடிகட்கு நந்தா விளக்கு எரிய அறுபது ஆடுகளை வழங்கியமை,[11] இறையிலி நிலங்களை நிவந்தமாக வழங்கியமை[12] முதலிய செய்திகளைக் குறிப்பிடு கின்றன. முதல் இராசராசனின் கல்வெட்டு இறையிலி நிலங் களைக் குறிப்பிட்டு நில வருமானத்தைக் கோயில் திருப்பணி களுக்குப் பகிர்ந்து ஒதுக்கீடு செய்யப்பட்டதையும் சுட்டுகிறது. மேலும், பூசை செய்பவர், அவர் துணைவர்கள், விளக்குத் தூக்குவோர், இசைக்கலைஞர்கள் (மத்தளி மூன்றும், கரடிகை ஒன்றும், தாளம் ஓரிணையும், படகம் ஒன்றும், டே(டெ)சகண்டிகை ஒன்றும் ஆக ஏழாள் கொண்டு முட்டா மெய் கொட்ட) முதலிய வர்களின் திருப்பணி ஏற்பாடு பற்றியும் குறிப்பிடுகிறது.[13]

கோயில் அமைப்பு

இக்கோயில் இருதளங்களைக் கொண்ட கற்றளியாகும். இது கருவறை, அந்தராளம் (இடைநாழிகை), அர்த்த மண்டபம் ஆகிய மூன்று பகுதிகளாக உள்ளது. கொடுங்கை வரை கருங்கல்லால் கட்டப்பட்டுக் கருவறைக்கு மேலுள்ள விமானம் செங்கல்லாலும் சுதையாலும் கட்டப்பெற்றுள்ளது. கிரீவமும் சிகரமும் சதுர வடிவில் அமைந்துள்ளன.

கோயிற் சிற்பங்கள்

கோயிலின் புறச்சுவர்கள் அருமையான சிற்பங்களைக் கொண்டுள்ளன. கோயிலின் எல்லாப் பக்கங்களிலும் யாளிவரிசை எழிலுற அமைந்துள்ளது. வேழமுகயாளிகளும் சிம்ம முகயாளி களும் கலந்து மாறுபடு அழகுடன் விளங்குகின்றன. சுவர் முனைகளில் உள்ள யாளிகளின் திறந்த வாய்களில் வலக்கையில் வாளும் இடக்கையில் கிடுகும் தாங்கிய வீரர் சிற்பங்கள் பெருமித உணர்ச்சி பொலியும் வண்ணம் விளங்குகின்றன. ஒரு யாளியின் திறந்த வாயில் மற்றொரு யாளியின் சிறிய உருவமும், அச்சிறிய யாளியின் மீது அமர்ந்த நிலையில் வாளும் கிடுகும் ஏந்திய மறவன் சிற்பமும் புதுமைப் பொலிவுடன் விளங்குகின்றன.

கருவறையின் வடக்குச் சுவர்த் தேவக் கோட்டத்தில் பாதம் வரை பட்டாடை அணிந்த பிரமன் சிலை திகழ்கின்றது. அதன் வல, இட முன்கைகள் சிதைவுபட்டிருந்த போதிலும் சிலை கலையழகோடு விளங்குகிறது. தேவக் கோட்டத்தின் கிழக்கு கோட்டப் பஞ்சரத்தில் ஓர் ஆண் சிலை சின்முத்திரை காட்டி நிற்கின்றது. மேற்குக் கோட்டப் பஞ்சரத்தில் இரு கைகளுக் கிடையில் அக்கமாலையுடன் கைகூப்பிய நிலையில் ஓர் ஆண் உருவம் பத்திமை முகத்தில் பாங்குடன் இலங்க நிற்கின்றது.

அர்த்த மண்டபத்தின் வடக்குச் சுவரில் விரிசடையுடன் வீராசன நிலையில் ஒரு திருவுருவம் அமைந்துள்ளது. இதன் இடக்காலும் வலமுன்கையும் இடமுன், பின் கைகளும் பெரிதும் சிதைவுபட்டுள்ளதால் இத்திருவுருவத்திற்குரிய தெய்வம் யார் என அறிய இயலவில்லை.

கருவறையின் மேற்குச் சுவரில் தேவக்கோட்டம் சிலை ஏதுமின்றி வெறுமையாக உள்ளது. அதன் மேலுள்ள மகர தோரணத்தில் சிம்ம யாளிகளின் மீது வீரர்கள் அமர்ந்த சிற்பங்கள் அழகுறச் செதுக்கப்பட்டுள்ளன. இம்மகர தோரணத்தில் யோக நரசிம்மர் சிலை உள்ளது என்று ஒரு நூலிலும்[14], நரசிம்மர் சிலை அமைந்துள்ளது என்று பிறிதொரு நூலிலும்[15] எஸ்.ஆர். பால சுப்பிரமணியம் குறிப்பிடுகிறார். மாறாக, இதில் புவிமாதை இடத்தொடையில் தாங்கிய வண்ணம் நிற்கும் வராகமூர்த்தி சிலை அமைந்துள்ளது. இத்தேவக்கோட்டத்தின் இரு மருங்கிலும் உள்ள கோட்டப் பஞ்சாரங்களில் எழிலார்ந்த இரு மங்கையர் சிலைகள் கண்கொள்ளாக் கவினுடன் வடிக்கப்பட்டுள்ளன. அவையும் சிதைந்த நிலையில் காணப்படுகின்றன.

கருவறையின் தெற்குச் சுவர்த் தேவக்கோட்டத்தில் கல்லால மரத்தின் கீழ் அமர்ந்தருளும் தட்சிணாமூர்த்தியின் திருவுருவம் வீராசன நிலையில் அமர்ந்துள்ளது. வலக்கால் முயலகன் முதுகில் படிய, அதன் வலப்புறத்தில் இருமான்கள் படுத்த நிலையிலும் இடப்புறத்தில் பாம்பொன்று படமெடுத்த நிலையிலும் காணப் படுகின்றன. இத்திருவுருவத்தின் முன்கைகளும் கால்களும் சிதைந் துள்ளன. விரிசடையில் மண்டையோடும் கல்லால மரத்தில் அக்க மாலை, அணில், ஆந்தை, தோட்பை முதலியனவும் அமைக்கப் பட்டுள்ளன.

இத்தேவக் கோட்டத்தின் இருமருங்கிலும் தூண்களுக்கிடை யிலுள்ள பகுதியில் சிறிய அளவில் சிற்பங்கள் வடிக்கப் பட்டுள்ளன. வலப்புற மேற்பகுதியில் பூதங்கள் இரண்டு அமர்ந்த நிலையில் உள்ளன. இடப்புற மேற்பகுதியில் இரண்டு பூதங்கள் நின்ற நிலையில் உள்ளன. இருமருங்கும் கீழ்ப்பகுதியில் முனிவர் சிலைகளும் நடுப்பகுதியில் ஒரு பக்கம் சிம்மமும் ஒரு பக்கம் புலியும் படுத்த நிலையில் காணப்படுகின்றன.

தென் தேவக் கோட்டத்தின் மேற்குப்புறம் கோரைப் பல்லுடன் கூடிய ஆண் உருவம் பின்னிய கைகளுடன் காணப்படு கின்றது. மடித்துப் பின்னிய கைகளும் அடக்கமான தோற்றமும் கொண்ட இச்சிற்பம் புதுமையான ஒன்றாகத் தோன்றுகிறது. தட்சிணாமூர்த்தியின் கிழக்குப்புறத்தில் காலடியில் மானும் பூத கணமும் உடனிருக்கப் பிச்சாடனரின் திருக்கோலம் பொலிவுறச் சிலையாகிக் காணப்படுகிறது.

இவையல்லாமல் சுவர்களிலும் தூண்களிலும் நடனமாதர், இசைக்கலைஞர்கள் முதலியோரின் அழகிய சிறு சிற்பங்களும் நுண்ணிய வேலைப்பாடுகளும் கண்களுக்கு விருந்தாய் விளங்குகின்றன.

முடிவுரை

தொடக்கக் காலச் சோழர்களின் கட்டிடக்கலைக்கும் சிற்பக்கலைக்கும் சான்றாக விளங்கும் குரங்கநாதர் கோயில் சோழர் கால வரலாற்று ஆவணங்களான கல்வெட்டுகளைக் கொண்டதாக விளங்குகின்றது. பகட்டாரவாரமில்லாது திகழும் இச்சிறுகோயில் திராவிடக் கலைவளர்ச்சியில் நிலைமாற்றக் கலைநிலைக்குச் சிறந்த சான்றாக விளங்குகிறது.[16] குரங்கநாதர் கோயிலும் சீனிவாச நல்லூரில் உள்ள பிறகோயில்களும் முழுமையான ஆய்விற்கு உரியன.

குறிப்புகள்

1. பாலசுப்பிரமணியம். எசு.ஆர்., சோழர் காலக் கலைப்பாணி. பக்.61
2. Percy Brown, Indian Architecture (Buddhist and Hindu Periads) P.84.
3. பட்டாபிராம். சி.சி., 'சினிவாச நல்லூர்', உருமு தனலட்சுமி கல்லூரி ஆண்டுமலர் 1989, தமிழ்ப்பகுதி-பக்.1.
4. Balasubramaniam, S.R., Early Chola Art, Part I - P.101.
5. South Indian Inscriptions, Vol.XIII, No.2,3. 158,306.
6. Percy Brown-Ibid.P.84.
7. பாலசுப்பிரமணியம், எசு.ஆர்., மு.நூ.பக்.61.
8. தமிழ்ப்பேரகராதி-தொகுதி2-பக்.1010.
   ''குரங்கமை யுடுத்த மரம்பயி லடுக்கத்து'' (சிலம்பு-10:157)
9. Balasubramaniam, S.R., Op.Cit., P.100.
10. Ibid - P.100-101.
11. S.I.I.Vol.XIII - No.2 (A.R.No.586 of 1904)
12. Ibid. - No.306 (A.R.No.592 of 1904)
13. Ibid. - No.3 (A.R.No.596 of 1904)
14. பாலசுப்பிரமணியம், எசு.ஆர்., மு.நூ., பக்.26.
15. Balasubramaniam, S.R. Op.Cit.P.102.
16. Percy Brown, Op.Cit. P.85.

வே. திலீலைநாயகம்

கம்பம் – 625 516

தேசீய கீதம்:தமிழ்?

முகப்புரை

ஒவ்வொரு நாடும் அதன் மக்களை ஒருமுகப்படுத்தி வைக்கத் தேசியக் கொடி, தேசியச் சின்னம், தேசிய கீதம் என்பதாக மும்மைக் குறிமைகளைக் கொண்டுள்ளது.

காதில் கேட்டு மகிழவும் கருத்தால் சுவைத்து இன்பமுறவும் சொல்லாக்கத்தாலும் இசையமைப்பாலும் சிறப்பிடம் பெறுகிறது தேசிய கீதம்.

இப்போக்கில் 1824 - இல் எழுதப்பட்டு, 1828 - இல் இசையமைக்கப்பட்டு, 158 அடிகள் கொண்டதாகச் சிறப்பிடம் பெறுகிறது கிரேக்க நாட்டுத் தேசிய கீதம்.

சப்பான், சான்மரினோ, சோர்டான் முதலிய நாடுகள் நான்கே வரிகளில் தேசிய கீதங்களை இசைக்கின்றன.

பகரேன், குவடார் முதலிய அரபிய நாடுகள் இசையமைப் பில் மட்டுமே இன்பம் காண்கின்றன.

நாமோ தொடக்கத்திற்கு 'வந்தே மாதரம்' என்ற ஒரு பாடலையும் இறுதிவ்ழ்த்துக்கு என்று 'ஜன கண மன' என்று ஒரு பாடலையும் பயன்படுத்துகிறோம். இதன் நோக்கமும் ஆக்கமும் தாக்கமும் என்ன? ஏன்? எப்படி?

வந்தே மாதரம்

விடுதலைப் போராட்டப் படைக்கலனாக எழுந்தது வந்தே மாதரம் பாட்டு. 1875இல் பங்கிம் சந்திரர் (1848-1894) எழுதிய வங்க மொழிப் பாட்டு பங்கதர்சன் என்ற இதழிலே வெளியானது.

1891 முதல் இந்தியத் தேசியக் காங்கிரசு மாநாடுகளில் தொடக்க வணக்கப் பாடலாக வாழ்வு பெற்றது.

மொழிமாற்றம்

வங்க மொழி வந்தே மாதரம் பாடலைத் தமிழர்களுக்கு அறிமுகப்படுத்த 1937இல் 'இனிய நீர் பெருக்கினை' என்று தொடங்கும் மொழிமாற்றப் பாடலை வெளியிட்டார் தேசியக் கவி சுப்பிரமணிய பாரதியார்.

அது பாடுவதற்கு இசைவாய் இல்லாமையால் 'நளிர்மணி நீரும்' என்று வளரும் சந்தம் தழுவிய திருத்தப் பாடலை வெளியிட்டார் அவரே.

இதிலும் அமைதி பெறாமல் 'வந்தே மாதரம் என்போம்' என்ற பல்லவியுடன் 26 வரிகள் கொண்ட பாடலை வெளியிட்டார்.

இதுவும் பாடுவதற்கு நீளமாக இருக்கவே, 'வந்தே மாதரம் ஜய வந்தே மாதரம்'' என்று திருத்திய பல்லவியுடன் 10 வரி பாடலும் எழுதியிருக்கிறார்.

இதுமாதிரி பிறமொழிகளில் வந்துள்ளதா என்று ஆராய வேண்டும் ஒப்பிலக்கியர்கள்!

தேசியப் பாடல்

பங்கிம் சந்திரர் 1875 இல் எழுதிய வந்தே மாதரம்-1891 முதல் காங்கிரசு மாநாடுகளில் பாடப்பட்டுவந்த வந்தே மாதரம்-1950 திசம்பரம் 24 ஆம் நாள் இந்திய அரசமைப்பு ஆக்கப்பேரவையால் தேசியப் பாடல் (National Song) என்ற தகுதியுடன் தேசிய வாழ்த்துப் (National Antham) பாடலுக்கு ஒப்பினதாக ஏற்றுக் கொள்ளப்பட்டது.

இதைத்தான் தினந்தோறும் காலை ஆரம்ப நிகழ்வாக வானொலியிலும் வானொளியிலும் கேட்டுக் கொண்டிருக்கிறோம்.

மொழி வாழ்த்து

வங்கமொழியில் எழுதப்பட்ட வந்தே மாதரம் பரவலாகப் பலராலும் தெரிந்து கொள்ளப்படவில்லை; தெரிந்து கொள்ளச் செய்யப்படவில்லை; தமிழர்கள் மனதிலே பதியவில்லை.

எனவே மக்கள் வாழ்வின் மூலாதரமான தாய் மொழியில் - தமிழ் மொழியில் - மனோன்மணியம் சுந்தரம் பிள்ளை (1855-1897) யால் 1892 - இல் எழுதப்பட்ட 'நீராரும் கடலுடுத்த நிலமடந்தை' என்று வளரும் மோகன ராகப்பாட்டு தமிழ்நாட்டில் மொழி வாழ்த்தாகப் பயன்படுத்தப்பட்டு வருகிறது.

இதுபோலப் பிற மொழிகளில் இருக்கிறதா என்று ஆராயப் பட்டு, மொழி வாழ்த்துப் பயன்படுத்தப்பட ஏற்பாடு செய்ய வேண்டும்.

ஜன கண மன

வந்தே மாதரம் பாடலுக்கு அடுத்தபடியாகப் பிரபலமானது 'ஜன கண மன' பாடல்.

இது 1911இல் வங்க மொழியில் இரவீந்திரநாத தாகூரால் எழுதப்பட்டுப் 'பாரத பாக்ய விதாதா' என்ற தலைப்பில் தத்துவ போதினி இதழில் ஐந்து பாடல்கள் கொண்டதாக வெளிவந்தது.

இதில் முதலில் வரும் ஜன கண மன என்று தொடங்கும் பாடல் 1911 திசம்பர் 27-இல் முதன்முதலாகக் கல்கத்தாவில் நடந்த 26ஆம் இந்தியத் தேசியக் காங்கிரசு மாநாட்டில் இரண்டாம் நாள் இறுதிப் பாடலாகப் பாடப்பட்டது. (முதல் நாள் தொடக்கப் பாடலாக வந்தேமாதரம் பாடப்பட்டது நினைவு கூரத்தக்கது).

தேசிய வாழ்த்து

பாரத பாக்ய விதாதா என்று தொடங்கும் ஐந்து பாடல்களில் முதலாவதாக அமைந்த ஜன கண மன என்னும் பாடல் 1950 திசம்பர் 24-ஆம் நாள் தேசிய வாழ்த்துப் பாடலாக ஏற்றுக் கொள்ளப்பட்டது. தேசியப் பாடலுக்கு ஒப்பியதாக ஏற்றுக் கொள்ளப்பட்டது.

இது 52 விநாடிகளில் பாடி முடிக்கப்படும். இதையே சுருக்கி முதலடியையும் இறுதியடியையும் இணைத்து பாடி 20 விநாடி களிலும் முடிக்கலாம்.

மொழி மாற்றம்

சுப்பிரமணிய பாரதியார் இப்பாடலை மொழி மாற்றம் செய்தாரா என்று ஆராயவேண்டும்.

பிற மொழியினர் முயற்சிகளிலும் ஆராயப்பட வேண்டும்.

'இந்தியத் தாயே' என்று வளரும் 13 வரிகள் கொண்ட மொழி பெயர்ப்பு அரசாங்கச் சார்பு வெளியீடுகளில் காண்கிறோம். இதனைத் தந்தவர் யாரோ?

முதல் பொது நூலக இயக்குநர் வேதி முயற்சியில் உதிரிப் பூக்களாக 'எமதகம் தனில் நிறைந்தாடிடும் இந்திய மேன்மையும்

உயரும்' என்றும் 'நலம் வளர் வளம் தரும் பாரதத் தாயே' என்றும் சில முயற்சிகள் இதழ்களில் வெளிவந்துள்ளன.

ஐந்தாம் உலகத்தமிழ் மாநாட்டுப் பொருட்காட்சி நூலக அரங்கில் பாடப்பட்டது.

இதுபோன்ற பிறமுயற்சிகள்-தமிழிலும் பிறமொழிகளிலும் இருக்கிறதா என்று ஆராயப்பட வேண்டும்.

மறந்தது ஏனோ?

சுதந்திரப் பொன்விழாக் கொண்டாடிவிட்டோம், கோலாகலமாக, எனினும் ஐம்பது ஆண்டுகளுக்கு முன் வங்க மொழியில் அமைந்துவிட்ட தேசியப் பாடலையும் தேசிய வாழ்த்தையும் இந்திய மொழியினர் அவரவர் மொழியில் அறிந்து கொள்ளச் செய்ய மறந்து விட்டோம் ஏனோ?

முயல்வோமா?

இந்திய எல்லைக்குள் வாழ்கின்ற குடிமக்கள், தமக்கென உள்ள தனி மொழி, வரிவடிவம் அல்லது பண்பியம் பேணிக் காத்துக்கொள்ள இந்திய அரசமைப்பின் 29 ஆம் கூறு உரிமை அளித்துள்ளது.

எனவே மய்ய அரசாங்கமும் மாநில அரசாங்கங்களும் இணைந்து தேசியப் பாடலையும் தேசிய வாழ்த்தையும் இந்திய அரசமைப்புச் சட்டம் ஏற்றுக்கொண்டுள்ள 18 மொழிகளிலும் அசாமி, உருது, கன்னடம், காசுமீரி, குசராத்தி, கொங்கணி, சமற்கிருதம், இந்தி, தமிழ், தெலுங்கு, நேபாளி, பஞ்சாபி, மணிபுரி, மராத்தி, மலையாளம், வங்காளி முதலிய மொழிகளிலும்-ஏற்றுக்கொள்ளப்பட்ட இணையில் பொருள் குன்றாமல் இலக்கியச் செறிவோடு மொழிமாற்றம் செய்யவேண்டும்.

இதை மக்கள் முயற்சியாக முன்னேற்ற, பரிசுப் பாட்டுப் போட்டி நடத்தப்பட வேண்டும். அதில் சிறந்த பாடல்கள் எழுதிய வித்தகர்கள் ரூபாய் பத்து இலட்சம் பரிசளிக்கப்பட்டுப் பாராட்டப்பட வேண்டும்.

இதன்மூலம் வேற்றுமையில் ஒற்றுமை காணலாம்; ஒருமைப்பாடு காணலாம்.

க. துரையரசன்
அரசு ஆடவர் கல்லூரி
கும்பகோணம்

ஆராய்ச்சிப் பேரறிஞர் மயிலை சீனி வேங்கடசாமி

மெய் வருத்தம் பாராமலும், கண் துஞ்சாமலும், தன்னலம் கருதாமலும் தமிழுக்குத் தொண்டற்றிய அறிஞர்கள் பலர். அவ்வறிஞர்களுள் திருமணம் கூடச் செய்து கொள்ளாமல் தம் வாழ்நாள் முழுமையும் தமிழுக்காகவே உழைத்தவர் மயிலை சீனி, வேங்கடசாமி ஆவார். இவர்தம் வாழ்வும் பணியும் குறித்து ஈண்டுக் காணலாம்.

''தமிழையே வணிகமாக்கித்
தன்வீடும் மக்கள் சுற்றம்
தமிழிலே பிழைப்பதற்கும்
தலைமுறை தலைமுறைக்குத்
தமிழ்முத லாக்கிக்கொண்ட
பல்கலைத் தலைவன் எல்லாம்
தமிழ்ச்சீனி வேங்கடத்தின்
கால்தூசும் பெறாதார் என்பேன்'' *(தமிழ் நிலம் 14-10-1952)*

என்று பாரதிதாசனால் பாராட்டப்படும் இவர், சென்னையில் உள்ள மயிலாப்பூரில் திரு. சீனிவாச நாயக்கருக்கும், திருமதி. தாயார் அம்மாளுக்கும் மூன்றாவது மகனாராக 16-12-1900-இல் பிறந்தார். இவரது தந்தையாரும் மூத்த சகோதரரும் சித்த மருத்துவத் துறையில் சிறந்து விளங்கினர். இவரது இளைய சகோதரர் சீனி. கோவிந்தராசனாரும், இவரும் தமிழ்ப்பணி செய்வதில் நாட்டம் கொண்டனர்.

வறுமையான குடும்பச் சூழலுக்கிடையே பள்ளிப் படிப்பை முடித்த இவர் நடுநிலைப் பள்ளி ஆசிரியராகப் பணியாற்றினார். அப்பணியில் இருந்துகொண்டே இவர் ஆற்றிய தமிழ்ப் பணிகள் அளவிடற்கரியன என்பதை ''ஒரு தனியார் பள்ளியில் தொடக்க

நிலை ஆசிரியராக இருந்து மறைந்த அறிஞர் மயிலை.சீனி. வேங்கடசாமி வரலாற்றுக்கும், தமிழியலுக்கும் அளித்த ஆய்வுப் பங்களிப்புகளுக்கு நிகரான ஒன்றை இதுவரை எந்தப் பல்கலைக் கழகமும் நிகழ்த்தியது இல்லை'' என்ற க.ப. அறவாணனின் கூற்று (தினமணி 14-12-98) மெய்ப்பிக்கிறது.

இவர் தமிழ், தெலுங்கு, மலையாளம், கன்னடம், துளு, ஆங்கிலம் ஆகிய மொழிகள் அறிந்தவர். பள்ளி ஆசிரியராகவும், இதழாசிரியராகவும், நூலாசிரியராகவும், ஆய்வாளராகவும், கல்வெட்டறிஞராகவும், வரலாற்றறிஞராகவும், ஓவியராகவும், கவிஞராகவும், இலக்கிய விமர்சகராகவும், தன்மான இயக்கத் தொண்டராகவும் உயர்ந்து நின்ற மாமனிதர். தமிழில் இலக்கியம், இலக்கணம், கல்வெட்டு, செப்பேடு, சமயம், கலை, ஆய்வுக் கலை, சொல்லாய்வு, மொழியாய்வு போன்ற பல துறை களிலும் ஆய்வுப் பரப்பை விரித்துக் கொண்ட இவ்வறிஞரின் பணி ஆய்வு மேற்கொள்ளும் இன்றைய இளைஞர்களுக்கு வழி காட்டியாக விளங்குகிறது.

இவர், செய்வன திருந்தச்செய்யும் பண்பினர். எளிய வாழ்வினை மேற்கொண்டவர். சீர்திருத்தக்காரர்; ஆராய்ச்சியாளர்; நல்லொழுக்கம் வாய்ந்தவர்; மனித நேயம் மிக்கவர்; கொடுமை களைக் கண்டு பொங்கி எழக் கூடியவர்; எப்போதும் தூய்மை யான, ஒழுங்கான சாதாரண உடையையே அணிவார். தாம் ஏழை என்பதை நன்கு உணர்ந்தவர். ஆகையால் பணக்காரர்களின் அழைப்பின்றி அவர்கள் இருக்கும் இடங்களுக்குச் செல்லவே மாட்டார்.

தம் தமையனார் சீனி. கோவிந்தராசன், திருமயிலை மகா வித்துவான் சண்முகம் பிள்ளை, சென்னைக் கிறித்துவக் கல்லூரித் தமிழ்ப் பேராசிரியர் ச.த. சற்குணம் ஆகியோரிடம் தமிழ் பயின்ற இவருக்கு வரலாற்றுப் பேரறிஞர் தி.வை. சதாசிவம் பண்டாரத் தார், அறிஞர் அ. சிதம்பரநாதன், அறிஞர் தெ.பொ.மீ., பேராசிரியர் க. வெள்ளைவாரணனார், அறிஞர் சாமி. வேலாயுதம், சுவாமி விபுலானந்தர், டாக்டர்.மா. இராசமாணிக்கனார் போன்ற அறிஞர் பெருமக்களுடன் நெருங்கிய தொடர்பு இருந்தது.

ஆராய்ச்சிப் பேரறிஞர், தமிழ்ப் பேரவைச் செம்மல் என்னும் பட்டங்கள் பெற்ற இவர் முப்பதுக்கும் மேற்பட்ட நூல்களை எழுதியுள்ளார். இவை தமிழின் பல துறைகளிலும் முன்னோடி முதன்மை நூலாக அமைந்துள்ளன. தமிழ் இலக்கிய வரலாற்றிலும், தமிழக வரலாற்றிலும் படர்ந்திருந்த இருளை

அகற்றப் பெரிதும் உதவிய இந்நூல்கள் இன்று கிடைப்பது அரிதாகி விட்டன.

நிகழ் நூற்றாண்டின் தமிழ் இலக்கிய வரலாறே முழுமை யாகக் கிடைக்கப்பெறவில்லை. இச்சூழலில் பத்தொன்பதாம் நூற்றாண்டின் தமிழிலக்கிய வரலாற்றை எழுதுவது என்பது அருமையிலும் அருமையாகும். இத்தகு அரும்பணி பத் தொன்பதாம் நூற்றாண்டில் தமிழ் இலக்கியம் என்ற நூலில் பளிச்சிடுகிறது. முறையான தமிழ் இலக்கிய வரலாற்றைப் பிறர் எழுதுவதற்கு முன்னோடியாக இந்நூல் அமைந்துள்ளது.

பெயரளவிலும், ஒரு சில பாடல் மற்றும் நூற்பா அளவிலும் காணப்படும் நூல்களைப் பற்றிய வரலாற்றுத் தொகுப்பாக இவர் எழுதிய 'மறைந்துபோன தமிழ் நூல்கள்' அமைந்துள்ளது. இந்நூல் இல்லையெனில் பல தமிழ் நூல்களின் பெயர்கள் கூட நமக்குத் தெரியாமல் போகும் அவல நிலை ஏற்பட்டிருக்கும்.

தமிழர் தம் பழஞ்சிறப்புக்களை எல்லாம் மறந்து போனதை எண்ணி வேதனை மிகுதியுடன் 'தமிழர் வளர்த்த அழகுக் கலைகள்' என்ற நூலை இயற்றினார். அழகுக் கலைகள் பற்றித் தமிழில் வெளிவந்த முழுமையான முதல் நூலான இது தமிழக அரசின் விருதினைப் பெற்றுள்ளது.

பல்வேறு சமயங்கள் தமிழ் மொழி வளர்ச்சிக்கு ஆற்றிய பணிகளைக் காய்தல் உவத்தல் இன்றி ஆய்ந்து இவர் வெளி யிட்டுள்ள நூல்கள், இவரது சமயப் பொறை உணர்வையும், ஆய்வு நேர்மையையும் எடுத்துக்காட்ட வல்லன. 'பௌத்தமும் தமிழும்' என்ற நூல் பௌத்தர்களின் சமயம், தமிழ்த் தொண்டு ஆகியன பற்றி எடுத்துரைக்கும் முறையான முதல் நூல் ஆகும்.

சமண சமயத்துக்கு எதிரான கருத்துக்கள் பிற சமயத்தாரால் தமிழகத்தில் உருவாக்கப்பட்டன. அதனால் தமிழர்கள் அச் சமயத்தின் மீது வெறுப்புணர்வு கொள்ளத் தலைப்பட்டனர். ஆனால் இச்சமயம் தமிழுக்கு ஆற்றிய பணியானது வேறு சமயங்கள் தமிழுக்கு ஆற்றிய பணியைக் காட்டிலும் மேம்பட்டது என்பதை உணர்ந்த இப்பெருமகனார் அச் செய்திகளை வெளிப் படுத்தி வரலாற்றை நிலைப்படுத்தும் நோக்கில் 'சமணமும் தமிழும்' என்ற நூலை எழுதினார். இந் நூலுக்குத் தமிழ் வளர்ச்சிக் கழகத்தின் முதற்பரிசு கிடைத்தது. சமயங்களின் தமிழ்ப்பணி குறித்த வரிசையில் இவர் 'கிறித்தவமும் தமிழும்', 'சமயங்கள் வளர்த்த தமிழ்' ஆகிய நூல்களையும் இயற்றியுள்ளார்.

இவர் எழுதியுள்ள களப்பிரர் ஆட்சியில் தமிழகம், கொங்கு நாட்டு வரலாறு, சங்க காலத் தமிழக வரலாற்றில் சில செய்திகள், சேரன் செங்குட்டுவன், துளு நாட்டு வரலாறு, நரசிம்மவர்மன், பழங்காலத் தமிழர் வாணிகம், பாண்டியர் வரலாற்றில் ஓர் அரிய புதிய செய்தி, மகேந்திரவர்மன், மூன்றாம் நந்திவர்மன், சாசனச் செய்யுள் மஞ்சரி ஆகிய நூல்கள் தமிழக வரலாற்றைத் தெளிவுபட அறிந்துகொள்ள உதவுகின்றன.

தமிழக மக்களின் கலை மற்றும் பண்பாடு பற்றிய அரிய செய்திகளைத் தமிழர் வளர்த்த அழகுக் கலைகள், நுண்கலைகள், மகாபலிபுரத்து ஜைன சிற்பம், இறைவன் ஆடிய எழுவகைத் தாண்டவம், உணவு நூல், பௌத்தக் கதைகள், புத்த ஜாதகக் கதைகள், இசைவாணர் கதைகள் போன்ற நூல்கள் மூலம் அறிய முடிகிறது.

இவர் எழுதிய அஞ்சிறைத் தும்பி என்ற நூல் சொல் ஆராய்ச்சிக் கட்டுரைகளின் தொகுப்பாகவும், சங்க காலத்துப் பிராமிக் கல்வெட்டெழுத்துக்கள், சாசனச் செய்யுள் மஞ்சரி ஆகியவை கல்வெட்டு ஆராய்ச்சி நூலாகவும் அமைந்துள்ளன.

தம் அரும்பெரும் முயற்சியாலும் நுண்மாண் நுழை புலத்தாலும் கண்டறிந்த ஆய்வு முடிவுகளின் கருத்துப் பெட்டகங்களாக இவர்தம் நூல்கள் மட்டுமின்றிக் கட்டுரைகளும் அமைந்துள்ளன. இவர் நண்பன், கல்வி, சௌபாக்கியம், திராவிடன், குடியரசு, செந்தமிழ்ச் செல்வி, தமிழ்ப்பொழில், கலைக்கதிர், திருக்கோயில் போன்ற இதழ்களில் நூற்றுக் கணக்கான கட்டுரைகள் எழுதியுள்ளார். இவரது கட்டுரைகளில் சில: ஆட்சியாளருக்கு எழுத்தாளர் வேண்டுகோள், இராவணன் ஆண்ட இலங்கை எது?, உறையூராழிந்த வரலாறு, கண்ணகியார் தெய்வமான இடம் எது?, கழுதை ஏர் உழவர், கன்னடமும் தமிழும், கூவத்துப் பௌத்தச் சிந்தனைகள், கோழிப் பாம்பு, நாய் வேடங்கொண்ட நம்பன், நான் கண்ட பெருந்தமிழன், யாரால் மழை பெய்கிறது?, வரகுண பாண்டியனின் கல்வெட்டு, விபுலானந்த அடிகள், பஞ்ச சீலம், நிகண்டனார் கலைக்கோட்டுத் தண்டனார் போல்வன.

மயிலை சீனி, வேங்கடசாமி அவர்களின் நூல்கள் மற்றும் கட்டுரைகளை நோக்குமிடத்து இவர் ஆய்வுப் பணியை முழு நேரப் பணியாக மேற்கொண்டதை அறிய முடிகிறது. தமிழில் மறைந்து போனதும் மறந்து போனதுமான மிகுந்த செய்திகளை

வெளிக் கொண்டுவரும் வகையில் தலைசிறந்த தமிழ்ப்பணி ஆற்றியுள்ளார். இவரது பணிகளை எல்லாம் தொகுத்து நோக்கும் பொழுது மயிலை சீனி. வேங்கடசாமி கடும் உழைப்பாளர்; சிறந்த வரலாற்றாசிரியர்; நடுநிலை பிறழாத இலக்கிய ஆராய்ச்சியாளர்; தொல்பொருள் ஆய்வாளர்; மொழியியல் அறிஞர்; சமயப் பேரறிஞர்; கலையியல் வல்லுநர்; இலக்கியத் திறனாய்வாளர்; இவ்வனைத்திற்கும் மேலாகத் தலைசிறந்த பண்பாளர் என்ற டாக்டர் ம. சத்தியமூர்த்தி அவர்களின் மதிப்பீடு (தமிழுலகம் நினைக்க மறந்த தமிழறிஞர்கள்) மிகவும் பொருத்தமானதே ஆகும்.

இத்தகு சீரிய, பெரும் அறிஞர் தாம் வாழ்ந்த காலத்தில் மகிழ்ச்சியாக வாழவில்லை. இவர்தம் ஆய்வுப் பணிக்கு வேண்டிய ஒத்துழைப்பையும், அங்கீகாரத்தையும், நல் ஆதரவையும், தமிழ்ச் சமுதாயம் வழங்கவில்லை. ஆதலால் இவர் மனம் நொந்து போன சமயங்களில் எல்லாம் இவர்தம் ஆய்வுப் பணியில் முடக்கம் ஏற்பட்டுள்ளது. இவர் ஆய்ந்து வெளிப்படுத்திய கருத்துக்களைத் தம் சொந்தக் கருத்தைப் போல வெளிப்படுத்திய 'நல்ல' தமிழர்களும் இருந்திருக்கின்றார்கள். இவர்களையும் கூட இவ் வறிஞர் நனி நாகரிகத்துடனேயே சுட்டிக்காட்டி வேதனைப்பட்ட நிகழ்வுகளும் உண்டு. எனவே இவர் தம் வாழ்நாளின் இறுதிக் காலத்தில் மிகுந்த மன உளைச்சலுடனும், நோய்வாய்ப்பட்டும் இறந்து போனதை இவரது வாழ்க்கை வரலாற்றை உற்று நோக்கும்பொழுது புலனாகிறது.

தமிழ் ஆய்வு உலகமானது இப்பெரும் ஆய்வறிஞரை முறையாகப் பயன்படுத்திக் கொள்ளாமல் புறந்தள்ளியதன் மூலம் இழந்தவை ஏராளம். இனியும் அவ்வாறு நடைபெறாமல், வாழும் ஆய்வறிஞர்களைப் பயன்படுத்திக் கொள்ளத் தமிழ் ஆய்வு மன்றங்கள் தவறிவிடக்கூடாது என்பதே இவ்வறிஞரின் வாழ்க்கை வரலாறு உணர்த்தும் படிப்பினையாகும்.

பே. நடராசன்
மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம்
திருநெல்வேலி – 12

மேலாண்மை பொன்னுச்சாமியின் காகிதம் சிறுகதைத் தொகுப்பில் தலித்தியச் சிந்தனைகள்

முன்னுரை

சமூகத்தின் அடித்தள மக்களின் வாழ்க்கைப் பிரச்சினைகளையும், போராட்டங்களையும் யதார்த்தப் பார்வையோடு தம் முடைய படைப்புக்களில் தருகின்ற முற்போக்கு எழுத்தாளர்களில் குறிப்பிடத்தக்க இடத்தினைப் பெறுபவர் மேலாண்மை பொன்னுச்சாமி. நூற்றுக்கும் மேற்பட்ட சிறுகதைகளை எழுதித் தமிழ் வாசகர்களிடையே பெரும் புகழ் பெற்றவர் இவர். இவருடைய கதைகள் யாவும் கரிசல் வட்டார மக்களின் வாழ்வியலைப் படம்பிடித்துக் காட்டுவன. குறிப்பாகக் கிராமங்களில் வாழும் ஒடுக்கப்பட்ட மக்களின் உள்ளத்து உணர்வுகளைப் புலப்படுத்திக் காட்டுவன. சமுதாய உணர்வுடனும், மனித நேயத்துடனும் எழுதும் இவர் இன்று ஒரு பெரும் இலக்கிய இயக்கமாக வளர்ந்து வரும் தலித்தியச் சிந்தனைகளை வெளிப்படுத்தும் பாங்கில் பல கதைகளைப் படைத்துள்ளார். ''காகிதம்'' என்னும் சிறுகதைத் தொகுப்பில் இடம் பெற்றுள்ள கதைகளில் காணும் ஆசிரியரின் தலித்தியச் சிந்தனைகளை எடுத்துக் காட்டுவதாக இக்கட்டுரை அமைகிறது.

இந்தியாவின் சுதந்திரப் பொன்விழாவைப் பூரிப்போடு கொண்டாடி மகிழ்ந்துள்ள இக்காலத்திலும் இந்தியாவில் சில கிராமங்களில் வாழும் மக்களிடையே தீண்டாமை இன்னும் உயிர் வாழ்கிறது என்பது ஒரு நிதர்சனமான உண்மையாகும்.

இன்று இந்தியாவைச் சூழ்ந்துள்ள பல சமூகப் பிணிகளில் முதன்மையானது தீண்டாமைக் கொடுமை. அனைவருக்கும் சம

உரிமை. சமவாய்ப்பு, சம மதிப்பு ஆகியவற்றை உதவும் வகையில் இன்றைய அரசியல் சாசனம் உறுதி செய்திருந்தாலும், உயர்ந்த வர், தாழ்ந்தவர் என்ற வேறுபாட்டு உணர்வுகளால் மக்களை இனம் பிரித்துப் பார்க்கின்ற போக்கு மக்களிடையே இன்னும் மாறவில்லை.

தீண்டாமைக் கொடுமைக்கு ஆட்பட்டு அச்சமும், அவலமும் கொண்டு உரிமை வாழ்க்கை வாழ முடியாது தவிக்கும் ஒடுக்கப்பட்ட மக்களின் உரிமைக்குரலைத் தம்முடைய சிறு கதைகளில் மேலாண்மை பொன்னுச்சாமி எதிரொலிக்கச் செய்துள்ளார்.

தீண்டாமை என்ற கொடிய நோய் சில கிராமங்களில் இன்றும் இருப்பதைக் ''காகிதம்'' என்னும் சிறுகதையில் ஆசிரியர் சுட்டிக் காட்டுகின்றார். தாழ்ந்த வகுப்பைச் சேர்ந்த செபஸ்டியான் என்பவரின் மருமகன் பாக்கியம். இவர் திருச்சியில் தீயணைப்புத் துறையில் அதிகாரியாகப் பணியாற்றி வருகிறார். ஒரு நாள் பாக்கியம் தன் ஊருக்கு வருகிறார். தன் மாமா செபஸ்டியானுடன் டீக்குடிக்க அந்த ஊரிலுள்ள டீக்கடைக்குச் செல்கின்றார். அங்கே உயர் வகுப்பினருக்கு எவர்சில்வர் டம்ளரிலும், தாழ்த்தப்பட்ட வகுப்பினருக்குப் பூப்போட்ட கண்ணாடி டம்ளரிலும் டீ கொடுக்கப்படுகின்றது. பாக்கியத்துக்கும், அவரது மாமாவுக்கும் பூப்போட்ட கண்ணாடி டம்ளரில் டீ கொடுக்கப்பட்ட போது பாக்கியம் அதை வாங்க மறுத்து விடுகிறார். அதனால் அவருக்கும், கடைக்காரருக்கும் நீண்டநேரம் வாக்குவாதம் நிகழ்கிறது.

''தீண்டாமைக் கோர்ட்டுக்கு நா இப்பப் போனா என்னாகும் தெரியுமா? ஆறு மாசம் நீங்க ''உள்ளே'' போகணும்... மனுச உரிமையைப் பறிக்கிற அதிகாரம் எவரிடமும் கிடையாது தெரியுமா?'' என்ற பாக்கியத்தின் ஆவேசப் பேச்சில் மேலாண்மை பொன்னுச்சாமியின் உணர்வு வெளிப்பாட்டினைக் காணலாம். டீக் கடையிலிருந்த உயர்சாதி வகுப்பினரான ராமலிங்கம் பாக்கியத்தின் போக்கைக் கண்டு ''இப்ப இருக்கிற எளிய சாதிக்காரப் பயகளுக்குத் தலையிலே கொம்பு முளைச்சிருக்கு'' என்று குத்தலாகப் பேசுகிறார். சுற்றி நின்றவர்களும் பாக்கியத்தின் மீது கோபமாகப் பாய்ந்து வார்த்தைகளால் கடித்துக் குதறி விடுகிறார்கள். ஆனால் பாக்கியம் எதற்கும் அசரவில்லை. டீக்கடை மோதலுக்குப் பிறகு பாக்கியமும், செபஸ்டியானும் டீ குடிக்காமலேயே திரும்பி விடுகின்றனர். பாக்கியம் ஒரு சில நாட்களுக்குப் பிறகு திருச்சி திரும்பி விடுகிறான். பாக்கியம் சென்ற உடனே கிராமத்தில்

கலவரம் ஏற்பட்டுத் தாழ்த்தப்பட்ட வகுப்பினரின் வீடுகள் உயர்சாதி வகுப்பினரால் தீக்கிரையாக்கப்படுகின்றன. தாழ்ந்த இனத்தைச் சேர்ந்த பெண்கள் கற்பழிக்கப்படுகிறார்கள். பாதிக்கப் பட்டவர்கள் மீதே பொய் வழக்குகள் போடப்படுகின்றன. மனிதர்களை மனிதர்களாக மதிக்கின்ற நல்லவர்கள் ஒரு சிலர் ஊரில் இருப்பதால் தான் சுமுகமான பேச்சு வார்த்தை நடக்கின்றது. இங்கு என்ன நடக்குமோ தெரியலை'' என செபஸ்டியான் திருச்சியிலிருக்கும் தனது மருமகன் பாக்கியத்திற்குக் கடிதம் எழுதுகிறார். ஸ்ரீவில்லி புத்தூர் அருகேயுள்ள சிற்றூர் ஒன்று தான் தீண்டாமை கொடுமை நிலவும் இடம் எனக் குறிப்பாகக் காட்டுகிறார் ஆசிரியர்.

''நெல்லை மாவட்டத்தைச் சேர்ந்த ஒரு கிராமத்தில் உயர் சாதிக்காரர்களுக்குக் கண்ணாடி டம்ளரிலும், தாழ்ந்த சாதிக்காரர் களுக்குத் தேங்காய் சிரட்டையிலும், வெளியூர்க்காரர்களுக்கு அலுமினிய 'டம்ளரிலும் டீக் கொடுக்கப்படுவதைத் தமது நெல்லை மாவட்டச் சுற்றுப் பயணம் மூலம் அறிந்ததாக வாசகர் ஒருவர் குறிப்பிட்டுள்ளார்''. (கலை ரவிசங்கர், அம்மாபாளையம், தினமலர், வாரமலர் 15.11.98).

''சமுதாயப் பொறுப்பு மிக்க எந்த மனிதனும் தீண்டாமை எனும் பெருநோயால் தீண்டப்பட்டிருக்கும் நமது மண்ணைச் சுத்திகரிக்கப் போராடுவான். அந்தப் போராட்டத்தில் எனது பேனாவும் பங்கேற் கிறது என்பது பெருமை தான் என மேலாண்மை பொன்னுச்சாமி தம்முடைய குறிக்கோளை வெளிப்படுத்தியுள்ளார்''.

''அதிகாரி'' என்ற சிறுகதையில் வரும் சில்லாண்டி, கோவிந்தன் சிறுவயது முதலே நண்பர்கள். சாதி குறுக்கீடு காரணமாக ஊர்ப் பெரியவரால் ஊர்க் கோவிலுக்குள் நுழையச் சில்லாண்டிக்கு மறுப்புத் தெரிவிக்கப்படுகிறது. மனம் வெதும்பிய சில்லாண்டி இடையில் தடைப்பட்ட கல்வியைத் தொடர்ந்து படித்துப் பட்டங்கள் பெற்று அரசு அறநிலையத்துறை அதிகாரி யாகத் தன் கிராமத்திற்கே வருகிறார். காரில் வந்து இறங்கிய அவரை ஊர்ப் பிரமுகர்கள் ஒன்று கூடி மேளதாளத்துடன் பவ்வியமாக வணங்கி வரவேற்கின்றனர். அவருக்கு மாலையணிவித்து மரியாதை செய்கின்றனர். அதிகாரியைச் சுற்றிலும் வாங்க வாங்க என்ற மரியாதையான உபசரிப்புக்கள் தனது காலை கோவில் வாசல்படியில் வைக்கிற போது பழைய அக்கினி ஜ்வாலைகள் சில்லாண்டியின் மனதில் குப்பென்று எழுகின்றன.

முடிவுரை

இன்றைய கிராமங்களில் நிலவும் சாதி வேற்றுமைகளை அனைவரும் கல்வி அறிவு பெறுவதன் மூலமாக மாற்ற முடியும் என்று மேலாண்மை பொன்னுச்சாமி கருதுகிறார். தீண்டாமைக் கொடுமைகளைச் சட்டங்கள் மூலம் முழுவதுமாகத் தடுத்து நிறுத்தி விட முடியாது. மக்களின் மனமாற்றத்தின் மூலமாகவே இதனைச் சாதிக்க முடியும் என்ற கருத்தை ஆசிரியர் மேலாண்மை பொன்னுச்சாமி இக்கதைகளின் மூலம் உணர வைக்கிறார்.

மா. நடராசன்
சி.பி.எம். கல்லூரி
கோயம்புத்தூர் – 641 042

பாரதீதாசன் கதர் இராட்டினப்பாட்டு

முன்னுரை

விடுதலைப் போராட்டத்தில் பாரதிதாசன் அதிகம் பங்கு பெறவில்லை: அவர் தமிழ், தமிழ்த் தேசியம், பகுத்தறிவு, பொதுவுடைமை பற்றிய கவிதைகளையே இயற்றியுள்ளார் என்று பரவலாகப் பேசப்படுகிறது. ஆனால் பாரதியார் தொடர்பு ஏற்பட்ட பிறகும் பெரியாரின் நட்பு கிடைத்ததற்கு முன்பும் அவர் தீவிரமாக இந்தியத் தேசிய உணர்விலும், விடுதலைப் போராட்ட இயக்கத்திலும் கலந்து செயல்பட்டிருக்கிறார் என்பதற்குக் 'கதர் இராட்டினப் பாட்டும்', அவர் நடவடிக்கைகளும் சான்று பகிர்கின்றன. கதர் இராட்டினப் பாட்டு தமிழாசிரியராய் இருந்த காலத்தில் எழுதப்பட்டு 1930-ல் அச்சிடப்பட்டுள்ளது. இக் கட்டுரையில் 'கதர் இராட்டினப் பாட்டு' பற்றிய ஆய்வு செய்யப் படுகிறது. இந்த ஆய்வு கருத்தியல் நோக்கிலும், அமைப்பியல் நோக்கிலும் அமைக்கப்பட்டு உள்ளது. இதன் மூலம் பாரதிதாசன் மனநிலையும், கருத்துக்களை வெளிப்படுத்தும் உத்தியும், கருத்துக் களின் அழுத்தமும் அமையும் திறனும் புலப்படும். இந்தக்கட்டுரை வெறும் அறிமுக அளவில்தான் அமைக்கப்படுகிறது.

முன்பக்க அட்டை அமைப்பு

1930-களில் கவிதைப் புத்தகம் படத்தோடு பதிப்பிக்கப் படுவது வழக்கம். பின்அட்டையில் பாரதிதாசன் அதுவரை எழுதி வெளியிட்டவை பற்றிய விபரம் உள்ளது. முன் அட்டையில் முதலில் 'வந்தே மாதரம்' என்று அச்சிட்டு, அடுத்து

''ஸ்ரீசி. சுப்பிரமணிய பாரதி

கவிதாமண்டலம்

கதர் இராட்டினப் பாட்டு

ஆசிரியர்
பாரதிதாஸன்

வெளியிட்டவர்
காசி ஈ. லக்ஷ்மண ப்ரசாத்
ஸ்ரீவேல் நிலையம்
புதுச்சேரி

விலை அணா 1 ¼) ரிஜிஸ்டர் செய்யப்பட்டது)

1930

என்று குறிப்பிடப்பட்டுள்ளது. பாரதி மேலும், கவிதா மண்டலத்தின் மேலும் அவர் கொண்ட ஈடுபாடும், பற்றும், பாரதியை மதித்துப் போற்றுதலும் வெளிப்படும் வண்ணம் அடிக் கோடிடப்பட்டுள்ளது. அச்சிட்டவர் பெயர் வெளியிடப் பட்டுள்ளது. நாட்டு விடுதலைப் போராட்டத்திலும், சுதேசி இயக்கத்திலும், கதர்ப் போராட்டத்திலும் பாரதிதாசனோடு அச்சிட்டவரும் அச்சமின்றிப் பணியாற்றியுள்ளமை புரியப் படுகிறது. அட்டைக்கு அடுத்த முதல் பக்கத்தில் 'ஓம்' என்றும் வந்தே மாதரம் என்றும் சிறிய எழுத்தில் அச்சிடப்பெற்று அதற்குக் கீழே இராட்டினப் படம் போடப்பட்டுள்ளது. இந்த நாட்டின் விடுதலைக்கு இறைவன் அருளும், வந்தே மாதரம் என்ற தாரக மந்திரமும், இவற்றை இயக்கப்படுத்துவது இராட்டினம் தான் என்பதையும் பாரதிதாசன் இங்கு வெளிப்படுத்துகிறார். இறைவனை நம்பியது போலவே இராட்டையை நம்பினார் எனும் போது இராட்டையைத் தெய்வம் அளவுக்கு நெஞ்சில் உயர்த்தி வைத்துள்ளார். இப்படி நம்பிக்கை உடையதுதான், தான் சார்ந்துள்ள இலக்கியம் சார் மண்டலம் என்பதை அடிக் கோடிட்டுக் காட்டு கிறார். இராட்டினத்திற்குள் கீழே 'ஸ்ரீ.சி. சுப்பிரமணிய பாரதி கவிதை மண்டலம்' என்ற அடிக்கோடிட்டப்பட்டுள்ளது. ஆகவே பாரதிதாசன் நம்பிக்கை: தெய்வம் = தாரகமந்திரம் + இராட்டினம் + கவிதாமண்டலம்.

இதற்கு அடுத்த பக்கத்தில் காந்தியடிகள் படம் உள்ளது. கீழே இராட்டினம் உள்ளது. இரண்டுக்கும் இடையில் பெரிய எழுத்தில் கவிதை நூலின் தலைப்பு 'கதர் இராட்டினப்பாட்டு' என்று அச்சிடப்பட்டுள்ளது. படைப்பாளியின் பெயர் அட்டையின் கீழ் வலது மூலையில் உள்ளது. இந்த அமைப்பின் மூலம், பாரதிதாசனின் மனநிலையில் 'படைப்பாளி' என்ற வெளிப்படு (EXPOSE) இயல்பைக் காட்டிலும் கொள்கை, இயக்கம், தலைவர் என்ற நோக்கமும் அழுத்தமுமே மேலோங்கி நிற்கிறது என்பது புலனாகும்.

முகவுரை

முகவுரை பாரதிதாசனால் எழுதப்படவில்லை: வெளியீட்டாளர் 'காசி ஈ. லக்ஷ்மண ப்ரசாத் என்பரால் எழுதப்பட்டுள்ளது. அதில் எப்போது படைப்பாளி இதைப் படைத்துக் கொடுத்தார்? ஏன் படைத்தளித்தார்? இது மட்டுமா அல்லது இதுபோல எவ்வளவு படைத்தளித்தார்? அவற்றின் பாடுபொருள் (Subject Matter) என்ன? அவையெல்லாம் அச்சேறிவிட்டனவா? என்பது போன்ற சிந்தனை கட்குப் பதிலாக அமைந்துள்ளன.

இந்த முகவுரையில் படைப்பாளிக்கு நன்றி சொல்வதோடு வாசகர்களுக்கும் ஒரு வேண்டுகோள் வைக்கிறார். அந்த முகவுரையின் ஒரு பகுதி:

''நம் பாரத நாட்டில் ஒத்துழையாமை சுடர்விட்டு எரியும் போது, நான் ஸ்ரீபாரதிதாஸனவர்களைக் கேட்டுக் கொண்டபடி அவர்கள் எழுதித் தந்த நூற்கள்: இருபது சிறுசிறு நூற்கள்: ஒத்துழையாமையின் ஒவ்வொரு தத்துவத்தையும் பற்றியவை.

அவைகளில் அப்போதே அச்சிடப் பெற்றவை மூலநூல் எழுதி முடிந்தும் முகவுரை - மேலட்டை - முடிவுறாதவை சில: சில அச்சுக்கூடத்தையே எட்டிப் பார்க்கவில்லை.

முகவுரைக்கு அடுத்த பக்கத்தில் யானைமீது அமர்ந்து பாரதியார் போலத் தலைப்பாகை கட்டிய ஒருவன் முரசறைவது போலப் படம் போடப்பட்டுள்ளது. அது கம்பீரமும், வீரமும் நிறைந்த தோற்றத்தைப் பதிய வைத்து விடுகிறது. அந்த யானைக்கு அருகில் கதர்க்குள்ளாய் அணிந்த ஒருவன் இரு கைகளைத் தூக்கி முழக்கம் இடுவது போல - ஒரு காங்கிரஸ்காரன் போல - தோற்றமுடன் படம் அமைக்கப்பட்டுள்ளது. இந்தப் படத்தின் மூலம் கதர் இராட்டினப் பாடல்களைப் பாடி முரசு அறைந்து முழங்குவது தேவை என்பது உணர்த்தப்படுகிறது. அதைக் கேட்போர் கதர் இயக்கத்திலும், ஒத்துழையாமை இயக்கத்திலும் முழுமையாக உணர்ச்சிப் பூர்வமாக ஈடுபட்டு விடுவார். இந்த படிமத்தை (Image) ஏற்படுத்தும் எண்ணம் பாரதிதாசனுக்கும், பதிப்பாளருக்கும் இருந்தன என்று இந்தப் படத்தினைப் பார்த்துப் புரிந்து கொள்வதன் மூலம் அறியலாம்.

முதல் வெண்பா

அடுத்த பக்கத்தில் ஒரு வெண்பா உள்ளது. தலைப்பு: பாரதிதேவி, அந்த வெண்பாவில் பாரத நாட்டைத் தாய் உடலாகக்

காண்கிறார் பாரதிதாசன். அந்தத் தாயின் மேனிக்கு மகிழ்ச்சி தருவது தன் வீரர்களின் உள்ளம் தான் என்று குறிப்பிடுகிறார். அந்த வெண்பா வருமாறு:

''விண்கொள் இமயமா வெற்பே திருமுடியாய்ப்
பண்கொள் குமரிபணி தாளாய் - மன்கொள்
வளமேதன் மேனியாய் வாய்ந்த 'தாய்' வீரர்
உளமேன் மேனிக் குவப்பு''

இமயமலை தான் பாரதத் தாயின் திருமுடி; குமரிதான் திருவடி: வளமான மஞ் பகுதிதான், மேனி; அந்த மேனிக்கு உவகையும் மகிழ்ச்சியும் தருவது வீரர்களின் வெற்றி: அதனால் அவர்கள் கொள்ளும் மகிழ்ச்சி.

இந்த வெண்பாவுக்கு அடுத்துப் பாடல்கள் உள்ள பக்கம் இருபது ஆகும்; ஏழு பாடல்கள் உள்ளன; அவற்றுள் ஒன்று வெண்பா - வெண்பாவைத் தொடங்குவதற்கு முன்பாகவும் மங்களக் குறியாக 'உ' என்பதனை இட்டுள்ளார். அதற்கு அடுத்து வந்தே மாதரம் என்று தொடங்குகிறார். அந்த வெண்பாவுக்கு மேல் ஜன்ம பூமியின் சிறப்பு என்று பெயரிட்டுள்ளார். அந்த வெண்பாவில் இந்திய நாட்டின் சிறப்பைப் பாடுபொருளாக்கி யுள்ளார். பாரதிதாசன் தன் நாடு என்று நினைத்தாலே வெற்றி முழக்கமிடுகின்ற தன்மையும் போர் செய்கின்ற வீரர்களின் கூட்டமும் தான், அவர் நினைவில் மேலோங்கி நிற்கின்றது. நாட்டை இவரால் வெறும் வரைபடமாகவோ வெறும் மண்ணாகவோ எண்ண முடியாது. தன்னையும் தன் உடலுக்குப் பலத்தையும் நல்கிப் பாதுகாத்து வளர்கின்ற தாயாகத் தான் உணர முடிகின்றது. அதற்கு மேல் சென்று நாடு தான் உயிரென்ற நிலையில் சிந்திக்கிறார். சங்கத்தமிழ் இலக்கியமாகிய புற நானூற்றில் இவர் மனம் தோய்ந்து தோய்ந்து தேர் இல்லாத வீதியையும், வெற்றி முழங்காத வீரர்களும் இல்லாத சூழலை இவரால் நினைத்து பார்க்க முடியாது.

முடிவுரை

''கதர் இராட்டினப் பாட்டு''-மூலம் கீழ்க்கண்ட முடிவுகள் கிடைக்கின்றன.

1. மகாத்மாவின் கொள்கையும் வேண்டுகோளும் பாரதி தாசனைப் பெரிதும் ஆட்கொண்டதால் கதர் இராட்டினப் பாட்டி னைப் பாடினார். அதனால் வந்தே மாதரம் என்ற முழக்கத்தைத் தொடக்கத்திலேயே கொள்கை முழக்கமாக அச்சிட்டுள்ளார்.

2. ஒத்துழையாமை இயக்கம் மேலோங்கிய போது காசி. ஈ. லக்ஷ்மணப்ரசாத் வேண்டுகோளால் எழுதிக் கொடுக்கப் பட்டுள்ளது.

3. பாடல் கருத்தை வெளிப்படுத்தும் வண்ணம் ஓவியம் வரையப்பட்டுள்ளது. பாடலை அதிக வீச்சாகப் புரிந்து கொள்ள உதவுகிறது.

4. பறையறைந்து நாட்டு மக்களிடம் 'கதர் ஆடை நெய்து அணிக' என்று காந்தியின் வேண்டுகோளைப் பதியச் செய்வதாகப் பாடல்கள் அமைக்கப்பட்டுள்ளன.

5. காந்தி கதர் பற்றிச் சொன்ன விளக்கங்களைப் பாடுபொருள் ஆக்கி உள்ளார். சுவை, மெட்டு கொடுத்துப் பாட வேண்டிய முறையையும் அமைத்துக் கொடுக்கிறார்.

6. சுதந்திரத்தைப் பெண்ணாகக் கற்பனை செய்து காதல் உணர்வைத் தோற்றுவிக்கிறார்.

7. இராட்டினத்தைக் காதலியாகவும் தன்னைக் காதலனாகவும் பாவித்துப் பாடி அனைவர் உள்ளத்திலும் இவ்வுணர்வை ஏற்படுத்த முனைகிறார்.

8. பாடலில் தன் வேண்டுகோளை முதலில் அமைத்து, அது ஏன்? அதை எப்படிச் செய்வது? காந்தி சொன்னதன் ஆதாரம் இது என்ற நிலையில் ஓர் அறிவியல் அணுகுமுறை-அமைப்புமுறை (Structure) யில் சிந்தித்து உள்ளார்.

9. பாரதி கையாண்ட புராணச் செய்தியைக் கையாண்ட பாரதிதாசன் தம் பாடலில் இந்தியாவின் அன்றைய நிலைமை யையும் காந்தியின் பணியையுமே மேலோங்கச்செய்கிறார்.

10. இந்தியாவைப் பற்றிய எண்ணம் வாழ்த்தும் போது வருகின்றதெனில் பாரதியார் பாடிய வளம் பற்றிய சிந்தனையே பாரதிதாசனிடம் மேலோங்கி நிற்கிறது. வளம் நிறைந்த நாட்டை அந்நியன் அடிமை கொள்ளலாமா என்ற வேதனைதான் பாரதி தாசன் மனதைச் சுமையாக அழுத்துகிறது.

11. ஒட்டு மொத்தமாகப் பார்க்கும்போது பாரதிதாசன் மகாத்மாவின் கதர் இயக்க வேண்டுகோளைப் பாரதியின் கவிதைக் குரலில் இருந்து பாடியுள்ளார் என்ற தீர்மானத்துக்கு வரமுடியும்.

சா. நடராஜவேலு
சென்னைப் பல்கலைக்கழகம்
சென்னை – 600 005

மங்கல வாழ்த்தின் மாட்சி

முன்னுரை

நூலாக்க முற்படுவோர் தங்களின் நூல் இனிதே தொடங்கி, எவ்வித இடையூறும் இன்றி முற்றுப்பெற இறைவாழ்த்தினை நூலின் தொடக்கத்தே அமைத்தல் மரபு. இறைவாழ்த்திற்கு மறு தலையாக இயற்கை வாழ்த்தினைப் பாடியதனால், இளங் கோவடிகள் அதனைச் சிலப்பதிகாரப் பதிகத்திற்கு முன் அமைக் காமல், சிலப்பதிகாரத்தின் முதற்காதையாகிய 'மங்கல வாழ்த்தின் முதல் பகுதியில் இடம்பெறச் செய்துள்ளார். அத்தகு பெருமை யுடைய மங்கலவாழ்த்தின் சிறப்புகளை விளக்கும் முகமாக இக்கட்டுரை அமைகிறது.

காப்பியப் பண்பும் மங்கல வாழ்த்தும்

காப்பியத்திற்கு இலக்கணம் கூறும் தண்டியலங்காரம்,

பெருங்காப் பியநிலை பேசுங் காலை
வாழ்த்து வணக்கம் வருபொருள் இவற்றினொன்று
ஏற்புடைத் தாகி முன்வர இயன்று...

என்ற நூற்பாவில் பெருங்காப்பிய இலக்கணக் கூறுகளுள் ஒன்றாக 'வாழ்த்து' இடம்பெற்றிருப்பது குறிப்பிடத்தக்கது. மங்கல வாழ்த்தில் 'வாழ்த்து' இரண்டு நிலைகளில் பேசப்படுகிறது.

1. நூன்மரபின்படி அமைத்துள்ள (இயற்கை) வாழ்த்து.
2. கோவலன் கண்ணகியின் திருமணவாழ்த்து.

இவ்விரு வாழ்த்துகளும் காப்பியப் பண்புகளுள் ஒன்றான 'வருபொருள் உரைத்தற்கு'த் துணை செய்கிறது எனலாம்.

சிலப்பதிகாரத்தில் பல நிலைகளில் புரட்சியை மேற்கொண்ட இளங்கோவடிகள், இறைவாழ்த்திற்குப் பதில் இயற்கை

வாழ்த்தினைப்பாடி, அதன் உட்பொருளாக வருபொருள் உரைத்தல் என்ற பண்பை இடம்பெறச் செய்ததனையும் ஒரு புரட்சி என்றே கூற வாய்ப்புண்டு. காப்பிய நாயகியாகிய கண்ணகியின் மனநிலையை அடியொற்றி.

அரசியல் பிழைத்தோர்க்கு அறங்கூற் றாவதூஉம்
உரைசால் பத்தினியை உயர்ந்தோர் ஏத்தலும்
ஊழ்வினை உருத்துவந் தூட்டும் என்பதூ உம்

என்ற முக்கூற்று மெய்ம்மை அமைந்துள்ளது.

வருபொருளின் நோக்கும் போக்கும்

உலக வழக்கில் நாட்களைக் குறிப்பிடும்போது ஞாயிறு, திங்கள்... என்று வரிசைபடுத்திக் கூறுகின்றனர். சூரியனை (ஞாயிறு) மையப்படுத்தித்தான் பிறகோள்கள் இயங்குகின்றன. அவ்வாறு இருக்க இளங்கோ அடிகள் திங்களை முதன்மைப் படுத்தித் ''திங்களைப் போற்றுதும் திங்களைப் போற்றுதும்'' என்று கூறியதில்தான் வருபொருள் உரைத்தல் என்ற பண்பு உள்ளடங்கியுள்ளது.

இல்லற மகளிருக்கு உரிய இயல்பான கடைமைகளினின்று வழுவாது, இல்லறத்தினை நடத்திவரும் கண்ணகி, தன் கணவன் போற்றா ஒழுக்கம் புரிந்தபோதும், அக்காலச் சமுதாய வாழ்வியல் நெறிமுறைகளுக்குத் தன்னை உட்படுத்திக்கொண்டு, கணவனை எதிர்த்துப் பேசாமலும் அதே சமயம் தன் இயல்பினில் குன்றா மலும் வாழ்வினில் இன்பங்களையும் துன்பங்களையும் ஏற்று இல்லறம் நடத்தும் இயல்பினைத் திங்களின் வளர்பிறைக்கும் தேய்பிறைக்கும் ஒப்புமைப்படுத்தியதுடன் நில்லாமல் திங்களாகவே உருவகப்படுத்திவிடுகின்றார்.

வளர்பிறை என்றாலும் தேய்பிறை என்றாலும் திங்களின் தன்மை நிலைப்பாடுடையது. அதனைப் போன்றே கண்ணகி கோவலனுடன் கூடியிருந்த போதும், கோவலன் மாதவியுடன் மகிழ்ந்திருந்தபோதும் திங்களைப் போன்று நிலைத்தத் தன்மை யுடையவளாகப் புகார்க் காண்டத்தில் வாழ்வதால் இளங்கோவின் உருவகம் ஏற்றம் பெறுகிறது. இந்தக் காரணத்தினால்தான் இளங்கோ அடிகள் முதலில் 'திங்களைப் போற்றுதும் திங்களைப் போற்றுதும்' எனப் பாடியிருத்தல் வேண்டும்.

கோவலனும் கண்ணகியும் காதல் மிகுதலால் மனம் மகிழ்ந்திருக்க நிலாமுற்றத்தை அடைகின்றனர், என்பதனால்,

அன்புணர்ச்சிக்கு உரிய ஏதுக்களுள் சிறந்ததாக நிலா (திங்கள்) இருப்பதால், கண்ணகியின் வாழ்வில் அன்புநிறைந்த பகுதியாகப் புகார்க்காண்டம் விளங்குவதால், இக்காண்டத்தில் கண்ணகியின் மனநிலைக்கு ஏற்பத் திங்களைப் போற்றிப் பாடினார் என்றால் அது மிகையாகாது.

இராமனுடன் காட்டிற்குச் செல்ல முற்பட்ட சீதை அயோத்தியின் மதில்வாயிலைக் கடக்குமுன்,

''யாண்டையது கானென விசைத்தது மிசைப்பாயா''
(கம்ப. சுந்தர.1)

என வினவும் வண்ணம் மென்மைத் தன்மை வாய்ந்தவள் என்று காட்டுவார் கம்பர். அதனைப் போலவே, முற்றாத மழைலைச் சொற்களுடன், கூறிய பற்கள் விளங்க 'மதுரை மூதூர் எதுவோ' என்று கோவலனை வினவினாள் கண்ணகி. அத்தகைய மென்மைத் தன்மை வாய்ந்தவள் தன்கேள்வன் கொலையுண்டான் என்ற செய்தியறிந்து,

பொங்கி எழுந்தாள் விழுந்தாள் பொழிகதிர்த்
திங்கள் முகிலோடுஞ் சேண்நிலங் கொண்டெனச்
செங்கண் சிவப்ப அழுதாள்... (சிலம்பு. துன்பமாலை 30-32)

என்று கூறுகிறபோது, அதுவரை, தன் நிலையினின்று திரியாத கண்ணகியினிடத்துப் பெருத்த வேறுபாடு தோன்றுகிறது. சீறி யெழுகின்றாள், குளிர்ச்சியான கதிர்களைப் பரப்பிய திங்களா னது, காரிய முகிலோடு பெரிய நிலத்தின்கண் வீழ்வதுபோல வீழ்ந்தாள் என்று கூறும்போதே கண்ணகியினிடத்து வேறுபாடு தோன்றியுள்ளதை அறியமுடிகிறது.

திங்களின் பால்கதிர் வற்றி, கதிரவனின் எரிகதிர் சுரந்ததைப் போன்று (பால் நிலவில் பகற்கொள்ளி பூத்ததைப் போன்று) கண்ணகியின் தன்மை மதுரைக்காண்டத்தில் இருப்பதனால், மங்களவாழ்த்தில் திங்களை அடுத்து ஞாயிற்றை இளங் கோவடிகள் போற்றியிருப்பாரோ என்ற வியப்பு மேலிடுகிறது.

தன்னைப் பிரிந்து, மாதவியுடன் மகிழ்ந்து, குன்றனைய பொருளைத் தொலைத்து, நெருமரமாய்த் தம் மனை புகுந்த கோவலனைக் கண்டு கலங்காத கண்ணகி, தன் கணவன் 'கள்வன்' என்ற கொலைக் குற்றம் சாற்றி கொலை செய்யப்பட்டான் என்பதை அறிந்து பலவாறாகப் பலருடன் சொல்லி, அழுது ஆற்றாத கண்ணகி, இறுதியில் காய்கதிர்ச்செல்வனே கள்வனோ என் கணவன் என்று கேட்க, கள்வன் அல்லன் என்ற மறுமொழி கேட்டவள்.

காய்சினந் தணிந்தன்றிக் கணவனைக் கைகூடேன்
தீவேந்தன் தனைக்கண்டித் திறங்கேட்பல் யானென்றாள்
(சிலம்பு. ஊர்சூழ். 70-71)

என்று கூறுவதில் இருந்து அவள், அவளின் கணவனைக் கூடுதல் எளிதாயினும் தன் வெகுளி தணிந்தாலன்றிக் கணவனைக் கூடேன் என்று சூள் உரைப்பதுடன் நில்லாமல், அச்சினம் தணிதற்குக் கொடிய பாண்டிய மன்னனைக் கண்டு, இக்கொலைக் குற்றத்திற் குரிய காரணத்தைக் கேட்பேன் என்ற தொடரின் மூலம் அவள் ஞாயிறைப் போன்று கொதிக்கும் நெஞ்சினள் என்பதை அறிய முடிகிறது.

பாண்டியனின் அவைக்குச் சென்று ''அறிவு கீழற்றுப் போகிய அறநினைவு அற்ற உள்ளத்தினை உடைய, அரசநீதியற்ற வறியோனது கோயிலின் வாயில் காப்போய்'' என்று வாயிற் காவலனை அழைக்கின்றபோதே கண்ணகியின் சீற்றம் காட்டாற்று வெள்ளம் பெருக்கெடுத்து ஓடுகிறது. அதனை எதிர் கொண்ட கோயில் காப்போன்மூலம் அரசனின் ஆணையைப் பெற்று, அரசனின் அவையில் தோன்றிய கண்ணகியைக் கண்ட பாண்டியன் நீர்ஒழுகும் கண்களுடன் எம்முன் வந்து நிற்கும் இளம்கொடி போன்றவளே யார் நீ என்று வினவியவனை நோக்கி, 'தேரா மன்னா' என்ற கடுஞ்சொல்லை எதிர்பாராவண்ணம் ஈட்டிபோல் பாய்ச்சுகிறாள்.

கள்வனைக் கொல்வது கொடுஞ்செயலன்று என்ற பாண்டியனிடம் தன் கணவன் கள்வன் அல்லன் என்று மெய்ப்பிக்க,

நற்றிறம் படராக் கொற்கை வேந்தே
என்காற் பொற்சிலம்பு மணியுடை அரியே (வழக்குரை. 66-67)

என வாதிட்டு மெய்ம்மையை நிலைநிறுத்தியும் காய்சினம் குறை யாது, பொய்ம்மையுடையாரைத் தீக்கிரையாக்கினாள் என்பதன் மூலம் கண்ணகியின் மனநிலை ஞாயிற்றிலும் கடுமையுடைய தாயினும், ஞாயிறை போன்றவள் என்று இளங்கோவடிகள் கூறியதில் வியப்பில்லை.

ஆற்றா துயருடன் மதுரையின்று வறிதே அகன்று தன் கற்பின் திறத்தால் கோவலனுடன் விண்ணகம் சென்றதைக் கண்ட, குன்றக் குறவர்கள் மலைவளம் காண வந்த சேரன் செங்குட்டுவ னிடம் தாங்கள் கண்ட அரிய காட்சியினை விரித்துரைக்கக் கேட்ட சேரவேந்தன், அப்பத்தினித் தெய்வத்தைப் பரவல் வேண்டி, கோவில் அமைத்து விழா எடுத்தோனை நீடுழி

வாழ்த்தியருளியது அத்தெய்வம். 'மன்னன் உயிர்த்தே மலர்தலை உலகு' என்ற புறக் கருத்திற்கு ஏற்ப அவ்வாழ்த்து அந்நாட்டு மக்களுக்கும் உரியது என்று கொள்ளலாம்.

தன் கடமை தவறிய பாண்டிய மன்னனை வெறுத்த கண்ணகி, தன் கடமையைத் தவறாது ஆற்றிய சேரன் செங்குட்டுவனை, வாழ்த்து மழையில் நனைந்து திளைக்கவும் செய்தனள். இந்நிகழ்ச்சி வஞ்சிக்காண்டத்தில் நிகழ்ந்துள்ளமையால், கண்ணகியின் சினந் தணிந்து, மனம் குளிர்ந்து மழையைப் போன்று காட்சியளிக் கின்றமையால் மங்கலவாழ்த்தில் மூன்றாவதாக 'மாமழையைப்' போற்றுகிறார் இளங்கோவடிகள்.

ஒரு பெண்ணானவள் இல்லற வாழ்க்கையில் இன்புற்றிருக் கின்ற போதும், துன்புற்றிருக்கின்ற போதும், தன் கணவன் நெறிபிறழ்ந்து சென்றபோதும், இல்லறக் கடமை ஆற்றும் திட்பம் பெற்றிருந்த போதும், அறவழியில் பொருளீட்ட முற்படும் ஆடவனுக்கு முன்னின்று உறுபொருள் கொடுத்து உதவி புரிந்தபோதும் மாறாத்தன்மையுடன் இருந்தவள். தன் கணவன், 'கள்வன்' என்ற குற்றச்சாட்டுடன் கொலைக்களப்பட்டான் என்ற செய்தியைக் கேட்டறிந்ததும், அடங்கா சினங்கொண்டு, ஆற்றா துயருற்று, அரற்றி, அழுது, வஞ்சகரை வீழ்த்தி, வானுலகம் சென்று, கடமை தவறாக் காவலனை வாழ்த்தும் பெருமைக்குரிய பெண்ணாய் உயர்ந்து நிற்கும் கண்ணகியைப் பெற்ற 'பூம்புகாரை' மாமழையினை அடுத்து வாழ்த்தியது மிகப்பொருத்தமாகும்.

மேற்கண்ட கருத்துகளை உள்ளடக்கியே இளங்கோ அடிகள் மங்கல வாழ்த்தில் இயற்கை வாழ்த்துகளை அமைந்துள்ளார் என்று கூறலாம்.

முடிவுரை

இளங்கோ அடிகளின் நுண்மாண் நுழைபுலத்திற்குச் சான்று பகரும் வண்ணம் 'மங்கலவாழ்த்து' புகார்க் காண்டத்தில் இடம் பெற்றுள்ளது. தமிழர்களின் மனத்தில் பொய்யும் வழுவும் தோன்றிய காலத்தில் எழுந்த காப்பியம் சிலப்பதிகாரம் என்பதற்குக் கட்டியம் கூறும் பாங்கில் கோவலன் கண்ணகியின் மணமுறைச் சடங்குகள் அமைந்துள்ளன. இயற்கை வாழ்த்து இளங்கோ அடிகளின் காப்பியப் பண்பை உள்ளடக்கிக் கூறும் ஊடகமாகவும், புரட்சிப் புனைவிற்கு இடமாகவும் அமைந் துள்ளதை அறிந்து கொள்வதற்கு உரிய களமாக 'மங்கலவாழ்த்து' திகழ்கிறது.

ஹ.மு. நத்தர்சா
புதுக்கல்லூரி
சென்னை – 600 001

தீராவிட இயக்க வரலாற்றில் பெரியகுளம் மேத்தாவின் பங்கும் பணியும்

பொதுவாழ்வில் பொன்விழா காணும் திராவிட இயக்கத் தலைவர்கள் கலைஞர், பேராசிரியர், நாவலர் போன்றோர் வரிசையில் இடம்பெறக் கூடிய தகுதியைப் பெற்றுத் திகழும் ஒரு திராவிட இயக்கத் தொண்டர், பெரியகுளம் கே.எம்.எம். மேத்தா அவர்கள்.

''மதுரை நாயகன் மாவீரன் கான்சாகிபு'' குறித்த என் கள ஆய்வின் ஒரு பகுதியாக, பெரியகுளம் வடகரை நவாப் ஜாமிஆ மஸ்ஜித் வளாகத்தில் 'கான்சாகிபின் கால்கள் புதைக்கப்பட்ட சமாதியைக் காணச் சென்ற விடத்தில், அந்த ஜாமிஆ மஸ்ஜித் நிர்வாகக் குழுவின் தலைவராக இருக்கும் பெரியகுளம் மேத்தா அவர்களை அவரது இல்லத்தில் சந்தித்துக் கலந்துரையாடும் வாய்ப்பு எனக்குக் கிடைத்தது. அப்போது அவர்வழிக் கிடைக்கப் பெற்ற தகவல்களே இக்கட்டுரைக்குத் தரவுகளாய் அமைகின்றன.

பெரியகுளம் கே.எம்.எம். மேத்தா 23.6.26-இல் பிறந்தவர். 'மேத்தா' என்ற பெயரின் பின்னணியில் ஒரு சுவையான தகவல் ஒட்டிக் கொண்டுள்ளது. ''மேத்தா'' என்னும் இவரது குடும்பப் பெயர் வாக்குச் சீட்டில் ''மேத்தர்'' எனப் பிழைபடப் பதிவாகியிருந்தது. தேர்தலில் உடனடியாகப் போட்டியிட வேண்டியிருந்ததால் - பெயர்ப்பதிவில் திருத்தம் செய்ய அவகாசம் இன்றி - மேத்தா என்னும் பெயரில் போட்டியிட்டார். அன்றிலிருந்து மேத்தா என்னும் பெயர் குடும்பப் பெயராக நிலைபெற்று விட்டது. புதுக்கவிதை வானில் சிறகடித்துப் பறக்கும் வானம் பாடிக் கவிஞர் மு. மேத்தா அவர்கள், இவரின் அண்ணன் மகன் என்பது ஈண்டுக் குறிப்பிடத்தக்கது.

1939-ஆம் ஆண்டு இந்தி எதிர்ப்புப் போராட்டம் தமிழகம் முழுவதும் பரவியிருந்த தருணம். இந்தி எதிர்ப்புப் பிரச்சாரத்திற் காகப் பெரியகுளம் வருகைதந்த பெரியார், சௌந்திரபாண்டிய நாடார் ஆகியோர் பங்கேற்ற பொதுக்கூட்டங்களில் இந்தி எதிர்ப்புப்பாடல்களை அச்சமின்றிப் பாடி அனைவரின் கவனத் தையும் தன்பக்கம் ஈர்த்த பதின்மூன்று வயது சிறுவனாகப் பொது வாழ்வில் அறிமுகமானவர், பெரியகுளம் மேத்தா.

பெரியகுளம், கம்பம், தேனி, போடி போன்ற பகுதிகளில் இந்தி எதிர்ப்புப் பாடல்களைப் பாடி மொழியுணர்வு மிக்கவர் களின் பாராட்டுக்களைப் பெற்ற மேத்தா, பகைவர்களின் தொல்லைகளையும் சந்திக்க நேர்ந்தது. தேனிப் பகுதியில் இவர் இந்தி எதிர்ப்புப் பாடல்களைப் பாடியபோது எதிரிகள் வீசிய சோடாபாட்டில் இவரது நெற்றியைத் தாக்கி அதனால் ஏற்பட்ட புண்ணின் தையல் தழும்பு இப்போதும் இருக்கிறது.

நீதிக்கட்சியிலிருந்து விடுபட்டுத் திராவிடக்கழகம் தோன்றிய போது 1944-இல் சேலத்தில் அண்ணா முன்னிலையில் தானும் திராவிடக் கழகத்தில் சேர்ந்தார், பெரியகுளம் மேத்தா.

1948-இல் பெரியார் மணியம்மையுடன் கொடைக்கானலுக்கு வருகை தந்தபோது அவரை வரவேற்றுப் பாதுகாத்துப் பத்திர மாகத் திருப்பியனுப்பினார். மேத்தா ஏற்பாடு செய்த நான்கு அரங்கக் கூட்டங்களில் பங்கேற்ற பெரியார் 'நான் கண்ட ரஷ்ய சுய மரியாதை' என்பது போன்ற தலைப்புகளில் முழக்கம் செய்தார். அப்போது ஒரு சுவையான நிகழ்ச்சி நடந்தது.

பெரியார் பேசிக் கொண்டிருந்த ஓர் அரங்கக் கூட்டத்திற்கு டி.வி.எஸ். சுந்தரம் ஐயங்கார் வருகை தந்தார். இவரது வருகையைக் கவனித்த பெரியார் தன் பேச்சின் போக்கைத் திசை மாற்றி இராமாயணம் குறித்துச் சில செய்திகளைச் சுவைபடச் சொல்லத் தொடங்கினார். பெரியாரின் பேச்சு முழுவதையும் கேட்டு மகிழ்ந்த டி.வி.எஸ். சுந்தரம் ஐயங்கார், ''உங்கள் பேச்சைப் பலமுறை கேட்டால் நானே உங்கள் கட்சியில் சேர்ந்து விடுவேன் போல் இருக்கிறதே.'' எனச் சொல்லிப் புகழ்ந்தார். மாற்றார் மனதையும் கவரும் பேச்சு வன்மையைப் பெரியார் பெற்றிருந்ததை இந்நிகழ்ச்சி சுட்டிக் காட்டுகிறது.

1949, செப்டம்பரில் தி.மு.க உதயமானது. 1950-இல் மேத்தா தி.மு.க.வில் இணைந்தார்.

1952-இல் கலைஞர், நாகூர் ஈ.எம். ஹனிபா, திருச்சி எம்.எஸ். மணி, மன்னை நாராயணசாமி, அன்பில் தர்மலிங்கம் போன்றோர், ''பராசக்தி'' பட விவாதத்திற்காகக் கொடைக்கானல் வந்தபோது பெரியகுளம் மேத்தாவின் அன்பில் மூழ்கித் திளைத் தார்கள். ''திராவிடநாடு திராவிடருக்கே'' என்ற பாடல் இங்கு தான் உதயமாகியது. கலைஞரும், நாகூர் ஈ.எம். ஹனிபாவும் தம் நண்பர் படைசூழக் கொடை ஏரியில் படகில் ஏறி உலாவந்த போது, ''வாழ்க, வாழ்க, வளமார் எமது திராவிட நாடு'' என்னும் பாடலை உரத்தக் குரலெடுத்துப் பாடினார், ஈ.எம். ஹனிபா, பாடலைக்கேட்டு இன்புற்று ஏரியைச் சுற்றி வளைத்த கூட்டம், ஈ.எம். ஹனிபாவை மீண்டும் அந்தப் பாடலைப் பாடவைத்த உணர்ச்சிகரமான நிகழ்ச்சி கொடை ஏரிக்கரையில் நிகழ்ந்தது.

1952-இல் - தி.மு.க. தேர்தலில் ஈடுபடாமல் இருந்தபோது பெரியகுளம் நகரசபை தேர்தலில் சுயேட்சையாகப் போட்டி யிட்ட மேத்தாவின் தேர்தல் பணிமனையைக் கலைஞர் திறந்து வைத்தார் (மேத்தா அத்தேர்தலில் தோற்றுப் போனார்).

1956-இல் கொடைக்கானல் நகரசபை உறுப்பினராக மேத்தா இருந்தபோது நகைச்சுவையரசு என்.எஸ். கிருஷ்ணனை அழைத்து நாடகம் நடத்தி அதில் கிடைத்த நிதியைக் கொண்டு கொடை நகரசபை உயர்நிலைப் பள்ளியைக் கட்டினார். பின்னர், என்.எஸ்.கே. இறந்துபோன தகவல் கிடைத்தபோது, மேத்தாவின் வேண்டுகோளுக்கிணங்க, அப்போது கொடை நகரசபைத் தலைவராகயிருந்த காங்கிரஸ் கட்சியைச் சார்ந்த காதர்பச்சை எம்.ஜி.யாரை அழைத்து வந்து கொடைக்கானல் நகரசபையில் என்.எஸ்.கே. படத்தைத் திறந்து வைக்கச் செய்தார். அதிலிருந்து எம்.ஜி.யாருக்கும் மேத்தாவுக்கும் இடையே நெருங்கிய தொடர்பு ஏற்பட்டது. கொடைக்கானலில் படப்பிடிப்பு நடத்த வரும் போதெல்லாம் எம்.ஜி.யார். மேத்தாவைச் சந்தித்து மகிழ்ந்தார். (இது பிறகு ஏற்பட்ட அரசியல் மாற்றத்தில் மேத்தா எம்.ஜி.யார் பக்கம் அணி சேர்வதற்கான வாய்ப்பைத் தோற்றுவித்தது).

மேத்தா, நாவலர் மீது மிகுந்த ஈடுபாடுடையவர். 1953-இல் சென்னை தாம்பரத்தில் நடைபெற்ற திருக்குறள் விழாவில் நாவலர் பேசும்போது, ''திருக்குறள் எல்லாக் காலத்திற்கும் பொருந்துவது போல் வேறு எந்த நூலும் பொருந்தாது. திருக்குர் ஆனும் இதற்கு விதிவிலக்கல்ல'' என்னும் தொனியில் பேசினார். இஸ்லாமிய சமுதாயத்தில் இப்பேச்சுக்குக் கடும் எதிர்ப்பு ஏற்பட்டது. மேத்தா மட்டும் நாவலர் கருத்துக்கு ஆதரவாக

விளக்கம் கொடுத்துப் பேசி வந்ததால் இஸ்லாமியச் சமுதாயம் இவரைச் சமூகப் புறக்கணிப்பு செய்தது இருப்பினும் நாவலருடன் இவர் கொண் தொடர்பு வெகுநாட்கள் தொடர்ந்தது. இவரது திருமணமும், இவரது ஐந்து பிள்ளைகளின் திருமணமும் நாவலர் தலைமையில் தான் நடைபெற்றது எனக் கிடைக்கும் செய்தி, நாவலர் மீது இவர் வைத்திருந்த ஈடுபாட்டிற்குச் சான்றாக அமைகிறது.

1967, மே 2-இல், தமிழ்நாட்டில் கடைசி இந்தி எதிர்ப்பு மாணவர் மாநாடு மேத்தா முயற்சியால் கொடைக்கானலில் நடைபெற்றது.

அரசியலில் ஒரு திருப்புமுனையை ஏற்படுத்திய 1967 தேர்தலில் மேத்தா பெரியகுளம் தொகுதியில் நின்று வென்றார். அண்ணா தலைமையில் உருவாகிய முதல் அமைச்சரவையில் முஸ்லிம்களின் பிரதிநிதியாகப் பங்கேற்கும் தகுதியை இருசட்ட மன்ற உறுப்பினர்கள் மட்டுமே பெற்றிருந்தனர். ஒருவர் பெரிய குளம் மேத்தா; மற்றொருவர் உடுமலைப்பேட்டை சாதிக்பாட்சா. சாதிக்பாட்சா வழக்கறிஞர் என்னும் தகுதியைப் பெற்றிருந்ததால் அவரை அமைச்சரவையில் சேர்க்க எண்ணினார், அண்ணா. இருப்பினும் முறைப்படி மேத்தாவின் விருப்பத்தைக் கேட்டறிந்தார். அண்ணாவின் நோக்கத்தைப் புரிந்து கொண்ட மேத்தா பெருந்தன்மையுடன் அமைச்சர் பதவிக்கான போட்டியிலிருந்து விலகிநின்றார். இதனால் மனம் மகிழ்ந்த அண்ணா மேத்தா விடுத்த கோரிக்கைகள் யாவையும் உவப்போடு நிறை வேற்றித் தந்தார். குறிப்பாக, கொடைக்கானல்-பழனிரோடு திட்டம் மேத்தாவின் விருப்பத்தின் அடிப்படையில் அரசின் ஒப்பு தலைப் பெற்றது. மேத்தாவின் முயற்சியால் பெரியகுளத்தில் பாதாளச் சாக்கடைத் திட்டம் நிறைவேற்றப்பட்டது.

அமைச்சர் பதவிக்கான போட்டியில் விலகி நிற்க மேத்தா முடிவு செய்த் போது, ''உனக்கென்ன கிறுக்கா?'' என்று கலைஞர் மேத்தாவை உரிமையுடன் கடிந்து கொண்டார்.

1969 மே 5-இல் மேத்தா பெரியகுளம் நகரசபைத் தலைவரானார்.

1971-இல் மதுரை முத்துவுக்கும் மேத்தாவுக்கும் இடையே மனத்தாங்கல் ஏற்பட்டு, மேத்தாவை மீண்டும் சட்டமன்ற தொகுதிக்கு நிறுத்துவதை மதுரை முத்து எதிர்க்க, மதுரை முத்துவுக்கு ஆதரவாகக் கலைஞர் செயல்பட்டதால், கலைஞருக்கும் மேத்தாவுக்கும் இடையே ஒரு இடைவெளி உருவானது.

எம்.ஜி.யார் அ.தி.மு.க.வைத் தோற்றுவித்துத் திண்டுக்கல்லில் முதல் இடைத்தேர்தலைச் சந்தித்தபோது, மேத்தா அ.தி.மு.க.வில் சேர்ந்தார். 1973-இல் மதுரை மாவட்ட அ.தி.மு.க. செயலராய்ப் பணியாற்றினார். 1974 இல் மதுரையில் நடைபெற்ற அ.தி.மு.க. மாநாட்டில் 'வங்கச் சிங்கம்' முஜிபுர் ரஹ்மான் வேடமிட்டு நடித்து வீர வசனம் பேசி எம்.ஜி.யாரின் பாராட்டினைப் பெற்றார்.

1975-இல் பெரியகுளத்தில் அண்ணாசிலை வைக்கச் சொல்லி மேத்தாவை எம்.ஜி.யார் வற்புறுத்தினார். சிலை தயாரானபோது திறந்து வைக்க நாள் தராமல் எம்.ஜி.யார் இழுத்தடித்தார். நீண்ட நாட்களாகச் சாக்கு மூட்டையில் புதைந்து கிடந்த அண்ணாசிலையைப் புகைப்படம் எடுத்துத் துக்ளக் பத்திரிக்கை கிண்டல் செய்ததால் மனம் நொந்த மேத்தா மீண்டும் தி.மு.க.வில் இணைந்து 1976-இல் கலைஞரைக் கொண்டு அண்ணா சிலையைத் திறந்து வைத்தார்.

1976 பிப்ரவரி முதல் ஓராண்டு வரை மதுரை மத்திய சிறையில் இந்திராகாந்தியின் 'மிசா' சிறைவாசத்தை கழகத் தோழர்களுடன் அனுபவித்தார். தென்னரசு, வீரபாண்டி ஆறுமுகம், சு.ப. தங்கவேலன் போன்றவர்கள் இவருடன் ஒரே சிறையில் அடைக்கப்பட்டிருந்தனர்.

1977 சட்டசபை தேர்தலில் தி.மு.க சார்பில் போட்டியிட்டுத் தோற்றுப் போனார். 1982-இல் நாவலரின் தூண்டுதலால் மீண்டும் அ.தி.மு.க.வில் சேர்ந்தார். எம்.ஜி.யார் மறைவுக்குப் பிறகு அரசியலை விட்டு ஒதுங்கி நிற்கிறார். ஆயினும், இவர் தம் சமூகம் சார்ந்த பொறுப்புகளினின்றும் விலகி நிற்கவில்லை.

கொடைக்கானல் நகரப் புதிய பள்ளிவாசல் கட்டிடக் குழுத் தலைவராகப் பணிப்பொறுப்பு ஏற்று, கொடைமலை உச்சியில், கட்டடக் கலைக்குச் சவால் விடும் வகையில் அறுபது லட்ச ரூபாய் செலவில் அழகிய பள்ளிவாசல் ஒன்றைக் கட்டி முடித்துள்ளார். சுமார் இருபதுலட்ச ரூபாய் செலவில் பள்ளிவாசல் தொடர்பான இதர பணிகளை முடிக்கத் திட்டமிட்டுள்ளார்.

பொதுவாழ்வில், செயற்கரிய செயலைச் செய்து முடிக்கும் சிந்தனை வாய்க்கப் பெற்றவர்கள், பொன்விழா ஆண்டால் போற்றப்பட்டு, வைர விழா ஆண்டால் வரவேற்கப்பட்டு, பவளவிழா ஆண்டால் பாராட்டப்படுவார்கள் என்பதற்குப் பெரியகுளம் மேத்தாவின் வாழ்வும் பணியும் ஒரு வசீகரச் சாட்சியாய் அமைந்துள்ளது.

மா. நயினார்
பல்கலைக்கழகக் கல்லூரி
திருவனந்தபுரம்

தர்மமும் தந்தீரமும்

அரசியலுக்குரிய தர்மங்கள், தந்திரங்கள் சூழ்ச்சிகள் பற்றி அறநெறியாளர்களும் அரசியல் வல்லுநர்களும் காலந்தோறும் தங்கள் கருத்துக்களை வெளியிட்டுள்ளனர். இவை குறித்த செய்திகள் இலக்கியங்களிலும் ஏராளம் இடம்பெற்றுள்ளன. அவற்றுள் கம்பனின் இராமகாவியத்திலும் திருத்தக்கதேவரின் சீவகசிந்தாமணியிலும் பேசப்படுகின்ற இருவகையான அரச தர்மங்களை ஒப்பிடுவதே இக்கட்டுரையின் நோக்கம்.

மக்கள் எல்லோரும் மகிழும்படியான நல்லரசு நடைபெறும் நாட்டை 'ராமராஜ்யம்' என்று குறிப்பிடுவதுண்டு. ஆயின் இராமன் எவ்வாறு ஆட்சி நடத்தினான் என்பது பற்றிய செய்திகள் கம்பன் காவியத்தில் இல்லை. இராமபிரானின் பட்டாபிஷேகத்துடன் கம்பராமாயணம் நிறைவு பெற்றுவிடுகிறது. எனினும் இராமனின் அரசியல் கொள்கைகளை விளக்கும் நிகழ்ச்சியொன்று இராமாயணத்தில் இடம்பெற்றுள்ளது.

சுக்கிரீவனுக்கு அடைக்கலம் கொடுத்து, அவனுக்கு அச்சத்தைக் கொடுத்துவந்த வாலியைக் கொன்று, அந்த சுக்கிரீவனுக்கு மணிமுடிசூட்டிக் கிட்கிந்தைக்கு அரசனாக்குகின்றான் அண்ணல் இராமன். அதன்பின், ஓர் அரசன் பின்பற்ற வேண்டிய அரசியல் தர்மங்களை அவனுக்கு எடுத்துரைக்கின்றான். கம்ப ராமாயணம் கிட்கிந்தா காண்டத்தில் வாலிவதைப் படலத்தில் இடம் பெறும் இவ்வுரைகள் இராமனின் அரசியல் தர்மங்களை வெளிப்படுத்துகின்றன.

இதுபோன்ற ஓர் அரசியல் அறிவுரை சீவகசிந்தாமணி விமலையார் இலம்பகத்திலும் இடம் பெற்றுள்ளது. ஏமாங்கத நாட்டை ஆண்டு வந்த மன்னன் சச்சந்தனைச் சூழ்ச்சியால் கொன்று, நாட்டைக் கைப்பற்றுகிறான் அமைச்சன் கட்டியங்

காரன். இதனால் மன்னன் மனைவி விசயை காட்டில் தவப்பள்ளி யொன்றில் மறைந்து வாழும் நிலைக்கு ஆளாகிறாள். நீண்ட காலத்திற்குப் பின் அவள் தன் மகன் சீவகனைக் கண்டபோது அவனுக்குக் கூறும் அறிவுரையாக இவ்வரசியல் அறிவுரை அமைகின்றது.

'நாடாளும் மன்னன் யாரிடமும் பகைமை கொள்ளக் கூடாது. தன்னிடம் பகைமை கொண்டவர்களிடமும் அன்பு காட்ட வேண்டும். அப்பகைவர்களைப் பகைவர்களாகக் கருதாமல் அவர்களிடம் முகமலர்ச்சியுடன் இனிமையாகப் பேச வேண்டும்' என்பது இராமனின் அறிவுரை.

இதற்கு நேர்மாறான ஒரு கருத்தைத் தன் மகன் சீவகனுக்கு அறிவுறுத்துகின்றாள் விசயை. 'பகையை ஒருபோதும் மறத்தல் கூடாது; பகைவனைப் பகைவனாகவே காணவேண்டும்; தொன்மையான பகையை எப்போதும் நெஞ்சில் நிறுத்த வேண்டும்' என்கிறாள் விசயை.

'எவரிடத்தும் தீமையானவற்றை எண்ணக் கூடாது. மற்றவர் கள் வசைச் சொற்களைக் கூறினாலும், அவர்களிடமும் இனிமை யாகவே பேச வேண்டும்' என்று சுக்கிரீவனுக்கு அறிவுரை கூறுகின்றான் இராமன்.

இக்கொள்கைக்கு மாறான ஒரு கொள்கையை உடையவள் விசயை. முள்ளை முள்ளால் எடுப்பது போல் பகைவர்களை பகைவர்களாலேயே அழிக்க வேண்டும் என்பது அவள் கருத்து.

இவ்வுலகத்தில் உள்ள அனைவரும் இனிய நண்பர், பகைவர், பொதுநிலையில் உள்ளவர் என மூவகைத் தன்மை உடையவர்கள் என்றும், அதற்கு ஏற்ப அவர்களிடம் நடந்து கொள்ள வேண்டு மென்றும் கூறுகின்றான் இராமன்.

'தனக்குப் பகைவராய் இருப்பவர்களைத் தம்மில் வேறு படுத்தி, ஒருவரைக் கொண்டு இன்னொருவரிடம் மோதவிட வேண்டும்' என்ற அரசியல் தந்திரத்தை எடுத்துக் கூறுகின்றாள் விசயை. 'பிரித்தாளும் சூழ்ச்சி' என அரசியலில் அதிகமாகப் பேசப்படும் மிகப்பெரிய அரசியல் தந்திரம் இது.

தேவர்களுக்கும் மயக்கத்தைத் தருவது செல்வம். அந்த செல்வத்தின் சிறப்பை மனத்திற் கொண்டு, அதைக் கவனத்தோடு பாதுகாக்க, வேண்டுமென்று கூறுகின்றான் இராமன்.

'வெற்றி, மேம்பாடு, கல்வி, அழகு முதலான எல்லா பெருமை களையும் பொருளால் அடையலாம். மெலிந்தவரை வலியவராக்கும் ஆற்றலும் பொருட்செல்வத்திற்குண்டு. பொருளால் படையுண்டா கும்; படையால் நாடுகிடைக்கும். அப் பொருளால் வீடு பேற்றையும் அடையலாம்' என்றெல்லாம் பொருட் செல்வத்தின் ஆற்றலை விளக்கிக் கூறுகின்றாள் விசயை.

கற்றறிந்த சான்றோர்களையும் உடனிருந்து உறுதுணை செய்யும் அமைச்சர்களையும் எப்போதும் மதித்துத் தன்னுடன் வைத்துக் கொள்ள வேண்டும் என்பதில் இராமனும் விசயையும் ஒத்த கருத்தை உடையவர்களாக உள்ளனர்.

அமைச்சர் முதலியோருடன் பழகும் போது அதிகம் விலகிச் செல்லாமலும் மிக நெருங்காமலும் இருக்க வேண்டும் என்பது இராமனின் கருத்து.

கற்ற மாந்தர்களைக் கண்ணெனக் கொள்ளுதலும் ஒற்றர் தங்களை ஒற்றர்களால் ஆராய்தலும் அரசனின் கடமைகள் என்கிறாள் விசயை.

'பெண்கள் காரணத்தால் ஆண்களுக்கு மரணம் உண்டாகும். மேலும் அவர்களால் துன்பமும் பழியும் நேரிடும்' என்பது இராமன் கருத்து. சுக்கிரீவனின் மனைவியைக் கவர்ந்து சென்றதன் விளைவால் வாலி மரணத்தைத் தழுவியதும், சீதை காரணத்தால் தான் துன்பமும் பழியும் அடைந்ததும் இதற்கு எடுத்துக்காட்டு களாகக் கூறுகின்றான் இராமன்.

இக்கூற்றுக்கு முற்றிலும் மாறுபட்ட ஒரு கருத்தை எடுத் தோதுகின்றாள் விசயை. 'குறுநில மன்னர்களுடைய மகளையும் பேரரசர்கள் மகளையும் மனைவியாகக் கொள்ளுதல் தவறன்று; அரசர்களுக்கு, அது முறையுமாகும்' என்கிறாள் விசயை. அரசர்கள் ஒன்றிற்கு மேற்பட்ட மங்கையரை மணந்து கொள்ளுதல் தவறன்று என்ற கருத்து இங்கு வலியுறுத்தப்படுகின்றது. இது தொன்று தொட்டு வழங்கிவரும் ஒரு மரபு என்றும் கூறுகின்றாள் விசயை.

'எப்போதும் உண்மையே பேசவேண்டும்; உயிர்கள் பிறத்த லும் இறத்தலும் அவ்வுயிர்கள் செய்த வினையின் பயனாகும்; அறத்தின் இறுதி வாழ்நாட்கு இறுதியாகும்; செல்வம் பெறுவதும் வறுமை அடைவதும் அவரவர் செய்யும் புண்ணிய பாவங்களால் அமையும்; சிறியர் என இகழ்ந்து எவரிடமும் அவர்களது மனம் நோகும்படியாக நடக்கக் கூடாது' முதலான அறக் கருத்துக்களை

யெல்லாம் சுக்கிரீவனுக்கு உபதேசிக்கின்றான் அண்ணல் இராமபிரான்.

இத்தகைய அறக்கருத்துக்கள் எதையும் விசயை தன் மகன் சீவகனுக்கு அறிவுறுத்தியதாக இல்லை.

அறத்தை மறந்து ஆட்சிபுரிந்த வாலியைக் கொன்று அவன் தம்பி சுக்கிரீவனுக்கு மணிமுடி சூட்டிய சூழ்நிலையில் இராமன் கூறிய அறிவுரைகளில் அறக் கருத்துக்கள் மேலோங்கி நிற்கின்றன. ஆயின் ஏமாற்றுச் சூழ்ச்சிகளால் ஏமாங்கத நாட்டு மன்னனைக் கொன்று, நாட்டைக் கைப்பற்றிய கட்டியங்காரனை எப்படியும் பழிவாங்கவேண்டும் என்ற உள்ளக் கொதிப்பில் விசயை கூறிய அறிவுரைகளில் பழிவாங்கும் ஆவேசமே மேலோங்கி நிற்கின்றது. பழிவாங்கும் எண்ணத்தில் நூலோர் நுவலும் அரசியல் அறங்கள் மங்கிப் போகின்றன.

இராமன் சுக்கிரீவனுக்கும் விசயை சீவகனுக்கும் எடுத்துக் கூறியவைதான் இவ்வரசியல் நீதிகள் எனினும் இவை கம்பன், திருத்தக்க தேவர் ஆகிய கவிஞர் பெருமக்களின் உள்ளக் கிடக்கையே என்று கூறுவதில் தவறில்லை.

'உள்ளுவதெல்லாம் உயர் வுள்ளல்' என்ற கருத்தைக் கொண்டவர் கம்பநாட்டாழ்வார். நடைமுறையில் தான் கண்டு கேட்டு வெறுப்படைந்த அரசியல் சூழ்ச்சிகளுக்கு அப்பாற்பட்ட ஒரு நல்லாட்சியைக் கனவு கண்டவர். 'வண்மையில்லை ஓர் வறுமை இன்மையால்' என அயோத்தி மாநகரத்தின் சிறப்பினைக் கூறும் பாடல் இதற்கு எடுத்துக்காட்டு. இந்நிலையில் அவர் இராமன் வாயிலாகச் சுக்கிரீவனுக்குக் கூறும் அறிவுரைகள் நடைமுறை அரசியலுக்கு அப்பாற்பட்டதாக உள்ளன.

தேவர் விசையின் வாய்மொழியாகச் சீவகனுக்குக் கூறும் அறிவுரைகள் நடைமுறை அரசியலின் பிரதிபலிப்பு; யதார்த்த மானவை. அன்று நடந்ததாகக் கூறும் அரசியல் வரலாற்றுச் செய்திகளுக்கும் இன்று நடக்கின்ற அரசியல் சூழ்ச்சிகளுக்கும் பொருத்தமானவை.

கம்பனின் கருத்துக்கள் அரசியல் தர்மங்கள் தேவரின் கருத்துக்களோ அரசியல் தந்திரங்கள். கம்பனின் எண்ணங்கள் கற்பனையில் முகிழ்ந்தவை. தேவரின் எண்ணங்கள் நடைமுறை யில் நிகழ்ந்தவை.

க. நரசிம்மன்
பச்சையப்பன் கல்லூரி
சென்னை – 600 030

மங்கலமும் உலகமும்

உலகு என்பது மங்கலச் சொல். தமிழ்ச் சான்றோர் கவிதை பாடத் தொடங்கும்போதும் முடிக்கும் போதும் உலகு என்று தொடங்கும் பண்பு பன்னெடுங்கால மூப்புடையது. தமிழ்ப் புலவர்கள் பொதுவுடமை உயர்வுடையவர்கள். உலக நலனைக் கொண்டும் மண்ணுயிர்த்தொகுதியின் மாட்சிமை கொண்டும் பரந்த - விரிந்த மனப்பான்மையில் வாழ்ந்தவர் என்பது முற்றிலும் உண்மை. ''யாதும் ஊரே யாவரும் கேளிர்'' (புறம் 192) என்பது கணியன் பூங்குன்றனின் பரந்த மனப்பான்மை. தமிழகத்தில் எந்த ஒரு பகுதியைச் சேர்ந்த புலவராயினும் உலகு என்ற விரிந்த உணர்வில் பாடுவது என்பது பண்பாகி விடுகிறது. உலகு என்ற பொருள் உலக உயிர்த் தொகுதிகளைக் கொண்டதுமட்டுமன்றி உயர்திணை இடத்தும் சிறப்பிடம் பெறுவது. அரசின் எல்லை, குறுகியதாயினும் புலவர்தம் கொள்கை எல்லை விரிந்ததாக இருக்கின்றது.

மன்னன் உயிர்த்தே மலர்தலையுலகம். (புறம் 186) கோள்களை நோக்கிடப் புவி, மலர் போன்று உள்ளது. இதன் அறிவியலை உணர்ந்தவர் நம்மனோர். சூரியனை நோக்கி மலர்ந்து கொண்டேயிருப்பதால் மலர்தலையுலகம் எனக் குறிப்பிடுகின்றனர். எனவே மலரும் காப்புநோக்கி மன்னன் உயிராக அமைகிறான். உயிர்க்காப்பதில் உயிர்க்குயிராகின்றான். இறைவனாகின்றான் மன்னன். மலரும் உயிர்க்காப்பு மங்கலமாக எண்ணப்படுகிறது. மலர், உலகு எனும் சொற்கள் மங்கல வழக்காகி விடுகிறது.

''பாங்கரும் சிறப்பின் பல்லாற் றானும்
நில்லா உலகம் புல்லிய நெறித்தே''
(தொல்:பொருள்:புறம்:18)

என்று உலக நிலையாமையைக் குறித்தாலும்-அமங்கலப் பொருள் கொண்டாலும் இவ்வுலகை விரும்பி நன்முறையில் வாழ்ந்து சிறக்க வேண்டும் என்பதை வலியுறுத்துகிறது. 'மன்னா உலகம்' (புறம் 165) 'இன்னாதம்ம உலகம்' (புறம் 194) என்று வெறுத்துக் கூறப்பட்டாலும் அதன் இயல்பு நோக்கி வாழ்வதே தமிழர் நல்வாழ்வாக வேண்டுமென்று மங்கலம் விழைகின்றனர்.

'உலகெலாம்' என்பது ஓசையாக-மாத்திரையாக நிற்கும் ஓங்காரத்தை உள்ளடக்கிய தனித்தமிழ்ப் பொருள் மந்திரம் (திருத்தொண்டர் மாக்கதை சைவசித்தாந்தப் பதிப்பு 1970 பக்:1) ஓங்காரம் என்ற ஓசையிலிருந்து கொண்டே இரீக்கும் உலகு என்பது பொருள். ஓம் என்பது, பிரணவ ஓசையாக அமைகிறது. அதுவே மங்கல ஓசையும் கூட.

அண்டவெளியில் ஆயிரம் கோள்கள் சுழன்றாலும் ஐம்பூதத் தத்துவமும் ஓங்கார மங்கல ஓசையும் நிறைந்த கோளே உலகமாக விளங்குகிறது. அத்தகையதே நம் பூமி. உயிர்களுக்கும் வாழ்விற்கும் இடமாயது. வாழ்வு மலர்தலை உடையது. அதுவே உலகாகச் சிறக்கிறது. இவ்வுலகையே புலவர் போற்றுகின்றனர்; புரவலர் காக்கின்றனர்.

இவ்வுலகம் ஐம்பூதத் தத்துவம் கொண்டது. ஐம்பூதப் பயன் இல்லை என்றால் உயிர்கள் அழியும். ஏனைய கோள்களை மனிதன் கண்டுபிடித்து அடைந்தும் கூட வாழ வழியில்லை. ஏனெனில் அங்கே புவியைப் போன்ற தன்மையில்லை என்பதால் தான். ஐம்பூதத் தத்துவம் கொண்டது இவ்வுலகம் என்பர், தொல்காப்பியர்.

''நிலம்தீ நீர்வளி விசும்பொடு ஐந்தும்
கலந்த மயக்கம் உலகம்'' (தொல்: பொருள்: மரபு:91)

என்பதால் உயிர்கள் சிறக்கின்றன. இதன் சிறப்புக்கு மூல காரணனே இறைவன்; அவன் மங்கலகாரகன். இருப்பினும் உலகத்தால் உணரமுடியாதவன்

''உலகெலாம் உணர்ந்து ஓதற்கு அரியவன்
நிலவு உலாவிய நீர்மலி வேணியன்
அலகில் சோதியன் அம்பலத் தாடுவான்
மலர்சிலம்படி வாழ்த்தி வணங்குவாம்'' (பெரிய:பாயிரம்:1)

என்று சேக்கிழார் பெருமான் பாடுகிறார். இயற்கைத் திருக் கோலத்தில் அனைத்து உயிர்க்கெல்லாம் நாயகனான இறைவனை ஏற்றிப் புகழ்கிறார். இயற்கையே இறைவன். உலகு எல்லாம்

உணர்ந்து ஓத முடியாதவன்தான் இறைவன். அறிவிற் கும் அப்பாற்பட்டவன். எனவே அறிவு இயற்கையைத் தேடு கிறது. இப்பாட்டில் ஐம்பூதத் தத்துவமும் ஐந்தொழிலும் நன்னெறி நாற்படியும்-அதாவது அறிவு, செறிவு, நோன்பு சீலம் ஆகிய பொருள்கள் புதைந்திருக்கின்றன.

செய்யுள்	ஐம்பூதம்	ஐந்தொழில்
உலகு	பூமி	படைத்தல்
நிலவு உலாவுதல் (ஆருயிர் அடையாளம்)	வானம்	அருளல்
நீர்மலிவேணியன்	நீர்	மறைத்தல்
அலகில் சோதியன்	நெருப்பு	அழித்தல்
அம்பலத்து ஆடுதல்	காற்று	காத்தல்
மலர்சிலம்படி	ஆருயிர்களின் உள்ளத்தாமரை.	உயிர்களின் இருப்பிடமாக அமைவது, முக்தி, தோற்றத்தின் 'மூலம்' இறையின் ஆதாரம் பேரொளி யின் கால்கோள்.

ஆருயிர்களின் உள்ளத்தாமரையில் இறைவன் இருப்பதும் அவனை வணங்குவதும் உயிர்களின் கடன் என்பதே நான்காம் அடி கற்பிக்கிறது. அதுமட்டுமின்றி முப்பெரும் தத்துவங்களான, பதி, பசு, பாசம் புதைந்துள்ளன. அவை வரிசை முறை மாறியுள்ளன.

மலர் - பசு

சிலம்பு - பாசம் (ஒலித்துக் கொண்டேயிருக்கும்)

அடி - பதி (இறைவன் திருவடி)

என்பதாம். மலர்தலையுடையது உயிர் என்பதாலும் உலகை, 'மலர்தலை உலகம்' என்கின்றனர். எல்லா உயிர்களும் ஆண்டவன் திருவடியில் இருப்பதால் அடியை இறுதியில் வைக்கின்றனர். ஆண்டவனுக்கும் உயிர்க்கும் இடையே உள்ள தளையே பாசம் என்பதால் இடையில் வைக்கின்றார். அன்னையும் பிதாவும் முன்னெறி தெய்வம் (கொன்றை வேந்தன்-1) என்பது போல வரிசைப்படுத்துகிறார். அதுபோல 'மலர்சிலம்படி' என்று வரிசையோதுகிறார்.

ஓதற்கரியவன்	- அறிவு	-	ஆய்வுக்குரியது. தேடுதற் குரியவன் இறைவன் என்பது உளப்பட.
நீர்மலிவேணியன்	- செறிவு	-	நிலவும் நீரும் வேணியும் செறிந்த யோகத்தை உணர்த்துகிறது.
அம்பலத்தாடுவான்	- நோன்பு	-	ஆடும் இறைவனைக் காணவேண்டும் என்று நெருப்பாய்த் தகிக்கின்ற அவா.
வாழ்த்தி வணங்குவோம்	- சீலம்	-	இறைவன் திருவடியிலி ருந்து வந்ததும், அந்த இடத் தையே விரும்புவதுமான உயிர் வாழ்த்துதலும் வணங் குவதும் கொண்ட ஒழுக்கம் முதலிய சீலம்.

இத்தகைய நான்கு நன்னெறிப்படியினாலே ஆண்டவனைப் புரிந்து கொண்டு வணங்க வேண்டும். அதற்கு ஒவ்வொரு உயிரும் சரியை, கிரியை, யோகம், ஞானம் பெற வேண்டும். ஞானமே ஆண்டவன் சந்நிதி. எனவே ஞானத்தால் புலவர் ஆண்டவனைக் கவியால் அனுமானிக்கின்றார். இதிலிருந்து உலகம் யாவர்க்கும் பொது என்பதும் எல்லா உயிர்க்கும் பொதுவாக இருப்பதே இறைக் கொள்கை என்பதும் பெறப்படுகிறது.

எல்லா உயிர் இடத்தும் அன்புடன் இருக்குங்கால் இறைவனிடம் தொடர்ந்திருக்கும் பெற்றிமையும் வாய்ப்பும் ஏற்படுகிறது. எனினும் உயிர்க்கு ஏற்படும் இருளை ஒழிப்பது புலவர் தம் கடமை; ஆண்டவனின் திருவுள்ளம்.

''தங்கருவிரண்டின் மாக்கள் சிந்தையுட் சார்ந்து நின்ற
பொங்கிய விருளையேனைப் புறவிருள் போக்குகின்ற
செங்கதிரவன் போல் நீக்குந் திருத்தொண்டர் புராணம்''
(பெரிய-பாயிரம் 101)

என்கிற பெரியபுராணம் இயற்றினேன் என்கிறார் சேக்கிழார் பெருமான். உலகம் வாழ - மங்கலம் தழைக்க வாழ்த்துவது பெரியோர் கடன். அப்பெரியோர் உலகம் மட்டுமின்றி உலகில் ஒவ்வொரு உயிரும் மங்கலமாக வாழவேண்டுமென்று தான், மக்களை - உயிர்களை - வாழ்த்துகின்ற பொழுது,

'நீரொடு சொரிந்த ஈர்இதழ் அலரி
பல்இருங் கதுப்பின் நெல்லொடு தயங்க' (அகம் : 86)

வாழ்த்துகின்றனர். ஐம்பூதப் பொருளைக் கலந்த மங்கல உலகை மங்கலத்தால் வாழ்த்துகின்றனர்.

ஆண்டவனைத் தீப்பிழம்பாக வழிபடுவது இக்காரணம் நோக்கியே. சூரிய வணக்கத்தின் தொடக்கமும் இது கருதியே. விளக்குப் பூஜை வழிபாடும் இதன் நலம் நோக்கியே. இறைவன் ஒளிமயமானவன். உலகப் பசுக்களாகிய உயிர்கள் விட்டிலாய் நெருங்க விழைவதும் அதுவே முக்தி என்பதும், உயிரின் உற்ற ஆசை. எனவே உயிர்கள் இறைவனை,

''ஒளிவளர்விளக்கே உவப்பிலா ஒன்றே
உணர்வு சூழ் கடந்ததோர் உணர்வே
தெளிவளர் பளிங்கின் திரள்மணிக் குன்றே
சித்தத்துள் தித்திக்கும் தேனே
அளிவளர் உள்ளத்து ஆனந்தக் கனியே
அம்பலம் ஆடரங் காக
வெளிவளர் தெய்வக் கூத்துகந்தாயைத்
தொண்டனேன் விளம்புமா விளம்பே''

- திருமாளிகைத் தேவர் திருவிசைப்பா.

மணநாளிலும் - காதல் கைகோர்க்கும் நாளிலும் - அந்த இன்பநாளிலும் - ஐம்பூதத்தை அதன் தத்துவத்தை மக்களுக்கு உணர்த்தி - அதன் பயனை உணரும்படி செய்து - அகஇருள், புற இருள் நீக்கித் தீது வராது நடக்கும்படி வாழ்த்துகின்றனர். அக இருள், தன்னையே விளங்காமற் செய்வது; புறஇருள், பிறர் தன்னை விளங்காமற் செய்வது. காமம், குரோதம் முதலானவை அகஇருள்; தூய்மை, அடக்கம் முதலானவை இல்லாமை புற இருள்; வாழ்த்துவதும் வாழ்த்திக் கொள்ளப்படுவதும், கடவுள் வாழ்வாகக் கருதுகின்றனர். இதுவே மங்கலமும் ஆம்.

மக்கள் சிந்தையுள் சார்ந்து நின்ற பொங்கிய இருளை மற்றும் புறஇருளைச் சூரியன்போல் நீக்குவது மங்கலம். பெற்ற அற வாழ்வின் மாட்சி. மாண்புடைய நன் மக்கட்பேறு தருவது, வாழ்வின் விளக்கம். அதுவே உலகு. அதுவே அறப்பயன் எனக் காப்பியம் கற்பிக்கிறது. எனவே பெரும்பாலான இலக்கியங்கள் உலகை (உலகு என்ற சொல்லை) மங்கலச் சொல்லாகத் தொடங்கித் தொடர்கின்றன; எடுத்துக்காட்டு திருமுருகாற்றுப் படை, திருக்குறள், கம்பராமாயணம், பெரியபுராணம் இன்னும் இதுபோன்ற இலக்கியங்கள் பல.

அ. நலங்கிள்ளி
பிசப் ஈபர் கல்லூரி
திருச்சிராப்பள்ளி

புறநானூற்றில் அரசவாகை

குற்றமற்ற கொள்கையினால் தத்தமக்குரிய அறிவு, ஆண்மை, பெருமை முதலிய ஆற்றற் கூறுபாடுகளை ஏனையோரினும் வேறுபட மிகுத்து மேம்படுதல் வாகைத்திணை என்னும் ஒழுகலாறாகும்.

''தாவில் கொள்கைத்தத்தம் கூற்றைப்
பாகுபட மிகுதிப் படுத்தலென்ப'' (தொல்.புறத்.15)

என்பர் தொல்காப்பியர். ஒவ்வொருவரும் தத்தம் துறையில் மேலோங்கிச் சிறப்பெய்தலை வாகைத்திணை சுட்டுகின்றது. தொல்காப்பியர் வாகைத்திணையின் கூறுகளைத் தொடர்ந்து கூறுங்கால், 'ஐவகை மரபின் அரசர் பக்கம்' என ஒரு துறையைக் கூறுகின்றார். இது புறநானூறு குறிக்கும் அரசவாகையைச் சுட்டுகின்றது.

'ஐவகை மரபின் அரசர் பக்கம்' என்ற தொல்காப்பியர் கருத்துக்கு உரை வேறுபாடுகள் உள்ளன. ஓதல், வேட்டல், ஈதல், படைவழங்கல், குடியோம்பல் என இளம்பூரணரும், ஓதல், வேட்டல், ஈதல், காத்தல், தண்டஞ்செய்தல் என நச்சினார்க்கினியரும், சேர, சோழ, பாண்டியர் குடிகள், குறுநில மன்னர்குடி, வேளிர்குடி எனச் சோமசுந்தரபாரதியாரும் உரைகூறுவர். ஓதல், வேட்டல், ஈதல், படைக்கலம் பயிறல், பல்லுயிர் ஓம்பல் எனப் புறப் பொருள் வெண்பாமாலை கூறும். புறநானூற்று அரசவாகைத் துறைப்பாடல்களில் இப்பிரிவுகளை எவ்வகையிலும் பொருத்திக் காணுதல் என்பது ஏற்புடைய ஒன்றே.

புறநானூற்று அரச வாகைப்பாடல்கள்

புறநானூற்றில் முப்பத்தைந்து அரசவாகைப்பாடல்கள் உள்ளன. குறுங்கோழியூர் கிழார் முதலாக ஆலத்தூர் கிழார் ஈறாகப் பத்தொன்பது புலவர்கள் அரசவாகைப் பாடல்களைப்

பாடியுள்ளனர். தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ் செழியன் முதலாக ஏனாதி திருக்கண்ணன் ஈறாகப் பதினாறு மன்னர்கள் அரசவாகையில் பாடப்பெற்றுள்ளனர். அரச வாகைப் பாடல்கள் ஐந்து அடியில் இருந்து நாற்பது அடிவரை பாடப் பெற்றுள்ளன. நெடுஞ்செழியனைக் குறித்தும் அதியமானைக் குறித்தும் மிகுதியான பாடல்கள் உள்ளன. அரசவாகைப் பாடல்கள் முப்பத்தைந்தும் புறநானூற்றில் 17 - ஆம் பாடலில் இருந்து 174 ஆம் பாடல்களுக்குள் இடம் பெற்றுவிடுகின்றன. இருபத்து மூன்று பாடல்கள் புலவர், மன்னனை முன்னிலைப் படுத்திக் கூறுவனவாகவும், பதினோரு பாடல்கள் புலவர், மன்னனைப் படர்க்கையில் வைத்துக் கூறுவனவாகவும் அமைந் துள்ளன. ஒருபாடல் பகைவரை நோக்கித் தம் மன்னனின் பெருமை கூறுவதாக அமைந்துள்ளது.

மன்னர்களின் வெற்றியை அவர்களின் கொடைத் திறனோடு இணைத்தும், மன்னர்கள் போர்புரிந்த முறையினை விளக்கியும், மன்னர்களின் நாட்டுவளத்தைப் பின்புலமாக்கியும், மன்னர்களின் தன்மான உணர்வை மையமாக வைத்தும், மன்னர்களின் வீரச் செயல்களை எடுத்துக்காட்டியும், மன்னர்களுக்கு அறிவுரை கூறி இடித்துரைத்தும் அரசவாகைத் துறைப்பாடல்கள் அமைந்துள்ளன.

ஐவகை மரபு

ஐவகை மரபின் அரசர் பக்கம் என்பதற்கு நச்சினார்க்கினியர் கூறும் பிரிவுகளை அரசவாகைப் பாடல்களில் பொருத்திக் காணலாம்.

வேட்டல்

''அமரர்ப்பேணியும் ஆவுதி அருத்தியும்
அரும் பெறல் மரபின் கரும்பு இவண் தந்தும்'' *(புறம்-99)*

அதியமான் நெடுமான் அஞ்சியின் முன்னோர் தேவர்களைப் போற்றி வழிபட்டு, வேள்விசெய்து, அவ்வேள்வியில் அவர்களுக்கு ஆவுதி அருத்துவித்தனர் என்ற செய்தி இப்பாடலடிகளில் புலனாகின்றது.

ஈகை

சேரமான்செங்குட்டுவன் கோதையின் ஈகையைக் குறித்து மதுரைக்குமரனார்.

'வானம் நாண வரையாது, சென்றோர்க்கு
ஆனாது ஈயும் கவிகை வண்மைக்
கடுமான் கோதை'' - *(புறம்.54)*

எனப்பாடுவது குறிப்பிடத்தக்கது.

காத்தல்

மாந்தரஞ்சேரல் இரும்பொறையின் ஆட்சியில் மக்கள் ஏமமுற இருந்த செய்தியைக் குறுங்கோழியூர் கிழார் பாடுகின்றார்.

''புதுப்புள் வரினும் பழம்புள்போகினும்
விதுப்புற அறியா ஏமக் காப்பினை'' (புறம்-20)

என்ற பாடலடிகள் மன்னன் மக்களைக் காக்கும் திறத்தினை எடுத்துக்காட்டுகின்றது.

தண்டஞ்செய்தல்

நலங்கிள்ளி தன் ஆற்றல் உணராது, தன்னோடு எதிர்த்து வந்தவர்களை ஒறுத்துத் தண்டிக்கும் தன்மையுடையவன். இதனை மதுரைக் கண்ணனார்,

''சிலைத்தார் அகலம் மலைக்குநர் உளரெனின்
தாம் அறிகுவர் தமக்குறுதி; யாம் அவன்
எழுஉறழ்திணிதோள் வழுஇன்று மலைந்தோர்
வாழக்கண்டன்றும் இலமே'' (புறம்.51)

எனப்பாடுதல் கொண்டு அறியலாம்.

அரசவாகைப் பாடல் கூறும் செய்திகள்

போரில் ஒரு மன்னன் பெற்ற வெற்றியை வியந்து கூறுவனவாக மிகுதியான பாடல்கள் அமைந்துள்ளன. அரசர் களின் கொடைத்திறத்தையும், விருந்தோம்பும் பண்பினையும், கொடையோடு கூடிய பேராற்றலையும் மிகுதியாக அரசவாகைப் பாடல்கள் எடுத்துரைக்கின்றன. ஐவகைமரபின் அரசர் பக்கம் கூறும் பிரிவுகளில் குடியோம்பல், பிழைத்தோர்த்தாங்கும் காவல், அரும்பகை தாங்கும் ஆற்றல் ஆகிய துறைப்பொருண்மைகள் மிகுதியும் பேசப்படுகின்றன.

வெற்றிச் செருக்கில் செருக்கி நிற்பதும், தோல்வியால் துவண்டு போவதும் இல்லாது சமன்பெற்ற மனப் பக்குவம் தலையாலங்கானத்து நெடுஞ்செழியனுக்கு இருந்தது. சோழன் நலங்கிள்ளி, பாண்டிய மன்னனின் ஏழுமதிற் கதவுகளை எறிந்து தன் புலிப்பொறியைப் பொறித்து வெற்றிகொண்ட செய்தி கூறப்படுகின்றது. இடித்துரைப்பதும், பிழையைப் பொறுக்கும் குடி வென்றியும் அரசவாகை எனவே கருதப்படுகின்றன. அதியமானின் வீரத்தைப் போற்றி ஔவையார் அரச வாகையில் ஆறுபாடல்கள் பாடியுள்ளார். காவல்மரந்தடிதல், முரசு கைக்

கொள்ளுதல், யானைகளை வெட்டுதல், களவேள்வி செய்தல் ஆகிய செய்திகள் இப்பாடல்களில் அடங்கியுள்ளன.

பெருஞ்சேரலாதன் புறப்புண்பட்டமைக்கு நாணி வடக் கிருந்தமையும், மாந்தரஞ்சேரலிரும் பொறை நெடுஞ்செழியனின் சிறையில் இருந்து விடுபட்டு வலிதிற் போய் ஆட்சியைக் கைப் பற்றியமையும் ஆகிய செய்திகள் மன்னருக்குரிய தன்மான உணர்வினைக் காட்டுகின்றன.

'தமிழ் தலை மயங்கிய தலையாலங்கானம்' என்னுந் தொடரில் தமிழ் என்பது தமிழ்நாட்டு மன்னர்களைக் குறிக் கின்றது. தமிழ் மன்னர்கள் தங்களுக்குள் போரிட்ட நிலை நன்றன்று என்பதனைக் குறிப்பால் உணர்த்துவதாகவும் கொள்ள லாம். 'தண் தமிழ்ப் பொது எனப் பொறாஅன்' என்னுந்தொடரில் 'தமிழ்' என்பது நாட்டைக் குறிப்பதாக அமைந்து, நாடு முழுவதும் தானே ஆளவேண்டும் என்ற ஆவல் மன்னருக்கிருந்த மையும் புலனாகின்றது. முன்னோர்களின் வெற்றிப் பெருமையை முன் வைத்தே மன்னர்கள் புகழப்படுகின்றனர். சோழ மரபில் மன்னர்கள் புகழப்படும் போது 'சிபி' துலாக்கோல் ஏறிய செய்தியே மிகுதியாகக் கூறப்படுகின்றது.

தலையாலங்கானப் போர், வெண்ணிப் பறந்தலைப் போர், ஆவூர்ப் போர், திருக்கோவலூர்ப் போர் ஆகிய போர்கள் அரசவாகைப்பாடல்களில் குறிப்பிடப்படுகின்றன. புலவர் பாடும் புகழைப் புரவலர் விரும்பிய பாங்கும், புரவலர் புகழைப் புலவர் கரவாது போற்றும் பான்மையும் வெளிப்படுகின்றன.

மு. நளினி
சீத்தாலட்சுமி இராமசாமி கல்லூரி (தன்னாட்சி)
திருச்சிராப்பள்ளி – 2

தீருவரங்கத்து லைகாசீத் தீருவிழா

காவேரி, கொள்ளிடம் ஆறுகளுக்கு இடையே அமைந்துள்ள புகழ் பெற்ற வைணவத் தலம் திருவரங்கம். முதன் முதலாகச் சிலப்பதிகாரத்தில் தான் திருவரங்கத்தைப் பற்றிய குறிப்பு கிடைக்கிறது. அந்தப் பாடலில் இறைவன் திரைவிரியும் காவிரி யாற்றிடைக் குறையிலே பாம்பின் மீது பள்ளி கொண்டிருப்பதாகக் கூறப்பட்டுள்ளது.

''ஆயிரம் விரித்தெழு தலையுடை யருந்திறற்
பாயற் பள்ளிப் பலர்தொழு தேத்த
விரிதிரைக் காவிரி வியன்பெருந் துருத்தித்
திருவமர் மார்பன் கிடந்த வண்ணமும்''
(சிலம்பு. காடுகாண் காதை வரிகள் 37-40).

வைணவ ஆழ்வார்களில் மதுரகவி ஆழ்வாரைத் தவிர ஏனைய பதினொரு ஆழ்வார்களின் பாடல் பெற்றது திருவரங்கக் கோயில் இந்தக் கோயிலிருந்து 644 கவெட்டுகளைப் பல்வேறு காலகட்டங்களில் நடுவண் அரசு படியெடுத்துள்ளது. இக்கல் வெட்டுகள் அனைத்தும் தென்னிந்தியக் கல்வெட்டுகள், தொகுதி. இருபத்து நான்கில் பதிக்கப்பட்டுள்ளன. ஒன்பதாம் நூற்றாண்டி லிருந்து பதினெட்டாம் நூற்றாண்டு வரை தமிழகத்தை ஆண்ட பல மரபைச் சார்ந்த மன்னர்களின் கல்வெட்டுகளும், காகதிய, கஜபதி, தெலுங்குச் சோழ மன்னர்களின் கல்வெட்டுகளும் இக்கோயிலிலிருந்து படியெடுக்கப்பட்டுள்ளன.

இவற்றுள் விஜய நகர மன்னர்களின் கல்வெட்டுகள் இக் கோயிலில் தை, மாசி, பங்குனி, சித்திரை, வைகாசி, ஆனி ஆகிய மாதங்களில் சிறப்பாகக் கொண்டாடப்பட்ட பல்வேறு திருவிழாக்களைப் பற்றி விரிவாகக் கூறுகின்றன. இந்தத் திருவிழாக்களைச் சிறப்பாக நடத்துவதற்காக விஜயநகர

மன்னர்கள் பல்வேறு ஊர்களிலிருந்து வரும் வருவாயைக் கொடையாகத் தந்துள்ளனர். ஒவ்வொரு விழாவிற்கும் எந்த மன்னர் கொடையளித்துள்ளாரோ அவர் பெயரிலேயே இவ் விழாக்கள் நடத்தப்பட்டதற்கான குறிப்புகளும் கல்வெட்டுகளில் கிடைக்கின்றன.

தை மாதம் பூபதி உடையார் திருநாள், மாசி மாதம் கிருஷ்ண தேவ மகாராயர் திருநாள், பங்குனி மாதம் ஆதிப்ரஹ்மாவின் திரு நாள், சித்திரை மாதம் அச்சுதராயர் திருநாள், வைகாசி மாதம் ராம ராஜாவின் திருநாள் என மன்னர்களின் பெயராலேயே இவ் விழாக்கள் கொண்டாடப்பட்டுள்ளன. இவை தவிர வேத பாராயணத் திருநாள், திருவாய்மொழித் திருநாள், விருப்பண உடையார் திருநாள், வீரப்ப நாயக்கர் திருநாள், திருமலை ராசாவின் திருநாள், வசந்தன் திருநாள், ராமநவமித் திருநாள், தீபாவளித் திருநாள் எனப் பல திருநாட்களும் திருவரங்கம் கோயிலில் கொண்டாடப்பட்டுள்ளன. மன்னர் பெயரால் நடத்தப் பட்ட திருவிழாக்களுள் பெரும்பான்மையன பத்து நாட்கள் தொடர்ந்து சிறப்பாக நடத்தப்பட்டதற்கான குறிப்புகளைக் கல்வெட்டுகளில் காணமுடிகிறது.

இவ்வனைத்துத் திருநாட்களிலும் வைகாசித் திங்களில் நடந்த திருவிழா ராமராஜர் காலக் கல்வெட்டொன்றில் மிக விரிவாகப் பேசப்பட்டுள்ளது (SII 24:474). கி.பி.1553 இல் விஜய நகர மன்னர் ராமராஜர், திருப்பருத்திச் சீர்மையில், வல்ல நாட்டில் உள்ள பாசாறு, செம்பியனங்களார் எனும் ஊர்களையும், பாசாறு ஊரின் உட்கிடைகளான ஆலம்பள்ளம், கயற்றூர் ஆகிய பகுதி களையும் சேர்ந்த இருபத்தாறு வேலி நன்செய் நிலம், பத் தொன்பது வேலி புன்செய் நிலம் ஆகியவற்றிலிருந்து வரும் தமது வருவாய் இருநூற்றைந்து பொன்னைத் திருவரங்கம் கோயிலுக்குக் கொடையாகத் தந்தார். இந்த இருநூற்றைந்து பொன்னில் வைகாசித் திருவிழாவிற்கு நூற்றெழுபத்தொன்றரை பொன்னும், ஆனி அநுஷநட்சத்திரத்தில் நிகழ்த்தப்படும் திரு ஊஞ்சல் திருநாளுக்கு முப்பத்து மூன்றரை பொன்னும் வைப்பு நிதியாக ஒதுக்கப்பட்டது. இத்தொகையிலிருந்து வரும் வட்டி கொண்டு இவ்விரண்டு திருவிழாக்களும் பெருஞ்சிறப்புடன் கொண்டாடப்பட்டன.

இவற்றுள் வைகாசித் திருநாள் கொண்டாட்டத் தரவுகளே கல்வெட்டின் பெரும்பகுதியை நிரப்பிக்கொண்டுள்ளன. பத்து நாட்கள் நடந்த இத்திருவிழாவின் முதல் நாளன்று, கோயிலில்

கொடியேற்றப்பட்டு விழா தொடங்கப்பட்டது. இறைவனின் இவ்விழாக் கொடியைக் கல்வெட்டு 'திருக்கொடியாழ்வான்' என்று குறிப்பிடுகிறது. திருவிழாவின் இரண்டாம் நாள் தொடங்கி எட்டாம் நாள் முடிய இறைவன் திருக்கோயில் சார்ந்த வாகன மண்டபம், பெரிய திரு மண்டபம், சூடிக்கொடுத்த நாச்சியார் கோயில், முதலாழ்வார் கோயில் மண்டபம், நாச்சியார் கோயில், எல்லைக்கரை பதினாறு கால் மண்டபம் ஆகிய பல்வேறு மண்டபங்களுக்கும் திருமுன்களுக்கும் எழுந்தருளிச் சேவை அளித்தார். இவற்றுள் பெரிய திருமண்டபத்தில் மட்டும் அதன் மேற்குப் பகுதியில் ஒரு நாளும் கிழக்குப் பகுதியில் ஒருநாளும் இறைவன் எழுந்தருளியதாகக் கல்வெட்டுக் குறிப்பிடுகிறது.

நாச்சியார் கோயில்களாகக் குறிக்கப்படும் இரண்டனுள், சூடிக்கொடுத்த நாச்சியார் கோயில் திருவரங்கக் கோயில் வளாகத்திற்குள்ளேயே இருக்கும் திருமுன்னாகும். இது தற்போது ஆண்டாள் கோயிலென்று அழைக்கப்படுகிறது. மற்றொன்று அரங்க நாச்சியார் கோயில்.

விழாவின் ஒன்பதாம் நாள் அரங்கநாதரும் அரங்கநாச்சியும் 'தம்பதி சமேதராய்த்' தேரில் எழுந்தருளித் திருவரங்க வீதிகளில் உலா வந்து காட்சி கொடுத்துச் செல்வர். பத்தாம் நாள் சக்ர பாணத்துத் திருமஞ்சனம் கொண்டு விழா முடிவடைகிறது. இந் நாளில் இறைவனுக்கு அளவற்ற படையல்கள் அளிக்கப்பட்டதாக அறியமுடிகிறது.

இறைவன் விழாநாட்களில் பல்வேறு மண்டபங்களிலும் திருமுன்களிலும் எழுந்தருளிச் சேவை அளிக்கும் போது தேவைப் படும் வழிபாட்டுப் பொருட்களாக ஸமித்து, புல், நெல், எள், எண்ணை, சந்தனம், மஞ்சள், குங்குமப் பூ, கற்பூரம், கஸ்தூரி, திருநாமம், திருகுத்துவிளக்கு, சாம்பராணித் தூபம், பன்னீர்ச் செம்பு, இளநீர், நெய், பழம், வெல்லம், அரிசி, வெற்றிலை, பாக்கு ஆகியன குறிக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு நாள் வழி பாட்டிற்கும் இப்பொருட்களில் எவ்வளவு தேவையோ, அதற் கேற்பக் கோயில் பண்டாரத்திலிருந்து பொன் தரப்பட்டது.

விழா நாட்களில் இறைவனுக்கு அளிக்கப்படும் படையல் களுக்காக அப்பம், அதிரசம், வடை, பொரியமுது, பானகம், சம்பாதளிகை, சேமத்தளிகை, வெள்ளித்தளிகை ஆகியன கோயில் மடைப்பள்ளியில் தயாரித்து வழங்கப்பட்டன. தளிகைகள் யாக சாலையிலும் திருப்பள்ளி அறையிலும் படைக்கப்பட்டன.

இதுபோல் அளிக்கப்பட்ட இத்தளிகைகளின் சிறப்புக்கள், எண்ணிக்கை பற்றிப் பல கல்வெட்டுகள் பேசுகின்றன.

இறைவனுக்கு அர்ப்பணிக்கப்பட்ட படையல் மற்றும் வழிபாட்டுப் பொருட்கள் திருக்கொடி ஆழ்வானுக்கும் திசைக் காவலர்களுக்கும் வழங்கப்பட்டன.

விழா நாட்களில் கலந்து கொண்டு வேண்டுவன செய்த கோயில் பணியாளர்கள் பற்றிய செய்திகளும் இக்கல்வெட்டில் மிக விரிவாகக் கூறப்பட்டுள்ளது. கோயில் பணியாளர்களாகத் திருத்தேர் உட்படாம் நெய்பவர், திருக்கொடிப்படாத்திற்கு வண்ணம் எழுதும் பரிசாரி, கொத்தளப் பஞ்சாளத்தார், குசவர், உலாப்படிப்பவர், திருப்பாதம் தாங்குவார், பந்தம் பிடிப்பவர், பேரிகை, தாளம் அடிக்கும் நம்பிமார், நாடகம் ஆடுகிற அடியார், எல்லைக்கரையில் திருவேளைக்காரர், கைக்கோளர், சமைப்பவர் ஆகியோர் குறிக்கப்படுகின்றனர். இவர்கள் பணிகளுக்குக் கூலியாகப் பணம் கொடுக்கப்பட்டுள்ளது. இவர்களில் சிலர் பரிவட்டம் கொடுத்தும் சிறப்பிக்கப்பட்டுள்ளனர். திருத்தேர்க்குப் புடவை, கொடியேற்றுவதற்குத் தேவைப்படும் பிள்ளைக் கயிறு, தேர் இழுப்பதற்குத் தேவையான பேழை வடம், இளவடம் ஆகியவற்றிற்கான செலவுகள் பற்றியும் கல்வெட்டுக் கூறுகிறது. பிள்ளைக் கயிறு, பேழை வடம், இளவடம் எனும் சொல்லாட்சிகள் குறிப்பிடத்தக்கன. இவை இன்று திருவரங்கக் கோயில் வளாகத்துள் வழக்கில் இருப்பதாகத் தெரியவில்லை.

பத்து நாள் விழாத் தரவுகளைக் கோடிட்டுக் காட்டும் இது போன்ற கல்வெட்டுகள் விரிவாகவும் முனைப்பாகவும் ஆராயப்பட்டு இன்றைய விழாத் தரவுகளோடு ஒப்பு நோக்கப்படு மானால் தமிழ்நாட்டுக் கலை வரலாறு பல புதிய பக்கங்களைப் பெறுதல் உறுதி.

கூ. நிர்மலா தேவி
உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
சென்னை – 600 113

சில சிறு தெய்வப் பெயர்கள் - ஓர் ஆய்வு

நாட்டுப் புறத் தெய்வங்கள், கிராம தேவதைகள், சிறு மரபுத் தெய்வங்கள் என அழைக்கப்படும் சிறு தெய்வங்களில் பெரும் பான்மையனவும், கருமை நிறம் உடையவைகளாகவும், ஆங்கார சினம் கொண்டவைகளாகவும், அடங்காத் தன்மை உடையவைக ளாகவும், கொடூரத் தன்மை படைத்தவைகளாகவும், அச்சம் தரக் கூடியவைகளாகவும், பேய், பூதங்களாகவும், இவற்றின் தலைமைத் தெய்வங்களாகவும் சித்திரிக்கப்பட்டுள்ளன. சில தெய்வங்கள் இராக்கதர், இராக்கதைகளோடு தொடர்பு படுத்தப்பட்டுக் கீழ்மைப்படுத்தப்பட்டுள்ளன.

தெய்வப் பெயர்களும், வழிபாட்டு முறைகளும், கோயில் அமைப்பு முறைகளும், வழிபடுபவர், வழிபாடு செய்பவர், வழிபடும் நேரம், கோயில் அமைந்துள்ள இட அமைப்பு என்ற அனைத்திலும் கலப்பு நேர்ந்து விட்ட இன்றைய கால கட்டத்தில், இச்சிறுதெய்வப் பெயர்களைப் பற்றிய ஆய்வு இவற்றின் உண்மைப் பண்புகளை வெளிப்படுத்தும் என்ற நிலையில் இப்பெயராய்வு மேற்கொள்ளப்படுகிறது.

இயற்கை வழிபாட்டுத் தெய்வங்கள் .

சில சிறு தெய்வப் பெயர்களைப் பார்க்கும்பொழுது அவை தமிழரின் இயற்கை வழிபாட்டுத் தெய்வங்களாயிருந்தவை என்பது புலனாகிறது.

இருளாயி, இருளப்பன் என்ற சிறு தெய்வங்கள் தென் மாவட்டங்களில் பெருவழக்காக இன்றும் வணங்கப்பட்டு வருகின்றன. இருளாயி என்ற தெய்வம் முனியப்ப சாமியைத் தலைமையாகக் கொண்ட 21 தெய்வங்களில் ஒரு தெய்வமாகக் கருதப்படுகிறது. இருளி, இருசி, இருளாயி, இருளாயம்மாள், இருளன், இருளப்பன், இருளப்பசாமி, இருளாண்டி என

இத்தெய்வப் பெயர்கள் அமைந்துள்ளன. இருள் என்பது கருமை என்ற பொருளுடையது எனக் கருதப்பட்டு இவை கருப்பு நிறத் தெய்வங்கள் என்ற நிலையில் அமைந்துள்ளதாக எண்ணப் படுகின்றது.

திராவிடர் தெய்வங்களுள் பெரும்பான்மையனவும் கருமை நிறத் தெய்வங்களே என்ற நிலை இருக்கும் பொழுது, குறிப்பிட்ட சில தெய்வங்களை மட்டும் இவை கருப்பு நிறத் தெய்வங்கள்' எனச் சுட்டும் பொருளுடையதாகத் தமிழர் தம் தெய்வங்களுக்குப் பெயர் வைத்தனர் எனக் கொள்வது பொருத்தமாகத் தெரியவில்லை.

இருள்+இ=இருளி
இருள்+ஆயி=இருளாயி
இருள்+அப்பன்=இருளப்பன்

என்று இவற்றின் பெயர்களைப் பகுத்துப் பார்க்கும் பொழுது, இவை தமிழரின் இருள் வழிபாட்டுத் தெய்வங்களாக இருத்தல் வேண்டும் எனக் கருத இடமுள்ளது.

ஆதி மனிதனின் அச்ச உணர்வைச் சமயம் தோன்றியதற்கான ஓர் அடிப்படையாக அறிஞர்கள் ஒப்புக் கொண்டுள்ளனர். தீ, இடி போன்ற பூத இயற்கைக்கும், பாம்பு போன்ற நச்சுயிர் களுக்கும் இறந்தோராவிகளுக்கும் அஞ்சிய அச்சத்தால் சமய உணர்வு எழுந்தது என அறிஞர்கள் கருதுகின்றனர்.

இருளைக் கண்டு அஞ்சிய மனிதன் இருளை ஒரு தெய்வமாகக் கருதி வணங்கியிருத்தல் வேண்டும். பண்டைய கிரேக்கர்களும் ''இருள் தேவி'' என்ற தேவதையை வணங்கியமை இங்கு இணைத்து நோக்கத்தக்கது.

''இருள் எனும் இத்தேவியைக் காற்று காதலிக்க இக்காதலின் விளைவாக ஒரு வெள்ளி முட்டையை அவளுடைய கருப்பையில் வைத்தான் என்றும், அம்முட்டையிலிருந்து 'ஈராஸ்' எனும் காதல் 'தேவன் பிறந்து உலக இயக்கத்தைத் துவக்கியதாகக் கிரேக்கப் புனைக்கதைகள் அமைகின்றன.

இந்த இருளாயி போன்று இராக்காயி என்ற சிறு தெய்வமும் தமிழகக் கிராம தேவதையாக வணங்கப்பட்டு வருகிறது. இத் தேவதை இராக்கதை, இராட்சசி என்ற பொருளில் அமைந்துள்ள தாகக் கருதப்பட்டுக் கொடூரத் தெய்வமாகச் சித்திரிக்கப் பெற்றுள்ளது. இத் தெய்வப் பெயர் வடிவங்களாக இராக்கி, இராக்கு, இராக்காயி, இராக்கம்மாள், இராக்காச்சி, முத்துராக்கு

போன்றவை அமைகின்றன. இவற்றைப் பகுத்துப் பார்க்கும் பொழுது,

இரா+க்+இ = இராக்கி
இரா+க்+ஆயி = இராக்காயி
இரா+க்+ஆச்சி = இராக்காச்சி
இரா+க்+அப்பன் = இராக்கப்பன்

என அமைகிறது. இதிலுள்ள 'இரா' என்பது இருள் அதாவது கருப்பு என்ற பொருளில் கொள்ளப்பட்டு இது ஒரு ''கருப்பு நிறத் தெய்வம்'' என்ற பொருளிலும் பெயர் வைக்கப்பட்டிருக்கிறது எனக் கருதப்படுகிறது. 'கொடூரப் பண்புகள் கொண்ட அரக்க குண இராட்சசி, 'கரிய நிறத்தேவதை' என்ற பொருளுடைய இப் பெயரையா இம்மண்ணின் மைந்தர்கள் எனக் கருதப்படும், இன மக்கள் தலைமுறை தலைமுறைகளாகத் தம் குழந்தைகளுக்குப் பெயராகச் சூட்டினர் என்ற எண்ணம் எழுகிறது. 'ராக்கு, முத்து ராக்கு', 'ராக்கம்மா கையைத்தட்டு' என்று இன்றைய திரை இசைப்பாடல்களிலும் அமைந்து, அதிகமான மக்களால் முணு முணுக்கப்படும் பெயராகவும் உள்ள இது தமிழரின் இருள் வழி பாட்டுத் தெய்வப் பெயர் எனக் கொள்ள இடமுள்ளது. இப் பெயரின் அடிச் சொல்லாக உள்ள 'இரா' என்பது இரவு, இருள் என்ற பொருளுடையது எனக் கொள்வது பொருத்தம். ஆரியர் தொடர்பின் பின்னர் இது இராட்சசி, இராக்கதைகளோடு தொடர்புபடுத்தப்பட்டுக் கொடூரத் தெய்வமாக மாறியிருக்க வேண்டும்.

இவ்வாறாக இருளாயி, இராக்காயி என்ற சிறு தெய்வங்கள் இருள் வழிபாட்டோடு தொடர்புபட்டுத் தமிழரின் இயற்கை வழி பாட்டுத் தெய்வங்கள் ஆவதுபோல, இன்னும் சில சிறுதெய்வங்கள் இயற்கை வழிபாட்டுத் தெய்வங்கள் எனக் கருத ஏது உள்ளது.

மலைத் தெய்வம்

மலையன், மலைச்சி என்ற சிறு தெய்வங்கள்

மலை+அன்
மலை+ச்+இ

என அமைந்து மலை என்பதை அடிச் சொல்லாகக் கொண்டுள்ளதால் இவை உயர்ந்த, அகன்ற, மலையைத் தெய்வமாகக் கொண்டு வணங்கப்பட்டு இயற்கை வழிபாட்டுத் தெய்வங்களாயிருத்தல் வேண்டும் என்பது தெளிவாகிறது.

ஆயின், மலையன், மலைச்சி என்ற பெயர்கள் வண்டி மலையன், வண்டி மலைச்சி என்ற முன்அடைகளுடன் அமைந்து, அம்மன் மகிஷாசுர மர்த்தினியாக அவதாரமெடுத்து, தாருகாசுரனின் திறமறுத்து, சிந்திய இரத்தத்தை வண்டியிலேற்ற, அந்த இரத்தம் மலையன், மலைச்சி என்ற இயற்கை வழிபாட்டுத் தெய்வங்களுக்கு அசுரத்தன்மை ஏற்றப்பட்டுள்ளது.

காற்றுத்தெய்வம்

காத்தாயி, என்ற பெயர் வழக்கு கிராமப்புறங்களில் வழங்கப் படுகின்றது. இது காத்து+ஆயி என அமைந்தது. காற்றைத் தெய்வ மாகக் கொண்ட நிலையினது எனக் கொள்ள இடமுள்ளது. காத்தவராயன் என்பது காத்து+அர்+ஆயன் என அமைவதால் இது காத்தாயி என்ற பெண்பாற் பெயருக்கிணையான ஆண்பாற் பெயராயிருத்தல் வேண்டும் என்பது தெளிவாகிறது.

இருசுடர், இரு பொழுதுத் தெய்வம்

எல்லம்மன் என்ற சிறுதெய்வப் பெயர் எல்+அம்மன் என அமைகிறது. எல் என்பது சூரியன் என்ற இயற்கைப் பொருளையும் இரவு, பகல் என்ற இயற்கை நிலைகளையும் சுட்டும் பழம் சொல்லாக அமைவதால், இத்தகு இயற்கைப் பொருட்களையும் இயற்கை நிலைகளையும் வழிபடப் பயன்படுத்திய பெயராயிருத் தல் வேண்டும் என்பது புலனாகிறது. 'எல்' என்பது வெயில் என்ற பொருள் படவும் அமைவதால், எல்லம்மனோடு வெயிலுண்டம் மன், வெயிலுகந்தம்மன், வெயிலுவந்தாள் என்ற அம்மன் பெயர் களும் இணைத்து நோக்கத் தக்கதாயுள்ளன. எல்லம்மன் என்பது எல்+ஐ+அம்மன்=எல்லையம்மன் என விரிந்து, இயற்கைப் பொருள், இயற்கை நிலைகளுக்குத் தலைவியாகிய தாய் என்ற பொருள்பட வந்து, பின் எல்லைப்புறத்தைக் காவல் காக்கும் அம்மன் என்ற பொருள்புட மாறியிருத்தல் வேண்டும்.

எல்லம்மன் என்பதன் ஆண்பாற் பெயராக எல்லப்பன் என்பது இருந்திருக்கிறது. எல்லப்ப நாவலர் என்ற பெயராட்சி நினைவு கூரத்தக்கது.

மழைத்தெய்வம்

மாரி என்பது மழை என்ற பொருளில்வரும் பழைய வழக்காதலின் மாரியம்மன் என்பது மழைத் தெய்வமாக அமைந்து இயற்கைவழிபாட்டுத் தெய்வமாக இருந்திருக்கிறது எனக் கொள்ளலாம்.

பெரியது என்ற பொருள்படும் தெய்வப் பெயர்கள்

பேச்சி என்ற சிறு தெய்வம் தமிழக ஊர்ப்புறங்களில் பரவலாக வழிபடப்பட்டு வரும் தெய்வமாகும். இது பேய்ச்சி என்பதன் சுருங்கிய வடிவம் எனக் கருதப்படுகிறது. பேச்சி அம்மன் ஆளந்தக் களிப்பு, பேச்சி அம்மன் தாலாட்டு என்ற சுவடிகளில் பேச்சியைப் 'பேழ்ச்சி' என்று கூறும் பெயர் வடிவம் இடம் பெற்றுள்ளது. 'பேழ்' என்பது 'பெரிய' என்ற பொருளுடையதாகும். பேழ்ச்சி என்ற சொல்லும் 'பெரியவள்' என்ற பொருளில் வழங்கப்பட்டுப் பின்னர் பேய் வழிபாட்டோடு தொடர்புடையதாக ஆகியிருக்க வேண்டும்.

முன்னது என்ற பொருளுடைய தெய்வப் பெயர்

முனியன், முனியம்மாள், முனியாயி, முனியப்பன், முனி யாண்டி, முனியப்பசாமி, பாண்டிமுனி என்ற பெயர் வடிவங் களில் முனி என்ற சிறு தெய்வப் பெயர் வழங்கப்பட்டு வருகிறது. 21 தேவதைகளின் தலைமைத் தெய்வமாகக் கருதப்படும் இது, பெண்களைப் பிடித்தாட்டும் பேய்த் தெய்வமாகவும் கொடூரத் தெய்வமாகவும் கருதப்படுகிறது. முனி பிடித்தல், முனியை விரட்டுதல் எனப் பேய் பிடித்தலையும், பேயை விரட்டுதலையும் இன்றும் கிராம வழக்காகக் காண முடிகிறது.

முடிவுரை

இது வரை கண்ட சில சிறு தெய்வப் பெயர்கள் மூலம், இவை,

1. இயற்கை வழிபாட்டுத் தெய்வங்களாகவும்,

2. பெரியது என்ற பொருள்படுதாகவும், முன்னது, தலைமை யானது, செல்வமாயுள்ளது என்ற பொருளிலும், இயக்குவது, மூலப் பொருளாயுள்ளது, காட்டிலுள்ள அழகுத் தெய்வம் என்ற பொருள் படவும் பிற நற்பொருள் கொண்டனவாகவும் வழங்கப்பட்ட சிறு தெய்வங்கள் என்பது புலனாகின்றது. .இத்தகு பொருளுடைய பெயர் அமைப்புகளைக் காணும்பொழுது, இம் மண்ணின் பெருந்தெய்வங்களாயிருந்தவை, இவைதான் என்பது உறுதிப் படுகின்றது.

இவை இன்று கிராமப்புறங்களில் சிறுபான்மையரால் வணங்கப்படும் சிறு தெய்வங்களாக ஆகிவிட்டன. சில மக்களின் பெயர்களாக மட்டும் வைக்கப்படும் அளவிலும் நின்றுவிட்டன. ஒவ்வொரு தெய்வத்தைப் பற்றிய பெயராய்வுடன், பிற ஆய்வுகளும் இணைய, இத் தெய்வங்களின் வரலாற்று வீழ்ச்சி மேலும் விளக்கமுடையதாக ஆகும்.

நிர்மலா மோகன்
செந்தமிழ்க் கல்லூரி
மதுரை

எந்தன் தோழாவில் வெளிப்படும் பெண்ணியச் சிந்தனைகள்

முன்னுரை

வேத காலத்திலும், பழந்தமிழர் காலத்திலும் ஆணுக்கு நிகரான உரிமை பெற்று வாழ்ந்த பெண், இடைக்காலத்தில் ஆண் மக்களால் அடிமைப்படுத்தப்பட்டாள்; அவளுக்கு உரிய உரிமைகள், கல்வி முதலியன மறுக்கப்பட்டன; அவளுக்குப் பற்பல கட்டுப்பாடுகள் விதிக்கப்பெற்றன. இருபதாம் நூற்றாண்டில் பெண்களை இழிவுபடுத்துவதை எதிர்த்துக் குரல் கொடுத்தனர் பல அறிஞர்கள். பெண்ணின்பால் பெண்மை, தாய்மை, இறைமை என்னும் மூன்று நீர்மைகள் விளங்குவதை எடுத்துக்காட்டிப் 'பெண்ணின் பெருமை' பேசினார் திரு.வி.க; 'பெண்மை வாழ்க, பெண்மை வெல்க' என்று பெண் விடுதலைக்காகக் கும்மியடித்தார் பாரதியார்; 'துறைதோறும் துறைதோறும் துடித்தெழுந்து தொண்டு செய்வாய்' என்று தூண்டினார் பாரதிதாசன். இவ் அறிஞர்கள் பாடியதற்கேற்ப, இன்று பெண்கள் தொடாத துறை இல்லை; செய்யாத வேலை இல்லை என்னும் அளவிற்கு முன்னேறி வருகின்றனர். எனினும், இன்றும் பெண்களின் நிலை முற்றிலுமாக மாறி விடவில்லை; காலங்காலமாக நசுக்கப்பட்டு வரும் பெண், இன்று தனது உரிமைகளுக்காகப் போராடவும், தன் மனக் குமுறல்களை வெளிப்படுத்தவும் துணிந்து விட்டாள். இவ்வகையில், கவிஞர் சுபத்ரா எழுதிய 'எந்தன் தோழா' என்னும் கவிதைத் தொகுப்பு நூல் குறிப்பிடப்பட வேண்டிய நூல். இத்தொகுதியில் இடம்பெறும் பெண்ணியச் சிந்தனைகளை எடுத்துக்காட்டும் வகையில் அமைந்துள்ளது இக்கட்டுரை.

சமூக அவலங்களை எதிர்த்தல்

'எந்தன் தோழா'

காலங்காலமாகப் பெண் பலவீனமானவள் (Weaker Sex) என்று அடக்கி வைக்கப்பட்டிருக்கிறாள். பெண்ணினத்தின் இக் குறை நீங்கும் வகையில் இந்த நூற்றாண்டில் ஒரு சிறு வெளிச்சம்-விடியல்-தோன்றத் தொடங்கியுள்ளது; பெண் விடுதலைக்காகக் குரல் கொடுக்கத் தொடங்கியுள்ளனர் பெண்கள்; அதற்கு ஆண் களின் துணையும் இருந்தால் தான் முடியும் என்பதை முதலிலேயே தெளிவாக்கி விடுகிறார் சுபத்ரா:

''பெண்மை என கணக்கு பண்ணிய/பெண்மைக்குள் இத்தனை புயலா/எனப் பதறி விடாதே!/ இப்பவும் கூட/ உந்தன் துணை இல்லாமல்/எமது விடுதலைப் புயலைக் கடப்பதாய்/உத்தேசமில்லை!/பழைய அழுக்குகள்-அது/உன் மூளையிலும் என் மூளையிலும்/ஏராளம் துடைத்தெறிந்து விட்டுப் புறப்படுவோம் வா!/நாம் நமக்குள் சண்டையிட்டுக்/ கொள்ள வேண்டியவர்கள் அல்ல/நமது இணைந்த கரங்கள் கொண்டு/இவ்வுலகத்தின் போக்கைச் சரிபார்க்க வேண்டி யுள்ளது/... அதற்குமுன்/என் கரங்களின் மீது/உன்கால்கள் இருந்தால் கொஞ்சம் நகர்த்திக் கொள்ளேன்'' (ப.19)

பழமை, மரபு என்னும் பெயரில் திணிக்கப்பட்டு வரும் அழுக்குகளைக் களைந்து புதிய உலகம் நோக்கிப் புறப்படுவதற்கு ஆண்களும் துணை புரிய வேண்டும் என்பதை வலியுறுத்துகிறார் சுபத்ரா.

கேலித் தாக்குதல்

உலகில் எவ்வளவோ முன்னேற்றம் ஏற்பட்டு விட்ட பிறகும் கூட, பெண்களைக் கேலி, கிண்டல் செய்யும் போக்கை ஆண்கள் இன்னும் விடவில்லை. ஆண்களின் கேலி, கிண்டலுக்கு உள்ளான பெண்கள், வளர்ப்புச் சூழ்நிலையால் அவற்றை எதிர்க்க இயலாமல் தம் உயிரைப் பலி கொடுக்கின்ற செய்திகளை ஒவ்வொரு நாளும் செய்தித்தாள்களில் படிக்கின்றோம். 'பெண் நடந்து செல்லும் போது, தனக்கு அருகிலும், பின்னாலும் கேட்கும் கேலிகள், கிண்டல்கள், பஸ்ஸில் பயணிக்கும்போது ஏற்படும் இனம்புரியாத உரசல்கள், தன்னை வெற்றுப் பொருளாக்கித் தன் மேனியைப் பார்வையாலேயே தடவும் விழிகள் - இவை தன் உயிரைக் குடிப்பதாய் - தன்மானத்தைத் தரையில் இழுத்துப் போடுவதாய் - சமூகப் பிரக்ஞையை

சாகடித்துப் பாதுகாப்புச் சிறைகளைத் தேடி ஓட வைப்பதாய் ஒரு யுகத்துக்கு செயலற்ற ஊமைகளாய் ஆக்குவதை எடுத்துக் காட்டுகிறார் கவிஞர் சுபத்ரா:

''மனிதர்களை எங்கோ ஒரு மூலையில் கண்டு/மனதும் செயலும் நிமிரும்போது/உன் ஒரு நிமிட கேலித் தாக்குதல்/ என்னை ஒரு யுகத்துக்கு/செயலற்ற ஊமையாக்கும் என்பது/ உமக்குப் புரியுமா? புரிந்துகொள் தோழா..../உன் ஒரு நிமிட வக்கிர மகிழ்ச்சிக்கு/ என் விடுதலையா விலையாக வேண்டும்?'' (ப.20)

என்னும் அவருடைய வினா நியாயமான ஒன்று.

பெண் பார்க்கும் படலம்

திருமணச் சந்தையில் பெண் படுகிற பாடு கொஞ்ச நஞ்சமல்ல; கவிஞர் இரா.வேலுச்சாமி குறிப்பிடுவது போல், 'சந்தைக்குப் போகும் மாடுகளுக்குக் கூட, பல் பிடித்து, சுழி சுத்தம் பார்த்து விலை நிர்ணயிக்கப்படும்; ஆனால் பெண்களுக்கோ, சடை பார்த்து, நடை பார்த்து, உடைபார்த்து விலை நிர்ப்பந்திக்கப்படும்' அவல நிலை தான் உள்ளது. 'பண்பாடு என்ற பெயரில் பழைய குப்பைகளுக்கா பல்லக்கு தூக்குவது?' என்னும் பெயரில் நடக்கும் கண்காட்சிக் கலாச்சாரத்திற்கு ஒரு முடிவு கட்ட வேண்டும் என்கிறார்;

''ஊமையல்ல என்று உறுதிப்படுத்த பாட்டு/நொண்டியா என்று நிதானிக்க நடை/என் கண்ணை/தோலை, உடலை/ சல்லடையாய் துளைக்கும் பார்வைகள்/ஓ! பார்த்துப் பார்த்து வாங்க/நான் என்ன கடைத்தெரு மிக்சியா? தோழா! தூர! என்று உன்னை துரத்த/நேரம் பிடிக்காது- ஆனால், நீயும் கூட/இந்த நெடிய பாதைக்கு-நம் பண்பாட்டை/நேராக்கும் புதிய பாதைக்கு வரவேண்டும்'' (ப.21)

என்று பெண்ணின் தன்மான உணர்வுக்கு ஆண்கள் மதிப்பளிக்க வேண்டுகிறார்.

வரதட்சணை

'பள்ளியில் படிக்க குருதட்சணை, பள்ளியில் படுக்க வரதட்சணை' கொடுக்க வேண்டிய நிலையில் இருக்கிறாள் பெண். படிக்கும் காலத்தில் 'வாங்க மாட்டேன் வரதட்சணை' என்று வீறாப்பாகப் பேசும் இளைஞர்கள். தமக்குத் திருமணம் என்று வருகிற போது, பெற்றோரைக் காரணம் காட்டித் தப்பிக்க

முயல்கின்றனர். அதனால், 'கரையைத் தொட்டுச் செல்லும் போதே, அதனை அரித்து விடும் அலைகள் போல, கல்யாண மென்ற பெருங்கடல், பெண்ணின் கனவுகளையும், வாழ்க்கை யையும் கரைத்துத் தன்னுள் அடக்கிக் கொள்ளும் அவலத்தைத் (ப.30) தம் நூலில் எடுத்துக்காட்டுகிறார் சுபத்ரா; வரதட்சணைக் கொடுமையால் தாலிக் கயிறுகூடக் கருநாகமாய்த் தோன்றும் அவல நிலையையும் சுட்டுகிறார்:

''வரதட்சணைக் கறைபட்ட/உன்கைகளால்/நீ எடுக்கும் கயிறு கூட/ எனக்குக் கறுப்பாய்த்தான் தெரியும்/ ஆம்! மங்களமான மஞ்சள் கயிறு/அமங்கலமான வியாபாரங்களின் விளைவு தானே?/அதனால்தான் அது கழுத்தில் விழப்போகும்/கரு நாகமாய்த் தோன்றுகிறது எனக்கு.. எனவேதான்/கையைத் தொடும்முன்-கொஞ்சம்/மனதைத் தொடு'' (ப.22)

எனவே, திருமணம் என்பது பணங்களின் சங்கமமாக இல்லாமல், இரு மனங்களின் சங்கமமாக வேண்டும் என்பதைத் தம் கவிதையில் புலப்படுத்துகிறார்.

வரதட்சணைக் கொடுமை ஒரு புறம் என்றால், வராத தட்சணைக்காக 'ஸ்டவ்கள்' வெடித்து, நிஜ விபரத்தை நேருக்கு நேராய்' அடையாளம் காட்டும் அவலம் மறுபுறம் நிலவு வதையும் (ப.26), இக்கொடுமையால், பெண் குழந்தைக்குக் கருவறையே கல்லறை ஆகிவிடுவதையும் (ப.33) எடுத்துக் காட்டுகிறார் சுபத்ரா; மேலும், 'இந்தக் கொலை-குழந்தையின் மீது மட்டுமல்ல-என்மீது - நீ குழி தோண்டிப் புதைத்து விட விரும்பும் - பெண்ணினத்தின் மானம்...கௌரவம்... உரிமை... உயர்வு-இவை அனைத்தின் மீதான தாக்குதல்; நினைவுபடுத்திக் கொள்-நீ நகர்த்த மறுக்கும் ஒவ்வொரு கல்லும் - உனக்கு எதிராய் சேகரித்து வைக்கப்படும். (ப.34) என்று எச்சரிக்கையும் விடுக்கிறார்.

கற்பு

கற்பு, உயிரை விட மேலானது; நாணத்தை விடச்சிறந்தது என்கிறது தொல்காப்பியம்; 'கற்பெனப்படுவது சொற்றிறம்பாமை' என இடைக்காலத்தில் கூறப்பட்டது. கற்பு பெண்ணுக்கு மட்டுமே வலியுறுத்தப்பட்டு வந்த நிலையை மாற்றி, 'கற்பு நிலை யென்று சொல்ல வந்தால் - அதை இரு கட்சிக்கும் பொதுவில் வைப்போம்' என்று முழங்கினார் பாரதியார். இன்றைய சூழ்நிலையில் கற்பு என்றால் என்ன என்பதற்கு ஒரு விளக்கம் தருகிறார் கவிஞர் சுபத்ரா; 'கற்பு என்பது மரியாதை-நீ எனக்கும், நான் உனக்கும், சமூகம் நமக்கும் தரும் மரியாதை... கற்பு என்பது ஓர் உணர்வு, யாருடைய வலுக்

கட்டாயமுமின்றி நான் நானாக இருக்கிறேன் என்ற நிறைவு-உனக்கும் எனக்கும் பொதுவானது' என்று கூறுகிறார்.

''நான் பிறந்தவுடன் பாட்டி அழுதாள்/ம்ஹீம்-இதுவும் பெண் தானா? அன்று முதன்முதலாய்க் கற்பிழந்தேன்/இந்த இருபத் தைந்து வருடங்களில்/எத்தனை முறை-எத்தனை எத்தனை முறை/ வாய்ப்புகள் பறிக்கப்பட்டு/உணர்வுகள் ஒதுக்கப் பட்டு/ திறமைகள் நெறிக்கப்பட்டு/மரியாதை மறுக்கப்பட்டு/ ஓ! பெண்ணாய்ப் பிறப்பெடுத்ததற்காக/எத்தனைமுறை சுருண் டிருக்கிறேன் தோழா, என்னை எனது இயல்பில்/எனது போக்கில் வாழ்விடாத சமூகத்தில்! 'நான் கற்புடையவள்' என்ற பதமே போலிதானே?' (ப.46)

மாற வேண்டிய சமுதாய மதிப்பீடுகள்

'பெண் விடுதலைக் குரல் - பெண்களின் காதுகளைக் கூட எட்டாத நிலையில், பெண் விடுதலை என்றாலே கேலியாகப் பார்க்கும் இச்சமுதாயத்தில் பெண்ணடிமை விலங்குகள் - வலுக்கட்டாயமாக மட்டுமல்ல - பிரியத்தோடு ஏற்கப்படுகிற இச் சமுதாயத்தில் வாதங்களும், எதிர் வாதங்களும் மட்டுமே நிலை மையை மாற்றி விடப் போவதில்லை என்பதை உணர்ந்த கவிஞர், 'மறந்து போன - மரத்துப் போன மனிதத் தன்மையை - அதன் பரி பூரண விடுதலையோடு பிறப்பெடுக்க வைப்போம் - புறப்படு' என்று ஆண்களை நோக்கி நேசக் கரம் நீட்டுகிறார்:

'ஒரு கை கொடு! அழும் குழந்தை என்னுடையது மட்டுமல்ல- நம்முடையதும் தான்! அடுப்புச் சோறு-அதுவும் கூட-நமக்காகத் தான்; செய்தித்தாள்-அது சென்றடைய வேண்டியது-என்னையும் தான்; அலுவலக வேலை உனக்கு மட்டுமா? எனக்கும் தான்! களைப்பும் சோர்வும் கணவனுக்குத் தானா-மனைவிக்கும் தான்; உடலின் வலியை, உள்ளத்துச் சுமையை, வீட்டுப் பணியை மீறி நானும் எழுந்தாக வேண்டும்-ஒரு கைகொடு!' (ப.34) என்று ஆணை நோக்கி நேசக்கரம் நீட்டுகிறார் கவிஞர். 'உறவாய், துணையாய், தோழனாய்-வருவாயா தோழா?' (ப.52)... 'நான் இயல்புக்கு விரோதமாய்ப் பேசவில்லை; மறைந்து கிடக்கும் உன் மனித இயல்புகளை சுட்டிக் காட்டவே பிரியப்படுகிறேன்; முடிவெடு-நீ தோழனாய் மாறுவாயா? பகைவனாய்ப் பொருதுவதையே தொடர்வாயா?' (பக்.55-56) என்னும் கவிஞரின் கவிதை வரிகள் ஆண் இனத்திற்கு விடுக்கும் சவாலாக - வேண்டுகோளாக - மாறிவிடும் சமுதாய மதிப்பீடுகளாக - திருந்த வேண்டிய சிந்தனை ஊற்றாகக்காட்சி அளிக்கின்றன எனில் மிகையன்று.

தா. நீலகண்டபிள்ளை
தெ. தி. இந்துக் கல்லூரி
நாகர்கோவில் – 629 002

விளம்பர உத்திகள்

நாம் வாழும் உலகம் விளம்பர உலகம். இன்று விளம்பரம் இன்றி எதுவும் இல்லை. இன்றைய உலகமும், வாழ்க்கையும் விளம்பர மயமாக மாறி உள்ளது. எங்குப் பார்த்தாலும் விளம்பரம். வகைவகையான, வண்ண வண்ண விளம்பரங்கள். வார்த்தை ஜாலம், படவகைகள், சுவையான சித்தரிப்புக்கள், பயிற்சியுடன் கூடிய விளம்பரங்கள் என அளவிட முடியாத விளம்பரங்கள். ஒருசில பழைய மரபு விளம்பரங்கள் காணப்பட்டாலும், அதிக மான விளம்பரங்கள் இன்று நவீன முறையிலேயே வெளிவரு கின்றன. பழைய மரபு விளம்பரங்கள் கூட, இன்று கணிப்பொறி, மின்னணு சாதனங்கள், இயந்திரங்கள் போன்றவற்றின் ஆதிக்கத் திற்குட்பட்டுள்ளன. ஒவ்வொரு விளம்பரங்களும் தங்களுக்குள் போட்டி போட்டுத் தங்கள் ஆதிக்கத்தை நிலைநாட்டி வருகின்றன. விளம்பரங்களைச் சமுதாயத்தின் தீமையாகவும், ஆனால் தேவையான தீமையாகவும் கருதி வருகின்றனர்.

நோக்கம்

மக்கள் தகவல் தொடர்பு சாதனங்களின் ஐவகைப் பணிக ளாவன: அறிவித்தல், அறிவுறுத்தல், மகிழ்வித்தல், விளம்பரப் படுத்துதல், விமர்சனம் செய்தல் என்பன. செய்தித்தாட்கள், வானொலி, தொலைக்காட்சி, திரைப்படம் போன்றவற்றுடன் இன்று விளம்பர நிறுவனங்களும் இணைந்துள்ளன. விளம்பர நிறுவனங்கள் (Advertising Agency) தனியாகச் செயல்பட்டு விளம்பரத்தை ஊக்குவித்து வருகின்றன. விளம்பரத்திற்காகப் புதிய புதிய அணுகுமுறைகள் இன்று உருவாகி உள்ளன. புதிய உத்திகளும் மக்கள் விரும்பும் வகையில் அறிமுகப்படுத்தப் படுகின்றன. இதன் வாயிலாக வேலைவாய்ப்பும் பெருகியுள்ளன. தொடர்பு சாதனங்கள் விளம்பரப்படுத்துதலையே இன்று முக்கிய நோக்கமாகக் கொண்டு உள்ளன, என்று சொல்லுமளவிற்கு

விளம்பரங்கள் தொடர்பு சாதனங்களின், பொன்முட்டை இடும் வாத்தாக விளங்குகின்றன.

உயிர்நாடி

செய்தித்தாட்களில் நாற்பது விழுக்காட்டிற்கு மேலான இடத்தை விளம்பரங்களே ஆக்கிரமித்துள்ளன. விளம்பரங்கள் இல்லாவிடில் செய்தித்தாட்கள் சிறப்பாகச் செயல்பட முடியாத அளவிற்கு விளம்பரங்களே இதழ்களின் உயிராக உள்ளன. தொடர்பு சாதனங்கள் தன்னகத்தே விளம்பரப்பிரிவு என்னும் அமைப்பைக் கொண்டுள்ளன. அது தனியாக இயங்கும். அதற்குத் தனி மற்றும் துணை பொறுப்பாளர்கள் பலர் இருப்பர். இவர்களே விளம்பரங்களைச் சேகரித்துப், பக்கத்தையோ நேரத்தையோ நிர்ணயம் செய்வர்.

வெற்றி பெறும் விளம்பரம்

புதிதாக அறிமுகப்படுத்தக்கூடிய ஒரு பொருளின் விளம் பரத்தை யார், எவ்வாறு, எப்படி, எந்நேரம் விளம்பரம் செய்வது என்று நன்குத் திட்டமிட்டுச் செய்வதுடன் அதனை மக்கள் மத்தியில் எந்த வடிவில், எவ்வகையில் கொண்டு செல்வது என்பதையும் வகைப்படுத்திக் கொள்ளவேண்டும். இதற்காகத் திட்டமிடல் (Planning) பிரிவு செயல்படும். ஒரு விளம்பரம் செய்தியாக மட்டும் அமையாமல் அது மக்களைக் கவரும் வகையில் அமைதல் வேண்டும், மக்களை அப்பொருளை வாங்கும் அளவிற்குத் தூண்டவும் செய்தல் வேண்டும். எனவே விளம்பரத்தில் (Action) செயல்பாடு (Try) முயற்சி (Prefer) முன்னுரிமை (Like) விருப்பம் (Aware of product) அறிவு போன்றன இருத்தல் வேண்டும். அதுவே வெற்றிகரமான விளம்பரமாகும். ஒரு விளம்பரம் அறிவித்தல் (To inform) வசப்படுத்தல் (To persuade) மீண்டும் மீண்டும் நினைவுபடுத்தல் (To Remind) மீண்டும் நினைக்கத் தூண்டல் (To Reinforce) என்னும் நிலைகளில் விளம்பரங்கள் அமைதல் சிறப்பாகும். செய்தித்தாள்கள் அறிவிப் பதிலும், வானொலி நினைவு கூருவதிலும், சினிமா, தொலைக் காட்சி போன்றன மீண்டும் நினைவுகூரத் தக்க வகையிலும் விளம்பரங்கள் வெளியிடுகின்றன.

உளவியல் அடிப்படை

மனித மனம் எத்தகையது, எதை விரும்பும், எந்தச் செய்திக்கு, மக்கள் முக்கியத்துவம் கொடுப்பார்கள் என்பதை உளவியல் அடிப்படையில் உணர்ந்து விளம்பரப்படம் போன்ற

செய்திகளை உருவாக்க வேண்டும். ஒரு பொருளை எந்த அளவு, எந்த வகையில் மக்களிடம் அறிமுகப்படுத்தவேண்டும் என்பதை உணர்ந்து அதற்கேற்றவாறு அறிவிக்கவேண்டும்.

உத்திகள்

ஒரு பொருளை மக்கள் மத்தியில் எப்படி எடுத்துச் சென்றால், என்ன வார்த்தைகளில் அறிமுகப்படுத்தினால் அது சிறப்பாக அறிமுகம் ஆகும் என்னும் அடிப்படையில் இன்று பல்வேறு உத்திகள் கையாளப்படுகின்றன.

கவர்ச்சி

மனிதன் கவர்ச்சியை விரும்புவது இயல்பு. தன்னையும் பிறரையும் கவரும் விதத்தில் வார்த்தைகளைப் பயன்படுத்து வதில் இன்று யாவரும் கைதேர்ந்தவர்களாய் மாறிவருகின்றனர். விளம்பரத்தில் கவர்ச்சியும், கவர்ச்சிகரமான வார்த்தைகளும் அதிமுக்கியத்துவம் பெறுகின்றன.

எ.டு: வீட்டைச் சுத்தப்படுத்தும், துடைப்பம் விற்பவர்கள் அதை விற்கும் விதத்தை எப்படி மாற்றியுள்ளனர் என்று பார்த்தால், மாறு...மாறு... விளக்குமாறு..டிஸ்கோ விளக்குமாறு.... என கூவி விற்கிறார்கள். (பட்டு குஞ்சலக் கயிற்றால் அதைக் கட்டி விற்கும் போது அது டிஸ்கோ விளக்குமாறு ஆகிவிடுகின்றது) இந்த டிஸ்கோ கவர்ச்சிக்கு மக்கள் மயங்குவது எதிர்பார்க்கப்படுகின்றது.

நிர்பந்தத்தை உருவாக்கல்

ஒரு பொருளை நாம் கட்டாயம் வாங்க வேண்டும் என நிர்பந்தம் செய்தல், அதனை நாம் பெறாவிட்டால் நிச்சயம் நாம் இழப்பினை அடைவோம். குறிப்பிட்டக் காலகட்டத்திற்குள் வாங்கா விட்டால் விலை அதிகமாகிவிடும், தள்ளுபடியை இழப்போம், இலவச இணைப்பைப் பெற இயலாது. பரிசுக் கூப்பன் கிடைக்காது, என்பன போன்ற நிலையில் கட்டாயத்தை உருவாக்கல்.

எ.டு: விழாக்காலத்தள்ளுபடி ஒரு டீ.வி. வாங்கினால் ஒரு ஃபிரிட்ஜ் இலவசம். சென்ற மாதத்தைவிட இந்தக் குறிப்பிட்ட நாட் களில் விலையில் 599ரூ குறைவு. பரிசு கூப்பனில் குலுக்கலில் 5 நபருக்கு ஒரு தங்கக்காசு வழங்கப்படும் என அறிவித்து ஆசையைத் தூண்டிப் பொருளை வாங்கத் தூண்டுவது.

மனமாற்றம் செய்து பணிவு காட்டல்

தன்னிடம் பொருளை வாங்க வந்துள்ள நுகர்வோரிடம் அன்பாக நடந்து, மிகப் பணிவு காட்டி (குல்லாய் போடுதல்)

அவரை மனமாற்றம் செய்ய வைத்து அவரை எப்படியாவது அந்த பொருளை வாங்கச் செய்வது. அன்பும் பணிவும் விற்பனையைப் பெருக்கும், அதிகமாகவும், மீண்டும் வாங்கத்தூண்டும்.

எ.டு: இந்தக் கண்ணாடி உங்கள் வயதைக் குறைத்துக் காட்டுகிறது, இந்த அழகுப் பொருள் உங்களைக் கல்லூரி மாணவியைப் போல் (திருமணம் ஆகாதவர் போல்) காட்டும்.

இந்த சீரி (Saree) உங்களைச் சினிமா ஸ்டார் போலாக்கியுள்ளது. இந்த சபாரி சூட் உங்கள் பெர்சனாலிட்டியைக் கூட்டியுள்ளது (உங்கள் மனைவி பார்த்தால்...)

அவசியத்தைச் சுட்டிக்காட்டல்

''என்ன சார் இன்னுமா நீங்க வாங்கல 'பேஜர்' உங்களைப் போன்ற பிசியானவர்களுக்கு, சமுதாய அந்தஸ்து உடையவர்களுக்கு, எப்போதும் பல இடங்களுக்குச் சென்று வருபவர்களுக்கு, மற்றவர்களின் தேவைக்கு உள்ளாகும் உங்களைப் போன்றவர்களுக்கு இது அவசியம் சார். இது இப்படிச் செயல்படும், இதனால் இலாபம், வருமானம் அதிகம் என அவசியங்களைச் சுட்டிக்காட்டி வாங்குமாறு செய்தல்.

வித்தியாசத்தைக் கூறுதல்

இதுவரை வெளிவந்துள்ள பொருளை விடக் குறிப்பிட்ட ஒரு பொருளை வித்தியாசப்படுத்திக் காட்டல். விலையில் வித்தியாசம், செயல் முறையில் கையாளுவதில் இலாவகம், புதிய நவீன வடிவ மைப்பு, பயன்பாட்டில் வேறுபாடு, புதுமையான யுத்திகள், தானாகவே செயல்படும் தன்மை என அப்பொருள் மற்ற பொருளி னின்றும் வேறுபட்டு நிற்பதை எடுத்துக்காட்டி விளக்கும்போது வாங்குகின்ற மனப்பான்மை அதிகரிக்கும்.

எ.டு: ஃப்ரிட்ஜ் விளம்பரத்தில் ஆட்டோ டி பிராஸ்ட் சிஸ்டம் குறைந்த மின்செலவு, எலக்ட்ரானிக் சாதனங்கள் அயர்ன் பாக்ஸ் போன்றன.

மக்களைப் புரிந்து விற்பனை செய்தல்

திரைப்படத்திற்கு மக்கள் இன்று அடிமைகளாகி உள்ளார்கள். திரைப்படத்துடன் செய்தியை இணைத்து விற்பனை செய்வது பரவலாகி உள்ளது. நதியா கொண்டை, தளபதி புடவை, நாயகன் சட்டை, பாண்டியன் ✓ (சட்டை) சலங்கை ஒலி புடவை, பொற்காலம் சிங்குஜா சேலை ரோஜா சாரி எனச் சினிமாவுடன் தொடர்புபடுத்திப் பொருளை விளம்பரப்படுத்துதல்.

சென்டிமென்ட்

''அம்மா தயாரித்த அதே காஃபி''

''உங்கள் மனசு போல விசாலமானது ஃபிரிட்ஜ்''

''கைராசியும் நம்பிக்கையும் உடையது''.

விளம்பர மந்திர உத்தி

''சுமங்கலி = மங்கலம் மங்களம்''

''நம்பிக்கை நாணயம் கைராசி''

''உண்மை உழைப்பு உயர்வு''

உங்கள் செல்லக் குழந்தைக்காகவே...சோப்

'கல்யாணி கவரிங்...அசல் தோற்றுப்போகும்'

ஒரு துளி ரின் போதும்....

ஒரு நிமிடத்தில் போயே போச்சு,

கிச் கிச் போயிற்று.

வார்த்தைத் தெளிவு

'எது மாதிரியும் இல்லாமல் புதுமாதிரியாக'

'எல்லாரும் மாறிகிட்டிருக்காங்க ஆமா நீங்க'

'தேடினாலும் கிடைக்காது'

'அதெல்லாம் மறந்திருங்க'

'தேடிட்டே இருக்கப் போறிங்க'

என சரியான மயக்கும் வார்த்தைகளை (Catcy Words) பயன்படுத்துதல்.

சந்த நயம்

எதுகை மோனை சந்த நயங்களை அமைத்து விளம்பரம் செய்தல்.

''கோல நிலவழகு கொஞ்சும் விழியழகு''

'பட்டு மேனி பகட்டாய் அமையப் பரணி பட்டு'

'பொன் பட்டு மேனி புண்பட்டுப் போகலாமா,

ராஜேஸ்வரி சில்க்ஸ் அணிவீர்''

முடிவுரை

மேற்கண்ட முறைகளில் இன்று விளம்பரங்களும் விளம்பர உத்திகளும் பல்லாற்றானும் பெருகி உலகை விளம்பரயுகமாக மாற்றி வருகின்றன. இதில் விஞ்ஞானம் அதிமுக்கிய இடத்தைப் பெற்றுள்ளது.

வே. நெடுஞ்செழியன்
அரசு கலைக்கல்லூரி
திருவண்ணாமலை

இஞ்சியும் கடுக்காயும் - இலைனை நோக்கு

தமிழின் பெருமையைப் பேணிக் காக்கும் தொன்மையான கலைகளுள் ஒன்று, சித்த மருத்துவம். இம்மருத்துவத்தில் மூலப் பொருள்களாக விளங்கும் பயிர் வகுப்பு, உயிர் வகுப்பு, தாது-கனிம வகுப்பு ஆகிய மூன்றனுள், பயிர் வகுப்பே இதன் அடிப்படையாகத் திகழ்கின்றது. மூலிகை என்ற பெயரால் அழைக்கப் பெறும் இப்பயிர் வகுப்பில் வேர் முதல் வித்து வரையிலான அனைத்துறுப்புகளுமே பயன்படுகின்றன. உணவே மருந்து; மருந்தே உணவு என்ற கோட்பாட்டில் இயங்கும் இம்மருத்துவத்தின் மூலிகைப் பொருட்கள் பலவும் ஒரு வீட்டின் அடுக்கறையில் - ஐந்தறைப் பெட்டியில் - தோட்டத்தில் இடம் பெற்று விளங்குவன என்பது குறிப்பிடத் தக்கது. அன்றாட வாழ்வில் தொடர்புடைய இம்மூலிகைகளுள் ஈண்டு ஆய்வுக்குக் கொள்ளப் பெறுபவை இஞ்சியும் கடுக்காயும் ஆம்.

'கடுக்காய்க்கு அகணி நஞ்சு; சுக்குக்குப் புறணி நஞ்சு'

'சுக்குக்கு மிஞ்சிய மருந்தில்லை; சுப்பிரமணியனுக்கு மிஞ்சிய தெய்வமில்லை'

'கடுக்காய்க்கு மிஞ்சிய் மருந்தில்லை; கண்ணனுக்கு மிஞ்சிய தெய்வமில்லை'

என்றவாறு பழமொழிகளில் தொடர்பு படுத்திக் கூறப்பெறும் இவ்விரு மூலிகைகளையும் இணைத்து நோக்கி அவற்றுக் கிடையிலான தொடர்பை ஆய்வதே இக்கட்டுரையின் நோக்கம்.

கடுக்காய்

பயிர் வகையில் மர இனத்தைச் சேர்ந்தது கடுக்காய். இக் காயின் பிஞ்சும் முதிர்வும் மருத்துவப் பயன் மிக்கன. இம் மரத்தின் இலை முறடு 'கர்க்கடக சிங்கி' என்ற பெயரில் மருந்தாக

விளங்கிடினும், இதன் காயே சிறப்பு வாய்ந்தது. கடுக்காயில் பல வகைகள் உள்ளன. பசித்தீயைத் தூண்டுதல், செரிப்பித்தல், மலம் போக்குதல் ஆகியவற்றைச் செய்யும் இக்கடுக்காய், எளிய நோய் களான இருமல், நாவறட்சி, அருசி, வாந்தி, விக்கல், தொண்டைக் கட்டு, வயிற்றுப் பொருமல், வயிற்று வலி, கைகால் எரிவு, இடி புண், வீக்கம்; மற்றும் கடிய நோய்களான மூலம், பாண்டு, இளைப்பு, குட்டம், மேகம், காமாலை, பெருவயிறு, காலடிப் புற்று, ஆண்மைக்குறை, வாத நோய்கள் ஆகியவற்றோடு பயிர்-உயிர் நஞ்சுகளையும் போக்கும். இஃது உள்மருந்தாக மட்டுமின்றிப் புறமருந்தாகவும் பணியாற்றுகின்றது. அன்றியும் நரைதிரை மூப்பு களை அகற்றும் காயகற்பமாகவும் திகழ்கின்றது. முக்குற்றங்களை யும் சமப்படுத்துதல்; முதலில் மலம் போக்கியாகவும் பின் மலம் கட்டுவதாகவும் செயல்படுதல் ஆகியன இதன் சிறப்பியல்புகள் என்பர்.

இஞ்சி

பயிர் வகையில் செடியினத்தைச் சேர்ந்தது. இதன் நிலத்தடித் தண்டுக் கிழங்கே இஞ்சி எனப்படுகிறது. இதன் உலர்நிலை சுக்கு என்ற பெயரால் சுட்டப்பெறுகின்றது. இவ்விரு நிலையுமே மருத்துவப் பயன் வாய்ந்தவை. செரியாமை, வயிற்று வலி, வயிற்றுப் பொருமல், கபம், வாந்தி, இருமல், தொண்டைக்கட்டு, மார்பெரிச்சல், பேதி, காதுகுத்தல், தலைவலி, வயிற்றுக்குத்தல் முதலான எளிய நோய்களிலும்; வாதம், சூலை, இரைப்பு, பாண்டு, பெருவயிறு, சந்நிசுரம், மூட்டு வலி, ஆண்மைக்குறை முதலிய கடிய நோய்கள் ஆகியவற்றைப் போக்கும் ஆற்றல் வாய்ந்தது. இதுவும் உள்மருந்தாக மட்டுமல்லாது புற மருந்தாகவும் பணியாற்றுகின்றது. இரைப்பை அழுக்குகளைப் போக்குதல்; ஈரலைப் பலப்படுத்தல்; உடல் உரத்தைப் பெருக்குதல்; நரம்புத் தளர்ச்சி வராமல் காத்தல்; கண்ணுக்கு நலம் பயத்தல்; நினை வாற்றலை அதிகப்படுத்துதல் ஆகியன இதன் சிறப்பியல்புகளாகச் சுட்டப் பெறுகின்றன. நரைதிரை மூப்பு அகற்றிக் காயத்தைக் கல்போலாக்கும் காயகற்பமாகவும் இது செயல்படுகின்றது.

இணை நோக்கு - மருத்துவப் பண்பு

இஞ்சி கடுக்காய் இரண்டுமே அன்றாட வாழ்வில் சந்திக்கும் சிறுசிறு உடல் தொல்லைகள் தொடங்கி, கடுமையான நோய்கள் வரை பலவற்றையும் போக்கி உடலை நன்னிலைப் படுத்துவன வாகவும், நோய் எதிர்ப்பாற்றலை ஊக்குவித்து உடலைக் காப்பன வாகவும், காய கற்பமாகவும் விளங்குகின்றன. அவ்வகையில்,

சித்த மருத்துவம் குறிப்பிடுகின்ற 'வருமுன் காத்தல்; வந்த பின் போக்கல், மீண்டும் வாராமல் தடுத்தல்; காய கற்பம் என்ற நான்கு நிலைகளுக்கும் பொருந்துவனவாக இவ்விரண்டுமே திகழ் கின்றன. குறிப்பாக, பசி தூண்டல், வயிற்றுப் பொருமல், வாந்தி, விக்கல், தொண்டைக்கட்டு, பல்நோய், வீக்கம் ஆகியவற்றில் இரண்டும் இணையான செயல்பட்டன. அன்றியும் இவை இணைந்த செயல் பாட்டு நிலையிலும் சுக்குக் கற்கம், கைகால் வீக்கத்திற்கு இடும் பற்று ஆகியவற்றில் இரண்டுமே இணைந்து விளங்குகின்றன. தனித்தனியே சிறந்த காயகற்பங்களான இரண்டும் இணைந்து முதியவரையும் குமரனாக்கும் ஆற்றலொடு செயல்படுவதை,

காலை இஞ்சி கடும்பகல் சுக்கு
மாலை கடுக்காய் மண்டிலம் தின்றிடில்
கோலை ஊன்றிக் குறுகி நடப்பவன்
காலை வீசிக் கடுகி நடப்பனே'

என்கிறார் தேரையர்.

இஞ்சி கடுக்காய் இரண்டனுள் இஞ்சி அன்றாட உணவில் இன்றியமையாததாக விளங்குவதோடு மருந்து நிலையிலும் சிறப்பிடம் பெற்றுள்ளது. கடுக்காய் மருந்து நிலையில் சிறப்புப் பெற்று, உணவு நிலையிலும் ஊறுகாயாக இனிப்பு ஊறலாக இடம் பெறுகின்றது. சுருங்கக் கூறின், உணவே மருந்தாக இஞ்சி விளங்க, மருந்தே உணவாகக் கடுக்காய் திகழ்கின்றது.

நச்சுப் பண்பு

இஞ்சி, கடுக்காய் இரண்டுமே மருந்துத் தன்மையோடு நச்சுப் பண்பையும் உடன் பெற்றுள்ளன. கடுக்காயில் அதன் நஞ்சுப் பகுதியாக உள்ளே உள்ள கொட்டை அமைந்துள்ளது. இஞ்சியிலோ, புறத்தே உள்ள தோல் பகுதியே நஞ்சாக விளங்குகிறது. இவ்வாறு மருத்துவப் பண்பில் மட்டுமல்லாது நச்சுப் பண்பிலும் ஒப்புமை யுடையனவாக இரண்டும் இருப்பினும், அவற்றின் நஞ்சுறுப்புகள் இடவமைப்பு முரண்பட்ட நிலையில் அமைந்துள்ளது. இக்காரணம் பற்றியே ஒப்புமையுடைய இவ்விரண்டையும் இணைத்து,

'கடுக்காய்க்கு அகணி நஞ்சு; சுக்குக்குப் புறணி நஞ்சு'

என்று முரண் தொடையாகச் சுட்டுகிறது பழமொழி.

சுவைப் பண்பு

இஞ்சி, கடுக்காய் இரண்டுமே சுவையில் மாறுபட்டன எனினும், இன்னாத சுவையின என்ற நிலையில் ஒற்றுமை

உடையன. கடுக்காய துவர்ப்புச் சுவையுடையது. இஞ்சு கார்ப்புச் சுவையுடையது. எனினும், இவ்விரண்டுமே அவற்றின் சுவை காரணமாகவே 'கடு' என்ற ஒரே பெயரைப் பெற்றுள்ளன என்பது குறிப்பிடத் தக்கது. கடுத்தல் சுவை கொண்ட காரணத்தால் கடுக் காய்க்கு அப்பெயர் வழங்கப் பெற்றது. கார்ப்புச் சுவையைச் சுட்டும் வகையில், 'கடுகம்' என்ற பெயரால் இஞ்சி வழங்கப் பெறுகின்றது. மேலும் கடுபத்திரம், கடுபலம், கடுவங்கம் என்ற பெயர்களாலும் இஞ்சி குறிக்கப் பெறுதல் ஈண்டு கருதத் தக்கது. எனினும், இஞ்சிக்குக் கடு என்ற பெயர், ஆகி வரும் பெயரே யன்றி இயற் பெயரன்று; கடுக்காய்க்கோ இயற்பெயராகவே திகழ்கின்றது.

கூட்டுநிலை

மூலிகைகளை ஒரு நூர்மைத்தாய் இணைத்துப் பயன் கொள்ளும் கூட்டு நிலை மருந்துகள் சித்த மருத்துவத்தில் சிறப்பு டையன. அவ்வகையில் முக்கூட்டு மருந்துகளாகத் தமிழர் பயன் பாட்டில் இடம் பெறுவன திரிகடுகம், திரிபலை என்பன. திரி கடுகம் என்பது கீழ்கணக்கு நூல் ஒன்றன் பெயராகவே அமைந் துள்ளமை அதன் சிறப்பை எடுத்துக்காட்டுகிறது. அவ்வாறே 'முப் பழம்' என்ற பெயரால் திரிபலை சுட்டப் பெறுதலைச் சிந்தாமணி காட்டுகின்றது. மேலும், தென்னாட்டவர்க்குத் திரிபலை ஒன்றே போதும் என்ற பழமொழியும் அதன் சிறப்பை எடுத்துரைக்கிறது. இத்தகு சிறப்பு வாய்ந்த திரிகடுகம், திரிபலை இரண்டிலும் முறையே இஞ்சியும் கடுக்காயும் இடம் பெற்றிருத்தலோடு இரண்டிலும் முறையே தலைமை வகிக்கின்றன.

தொண்மைச் சிறப்பு

இஞ்சியும் கடுக்காயும் தொன்மையான மூலிகைகள் என்பதற்குச் சங்க இலக்கியத்திலேயே சான்றுகள் உள்ளன. 'வேம்பும் கடுவும் போல' என்று தொல்காப்பியம் கடுக்காயைச் சுட்டுகின்றது. அவ்வாறே, கள்குடத்தைச் சுற்றிக் கட்டப் பெற்றி ருந்த மாலையில் இஞ்சி இடம்பெற்றிருப்பதைப் பதிற்றுப்பத்து குறிப்பிடுகின்றது. இக்குறிப்புகள் இரண்டுமே அவற்றின் சுவைத் தன்மையைச் சுட்டியே அமைந்துள்ளன என்பது குறிப்பிடத் தக்கது.

வழக்கு மரபு

தொன்மையான இவ்விரு மூலிகைகளுமே தொடர்ந்து வழக்கிலும் சிறப்புடன் விளங்கி வருகின்றன. மருத்துவத் தன்மையால் மக்கள் வாழ்வில் நெருக்கமுற்று அவர்தம்

வாழ்வியலிலும் இடம் பெற்றுள்ளமையை மக்கள் வழக்காறுகள் காட்டுகின்றன. ஒருவன் ஏமாற்றுவதைக் குறிப்பிட 'கடுக்காய் கொடுத்தான்' என்ற மரபுத் தொடர் வழங்குகின்றது. அவ்வாறே செய்த தவற்றை மறைக்க முடியாது என்பதைக் குறிக்க, 'கடப் பாரையை விழுங்கி விட்டுச் சுக்குக் கஷாயம் குடித்தால் தீருமா' என்ற பழமொழியை வழங்குகின்றனர்.

இஞ்சியின் மருத்துவப் பயன்பாட்டைக் கருதி, 'சுக்குக்கு மிஞ்சிய மீருந்தில்லை; சுப்பிரமணியனுக்கு மிஞ்சிய தெய்வ மில்லை' என்ற பழமொழி வழங்கப்படுகின்றது. சைவப் பெருங் கடவுளாகிய சிவனின் மைந்தனாகச் சித்தரிக்கப் பெறுபவன் முருகக்கடவுள். சிவனுடைய ஆற்றலின் முழுமை யான வடிவமாக முருகனைச் சுட்டுதல் சைவ மரபு. அதே போன்று மருத்துவ உலகில் நோய் எதிர்ப்பு ஆற்றலின் முழுமையான வடிவமாகச் சுக்கைக் கருதும் போக்கிலேயே இப்பழமொழி உருவாகியிருக்க வேண்டும். எனவே, இறைமையில் தலைமைக்கு முருகனைப் போன்று, மருத்துவ மூலிகைகளில் தலைமைப் பேற்றைச் இஞ்சிக்கு வழங்குவதாக இப்பழமொழி விளக்குகின்றது.

முடிவுரை

இதுகாறும் கண்டவற்றால், இஞ்சியையும் கடுக்காயையும் பழமொழிகள் இணைத்துச் சுட்டிய தொடர்பு எதேச்சையாக விளைந்ததன்று; அவற்றின் பயன்பாட்டை முழுமையாக உணர்ந்த காரணத்தாலேயே தொடர்புபடுத்தி வழங்கியுள்ளனர் என்பது பெறப்படுகிறது. மேலும், இவ்வாய்வின் வழிப் பெறப்பட்ட முடிபுகளாவன:

1. இஞ்சி, கடுக்காய் இரண்டுமே மருத்துவப் பண்பில் தலைமை பெறுவதோடு மருத்துவச் செயல்பாட்டிலும் இணையான செயல்திற்ன் பெற்றவை.
2. சுவைப்பண்பு காரணமாக இரண்டுமே 'கடு' என்ற பெயரால் சுட்டப் பெறுகின்றன.
3. கூட்டு மருந்து நிலையிலும் இரண்டுமே தலைமை பெற்றுத் திகழ்கின்றன.
4. சங்க காலத்திலேயே சிறப்புடன் விளங்கின.
5. தொடர்ந்து மக்கள் வழக்காற்றிலும் சிறப்பிடம் பெற்று விளங்குகின்றன.

முரசு. நெடுமாறன்
புதுவைப்பல்கலைக்கழகம்
புதுச்சேரி – 605 014

மலேசியத் தோட்டப்புறப் பாடல்களில் பெண்ணியம்

இன்று இலக்கிய ஆய்வில் பெண்ணியம் பற்றிய சிந்தனைகள் பரந்துள்ளன. ஆனால் அஃது இலக்கியத்துள் நீளப் பேசப்பட்டே வந்துள்ளது. கற்றவர் படைத்த ஏட்டு இலக்கியத்துள் உள்ளது போலவே கல்லாத மாந்தர்களும் வாய்மொழி இலக்கியத்துள்ளும் அது நிரம்பப் பேசப்பட்டுள்ளது. மலேசியத் தோட்டப்புற இலக்கியத்துள் பெண்ணியம் இடம் பெற்றுள்ள மையை ஒரு கண்ணோட்டமிடுவதே இக்கட்டுரையின் நோக்கம்.

பதினெட்டாம் நூற்றாண்டின் இறுதியிலிருந்து ஒப்பந்தக் கூலிகளாய் மலேசியாவிற்குக் (1963 - ஆம் ஆண்டிற்குப்பின் மலேசியா) கொண்டு போகப்பட்ட தொழிலாளர் வாழ்வு துன்பம் மிகுந்தது. எழுத்தில் வடிக்க வொண்ணாத்துயர் மிகுந்தது. ஓர் அடிமை நாட்டிலிருந்து மற்றோர் அடிமை நாட்டிற்கு ஆண்டவர்களால் ஒப்பந்தம் என்ற பெயரில் கொண்டு போகப்பட்ட அவர்கள் வாழ்வு மகிழ்ச்சி நிரம்பியதாய் இருக்கமுடியுமா?

காலை 4.30 மணிக்கு எழுந்து பொழுது சாயும்வரை (முன்பெல்லாம் நேரவரையறை இல்லை) காடுகளை அழிக்கவும், சாலைகள் போடவும், புகை வண்டிப்பாதை அமைக்கவும், ரப்பர், தென்னை பயிரிடவும் இன்ன பிறதொழில்கள் செய்யவும் அவர்கள் சிந்திய உழைப்பு கொஞ்ச நஞ்சமன்று.

இங்ஙனம் உழைத்துக் கனவிடை மெழுகென உருகும் அவர்களுக்குக் குடும்பப்பணிகளும் உண்டல்லவா? வீட்டைத் தூய்மை செய்தல், உணவு சமைத்தல், உடைகள் துவைத்தல், குழந்தைகளைப் பராமரித்தல் போன்ற பணிகளிலும் அவர்கள் ஈடுபட்டாக வேண்டும். இப்பணிகளில் மிகப்பெரும் பகுதி பெண்கள் தலையிலே விழும் என்பதைக் கூறத் தேவையில்லை.

காலையில் எழுந்ததும் சமையல் பணி, குழந்தைகளுக்குப் பாலூட்டிவிட்டுக் காப்பகங்களில் விடப்போகும் குழந்தைகளுக்குப் பகல் உணவு, வேலை செய்யும் இடங்களுக்கு எடுத்துச் செல்ல உணவு எனப் பல பணிகளை உடன் மின்னல் வேகத்தில் முடித்தாக வேண்டும். வேலை முடிந்து வீட்டிற்கு வந்ததும் இரவு உணவு சமைக்க வேண்டும். குடிகாரக் கணவன் வாய்த்தவர் துன்பத்தைச் சொல்ல முடியாது.

தோட்டப்புறப் பெண்கள் அடைந்த துயரங்களை வரலாற்றில் காண இயலாது; எழுத்து வடிவிலுள்ள இலக்கியங்களிலும் காண இயலாது - அவர்தம் உண்மையான நிலையை அவர்களே பாடியுள்ள வாய்மொழி இலக்கியங்களான தோட்டப் புறப் பாடல்களிலேயே காண முடியும்.

''கரடிகள் புலிகள் வாசம் செய்யும்
மலாய் நாட்டிலே-பெண்கள்
கட்டிய புருஷனை விட்டுப் பிரிந்து
கலங்குகிறாள் மண்மேட்டிலே....!''
(மலேசிய நாட்டுப்புறப் பாடல்கள் பக்கம்17)

கட்டிய கணவனை ஏன் பிரிந்தாய்? கணவனைக் காட்டு விலங்குகள் கொன்றிருக்கலாம்; மரம் முறிந்து விழுந்து மாண்டிருக்கலாம்; சப்பான் ஆட்சியிலே (1941-45) சயாடிற்கு இரும்புப் பாதை அமைக்க இழுத்துச் சென்றபோது உயிர்விட்டிருக்கலாம். இது கைம்பெண்டிர் துன்பத்தை எடுத்துரைக்கிறது.

காலையில் வேலைக்குப் புறப்பட எல்லாவற்றையும் தயார் படுத்துவது பெரும்பாலும் பெண்களே. ஆண்கள் இப்பணிகளில் பெரும்பாலும் கட்டளை இடுபவர்களே. இதோ ஒரு பாடல்,

''எழுந்திருடி ராமாயி
பெரட்டுக்குப் போடி
அந்த வெள்ளைக் கார
பெறட்டுக்கு வாறான்
ஏத்துளி குட்டிச்சாக்கு
எங்கடி வச்ச...?''
(மலேசிய நாட்டுப்புறப்பாடல்கள் ப.19)

இங்ஙனம் மனைவியை வேலை வாங்குவர் கணவர். வீட்டின் எல்லாப் பணிகளுக்கும் பெண்களே அச்சாணியாய் நின்று உழல வேண்டும்.

பெண்களுக்குத் தொல்லை வீட்டோடு தீர்ந்து விடுவ தில்லை. வெளியிலும் அவர்கள் தங்களைக் காப்பாற்றிக் கொள்ளப் போராட வேண்டியுள்ளது. தோட்டப்புறத்திலே 'கங்காணிகள் நினைத்ததைச் செய்ய முடியும். மேலிடம் அவர்களுக்குக் கொடுக்கும் சலுகை மிகுதி. கங்காணிகளால் பெண்களுக்குப் பல தொல்லைகள் விளைவதுண்டு தன் விருப்பத் திற்கு மாறாக நடந்தால் அங்ஙனம் நடப்பவர் பல இடையூறு களைச் சந்திக்க நேரும். இடையூறுகளுக்கு அஞ்சுவோர் வளைந்து கொடுப்பதுண்டு; எதிர்த்துப் போராடுவோரும் உண்டு.

கங்காணியின் செயலால் கலக்கமுறும் ஒரு பெண்ணின் கதை இது;

''மாயமே உருவாகி நான்
ஏனெடுத்தேன் பெண் சோகம்
மாமா வந்தீங்களா-கங்காணி
சொன்னத கேட்டீங்களா?
என்னடி சொன்னான்?
குத்துக் கட்டுல நிக்கச் சொன்னான்
அங்கே சாப்பாடு இருக்கு
சாப்பிடச் சொன்னான்.''

(மலேசிய நாட்டுப்புறப்பாடல்கள் ப.59)

பாட்டின் முற்பகுதி, பிற்பகுதியின் பொருளைத் துல்லியமாய்க் காட்டுகிறது.

இதுபோன்ற சூழல்களில் எதிர்த்துப் போராடும் வீராங்கனைகளையும் காணமுடிகிறது.

கங்காணி : கூடைமேலே கூடைவச்சுக்
கொழுந்து எடுக்கப் போற பெண்ணே
உன் தோளு வளையலுக்குப்
பொறந்தாண்டி ஆறு மாசம்
தங்கமே தங்கம்.

கன்னி: கங்காணி கங்காணி
அந்தப்புத்தி வைக்காதடா
நான் அடிமைக்கு இல்லாம
தோல உரிச்சிடுவேன்...!

இங்ஙனம் நெஞ்சுரங் கொண்ட பெண் புலிகளும் தங்கள் உறுதியைப் பதிவு செய்து விட்டுப் போயிருக்கிறார்கள்.

தாலாட்டில் வெளிப்படும் துன்பம் :

ஆராரோ ஆராரோ
இந்தப்பாலும் அடுப்பிலே
பாலகனும் தொட்டியிலே-இந்தப்
பாலகனைப் பெத்தெடுத்த
பாண்டியனும் கட்டிலிலே!
. . . . . .
கண்ணே நீ உறங்கம்மா
மைக்கொண்டு வருவாயோ
பொன்னே நீஅழுதா
பூக்கொண்டு வருவாயோ
பாலுந்தான் அடுப்பிலே
பாலகனும் தொட்டிலிலே
பால இறக்குவனோ
நான் பெத்த செல்வத்த ஈந்துவனோ
. . . . . .
ஆராரிராரோ ஆராராரிரோ
இந்த மாணிக்கத்த நா
வைச்சிருந்த இந்த மணிக்குடல் வேகுதடா!
இந்தச் செண்பகத்த நா
வைச்சிருந்த இந்தப்
பாவம் செஞ்ச அம்மாளுக்குச்
சிறு குடலு பாவி வேகுதடா!

(மலேசிய நாட்டுப்புறப்பாடல்கள்) (ப.96)

எப்படிச் செய்தாலும் பெண் பெருமை பேசப் பெறாததால். பெண்ணாய்ப் பிறந்ததிற்காக வருத்தமுறும் ஒருபெண், உன் வயித்திலே பூத்திருந்த நா நாத்திலே பூத்திருந்தா அருக்க மல்லி பூ வென்னு இன்னைக்கு அம்மனுக்குச் சூட்டுவாங்க இன்னைக்கு குடலுல பூத்தது குலத்திலே பூத்திருந்தா கொடமல்லி பூவென்னு ராஜ பொற்கோவிலுக்குச் சாத்துவாங்க என்று பாடுகின்றாள். (மலேசிய நாட்டுப் புறப்பாடல்கள்)

அஃறிணைப் பொருள்களான பூவும், புள்ளும் கூடப் பெண்களின் குறைகளைக் கேட்டால் அழுதுருகும் ஆனால் இந்த ஆடவர்களின் மனது சிறிதுகூட இரக்கம் கொள்ளவில்லை. பெண்களின் குறைகள் கேட்கப்பெறவில்லை என்ற தனது மனக்குறையை ஒரு பெண் தெரிவிப்பது பின்வருமாறு.

'இன்னைக்குப் பூமரத்துக் கீழிருந்து
பொண்ணுகுறைய
சொல்லி அழுதா
இன்னைக்கு பூவும் எழுந்து அழும்
பொண்ணும் குறைய கேட்கும்
இன்னைக்கு மாமரத்துக் கீழிருந்து
மங்கைகுறைய
சொல்லி அழுதா
மங்கை குறை கேட்காதோ
இன்னைக்கு மாமரத்துப் பட்சியெல்லாம்
மனமிரங்கிப் போகாதோ
பொண்ணு பொலம்ப நல்
பொண்ணு குறை தீராதே!
இன்னைக்கு மண்ணு பொலம்ப நல்
மங்கை குறை தீராதே
. . . . . .

இங்ஙனம் பெண்ணின் வாழ்க்கையில் தொட்ட இடமெல்லாம் துன்பம் கொப்பளிப்பதைத் தோட்டப் புறப்பாடல்கள் நன்கு எடுத்துக்காட்டுகின்றன.

துணைநூல்

தண்டாயுதம். இரா. மலேசிய நாட்டுப்புறப்பாடல்கள் தமிழ்ப் புத்தகாலயம், சென்னை. 1998.

தி. நெல்லையப்பன்
சண்முகா தொழிற்சாலைக் கலை, அறிவியல் கல்லூரி
திருவண்ணாமலை – 606 603

வண்ணச்சரபத்தின் எழுத்திலக்கணநெறி-1

முன்னுரை

வண்ணச்சரபம் அருள்மிகு தண்டபாணி சுவாமிகள் (22.11.1839 - 5.7.1898) அறுவகை இலக்கணம் (1893) என்ற மூல முதல்நூலையாத்துள்ளார். இதில் எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணி, புலமையிலக்கணம் மொழியப்பட்டுள்ளது. பொதுப்பாயிரம், சிறப்புப்பாயிரம் (அட்டாவதானம் பூவை. கலியாணசுந்தரமுதலியார்) அமைந்து 786 நூற்பாக்களால் இயற்றியுள்ளார். எழுத்தில் மூன்றும் சொல்லில் நான்கும் பொருளில் பத்தும் யாப்பில் ஏழும் அணியில் ஐந்தும் புலமையில் ஆறுமாக முப்பது ஐந்து இயல்களை இயல்பு, நிலை என்ற இரண்டு உள்ளீடுகளில் அமைத்துள்ளார். நூற்பாக்கள் இலக்கிய நலம் செறிந்ததாக உள்ளன. இலக்கண விதிகளை வகுத்துரைக்கும் நூற்பாவிலேயே அவற்றிற்குரிய சான்றாதாரங்களையும் தந்திருப்பது இவ்விலக்கண நூலின் புது முயற்சியாகும். ஈண்டு எழுத்திலக்கண நெறிகளாக உரு ஓசையியல்பு, நிலையியல்பு, புணர்ச்சியியல்பு ஆகியன ஆய்வு எல்லைகளாகும்.

உரு ஓசையியல்பு நெறி

இதில் அமைந்த முதல் நூற்பா நுதலிப்புகுதல் முறையில் இலங்குகிறது. இயல் முடிவில் இடம் பெற்ற நூற்பா இன்ன பொருள் பற்றி மொழிந்தோம். இனி இன்ன பொருள்பற்றி மொழிய இருக்கின்றோம் என்பதை உணர்த்தும் போக்கில் 'உரைத்தாம் என்றல்' என்றும் 'உரைத்தும் என்றல்' என்றும் சொல்லாட்சிகள் இடம் பெறுவதே சான்றாகும்.

தொகைநூற்பா 'தமிழ்ப்பெயர்' என்று தொடங்குகிறது. மொழியை 'முது' என்று சுட்டியுள்ளார். உயிர், ஆய்தம், ஒற்று, உயிர்மெய், அலகு, கட்டு, குறிப்பு என்று ஏழ்வகையாக அமைத்து

இலக்கணமாக்கியுள்ளார். இதில் அலகு, கட்டு, குறிப்பு என்பன உயிர், மெய், ஆய்தம், உயிர்மெய் என்னும் நான்கும் முதலாவன எனக்கருதிச் சிலர் நான்கெழுத்துக்களுக்கே இலக்கணம் அமைத்தனர் என்பதை முன்னோர் முடிபாக மொழிந்துள்ளார்.

எழுத்து என்பது வடிவுடன் ஓசை கொண்டது என்றும் அதன் வழி உருவியலை உணர்ந்து கொள்ளவியலும் என்றும் கூறி உரு ஓசைக்கு நூற்பா விளக்கம் தந்துள்ளார்.

எழுத்துக்களை வகையமைப்பு முறையில் உயிர் எழுத்துக் களின் உருவாக்கத்தையும், ஆய்த உருவாக்கத்தையும் கூறி, மெய் யெழுத்துக்களைக் ககரவருக்கம் தொடங்கி னகர வருக்கம் வரையில் உருவாக்கி எழுத்துக்களின் உருவாக்கத்தைப் பயிற்று வித்தல் முறையில் இலக்கணமாக்கியுள்ளார். இம்முறை ஏனைய இலக்கண நூல்களில் இடம் பெறாத புதுமையாகும்.

எழுத்துருவாக்கத்திலேயே ஓசையியல்பையும் இணைத் துள்ளது இவரின் இணைப்பிலக்கணச் சிந்தனையைக் காட்டுவ தாகும். இதனை, அ, விற்கு அமைந்த நூற்பாவில் காணலாம்.

''கிளிமுகம் போலச் சுழித்துக்கீழ்க்கொணர்ந்(து)
இடப்பால் நீட்டி மேல்வளைத்து இடைவெளி
அமைதர வலத்தீர்த்(து) அம்முகம் அடங்க
மேலீர்த்(து) அம்முறை கீழும் ஈர்த்தல்
அகரக்குறியாம் ஆண், இளங் கன்றிற்கு
இரங்கலில் மூலத்து எழும் காற்றுணைக் கொடு
சிறிது வாய் திறந்து ஒலிக்கும்'' ---.

என்பதில் உருவும் ஓசையும் அமைத்துக்காட்டியதை உணரலாம்.

ஆய்த எழுத்தைக் குறிப்பிடுகையில் 'உரித்த தேங்காய்க் கண்போல்' என்று குறிப்பிட்டு, ஓசையை, அலமரும் காக்கையின் குளறல் என்றும் மொழிந்துள்ளார்.

மரபடிப்படையில் உயிர் மெய் நெடிலுக்குச் சாரியை புணர்த்துக்கூறும் வழக்கம் இல்லை. இவர் புதிதாக வழக்கம் மேற்கொண்டு 'ககரம்' 'ங்காரம்' என்பனபோல் நகர வருக்கத்தில் மொழிந்துள்ளமையை,

''கோ எனும் எழுத்தின் மூன்றாம் குறியின்
ஈற்றுவரையைக்குறைத்து அதிற் கூகரத்து
ஈறுறப் பொருத்தி''....

என்று நூற்பாவாக்கியுள்ளமை அறியத்தக்கது.

பண்டைய தமிழ் அளவை முறையை அலகு என்பதில் குறிப்பிட்டுள்ளார். இதில் கீழலகு, நடுவலகு, மேலலகு, அளவை என்று வகைப்படுத்தியுள்ளார்.

கீழலகில் எண்ணுக்குரிய முந்திரி, காணி, மா, அரை, முக்கால் என்பனவும், மேலலகில் தமிழ் எண்களின் உருவாக்க மான (க முதல் கூ) என்று ஒன்று முதல் ஆயிரம் வரை எண்களுக் குரிய வடிவங்களையும் அளவலகில் ஆழாக்கு, உழக்கு, நாழி, குறுணி, பதக்கு, துணி, கலம், போன்றவற்றிற்குரிய தமிழ் எண் களையும் கட்டெழுத்துக்களில் நாழி, நெல், சங்கிலி, மாகாணி, கோடி, மரக்கால், குறுணி, கோட்டை, இலக்கம் போன்றவற்றின் வடிவங்களும் உருவாக்கம் பெறுகின்றன.

குறிப்பெழுத்துக்களின் அலகையும், குறிப்பு அறியுங் குறிப்பையும் தனியே நூற்பாவாக்கிப் பண்டைய எண்ணளவை உணரவைக்கின்றார்.

நிலையியல்பு நெறி

இதில் எழுத்துக்களின் ஒலி நிலைக்குரிய மாத்திரை உரைக்கின்றார். வாய்த்திறந்ததும். நெடிலே (ஆ) முதலில் ஒலித்தாலும் அகரத்தையே ஒலிக்குரிய முதல் நிலை என்று இலக்கண ஏற்பாக்கம் செய்கின்றார்.

ஔ என்பது குறில் நெடில் நடுவணாக ஓசையுடையது என்றும், அவற்றிற்கு ஒன்றரை மாத்திரை என்றும் புதுவிளக்கம் தந்துள்ளார். உயிர்மெய்யில் அகரத்தை இணைத்துக்காட்டும் முறையில் நூற்பாவாக்கியுள்ளார்.

எழுத்துக்களைத் தெய்வநிலையில் வைத்துப்பார்க்கும் பார்வை இவரது இறையுணர்வைக் காட்டுகிறது.

அ, ஆ, அய்ன், கலைமகள்; இ-ஈ., அரி, திருமகள்; உ இஊ அரன், உமை., என்று எல்லாத் தெய்வங்களையும் பன்னிரண்டு உயிர்க்கும் பொதுமைப்படுத்திக் காட்டியுள்ளார்.

அகர ஆகார எழுத்துக்கள் கட்டுமுதலிய பொருள் தருதலையும், தன்மை நிலையில் உணர்த்துகின்றார். அகரம் → சேய்மை = அவ்வூர் என்பது போல.

புணர்ச்சியியல் நெறி

மரபிலக்கணப்படி புணர்ச்சியிலக்கணம் அமைக்கா விட்டாலும் சொற்கள் புணர்ச்சியடைந்து அடையும் மாற்றங்கள்

மெய்மயக்க விதிமுறை பற்றிய நெறியில் அமைந்து சிறக்கிறது. குற்றியலிகரம், குற்றியலுகரம், மகரக்குறுக்கம் ஆகியவற்றையும் வகுத்துரைக்கிறார். உயிரளபெடை, ஒற்றளபெடை பற்றிய குறிப்பும் வடமொழிப்புணர்ச்சிகளாகிய தீர்க்க சந்தி, குண சந்தி பற்றியும் குறிப்பிட்டு நூற்பாவாக்கியுள்ளார்.

புறனடையில் பல்+தலை=பஃறலை என்பது போன்ற செய்திகளையும், புகுத்திக்காட்டியுள்ளமை உணரத்தக்கதாகும்.

முடிவுரை

எழுத்திலக்கண நெறி பயிற்றுவித்தல் முறையில் அமைந் துள்ளது. எழுத்துக்களைத் தெய்வ நிலையில் வைத்தும் பார்த்திருக்கின்றார். தன்மை நிலையில் அமைந்த எழுத்துக்கள் சுட்டாகவும் அமையும் புணர்ச்சியில் வடமொழிப் புணர்ச்சியை யும் சுட்டிக்காட்டியுள்ளார். இதுபோன்ற ஏனைய இலக்கண மரபுகளையும் ஆய்வுக் களமாக்கலாம்.

கா. பகவதி
அரசுமகளிர் கலைக்கல்லூரி
புதுக்கோட்டை – 1

இராஜம் கிருஷ்ணன் நாவல்களின் கதை கூறும் முறை

நாவலாசிரியர் தாம் கூற விரும்பும் கருத்தினை வலியுறுத்தவும், கதையினைச் சித்தரிக்கவும் எடுத்துக்கொள்ளும் கதை சொல்லப்படுகின்ற முறையே கதைகூறும் முறையாகும். இதனைக் கதையின் நோக்குநிலை என்றும் கூறுவர். இராஜம் கிருஷ்ணன் 1979 முடிய எழுதிய நாவல்களில் கதைகூறும் முறையை எவ்வாறு கையாண்டுள்ளார் என நோக்குவதே இக் கட்டுரையின் நோக்கம்.

பொதுவாக நாவல்களில் கதைமாந்தர் கதை கூறுவது, கதையாசிரியர் கதை கூறுவது என்ற இருநிலைகளைக் காணலாம். இவ்விருமுறைகளையும் இராஜம் கிருஷ்ணன் தம் நாவல்களில் கையாண்டுள்ளார்.

கதைமாந்தர் கதை கூறுவது

இவ்வகைக் கதை கூறும் முறையைத் 'தன்மையில் விவரிக்கும் பொழுது உண்மையாக நடப்பது போல் நினைக்க வைப்பது' (மோகன்.இரா., கு.ப. இராஜகோபாலன் சிறுகதைகள் ஓர் ஆய்வு, ப.64) என்று கூறுவர். இவ்வரையறையின் செயற்பாடுகளை இராஜம் கிருஷ்ணனின் 'பெண்குரல்' நாவலில் மட்டுமே காணலாம். இவரது பிற நாவல்களிலிருந்து வேறுபட்ட தனித்தன்மையை இந்நாவல் பெற்றிருப்பது, இதன் கதை கூறும் முறையினாலேயே ஆகும்.

இவ்வகைக் கதைகூறும் முறையில் கூற்றுக்குரிய கதைமாந்தரின் அறிவு, உளநிலைப்பண்பு, சூழல் முதலியவை காரணமாகப் பல செய்திகள் தன்மை குறைந்தும், முரணாகவும், மிகையாகவும் வெளிப்படும் நிலை ஏற்படலாம். எனினும்

இந்நாவலின் இறுதியில் கதை நிறைவுறும்போது கதை கூறும் மாந்தரின் தன்னிலை உணரும் நிலை, தன் கருத்துக்களை ஐயுறும் நிலை, பிற மாந்தரின் பண்பு வெளிப்பாடுகள் ஆகியவற்றுடன் இக்கதை கூறும் முறையின் குறைகளை ஆசிரியர் சரிசெய்து விடுகின்றார் இதற்குக் கதைகூறும் மாந்தர் பிறமாந்தருடன் பேசும் பேச்சுக்கள், தனிமொழிகள், எழுத்து நிலையில் வெளிப்படும் உத்தி ஆகியவற்றை ஆசிரியர் பயன்படுத்தியுள்ளார்.

இந்நாவல் கணவன், மனைவி, பிற உறவுகள் தொடர்பான ஒரு கூட்டுக்குடும்பம் சார்ந்த கதை. இது மன, அறிவு நிலைகளில் கதைமாந்தர் கூறக்கூடிய அளவிலமைந்த செய்திகளைக் கொண்டுள் ளதால் இவ்வகைக் கதைகூறும் முறையை இராஜம் கிருஷ்ணன் கையாண்டுள்ளார் எனலாம். இதன் பின்னர், இவரது படைப்புகள் சமுதாய நிலையை வெளிப்படுத்துவனவாய்ப் படிப்படியே விரிவடையத் தொடங்கின. அதனால் கதைமாந்தர் கூற்றில் சமுதாயத்தின் சிறப்பான செய்திகளை அமைப்பது வெளிப்பாட்டு நிலையில் பொருந்தாமை உடையதாக அமைந்து விடும் என்பதால் இராஜம் கிருஷ்ணன் இவ்வகைக் கதைகூறும் முறையைப் பின்னர்ப் பின்பற்ற வில்லை எனத்தோன்றுகிறது.

கதையாசிரியர் கதை கூறுவது

இராஜம் கிருஷ்ணன் தம் நாவல்களில் கதையாசிரியர் கதை கூறும் முறையைக் கையாண்டுள்ளதை எடுத்துரைநோக்கு, ஆசிரியர் கதையினிடையே புகுந்து கூறுகின்ற முறை, காட்சிப்படுத்தல், தனிமொழி அமைத்தல் என்ற பகுப்புக்களின் கீழ்க்காணலாம்.

எடுத்துரை நோக்கு

ஆசிரியர் கதை கூறும்போது இடையில் அவர் புகாமல் கதை கூறும் முறையை எடுத்துரை நோக்கு எனலாம். இராஜம் கிருஷ்ணன் நாவல்களில் இவ்வகைக் கதைகூறும் முறை அதிகம் இடம் பெற்றுள்ளது. அணைத்திட்டம் மூலம் நாட்டின் முன்னேற்றத்தைக் கூறும் பொழுதும், இந்திய அரசியல், கருத்தியல் நிலைகளை விளக்கும் போதும், மனிதாபிமானப் போக்கிலான தீர்வுக்குச் சமு தாயச் சிக்கல்களை வளர்த்துச் செல்லும்போதும் இவரது எடுத்துரை நோக்கின் பரிமாணங்கள் விரிவுபட்டுள்ள நிலை புலப்படுகின்றது. கதைக்கேற்ற பின்னணியும், உத்திகளும், கட்டமைப்பும், அவற்றில் பங்கு வகிக்கும் எடுத்துரை நோக்கும் இவரது திறனை வெளிப் படுத்துகின்றன. உள்ளார்ந்த உணர்வுகளை வெளிப்படுத்தும்போது எடுத்துரை நோக்கு இவரது நாவல்களில் சிறப்புறுகின்றது.

ஆசிரியர் இடையீடு

ஆசிரியரே கதை கூறும் நாவல்களில் இடையிடையே அவர் குறுக்கே புகுந்து பேசுவது கூடாது [இராமலிங்கம், மா., நோக்கு நிலை (சில திறனாய்வுக் கட்டுரைகளின் தொகுப்பு) ப.6] என்பர். எனினும் தொடக்ககால நாவல்களில் வாசகரோடு ஆசிரியர் தொடர்பு கொள்ளும் உத்தி அமைந்து பின்னர்க் கைவிடப் பட்டுள்ளது.

இராஜம் கிருஷ்ணன் நாவல்களில் ஆசிரியரின் இடையீடு புதுப்பாங்கில் உள்ளது. ஒரு கதை மாந்தரின் அவலச் சூழலை மிகுவிக்கவும், பண்பை மிகையாக உணரச் செய்யவும் இவ் வகைக் கதைகூறும் முறை மிகவும் வெளிப்படையாக அமைந் துள்ளது. இந்நிலை இவரது தொடக்ககால நாவல்களில் இடம் பெற்றுள்ளது. எடுத்துக்காட்டாக 'மாயச்சூழல்' நாவலில்,

> 'யசோதைக்கு எப்போதையும் விட அதிகமாகத்தான் எரிச்சல் மண்டியது. பாவம் என்ன செய்யமுடியும் அவளால்?'

என்ற பகுதியில் (ப.149) இரண்டாவது வாக்கியம் இரக்கப் பொருளை வெளிப்படுத்தும் ஆசிரியர் கூற்றாக அமைந்துள்ள தன்மை நோக்குவதற்குரியது. 'பாவம்' என்ற சொல் படர்க்கைப் பெண்பால் சொல்லுடன் பொருந்தும் பொழுது கூற்றின் அந்நியத் தன்மைக்குக் காரணமாகின்றது. எனவே எடுத்துரை நடையில் ஆசிரியர் முன்வந்து நிற்கும் நிலை தோன்றுகிறது.

இரு கதை மாந்தருக்கு இடையே பூசல் ஏற்படும் காட்சியில் ஆசிரியர் ஒரு மாந்தருக்கு ஆதரவாகி விடுகின்றதைக் கதையாசிரியர் இடையீட்டின் மூலம் 'குறிஞ்சித்தேன்' நாவலில் காணமுடிகின்றது.

> 'இப்படி அவன் கீழ்த்தரமான முறையில் வலுச்சண்டைக்கு இழுத்தது ஆண்டவனுக்கே பொறுக்கவில்லை போலும்; மழைபலத்த காற்றுடன் பொழியத்தொடங்கியது'

இப்பகுதியில் (ப.189) தீயவனுக்கு எதிரான கூற்று அமைந்துள்ளது. இக்கூற்றில் ஆசிரியர் குறுக்கிட்டுக்கூறுவதன் மூலம் வாசகரிடம் தான் கருதிய கதை மாந்தர் பண்பை வெளிப் படுத்திக்காட்ட ஏதுவாகின்றது.

இவ்வகைக் கதை கூறும் முறை இராஜம் கிருஷ்ணன் நாவல்களில் அருகிக் காணப்படுகின்றது. இது சிலவிடங்களில் உத்தி போலவும், சிலவிடங்களில் குறைபாடுடையதாகவும் (மலர்கள், ப.50) அமைகின்றது.

காட்சிப்படுத்தல்

நாவலில் கதை கூறவரும்போது ஒரு நிகழ்வை மட்டும் முதன்மைப்படுத்தும் வெளிப்பாட்டைக் காட்சிப்படுத்தல் எனலாம், ஆர்வம் ஊட்டக்கூடிய தேவையான வியத்தகு நிகழ்ச்சிகள், முன்பே அறியவியலாத செய்திகள் போன்ற முதன்மை சார்ந்தவற்றைக் காட்சிப்படுத்தற்குரியன (இராமலிங்கம். மா. நாவல் இலக்கியம் ப.154) என்பர். இராஜம் கிருஷ்ணன் நாவல் களில் இவ்வகைக்கதை கூறும் முறை சிறந்து அமைந்துள்ளது.

''அவள் நேர்ப்பாதையை விட்டு, பனைமரங்களின்
ஊடாகப் போய்த் தலைகள் போல் முட்களுடன் கிளை
விரித்து நிற்கும் முள்மரங்களின் பக்கமாக நடக்கிறாள்.
போலிசுக்காரர்கள் அங்கும் இருக்கின்றனர். கிணற்றடியில்
யாருமில்லை. தெருவில் சிறு குழந்தைகளைக் கூடக்
காணவில்லை. தூற்றல் மழையானாலும் நனைவதையே
ஆனந்தமாகக் கருதும் பிள்ளைகள் எங்கே போனார்கள்?
பெரிய தொப்பிப் போலீசுகளுக்கஞ்சி அவர்கள்
வரவில்லையா?
..... வெளியில் பெண்கள் கூடிக்கூடிப்பேசுவார்கள்;
பேன் பார்ப்பார்கள் சண்டையிடுவார்கள். அவர்கள்
இந்த மழையைப் பொருட்டாக்கித்தான் உள்ளே
பதுங்கி இருக்கிறார்களா?
போலீசு எதற்கு வந்திருக்கிறது?''

என்று 'அலைவாய்க்கரையில்' நாவலில் (ப.202) இடம்பெறும் பகுதியில் ஒவ்வொரு இடமும், அவற்றோடு ஊராரின் பழக்கமும் அப்படியே கூறப்பட்டுள்ளது. இந்நிலைக் கேற்ப இடத்தை விளக்கும் பாங்கும், ஊரார் செயல்களும், போலீசு பற்றிய ஊரார் உணர்வை வெளிப்படுத்தும் சொற்களும், படிப்பிடிப்புபோலக் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன.

இவ்வாறே பிற நாவல்களிலும் காட்சிப்படுத்தலைத் தக்க முறையில் ஆசிரியர் கையாண்டுள்ளார்.

தனிமொழி

ஒரு மாந்தர் தனக்குத்தானே நினைந்து அல்லது பேசித் தன் நிலையை ஆய்ந்து கொள்வதற்காகத் தனிமொழி அமையும். தனிமொழி மனத்தின் தர்க்க ரீதியான அலசலாகவும், வாசகனோடு நேரடித்தொடர்பு கொள்வதாகவும் நிகழ்காலத்தில் அமைவதாகவும் (மோகன். சி. 'நனவோடை நாவல்கள்' பரல்கள்,

இராதாகிருஷ்ணன், ஆர். முதலியோர் (தொ.ஆ) பக்.19-20) கூறுவர். இத்தகைய தனிமொழி இராஜம்கிருஷ்ணன் நாவல்கள் தோறும் இடம்பெற்றுள்ளது. துன்பம், ஐயம், குழப்பம், மனக்கிளர்ச்சி போன்ற உணர்வு நிலைகளை வெளிப்படுத்துவதாக இது அமைகின்றது. எடுத்துக்காட்டாக,

'ஒரு உருப்படி தோய்க்க, துவைக்க சலவை செய்யப்
பத்துப் பைசாவா? துவைக்கலாமே? உடலுழைத்து எந்த
வேலை செய்தால் என்ன? பிறகு ஜட்கா வண்டியில் ஏற்றிப்
போகவேண்டுமா?....அதைத்தான் ஜட்கா
என்று இடக்காகச் சொல்கிறார்களோ? கழுதையின்
மேல் துணியைப் போட்டுக்கொண்டு போனால்
தானென்ன?''

என்ற ('விலங்குகள்' ப.35) பகுதியில் ஐயமான வினாக்களால் ஒரு கதை மாந்தர் நினைத்துக்கொள்ளும் அமைப்பில் தனிமொழி அமைந்துள்ளது.

இதுபோல் எதிர்பார்ப்புகள், இயலாமைகள், எதிர்ப்புணர்வு என எல்லாவகை உணர்வு வெளிப்பாட்டிற்கும் தனிமொழி இவரது நாவல்களில் உதவுகின்றது. மேலும் இவரது நாவல்களில் கதை மாந்தரின் தனிமொழி பெரும்பாலும் ஆசிரியர் கூற்றுப் போன்ற நடையுடன் இணைந்து அமைவது குறிப்பிடத்தக்கதாகும்.

இவ்வாறு உத்திகளில் ஒன்றாகக் கருதப்படும் கதைகூறும் முறை இராஜம்கிருஷ்ணன் நாவல்களில் சிறப்புற அமைந்துள்ளது. இது அவரது படைப்பாற்றலின் தனித்தன்மையை வெளிப்படுத்தும் சிறந்த வாயிலாக அமைந்துள்ளது.

கு. பகவதி
உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
சென்னை – 600 113

கச்சி

ஓர் ஊர் அல்லது நகரின் வளர்ச்சியை அறிய முனையும் போது அதில் காலமுறையிலான அணுகுமுறையே உண்மை யையும் துல்லியத்தன்மையையும் தரும். அவ்வாறன்றி அந்த ஊர் அல்லது நகர் தொடர்பாகக் கிடைக்கும் செய்திகளையெல்லாம் காலம் நோக்காது சொல்லிச் சென்றால் அது அறிவியல் அடிப் படையிலான அணுகுமுறையாக அமையாது; தோற்றம் வளர்ச்சி அவற்றிற்குரிய காரணம் தொடர்பான செய்திகள் அங்குக் கிடைக்காது. மேலும் காலமுறையிலான ஆய்வு நகரமைப்பு குறித்த சிந்தனைகள் பலவற்றைத் தெரிந்து கொள்ளவும் வழி வகுக்கும் என்ற நிலையில் இவ்வாய்வு நகரமைப்புப் புவியியல் துறையினுள் இன்றியமையாததொரு பகுதியாக அமையும். இந்நோக்கில் தமிழக ஊர்கள் அனைத்தும் ஆராயப்பட வேண்டும். இங்குக் கச்சி பற்றிய ஆய்வு அமைகிறது.

கச்சி பற்றிய பல செய்திகள் வரலாற்று மூலங்கள் வழியாகத் தெளிவுபடுகின்றன. கச்சியின் சிறப்பையும், பெருமையையும் குறித்த செய்திகளை இவை இயம்பினாலும், கச்சியின் தோற்றம், தொன்மை, அமைப்பு குறித்த சிந்தனைகள் தெளிவுபடவில்லை. கச்சி தொடக்கக் காலத்தில் எவ்வாறு இருந்தது? அதன் அமைப்பு எவ்வாறு இருந்தது? என்பதை அறிந்து கொள்ள, கச்சியை முதலில் நமக்கு அறிமுகம் செய்யும் சங்க இலக்கியம் சிறிது உதவுகிறது. அதன் பின்னைய வரலாற்றையும் தொடர்ந்து கண்டால் கச்சி பற்றிய முழுமையான வரலாறு விளங்கும் என்ற நிலையில் இங்குத் தொடக்காலக் கச்சியைக் காணும்முயற்சி மேற்கொள்ளப்படுகிறது.

பண்டைத் தமிழரின் வாழ்வியலை அறிந்து கொள்ள மிகுந்த துணையாகச் சங்க இலக்கியங்கள் அமைய, பிறநாட்டார்க் குறிப்புகள், கல்வெட்டுச் சான்றுகள் போன்றன ஒரு சில

செய்திகளைத் தருகின்றன. எனினும் பண்டைத் தமிழரின் வாழ்வியலை முழுமையாக அறிந்து கொண்டோம் எனல் இயலாது. இது போன்றே அவர்கள் ஊர்கள், நகர்கள் குறித்த செய்திகள் தெரிய வருகின்றன எனினும் எல்லாச் செய்திகளையும் தெரிந்து கொள்ளல் இயலவில்லை. கச்சியும் இதற்கு விலக்கன்று.

கச்சி - அறிமுகம்

கச்சியின் தொன்மையையும் தோற்றத்தையும் அதன் அமைப்பையும் தேட முயன்றபோது, கச்சியை முதலில் சுட்டும் சங்க இலக்கியத்தில் கிடைக்கும் செய்திகள் மிகக் குறைவே. பெரும் பாணாற்றுப்படை பாடிய கடியலூர் உருத்திரங்கண்ணனார் தவிர, எந்தப் புலவரும் கச்சியைப் பாடியதாகத் தெரியவில்லை. பெரும்பாணாற்றுப்படையிலும் கச்சியை விளக்குவது புலவரின் நோக்கமன்று. கச்சியை ஆண்ட இளந்திரையனிடம் பாணனை ஆற்றுப்படுத்தும் தன்மையில் வழி சொல்லுகின்றார். கச்சியின் அமைப்பைத் தெரிந்துகொள்ளச் சிறு வாய்ப்பு நமக்கு இங்குக் கிடைக்கிறது.

அடுத்து ஓர் ஊர் பற்றிய ஆராய்ச்சியில் அதனை அடுத்த பகுதிகளின் வரலாறும் துணை செய்யும் என்ற நிலையில், கச்சிக்கு அருகாமைப் பகுதிகள் பற்றிய செய்திகளைத் தேட முற்பட்ட போது, சில செய்திகள் கிடைத்தன.

பெரும்பாணாற்றுப்படையில் புலவர், கச்சிக்கு முன், பாணன் சென்று சேருமிடம் பாம்பணையில் பள்ளி கொண்டிருக்கும் திருமால் கோயில் இருக்கும் ஒரு சோலை என்கிறார். இந்தக் கோயிலிருக்கும் இடத்தின் பெயர் திருவெஃகா என்பது நச்சினார்க்கினியர் கூற்று. இன்று 'யதோத்தகாரி கோயில்' என்று இக்கோயில் அழைக்கப்படுவதாக டாக்டர் மா. இராசமாணிக்கனார் கூறுகிறார் (பத்துப்பாட்டு ஆராய்ச்சி ப-138). ஆயின் திருவெஃகா என்ற பெயரை உருத்திரங்கண்ணனார் குறிப்பிடவில்லை. திருமால் கோயில் உள்ள சோலை எனச் சொல்லி, அங்குக் காணும் காட்சிகளை விளக்கிச் செல்கிறார்.

கச்சிப்பேடு, கச்சியை அடுத்த ஊர். இதுபற்றிய பல பிற்காலத்திய செய்திகள், அறிஞர்களால் விளக்கப்படுகின்றன. இவ்வூர் பற்றிய எந்தச் செய்தியும் சங்க இலக்கியத்துள் கிடைக்காவிடினும், இவ்வூர்ப்பெயர் மட்டும் தெரிய வருகிறது. இவ்வூர்ப் பெயர் இணைந்த புலவர் பெயர்கள் சில, சங்கத் தொகை நூல்களில் காணப்படுகின்றன.

கச்சிப்பேட்டு நன்னாகையார் (குறுந்.30,172,180,192,197,287)

கச்சிப்பேட்டு இளந்தச்சனார் (நற்.266)

கச்சிப்பேட்டுப் பெருந்தச்சனார் (நற்.144, 283)

இவர்கள் பெயர்களினின்றும் இவ்வூர்ப் பெயர் தெரிய வருகின்றதே தவிர, இவர்கள் ஒருவருடைய பாடலிலாவது கச்சி பற்றி எந்த விதக் குறிப்பும் இல்லை.

கச்சிப்பேட்டுக் காஞ்சிக் கொற்றன் பாடிய பாடல் களாக, குறுந்தொகை 213,216 அமைகின்றன. இவற்றுள்ளும் கச்சிப்பேடு அல்லது காஞ்சி பற்றிய குறிப்பேதும் இல்லை. கச்சிப்பேட்டினுள் அடங்கிய சிற்றூராகக் காஞ்சி இருந்திருக்க வேண்டும் என்பது இப்பெயர் தரும் எண்ணம்.

காஞ்சிப் புலவர் பாடியதாக நற்றிணை 123 ஆம் பாடல் அமைகிறது. இவற்றை நோக்க, காஞ்சி என்ற ஊர்ப்பெயர் பல இருந்திருக்கலாம் எனவும், இவற்றுள் கச்சிப்பேட்டினுள் அமைந்த காஞ்சியைக் குறிக்க, கச்சிப்பேட்டுக் காஞ்சி எனச் சுட்டியிருக்கலாம் எனவும் எண்ணத் தோன்றுகிறது. மேலும் இக் காஞ்சிப் புலவரில் அமையும் காஞ்சி, கச்சிப்பேட்டுக் காஞ்சியையே குறித்ததா என்பதும் தெரிவில்லை. இவை பற்றிய எந்தவிதச் செய்திகளும் புலப்படாத நிலையில், முடிவான சிந்தனைகளைப் பெற முடியவில்லை.

எனவே பெரும்பாணாற்றுப்படை கச்சியில் வாழ்ந்த இளந்திரையனைக் காட்டும் தன்மையில், அரசன் அன்று வாழ்ந்த இடமாகக் கச்சி அமைய, அதனைச் சுற்றியிருந்த பல ஊர்களில் மக்கள் வாழ்ந்தனர் என்பதையும், கச்சிப்பேடு அவ்வூர்களுள் ஒன்று என்பதையும் அறியமுடிகிறது.

கச்சி - அமைப்பு

பெரும்பாணாற்றுப்படையில், கடியலூர் உருத்திரங் கண்ணனார், இளந்திரையனிடம் இருந்து பரிசில் பெற்று வரும் பாணன், வறுமையால் வாடி எதிர்ப்படும் பாணனை, அம் மன்னனிடம் ஆற்றுப்படுத்துவதாகத் தமது பாடலை யாத்துள்ளார்.

இவர் கூறும் வழியினை, மிக நுணுக்கமாக, ஆராய்ந்த டாக்டர் மா. இராசமாணிக்கனார், மேற்சுட்டிய நூலில் பெரும் பாணன் தொண்டை நாட்டின் உட்பகுதியிலிருந்து புதிய பாணனுக்குக் காஞ்சிக்குச் செல்ல வழி கூறியுள்ளான் எனத் தெளிவாகத் தெரிகிறது (ப.56) எனக் கூறி மேலும், அவ்வழிகள்

பெரும்பாணன் நின்ற இடத்தினின்று நீர்ப் பெயற்று அருகில் துறைமுக நகரம், பின்னர்ப் பள்ளி கொண்ட பெருமாள் கோயில், பின்னர்க் கச்சி என அமைகின்றதை எடுத்தியம்புகின்றார். (ப.57,58). இவ்வழி கற்பனையன்று; உண்மையே என்பதை இவ்வறிஞர் நிறுவுகின்றார். இந்நிலையில் கச்சியின் அமைப்பு குறித்த செய்திகளும் உண்மையான அன்றைய கச்சியையே காட்டுவன என்ற நிலையில், புலவர் இதனைக் காட்டும் தன்மையைக் காணலாம்.

வழியில் பல ஊர்களையும் கடந்த பின்னர், பாம்பணையில் பள்ளி கொண்டு இருக்கும் சோலையை அடைவாய் என்று கூறி, அச்சோலையை வருணிக்கிறார். அச்சோலையின் இயற்கை எழிலை எல்லாம் சுட்டி, அச்சோலையுள் மகிழ்ச்சியாக இருக்கும் படி கூறி, இறுதியில்

'அருந்திறல் கடவுள் வாழ்த்தி, சிறிது நும்
கருங் கோட்டு இன்னியம் இயக்கினிர் கழிமின்'

என, மேலே செல்லும் படியாகக் கூறுகின்றார்.

இதைப்பற்றி ஆராய்ந்த டாக்டர்.மா. இராசமாணிக்கனார், திருவெஃகா பகுதி வேறு, கச்சி வேறு என்று உரைக்கின்றார்.

கச்சி பற்றிய அமைப்பையும் விளக்கத்தையும் தரும் பகுதி அடுத்துத் தொடங்குகிறது. 393 ஆம் அடி தொடங்கி 405 வரை கச்சியினுள் என்னென்ன காணப்படுகின்றன என்பதைத் தருகின்றார் உருத்திரங்கண்ணார். 406 முதல் 411 வரை மூதூர் எனச் சொல்லி, இதன் சிறப்பினை விளக்குகிறார். 412 முதல் 420 வரை கச்சியோன் என இளந்திரையனைச் சுட்டி, அவனது வீரத்தையும் கைவண் தோன்றலான அவனது வள்ளல் தன்மையையும் குறிப்பிட்டு, கச்சி என்ற ஊரின் பெயரையும் கச்சியில் இளந்திரையன் இருக்கும் தன்மையையும் புலப்படுத்துகின்றார்.

தொடர்ந்து அமையும் பின் பகுதியில் இவனது வள்ளல் தன்மை, விருந்தோம்பும் தன்மை பேசப்படுகின்றன.

393 ஆம் அடி தொடங்கி, கச்சியின் அமைப்பினைச் சொல்லும் புலவர்,

காழோர் இதழ்பதம் நோக்கிக் கீழ
நெடுங்கையானை நெய்ம்மிதி கவளம்
கடுஞ்சூல் மந்தி கவரும் காவிற்
களிறு கதனடக்கிய வெளிறில் கந்தின்

திண்டேர் குழித்த குண்டு நெடுந்தெருவின்
படைதொலை பறியா மைந்துமலி பெரும்புகழ்க்
கடைகால் யாத்த பல்குடி கெழீஇக்
கொடையும் கோலும் வழங்குநர்த் தடுத்த
அடையாவாயில் மிளை சூழ்படப்பை
நீனிற உருவின் நெடியோன் கொப்பூழ்
நான்முக ஒருவற் பயந்த பல்லிதழ்த்
தாமரைப் பொகுட்டிற் காண்வரத் தோன்றித்
சுடுமண் ஓங்கிய நெடுநகர் வரைப்பின்

என்றுரைத்துச் செல்கிறார். சோலைகளில் யானை, யானைப் பாகர், மந்தியின் செயல்களை வருணிக்கிறார். தேரோடும் தன்மையால் குழிந்து காணப்படும் அகன்ற தெருக்களைக் காட்டுகின்றார். அங்குப் படைவீரர்கள் வசிக்கும் தன்மை, கொடையையும், கொள்ளலையும் உடைய வணிகர் கடைகள், அடையாவாயில், காவற்காடு இவை தொடர்ந்து சுட்டப்படு கின்றன. இறுதியாக, தாமரைப் பூவின் பொகுட்டன்ன சுடுமண் வரைப்பினுள் நகர் காணப்படுகின்றது என இப்பகுதியை முடிக் கிறார். அடுத்தப் பகுதியுள் கச்சி மூதூர் என குறிப்பிட்டு, அது பற்றிய விளக்கம் தருகிறார். பழங்களுள் சிறப்பு பெற்ற பலாப்பழம் போல, விழவுகளால் சிறப்புற்று, பழமையும், வெற்றியும் பொருந்திய ஊர் என்பது இங்கு அமையும் கருத்து.

உருத்திரங்கண்ணனார் காட்டும் கச்சியின் இந்த அமைப்பினைப் பற்றி அறிஞர்கள் கருத்துச் சொல்லும்போது, 'கச்சியை சுற்றிலும் கோட்டை காணப்பட்டது; அகழி காணப்பட்டது; கச்சி மாநகரம் தாமரைப்பூவின் வடிவில் காணப்பட்டது' என்று உரைக்கின்றார். மேலும், சோலைகளும் காவற்காடும் சூழ்ந்த கச்சி மாநகர மதில் காணப்படும். இம்மதில் செங்கல் மதிலாகும். அம்மதிலுள் காஞ்சி மாநகரம் அமைந்திருக்கும்' போன்ற செய்திகளும் இது தொடர்பானவை. (டாக்டர். மா. இராசமாணிக்கனார் - பத்துப்பாட்டு ஆராய்ச்சி - ப.59, டாக்டர் ஆர். ஆளவந்தார் - இலக்கியத்தில் ஊர்பெயர்கள் - ப-95)

முதற்பராந்தகன் காலத்தில் திருவெஃகா பகுதி, கச்சிப்பேடு என்று அழைக்கப்பட்டதாக மா. இராசமாணிக்கனார் கூறுகிறார். இதனை நோக்கக் கச்சியில் அரசன் இருக்க, அதனை அடுத்தப் பகுதி கச்சிப்பேடு என்று அழைக்கப்பட்டு இருந்தது என்பதும், இப்பகுதியுள் அடங்கிய சிற்றூர்களாகக் காஞ்சி, திருவெஃகா போன்றன இருந்துள்ளன என்பதும் இவ்வாய்வு தரும் எண்ணங்கள்.

பஞ்சாமிர்தம் & சொ. முத்தையா
விசுவபாரதி நடுவண் பல்கலைக்கழகம்
சாந்திநிகேதன் – 731 235

கநாவின் [வங்காளப்] பழமொழிகள்

பண்பட்ட மொழிகள் அனைத்திலும் பழமொழிகள் வழங்கி வருதலை இன்று நாம் பார்க்கின்றோம். தமிழில் பல்லாயிரக் கணக்கில் பழமொழிகள் காணக்கிடக்கின்றன. இதே போன்று வங்காள மொழியிலும் பல்லாயிரக் கணக்கில் பழமொழிகள் காணக்கிடக்கின்றன. ஒரு குறிப்பிட்ட பழமொழியை ஒரு குறிப்பிட்ட நபர்தான் உருவாக்கினார் என்று யாராலும் சொல்ல முடியாது. குறிப்பிட்ட ஒருவரின் பெயரில் பழமொழிகள் காணப்படுகின்றன. பழமொழிகள் வழங்கப்படுவதில்லை. என்ற நிலையைத்தான் நாம் எல்லா மொழிகளிலும் பார்க்கின்றோம். ஆயின் வங்காள மொழியில் மட்டும் தனியாக - ஒரு குறிப்பிட்ட பெண்மணியின் பெயரில் பழமொழியைப் பற்றி ஆயும் பொழுது இது வியப்புக்குரிய செய்தியாக நமக்குத் தென்படுகிறது.

பண்டைய வங்காள மொழியில் மிகப் புகழ் பெற்று விளங்கிய பெண்மணிகளுள் ஒருவர் கநா. இவர் வானநூலறிவு, கணக்கு போன்றவற்றில் தலைசிறந்தவராக விளங்கினார். வல்லுந ராக விளங்கிய இவர் வானத்தில் காணப்படும் கோள்களின் நிலைகண்டு அவற்றைத் துல்லியமாகக் கணக்கிட்டு இன்னது செய்தால் இன்ன்து விளைவும் என்று தாம் இயற்றிய வங்காளப் பழமொழியில் எடுத்துக் கூறியுள்ளார். கநா என்பது அப்பெண் மணியின் பெயர். அப்பெண்மணியால் உருவாக்கப்பட்ட பழமொழிக்கு வங்காள மொழியில் ''பச்சந்'' என்று பெயர். அதனால் கநா என்ற பெண்மணியால் உருவாக்கப்பட்ட பழமொழிக்கு வங்காள மொழியில் ''கநார்பச்சந்'' (கநாவின் (வங்காளப்) பழமொழிகள்) என்று பெயரிட்டு வங்க மக்கள் அழைக்கின்றனர். கநா என்ற பெயர் கொண்ட பெண்மணியால் உருவாக்கப்பட்ட இப்பழமொழிகள் இன்றும் வங்க விவசாயப் பெருமக்களிடையே மிகப் பிரபலமாக விளங்கி வருகின்றன.

கூஷண (Kshna) என்ற சொல்லுக்கு நல்ல நேரம் என்பது பொருள். சமஸ்கிருத மொழியிலும், ஹிந்தி மொழியிலும் வரும் சுபலக்ஷண என்ற சொல்லால் இப்பொருளை அறிந்து கொள்ளலாம். வங்காள மொழியிலும் நல்ல நேரம் என்பதைக் குறிக்க (சுபல) கூஷண என்ற சொல்லே வழங்கப்படுகிறது. கூஷண என்ற சொல் கூஷணம் என்று மாறித் தமிழில் கணம், சணம் என்று வழங்கப்படுகிறது. குறிப்பிட்ட கிழமைகளில் பிறந்த பெண் குழந்தைகளுக்கு அக்குறிப்பிட்ட கிழமைகளையே குறிப்பாகச் சொல்லி அக்கிழமைகளோடு சாரி அல்லது வாரி என்ற பின்னொட்டையும் சேர்த்து வழங்கும் வழக்கம் இன்றும் வட புலத்தில் காணப்படுகிறது. சனிக்கிழமை பிறந்த பெண் குழந்தைக்குச் சனிச்சாரி என்று பெயரிட்டும், ஞாயிற்றுக் கிழமை பிறந்த பெண் குழந்தைக்கு இத்வாரி என்று பெயரிட்டும், புதன் கிழமை பிறந்த பெண் குழந்தைக்குப் புத்வாரி என்று பெயரிட்டும் அழைக்கும் வழக்கம் பீஹார், உத்திரப் பிரதேஷ் போன்ற இடங்களில் இன்றும் காணப்படுகின்றது. ஆண்டு (சௌம்பியன், சௌமியா), மாதங்கள் (கார்த்திக், கார்த்திகை, தைப்பாவை, சித்ரா-சித்திரையில் பிறந்தவர்), நாட்கள் (திங்களப்பன், திங்களனி), கிரகங்கள் (குரு, குருநாதன், குருமூர்த்தி), நட்சத்திரங்கள் (அஸ்வதி, இரேவதி, உரோகினி, பரணி, தாரணி, உத்திராட்டாதி) இவைகளின் அடிப்படையில் பெயர்கள் வைத்து அழைக்கும் வழக்கத்தைத் தமிழகத்திலும் காண்கிறோம். இதே போன்று நல்ல நேரத்தில் பிறந்த பெண் குழந்தைக்கு வடபுலத்தில் கூஷண என்று பெயரிட்டு அழைத்தனர். கூஷண என்ற சொல் நாளாவட்டத்தில் கந என்று மாறியது. கந என்ற சொல்லின் இறுதியிலுள்ள நகரத்தோடு ஆகாரம் பின்னொட்டாகச் சேர்க்கப் பட்டு மக்கள் பேச்சு வழக்கில் கநா என்று மாறிவிட்டது.

கநா என்ற பெண்மணி பற்றிய மரபு வழிக் கதைகளும் வங்காளத்தில் காணப்படுகின்றன. மரபுவழிக் 'கதை ஒருமாறு: வராஹர் என்ற பெயருடைய ஒருவர் சோதிட சாத்திரத்தில் மிகப் புகழ்பெற்று விளங்கி வந்தார். அவருக்கு ஆண்மகவு ஒன்று பிறந்தது. அக்குழந்தைக்கு மிஹிர் என்று பெயரிட்டார். சோதிட சாத்திரத்தில் மிகப் புகழ் பெற்று விளங்கிய வராஹர் தன் மகன் மிஹிர் பிறந்த ஓராண்டுக்குள் இறந்துவிடுவான் என்பதைத் தன் சோதிடத் திறத்தால் அறிந்தார். அதனால் வருத்தமுற்ற வராஹர் தன் குழந்தை மிஹிரை ஒரு பாத்திரத்தில் வைத்து சமுத்திர நீரில் மிதக்க விட்டுவிட்டார். மிஹிர் இருந்த பாத்திரம் சிங்கள மன்னன் ஆண்டு கொண்டிருந்த தீவை நோக்கிச் சென்று கொண்டிருந்தது.

மிஹிர் இருந்த பாத்திரம் பற்றிய செய்தி சிங்கள மன்னன் காதுக்கு எட்டியது. பாத்திரத்தையும், குழந்தையையும் கைப்பற்றிக் கொண்டு வருமாறு மன்னன் ஆணையிட்டான். பின்னர் சிங்கள மன்னன் மிஹிரை எடுத்து வளர்த்தான். நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக மிஹிர் சிங்கள மன்னன் பார்வையில் வளர்ந்து வந்தான். மன்னனுக்குப் பெண் மகவு ஒன்றும் பிறந்தது. கநா என்று செல்லமாகப் பெயரிட்டு வளர்த்து வந்தான். அவளும் கன்னிப் பருவம் எய்தினாள். சிங்கள மன்னன் தன் அருமைச் செல்வி கநாவை மிஹிருக்குக் கொடுத்து வதுவை விழா நிகழ்த்தி வைத்தான். கணவனும் மனைவியுமான மிஹிரும், கநாவும் சோதிடசாத்திரத்தில் மிகத் திறமை வாய்ந்தவர்களாக விளங்கி வந்தார்கள். தன் தந்தை வராஹர்தான் என்பதைச் சோதிடத்திறந்தால் அறிந்தான் மிஹிர். திருமணம் நிகழ்ந்த பின்னர்த் தன் தந்தை வராஹரைப் பார்க்க விரும்பினான். விருப்பத்தை மன்னனிடமும் அவன் மகளிடமும் கூறினான் மிஹிர். சிங்கள மன்னனும் மிஹிரையும், கநாவையும் அன்போடு அனுப்பி வைத்தான். மிஹிரின் சொந்த ஊரைச் சென்று சேர்ந்த கநா, தன் கணவன் மிஹிரோடும், தன் மாமனார் வராஹரோடும் சேர்ந்து வாழ்ந்து வந்தாள். சோதிட சாத்திரத்தில் புகழ் பெற்று விளங்கிய வராஹர் விக்கிரமாதித்தன் அரசவையில் ஒருவராகத் திகழ்ந்து வந்தார். தந்தையைப் போன்றே மகன் மிஹிரும் விக்கிரமாதித்தன் அரசவையில் பெயர் பெற்று விளங்கினான். ஒருநாள் மன்னன் விக்கிரமாதித்தன் வராஹரையும் மிஹிரையும் நோக்கி வானத்தில் எத்தனை நட்சத்திரங்கள் இருக்கின்றன என்று ஒரு கேள்வியைக் கேட்டான். சோதிட சாத்திரத்தில் திறமை பெற்றிருந்த தந்தையும் மகனும் மன்னன் கேட்ட கேள்விக்கு விடையளிக்க முடியாது திண்டாடினர். இதை அறிந்த கநா தன் கணவர் மிஹிருக்கும், தன் மாமனார் வராஹருக்கும் இதுதான் விடை என்று எடுத்துக் கூறினாள். அக்பர் பீர்பால் கதையையும் இங்கே நினைவு கூரத்தக்கது. அக்பர் அரசவையில் இடம் பெற்றிருந்த பிரதான அமைச்சர் பீர்பாலிடம் காழ்ப்புணர்ச்சி கொண்ட மற்றொரு அமைச்சன் முகமத்கான் என்பவன் பீர்பாலிடம் வானத்தில் எத்தனை நட்சித்திரங்கள் உள்ளன என்று ஒரு கேள்வியைக் கேட்டு மடக்கியதாகவும், அதற்கு மறுமொழியாக ஒரு செம்மறி ஆட்டுக்குட்டியைப் பிடித்து வந்து காட்டி, ஆட்டின் ரோமங்களை எண்ணிப்பார்த்தால் வானத்திலுள்ள நட்சத்திரங்களின் சரியான எண்ணிக்கையைத் தெரிந்து கொள்ளலாம் என்று கூறி, பீர்பால் வினா. தொடுத்தவனையே அசர வைத்ததாக ஒரு

கதை உண்டு. அதே போன்ற அமைப்பும் கநாவின் மரபு வழிக் கதையில் காணப்படுகிறது. கநாவின் அறிவுத் திறத்தில் மயங்கிய தந்தையும் மகனும் மன்னனிடம் பேச்சு வாக்கில் ஒருநாள் இச் செய்தியைத் தெரிவித்தனர். கநாவின் அறிவுக் கூர்மையை அறிந்து வியப்புற்ற மன்னன் விக்கிரமாத்தித்தன், அரசவையில் அவளுக்குச் சிறப்புச் செய்து வெகுமதி வழங்க விரும்பி, அவளை அழைத்து வருமாறு ஆணையிட்டான். இதனால் தங்கள் இருவரின் செல்வாக்கு அரசவையில் மங்கிவிடுமோ என்று எண்ணினர் வராஹரும் மிஹிரும், அஞ்சிய வராஹர் தன் மகன் மிஹிரிடம் கநாவின் நாக்கைத் துண்டித்து விடுமாறு கட்டளை யிட்டார். தந்தை சொல் மிக்க மந்திரமில்லை என்பதை உணர்ந்த மிஹிரும் தன் மனைவி கநாவின் நாக்கை வெட்டி விட்டான். அறிவுப் பொறாமையால் நிகழ்ந்த இந்நிகழ்ச்சிக்குப் பிறகு கநாவும் சில காலம் கழித்து இறந்து விட்டாள். மரபு வழியாகக் கூறப்படுகின்ற இக்கதையில் எந்தவிதமான வரலாற்று உண்மை களும் இருப்பதாகத் தெரியவில்லை.

இம்மரபுவழிக் கதைக்கு மறுதலையாக மற்றொரு கருத்தும் காணப்படுகிறது. வராஹர் என்ற பெயரும், மிஹிர் என்ற பெயரும் தனித்தனியான பெயர்கள் இல்லை - தனித்தனியான இரு நபர்கள் இல்லை என்றும், இருபெயர்களும் வராஹமிஹிர் என்று ஒன்றிணைந்த ஒரு சொல்லே - ஒரு நபரின் பெயரே என்றும் கருதும் கருத்தும் காணப்படுகிறது. சோதிடத்தில் சிறந்து விளங்கிய வராஹமிஹிர் என்பவர் மன்னன் விக்கிரமாதித்தன் காலத்தில் வாழ்ந்தவரென்றும், அதற்குப்பின் வாழ்ந்தவர் கநா என்றும் பலர் கருதுகின்றனர். கநாவால் உருவாக்கப்பட்ட பழமொழித் தொடர மைப்பை வைத்து கநா வாழ்ந்த காலத்தைக் கணக்கிட்டுச் சொல்கி றார்கள். அதாவது வராஹமிஹிர் வாழ்ந்த காலத்திற்குப் பின் ஏறத்தாழ ஆயிரம் ஆண்டுகள் கழித்து வாழ்ந்தவர் கநா என்று பலர் கருது கிறார்கள். எனவே வராஹ மிஹிருக்கும் கநாவுக்கும் கிட்டத்தட்ட ஆயிரம் ஆண்டு காலம் இடைவெளி காணப்படுகிறது. ஆயிரம் ஆண்டு இடைவெளியில் வாழ்ந்த இருவரையும் ஒன்று சேர்த்துக் கதை கட்ட ஏதாவது ஒரு அடிப்படைக் காரணம் இருந்தாக வேண்டும் என்று எண்ணத் தோன்றுகிறது. வராஹமிஹிரின் சோதிடச் சாத்திரத்தில் காணப்படும் கருத்துகள் பல கநாவின் பழமொழியில் வியப்புறும் வண்ணம் ஒத்துக் காணப்படுகின்றன - ஒன்று போலவே காணப்படுகின்றன. வராஹமிஹிரையும், கநாவையும் ஒன்று சேர்த்துக் கதைகட்டுவதற்கு இதுவே அடிப்படைக்காரணமாக அமைந்தது என்று ஆய்வாளர்கள் கருதுகின்றனர்.

த.கோ. பரமசிவம்
தமிழ்ப்பல்கலைக்கழகம்
தஞ்சாவூர் – 613 005

அருச்சனை மொழி எது?

இறைவன் எல்லா உலகமும் ஆனவன், எல்லா உயிர்களுக்கும் தந்தையும் தாயுமானவன், எல்லாவற்றுக்கும் பொது வானவன், யாவர்க்கும் உரியவன். எனவே அவனை வழிபடுவதும் போற்றுவதும் எல்லா உயிர்களுக்கும் உரிய பொது உரிமையும் கடமையும் ஆகும். ஆறறிவு பெற்ற மனிதன் மட்டுமே, மொழியறிவு பெற்ற மனித உயிரினம் மட்டுமே வழிபாடு செய்யும் தகுதிபெற்ற உயிர் என்பதை இந்திய இலக்கியங்கள் ஏற்றுக்கொள்ளவில்லை. ஆம், நாரை, யானையும் சிலந்தியும் வழிப்பட்டது. கரிக்குருவிக்கு உபதேசித்தது, நண்டு பூசித்தது, குரங்கினங்கள் வழிபட்டது, பசு வழிபட்டது எனத் தொடரும் புராணங்களும் கதைகளும் எல்லா உயிரினமும் இறைவனை வழிபாடு செய்யும் உரிமையும் கடமையும் கொண்டன என்பதை உணர்த்தவல்லன. மனிதனுக்கு மட்டுமே பகுத்தறியும் ஆறாவது அறிவு இருக்கிறது எனும் கொள்கைகூடப் பரிசீலனை செய்ய வேண்டி வரும். ஆம், பல்வேறு பணிகளில் ஈடுபடும் குரங்குகளின் நடவடிக்கைகள், யானைகளின் செயல் முறைகள், காவல்துறையில் பணிபுரியும் நாய்களின் துப்பறியும் பண்புகளை உணரும்போது சிந்திப்பதும் செயற்படுபவதும் எல்லா உயிரினத்துக்கும் இயல்பானதாகத் தோன்றுதல் காணலாம். இவ்வடிப்படையை உளங்கொண்டு இக்கட்டுரை இறைவனை வழிபடக் குறிப்பிட்டதொரு மொழி தேவையா என்பதை ஆய்வு செய்ய முற்படுகிறது.

பன்மொழி இயல்பு

மேலே சுட்டிய அடிப்படைகள், மொழியைக் கருவியாகக் கொண்ட மனித உயிரினமே வழிபாடு செய்யும் உரிமையைக் கொண்டது என்பதை மறுத்தல் காணலாம். மனிதனே அடிபட்டுப் போகும்போது அவனிடை தோன்றிய மொழிகள் இயல்பாகவே

ஒரு சிக்கலாகத் தோன்றாமை உணரப்பெறும். ஆம் இறைவன் எல்லாஉயிர்க்கு மட்டுமல்ல, எல்லா இனத்தார்க்கும், எல்லா நாட்டார்க்கும், எல்லா மொழியார்க்கும், எல்லா மதத்தார்க்கும் உரியவன். அவன் ஒன்றாகவும் பலவாகவும் இருப்பவன், சிலவாகவும் பலவாகவும் இருத்தல் இயல்பு. பலவாக இறைவன் திகழ்தலின் பன்மொழியும் அவனை வாழ்த்துதல் முற்றிலும் பொருந்துவதாகும்.

பன்முகக் கோணமும், பன்மொழி உணர்வும் தோன்றிவிட்ட பின் ஒரு குறிப்பிட்ட மொழிக்கு மட்டுமே உரிமை கொண்டாடு வது அறிவுடைமை ஆகுமா? குறிப்பிட்ட மொழியின் ஒலிக்கூட்டமே மந்திரமாகும் எனக் கொள்ள முடியுமா? அறிவாளர்களும் அவர்தம் சிந்தனைகளும் யாண்டும் எக் காலத்தும் நிலைகொள்ள முடியும். இத்தகு சூழலில், நிறை மொழி மாந்தர் யாண்டும் நிறைந்திருக்க முடியும். காலமும் இடமும் மொழியும் மாறுபடலாம். ஆயின் அறிவுடைமை யாண்டும் எக்காலத்தும் நிலைகொள்ள முடியும். இத்தகு சூழலில், நிறைமொழி மாந்தர் யாண்டும் எக்காலத்தும் தோன்ற முடியும் இயல்பில் அவர்தம் ஆணையிற் கிளந்த மறைமொழி யாம் மந்திர மொழிகள் யாண்டும் எக்காலத்தும் எல்லா மொழி களிலும் தோன்றுதல் இயற்கையும் இயல்பும் ஆகும். எனவே குறிப்பிட்டதொரு மொழியே வழிபாட்டுக்குரிய மொழியாகும் எனும் கொள்கை அடிப்பிழையாதல் திண்ணம்.

கீதையின் மொழிக்கொள்கை

அறிவு, ஆன்மா, கடமை பிற வாழ்க்கைத் தத்துவங்கள் தொடர்பாகத் தோன்றிய பாரத நூல்களில் பகவத் கீதை மிக உயரிய இடம் பெற்றதாகும். அதற்கு ஒப்பானதும் மிக்கானதும் ஆன நூல்கள் இதுவரை தோன்றவில்லை. ஆதலின் அந்நூல் இறைவனாலே அருளப்பெற்றதாகப் பாரத மக்கள் தொடர்ந்து போற்றி வருகின்றனர். ஏதேனும் ஒருவகையில் பாரத மதங்கள் எல்லாம் அந்நூலோடு தொடர் புற்றிருப்பதும் அதன் பெருமையை உணர்த்துவதாம். அந்நூலில் இறைவன், எல்லா வற்றிலும் உயரிய பொருளாக தான் இருப்பதாகக் காட்டுகிறார். பகவத்கீதையின் விபூதியோக அதிகாரம் இதனை விரிவாகப் பேசுகிறது.

''வேதங்களுள் நான் சாமவேதம், தேவர்களுள் நான் இந்திரன், உயிர்களுள் நான் உணர்வானவன்....மலைகளுள் நான் மேருமலை, சேனைத் தலைவர்களுள் நான் முருகன் நீர் நிலைகளுள் நான் கடல், நதிகளுள் நான் கங்கை, மாதங்களுள்

நான் மார்கழி, காலங்களில் நான் வசந்தம், மரங்களில் நான் அரசமரம், யானைகளுள் நான் ஐராவதம், பசுக்களுள் நான் காமதேனு, விலங்களுள் நான் சிம்மம், பறவைகளுள் நான் கருடன், இப்படி உயரிய பொருள்களின் பட்டியல் தொடர்கிறது. இப்பட்டியலில் மொழி பற்றிய செய்தியும் இடம்பெற்றிருப்பது நோக்குதற்குரியதாகும்.

''எழுத்துகளுள் நான் அகரமாயிருக்கிறேன், சுட்டுச் சொற்களுள் நான் இருசொற்கூட்டு' என வரும் வரிகளைக் காணும் போது இறைவன் எழுத்தாகவும் சொல்லாகவும் விளங்கும் தன்மை புலப்படுகிறது. எழுத்தும் சொல்லும் எல்லா மொழிக்கும் உரிய பொதுவான இலக்கணமாகும். அத்துடன் உலக மொழிகளுள் அகரமில்லாத, அங்காப்பொலி இல்லாத மொழியே இல்லை எனும்படி எல்லாமொழிக்கும் பொதுவான அகரமாக இறைவன் விளங்குவதை உணர்த்துவதாகும். இது எல்லா மொழியும் இறைவனுக்குகந்த மொழியே என்பதைப் பறை சாற்றும் அடிப்படையாகவும் கொள்ளலாம்.

பகவத் கீதை தோன்றிய காலம், சூழல், இடம் அனைத்தும் வடமொழிக்குரியனவே, பாடியவரும், வடஇந்திய முனிவரே. அது எழுதப் பெற்ற மொழியும் வடமொழியாம் சமஸ்கிருதமே ஆகும். எனவே, எழுத்துக்களுள் நான் அகரமாயிருக்கிறேன் என்று சொன்னவர் மொழிகளுள் நான் சமஸ்கிருதமாக, வடமொழியாக, தேவ பாஷையாக இருக்கிறேன் என்று சொல்ல வேண்டுவது தான் இயல்பு.

ஆயின், அவ்வாறு சொல்லாமல் எழுத்தும் சொல்லுமாக மட்டுமே இறைவனைக் காட்டி விட்ட சூழலை நினைக்கும் போது இறைவன் அவ்வவ் மொழியாகவும் நிறைந்திருக்கிறான் என்பதே உண்மையாகத் தோன்றுகிறது. எல்லாவற்றிலும் உயர்வு தாழ்வு கற்பித்த இப்பகுதி மொழியில் மட்டும் கைவைக்கவே இல்லை. மொழிகளுள் உயர்வு தாழ்வு இல்லை. எல்லாம் சமம். எல்லா மொழிகளிலும் நான் இருக்கிறேன். எம் மொழியும் என்னை யடையும் இக்கொள்கை பரிணாம வளர்ச்சியின் நெடு நோக்காக இருந்திருக்க வேண்டும் போலும். கீதையின் இம்மொழிக் கொள்கை இறைவனை வழிபடுவற்குரிய உயர்ந்த மொழி எனத் தனியே எதுவும் இல்லை என்பதைத் தெளிவுபடுத்துதல் காணலாம்.

ஆகமங்களின் மொழி

ஆகமங்கள் நடைமுறைகளைக் குறிப்பவை. நிகழ்ச்சி முறைகளைக் காட்டுவன. அவை மந்திரமாகா, மாவிலையை

எங்கெங்குப் பயன்படுத்துவது, தருப்பை எதற்கெல்லாம் இன்றிய மையாதது, யாக பூமியை எப்படித் தேடுவது? கோயிற் கட்டடங்களை எப்படிக் கட்டுவது? உற்சவங்களை எம்முறையில் நடத்துவது? குடநீராட்டு விழாவை எம்முறையில் நிகழ்த்துவது? போன்றவற்றின் நடைமுறைகளைத் தொகுத்து வழங்குவன. அவை தென்னிந்தியத் திராவிடக் கலாச்சாரத்திற்கே உரிய வழி பாட்டு முறைகளைக் காட்டுவன. ஆயின், அவை ஏதோ வட மொழிக்குரியனபோல் பேசப்படுகின்றன. ஏனெனில் அவை வடமொழியில் எழுதப்பட்டுவிட்டன. உண்மையில் அவை வடமொழிக்குரியனவாயின் பின்வரும் வினாக்களுதோன்றா.

வடஇந்தியக் கோயில்கள் ஆகம முறைப்படி அமைந்த னவா? அங்குள்ள வழிபாட்டு முறை இம்முறையுடன் இணை கின்றதா? உற்சவங்கள் அங்கு நடைபெறுகின்றனவா? மருந்து சாத்தப் பெறும் மூலவர் அமைப்பு அங்குண்டா? மருந்தில் கலக்கப் பெறும் சுக்காங்கல், காவி அங்குண்டா? மூர்த்தி செய்யப் பெறும் கருங்கற்கள் ஆண் அலி பெண் கற்கள் அங்குண்டா? ஆக மங்களில் பேசப்பெறும் மரங்கள் அனைத்தும் வடஇந்தியாவில் உள்ளனவா? வேதங்களில் பேசப்படாத அபிடேகம் ஆகமங்களில் எப்படிப் புகுந்தன?

இப்படிப் பலப்பல வினாக்கள்...எனவே ஆகமங்கள் முற்றிலும் தமிழ் மண்ணுக்குகே உரிய நூல்கள் எனலாம். (விரிக்கின் பெருகும்) தமிழ் ஆய்வுகளை முன்பெல்லாம் ''The Treatment of Nature in Sangam Literature'' என ஆங்கிலத்தில் எழுதியதுபோலத் தமிழ் வழக்கு முறைகளை நடைமுறைகளை அன்று வடமொழியில் எழுதி வைத்துவிட்டனர். அவ்வளவே. இத்தகு ஆகமங்களில் அதாவது வடமொழியில் எழுதப்பெற்ற ஆகமங்களில் கூட வடமொழிதான் அருச்சனைக்கும் வழி பாட்டுக்கும் உரிய மொழி (Medium of Prayer) என்ற செய்தி காணப்பெறவில்லை. பிறமொழிகளில் வழிபடக்கூடாது என்ற கட்டுப்பாடும், வழிபடின் இக்குற்றமும், அக்குற்றமும் வந்து சேரும் என்ற அச்சுறுத்தலும் கூடக் காணப்படவில்லை. எனவே, ஆகமங்களும் இறைவழிபாட்டுக்குரிய மொழிக் கொள்கையில் நெடுநோக்கோடே காணப்பெறுகின்றன எனலாம். வழிபாட்டில் ஒரு குறிப்பிட்ட இனத்தை, குறிப்பிட்ட மொழியை அவை பரிந்துரைக்கவில்லை எனத் தோன்றுகின்றது. இதனை வலிசெய்யும் முகத்தான் அமைந்தது போலவே திருமுறைகளில் வழிபாட்டு மொழிக்கொள்கை அமைந்திருத்தல் காணலாம்.

அருச்சனை பாட்டே ஆகும்

இறைவனை வழிபடுவது என்பது அவனது குணாதிசயங் களைப் போற்றிப் பரவி நினைத்தலாகும். பிற வழிபாட்டு முறை களைவிட மனத்தால் நினைந்து வழிபடும் வழிபாடே சாலச் சிறந்ததாகும் என்பது பக்தி இலக்கியங்களின் அடிப்படை. இம் மனவழிபாட்டுக்குத் துணை செய்வதற்காகவே பாடிப் பரவும் பக்தி நெறியை அவை காட்டுகின்றன. அவனை வாழ்த்துவது, போற்றுவது, வணங்குவது அருச்சனை எனப்படும். இது அக் காலத்திலேயே பல பிரச்சினைகளை, சிக்கல்களைத் தோற்று வித்திருக்கும் போலும், அதனால்தான் சேக்கிழார் பெருமான், அருச்சனை பாட்டே ஆகும் ஆதலில் ''மண்மேல் நம்மைச் சொற்றமிழ் பாடுக'' என்று இறைவனே கேட்டுக் கொண்டதாகக் காட்டுகிறார். இவ்வருச்சனையாம் பாட்டை எம்மொழியில் பாடுவது? யார் பாடுவது? எத்தகுதியுடன் பாடுவது? எப்போது பாடுவது? இவற்றுக்கு விடை கூறுதல் போலவே திருமுறைகள் காணப்படுகின்றன.

மறைவளரும் பொருளாயினானை மனத்தால் நினைந்தேத்த
நிறைவளரும் புகழெய்தும் வாதை நினையா - (ஞானசம்,
திருக்கலிக்காமூர்)

ஆடிப்பாடி அண்ணாமலை கைதொழ
ஓடிப்போகும் நமதுள்ள வினைகளே (அப்பர்)
துன்பிலாத் தொண்டர் கூடித் தொழுதழுது ஆடிப்பாடும்
அன்பலாற் பொருளுமில்லை ஐயன் ஐயாறனார்க்கே (அப்பர்)

இறைவனைப் போற்றிப் புகழ்தற்குத் தகுதிகூட வேண்டாவாம். ஆழ்ந்த இறையன்பு ஒன்றுமே போதுமாம், வைகாவூர்ப் பதிகத்தில் ஞானசம்பந்தர் காட்டும் இலக்கணம் இது.

கோழை மிடறாகக் கவிகோளும் இலவாக இசை கூடு
வகையால்
ஏழையடியார் அவர்கள் யாவைசொன சொல் மகிழும் ஈசன்

சான்றோர் பெருமக்களின் இத்தகு கருத்துகளையெல்லாம் உற்று நோக்கும்போது அருச்சனையாம் வழிபாட்டுக்கு என ஒரு குறிப்பிட்ட மொழியோ ஒரு குறிப்பிட்ட இனமோ தேவை யற்றன என்பது வெள்ளிடைமலையாதல் காணலாம். ஆம், ஆண்டவனை யாரும் எம் மொழியிலும் வழிபடலாம். இதற்குச் சான்றோர் பெருமக்கள் தடைவிதிக்கவில்லை.

தொ. பரமசிவன்
மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம்
திருநெல்வேலி – 627 012

தீருவிளக்குத் தீருவிழா

'ஐப்பசி கார்த்திகை அடைமழைக் காலம்' என்ற பழைய வாக்கு புயல் வடிவத்திலாவது இன்றும் நிறைவேறி வருகிறது. 'தீபங்கள் பேசும் திருக்கார்த்திகை மாதம்' என்று வானொலிப் பெட்டி முழங்குகிறது. பழந்தமிழர் நாகரிகத்தின் உயர்ந்த அடையாளச் சின்னங்களில் ஒன்று திருவிளக்காகும். தென்னிந்தியாவின் திராவிட நாகரிகத்தின் தொன்மையைக் காட்டும் ஆதிச்ச நல்லூர் புதை பொருட்களில் வெண்கல விளக்குகளும் கிடைத்துள்ளன. காமாட்சி விளக்கு, நாகர் விளக்கு, கணபதி விளக்கு, திருமண் (நாமம்) விளக்கு, சிலுவை விளக்கு, பிறை விளக்கு என்று தமிழர்களின் வீடுகளில் கைவிளக்குகள் நாகரிக எச்சங்களாகத் தூசு படிந்து மூலையில் கிடக்கின்றன. குத்து விளக்கு மட்டும் தமிழர்களின் இல்லங்களில் நின்று எரிகின்றது. 'மனைக்கு விளக்காகிய வாணுதல்' என்று சங்ககாலம் தொடங்கி, பாரதிதாசனின் 'குடும்ப விளக்கு' வரை காலந்தோறும் பண் பாட்டிலும், உணர்விலும் பெண்களுக்கு நெருக்கமானதாக திருவிளக்கு அமைந்துள்ளது.

இன்று நேற்றா! ''குறிஞ்சி நிலத்தில் பாறைக்குழிகளில் பிறந்த கல்விளக்கே முல்லை நிலத்திற்கு வந்தது. 'மண்விளக்கு மருதநிலத்தில் பிறந்தது. சிப்பிவிளக்கு எனப்படும் சங்கு விளக்கு நெய்தல் நில மக்களின் கண்டுபிடிப்பாகும்'' என்று பண்பாட்டியல் அறிஞர் அ. ராகவன் விளக்கின் பிறப்பினை வரையறுத்துக் காட்டுவார். 'மணல் குவைஇ மீன் நெய் அட்டிக் கிளிஞ்சில் பொத்திய சிறு தீ விளக்கு' என்று மணல் மேட்டில் ஏற்றி வைக்கப் பட்ட மீன் நெய் விளக்கினை நற்றிணை (175) விளக்குகிறது.

சங்க காலத்திலேயே தமிழர்கள் கார்த்திகைத் திருவிழாவினை விளக்குத்திருவிழாவாகக் கொண்டாடியதற்கான சான்றுகள் இலக்கியங்களில் காணக்கிடைக்கின்றன. கார்த்திகை

விண் மீன் என்பது ஆறு மீன்களின் தொகுப்பாகும். எனவே கார்த்திகை விண்மீனுக்குத் தமிழில் 'அறுமீன்' என்று பெயர். (ஆங்கிலத்தில் இதனை orion group) என்று அழைப்பர். இத் தொகுப்பு சிவப்பு வண்ணத்தில் காணப்படுவதாக வானியலார் குறிப்பிடுகின்றனர். சங்ககாலத்தில் தமிழர்களின் மாதங்கள் முழு நிலவு நாளிலேயே தொடங்கி உள்ளன என்பதனால் தமிழில் மாதத்தைக் குறிக்கத் 'திங்கள்' என்ற சொல்லே வழங்கியுள்ளது. 'நாள்' என்ற சொல்லால் அந்த நாளுக்குரிய நட்சத்திரத்தினைக் (சதய நாள், ரோகிணி நாள் என) குறித்துள்ளனர் தமிழர்கள்.

'அறு மீன் படிந்த அறஞ் செய்திங்கள்
செல் சுடர் நெடுங்கொடி'

என வரிசையாகக் கொடி போலத் தோன்றுமாறு கார்த்திகை நாளில் விளக்குகளை வைத்ததனை நற்றிணைப்பாட்டால் உணர்கிறோம். இரவில் தெருவெல்லாம் விளக்குகளை வரிசையாக ஏற்றி வைத்து, மாலைகளைத் தொங்கவிட்டு ஊர் கூடி, கார்த்திகைத் திருவிழா கொண்டாடியதை அகநானூற்றுப் பாடல் (121) பேசுகின்றது. எனவே, சைவ, வைணவ சமயங்கள் எழுச்சி பெறுவதற்கு முன்னரே தமிழ் நாட்டில் 'திருக்கார்த்திகை விழா' கொண்டாடப்பட்டதை அறிகிறோம். கார்காலத்தின் சிறப்பைப் பேச பின்பு எழுந்த கார்நாற்பது என்னும் நூல் 'நலந்தெரி கார்த்திகை நாட்டவர் இட்ட தலைநாள் விளக்கு' என்று கார்த்திகை மாதத்தின் முதல் நாளில் ஊர் மக்கள் ஏற்றிய விளக்கினைக் காட்டுகின்றது.

பின்னர்ப் பக்தி இயக்க எழுச்சியினைத் தொடர்ந்து சைவ, வைணவ சமயங்கள் திருக்கார்த்திகைத் திருவிழாவை தமதாக்கிக் கொண்டன. 'தொல் கார்த்திகை நாள் விளக்கீடு காணாதே போதியோ பூம்பாவாய்' என்று ஞானசம்பந்தர் திருமயிலைப் பதிகத்தில் கரர்த்திகை நாள் தமிழர்களால் 'விளக்கீட்டுத் திருநாள்' என்ற் பெயரில் கொண்டாடப்பட்டதை எடுத்துக்காட்டுகிறார். கோயில்களில் விளக்கீட்டு விழா கொண்டாடப்பட்டதன் விளைவாக நூற்றுக்கணக்கான வடிவங்களில் கல்விளக்குகளும், கைவிளக்குகளும், சரவிளக்கக்களும், தூக்கு விளக்குகளும், கொடி விளக்குகளும், கிளை விளக்குகளும், பாவை விளக்குகளும், குட விளக்குகளும், குத்து விளக்குகளும் தமிழகக் கோயில்களில் கலை உணர்வோடு இடம் பெறத் தொடங்கின. கல்வெட்டுக்களில் காணும் குறிப்புப்படி கோயில்களில் குட விளக்கு சுற்றி வரும் பணி தேவரடியாருக்குத் தரப்பட்டிருந்தது என்பதை

அறியமுடிகிறது. தஞ்சைக் கோயில் இராசராசன் கல்வெட்டுக் களில் இருந்து ஈழச்சியல் விளக்கு, சோழச் சியல் விளக்கு என வட்டார வடிவ வேறுபாடுகளுடன் விளக்குகள் ஆக்கப்பட்ட செய்தியினையும் தெரிந்து கொள்கிறோம். தமிழகக் கோயிற் கல் வெட்டுகளில் கணிசமானவை நந்தா விளக்கு எரிப்பதற்குக் கொடுத்த கொடைகளைப் பற்றித்தான் பேசுகின்றன.

இவையன்றியும், திருக்கார்த்திகை நாளில் கோயில்களுக்கு எதிரில் சொக்கப்பனை கொளுத்தும் வழக்கமும் இன்றளவும் இருந்து வருகின்றது. வட மாவட்டங்களில் இதனைச் 'சொக்கப் பான்' என்கின்றனர். நெல்லை, குமரி மாவட்டங்களில் ஓலை நீக்கிய பசுமை மாறாத பனை மரங்களை வெட்டிக் கொண்டு வந்து, அப்படியே கோயில் முன் நட்டு, குறுக்குச் சட்டங்கள் இட்டு ஓலை கட்டி, நெருப்பிட்டுக் கொளுத்தி விழாக் கொண்டாடுகின்றனர்.

'சிவபெருமான் அழல் உருவாக நின்றான்', என்ற சைவப் புராண மரபை முன்னிறுத்தி நெருப்புத் தலமாகக் கருதப்படும் திருவண்ணாமலையில் மலையின் மீது ஏற்றப்படும் கார்த்திகை தீபம் நாடறிந்ததாகும். வைணத்திலோ காஞ்சிபுர அத்தகிரியிலும் மதுரைக்கு அருகில் உள்ள திருத்தங்கலிலும் திருமாலுக்கு விளக் கொளிப்பெருமாள் என்று பெயரிட்டுக் கார்த்திகை விழாக் கொண்டாடுகின்றனர்.

தமிழ்நாடு முருக வழிபாட்டுப் பெருமையினை உடையது. அதுபோல இந்தியாவில் கிழக்குப் பகுதியில் கார்த்திகேய வழிபாடு தோன்றி வளர்ந்தது. தமிழ்நாட்டு முருக வழி பாட்டோடு கார்த்திகேய வழிபாடு வந்து கலந்த போது அறுமீன் (கார்த்திகை) முருகனுக்குரிய நாளாகக் கருதப்பட்டு முருகனுக்கு அறுமுகன் (ஷண்முகன்) என்ற பெயரும் சேர்ந்தது. கார்த்திகை நாள் மீனும் 'கார்த்திகைப் பெண்டிர் அறுவர்' சேர்க்கையாகக் கருதப்பட்டது. சிலப்பதிகாரக் காலத்திலேயே ஏற்பட்டு விட்ட இந்த மாற்றத்தைத் திருமுருகாற்றுப்படையும், 'அறுவர் பயந்த ஆறமர் செல்வ' என்று வழி மொழிகின்றது. எனவே இக் காலத்தில் முருகன் கோயில்களிலும் திருக்கார்த்திகை விழா கொண்டாடப்படுகிறது.

கார்த்திகை விழா வீடுகளில் சிறப்பாக இன்றளவும் கொண்டாடப் பெறுவது தமிழகத்தின் தென்மாவட்டங்களில் தான். கார்த்திகை மாதம் முப்பது நாளும் வீட்டுச்சுவரில் தெருப்புறமாக உள்ள மாடக்குழிகளில் மண் அகல்விளக்கு ஏற்றுகின்றனர். கார்த்திகை மாதம் பிறைநிலவு கூடக் காண

முடியாதபடி மேகங்கள் நிறைந்த மாதமாகும். எப்பொழுதாவது கண்ணில் தட்டுப்படுகின்ற நண்பரை 'கார்த்திகைப்பிறை தண்டாப்பில இருக்கே' என்று வரவேற்பது இன்றும் வழக்கம் தான். கார்த்திகை மாத விளக்குகள் இரவில் கனத்த இருளில் வழிச் செல்வாருக்கு உதவியாகப் பொது நல உணர்வுடன் அமைக்கப் பட்டன. மின்சாரக்காலம் வந்த பிறகு இந்த வழக்கம் ஒரு சடங்காக மட்டும் எஞ்சி நிற்கின்றது. திருக்கார்த்திகை அன்று அந்தி நேரத்தில் வீட்டுக்கு உள்ளும், வெளியிலும் அவரவர் பொருள்நிலைக்கு ஏற்ப மெழுகுத்திரிகளும், மண் அகல் விளக்குகளும், ஈலோக விளக்குகளும் ஏற்றப்படுகின்றன. அரிசி மாவில் மஞ்சள் கலந்து அதிலே கையை நனைத்து ஐந்து விரல் களும் பதியுமாறு வீட்டின் தெருவை நோக்கிய கதவில் முத்திரைகள் இடப் பெறுகின்றன. திருவிளக்கின் முன்னர் பிடி கொழுக்கட்டையும் கார்த்திகைப் பொரியும் படைக்கப்படு கின்றன. சம்பா கைக்குத்தல் அரிசியில் கைவிரல்கள் பதியுமாறு செய்வதால் 'பிடி கொழுக்கட்டை' அவ்வாறு பெயர் பெறுகிறது. இது சிவப்பு நிறத்தில் இருக்கும். சிறுவர்கள் 'சூந்துகுச்சி' என்றும் ஒரு வகை சணற்கோரைத் தட்டையினை கட்டாகக் கொளுத்தி தெருவில் நின்று வானைநோக்கிச் சுற்றகின்றனர். இந்தக் குச்சிக் கட்டு சாதாரணமாக ஏழு அல்லது எட்டடி நீளம் இருக்கும். கொளுத்தி முடிந்த பின் அந்தக் கரிய சாம்பலைத் தெருவில் குறுக்காகத் துவுகின்றனர்.

இத்தனை செய்திகளுக்கும் பின்னர்தான் நமக்கு ஒரு ஐயப்பாடு தோன்றுகின்றது. கார்த்திகைத்திருவிழாவின் உண்மை யான பொருள்தான் என்ன? இது விளக்குத் திருவிழாவா? முருகன் திருவிழாவா? பொதுவாகக் கோயில் திருவிழாவா? என்ற கேள்வி எழுகின்றது. உண்மையில் கார்த்திகைத் திருவிழா தொல் பழந்தமிழரின் 'மழையினை வழியனுப்பும்' திருவிழாவாகும். வானத்தை நோக்கி 'நெருப்பினைக் காட்டினால் மழை மேகங்களை வழியனுப்பியது போல் ஆகும் என்பது பழங்குடி மக்களின் மந்திரம் சார்ந்த நம்பிக்கை ஆகும். மழையிலும், குளிரிலும் துன்புற்ற இடையர்கள் 'கையினில் கொள்ளிக்கட்டை ஏந்தினர்' என்று நெடுநல்வாடையில் (8) வரும் காட்சியினைப் பேராசிரியர் நா. வானாமாமலை இந்நம்பிக்கையினைக் கொண்டே விளக்கிக்காட்டினார். நீருக்குப் பகையானது நெருப்பு என்பதும், நெருப்புச் சுடர் மேல் நோக்கி வளரும் தன்மையினை உடையது என்பதும் பழங்குடி மக்களின் நம்பிக்கையின் அடிப்படையாகும். தெருவில் விளக்கேற்றுவதும், சிறுவர்கள்

எரிகின்ற சூந்துக்குச்சியினை வானத்தை நோக்கிக் காட்டிச் சுழற்றுவதும் கோயிலுக்கு வெளியே உயர்ந்த பனைமரத்தை நட்டு நெருப்பிட்டுக் காட்டுவதும், உயர்ந்த மலையின் மீது தீபம் ஏற்றுவதும் வாசற்கதவில் விரிந்த கைமுத்திரை பதித்துக்காட்டு வதும் இந்த நம்பிக்கையின் அடிப்படையில் தான்.

அதிகமாகச் சொல்வானேன்? 'விளக்கிட மழைகிழக்கிட' என்பது தென்மாவட்டங்களில் பெருக வழங்கும் சொல்லடை யாகும். 'கார்த்திகைக்குப் பிறகு மழையும் இல்லை, கருணனுக்குப் பிறகு கொடையும் இல்லை' என்ற பழமொழியும் மழைபோதும் என்ற உணர்வில் இந்த இயற்கை நிகழ்வையொட்டிப் பிறந்தது தான்.

மழையினை வழியனுப்பும் பழந்தமிழரின் சடங்கு ஒன்று, கலை உணர்ச்சியோடு இரண்டறக்கலந்து விளையாட்டாகவும், திருவிழாவாகவும் மலர்ச்சி பெற்றுக் கலையழகில் மிளிரும் ஆயிரக்கணக்கான விளக்கு வகைகளைத் தமிழ்ப்பண்பாட்டிற்குக் கொடையாக வழங்கியுள்ளது.

ப. பரமசிவம்
அ.அ.அரசு கலைக்கல்லூரி
நாமக்கல் – 637 001

சிறுகதையில் பின்னோக்கு உத்தி

கதைப்பொருள், உத்தி, நடை ஆகியவற்றில் புகுத்தப்பட்ட 'புதுமை'யே நவீன சிறுகதையின் தோற்றத்திற்கு அடிப்படை எனலாம்.

சிறுகதையில் கையாளப்படும் உத்திகள் பலவற்றில் 'பின்னோக்கு' உத்தியும் ஒன்று. தமிழ்ச் சிறுகதைகளில் பெரும்பான்மையனவற்றில் இவ்வுத்தி இடம் பெற்றிருத்தலைக் காண முடிகிறது.

பின்னோக்கு (FLASH BACK) என்றால் என்ன?

கதாசிரியன் தான் சொல்லவிருக்கும் கதையில், சுவை பயக்கும் விறு விறுப்பான ஒரு பகுதியைக்கதையின் தொடக்கமாக அமைத்து, கதையின் தொடக்கப் பகுதியை அதற்கு அடுத்ததாக வைத்து விவரித்துச் செல்வது 'பின்னோக்கு' எனப்படும்.

இந்த 'விவரிப்பு' இடைவெளியின்றி ஒரே தொடர்ச்சியாக அமைவதுண்டு. நடப்புக் கதை நிகழ்ச்சியினூடே துண்டு துண்டாகவும் இடம் பெறலாம். கதாசிரியர் கூற்றாகவோ கதை மாந்தர் கூற்றாகவோ அமையலாம். மனசாட்சியின் கூற்றாகவும் அமைதல் உண்டு.[1] கதையின் முடிவை ஒட்டியும் இடம் பெறுதல் கூடும்.[2]

இந்த உத்தி இடம் பெற்ற, அண்மைக்காலத் தமிழ்ப் பருவ இதழ்ச் சிறுகதைகள் பலவற்றை ஆராய்ந்த போது, கணிசமான படைப்புகளில் இது வெறும் 'சடங்கு' ஆக்கப்பட்டிருப்பதை அறிய முடிந்தது.

'நண்பனின் மனைவி'[3] என்ற தலைப்பில் ஒரு சிறுகதை. சுப்ரஜா எழுதி ஆனந்த விகடன் இதழில் வெளியானது. கதையின் தொடக்கம் வருமாறு.

ஒரு கையில் டிராலி தோளில் ஷோல்டர் பேக். இன்னொரு கையில் குழந்தை.

''குழந்தையை இப்படிக் கொடுங்க''

நான் இரண்டு கைகளையும் நீட்ட,

'விருட்டென பின்னால் நகர்ந்து கொண்டாள்....'

சுமார் பத்து வாக்கியங்களில் கதை நகர்த்தப்பட்ட பின்னர், 'பின்னோக்கு' கீழ்க்காணுமாறு ஆரம்பமாகிறது.

பாஸ்கர் என் பள்ளித் தோழன். என் தோளில் திட்டுத்திட்டாக இருந்த வெள்ளையைக் கண்டு, மற்றவர்கள் ஒதுங்கிச் சென்ற போது, அருவருப்பில்லாமல் என்னை அணைத்துக் கொண்டு நட்பு பாராட்டியவன்.....

இடைச் சம்பவத்தில் கதையை ஆரம்பித்து, கொஞ்சம் கதை சொல்லி நிறுத்தி விட்டு, 'பின்னோக்கை' இடம் பெறச் செய்திருக் கிறார் கதாசிரியர். பழைய கதை சொல்லும் பாணியின் படி பார்த்தால் 'பாஸ்கர் என் பள்ளித் தோழன்.....' எனத் தொடங்கும் பகுதியே கதையின் ஆரம்பமாக அமைதல் வேண்டும். 'ஒரு வகையில் டிராலி...' எனத் தொடங்கும் பகுதி கதையின் இடைச் சம்பவம் ஆகும்.

ஆனால், இவற்றை இடம் மாற்றியிருக்கிறார், ஆசிரியர். இது 'பின்னோக்கு' உத்தி ஆகிறது. இந்த உத்தி கையாளப்படுவதன் நோக்கம் என்ன? கதையின் தொடக்கம் விறுவிறுப்பானதாக அமைந்து வாசகனைத் தொடர்ந்து படிக்கத் தூண்ட வேண்டும் என்பதுதான். இதை மனிதல் கொண்டு சிந்தித்தால் இக்கதையில் இதன் கதாசிரியர் 'பின்னோக்கு' உத்தியைக் கையாண்டிருக்கத் தேவையில்லை என்று சொல்லத் தோன்றுகிறது. ஏனென்றால், 'ஒரு கையில் டிராலி...' எனத் தொடங்கும் பகுதியைக் காட்டிலும் 'பாஸ்கர் என் பள்ளித் தோழன்...' எனத் தொடங்கும் பகுதியே சுவை மிகுந்ததாக உள்ளது.

மனத்தை நெகிழ வைக்கும் சிறந்த படைப்பு இது. எனினும், இங்குப் பின்னோக்கு உத்தி தேவைப்படாத நிலையில் ஆசிரியர் இதனைக் கையாண்டிருப்பது ஒரு குறையே ஆகும்.

குழந்தைத் தொழிலாளர்கள் தொழில் அதிபர்களால் துன்புறுத்தப்படுவதை அற்புதமாகச் சித்தரிக்கும் அழகிய பெரியவனின் 'விலங்கு' என்ற கதையும் இவ்வகையைச் சார்ந்ததாகும். வறுமையில் வாடும் பாட்டாளி மக்களுக்கு உதவப் போய், வம்பில் மாட்டிக் கொள்ளும் ஒரு நிருபரின் அனுபவத்தை அழகான நடையில் சொல்லும்

ஆர். வெங்கடேஷின் 'நியூஸ்'[5] சிறுகதையும் இத்தகையதே. இன்னும் சான்றுகள் காட்டலாம்.

'பின்னோக்கு'க்கு இடந்தராமல், 'ஆதியோடந்தமாய்' கதை சொல்லத்தொடங்கும் பழைய உத்தியும் இன்று எழுத்தாளர் களால் கையாளப்படுகிறது. இதற்கு வரவேற்பும் உண்டு. காரணம் சுவையான நடை. ஒரு எடுத்துக்காட்டு:-

பத்திரக்கோட்டை கிராமத்தப் பத்திச் சொல்லியாகணும். அதிகமா சொல்லாவிட்டாலும் கொஞ்சமானது சொல்லியே ஆகணும். பேருக்குத் தகுந்த மாதிரி பத்திரமாக-சீக்கிரத்தில் யாரும் அண்ட முடியாத இடத்தில்தான் பத்திரக் கோட்டை கிராமம் இருந்தது. 'பத்திரக் கோட்டைக்கு எந்த வழியாகப் போகணும்' என்று யாரிடமாவது கேட்டுப் பாருங்கள். கேட்பவர்கள் மேல் அவர்கள் பொழிகிற கருணைக்கும் பரிதாபத்துக்கும் குறைவிருக்காது.[6]

இன்னொரு சான்று

முன்புறம் நேரு ஸ்டேடியம். பின்புறம் சென்னை சென்ட்ரல் இடைப்பட்ட இடத்தை ஆக்கிரமித்து, கால்நடை மருத்துவக் கல்லூரி விடுதியை ஒட்டி அமைந்துள்ள சந்தன பாலா அபார்ட் மெண்ட், கிட்டதட்ட மூவாயிரம் குடும்பங்களுக்கு மேல் வசிக்கும் பெரிய கட்டடம். அபார்ட்மெண்ட்டின் நுழைவு வாயிலில் இரவு பகல் என்று பாராமல் போவோர் வருவோர்க்கு சல்யூட் அடிக்கும் கூர்க்கா-பிளாட் எண் 11/1 எண்ணில் வசிக்கும் சுதா. எனக்கு மட்டும் தெரிந்த அவளை உங்கள் எல்லோர்க்கும் சொல்லியாக வேண்டும்...

ஆக, சிறுகதை என்றால், அதில் 'பின்னோக்கு' இடம் பெற வேண்டும் என்பது கட்டாயம் இல்லை. இது இடம் பெற்றால் கதையின் சுவை கூடும் என்றால் மட்டுமே சிறுகதை எழுத் தாளர்கள். குறிப்பாக, வளரும் எழுத்தாளர்கள் பின்னோக்கைக் கையாள வேண்டும். இது சிறுகதை இலக்கியத்திற்கு ஆக்கம் பயப்பதாக அமையும்.

குறிப்புகள்

1. சத்தியராஜ் குமார், 'அவனைக் கொல்ல வேண்டும்', குமுதம், 20.11.97, பக்.64-67.
2. இரா. மணிகண்டன், 'சூர்யா, குமுதம், 18.6.98, பக் 74-77

3. சுப்ரஜா, 'நண்பனின் மனைவி', ஆனந்த விகடன், 30.8.98, பக் 66-69.

4. அழகிய பெரியவன், 'விலங்கு', குங்குமம், 22.5.98, பக் 68-71, 86-87

5. ஆர். வெங்கடேஷ், 'நியூஸ்', குங்குமம், 1.1.99, பக் 64-71

6. தங்கர் பச்சன், 'கவுரவம், குமுதம், 15.1.98 இலவச இணைப்பு, பக் 35-39, 45-47.

மூ. பரிமணன்
உலகத்தமிழாராய்ச்சி நிறுவனம்
சென்னை – 600 113

தீருக்குறள் கடவுள் வாழ்த்தும் தீருக்கலம்பகமும் ஓர் ஒப்பீடு

உலகச் செம்மொழிகளில் ஒன்றாகப் போற்றப்படும் தமிழ் மொழியில் தனிப்பெருமையோடு விளங்கும் அறநூல் திருக் குறள். இது மக்கள் இனத்திற்கு மாண்பினைச் சேர்ப்பதும் மற்ற உயிர்களுக்கும் அரணாக அமைவதுமான அறம், பொருள், இன்பம் என்னும் முப்பொருள்களைக் கொண்டு தமிழினத்திற்கே தனிப்பெருமையைத் தேடித்தரும் நூலாகும். இந்நூலில் உள்ள கடவுள் வாழ்த்தின் பத்துக் குறட்பாக்களையும் சமண சமய சிற்றிலக்கிய நூலான, உதிசித் தேவரால் எழுதப்பட்ட திருக்கலம்பகத்துடன் ஒப்பிட்டுக் காட்டுவதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

''அகர முதல எழுத்தெல்லாம் ஆதி
பகவன் முதற்றே உலகு'' (குறள்-1)

இக்குறட்பாவிற்குத் திரு அரங்கநாத முதலியார் அவர்கள் எழுத்துக்களெல்லாம் அகரத்தை முதலாக உடையன. அதுபோல உலகம் ஆதிபகவனை முதலாகவுடையது என்று உரை கூறுகின்றார்.

திருக்கலம்பக ஆசிரியர் உதிசித் தேவரும்,

''மன்னியபே ருலகனைத்தும்
நின்னுள்ளே நீ யொடுக்கினை
நின்னின்று நீ விரித்தனை
நின்னருளின் நீ காத்தனை
எனவாங்கு
ஆதிபகவனை அருகனை
மாதுயர் நீங்க வழுத்துவம் பலவே'' (பாடல்-109)

என்று பாடுகின்றார்.

இப்பாடலுக்கு உரையெழுதும் அனந்ததேவர், நிலைபெற்ற உலகம் முழுவதும் உனக்குள்ளே நீ ஒடுக்கினாய், உன்னிடத்தினின்று நீ தெரிவித்தாய், உன் அருளினாலே நீ காத்தாய் என்று சொல்லி ஆதிபகவனை அருக பரமனை, மிகுந்த துன்பமானது நீங்க யாம் பலவாகத் துதிப்போம் என்று உரை கூறுகின்றார்.

இப்பாடல்களிலிருந்து ஆதிபகவன் உலகின் முதல்வன் என்பது பெறப்படுகின்றது.

கற்றதனால் ஆய பயன்என்கொல் வாலறிவன்
நற்றாள் தொழாஅர் எனின் (குறள்-2)

இக்குறட்பாவிற்கு அ. சிம்மச்சந்திர செயின் சாஸ்திரியார் அவர்கள், ஒருவன் நூல்கள் பலவும் கற்று அந்நூற் பொருளில் திட்பமும், தெளிவும் உடையவனாயினும் கேவல ஞானத்தையுடைய இறைவனது திருவடிகளைத் தோத்திரம் செய்யாது விட்டால் அவனுக்கு ஒரு பயனுமில்லை என்று உரை கூறுகின்றார்.

திருக்கலம்பக ஆசிரியரும்,

''தொன்மறையை விரித்தோய் நீ
துருநயங்கள் அழித்தோய் நீ
நன்னெறியை வகித்தோய் நீ
நமனணுகாக் கதியோய் நீ'' (பாடல்-2)

என்று பாடுகின்றார்.

இப்பாடலில் கேவல ஞானத்தையுடையவன் அருகன், அவன் பழமையான வேதங்களைச் சொன்னவன், ஏகாந்த வாதங்களைக் கெடுத்தவன், அனேகாந்த வாதத்தை வகுத்தவன், காலனும் நெருங்க முடியாத முக்தி உடையவன். அவனை நாம் துதிப்போம் என்று கூறுகின்றார்.

இருநூல்களும் வாலறிவன் கேவல ஞானத்தை உடையவன் என்பதில் ஒன்றுபட்டு நிற்கின்றன.

''மலர்மிசை ஏகினாள் மாணடி சேர்ந்தார்
நிலமிசை நீடுவாழ் வார்.'' (குறள்-3)

இக்குறட்பாவிற்கு விருதூர் K.P. விமலநாதசெயின் சாஸ்திரியார் அவர்கள், தாமரை மலர்மீது நடந்தவனது பெருமைசான்ற திருவடியை அடைந்தவர் இவ்வுலகின் உச்சியிலுள்ள முக்தியுலகில் நிலையாக வாழ்வார் என்று உரை கூறுகின்றார்.

திருக்கலம்பக ஆசிரியரும்,

''வாகன மாகம் பூத்த மாமல ராகவேகு
மேகனை . . . . . '' (பாடல்-21)

என்று பாடுகின்றார்.

இப்பாடலுக்கு ஆகாயத்திலுண்டான பெருமை பொருந்திய தாமரைப்பூ வாகனமாக நடக்கும் அருகபரமனைத் துதிப்போம் என்பது பொருளாம்.

இங்கு ஆசிரியர்கள் இருவரும் கூறும் கடவுளர்களும் தாமரைப் பூமேல் நடந்தவர்கள் என்பது அறியத்தக்கது.

''வேண்டுதல் வேண்டாமை யிலானடி சேர்ந்தார்க்கு
யாண்டும் இடும்பை இல'' (குறள்-4)

இக்குறட்பாவிற்குப் பரிமேலழகர், ஒரு பொருளையும் விழைதலும், வெறுத்தலும் இல்லாதவன் அடியைச் சேர்ந்தார்க்கு எக்காலத்தும் பிறவித்துன்பங்கள் உளவாகா என்று உரை கூறுகின்றார்.

திருக்கலம்பக ஆசிரியரும்,

''வேண்டுதல் வேண்டாமை யில்லாத வீரனடி
பூண்டு கிடந்தாற் புறத்திறுத்த வெங்கூற்றம் போகும்''
-(பாடல்-59) என்று பாடுகின்றார்.

இப்பாடலுக்கு விருப்பும், வெறுப்பும் இயல்பாகவே இல்லாத அனந்த வீரியனாகிய அருகனுடைய பாதங்களை மனத்திற்கொண்டு திரிகரணங்களையும் அடக்கியிருந்தால் பக்கத் தில் வந்த வெப்பமான வினையாகிய கூற்றம் போகும் என்பது பொருளாம்.

. இருபாடல்களின் .கருத்தும் ஒரே தன்மையில் அமைந் துள்ளது அறியத்தக்கது.

''இருள்சேர் இருவினையும் சேரா இறைவன்
பொருள்சேர் புகழ்புரிந்தார் மாட்டு'' (குறள்-5)

இக்குறட்பாவிற்குப் பரிமேலழகர், மயக்கத்தைப் பற்றிவரும் நல்வினை, தீவினை என்னும் இரண்டு வினையும் உளவாகா, இறைவனது மெய்ம்மை சேர்ந்த புகழை விரும்பி னாரிடத்து என்று உரை கூறுகின்றார்.

திருக்கலம்பக ஆசிரியரும்,

''இரியவிரு வினைப்பகைவ ரிகல்வாட்டி யெம்புலவெங்
கரியகதக் கடக்களிறு காய்ந்துநின் னருளாமோ'' (பாடல்-2)

என்று பாடுகின்றார்.

இப்பாடலுக்குக் காதி, அகாதி என்னும் இருவினையாகிய பகைவர்கள் வலியைக் கெடுத்துப் பஞ்சவசயங்களான வெப்ப மாகிய கோபமும் மதமுமுடைய கருத்தயானைகளைக் கொன்றது நினது கருணையேயாகும். என்பது பொருளாம்.

அடுத்து, ''கடவுள் மலரடி துன்னியோர்
மறுவின் திருவறம் அமிர்த அருவீயின்
மயல்கொள் இருவினை மண்ணவே'' (பாடல்-10)

என்று பாடுகின்றார்.

இப்பாடலுக்கு அருகபரமேட்டியினுடைய தாமரைப் பூப் போன்ற பாதங்களை அடைந்து ஒருகுற்றமும் இல்லாத செல்வத்தைத்தரும் சினதருமமாகிய நீரையுடைய ஆற்றிலே பந்தித்த அழுக்காகக் கொண்ட இருவினையும் கழுவினால் நீங்காத முச்சோதி உங்களை அடையும் என்பது பொருளாம்.

இத்திருக்கலம்பகப் பாடல்கள் திருக்குறள் பாடல்களுக்கு அரணாக அமைவது அறியத்தக்கது.

''பொறிவாயில் ஐந்தவித்தான் பொய்தீர் ஒழுக்க
நெறி நின்றார் நீடுவாழ் வார்'' (குறள்-6)

இக்குறட்பாவிற்கு மணக்குடவர், மெய், வாய், கண், மூக்கு, செவி என்னும் ஐம்பொறிகளின் வழியாக வரும் ஊறு, சுவை, ஒளி, நாற்றம், ஓசை என்னும் ஐந்தின் கண்ணும் செல்லும் மன நிகழ்ச்சியை அடக்கினானது பொய்யற்ற ஒழுக்க நெறியினாலே நின்றாரன்றே நெடிது வாழ்வார் என்று உரை கூறுகின்றார்.

திருக்கலம்பக ஆசிரியரும்,

''பொறியைப் புலத்தின் வேட்கைநோய் தீர்க்கு
மருந்தென்றருந்தவர்கள்
போற்றும் பதத்தன் செய்யபதம் போற்றருணர்வு
பொங்காதே'' (பாடல் - 102)

என்று பாடுகின்றார்.

இப்பாடலுக்கு ஐம்பொறிகளின் (மெய், வாய், கண், மூக்கு, செவி) பஞ்சவிடயங்களில் (ஊறு, சுவை, ஒளி, நாற்றம், ஓசை)

உண்டாகிய ஆசையாகிய வியாதியைத் தீர்க்கின்ற மருந்தென்று சொல்லி, அரிதாகிய தவத்தையுடையவர்கள் துதிக்கின்ற பாதத்தையுடைய சித்தரின் சிவந்த பாதத்தைத் துதியாதவருக்கு அறிவானது மிகாது என்பது பொருளாம்.

இங்கு, இருநூல்களின் கருத்தும் ஒன்றுபட்டு நிற்பது அறியத்தக்கது.

''தனக்குவமை யில்லாதான் தாள்சேர்ந்தார்க் கல்லால்
மனக்கவலை மாற்றல் அரிது'' (குறள்-7)

இக்குறட்பாவிற்கு மணக்குடவர், தனக்கு நிகரில்லாதானது திருவடியைச் சேர்ந்தவர்க்கு அல்லது மனத்து உண்டாகும் கவலையை மாற்றுதல் அரிது என்று உரைகூறுகின்றார்.

இக்குறட்பாவிற்குப் பொருத்தமான பல பாடல்கள், திருக் கலம்பகத்தில் உள்ளன. இருப்பினும் ஒரு பாட்டு மட்டும் இங்கே கூறப்படுகின்றது.

''ஆதியே யாதி யன்றி யகிலமும் பரந்து நின்ற
சோதியே சோதி மூன்றி லெழிதரு சுடரே வான
வீதியே வீதி போகும் வெறிமலர்ப் பாக வேத'' (பாடல்-27)

என்ற பாடலுக்கு, முதல்வனே! உனக்கொரு முதலில்லாமல் உலக முழுவதும் நிறைந்திருந்த ஒளியே! பிரமாவலய மூன்றினுள் உதிக்கும் சூரியனே! ஆகாயமாகிய வீதியை உடையவனே! அவ்வாகாய வீதியில் செல்கின்ற வாசனை பொருந்திய பூவாகிய யானைக்குப் பாகனே! வேதங்களைச் சொன்னவனே! என்பது பொருளாகும்.

இப்பாடல் தனக்குவமை இல்லாத இறைவனைப் பற்றிக் கூறும் திருக்குறள் பாடலுக்கு விளக்கம் தரும் பாடலாக அமைகிறது.

முடிவுரை

இவ்வாறாக ஆதிபகவன், வாலறிவன், மலர்மிசை நடந்தவன், வேண்டுதல் வேண்டாமை இல்லாதவன் இருவினையும் சேராதவன், ஐந்தவித்தான், தனக்கு உவமை இல்லாதவன், அறவாழி அந்தணன், எண் குணத்தான், பிறவிக் கடலை நீந்தத் தெப்பமானவன் ஆகிய பத்துப் பெயர்களும் இருநூல்களிலும் ஒன்றுபட்டு வருவது அறியத்தக்கது.

ச. பரிமளா
வே.வ. வன்னியப் பெருமான் பெண்கள் கல்லூரி
விருதுநகர்

வைரமுத்துவின், இது வித்தியாசமான தாலாட்டு - ஒரு வித்தியாசமான பார்வை

தாலாட்டு என்பது குழந்தை பற்றிய தாய் மனத்தின் அன்பு, ஆசைகள், எதிர்பார்ப்புகள், ஏக்கங்கள், கற்பனைகள் இவற்றின் வெளிப்பாடாக ஓசைநயத்துடன் நாட்டுப்புறப் பாடல்களாக, வாய்மொழி இலக்கியமாகத் திகழ்வது.

''வெள்ளியால் செய்த ஏட்டி
வைர எழுத்தாணி கொண்டு எழுத
பள்ளியில் சேர்க்க மாமன்
பரிவுடன் வந்திடுவான்'' என்றும்,

''காசி விசிறி கொண்டு
கையில் ஒரு செம்பு கொண்டு
பூசைப் பிரம்பெடுத்து
பூசை செய்யப் பிறந்தாயோ'' என்றும்

நீலாம்பரி ராகத்தில் பாடித் தூங்காத குழந்தையையும் தூக்கத்தில் ஆழ்த்தி விடுவர். முதன்முதலில் பெரியாழ்வார் தம்முடைய திருமொழியில் கண்ணனைக் குழந்தையாகவும் தம்மைத் தாயாகவும் பாவித்துப் பக்திப் பெருக்கினால்,

''மாணிக்கங் கட்டி வயிரம் இடைகட்டி
ஆனிபொன் னால்செய்த வண்ணச் சிறுத்தொட்டில்
பேணி யுனக்குப் பிரமன் வீடுதந்தான்
மாணிக் குறளனே! தாலேலோ!
வையம் அளந்தானே! தாலேலோ!''

என்று 'திருத்தாலாட்டு'ப் பாடி இலக்கிய வடிவமும் ஏற்றமும் பெறச் செய்தார். ''குழவி மருங்கினும் கிழவதாகும்'' என்னும் தொல்காப்பியரின் கூற்றினை அடிப்படையாகக் கொண்டு

பிற்காலத்தில் பிள்ளைத் தமிழ் சிற்றிலக்கியமாக வளர்ச்சி பெற்ற காலத்திலும் 'தாலாட்டுப் பருவப் பாடல்களில் கற்பனையும் உயர்வுநவிற்சியும் மிகுதியாகக் காணப்பட்டன. வாழ்வியல் சிந்தனைகளோ அறக் கருத்துக்களோ சித்தரிக்கப்படவில்லை. பாரதிதாசன் பாடிய ஆண், பெண் தாலாட்டுப் பாடல்கள் கற்பனை யுடன் அவர் வாழ்ந்தகால சுதந்திரப் போராட்டச் சூழலுக்கும் சமூகச் சூழலுக்கும் ஏற்ப அறிவுரைகளுடன் விளங்குகின்றன.

இவற்றினின்று முற்றிலும் மாறுபட்டதாக வித்தியாசமாகத் திகழ்கின்ற வைரமுத்துவின் தாலாட்டு, இன்றைய வாழ்வியல் நடைமுறைக்குத் தேவையான அறிவுரைகளுடன் சுதந்திரமாக வாழும் வாழ்க்கைக்கு வழி காட்டுவதாக மேலோட்டமாகப் பார்க்கும் பொழுது தோன்றுகிறது. எனினும் இவரின் தாலாட்டைச் சற்று வித்தியாசமாகத் தத்துவக் கண்ணோட்டத் துடன் சிந்தித்துப் பார்க்கும் போது ஆன்மீக வாழ்வின் இலக்கையும் தெளிவுபடுத்துவதாக விளங்குவதைக் காணலாம். எனவே, 'இது வித்தியாசமான தாலாட்டுப்' பாடலில் தந்தையை இறைவனாகவும் குழந்தையை ஆன்மாவாகவும் உருவகித்துத் தத்துவப் பார்வையாகப் பார்க்க முயற்சிப்பதே இக்கட்டுரையின் நோக்கம்.

''மகனே! வழக்கமான தாலாட்டை உனக்கு நான் வாசிக்க முடியாது'' என வித்தியாசமாகத் தொடங்கும் அவரது தாலாட்டு.

''அவை, மொழியின் ஆடம்பரங்கள்
கைது செய்து வைத்த
கனாக்கள்!.

என்று பிறரது தாலாட்டை அர்த்தமற்றவை; பயனற்றவை என்று விமர்சிக்கின்றது. கனவிலே, கற்பனையிலே மிதப்பவன் சோம் பேறி; எதனையும் சாதிக்க இயலாத, விரும்பாத கோழை. எனவே, இவ்ரது தாலாட்டு கட்டாய உறக்கத்திற்குச் சோம்பலுக்கு இட்டுச் செல்லும் ஏற்பாடு அல்ல. அதற்கு மாறாக,

''என் தாலாட்டு
இசை என்னும்
தூக்க மாத்திரை இல்லாதது
இது, உறக்கத்தை யல்ல
உன் விழிப்பையே பாடுபொருளாகக் கொண்டது''

தம்முடைய தாலாட்டு என்கிறார். விழிப்பையே பாடு பொருளாகக் கொண்டது என்பது சாதாரண விழிப்பையல்ல;

ஆன்ம விழிப்பை ஆகும். உலகில் தோன்றும் ஆன்மா தான் யார் என்பதை உணராது உலக சுகபோகங்களாகிய தூசியில் படிந்து; ஆணவம், கன்மம், மாயை என்னும் மும் மலமயக்கத் தூக்கத்தில் ஆழ்ந்து கிடக்காமல் இறைவன் திருவடிப் பேற்றினை அடைய விழிப்புடன் செயல்படத் தூண்டுவதே இவரது தாலாட்டு. பற்றற்றான் தாளினைப் பற்றுதற்குச் செயல்படுதலே வாழ்வின் குறிக்கோள் என்பதைத் தத்துவார்த்தமாக உணர்த்தும் குறியீடே 'விழிப்பு'.

சமூகத்தில் ஒவ்வொருவருக்கும் தனித்தனியே சில கடமைகள் எழுதப்படாத சட்டங்களாக உள்ளன. ஈன்று புறந்தருதல் தாயின் கடமை; சான்றோனாக்குதல் தந்தையின் கடமை; இவனைப் பெற இவன் தந்தை என்ன தவம் செய்தானோ என உலகம் போற்றும்படி நடந்து கொள்ளல் மகனின் கடமை என்று வரை யறுக்கப்பட்டுள்ளன. எனவே, ஒவ்வொரு தலைமுறையும் முந்தைய தலைமுறை தமக்கு என்ன செய்தது என்ற சிந்தனை யோடும், என்னென்ன செய்ய வேண்டும் என்ற எதிர்பார்ப் போடும் விளங்குவதைக் கண்ட கவிஞர்,

''தந்தை மகற்காற்றும்
சம்பிரதாயச் சடங்குகளின்
நீட்டோலையை என்னிடம் நீ
நீட்டாதே''

என்று படைத்தவன் கடமையாக, ஆன்மா தன் தேவைகளை, விருப்பங்களைப் பட்டியலிட்டு நீட்டாதே என்று கட்டளையிடு கின்றார். ஏனெனில் சடமாய் கிடக்காது, இயங்க இயல்பாகக் கற்றுக் கொண்ட ஆன்மா உலக வாழ்க்கைப் பயணத்திலும், ஆன்மீக வாழ்க்கைப் பயணத்திலும் வெற்றியடையத் தானாக முயற்சி செய்ய வேண்டும். ஏனெனில்,

''சுவாசிக்கத் தெரிந்த உனக்கு
காற்று மண்டலத்தை
அறிமுகம் செய்வது அவசியமல்ல''.

அதுபோன்று தான் உலகியலில் நீச்சலிடக் கற்றுக் கொண்ட ஆன்மாவிற்கு ஆன்மீக வாழ்க்கைப் பயணத்திற்கும் வழிவகுக்கத் தெரிந்திருக்க வேண்டும்.

உன்னைப் பெற்றவர்களாகிய நாங்கள் எங்கள் வசதிக்காகப் பெயரிட்டோம். அதனால் உன்னை நீ உணர்ந்து கொண்டபின், மொழியைப் புரிந்து கொண்டபின் உனக்கேற்ற நாமத்தை நீயே

சூட்டிக் கொள். ஆன்மாவானது தன்னை உணர்ந்து, பிறவிப் பெருங்கடலைக் கடந்து, அர்த்த மண்டபமாம் இறைவன் இணையடி நிழலை அடையுங்காலத்து, தனக்கேற்ற நாமத்தை இட்டுக் கொள்ளட்டும் என்கிறார்.

சிற்றின்பமாகிய சுகானுபவங்கள் கிட்டவில்லையே என்று ஏங்காதே. வாழ்வின் அடிப்படைத்தேவைகளான உணவு, உடை, உறையுள் கிடைத்ததே என்று மன அமைதி அடைவாயாக!

''தூளியின் மேல் தொங்க விட
வர்ண பஞ்சுகள் இல்லையென்று - வருந்தாதே
உன் தூளிக்குத்
கயிறு கிடைத்ததே என்று களி''

கொள்வாயாக! இவ்வுலக இன்ப நாட்டங்களில் மனத்தை அலைய விடாது, கிடைத்தது போதும் என்று மகிழும் மனப்பக்குவமே ஆன்மாவிற்கு முதற் தேவை என்று அறிவுறுத்துகின்றார்.

மனிதனின் பொருளாசையே அவனுக்குத் தளையாக உலகியலில் அழுந்தச் செய்யும் புதைமணலாக விளங்குவதை,

''ஆமாம் மகனே!
உனக்கு அணிவிக்க
என்னிடம்
ஆபரணங்களில்லை!
விலங்குகளுமில்லை!''

என்று உணர்த்துகின்றார். ஆபரணமாகிய உலகியல் இன்பம் உன்னைப் பிறவிப் பிணியில் பிணிக்கும் தளையே. ஆன்மாவிற்கு அணிகலன் வாய்மை, அன்பு, பொறுமை முதலிய நற்பண்புகளே!

''உனக்கு நான்
செல்வம் எதுவும் .
சேர்த்து வைக்க முடியாது
நீ
செலவழிப்பதற்கு
உன்
வேர்வை இருக்கிறது''

எனவே, அழியும் செல்வத்தை உனக்காக நான் தேடி வைப்பதில் பயனில்லை. அதனால் உன் ஆன்மாவின் கடைத் தேற்றத்திற்கு அழியாச் செல்வமாகிய உண்மைப் பொருளைத் தேட நீ தான் உழைக்க வேண்டும்; முயற்சி செய்ய வேண்டும்.

பள்ளியில் சேர்ப்பது பற்றிச் சிந்திக்கவில்லை. ஏனெனில் பள்ளிக்கூடக் கல்வி எழுத்துக்களின் அறிமுகம்தான்; வயிற்றுப் பிழைப்புக்கு வழிகாட்டலாம். அதனால் ஆன்மநேயம் வளர,

மெய்ஞ்ஞானம் பெற்றிட உலகியல் அனுபவக் கல்வியே தேவை. அக்கல்வியே ஆன்மீகப் பயணத்தின் வெற்றிக்கு வழிகாட்டும் ஒளிவிளக்கு. எனவே

''வாழ்க்கையை வாசிக்க - நீ
தெருவுக்குத் தானே
திரும்பி வர வேண்டும்'' என்கிறார்.

ஆன்மீகப் வழிப் பயணம் என்பது அழகிய மெத்தென்று ரோஜா மலர்ப் படுக்கையல்ல. அந்த வாழ்க்கைப் பாதையில் நண்பர்களாகிய மரங்கள் மலர்களைப் பரப்பி மகிழ்ச்சியை உண்டாக்கலாம்; பகைவர்களாகிய மனிதர்கள் முட்களைப் பரப்பித் துன்பத்தை உண்டாக்கலாம். ஆனால் துன்பமே இன்பத்திற்கு அடிப்படை என்பதை உணர்ந்து வல்லவனுக்குப் புல்லும் ஆயுதமாவது போல இன்பப் பூவைச் சூடிக் கொள்ளத் துன்ப முள்ளைக் குண்டூசியாகப் பயன்படுத்திக் கொள்.

புகழுரைகளும் வாழ்த்துகளும் ஆன்மாவை வழிப்படுத்தாது; மாறாகச் செப்புப் பாத்திரக் களிம்பு போல ஒட்டிக் கொண்டு மீண்டும் மீண்டும் சிற்றின்பத்தில் ஆழ்த்திவிடும். எனவே,

''நதிக்கரை ஓரத்து - நகரம்
வெள்ளப்பெருக்கை
எதிர்பார்த்து
விழிப்போடிருப்பது போல்
எப்போதும் விழிப்பாய் இரு''

என எச்சரிகின்றார். உறங்கும் போதும் கூட மனக்கண்கள் இமைத்துக் கொண்டிருக்கட்டும் என்கிறார்.

சும்மா கிடப்பதே சுகம் என்று எண்ணாது, சித்தத்தை அடக்கிச் சமூகத் தொண்டே, மக்கட் தொண்டே மகேசன் தொண்டாகும் என்று செயல்படு. மானிடச் சமூகத்தின் அவலத்திற்குக் காரணமான அடிப்படை வேர்களைக் கண்டு களைய முயற்சி செய். எதனையும் மேலோட்டமாக நோக்காது ஆழமாகச் சிந்தித்துச் செயல்படு. மானுடத்தின் நலனுக்காக மனிதநேயத்துடன் செயல்பட்டு, உன் தோள்களில் ஏற்றி ஓர் அங்குலமாவது உயர்த்திக் காட்டு. பலனை எதிர்பாராது, என் கடன் பணி செய்து கிடப்பதே என்று ஒல்லும் வாயெல்லாம் ஓவாதே மக்கட் தொண்டு செய்து, பிறவிப் பெருங்கடல் நீந்திப் பிறவாப் பேரின்பம் அடைய வழிகாட்டுதலே வைரமுத்துவின் வித்தியாசமான தாலாட்டு எனலாம்.

பெ. பழநியப்பன்
ஈரோடு கலைக் கல்லூரி
ஈரோடு – 638 009

குலதெய்வ வழிபாடு

முன்னுரை

இனம் என்பது தம்மோடு சேர்ந்த கூட்டத்தினரைக் குறிக்கும் அந்த இனத்தின் உட்பிரிவே குலம் என வழங்கப்படுகிறது. ஒரு குடும்பம் பல குடும்பங்களாகப் பிரிந்துபோய், அக்குடும்பங்கள் எல்லாம் ஒரே உறவுமுறையாகும்போது குலம் ஆகிறது. அதாவது பல பங்காளிகளின் உறவுமுறையைக் குலம் என்று அழைக்கின்றனர். முன்னோர் ஒருவரின் மரபு வழியில் வந்த உறவினர்களால் அமைந்த அமைப்பே குலமாகிறது. எனவே ஒருவழி மரபினைக் கொண்டதே குலமாகும். அக்குலத்தின் தெய்வமே குலதெய்வமாகும்.

குலதெய்வ வழிபாடு என்பது பண்டைக் காலம் தொட்டே வழக்கிலிருந்த ஒன்று என்பதைச் சங்க இலக்கியங்கள் வழி அறிகிறோம். தெய்வங்கள் பல வணங்கப்படினும் வழிபடு தெய்வமாக அவரவர் தமக்கென்று ஒரு தெய்வத்தைக் கொண்டிருந்தனர். குன்றக் குறவர் முருகனையும், முல்லை நிலத்து ஆயர் மாயோனையும், தம் குலத்திற்கு உரிய வழிபடு தெய்வமாகக் கொண்டு போற்றிய செய்திகள் சங்கப் பாடல்களில் உள்ளன.

''அழிவிலர் முயலும் ஆர்வ மாக்கள்
வழிபடு தெய்வம் கண்கண்டாஅங்கு'' *(நற்றிணை: 1-2)*

''வழிபட்ட தெய்வம்தான் வலிஎனச் சார்ந்தார்கண்
கழியும் நோய்கைம்மிக அணங்கியது போல'' *(கலி:132:21-22)*

என்ற பாடல் வரிகளில் 'வழிபடு தெய்வம்' எனக் குறிப்பிடப் பவன குலதெய்வங்களே என்பர்.

ஒருவீட்டிற்குத் தெய்வமாக இருந்து, பல வீடுகளாக உறவுமுறை தெரியும்போது குலதெய்வமாக மாறுகிறது. பங்காளி

முறையினரால் வணங்கப்படும் தெய்வத்தைக் குலதெய்வம் என்றும் கூறலாம். ஒரு கோவிலை வணங்கும் முறையால் குலம் இனங்காணப்படுகிறது. ஒரு குறிப்பிட்ட கோயிலைக் கும்பிடுப வர்கள் எல்லாம் பங்காளிகளாக இருப்பர். அக்கோயிலைக் கும்பிடுபவர்கள் தம்முள் திருமண உறவுமுறை வைத்துக் கொள்ள மாட்டார்கள். வேறு கோயிலை வணங்குபவர்களோடுதான் திருமண உறவுமுறை வைத்துக் கொள்வர்.

குலதெய்வம் - சிறுதெய்வ வழிபாடே

நாட்டுப்புறச் சமயம் என்பது ஆரவாரத்தோடு கூடிய வழிபாடுகள் கொண்ட வரன்முறையில்லாத், வீழிபாடு கொண்ட கண்மூடித்தனமாகப் பண்டு தொட்டு வருகின்ற பழக்கத்தை மாற்ற விரும்பாத, பாமரத்தனமாக வழிபாடுகள் கொண்ட கொள்கைதான் நாட்டுப்புறச் சமயம் ஆகும். இச்சமய வழிபாடு கள் கொண்ட தெய்வந்தான் நாட்டுப்புறத் தெய்வமாகும். இந்நாட்டுப்புறத் தெய்வத்தைச் சிறுதெய்வம் என்றும் அழைப் பார்கள். செம்மைப்பட்ட நெறியை - ஆகமவிதிப்படி முறை யோடு நடக்கும் நெறியைப் பெருநெறி என்றும், இவ்வாறு இல்லாது நடைமுறைக்கு - மக்கள் நடைமுறைக்கு உகந்தவாறு மரபுவழி வழிபடும் நெறியைச் சிறுநெறி என்றும் அழைப் பார்கள்.

சிறு தெய்வங்களை,

1. கிராமத் தெய்வம் 2. ஊர்த்தெய்வம் (காவல் தெய்வம்) 3. குல தெய்வம் 4. இன தெய்வம்

என்று நான்கு வகையாகப் பிரிக்கலாம். பொதுவாக இச்சிறுதெய்வ வழிபாடுகள், பண்டுதொட்டு மரபு வழிப்பட்டு முன்னோர் வழங்கி வந்த வழி, நம்பிக்கையோடு வணங்கி வழிபட்டு வருவனவாகவே அமைந்து உள்ளன. பொதுவாக நாட்டுப்புறச் சிறுதெய்வங்களை 'ரைட்ரெவரெண்ட் ஹென்றி' பின்வருமாறு ஆண் தெய்வங்கள், பெண் தெய்வங்கள், கல் என மூவகையாகப் பகுத்து அவற்றுள் அடங்கும் தெய்வங்களைப் பட்டியலிடுகிறார்.

ஆண் தெய்வங்கள்

எல்லைக் கறுப்பு ஐயனார், கறுப்பண்ணன், கூத்தாண்டவர், மதுரைவீரன், முனீஸ்வரர்.

பெண் தெய்வங்கள்

அங்காளம்மா, அங்கம்மா, பத்ரகாளி, திரௌபதி, எல்லைப்பிடாரி, கன்னியம்மா, கன்னிகை, மலையாயி, மாரியம்மா, பெட்டம்ம துர்க்கா.

கல்

எல்லைக் கல். பொட்டுராயி நாட்டான் கல்

மற்றும் சில

பேச்சி, மாடசாமி, சந்தனமாரி, சுடலை, காத்தவராயன், கத்தும் வைரவன், பாவாடைராயன், சாத்தான் ஆகியன.

குலதெய்வ வழிபாடு கூட்டு வழிபாடாக மலர்தல்

மனிதன் காட்டிலும், மேட்டிலும், கரட்டிலும், மலையிலும், மரத்தடியிலும், கல்லைக் கடவுளென்று நாட்டினான்; குளிப் பாட்டினான்; பூ அணிவித்தான்; உணவு படைத்தான்; வணங்கினான். அது குடும்ப விழாவாயிற்று.

ஊரார் ஒன்று சேர்ந்தனர். ஊருக்கு நடுவே கல்லை, கடவுள் என்று நட்டனர்; உற்றார் உறவினர்களை அழைத்தனர்; பொங்கல் இட்டனர்; கூடி விருந்துண்டனர்; விழாவெடுத்தனர். அது கூட்டு வழிபாடாக மலர்ந்தது.

மாலை நேரம், ஊர் இளைஞர்கள் கோயில் வளாகத்தில் கூடினர்; தட்டுக்கரை, செங்கரம், சடுகுடு விளையாடினர். முதியோர் கண்டு களித்தனர். கோயில் வளாகம் இளைஞர்களுக்கு விளையாட்டு அரங்கமாயிற்று. முதியோர்களுக்குப் பொழுது போக்கு இடமாக விளங்கலாயிற்று.

இரவு வந்தது. கோயில் வளாகத்தில் வாலிபர்கள், நெருப்பு மூட்டினர். அதைச் சுற்றி அவர்கள் தப்பட்டை ஒலி முழங்க, ஆடிப்பாடி மகிழ்ந்தனர். வெளிச்சத்தை விரிவாக்க, கம்பத்தை நட்டு அதன்மீது சட்டியை வைத்து நெருப்பு மூட்டினர். பொழுது புலர்ந்தது. சாம்பல் பூத்த சிறு தணல்களைக் கீழே கொட்டினர். காலால் மிதித்து அணைத்தனர். கோயில் வளாகம் கலை அரங்கமாயிற்று.

ஊர்ப்பெரியவர்கள் கூடினர். ஊர்ப் பிரச்சனைகள் பற்றி ஆய்ந்தனர். முடிவு எடுத்தனர். கோயில் வளாகம் கிராம நிர்வாகக் கூடமாகவும், நீதிமன்றமாகவும் விளங்கலாயிற்று.

இவ்வகையில் குடும்ப வழிபாடு கூட்டு வழிபாடாக மலர்ந்து மணம் பரப்பியது.

குலதெய்வக் கோயில் வகைகள்

1. மூலக்கோயில் 2. பிடிமண் கோயில் 3. கிளைக்கோயில்

மூலக்கோயில்

முதன்முதலில் ஒரு குடும்பத்தவரால் வழிபடப்பட்டு, பின் அக்குடும்பத்திலிருந்து பிரிந்த பங்காளி முறையினருக்கும் வழிபடு கோவிலாக மாறியதே மூலக்கோயில் ஆகும். ஒரே தெய்வத்துக்குப் பல ஊர்களில் கோயில் அமைக்கப்பட்டிருப்பதைக் காணலாம். பல ஊர்களில் உள்ள கோயில்களுக்கு ஒரே ஒரு இடத்தில் இருந்த - இருக்கின்ற கோயிலே மூலக்கோயில் ஆகும்.

'குலதெய்வம்' பற்றிய பழங்கதையோடு தொடர்பு கொண்ட இடத்தில், பழங்கதை நிகழ்ந்த காலத்தில் தோன்றியதாகக் கருதப்படும் மூலக்கோயில் - மாலைக்கோயில்' எனப்படும். இதன்வழியாக மூலக்கோயிலுக்கு 'மாலைக்கோயில்' என்ற மற்றொரு பெயருமுண்டு என அறிகிறோம்.

பிடிமண் கோயில்

'மூலக்கோயிலான மாலைக்கோயிலிருந்து பிடிமண் எடுத்து வந்து அதாவது மண்ணை மஞ்சள் துணியில் கட்டிவந்து கோயில் அமைக்கும் இடத்தில் வைத்துக் கட்டுவது பிடிமண் கோயில்' ஆகும் என டாக்டர் துளசி இராமசாமி குறிப்பிடுகிறார்.

கிளைக்கோயில்

'உள்ளூர்த் தகராறுகள், சில வேறுபாடுகள், பிரிவுகள் காரணமாகத் தாங்கள் வாழும் ஊரிலேயே கோவில் அமைத்து வழி படவிரும்பிய மக்கள், ஆற்றிலிருந்து கல் கொணர்ந்து கோயில் அமைத்திருக்கலாம். இத்தகையனவே கிளைக்கோயில்கள் என்ப்படும்.

குலதெய்வக் கோயில்களில் பூசை செய்வோர்

துவக்கக் காலத்தில் அக்குலத்தைச் சார்ந்தவர்களே அந்தந்தக் குலதெய்வக் கோயில்கள் அனைத்திலும் பூசாரிகளாக இருந்துள்ளனர். பிற குலத்தை, இனத்தைச் சேர்ந்தவர்கள் குலதெய்வக் கோயில்களில் பூசாரிகளாக இருந்தது இல்லை. ஆனால் காலம் மாறமாற, தலைமுறைகள் மாறமாறத் தொழில், வேலை வாய்ப்பு, வாழிடம் ஆகிய மாறுதல்கள் காரணமாகப் பிற இடங்களுக்குச் சென்ற அக்குலத்தினரால் பூசாரிகளாக இருக்க

இயலாது போயிற்று. அந்நிலையில் பிற இனத்தவர்களைக் கோயில் பூசாரிகளாக நியமித்து இருக்கிறார்கள்.

குலதெய்வங்களுக்கு முன்னுரிமை

குடும்பத்தில் குழந்தை பிறந்தவுடன், அக்குழந்தைக்கு முதல் மொட்டை போடுதல், காது குத்துதல், பெயர் வைத்தல் ஆகிய சடங்குகள் பெரும்பாலும் குலதெய்வக் கோயில் களிலேயே நடைபெறுகின்றன. திருமண அழைப்பிதழ், முதன் முதலில் குலதெய்வக் கோயிலேயே வைக்கப்பட்டுத் தெய்வத்தின் அருள் வேண்டப்படுகிறது. வீட்டில் நடக்கும் எந்தவொரு நல்ல நிகழ்ச்சியிலும் முதல் தேங்காயைக் குல தெய்வத்திற்கும், இரண்டாவது தேங்காயைப் பிள்ளையாருக்கும் உடைத்து வழிபாடு செய்கிறார்கள். தங்கள் குலத்தை வாழ வைப்பனவாகவே குலதெய்வங்கள் கருதப்படுகின்றன. ஆகவே குலதெய்வங்கள் வீட்டிலுள்ள பெரியோர்கள் போன்று முன்னிலைப்படுத்தப் படுகின்றன.

துணைத்தெய்வங்கள்

'மக்களைக் காக்கத் தெய்வங்கள் இருக்கின்றன. அதேபோல் தெய்வங்களைக் காக்க, முதன்மைத் தெய்வத்துக்கு மக்களைக் காக்கும் பணியில் உறுதுணையாக இருக்கத் துணைத்தெய்வங்கள் உதவுகின்றன. மக்கள் கொடுக்கும் நேர்த்திக் கடன்களைத் தாம் பெற்று, முதன்மைத் தெய்வங்களுக்குக் கொடுக்கும் வழி முறையாகத் துணைத்தெய்வங்கள் இருக்கின்றன' என்று கூறுவர்.

கருப்பராயன், மாடசாமி போன்ற தெய்வங்கள் சில இடங்களில் சில இனத்தவர்களுக்குக் குலதெய்வங்களாக இருக்கின்றன. இவைகளும் ஒரு காலகட்டத்தில், அம்மனிதர் களோடு வாழ்ந்து மடிந்தவர்கள், முன்னோர் வழிபாட்டின்படி தெய்வங்களானவை இருக்கலாம். தமிழ்நாட்டில் பெரும்பாலும் ஆண்தெய்வங்கள், அம்மன் கோயில்களில் துணைத் தெய்வங் களாகவே இருக்கின்றன. கோயில்களில் உள்ள அம்மன் கருவறை யைக் காத்து, அம்மன் இடும் கட்டளைகளை நிறைவேற்று பவைகளாகவே இருக்கின்றன.

மு. பழனியப்பன்
மா மன்னர் கல்லூரி
புதுக்கோட்டை

ஒன்றுள் மூன்று

நன்னூல் ஆசிரியர் பவணந்தி முனிவர், மாணாக்கரை அவர்தம் தகுதி, தன்மை, திறம் போன்றன கருதி, முதல் மாணாக்கர், இடைமாணாக்கர், கடைமாணாக்கர் என்று மூன்று நிலைகளாக்கிக் காணுகின்றார். மேலும் அவர், இம்மூன்று நிலை களுக்கும் ஏற்பத் தக்க உவமைகளைத் தந்து விளக்கியுரைக் கின்றார்.

''அன்னம் ஆவே மண்ணொடு கிளியே
இல்லிக்குடம் ஆடு எருமை நெய்யரி
அன்னார் தலைஇடை கடை மாணாக்கர்'' (நன்னூல்: 38)

என்ற இந்நூற்பா வழியாக,

1. ''அன்னம், ஆ இவற்றின் தன்மை ஒத்தோர் - முதல்மாணாக்கர்,
2. மண், கிளி இவற்றின் தன்மை ஒத்தோர் - இடை மாணாக்கர்,
3. இல்லிக்குடம், ஆடு, எருமை, நெய்யரி இவற்றின் தன்மை ஒத்தோர் - கடை மாணாக்கர்''

என்றவாறு மூன்றுநிலை மாணாக்கரையும், அவருக்குக் கூறப் பட்ட உவமைகளையும் பகுத்து உணர முடிகின்றது.

இம்முந்நிலைப்பட்ட மாணவர்க்குக் கற்பிக்கும் ஆசிரியர் குறித்தும் உவமைகள் வழியாகவே சில கருத்துக்களை நன்னூல் ஆசிரியர் முன் வைக்கின்றார்.

''குலனருள் தெய்வம் கொள்ளை மேன்மை,
கலைபயில் தெளிவு கட்டுரை வன்மை
நிலம் மலை நிறைகோல் மலர் நிகர்மாட்சியும்,
உலகியல் அறிவோடு உயர்குணம் இனையவும்
அமைபவன் நூலுரை ஆசிரியன்னே'' (நன்னூல்: 36)

என்ற இந்நூற்பாப்படி நிலம், மலை, நிறைகோல், மலர் ஆகிய உவமைகள் ஆசிரியர் இயல்புக்கு உரைக்கப்பட்டுள்ளன. இந்நூற் பாவில் ஆசிரியருள் முதல், இடை, கடை என்பன போன்ற பகுப்புகள் பிரிக்கப்படவில்லை. எனவே ஆசிரியர் என்பவர் பகுப்பிற்கு அப்பாற்பட்டவர் என்பது புலனாகின்றது.

இருப்பினும், முதல், இடை, கடைமாணாக்கர் குழுமியிருக் கும் ஒரு வகுப்பினுள் ஆசிரியர் எவ்வாறு பாடங்களைக் கற்பிப்பார்? பாடங்களை அவர் ஒரே மாதிரியாகவே அனைவருக் கும் கற்பிக்க முடியுமா? அல்லது மூன்று பிரிவினருக்கும் வேறு வேறாகக் கற்பிக்க இயலுமா? அல்லது ஏதேனும் ஒரு பிரிவின ருக்கு ஏற்பப் பாடம் நடத்தி, மற்ற இரு பிரிவினரையும் பாதிப்பு (அ) இழப்பு அடையச் செய்யலாமா? என்பன போன்ற கேள்விகள் எழுகின்றன.

மேலும் 'மண்' என்ற உவமை இடை மாணாக்கருக்குப் பயன்படுத்தப்பட்டிருக்கின்றது. 'நிலம்' என்ற உவமை ஆசிரிய ருக்குப் பயன்படுத்தப்பட்டிருக்கின்றது. இவை இரண்டுக்கு முள்ள ஒற்றுமை - வேற்றுமை ஆகியன சற்று மயக்கம் தருவன வாக உள்ளனவோ!

மேற்கண்ட கேள்விகளுக்குப் பதில் தேடும் முகத்தான் ஆசிரியர்க்குச் சொல்லப் பெற்றிருக்கின்ற உவமைகளை உள் நோக்கி ஆராய வேண்டியது அவசியமாகின்றது.

நிறைகோல்

ஆசிரியருக்குச் சொல்லப் பெற்றிருக்கின்ற உவமைகள் நான்கு. அவற்றுள் நிறைகோல் என்பது அளவிடும் தகுதி குறித்து வந்ததாகும்.

> "ஐயம் தீர்ப் பொருளை உணர்த்தலும்
> மெய்நடுநிலையும் மிகுநிறை கோற்கே" (நன்னூல்: 29)

என்ற நன்னூல் ஆசிரியரின் கருத்துப்படி ஆசிரியர் என்பவர், மாணாக்கர் அனைவருக்கும் ஐயம் தீர்த்து, நடுநிலை வகிக்க வேண்டியவராகிறார். முந்நிலைப்பட்ட மாணவர்க்கும் உரிய, பொதுவான ஆசிரியப் பண்பாக இந்நிறைகோல் பண்பு அமைகின்றது. எனவே இப்பண்பினைப் பொதுமைப் பண்பாக ஏற்றுக்கொள்ளலாம்.

நிலம்

ஆசிரியருக்குச் சொல்லப் பெற்றுள்ள மற்றொரு உவமை நிலம் ஆகும்.

''தெரிவரும் பெருமையும், திண்மையும், பொறையும்,
பருவமுயற்சி அளவிற் பயத்தலும்
மருவிய நன்னில மாண்பாகும்மே'' (நன்னூல்: 27)

என்பது நிலத்திற்கும் ஆசிரியருக்கும் ஒப்பாக வந்த நூற்பா ஆகும்.

இடைமாணாக்கரின் இலக்கணம் கூறவந்த நன்னூல் ஆசிரியர், ''மண்ணொடு கிளியே'' என்று குறிப்பிடுகின்றார். இதனுள் மண் என்பதை மட்டும் எடுத்துக் கொள்ளலாம்.

மண் என்பது பயன்படாதபடாத நிலம் ஆகும். அந்த மண்ணை உழவன் எவ்வளவுக்கு எவ்வளவு பயன்படுத்து கிறானோ, அவ்வளவுக்கு அவ்வளவு பலனைத் தரும். அதுபோல ஆசிரியர் இடைமாணாக்கருக்கு எவ்வளவுக்கு எவ்வளவு சொல்லித் தருகின்றாரோ அவ்வளவுக்கு அவ்வளவு பலனை அவர் பெறுவர்.

இங்கு மண்ணோடு ஒத்தவராக இடைமாணாக்கராகவும், நிலத்தோடு ஒத்தவராக ஆசிரியரையும் நன்னூலாசிரியர் காட்டியிருப்பதன் நோக்கத்தை ஆராய வேண்டியுள்ளது.

நிலம் என்பதன் முன்நிலை மண் எனக் கொள்வோம். மண்ணின் முழுஇயல்பும் மருவி நிலம் உருவாக வேண்டும். எனவே மண்ணின் முழு இயல்பையும், நிலமாக உள்ள ஆசிரியர் அறிவார்; அறிய வேண்டும்.

இடைமாணாக்கனுடைய முழு இயல்பையும் அறிந்து இடைமாணாக்கனுக்கு ஏற்பவும் பாடம் புகட்டுபவராக ஆசிரியர் இருக்க வேண்டும் என்பதால் இவ்விரு உவமைகளையும் நன்னூல் ஆசிரியர் கையாண்டுள்ளார். மண், நிலம் என்ற இவ்விரு உவமைகளும் ஒருவழியான் இயைபு பெற்றதாகும். மண் என்கிற இடைமாணாக்கனை உயர்த்த, அந்த இனத்தோடு இணைந்த பண்பு பெற்ற ஒன்றால்தான் முடியும் என்பதாலும் நிலம் என்பதை ஆசிரியர்க்கு இயைபு படுத்தியுள்ளார் நன்னூல் ஆசிரியர். மேலும் நூற்பாவில் இடம் பெற்றுள்ள 'மருவிய நன்னிலம்' என்பதும் இவ்வியைபுக்குச் சான்றாக அமைந்துள்ளது.

மலை

''அளக்கலாகா அளவும் பொருளும்
துளக்கலாகா நிலையும் தோற்றமும்
வறப்பினும் வளந்தரும் வன்மையும் மலைக்கே''
(நன்னூல்:28)

என்ற இந்நூற்பாவில் இடம்பெறும் தொடரான ''வறப்பினும் வளந்தரும் வன்மை'' என்பது கருதிக் கடைமாணாக்கரோடு இவ்வுவமையை இயைபு படுத்த முடியும்.

கடைமாணாக்கர்க்கு இல்லிக்குடம், ஆடு, எருமை, நெய்யரி என்பன உவமைகளாக வந்துள்ளன. இல்லிக்குடம் என்பது ஓட்டைக்குடம். இதனுள் நீர் பெய்தால் நிற்காது வறண்டு போகும். மலை என்பது, மழை இன்றி எல்லா இடங்களும் வறண்டு போனாலும் தன்னைச் சார்ந்து வாழும் உயிர்களுக்கு நீர் வளத்தைத் தந்து காக்கும் இயல்பினது. வறண்டுவிடும் ஓட்டைக்குடம் என கடைமாணாக்கரைக் கருதி நீரே பெய்யாது விடுதல் கூடாது. மலை வறண்ட காலத்திலும் வளம் தருவதுபோல, ஆசிரியர் கடைமாணாக்கரை வளப்படுத்த வேண்டும் என்ற இயைபினை இவ்விரு உவமைகளுக்கும் காட்டலாம். ''துளக்கலாகா நிலை'', என்பதையும் சோர்வுறாத நிலை என்பதாகக் கொண்டு இயைபு படுத்த முடியும். இவ்வாறாகக் கடைமாணாக்கரின் நிலை கருதி, அவர்க்கும் கல்வி அளிக்கும் பெருமை உடையவராக ஆசிரியர் அமைய வேண்டும் என்பது நன்னூல் ஆசிரியரின் கருத்தாகும்.

மலர்

பூவின் இயல்போடு, ஆசிரியரின் இயல்பையும் இணைத்துக் காணுகின்றார் நன்னூல் ஆசிரியர்.

'' 'பங்கலமாகி, இன்றியமையாது
யாவரும் மகிழ்ந்து மேற்கொள மெல்கிப்
பொழுதின் முகமலர்வு உடையது பூவே'' *(நன்னூல்: 30)*

என்பது அந்நூற்பாவாகும். முதல்மாணாக்கருக்கு, 'அன்னம், ஆ' என்பனவற்றை உவமையாக்குகின்றார் நன்னூல் ஆசிரியர். அன்னம், ஆ ஆகியன இரண்டும் இயற்கையிலேலே சிறப்புக் குணம் பெற்றவனாகும். அதுபோலச் சிறப்புக் குணத்தைப் பெற்றவராக முதல்மாணாக்கர் அமைவர். ஆயினும், அவர்க்கும் இன்றியமையாதவராக ஆசிரியர் அமையவேண்டும்

என்பதாலேயே, இன்றியமையாத என்ற பண்பு மலருக்கும், ஆசிரியருக்கும் ஒப்ப நோக்கப் பட்டுள்ளது. மேலும் யாவரும் மகிழ்ந்து ஆசிரியரை ஏற்பர் என்றார்.[illegible] முதல்மாணாக்கரை வினவும்போது அவர்கள் [illegible] முதல்மாணாக்கர் ஆசிரியரைத் தக்க நேரத்தில், தக்க வினாக்களைக் கேட்[illegible] அவ்வினாக்களின் சிறப்பு கருதி, ஆசிரியர் தக்க பதில் தருவார். இதுபோன்ற செயல்கள் வகுப்பில், நடைபெறும்போது ஆசிரியரின் முகம் மகிழும். இது கருதியே பூவின் இயல்பான, ''பொழுதின் முகமலர்வு உடையது பூ'' என்பதை நன்னூல் ஆசிரியர் சுட்டிக் காட்டியுள்ளார் போலும். [illegible] முதல்மாணாக்கருக்கு ஏற்ப, ஆசிரியர் [illegible] முறையும் விளக்கப்பட்டுள்ளமையை உணரமுடிகின்றது.

மேற்கண்ட உவமைகளின் இயைபுகளால் சில முடிவுகளுக்கு வரமுடிகின்[illegible] கடை என முந்நிலைப்பட்ட மாணவருக்குப் பாடம நடத்தும் ஆசிரியர் ஏதேனும் ஒரு மாணவர்க்கு மட்டும் தெளிவிக்குமாறு பாடங்களை நடத்திவிட முடியாது. மாணவரின் தகுதி, தன்மை களுக்கு ஏற்றவாறு, அவ்வப்போது வேண்டிய இடங்களில், வேண்டியவாறு விளக்கமளித்துப் பாட நடைமுறைகளை நடைமுறைப்படுத்த [illegible] வது முதல்மாணாக்கர்க்கு - மலர் நிகர் மாட்சியோடும், இடைமாணாக்கர்க்கு - நி[illegible] நிகர் மாட்சியோடும், கடைமாணாக்கர்க்கு - மலைநிகர் மாட்சி யோடும் ஆசிரியர் பாடங்களைக் கற்பிக்க வேண்டும். மேலும் இம்மூவரையும் அளக்கும் தன்மையால், நிறைகோல் மாட்சி யோடு செயல்பட வேண்டும் என்பதும் இங்கு நன்னூல் ஆசிரியரால் உணர்த்தப்பட்டுள்ளது.

எனவே ஆசிரியரின் பாடங்களைப் பயிற்றுவித்தல் என்ற செயல் ஒன்றிலும், முதல், இடை, கடைமாணாக்கர் இயல்புக்கு ஏற்ப நடத்துதல் என்ற மூன்று [illegible] பிரிவுகளும் அடங்கியுள்ளன என்பதே இவ்வுவமைகள் வழியாக நன்னூல் ஆசிரியர் காட்ட விழைந்ததாகும்.

